ஸ்ரீ

கம்பர்

இராமாயணசங்கிரகம்

(சப்தகாண்டங்களும் அடங்கியது.)

(மூன்றும் பதிப்பு.)

மதுரை ஜில்லா, செம்பூர்
வீ. ஆறுமுகஞ்சேர்வை அவர்களால்
இயற்றப்பெற்று,

(துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது.)

சென்னை
"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியார் அவர்களால்
வெளியிடப்பெற்றது.

1925.

 [விலை ரூபா 2.

இப்புத்தகங்கள் துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பெற்றவை.



ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம்
(516-ம் பக்கம் பார்க்க.)

முன்னுரை.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக்கூறும் இராமாயண மானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். அதனால் இவ்விராமாயணத்தை வான்மீகர் ஆதியில் கிரந்தத்தில் சுலோகங்களாகச் செய்தார். பின்னர் பற்பல பாஷைகளிலும் சிறந்த விற்பன்னர்கள் பற்பல விதங்களாகச் செய்யுட்களாகவும் வசனமாகவும் செய்திருக்கின்றனர். அவற்றை ஆங்காங்குள்ள பக்திமான்களும், கலைவிருப்புடையாரும் ஓதியுணர்ந்தும், பிறரால் ஓதக்கேட்டுணர்ந்தும் இராமர் கிருபையால் இம்மை மறுமைப் பயன்களை அடைந்து வருகின்றார்கள். மேற்கூறிய பலவகை இராமாயணங்களில் வடமொழிச் சுலோகங்களால் வான்மீகரால் செய்யப்பட்டதும், தமிழ்ச்செய்யுட்களால் கம்பரால் செய்யப்பட்டதும், தென்னிந்தியாவில் சமஸ்கிருத விற்பன்னர்களாலும், தமிழ் விற்பன்னர்களாலும் மிகுதியும் கொண்டாடப்பட்டு வருகின்றன. எனினும், அவை வடமொழியிலும் தென்மொழியிலும் சிறந்த கல்வியாளர்க்கன்றி மற்றையர்க்குப் பயன் படாமையின், சாமானிய படிப்புள்ளவர்க்கும் உபயோகப்படுமாறு, சில புலவர்கள் வான்மீகி இராமாயணத்தைத் தமிழில் மொழி பெயர்த்தும், கம்பர் இராமாயணத்தை வசனமாக எழுதியும் வெளியிட்டிருக்கின்றனர். அவற்றுள் வான்மீகி இராமாயண மொழி

பெயர்ப்பு விசேஷமான வடமொழிகள் கலக்கப்பட்டு மணிப்பவள நடையில் அமைந்திருப்பதாலும், அதிக விலே யுள்ளதா யிருப்பதாலும் சாதாரண தமிழ் மக்கள் அதனே வாங்கிப்படிக்கும் ஆற்றலின்றிக் கம்பர் இராமாயண வசனத் தையே மிகுதியும் வாங்கி ஆங்காங்கே பாராயணம் செய்து வருகின்றார்கள். நாட்டுப் புறங்களிலுள்ள சில கிராம வாசி களும் அதனே வாங்கிப் பாராயணம் செய்யும் அறிஞரிடங் கொடுத்து இராமர் படத்துக்கு முன்னிலேயில் அவர் சுப தினத்தில் தொடங்கிப் பக்தியுடன் படிக்குமாறு செய்து கேட்டு அதன் முடிவில் இராமர் பட்டாபிஷேக மகோற் சவங் கொண்டாடி வருகின்றார்கள். இவ்வாறு கொண்டா டப்பட்டு வரும் அந்த இராமயண வசனமும் நாளடைவில் சில புத்தக வியாபாரிகளால், அளவற்ற பிழைகள் செறிந்த தாகவும், விஷயங்கள் முன்பின்னுக மாறுபட்டதாகவும், வந்த விஷயங்களே திரும்பவும் வரக்கூடியதாகவும் சின்னு பின்னப்பட்டு அதிக விலேயில் வெளி வருகின்றது. அதனுல் தமிழ் மக்கள் அப் பிழைப் புத்தகங்களேயே படித்து விஷ யங்களே மாறுபாடாக உணர்ந்து இடர்ப்படுகின்றனர்.

ஆதலின், அந்தக் கம்பர் இராமாயண வசனத்தைக் கூடியவரை சீர்த்திருத்திப் படிப்பார்க்கு அயர்ச்சியுண்டாகு மாறு அளவற்று விரிக்கப்பட்டிருக்கும் விசேஷ வர்ண்னே களேத் தள்ளிச் சிறிது சுருக்கமாகவும், விளக்கமாகவும் குறைந்த விலேயில் அமைந்ததாகவும், நாவல் போன்றிருக் கத் தக்கதாகவும், பலர்க்கும் பயன்படக் கூடியதாகவும் எழுதித் தரும்படி சென்னே ஆனந்தபோதினிப் பத்திராதி

பர், திருவாளர். ந, முனிசாமி முதலியாரவர்கள் என்பால் வேண்டினமையின், அவர் குறிப்பிட்ட வகைகளுடன் அமையுமாறு இதனை நான் எழுதி முடித்தனன்.

இது பெரும்பான்மையும் கம்பர் இராமாயணச் செய்யுட்களின் போக்கைத் தழுவியே எழுதப் பெற்றிருக்கின்றது. தெள்ளிய நடையில் ஒரு நாவலைப் போன்று இஃதெழுதப்பட்டிருத்தலின், இராமாயண பாராயணஞ்செய்ய விரும்புவோரும், சாதாரணமாக இராமர் கதையைப் படித்துணர விரும்புவோரும், வித்தியார்த்திகளாகிய மாணவர்கள், மாணவிகள், மற்றைய ஆண்மக்கள், பெண்மக்கள் முதலிய எல்லோரும் இதனை எளிதில் படித்துணரலாம். ஆதலின், தமிழ் உலகம் இந்நூலை அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு நான் விரும்புகின்றனன்.

இது, சங்கிரகமாக எழுதப்பட் டிருப்பினும் இதில் சரித்திரம் எவ்வளவும் குறைக்கப்பட வில்லை. கிளைக் கதைகள் ஒன்றேனும் குறையாமல் சேர்க்கப்பட் டிருக்கின்றன. கம்பர் இராமாயணச் செய்யுட்களும் அவசியமான விடங்களில் சேர்க்கப்பட் டிருக்கின்றன. கம்பர் இராமாயணச் செய்யுட்களில் உள்ள விஷயங்களுக்கும், முந்தின இராமாயண வசனத்தில் உள்ள விஷயங்களுக்கும் பெரிதும் வித்தியாசங்கள் காணப்பட்டமையின் பற்பல புத்தகங்களை ஆராய்ந்து மிக்க பிரயாசையின்மேல் விஷயங்களை என் புத்திக் கெட்டியு [illegible]ாயில் ஒழுங்கு படுத்தி நான் எழுதியிருக்கிறேன். ஆதலின், என் அறியாமையாலோ பிறகாரணங்களாலோ இந்நூலில் பிழைகள் காணப்படின் கற்

றறிந்த உத்தமர்கள் அவற்றை என்பால் தெரிவிப்பின் வந்தனத்துடன் ஏற்று இதன் மறு பதிப்பில் திருத்திக் கொள்வேன்.

இந்நூல் வெளிப்படுதற்குப் பேருதவி புரிந்தவரும், இன்னும் இதைப்போன்ற நூல்களை வெளியிட்டுத் தமிழுலகிற்கு நற்பயன்களை உண்டாக்கி வருபவருமாகிய திருவாளர். நா. முனிசாமி முதலியாரவர்கட்கும், இத்தகைய நூல்களை ஆதரித்துவரும் தமிழார்வ முடையார்க்கும் இறைவன் என்றென்றும் தண்ணருள் புரிவானாக.

இங்ஙனம் :

வீ. ஆறுமுகன்.

காண்ட அட்டவணை.

விஷய சூசிகை.

பக்கம்.

பக்கம்.

ஸ்ரீ:

இராமாயணசங்கிரகம்

காப்பு.

"நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் தோள்வலி கூறு வோர்க்கே"

பாலகாண்டம்.

நாட்டுச் சிறப்பு.

பிரமசிருஷ்டிக் குட்பட்ட இவ்வுலகமானது எழு வகைத் தீவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவை: சம்பு, இறலி, குசை, கிரவுஞ்சம், புட்காம், இலாங்கலி, பூகம் என்பனவாம். இவற்றுள் சம்புத்தீவானது மிகச் சிறந்து விளங்குவதாம். இது, நாவலந்தீவு எனவும் கூறப் படும். இதில் பற்பல நாடுகள் உள்ளன. அவற்றுள் கோசலநாடு மேம்பட்டு விளங்குவது; அன்பு, அருள், பொறை, அறிவு முதலிய நற்குணங்கள் பொருந்திய குடிகள் நிறைந்தது; சகல ஜீவராசிகளுக்கும் ஆதார ஸ்தானமாய் விளங்குவது; குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு நில வளங்களும் ஓங்கப் பெற்றது; ஆங்காங்கே மலர்ச்சோலைகளாலும், சண்பக வனங்களாலும், தடாகங்களாலும், நீரோடைகளாலும், மலைகளாலும், வயல்களாலும் நிறைவுற்றது; சரயுநதிப் பாய்ச்சலையுடையது. இந்நதியின் ஜலாதாரத்தினால் மருத நிலங்கள் மிகச் செழிப்புற்றுப் பயிர்களோங்கி வளர்ந்து நல்ல பலன்களைத் தருவனவாம். அப் பலன்களைக்

கொண்டு இந்நாட்டிலுள்ள குடிகளனைவரும் அரசனுக்கு முறையே பகுதியைச் செலுத்தி, பிதுர்க்களையும் தெய்வங்களையும், விருந்தினர்களையும், சுற்றத்தார்களையும் உபசரித்துத் தங்கள் குடும்பங்களையும் பாதுகாத்து, மற்ற அறங்களையும் வழுவாமற் செய்து இன்புற்று வாழ்வார்கள். இங்ஙனம் இந்நாட்டில் தருமங்கள் வளர்ச்சியுறுவதால் மாதம் மும்மாரி வழுவாமற் பெய்யும்; வறுமையாலும், பகைவராலும், மற்றவகைகளாலும் துன்பம் நேருவதில்லை.

நகரச் சிறப்பு.

இத்தகைய புண்ணிய நாட்டிற்குத் திலதம்போல் விளங்குவது அயோத்தி நகரமாம். இந்நகரம் ஐசுவரியத்தாலும், அழகாலும், குபேரன் நகராகிய அளகாபுரியையும், இந்திரன் பதியாகிய அமராவதியையும் பின்னிடச் செய்வது; விண்ணுற ஓங்கிவளர்ந்த கோட்டையையும், பூமிக்குள் மிகவும் ஆழ்ந்தகன்ற அகழியையு முடையது; உயர்ந்த கோபுரங்களால் ஒளிர்வது; தேவாலயங்களாலும், இராஜ மாளிகைகளாலும், அந்தணர், அரசர், வணிகர், சூத்திரர் ஆகிய நான்கு வருணத்தார்களும் வசிக்கும் வீதிகளாலும், கடைத்தெருக்களாலும், அறச்சாலை, ஆயுதச்சாலை, கல்விச்சாலை முதலியவற்றாலும் நிறைந்து முதன்மைபெற்று விளங்குவது; சூரியகுலத் தாசர்கள் வழி வழியாக இருந்து அரசியற்றிவந்த பெருமையையுடையது.

அரசன் சிறப்பு.

இந்நகரத்திலிருந்து அரசு செலுத்திவந்த பல மன்னர்களில், அஜமகாராஜனுடைய புத்திரனாகிய தசரதன் மிகவும் பிரக்யாதி பெற்றவன்; கௌசலை, சுமித்திரை, கைகேசி என்னும் மூன்று மனைவியரையுடையவன்; தேவர்

வேண்டுகோளால் கைகேசி தேர்நடத்தச் சென்று அசுரர் தலைவனாகிய சம்பரனைக் கொன்றவன்; ஏகசக்ராதிபதியாய் அறுபதினாயிரம் வருடங்கள் அரசுபுரிந்தவன்; மநுநீதிதவறாமற் செங்கோலோச்சிய மதிவல்லான்; தன் கீர்த்தியை எங்கும் பரவச்செய்தவன்; தருமசொரூபன்; அறிவு, கிருபை, தருமம், பொறுமை, பலம், வீரத்துவம், உதாரத்துவம் முதலிய உத்தம குணங்களெல்லாம் பொருந்தியவன்; யாகாதி கிருத்தியங்களை யெல்லாம் குறைவறச்செய்து முடித்தவன்; உலகத்துயிர்களுக்கெல்லாம் ஆதாரபூதமாய் விளங்குபவன்; பரராஜர் திறை செலுத்தி வணங்குதலால் அவர்களின் முடிகள் உராய்ந்து சிவந்த பாதங்களையுடையவன்.

இராம ஜனனம்.

இங்ஙனம், சகல சிறப்புக்களையுமுடைய தசரத சக்கரவர்த்தி அரசாண்டு வருங்காலத்தில், தனக்கு நெடுங்காலமாகப் புத்திரப்பேறின்மையால் மனக்கவலையுற்று ஒரு தினம் தன் குலகுருவாகிய வசிஷ்டமுனிவரிடம் அக்குறையைச் சொல்லிவருந்தி, "இது தீருமார்க்கமுளதோ?" என்று வினவினான்.

முன்னொருகாலத்தில், இந்திரன் முதலிய தேவர்கள், இராவணன் முதலிய இராக்ஷதர்களாலே துன்பப்பட்டு அந்த உபத்திரவத்தைத் தீர்க்குமாறு, சிவபெருமானிடத்திற் சொல்லி முறையிட்டார்கள். அதற்குச் சிவபெருமான், "நாம் இராக்ஷதர்களைச் சங்கரிப்பதில்லை; வேறோருபாயத்தால் இத்துன்பத்தை யொழிக்கும் மார்க்கத்தினைச் செய்வோம்? வாருங்கள்" என்று அவர்களை அழைத்துக் கொண்டு பிரமதேவனிடம் சென்றார். பின்னர், எல்லோரும் பிரமதேவனிடத்தில் மேற்கூறிய துன்

பத்தைத் தெரிவித்தார்கள். அதைக்கேட்ட பிரமதேவன், "இத்துன்பத்தைத் தீர்த்தல், ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியால் இயலுமே யன்றி, மற்றையரால் இயலுங்காரியமன்று" என்று சொல்ல, அங்ஙனமே தீர்க்குமாறு, தேவர்களெல்லோரும், திருப்பாற் கடலில் யோக நித்திரை செய்தருளும் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியை ஸ்தோத்திரம் செய்தார்கள். நாராயணர், அந்த ஸ்தோத்திரத்திற் கிரங்கி, கருடாரூடராய், சங்கு சக்கரதாரியாய் அத்தேவர்களுக்கு முன்னே பிரசன்னராகி, "அமரர்காள்! நீங்கள் கவலைப் படவேண்டாம்; விரைவில் இத்துன்பம் ஒழியும்; நீங்கள் பூவுலகிற்சென்று, வனங்களிலும், மலைகளிலும் வானரங்களாக உற்பவித்துச் சஞ்சரித்துக் கொண்டிருங்கள்; நாம், சங்கும், சக்கரமும், சேஷனும் தம்பியராக உடன்வர, அயோத்தி மன்னனாகிய தசரத சக்கரவர்த்தியின் புத்திரனாகத்தோன்றி, வானரங்களாயிருக்கும் உங்களைப் படைத்துணை சேர்த்து அந்த இராக்ஷதர்களை அடியோடு மாய்த்து உங்களுடைய துயரத்தை நீக்குவோம்" என்று கூறியருளி மறைந்தனர். அங்ஙனமே பிரமதேவன் கிஷ்கிந்தையில், ஜாம்புவந்தனாகவும், இந்திரன் வாலியாகவும் அவ்வாலியின் புதல்வன் அங்கதனாகவும், சூரியன் அந்த வாலியின் தம்பி சுக்கிரீவனாகவும், அக்கினி தேவன் நீலனாகவும், வாயுவும் சிவனும் அனுமானாகவும், மற்ற தேவர்களெல்லோரும் வானரங்களாகவும் தோன்றி யிருந்தார்கள். ஸ்ரீமந்நாராயண மூர்த்தி, சங்கு, சக்கரம், சேஷன் ஆகியவற்றுடனே தசரதன் புத்திரனாக அவதரிப்பதற்கு, அச்சக்கரவர்த்தி புத்திரகாமேஷ்டி யாகம் புரியும் தருணத்தையும், இராவணன் முதலியவர்களுக்கு ஆயுள் குறுகுங்காலத்தையும் எதிர் பார்த்திருந்தார். மேற்கூறியபடி தசரதன் புத்திரனில்லாக் குறையைக் கூறி வசிஷ்டரிடம் வருந்திய காலத்

தில் அப்பருவம் சமீபித்திருந்தது. இந்த இரகசியத்தை வதிஷ்டர் உணர்ந்திருந்தார்.

ஆதலின், தசரதன் அவ்வாறு கூறியபோது வதிஷ்டர் அந்த இரகசியத்தை மனதில் வைத்துக்கொண்டு தசரதனை நோக்கி, "மன்னனே! நீ, கலைக்கோட்டு முனிவரைக் கொண்டு புத்திரகாமேஷ்டி யாகஞ் செய்வாயானால், ஒப்புயர்வற்ற புத்திரனைப் பெறுவாய்" என்று கூறினார்.

அங்ஙனமே, தசரதன், அப்போது, உரோமபாத மகாராஜன் பட்டணத்தில்,அவன் புத்திரியாகிய சாந்தையை மணஞ்செய்து கொண்டிருந்த கலைக்கோட்டு முனிவரைப் பத்தினியுடன் அழைத்து வந்து, அவரையும் வதிஷ்டரையும் கொண்டு புத்திரகாமேஷ்டி யாகத்தைப் பூர்த்தி செய்வித்தான். யாகமுடிவில் ஓமகுண்டத்திலிருந்து ஒரு பூதம் திவ்வியான்னத்தைப் பொற்றட்டிலேந்தி வெளியேறி வந்து, அவ்வன்னத்தைப் பூமியின் கண் வைத்து மீண்டும் ஓமகுண்டத்திற் புகுந்து மறைந்தது. கலைக்கோட்டு மகாமுனிவர், அவ்வன்னத்தை யெடுத்துத் தசரதமகாராஜன் கையிற் கொடுத்து, "உம்முடைய பட்டத்து ஸ்திரீகட்கு இதனைக் கிரமமாகப் பங்கிட்டுக் கொடும்" என்று ஆக்ஞாபிக்க, அவ்வாறே சக்கரவர்த்தி அதனைச் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டு போய் மூன்று பாகமாக்கி ஒரு பாகத்தை முதல் மனைவி யாகிய கௌசலைக்கும், மற்றொருபாகத்தைக் கைகேசிக்கும், பின்னொரு பாகத்தை மூன்றாம் மனைவியாகிய சுமித்திரைக்கும் கொடுத்து, அத்தட்டில் சிதறியிருந்த அன்னங்களை ஒன்றாகச் சேர்த்து அந்தச் சுமித்திரைக்கே கொடுத்தான். பின்னர், கலைக்கோட்டு முனிவர் தசரதனை ஆசீர்வதித்துத் தமதிருப்பிடஞ் சேர்ந்தனர்.

அதன்மேல், தசரதன் மனைவியர் மூவரும் கருக்கொண்டு பத்து மாதங்களும் சென்றபின்னர், சித்திரை

மாதம் சுக்கிலபக்கம் நவமிதிதியும், புனர்பூச நக்ஷத்திரமும், கர்க்கடகராசியும் கூடிய சுபதினத்தில், ஸ்ரீமந் நாராயணர் கௌசலையிடம் புத்திரராக உற்பவித்தார். பின்னர், பூச நக்ஷத்திரம் மீன ராசியில், கைகேசியின் வயிற்றில் நாராயணருடைய சக்கரமானது ஒரு புத்திரனாக உற்பவித்தது. அதன்மேல் ஆயிலிய நக்ஷத்திரம் கர்க்கடகராசியில் விஷ்ணுமூர்த்தியினுடைய சயனமாகிய சேஷன், சுமித்திரையின் வயிற்றில் ஒரு புத்திரனாகத் தோன்றினான். அதன் பின்னர் அந்த வைகுண்டவாசனுடைய சங்கமானது, அந்தச் சுமித்திரையின் வயிற்றிலேயே மக நக்ஷத்திரம் சிங்கராசியில் ஒரு புத்திரனாகப் பிறந்தது.

இங்ஙனம் நான்கு புத்திரர்களும் பிறந்தவுடனே, தேவர்களெல்லோரும் தங்கள் துயரம் நீங்கிச் சந்தோஷித்துப் புஷ்பமாரி பொழிந்தார்கள். தேவதுந்துபி முழங்கிற்று. மண்ணுலகத்தவர்களெல்லோரும் மன மகிழ்ச்சியடைந்தார்கள். உலகமெங்கும் தானதருமங்கள் வழங்கப்பட்டன. புத்திரோற்சவங்கள் கொண்டாடப் பட்டன. அதன்மேல் பன்னிரண்டாநாள், வசிஷ்டமுனிவர், அப்புத்திரர்களுக்குச் சகல சிறப்புக்களுடன் நாம காரணஞ் செய்யத் தொடங்கி, கௌசலையின் புத்திரனுக்கு இராமனென்றும், கைகேசியின் புதல்வனுக்குப் பரதனென்றும், சுமித்திரையின் முதற் புத்திரனுக்கு இலக்குமணனென்றும், இரண்டாவது புத்திரனுக்குச் சத்துருக்கனென்றும் பெயரிட்டனர். பின்னர், இப்பிள்ளைகள் நால்வரும் தொட்டிலேறி, மெல்லிய ஆசனத்திலிருந்து, தவழ்ந்து, அன்னப் பிராசனம் முதலிய சடங்குகள் செய்யப் பெற்று, நடந்து விளையாடி, சௌளம், உபநயனம் முதலியவைகளும் முறையே செய்விக்கப்பெற்றுக் கல்விகற்கும் பருவம் வந்தவுடன் வசிஷ்டமகா முனிவரிடத்திலேயே சகல கலைகளையும் ஓதியுணர்ந்து

ஒப்புயர்வற் றுலாவினார்கள். பிள்ளைகளின் வளர்ச்சியைக் கண்டு தசரதசக்கரவர்த்தியும், கௌசலை முதலிய அன்னைமார்களும், நகரமாந்தரும் மனக்களிப்புற்றிருந்தனர்.

தாடகை வதை.

இவ்வாறு எல்லோரும் களிப்புற்றிருக்கும் காலத்தில் ஒருதினம், தசரதனுடைய இராஜசபைக்கு மகாமுனி சிரேஷ்டராகிய விசுவாமித்திரர் வந்தார். தசரதன் அவரைக் கண்டதும் வணங்கி ஆசனத் தெழுந்தருளச் செய்து அவரை நோக்கி, "சுவாமி! இங்கெழுந் தருளியதற்குக் காரணமியாது?" என்று வினவினன். அதற்குக் கௌசிக முனிவர், "சக்கரவர்த்தியே! என்னைப்போன்ற முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் துன்பம் நேர்ந்தால், உன்னைப் போன்ற சக்கரவர்த்தியே அதனைத் தீர்க்கவேண்டும். ஆதலின், இப்பொழுதெனக்கும் மற்றைய முனிவர்களுக்கும் இராக்ஷதர்களால் ஏற்பட்டிருக்கும் துன்பத்தை நின்பாற் சொல்லி யொழித்தற்கே நான் இங்கு வந்தேன்; இராக்ஷதர் செய்யுங் கொடுமை சகிக்கமுடியாததா யிருக்கிறது; உன் புத்திரன் இராமனை என்னுடன் அனுப்புவாயானால் அவன், இராக்ஷதர்களை யொழித்து எங்கள் துன்பத்தை அகற்றுவான்" என்று கூறினர்.

இதைக் கேட்டதும், தசரதன், தன் புத்திரராகிய இராமரை யனுப்புவதற்கு மனமிசையாதவனாய்க் கௌசிகரிடம், "முனிசிரேஷ்டரே! இராமனோ அறியாச் சிறுவன்; தாங்க ளுரைத்தது அவனால் இயலுங் காரியமன்று; யான் வந்து அக்காரியத்தை முடிக்கிறேன்" என்றுரைத்தான். இவ்வாறு தமது சொல்லைச் சக்காவர்த்தி மறுக்கவே விசுவாமித்திரர் கோபித்தெழுந்தார். அப்பொழுது வசிஷ்டர் விசுவாமித்திரருக்குச் சமாதானங் கூறி அவருடைய கோபத்தைத் தணித்து, தசரதனை நோக்கி, "மன்னனே!

விசுவாமித்திருடன் இராமனை அனுப்புவதால் ஒரு தீங்கும் நேராது; பல நன்மைகளே உண்டாகும்; ஆதலின், இவனை இவருடன் அனுப்பும்" என்றனர். உடனே தசாதன் இராமரை அனுப்ப இசைந்து, இலக்குமணன் அவருடன் இணைபிரியாதிருப்பவனுதலின் அவனையுந் துணையாகச் சேர்த்து இராம இலக்குமணர்களை விசுவாமித்திரருடன் அனுப்பினுன்.

அதன்மேல், கௌசிகரும், இராமலக்குமணர்களும் அயோத்தியைத் தாண்டிச் சரயுநதியைக்கடந்து, சூரியன் அஸ்தமிக்கும்போது அங்கதேசத்திலுள்ள காமாச்சிரமத்தைச் சேர்ந்தார்கள். அவ்வாச்சிரமம் மிக்க சிறப்புற்று விளங்கிற்று. அதைக்கண்டதும் ஸ்ரீராமர், "சுவாமி! இவ்விடம் மிக மேன்மையுற்றிருக்கின்றதே; இதன் விருத்தாந்தமியாது?" என்று விஸ்வாமித்திரரிடம் வினவினுர். அப்போது கௌசிகர் இராமரை நோக்கி, "இராகவ! இஃது, ஆதியில் சிவபெருமான் யோகஞ்செய்து கொண்டிருந்த விடம்; இவ்விடத்தில் அவர் யோகத்தமர்ந்திருக்கும்போது தான், மன்மதன் அவர்மீது பாணப் பிரயோகஞ் செய்து அவருடைய நெற்றிக்கண்ணின் நெருப்பினுல் நீருனன்; அவனுடைய அங்கம் இங்கே அழிந்தபடியால் இதற்கு அங்கதேசமென்று பெயருண்டாயிற்று. இன்னும் காமன் எரிந்த விடமாதலின், இது, காமாச்சிரமம் எனவும் பெயர்பெற்றது. ஆதலின், இந்த ஆச்சிரமம் எல்லாவற்றினும் சிறந்ததாகும்" என்று கூறினுர்.

அதன்மேல் மூவரும் அங்குள்ள முனிவர்களைக்கண்டுறவாடி அன்றிரவு அங்குத் தங்கியிருந்து மறுநாட்காலையில் அவ்விடத்தினின்றும் புறப்பட்டு, ஒரு பாலைநிலத்திற் போய்ச் சேர்ந்தார்கள். அந்நிலம் மகாகொடுமையாய் விளங்கிற்று. அப்போது இராமலக்குமணர்கள் வருத்த

முறுவாரென்று அவ்வருத்தந் தோன்றுதிருக்குமாறு, விசுவாமித்திரர், ஆதியில் பிரமாவினு லுண்டாக்கப்பட்ட பலை, அபலை யென்னும் இரண்டு மந்திரங்களையும் இராம லக்ஷ்மணர்களுக்கு உபதேசித்தருளினர். அம்மந்திர பலத்தால் அவர்களுக்கு அந்தப்பாலைவனத்தின் வெப்பந்தோன்று திருந்தது. அப்போது ஸ்ரீராமர் அந்தப் பாலைவனத்தின் விருத்தாந்தத்தைச் சொல்லுமாறு விசுவாமித்திரரிடம் வேண்டினர்.

விசுவாமித்திரர், "இராமா! இவ்விடம் ஆதியில் குளிர்ந்த மருதநிலமாயிருந்தது; அங்ஙனமிருந்தது பாலை நிலமாக மாறியதற்குக் காரணத்தைக்கூறுகிறேன் நீ கேட்பாயாக: ஆதியில் கந்தருவகுலத்தில், சற்சரனென்னும் ஓர் அரசனிருந்தான். அவனுக்குச் சுகேதுவென்பவன் புத்திரன். அவன் புத்திரப்பேறில்லாமல் பிரமாவைநோக்கித் தவஞ் செய்து, அப் பிரமனுடைய வரத்தினுல் ஆயிரம்மதயானை பலத்தோடு கூடிய ஒரு புத்திரியைப் பெற்றான். அவள், சுந்தனென்பவனுக்கு மனைவியானாள். இவ்விருவருக்கும் மாரீசன் சுவாகு என்னும் இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். அதன் மேல் சுந்தனென்பவன் தன்பிள்ளைகளின் பலத்தினுல் அகங்கரித்து அதர்மமார்க்கத்திற் பிரவேசித்து, ஒருதினம் அகஸ்தியமுனிவரின் ஆச்சிரமமடைந்து சில கெடுதிகளைச் செய்தான். அப்போது அகஸ்தியர் மிக்க கோபத்துடன் அவனைப்பார்த்தார். அப்பார்வையால் அவன் எரிந்து சாம்பலாய்ப்போயினன். அங்ஙனம் அவன் மடிந்தசெய்தியை அவனுடைய மனைவியும் பிள்ளைகளும் உணர்ந்து கோபித்து அகஸ்தியரைக் கொல்லச்சென்றார்கள். அகஸ்தியர், அவர்களைப்பார்த்து, "நீங்கள் இராக்ஷதர்களாகுக" என்று சபித்தார். அவர்கள், அவ்வாறே இராக்ஷதர்களாகி, சுமாலியென்பவனிடத்திற் சேர்ந்து அவனுக்குப் பிள்ளை முறையினர்

களாய்ப் பாதாளத்திலிருந்து, இப்போது இராவணனிடத்திற் சேர்ந்து, மாரீசனும், சுவாகுவும் அவனுக்குமாமன் முறையினராய் இலங்கையில் வசித்து உலகத்தார்க்குத் துன்பம்செய்து வருகின்றனர். அவர்களின் தாயானவள் தாடகையென்னும் பெயருடையவளாய் அகஸ்தியருடைய விரோதத்தை முன்னிட்டு முனிவர்களுக் கெல்லாந் துன்பஞ்செய்யும் நோக்கமுடையவளாய் இவ்விடத்திற் பிரவேசித்து, மருத நிலமாயிருந்த இதனைப் பாலைநிலமாக மாற்றினாள். அதனாலே இந்நிலம் இவ்வளவு வெப்ப முடையதா யிருக்கின்றது. அவள் இராவணனுடைய ஊழியக் காரியாய் இவ்விடத்தி லிருந்துகொண்டு சகலமுனிவர்களுக்கும், ஜீவராசிகளுக்கும் உபத்திரவத்தைச் செய்துகொண்டு வருவதோடு எனது யாகத்துக்கும் விக்கினஞ் செய்து வருகிறாள்; அவளை முதலில் ஒழித்து விடவேண்டும்" என்று கூறினார்.

இவ்வரலாற்றைக் கேட்டதும் இராமர், "அப்பாதகி இப்போது எங்கே வசிக்கின்றனள்?" என்று முனிவர்பால் வினவ, அவர், பக்கத்திலிருந்த ஒருமலையைக்காட்டி, "இதிற்றாணிருக்கின்றாள்" என்றுரைத்தார். அவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும் போதே அத்தாடகை பயங்கரமான உருவத்துடன் அவர்கட்கு முன்னே தோன்றிப் பற்பல அடாமொழிகளைக்கூறி அவர்களைக் கொல்லுதற்குத் தன்னிடமிருந்த சூலாயுதத்தை ஓங்கினாள். அப்போது இராமர், "இவள் ஸ்திரீயா யிருக்கின்றாளே; இவளை எவ்வாறு கொல்வது?" என்று யோசித்துக் கொண்டு மௌனமாக நின்றார். அதுகண்ட விஸ்வாமித்திரர், "இராம! என்ன யோசனை? இவளைப் பெண்ணென்று நினையாதே; உலகத்துக் கெல்லாம் துன்பத்தைச் செய்பவள்; ஆதலின், இவளை வதைசெய்வதால் பாதகமில்லை; சீக்கிரம்கொல்" என்றுரைத்தார். உடனே இராமர் வில்லைவளைத்துப் பாணங்

தொடுக்க ஆரம்பித்தார். அதுகண்டு தாடகை, சூலத்தை இராமர் மீதெறிந்தாள். அதனை, ஸ்ரீராமர் அஸ்திரத்தால் நிமைகொட்டுமுன் இரண்டு துண்டாக்கினர். அதன்மேல் அவள், மலைகளைப் பிடுங்கி யெறிந்தாள். இராமர் அஸ்திரங்களால் அவற்றைப் பொடியாக்கிவிட்டு மிக்க வேகமுள்ள ஓர் அஸ்திரத்தால் அவளை வதைத்தார். அப்பொழுது தேவர்களெல்லோரும் ஆகாயத்தில் வந்து நின்று இராமர்மீது புஷ்பமாரி பொழிந்து, "ஸ்ரீராமருக்கு தெய்விகமாகிய அஸ்திரங்களைக் கொடும்" என்று விசுவாமித்திரருக்குக்கூறி இராமரை வாழ்த்திச் சென்றனர்.

கோமதியாற்றின் வரலாறு.

அதன்மேல் விசுவாமித்திரர், இராமருக்கு அநேகம் திவ்வியாஸ்திரங்களைக் கொடுத்து அவரையும் இலக்குமணனையும் அழைத்துக்கொண்டு அதற்கப்பால் சென்றார். சிறிது தூரத்திற் கப்பாற் செல்லும்போது, நீரோட்டத்தின் ஒலி கேட்டது. அதைக் கேட்டவுடன் ஸ்ரீராமர் விசுவாமித்திரரிடம், "சுவாமி! இங்கேயுண்டாகும் ஒலி யாது?" என்று வினவ, அவர், "இராமா! மானசமடுவில் பிறந்த சரயுவென்னும் தீர்த்தமானது இங்கே கோமதி யென்னும் தீர்த்தத்தில் வீழ்கிறது; அதனாலுண்டாகும் ஒலிதான் இது" என்று கூறினர்.

பின்னர் அவர்கள் அவ்விடத்தைத்தாண்டிச் சிறிது தூரம் சென்றார்கள். அங்கே கோமதிநதி புலப்பட்டது. அதைக் கண்டவுடன், இராகவர் விசுவாமித்திரரிடம், "சுவாமி! இந்நதியின் வரலாறு யாது?" என்றுவினவ, அவர், "இராம! பிரமதேவனுக்கு, குசன்என்னும் ஒரு புத்திருண்டு. அவர் நீதியோடு செங்கோல் செலுத்திவந்தார். அவருக்குக் குசன், குசநாபன், அதூர்த்தன், வசு என்னும் நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் குசநாபன் என்பவனுக்கு நூறு

பெண்கள் பிறந்தார்கள். அவர்கள் யௌவனமடைந்த காலத்தில் ஒருதினம் தங்கள் பிதாவினுடைய சிங்காரவனத்திற் போய் விளையாடினார்கள். வாயுபகவான் அவர்களைக்கண்டு இச்சைகொண்டு தன்னை மணஞ் செய்து கொள்ளுமாறு வேண்டினான். அவர்கள், "எங்கள்பிதாவிடம் கேட்டு அவர் சம்மதித்தால் நீர் எங்களை மணஞ்செய்து கொள்ளலாம்" என்று கூற,வாயு, சினமடைந்து, தனது ஸ்பரிசத்தால் அவர்களின் முதுகுகளை ஒடித்துக் கூன்களாக்கிவிட்டுச் சென்றான். அப்பெண்கள் தந்தையிடம் போய்த் தங்கட்கு நேர்ந்ததைக்கூற அவன் கிலேசித்து அவர்கட்குத் தேறுதல் கூறி சூளிமகாரிஷி புத்திரரான பிரமதத்தருக்கு அவர்களை மணஞ்செய்துகொடுத்தான். அந்த மகரிஷியின் ஸ்பரிசம் பட்ட மாத்திரத்தில், அந்தப் பெண்களுடைய கூன்களெல்லாம் நீங்கின. அதன்மேல் அந்தக் குசநாபனுக்குப் புத்திரரின்மையால் அவன் ஓர் யாகஞ் செய்தான். அந்தயாகத்தில் காதி பிறந்தார். அவருக்கு இராஜ்ஜிய பட்டாபிஷேகம் செய்துவிட்டுக் குசநாபன் சுவர்க்க மடைந்தான். பிறகு அந்தக் காதிமகாராஜருக்கு, நானும் கௌசிகை யென்னும் பெண்ணும் பிறந்தோம். என் தந்தையார் அந்தப் பெண்ணை, பிருகுமுனிவர் புத்திரரான இருசிகருக்கு மணஞ் செய்து கொடுத்தார். அத் தம்பதிகள் இருவரும் நெடுங்காலம் உலகத்திருந்து பின்னர், இருசிகர், பிரமலோகஞ்சென்றார். அப்போது கௌசிகையும் அவரைப் பின் தொடர்ந்தாள். இருசிகர் அவளைத் திரும்பிப் பார்த்து "நீ பூவுலகத்தில் நதியாயிருந்து சகலருக்கும் பாவவிமோசனம் செய்துகொண்டிருப்பாயாக" என்று கட்டளையிட்டுச் சென்றார். அதன்மேல் என் தமக்கையாகிய கௌசிகை நதியாயினாள். அந்நதி தான் இது; இதற்குக் கோமதியென்று பெயர்" என்று கூறினார்.

மகாபலி வரலாறு.

அதன்மேல் மூவரும் அவ்விடத்தைவிட்டு அப்பாற் சென்றார்கள். சிறிது தூரம் சென்றபின், எதிரில் ஓர் அழகிய சோலை தோன்றிற்று. அதைக் கண்டவுடன், இராமர், "இந்தச்சோலையின் விருத்தாந்த மென்ன?" என்று விசுவாமித்திரரிடம் வினவினர். விசுவாமித்திரர் அச்சோலையின் வரலாற்றைக் கூறத் தொடங்கினவராய், "ஸ்ரீராகவா! இச்சோலை மிகவும் மகத்துவம் பெற்றது. ஸ்ரீ மகாவிஷ்ணு, பூர்வத்தில் இவ்விடத்திலிருந்து நூறு ஊழிக்காலம் தவம் முதலியவற்றைச் செய்து யாவர்க்கும் அறிவித்தனர். அவர் அவ்வாறு இவ்விடத்தி லிருக்குங்காலத்தில், மகாபலியென்னும் அரசன், தவபலத்தினால் சுவர்க்கம், மத்தியம், பாதலமென்னும் மூவுலகங்களையும் தன் வசப்படுத்தி, அந்தணர்க்கும் மற்றையர்க்கும் சகல தானதர்மங்களையும் செய்துகொண்டு வந்தான். அவனுடைய பெருமிதத்தைக் கண்ட தேவர்கள், அவன் அங்ஙனம் விருத்தியடைந்து வருவதால் தங்களுக்கு அபாயம் வருமென்று கருதி, இவ்விடத்திற்கு வந்து மகாவிஷ்ணுவைக் கண்டு வணங்கி அவரிடத்தில், 'சுவாமி! மகாபலியை அடக்கி யருளவேண்டும்,' என்று கேட்டுக் கொண்டனர். விஷ்ணு, அவ்வாறே செய்வதாக அவர்களுக்கு வரங்கொடுத்துவிட்டுக் காசிபருக்கும், அவர் பத்தினியாகிய அதிதிக்கும் வாமனரூபமுள்ள புத்திராக அவதரித்து, அந்தக் குறுகிய வடிவத்துடனே மகாபலியிடம் சென்று, 'எனக்கு மூன்றடிமண் வேண்டும்,' என்று கேட்டார். அதற்கு மகாபலி இசைந்து, 'அவ்வாறே மூன்றடி மண் கொடுத்தேன் பெற்றுக்கொள்ளும்' என்று சொல்லித் தாரைநீர் வார்க்கப் போனான். அப்போது அவனுடைய குருவாகிய சுக்கிரன், விஷ்ணுவின் கபடத்தை யுணர்ந்து, 'நீ இவ்வாறு செய்வதால் தீங்குண்டாகும்' என்று மகாபலி

யைத் தடுத்தான். மகாபலி, 'என்ன தீங்குவரினும் சத்பாத்திரத்தில் இடுந் தானம் மேன்மையுடையதாகும்; ஆதலின், இதை நீ தடைசெய்யாதே' என்று கெண்டியிலிருந்த ஜலத்தை விஷ்ணுவின் கரத்தில் வார்த்தான். அவ்வாறு செய்தும் சுக்கிரன் அவன் மீதிருந்த விசுவாசத்தால் அத் தானத்தை எப்படியேனும் தடைசெய்து விடவேண்டுமென்று கருதி, ஒரு வண்டுருவாய்க் கெண்டியின் துவாரத்திற்புகுந்து ஜலம் விழவொட்டாமல் அடைத்தான். அதையறிந்த வாமனர் ஒரு தருப்பையை யெடுத்து அக்கெண்டியின் துவாரத்தில் குத்தினார். அது சுக்கிரனுடைய ஒரு கண்ணிற்பட்டு அக் கண் பழுதாயிற்று. அவன் பயந்து உடனே விலகிவிட்டான். அதன்மேல் தாரைநீர் விஷ்ணுவின் கரத்திற் வீழ்ந்தது. அங்ஙனம் வீழவே, வாமனரூபராயிருந்த திருமால் விசுவரூபங்கொண்டு அண்ட முகடுவரை உயர்ந்து, மூவுலகங்களையும், இரண்டடிகளாலும் அளந்து, 'இன்னுமோரடிக்கு இடமெங்கே?' என்று மகாபலியிடம் வினவினார். அப்போது பலி, 'சுவாமி! இன்னுமோரடிக்கு இடம் அடியேன்சிரமே' என்று தலைகுனிந்தான். உடனே விஷ்ணு தம்முடைய ஒரு பாதத்தை அவன் சிரமீது வைத்தழுத்தி அவனைப் பாதாளலோகத்திற் சேர்த்து அவனுக்குப் பல வரங்களைக் கொடுத்து அங்கிருக்கும்படி செய்துவிட்டு அவனிடமிருந்த ஆளுகையைத் தேவேந்திரன் வசப்படுத்தித் திருப்பாற்கடலிற் சேர்ந்து, இலக்குமி, தமது பாதங்களை வருட, யோகநித்திரை செய்தருளினார். அத்தகைய மகாவிஷ்ணு வாசஞ்செய்த விடமாதலின் இது மகா புண்ணியஸ்தலமாகும்; இதனைத் தரிசித்தவர்க்கு மறுஜனனமில்லை. ஆதலின், யான், செய்ய உத்தேசித்திருக்கும் யாகத்தை இவ்விடத்திலேயே செய்யத் தீர்மானித்திருக்கிறேன். நான் அதைச் செய்யுங்காலத்தில் பல இராக்ஷதர்கள்

வந்து அதற்கிடையூறுகள் செய்வார்கள்; நீயும் இலக்குமணனும் அவ்வகை இடையூறுகள் நேராமல் என் யாகசாலையைக் காத்துக் கொள்ளவேண்டும்" என்று சொல்லி அவ்விடத்தில் தமது யாகத்தைச் செய்ய ஆரம்பித்தார்.

விசுவாமித்திரர் வேள்வி.

அங்ஙனம் ஆரம்பித்து விசுவாமித்திரர் வேள்வியைச் செய்துகொண்டு வரும்போது இராமரும், இலக்குமணனும் கண்ணிணை இமைகள் காப்பதுபோல் அவ்வேள்விச் சாலையைக் காவல் புரிந்து வந்தனர். அவ்வாறு காவலிருக்கும்போது ஆறுதினங்கள் கழிந்தன. இராக்ஷதர்கள் ஒருவரும் வரவில்லை. அதனால், ஸ்ரீராமர் விசுவாமித்திரர் சமீபத்திற்போய், "சுவாமி! இராக்ஷதர்கள் வரவில்லையே; எப்போது வருவார்கள்?" என்று வினவினர். அப்போது விசுவாமித்திரர் நிஷ்டையிலிருந்தபடியால், மறுமொழி யொன்றும் கூறவில்லை. அதுகண்டு இராமர், "முனிவர் நிஷ்டையிலிருப்பதால் நாம் அவரோடு பேசி அந் நிஷ்டையைக் கெடுத்தல் கூடாது" என்று யாகசாலைக்கு வெளியில்வந்து ஆகாயத்தை நோக்கினர்.

அப்போது மாரீசன் முதலிய இராக்ஷதர்கள், மாயா வடிவத்தைத் தாங்கிக் கருக்கொண்ட மேகங்களைப்போன்று ஆகாயத்தில் நிறைந்து இடியைப்போல முழங்கிப் பர்வதங்களையும், விருக்ஷங்களையும் பிடுங்கி இராமர் முதலியவர்களின் மீதிலெறிந்து, ஆயுதங்களைப் பிரயோகித்து, அக்கினி மழையைச் சொரிந்து ஆர்ப்பரித்தார்கள். ஸ்ரீராமர் அவர்களைப் பார்த்து, "இவர்கள்மீது ஆயுதப் பிரயோகஞ் செய்தால் இவர்களுடைய இரத்தம், மாமிசம் முதலியன விசுவாமித்திருடைய ஓம குண்டத்தில் வீழும்; அதனால் தோஷமுண்டாகும்; ஆதலின், அவ்வித தோஷம் நேராதபடி ஓருபாயஞ் செய்வோம்" என்று கருதி முதலில் அவ்வேள்விச்

சாலைக்கு மேலே தம்முடைய பாணங்களை யேவிச் சரக்கூடங் கட்டினார். அத் தருணத்தில் பக்கங்களிலிருந்த முனிவர்க ளெல்லோரும் இராக்ஷதர்களைக் கண்டு பயந்தோடி வந்து ஸ்ரீராமரிடம் அடைக்கலம் புகுந்தார்கள். அதன்மேல் ஸ்ரீராமர் கோதண்டத்தை வளைத்து அதில் பல அஸ்திரங் களைத் தொடுத்து இராக்ஷதர் கூட்டத்தின்மீது எவினார். அநேகம் இராக்ஷதர்கள் மடிந்தனர். பூமியெல்லாம் இரத்த வெள்ளமாயிற்று. பின்னர் ஸ்ரீராமர் எஞ்சியிருந்த தாடகை யின் பிள்ளைகளாகிய சுவாகு, மாரீசன் என்னும் இருவர்மீது ஒரு பாணத்தை யேவினார். அந்த அஸ்திரமானது சுவாகு வைக்கொன்று, மாரீசனைத் துரத்திக்கொண்டே போய்ச் சமுத்திரத்தில் சேர்த்தது. தேவர்கள் இராகவரை வாழ்த்தி னார்கள். விசுவாமித்திரர், யாகத்தை முடித்துவிட்டு இராம ரால் செய்யப்பட்ட சரக்கூடத்தையும், இரணகளத்தையும் பார்த்து, மகிழ்ந்து, இராகவரைப் புகழ்ந்தார். அன்று அவர்கள் அங்கிருந்த முனிவர்களோடு தங்கியிருந்தார்கள். மறுநாள் இராமர், விசுவாமித்திரரிடம், "சுவாமி! இன் றைக்கு யான் செய்யவேண்டிய காரியம் யாது?" என்று வினவினார். அதற்கு முனிவர், "இராகவ! இனி நீ செய்ய வேண்டிய சில பெரிய காரியங்களுண்டு. அவற்றைப் பின்னர் முடித்துக் கொள்ளலாம். இப்போது மிதிலா புரியில் ஜனகமகாராஜா யாகஞ்செய்கிறார்; நாம் போய் அதைப்பார்த்து வரலாம்" என்று சொல்லி இராம லக்கு மணர்களை அழைத்துக்கொண்டு மிதிலையை நோக்கிச் சென்றார்.

தூர்வாசர் கதையும் அமுதங் கடைந்தெடுத்த வரலாறும்.

அவ்வாறு செல்லும்போது, மூவரும், மிக்க வளம் பொருந்திய சோணநதியினிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

அப்போது சூரியன் அஸ்தமித்தான். அதனால் அவர்கள் அங்குள்ள ஒரு சோலையில் தங்கினார்கள். அங்ஙனம் தங்கியிருக்கும் போது இராமர், விசுவாமித்திரரிடம், "சுவாமி! இந்தச் சோலை மிகவுஞ் சிறப்புற்றதாய் விளங்குகின்றது; ஆதலின், இதன் விருத்தாந்தத்தைக் கூறவேண்டும்" என்று வேண்ட, அதற்கு முனிவர், "இராம! ஒரு காலத்தில் ஒரு விஞ்சையஸ்திரீ மகாலக்ஷ்மியை மிகுந்த அன்புடனே ஸ்தோத்திரஞ்செய்து பாடினாள்; அந்தத் துதியைக் கேட்டு இலக்குமி சந்தோஷித்து, அவளுக்கு ஒரு புஷ்ப மாலையைக் கொடுத்தனள். அந்த விஞ்சைமாது, அம் மாலையை வாங்கித் தனது வீணையிற் கட்டிக்கொண்டு பிரம லோகஞ் சென்றாள். அங்கேயிருந்த தூர்வாச மகாமுனி அந்த விஞ்சைமகளைக்கண்டு, அவள் இலக்குமியிடம் பாடி மாலைபெற்ற விருத்தாந்தத்தைக் கேட்டுணர்ந்து "நீ, மகா பாக்கியசாலி" என்று கொண்டாடி வணங்கித் துதிசெய்தார். அவள் மகிழ்ந்து அம்மாலையை அவர் கையிற்கொடுத்தாள். அவர் அதைவாங்கிச் சிரசிலே சூடிக்கொண்டு ஆனந்த பரவசராய் அமராவதிக்குச் சென்றார். அப்போது இந்திரன், ஐராவதமென்னும் வெள்ளையானையின் மேலேறிப் பலவகைச் சிறப்புக்களுடன் பவனிவந்தான். அவனைக் கண்டதும் தூர்வாசர் அவனிடம் அம்மாலையை அளித்தார். அவன் அதை அங்குசத்தினாலே வாங்கி ஐராவதத்தினது கழுத்திற் போட்டான்; அந்த யானை அதனைத் துதிக்கையால் இழுத்தறுத்துக் கீழே யிட்டுக் கால்களால் தேய்த்தது. அதைக்கண்டு தூர்வாசர் கோபங்கொண்டு இந்திரனை நோக்கி, "ஏ அமரேசா! நான் அரிதிற்பெற்ற இலக்குமி தேவியின் மாலையை உனக்களிக்க, அதனை நீ போற்றி யேற்றுக் கொள்ளாமல் இவ்வாறு களிற்றின் கழுத்திலிட்டுக்

காலால் மிதிக்கும்படி செய்தாய். ஆதலின் உன் செல்வமெல்லாம் சமுத்திரத்திற் போய் மறைய, நீ வருந்துவாயாக" என்று சபித்துச் சென்றனர். அக்கணமே இந்திரனுக்குரிய கற்பகம், நவநிதி, காமதேனு அமுதம் முதலிய சகல ஐசுவரியங்களும் சமுத்திரத்தில் மூழ்கி மறைந்தன. அங்ஙனமாகவே எங்கும் வறுமை பரவிற்று. அதனால் தேவர்கள் கூடி மகாவிஷ்ணுவினிடம் சென்று, துர்வாசரால் விளைந்த கேட்டினைக் கூறி அச் சங்கடத்தை யொழிக்குமாறு வேண்டினர். அதற்குத் திருமால் 'தேவர்களே! மந்தரகிரியை மத்தாக்கி, வாசுகியைக் கடை கயிறாக்கிச் சந்திரனைத் தூணாகநிறுத்தி, நீங்களும் அசுரர்களும் கூடிப் பாற்கடலைக் கடையுங்கள்; அவ்விடத்திற்கு நாமும் வந்து நீங்கள் இழந்த செல்வங்களை மீண்டும் பெறச் செய்வோம்' என்று கூறினர். தேவர்கள் அவ்வாறே பாற்கடலைக் கடைந்தார்கள். அப்போது பூமி அதிர்ச்சியுற்று நெளிந்தது. அது கண்டு மகாவிஷ்ணு கூர்மாவதாரமெடுத்து அந்த மந்தரகிரியைத் தமது முதுகிலே சுழலும்படி தாங்கினர். அவ்வாறு திருப்பாற்கடலைக் கடைந்தபோது இந்திரனுடைய ஐசுவரியங்களெல்லாம் வெளி வந்ததோடு, ஆலகாலவிஷம், இளம் பிறை, கௌஸ்துவமணி முதலியவைகளும் உண்டாயின; இலக்குமியும் தோன்றினள். ஆலகால விஷத்தையும் இளம் பிறையையும் சிவன் முறையே கண்டத்திலும் சிரசிலும் தரித்துக்கொண்டார். விஷ்ணு, கௌஸ்துவாபரணத்தையும், இலக்குமியையும் மார்பில் தரித்துக்கொண்டு, கற்பக விருக்ஷம் முதலியவற்றை இந்திரனுக்களித்து, மற்றவைகளை அவ்வவற்றிற்குத் தகுதியானவர்களிடம் சேர்த்துத் தேவர்களை அமுதுண்ணச் செய்தார்., அப்போது அவ்வமிர்தத்தினிமித்தம் தேவர்கட்கும் அசுரர்கட்கும் விரோதமுண்டாயிற்று. அதுகண்டு விஷ்ணு ஜெகமோகினி வடி

வெடுத்து அசுரர்களை மயக்கினார். அம்மயக்கத்தால் அவர்கள் அழிந்தனர். அவ்வாறு அசுரர்கள் அழிந்ததுகண்டு அவர்களின் தாயாகிய திதி யென்பவள், துக்கித்து, தனது நாயகராகிய காசிபரிடம், 'தேவர்களை வெல்லத்தக்க ஒரு புத்திரனை அனுக்கிரகம் செய்யவேண்டும்' என்று கேட்க, அவர், 'அங்ஙனமே கொடுத்தோம்; உன் கருப்பத்தில் பல சாலியான புத்திரன் அடைந்திருக்கிறான்; நீ இந்தக் கருப் பத்துடன் பூவுலகத்திற் சென்று ஆயிரம் வருஷங்கள் தவஞ் செய்வாயானால் அவன் பூரண வல்லமையுடன் பிறப்பான்' என்று ஆக்ஞாபித்தார். அவள் அவ்வாறே பூமியில் வந்து இந்தச் சோலையை அடைந்து தவஞ்செய்து கொண்டிருந் தாள். இச்செய்கையை இந்திரன் உணர்ந்து, இது தனக் குக் கெடுதி பயக்கத்தக்க தாதலால் இதற்கு விக்கினஞ் செய்ய வேண்டுமென்று கருதி, தன் சிறியதாயாகிய அந்தத் திதியினிடம் வந்து, 'அம்மா! உனக்கு நான் தொண்டு புரிந்து கொண்டிருக்கிறேன்; இதற்கு நீ அனுமதி தரவேண் டும்' என்று அனுமதி பெற்று அவளிடம் தங்கியிருந்து, ஒரு தினம் அவள் நித்திரை செய்யுந் தருணம் பார்த்து, அணுவடிவாய் அவளுடைய வயிற்றிற் புகுந்து, அங்கே வளர்ந்த பிள்ளையைத் தன் வச்சிராயுதத்தினாலே ஏழுதுண் டங்களாக்கி, ஏழு பிள்ளைகளாகப் பிறக்கும்படி செய்து அவர்களுக்கு மருத்துக்களென்று பெயரிட்டுப் போய்விட் டான். இச்சோலை அச்செய்கை நடந்தவிடம். மேலும் இது, சிவனார் புதல்வராகிய சுப்பிரமணியர் வளர்ந்த சரவண ஸ்தலமுமாகும்" என்று சொன்னார். இவ்விருத்தாந்தங் களைக் கேட்டு இராமர் மகிழ்ந்தார். பின்னர் சூரியோதயமா யிற்று. அப்போது மூவரும் எழுந்து அவ்விடத்தை விட் டுப் புறப்பட்டார்கள்.

கங்கையின் வரலாறு.

அவ்வாறு அவர்கள் புறப்பட்டுச் செல்லும்போது கங்கை நதியைக் கண்டார்கள். அப்போது இராமர் 'இந் நதியின் வரலாறு யாது?' என்று விசுவாமித்திரரிடம் வினவ, அவர் அதனைக் கூறத்தொடங்கி, "இராமா! உன்னுடைய வமிசத்தரசனாகிய சகரனென்பான் முன்னொரு காலத்தில் அயோத்தியிலிருந்து அரசு செலுத்திவந்தான். விதர்ப்பை, சுமதி என்பவர் அவனுடைய மனைவியர். விதர்ப்பை யென்பவளுக்குப் போசணனென்னும் ஒரு குமாரன் பிறந்தான்; அவனுக்கு அஞ்சுமான் என்னும் ஒரு புத்திரன் பிறந்தான். சுமதி யென்பவளுக்கு அறுபதினாயிரம் பிள்ளைகள் பிறந்தார்கள். இவர்கள் மகா சாமார்த்திய முடையவர்களா யிருந்தார்கள். சகரன் இவர்களுடைய சாமர்த்தியங்களால் தைரியங் கொண்டு அஸ்வமேதயாகஞ் செய்யத்தொடங்கி, அதற்குரிய இலக்ஷணமுள்ள குதிரையை அலங்கரித்துப் பூமிப் பிரதக்ஷணத்துக்கு விட்டு அதன்பின்னே, தன் பேரப் பிள்ளையாகிய அஞ்சுமானை, அனேகம் சேனைகளுடன் அனுப்பினான். அந்த யாகம் இந்திரனுக்கு விரோதமானதாதலின், அவன் உடனே காமரூபியாய் வந்து அந்தக் குதிரையைப் பிடித்துக் கொண்டு போய்ப் பாதாள லோகத்தில் நிஷ்டையி லிருந்த கபில முனிவருக்குப் பின்பக்கத்தில் மறைத்துவிட்டுப் போயினான். அஞ்சுமான், குதிரையைக் காணாமல் தன் பாட்டனாகிய சகரனிடம் வந்து அவ்விவரத்தைக் கூறினான். சகரன் தன் பிள்ளைகள் அறுபதினாயிரவரிடம் குதிரையைத் தேடிக் கொணருமாறு கூறினான். அவர்கள் பூமியெங்கும் தேடி, அதனைக் காணாமல், பின்னர், பூமியை நூறுயோஜனை அகலமும் ஆழமுமாகத் தோண்டி அந்த மண்ணையெல்லாம் தின்றுகொண்டேபோய்ப் பாதாள லோகத்தில் தவஞ்செய்து

கொண்டிருந்த கபிலருக்குப் பின்னால் குதிரை கட்டியிருக்கக் கண்டு, அவர்தாம் அக்குதிரையைக் கொண்டு போனவ ரென்று நினைத்துக் கோபித்து அவருக்கு மிகுந்த துன்பங் களைச் செய்தார்கள். அப்போது கபிலர் நிஷ்டைகுலைந்து அவர்கள் செய்த தீங்கினையுணர்ந்து கோபித்து அவர்களை நோக்கினார். அறுபதினாயிரம் பேர்களும் சாம்பராய்ப் போயி னார்கள். சகரன், அவர்களின் அழிவை யுணர்ந்து தன் பேர னாகிய அஞ்சுமானிடம், நடந்ததைக் கூறி விசனித்தான். அஞ்சுமான் அப்பொழுதே பாதாளலோகம் போய்க் கபில ரைக் கண்டு வணங்கினான். அவர், சகரனுடைய பிள்ளைகள் உண்மையுணராது தமக்கிடையூறு செய்து மடிந்த விவ ரத்தை அவனிடம் கூறிக் குதிரையைக் கொடுத்தார். அவன் குதிரையைக் கொண்டுவந்து சகரன் முன்னே நிறுத்தினான். சகரன் யாகத்தை முடித்து, அஞ்சுமானுக்கு இராஜ்ஜிய பட்டாபிஷேகம்செய்து தேவலோகம் சேர்ந்தான். சகரன் புத்திரரால் தோண்டப்பட்ட இடமே சமுத்திரமாயிற்று. அங்ஙனம் சகரரால் தோண்டப்பட்டதாதலின் அதற்குச் சாகரமென்று பெயருண்டாயிற்று.

இந்த அஞ்சுமானுடைய வமிசத்திலே பிற்பட்ட காலத் தில் பகீரதன் என்னும் அரசன்தோன்றி உலகத்தை ஆண்டு வந்தான். அப்போதவன், ஒருநாள், தன் குலகுருவாகிய வசிஷ்டரிடம் பூர்வகதைகளைக் கேட்டுக்கொண்டு வந்தான். அக்கதைகளில் சகரர்களுடைய விருத்தாந்தத்தை அவன் கேட்டு, "அந்தோ! அவர்கட்கு நற்கதி கிடைக்காதே; அது கிடைத்தற்கு என்ன உபாயம் செய்யலாம்?" என்று அவ ரிடம் வினவினான். அதற்கவர், 'பிரமாவை நோக்கி நீ நெடுங் காலம் தவஞ்செய்தால் அவர்கட்கு நற்கதி கிடைக்கும்' என்று சொன்னார். அப்பொழுதே அவன் இராஜ்ஜியத்தைச் சுமந்திரன் வசப்படுத்திவிட்டு இமயகிரிச்சாரலிற் சென்று

பிரமாவைக் குறித்துப் பதினாயிரம் வருஷங்கள்வரை தவமியற்றினான். முடிவில் பிரமா அவன்முன் பிரசன்னராய், 'உன் மரபினர் நற்கதி யடையவேண்டுமானால் அவர்களுடைய சாம்பலில் ஆகாயகங்கை பாயவேண்டும்; ஆதலின், நீ கங்கையைக் குறித்துத் தவஞ்செய்து இங்கே கொண்டுவரவேண்டும்; அவள் பூமிக்கு வரும்போது அவளுடைய வேகத்தை எவராலும் தாங்குதல் இயலாது; சிவபெருமான் ஒருவரே அதனைத் தாங்கவேண்டும்; ஆதலின், அவ்வாறு தாங்குதற்கு முதலில் அவரைக் குறித்துத் தவஞ்செய்வாயாக' என்று கூறிச் சென்றார். அதன்மேல் பகீரதன் சிவனை நோக்கிப் பதினாயிரம் வருஷங்கள்வரை தவம் புரிந்தான். தவமுடிவில் சிவபெருமான் தோன்றி, அவன் விருப்பப்படியே கங்கையைத் தாங்குவதாக ஒப்புக்கொண்டு போனார். பின்னர் பகீரதன், கங்கையை நோக்கி ஐயாயிரம் வருடங்கள்வரை தவமியற்றினான். கங்கை பிரசன்னமாகி, 'சிவன் என்னைத் தாங்குவதாக வேடிக்கைக்குச் சொல்லி யிருப்பார்; ஆதலின், நீ அவருடைய அபிப்பிராயத்தை உறுதியாகத் தெரிந்துகொள்' என்று அவனுக்குக் கூறிப் போயினள். மீண்டும் பகீரதன் இரண்டாயிரத்தைந்நூறு வருடங்கள்வரை சிவனைக் குறித்துத் தவஞ்செய்தான். அப்போது சிவன் தோன்றி 'ஏன் மீண்டும் தவஞ்செய்கிறாய்?' என்று அவனை வினவ, அவன், கங்கை கூறியதைச் சொன்னான். அதைக் கேட்டுச் சிவன், 'நீ சந்தேகிக்கவேண்டாம்; நான் அக்காரியத்தை உறுதியாக நிறைவேற்றுவேன்' என்று அவனுக்குக் கூறிச் சென்றார். பின்னர் பகீரதன் மீண்டும் கங்கையைக் காணுதற்கு இரண்டாயிரத்தைந்நூறு வருடங்கள்வரை தவஞ்செய்தான். அதன்மேல் கங்கை புறப்பட்டாள். அப்போது அவளைச் சிவன் தமது சடைக்குள் அடக்கிவிட்டார். அது கண்டு பகீரதன் சிவன்

முன்னே திகைத்து நின்றான். சிவன் அவனை நோக்கி, 'நீ பயப்படவேண்டாம்; கங்கை உன் பின் வருவாள்; நீ செல்' என்று சொல்லிக் கங்காஜலத்தில் கொஞ்சம் விட்டார். அது பூமியில் பிரவாகமாகச்சென்றது. பகீரதன் அதற்கு முன்னே போய்க்கொண் டிருந்தான். அப்போது கங்கை ஜானவ ரிஷியின் யாகசாலையில் செல்ல, அவர் அதனை உள்ளங் கையில் அடக்கிச் சாப்பிட்டு விட்டார். அதுகண்டு பகீரதன் வருந்தி அவரிடம் வணங்கித் தன் அரும் பிரயத்தனங்களை யெல்லாம் கூறினான். அவர் மனதிரங்கிக் கங்கையைக் காதின் வழியாக விட்டார். (இதனால் கங்கைக்கு ஜானவி என்னும் பெயருண்டாயிற்று). அதன்மேல் கங்கை வேக மாகச் சென்று சகரர்களின் சாம்பலில் பிரவேசித்தாள். அத னால், அவர்கள் நற்கதி அடைந்தார்கள். பகீரதன் அயோத் திக்குத் திரும்பி வந்தான். அதுமுதல் இந்நதி இங்கே சென்றுகொண் டிருக்கிறது. இது பகீரதனால் பூமிக்குக் கொண்டுவரப்பட்ட தாதலின், இதற்குப் பகீரதி என்றும் ஒரு பெயருண்டு. இது, எவ்வகைப் பாவத்தையும் போக்கக் கூடியது; இதில் மூழ்கினோர் மிகப் புனிதராவர்" என்று கூறினர். இராமர் மகிழ்ச்சியடைந்தார். அதன்மேல் மூவரும் அக் கங்காநதிக் கப்பால் சென்றார்கள்.

அகலிகை வரலாறு.

அவ்வாறு சென்றவர்கள், மிதிலைக்குப் பக்கத்தில் போகும்போது, வழியில் ஒரு கருங்கற்பாறை யிருந்தது. அதன்மேல், இராமருடைய பாதம் பட்டமாத்திரத்தில் அக் கல்லுருவம் மாறிப் பெண்ணாகி எதிரே நின்றது. அவளைக் கண்டு இராமர் அதிசயித்து நின்றார். அப்போது விசுவா மித்திரர் இராமரை நோக்கி, "இராகவா! இந்தப் பெண், கௌதமருடைய மனைவி அகலிகை யென்பாள். இவள் கௌதமரோடு கூடியிருக்குங் காலத்தில் இந்திரன் இவள்

மீது விருப்பங்கொண்டு, அவரில்லாத சமயத்தில் அவரைப் போலவே வடிவெடுத்து வந்து இந்த அகலிகையை ஏமாற்றி இவளுடைய கற்பை அழித்தான். வெளியிற் சென்றிருந்த கௌதமர், இந்திரன் செய்த சூதையுணர்ந்து உடனே ஆச்சிரமத்திற்குத் திரும்பி வந்தார். இந்திரன் பயந்து பூனை வடிவெடுத்தோடினான். கௌதமர் அவனைப் பார்த்துக் கோபங்கொண்டு அவன் தேகத்தில் கண்டோர் அருவருக்கத் தக்க ஆயிரங் கண்கள் உண்டாகுமாறு சபித்தனர். அவன் உடனே அக்குறிகள் தன் தேகத்தில உண்டாகப்பெற்று நாணித் தன்னிடம் போய்ச் சேர்ந்தான். பின்னர்க் கௌதமர் இந்த அகலிகையையும் கோபித்து 'நீ கல்லாகக் கடவாய்' என்று சபித்தார். அப்போது, இவள், 'சுவாமி! அறியாமல் நேர்ந்த குற்றத்திற்கு என்னை இவ்வாறு சபித்தீர்களே! நான் எவ்வாறு இதனைச் சகிப்பேன்? இச்சாபம் எப்போது விமோசனமாகும்? தயைசெய்து அதனைக் கூறியருளவேண்டும்' என்று கேட்டாள். அதற்குக் கௌதமர், 'பிற்காலத்தில் தசரத சக்கரவர்த்திக்கு இராமர் என்னும் புத்திரர் பிறப்பார்; அவருடைய பாதம் ஒருசமயம் உன் மேற்படும்; அப்போது இந்தச் சாபம் நிவர்த்தியாகும்' என்று கூறினார். அதுமுதல் இவள் இங்கே கல்லுருவாய்க் கிடந்தாள். ஆதலின், இப்போது உன்னுடைய பாதஸ்பரிசம் பட்டமாத்திரத்தில் இவள் கல்லுரு நீங்கிப் பெண்ணாயினாள்; தாடகையினிடத்தில் உனது கரத்தின் மகிமையையும் இவளிடத்தில் உன்னுடைய பாதத்தின் மகிமையையும் நான் கண்டேன்" என்று சொன்னார். அதன்மேல் எல்லோரும் கௌதமருடைய ஆச்சிரமத்திற்குச் சென்றார்கள். கௌதமர் இவர்களை எதிர்கொண்டழைத்து ஒவ்வொருவர்க்கும் தக்கபடி உபசாரம் செய்தார். விசுவாமித்திரர் இராமருடைய மகிமையையும், அவர் பாதஸ்பரிசத்தால் அகலிகை சாபம்

நீங்கியதையும் கூறி அவளைச் சேர்த்துக் கொள்ளும்படி கௌதமரிடம் உரைத்தார். கௌதமர் அகலிகையை ஏற்றுக் கொண்டார். அதன்மேல் மூவரும் கௌதமரிடம் விடை பெற்றுக்கொண்டு மிதிலை நகரை நோக்கிச் சென்றார்கள்.

சீதை திருமணம்.

அங்ஙனம் சென்ற மூவரும் மிதிலை நகரிற் சேர்ந்து, வீதிகளின் வழியேநடந்து, அந்நகரத்தின் சிறப்புக்களைப் பார்த்துக்கொண்டு ஜனகமகாராஜன் மாளிகை யிருக்கும் இராஜவீதியிற் சென்றார்கள். அவ்வாறு செல்லும்போது விசுவாமித்திரர் முன்னும், இராமர் இடையிலும், இலக்குமணன் அவருக்குப் பின்னுமாக அம்மாளிகையின் அலங்காரத்தை நோக்கியபடியே போயினார்கள். அம்மாளிகையில், கன்னிகா மாடத்தின் மேலுப்பரிகையில் அநேகம் தாதிகளின் மத்தியில், ஜனகமகாராஜன் புத்திரியாகிய சீதாதேவி நின்றுலாவினாள். அவளுடைய அழகானது எத்தகைய வித்வான்களாலும் அளவிட்டு வர்ணிக்க முடியாததாய் விளங்கிற்று. இத்தகைய அலங்காரத்துடன் நின்றுலாவிய அக்கன்னிகையை இராமர் பார்த்தார். அவளும் இராமரை நோக்கினாள். இருவருள்ளும் ஒருவர்மீ தொருவர்க்குப் பக்ஷம் உண்டாயிற்று. அதனால் இவ்விருவரும் உடலிரண்டும் ஜீவன் ஒன்றுமாக மனமொருமித்துப் போனார்கள். இலக்குமியே சீதையாகவும், விஷ்ணுவே இராமராகவும் தோன்றி யிருந்ததால், அவர்களுக்குள் பழைய தொடர்பு பற்றி இவ்வித மனப் பற்றுதல் உண்டாயிற்று. அதனாலும், இராமர் க்ஷத்திரிய ரென்று விளங்கியபடியாலும் சீதை இராமரையே நாயகராக அடையவேண்டுமென்று நினைத்தாள். இராமரும் அவ்வாறே அவள் இராஜகுமாரத்தி யென்றும், அழகுடையவளென்றும் தமக்கு விளங்கியதால் அவளை மனைவியாக அடையவேண்டு மென்று நினைத்தார்.

அதன்மேல், விசுவாமித்திரரும், இராமரும், இலக்குமணனும் போய், ஜனகராஜனைக்கண்டார்கள். ஜனகன் அவர்களை உபசரித்து அலங்காரமாகிய ஒரு மாளிகையில் தங்கியிருக்கும்படி செய்தான். அவர்கள் அங்குத் தங்கியிருக்கும்போது, அகலிகையின் புத்திரராகிய சதானந்தர் அவ்விடத்திற்கு வந்தார். விசுவாமித்திரர் அவரை வரவேற்று நன்மொழிகூறி உபசரித்தார். இராமலக்குமணர்கள் அவரைக் கண்டு வணங்கினார்கள். சதானந்தர் அவர்களுக்கு ஆசி கூறி, விசுவாமித்திரரை நோக்கி "முனிசிரேஷ்டரே! இந்த இராஜகுமாரர்கள் யாவர்?" என்று வினவ, அவர், இராம லக்குமணர்களுடைய வரலாற்றையும், இராமர் தாடகையை வதைத்துத் தம்முடையயாகத்தை நிறைவேற்றுவித்து, இராக்ஷதர்களை மடித்து, அகலிகை சாபத்தை நீக்கியதையும் சதானந்தருக்குக் கூறினர். அவர் சந்தோஷித்து, விசுவாமித்திரரை நோக்கி, "முனிவரே! உம்முடைய கிருபை யிருக்கும்போது இக் குமாரர்களால் எதுதான் ஆகமாட்டாது!" என்று அவருக் குபசாரமொழி கூறிவிட்டுப் பின்னர் விசுவாமித்திரருடைய சிறப்பை இராமருக்குக் கூறத்தொடங்கி, அவரைநோக்கி, "சக்கரவர்த்தி குமாரரே! இந்த விசுவாமித்திரருடைய அன்பு உமக்குக் கிடைத்தது மிகவும் சிறந்ததாம்; இவர் சாமானிய மானவரல்லர்; பூர்வத்தில் நெடுங்காலம் இராஜ்ஜிய பாரத்தைத் தாங்கிக்கொண்டிருந்தார்; அப்படி யிருக்கும்போது ஒருதினம் காட்டிற்கு வேட்டையாடச் சென்றார். வேட்டை முடிந்து களைத்த சமயத்தில் அங்கிருந்த வசிஷ்ட முனிவரைக் கண்டார். அவர், இவரைக்கண்டு உபசரித்து, காமதேனுவை வரவழைத்து அதனால் யாவுஞ் சித்தஞ்செய்வித்து இவருக்கு விருந்திட்டார். இவர், காமதேனுவைப்பற்றி அதிசயித்து, அதனைத் தமக்குக் கொடுக்குமாறு அவரிடம் வேண்டினர்.

அதற்கு வசிஷ்டர், 'இஃதென்னுடைய தன்று; இதனைக் கொடுத்தற்கு நான் அதிகாரி யல்லேன்; அதுவே வருமாகில் நீர் அதனை அழைத்துக் கொண்டு போகலாம்' என்று கூறினார். இவர் சேனைகளை யேவி அதனைப் பிடித்துக் கட்டும்படி செய்தார். அப்போது காமதேனு, அந்தக்கட்டை அறுத்துக்கொண்டு வந்து வசிஷ்டரிடம், 'சுவாமி! இவர்கள் என் என்னைப் பிடிக்கிறார்கள்? இந்த அரசருக்கு நீர் என்னைக் கொடுத்தீரோ?' என்று கேட்க, அவர், 'நான் கொடுக்கவில்லை; அவர் தாமே உன்னைப்பிடிக்கிறார்' என்று சொன்னார். அதன்மேல் காமதேனு கோபங்கொண்டு இவருடைய சேனைகளை மடித்தது. அப்போது இவருடைய குமாரர் நூற்றுவரும், 'வசிஷ்டருடைய ஏவுதலாலேயே இப்பசு இவ்வாறு செய்கின்றது' என்று கோபித்து வசிஷ்டரை வெட்டப் போனார்கள். வசிஷ்டர் கோபித்து அவர்களை நோக்கினார். அந்நூற்றுவரும் அக்கோபாக்கினியால் மாண்டு போயினர். அதன்மேல் இந்தக் கௌசிகர் சிவனைத் துதி செய்ய அவர் இவருக்கொரு அஸ்திரத்தைக் கொடுத்தார். அதனை இவர் வசிஷ்டர் மீது எவினார். வசிஷ்டர் அதனைப் பிடித்து உள்ளே விழுங்கி விட்டார். அதிலிருந்த அக்கினி வேகமெல்லாம் வசிஷ்டருடைய மயிர்க்கால்களின் வழியாக அனற்பொறிகளாக வெளியேறிப் போய்விட்டது. அதைக் கண்டவுடன் இவர், 'எல்லாச் சாமர்த்தியங்களும் இருடியருக்கே உண்டு; ஆதலின் நாமும் தவஞ்செய்து முனியாக வேண்டும்' என்று துறவியாகிக் கிழக்குத் திசையில் சென்று தவஞ் செய்துகொண் டிருந்தார். அதிகரித்த தவத்தை இவர் செய்தலாலெழுந்த தவாக்கினி எல்லோர்க்குந் துன்பஞ்செய்யத் தொடங்கிற்று. அதனால் இந்திரன் இவருடைய தவத்தைக் கெடுக்கத் திலோத்தமையை இவரிடம் அனுப்பினான். அவளைக்கண்டு இவர் மயங்கித் தவங்கெட்டு,

இஃது இந்திரனால் நேர்ந்ததென்று உணர்ந்து, திலோத்த மையை நோக்கி, 'நீ பூலோகத்து ஸ்திரீயாகக் கடவாய்' என்று சபித்து விட்டுத் தென்றிசைக்கேகி அதிகரித்த தவத்தைச் செய்துகொண் டிருந்தார்.

அப்போது அயோத்தியில் அரசாண்ட திரிசங்கு மன்னன், தன் குலகுரு வாகிய வதிஷ்டரிடம் 'நான் சரீரத்தோடு சுவர்க்கம் புகுதவேண்டும்' என்று கேட்டான். அவர், 'அஃதியலாது' என்று சொன்னார். அதற்குத் திரிசங்கு 'இஃதும்மா லாகாவிட்டால் நான் வேறொருவரின் உதவிகொண்டு என தெண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்ளுகிறேன்' என்று சொன்னான். அதற்கு வதிஷ்டர் கோபித்து, 'நீ நீசனாவாய்' என்று சபித்தார். அக்கணமே திரிசங்குவுக்கு நீச வடிவம் உண்டாயிற்று. அதன்மேல் அவன் அந்த நீசரூபத்துடனே, இந்த விசுவாமித்திரரிடம் வந்து தன் குறையைக் கூறினான். இவர், 'நான் யாகஞ்செய்து உன்னைச் சரீரத்துடன் சுவர்க்க மனுப்புகிறேன்' என்று திரிசங்குவுக்குக் கூறி, அவ்வாறே யாகஞ்செய்யத் தொடங்கி, அதற்கு முனிவர்களை யெல்லாம் அழைத்து வைத்துக்கொண்டு, வதிஷ்டர் பிள்ளைகளையும் அழைத்து வரும்படி அவர்களிடம் ஆளனுப்பினார். அவர்கள் விசுவாமித்திரரை அவமதித்து அந்த யாகத்திற்கு வர மறுத்துவிட்டார்கள். விசுவாமித்திரர் கோபித்து அவர்களை, கிராதர்களாகும்படி சபிக்க, அவ்வாறே அவர்கள் வேடர்களாகிக் காட்டில் திரிந்தார்கள். பின்பு, இவர் அந்த யாகத்தை முடித்து, சாபவிமோசனம் செய்யும் பொருட்டு மீண்டும் அந்த வதிஷ்ட குமாரர்களை அழைத்துவர ஆளனுப்பினார். அப்போதும் அவர்கள் வரத் தடைசெய்து விட்டார்கள். அதன்மேல் இவர், திரிசங்குவை விமானத்தில் ஏற்றிச் சுவர்க்கத்திற் கனுப்பினார். தேவர்கள் அவனைக் கண்டு 'நீசன்' என்று கோபித்துக் கீழே தள்ளி

விட்டார்கள். திரிசங்கு கதறிக்கொண்டு பூலோகத்திற்கு விசுவாமித்திரரிடம் வந்து சேர்ந்தான். அப்போதிவர், தேவர்கள் மீது கோபித்து, 'வேறே தேவலோகம் முதலியவற்றைச் சிருஷ்டிக்கிறேன்' என்று அவ்வாறே சிருஷ்டி செய்யத் தொடங்கினர். தேவர்கள் பயந்து இவரிடம் வந்து, திரிசங்குவுக்கு நக்ஷத்திர பதவி கொடுப்பதாகச் சொல்லி, அவ்வாறே கொடுத்து, இவருடைய சிருஷ்டித் தொழிலைத் தடுத்து, இவருக்கு, 'இராஜரிஷி' எனப் பட்டங் கொடுத்துச் சென்றனர். அதன்மேல் இவர் மேற்குத்திக்கில் சென்று தவஞ் செய்துகொண் டிருந்தார்.

அக்காலத்தில் அம்பரீஷ மகாராஜன், புருஷமேத யாகஞ்செய்யத் தீர்மானித்து, அதற்கு ஒரு ஆண்பிள்ளையை விலைக்கு வாங்கும் பொருட்டு அநேகம் திரவியங்களை எடுத்துக்கொண்டு ஆரணியஞ் சென்று, இருசிகரிஷியைக் கண்டு, அவரிடம் தன் எண்ணத்தைத் தெரிவித்தான். அப்போதவர், 'எனக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றார்கள்; அவர்களில் மூத்தபிள்ளை எனக்கவசியமானவன்; ஆதலின், என் மனைவியைக்கேட்டு மற்ற இருவருள் ஒரு பிள்ளையை நீர் எடுத்துக்கொள்ளும்' என்றார். அம்பரீஷன் அவ்வாறே அம் முனிவரின் மனைவியைக் கேட்க, அவள், 'எனக்கு இளையபிள்ளை அவசியமானவன்; ஆதலின், நீர் நடுப் பிள்ளையை விலைக்கு எடுத்துக்கொள்ளும்' என்றாள். அந்த நடுப்பிள்ளை, 'என் தாய்தந்தையரின் தரித்திரக் கொடுமை தீருதற்கு நான் உயிர்கொடுக்கச் சம்மதிக்கிறேன். திரவியங்களைக் கொடும்' என்று அம்பரீஷனிடம் அத்திரவியங்களை வாங்கித் தாய்தந்தையரிடம் கொடுத்து அவர்பால் விடை பெற்றுக்கொண்டு அம்மன்னனுடன் சென்றான். அம்பரீஷன் அவனை அழைத்துக்கொண்டு போகுங்காலத்தில், உச்சிக் காலம் வந்தபடியால், அம்மத்தியானக் கடனை முடித்தற்குத்

தேர்விட்டிறங்கி ஒரு தடாகத்திற்குச் சென்றான். அப்போது இந்தக் கௌசிகர் பக்கத்திலிருந்தபடியால் தேரிலிருந்த இருசிகரின் நடுப்பிள்ளை, இவரிடம் சென்று தனக்கு நேர்ந்திருப்பதைக் கூறினான். அவனுடைய தாய்தந்தையர் இந்த விசுவாமித்திரருக்குத் தமக்கையும், மைத்துனருமாதலின், அவர்கள் செய்த காரியத்திற்கு இவர் வருந்தி, அச்சிறுவனை நோக்கி, 'நீ அஞ்சவேண்டாம்; நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்' என்று தம்மிடம் நிறுத்திக்கொண்டு முன்னே வஸிஷ்டர் கோபத்தில் அகப்பட்டு மடியாமல் தப்பியிருந்த தம்முடைய நான்கு பிள்ளைகளையும் அழைத்து அம்பரீஷனுடன் செல்லும்படி ஒவ்வொருவரிடமும் சொன்னார். அவர்கள், செல்ல மறுத்துவிட்டார்கள். அதனால் இவர் கோபித்து அவர்களைக் கிராதராகும்படி சபித்துவிட்டுத் தம்முடைய மருமகனை யழைத்து அவனுக் கிரண்டுமந்திரங்களை உபதேசஞ் செய்து, 'நீ அம்பரீஷனுடன் சென்று யாகசாலையின் யூபஸ்தம்பத் தடியிலமர்ந்து, இம்மந்திரங்களை உச்சரித்துக்கொண் டிருந்தால் உன்னுயிருக் கபாயம் வரமாட்டாது' என்று சொன்னார். அவன், அதற்குச் சம்மதித்து அம்மன்னனுடன் சென்று அவ்வாறே யாகசாலையில் அம்மந்திரங்களை ஜெபித்துக்கொண் டிருந்தான். அப்போது தேவர்கள் அம்பரீஷன் முன்னே தோன்றி அவனுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்து அப்பிள்ளையையும் கொல்லாதிருக்கும்படி கட்டளையிட்டு அவனைக் காப்பாற்றிச் சென்றார்கள். அப்பால் இந்தக் கௌசிகர், வடக்குத்திக்கில் சென்று, வெகு தீவிரமான தவத்தைச் செய்தார். அத்தவத்தா லெழுந்த அக்கினியானது எங்கும் தகிக்கத் தொடங்கியது. அதனால் தேவர்களெல்லோரும் இவரிடம் வந்து, 'உலகத்தில் உம்மைப்போல் எவர்களும் தவஞ்செய்ய மாட்டார்கள்; நீர் எல்லா ரிஷிகளினும் மேம்பட்டுவிட்டீர்;

ஆதலின், இனித் தவஞ்செய்வதை நிறுத்தும்' என்று இவருடைய தவத்தை நிறுத்தி இவரைப் புகழ்ந்து சென்றார்கள். இவர் அது முதல முனிவர்களிற் சிறந்த முனிவராயினர்; இத்தகைய முனிவரின் கிருபையிருப்பதனால் உங்களுக்கு ஒரு குறைவும் நேராது" என்று கூறி முனிவரிடம் விடைபெற்றுக் கொண்டு தமதிருப்பிடஞ் சென்றார்.

அப்போது சூரியன் அஸ்தமித்து இராக்காலம் வந்தபடியால் விசுவாமித்திரரும், இராமரும், இலக்குமணனும் தங்கள் தங்களுக்கு யோக்கியமான விடங்களில் சயனித்துக் கொண்டார்கள். அப்போது இராமர் தனிப்பட்டிருந்தபடியால், கன்னிகாமாடத்தில் கண்ட சீதாதேவியை அடையுந் தினம் எப்பொழுது வருமோவென்று கவலையுற்றுக் கண்ணுறங்காது வருந்தினர்; அவ்வாறே சீதையும் அன்றிரவு, 'இராமரை நாயகராக அடையும் நாள் எந்நாளோ' என்று ஏக்கமுற்றிருந்தனள். இவர்கள் கவலை யொழியுமாறு மறுநாள் சூரியன் உதயமாயிற்று.

விசுவாமித்திரர், இராமர், இலக்குமணர் ஆகிய மூவரும் எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு ஜனகனுடைய யாகசாலையை அடைந்தார்கள். அப்போது ஜனகமகாராஜன் இராம லக்குமணர்களுடைய வடிவழகைக் கண்டு அதிசயித்து, விசுவாமித்திரரை நோக்கி, "சுவாமி! இவர்கள் யாவர்?" என்று வினவினன். விசுவாமித்திரர், இராமலக்குமணர்களுடைய வரலாற்றைக் கூறி, மேலும், இராமர், தாடகையை வதைத்ததையும், இராக்ஷதர்களை மடித்துத் தம்முடைய யாகத்தை நிறைவேற்றி வைத்ததையும், தம்மிடத்திருந்த தேவர்களுடைய ஆயுதங்களை யெல்லாம் தாம் அவருக்குக் கொடுத்ததையும், அவர், ஜனகனுடைய குலகுருவாகிய கௌதமர் பத்தினி அகலிகையின் சாபவிமோசனஞ் செய்ததையும், தமக்கு அவர்மீது மிக்க அன்பு ஏற்பட்டிருப்

பதையும், இன்னும் அவருடைய மற்ற சாமர்த்தியங்களையும் ஜனகனிடம் கூறினர்.

ஜனகமகாராஜன் இவற்றைக் கேட்டு மகிழ்ச்சியுற்று, இராமருக்கே தன் மகளாகிய சீதையை மணஞ்செய்து கொடுக்கலாமென எண்ணினன். எனினும், அவன், தன்னிடமிருக்கும் சிவபெருமானுடைய வில்லை வளைப்பார்க்கே சீதையைக் கொடுப்பதாக ஒரு பிரதிக்ஞை செய்துகொண்டிருந்தான். அஃது அவனுடைய எண்ணத்திற்குத் தடையாயிருந்தது. அதனால் அவன், விசுவாமித்திரரிடத்தில், "சுவாமி! இந்த இராமருக்கு என் புத்திரியைக் கொடுக்கலாமென எனக்கு விருப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் 'என்னிடமுள்ள சிவன்வில்லை வளைப்பார்க்கே அவளைக் கொடுப்பேன்' என்ற பிரதிக்ஞையை நான் செய்துகொண்டிருப்பதால் அஃது என் விருப்பத்திற் கிடையூறாயிருக்கின்றது. இவர் அந்த வில்லை வளைப்பாரேயானால், நான் இவருக்குத் தடையில்லாமல் சீதையைக் கொடுத்துவிடுவேன்; என் கவலையும் ஒழியும்; நான் அந்தவில்லை இப்பொழுது வரவழைக்கிறேன் நீங்கள் பாருங்கள்" என்று கூறிவிட்டு, உடனே ஏவலாளரிடம் அந்த வில்லைச் சபைக்குக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். அநேகம் வீரரால் அந்தவில் அங்கே கொண்டுவரப்பட்டது. முந்தியே எல்லா அரசர்களும் அவ்வில்லைக் கண்டு வளைக்க முடியாமற் போனவர்களானபடியால் அங்கிருந்த அரசர் பலரும், "இந்த வில்லை யார் வளைப்பவர்!" என்று கையைப் பிசைந்துகொண்டு பேசாமலிருந்தார்கள். ஜனகன் அந்த வில்லையும் இராமரையும் பார்த்துத் தன் குமாரத்தியையும் சிந்தித்து மௌனமாயிருந்தான்.

அப்போது அங்கேயிருந்த கௌதமர் புத்திரரான சதானந்தர் அந்த வில்லின் வரலாற்றைக் கூறத்தொடங்கி, விசுவாமித்திரரை நோக்கி, "முனிசிரேஷ்டரே! முன்னொரு

காலத்தில் உமாதேவியின் தந்தையான தக்கன், சிவபெருமானையும் உமாதேவியையும் அவமதித்து யாகஞ்செய்தான். அதற்குச் சிவபெருமான் கோபங்கொண்டு இந்த வில்லைக் கையிலேந்திக்கொண்டு போய் அந்த யாகத்தைச் சின்னபின்ன மாக்கினார். அதன்மேல் அவர் கோபம்மாறி இதனை முன்னே இந்த ஜனகமகாராஜனுடைய வமிசத்திலிருந்த ஒரு மன்னனிடத்தில் வைத்தார். அதுமுதல் இந்தவில் இங்கேயிருந்து வருகிறது. இஃதிங்ஙன மிருக்க முன்னொரு காலத்தில் யாகஞ்செய்யு நிமித்தம் ஜனகமகாராஜர் பொற்கலப்பைக்கு வச்சிரக் கொழுப்பூட்டிப் பூமியை உழுதார். அந்தக் கொழு முகத்தில் சீதை பிறந்தாள். உழுபடைச் சாலுக்குச் சீதையென்று பெயராதலால் அதிற்பிறந்த அவளுக்கு அப்பெயரே இடப்பட்டது. அவள் பருவமடைந்து அதிக சௌந்தரிய முடையவளா யிருந்தாள். அதனால் அவளை அனேகம் அரசர்கள் மணஞ்செய்து கொள்ள விரும்பினார்கள். அவர்களுள் எவரேனு மொருவர்க்கு அவளைக் கொடுத்தால் மற்றையர்க்கு விரோதமுண்டாகுமென்று ஜனகர், 'இந்த வில்லை வளைப்பார்க்கே என் புத்திரியைக் கொடுப்பேன்' என்று யாவர்க்கும் இதனைத் தெரிவித்தார். அரசர்கள் யாவரும் இவ்வில்லை வளைத்துப் பார்த்து வளைக்க முடியாமல், ஜனகரோடு சண்டை தொடுத்து அபஜெயப்பட்டு அவமானமுற்று ஓடிப் போயினர். அதுமுதல் இந்தவில், இங்கே வளைப்பாரின்றிக் கிடக்கிறது. சீதாதேவியும் மணமின்றியிருக்கின்றாள். இப்பொழுது இந்த இராமர் என்ற வில்வீரர் வந்திருப்பதனாலே, இவரால் இந்தவில் வளைக்கப்படும் என்று நாங்கள் நம்பி யிருக்கின்றோம்; இவர் அங்ஙனம் இவ்வில்லை வளைப்பாரானால் சீதையை இவருக்கு மணஞ்செய்து கொடுப்பதில் எவ்வித தடையுமிராது" என்று கூறினர்.

இவற்றை யெல்லாம் கேட்டதும் விசுவாமித்திரர் இராமர் முகத்தைப்பார்த்தார். அப்பார்வை 'நீ வில்லை வளைக்கிருயா?' என்று கேட்கும் குறிப்பை யுணர்த்திற்று. இராமர் அக் குறிப்பை உடனே உணர்ந்து, விரைவில் எழுந்து அந்த வில்லைக் காத்திலெடுத்துக் கண்மூடித் திறப்பதற்குள் வளைத்து அதில் நாணேற்றினர். அப்பொழுதே அவ்வில், மிக்க தொனியோடு முறிந்து விட்டது.

அதைக்கண்டதும் தேவர்கள் மகிழ்ந்து இராமர்மீது புஷ்பமாரி பொழிந்தார்கள். ஜனகன் சந்தோஷமுற்றான். நகரமாந்தர்கள் ஆனந்தங் கொண்டார்கள். அத்தருணத்தில், 'இராமரை நாயகராக அடைதல் கூடுமோ' என்று கவலையுற்றிருந்த சீதையிடம், நீலமாலை யென்னும் தாதி ஓடி, இராமர் வில்லை வளைத் தொடித்ததைத் தெரிவித்தாள். அதைக் கேட்டவுடன், சீதை, "முனிவர் பின்னே செல்லக் கண்டு நாம் விரும்பிய அந்தச் சுந்தர புருஷரே அவ்வில்லை வளைத்திருப்பார்" என்று சந்தோஷித்து மேலும், "அவரன்றி வேறு யாரேனும் அதனை வளைத்திருந்தால் நான் உயிரை விட்டுவிடுவேன்" என்று உறுதி செய்துகொண்டாள்.

இவள் இப்படியிருக்க, சபையிலிருந்த ஜனகமகாராஜன், விசுவாமித்திர முனிவரை நோக்கி, "சுவாமி! வில்வளைத்த இவ்வீரர்க்குச் சீதையை மணஞ்செய்து கொடுப்பதில் தடையில்லை. கலியாணத்தை இப்பொழுதே செய்தாலும் செய்யலாம்; அல்லது தசரதரை வரவழைத்துச் செய்தாலுஞ் செய்யலாம்" என்று கூற, விசுவாமித்திரர், "தசரதரை வரவழைத்தே செய்யவேண்டும்" என்று சகல விருத்தாந்தங்களையும் விளக்கிக் காட்டித் தசரதனுக்கு ஓலை யெழுதித் தூதுவனிடம் கொடுத்தனுப்பினர். இராமர் வில்லொடித்த சப்தம் அயோத்திவரையில் கேட்டபடியால் அதைக்கேட்டு

"இஃதென்ன தொனி!" என்று சந்தேகித்திருந்த தசரதன், விசுவாமித்திரர் அனுப்பிய ஓலையைப் பார்த்தவுடனே, அவ்வொலி இராமர் வில்லொடித்ததாலுண்டான நாதமே என்றுணர்ந்து 'இராமன் வில்லொடித்த தொனிதானு அன்று கேட்டது' என்று மகிழ்ந்து மற்ற விஷயங்களைப் பற்றியும் மனம்பூரித்துச் சகலருடனும் புறப்பட்டு இரண்டு யோஜனை தூரம் போய்ச் சூரியன் அஸ்தமித்ததால் சந்திர சைலத்திற்றங்கி மறுநாள் விடிந்தவுடன் பிரயாணமாகி மத்தியான நேரத்தில் சோணமாநதியை அடைந்து மாலை நேரம் வரை அந்நதிச்சாரலில் விநோதமாகப் பொழுது போக்கிச் சூரியன் மறைந்த பின் அவ்விடத்திலேயே தங்கியிருந்து, மறுநாள் புறப்பட்டு மிதிலைநகரின் சமீபத்திற் போய்ச் சேர்ந்தான்.

தசரதன் வருவதை யுணர்ந்து, ஜனகன் அவனை எதிர்கொண்டழைத்தான். இராம லக்குமணர்களும் எதிர் சென்று தசரதனையும் தாய்மாரையும் கண்டு சேவித்துக் கொண்டார்கள். மற்றையரும் முறைப்படி ஒருவர்க்கொருவர் செய்யவேண்டிய மரியாதைகளைச் செய்து கொண்டார்கள். பின்னர் எல்லோரும் ஜனகனுடைய சபாமண்டபம் போய்ச் சேர்ந்தார்கள். அப்பொழுது வசிஷ்டர் ஜனகனை நோக்கி, "உமது புத்திரியாகிய சீதையை இங்கே அழைப்பியும்" என்றார். அவ்வாறே அவளை அழைத்து வரும்படி ஜனகன், தோழிப்பெண்களுக்கு ஆக்ஞாபிக்க, அவர்கள் உடனே சென்று சீதாதேவியை அலங்கரித்து அந்தச் சபாமண்டபத்திற்கழைத்து வந்தார்கள். சபையிலுள்ள எல்லோரும் சீதையைக்கண்டு மகிழ்ந்தார்கள். சீதை, அங்குள்ள பெரியோர்களுக்கெல்லாம் நமஸ்காரம் செய்துவிட்டுக் கைவளையலைத் திருத்துகிறபாவனையாக, ஸ்ரீராமரை, தான் கன்னிகாமாடத்திலிருந்து, தெருவில் வரக்கண்டவர்தாமாவென்று

பார்த்து அவரே யென்று தெளிந்து ஆனந்தமுற்றிருந்தாள். அப்போது வசிஷ்டர், விசுவாமித்திரரை நோக்கி, "கலியாண முகூர்த்தம் எப்பொழுது ஏற்படுத்தப் பட்டிருக்கிறது?" என்று கேட்டார். அவர், 'நாளைக்கு' என்றார். எல்லோரும், கலியாண நிச்சயத்தைத் தெரிந்து கொண்டு தங்கள் தங்களிடம் போய்ச்சேர்ந்தார்கள். தசரதன் முதலியவர்களுக்கு, ஜனகனால் விருந்து முதலிய உபசாரங்கள் நடத்தப்பட்டன. எல்லோரும் விருந்துண்டு களித்திருந்தார்கள்.

மறுநாள், திருமணத்தை உத்தேசித்து, மிதிலை நகர முழுவதும் அலங்காரம் செய்யப்பட்டது. கல்யாண மண்டபம் இந்திரனுடைய சிங்கார மண்டபத்தைப்போல் அலங்கரிக்கப்பட்டது. எல்லோரும், திருக்கலியாண மண்டபத்தை அடைந்தார்கள். ஸ்ரீராமர், திருமணக்கோலத்துடன் மணமண்டபத்திற் கெழுந்தருளினார். சீதாதேவியையும் சேடிமார்கள் அலங்கரித்து அங்கே அழைத்துவந்தார்கள். வசிஷ்டர் முகூர்த்த நேரத்தில் அநேக வேதியர்களும் முனிவர்களும் சூழ, மணவறையின் பக்கத்தில் உட்கார்ந்து, தண்டுலம் பரப்பி, தருப்பைசாத்தி, வேதசாஸ்திர விதிப்படி மண்டலாகாரமாகச் செய்து, ஓமாக்கினியைமூட்டி, பசுவின் நெய்யை ஆகுதியாகவிட்டு ஓமம் வளர்த்தார்; அப்போது இராமரும், சீதையும் ஏகாசனத்தில் எழுந்தருளினார்கள். ஜனகமகாராஜன், இராமருக்கெதிரில்வந்து, 'சீதையை உனக்கு மனப்பூர்வமாக மணஞ்செய்து கொடுக்கிறேன்; நீர் அவளோடு கூடி என்றும் இன்புற்று வாழ்வீராக' என்று, அவர் கையில் தாரைநீர் வார்த்தான். தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள்; முனிவர்களும், வேதியர்களும், மற்ற பெரியோர்களும் தம்பதிகளை ஆசீர்வதித்தார்கள். ஸ்திரீகள் பல்லாண்டு கூறினார்கள். மற்ற தேசத்தரசர்களெல்லோ

ரும் இராமரை ஸ்தோத்திரம் செய்தார்கள். சகல வாத்தியங்களும் முழங்கின. அதன்மேல், வசிஷ்டர் ஆக்ஞாபித்தபடி, ஸ்ரீராமர் ஓமாக்கினிக்குச் சகல ஆகுதியும் கொடுத்து, பிராமணருக்குத் தானம்புரிந்து, சீதையின் திருக்கரத்தைப் பிடித்துக்கொண்டு ஓமகுண்டத்தை வலம் வந்து, அக்கினியை வணங்கிப் பொரிசிந்தி, அம்மி மிதித்து அருந்ததி பார்த்து, இன்னும் செய்யவேண்டிய மங்கள காரியங்களையும் செய்து, தாய் தந்தையர் மாமன் மாமி முதலிய பெரியோர்களை வணங்கினார். திருக்கலியாணம் வெகு சிறப்பாக நிறைவேறிற்று. கலியாண விருந்துகளும் மிக்க சிறப்புடன் நடத்தப்பட்டன.

அதன்மேல் ஜனகமகாராஜன், தசரதனிடத்தில், "எனக்கு இன்னும் மூன்று கன்னியரிருக்கின்றனர்; அவர்களை உம்முடைய மற்ற மூன்று குமாரர்களுக்கும் மணஞ்செய்து கொடுக்க நான் இச்சிக்கிறேன்" என்றான். தசரதனும் அதற்கிசைந்தான். பின்னர், பரதனுக்கு மாண்டவி யென்பவளையும், இலக்குமணனுக்கு ஊர்மிளை யென்பவளையும், சத்துருக்கனுக்குச் சுதகீர்த்தி யென்பவளையும் பெரியோர்கள் மணஞ்செய்வித்து வைத்தார்கள். இவைகளெல்லாம் நிறைவேறிய பின்னர், ஜனகனும் அவன் தம்பி குசத்துவஜனும் அநேக தானதருமங்களைச் செய்து சந்தோஷமுற்றிருந்தார்கள். தசரதன் முதலியவர்கள், சில தினங்கள்வரை அங்கே தங்கியிருந்தார்கள். அப்போது விசுவாமித்திரர், இமயமலைக்குச் செல்வதாக, இராமர் முதலியவர்களுக்கு ஆசீர்வாதம் செய்து அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு போய்விட்டார். அதன்மேல் சில தினங்கள் சென்று தசரதன் முதலியவர்கள், ஜனகனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அயோத்திக்குப் புறப்பட்டார்கள்.

பரசுராம கர்வ பங்கம்.

அவ்வாறு புறப்பட்டுப் போகும்போது வழியில் தடையான சில சகுனங்கள் நேர்ந்தன. உடனே தசரதன் தேரை நிறுத்திக்கொண்டு சகுன பரீக்ஷையில் தேர்ந்த ஒருவனை யழைத்து அச்சகுனங்களின் பலனை வினவினான். அவன், "இச்சகுனங்களால் இப்பொழுதே ஓர் இடையூறுவரும்; ஆனால், அஃது உடனே நீங்கி நன்மையுண்டாகும்" என்று சொன்னான். அத்தருணத்தில் பரசுராமர், மகா கோபாவேசத்தோடு எதிரே வந்தார். இவர் சமதக்கினிக்கும், இரேணுகைக்கும் பிறந்த புத்திரர்; கார்த்த வீரியனைக் கொன்று, அவன் மீதும், அவனுடைய பிள்ளைகள்மீதும் ஏற்பட்ட விரோதத்தால் சூரிய குலத்தரசர் பரம்பரையை இருபத்தொரு தலைமுறைவரை கருவறுத்து அவ்வரசர்களின் இரத்தத்தில் ஸ்நானஞ் செய்தவர். ஆதலின், இவர், அந்தச் சூரியகுலத்தைச் சார்ந்த இராமருக்கும் துன்புறுத்தக் கருதி, மேற்கூறியபடி வந்ததும் இராமருக்கு முன்னே போய்நின்று, "அடே! என் ஜென்ம விரோதியின் குலத்தில் உதித்தவனே! நான் நெடுங்காலமாகச் சூரியகுலத்தரச குமாரர்கள் யுத்தத்திற்கு அகப்படாமல் தோள் தினவுகொண் டிருக்கின்றேன்; இத்தருணத்தில் நீ எதிர்ப்பட்டாய்; ஏதோ இற்றுப் போயிருந்த ஒரு வில்லை வளைத்து விட்டோமென்று நீ இறுமாப்புக் கொள்ளாதே; என்னோடு யுத்தஞ் செய்து உனது சமர்த்தைக் காட்டு" என்று கூறினார். அவருடைய கொடுஞ் செயலைக்கண்டு தசரதன் பயந்து அவரை நோக்கி, "சுவாமி! நீங்கள், இந்த அறியாச் சிறுவனைச் சண்டைக்கிழுப்பது அழகல்ல" என்று வணங்கினான். பரசுராமர் அப்பொழுதும் இரங்காமல் இராமரோடு எதிர்த்து நின்றார். அது கண்டு, தசரதன் சோர்வுற்றான். அப்பொழுது பரசுராமர், இராமரை நோக்கி "இராமா! நீ மிதிலையில் ஒடித்த வில் ஊனமானது;

பூர்வத்தில் மேருமலையில், ஒரு முனிவரின் தபோபலத்தால் மூங்கிலொன்று முளைத்தது. அதனால் இரண்டு விற்கள், தேவ சிரேஷ்டர்களால் உண்டாக்கப்பட்டன. அவற்றில் ஒன்றைச் சிவபெருமான் எடுத்துக்கொண்டார்; மற்றொன்றை மகா விஷ்ணு எடுத்துக் கொண்டார். பின்னர், அத்தேவர்கள் "இவ்விரண்டில் எது வலிமையுள்ளது?" என்று பிரமதேவரைக் கேட்டார்கள். அவர், "இத்தேவர்கள், தாமே இவ் விஷயத்தை உணர்ந்து கொள்ளட்டும்" என்று அவ்விருவருக்கும் சண்டையை உண்டாக்கி வைத்தார். அவர்கள், அவ் விற்களை யெடுத்துக்கொண்டு யுத்தஞ் செய்யத் தொடங்கினார்கள். சிவன் கையிலிருந்த வில் நெரிந்து போயிற்று. அப்போது பிரமா முதலிய தேவர்கள் அச்சண்டையை விலக்கினார்கள். அதன்மேல், சிவனார் தமது வில்லை இந்திரன் கையிற் கொடுத்தார். விஷ்ணு தம்முடைய வில்லை இருசிக மகாரிஷி கையிற்கொடுத்தார்; அவர் என் பிதாவாகிய ஜமதக்கினி முனிவர்க்குக் கொடுத்தார்; அவர் எனக்குக் கொடுத்தார்; அதுதான், நான் வைத்திருக்கும் வில். இந்திரனிடம் கொடுக்கப்பட்ட சிவன்வில் மீண்டும் அவரால் கைக்கொள்ளப்பட்டுத் தக்கன் வேள்வி அழிக்கப்பட்டபின் அச்சிவ பெருமானால் ஜனகனுடைய வமிசத்தானாகிய ஓர் அரசனிடம் கொடுக்கப்பட்டு மிதிலையிலிருந்து வந்தது; அதுதான் நீ இப்போது வளைத்தொடித்த வில். அதை நீ வளைத்ததால் பெருமையில்லை; என்னிடமிருக்கும் இந்த வில்லை வளைப்பாயானால் நீ சாமர்த்தியசாலியே; நெடுங்காலமாக யுத்தத்தைவிட்டுத் தவஞ்செய்து கொண்டிருந்த நான், நீ வில்லொடித்த சத்தத்தைக்கேட்டு உன்னோடு போர்செய்ய வந்தேன்; நீ வீரனாயிருந்தால் இந்தவில்லை வளைப்பதோடு என்னுடன் யுத்தஞ் செய்தற்கும் வா" என்று பல கோபமான வார்த்தைகளைக் கூறினார்.

அப்போது, இராமர், புன் சிரிப்புடன் பரசுராமரை நோக்கி, "விஷ்ணுவினுடைய வில்லைக் கொடும் பார்க்கலாம்" என்றனர். பரசுராமர் தம்மிடமிருந்த வில்லைக் கொடுத்தனர். இராமர் அதனை வாங்கி ஓர் இமைப்பொழுதில் வளைத்து அதில் நாரியேற்றி, அஸ்திரத்தைத் தொடுத்திழுத்துக் கொண்டு "பரசுராமரே! என்னால் விடப்படும் பாணமோ வீணாய்ப்போகாது; நீர் பிராமண புத்திரராயும், விரதம் பூண்டவராயு மிருப்பதால் உம்மைக் கொல்லுதல் மிக்க பாதகமாம். ஆதலால் என் பாணத்திற்கொரு இலக்குச் சொல்லும்" என்றனர். பரசுராமர் பயந்து, அதனைத் தம்முடைய தபோபலத்தின் மீது செலுத்தும்படி கூறினர். அவ்வாறே இராமர் அந்தப் பாணத்தைச் செலுத்த அது, பரசுராமருடைய தபோபலத்தை யெல்லாம் கிரகித்துக் கொண்டு வந்துவிட்டது. அதன்மேல் பரசுராமர் இராமரை நோக்கி,

> "எண்ணிய பொருளெலா மினிது முற்றுக
> மண்ணிய மணிநிற வண்ண வண்டுழாய்க்
> கண்ணிய யாவர்க்குங் களைக ணாகிய
> புண்ணிய விடையெனத் தொழுது போயினர்."

அதன்மேல், இராமர், தம் நிமித்தம் துயரமுற்று மூர்ச்சையாய்க்கிடந்த தசரதனிடம் வந்து அவனைத்தழுவினர். அவன் உடனே மூர்ச்சை தெளிந்தெழுந்து, இராமரைத் தழுவிக்கொண்டு பரசுராமர் பங்கமுற்றுப் போனதை யுணர்ந்து மகிழ்ந்தான். தேவர்கள் இராமர் மீது பூமழை பொழிந்தார்கள். இராமர் வருணனை அழைத்து, தாம் பரசுராமரிடம் வாங்கியவில்லை அவனிடம் கொடுத்து, "நீர் இதை வைத்திரும்; பின்னொரு காலத்தில் நாம் பெற்றுக் கொள்வோம்" என்று கூறினர். அவன் அதனைப் பெற்றுக்

கொண்டு போயினன். பின்னர் எல்லோரும் புறப்பட்டு அயோத்தியை அடைந்தார்கள்.

அயோத்தியா காண்டம்.

முடிசூட்டிக் கோள்ளும்படி தசரதன் இராமரைவேண்டல்.

அயோத்தி சேர்ந்தபின் எல்லோரும் மகிழ்ச்சி யுற்றிருந்தனர். அங்ஙன மிருக்கும்போது, பரதனுடைய மூதாதையாகிய கேகயதேசாதிபதி, அப்பரதனைப் பார்க்க விரும்புவதாயும், அவனைத் தன்னிடம் அனுப்பவேண்டுமென்றும் தசரதனிடம் சொல்லிவரும்படி ஒரு தூதனை யனுப்பினான். கேகயன் விருப்பத்தை புணர்ந்த தசரதன் பரதனை அழைத்து அவனை நோக்கி, "குழந்தாய்! உன் மூதாதைக்கு உன்னைப் பார்க்க வேண்டுமென்ற விருப்பம் அதிகமாயிருக்கிறதாம்; ஆதலின் நீ கேகய நாட்டிற்குப் போய்வா" என்று கட்டளை யிட்டான். பரதன் அங்ஙனமே சத்துருக்கனைத் துணைக்கு அழைத்துக் கொண்டு புறப்பட்டு ஏழுநாட்கள் வழியில் தங்கிப் பின்னர்க் கேகய தேசத்தை யடைந்து மூதாதை முதலியவர்களைக்கண்டு வணங்கி இன்புற்றிருந்தான்.

அதன்மேல் சில தினங்கள்சென்று ஒருநாள் தசரத சக்கரவர்த்தி ஆலோசனை மண்டபத்திலிருந்து, வதிஷ்டரையும், மந்திரிமார்களையும் அங்கே வரவழைத்தான். அங்கு வந்த மந்திரிகள் எத்தகைய குணங்களை யுடையாரெனில்,

"குலமுதற் றொன்மையுங் கலையின் * குப்பையும்
பலமுதல் கேள்வியும் பயனு மெய்தினர்
நலமுதல் நலியினும் நடுவு நோக்குவார்
† சலமுத லறத்தருந் தருமந் தாங்கினர்

* குப்பை-கூட்டம். † சலம்-துன்பம்.

உற்றது கொண்டு மேல்வந் துறுபொரு ளுணருங் கோளார்
மற்றது வினையின் வந்த தாயினு மாற்ற லாற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவ ரரிய நூலும்
கற்றவர் மான நோக்கிற் கவரிமா வனைய நீரார்.

காலமு மிடனு மேற்ற கருவியுந் தெரியக் கற்ற
நூலுற நோக்கித் தெய்வ † நுனித்தறங் ‡ குணித்த மேலோர்
சீலமும் புகழ்க்கு வேண்டுஞ் செய்கையுந் தெரிந்து கொண்டு
¶ பால்வரு முறுதி யாவுந் தலைவற்குப் பயக்கும் நீரார்.

தம்முயிர்க் குறுதி யெண்ணார் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கும் வீரர்
செம்மையிற் றிறம்பல் செல்லாத் தேற்றத்தார் தெரியுங்காலம்
மும்மையு முணர வல்லா ரொருமையே மொழியு நீரார்.

நல்லவுந் தீயவு நாடி நாயகற்
கெல்லையில் மருத்துவ னியல்பி னெண்ணுவார்
* ஒல்லைவந் துறுவன வுற்ற பெற்றியின்
தொல்லைநல் வினையென வுதவுஞ் சூழ்ச்சியார்.''

இவர்களெல்லோரும் வந்த பின்னர் தசரதன் இவர்களை நோக்கி, ''நான் அறுபதினாயிரம் வருடங்கள் இப்பூமி பாரத்தைத்தாங்கி இளைத்துப் போயினேன்; மேலும் விருத்தாப்பியத்தையும் அடைந்துவிட்டேன். மனிதர் வாழ்க்கையோ நிலையற்றது. இவ்வரசுரிமை யின்பத்தையும் நான் நெடுங்காலம் அனுபவித்து வந்ததால் இதிலும் வெறுப்புற்றேன். இவ்வின்பமும் நிலைத்து நிற்பதன்று; இங்ஙனம் நெடுநாட்கள் அனுபவித்ததும், நிலையற்றதுமாகிய இவ்வின்பத்தை யனுபவிப்பது எச்சிலை யுண்டதை நிகர்க்கும்; ஆதலின், இப்பூமி பாரத்தை இராமன் மீது சுமத்திவிட்டு நான் தவத்தை நாடிக் காட்டிற்குச் செல்ல விரும்புகிறேன்; உங்

† நுனித்து-கூர்மையாகச் சிந்தித்து. ‡ குணித்தல்-எண்ணுதல். ¶ பால்-ஊழ். * ஒல்லை-சீக்கிரம்.

கள் கருத்து யாது?" என்றான். வசிஷ்டர், "சக்கரவர்த்தியே! நீர் இராமரைப் பெற்றதால் உமக்கு எல்லாக்குறைகளும் நீங்கின; இனி நீர் கூறியபடி செய்தல் தகுதியானதே" என்றார். சுமந்திரன் என்னும் முதல் மந்திரி "அங்ஙனமே தவத்திற்கேகுதல் தகுதியென்றாலும் முதலில் இராமருக்குப் பட்டாபிஷேகம் செய்துவிட்டுப் பின்னரே செல்லவேண்டும்" என்றான். தசரதன்,

"மற்ற வன்சொன்ன வாசகங் கேட்டலு மகனைப்
பெற்ற வன்றினும் † பிஞ்ஞகன் பிடித்தவப் பெருவில்
இற்ற வன்றினு ‡ மெறிமழு வாளவ னிழுக்கம்
உற்ற வன்றினும் பெரியதோ ருவகைய னானான்."

அங்ஙனம் சந்தோஷித்தவன், அவ்வாறே செய்வதாக யாவர்க்கும் கூறி இராமரை அழைத்துவருமாறு சுமந்திரனுக்குக் கட்டளையிட்டான். அவ்வாறே சுமந்திரன், அவரை அழைத்துவந்தான். இராமர் சபைக்கு வந்ததும் வசிஷ்டரையும், தந்தையையும் சேவித்தார். தசரதன் இராமரைத் தழுவிக்கொண்டு, அவரை நோக்கி, "என் அருமைப் புதல்வ! நானோ இப்பூமிபாரத்தைச் சுமந்து இளைத்தேன்; விருத்தாப்பியத்தை அடைந்த நான் இனிமேலும் அச்சுமையைத் தாங்கமுடியாதவனா யிருக்கின்றேன். ஆதலின் நீ மகுடாபிஷேகம் செய்துகொண்டு அந்தப்பாரத்தைத் தாங்கிக் கொள்ளவேண்டும்; ஆலின் விழானது அதனைத் தாங்கிக் கொள்ளுதல் போலப் பெற்றோர் தளர்ச்சியைத் தாங்குதல் பிள்ளைகட்குரிய கடனன்றோ?" என்று கூறினான். இதைக் கேட்டவுடன் இராமர் யாதொன்றுஞ் சொல்லாமல் மௌனமாயிருந்தார். அவர் இப்படியிருந்தது, தந்தை சொல்லைத் தட்டாமல் அதற்கிணங்கியதற் கறி குறியாம். 'மௌனமா

† பிஞ்ஞகன்-சிவன். ‡ எறிமழுவாளன்-பரசுராமன்.

யிருப்பதே மாறுவிருப்ப' மன்றோ? பிள்ளை சம்மந்தித்த குறிப்பை யுணர்ந்த தசாதன் சந்தோஷித்து அவரைத் தழுவிக்கொண்டான். பின்பு இராமர் தந்தை முதலியவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு தம் திருமாளிகைக்கேகினர். தசாதன் மந்திரிகளிடத்தும் மற்ற அரசர்களிடத்தும் இராமர் பட்டாபிஷேகத்துக் குரியவைகளைச் சேகரிக்கும்படி ஆக்ஞாபித்தனன். அவர்கள் மகிழ்ச்சியுற்று அதற்காக வேண்டிய காரியங்களிற் பிரவேசித்தனர். அத்தருணத்தில் சிலதாதிகள், இராமருக்கு மகுடாபிஷேகம் நடக்கப்போவதையுணர்ந்து கௌசலையிடம் சென்று அதனைத் தெரிவித்தார்கள். கௌசலை, சந்தோஷித்து மிக்க தானதருமங்களைச் செய்து, உடனே இரங்கநாதர் கோவிலுக்குச் சென்று அவரைச் சேவித்து அவருக்குரிய ஆராதனை முதலியவற்றைச் செய்து மாளிகைக்குத் திரும்பி மகனுக்கு க்ஷேமமுண்டாகவேண்டி மகாவிரதங்களை அனுஷ்டித்துக்கொண்டிருந்தாள்.

இராமருக்கு வதிஷ்டர் தருமோபதேசஞ் செய்தல்.

அதன்மேல், வதிஷ்டர், "இராமருக்கு மகுடாபிஷேகம் செய்தற்கு நாளைக்கு நல்முகூர்த்த மிருப்பதால் அதிலேயே முடிசூட்டி விடவேண்டும்" என்று தசாதனிடம் கூறினர். தசாதன் அவ்வாறே செய்ய இசைந்து அவரிடத்தில், "சுவாமி! இராமன், அரசனாகப் போகின்றமையால், அவனுக்கு இராஜ தர்மங்களையும் மற்றைய நீதிகளையும் தாங்கள் உபதேசித்தருள வேண்டும்" என்று கூறினன். வதிஷ்டர், உடனே இராமரிடம் சென்று அவருக்கு அரச நீதிகளையும், மற்றைய தர்மங்களையும் விளக்கமாக எடுத்துக் கூறினர். அவற்றையெல்லாம் கேட்டு இராமர் மனதில் வைத்துக்கொண்டு வதிஷ்டருடனே இரங்கநாதர் கோவிலுக்

குப் போய், அவருக்குத் திருவாராதனம் செய்துவைத்து அவரைத்துதித்து அவரடியில் வணங்கி மாளிகைக்குத் திரும்பி வந்து, மகிழ்ந்திருந்தார். வசிஷ்டர் தசரதனிடம் வந்து, "இராமருக்கு எல்லா நீதிகளும் உபதேசிக்கப்பட்டன" என்றார். அதன்மேல் தசரதன், 'நாளை இராமருக்கு மகுடாபிஷேகம்' என்று நகரத்தில் பறை யறைவிக்கும்படி ஏவலாளர்க்குக் கட்டளை யிட்டான். வள்ளுவனால் நகரெங்கும் பறையறைவிக்கப் பட்டது. நகரெங்கும் அலங்கரிக்கப் பட்டது. மகுடாபிஷேக செய்தியை உணர்ந்ததும் நகர மாந்தர்க ளெல்லோரும்,

" ஆர்த்தனர் களித்தனர் ஆடிப் பாடினர்
வேர்த்தனர் தடித்தனர் சிலிர்த்து மெய்ம்மயிர்
போர்த்தனர் மன்னனைப் புகழ்ந்து வாழ்த்தினர்
தூர்த்தனர் நீள்நிதி சொல்லி னூர்க்கெலாம்".

மந்தரை செய்யும் மித்திரபேதம்.

இராமரின் மகுடாபிஷேக செய்திகேட்டு நகரமாந்தர்க ளெல்லோரும் மகிழ்ந்திருக்கும் சமயத்தில், கூனியாகிய மந்தரை யென்னும் தாதியானவள், இராமர் விளையாட்டுப் பருவத்தில், தன்மீது வில்லுண்டை யெறிந்து தனக்குச் சிறிது துன்பத்தை யுண்டாக்கிய பகையை நினைத்து, இராமரின் மகுடாபிஷேக விஷயத்தில் குரோதமும் பொறாமையும் கொண்டு அதனை எவ்வகையாலேனும் தடுத்துவிடக்கருதி உடனே கைகேசியினிடம் சென்றாள். அப்போது கைகேசி நித்திரை செய்துகொண் டிருந்தாள். அவளை எழுப்பக்கருதி அவளுடைய பாதத்தைக் கூனி வருடினாள். கைகேசி நித்திரை தெளிந்தெழுந்து கூனியை நோக்கினாள். கூனி, 'இதுதான் தருணம்' என்று அவளை நோக்கி, "ஆபத்து வந்திருக்கும்போது கூட நித்திரை செய்யலாமா?" என்

ருள். கைகேசி, "எனக்கு மகா தர்மிஷ்டர்களான பிள்ளைகளிருக்கும்போது ஆபத்தேன் வருகிறது?" என்றாள். அதற்குக் கூனி, "உன்னுடைய இளமைபோகவே, பாக்கியமும் நழுவிவிட்டது; கௌசலை புத்திசாதுரியத்தினாலே முதுமையினும் வாழ்வை யுண்டாக்கிக் கொண்டாள்" என்றாள். கைகேசி "மகாசக்ரவர்த்தியாகிய கணவரும், உத்தம பரதனாகிய புத்திரனும் எனக்கு இருக்க, என்னைக் காட்டிலும் அவளென்ன அதிக வாழ்வை யடைந்துவிட்டாள்?" என்றாள். கூனி "ஐயோ! இது தெரியாதா? அவள் கணவனைத் தன் வசப்படுத்தித் தன்னுடைய புதல்வனுக்கு இராஜ்ஜிய பட்டாபிஷேக மாகும்படி செய்து கொண்டாள்; தாடகையை வதைத்து மகா ஸ்திரீஹத்தி தோஷத்திற்குள்ளான இராமனுக்கு நாளை மகுடாபிஷேகம்; இதுதான் கௌசலைக்கு அதிகவாழ்வு" என்று கூறினாள். இதைக் கேட்டவுடனே கைகேசி "ஆ! இராமனுக்கா பட்டாபிஷேகம்; அவனே அதற்குரியவன்; அவன் பட்டம் பெறுதலே எனக்கு மிகுந்த பாக்கியமாயிற்றே; அங்ஙனமிருக்க நீ அறியாமையால் இதை எனக்குக் குறைவென்று கூறினை; ஆயினும் பாதகமில்லை: நீ இந்த மகிழ்ச்சியான விஷயத்தைத் தெரிவித்ததற்காக இதனைப்பெற்றுக்கொள்" என்று மிகுந்த மகிழ்ச்சியோடு, தன்கழுத்தி லணியப்பட்டிருந்த ஓர் இரத்தின ஹாரத்தைக் கழற்றி அவள் கழுத்தில் போட்டாள். கூனி கோபத்தோடு அதனைக் கழற்றி யெறிந்துவிட்டுக் கைகேசியை நோக்கி, "நீ பேதை; உன் பிள்ளையாகிய பரதன் பைத்தியக்காரன்; கௌசலை தந்திரக்காரி யானதால் சமயத்தில் பரதனை மாமன்வீட்டிற் கனுப்பச்செய்து தன் புத்திரனுக்கே பட்டமாகும்படி செய்து கொண்டாள். இனி உன்பிள்ளை தவஞ்செய்யக் காட்டிற் கேகவேண்டியது தான் எஞ்சியிருப்பது. நீ வறுமையால்

பெருமையிழந்து தபிக்கப்போகிறாய்; இவ்வகைக் கேடுகள் உனக்குச் சம்பவித்திருக்கும்போது, நீ இவற்றை யுணராமல் மகிழ்ச்சி கொண்டாடுகின்றாயே; உன்புத்தி என்ன புத்தியோ!" என்று மித்திரபேதமான வார்த்தைகளைக் கூறினாள். உடனே கைகேசிக்கு அடங்காக் கோபம் வந்து விட்டது; அதனால் அவள், கண்சிவந்து கூனியை நோக்கி,

"வெயில் முறைக்குலக் கதிரவன் முதலிய மேலோர்
உயிர் முதற்பொருள் திறம்பினும் உரைதிறம் பாதோர்
மயில் முறைக்குலத் துரிமையை மனுமுதன் மரபைச்
செயி ருறப்புலச் சிந்தையா லென்சொனாய் தீயோய்.

எனக்கு நல்லையு மல்லைநீ யென்மகன் பரதன்
தனக்கு நல்லையு மல்லையத் தருமமே நோக்கில்
உனக்கு நல்லையு மல்லைவந் தூழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய்.

பிறந்தி றந்துபோய்ப் பெறுவது மிழப்பதும் புகழேல்
நிறந்தி றம்பினு நியாயமே திறம்பினு நெறியின்
திறந்தி றம்பினும் செய்தவம் திறம்பினும் செயிர்தீர்
மறந்தி றம்பினும் வரன்முறை திறப்புதல் வழக்கோ.

போதி யென்னெதிர் நின்றுநின் புன்பொறி நாவைச்
சேதி யாதிது பொறுத்தனென் புறஞ்சில ரறிவின்
நீதி யல்லவு நெறிமுறை யல்லவும் நினைந்தாய்
ஆதி யாதலின் அறிவிலி அடங்குதி யென்றாள்"

இவற்றைக்கேட்டும் கூனி அடங்கிப் போகவில்லை. மேலும் அவள் கைகேசியை நோக்கி, "ஐயோ! நீ, நடக்கும் சூதை நன்குணராமல் குலமுறைகெட்டுப் போகின்றதென்று ஏதேதோ நீதி பேசி என்னையும் திட்டுகின்றாய்; இந்தப் பட்டாபிஷேகத்தால் உனக்கு மிகுந்த துன்பம் நேரும்; உன் புருஷனுக்குப் பயந்தே சீதையின் தகப்பன்

உன் தகப்பனுடைய இராஜ்ஜியத்தைப் பிடுங்கிக்கொள்ளாமலிருக்கிறான். இராமனுக்குப் பட்டம் ஆகிவிட்டால் மருமகன் உதவியை வைத்துக்கொண்டு, ஜனகன் உனது தந்தையின் இராஜ்ஜியத்தை அபகரித்துக் கொள்வான்; நீ மற்றவைகளைக் கவனியாவிடினும் இதையேனும் கவனிக்க வேண்டாமா" என்று துர்ப்போதனை செய்தாள்.

இவ்வாறு கூறவே, இராவணன் முதலிய இராக்ஷதர்கள் மடியவேண்டி யிருப்பதாலும், தேவர்களின் துயரம் தீரவேண்டி யிருப்பதனாலும் கைகேசிக்கு முன்னிருந்த புத்தி மாறுபட்டுவிட்டது. கூனி சொல்வது சரியானதென்று அவள் புத்தியிற்பட்டது. அதனால் அவள் சந்தோஷத்துடனே கூனியின் முகத்தை நோக்கி, "அப்படியானால் பரதனுக்குப் பட்டாபிஷேகமாவதற்கு என்ன உபாயஞ் செய்யலாம்?" என்று வினவினாள். உடனே கூனி, முன்னொரு காலத்தில், சம்பராசூரன் யுத்தத்தில், கைகேசி தசரதனுக்குத் தேர் செலுத்தி ஜெயத்தை யுண்டாக்கிய போது, தசரதன், அவளுக்கு இரண்டு வரங்கள் கொடுப்பதாக வாக்களித்ததை ஞாபகப்படுத்தி, "கைகேசி! உனக்குத் தசரதர் இரண்டுவரங்கள் கொடுப்பதாக முன்னே வாக்களித்திருக்கிறாரல்லவா; அந்த இரண்டு வரங்களையும் இப்போது, பரதனுக்குப் பட்டங் கட்டுதல் ஒன்றும், இராமனைக்காட்டுக் கனுப்புதல் ஒன்றுமாக நீ பெற்றுக்கொள்" என்று சொன்னாள். இவ்வாறு உபாயஞ் சொல்லிய கூனியைக் கைகேசி கொண்டாடி அவளுக்குத் தக்க பரிசளித்தாள். அவள் அதனைப் பெற்றுக்கொண்டு, "நம் உத்தேசம் நிறைவேறிற்று" என்று மகிழ்ச்சியுடனே சென்றாள்.

கைகேசி சூழ்வினை.

கூனி சென்றபின், கைகேசி, தான் கொண்ட எண்ணத்தை நிறைவேற்றும் நோக்கமுடையவளாய், மிகுந்த

துன்பத்திற் குள்ளானவள் போன்று பாசாங்கு செய்யத் தொடங்கி, புஷ்பசயனத்தை விட்டிறங்கிக் கூந்தலை அவிழ்த்துவிட்டுப் புஷ்பமாலைகளை யெல்லாம் அறுத்துச் சிதறி, ஆபரணங்களைக் கழற்றி யெறிந்து, நெற்றிப் பொட்டையழித்துக் கண்ணின்மை கரையக் கண்ணீர்விட் டழுது தரையிற் புரண்டுகொண்டு கிடந்தாள். அத்தருணத் தில், தசாதன் அங்கேவந்து, அவளுடைய அலங்கோலத் தைக் கண்டு சகியாளுய், அவளை நோக்கி, "என் பிரிய பத்தி னியே! இராமனுடைய மகுடாபிஷேகமாகிய சந்தோஷ செய்தி நிகழ்ந்திருக்கும் இக்காலத்தில் நீ என் இக்கோலத் துடனிருக்கின்ருய்; உனக்கு நேர்ந்ததுயாம் யாது?" என்று வினவினுன். கைகேசி அழுதுகொண்டே, "என் வருத்தத் தைத் தாங்கள் தீர்ப்பதற்கு என்மீது தங்களுக்கு அவ்வள வு தயையிருக்கின்றதோ?" என்ருள். உடனே தசாதன், "நீ என்ன இப்படிப் பேசுகின்ருய்! இராமன் ஆணைப்படிக்கு நீ எதைச் சொல்கிருயோ அதைத் தடையின்றி நான் செய் வேன்" என்ருன். இந்த உறுதிமொழி வெளிப்பட்டவுடன் கைகேசி தைரியமாய், "அப்படியானுல், தேவர்கள் சாக்ஷி யாக நீர் எனக்கு இரண்டு வரங்கள் கொடுப்பதாக முன்னே வாக்களித் திருக்கிறீரன்ருே; அவற்றை இப்போது கொடுக்க வேண்டும்" என்ருள். தசாதன் "அவற்றைத் தடையின்றி நான் தருகின்றேன்" என்ருன். கைகேசி, "அவ்விரண்டை யும் சொல்கிறேன் கேளும்; பாதனுக்குப் பட்டங்கட்டுதல் ஒன்று, இராமனைக் காட்டுக் கனுப்புதல் ஒன்று" என்ருள். இந்தக் கடுமொழிகள் செவியிற்பட்ட மாத்திரத்தில், தச ரதன் திடீரென்று பூமியில் வீழ்ந்து புரண்டு, பெருமூச்சு விட்டு நாவுலர்ந்து, மூர்ச்சை யடைந்தான். மன்னனுடைய அந்நிலைமையைக் கண்டும் கைகேசி மனதிரங்கவில்லை. பின்

4

னர் மன்னன் மூர்ச்சை தெளிந்தெழுந்து, அவளை நோக்கி, "அடிபேதாய்! நீ ஏதாவது மதிமயங்கி இவ்வார்த்தைகளைக் கூறினையா? அல்லது வேறெவரேனும் இவ்வாறு கூறும்படி உன்னைத் தூண்டினார்களா?" என்றான். கைகேசி, "நான் புத்திமயங்கி இவற்றைக் கூறவுமில்லை, வேறொருவர் தூண்டுதலுக் குட்படவு மில்லை; நீர் இவற்றைக் கொடுத்தால் பெற்றுக் கொள்கிறேன், இல்லை யென்றால் உயிரை விட்டுவிடுகிறேன்" என்றாள்.

" இந்த நெடுஞ்சொலவ் வேழைகூறு முன்னே
வெந்த கொடும்புணில் வேல்நுழைந்த தொப்பச்
சிந்தை திரிந்து திகைத்தயர்ந்து வீழ்ந்தான்
மைந்த னலாதுயிர் வேறிலாத மன்னன்."

இவ்வாறு வீழ்ந்தவன் உடனே எழுந்து கோபங்கொண்டு அவளை வதைசெய்து விட்டுத் தற்கொலைசெய்து கொள்ள நினைத்தான். நினைத்தும் அது தகுதியற்ற காரியமென்று தோன்றியபடியால் அவ்வெண்ணத்தை விடுத்து, அவளைக் கெஞ்சிக் கேட்டாவது அவளுடைய தீய எண்ணத்தை மாற்றலாமென்று அவளை நோக்கி, "பெண்ணே! இது தக்கதன்று; இதனால் நமக்கு அபகீர்த்தி யுண்டாகும்; அன்றியும் பரதனும் இதற்கிணங்கமாட்டான்; ஆதலின் இவ்வெண்ணத்தை விட்டுவிடு" என்றான். அவள் இதற்குச் சிறிதும் இணங்கவில்லை. பின்னர் அரசன், "கண்மணி! நீ உன் மகனுக்கு இராஜ்ஜியத்தை வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளலாம்; இராமனைக் காட்டுக்கனுப்புதல் தகாது.

" கண்ணே வேண்டு மென்னினு மீயக் கடவேனென்
உண்ணே ராவி வேண்டினு மின்றே யுனதன்றோ
பெண்ணே வண்மைக் கையன் மானே பெறுவாயேல்
மண்ணே கொள்நீ மற்றைய தொன்று மற வென்றான்."

இதற்கும் கைகேசி உடன்படவில்லை. அதன்மேல் சக்கரவர்த்தி, "அடி பாவி! இராமன் காட்டுக்கேகினால் என் உயிரும் போய்விடும்; நல்ல பதிவிரதைகள், கணவன் உயிர் போவதுணர்ந்தால் அதற்கு முன்னரே தங்கள் உயிரை விட்டு விடுவார்கள். அப்படியிருந்தும், நீயே என் உயிரைப் போக்குதற்கு வழிசெய்கின்றாய். இது தகுதியன்று; இராமனைக் காட்டிற்கனுப்பச் சொல்லாதே" என்று அவளை மிகவும் வேண்டினான். எவ்வளவு சொல்லியும் அவள், "எதுவும் வரவேண்டிய விதியிருந்தால் வந்தேதீரும்; நான் கோரிய வரங்களை நீர் கொடாவிட்டால் உயிரை விட்டுவிடுவேன்" என்றாள். இதைக் கேட்டதும் அரசன் அடங்காக் கோபமுற்று, "அடி பாவி! நீ கோரிய இரண்டு வரங்களையும் கொடுத்துவிட்டேன்; நீ உன் மகனோடு இராஜ்ஜியத்தை ஆண்டு கொண்டிரு; நான் தெய்வலோகம் போகின்றேன்" என்று சொல்லிப் பலவாறு அவளைத் தூஷித்துப் புத்திர சோபத்தால் மூர்ச்சை யடைந்துவிட்டான். இவர்களுடைய வாக்குவாதத்திலேயே இரவுமுற்றும் கழிந்து சூரியோதயமாய்விட்டது.

அப்போது நகரமாந்தர்க ளெல்லோரும் "இன்றைக்கு இராமர் பட்டாபிஷேகம்" என்று சந்தோஷித்து எழுந்தார்கள். எங்கும் மகுடாபிஷேக கொண்டாட்டங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. சகல தேசத்தரசர்களும் அங்கே வந்து கூடினார்கள். பட்டாபிஷேக மண்டபத்தில் எல்லோரும் வந்து நிறைந்தார்கள். அப்போது வசிஷ்டர் சுமந்திரனை நோக்கி, "மகுடாபிஷேக முகூர்த்தம் நெருங்கிவிட்டதாதலால் நீர் விரைவிற்சென்று சக்கரவர்த்தியை அழைத்து வாரும்" என்றார். சுமந்திரன், தசரதனை அழைப்பதற்குச் சபாமண்டபம் சென்றான். அங்கே சக்கரவர்த்தி இல்லை. அதனால் அவன் அங்குள்ளவர்களை விசாரித்துச் சக்கரவர்த்தி

கைகேசி வீட்டிற்குச் சென்றாரென்று கேள்விப்பட்டு அங்குப் போய்த் தான் வந்திருப்பதைத் தசரதனுக்குத் தெரிவிக்கும்படி தாதிகளிடம் சொல்லி அவர்களை உள்ளே அனுப்பினான். அவர்கள் சென்று சுமந்திரன் வரவைக் கைகேசியிடம் தெரிவித்தார்கள். அவள், அவர்களை நோக்கி, 'இங்கே நான் இராமனை அழைத்து வரச் சொன்னதாக மந்திரிக்குக் கூறுங்கள்' என்றாள். அவர்கள் அதனைச் சுமந்திரனிடம் தெரிவித்தார்கள்.

சுமந்திரன் இராமரிடம் சென்று, "சுவாமி! பட்டாபிஷேகத்திற்கு எல்லோரும் வந்திருக்கிறார்கள்; தங்கள் சிற்றன்னையாராகிய கைகேசி அம்மாள் தங்களைப் பார்க்க வேண்டுமென்கிறார்கள்; ஆதலின், தாங்கள் அங்கே சென்று அவர்களைப் பார்த்துவிட்டு விரைவில் மகுடாபிஷேக மண்டபத்திற்கு வரவேண்டும்" என்றான். இராமர் உடனே எழுந்துபோய் இரங்கநாதரைத் தொழுது கொண்டு சபா மண்டபஞ் சென்று, தந்தை ஆங்கில்லாதது கண்டு கைகேசி வீட்டிற்குச் சென்றார். அவர் வருகையைக் கண்டதும், கைகேசி, "இராமனைக் காட்டிற்கேகும்படி சக்கரவர்த்தி, தம் வாக்கினாற் சொல்லமாட்டார்; ஆதலின், அதை நாமே சொல்லி விடுவோம்" என்று இராமருக்கெதிரே சென்றாள். அவர் அவளைக் கண்டதும் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார். அவள் ஆசி கூறுதற்குப் பதிலாக, "இராமா! பரதன் இராஜ்ஜிய பட்டாபிஷேகம் செய்து கொள்ளவும், நீ தவவேடம் பூண்டு காட்டிற்கேகிப் பதினான்கு வருடங்கள் சென்றபின் மீண்டு நகரத்திற்கு வரவும் சக்கரவர்த்தி கட்டளையிட்டிருக்கிறார்" என்றாள்.

இந்த வார்த்தையைக் கேட்டவுடனே இராமருடைய முகமானது அன்றலர்ந்த செந்தாமரை மலர்போலச் செழிப்

புற்று விளங்கியது. உடனே இராமர், "அம்மா! இக்கட்டளையை மிகவும் மகிழ்ச்சியுடன் நான் ஏற்றுக்கொள்கிறேன்; இதனை என் தந்தை கூறாமல் தாங்களே சொன்னாலும் நான் மறுக்கமாட்டேன்; தவத்திற்கேகும் பாக்கியம் எவருக்குக் கிடைக்கும்! மேலும், தம்பிக்கு வரும் பாக்கியம் எனக்கு வருவதேயாகும்; ஆதலின், இதோ அக்கட்டளையின்படி நான் காட்டிற்குச் செல்கின்றேன்" என்று அவளைச் சேவித்துக்கொண்டு அங்கு நின்றபடியே தந்தையிருக்கும் திக்கைநோக்கி நமஸ்கரித்துவிட்டுக் கௌசலையின் அரண்மனைக் கேகினார்.

இராமர் நகர் நீங்குதல்.

அவ்வாறு சென்ற இராமர் கௌசலையைக்கண்டு வணங்கினார். மகுடாபிஷேகத்திற்குச் சென்றபிள்ளை ஒரு சிறப்புமின்றித் திரும்பி வந்ததைக் கண்டவுடனே கௌசலை அதிசயித்து, இராமரை நோக்கி, "குழந்தாய்! நீ இப்படி வந்ததற்குக் காரணமியாது?" என்றாள். அதற்கு இராமர், "உன்னுடைய குமாரனும் என் தம்பியுமாகிய பரதனுக்கு முடிசூட்ட நிச்சயமாய் விட்டது" என்றார். இதைக்கேட்டதும் கௌசலை மிக்க மகிழ்ச்சிகொண்டு, "அப்பா! உன்னிலும் பரதன் மிக்க நல்லவன்; அவன் இராஜ்ஜியமாள்வது எனக்கு மிகவும் மகிழ்ச்சியே; நீ அவனோடு கூடியிருந்து வாழக்கடவாயாக" என்றாள். இராமர் தம் தாயின் பெருங்குணத்திற்கு மகிழ்ந்து அவளை நோக்கி, "அன்னையே! எனக்கின்னுமொரு கட்டளையும் பிறந்திருக்கிறது; அதாவது: தந்தையார் என்னைப் பதினான்கு வருடங்கள் காட்டில் வசிக்கும்படி கட்டளையிட்டிருக்கிறார்" என்றார்.

இதைக்கேட்டதும் கௌசலை பேரிடியிலகப்பட்ட நாகம்போல வாடி ஆற்றொணாத்துயரத்தில் அழுந்தி, "ஆ!

என் அருமைப்புதல்வ! உன்னைப்பிரிந்து நான் எவ்வாறு உயிர் வாழ்வேன்" என்று வருந்திப் புலம்பினாள். அது கண்டு இராமர்,

"விண்ணு மண்ணுமிவ் வேலையு மற்றும்வே
றெண்ணும் பூதமெ லாமிறந் தேகினும்
அண்ணல் ஏவல் மறுக்க அடியனேற்
கொண்ணு மோவிதற் குள்ளழி யேலென்றார்."

இதைக்கேட்டுக் கௌசலை, "மகனே! தந்தை கட்டளையை மறுக்கும்படி நான் உனக்குக்கூறவில்லை; உன்னைப் பிரிவதற்கே வருந்துகின்றேன்; ஆதலின், நீ காட்டிற்கு என்னையும் உன்னுடன் அழைத்துச் செல்லவேண்டும்" என்றாள். அதற்கு இராமர், "தந்தையார் என் பிரிவால் மிகவும் வருந்துவார்; அவர் சமீபத்தில் நீர் இருந்து அவருக்குத் தேறுதல் கூறுதலே தகுதி; நான் இந்தப்பதினான்கு வருடங்களையும் விரைவிற் கழித்து மீண்டுவருவேன்; நீர் எவ்வித வருத்தமும் அடையாமல் இவ்விடத்திலேயே இரும்" என்று சொன்னார். அதன்மேல் கௌசலை "அரசனிடம் சொல்லியேனும் இக்கட்டளையை மாற்றுதற்கு முயற்சி செய்து பார்ப்போம்" என்று சக்கரவர்த்தியிடம் சென்றாள். இராமர், சுமித்திரையிடம் சொல்லிக் கௌசலைக்குத் தேறுதல் கூறும்படி செய்யலாமென்று அவளுடைய மாளிகைக் கேகினார். கௌசலை, கைகேசியின் அரண்மனைக்கேகி அரசன் மூர்ச்சையடைந்திருப்பதைப் பார்த்து அடியற்ற மரம்போற் பூமியிற் சாய்ந்து பெருங்கூச்சலிட்டுப் புலம்பினாள். இந்த அழுகுரலைக் கேட்டவர்கள், சபாமண்டபத்திலிருந்தவர்களுக்குத் தெரிவித்தார்கள். அங்கிருந்த அரசர்கள், வசிஷ்டரை நோக்கி, "சுவாமி! அரண்மனையில் ஏதோ விபரீதசெய்கை நடந்திருப்பதாகத் தெரிகிறது; விரையிற் சென்று விசாரியுங்கள்" என்றார்கள்.

உடனே வதிஷ்டர் சென்று அரசன் மூர்ச்சை யடைந்திருப்பதையும், கைகேசி முகம்வாடா திருப்பதையும், கௌசலை புலம்புவதையும் பார்த்துக் கைகேசியை நோக்கி, "இங்கு நடந்த விசேஷமென்ன ?" என்றார். கைகேசி தன்னால் நடந்தவற்றை யெல்லாம் கூறினாள். வதிஷ்டர் உடனே மன்னனுடைய சோபத்தை மாற்றக்கருதித் தசரதனை எடுத்து மார்போடு சேர்த்தணைத்துக்கொண்டு, இன்சொற்களாலும் வேறு சில பரிகாரங்களாலும் அவனுடைய மூர்ச்சையை நீக்கினார். அங்ஙனம் மூர்ச்சை நீங்கிய சமயத்தில் அம்முனிவர், மன்னனை நோக்கி, "சக்கரவர்த்தியே! கவலைப் படவேண்டாம்; இராமனே இராஜ்ஜியம் ஆளும்படி கைகேசி செய்வாள்" என்றார். தசரதன், "சுவாமி! இந்த விருத்தாப் பியகாலத்தில் எனக்கித்தகைய துன்பம் நேர்ந்திருக்கிறது; எப்படியேனும் எனக்கு அபவாத முண்டாகாமல் இத் துயரம் அகலும் மார்க்கந் தேடவேண்டும்" என்றான்.

அதன்மேல் வதிஷ்டர், கைகேசியை நோக்கி, "இலக்குமி போன்றவளே! இராமர் காட்டுக்குப் போவதை நிறுத்தி அரசனுக்கு ஆவியைக்கொடு" என்றார். அவள் அதற்கு இணங்கவில்லை. வதிஷ்டர் கோபித்துப் பலவாறு அவளை நிந்தித்துப்பேசினார். தசரதனும், "இவளே எனக்குக் கூற்றுவன்" என்று அவளைச் சீறிக் கண்ணீர் விட்டுத் துக்கித்தான். இவற்றை யெல்லாம் கண்ட கௌசலை, "கைகேசியினாலேயே இத்துன்பம் விளைந்திருக்கின்றது" என்றுணர்ந்து, தசரதனுக்குப் பல தேறுதலான மொழிகளைக் கூறினாள். என்ன கூறியும் இராமர் ஆரணியத்திற்குப் போய்விடுவா ரென்பதைச் சில குறிப்புக்களால் உணர்ந்த மன்னன் அவரை நினைத்தே, கூறுதவார்த்தைகளை யெல்லாம் கூறிப் புலம்பினான்.

அப்போது வசிஷ்டர் அவனிடத்தில், "நீர் வருத்தப் படவேண்டாம்; நான் இராமனிடத்திற்குச் சென்று அவ னைக் காட்டிற்குப் போகாமல் நிறுத்திவிடுகிறேன்" என்று சொல்லி எழுந்து போயினர். அப்போது தசரதன், "வசிஷ்டர் சொல்லைக்கேட்டு இராமன் காட்டிற்குச் செல்லா மல் நின்றுவிடுவான்" என்று சற்றுத் தைரியமடைந்து, தன்னை மறந்து நித்திரை செய்தான். அப்போது கௌசலை, 'மன்னர் இறந்துபோகப் போகிறாரோ' என்று சந்தேகித்து, "சுவாமி! பிராணனை விடவேண்டாம்; வசிஷ்டர் போயிருப் பதால் இராமன் வந்து விடுவான்" என்று சொல்லி அவன் பாதத்தை வருடினாள். அதனால் அரசன் கொஞ்சம் மயக்கந் தெளிந்து கண்களை விழித்துப்பார்த்து, "கண்மணி! இந்த வன்னெஞ்சியாகிய கைகேசி, கூனியின் பேச்சைக்கேட்டு என் உயிரை வாங்கத் துணிந்தாள்; இராமனும் காட்டுக்குப் போகாமலிரான்; என்னுயிரும் போகாமலிராது; ஏனெனில், முன்னொரு காலத்தில் நான் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றிருந்தேன். பிரமதேவர் வழியில்வந்த காசிபர் புத்திர ராகிய விருத்தசேனருக்குப் பிறந்த ஜலபோசரும், அவர் மனைவியும் அந்தகராய் அவ்வனத்தில் தங்கியிருந்தார்கள். அப்போது அவர்களின் புத்திரனாகிய சுரோசனன் அவர் கட்கு ஜலம் கொண்டுபோகும் நிமித்தம் அங்குள்ள நதியில் வந்து கமண்டலத்தால் தண்ணீரை மொண்டான். அவனை நான் யானையென்று நினைத்து அவன்மீது அஸ்திரப் பிர யோகம் செய்தேன். அவன் கதறி வீழ்ந்தான். நான் திடுக் கிட்டு அவன் சமீபத்திற் செல்ல, அவன், தன்னுடைய விருத்தாந்தத்தைக் கூறித் தன்னுடைய தாய்தந்தையர்க்கு ஜலத்தைக்கொண்டுபோய்க் கொடுத்துத் தன் மரணத்தைக் கூறும்படி என்னிடம் சொல்லிவிட்டு உயிர் துறந்தான். நான் அவ்வாறே அவர்களிடம் சென்று நடந்ததைக்

கூறினேன். அவர்கள் புத்திர சோபத்தால் வருந்தி என்னை நோக்கி, 'நீ ஆராய்ந்து பாணந் தொடுக்காதபடியால் நீயும் எங்களைப்போலவே புத்திர சோபத்தால் வருந்தி உயிர் விடுவாய்' என்று எனக்குச் சாபங்கொடுத்துவிட்டு இறந்து போனார்கள். ஆதலின் அச்சாபம் தப்பாது" என்று மேலும் மயக்கமுற்றுக் கிடந்தான்.

முன்னுரைத்தபடி சென்ற வசிஷ்டர் இராஜ சபைக் கேகி அங்குள்ளவர்களிடம் அரண்மனையில் நடந்த விபரீதங்களைக் கூறினார். எல்லோரும் பூமியிற் புரண்டழுதார்கள். எங்கும் அழுகுரல் மிகுந்தது. நகரமெங்கும் துக்கமேலிட்டது. இத்தனை பாட்டிலும் கைகேசியும் கூனியும் மாத்திரம் அழவில்லை. இலக்குமணன் இவற்றையெல்லாம் கேட்டறிந்தவுடனே "இராமர் பட்டாபிஷேகத்துக் கிடையூறு செய்தவர்களை நாசஞ்செய்து, இராமருக்கே நான் முடிசூட்டுவேன்" என்று சொல்லி மிக்க கோபத்தோடு வீதியிற் பிரவேசித்து வில்லை வளைத்துக் குணத்தொனி செய்தான். அத்தருணத்தில் சுமித்திரையிடம் சென்று தமக்கு நேர்ந்தது கூறி, அதைக்கேட்டு வருந்திய அவளுக்குத் தேறுதல் சொல்லிக்கொண்டிருந்த இராமர், இலக்குமணனுடைய விற்குணத்தொனியைக் கேட்டு அவனிடம் ஓடிவந்து சாந்தமான வார்த்தைகளைக் கூறி அவனுடைய கோபத்தைத் தணித்தார்.

அதன்மேல் இருவரும் சுமித்திரையிடம் சென்றார்கள். அவள், 'இவ்விருவருமே ஆரணியத்துக்குப் போய்விடுவார்களே' என்று மிகவும் வருந்தினாள். மீண்டும் இராமர் அவளுக்குத் தேறுதலாகிய மொழிகளைக் கூறிக்கொண்டிருந்தார். அத்தருணத்தில் கைகேசியிடமிருந்து சில தாதிகள், மரவுரியுடன்வந்து, "தங்கள் சிற்றன்னை இதனைத் தங்களிடம்

கொடுத்துவரச் சொன்னார்கள்" என்று இராமரிடம் அதனைக் கொடுத்தார்கள். உடனே இராமர், "இதோ எனக்குத் தாயார் கட்டளை வந்துவிட்டது; நான் காட்டிற்குப்போக எனக்கு நீங்கள் விடைகொடுங்கள்" என்று சுமித்திரையின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். சுமித்திரை இலக்குமணனையும் இராமருடன்செல்லும்படி அவனுக்குக்கூறினாள். அதன்மேல் இராமர் மரவுரியைத் தரித்துக்கொண்டார். இலக்குமணனும் அவ்வாறே அதனைத் தரித்துக்கொண்டான். அதை இராமர் பார்த்து, "இலக்குமணா! நீ என்னுடன் வருதல் தக்கதன்று. நீ இங்கிருந்து மிக்க துக்கத்தில் மூழ்கியிருக்கும் நம் தாய் தந்தையர்க்குத் தேறுதல் கூறுவது நலம்" என்றார். இலக்குமணன் அதற்குடன்படவில்லை. அத்தருணத்தில் வசிஷ்டர் அங்கு வந்து சேர்ந்தார். அவரைக் கண்டதும் இராமலக்குமணர்கள் நமஸ்கரித்தார்கள். இராமருடைய நிலைமையைப் பார்த்ததும் வசிஷ்டர் மிக்க துயரமுற்றுக் கைகேசியை நிந்தித்து, இராமரைப் பார்த்து, "இராஜ குமாரனே! நீ காட்டிற் கேகினால் சக்கரவர்த்தியின் உயிர் நிலைபெறாது; ஆதலின், உன்னுடைய வனப்போக்கை நீ நிறுத்திவிட வேண்டும்" என்று கூறினார். இராமர், "சுவாமி! தந்தை கட்டளைப்படி நான் போகும்போது தாங்கள் அதனைத் தடுத்தல் நீதியாகுமோ?" என்றார். வசிஷ்டர் ஒன்றுஞ் சொல்லாமல் கண் கலங்கிநின்றார். இராமர் அப்படி நின்ற வசிஷ்டரை வணங்கி, அரசனுடைய அரண்மனை வாயில்மட்டும் நடந்துபோனார். அவருடைய நிலைமையைக்கண்டு பற்பல அரசர்களும், ஜனங்களும், மனங்கலங்கி அவருக்குப் பின்னே சென்றார்கள். அதன்மேல் இராமர், சீதையின் திருமாளிகைக்குச் சென்றார். சீதை அவருடைய கோலத்தைக்கண்டு திடுக்கிட்டெழுந்தாள். அவளை மாமிமார்கள் கட்டிக்கொண் டழுதார்கள். நடந்த விசேஷங்களில் ஒன்றுமறியாத சீதை, கண்களில்

நீர் வடிய, இராமரை நோக்கி, "அரசருக்கேதேனும் அபாய முண்டோ?" என்றாள். இராமர் அவளிடம் நடந்த வர்த்த மானங்களைக் கூறி, "நான் வனத்திற்குச் செல்கின்றேன்; நீ இவ்விடத்திலேயே வருந்தாமலிரு" என்றார். சீதை துயரத்தை ஆற்றமுடியாதவளாய், "தாங்கள் என்னை இங்கே விட்டேகுதல் தகுதியாமா?" என்றாள். இராமர், "காட்டிற்கு நீ வந்தால் சூரியவெப்பத்தாலும், பரற்கற்கள் பாதங்களில் அழுத்துவதாலும் வருந்துவாய்" என்றார். சீதை, "உம்மைப் பிரிந்திருப்பதால் உள்ளத்தில் எழுந்து என்னைச் சுடும் காலாக்கினியைக் காட்டிலும் ஆரணியத்தி லுண்டாகும் சூரிய வெப்பம் பெரிதோ?" என்றனள். இரா மர், "சீதைக்கு என் கூறுவது?" என்று ஆலோசித்தார். அதற்குள் சீதை ஓர் அறைக்குட்சென்று மாவுரிதரித்துக் கொண்டு வந்துவிட்டாள். அப்போது இராமர் அவளை நோக்கி, "பெண்ணே! நீ என்னுடன் வருவதால் எனக்கு மிக்க துன்பத்தைக் கொடுப்பாய்" என்றனர்.

"கொற்ற வன்னது கூறலும் கோகிலம்
செற்ற தன்ன குதலையள் சீறுவாள்
உற்று நின்ற துயரமி தொன்றுமே
எற்று றந்தபி னின்பங்கொ லாமென்றாள்"

இராமர் அதன்மேல் ஒன்றுஞ் சொல்ல வியலாமல் வெளி யேறி நடந்தார். அப்போது ஜனங்களெல்லோரும் "நாமும் இவருடன் வனத்திற் கேகுவோம்" என்று அவரைப் பின் தொடர்ந்தார்கள். பின்னர் இராமர் அரண்மனை வாயிலில் நின்று, சுமித்திரை முதலிய தாய்மார்களை நோக்கி, "நீங்கள் என் தந்தைக்குத் தேறுதல் சொல்லி அவர் துயரத்தை ஆற்றுங்கள்" என்று அவர்களை நிற்கும்படி வேண்டினார். அம்மாதர்கள் விம்மிவிம்மி அழுது கொண்டு,

"எத்தி னார்தம் மகனை மருகியை
வாழ்த்தி னாரினை யோனை வழுத்தினார்
காத்து நல்குமின் தெய்வதங் காளென்றார்
நாத்த மும்ப வரற்றி நடுங்குவார்."

ஆகி, இராமரைப் பிரிந்து திரும்பினார்கள். அப்போது வசிஷ்டர் இராமருக் கெதிரில் வந்து நின்றார். இராமர்,

"அன்ன தாயர் அரிதிற் பிரிந்தபின்
முன்னர் நின்ற முனிவனைக் கைதொழா
தன்ன தாருயிர்த் தம்பியுந் தாமரைப்
பொன்னுந் தானுமோர் தேர்மிசைப் போயினார்."

தசரதன் தேக வியோகம்.

அவ்வாறு சென்ற இராமர், அநேகம் ஜனங்கள் பின் தொடர்ந்துவர இரண்டு யோசனை தூரம் சென்றார். அப்போது சூரியாஸ்தமன மாயிற்று. இராமர் இரதத்தைவிட்டிறங்கி அங்குள்ள ஒரு சோலையில் தங்கினார். தொடர்ந்து சென்ற ஜனங்களும், இராமரைத் திரும்ப அழைத்துவரலாமென்ற நோக்கத்துடன் சென்ற சுமந்திரனும் அங்கே தங்கினார்கள். இவ்வாறு தங்கியிருக்கும்போது எல்லோரும் நித்திரை செய்யுந் தருணத்தில் இராமர், சுமந்திரனை யழைத்து, அவனிடத்தில், "இந்த ஜனங்கள் என்னைவிட்டுப் போகமாட்டார்கள்; நீர் இப்பொழுதே தேரைத் திருப்பிக் கொண்டு நகரத்திற்குச் சென்றுவிடும்; நான் இலக்குமணனை யும் சீதையையும் அழைத்துக்கொண்டு இவ்விடத்தைவிட்டுப் போய்விடுகிறேன்; ஜனங்கள் எழுந்து இரதம் திரும்பியிருப்பதைப் பார்த்து நான் நகரத்திற்கே போய்விட்டேனென்று நினைத்து அங்கே வந்து விடுவார்கள்; நான் காட்டிற் கேகினதையும் நீர் என் தந்தையார்க் கறிவித்துவிடும்; நீர் இவ்வுதவியை எனக்குச் செய்யவேண்டும்" என்று கூறினார்.

சுமந்திரன், "நான் சென்றுதானா இந்தத் துக்க சமாசாரத்தைச் சக்கரவர்த்தியாருக்குச் சொல்ல வேண்டும்!" என்று வருந்தினான். இராமர் அவனுக்குச் சமாதான மொழிகளைக் கூறி, அவனுடைய வருத்தத்தைப் போக்கி மேலும் அவனை நோக்கி, "நீர் வசிஷ்டருக்கு என்னுடைய வந்தனத்தைக்கூறி அவரைக்கொண்டு தந்தையார்க்கு என்னுடைய வனப்போக்கைக் கூறும்படி செய்யும்; பரதன் வந்தவுடன் அவனை நீதியோடு அரசு செலுத்தவும், தன் தாயைக் கோபியாமலிருக்கவும் அவனிடம் கூறும்; மற்றையர்க்குத் தேறுதல் கூறிக்கொண்டிரும்" என்று கூறினார். சுமந்திரன், வருத்தத்துடன் அவர் வார்த்தைக்கிணங்கிப் புறப்பட்டுச் சீதையின் முகத்தை நோக்கினான். அவள், "என் மாமனாருக்கும் அத்தைமார்கட்கும் என் வந்தனங் கூறி என் தங்கைமார்களிடத்தில், நான் வளர்த்த கிளியைப் பாதுகாத்துக் கொள்ளும்படியும் சொல்லும்" என்று கூறினாள். அதைக் கேட்டுச் சுமந்திரன், 'இவ்வளவு பேதைமையுடைய இந்த அம்மையுமா ஆரணியஞ்செல்வது!' என்று கண்ணீர்விட்டு இலக்குமணனை நோக்கினான். அவன் தன்னுடைய கோபம் வெளிப்படும்படியான சில வார்த்தைகளைக் கூறினான். அவனுக்கு இராமர் சமாதானம் கூறினார். பின்னர், சுமந்திரன் மூவரிடத்திலும் விடைபெற்றுக் கொண்டு இரதத்துடன் போய்விட்டான். இராமர் அப்பொழுதே, தம்பியுடனும், மனைவியுடனும் புறப்பட்டு விடிவதற்குள் இரண்டு யோசனை தூரம் கடந்துபோய்விட்டார். அயோத்திக்குச் சென்ற சுமந்திரன் வசிஷ்டரைக் கண்டு அவரிடத்தில், இராமர் கூறிய விஷயங்களை யெல்லாம் கூறினான். அவர் சுமந்திரனையும் அழைத்துக்கொண்டு சக்கரவர்த்தியிடம் சென்றார். அப்போது அங்கிருந்தவர்களெல்லோரும் சுமந்திரனுடைய முகக்குறிப்பால் இராமர் திரும்பி

வரவில்லை யென்றுணர்ந்து கண்கலங்கினார்கள். அதற்கு முன் சுமந்திரனும் வசிஷ்டரும் செல்லும்போது ஜனங்கள் இரதத்தைக்கண்டு 'தேர் வந்தது, தேர் வந்தது' என்று கூறியதால் அத் தொனியைக் கேட்ட தசரதன் இராமர் வந்துவிட்டாரென்று நினைத்துச் சற்று மயக்கந் தீர்ந்து வசிஷ்டர் போனவுடன் அவரைப் பார்த்து, "சுவாமி! இராமன் வந்தானா?" என்றான். அவர் ஒன்றுஞ் சொல்ல முடியாமல் மௌனமாயிருந்தார். அக்குறிப்பினால், தசரதன் இராமர் வரவில்லை யென்றுணர்ந்து மறுபக்கம் திரும்பிச் சோர்வுற்றான். வசிஷ்டர் 'இந்தத் துக்கத்தை நான் கண்ணால் பார்க்கமாட்டேன்' என்று அவ்விடத்தை விட்டகன்றார். பின்னர் ஒரு முறை தசரதன் கண்ணைத்திறந்து பார்த்துச் சுமந்திரனை நோக்கி, "குமாரன் தூரத்திற் போய்விட்டானா, சமீபத்திலிருக்கின்றானா?" என்றார். சுமந்திரன், "சுவாமி! இராமர், சீதையுடனும் இலக்குமணருடனும் வெகு தூரத்தைக் கடந்து ஆரணியத்திற்கே போய்விட்டார்" என்றான். அதைக் கேட்டவுடனே மன்னனுக்கு உயிர் போய்விட்டது. தேவர்கள் அவனை விமானத்தில் ஏற்றிப் பரமபதத்திற்கு அழைத்துக்கொண்டு போயினார்கள்.

அரசனுக்கு ஆவி பிரியவே கௌசலை, கைகேசியை நோக்கி, "அடிபாவி! உன்னால் மன்னன் ஆவி போய்விட்டதே" என்று பூமியில் வீழ்ந்து புரண்டு இராமரைக் கூவியழைத்துத் துணைபிரிந்த அன்றிலைப் போலக் கதறி அழுதாள். சுமித்திரையும் அவ்வாறே கதறினாள். தசரதனுக்குரிய மற்ற அறுபதினாயிரம் பெண்களும் புலம்பினார்கள். சுமந்திரன் உடனே வசிஷ்டரிடம் சென்று மன்னன் விண்ணுலகடைந்ததைக் கூறினான். வசிஷ்டர் அரசனிறந்த விடம் சென்று, "இப்போது செய்தற்குரிய கிரியைகளைச் செய்தற்கு இராஜ குமாரர்களில் ஒருவரு மிங்

கில்லாததால், பரதன் வந்தபின்னரே மற்ற காரியங்களெல்லாம் நடைபெறவேண்டும்” என்று அரசனுடைய சரீரத்தைத் தைலத்திற் சேர்த்துக் கெட்டுவிடாமல் ஓரிடத்தில் வைத்து, அம் மன்னனுக்குரிய அறுபதினாயிரம் பெண்களும் அவனுடனே உயிர் துறக்க நிச்சயித்திருந்த குறிப்பை யுணர்ந்து அவர்களை நோக்கி, “அரசருடைய ஈமக்கிரியை நிறைவேறும்போது நீங்கள் உங்களுடைய மனோபீஷ்டத்தை நிறைவேற்றுவீராக” என்று கூறி, கௌசலை, சுமித்திரை ஆகிய இருவரையும் தேற்றி அவர்களுடைய மாளிகைக் கனுப்பிவிட்டு, உடனே வரவேண்டுமென்று ஓர் ஓலையில் எழுதி அதனைப் பரதனுக்கனுப்பி, அவன் வரும் வரையில் இராஜ காரியங்களைப் பார்த்துக் கொள்ளும்படி சுமந்திரனுக்கு ஆக்ஞாபித்துத் தமதிருப்பிடஞ் சேர்ந்தார்.

இராமருடன் சென்று அந்தச் சோலையில் படுத்துறங்கின ஜனங்கள், விடிந்தபின்னர் எழுந்து இராமரைக் காணாதபடியால் துயரமடைந்து நான்கு திக்குகளிலும் தேடி, சுமந்திரனால் நகரத்திற்குத் திருப்பிக் கொண்டுவரப்பட்ட இரதம் சென்றிருக்கும் சுவட்டைக் கண்டு, ‘இராமர் அயோத்திக்குத் திரும்பினார்’ என்று சந்தோஷித்து நகரத்திற்கேகி இராமர் அங்கில்லாததையும், தசரதன் இறந்ததையும் உணர்ந்து பதை பதைத்து அழுதார்கள். அப்போது வசிஷ்டர் அவர்களைத் தேற்றினார்.

இராமர், கங்கையைக் காணல்.

மேற்கூறியபடி சென்ற இராமர் முதலிய மூவரும் விடியுந்தருணத்தில் கங்கைக்கரை போய்ச் சேர்ந்தார்கள். அங்குள்ள முனிவர்கள், அவர்களைக் கண்டு மகிழ்ந்து உபசரித்து ஆகார முட்கொள்ளும்படி வேண்டினார்கள். மூவ

றும் கங்கையில் ஸ்நானஞ்செய்து அம்முனிவர்களால் உதவப்பட்ட கந்தமூல பலாதிகளை உண்டு களித்திருந்தார்கள்.

இப்படி யிருக்கும்போது, அந்தக் கங்கையில் ஓடம்விடுகிறவனும், ஆயிரம் ஓடத்துக்குத் தலைவனும், கங்கைச்சாரலில் உள்ள சிருங்கிபேரம் என்கிற கிராமத்தில் வசிப்பவனுமாகிய குகன் என்பவன், இராமர் அங்கு வந்திருப்பதையுணர்ந்து அவரைக் காணவேண்டு மென்னும் அவாவினால் தேன் முதலியவற்றைக் காணிக்கைப் பொருள்களாகக் கொண்டு பல பரவர்கள் சூழவந்து அவர்களையெல்லாம் சற்றுதூரத்தில் நிறுத்திவிட்டுத் தான்மாத்திரம் இராமரிருக்கும் இடத்தின் வாயிற்படியருகில் அணுகி நின்றான். இலக்குமணன், அவனை, நீ யாரென்று வினவினான். அவன் தன்னுடைய வரலாற்றைக் கூறினான். இலக்குமணன் இராமரிடம் சென்று அவன் வரவைக் கூறினான். இராமர் 'அவனை வரவிடு' என்றார். உடனே இலக்குமணன் உட்செல்ல அனுமதி கொடுக்க, குகன் இராமரிடம் சென்று சாஷ்டாங்கமாக வணங்கி, "சுவாமி! நான் தேன் முதலியன காணிக்கையாகக் கொண்டு வந்திருக்கிறேன்; அவற்றை ஏற்றுக்கொள்ளத் தங்கள் திருவுள்ளம் சம்மதிக்குமோ மறுக்குமோ அறியேன்" என்றான். இராமர், அங்குள்ள முனிவர்களை நோக்கி, 'எவராயினும் அன்புடன் கொண்டுவந்தது எதுவாயினும் அதை நாம் அங்கீகரிப்பதே உண்டதற்குச் சமானமாம்' என்று கூறிக் குகனை நோக்கி "உன்னுடைய காணிக்கையை நாம் அங்கீகரித்தோம்; நாம் நாளைக்காலையில் கங்கையைக் கடந்துசெல்ல வேண்டும்; ஆதலின், நீ உன்னிருப்பிடம் சென்று நாளைக்கு ஓடம் கொண்டுவா" என்று கூறினார். அவன், "சுவாமி ! தங்களை விட்டுப் பிரிந்து செல்ல எனக்கு இஷ்டமில்லை; நான் தங்களிட மிருந்து தொண்டுசெய்ய நீர்

எனக்கனுமதி தரவேண்டும்" என்றான். இராமர், சீதையையும் இலக்குமணனையும் நோக்கி, 'இவன் நம்மீது மிக்க அன்புடையவன்' என்று கூறிவிட்டுக் குகனை நோக்கி, "நீ எனக்குச் சகோதரன்; உன் இஷ்டம்போல் நம்மிடத்தில் இரு" என்றார். குகன் மனக்களிப்புற்று இராமரை வணங்கி, அவர் இருந்த பன்னகசாலையைச் சுற்றிலும் தன்னுடைய சேனைகளைக் காவல் வைத்துத் தானும் காத்திருந்தான். அப்போது குகனுக்கு இலக்குமணன், இராமரும், தானும், சீதையும் நகர்விட்டு வந்த வரலாற்றினைக் கூறினான். அதைக்கேட்டுக் குகன், மிகவும் மனம் வருந்தினான். சூரியாஸ்தமனமாயிற்று இராமர் மாலைக்கடன் முடித்துக்கொண்டு தருப்பையால் அமைந்த படுக்கையில் சயனித்துக் கொண்டார். சீதையும் அங்ஙனமே சயனித்தாள். இலக்குமணன் கையில் வில்லைப் பிடித்தபடியே கண்ணிமைக்காமல் அவர்களுக்குக் காவலிருந்தான். அப்பொழுது அவனுக்கு வழக்கம்போலவே நித்திரை வந்தது. இலக்குமணன், "நித்திரையே! நான், என் தமையனாரோடும் சீதாபிராட்டியாரோடும் திரும்பி, அயோத்திக்கு வரும்வரை, நீ என்னிடம் வராதே" என்றுசொல்லி அதனை அகற்றிவிட்டு, இராமரும் சீதையும் ஏழைகளைப் போலத் தருப்பாசயனத்தில் படுத்திருப்பதைக்கண்டு மனம் பொறாமைத் துயரமுற்று நின்றான். குகனும் அவர்களின் நிலைமையைப்பார்த்து அங்ஙனமே வருந்தினான். பின்னர் அவ்விரவு நீங்கிச் சூரியோதயமாயிற்று.

இராமர், காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, குகனிடம் ஓடம் கொண்டுவருமாறு தெரிவித்தார். குகன் அவரைப் பிரிய மனம் இசையாமல், அவரை நோக்கி, "சுவாமி! தாங்கள் வேறிடத்திற்குச் செல்லவேண்டாம்: எனது கிராமத்

திலே வசித்தால் நான் தங்களுக்கு வேண்டிய சௌகரியங் களை யெல்லாம் செய்வேன்" என்றான். இராமர் அவ னுடைய அன்பைவியந்து, புன்சிரிப்புடன் அவனை நோக்கி, "சகோதரா! நாங்கள் ஆரணியத்திற் சென்று அநேக தீர்த் தங்களில் மூழ்கிப் பற்பல முனிவர்களைக் கண்டு வணங்கி வரவேண்டும்; ஆதலின், நீ எங்களைத் தடைசெய்யாதே; நாங்கள் திரும்பிவரும்போது உன்னைப் பார்க்கிறோம்" என்றார். குகன் வேறொன்றும் சொல்லாமல் உடனே தன் ஓடத்தை வரவழைத்தான். இராமர் அங்குள்ள முனிக்குழாங்களிடம் விடைபெற்றுக்கொண்டு சீதையுடன் ஓடத்தில் ஏறினார். இலக்குமணனும் ஏறிக்கொண்டான். குகன் ஓடத்தைச் செலுத்திக் கங்காவெள்ளத்தைத் தாண்டி அக்கரையிற் கொண்டு போய்ச் சேர்த்தான். இரா மர், தம்மவருடன் ஓடத்தை விட்டிறங்கினதும், குகனிடத் தில், சித்திரகூடபர்வதத்திற்குச்செல்ல வழி கேட்டார். அப்போது குகன் அவரைச் சேவித்து, "சுவாமி! நான் தங் களுடன் வந்தால் எல்லாக் காரியங்களுக்கும் உதவியாயிருப் பேன்; ஆதலின் என்னையும் கூட அழைத்துச் செல்லவேண் டும்" என்றான். இராமர், "குகா! நீ எங்களுடன் வந்துவிட் டால் இங்கேயிருக்கும் உன்னைச்சார்ந்தவர்கள் வருந்துவார் கள். ஆதலின் நீ இங்கேயே இரு; நாங்கள் திரும்பி வரும் போது உன்னைப் பார்ப்போம்; உன்னை என் உயிரினும் சிறந்த சகோதரனாக நான் பாவித்திருக்கின்றேன்; நீ மனம் வருந்தாமல் திரும்பிச் செல்வாயாக" என்றார். குகன் அவர் சொல்லை மறுக்க முடியாதவனாய்த் துயரத்தோடு அவரிடம் சித்திரகூட பர்வதத்திற்குச் செல்லும் வழியைக் கூறிவிட்டு விடை பெற்றுக்கொண்டு திரும்பினான். அதன்மேல் இராமரும், சீதையும், இலக்குமணனும் வனத்தை நோக்கி நடந்தார்கள்.

இராமர் வனம் புகுதல்.

இவர்கள் செல்லும் வனமானது மிகக் குளிர்ந்திருந்தது. ஆங்காங்குள்ள விநோதங்களை யெல்லாம் இராமர் சீதைக்குக் காட்டிக்கொண்டே போய், அக்கினிதேவனுடைய புத்திரராகிய பாரத்துவாசர் ஆச்சிரமத்திற்குச் சமீபத்திற் சேர்ந்தார். சூரியன் அஸ்தமித்தது. அத்தருணத்தில், பாரத்துவாசர், இராமர் அங்குச் செல்வதை யுணர்ந்து அவரை எதிர்கொண் டழைப்பதற்கு வந்தார். இராமர் அவரைக் கண்டு வணங்கினார். அவர் இராமரைத் தழுவிக்கொண்டு அவர் கோலத்தைக்கண்டு வருந்தி, "என் சிநேகிதராகிய தசரதபுத்திரரே! நீர் இப்படி வரக்காரணமென்ன?" என்றார். இராமர், நடந்தவற்றைக் கூறினார். பாரத்துவாசர் அதைக் கேட்டு வருந்தினார். இராமர் "விதியை வெல்வார் எவர்?" என்று அவருக்குச் சமாதானங் கூறினார். அதன்மேல் பாரத்துவாசர் இராமரையும் மற்றவர்களையும் தம்முடைய ஆச்சிரமத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் உபசரித்து இராமரை நோக்கி, "இராகவரே! இது கங்கையுடனே யமுனையும் சரஸ்வதியும் சங்கமமாகிற இடமாதலினாலே இவ்விடத்தில் ஸ்ரீமந் நாராயணர் வாசமா யிருக்கின்றார்; ஆதலின், நீரும் இங்கே தங்கியிரும்" என்று சொன்னார். அதற்கு இராமர், "நான் இங்கே யிருந்தால், இவ்விடம் அயோதிக்குச் சமீபமாயிருப்பதினாலே, என் மீது விசுவாசமுள்ள நகரமாந்தர்கள் அடிக்கடி இங்கே வந்து, என்னை நகரத்திற் கழைப்பார்கள். அதனால் எனக்கும் தங்கள் தவத்திற்கும் மிக்க தொந்தரவே உண்டாகும்" என்றார். பாரத்துவாசர், "அது வாஸ்தவந்தான்; அப்படியானால், இதற்குத் தெற்கே பத்து யோசனை தூரத்தில் சித்திரகூட பர்வதம் இருக்கின்றது; அது நல்ல இடம்; நீங்கள் அங்கே சென்று வாசஞ் செய்யலாம்" என்றார்.

இராமர் அவரிடம் விடை பெற்றுக்கொண்டு அங்கு நின்றும் புறப்பட்டுக் கொஞ்சதூரம் நடந்து காளிந்தி நதியைக் கண்டார். அப்போது மத்தியான நேரமாயிற்று. இராமரும், சீதையும், இலக்குமணனும் அதில் ஸ்நானஞ் செய்து காய்கனி கிழங்குகளை உண்டு இளைப்பாறினார்கள். அதன்மேல், இராமர் அந்நதியை, "எவ்வாறு கடப்பது" என்று ஆலோசித்தார். அப்போது இலக்குமணன் மூங்கிலால் ஒரு தெப்பமுண்டாக்கினான். அதில் இராமரும், சீதையும் ஏறிக்கொண்டார்கள். இலக்குமணன் அந்த ஓடத்தை நடத்திக் காளிந்தியின் அக்கரையிற் கொண்டுபோய்ச் சேர்த்தான். மூவரும் இறங்கி அதற்கப்பால் நடந்தார்கள். பாலைவனமொன்று அவர்களுக்கு எதிர்ப்பட்டது. "இந்தப் பாலைக்காட்டில் சீதை எப்படி நடக்கப்போகிறாள்?" என்று இராமர் வருந்தினார். ஆனால் இராமருடைய மகிமையால் அப்பாலை குளிர்ந்திருந்தது. மூவரும் சிரமமின்றி அப்பாலைவனத்தைத் தாண்டிச் சித்திரகூட பர்வதம் போய்ச் சேர்ந்தார்கள்.

இராமரின் சித்திரகூட வாசம்.

அந்தச் சித்திரகூடத்தில், முனிவர்களின் தவச்சாலைகள் பல நிறைந்திருந்தன. பற்பல மிருகங்களும் பறவைகளும் களிப்புற்றுச் சஞ்சரித்தன. அந்த விநோதங்களையெல்லாம் இராமர் சீதைக்குக் காட்டி அங்குள்ள முனிவர்களைக் கண்டு வணங்கி அவர்களால் உபசரிக்கப்பட்டுச் சந்தோஷமுற் றிருந்தார். இலக்குமணன் உடனே அங்கு ஒரு பன்னகசாலையைக் கட்டி முடித்தான். அதில் மூவரும் தங்கி யிருந்தார்கள்.

தசரதன் ஈமக்கிரியை.

இவர்கள் இப்படியிருக்க, வசிஷ்டர் ஆக்ஞைப்படி பரதனுக்கு ஓலைகொண்டு சென்ற தூதுவர்கள், கேகய

தேசம் போய்ச்சேர்ந்து பரதனைக்கண்டு சேவித்து நின்ருர்கள். அவன், அவர்களிடம் அயோத்தியிலிருக்கும் தன் தந்தை, தமையன் முதலியவர்களுடைய க்ஷேமங்களையெல்லாம் விசாரித்தான். அவர்கள், "எல்லோரும் க்ஷேமமாகவே யிருக்கிருர்கள்" என்று சொல்லி ஓலையை அவனிடம் கொடுத்தார்கள். அவன் திருமுகத்தைப் பார்த்தவுடன் சிறிதும் தாமதிக்காமல் அங்குள்ள தன் பாட்டன் முதலியவர்களிடம், விடை பெற்றுக்கொண்டு பரிவாரங்களோடு சத்துருக்கன் கூடவர, புறப்பட்டு ஏழு தினங்கள் வழியில் தங்கி எட்டாவது நாள் கோசலநாட்டில் வந்து சேர்ந்தான். அந்நாடு மிகவும் துக்ககரமாய்த் தோன்றியது. பரதன், "இதற்குக் காரணமென்ன?" என்று திகைத்தவனாய் அயோத்திக்குள் நுழைந்தான். அங்கும் அப்படியே துக்கம் குடிகொண்டிருந்தது. பரதன் சத்துருக்கனை நோக்கி, "தம்பி! என் நகரம் இப்படி மங்கள மிழந்திருக்கின்றது?" என்ருன். சத்துருக்கன், "அண்ணு! ஏதோ ஒருகாரணத்தால் இலக்குமி நம் நகரத்தை விட்டுப் போயிருக்கின்ருளென்பது தோற்றுகிறது" என்ருன். உடனே பரதன் இரதத்தை விட்டிறங்கி, "ஏதோ இங்கு விபரீதம் நடந்திருக்கின்றது" என்று சந்தேகித்துத் தன் தந்தையிருக்கும் அரண்மனைக்குப்போய் அங்குத் தசரதன் இல்லாமையால் மனங்கலங்கிக் கௌசலையின் மாளிகையை நோக்கி நடந்தான். அப்போது கைகேசி அவனைத் தன் மாளிகைக்கு அழைத்து வரும்படி தாதியை அனுப்பினுள். அவள் பரதனிடம் வந்து அவனைக் கைகேசி அழைப்பதாகக் கூறினுள். பரதன் உடனே திரும்பிக் கைகேசியின் அரண்மனைக்கேகி அவளைக் கண்டு நமஸ்கரித்தான். அப்போது கைகேசி அவனை நோக்கி, "குழந்தாய்! என் தாய், தகப்பன், தமக்கை, தங்கை முதலியவர்கள் க்ஷேமமா யிருக்கின்ருர்களா?" என்ருள். அதற்கு அவன்,

"எல்லோரும் சுகமாகவே யிருக்கின்றார்கள்; நான் என் தந்தையைக் கண்டு சேவித்துக் கொள்ளவேண்டும்; அவர் எங்கே யிருக்கின்றார்? விரைவிற்கூறு" என்றான். அப்போது கைகேசி கொஞ்சமும் வாடாத முகத்துடனே, "உன் தந்தை தெய்வலோகம் சென்றார்; நீ வருத்தப்படவேண்டாம்" என்று கூறினாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே பரதன் அடியற்ற மரம்போல் பூமியில் வீழ்ந்து, "ஆ! தந்தையே! போய்விட்டீரா! என் அண்ணாவாகிய ஸ்ரீ ராமருக்கு மகுடாபிஷேகம் செய்து, அச்சிறப்பைக் கண்குளிரக் காணாமல் நீர் பிரிந்துசென்றது நியாயமாகுமோ?" என்று பற்பல துக்ககரமான வார்த்தைகளைச் சொல்லிப் புலம்பினான். அப்போது கைகேசி, சில தேறுதலான வார்த்தைகளைக் கூறி அவனுடைய துயரத்தைச் சிறிது தணித்தாள். உடனே பரதன் எழுந்து தன் தாயைநோக்கி, "எனக்குத் தாயும் தந்தையும் தமையனும் ஸ்ரீ ராமரே; ஆதலின் அவரிடம் சென்று நான் என்னுடைய துயரங்களைச் சொல்லி ஆற்றிக் கொள்ளவேண்டும்" என்று சொல்லிவிட்டு நடந்தான். கைகேசி, "குழந்தாய்! இராமன் தன் மனைவியுடனும், தம்பி இலக்குமணனுடனும் காட்டிற்குப் போய்விட்டான்" என்றாள். பரதன் திடுக்கிட்டு, "ஆ! அவர் ஏன்காட்டிற்குச் சென்றார்? தகப்பனார் உயிருடனிருக்கும்போது சென்றாரா, இறந்தபின் சென்றாரா?" என்று அவளிடம் வினவினான். அவள் "உன் தந்தை உயிருட னிருக்கும்போதேதான் இராமன் சென்றான்" என்றாள். பரதன், 'அதற்குக் காரணமென்ன?' என்றான். கைகேசி, தன்னால் நடந்தவைகளையெல்லாம் ஒன்றொழியாமல் கூறித் தன்னுடைய சூழ்ச்சிக்குப் பரதன் சந்தோஷிப்பானென்று நினைத்தாள். ஆனால் அவன் அவளுடைய எண்ணப்படியில்லை. உடனே காங்களால் காதுகளை

மூடிக்கொண்டு, புருவங்கள் துடிக்க, மயிர்க்கால்களிலெல்லாம் நெருப்புப் புகை யெழும்ப, இதழ்களை மடித்துக் கடித்து, இரண்டுகைகளையும் பூமிமேல் அறைந்து, அடங்காக் கோபங்கொண்டு, கைகேசி அன்னையென்பதையும் நினையாமல், “அடிபாவி! என் செய்தாய்! அந்தோ! என் தமையனைக் காட்டிற்கோட்டித் தந்தையையும் கொன்றனையே; இத்தகைய கொலைகாரியாகிய உன் நாவை அறுத்து உன்னையும் நான் இப்பொழுதே கொலைசெய்ய வேண்டும்; ஆ! என் தமையனார் கோபிப்பாரென்றல்லவா அஞ்சிநிற்கின்றேன்; வன்னெஞ்சி! குலத்தைக் கெடுக்கவந்த கொடுநீலி! என் அண்ணன் இராமரையும் காட்டிற்கனுப்ப உனக்கு மனம் வந்ததே! ஐயோ! என் தந்தையிறந்துங்கூட உன் முகத்தில் விசனக்குறி யென்பதே தோற்றவில்லையே; நீ அற்ப வாழ்வை விரும்பி என்றும் தீராப்பழியைத் தேடிக் கொண்டாயே! அங்ஙனம் நீ தேடியபழி என்னையுமல்லவா சுற்றிக்கொள்ளும்; ஸ்ரீராகவர் நானும் உன் கருத்திற் கிசைந்திருப்பே னென்றுதானே நினைத்துக்கொள்வார்; அதனாலே தான் அவர் என்னைக்காண்பதற்கு முன்னரே காட்டிற் கேகி விட்டார்; பாவியாகிய உன் வயிற்றிற் பிறந்து நான் மகாபாதகத்திற் காளாகி விட்டேன்; இனி உன் முகத்தில் விழிக்கமாட்டேன்” என்று பலவாறு நிந்தித்து விட்டு,

“வில்லார் தோளான் மேவினன் வெங்கா னகமென்ன
* நல்லா னன்றே துஞ்சின னஞ்சே யனையாளைக்
கொல்லேன் மாயேன் வன்பழி யாலே குறைவுற்றேன்
அல்லே னேயா னன்புடை யார்போ லழுகின்றேன்”

என்று,

“இன்னண மினையன வியம்பி யானுமிப்
பன்னருங் கொடுமனப் பாவி பாலிரேன்

* நல்லான்-தசரதன்.

துன்னருந் துயர்கெடத் தூயகோசலை
பொன்னடி தொழுவெனென் றெழுந்து போயினான்.''

இவ்வாறு சென்ற பரதன் கௌசலையைக்கண்டு, அவளெதிரில் இடியேறுண்ட மரம்போலத் திடீரென்று பூமியில் வீழ்ந்து, "அன்னையே! என் தமையனும் காட்டிற் கேகத் தந்தையும் விண்ணுலகம் சென்றார்; இலக்குமியும் நகரத்தை விட்டுப்போயினள்; இந்தப் பரிதாபமான காட்சியைக் காண்பதற்கோ நான் இங்குவந்தேன்; என்னைப் பெற்றபாவியால் பழிக்காளான நான் எதற்காக உயிர் வைத்திருக்கவேண்டும்; நான் உயிருடனிருப்பின் இத்துயரம் என்னை வாட்டிவிடும்; ஆதலால், நான் உயிரைப் போக்கிக் கொள்கிறேன்" என்று பலவிதமாகப் புலம்பினான்.

கௌசலை அவனுடைய துக்கத்தைக்கண்டு, 'இவன் களங்கமற்ற மனதுடையவன்; இவனுக்குக் கைகேசி செய்த சூது தெரியாதுபோலும்' என்றெண்ணி அவன் முகத்தை நோக்கி "குழந்தாய்! நின்தாய் செய்த சூழ்ச்சிகளை நீ அறியாய்போலும்?" என்றனள். இதைக்கேட்டதும் பரதன் நோயிற்சிக்கிய சிங்கத்தைப்போலக் குமுறிப் பெருமூச்சு விட்டு, "அன்னையே! நான் ஒன்றையுமறியேன்; இங்கு வந்த பின்னரே நடந்தவைகள் எனக்குத் தெரியும்; நான், என் தாயின் சூதை முன்னரே உணர்ந்து அவளின் கொடுஞ்செயலுக் குடந்தையா யிருந்திருப்பேனாயின்,

"அறங்கெட முயன்றவன் அருளில் நெஞ்சினன்
பிறன்கடை நின்றவன் பிறரைச் சீறினோன்
மறங்கொடு மன்னுயிர் கொன்று வாழ்ந்தவன்
துறந்தமா தவர்க்கருந் துயரஞ் சூழ்ந்துளோன்.

குரவரை மகளிரை வாளிற் கொன்றுளோன்
புரவலன் உறுபொருள் * புனைவில் வாரினேன்
விரவலர் வெரிநிடை விழிக்க மீண்டுளோன்
இரவலர் அருநிதி யெறிந்து வௌவினேன்.

தழைத்ததண் டௌவினேன் தலைவ னல்லனென்
றழைத்தவன் அறநெறி அந்த ணாளரிற்
பிழைத்தவன் பிழைப்பிலா மறையைப் பேணலா
திழைத்தவன் பொய்யெனு மிழுதை நெஞ்சினேன்.

தாய்பசி யுழந்துயிர் தளரத் தான்றனிப்
பாய்பெரும் பாழ்வயி றளிக்கும் பாவியும்
நாயகன் படநடந் தவனு நண்ணுமத்
தீயெரி நரகத்துக் கடிது செல்க யான்.

தாளினி லடைந்தவர் தம்மைத் தற்கொரு
கோளுற வஞ்சினன் கொடுத்த பேதையும்
நாளினும் அறமறந் தவனு நண்ணுறும்
மீளரு நரகிடைக் கடிது வீழ்க யான்.

பொய்க்கரி கூறினேன் போருக் கஞ்சினேன்
கைக்கொளு மடைக்கலம் கரந்து வவ்வினேன்
எய்த்திடத் திடர்செய்தோன் என்றின் னோர்புகும்
மெய்க்கொடு நரகிடை விரைவின் வீழ்கயான்.

அந்தணர் உறையுளை அனலி யூட்டினேன் [ளோன்
மைந்தரைக் கொன்றுளோன் வழக்கிற் பொய்த்து
நிந்தனை தேவரை நிகழ்த்தி னேன்புகும்
வெந்துயர் நரகத்து வீழ்க யானுமே.

கன்றுயி ரோய்ந்துகக் கறந்து பாலுண்டோன்
மன்றிடைப் பிறர்பொருள் மறைத்து வவ்வினேன்
நன்றியை மறந்திடு நயமில் நாவினேன்
என்றிவர் உறுநர கென்ன தாகவே.

---

* புனைவில்-சிறப்புக் காலத்தில் ; அதாவது கலியாண முதலிய மங்கள காரியங்கள் நடக்கும்போது.

ஆறுதன் னுடன்வரு மஞ்சொல் மாதரை
ஊறுகொண் டலைக்கத்தன் உயிர்கொண் டேகினேன்
சோறுதன் அயலுளோர் பசிக்கத் துய்த்துளோன்
ஏறுமா கதியிடை யானு மேறவே.

* எஃகெறி செருமுகத் தேற்ற தெவ்வருக்
† கொல்கினன் உயிர்வதைத் தூண்ணு மாசையான்
‡ அஃகலில் அறநெறி ஆக்கி யோன்பொருள்
¶ வெஃகிய மன்னன்வீழ் நரகின் வீழ்கயான்.''

என்றும், இன்னும் பற்பல விதமாகவும் ஆணையிட்டுக் கூறி அவளுடைய பாதங்களிற் பணிந்தான். அதன்மேல் கௌசலை அவனைக் கட்டிக்கொண்டழுது, கைகேசி செய்த காரியங்களை யெல்லாம் சொல்லி, "அப்பா! துக்கிப்பதிற் பயனில்லை; யாவும் விதிப்படியே நடந்திருக்கின்றன; ஒருவர் மீதும் குற்றமில்லை; நீ அழாதே" என்று அவனைத்தேற்றி மேலும், "குழந்தாய்! உன் தந்தை இறந்து ஏழு தினங்கள் ஆய்விட்டன; ஆதலின், இனி நீ அவர் தேகத்திற்குச் செய்யத்தக்க ஈமக்கிரியைகளைச் செய்வாயாக" என்றனள். பரதன் ஒன்றும் சொல்லாமல் அழுதுகொண்டே யிருந்தான். அப்போது வசிஷ்டர் அங்கே வந்து அவனுக்குப் பல நீதிகளைக்கூறி அவனுடைய துக்கத்தை ஒருவாறு தணித்தார். அதன்மேல் பரதன் அம் முனிவருடனே, தந்தையின் தேகமிருக்கு மிடத்திற்குச் சென்றான். அவ்வுடம்பைக் கண்டதே பரதனுக்கு மீண்டும் துக்கம் அதிகரித்தது. அதனால் அவன் தந்தையின் தேகத்தைக் கட்டிக் கொண்டழுதான்.

பின்னர் அங்குக் கூடியிருந்த அரசர், அமைச்சர் முதலானோர் எல்லோரும் பரதனைப் பிரேதத்தினின்றும்

---

* எஃகு-வேல். † ஒல்கினன்-இளைத்தவன். ‡ அல்கலில்-குறைதலில்லாத. ¶ வெஃகிய-விரும்பிய.

விலக்கிவிட்டு அப்புண்ணிய தேகத்தை அலங்கரித்துப் பொன்விமானத்தி லேற்றிப் பல வாத்தியங்கள் முழங்கச் சகல சிறப்புக்களுடன் சரயு நதிக்கரையில் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். பிராமணர்கள் அங்கே நடக்கவேண்டிய காரியங்களை யெல்லாம் முறைப்படி முடித்துப் பரதனை நோக்கி, "நீர் உம் தந்தைக்குச் செய்யத்தக்க காரியங்களைச் செய்யும்" என்றார்கள். பரதன் எழுந்தான். அப்போது வதிஷ்டர் அவனை நோக்கி, "பரதா! உன் தாயால் நேர்ந்த துன்பத்தைச் சகிக்க முடியாமல், தசரதர் உன்னைத் தம் பிள்ளை யில்லையென்று கூறி யிருக்கின்றார்" என்றார். அதைக் கேட்டுப் பரதன், "அந்தோ! நான் தந்தைக்குப் பிரேத பூஜைகூடச் செய்தற்குத் தகுதியற்றவ னாயினேனே; நான் உலகில் இருந்தாவதென்?" என்று வருந்தினான். பின்னர் வதிஷ்டர் சத்துருக்கனைக் கொண்டு ஈமக்கிரியைகளை யெல்லாம் நடத்துவித்தார். தசாதனுக்குரிய அறுபதினாயிரம் ஸ்திரீகளும் அக்கினிப் பிரவேசமானார்கள். மற்ற எல்லோரும் திரும்பி நகரத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். ஈமக்கிரியைக்குப் பத்தாவது நாள் செய்யவேண்டிய உத்தரகிரியையும் நிறைவேறிற்று. அதன்மேல் ஒரு தினம் சுமந்திரன் முதலிய மந்திரிகளும், இராஜாக்களும், வதிஷ்டரும் பரதனிடம் வந்து குழுமினார்கள்.

பரதன் இராமரைத் தேடிச்செல்லல்.

மேற்கூறியபடி எல்லோரும் வந்து கூடியபின் வதிஷ்டர் பரதனை இராஜ்ஜிய பட்டாபிஷேகம் செய்துகொள்ளும்படி வேண்டினார். பரதன், "சுவாமி! முன்னவர் இருக்கப் பின்னவன் பட்டந்தரித்தல் எம் குலமுறைக் கிழிவாகும்; நான் ஒருபோதும் அரசுரிமையை ஏற்றுக்கொள்ளமாட்டேன்; நானே சென்று என் தமையனாரை அழைத்துக்

கொண்டு வருகிறேன்; அவருக்கே பட்டங்கட்டலாம்; அவர் இங்கே வருவதற்கு மறுத்துவிட்டால் நான் மடிவேன் ; இஃதுறுதி" என்றான். இதைக்கேட்டு எல்லோரும் பரதனுடைய உத்தம குணத்திற்காக அவனை வாழ்த்தினார்கள். அதன்மேல் பரதன் இராமரைக் காணும் பொருட்டு நகரை விட்டுப் புறப்பட்டுத் தன் பரிவாரங்களுடனே மரவுரிதரித்துச் சத்துருக்கனையும் அழைத்துக்கொண்டு இரதத்திலேறிச் சென்றான். கோட்டைவாயிலைக் கடந்தபோது, எல்லாக் கலகங்களுக்கும் மூலமாயிருந்த மந்தரையென்னும் கூனியும் ஜனங்களுடன் சென்றாள். அவளுடைய செய்கை பரதனுக்கும் சத்துருக்கனுக்கும் தெரியுமாதலால் அவளைக் கண்டதும் சத்துருக்கன், 'இந்தக் கூனி இப்பொழுதும் சகுனத்தடையாய் வருகின்றாளே' என்று கோபித்து அவளைப் பிடித்து ஒரே அறையாக அறைந்துவிடப் போனான். பரதன், " அண்ணா கோபித்துக்கொள்வார் ; இவளை ஒன்றும் செய்யாதே" என்று அவனைத் தடுத்துவிட்டான். அதன்மேல் எல்லோரும், இராமர் நகரத்தை விட்டு வெளியேறி முதலில் தங்கியிருந்த சோலையிற் போய்ச் சேர்ந்தார்கள். இராமர் தங்கியிருந்த அடையாளங்களையெல்லாம் பார்த்துப் பரதன் கண்ணீர்விட்டழுது, ஆகாரமொன்று முட்கொள்ளாமல், இராமர் படுத்திருந்த தருப்பா சயனத்தின் ஓரத்தில் புழுதியில் படுத்திருந்து, அங்கிருந்து இராகவர், கால் நடையாகச் சென்றாரென்பதை யுணர்ந்து தானும் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுக் கால் நடையாகவே சென்றான்.

குகன், பரதனைக்காணல்.

மேற்கூறியவாறு சென்ற பரதன், பற்பல விடங்களையுந் தாண்டிக் கங்கையின் சமீபத்திற் போய்ச் சேர்ந்தான்.

அப்போது கங்கையின் அக்கரையில் தன் படைகளுடன் நின்ற குகன், மிகுந்த சேனையுடனே சென்ற பரதனைக் கண்டு, அவன், இராமரோடு சண்டைதொடுக்க வருகிறானென்று தப்பபிப்பிராயங் கொண்டு, தன் வீரர்களை நோக்கி, "இதோ வருகிறவன் இராமருக்குத் தீங்குசெய்ப வருகின்றான்; இவனைக் கொன்று இராமருக்கே இராஜ்ஜியத்தை ஸ்தாபித்துவிடவேண்டும்; நீங்கள்எல்லோரும் யுத்தத்திற்கு ஆயத்தமாயிருங்கள்" என்று சொல்லிக் கோபத்துடனே பரதனைப்பார்த்தபடியே நின்றான். அவன் நிற்பதைக்கண்ட சுமந்திரன் பரதனை நோக்கி, அவனுக்குக் குகனைச் சுட்டிக் காட்டி, "அதோ கங்கையின் தென்கரையில் நிற்பவன், இக்கங்கையில் ஓடம் விடுகிறவன்; அவன் இராமர்மீது மிக்க விசுவாசமாயிருப்பான்; தங்களைக் காணவேண்டுமென்னும் ஆவலோடு இத்திசை நோக்கி நிற்கின்றான்" என்றான். பரதன், "அப்படியானால் நானேபோய் அவனைக் காணுகின்றேன்" என்று சத்துருக்கனுடன் கங்கைக் கரையோரத்தில் போய் நின்றான். அப்போது குகன் அவனுடைய இளைத்த திருமேனியையும், மரவுரியையும் நீரொழுகும் கண்களையும், சத்துருக்கனது வடிவத்தையும் கண்டு, "ஓகோ! இவர்கள் இராமருக்குத் தீங்குசெய்ய வருகிறார்களென்று நாம் நினைத்தது தவறு; இவர்கள் இராமர்மீது மிக்க விசுவாசமுடையவர்களாய் விளங்குகின்றார்கள்" என்று அவர்கள்மீது அன்புடையவனாய்த் தான் மாத்திரம் ஓடத்திலேறி வடகரைக்குச் சென்று பரதனைக் கண்டு வணங்கினான். பரதன் குகனைத் தழுவிக்கொண்டான். அப்போது குகன், "நீர் எதன்பொருட்டு இங்கே புறப்பட்டு வந்தீர்?" என்றான். அதற்குப் பரதன், "என் தமையனாரை அழைத்துச்செல்ல நான் வந்தேன்" என்றான். குகன் "உத்தமகுணங்களில் இராமரும் உனக்கு நிகராகமாட்டார்" என்று அவனைப்

புகழ்ந்து கொண்டாடினன். அதன்மேல் பரதன், தென்றிசை நோக்கிச்சேவித்து, "தமையனார் இங்கேவந்திருந்தபோது எவ் விடத்தில் தங்கினர்?" என்றான். குகன், இராமர் படுத்திருந்த புல் மெத்தையைக் காட்டினன். பரதன் அதைப் பார்த்து விம்மி அழுது, "இலக்குமணன் எங்கே யிருந்தான்?" என் றான். அதற்குக் குகன், "இலக்குமணர் இரவு முழுதும் தூக்க மின்றி இங்கே காவல்புரிந்து நின்றார்" என்று அவன் நின்ற விடத்தைக் காட்டினன். அப்போது பரதன், "அந்தோ! இராமருக்குரிய தம்பிமார்களுள் நான் அவருக்குத் துன் பத்தை விளைவிப்பதற் கேதுவாயிருந்தேன்; இலக்குமணன் அதனைத் தீர்த்தற் குரியவனானன்" என்று ஆற்றொணாத் துக்கத்தை அடைந்து அன்றிரவு அவ்விடத்திலே புழுதியிற் படுத்திருந்து விடிந்தபின் தன்னையும் தன்னைச் சார்ந்தவர் களையும் அக்கரைக்குக் கொண்டு போகும்படி குகனை வேண் டினன். அவன் அவ்வாறே பரதனைச்சார்ந்தவர்களிற் பலரை முதலில் பல ஓடங்களிலேற்றிக் கங்கையின் தென்கரையில் கொண்டுபோய்ச் சேர்க்குமாறு தன்னைச் சார்ந்த சிலருக்கு ஆக்ஞாபித்தான். அவர்கள் அவ்வாறே அவர்களைக் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். பின்னர் குகன், பரதனையும் அவ னுடைய தாய்மார்களையும் தன்னுடைய ஓடத்தில் ஏற்றிக் கொண்டு போனன். அப்போது,

"சுற்றத்தார் தேவரொடுந் தொழநின்ற கோசலையைத்
தொழுது நோக்கி
வெற்றித்தார்க் குரிசிலிவ ராரென்று குகன் வினவ
வேந்தர் வைகும்
முற்றத்தான் முதற்றேவி மூன்றுலக மீன்றானை
முன்னீன் றானைப்
பெற்றத்தாற் பெறுஞ்செல்வம் யான்பிறந்த லாற்றுறந்த
பெரியா ளென்றான்."

இவ்வாறு பரதன் கூறியவுடனே குகன் அவனுடைய பாதங்களிற்பணிந்து இராமர் பிரிவைக் குறித்துக் கண்ணீர்விட்டழுதான். மேற்கூறியபடி பரதன் கௌசலையை இராமருடைய தாய்,

"என்றலுமே யடியின்மிசை நெடிதுவீழ்ந் தழுவானை
யிவன்யா ரென்று
கன்றுபிரி காராவின் றுயருடைய கொடிவினவக்
கழற்கால் மைந்தன்
இன்றுணைவ னிராகவனுக் கிலக்குவற்கு மிளையவற்கு
மெனக்கு மூத்தான்
குன்றனைய திருநெடுந்தோள் குகனென்பா னிந்நின்ற
குரிசி லென்றான்."

கௌசலை, "மகனே! இராமன் காட்டிற்குவந்தது நலமேயாயிற்று; அவன் இங்குவந்ததனாலன்றோ இந்தக் குகனுடைய சகோதரத்துவம் உங்களுக்கு உண்டாயிற்று; இனி, இராமனும் இக்குகனும், இலக்குமணனும், நீயும், சத்துருக்கனும் ஒற்றுமையாக நெடுங்காலம் வாழ்வீராக" என்று வாழ்த்தினாள். பின்னர் குகன் சுமித்திரையையும் யாரென்று வினவித் தெரிந்துகொண்டு கைகேசியைச் சுட்டிக்காட்டி "இவள்யார்?" என்று பரதனிடம் கேட்டான். அவன் மனம் கொதித்து, "என்றும் தீராப்பழிக் காளாகிநின்றவள் இவளே; என்னைப் பெற்றதாய்" என்றான். குகன் அவளையும் தாயென்றே நினைத்து வணங்கினான். அதன் மேல் எல்லோரும் கங்கையைக் கடந்திறங்கினார்கள். பரதன் சேனைகளுடன், இராமர் போயிருக்கும் திசையை நோக்கிச் சென்றான். குகனும் அவனைப் பிரிந்திருக்கமுடியாமல் அவனுடனே சென்றான். எல்லோரும் பாரத்துவாசர் ஆச்சிரமம்போய்ச் சேர்ந்தார்கள். அவர் இவர்களை எதிர்கொண்டழைத்து, உபசரித்தார். சகலரும் அன்றிரவு

அங்கே தங்கி மறுதினம் விடிந்தவுடன், அம்முனிவரிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டு இடையில் எதிர்ப் பட்ட பாலை நிலத்தைக் கடந்து சித்திரகூட பர்வதத்திற் குச் சமீபத்திற்போய்ச் சேர்ந்தார்கள்.

இராமர் பரதன் முதலிய சுற்றத்தாரைக் கண்டு நீங்குதல்.

சித்திரகூடபர்வதத்தில் இராமருடனே யிருந்த இலக்குமணன், பரதனும் சேனைகளும் வருவதைக்கண்டு ஒரு குன்றின் மேலேறி நின்று, 'இச்சேனை யாருடையது?' என்று ஆராய்ந்து பார்த்தான். அப்போது பரதனே தன் சேனைகளுடன் வருகின்றானென்பது அவனுக்குத் தெரிந்தது. அதனால், அவன், "பரதன், இராமரோடு யுத்தம் புரிய வருகின்றான்" என்று நினைத்து, மிகுந்த கோபத்துடனே அக்குன்றை விட்டுக் குதித்து, இராமருக்கெதிரில் வந்து நின்று, "அண்ணா! பரதன், தன் தாயின் வஞ்சனைக்கிணங்கியவனாய்ச் சிறிதேனும் நம் குலவொழுக்கத்தைக் கருதாமல் உம்முடனே யுத்தம் புரியப் படைகளுடன் வருகின்றான்; சகோதரத் துரோகியாகிய இவனை நான், இமைப்பொழுதில் எமனுலகுக் கனுப்புகிறேன்" என்று ஆயுதத்தைக் கையிலேந்தி வீராவேசத்துடன் வஞ்சினங் கூறினான்.

அப்போது சாந்தமூர்த்தியாகிய இராமர், அவனை நோக்கி, "இலக்குமணா! அவசரப்படாதே; நம் குலத்தவர் தருமநெறி தவறமாட்டார்கள்; நீ நினைக்கிறபடி பரதன் நமக்கொருபோதும் இடையூறியற்றான்; அவன் நம்மீது வைத்திருக்கும் அந்தரங்க பக்தி நமக்குத் தெரியும்; அதனை நீ உணர்ந்திருந்தும் என்னிடத்துள்ள பக்தியால் இங்ஙனம் அவசரமாக அவன்மீது தோஷங் கற்பித்துவிட்டாய்; அறிவுடையவர்கள் எதையும் பொறுமையுடன் ஆலோசித்துச் செய்யவேண்டும்; அவன் நன்மைகுறித்தே நம்மிடம் வரு

வான்; சிறிது நேரத்திற்குள் அவனுடைய இயற்கையை நீ தெரிந்துகொள்வாய்; சற்றுப் பொறுமையுடனிரு" என்று கூறி அவனுடைய சீற்றத்தைத் தணித்தார்.

பரதன், அத்தருணத்தில், தன்னுடைய சேனைகளை யெல்லாம் பின்னே வரச்செய்துவிட்டுச் சத்துருக்கன் தனக்குப் பின்னேவர, தான் இருகரங்களையும் சிரசிற் சேர்த்துக் குவித்துக்கொண்டு கண்ணீர் சோரத் துயரமே ஒரு வடிவெடுத்து வருவது போல, "அண்ணா! அண்ணா!!" என்று கதறிக்கொண்டு கால்கள் தள்ளாட, இராமர் இருக்கும் திக்கைநோக்கி முன்னே ஓடிவந்தான். அவனுடைய கோலத்தைக் கண்ட இராமர் மனங்கரைந்து இலக்குமணனை நோக்கி, "தம்பி! யுத்தத்திற்குவரும் பரதன் கோலத்தைப் பார்" என்றார். இலக்குமணன், பரதனுடைய பரிதாப நிலைமையைப் பார்த்து, "அந்தோ! இத்தகைய புண்ணிய புருஷன்மீது, நான் அறியாமையால் நிந்தை கூறினேனே!" என்று அனலிடு மெழுகுபோல் மனமுருகி, கையிலிருந்த வில்லை நழுவவிட்டுக் கண்ணீர் சோர விம்மியபடியே நின்றான். அப்போது, ஓடிவந்தபரதன், இராமர் சமீபத்திற்போய், "சுவாமி! அடியேனைத் துயர்க்கடலிற் சுழலவிட்டு, எல்லாவற்றையுந்துறந்து இப்படி வந்துவிடலாமோ!" என்று அடியற்ற மரம்போல் அவரடியில் வீழ்ந்து மூர்ச்சை யடைந்தான். இராமர் என்செய்வார்? பரதனுடைய உள்ளன்பானது அவருடைய உள்ளத்தை உருக்கிவிட்டது. அதனால் அவர், "அந்தோ! பரதனுக்கு உயிர் போய்விட்டதோ நிலைத்திருக்கின்றதோ" என்று திடுக்கிட்டுக் கண்கலங்கி இரண்டு கரங்களாலும் அவனை வாரியெடுத்து மார்போடணைத்துக் கண்ணீரால் அவன் தேகத்தை நனைத்து, அவனை நோக்கி, "தம்பி பரதா! துக்கத்தை விட்டுவிடு;

தந்தையார் சுகமா யிருக்கின்றாரா ?" என்றார். அதைக்கேட்டதே பரதன் பெருமூச்செறிந்து, "ஐயோ! அண்ணா! என் சொல்வேன்! என் அன்னையாகிய கூற்றுவனாலும், உம்முடைய பிரிவாற்றாமையாலும் அவர் விண்ணுல கடைந்தார்" என்றான்.

"விண்ணிடை யடைந்தன னென்ற வெய்யசொல்
புண்ணிடை யயிலெனச் செவி புகாமுனம்
கண்ணொடு மனஞ்சுழல் கறங்கு போலவாய்
மண்ணிடை விழுந்தனன் * வானி னும்பரான்"

அங்ஙனம் வீழ்ந்த இராமர் உணர்வற்றவராய் மூர்ச்சையடைந்து மயங்கிச் சிறிதுநேரஞ்சென்று தெளிந்து, தந்தையிறந்த துயர் சகிக்க முடியாதவராய்ப் புலம்பத் தொடங்கி,

"தேனடைந்த சோலைத் திருநாடு கைவிட்டுக்
கானடைந்தே னென்னத் தரியாது காவலநீ
வானடைந்தா யின்ன மிருந்தேனான் வாழ்வுகந்தே
ஊனடைந்த தெவ்வ ருயிரடைந்த வொள்வேலோய்.

சொற்பெற்ற நோன்பின் றுறையோ னருள் வேண்டி
நற்பெற்ற வேள்வி நவைநீங்க நீயியற்றி
எற்பெற்று நீபெற்ற தின்னுயிர்போய் நீங்கவோ
கொற்பெற்ற வெற்றிக் கொலைபெற்ற கூர்வேலோய்.

மன்னுயிர்க்கு நல்குரிமை மண்பார நான்சுமக்கப்
பொன்னுயிர்க்குந் தாரோய் பொறையுயிர்த்த வாறிது
உன்னுயிர்க்குங் கூற்றா யுலகாள வுற்றேனோ [வோ
மின்னுயிர்க்குந் தீவாய் வெயிலுயிர்க்கும் வெள்வேலோய்.

வேண்டுந் திறத்தாரும் வேண்டா வரசாட்சி
பூண்டிவ் வுலகுக் கிடர்கொடுத்த புல்லனேன்

---

* வானின் உம்பர்-விண்ணில் மேலானது; அதாவது முத்தி; அதனையுடையான்-இராமன்.

மாண்டு முடிவதல்லால் மாயா வுடம்பிதுகொண்
டாண்டு வருவதினி யார்முகத்தை நோக்கவே.

நந்தா விளக்கனைய நாயகனே நானிலத்தோர்
தந்தாய் தனியறத்தின் தாயே தயாநிலயே
எந்தா யிகல்வேந்த ரேறே யிறந்தனையே.
அந்தோ வினிவாய்மைக் காருளரே மற்றென்றார்.''

இவ்வாறு இராமர், பிரலாபிக்கும்போது பாதன் முதலிய தம்பிமார்களும், மற்ற அரசர்களும் அவரைத் தூக்கி அவருக் குள்ள களைப்பை ஆற்றினார்கள். அநேகம் முனிவர்களும் அமைச்சர்களும் சூழ்ந்து அவருக்குத் தேற்ற மொழிகளைக் கூறினார்கள். அப்போது வதிஷ்டர் அவரை நோக்கி, "இராமா!

"துறத்தலு நல்லறத் துறையு மல்லது
புறத்தொரு துணையிலைப் பொருந்து மன்னுயிர்க்
கிறத்தலும் பிறத்தலு மியற்கை யென்பதை
மறத்தியோ மறைகளின் வரம்பு கண்டநீ?

பெறுவதன் முன்னுயிர் பிரிதல் காண்டியால்
மறுவறு கற்பினில் வையம் யாவையும்
அறுவதி னாயிர மாண்டு மாண்டவன்
இறுவது கண்டவற் கிரங்கல் வேண்டுமோ?

சிலமூன் தருமமூஞ் சிதைவில் செய்கையும்
சூலமூர் திகிரியுஞ் சொல்லுந் தாங்கிய
மூலம்வர் துதவிய மூவர்க் காயினும்
காலமென் றொருவலை கடக்க லாகுமோ?

மேலும் உன்னுடைய தந்தை வைகுண்டப்பதவி யடைந்து நித்திய சுகம்பெற் றிருக்கின்றனரேயன்றித் துன்பமுற வில்லை. ஆதலின், அவர்பொருட்டு நீ துயருறுதே; இனி விசனத்தை விடுத்து உன் தந்தைக்கியற்றத்தக்க கடனைச் செய்வாயாக" என்றனர்.

இராமர், அவ்வாறே மனந்தேறிச் சகலரும் புடைசூழத் தடாகத்திற்சென்று ஸ்நானம் செய்து வஸிஷ்டர் சொற்படி தந்தைக்கு மூன்றுகை ஜலம்விட்டு சாஸ்திரவிதிப்படி செய்ய வேண்டிய கருமங்களை யெல்லாம் முடித்து ஜானகியிருக்கும் பன்னசாலைக்குச் சென்றார். அங்கே சீதை, பரதேசியைப் போல் தனித்திருப்பதைக் கண்ட பரதன், ஆற்றொணுத் துயரமுற்றுக் கரங்களாலே முகத்தில் மோதிக்கொண்டு அவளுடைய பாதார விந்தத்தில் வீழ்ந்து புலம்பினன். சீதை, தன் மாமன் இறந்ததை யுணராதிருந்தும், அவன் புலம்புவதை நோக்கி அதற்குக் காரணத்தை யுணராதவளாய்த் தானும் கண்கலங்கி அழுதாள். அப்போது இராமர் தன் தந்தையிறந்த செய்தியை அவளுக்குக் கூறினர். அவள் திடுக்கிட்டுக் கலங்கிப் பலவாறு புலம்பினள். அநேகம் தாபத மடந்தையர் அவளைத்தேற்றி நீராட்டுவித்து இராமர் பக்கத்தில் கொண்டுவந்து சேர்த்தார்கள். அதன்மேல் பின்னல் வந்த தாய்மார்களும், நகர மாந்தரும் இராமரிடம் வந்து சேர்ந்தார்கள். அப்போது இராமர், தாய்மார்களைக் கண்டு கிலேசமுற்றுத் துக்கமான வார்த்தைகளைக் கூறிப் புலம்பினர். அவர்களும் அடக்கமுடியாத துயரத்தோடு இராமரைக் கட்டிக்கொண்டழுதார்கள். அவர்கள் புலம்புவதைக்கண்டு அங்குக் கூடி நின்ற எல்லோரும் கண் கலங்கினர்கள். சீதை மாமிமார்களைக் கண்டதும் அவர்களுடைய பாதங்களில் வீழ்ந்தழுதாள். அவர்களும் அவளைக் கட்டிக் கொண்டு பிரலாபித்தார்கள். மந்திரி பிரதானிகளும் புலம்பினர்கள். நகர மாந்தர்களும் கதறினர்கள். பின்னர் வஸிஷ்டர் முதலிய பெரியோர்கள் தேற்ற எல்லோரும் விசனந் தணிந்து தெளிவடைந் திருந்தார்கள். சூரியாஸ்தமன மாயிற்று. யாவரும் அன்றிரவு அங்கே தங்கி யிருந்தார்கள்.

மறுநாள் சூரியோதயமானதும் எல்லோரும் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு ஓரிடத்தில் கூடினார்கள். அப்போது இராமர் பரதனை நோக்கி, "தம்பி! தந்தையார் உனக்கே இராஜ்ஜியத்தை அளித்து விண்ணுலக கடைந்திருக்க, நீ அதனை யேற்றுக் கொள்ளாமல் தவவடிவந் தாங்கி இங்கே வந்ததற்குக் காரணமியாது?" என்று வினவினார். அதற்குப் பரதன், "சுவாமி! நம் குலத்தில் மூத்தவரிருக்க இளைஞர் அரசியற்றுதல் நீதியாகாது;

'நிறையி னீங்கிய மகளிர் நீர்மையும்
பொறையி னீங்கிய தவமும் பொங்கருட்
டுறையி னீங்கிய வறமுந் தொல்லையோர்
முறையி னீங்கிய வரசின் முந்துமோ'

மேலும், தந்தையிறக்க, நீர் காட்டிற்கேக, நான் நகரத்திலிருந்து அரசாண்டால், என்னைப்போன்ற பாவியர் உலகில் எவருமிரார்; ஆதலின், நான் ஒருபோதும் அரசுரிமையை ஒப்புக்கொள்ள மாட்டேன்; தாங்களே அதனை யேற்றுக் கொள்ள வேண்டும்" என்றான். இராமர், "சகோதரா! நீ நீதியை உணராது பேசுகின்றாய்;

'முறையும் வாய்மையும் முயலு நீதியும்
அறையு மேன்மையோ டறனு மாதியாம்
துறையும் யாவையுஞ் சுருதி நூல்விடா
இறைவ ரேவலா வியைவ காண்டியால்.

பரவு கேள்வியும் பழுதில் ஞானமும்
விரவு சீலமும் வினையின் மேன்மையும்
உரவி லோய்தொழற் குரிய தேவரும்
குரவ ரேயெனப் பெரிது கோடியால்.

அந்த நற்பெருங் குரவ ராரெனச்
சிந்தை தேர்வுறத் தெரிய நோக்கினால்

தந்தை தாயரென் றிவர்க டாமலால்
எந்தை கூறவே றெவரு மில்லையால்.

தாய்வ ரங்கொளத் தந்தை யேவலால்
மேய நங்குலத் தரும மேவினேன்
நீவ ரங்கொளத் தவிர்த னீர்மையோ
ஆய்வ ரும்புலத் தறிவு மேவினாய்.'

பிள்ளைகள் தாய்தந்தையர் சொற்படி நடத்தலே உயர்ந்த நீதி. ஆதலின், தந்தை தாயர் உரைப்படி நீ அரசுரிமையைத் தாங்க மறுக்காதே" என்றார். அதற்குப் பரதன், "சுவாமி! நான் தந்தையார் கட்டளைப்படியே அரசை யேற்றுக்கொண்டேன். அவ்வாறு ஏற்றுக்கொண்டு எனக்குச் சொந்தமாயிருக்கும் அதனை இப்பொழுது உமக்களித்து விட்டேன். ஆதலின், இனியாவது அவ்வுரிமையை நீர் ஒப்புக்கொள்ளும்" என்றான். இராமர், "பரதா! என்மீ தேற்பட் டிருக்கும் அன்பினாலே நீ இவ்வாறு கூறுகின்றாய்; நீயே அரசை எனக்களிப்பதாயிருந்தாலும், அதனை யேற்றுக்கொண்டால், தந்தை சொற்படி நான் பதினான்கு வருடங்கள் வனவாசஞ் செய்தல் இல்லாமற் போய்விடும்; அதனால், நான் தந்தை கட்டளையை மீறியவனாவேன்; என்னை நீ அவ்வித அநீதிக் குட்படுத்துவது தகாது; இன்னும் தமையன் சொல்லைத் தம்பி தட்டாதிருத்தல் நீதியிற் சிறந்ததாகும்; அந்நீதியைக் கடைப்பிடித்து என் வார்த்தையை நீ மறுக்காதிருப்பாயாக" என்றார். இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த வசிஷ்டர் பரதன் பேசுவதை நிறுத்திவிட்டு இராமரை நோக்கி, "இராமா! இம்மை மறுமைப் பயன்களை அளிப்பது வித்தை; அந்த வித்தையைக் கற்றுக் கொடுத்தவன் எவரினும் சிறந்தவனாவான்; அவன் சொல்லை எவரும் தட்டுதல் கூடாது; ஆதலின் உனக்கு வித்யா குருவாகிய நான் இராஜ்ஜியத்தை யேற்றுக்கொள்

ளும்படி உன்னை வேண்டுகிறேன்; நீ தடை செய்யாமல் அதனை யேற்றுக்கொள்" என்றார். அதைக்கேட்டதும் இராமர் புன்சிரிப்புடன், "சுவாமி! குருவின் வார்த்தையைக் கடக்கக் கூடாதென்பது உண்மைதான். ஆயினும், ஒருவன் சொன்ன வாக்குத் தவறுதல் நீதியாகுமோ? நான் 'பதினான்கு வருடங்கள் வனவாசஞ் செய்து திரும்புவேன்' என்று சொல்லி வந்தபிறகு, நகரத்திற்குத் திரும்பினால், என்னை அறிஞர் பழிக்கமாட்டார்களா? இதனைத் தாங்களே யோசித்து எனக்கோர் கட்டளை யிடவேண்டும்" என்றார். வதிஷ்டர், இதற்கொன்றும் விடையளிக்க முடியாதவராய்ப் பேசாமலிருந்து விட்டார். அதன்மேல் பரதன், "எவரேனும் இராஜ்ஜியத்தை ஆளட்டும்; அடியேன் உம்முடனே ஆரணியத்திற்கு வருவது நிச்சயம்" என்று இராமருக் கியம்பினான்.

அப்போது தேவர்கள், "பரதன் ஒரே பிடிவாதமாயிருந்து இராமரை அயோத்திக் கழைத்துப்போய் விடுவானாயின், இராக்ஷஸ சம்மாரம் முடிவுபெற்று, நம்முடைய துன்பந்தீராது; ஆதலின், எப்படியாவது இராமரை வனத்திற் கேகும்படி செய்யவேண்டும்" என்று ஆலோசித்து, விண்ணிலிருந்தபடியே, "இராமர் பதினான்கு வருடங்கள் வனவாசஞ்செய்து தந்தை வாக்கிய பரிபாலனம் பண்ண வேண்டும்; பரதனே அரசாளவேண்டும்" என்று அசரீரி வாக்குண்டாகும்படி செய்தார்கள். உடனே இராமர் பரதனை நோக்கி, "தம்பி! அசரீரி வாக்குண்டானதைக் கேட்டனையா! நாம் எதைத்தட்டினாலும் இத்தெய்வவாக்கைத் தட்டலாகாது; ஆதலின், நீ சென்று அரசு புரிவாயாக" என்று அவனுடைய கரங்களைப் பிடித்துக்கொண்டு வேண்டினார். பரதன் ஒன்றும் சொல்லாமல் விம்மியழுது கொண்டு இராமரை நோக்கி, "அண்ணா! உம்முடைய கட்டளையைச் சிரசாக வகிக்கின்றேன்; ஆனால், நான் பட்டந்

தரித்துக்கொள்ள மாட்டேன்; உம்முடைய பாதுகையை எனக்களிக்கவேண்டும்; நான் அதற்கே பட்டாபிஷேகம் செய்து அதனடியிலிருந்து இராஜகாரியங்களை நடைபெறச் செய்வேன்; பதினான்கு வருடங்கள் சென்றதும், தாம் வந்து இராஜாதிகாரத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்; இன்றேல் நான் அக்கினிப் பிரவேச மாய்விடுவேன்" என்றான். இராமர் பரதனைத் தழுவி, "என் அருமைச் சகோதரா! அங்ஙனமே நீ விரும்பியதைச் செய்வாயாக" என்று பாதுகையை அவனிட மளித்தார். பரதன் அதை வாங்கி 'இதுதான் எனக்கு மகுடம்' என்று சிரசிலே சூட்டிக் கொண்டு கண்ணீர் மல்க இராமருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி அவரிடம் விடைபெற்றுக்கொண்டு திரும்பித் தன் தாய்மார்களுடனும், தம்பி சத்துருக்கனுடனும் அயோத்தி நோக்கிச் சென்றான். மற்ற முனிவர், அரசர் முதலியவர்களும், குகனும் அங்ஙனமே விடை பெற்றுத் தங்கள் தங்கள் இருப்பிடங்கட்குச் சென்றார்கள்.

அதன்மேல் பரதன், கங்கையைக்கடந்து, அயோத்திக்குள் நுழையாமல் நந்திக்கிராமம் என்னுமிடத்தில் தங்கி, இராமருடைய பாதுகைக்குப் பட்டாபிஷேகம் செய்து, இராஜ காரியங்களைச் செவ்வனே நடக்கும்படி செய்துவிட்டு, தான் ஐம்புலாதிகளையும் அடக்கி இரவிலும் பகலிலும் நித்திரையின்றிக் கண்ணீர்வடித்துத் தென்றிசையை நோக்கியபடியே 'இராமர் எப்பொழுது வருவாரோ' என்ற தியானத்துடனே யிருந்தான். சித்திர கூடத்திலிருந்த இராமர், "இங்கிருந்தால் நம்மவர் அடிக்கடி வந்து நமக்கு மனோவேதனையை உண்டாக்குவார்கள்" என்று இலக்குமணனையும், சீதையையும் அழைத்துக் கொண்டு அவ்விடத்தை விட்டுத் தென்றிசை நோக்கிப் போயினார்.

ஆரணியகாண்டம்.

——(o)——

விராதன் வதை.

மேற்கூறியபடி சென்ற இராமர், சிறிது தூரங்கடந்து அத்திரி முனிவரின் ஆச்சிரமத்தை யடைந்து அவரைக் கண்டு வணங்கினர். அவரும் அவர் பத்தினியாகிய அநுசூயா தேவியும், இராமலக்குமணர்களையும், சீதையையும் ஆசிர்வதித்து உபசரித்தார்கள். இராமர் முதலியோர் அன்றிரவு அங்கே தங்கியிருந்து, மறுநாள் விடிந்த பின்னர் அம்முனிவரிடத்து விடை பெற்றுக் கொண்டு தண்டகாரணியம் நோக்கி நடந்தார்கள்.

அவ்வாறு செல்லும்போது வழியில், விராதன் என்னும் ஓர் இராக்ஷதன், ஆகாரத்தின் பொருட்டு அநேகம் யானைகளையும், சிங்கங்களையும் பிடித்து ஒரு காத்தில்வைத்துக் கொண்டு, மற்றொரு காத்திலே சூலாயுதத்தைத்தாங்கி, மிக்க பயங்கரமான கர்ச்சனையுடனும், விகார வடிவத்துடனும் ஓடிவந்து ஓர் இமைப்பொழுதில் சீதாதேவியைத் தூக்கிக்கொண்டு ஆகாயத்திற் பறந்து போயினன். அதுகண்டு இராமரும், இலக்குமணனும் மிக்க கோபங்கொண்டு வில்லில் கணையைத் தொடுத்து, அவனை நோக்கி "யுத்தஞ்செய்ய அஞ்சி யோடுகின்ற பேடியே நில்" என்று பூமியில் நடந்தபடியே அவன் சென்ற திக்கில் அவனைத் தொடர்ந்து சென்றார்கள்; அப்போது விராதன் அவர்களை நோக்கி, "நான் பிரமாவினிடம் வரம்பெற்றவன்; உங்களுடைய சாமர்த்தியம் என்னிடத்திற் செல்லாது; எனக்குபயோகமாகும்பொருட்டு நீங்கள் இந்தப் பெண்ணைக் கொண்டுவந்த உபகாரத்தை யெண்ணி, உங்களைக் கொல்லாமல் விடுத்தேன்; நீங்கள்

உயிர் தப்பிப்போய் விடுங்கள்" என்றான். இதைக்கேட்டு இராமர் நகைத்து, "அடா! உன்னை நிமைப் போதில் நான் எமனுலகுக் கனுப்புகிறேன் பார்" என்று வில்நாரியை இழுத்துக்விட்டுக் குணத்தொனி பண்ணினர். அதைக் கேட்டவுடன் விராதன் திடுக்கிட்டுச் சீதையைப் பூமியில் விட்டு மிகுந்த கோபத்துடனே சூலத்தை இராமர் மீது பிரயோகித்தான். இராமர் ஓர் அஸ்திரத்தால் அதனைத் துண்டித்து விட்டார். விராதன் அநேகம் பர்வதங்களைப் பெயர்த்தெறிந்தான். இராமர் அஸ்திரப் பிரயோகஞ்செய்து அம்மலைகளை யெல்லாம் அவன் பேரிலேயே விழச்செய்தார். அதன் மேல் விராதன் ஒரு மராமரத்தைப் பிடுங்கிக் கொண்டு அதனால் இராமரைத் தாக்க வந்தான்; இராமர் நான்கு பாணங்களை விடுத்து அம்மரத்தைச் சிதைத்துப் பன்னிரண்டு பாணங்களையேவி அவனுடைய மார்பிலும், தோள்களிலும் அழுத்தினர். அவன் அவற்றை உதறிவிட்டு நின்றான். பின்னர் இராமர் அவன்மீது அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகித்தார். அஃது அவன் தேகத்திற் பாய்ந்தது. அதனால் அவன் உடம்பெங்கும் இரத்தப் பெருக்கெடுத்தோட மூர்ச்சையாய் நின்றான். அப்போது இராமரும், இலக்குமணனும், 'இவன் தேவவரம் பெற்றவனாதலின் இலகுவில் மடியான்; ஆதலின், இவனுடைய இரண்டு தோள்களையும் துணித்துப் பலத்தைக் குறைத்துவிட வேண்டும்' என்று ஆலோசித்துக் கையில் வாளாயுதத்தைப் பிடித்துக்கொண்டு அவனுடைய இரண்டு தோள்களிலும் ஏறிக்கொண்டார்கள். அவன் மூர்ச்சை தெளிந்து அவர்களை இரண்டு கால்களாலும் சேர்த்துப் பிடித்துக் கொண்டு ஆகாயத்தில் எழும்பிக் கீழே குதித்துச் சுழன்று திரிந்தான். சீதை, இராமலக்குமணர்களுக்கு அபாயம் வந்து விடுமோவென்று பயந்து, அந்த இராக்ஷதன்

முன்னே போய், "ஐயா! உலகத்திற்கு உபகாரிகளாகிய இவர்களை விட்டு என்னை விழுங்கு" என்றாள். அப்போது இலக்குமணன், இராமரிடத்தில், "அண்ணா! தேவியார் அஞ்சுகின்றார்; நீர் இவனோடு போர்விளையாட்டுச் செய்து தாமதிப்பது தகுதியன்று" என்று கூறினான். உடனே இராமர் தம்முடைய பாதத்தாலே அவ்விராக்கதனை உதைத்துத் தள்ளினார். அவன் பூமியிலே வீழ்ந்தான். அங்ஙனம் வீழ்ந்ததும் இராம லக்குமணர்கள் அவனுடைய இரண்டு தோள்களையும் வெட்டி விட்டார்கள். அவன் ஸ்மரணையற்றுப் போயினான். இராமர் இலக்குமணனிடத்தில், 'இவனைப் பூமிக்குள்ளே புதைத்துவிட வேண்டும்' என்றார். இலக்குமணன் ஆழமான குழியொன்று வெட்டினான். இராமர், தம்முடைய திருவடியினாலே அவ்விராக்கதன் உடம்பை அக்குழியில் தள்ளினார். அத்திருவடி அவனுடம்பில் பட்ட மாத்திரத்தில், முன் பிறப்பில் தும்புருவனாயிருந்த அவ்விராக்கதன் சாப விமோசனம் பெற்று, அச்சரீரம் நீங்கித் தேவவடிவம் அடைந்து பூர்வக்கியானத்தால் இராமருடைய சொரூபத்தை யுணர்ந்து அவரைப் பலவிதமாக ஸ்தோத்திரம் செய்தான். அப்போது இராமர், "நீ யார்? உன்னுடைய விருத்தாந்தமென்ன?" என்று அவனை வினவினார்.

அவன், "சுவாமி! நான் முன்னே தெய்வலோகத்தில் வீணை வாசிக்கிற தும்புருவனாயிருந்தேன்; அப்போது ஒரு நாள் அரம்பை தேவ சபையில் நிருத்தம் புரிந்தாள். அவ்விடத்தில் எனக்கும் அவளுக்கு மிருந்த நேசத்தால் அவள் என்னோடு பிணங்கி வாக்குவாதம் செய்தாள். நானும் அவளோடு தர்க்கம் பேசினேன். அதனால் அங்குள்ள தேவர்களுக்குக் கௌரவக்குறைவு ஏற்பட்டது. அங்ஙனமாகவே தேவேந்திரன் முதலிய தேவர்கள்

கோபித்து என்னை இராக்ஷதனாகும்படி சபித்தார்கள்; அச்சாபத்தின்படியே நான், கிலிஞ்சன் என்பவனுக்கு மகனாய்ப் பிறந்து விராதன் என்னும் பெயர் பெற்றுத் தீயமார்க்கத்திற் றிரிந்தேன். இப்போது உம்முடைய பாதஸ்பரிஸத்தால் அச்சாபம் நீங்கப் பெற்றேன்; அடியேன் அறியாமையாற் செய்த பிழைகளை நீர் பொறுத்தருளவேண்டும்" என்று வணங்கி இராமரிடம் விடைபெற்றுக்கொண்டு தன்னிருப்பிடஞ் சென்றான். அதன்மேல் இராம லக்குமணர்களும், சீதா பிராட்டியும் பெரியோர் வாசஞ் செய்யும் ஒரு சோலையிற் போய்ச் சேர்ந்தார்கள். சூரியாஸ்தமனமாயிற்று.

சரபங்கர் பிறப்பு நீங்குதல்.

மறுநாள் உதயத்தில் இராமர் முதலியவர்கள் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுச் சரபங்க முனிவருடைய ஆச்சிரமத்திற்குச் சமீபத்திற் போய்க்கொண் டிருந்தார்கள். அத்தருணத்தில் அமரேசன் அந்த முனிவரிடம் சென்றான். அவனைக் கண்டதும் சரபங்கர், எதிர்கொண்டழைத்து உபசரித்து, "தேவராஜனே! நீர் இங்கு வருவதற்குக் காரணமியாது?" என்று வினவினார். அதற்கு இந்திரன், "நீர் செய்த தவத்திற்குப் பிரமதேவர் மகிழ்ந்து உமக்குப் பிரமலோக பதவி கொடுத்திருக்கின்றார்; ஆதலின், உம்மை, பத்தினியுடனே அங்கழைத்துச் செல்ல நான் வந்தேன்; நீர் மனைவியோடு புறப்படும்" என்றான். அதற்குச் சரபங்கர், "நான் பிரதிபலன் கருதித் தவஞ்செய்ய வில்லை; பிறப்பற்ற மோக்ஷத்தை யடைவேனேயன்றி மீண்டும் பிறவிக்கிடமாம் பிரமலோக பதவியை இச்சிக்கமாட்டேன்" என்றார்.

இவர்கள் இவ்வாறு சம்பாஷித்துக்கொண் டிருக்கும்போது மேற்கூறியபடி சென்ற இராமர் முதலியவர்கள்

அங்கே வந்து சேர்ந்தார்கள். அங்ஙனம் வந்துசேர்ந்ததும் இராமர், சீதையையும், இலக்குமணனையும் வெளியில் நிறுத்தி விட்டுத் தாம்மாத்திரம் சரபங்கரின் ஆச்சிரமத்திற்குட் புகுந்து அவரைக் கண்டு வணங்கினார். இராமரைக் கண்டதும், இந்திரன் பலவிதமாக ஸ்தோத்திரம் செய்து, சரபங்கரை நோக்கி, "நீர் பிரமலோகத்திற்கு வர மறுக்கின்றபடியால் நான் போய் வருகின்றேன்" என்று சொல்லிவிட்டு விண்ணிற் சென்றான். அதன்மேல், சீதையும், இலக்குமணனும் உட்சென்று அம்முனிவரை வணங்கினார்கள். சரபங்கர், அங்ஙனம் தம்மை வணங்கிய இராமர் முதலியவர்களை ஆசீர்வதித்துத் தம்முடைய ஆச்சிரமத்திலிருக்குமாறு வேண்டினார். அவர்கள் அன்றிரவு அங்கே தங்கியிருந்தார்கள். மறுநாள் விடியுந்தருணத்தில், சரபங்கர் இராமருக்கெதிரில் வந்து நின்று, "இறைவரே! நான் பத்தினியுடனே அக்கினிப் பிரவேசம் செய்ய விரும்புகிறேன்; ஆதலின் நீர், அதற்கனுமதி தரவேண்டும்" என்றார். இராமர், "இது செய்தற்குக் காரணமியாது?" என்ன, சரபங்கர், "இலக்குமிபதி! நாங்கள் தேகத்தை அக்கினியிற் புகுத்தி இருவினைகளுமற்று மோக்ஷம் சேரவே இங்ஙனம் துணிந்தோம்; நீர் எங்கள் நோக்கம் நிறைவேறுமாறு கிருபை செய்யவேண்டும்" என்றார். இராமர், 'அப்படியானால் இதனை எப்பொழுது வேண்டுமானாலும் செய்து கொள்ளலாமே; அங்ஙனமின்றி நான் வரும்வரை காத்திருந்து இப்போது நான் வந்தபின் எனக்கெதிரில் செய்ய வேண்டியதென்ன?' என்றார். சரபங்கர், "ஸ்ரீபதி! உம்மை எப்பொழுது நாங்கள் தரிசிக்கின்றோமோ அப்பொழுதுதான் எங்களுடைய இருவினைகளும் கழியுமென்று நாங்கள் நினைத்திருந்தோம்; அதனாலேயே உம்மைத் தரிசிக்கவேண்டி நான்நெடுங்காலம் தவம்புரிந்தேன்; அத்தவத்தின் பயனாக உம்முடைய

தரிசனை கிடைத்தது: எங்கள் இருவினைகளும் ஒழிந்தன; பிரமதேவர் என் தவத்திற்கு மகிழ்ந்து பிரமலோகபதவியை எனக்களித்தார். என்னைப் பிரமலோகத்திற் கழைத்துச் செல்லவே இந்திரன் வந்து, நான் அங்குச் செல்ல மறுத்த தால் திரும்பிப் போய்விட்டான். ஆதலின், நீர் எனக்கு மோக்ஷமளித்தருளும்" என்று சொல்லிக்கொண்டே தம் மனைவியுடன் அக்கினிப் பிரவேசமாய் மோக்ஷ வீட்டை அடைந்தார்.

இராமர் தண்டகாரணியம் சேர்தல்.

அதன்மேல் இராம லக்குமணரும், சீதையும் சரபங் கருடைய ஆச்சிரமத்தை விட்டு அப்பால் நடந்து தண்டக வனம் போய்ச் சேர்ந்தார்கள். அப்போது, அங்கிருந்த பாலகில்லியர், முண்டர், மோனர் முதலிய முனிவர்கள் அவர்களைக் கண்டு ஆசீர்வதித்து ஒருசோலையில் தங்கச் செய்து, தங்கள் தங்கள் இருப்பிடஞ்சார்ந்து மறுநாள் மற்றும் அங்கிருந்த இருடியர்களையும் அழைத்துக் கொண்டு கூட்டமாக இராமரிடம் வந்து, "சக்கரவர்த்தி திருக்குமாரரே! இராக்ஷதர் உபத்திரவத்தால் நாங்கள் தவஞ்செய்வதை விடுத்தோம். மற்ற நற்கருமங்களெல்லாம் நடை பெறும லிருக்கின்றன. நீர் இங்கே வந்து விட்டதால் எங்களுடைய குறைகளைத் தீர்த்தருளுவீராக" என்று முறையிட்டார்கள்.

இராமர், "நீங்கள் எதற்கும் அஞ்சவேண்டாம்; எல்லா இராக்ஷதர்களும் என் பாணத்தாலே ஒழிந்து போவார்கள்; நான், அவர்களை யொழித்துத் தருமத்தை நிலைநிறுத்தும் பொருட்டே இங்குவந்தேன்" என்று அவர்களுக்குத் தைரியங்கூறினர். அதன்மேல் அம்முனிவர்கள் இராமரை நோக்கி, "இராகவரே! உமக்கரியதும் உலகிலுண்டோ? நீர் அயோத்திக்குத் திரும்பும் வரையில் இவ்விடத்திலேயே

இருந்து எங்கள் துயரத்தைத் தீர்த்தருளும்" என்று வேண்டினார்கள். இராமர் அப்படியே சீதை யுடனும், இலக்குமணனுடனும், மற்ற முனிக்குழாங்களுடனும் அவ்விடத்தில் பன்னகசாலை யொன் றமைத்துக்கொண்டு அதில் தங்கியிருந்தார். பத்து வருடங்கள் வரை அவ்விடத்திலேயே அவர்களுக்குச் சுகமாகக் காலம் கழிந்தது.

இராமர் அகஸ்தியரைக் காணுதல்.

அதன்மேல் ஒருநாள் அங்குக் கூடியிருந்த மகரிஷிகளெல்லோரும் இராமரை நோக்கி, "சக்கரவர்த்தி குமாரரே! அகஸ்தியருடைய ஆச்சிரமம் சமீபத்திலிருக்கின்றது; அவர் மகா பெரியவர்; நீர் போய் அவரைத் தரிசித்து வரவேண்டும்" என்றுரைத்தார்கள். அவ்வாறே இராமர் சீதாபிராட்டியையும், இலக்குமணனையும் அழைத்துக் கொண்டு அவ்விடத்தினின்றும் புறப்பட்டு அக்காட்டின் மார்க்கமாக நெடுந்தூரம் சென்று சுதீக்ஷணமகா முனிவரின் ஆசிர்மத்தை யடைந்து அவரைக்கண்டு வணங்கினார். அவர் மூவருக்கும் ஆசிகூறி அவர்களை உபசரித்தார். இராமர் அவரிடத்தில், "நாங்கள் அகஸ்தியரைக் காண வந்தோம்" என்று தெரிவித்தார். அம்முனிவர், "அவரைக்காணுதல் மிகவும் நல்லது; அவரும் உம்முடைய வரவை எதிர்பார்த்திருக்கின்றார்" என்று இராமருக்குச் சொல்லி, அகஸ்தியரிடம் செல்லும் மார்க்கத்தையுங் கூறினார்.

பின்னர், இராமர் முதலிய மூவரும் அம்முனிவரிடம் விடை பெற்றுக்கொண்டு அகஸ்தியருடைய ஆசிர்மம் போய்ச்சேர்ந்தார்கள். அவர், இம்மூவர்களையும் எதிர்கொண்டழைத்து, உபசரித்து, இராமரை நோக்கி, "ஸ்ரீராகவரே! நீர் தண்டகாரணியத்தில் வந்திருக்கிறீரென்று நான் கேள்விப்பட்டு இங்கும் வரக்கூடுமென்று நினைத்தேன்; அவ்

வாறேவந்து என்னை மகிழ்வித்தீர்; நீர் இவ்விடத்திலிருந்தே தவஞ் செய்யலாம்; முனிவர்கட்குத் துன்பமியற்றும் இராக்ஷதர்கள் வந்தால் அவர்களையும் சங்கரிக்கலாம்." என்றார். அதற்கு இராமர் அவரை நோக்கி, "சுவாமி! நான் இராக்ஷதர்களை மடித்து இருடியர்க் குதவி புரியவே இங்கு வந்தேன்; ஆனால், நான் இங்கே யிருப்பதைக் காட்டிலும், இன்னும் கொஞ்சம் தெற்கே போய் அந்தப்பாவிகள் வரும் வழியிலிருந்தால் அவர்களை யொழிப்பதற்கு அனுகூலமாகு மென்று நினைக்கிறேன்" என்றார். அதைக்கேட்டு அகஸ்தியர் மகிழ்ந்து, "அவ்வாறே செல்வது நலந்தான்" என்று இராமரிடம் கூறி ஒரு வில்லையும், அம்பறாத்தூணியையும் கொடுத்து, "பூர்வத்தில் ஆதிமுதல்வனான தேவன் இவற்றை என்னிடம் கொடுத்தார். இந்த மூவுலகத்தார்களும் நானும் இவற்றை வைத்துப் பூஜை பண்ணிக்கொண்டு வந்தோம்; இவற்றால் உமக்கு மிக்க ஜெயமுண்டாகும்" என்று சிவபெருமான், முன்னே மகம்மேருபர்வதத்தை வில்லாகவளைத்து அதில் பூட்டி எய்த பாணத்தையுங் கொடுத்து, மேலும் அவரை நோக்கி, "நீங்கள் செல்லும் திசையில் ஒரு பர்வதச்சாரலிலே பஞ்சவடி யென்னும் ஓர் ஸ்தலமிருக்கின்றது. அது மிகவும் செழிப்பானது; அவ்விடத்தில் நீங்கள் போய் வாசம் பண்ணிக்கொண் டிருங்கள்" என்று கூறினார்.

இராமர் முதலியோர் ஜடாயுவைக் காணல்.

அதன்மேல் இராமர் முதலியவர்கள் அகஸ்தியரிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டு ஆரணியத்திற் சென்றார்கள். அவ்வாறு கொஞ்ச தூரம் சென்றவுடனே, தசரதருக்குப் பூர்வ சிநேகிதரும், கழுகினங்களுக் கெல்லாம் அரசருமாகிய ஜடாயு எதிர்ப்பட்டார். அவரைக் கண்டவுடனே

இராமர் முதலியவர்கள், 'இவர் யாரோ!' என்று ஐயமுற்றுப் பார்த்தார்கள். அவரும் இவர்களைப்பார்த்து யாரோவென்று சந்தேகமுற்றார். அவ்வாறு சந்தேகமுற்றுப் பின்னர் இராம லக்குமணர்களை நன்றாக உற்று நோக்கி, "இவர்கள் நம் முடைய பிராண சிநேகிதராகிய தசரதரைப் போன்றிருக் கின்றார்கள்" என்று அன்புடனே அவர்களைப் பார்த்து "நீங்கள் யாவர்?" என்று வினவினார். அப்போது இராம லக்குமணர்கள், "நாங்கள் தசரதருடைய புத்திரர்கள்" என்றார்கள். இதைக்கேட்ட வுடனே ஜடாயு தாமிருந்த மலையைவிட்டுக் கீழிறங்கி அவர்களைத் தழுவிக் கொள்ள வேண்டுமென்னும் அபேக்ஷையுடனே அவர்களின் சமீபத் திற் சென்று, "சக்கரவர்த்தி சுகமாயிருக்கின்றாரா?" என் றார். இராமர், "அவர் தம்முடைய சத்தியத்தை உலகில் நிலைநிறுத்திவிட்டுச் சுவர்க்கம்போய்ச் சேர்ந்தார்" என்றார். இதைக்கேட்டதும் ஜடாயு, தசரதர்மீதிருந்த விசுவாசத் தால் மனம் பதைத்து விசனம் சகிக்க முடியாமல் கீழே விழ்ந்து மூர்ச்சையாயினார். இராமரும் இலக்குமணரும் அவரை வாரியெடுத்துத் தங்களுடைய கண்ணீராலே அவர் தேகத்தை நனைத்தார்கள். அவர் மூர்ச்சை தெளிந்தெழுந் தார்.

அவ்வாறு நினைவுவந்து அவர் எழுந்தவுடன் தசரதரை நினைத்துப் பலவாறு புலம்பி, முடிவில், நெருப்பில் வீழ்ந்து பிராணனைப் போக்கிக்கொள்ளத் துணிந்தெழுந்து இராம லக்குமணர்களை நோக்கி, "பிள்ளைகளே! பூர்வத்தில் தக்ஷப் பிரஜாபதிக்கு ஐம்பது பெண்கள் பிறந்தார்கள். அவர்களுள் பதின்மூன்று பெண்களைக் காசிபமுனி மணம் புரிந்துகொண் டார். அவர்களில் அதிதியென்பவள் முப்பத்து முக்கோடி தேவர்களையும், வாமனாவதாரமாகிய விஷ்ணுவையும் பெற்

ருள். திதி யென்பவள் அறுபத்தாறு கோடி அசுரர்களைப் பெற்றாள். தனு என்பவள் தானவர் முதலானவர்களைப் பெற்றாள். மதி என்பவள் மனிதரையும், அவர்கட்குரிய வருஷ முதலியவைகளையும் பெற்றாள். சுரபி யென்பவள் பசுக்களையும், சராசரங்களையும் பெற்றாள். குரோதவசை யென்பவள் கழுதை, கடம்பை, ஒட்டகம் முதலியவைகளைப் பெற்றாள்; வினதை யென்பவள் காற்று, இடி, மின்னல், அருணன், கருடன், கூகை, பருந்து, மற்ற பக்ஷிகள் முதலியவைகளைப்பெற்றாள். தாம்பிரை யென்பவள் ஊர்க்குருவி, கௌதாரி, காடை முதலியவைகளைப் பெற்றாள். கழை யென்பவள் கொடி, செடி முதலியவைகளைப் பெற்றாள். கத்துருவை யென்பவள் பல சிரங்களையுடைய சர்ப்பங்களைப் பெற்றாள். சுதை யென்பவள் ஒருதலைப் பாம்பு முதலியவைகளை ஈன்றாள். அரிஷ்டை யென்பவள் ஓணன், உடும்பு, அணில், முதலியவைகளை உற்பத்தி செய்தாள். இழை யென்பவள் ஜலசரங்களைத் தோற்றுவித்தாள். இவ்வாறு இந்தப் பதின்மூன்று பெண்களாலும் ஆதியில் பற்பல ஜீவராசிகள் தோன்றி உலக முண்டாயிற்று. இங்ஙனம் பிறந்தவர்களுள் வினதை புத்திரனான அருணன் அரம்பையைச் சேர அவனுக்குச் சம்பாதியும், நானும் பிறந்தோம். நான் என் பிதாவான அருணன் சஞ்சரிக்குமிடமெல்லாம் அவர் கூடவே திரிந்துகொண்டிருந்தேன். அப்போது தசரதரோடு சிநேகமானேன். அவருக்கும் எனக்கும் சிறிதும் பேதமில்லை. வர்ணாசிரமங்கள் விதிக்கப்படுகிற போதே பிறந்தவன் நான். ஜடாயு வென்னும் பெயருடையவன்; கழுகுக் கூட்டங்களுக் கெல்லாம் அரசன்" என்று தம் வரலாற்றினைக் கூறினார்.

இவற்றை யெல்லாம் கேட்டவுடனே ஸ்ரீராமரும் இலக்குமணனும், ஜடாயுவைத் தந்தையென்றே பாவனை

செய்து, இறந்தபிதா திரும்பி வந்ததுபோலவே நினைத்து ஜடாயுவின் மீது மிக்க விசுவாசமுடையவர்களானார்கள். அதன்மேல் ஜடாயு இவர்களிருவரையும் சிறகுகளால் தழுவிக்கொண்டு, "பிள்ளைகளே! நானும் தசரதரும் உட லிரண்டும் உயிரொன்றுமா யிருந்தோம். ஆதலின் அவர் பிரிந்த பின் என்னுயிர் தேகத்தில் நிலைபெறாது. நான் அக் கினிப் பிரவேசமாகின்றேன்; நீங்கள் எனக்குச் செய்ய வேண்டிய ஈமக்கடன்களைச் செய்து விடுங்கள்" என்றார். இதைக் கேட்டவுடன் இராமலக்குமணர்கள் துயரமுற்று ஜடாயுவை நோக்கி, "தந்தையைப் பிரிந்து ஆற்றொணாத் துயரத்திலாழ்ந்து வந்த நாங்கள் இப்போது உம்மைக்கண்ட தால் அத்துயரம் நீங்கப் பெற்றோம்; நீரும் பிரிந்துவிட்டால் எங்களை இரக்ஷிப்பவர் யாவர்?" என்று வருந்தினார்கள். ஜடாயு, "அப்படியானால், நீங்கள் வனவாசஞ்செய்து அயோத்திக்கேகின பின் நான் தெய்வலோகம்போகிறேன்; நீங்கள் வருந்தாதீர்கள்" என்று சொல்லிப் பின்னரும் அவர் களை நோக்கி, "நீங்கள் ஆரணியத்திற்கு வர நேர்ந்த காரண மியாது?" என்று வினவினார். அப்போது இராமர் இலக்கு மணன் முகத்தைப் பார்த்தார். இலக்குமணன், கைகேயி யால் நேர்ந்தவற்றையெல்லாம் கூறினான். உடனே ஜடாயு, இராமர் சத்தியத்தைக் கடைப்பிடித் தொழுகியதற்காக அவரை மிகவும் கொண்டாடிப் பக்கத்தில் நின்ற சீதையை நோக்கி, "இந்தப்பெண் யார்?" என்று கேட்டார். இலக்கு மணன், அவளுடைய விருத்தாந்தத்தையும், தாடகை சம்மாரம் முதல் தாங்கள் ஆரணியத்துக்கு வந்ததுவரை நடந்த சரித்திரங்களையும் கூறினான்.

அதன்மேல் ஜடாயு, இராமலக்குமணர்களை நோக்கி, "நீங்கள் அயோத்திக்குத் திரும்பிச் செல்லும் வரையில் இவ்விடத்திலேயே இருங்கள்; நான் உங்களைப் பாதுகாத்

துக் கொள்கிறேன்" என்றார். அதற்கு ஸ்ரீராமர், "ஐயா! அகஸ்தியர் எங்களை, கோதாவரி தீரத்திலுள்ள பஞ்சவடியில் வாசஞ் செய்யும்படி அனுப்பியிருக்கிறார்; ஆதலின், நாங்கள் அவ்விடத்திலேயே வாசஞ் செய்யவேண்டும்" என்றார். ஜடாயு, "அங்கே யிருப்பது நலந்தான்; நான் அவ்விடத்தை உங்களுக்குக் காட்டுகிறேன் வாருங்கள்" என்று இராமர் முதலியவர்களுக்கு நிழலுண்டாகும்படி மேலே பறந்து அவர்களை அழைத்துக்கொண்டுபோய் அந்தப் பஞ்சவடி தீரத்தை அவர்களுக்குக் காட்டி, "இங்கே இராக்ஷதர்கள் பற்பல வடிவங்களை எடுத்துக்கொண்டு வந்து உங்களுக்குப் பல தீங்குகளைச் செய்யத் தொடங்குவார்கள்; நீங்கள் மிகுந்த ஜாக்கிரதையுடனிருக்கவேண்டும்" என்று கூறித் தம்முடைய ஸ்தானத்திற்குத் திரும்பிப்போய், அவர்களைப் பாதுகாக்கும் விஷயத்தில் மிக்க சிந்தனை யுடையவரா யிருந்தார்.

இராமர் பஞ்ச வடியில் வாசஞ்செய்தல்.

அதன்மேல் இராமர், தம் தம்பியுடனும் மனைவியுடனும் கோதாவரியின் சிறப்பைப் பார்த்து மகிழ்ந்து பஞ்சவடியிலுள்ள குளிர்ந்த சோலையை அடைந்து அங்கே இலக்குமணனால் கட்டப்பட்ட பன்னகசாலையில் தங்கி யிருந்தார்.

சூர்ப்பநகி பங்கம்.

மேற்கூறியபடி இராமர் முதலியவர்கள் பஞ்ச வடியில் தங்கி யிருக்கும்போது சில தினங்கள் சென்றபின், ஒரு நாள், இராவணன் தங்கையாகிய சூர்ப்பநகி என்பவள் அங்கே வந்தாள். அவள் எத்தகையளெனில்,

> "நீலமா மணிநிற நிருதர் வேந்தனை
> மூலநா சம்பெற முடிக்கு மொய்ம்பினள்

மேலனா ளுயிரொடும் பிறந்து தான்வினை
காலமோர்ந் துடனுறை கடிய நோயனாள்.

செம்பரா கம்படச் செறிந்த கூந்தலாள்
வெம்பரா குத்தனி விளைந்த மெய்யினாள்
உம்பரா னவர்க்குமொண் டவர்க்கு மோதநீர்
இம்பரா னவர்க்குமோ ரிறுதி யீட்டுவாள்.”

இத்தகைய இவள், அங்கு வந்ததும், இராமரைக்கண்டு, அவருடைய அழகை வியந்து அவர்மீது காதல் கொண்டாள். அங்ஙனங் கொண்டவள், “நாம் இந்த விகாரவடிவத்துடனே சென்றால் அவர் நம்மை வேண்டார்; ஆதலின், ஓர் அழகிய உருவத்தைத் தாங்கிச் செல்லவேண்டும்” என்று பூர்வத்தில் தனக்குக் கைவல்யமாயிருந்த மந்திரத்தை ஜெபித்து மகா லக்ஷ்மியைத் தியானித்து ஓர் அலங்கார வடிவங்கொண்டு இராமருக் கெதிரில் சென்றாள். இராமர் அவள் வடிவத்தைக்கண்டு அதிசயித்தார். அவள், இராமர் சமீபத்திற்சென்று அவருக்கு நமஸ்காரம் செய்துவிட்டு நாண முடையவள்போல ஒரு பக்கத்தில் ஒதுங்கி நின்றாள். இராமர் அவளை நோக்கி, “நீயார்? எதன்பொருட்டிங்கு வந்தாய்?” என்று வினவினார். அதற்கவள், “நான் பிரமதேவனுக்குப் பேரனுடைய குமாரத்தி; சிவன் தோழனாகிய குபேரனுக்குத் தங்கை; அஷ்டகஜங்களை ஜெயித்து, கைலாயத்தை யெடுத்த இராவணேஸ்வரனுடன் பிறந்த பின்னவள்; என் பெயர் காமவல்லி; நானோ கன்னி” என்றாள்.

இவற்றைக்கேட்டதும் இராமர் சந்தேகமுற்று, “இவளுடைய வடிவம் யதார்த்தமானதன்று; இவளிடத்துள்ள இயற்கையை நாம் நன்றாக அறியவேண்டும்” என்று மீண்டும் அவளை நோக்கி, “நீ இராவணன் தங்கையானால் உனக்கிந்த வடிவமேது?” என்றார். அதற்கவள், “இராக்ஷஸர்களைப் போல வாழ் எனக்குப் பிரியமில்லையாதலால், நான் தேவர்

களுடைய வரப்பிரசாதத்தால் இவ்வடிவம் பெற்றேன்" என்றாள். அதன்மேல் இராமர், "மகா பாக்கிய சாலியாகிய இராவணனுடைய தங்கை நீயானால், எவரும் துணையின்றித் தனிவரக் காரணமென்ன?" என்றார். அவள், "சுவாமி! நான் நல்லவர்களுடனேயே சேர்ந்திருப்பவள்; ஒரு காரியார்த்தமாய் உம்மைக் காணும் பொருட்டுத் தனியாய் வந்தேன்" என்றாள். இராமர், "எதன் பொருட்டு வந்தாய்?" என்றார். அவள் தன்னுடைய காதற் குறிப்பை வெளிப்படுத்தி நின்றாள். இராமர், "இவள் துராத்மா" என்றெண்ணி மௌனமாயிருந்தார். அவள் மேலும் தன் காதலை வெளிப்படுத்தும் சில வார்த்தைகளைப் பேசினாள். பின்னர் இராமர் அவளுடைய மனக்குறிப்பைத் தெளிவாக வெளிப்படுத்தக்கருதி அவளை நோக்கிப் பரிகாசமாக, "நீயோ பிராமணஸ்திரீ; நான் க்ஷத்திரியன்; அப்படியிருக்க எனக்கும் உனக்கும் பொருந்தாத வார்த்தைகளை நீ பேசுதல் தகுதியாமோ" என்றார். அதற்கவள், "நீர் எதையோ நினைத்து என்னைப் பரிகசிக்கிறீர்; என் தகப்பனார் பிராமணர்; தாயார் அருந்ததிபோன்றவள்; எனினும் அவள் இராக்ஷதராஜன் வயிற்றிற் பிறந்தவள்; இக்காரணத்தைக் கொண்டு நீர் என்னையும் இராக்ஷஸியென்று நினைத்துப் பரிகசிக்கின்றீர் போலும்; இங்ஙனம் அவமதித்தால் என்பிராணன் போய்விடும்" என்றாள். இராமர், "அதைப்பற்றி நான் தோஷங் கருதவில்லை; நீ இராக்ஷஸகணம், நான் மனிதகணம்; பொருத்தம் சரியாயில்லையே என்றுதான் நான் யோசிக்கின்றேன்" என்றார். அதற்கவள், "அந்தப் பிறவித் தோஷத்தை நான் தேவர்களால் நீக்கிக் கொண்டேன்; ஆதலின், நீர் என்னை மணம்புரிந்து இரக்ஷிக்கவேண்டும்" என்றாள். அதற்கு இராமர், "உனக்குத் திரிலோகாதிபதியாகிய இராவணனும், நிதிக்கிழவனாகிய குபேரனும் தமை

யன்மாரா யிருக்கும்போது அவர்கள் அனுமதியின்றி உன்னை நான் மணஞ்செய்து கொள்வது தகாது" என்றார். அவள் "நாமிருவரும் சம்மதித்துச் செய்து கொள்வது காந்தருவ மணத்தைச் சார்ந்ததாகும்; ஆதலால், இதற்கு என் சுற்றத்தார் வெறுப்படைய மாட்டார்கள்; இதனால் என் தமையனுடைய உறவும் உமக்கேற்படும்" என்றாள். இராமர், "உன்னுடைய தயவால் எனக்கு எல்லாப்பாக்கியங்களும் கிடைத்து விட்டன" என்று நகைத்தார்.

அப்போது சீதை, பன்னகசாலைக் குள்ளிருந்து வெளியேறி இராமரிடம் வந்தாள். அவளுடைய அழகைக் கண்டதும் சூர்ப்பநகி ஆச்சரியமடைந்து, "இவள் இவனைச் சேர்ந்தவளல்ல; இவளும் எங்கிருந்தோ, நம்மைப்போலவே இவன்மீது விருப்பங்கொண்டு வருகின்றாள்; இவளை இவன் பார்த்தால் நம்மை விரும்ப மாட்டான்; ஆதலின், இவளை இகழ்ச்சியாகப் பேசி இவள்மீது இவனுக்கு அருவருப்புண்டாகும்படி செய்யவேண்டும்" என்று கருதி, அவளை இராக்ஷஸியென்று கூறி இராமரிடம் பலவாறு நிந்தித்துப் பேசினாள். அதைக்கேட்டு இராமர், "ஆ! அவள் இராக்ஷஸியா! சமீபத்தில் வரட்டும் பார்ப்போம்" என்று நகைத்தார். அதற்குள் ஜானகி சமீபத்தில் வந்தாள். சூர்ப்பநகி அவளை நோக்கி, "இராக்ஷஸியாகிய நீ பயமில்லாமல் இவர் சமீபத்தில் வருகிறாயே" என்று அதட்டினாள். சீதை பயந்து விரைந்துபோய் இராமருடைய தோளைத் தழுவிக் கொண்டாள்.

அதன்மேல் இராமர், "இராக்ஷஸியோடு நாம் பரிகாசமாகப் பேசிக் கொண்டிருப்பது தீமையையே விளைவிக்கும்; ஆதலால் இவளை விரைவில் அகற்றிவிட வேண்டும்" என்று கருதிச் சூர்ப்பநகியைப் பார்த்து, "நீ இங்கே நில்லாதே; என் தம்பிகண்டால் கோபிப்பான்" என்றார்.

அதைக்கேட்டு அந்த இராக்ஷஸி, "தேவர் முதலியவர்களும் என்னை அடைய விரும்பித் தவஞ் செய்கின்றார்கள். அப்படியிருக்க நீர் இந்தப்பெண்ணை விரும்பி என்னை அவமதிக்கின்றீர்" என்றாள். அதன்மேல் இராமர், "இவள் என்ன சொன்னாலும் கேட்கமாட்டாள்" என்று அவளைச் சட்டை பண்ணாமல் ஜானகியை அழைத்துக் கொண்டு பன்னகசாலைக்குள் போய்விட்டார். சூர்ப்பநகி மனஞ் சோர்ந்து தேகம் வெதும்பிக் குளிர்ந்த குகையையுடைய ஒரு பாறையிற் போய் சேர்ந்தாள். அப்போது சூரியன் அஸ்தமித்தான். அன்றிரவெல்லாம், சூர்ப்பநகி, இராமர்மீதேற்பட்ட விருப்பத்தினாலே வேதனையடைந்து படாதபாடெல்லாம் பட்டாள். அதனால் அவள் மறுநாள் சூரியோதயமானவுடனே, "அந்தஸ்திரீ பக்கத்திலிருக்கு மட்டும் அம்மனிதன் நம்மை விரும்பான். ஆதலின், அவளை எடுத்து விழுங்கிவிட வேண்டும்" என்று சீதையிருக்கும் பன்னகசாலையை நோக்கி ஓடினாள். அப்போது இராமர் பன்னகசாலையை விட்டு வெளியேறி ஒரு தடாகத்தில் ஸ்நானஞ் செய்துகொண்டிருந்தார். சூர்ப்பநகி, 'இதுதான் சமயம்' என்று சீதை யிருக்குமிடத்துக் கருகிற் போனாள். அங்கே இலக்குமணன் காவலிருந்தான். அவ்விஷயம் அவளுக்குத் தெரியாது. அதனால் அவள், 'சீதை தனியே அகப்பட்டுக் கொண்டாள்' என்று சந்தோஷித்து, தான் எண்ணியதை நிறைவேற்றத் தொடங்கினாள். அப்போது இலக்குமணன் அவளைப் பார்த்து, "யாரடி அங்கே செல்கிறவள்? நில்" என்று அதட்டிக்கொண்டே யோடி அவளுடைய தலைமயிரை ஒரு கரத்தில் பிடித்துக்கொண்டு மற்றொருகையால் வாளை உருவி அவள் கழுத்தை வெட்டுதற்கு ஓங்கி, 'ஆ! ஸ்திரீயைக் கொல்லலாகாது' என்று மேலே தூக்கினவாளைக் கீழே யிறக்கினான். அப்போது அவள் அவனைத் தூககிக்கொண்டு

ஆகாயமார்க்கத்தில் கிளம்ப நினைத்தாள். அதைக் குறிப்பா லுணர்ந்த இலக்குமணன், வாளினால் அவளுடைய மூக்கையும் செவிகளையும், பின்னும் இரண்டவயவங்களையும் அரிந்து விட்டான்.

உடனே சூர்ப்பநகி வேதனை சகிக்கமுடியாமல் பூமியில் வீழ்ந்து புரண்டுபுரண் டழுது, இராவணனைக் கூவி யழைத்துப் பெருந்தொனியிட்டுப் பலவாறு புலம்பினாள். அப்போது இராமர் ஸ்நானஞ் செய்துவிட்டு அங்கேவந்து அவளைக்கண்டு அதிசயித்து நின்றார். அவரைக்கண்டதும் சூர்ப்பநகி அவருடைய பாதத்தில் வீழ்ந்து கதறினாள். அவர், "இவள் இங்குவந்து ஏதேனும் தகாதகாரியம் செய்திருப்பாள்; அதன்பொருட்டு நம் தம்பிதான் இவளைத் தண்டித்திருப்பான்" என்று நினைத்து அவளை நோக்கி, "நீ யார்?" என்று வினவினார். அதற்கவள், "நான் இராவணனுடைய தங்கை; என்னை நீர் அறியீரோ" என்றாள். இராமர், "நீ உன்னிருப்பிடத்தைவிட்டு இங்கேன் வந்தாய்?" என்றார்; அவள், "நான் நேற்றே உம்மிடத்தில் ஒரு காரியார்த்தமாக வந்தேனே; அதன் பொருட்டுத்தான் இப்பொழுதும் வந்தேன்" என்றாள். இராமர், "நீ நேற்று வேறு வடிவத்தோடிருந்தாயே; இப்பொழுதேன் இப்படி யிருக்கிறாய்?" என்றார். அவள், "அந்தோ! நான் அவ்வித அழகுடையவள் தான்; இப்பொழுது இங்குள்ள ஒருவன் என் முக்கிய அவயவங்களை அறுத்து விட்டதால் இப்படி விகாரவடிவ முடையவளாய் விட்டேன்" என்றாள். இராமர் புன்சிரிப்புடன் இலக்குமணனை நோக்கி, "இவளை ஏன் இவ்வாறு பங்கப்படுத்தினாய்?" என்று வினவினார். இலக்குமணன், "இவள் கோபத்தோடு சீதாபிராட்டியாரை எடுக்கவந்தாள்; அதனாலேயே இவளுக்கு இவ்வுபத்திரவம் நேர்ந்தது" என்றான். அவன் இவ்வாறு சொல்லி வாய் மூடுவதற்கு

முந்தியே சூர்ப்பநகி, "நான் விரும்பிய நாயகனை, எனக்கு முந்தியே வந்து வசப்படுத்திக்கொண்ட சக்களத்தியைக் கண்டால் எனக்குக் கோபம் வராதா?" என்றாள். அதைக் கேட்டதும் இராமர் சினந்து, "அடிபாதகி! உன்குலத்தை யெல்லாம் நாசம் செய்வதற்கே நாங்கள் வந்திருக்கின்றோம்; நீ வாய்க்கு வந்தவற்றை யெல்லாம் பிதற்றி வீணே மடிந்து போகாதே; விரைவில் இவ்விடத்தை விட்டு ஓடிப்போ" என்று கூறினார்.

அப்போதும் சூர்ப்பநகி போகாமல் இராமருக் கெதிரில் நின்று, "திரிலோகங்களையும் ஜெயித்திருக்கும் இராவணன் முதலிய இராக்ஷஸர்களிடத்தில் உங்கள் வலிமை செல்லாது; நீங்கள் என்னை மணம்புரிந்து கொள்வதானால், நான் அவர்களால் உங்களுக்குத் தீங்குவாராதபடி உங்களைக் காத்துக்கொள்வேன்; யுத்தங்களிலும் உங்களுக்குப் பக்க பலமாயிருப்பேன்; வாகனமாகியும் உங்களைச் சுமப்பேன்; மெல்லிய தேகமுடைய இந்தப்பெண்ணால் இக்காரியங்களை யெல்லாம் செய்தல் கூடுமா ? நான் அங்கக்குறைவாய்ப் போய் விட்டேனென்று நீங்கள் என்மீது அருவருப்புக் கொள்ள வேண்டாம்; உடனே அழகிய உருவத்தை எடுத்துக்கொள்ள என்னால் முடியும்; என்னுடைய முக்கிய அவயவங்களை அறுத்ததற்காக நான் உங்கள் மீது கோபங் கொள்ளவில்லை; என்னை இவ்வாறு அங்கபங்க முடையவளாகச் செய்துவிட்டால் என்னை வேறெவரும் விரும்ப மாட்டார்களென்றும், அதனால் நான் எங்கும் சொல்லாமல் உங்களிடத்லேயே இருந்து விடுவேனென்றும் நினைத்தே நீங்கள் இக்காரியத்தைச் செய்திருக்கின்றீர்கள்; இதற்காக நான் முன்னிலும் அதிகமாக உங்கள் மீது விருப்புடையவளாயிருக்கின்றேன்; ஆதலால் நீங்கள் என்னை மணம்புரிந்து கொள்வீராக" என்று நமஸ்கரித்தாள்.

இராமர் மிக்க கோபங்கொண்டு, "அடிபாதகி! எங்களை நீ யாவரென்று நினைத்தாய்! நாங்கள் தசரதரின் புத்திரர்கள்; தாயின் வார்த்தை தள்ளாமல் ஆரணியத்திற்கு வந்தோம்; வந்தவிடத்தில் முனிவர்களெல்லாம், தங்களுக்கு நேர்ந்திருக்கும் இராக்ஷதர்களுடைய உபத்திரவங்களையெல்லாம் நீக்கும்படி எங்களை வேண்டிக்கொண்டார்கள். அதனால் நாங்கள் உங்கள் குலத்தை யெல்லாம் ஒழிப்பதற்குக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறோம்; உன் பாட்டியான தாடகையைக்கொன்ற அஸ்திரம் எங்களிடத்தி லிருக்கின்றது; நீ உன் இனத்தார்களை யெல்லாம் இப்போழுதே அழைத்துக்கொண்டுவா; உனக்கெதிரிலேயே அவர்களை நாங்கள் மடித்து விடுகிறோம்" என்றார். அதற்கவள், "என்னை நீர் சேர்த்துக் கொள்வீரானால் அப்படியே இராக்ஷதர்களை யெல்லாம் கொல்லலாம்; உம்மிடமிருக்கும் ஸ்திரீயை நீக்கிவிட உமக்கிஷ்ட மில்லாவிட்டாலும் அவளுடன் என்னையும் சேர்த்துக் கொள்ளும்; நான் அவளுடன் மனஸ்தாபமில்லாமல் சேர்ந்திருப்பேன்; ஒருவாறு இஃதுமக்குச் சம்மதியில்லாவிட்டாலும் உம்முடைய தம்பிக்காவது என்னைச் சேர்த்து வைத்துவிடும்; அவர், 'மூக்கில்லாதவளுடனா நான் சேர்ந்திருப்பேன்' என்றால், நீர், 'நான் இடையில்லாதவளுடன்தானே நெடுங்காலமாகச் சேர்ந்திருக்கின்றேன்; இதுபோல் நீ மூக்கில்லாதவளுடனே சேர்ந்திருப்பதால் தோஷமில்லை' என்று சொல்லி அவரைச் சரிப்படுத்திவிடும்" என்றாள். இவற்றை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த இலக்குமணன், கோபங்கொண்டு, "அண்ணா! இவளைக் கொல்லாமல் விட்டால் இவள், மேலும் மேலும் பிதற்றிக் கொண்டே யிருப்பாள்" என்றான். இராமர், "இவள் இனியேனும் இவ்விடத்தை விட்டுப் போகாமலிருப்பாளாயின் அப்படியே செய்யலாம்" என்றார். இந்த வார்த்தைகளைக்

கேட்டவுடன் சூர்ப்பநகி, "இவர்கள் எதற்கும் இணங்க மாட்டார்கள்; இனி நாம் இங்கு நின்றால் நம்முடைய பிராணன் போவது நிச்சயம்; ஆதலின், நாம் சென்று நம்மவர்களை ஏவிவிட்டு இவர்களுக்குத் தீங்கியற்றச் செய்வதே தகுதி" என்று சிந்தித்து இராமரை நோக்கி, "நான் உங்கள் மனதைச் சோதிப்பதற்கு இவ்வாறெல்லாம் பேசினேனே யன்றி உங்கள் மீது விருப்பங்கொண்டு பேசவில்லை; முந்தியே உங்களை ஒழிப்பதற்கு நான் துணிந்து விட்டேன் ; இதோ உங்களைக் கொல்லுவதற்குக் கரனென்னும் கூற்றுவனை அழைத்து வருகின்றேன்" என்று சொல்லிவிட்டு ஓடினாள்.

கரன் தூஷணன் திரிசிரன் ஆகியவர்களின் வதை.

அங்ஙனம் விரைந்தோடிய சூர்ப்பநகி, கரனிடத்திற் சென்று அவனுக்கு முன்னே வீழ்ந்து புலம்பினாள். அவன், அவளுடைய அலங்கோலத்தைக் கண்டு கோபங்கொண்டு, "யார் உன்னை இப்படிச் செய்தவர்கள்?" என்று அவளிடம் கேட்டான். அவள், "இரண்டு மானிடர்கள், விற்கரத்தர்களாய்த் தவவடிவத்துடன் பஞ்சவடியில் வந்திருக்கின்றார்கள்; அவர்கள், தசரதமகாராஜனுடைய புத்திரர்கள்; இராக்ஷதர்களை யொழித்துத் தர்மத்தை நிலைநிறுத்த வந்திருப்பதாகக் கூறுகிறார்கள் ; அவர்களுடன் ஒரு பெண்ணும் வந்திருக்கிறாள். அவள் மகாரூபவதி; அவளை உன்னுடைய தமையனுக்குக் கொண்டுபோய்க் கொடுக்கலாமென்று தூக்குவதற்கு நான் நெருங்கினேன். அப்போதவர்கள் கோபித்து என்மூக்கு முதலியவைகளை அறுத்து விட்டார்கள்" என்று கூறினாள்.

இவற்றைக்கேட்ட கரன் அடங்காக் கோபங்கொண்டு, 'அவர்களை நாசஞ் செய்துவிட வேண்டும்' என்று சொல்லி

உடனே தன்பக்கத்திலிருந்தவர்களிடம் தேர் கொண்டுவரும்படி ஆஜ்ஞாபித்தான். அப்போது அவன் சபையிலிருந்த பதினன்கு இராக்ஷத வீரர்கள், "நாங்கள் போய் அந்த மானிடர்களைக் கொன்று வருகிறோம்" என்றார்கள். கரன், "அப்படியே சென்று அவர்களை வதைத்து அந்தப் பெண்ணையும் பிடித்துக் கொண்டு வாருங்கள்" என்றான். அவர்கள் அவ்வாறே சூர்ப்பநகியுடன் புறப்பட்டுப்போய் இராமருடன் எதிர்த்து மடிந்தார்கள். சூர்ப்பநகி திரும்பிப்போய்க் கரனிடத்தில், அந்த இராக்ஷதர்களும் சேனைகளும் மடிந்ததைக் கூறினாள். அவன் மிக்க கோபங்கொண்டு, பதினன்கு படைத்தலைவர்களுடனும், தன் தம்பியாகிய தூஷணன், திரிசிரன் என்பவர்களுடனும், சகல சைனியங்களுடனும் இராமரோடெதிர்த்துப் போர் செய்வதற்குப் போனான். அவன் அவ்வாறு சென்று இராமர் இருப்பிடத்திற்கருகிற் சேர்ந்தவுடனே இராமர், இலக்குமணனைச் சீதைக்குக் காவலிருக்கும்படி செய்து விட்டு வில்லுடனே வெளியே இராக்ஷதப்படைக்கு முன்னே வந்து தனியே நின்றார். அப்போது சூர்ப்பநகி, கரனுக்கு அவரைக் காட்டினாள். அவரைக்கண்டு கரன், "கேவலம் இந்த மானிடனுக்கு இவ்வளவு படைகளேன்; நீங்களெல்லோரும் நில்லுங்கள்; நானொருவனே சென்று இவனைக் கொன்று வருகிறேன்" என்று தன்னைச் சூழ்ந்து நின்றவர்களிடம் கூறிவிட்டுப் புறப்பட்டான். அப்போது அகம்பனென்னும் மந்திரி அவனை நோக்கி, "ஐயா! இவ்வளவு படைகளுக்கெதிரில் தனியே வந்து நிற்கிற புருஷனைச் சாமானியனென்று நினைத்தல் கூடாது; வல்லமை யில்லாவிட்டால் அவன் இப்படித் தனியே வந்து நிற்பானா? மேலும் நமக்குத் துர் நிமித்தங்கள் உண்டாய்க் கொண்டிருக்கின்றன. ஆகையால் நீர் தனித்துச் செல்வது கூடாது" என்றான். கரன், "அப்படியா காரியமிருக்கின்

றது" என்று இராமரைத்தாக்கும்படி தன் படைகளுக்குச் சமிக்கை செய்தான். அவ்வாறு அவன் செய்த குறிப்பால் இராக்ஷத சேனைகள் இராமரை வளைந்து கொண்டன. உடனே இராமர் அஸ்திரங்களைப் பிரயோகித்து அச்சேனைகளிலுள்ளவர்களை யெல்லாம் மடித்துவிட்டார். சேனைகள் அவ்வாறு மடிந்ததைக் கண்டு கரனுடைய படைத்தலைவர்கள் பதினான்கு பேர்களும் வந்து இராமரை வளைந்து கொண்டு யுத்தம் புரிந்தார்கள். இராமர் சிறிதுநேரத்திற்குள் அவர்களெல்லோரையும் மடித்து விட்டார்.

இப்படி அந்தப் பதினான்கு பேர்களும் படைகளுடன் மடிந்ததைக் காணவே திரிசிரன் என்பவன், கோபத்தோடு வந்து இராமருக்கெதிரில் நின்று யுத்தஞ் செய்தான். சில விநாடிகளுக்குள் அவனுடன் வந்த படைகளை யெல்லாம் இராமர் ஒழித்துவிட்டார். திரிசிரன் தனிப்பட்டுப் பாணப் பிரயோகஞ் செய்தான். இராமர் அப்பாணங்களை யெல்லாம் விலக்கிச் சிறிது நேரத்திற்குள் அவனுடைய இரண்டு தலைகளை யறுத்து விட்டார். அப்பொழுதவன் திரிசிரன் என்ற பெயரை யிழந்து ஒரு சிரனாகி முன்னினும் அதிக வீராவேசத்தோடு போர் புரிந்தான். சில நிமிஷங்கள் யுத்தம் நடந்தபின் இராமர் அவனுடைய இரண்டு கால்களையும், இரண்டு தோள்களையும் அறுத்துத் தள்ளினார். அப்போதும் அவன் மடியாமல் வாயைத் திறந்துகொண்டு இராமரை விழுங்கி விடுகிறேனென்று முண்டமாய் நகர்ந்து போனான். அப்போது இராமர் அவனுடைய மற்றொரு தலையையும் அறுத்து விட்டார். அவன் மடிந்தான். அவனுடைய சாவைக்கண்டு பரிந்த தூஷணன் உடனே ஓடிவந்து சேனையுடன் இராமரை வளைந்துகொண்டு போர் புரிந்தான். சிறிது நேரம் மும்முரமான யுத்தம் நடந்தது. இராமர் அவனையும் ஒழித்து விட்டார்.

இவர்களெல்லோரும் மடிந்ததைக் கண்ட கான், மிகுந்த ஆத்திரங்கொண்டு, தன் படைகளுடன் சென்று இராமரோ டெதிர்த்தான். கொஞ்சநேரத்தில் இராமர் அவனுடன் வந்த படைகளை யெல்லாம் ஒழித்துவிட்டார். பின்னர், கரன் தனித்தேரோடு இராமருக்குச் சமீபத்திற் சென்று அவர்மீது பாணப்பிரயோகஞ் செய்தான். இராமரும் அவன்மேல் அஸ்திரங்களைப் பிரயோகித்தார். இருவருக்கும் கோரமான யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் கரன், இராமருடைய திருமேனியை அம்புகளால் மறைத்தான். அப்போது இராமர் கோபித்து, 'ஒரே பாணத்தினுல் இவனுடைய தலையை அறுக்கவேண்டும்' என்று கோதண்டத்தில் ஓர் அஸ்திரத்தைப் பூட்டித் தோள் வரையிலும் இழுத்தார். அந்த வில் படீரென்று ஒடிந்து போயிற்று. அப்போது இராமர், மனந்தாளாமல் பின்புறத்தில் கையை நீட்டினர். உடனே வருணன் அங்கிருந்து ஒரு வில்லை அக்காத்தில் கொடுத்தான். அதுதான் முன்னே பரசுராமரிடத்திலிருந்து வாங்கி இராமர் வருணனிடம் கொடுத்தது. அந்த வில்லைப் பெற்றுக் கொண்டவுடன் இராமர் கானுடைய தேரைப் பொடியாக்கிவிட்டார். அதன்மேல் கரன் ஆகாயத்திற் கிளம்பி நின்று யுத்தஞ்செய்தான். அப்போது இராமர் அவனுடைய வலக்கையை அறுத்துத் தள்ளினர். பின்னர் அவன் இடக்கையால் இருப்புலக்கையை எடுத்து இராமர் மீதெறிந்தான். இராமர் ஒரு பாணத்தால் அதை விலக்கினர். பின்னும் அவன் அக்காத்தைக் கொண்டே சிறிது நேரம்வரை போர் செய்தான். முடிவில் இராமர் ஒரே பாணத்தால் அவனுயிரைப் போக்கிவிட்டார். தேவர்களும் முனிவர்களும் சந்தோஷித்தார்கள். இராமர் சந்தோஷமாகப் பன்னகசாலை போய்ச்சேர்ந்தார். சூர்ப்பநகி யுத்தகளத்தில் மடிந்துகிடந்த கானைக் கட்டிக்கொண்டழுதுவிட்டு இந்தச்

சம்பவங்களைச் சொல்வதற்கு இலங்கையிலுள்ள இராவண னிடம் விரைந்தோடினாள்.

மாரீசன் வதை.

அவ்வாறு சென்ற சூர்ப்பநகி இலங்கையிற் பிரவே சித்து, அங்கே தன் துன்பத்தைக் கண்டவர்களெல்லாம் அதிசயித்து வருந்தியழ, மிக்க சிறப்புடன் கொலுக்கூடத் தில் அமர்ந்திருந்த இராவணன் முன்னே போய் வீழ்ந்து புலம்பினாள். அவளுடைய துன்பத்தைக் கண்ட இராவ ணன் மிக்க கோபங்கொண்டு உலகமெல்லாம் நடுங்கும்படி ஆர்ப்பரித்து, அவளை நோக்கி, "யார் உனக்கு இத்துன்பத் தைச் செய்தவர்கள்?" என்று வினவினான். அவள், "ஆரணி யத்தில் இரண்டு மனிதர்கள் வந்து அரசாட்சி செய்கிறார் கள்; அவர்கள் மகா சுந்தர புருஷர்கள்; அவர்களே என்னை இவ்வாறு செய்தார்கள்" என்றாள். இராவணன், "மானி டர்களா இவ்வாறு செய்தார்கள்! நீ பயத்தினால் எதையோ உளறுகிறாய்; பயத்தைவிட்டு உண்மையைக் கூறு" என்றான். சூர்ப்பநகி, "அண்ணா! மெய்யாகவே மனிதர்கள்தாம் இத் துன்பத்தைச் செய்தவர்கள்; அவர்கள் எதற்கும் அஞ்சாத வீரர்கள்; உன்னைத் தூசளவாகவும் மதிக்கமாட்டார்கள்; அவர்களிடம் முனிவர்கள் வந்து, 'இராக்ஷதர்கள் செய்யுந் துன்பம் எங்களால் சகிக்க முடியவில்லை' என்று முறையிட் டுக்கொள்ள, அவர்கள், 'இராக்ஷதர்களை யெல்லாம் ஒழித்து விடுகிறோம்' என்று உறுதி கூறி யிருக்கின்றார்கள். அவர்கள் யாரென்றால், தசரத மகாராஜனுடைய குமாரர்கள்; தந்தை யின் கட்டளைப்படி ஆரணிய வாசத்திற்கு வந்திருக்கிறார்கள்; அவர்களுள் ஒருவன் பெயர் இராமன்; மற்றொருவன் பெயர் இலக்குமணன்," என்றாள்.

இவற்றைக் கேட்டவுடன் இராவணன், "இஃதென்ன அதிசயம்!

"மருந்தனைய தங்கைமணி நாசிவடி வாளால்
அரிந்தவரு மானுட ரரிந்துமுயிர் வாழ்வார்
விருந்தனைய வாளொடும் விழித்திறையும் வெள்கா
இருந்தன னிராவணனு மின்னுயிர்கொ டின்னும்"

நான், பெறுதற்கரிய வரங்களை யெல்லாம் பெற்று எல்லா வுலகங்களையும் அடக்கியாளும் கௌரவம் நன்று யிருக்கின்றது" என்று கண்களில் அனற்பொறி பறக்க மிக்க கோபாவேசத்துடனே அவளை நோக்கி, "வனத்திலிருந்த நம் இனத்தவர்களாகிய கரன் முதலிய இராக்ஷதர்கள், அவர்களைக் கொல்லாமலா விட்டார்கள்; நீ அவர்களுக்கிதனை அறிவித்தனையா?" என்று வினவினன். அதற்குச் சூர்ப்பநகி, "அந்தோ! அவர்களெல்லாரும் என் பொருட்டு அந்த மானிடர்களோடு எதிர்த்து மடிந்து போனார்கள்" என்றாள். அப்போது இராவணன் பற்களை நெறநெறவென்னக் கடித்துக்கொண்டு, "உன்னை அவர்கள் இவ்வாறு மானபங்கப் படுத்துவதற்கு நீ அவர்களுக்கென்ன குற்றம் செய்தாய்?" என்றான். சூர்ப்பநகி, "அவர்களுடன் ஒருபெண் வந்திருக்கின்றாள்; அவள் பெயர் சீதை; அவளுடைய அழகுக்கு மகா லட்சுமியும் இணையாக மாட்டாள்; அவள் உனக்கே தகுதியானவளென்று நினைத்து நான் அவளை உன்னிடம் தூக்கிக்கொண்டுவரப் பிரயத்தனப்பட்டேன்; அப்போது இலக்குமணனென்பவன் ஓடிவந்து என்னுடைய மூக்கு முதலியவைகளை அறுத்துவிட்டான்; இந்த அவமானத்தால் நான் அவ்விடத்திலேயே மடிந்து போயிருப்பேன்; எனினும், அந்தச் சீதையின் விருத்தாந்தத்தை உன்னிடம் தெரிவித்துவிட்டுச் சாகலாமென்று உயிருடன் இங்குவந்தேன்; நீ உடனே சென்று அந்தச் சீதையையும் மானிடர்களையும் கொண்டுவந்து சீதையை நீ எடுத்துக்கொண்டு,

இராமனை என்னிடம் கொடுத்துவிடு ; அவ்வாறு செய்தால் நான் இப்போது இறக்கக் கூடியவளா யிருந்தாலும் ஒரு சமயம் உயிர் தரித்திருப்பேன்" என்றாள். இந்த வார்த்தைகளைக் கேட்டதும்,

"கரனையு மறந்தான் றங்கை மூக்கினைக் கடிந்து நின்றான்
உரனையு மறந்தா னுற்ற பழியையு மறந்தான் வெற்றி
அரனையுங் கொண்ட காம னம்பினுன் முன்னைப் பெற்ற
வரனையு மறந்தான் கேட்ட மங்கையை மறந்தி லாதான்."

"சிற்றிடைச் சீதை யென்னு நாமமுஞ் சிந்தை தானும்
உற்றிரண் டொன்றாய்நின்று லொன்றொழித் தொன்றையுன்ன
மற்றொரு மனமு முண்டோ மறைக்கலாம் வழிமற்றியாதோ
கற்றனர் ஞான மின்றேற் காமத்தைக் கடக்க லாமோ"

இவ்வாறு அவன் சீதைமேல்வைத்த எண்ணமானது அதிகரித்துவிட்டது. அவனுக்குக் கேடு சமீபித்து விட்டதனாலேயே அவன், மோகத்தில் மூழ்கிவிட்டான். அத்தீய எண்ணத்தால் அவன் மனச்சோர்வடைந்து இரவு வந்ததும் படாதபாடெல்லாம் பட்டான்; செய்யத்தகாத காரியங்களையெல்லாம் செய்தான்; எதனாலும் அவனுடைய மனவேதனை தீரவில்லை; பின்னர் அவன் சூர்ப்பநகியை அழைத்து அவளிடம் "இதற்கென்ன செய்யலாம்?" என்று வினவினான். அவள், "உடனே போய்ச் சீதையை எடுத்துக்கொண்டு வந்துவிடு" என்று அவனுக்குச் சமாதானங் கூறிப்போயினாள். அதன்மேல் இராவணன் மந்திரிகளை அழைத்து அவர்களிடம், "இந்த மனோவேதனை தீர்வதற்கு என்ன செய்யலாம்?" என்று யோசனை கேட்டான். அவர்களால் ஒன்றும் கூறமுடியவில்லை. பின்னர் அவன், ஆகாயமார்க்கமாகச் செல்லும் ஒரு விமானத்தி லேறிக்கொண்டு வனத்தில் தவஞ் செய்துகொண்டிருந்த மாரீசனிடம் சென்றான்.

மாரீசன், இராவணனைக் கண்டதும் உபசரித்து "இங்கு வந்த காரியம் யாது?" என்று வினவினான். அதற்கு இராவணன், "மாமா! இராம லக்குமணர்களென்ற இரு நரர்கள் ஓர் அழகிய பெண்ணுடன் ஆரணியத்தில் வந்திருக்கின்றார்கள். அவர்கள் அக்கிரமமாக என் தங்கையின் மூக்கு முதலியவற்றை அரிந்து காதூஷணாதியரையும் கொன்றுவிட்டார்கள்; எனக்குப் பெரிய மானக்கேடு நேர்ந்துவிட்டது; அவர்களோடு போர் செய்யலாமென்றால், அது, என் கௌரவத்திற்குக் குறைவாகும்; அவர்களிடமிருக்கும் பெண்ணை நான் அபகரித்துக்கொண்டு வந்துவிட்டால் அவர்களுக்கு மிக்க மானக்கேடு நேர்ந்துவிடும்; அஃது எனக்கவர்கள் செய்ததற்கு ஈடாகிவிடும்; அதற்கு நீ துணை செய்ய வேண்டும்; அதன் பொருட்டே நான் உன்னிடம் வந்தேன்" என்றான்.

மாரீசனுக்கு இந்த வார்த்தைகள் வெறுப்பை யுண்டாக்கின; அதனால் அவன், இராவணனை நோக்கி, "இலங்காதிபனே! நீ கொண்ட எண்ணம் நீதிக்கு விரோதமானது;

> "நாரங் கொண்டார் நாடு கவர்ந்தார் நடையல்லா
> வாரங் கொண்டார் மற்றொருவர்க்காய் மனைவாழும்
> தாரங் கொண்டா ரென்றிவர் தம்மைத் தருமந்தான்
> ஈருங் கண்டாய் கண்டக ருய்ந்தா ரெவரையா."

இதனால் உமக்கு அழிவே யுண்டாகும்; உம்முடைய நிகரற்ற வாழ்வை என் கெடுத்துக்கொள்கின்றீர்? இராமரை மனிதரென் றெண்ணாதீர்; விஷ்ணுவே அவர்; இராக்ஷஸ குலத்தை யெல்லாம் வேரறுப்பதற்கு அவதரித்திருக்கின்றார்; அவருடைய பாணத்தின் கொடுமையை நான் முன்னரே அறிந்திருக்கின்றேன்; ஆதலால் நீர் இந்த எண்ணத்தை விட்டுவிடும்" என்று கூறினான். இராவணன் அவன் மேற் கோபங்கொண்டான். மாரீசன் அக்கோபத்திற் கஞ்

சாமல் மீண்டும் அவனை நோக்கி இராமருடைய பிரதாபங்களை எடுத்துக் கூறிச் சீதையை அபகரிக்கும் எண்ணத்தை விட்டுவிடும்படி வற்புறுத்தினான். இராவணன் அதைக் கேட்கவில்லை. முன்னிலும் அதிக கோபமுடையவனாய் அவனை நோக்கி, "அந்த இராமன் உன்னுடைய தாயைக் கொன்றதையும் நீ நினையாமல் அவனுக்கஞ்சி அவனை ஸ்தோத்திரம் செய்கிறாய்; நீ, நான் சொல்கிறபடி செய்ய வேண்டுமே யன்றி எனக்கு மந்திராலோசனை சொல்லக் கூடாது; நீ என்னுடைய நோக்கத்தை நிறைவேற்றாவிடின் என் கைவாளுக் கிரையாவாய்" என்று கடிந்து கூறினான். மாரீசன், "இவனுக் கழிவுகாலம் வந்துவிட்டதால் இவன் நம் சொல்லைக் கேளான்; இவன் சொற்படி நாம் செய்து தான் தீரவேண்டும்" என்று மனதிற்குள் தீர்மானித்துக் கொண்டு, அவனை நோக்கி, "நான் என்ன செய்யவேண்டும்" என்றான். உடனே இராவணன் மகிழ்ந்து, "மாமா! நீ ஏதேனுமொரு வஞ்சனையால், அந்த இராமலக்குமணர்கள் சீதையை விட்டுப் பிரியும்படி செய்யவேண்டும்; அச்சமயத்தில் நான் அவளை எடுத்துக்கொண்டு வந்துவிடுவேன்" என்றான். அதற்கு மாரீசன், "அப்படிக் கொண்டுவருவது நமக்குக் கௌரவமல்லவே; இராமரோடு யுத்தஞ்செய்து அவரை ஜெயித்து அந்தச் சீதையை யெடுத்து வந்தாலன்றோ கௌரவம்" என்று சொல்ல, இராவணன், "அஃதெனக்குத் தெரியாமலில்லை; நான் ஒரு நிமிஷநேரத்தில் என் கைவாளினால் அந்த நரர்களுயிரைப் போக்கி அப்பெண்ணைக் கொண்டுவந்துவிடுவேன்; அவர்களிறந்தால் சீதை உயிரோடிருக்கமாட்டாள்; அவ்வாறாயின் நாம் பிரயாசைப்பட்டும் பயனில்லாமற்போம்; ஆதலின், அவளை, வஞ்சனையாற் கொண்டுவருதலே சிறந்ததாம்" என்று சொன்னான்.

அப்போது மாரீசன், "அந்தோ! நாம் இவனுடைய சொற்படி வஞ்சனைசெய்தால் இராமருடைய பாணத்தால் மடிவது திண்ணம்; இவன் கையால் இறப்பதினும் அது நல்லதுதான்," என்று நினைத்துக்கொண்டு இராவணனை நோக்கி, "நான் எவ்வித மாயஞ்செய்யவேண்டும்" என்றான். அவன், "நீ பொன்மானாக வடிவெடுத்துச் சீதைக்கு முன்னே செல்; அதன்மூலம் அவர்களுக்குள் பிரிவு நேரிடும்; அப்போது நான் குறித்த காரியத்தை முடித்துவிடுவேன்" என்றான். மாரீசன் அதற்கிணங்கிச் சீதை யிருக்குமிடத்தை நோக்கிப் போனான். இராவணனும் வேறொரு மார்க்கமாக அவ்விடத்திற்குச் சென்றான்.

மேற்கூறியபடி சென்ற மாரீசன், அழகிய பொன் மானாக வடிவமெடுத்துக் கொண்டு சீதாதேவி தங்கியிருக்குமிடத்திற் கருகிலுள்ள ஒரு சோலையிற்போய் உலாவினான். அப்போதங்கே புஷ்பம் பறிக்கச் சென்றிருந்த சீதை அம் மானைக்கண்டு அதன்மேல் விருப்பங்கொண்டு உடனே இராமரிடம் வந்து அதன் அதிசயவடிவத்தைக் கூறி அதை உயிரோடு பிடித்துத் தருமாறு வேண்டினாள். இராமரும் அதைக்கேட்டு அதிசயித்து அதன்மீது விருப்பங்கொண்டார். அப்போது இலக்குமணன் அவரை நோக்கி, "அண்ணா! அந்த மானினுடைய வடிவத்தைப்பற்றி ஆராயும்போது அதுமெய்யான மானாயிராதென்று தோன்றுகிறது; இராக்ஷதர்களுடைய மாயையா யிருந்தாலுமிருக்கக் கூடுமென்று சந்தேக முண்டாகிறது." என்றான். இராமர், "தம்பி! பிராணிகளின் பேதங்கள் எத்தனையோ உண்டு; இப்படியும் ஒருமான் உற்பத்தியாயிருக்கலாம்" என்றார். அப்போது சீதை, தன் விருப்பத்தால் அவசரப்பட்டு இராமரை நோக்கி, "சுவாமி! நீங்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருப்பதற்குள், அந்தமான் எங்காவது ஓடிப்போய்விடும்"

என்று சொல்ல, இராமர், "அஃ தெங்கே நிற்கிறது? காட்டு பார்ப்போம்" என்று முன்னே நடந்தார். சீதையும் இலக்கு மணனும் பின் சென்றார்கள். இவர்கள், அந்தச் சோலைக்குச் சென்றவுடனே அந்தமான் இவர்களுக்கெதிரில் நின்று மருட்சியோடு விழித்தது. இராமர் அதைப் பார்த்து, 'இது மாயமானன்று; இயற்கைமானே' என்றார். இலக்குமணன், 'இஃதெந்தமானாயினும் சரி; நாம் வந்து அதிசயமுள்ள இதனைப் பார்த்துவிட்டோம்; இனித் திரும்பிச் செல்லலாம்' என்றான். அப்போது சீதை இராமரை நோக்கி, "சுவாமி! தாங்கள் இந்தமானைப் பிடித்துத் தந்தால், என் மனத்துயர் தணியும்" என்றாள். இராமர் அதனைப் பிடிக்கப் பிரயத்தனப்பட்டார். இலக்குமணன் அப்பொழுதும், 'இஃது இராக்ஷதர்களுடையமாயை' என்று சொல்லி இராமரைத் தடுத்தான். அதற்கு இராமர், "தம்பி! இது மாயமானானால் என்னுடைய பாணத்தால் மடிந்து போகும்; அங்ஙனமானால் நாம் இராக்ஷதர்களைக் கொல்வதாகப் பிரதிக்ஞை செய்துகொண்டிருப்பது நிறைவேறுகிறது; மெய்ம்மானானால் இதனை நான் உயிருடன் பிடித்துச் சீதைக்குக் கொடுப்பேன்; இப்படி இரண்டுவிதத்திலும் நமக்கு நன்மையே உண்டாவதாயிருக்க நீயேன் இதனைத் தடை செய்கிறாய்?" என்றார். அதற்கு இலக்குமணன், "இந்த மாயமானை முன்னே யனுப்பி விட்டுப் பின்னே வேறு இராக்ஷதர்கள் நமக்குத் தீங்கு செய்யக் காத்திருத்தல் கூடும்; இதில் இன்ன வஞ்சனை யிருக்கிறதென்பதும் நமக்குத் தெரியவில்லை; இப்படித் தெரியாமலிருக்கும் காரியத்தில் நாம் பிரவேசிப்பானேன்? மேலும் வேட்டைத் தொழில் சிறந்ததன்று. ஆதலின், இதை விடுதலே தகுதி" என்றான். இராமர், "இராக்ஷதர்களுடைய மாயைக் கஞ்சி நாம் சும்மாவிருப்பது நமக்குக் கௌரவக் குறைவாகும்; ஆதலின் இதைச் செய்வதே உத்தமமாகும்"

என்றார். இலக்குமணன், "அங்ஙனமாயின் நானே சென்று இக்காரியத்தை நிறைவேற்றி வருகின்றேன்" என்றான். அப்போது சீதை விதிவசத்தால் இராமரை நோக்கி, "சுவாமி! தாங்களே இந்தமானைப் பிடித்துக் கொடுத்தால் தான் எனக்குத் திருப்தியாகும்; அப்படியிருக்கத் தாங்கள் என் விருப்பத்திற்கு மாறாக யோசனை செய்கின்றீர்கள்" என்று கண்ணீர் விட்டுக்கொண்டு கோபமாய்ப் பன்னக சாலையை நோக்கி நடந்தாள்.

இராமர் சீதையிடத்தில், "நானே சென்று மானைப் பிடித்து வருகிறேன்" என்று சொல்லி, இலக்குமணனை அவளுக்குக் காவலிருக்கும்படி செய்துவிட்டு அந்த மானைத் துரத்திச் சென்றார். அப்போது இலக்குமணன், "முன்னே விசுவாமித்திரருடைய யாகத்தில் தாடகையும், அவள் பிள்ளைகள் இருவரும் வந்து அண்ணாவோடு எதிர்த்தார்கள். அவர்களுள் தாடகையும் ஒரு பிள்ளையும் மடிய ஒருவன் உயிர் தப்பி யோடினான்; அவன் மாரீசன்; இப்பொழுது மானாக வந்திருப்பவன் அவனாகவே யிருக்கலாம்" என்று சந்தேகம் நீங்காத மனத்தினையுடையவனாய்ச் சீதையை அழைத்துக் கொண்டு போய்ப் பன்னகசாலையி லிருக்கச் செய்து, தான் அங்கே காவலிருந்தான். இராமர், மேற்கூறியபடி மானைத் தொடர்ந்து சென்றபோது, அஃது அவர் கைக்கு அகப்படுவதுபோல நிற்பதும், அவர் சமீபித்தவுடன் ஓடுவதுமாக அவரை நெடுந்தூரம் அழைத்துக்கொண்டு போய்விட்டது. முடிவில் இராமர், "இந்த மானினுடைய செய்கை சந்தேகத்திற் கிடமாயிருக்கின்றது; இஃது இராக்ஷதர்களுடைய மாயையாகவே தோன்றுகிறது; இனி இதை வதை செய்வதே தகுதி" என்று நினைத்தார். அந்த நினைவை மாரீசன் அறிந்து ஆகாயத்தில் எழும்பினான். அப்போது இராமர் ஒருசிறந்த பாணத்தை வில்லில் தொடுத்து, "இந்த மான்

வடிவமான இராக்ஷதன் எங்கே சென்றாலும் விடாமல் இவ னைக்கொன்று வரக்கடவாய்" என்று அவன்மீது ஏவினார். அந்தப் பாணம் மாரீசனுடைய நெஞ்சிற்பட்டு ஊடுருவிச் சென்றது. உடனே அவன் மானவடிவத்தை விட்டுத் தன் னுடைய எதார்த்த வடிவத்தோடு, "ஏ சீதா! ஏ இலக்கு மணா!!" என்று எவ்விடத்தும் இராமருடைய குரலைப் போல் கேட்கும்படி கூவிக்கொண்டு பூமியில் வீழ்ந்திறந் தான். அவன் அவ்வாறு கூவியது, இலக்குமணன் சீதையை விட்டுப் பிரிவதற்கே. அவன் அவ்வாறு கீழே வீழ்ந்தவுடன் இராமர் அவனை முன் தம்மிடம் அடிபட்டுத் தப்பியோடிய மாரீசனென் றுணர்ந்து, அவனுடைய வஞ்சனையை முன் னரே அறிந்து சொன்ன இலக்குமணனைப் புகழ்ந்தார். பின் னர், மாரீசன் தம்முடைய குரலைப்போல சத்தமிட்டதைப் பற்றிச் சிந்தித்து, "இவன் ஏன் இவ்வாறு செய்தான்? ஒரு வாறு சீதைக்குக் கலக்கத்தை உண்டாக்க வேண்டுமென்று கருதி இந்தச் சூது செய்திருப்பான்; எனினும், சீதை இதைக்கேட்டு வருந்தினால் இலக்குமணன் அவளுக்குத் தேறுதல் கூறுவான்; எதற்கும் நாம் விரைவில் சீதையிடம் செல்லவேண்டும்; இராக்ஷதர்களால் இன்னும் இதை யொட்டி வேறு சூழ்ச்சிகள் நடந்தாலும் நடத்தல் கூடும்" என்று விரைந்து திரும்பி வந்தார்.

இராவணன் சீதையை எடுத்தேகுதல்.

இராமர் அவ்வாறு திரும்பி வந்துகொண்டிருக்க, பன் னகசாலையிலிருந்த சீதை, மாரீசன், முன்னே கூறிய வஞ்ச னையான சப்தத்தைக் கேட்டு இராமருக்கேதோ அபாயம் வந்து விட்டதென்றும், அவரே அவ்வாறு கூவினாரென்றும் நினைத்து "ஆ! மோசம்வந்ததே!" என்று திடுக்கிட்டுக் கலங்கி இலக்குமணனை நோக்கி, "அந்தோ! இப்பொழுது

கேட்கும் குரலால் என் நாதர்க்கு இராக்ஷதர்களால் அபாயம் வந்ததாகத் தெரிகிறது; இதைக் கேட்டும் நீர் அங்கே ஓடாமல் இருக்கின்றீரே; இது தகுதியாமோ" என்று புலம்பினள். அப்போது இலக்குமணன், "அம்மா! அவருக்குத் துன்பஞ் செய்யத்தக்க வல்லமை பெற்றவர் எவ்வுலகத்தினுமில்லை; இஃது இராக்ஷதர்களுடைய மாயையாயிருக்கும்; நீர் கலங்காதிரும்" என்று தேறுதல் கூறினன். சீதை, அவனுடைய வார்த்தைகளில் நம்பிக்கை வைக்கவில்லை. அதனால் அவள் மனங்கொதித்து இலக்குமணனுடைய மனம் புண்ணாகும்படி, "உம்முடைய எண்ணம் வேறுவிதமா யிருப்பதாகத் தெரிகிறது; நான் இனி ஒரு நிமிஷமேனும் உயிர் வைத்திரேன்; இதோ நெருப்பில் வீழ்ந்திறக்கின்றேன்" என்று சமீபத்தில் எரிந்துகொண்டிருந்த காட்டுத்தீயை நோக்கி நடந்தாள். இலக்குமணன் திடுக்கிட்டு, "அந்தோ! நமக்குப் பெருந்தீங்கு நேரவேண்டிய காலம் சமீபித்து விட்டாற்போலிருக்கிறது; அதனாலேயே சீதாபிராட்டி இவ்வாறு கூறுகின்றார்; நாம் போய்விட்டாலோ அண்ணன் ஆக்ஞையை மீறியகுற்றம் நமக்கேற்படுவதோடு பிராட்டியாருக்கும் ஏதேனும் தீங்கு நேரக்கூடும்; போகாதிருந்தாலோ இவர் நெருப்பில் வீழ்ந்திறப்பார்; இருவகையிலும் நமக்குத் தீராத்துயரமா யிருக்கின்றது; இவற்றுள் நாம் எதைச் செய்யலாம்" என்று யோசித்தான். அந்த யோசனையில், 'எது வந்தாலும் சீதா பிராட்டியின் உயிருக்குப் பங்கம் வாராதிருக்கச் செய்தலே தகுதி' என்ற தீர்மானம் அவனுக்குண்டாயிற்று. அதன்மேல் அவன், சீதையை நோக்கி, "அம்மா! தாங்கள் நெருப்பில் வீழ்ந் திறக்கவேண்டாம்; தமையனார் கட்டளையை மீறித் தங்களைத் தனியேவைத்துச்சென்றால் தங்களுக்கு இராக்ஷதர்களால் ஏதேனும் தீங்கு நேரக்கூடுமென்று நினைத்தே

நான் அவ்வாறு கூறினேன். காலவித்தியாசத்தால் என் சொல்லில் தங்களுக்கு நம்பிக்கையில்லை. விதியை விலக்க யாரால் முடியும்; இனி என்ன நேரினும் நேரட்டும்; தங்கள் ஆக்ஞைப்படியே நான் இதோ செல்கின்றேன் ; நீங்கள் ஜாக்கிரதையா யிருங்கள்" என்று சொல்லிவிட்டு "ஒருவாறு சீதாபிராட்டியாருக்கு ஏதேனும் தீங்கு வந்தால், சமீபத்தி லிருக்கும் நம் தந்தையாராகிய சடாயு உணர்ந்து இவரைக் காத்துக்கொள்வார்" என்று சிறிது தைரிய மடைந்து சீதையிடம் விடை பெற்றுக்கொண்டு இராமர் சென்ற திக்கை நோக்கி நடந்தான்.

இவ்வாறு இலக்குமணன் பிரிந்து போகவே, சீதையை அபகரிக்கும் சமயத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்த இராவணன், ஒரு கிழச் சன்னியாசிபோல வடிவெடுத்து வீணுகானம் செய்துகொண்டு மகா தெய்வபத்திமான் போல நடித்துச் சீதையின் பன்னகசாலை வாயிலிற்சென்று நின்று "யார் இங்கே இருப்பவர்கள்?" என்று ஈனசுரத் தோடு சப்த மிட்டான். அப்போது சீதை வாயிற்படி யருகில் வந்து நின்று, இராவணனுடைய சூதான சன்னி யாசி வடிவத்தைப் பார்த்து, அவனைச் சிறந்த தபசியென்று நினைத்து, 'ஐயா! வருக' என்று அவனுக்கு உபசாரமொழி கூறினாள். அப்போது இராவணன், சீதையின் அழகைக் கண்டு 'சூர்ப்பநகி சொன்னது சரியாயிருக்கின்றது' என்று அதிசயித்து அவளை மனதிற்குள்ளேயே அதிகமாகப்புகழ்ந்து நெஞ்சங்கரைந் துருகினான். அவனுடைய கபடத்தை உண ராத சீதை, பிரம்பினாற் பின்னப்பட்ட ஓராசனத்தை எடுத் துப்போட்டு அதில் உட்காரும்படி இராவணனை வேண்டி னாள். இராவணன் அதில் உட்கார்ந்துகொண்டு சீதாபிராட் டியை நோக்கி, "அம்மா! இந்தப் பன்னகசாலை யாருடை யது? இங்கே எந்த முனிவர் இருக்கின்றார்? நீர் யார்?"

என்று வினவினன். அதற்குச் சீதை, "தசரத சக்கரவர்த்தி யாருடைய மூத்த புதல்வர், சிற்றன்னையின் ஆக்ஞைப்படி தம்தம்பியுடனே வனவாசஞ் செய்தற்கு இங்கே வந்திருக்கின்றார்; அவர் பெயரையும், அயோத்தி நகரையும் நீர் கேள்விப்பட்டிருப்பீர்" என்றாள். இராவணன், "நான் அவர் பெயரைக் கேட்டிருக்கின்றேன்; அவரைப் பார்த்ததில்லை; அவருடைய இராஜ்ஜியத்திற்கும் ஒருமுறை வந்திருக்கிறேன்; நீர் யாருடைய புதல்வியார்? நீரும் இக்காட்டில் வாசஞ்செய்யவேண்டிய காரணமென்ன?" என்றான். அதற்குச் சீதை, "நான் ஜனகருடைய புத்திரி; என் பெயர் ஜானகி; இங்கே வந்திருக்கும் சக்கரவர்த்தி திருக்குமாரருள் மூத்தவரின் மனைவி; நான் அவருடன் வந்திருக்கிறேன்; நீர் எங்கிருந்து இங்கே வந்தீர்?" என்றாள். இராவணச் சன்னியாசி, "நான் முன்னே இவ்வனத்திலிருந்தவன்; சில தினங்களுக்கு முன் சகல தேவர்களையும் அடக்கியாளும் மகா வீரசுந்தரனாகிய இராவணனுடைய இலங்கைக்கேகி அந்நகரத்தில் இதுவரையிலும் இருந்தேன்; முன் என்னுடன் இங்கே வாசஞ்செய்து கொண்டிருந்த முனிவர்களைப் பிரிந்திருக்க முடியாமையால் அவர்களைப் பார்க்க வேண்டுமென்னும் நோக்கத்துடன் இப்போது திரும்பி இவ்விடத்திற்கு வந்தேன்" என்று கூறினான்.

இதைக் கேட்டவுடனே சீதை அதிசயித்து, "அந்தோ! நீர் முனிவராயிருந்தும் அந்த மகாபாதகராகிய இராக்ஷதர்களுடைய நகரத்தில் என் போயிருந்தீர்?" என்று சொன்னாள். அதற்கு இராவணன், "இராக்ஷதர்கள் தேவர்களுக்குப் பொல்லாதவர்களே யன்றி என்னைப்போன்ற தபசிகளுக்கு விரோதிகளல்லர்" என்றான். சீதை, இந்த வார்த்தைகளைப்பற்றி ஆலோசித்து, "இவன்யாரோ கபட

முள்ளவனு யிருக்கிறுன்" என்று நினைத்தாள். இராவணன் அந்த எண்ணத்தைத் தெரிந்துகொண்டு அதைமாற்றும் பொருட்டு, "மூன்றுலகங்களும் இராக்ஷதர் வசமாயிருக்கின்றபடியால் நாமெல்லோரும் அவர்களை யனுசரித்துத் தான் காலத்தைக் கடத்தவேண்டும்" என்று தன் மனக் குறிப்பு விளங்கும்படி சொன்னுன். அதற்குச் சீதை, "இராக்ஷதர்களைப்பற்றி இனி எவரும் அஞ்சவேண்டியதே யில்லை ; என் நாயகர் எப்பொழுது வனத்திற்கு வந்தாரோ அப்பொழுதே இராக்ஷதர்கள் ஒழிந்தார்கள் என்று நினைத்துக் கொள்ளும்" என்றுள். இராவணன், "கேவலம்! மனிதர்களோ இராக்ஷதர்களைக் கொல்லுகிறவர்கள்" என்றுன். சீதை, "என் நாதர் சாமானியரல்லர் ; சமீபத்தில் அவர் கையினுல் விராதன், கரதூஷணுதியர் முதலியவர்கள் மடிந்ததை நீர் உணரவில்லைபோலும் ; இனி இராவணன் முதலிய இராக்ஷதர்கள் நாசமாவதையும், தேவர்களுக்குச் செல்வாக்கு மிகப்போவதையும் நாளைக்கே நீர் பார்க்கப் போகிறீர்" என்று சொன்னுள். சீதை அமிர்தமொழிகளால் இவ்வாறு சம்பாஷிப்பது இராவணனுக்கு இனிமையைத்தருவதாயிருந்தாலும், மனிதர் பலவந்தர் என்ற விஷயத்தில் கோபமுண்டாயிற்று. அதனுல் அவன், "ஏ பேதாய்! நீ அறியாமையால் அற்பனுகிய மனிதன், மகா பராக்கிரமசாலியாகிய இராவணனை வெல்வானென்று கூறினுய் ; நீ இராவணனை யாரென்று நினைத்தாய் ; அவன் எல்லாவுலகங்களையும் நிமிஷ நேரத்தில் நாசப்படுத்தக் கூடியவன்" என்றுன். அதற்குச் சீதை, "இராவணன் மிக்க பலசாலிதான்; கார்த்தவீரியார்ச்சுனன் அவனைப் பிடித்துச் சிறையில் வைத்த போது அந்த வல்லமையெல்லாம் எங்கேபோயிற்று ; அத்தகைய கார்த்த வீரியனுடைய வல்லமையும் பரசுராமரிடத்தில் செல்லவில்லை; அந்தப் பரசுராமரின் வல்லமை

என் நாயகரிடம் ஒடுங்கிப் போயிற்று. இதனாலேயே என் நாதருக்கு முன் இராவணனுடைய வலிமை அற்பமாகும் என்பதை நீர் தெரிந்துகொள்ளலாம்" என்று கூறினாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே இராவணன், அடங்காக் கோபங்கொண்டு தன்னுடைய உண்மை வடிவை யெடுத்து எமனைப்போல எதிரில் நின்று சீதையைப் பார்த்தான். அவள் செய்வதின்னதென் றுணராமல் நடுங்கினாள். அப்போது இராவணன்,

"விண்ணவ ரேவல் செய்ய வென்றவென் வீரம் பாராய்
மண்ணிடைப் புழுவின் வாழு மானுடர் வலிய ரென்றாய் [ன
பெண்ணெனப் பிழைத்தா யின்றே லுன்னையான் பிசைந்து தின்
எண்ணுவ னெண்ணிற் பின்னை யென்னுயி ரிழப்பெனென்றான்"

இவ்வாறு சொல்லிப் பின் அவளைத் தேற்றித் தன் வயப் படுத்தக் கருதி, "சீதா! நீ மானிடர்களை உயர்த்திக் கூறியதால் எனக்குக் கோபம் வந்துவிட்டது; அதனாலேயே நான் இவ்வாறு பேசினேன்; இதற்காக நீ அஞ்ச வேண்டாம்; உன்மீது நான் மிகவும் பக்ஷமுடையவனாயிருக்கின்றேன்; நீ அந்த மானிடர்களை விட்டு என்னுடன் வந்துவிடு; என்னை யாரோவென்று நினைக்காதே; நானே தான் இராவணன்; நீ என்னுடன் வருவாயானால் மூவுலகங்களுக்கும் இராணியாயிருப்பாய்" என்றான். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் ஜானகி, செவிகளை மூடிக்கொண்டு, "அடா இராக்ஷதப்பதரே! ஓமாகுதியை நாய் இச்சிக்கிறது போல நீ என்னை நாடுவது தகாது; என் நாயகருடைய பாணத்தால் நீ ஒழிந்து போவாய். உன்னுயிர் நிலைக்க வேண்டுமானால் நீ நிமிஷ நேரமும் இங்கே நில்லாமல் என் நாயகர் வருவதற்குள் ஓடிப்போ" என்று கடிந்து கூறினாள். அப்படிக் கூறியும் இராவணன் விடாமல் சீதையை நோக்கி,

"பெண்ணமுதமே! உனதெண்ணத்தால் என் ஆவி போய் விடும் போலிருக்கின்றது; நீ தயவுசெய்து எனக்கு உயிர்ப் பிச்சை தரவேண்டும்" என்று அவளுடைய பாதங்களுக்கு முன்னே வீழ்ந்து சாஷ்டாங்கமாகச் சேவித்தான். அவன் அவ்வாறு வணங்கவே, சீதைக்கு 'இவனால் என்ன தீங்கு நேர விருக்கின்றதோ' என்னும் பயம் அதிகரித்தது. அத னால் அவள், "அந்தோ! நான் என்செய்வேன்! ஆ இராக வரே! என் பிராணநாதரே! மைத்துனரே!" என்று இராம ரையும் இலக்குமணனையும் கூப்பிட்டுக் கதறினாள். அப் போது இராவணன், "இவள் எவ்விதத்தும் நம் கருத்திற் கிசைய மாட்டாள்; ஆதலின், இவளைத் துராக்கிருதமாய்த் தூக்கிக்கொண்டு போவதே தகுதியானது" என்று நினைத் தான். அத்தருணத்தில், அவன், விருப்பமில்லாத அன்னிய ஸ்திரீகளைத் தீண்டினால் கெடுதிக்குள்ளாவானென்று முன் னொரு சமயம் பிரமா அவனுக்கிட்ட சாபம் நினைவிற்கு வந்து விட்டது. அதனால் அவன் ஜானகியைத் தீண்டுதற்கஞ்சித் தன்னுடைய பராக்கிரமத்தினால் அவளைப் பூமியோடு பெயர்த்தெடுத்துத் தன் தேர்மீது வைத்துக்கொண்டான். திடுமென நேர்ந்த அச்சம்பவத்தால் சீதை செய்வதொன்று மறியாமல் மயங்கினாள். அச்சமயத்தில் இராவணன் தேரை ஆகாயமார்க்கமாக நடத்தும்படி சாரதிக்கு ஆக்ஞா பித்தான். தேர் இலங்கையை நோக்கி ஆகாயத்தில் விரைந்து சென்றது. அது கண்டு சீதை, "நாம் மிகுந்த ஆபத்திற் சிக்கிக்கொண்டோம்; இனி இதினின்றும் எவ் வாறு தப்பிப் பிழைக்கப்போகின்றோம்" என்று நெருப் பில் வீழ்ந்த புஷ்பக்கொடிபோல் வாடிக் கீழே வீழ்ந்து புரண்டு நாவறண்டு கதறிப் புலம்பத் தொடங்கி,

"மலையே மரனே மயிலே குயிலே
கலையே பிணையே களிறே பிடியே

நிலையா வுயிரே நிலைதே றினர்போய்
உலையா வலியா ருழைநீ ருரையீர்.

செஞ்சே வகனார் நிலைநீர் தெரிவீர்
மஞ்சே பொழிலே வனதே வதைகாள்
அஞ்சே லெனநல் குதிரே லடியேன்
உஞ்சா லதுதா னிழிபோ வுரையீர்.

நிருதா தியர்வே ரறநீண் முகில்போல்
சரதா ரைகள்வீ சினிர்சார் கிலிரோ
வரதா விளையோய் மறுவே துமிலாப்
பரதா விளையோய் பழிபூ ணுதிரோ.

கோதா வரியே குளிர்வாய் குழைவாய்
மாதா வனையாய் மனனே தெளிவாய்
ஓதா துணர்வா ருழையோ டினைபோய்
நீதான் வினையே னிலைசொல் லலையோ.

முந்துஞ் சுனைகாண் முழைவா ழரிகாள்
இந்தந் நிலஞோ டெமெடுத் தகைநா
லைந்துந் தலைபத் துமலைந் துலையச்
சிந்தும் படிகண் டெரித் திடுவீர்.''

என்று மலைகளையும், மரங்களையும், மிருகங்களையும், பக்ஷிகளையும், நதிகளையும், சுனைகளையும், இராம லக்குமணர்களையும், பரத சத்துருக்கரையும், கூவியழைத்துத் தனக்குத் துணை புரியுமாறு வேண்டியழுதாள். இப்படி ஜானகி புலம்புவதைக் கேட்டு இராவணன், "ஏ பேதைமாதே! மானிடர்களா என்னை ஜெயித்து உன்னை மீட்கப்போகிறார்கள்; ஏன் வீணாகப் பிதற்றுகின்றாய்; பேசாமலிரு" என்று கைகொட்டிச் சிரித்தான். அதைக்கண்ட சீதை நெஞ்செரிந்து அவனை நோக்கி, "அடா போருக்கஞ்சிய புன்மதியாளா! நீயா சுத்த வீரன்! நீ போர்செய்வதற் கஞ்சியே முதலில் வஞ்சமாக

ஒரு மானை யனுப்பி என் நாதரையும் மைத்துனரையும் என்னைவிட்டு நீங்கச்செய்து, நான் தனிப்பட்ட சமயத்தில் வந்து பெண்பாலாகிய என்னை அபகரித்துக் கொண்டு போகின்றாய். இத்தகைய பேடியாகிய உனக்கு வீரவார்த்தைகள் எதற்கு? வாயைமூடு; நீ வீரனானால் தேரை நிறுத்தி என் நாயகர் வந்தபின் அவருடன் போர்செய்து உன் சாமர்த்தியத்தைக் காட்டு பார்ப்போம்" என்று கூறினாள். இராவணன், "பேதைப்பெண்ணே! எனக்கு வல்லமையில்லை யென்று நீ சொல்லுகிறாய்; அந்த மானிடர்கள் எனக்கெம்மாத்திரம்! அற்பமான அவர்களுடன் நான் போர்செய்தால் எனது கீர்த்திக்குப் பங்கமுண்டாகு மென்றல்லவா உன்னை இவ்வாறு வஞ்சகமாய்க் கொண்டுபோகின்றேன்" என்றான். அதற்குச் சீதை, "உங்கள் ஜென்ம விரோதிகளுடன் போர்செய்வது இழிவு; இப்படிப் பதிவிரதையாகிய ஒரு பெண்ணை வஞ்சனையாக எடுத்துச் செல்லுதல் கீர்த்தியோ? உன் புத்தி மிகவும் சிலாக்கியமானது தான்; இராக்ஷதர்களுக்குப் பாவமேது, புண்ணியமேது, கீர்த்தியேது, அபகீர்த்தியேது!" என்று சொன்னாள்.

சடாயு வதை.

மேற்கூறியபடி இராவணனும் சீதையும் வாக்குவாதம் செய்துகொண்டே செல்லும்போது, அங்கேயிருந்த சடாயு வானவர், இராவணனுடைய அடாச்செய்கையை யுணர்ந்து, மிகுந்த கோபத்துடனே ஆகாயத்திற் பறந்துவந்து இராவணன் தேரில் புலம்பிக்கொண் டிருக்கும் சீதையைப் பார்த்து, அவன் அவள் தேகத்தைத் தொடவில்லை யென்றுணர்ந்து சிறிது திருப்தி யடைந்து சீதையை நோக்கி, "அம்மா! நீ பயப்படாதே" என்று தைரியஞ் சொல்லிவிட்டுப் பின்னர் இராவணனை நோக்கி, "அடா மதிகெட்டவனே!

நீ என்ன காரியஞ் செய்தாய்; இராமர் உங்கள் குலத்தை வேரறுக்க வந்திருக்கிறு ரென்பதை யுணராமல் நீ இக் கொடுங் காரியத்தைத் துணிந்து செய்திருக்கின்ருய்; அவர் இருக்கும்போது நீ இக்காரியத்தைச் செய்யத் துணிந்தால் அவருடைய பாணத்தால் உடனே மடிந்துபோவாய்; அவ ரும், அவருடைய தம்பியும் இல்லாத சமயமறிந்தே இவ் வஞ்சனையை நீ செய்திருக்கிருய்; அவர் உன் சூதை யுணர்ந் தால் நீ எங்குப்போய் ஒளித்தாலும் உன்னை விடாமல் தொடர்ந்து கொல்வார்; அவர் வருவதற்குள் நானே இப் பொழுதுன்னைக் கொன்றுவிடுவேன்; நீ பிழைப்பதானுல் சீதையை விட்டோடிப்போ" என்று சொன்னுர்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட இராவணன் கடுஞ்சின மடைந்து, "அடே! அந்த மானிடன் வந்து என்னைக் கொல்லுகிறபோது பார்த்துக்கொள்ளலாம்; நீ இப்பொழு தென்னைத் தடை செய்தால் இறந்து போவாய்; ஆதலால் இங்கே நில்லாமல் விரைவில் பிழைத்தோடிப்போ; என் கையி லகப்பட்ட இந்தப் பெண் இனி மீளுவதருமை" என்ருன். இதைக் கேட்டவுடன் சீதை முன்னிலும் அதிக மாகப் பயந்து நடுங்கி யழுதாள். அதுகண்டு சடாயு, "அம்மா! பயப்படாதே; ஒரு நிமிஷநேரத்தில் இவனுடைய பத்துத்தலைகளும் சிதற இவனை அடிக்கிறேன் பார்" என்று சொல்லி இடிமுழக்க முண்டாகும்படி சிறகுகளை வீசிக் கொண்டு இராவணனுடைய தேரின்மீது பாய்ந்து, அவ னணிந்திருந்த பத்துக் கிரீடங்களையும் மோதிக் கீழேதள்ளி இரதத்தில் கட்டியிருந்த வீணைக்கொடியை மூக்கினுல் பற்றி அறுத்து விட்டார். உடனே இராவணன் கோபித்து அவர் மீது அநேகம் பாணங்களைப் பிரயோகித்தான். சடாயு அவற்றை யெல்லாம் கண்ட துண்டங்களாக்கிவிட்டு அவ

னுடைய பத்துத் தலைகளிலும் மூக்கினால் குத்தி அவன் காதில் அணியப்பட்டிருந்த குண்டலங்களைப் பறித்துக் கொண்டு மேலெழும்பினார். அவ்வாறெழும்பிய அவருடைய மார்பில் இராவணன் பதினான்கு பாணங்களை ஊடுருவும்படி பிரயோகித்து மேலும் அநேக பாணங்களை யேவினான். அவைகள் பாய்ந்ததால் சடாயுவின் தேகத்தில் இரத்தம் தாரைதாரையாக ஒழுகிற்று. அவர் பெருமூச்சு விட்டு மீண்டும் அவனுடைய இருபது தோள்களிலும் பாய்ந்து நகங்களாற் குடைந்து அவன் மார்பிலணிந்திருந்த கவசத்தை அறுத்தார். இராவணன் நூறு பாணங்களைப் பிரயோகஞ் செய்து அவருடைய சரீரத்தில் அழுத்தினான். அதன்மேல் சடாயு அவனுடைய வில்லை மூக்கினால் பறித்துக்கொண்டு ஆகாயத்திற் கிளம்பிக் காலால் அதனை முறித்துவிட்டார். அதைப் பார்த்து இராவணன் மிகுந்த கோபங்கொண்டு ஒரு வேலாயுதத்தைச் சடாயுவின்மேல் ஏவினான். சடாயு வீரத்துடன் அதனை மார்பிலேற்றுக் கொண்டார். அவ்வாறேற்றுக் கொள்ளவே,

"பொன்னனைக் கியர்தம் புலநோக்கிய புன்கணோரும்
இன்னனைக்கிய ரில்வழி யெய்திய நல்விருந்தும்
தன்னனைக் கியநெஞ் சுடையோகியர் தம்மைச் சார்ந்த
மென்னனைக்கியர் நோக்கமு மாமென மீண்ட தவ்வேல்."

அவ்வாறு அவ்வேலானது பயன்படாமல் போகவே சடாயு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து இராவணனது தேர்ப்பாகன் தலையைக் கிள்ளி அவனுடைய முகத்திலெறிந்தார். அப்போது இராவணன் பெரிய தண்டாயுதத்தால் சடாயுவை ஓங்கி யடித்தான். உடனே சடாயு வலிகுன்றிப் பூமியில் வீழ்ந்தார். அதன்மேல் இராவணன் தேரை ஆகாயத்திற் செலுத்தினான். அப்போது சீதை, "அந்தோ! நமக்குத்

துணைபுரியவந்த சடாயுவும் வீழ்ந்தனரே; இனி நாம் என் செய்வோம்" என்று ஏங்கி அழுதாள். அத்தருணத்தில் சடாயு தெளிவடைந்தெழுந்து சீதையை நோக்கி, "அம்மா! பயப்படாதே" என்று தைரியங் கூறிவிட்டு மீண்டும் இராவணனை நோக்கி, "எங்கடா போகிறாய்" என்றதட்டி அவனுடைய தேரிற் பாய்ந்து அவன் கையிலிருந்த தண்டாயுதத்தைப் பறித்தெறிந்து, அத்தேரில் கட்டியிருந்த பதினாறு குதிரைகளையும் கொன்று, தேரையும் அழித்து, அம்பறாத் தூணியையும் பறித்தெறிந்து மேலும் அந்த இராவணனது மார்பையும் தோள்களையும் நகங்களாலும் மூக்கினாலும் கீறிக் கிழித்துச் சிறகுகளால் புடைத்தார். இந்த உபத்திரவங்களைச் சகிக்கமுடியாமல் இராவணன் மூர்ச்சையடைந்து சிறிதுநேரம் முடிசாய்ந்திருந்தான். அதுகண்டு சடாயு, "அடா இராக்ஷஸா! இவ்வளவுதானா உன்வீரம்" என்றார். உடனே இராவணன் மூர்ச்சைதெளிந்து கோபமாகிக் கையிலிருந்த வாளாயுதத்தால் சடாயுவின் சிறகுகளை அறுத்துவிட்டான். சடாயுவுக்கு ஆயுள் முடிவுகாலம் வந்துவிட்டபடியால் அவர் மலைபோல் பூமியில் வீழ்ந்தார். அவ்வாறு சடாயு வீழவே, சீதை திக்கற்றவளாய்ப் புலம்பத் தொடங்கி,

'வன்றுணை யுளனென வந்த மன்னனும்
பொன்றினனெனக்கினிப் புகலென் னென்கின்றாள்
இன்றுணை பிரிந்திருந் தின்ன லெய்திய
அன்றிலம் பெடையென வரற்றி னாளரோ.

பின்னவ னுரையினை மறுத்துப் பேதையேன்
அன்னவன் றனைக்கடி தகற்றி னேன் பொரு
மன்னவன் சிறையற மயங்கி னேன்விதி
இன்னமு மெவ்வினை யியற்று மோவெனா.

அல்லலுற் றேனவர் தஞ்ச மென்றவிந்
நல்லவன் றேற்பதே நரகன் வெல்வதே
வெல்வதும் பாவமோ வேதம் பொய்க்குமோ
இல்லையோ வறமென விரங்கி யேங்கினாள்.

நாணிலே னுரைகொடு நடந்த நம்பிமீர்
நீணிலை யறநெறி நின்று ளோர்க்கெலாம்
ஆணியை யுந்தையர்க் கமைந்த வன்பனைக்
காணிய வம்மெனக் கலங்கி விம்மினாள்.

கற்பழி யாமையென் கடமை யாயினும்
பொற்பழி யாவலம் பொருந்தும் போர்வலான்
விற்பழி யுண்டது வினையி னேன்வந்த
இற்பழி யுண்டதென் றிரங்கி யேங்கினாள்.

எல்லியல் விசும்பிடை யிருந்த நேமியாய்
சொல்லிய லாய்நெறி தொடர்ந்த தோழமை
நல்லிய லருங்கடன் கழித்த நம்பியைப்
புல்லுதி யோவெனப் பொருமிப் பொங்கினாள்.''

இவ்வாறு அவள் இராம லக்குமணர்களையும் சடாயுவையும் குறித்த பற்பல வார்த்தைகளைக் கூறிப் புலம்ப, அத்தருணத்தில் இராவணன், 'இனி இங்கே நிற்கலாகாது' என்று, தேரில் வைத்திருந்த மண்ணோடு சேர்த்துச் சீதையை எடுத்துத் தோளின்மேல் வைத்துக்கொண்டு ஆகாய மார்க்கத்திற் கிளம்பிப் போயினான். அப்போது சீதை பயத்தால் மூர்ச்சித்து விட்டாள். சடாயு சிறிது மயக்கந்தெளிந்து ஆகாய மார்க்கமாகச் சீதையுடன் செல்கிற இராவணனைக் கண்டு பலவாறு நிந்தித்துச் சீதையையும் இராமலக்குமணர்களையும் நினைத்துப் புலம்பி மீண்டும் பிரக்ஞை தப்பிக்கிடந்தார். இராவணன் சீதையை இலங்கைக்குக் கொண்டுபோய் அநேகம் இராக்ஷத ஸ்திரீகள் காவலாகச் சூழ்ந்திருக்க அசோக வனத்தில் சிறை வைத்துவிட்டு, அவளைத் தீண்டி

னால் தனக்கு நாசம் வருமென்பதை யுத்தேசித்துப் பயந்து தொடாமல், அவளை நாளடைவில் சமாதானப்படுத்தித் தன் நோக்கத்திற் கிணங்கச் செய்யவேண்டு மென்றெண்ணி, அவள் மனம் தனக்கிசையும்படியான உபாயங்களைச் செய்யும்படி சில இராக்ஷத ஸ்திரீகளுக்குக் கட்டளை யிட்டுவிட்டு அவள் எப்பொழு திணங்குவாளோ என்னும் ஏக்கத்துட னிருந்தான்.

இராம லக்குமணர்கள் சீதையைக் காணாமல் வருந்தித் தேடுதல்.

இராவணனுடைய செய்கை இவ்வாறிருக்க, சீதையின் சொற்படி இராமரிடம் சென்ற இலக்குமணன் அதிக மனக் கலக்கத்தோடு வேகமாகச் சென்று எதிரில் வந்து கொண்டிருந்த இராமரைக் கண்டு மகிழ்ந்தான். இராமர் இலக்குமணனைக் கண்டு, "அந்தோ! மாரீசன் இட்ட தொனியால் விபரீதம் நடந்துவிட்டது; சீதை எனக் கேதோ அபாயம் நேர்ந்ததென்று நினைத்து இவனை என்னிடம்போகச் சொல்லியிருப்பாள்; இவன் அவளைத் தனியே விட்டு வருதற்கஞ்சி அவள் சொல்லைத் தடுத்துக் கூறியிருப்பான்; அதன்மேல் அவள் கடின மொழிகளைக் கூறியிருப்பாள்; அதனாலேயே இவன் வந்திருப்பான்; இஃதென்ன பேதைமை!" என்று மனக்கலக்கத்துடன் நின்றார். இலக்குமணன் அவர் சமீபத்தில் சென்று வணங்கினான். இராமர் அவனைத் தழுவிக்கொண்டு, "தம்பி! நீயேன் சீதையைத் தனியே விட்டு வந்தாய்?" என்று வினவினார். இலக்குமணன் நடந்ததைக் கூறினான். இராமர், 'இஃது இராக்ஷதருடைய வஞ்சனையால் நேர்ந்தது' என்று மனத்துயர முற்று இலக்குமணனை நோக்கி, "தம்பி! உன்மீது குற்றமில்லை; அவள் உன் சொல்லைக் கேளாமல் கூறிய கடின

மொழியே உன்னை இவ்வாறு வரச்செய்தது; அவள் மட்டுமா உன் சொல்லைத் தடுத்தாள்! நானும் அதனைத் தட்டிவிட்டுத்தான் இங்கு வந்தேன்; என்னாலும் அவளாலும் விபரீதம் நேருவதற் கிடமுண்டாய் விட்டது; இது காறும் சீதைக்கென்ன நேர்ந்ததோ; நாம் இங்கே பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை; நான் அவளைப் பார்த்தால் மாத்திரமே என் உயிர்தரிக்கும்; நாம் விரைந்து பர்ணகசாலைக்குச் செல்லவேண்டும்" என்று இலக்குமணனையும் அழைத்துக் கொண்டு அதிக வேகமாக ஓடிவந்தார். இருவரும் சென்று தாங்களிருந்த இடத்தைப் பார்த்துச் சீதை அங்கில்லாமற்போகவே திகைத்து நின்றார்கள். அப்போது, இராமர், ஒருடலைவிட்டுப் பிரிந்துபோன உயிர் திரும்பி வந்து அவ்வுடலைக் காணுவிடில் எங்ஙனம் நிலைக்கொள்ளா தலையுமோ அங்ஙனமே மனஞ்சுழன்றார். இன்னும்,

"கைத்த சிந்தையன் கனங்குழை யணங்கினைக் காணு
துய்த்து வாழ்தர வேறொரு பொருளிலா னுதவ
வைத்த மாநிதி மண்ணொடு மறைந்தன வாங்கிப்
பொய்த்து ளோர்கொளத் திகைத்துநின் றானையும் போன்றான்".

இவ்வாறு இராமர், சீதாதேவியைக் காணுமல் மனக்கலக்க முற்றபோது,

"மண் சுழன்றது மால்வரை சுழன்றது மதியோர்
எண் சுழன்றது சுழன்றதவ் வெறிகட லேழும்
விண் சுழன்றது வேதமுஞ் சுழன்றது விரிஞ்சன்
கண் சுழன்றது சுழன்றது கதிரொடு மதியும்"

இவ்வாறு உலகமெல்லாம் சுழற்சியடையும்படி கலங்கிய இராமரைப் பார்த்து இலக்குமணன், "அண்ணு! துக்கித் துக்கொண்டு நேரத்தைப் போக்கலாகாது. இராக்ஷதர்களே வஞ்சனைசெய்து தேவியாரை அபகரித்துக்கொண்டு போயிருக்கிறார்கள்; அவர்கள் நெடுந்தூரம் செல்வதற்குள் நாம்

தேடிப்போய் அவர்களைக் கண்டு எமனுலகுக் கனுப்பவேண்டும்" என்றான். இராமர், "ஆம்; அதுவே தகுதி" என்றார். பின் இருவரும் சீதையைத் தேடிச் செல்ல ஆரம்பித்து, அவ்விடத்தில் பட்டிருந்த இராவணனுடைய தேர்ச்சக்காச் சுவட்டையும், அவன் சீதையைத் தீண்டுதற்குப் பயந்து அவளைப் பூமியோடு பெயர்த்தெடுத்துக்கொண்டு போயிருப்பதையும் உணர்ந்து அத்தேர்ச் சக்கரம் சென்றவழியே சென்றார்கள். இராவணன் தேர் சிறிது தூரம்சென்று அப்பால் ஆகாயத்திற் கிளம்பிச் சென்றபடியால் அவர்கள் கொஞ்சதூரம் போனவுடன் அதன் சுவடு தெரியவில்லை. அப்போது இராமர் மதிமயங்கி இலக்குமணனிடத்தில், "தம்பி! இனி என்ன செய்யலாம்?" என்று கேட்டார். இலக்குமணன், "அண்ணா! இங்கிருந்து தேர் ஆகாயத்திற் கிளம்பிச் சென்றிருக்கின்றது; எனினும் அது தென்றிசை நோக்கித்தான் போயிருக்கிறது: ஆதலின், நாம் தெற்கு நோக்கிச் சென்றால் விரைவில் அதனைக்கண்டுகொள்ளலாம்" என்றான். பின் இருவரும் தெற்கு நோக்கி இரண்டு யோசனை தூரம் நடந்து சென்றார்கள்.

அவ்வாறு செல்லும் போது மார்க்கத்தில் ஓரிடத்தில் இராவணனுடைய வீணைக்கொடி அற்று வீழ்ந்திருப்பதைக் கண்டார்கள். அதைப் பார்த்தவுடன் இராமர், "இஃது இராக்ஷதர்களுடைய கொடியாயிருக்கலாம்; சீதையை விடுவிக்கும் பொருட்டு யாரோ தேவர்கள்வந்து அவர்களுடன் யுத்தம் புரிந்திருக்கின்றார்கள்: அதனாலேயே இக்கொடி அற்று வீழ்ந்திருக்கிறது" என்று சொல்லி மீண்டும் அத்துவஜத்தை நன்றாக உற்றுப் பார்த்து விட்டு, "ஓகோ! இது பக்ஷியினுடைய மூக்கினால் அறுபட்டிருப்பதாக விளங்குகிறது" என்றார். உடனே இலக்குமணன், "அப்படியானால் சடாயுதான் யுத்தஞ் செய்திருப்பார்; மேல் நடந்தபி தான்

றும் தெரியவில்லை; ஒருசமயம் அவர், கொஞ்சதூரம் அவர்களைத் தொடர்ந்து சென்று தடுத்துக்கொண்டிருக்கக் கூடும்; தேவியாரை மீட்டிருந்தாலு மிருக்கலாம்; எனினும் அவர் விருத்தரான படியாலும், தனித்திருப்பதாலும் தளர்ச்சியடையக் கூடும்" என்று சொன்னான். பின் இருவரும் அவ்விடத்தை விட்டு வேகமாக நடந்து சிறிதுதூரம் போனவுடன் இராவணனுடைய வில் முறிந்து கிடந்ததைக் கண்டு அதிசயித்து, அதற்கப்பால் நடந்து சூலமும் அம்பறாத்தூணியும் கிடப்பதைப்பார்த்து ஆச்சரியமுற்றுப் பின்னும் சிறிது தூரம் போய்க் கவசம் அற்றுக்கிடந்ததையும், அதற்கப்பால் குதிரைகளும் சாரதியும் மாண்டு கிடந்ததையும், அதற்கப்பால் தேர் சிதைந்து கிடந்ததையும் கண்டு வியப்படைந்து சடாயுவின் வீரத்தைப் புகழ்ந்து கொண்டே மேலும் சென்றார்கள். அவ்வாறு சென்று சிறிதுதூரம் போனவுடன் இராவணனுடைய ஆபரணங்களெல்லாம் சிதறிக்கிடப்பதைக் கண்டார்கள். அப்போது இராமர் இலக்குமணனை நோக்கி, "தம்பி! இங்கே அநேக ஆபரணங்கள் சிதறிக்கிடப்பதால் நம்முடைய தந்தையாராகிய சடாயுவுடன் பல இராக்ஷதர்கள் போர் புரிந்திருப்பார்களென்று நான் நினைக்கிறேன்" என்று சொன்னார். இலக்குமணன், "மற்ற இராக்ஷதர்கள் அவரை இவ்வளவு தூரம் இழுத்துக்கொண்டு வந்திருக்க மாட்டார்கள்; பத்துச் சிரங்களும், இருபது தோள்களுமுடைய இராவணனே இவ்வாறு செய்திருப்பான்" என்றான். இராமர், "அந்த இராவணன் இப்போது அகப்படுவானானால் நான் அவனைச் சித்திரவதை செய்வேன்" என்று கோபித்தார். பின் இருவரும் வேகமாக நடந்தார்கள்.

அவ்வாறு நடந்து சிறிது தூரம் சென்றவுடன், அவர்கள், சிறகுகள் அறுப்பட்டு வீழ்ந்துகிடந்த சடாயுவைக்

கண்டார்கள். அப்போது இராமர், "அந்தோ! என் தந்தையே! எங்கள் பொருட்டு எதிரியுடனெதிர்த்து இவ்வாறு பங்கமுற்றீரோ!" என்று சடாயுவின் மேல்வீழ்ந்து, துக்கஞ் சகிக்க முடியாமையால் மூர்ச்சையாகிவிட்டார். இலக்குமணன், அருவி நீரைக் கொண்டு வந்து அவர் முகத்தில் தெளித்து அவருக்கு உபசாரங்கள் புரிந்தான். சிறிது நேரம் சென்று இராமர் மூர்ச்சை தெளிந்து சடாயுவை நோக்கிப் பலவாறு புலம்பினார்; இலக்குமணனும் அவ்வாறே புலம்பினான். இவர்களுடைய புலம்புதலைக் கேட்டதும் சடாயு சிறிது மயக்கம் நீங்கிக் கண்களை விழித்து அவர்களைப்பார்த்தார். இராம லக்குமணர்களைக் காணவே அவருக்கு மிக்க தெளிவுண்டாயிற்று. உடனே அவர், அவர்களை நோக்கி, "புண்ணிய புருஷர்களே! நான் உயிர்நீங்குந் தருணத்தில் உங்களைத் தரிசிக்கப் பெற்றதனால் மகா புனிதனாய்விட்டேன்; சீதை பிரிவு, இராக்ஷதர்களுடைய வஞ்சனையினாலேயே ஏற்பட்டிருக்குமென்று என்மனதிற் பட்டது; சீதையை விட்டு நீங்களிருவரும் நீங்கி எங்கேனும் சென்றிருந்தீர்களோ?" என்றார். இலக்குமணன், நடந்தவற்றையெல்லாம் கூறினான். அவற்றைக் கேட்டதும் சடாயு அவர்களுக்குத் தேறுதல் கூறத்தொடங்கி, "பிள்ளைகளே! நீங்கள் நடந்ததைப்பற்றித் துக்கப் படவேண்டாம்; எதுவும் விதிப்படியே நடக்கும்,

'அதிசய மொருவரா லமைக்க லாகுமோ
துதியறு பிறவியி னின்ப துன்பந்தான்
விதிவய மென்பதை மேற்கொ ளாவிடின்
மதிவலி யான்விதி வெல்ல வல்லமோ.

தெரிவுறு துன்பம்வந் தூன்றச் சிந்தையை
எரிவுசெய் தொழியும * திழுதை நீரதால்

---

* இழுதை நீரது-நெய்யின் தன்மையுடையது.

பிரிவுசெய் துலசெலாம் பெறுவிப் பான்றலை
அரிவுசெய் விதியிஞர்க் கரிதுண் டாகுமோ.

அலக்கணு மின்பமு மணுகு நாளிவை
விலக்குவ மென்பது மெய்யிற் றுகுமோ
இலக்கமுப் புரங்களை யெய்த வில்லியார்
தலைக்கலத் திரந்தது தவத்தின் பாலதோ.

பொங்குவெங் கோளரா விசும்பு பூத்தன
வெங்கதிர்ச் செல்வனை விழுங்கி நீங்குமால்
அங்கண்மா ஞாலத்தை விளக்கு மாப்கதிர்த்
திங்களு மொருமுறை வளருந் தேயுமால்.

அந்தரம் வருதலு மனைய தீர்தலும்
சுந்தரத் தோளினிர் தொன்மை நீரவால்
மந்திர விமையவர் குருவின் வாய்மொழி
இந்திர னுற்றன வெண்ண வெண்ணுமோ.

தடைக்கரும் பெருவலிச் சம்ப ரப்பெயர்க்
கடைத்தொழி லவுணனற் குலிசக் கையினன்
படைத்தனன் பழியது பகழி யில்லலாய்
துடைத்தன னுந்தைதன் குவவுத் தோளினல்''

இப்படித் தேவர்களெல்லாம் விதியினல் ' துன்பத்தை யடைந்திருக்கின்றனர்கள். மேலும், இராக்ஷதர்கள் ஒழிந்து தர்மம் நிலைபெறுவதற்கே இப்பொழுது சீதையின் பிரிவு நேர்ந்திருக்கின்றது. இராவணன் சீதையைத் தொடுவதற்குப் பயந்து மண்ணோடு பெயர்த்தெடுத்துக் கொண்டு போகிறன். அதனல் சீதைக்கு எவ்வித தோஷமும் நேராது; நான் அவளை மீட்பதற்குப் பிரயத்தனப்பட்டு அக்கொடியன் கைவாளினல் இங்ஙனம் சிறகறுப்புண்டு வீழ்ந்தேன்; இனி நீங்கள் சென்று இராக்ஷதர்களை மடித்துச் சுகமாக வாழக்கடவீராக'' என்று கூறினர்.

இவ்வார்த்தைகளைக் கேட்கவே இராமருக்கு, இராவணன் செய்த கொடுஞ்செய்கையை உத்தேசித்து அளவில்லாத கோபமுண்டுவிட்டது. அக்கோபத்தால் எல்லாவுலகங்களும் அழிந்துபோவதுபோ லிருந்தன. அப்போது சடாயு அவரை நோக்கி, "ஸ்ரீராம! நீ உலகமெல்லாம் அழியும்படி இவ்வாறு கோபித்தல்தகாது; இராவணன் மிகுந்த பலசாலியாயிருப்பதனால் தேவர்களையும் அடக்கியாளுகின்றான். அத்தேவர்களுடைய குறையைத்தீர்க்கவே நீ அவதரித்திருக்கின்றாய்; அப்படியிருக்க நீ கோபத்தினால் எல்லாவற்றையும் அழித்துவிட்டால் இராக்ஷதர்களைச் சங்கரித்துத் தர்மத்தை நிலைநிறுத்துவது எங்ஙனம் அமையும்? மேலும் நீயும் இலக்குமணனும் சீதையை வனத்தில் தனியே வைத்துச்சென்று அவளை அன்னியன் கொண்டு போகக் குலப்பழிபூண்டு கொண்டீர்கள்; இஃது உங்களாலேயே நேர்ந்ததவறு. எப்பொழுதும் ஸ்திரீகளைத் தனியே வைத்துச் செல்பவர்க்கு இத்தகைய துன்பம் நேர்வதியற்கை; ஆதலின் நீங்கள் பொறுமையோடிருந்து, இராக்ஷதர்களை ஒழிக்கும் உபாயங்களைத் தேடிச் செய்தல் வேண்டும்" என்று கூறினார். இராமர், தசரதருடைய வார்த்தைகளை அங்கீகரிப்பது போலவே சடாயுவின் சொற்களை அங்கீகரித்துக் கோபந்தணிந்து அவரைநோக்கி, "தந்தையே! உமது கட்டளைப்படியே இராக்ஷதர்களை நான் சங்கரிப்பேன்; அந்த இராவணன் சீதையை எவ்விடத்திற்குக் கொண்டுபோயினான்?" என்று வினவினார். அதற்கு மறுமொழி கூறுவதற்குள் சடாயுவுக்கு ஆவியொடுங்கிப்போய்விட்டது. இராமருடைய தரிசன மகிமையால் அவர் மோக்ஷபத மடைந்தார். அவருடைய மரணத்தின்பொருட்டு இராம இலக்குமணர்கள் அடைந்த துக்கத்திற்களவில்லை. அப்போது இராமர், இலக்குமணனை நோக்கி, "தம்பி! நான் மனைவியை யிழந்து உலக

நிந்தைக் காளாயினேன்; என் பொருட்டுத் தந்தையாகிய சடாயுவும் இறந்தார்; சீதையை இராவணன் கொண்டு போய் வைத்திருக்கும் இடத்தைச் சொல்வதற்குள் இவருடைய உயிர் நீங்கிவிட்டது; இனி நான் என்செய்வேன்" என்று பிரலாபித்தார். இலக்குமணன், "அண்ணா! நமக்கு இத்தகைய தீங்குகளைச் செய்த அந்த இராவணனைத் தேடிக் கண்டு குலத்துடனே கொன்று வெற்றியை நிலை நாட்டுவதைவிட்டு ஏழையர்போல் இங்ஙனம் புலம்பிக் கொண்டிருப்பது தங்களுக்குத் தகுதியாமா?" என்றான். அதன்மேல் இராமர் துக்கம் நீங்கி, "இனிமேல் நடக்க வேண்டிய காரியங்களை நாம் விரைந்து முடிப்போம்" என்று சடாயுவுக்குப் பிள்ளைபோலிருந்து ஈமக்கிரியைகளை முறைப்படி முடித்தார். சூரியாஸ்தமனமாயிற்று.

அயோமுகி பங்கம்.

அந்தி நேரத்தில் இராம லக்குமணர்கள், அவ்விடத்தை விட்டு நீங்கி ஒரு மலையினிடத்திற் சேர்ந்தார்கள். அப்போது இருள் அதிகமாயிற்று. சிறிதுநேரம் சென்று அவ்விருள் நீங்கிச் சந்திரன் உதயமாயிற்று. அப்போது இராமருக்குச் சீதையின் எண்ணம் அதிகமாக உதித்தபடியால் அவர் அவளை நினைத்து மிகுந்த துக்கத்தில் மூழ்கியிருந்தார். இலக்குமணன் குளிர்ந்த தளிர்களால் அவருக்குப் படுக்கையமைத்துக் கொடுத்தான். இராமர் அதில் படுத்தும் நித்திரை கொள்ளாமல் மிகுந்த துயரத்துடனிருந்தார். இலக்குமணனும் அங்ஙனமே தூக்கங்கொள்ளாதிருந்தான். இவ்வாறிருந்த இவர்களுடைய துக்கமானது சிறிது தணியும்படி அவ்விரவு நீங்கி விடிந்தது. அப்போதும் இராமர், சீதையினுடைய அவயவங்களுக்கு உவமையாயிருந்த பொருள்களைப் பார்த்து அவளுடைய

ஞாபகம் தமக்கு அதிகப்பட்டதால் துக்கித்துக்கொண் டிருந்தார். அவர் நிலைமையைக் கண்ட இலக்குமணன், "அண்ணா! நாம் பிராட்டியாரைத் தேடிச் செல்லாமல் நேரத்தைப் போக்குவது தகுதியாமோ" என்றான். பின், இருவரும் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு அநேகம் ஆரணியங்களையும் பர்வதங்களையும், நதிகளையும் தாண்டிப் பதினெட்டு யோசனை தூரம் நடந்துபோய் அது வரையி லும் சீதையினுடைய சமாசாரம் ஒன்றும் தெரியாதபடி யால் கோபமும் துயரமுமடைந்து ஒருசோலையிற் சேர்ந் தார்கள். அப்போது சூரியன் அஸ்தமிக்க இரவு வந்தது. அங்கே முருங்கை மரங்கள் சூழ்ந்த ஒரு பளிங்குக் கற் பாறையும், அறையுமிருந்தன. அவ்விரவில் இவர்கள் அந்தப் பளிங்குக் கற்பாறையில் தங்கலாமென்று யோசித்துக்கொண் டிருந்தார்கள். அப்போது இராமருக்கு நீர்வேட்கை அதி கரித்தது. அதனால் அவர், தண்ணீர் கொண்டுவரும்படி இலக்குமணனிடம் கூறினார். இலக்குமணன் அவ்விரு ளில் ஜலம் கொண்டுவருவதற்கு வெளியே போனான். அவன் நெடுந்தூரம் சென்றும் நீர் அகப்படவில்லை. அதனால் அவன் அக்காட்டில் அங்குமிங்கும் அலைந்து கொண் டிருந்தான். அத்தருணத்தில் அங்கே வாசஞ் செய்துகொண் டிருந்தவளாகிய பயங்கர ரூபத்தை யுடைய அயோமுகி யென்னும் இராக்ஷஸி அவனைக்கண்டு அவன்மீது ஆசைகொண்டு அவன் சமீபத்தில் வந்து, தன் எண்ணத்தை அவனிடம் தெரிவித்து அருவருப்பான பல வார்த்தைகளைப் பேசினாள். இலக்குமணன் கோபித்து, அவளை நோக்கி "நீ இங்கே நின்றால் அவஸ்தைப் படுவாய்; விரைவில் போய்விடு", என்றான். அவள், "இப்போது இவன் நம்முடைய நோக்கத்திற்கு இணங்க மாட்டான்; ஆதலால் இவனைத் தூக்கிக்கொண்டுபோய் நம்குகையில்

வைத்துக்கொண்டால் இவனுடைய அகங்காரம் ஒழிந்து போகும்; அதன்மேல் இவனை நம் நோக்கப்படி நடக்கச் செய்யலாம்" என்று உடனே ஒரு மேகத்தைப்போல வடிவெடுத்து அவனைத் தூக்கிக்கொண்டு ஆகாயத்தில் கிளம்பிப் போயினாள்.

இங்கே இவர்கள் செய்கை இவ்வாறிருக்க, தனித்திருந்த இராமர், நெடுநேரம்வரை தம்பி வாராததால் கவலைகொண்டு, "அந்தோ! தம்பிக்கு என்ன நேர்ந்ததோ!" என்று பலவாறு புலம்பி, "நாம் இனி யிருப்பதில் பயனென்?" என்று தற்கொலைபுரிந்துகொள்ள நினைத்தார். அத்தருணத்தில் அயோமுகியிடம் அகப்பட்டிருந்த இலக்குமணன் கோபங்கொண்டு அவளுடைய மூக்கையும் காதையும் அறுத்து விட்டான். அதனால் அவள் பெருங் கூச்சலிட்டுக் கதறி இலக்குமணனை விட்டோடிப் போனாள். அப்படி அவள் ஓடும்போது கதறிய சப்தம் இராமருக்குக் கேட்டது. அதனால் அவர், தற்கொலை செய்துகொள்ள நினைத்ததை விட்டு, "ஓகோ! இராக்ஷஸியின் அழுகுரல் கேட்கிறது; தம்பியுடன் யாரோ இராக்ஷதர்கள் வந்து எதிர்த்திருக்கின்றார்கள்; ஆதலின், நாம் விரைந்து சென்று தம்பிக்குத் துணை புரியவேண்டும்" என்று அக்கினியாஸ்திரத்தை யெடுத்துச் சுழற்றி வெளிச்சமுண்டாக்கி அதன் உதவியால் இருளை நீக்கிக்கொண்டு தம்பி சென்ற திக்கை நோக்கி ஓடினார். அவர் சிறிது தூரம் செல்வதற்குள் இலக்குமணன் ஜல மெடுத்துக்கொண்டு எதிரில் வந்து, "அண்ணா! வருந்த வேண்டாம்; நான் இதோ வந்து விட்டேன்" என்று அவர் பாதங்களில் வணங்கினான். இராமர் கண்ணீரொழுக அவனைத் தழுவிக்கொண்டு, "அப்பா! உனக்கு ஆபத்து நேர்ந்ததென்றே நான் எண்ணி ஓடி வந்தேன்; நடந்ததென்ன கூறு" என்றார். இலக்குமணன்,

நடந்ததைக் கூறினான். இராமர், "தம்பி! நான் முன் தாடகையைப் பெண்ணென்று நினையாமல் கொன்று விட்டேன்; நீயோ சூர்ப்பநகியையும், இந்த அயோமுகியையும் கொல்லாமல் அங்க ஹீனர்களாக்கி விட்டு விட்டாய்; நீதி தவறாமல் இச்செய்கைகளைச் செய்த உன்னுடைய விவேகம் என்னுடைய அறிவினும் சிறந்ததாகும்" என்று அவனைப் பலவாறு கொண்டாடினார்.

பின் இருவரும் முன்னிருந்த இடம் வந்து சேர்ந்தார்கள். இராமர், இலக்குமணன் கொண்டு வந்த ஜலத்தைப் பருகித் தாகம் தணிந்தார். அதன்மேல் இருவரும் விடிந்த பின்புதான் அப்பால் செல்லவேண்டுமென்று அவ்விடத்தில் தங்கினார்கள். இலக்குமணன் இராமருக்குச் சயனமொன்றமைத்தான். இராமர், சீதையின் பிரிவால் துக்கமேலிட்டுக் கந்த மூலபலாதிகளும் உண்ணாமலிருந்தபடியால் அவருக்கு நித்திரை வரவில்லை. அதனால் அவர் விடியும் வரையிலும் சீதையைப்பற்றிய துக்கமான வார்த்தைகளையே சொல்லிப் புரண்டு புரண்டு படுத்துக்கொண்டிருந்தார். சூரியன் உதயமாயிற்று. உடனே இராம லக்குமணர்கள் எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார்கள்.

கபந்தன் வதை.

மேற்கூறியபடி புறப்பட்ட இருவரும் ஐம்பது யோசனை தூரம் நடந்து மத்தியான நேரத்தில் கபந்தனுடைய வனத்திற்போய்ச் சேர்ந்தார்கள். அந்தக் கபந்தன் ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டு நெடுந்தூரம் தன்னுடைய இரண்டு கைகளையும் நீட்டி வளைத்து அவ்வளவுக்குள் அகப்பட்ட ஜீவஜந்துக்களை யெல்லாம் நெருக்கி வாயிற் போட்டுக்கொள்ளும் வழக்கமுடையவன். அவன், இவர்கள் செல்லும்

போது அப்படியே கரங்களை நீட்டி அநேகம் ஜீவராசிகளை வளைத்துக் கொண்டிருந்தான். அதனால் இவர்களும் அக்கூட்டத்திற்கு முன்னே புகுந்து தங்களுக்குப் பின்னால் அக்கூட்டம் திரண்டுவருவதைக் கண்டு, "நாம் சீதையைத்தேடி வருவதை யுணர்ந்து இராவணன் நம்மோடெதிர்க்கும்படி தன்னுடைய சேனைகளை அனுப்ப அவைகள்தாம் வருகின்றன; அவற்றையெல்லாம் இவ்விடத்திலேயே ஒழித்துவிடலாம்" என்று மகிழ்ச்சி யடைந்தார்கள். அத்தருணத்தில் இராமர், இலக்குமணனை நோக்கி, "தம்பி! இவைகளெல்லாம் இராவணனுடைய சேனைகளாகவே தோன்றுகின்றன; இவைகள் இவ்வாறு திரண்டு வருவதால் இராவணனுடைய இருப்பிடமும் சமீபத்தில்தான் இருக்குமென்று நான் நினைக்கிறேன்; அப்படி யிருந்தால் விரைவில் நம்முடைய துயரம் தீரும்" என்று கூறினர். அதற்கு இலக்குமணன், "சுவாமி! இராக்ஷதப் படைகளா யிருந்தால் யுத்தபேரிகை முழக்கம் கேட்குமே? அஃதில்லாதபடியால் இது வேறு வகைக் கூட்டமா யிருக்கக் கூடுமென்று நான் நினைக்கிறேன்" என்று அக்கூட்டம் வருகிற பக்கங்களை நன்றாக உற்று நோக்கினன். அவ்வாறு நோக்கி, கபந்தனுடைய கைகள் அக்கூட்டத்திற் கப்பால் பாம்பைப்போல வளைந்துகொண்டு வருவதைப்பார்த்து அவற்றைப் பாம்பென்றே நினைத்து, இராமரை நோக்கி, "அண்ணா! வாசுகிக்குச் சமானமாகிய பெரும் பாம்பொன்று, தலையையும் வாலையும் ஒன்றாகச் சேர்த்து, உடலை வட்டமாக வளைத்து, அவ்வளைவுக்குள் அகப்பட்ட ஜீவராசிகளை யெல்லாம் விழுங்குவதற்குத் திரட்டி வாயின் பக்கத்தில் நெருக்கிக் கொண்டுவருகிறது" என்றான். இராமர், "நீ சொல்வதுதான் சரி" என்றார். பின்னர் இருவரும், "இதனால் என்ன நடக்கிறதோ; நாம் நெருங்கிப்பார்ப்போம்" என்று மூன்று யோசனை தூரம்

முன்னேறிச் சென்றார்கள். அங்ஙனம் சென்று பார்க்கும் போது, கபந்தன், இரண்டு சூரியர்களைப்போன்ற கண்களும், கோர தந்தங்களும், சமுத்திரம் போன்ற வாயும், வாசுகி யைப்போன்ற இரண்டு கைகளும், மகாமேருபோன்ற வயிறும், பயங்கர வடிவமு முடையவனாய் இருந்தான். அத்தகைய தோற்றமுடையவனை அவர்கள் கண்டார்கள்.

அப்போது இலக்குமணன், இராமரை நோக்கி, "அண்ணா! நாம் இத்தோற்றத்தை முன்னே பாம்பென்று நினைத்தது தவறு; இங்கே ஒரு பெரும் பூதம் இருக்கின்றது; அதுவே தன் வாயிற் போட்டுக்கொள்ள இங்குள்ள ஜீவராசிகளை யெல்லாம் இரண்டு கைகளாலும் திரட்டிக் கொண்டு வருகின்றது ; அக்கூட்டத்திற்குள் நாமும் அகப் பட்டுக்கொண் டிருக்கிறோம்" என்றான். இராமர், "தம்பி! அப்படியானால் பலவிதத்திலும் பழிக்காளாயிருக்கும் நான் இந்தப் பூதத்தின் வயிற்றிற்குட் போய் என் ஆவியைப் போக்கிக்கொள்கிறேன்; நீ திரும்பி நகரத்திற்குச் செல்" என்று இலக்குமணனிடம் கூறினார். இதைக்கேட்டதும் இலக்குமணன் வருந்தி, இராமரிடம் "அண்ணா! தாங்கள் இவ்வாறு கூறுவது தகாது; நீர் உயிரிழக்க நான் பிழைத் துப்போவது தகுதியாமா? மேலும், எல்லா வல்லமையு முடைய நீர், கேவலம் ஒரு பூதத்தால் இறந்து போகிறே னென்பது நமக்கீனமல்லவா; நம் வலிக்கு முன்னே இஃ தெம்மாத்திரம்! இதோ நான் இப்பூதத்தினுடைய வாயை யும், கைகளையும் அறுத்து விடுகிறேன் பாரும்" என்று சொல்லி முன்னே சென்றான். இராமர், "தம்பி நீ செல்ல வேண்டாம்; நான் செல்கிறேன்" என்று அவனுக்கு முன்னே சென்றார். இப்படி இவ்விருவரும், 'நான் முன்னே போகி

றேன், நான் முன்னே போகிறேன்' என்று வாதாடிக் கொண்டு மாறிமாறி முன்னும் பின்னுமாகச் செல்லும் போது கபந்தன் இவர்களைக் கண்டு, "நீங்கள் யார்?" என்று கோபத்துடனே கேட்டான். அவனுடைய கேள்விக்கு இவர்கள் பதிலுரைக்காமல் மிகுந்த தைரியத்தோடு அவனைப் பார்த்தபடியே நின்றார்கள். அப்போது கபந்தன், "இவர்கள் நம்மை அவமதிக்கிறார்கள்; ஆதலின், இவர்களை எடுத்து விழுங்கிவிட வேண்டு" மென்று எழுந்தான். அப்பொழுது இராமலக்குமணர்கள் இருவரும் அவனுக்கு மேலே எழும்பித் தங்கள் வாளாயுதங்களினாலே அவனுடைய இரண்டு கைகளையும் வெட்டி விட்டார்கள். கபந்தன், முன் உயர்பிறப்பாளனாயிருந்து ஒரு கந்தர்வனுடைய சாபத்தால் இச்சரீரம் பெற்றிருந்தவனாதலின், இராமர் அவனைத் தீண்டிய மாத்திரத்திலே அச்சாபம் நீங்கப்பெற்று, இராமருடைய உண்மைச் சொரூபத்தை யுணர்ந்து அவரைப் பலவாறு ஸ்தோத்திரம் பண்ணினான்.

அப்பொழுது இராமர் இலக்குமணனை நோக்கி, "தம்பி! இவன், முன்னிருந்த தன்மை நீங்கி, இப்பொழுது ஞானம் பெற்று வேறு வடிவத்துடன் விளங்குகின்றான்; நீ இவனை யாரென்று கேள்" என்றார். இலக்குமணன் அப்படியே அவனை வினவினான். அவன், "நான் பூர்வத்தில் தநுவென்னும் பெயருடன் உயர்ந்த பிறப்பைப் பெற்றிருந்தவன்; ஒரு கந்தர்வனுடைய சாபத்தால் இப்பிறப்பை யடைந்தேன்; இப்போதுங்கள் கைபட்ட மாத்திரத்தில் அப்பிறப்பு நீங்கினேன்; மகா வீரர்களே! உங்களுக்கிணை யானவர்களெவருமில்லை. நீங்கள் இப்போது சீதாதேவி யாரைப் பிரிந்து அவரைத் தேடுவதும், இராக்ஷதர்களை அழிக்க எண்ணியிருப்பதும் எனக்குத் தெரியும்; நீங்கள் நினைத்ததை முடிக்கும் வன்மை யுடையவர்களே; எனி

னும், எத்தகையர்க்கும், காரியம் முடிப்பதற்குத் துணை வேண்டும்; நல்ல துணையைக் கொண்டாலே உங்கள் காரியங்கள் நிறைவேறும்; சமீபத்தில் சபரி யென்பவளிருக்கின்றாள்; அவளிடம் நீங்கள் சென்றால், அவள் உங்களுக்குத் துணை சேர்க்கும் மார்க்கங்களையும், ஜெயமடையும் வழிகளையும் கூறுவாள். அவள் சொற்படி நீங்கள் ரிசியமுகபர்வதத்திற்குப் போய் அங்குள்ள சூரிய புத்திரனாகிய சுக்கிரீவனோடு சிநேகங்கொண்டு அவன் துணையால் தேவியாரைத் தேடுங் காரியத்தைச் செய்யுங்கள்" என்று சொல்லி வணங்கி அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு ஆகாயத்திற் கிளம்பிப் போய்விட்டான். அதன்மேல், இராமலக்குமணர்கள் அவ்விடத்தைவிட்டுப் பிரயாணமாகி நடந்து சூரியாஸ்தமன காலத்தில் மதங்காசிரமம் போய்ச் சேர்ந்தார்கள்.

சபரிமோக்ஷம்.

அந்த மதங்காசிரமம் மிகவும் செழிப்புடையதாய்த் தெய்வலோகத்தை நிகர்த்திருந்தது. அங்கே போய்ச் சேர்ந்ததும், இராமர், தம்மைத் தரிசிக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் நெடுங்காலமாகத் தவஞ் செய்துகொண்டிருந்த சபரியைக்கண்டு, "நீ சுகமாயிருக்கிறாயா?" என்று வினவினார். அப்போது சபரி, கண்களில் ஆனந்தக்கண்ணீர் பெருக அவரை ஸ்தோத்திரஞ்செய்து, இராம லக்குமணர்களை நோக்கி, "புண்ணிய புருஷர்களே! என்னுடைய தவப் பயனால் நீங்கள் வந்து எனக்குத் தரிசனங் கொடுத்தீர்கள்; இனி எனக்கு நற்பதவி கிடைப்பதில் தடையில்லை" என்று அவர்களைத் தன்னிருப்பிடத்திற் கழைத்துக் கொண்டு போனாள். அப்போது சிவனும், பிரமாவும், இந்திரனும், மற்ற தேவர்களும் வந்து, சபரியை நோக்கி, "உன் தவத்திற்குப் பலன் கிடைக்குங்காலம் வந்துவிட்டது; நீ ஸ்ரீராம

ருக்கு வேண்டிய பூஜைகளைச்செய்து மோக்ஷமடைவாயாக” என்று வாழ்த்தினார்கள். அதன்மேல் சபரி, இராமரைப் பார்த்து, “சுவாமி! நீர் எப்பொழு தெனக்குத் தரிசனங் கொடுப்பீரோவென்று நான் வழிபார்த்துக்கொண் டிருந் தேன்; என்னுடைய கோரிக்கை இப்பொழுது நிறைவே றிற்று” என்றாள். இராமரும் அவளைநோக்கி, “சபரி! உன் னிடத்தில் வந்து சேர்ந்ததனால் நாங்களும் எங்களுடைய மனவருத்தம் தீரப்பெற்றோம்” என்றார். பின்னர் சபரி, நல்ல பழவர்க்கங்களைக் கொண்டுவந்து வைத்து உண்ணும் படி இராம இலக்குமணர்களை வேண்டினாள். அவர்கள் அவ் வாறே அவற்றை உண்டு இளைப்பாறி அன்று அவ்விடத்தி லிருந்தார்கள். அப்போது சபரி, சுக்கிரீவனிருக்கும் பர்வ தத்திற்குப் போகிற மார்க்கத்தை இராம லக்குமணர்களுக் குச் சொல்லி யோக முதிர்ச்சியால் தேகத்தை நீத்து முத்தி யடைந்தாள். அதன்மேல் இராமரும், இலக்குமணனும் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுப் பம்பா நதியின் பக்கத் திற் போய்ச் சேர்ந்தார்கள்.

கிட்கிந்தா காண்டம்.

இராம இலக்குமணர்கள் அனுமாரைக் காணல்.

பிற்பகல் நேரத்தில் பம்பாநதி யருகிற் போய்ச் சேர்ந்த இராம லக்குமணர்கள், அந்நதியின் சிறப்புக்களைப் பார்த்துக் கொண்டே போய் அந்நதிக்கரையைச் சேர்ந்தார்கள். அப் போது இராமர் அங்கே சீதையின் அவயவங்களை நிகர்த்து விளங்கிக்கொண் டிருந்த பொருள்களைப் பார்த்துச் சீதை யின் எண்ணம் தமக் குதித்தமையால் வருந்தினார். அவ ருடைய வருத்தத்தைக் கண்ட இலக்குமணன், அவரை

நோக்கி, "அண்ணு! வருந்திக்கொண் டிருப்பதற்கு இது தருணமன்று; நாழிகையாகிவிட்டது; விரைவில் சந்தியா வந்தனத்தை முடித்துக்கொள்ளுங்கள்" என்முன். இராமர் அவ்வாறே அந்நதியில் ஸ்நானஞ்செய்து சந்தியா வந்தனத்தை முடித்துக்கொண்டு இலக்குமணனுடனே, முனிவர்கள் வாசஞ்செய்யும் ஒரு சோலையில் தங்கியிருந்தார். அப்போது சூரியன் அஸ்தமிக்க அந்திப்பொழுது வந்தது. அன்றிரவெல்லாம் இராமர் நித்திரை கொள்ளாமல் சீதையை நினைத்து வருந்திக்கொண்டே யிருந்தார். பின் அவ்விரவு கழிந்து சூரியன் உதயமானுன்.

அதன்மேல் இராம லக்குமணர்கள் பிரயாணமாகி ரிசியமுகபர்வதம் போய்ச் சேர்ந்து அதன் மேலேறினுர்கள். அதில் வாசஞ் செய்துகொண் டிருந்த வானரங்களுக் கரசனுன சுக்கிரீவன், நளன், நீலன், அனுமான் முதலிய சில வானர வீரர்களோடு ஓரிடத்திலிருந்து இராமலக்குமணர்களைக் கண்டு, "யாரோ சத்துருக்கள் வருகிறுர்கள்" என்றுபயந்தோடி ஒருமறைவான இடத்திலிருந்து கொண்டு அனுமாருக்கு இராமலக்குமணர்களைக் காட்டி, "இவர்கள், நம் பங்கவனுன வாலி யனுப்பவந்த விரோதிகளா யிருப்பார்களோ ? இவர்களை நன்முக ஆராய்ந்து பார்" என்று சொல்லிவிட்டு மற்றவர்களுடன் ஒரு குகையிற் புகுந்து மறைந்து கொண்டான்.

அப்போது அனுமார், சுக்கிரீவன் முதலானவர்களுக்குத் தைரியங்கூறி, "நீங்கள் இவ்விடத்திலேயே இருங்கள்; நான் போய் அவர்களை அறிந்து வருகின்றேன்" என்று ஒரு பிராமணச் சிறுவன் போல வடி வெடுத்துக்கொண்டு இராமலக்குமணர்களுக் கெதிரில் நடந்து சற்று தூரத்திற் போகும் போதே அவர்களுடைய வடிவத்தைப் பார்த்து, "இவர்

களுடைய கையிலோ வில்லிருக்கின்றது; உருவமோ தவசிகளின் வடிவாயிருக்கின்றது; ஆதலின், இவர்கள் யாராயிருப்பார்கள்? இவர்களுடைய இயற்கையைப் பற்றி நாம் நன்றாக ஆலோசிக்க வேண்டும்” என்று சற்று சமீபத்திற் சென்றவுடன், ஓரிடத்தில் மறைந்து நின்றுகொண்டு மேலும் அவர்களுடைய உருவங்களை நன்றாக உற்று நோக்கி, “இவர்கள் தேவசொரூபமாய் விளங்குகிறார்கள்; ஏதோ மனக்கிலேச முற்றிருக்கின்றார்கள்; ஓர் அருமையான பொருளை யிழந்து அதனை இவர்கள் தேடிக்கொண்டு வருகிறார்களென்பதை இவர்களுடைய முகக்குறிப்பு விளக்குகின்றது. மேலும் இவர்கள், ஜீவதயை உள்ளவர்களாயும், பரோபகாரிகளாகவும், கோபமற்றவர்களாயும், மகா சுந்தர புருஷர்களாயும், சுத்தவீரர்களாயும் விளங்குகின்றார்கள். இங்குள்ள கொடிய மிருகங்கள், பக்ஷிகள் முதலியவைகளெல்லாம் இவர்களுக்கு இதத்தையே செய்துவருகின்றன; நமக்கும் இவர்களிடத்தில் நேசப்பான்மையே உண்டாகிறது; ஆதலின், இவர்கள் புண்ணிய புருஷர்களாகவே யிருப்பார்கள்; நாம் சந்தேகமின்றி இவர்களிடம் செல்லலாம்” என்று அவர்களுடைய கண்ணுக்குத் தம்முடைய உருவம் புலப்படும்படி நெருங்கிச் சென்றார். அவர்களும் சமீபத்தில் வந்தார்கள்.

அப்போது அனுமார் அவர்களை நோக்கி, “நீங்கள் நினைத்துவந்த காரியம் நிறைவேறுவதாக; நீங்கள் யார்? இங்கே எதையுத்தேசித்து வந்தீர்கள்?” என்றார். இராமர், அவரை நோக்கி, “நீ நல்லவனாக விளங்குகின்றாய்; நீ யாவன்?” என்று வினவினார். அதற்கு அனுமார், “சுவாமி! நான் வாயு தேவனுக்கும் அஞ்சனாதேவிக்கும் பிறந்த புதல்வன்; என் பெயர் அனுமான்; இந்தப் பர்வதத்தில் வாசஞ்செய்கின்ற சூரிய புத்திரராகிய சுக்கிரீவருக்கு

நான் ஏவல் செய்பவன்; அவர் உங்களைக் கண்டு யாரென்று விசாரித்து வரும்படி என்னை அனுப்ப, நான் இங்கு வந்தேன்" என்றார். இந்தவார்த்தைகளை இராமர் கேட்டு, அனுமாரை உத்தமரென்று தெரிந்துகொண்டு இலக்குமணனை நோக்கி, "தம்பி! இவன் சகலகலைகளையுங்கற்ற புத்திமானாய் விளங்குகின்றான்; இவன் கொண்டிருக்கும் இவ்வடிவம் எதார்த்தமானதன்று; இவனுக்கு வேறே உயர்ந்த வடிவமிருக்குமென்பது எனக்கு விளங்குகின்றது" என்று சொல்லிவிட்டு மீண்டும் அனுமாரை நோக்கி, "உன்னுடைய இறைவன் எங்கே யிருக்கின்றான்? அவனைப்பார்ப்பதற்கே நாங்கள் வந்தோம்; அவனை எங்களுக்கு நீ காட்டுவாயாக" என்றார். அனுமார், "சுவாமி! துன்பக் கடலில் மூழ்கியிருக்கும் எங்கள் சுக்கிரீவரை நீங்கள் பார்க்கவந்ததால், அவர் மிக்க பாக்கியசாலியாய்விட்டார்; அவர், இந்திர குமாரனான வாலி செய்யும் துன்பத்தைச் சகிக்க முடியாமல் அவனுக்குப் பயந்தோடி வந்து இந்தப் பர்வதத்தில் என்னுடனே யிருக்கிறார்; தாங்கள் வந்ததால் எங்கள் தலைவருடைய துன்பம் அகலுவது நிச்சயம்; சத்துருவுக்குப் பயந்தொடுங்கியவனை இரக்ஷிப்பது சிறந்ததர்மமன்றோ? எங்களிறைவரைக் காப்பது உங்களுக்கெளிதான காரியமே; ஆதலால் நீங்கள் எங்களை இரக்ஷிக்கவேண்டும்; உங்களை இன்னாரென்றறியச் சுக்கிரீவர் விரும்பி யிருப்பதால், நீங்கள், உங்களுடைய விருத்தாந்தத்தை அவருக்குக் கூறும்படி என்னிடம் விவரமாக உரைத்தருளவேண்டும்" என்றார்.

இலக்குமணன், இராமருடைய விருத்தாந்தங்களையெல்லாம், இராவணன் செய்த வஞ்சனைவரையில் கூறினான். அவற்றைக் கேட்டவுடனே அனுமார் ஓடிவந்து இராமருடைய பாதங்களில் விழ்ந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார். இராமர் அவரை நோக்கி, "நீர் பிராமணரா யிருந்தும் என்

இத்தகாதகாரியத்தைச் செய்கின்றீர்?" என்றார். அநுமார், "சுவாமி! நானும் வானரகுலத்தைச் சார்ந்தவனே; தங்களுடைய உண்மை வரலாற்றை உணர்ந்துகொள்ளு முன் என்னுடைய எதார்த்த வடிவத்தைக் காட்டக்கூடாதென்று நினைத்தே நான் பிராமணச் சிறுவனாக வடிவெடுத்து வந்தேன்; இதோ என்னுடைய உண்மைச் சொரூபத்தைக் காட்டுகிறேன் பாருங்கள்" என்று தம்முடைய உண்மைவடிவம் விளங்கும்படி விசுவரூபங்கொண்டு நின்றார். அவ்வடிவத்தைப் பார்த்தவுடனே இராமர் அதிசயித்து, இலக்குமணனை நோக்கி, "தம்பி! வேதங்களாலும் உணரப்படாத அந்தப் பரமசொரூபமே இவ்வுருவமெடுத்து வந்தது; இவ்வடிவத்தைக் கண்டது நமக்கு நன்னிமித்தமாகும்; இந்த மகாவீரனுடைய சேர்க்கை நமக்கேற்பட்டதனால் நம்முடைய துன்பமெல்லாம் அகல்வதுநிச்சயம்; அந்தச் சுக்கிரீவன், இத்தகைய புருஷனைத் தனக்கு ஏவலாளாகப் பெற்றிருப்பதால், மகாவல்லமை யுடையவனாயிருப்பான்; அவனுடைய உறவும் நமக்கவசியமானதே" என்று கூறி முகமலர்ச்சி யுற்றிருந்தார். அப்போது அனுமார், தம்முடைய விசுவரூபத்தை அடக்கிக்கொண்டு இராம லக்குமணர்களை நோக்கி, "நீங்கள் இவ்விடத்திலேயே இருங்கள்; நான் சென்று சுக்கிரீவரை அழைத்துக்கொண்டு வருகின்றேன்" என்று அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு திரும்பிச் சென்றார்.

இராமர் சுக்கிரீவனுடன் நட்புக்கோள்ளல்.

மேற்கூறியபடி சென்ற அனுமார் சுக்கிரீவனிடம் சேர்ந்து "உம்முடைய சத்துருவாகிய வாலியின் உயிரை வாங்குதற்குக் காலர் வந்திருக்கின்றார்" என்று ஆனந்தக் கூத்தாடினார். சுக்கிரீவன் மகிழ்ந்து, "அவர்கள் யாவர்?"

என்றுவினவினன். அனுமார், இராமலக்குமணர்களுடைய விருத்தாந்தங்களை யெல்லாம் கூறி மேலும் சுக்கிரீவனை நோக்கி, "ஐயா! அந்த மகாபுருஷர்களில் இராமர், ஒரு நிமிஷ நேரத்தில் வாலியின் உயிரைப் போக்கிவிடுவார்; உமக்கு நல்லகாலம் பிறந்துவிட்டது; அவருடைய வல்லமையை உணராமல் இராவணன், அவர் தேவியாராகிய சீதாபிராட்டியாரை வஞ்சனையாக அபகரித்துக்கொண்டு போயிருக்கின்றான்; ஆதலின் அவரும் இலக்குமணரும், அத்தேவியாரைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறார்கள்; உம்மையும் காண விரும்புகிறார்கள்; ஆதலின் நீர் தாமதிக்காமல் அவரைக் காணுதற்குப் புறப்படுவீராக" என்றார். உடனே சுக்கிரீவன், அனுமாருடனே புறப்பட்டுப் போய்ச் சற்று தூரத்திலிருக்கும்போதே இராமலக்குமணர்களுடைய வடிவங்களைக் கண்டு அதிசயித்துப் பலவாறு அவர்களைப் புகழ்ந்து பின்னர் சமீபத்திற் சென்று அவர்களைக் கண்டு வணங்கினன். இராமர், சுக்கிரீவனையும், அனுமாரையும் பக்கத்தி லுட்காரும்படி ஆக்ஞாபித்தார். அவர்கள் அங்ஙனமே இருந்தார்கள். அப்போது சுக்கிரீவன் இராமரைநோக்கி, "சுவாமி! உம்முடைய உறவு எனக்குக் கிடைத்தபடியினாலே, நான் மிகுந்த பாக்கியசாலியாய் விட்டேன்" என்றான். இராமர், "நாங்கள், சீதையின் பிரிவால் மனக்கவலைகொண்டு வந்திருக்கின்றோம்; எங்கள் கவலை உன்னால் ஒழியுமென்று சபரி கூறினாள்; அதனாலேயே நாங்கள் உன்பால் வந்தோம்" என்று கூறினார். சுக்கிரீவன், "சுவாமி! தங்களுக்கு என்னாலியன்ற உதவியைச் செய்ய அடியேன் காத்துக்கொண் டிருக்கிறேன்; ஆனால் நான், என் தமையனை வாலிக்குப் பயந்து இந்த மலையில் வந்து மறைந்துகொண் டிருக்கிறேன்; அவன் இந்த மலைக்கு வரக்கூடாதாகையால் என் உயிர் நிலைத்திருக்கின்றது ;ஆதலின், இத்

துன்பத்தைத் தாங்கள் நீக்கி யருளவேண்டும்" என்றான். இராமர், "இனிமேல் அத்தகைய துன்பமொன்றும் உனக்கு வராது;

"மற்றினி யுரைப்ப தென்னே வானிடை மண்ணி னின்னைச்
செற்றவ ரென்னைச் செற்றார் தீயரே யெனினு முன்னோ
டுற்றவ ரெனக்கு முற்றா ருன்கிளை யெனதென் காதற்
சுற்றமுன் சுற்ற நீயே யின்னுயிர்த் துணைவ னென்றார்"

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் வானரர் மகிழ்ந்தனர். அனுமாருடைய தேகம் புளகித்தது. உடனே அவ்வனுமார் எழுந்து இராமரை நோக்கி, "சுவாமி! எங்கள் சுக்கிரீவருடைய திருமாளிகைக்குத் தாங்கள் எழுந்தருளவேண்டும்" என்று கூறினர். இராமர் அதற்கிசைந்தார். எல்லோரும் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுச் சோலையின் மத்தியில் அலங்காரமாய் அமைக்கப் பட்டிருந்த அரண்மனை சேர்ந்தார்கள். ஒரு புஷ்பமெத்தையில் இராமரும், சுக்கிரீவனும் அமர்ந்தார்கள். சுக்கிரீவன் செய்த குறிப்பால் அநேக வானரர்கள் சென்று நற்சுவையுள்ள கனிவகைகளையும், கந்த மூலங்களையும், கொண்டுவந்து சேர்த்தார்கள். சுக்கிரீவன் விருப்பப்படி இராமர், ஸ்நானஞ்செய்து, அக்கனிவகைகளை உண்டார். இலக்குமணனும் அங்ஙனமே விருந்துண்டான். அதன்மேல், இராமர் சுக்கிரீவனுடைய குடும்ப இயற்கையைத் தெரிந்துகொண்டு அவனை நோக்கி, "துணைவ! நீயும் என்னைப்போல ஸ்திரீயைப் பிரிந்தவனாகக் காணப்படுகின்றாய்" என்றார். உடனே அனுமார் எழுந்து நின்று சுக்கிரீவன் சரித்திரத்தைக் கூறத்தொடங்கினவராய் இராமர் திருமுகத்தை நோக்கி, "சுவாமி! வாலியென்பவன் ஒருவனிருக்கின்றான்; அவன் சிவனுடைய வரம் பெற்றவன்; மிகுந்த பலசாலி; அவனுடன் எவரேனும் யுத்தஞ்செய்ய எதிர்த்தால் அவர்களுடைய பலத்திற் பாதி அவனுக்கு

வந்துவிடும் ; அவனுடைய வால்வல்லமைக்கு முன்னே இராவணனுடைய வலிமைசெல்லாது ; அவனிடத்தில் எழுபது வெள்ளம் வானரசேனைகள் உண்டு ; அவன் ஒருகாலத்தில் இராவணனை வாலில் கட்டிக்கொண்டு எங்கும் திரிந்தவன்; மேலும் அவன் இந்திரனுக்குப் பிறந்தவன் ; வெள்ளை மேனியன் ; ஒரே தாய்வயிற்றில் இந்தச் சுக்கிரீவருக்கு முன்னே பிறந்தவன் ; அவன் முன்னே எங்களுக் கரசனு யிருந்தான் ; இந்தச் சுக்கிரீவர் இளவரசரா யிருந்தார். இப்படி நாங்கள் ஒற்றுமையாயிருந்து வாழுங்காலத்தில், ஒரு சமயம் ஓர் அசுரன் வாலியோடு யுத்தஞ்செய்யவந்தான். அவ்விருவருக்கும் யுத்தம் நடந்தபோது, அவ்வசுரன், போருக்கிளைத் தோடினன். வாலி, அவனை விடாமல் தொடர்ந்தோடினன். அசுரன் பூமியை விட்டுப் பாதாளத்திற்குச் செல்லும் பிலத்துவாரத்திற் புகுந்தான். அப்போது வாலி, சுக்கிரீவரை யழைத்து, 'நான் இதற்குட் புகுந்து அசுரனைக் கொன்றுவிட்டு விரைவில் திரும்பி விடுவேன் ; நான் வரும்வரை நீ இத்துவாரத்தின் வாயிலைக் காத்துக்கொண்டிரு' என்று அங்கே காவல் வைத்துவிட்டு அப்பிலத்துவாரத்திற் புகுந்து போய் விட்டான். சண்டை முடிவு பெறாததால் இருபத்தெட்டு மாதங்கள் வரையில் அவன் திரும்பி வரவில்லை. அதனால், சுக்கிரீவர் மிகுந்த துயரத்தை யடைந்தார். அப்போது நானும், மற்றவர்களும் சுக்கிரீவருக்குத் தேறுதல் கூறி, வாலியின் இராஜ்ஜியத்தை நடத்தும்படி இவரை வேண்டினோம். இந்தச் சுக்கிரீவர் அதற்கிசையாமல், 'நான் இந்தப் பிலத்துவாரத்திற்குட் சென்று என் தமையனைத் தேடிப்பார்த்து அவர் இருந்தால் அவரை அழைத்து வருகின்றேன் ; இறந்து போயிருந்தால் அவரைக் கொன்றவனைக் கொல்லுகிறேன் ; அது முடியாமற் போனால் நானும் இறந்துபோகின்றேன்' என்று அந்தப்

பிலத்தில் நுழையப்போனார். அப்போது சில பெரியோர்களும், நானும் இவரைத் தடுத்து, 'நீரும் இறந்துபோய் விட்டால் இராஜ்ஜியம் அழிந்து போகும்; ஆதலின் நீர் இருந்து இராஜ்ஜியத்தை நடத்துவதே சிறந்த தர்மம்' என்று இவருக்குக் கூறினோம். எங்களுடைய கட்டாயத்தின் பேரில் இவர் இராஜ்ஜியத்தை அரை மனதோடு ஒப்புக்கொண்டார். அதன்மேல், அந்த அசுரன் ஒரு சமயம் வாலியைக் கொன்றுவிட்டு இந்த வழியாகத் திரும்பிவந்து நமக்குத் துன்பஞ் செய்யக் கூடுமென்று பயந்து, நாங்கள், மலைகளைப்பிடுங்கிக் கொண்டுவந்து போட்டு அந்தப் பிலத்துவாரத்தின் வழியை அடைத்துவிட்டோம். இவ்வாறு நாங்கள் செய்துவிட்டுக் கிட்கிந்தா பர்வதத்தில் இருக்கும்போது, எங்களால், இறந்துபோனானென்று கருதப்பட்ட வாலி, நாங்கள் எண்ணியபடி இறவாமல், அவ்வசுரனைக் கொன்று களிப்புடன் திரும்பிவந்து பிலத்துவாரம் அடைக்கப்பட் டிருப்பதைக் கண்டு தம்பியைக் கூவிப் பிரதிதொனியொன்றும் வாராததால், சுக்கிரீவர் தன்னையொழித்து இராஜ்ஜியத்தைக் கைக்கொள்ளக்கருதி வஞ்சனை செய்தாரென்று தப்பபிப்பிராயங்கொண்டு மிகுந்த கோபத்தோடு பிலத்துவாரத்தை அடைத்துக் கொண்டிருந்த மலைகளையெல்லாம் காலால் உதைத்துத் தள்ளிவிட்டு எமனைப்போல் சீறிக்கொண்டு எங்களிடம் வந்து, 'ஏன் இத்தகைய வஞ்சனை செய்தீர்கள்?' என்று வினவினான். நாங்கள் நடந்த உண்மையைக் கூறினோம்; அவன் அதை நம்பாமல் கடுஞ்சினமடைந்து சுக்கிரீவரைப் பிடித்துக் குத்திக் கொல்ல ஆரம்பித்தான்; இவர் உபத்திரவஞ் சகிக்காமல் பயந்தோடினார். இவர் அவ்வாறு ஓடி, அண்டச்சுவர்மட்டும் சென்றும் அவன் விடாமல் தொடர்ந்துபோய் இவரைப் பிடித்துத் தரையில் மோதும்படி எறிந்தான். அவ்வாறு

எறியும்போது இவர் அவனுடைய கையினின்றும் நழுவிப் பூமியில் மோதப்படாமல் உயிர் தப்பி இப்பர்வதத்தில் வந்து சேர்ந்து விட்டார். அவன் இந்த மலைமே லேறினால் அவனுக்குத் தீங்கு நேருமென்று சாபம் ஏற்பட்டிருப்பதால் அவனால் இந்தப் பர்வதத்திற்கு வர முடியவில்லை. அதனால் அவன், இவரை விட்டுவிட்டு, இவருடைய மனைவியாகிய உருமை யென்பவளை அபகரித்துக்கொண்டு கிட்கிந்தையி லிருக்கிறான். இவர், அது முதல் சகல சிறப்புக்களையு மிழந்து இந்த மலையிலே வசித்துக்கொண் டிருக்கிறார்; இவரைச் சார்ந்த நாங்களும் இவருடனேயே தங்கியிருக்கின்றோம்; நீங்கள் வந்திருப்பதால் இனி இவருடைய துன்பம் நீங்குமென்று நினைக்கிறோம்" என்று கூறினார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே இராமருக்கு வாலியின்மீது மிகுந்த கோப முண்டாயிற்று. அதனால் அவர், சுக்கிரீவனை நோக்கி, "வானராதிப! நீ நிரபராதியா யிருந்தும் உண்மை யுணராமல் உனக்கு இத்தகைய தீங்குகளைச் செய்த அந்த வாலியை நாம் ஒழித்து, இராஜ்ஜியத்தை உன் வசப்படுத்துகின்றோம்; விரைவில் அவ்வாலியிருக்குமிடத்தை எமக்குக்காட்டு" என்றுரைத்தார். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் சுக்கிரீவனுக்கு அளவற்ற சந்தோஷ முண்டாயிற்று; எனினும், வாலி "மகா வல்லமையுடையவன்; இவரால் அவனைக் கொல்லுதல் இயலுமோ?" என்று சந்தேக முண்டாயிற்று. அதனால் அவன் இவ்விஷயத்தைப் பற்றித் தீர்க்காலோசனை செய்வதற்கு, அனுமார் முதலான சில மந்திரிகளை அழைத்துக் கொண்டு போய் ஒரு பக்கத்திலிருந்து, யோசிக்கத் தலைப்பட்டான். அப்போது அனுமார் அவனை நோக்கி, "உம்முடைய உள்ளக்கருத்தை நான் உணர்ந்து கொண்டேன்; வாலியை

வதைக்கத்தக்க வலிமை இராமரிடத்தில் இருக்குமோ இராதோவென்று நீர் சந்தேகப் படுகின்றீர்; அச்சந்தேகத்தை ஒழித்து விடும்; இராமருடைய திருக்கரங்களிலும் திருவடிகளிலும் சங்குசக்கர இரேகைக ளிருக்கின்றன; இக்குறிகள் நாராயணருக்குத்தான் உண்டு; இக்குறியால் நாராயணரே இராமராக அவதரித் திருக்கின்றா ரென்பது விளங்குகின்றது; மேலும் இன்னொரு குறிப்பினாலும் நான் இவரை ஸ்ரீ மகாவிஷ்ணு சொரூபமென்றே உணர்ந்து கொண்டேன்; எங்ஙனமெனில், நான் உதித்தகாலத்தில் என் தந்தையாகிய வாயுபகவான், என்னிடத்தில், 'நீ, இனி இராமாவதாரமாகிவரும் நாராயணருக்கே தொண்டு செய்து கொண்டிரு; அதனால் உனக்கு நற்பதவி கிடைக்கும்; அவர் இராமராக அவதரித்து வருங்காலத்தில் நீ அவரைத் தெரிந்து கொள்வதற்குச் சில குறிப்புக்கள் உண்டு; அவைகளாவன: அவர், தம்முடைய பக்தர்களுக்கு ஆபத்து நேர்ந்த காலத்தில் அதனை நீக்குவதற்கு உடனே அவர்களிடம் பிரசன்னமாவார்; அவரைக் கண்ட மாத்திரத்தில் உனக் கவர்மீது அளவில்லாத அன்பு ஏற்படும். இக்குறிப்புக்களால் நீ அவரை உணர்ந்து கொண்டு அவருக் கடிமையாகிவிடு' என்று கூறினார். அவர் கூறியபடியே இவரிடத்தில் இப்பொழுது அக்குறிகளெல்லாம் காணப்படுகின்றன. அந்த மகாவிஷ்ணுவே இவராயிருக்கும்போது இவர் வாலியைக் கொல்வதில் என்னதடை யிருக்கிறது; இன்னும் உமக்குச் சந்தேகமிருக்குமானால் இங்கே, ஒருவராலும் பாணத்தால் ஊடுருவ எய்ய முடியாதபடி வயிரமுற்று வளர்ந்திருக்கின்ற ஏழு மாமரங்களில் ஒன்றின்மேல் பாணப்பிரயோகம் செய்யும்படி இராமபிரானிடம் நீர் வேண்டிக் கொள்ளும்; அவர் அவ்வாறே அதில் அம்பைச் செலுத்துவார்; அந்தப்பாணம் அம்மரத்தை ஊடுருவிக்கொண்டு

போய் விடுமேயானால் இவர் வாலியைக் கொல்வது நிச்சயமென்று நீர் தெரிந்துகொள்ளும்” என்று கூறினார். (அங்கே ஏழுமராமரங்கள் உண்டு; அவை எவராலும், அம்பால் ஊடுருவ எய்ய முடியாதவைகள்; ஆதலின், அவற்றில் ஒன்றையேனும் பாணம் ஊடுருவ எய்பவர்கள் எவரையும் வெல்லும் வல்லமையுடையவர்களாவார்கள் என்பது இவர்களுடைய எண்ணம்.)

இராமர், ஏழுமராமரங்களையும் ஒரேபாணத்தால் துளைத்தல்

அவ்வாறு அனுமார் கூறவே, சுக்கிரீவன் முதலிய எல்லோரும், ‘இது நல்ல உபாயந்தான்; இராமருடைய வன்மையை இதன்மூலம் தெரிந்து கொள்ளலாம்’ என்று சந்தோஷித்தார்கள். அதன்மேல் சுக்கிரீவன் இராமரிடத்தில் வந்து, “சுவாமி! வெளியில் சற்றுதூரம் சென்று உலாவிவரலாம்; எழுந்தருள வேண்டும்” என்று அவரை மராமரங்களிருக்கு மிடத்திற்குத் தந்திரமாக அழைத்துக்கொண்டு போனான். யாவரும் அவர்களுக்குப் பின்னே சென்றார்கள். எல்லோரும் மராமரங்க ளிருக்குமிடத்திற்குப் போனவுடன், சுக்கிரீவன், ஆகாயம்வரை அளாவி வளர்ந்திருந்த அந்த மரங்களை இராமருக்குக் காட்டி, “சுவாமி! தங்களுடைய வில்வல்லமையைத் தெரிந்துகொள்ள நாங்கள் விரும்புகிறோம். ஆதலின் இந்த மரங்களில் ஒன்றில் ஊடுருவிச் செல்லும்படி தாங்கள் பாணப் பிரயோகஞ்செய்து எங்களுக்குக் காட்டவேண்டும்” என்று கூறினான். இராமர் அவனுடைய அந்தரங்க எண்ணத்தை உணர்ந்து கொண்டு புன்சிரிப்புடன் அந்த மராமரங்களின் சமீபத்திற்போய் நின்று வில்லைவளைத்து நாணேற்றிட்டு ஓரம்பையெடுத்து வில்லிற்றொடுத்து அம் மரங்களின்மீது குறிவைத்து இழுத்துவிட்டார். அந்தப் பாணமானது ஏழுமரங்களிலும் பாய்ந்து

ஊடுருவிச்சென்றது. சுக்கிரீவன் ஒரு மரத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல, இராமர் ஏழுமரங்களையும் துளைக்கும்படி அஸ்திரப் பிரயோகம் செய்ததைப் பார்த்தவுடன் அங்கு நின்றவர்களெல்லோரும் அதிசயத்தால் பிரமித்துப் போனார்கள். சுக்கிரீவன் அடைந்த ஆச்சரியத்திற்கும், ஆனந்தத்திற்கும் அளவில்லை. அதனால் அவன்,

"வய்யநீ வானுநீ மற்றுநீ மலரின்மேல்
அய்யனீ யாழிநீ யாழிவா ழமலனீ
செய்யதீ வினைதெறுந் தேவுநீ நாயினேன்
உய்யவந் துதவினா யுலகமுண் டுதவினாய்"

என்று இராமபிரானை ஸ்துதிசெய்தான். இவன் இவ்வாறு துதிக்க,

"ஆடினார் பாடினா ரங்குமிங் குங்கலந்
தோடினா ருவகையின் னறவையுண் டுணர்கிலார்
நேடினாம் வாலிகா லனையென நெடிதுநாள்
வாடினார் தோளெலாம் வளரமற் றவரெலாம்."

இவ்வாறு எல்லோரும் இராமரைத் துதித்துக்கொண்டாடிய பின், அவ்விடத்திற்குச் சமீபத்தில் மலையின்மேல் ஒரு மலை கிடப்பதுபோல் ஒரு பிரமாண்டமான சரீரத்தின் எலும்பு கிடக்க, அதனை இராமர் பார்த்து, "இஃதென்ன?" என்று சுக்கிரீவனிடம் வினவினார்.

துந்துபியின் வரலாறு.

சுக்கிரீவன், இராமரிடத்தில் அதன் விருத்தாந்தத்தைச் சொல்லத் தொடங்கி, "சுவாமி! முன்னே துந்துபி யென்னும் பெயரினையுடைய ஓர் அசுரனிருந்தான்; அவன் மகா பலவந்தன்; தலையில் இரண்டு கொம்புகளுடையவன்; மந்தரமலையை நிகர்த்த சரீரமுடையவன்; அவன், தன்னுடன் யுத்தஞ்செய்பவ ரொருவருமில்லாதபடியால் செருக்

குற்று மகா விஷ்ணுவோடு யுத்தம் புரியலாமென்று அவர் பள்ளிகொண்டிருந்த திருப்பாற் கடலுக்குப் போனான். அவர் அவனை நோக்கி, 'நீ எதன் பொருட்டிங்குவந்தாய்?' என்று கேட்டார். அவன், 'உம்முடனே போர்புரிதற்கு நான் வந்தேன்' என்றான். அதற்கு விஷ்ணு, 'உன்னுடன் யுத்தம் புரியத்தக்கவர் சிவனே; ஆதலால், நீ அவரிடத்திற்குப்போ' என்றார். அவன் உடனே கைலையங்கிரிக்குச் சென்று அதனைத் தன்னுடைய இரண்டு கொம்புகளாலும் பெயர்த்தான். அப்போது சிவன், 'உனக்கெது விருப்பம்?' என்று அவனைக் கேட்டார். அவன், 'நீர் என்னுடன் யுத்தஞ் செய்யவேண்டும்; அதுதான் யான் விரும்பியது' என்றான். அதைக் கேட்ட சிவபெருமான், 'மிக்க பலசாலியாகிய உன்னோடு போர்புரிய என்னாலாகாது; ஆதலால், நீ தேவர்களிடத்திற்குப் போ' என்றார். அதன்மேல் அவன் தேவர்களிடம் சென்றான். அப்போது தேவர்களில் ஒருவன் அவனை நோக்கி, 'நீ நெடுங்காலம் இளைக்காமல் போர்புரியத் தக்கவன்; அத்தகைய உனது தோளின்தினவு தீரும்படி நீடித்த காலம் போர்புரியத் தக்கவர் இங்கில்லை; ஆதலின், நீ பூவுலகத்திலுள்ள வாலி யென்பவனிடத்திற் சென்றால் அவன் உன்னோடு நீண்ட காலம் போர் தொடுப்பான்' என்றான். அப்படியே அவன் இங்கே வந்து என் தமையனான வாலியிருந்த பர்வதத்தைக் கொம்புகளால் பெயர்த்தான். அப்போது வாலி அவனுடன் எதிர்த்தான்; இருவருக்கும் பல தினங்கள்வரை யுத்தம் நடந்தது. முடிவில் என் தமையன் ஒரு விருக்ஷத்தைப் பிடுங்கி அவன் தலையிலடித்து அவனை வீழ்த்திக் காத்திலெடுத்துச் சுழற்றி மேலே எறிந்தான். அவ்வசுரன் ஆகாயத்திலே உயிர் நீங்கி இந்த மலையின்மேல் வந்து வீழ்ந்தான். அப்போது தான், மதங்கரிஷியால்,

வாலி இந்த மலைக்கு வரக்கூடாதென்ற சாபம் அவ்வாலிக் கேற்பட்டது. அந்தத் துந்துபியினுடைய சரீர எலும்பு தான் இது” என்று சொன்னான். இவற்றை யெல்லாம் கேட்டவுடனே இராமர் இலக்குமணனுக்கு அவ்வெலும் பைச் சுட்டிக்காட்டி, 'இதை அப்பால்தள்ளு' என்று கூறி னார். இலக்குமணன், தன் காற் பெருவிரலினால் அதனைத் தள்ளினான். அவ்வெலும்பு ஆகாயத்தில் நெடுந்தூரம் கிளம் பிப்போய்த் திரும்பிவந்து பூமியில் வீழ்ந்தது. அதுகண்டு, 'இலக்குமணரும் மகா பராக்கிரமமுடையவரே' என்று அங் குள்ள வானர வீரர்களெல்லோரும் சந்தோஷித்தார்கள். பின்னர், எல்லோரும் முன்னிருந்த விடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

இராமர் சீதையின் ஆபரணங்களைக் காணல்.

அதன்மேல் சுக்கிரீவன் இராமரை நோக்கி, “சுவாமி! நாங்கள் சில தினங்களுக்கு முன்னே இவ்விடத்திற் கூடி யிருக்கும்போது, இராவணன், இந்த வழியாய் ஆகாய மார்க்கமாக ஒரு ஸ்திரீயை எடுத்துக்கொண்டு போனான்; இப்போது தங்களுடைய வரலாறு தெரிந்தபின், அந்த அம்மையார் தங்களுடைய திருத்தேவியாராகவே யிருக்க வேண்டுமென்பது எனக்கு விளங்குகின்றது; அந்த அம்மை யார் கதறிக்கொண்டே போகும்போது தமது ஆபரணங் களைக் கழற்றி வஸ்திரத்தில் முடிந்து அந்த முடிப்பை எங்க ளுக்கு நேரே விட்டுவிட்டார்; அந்த முடிப்புக் கீழ் நோக்கி வரும்போது பூமியில் விழாததற்கு முந்தியே நாங்கள் அதனைக் கரத்தில் ஏற்றுக்கொண்டோம். தங்களைச் சார்ந்த வர்கள் வரின் அந்த முடிப்பை அவர்களிடம் காட்டி அந்த அம்மையாரின் விருத்தாந்தத்தை நாங்கள் கூறுவோமென் னும் நோக்கங்கொண்டு அப் பெண்மணியார் இக்காரியத்

தைச் செய்தார்களோ, வேறு எதைக் குறித்துச் செய்தார்களோ அவ்வம்மையாரின் எண்ணத்தை நாங்களறியோம்; அம்முடிப்பை அப்படியே நாங்கள் வைத்திருக்கிறோம்; நீங்கள் அதை அவிழ்த்து அதிலுள்ள ஆபரணங்கள் சீதாபிராட்டியார் அணிந்திருந்தவைதாமா வென்று அவற்றைப் பாருங்கள்" என்று விரைந்துசென்று ஓர் முடிப்பைக் கொண்டு வந்து இராமருக்கு முன்னே வைத்தான். (இவ்வாபரணங்கள் சீதையால் கழற்றிப்போடப் பட்டவையே; அவள் 'இராம லக்குமணர்கள் இவ்வழியாக நம்மைத் தேடிக் கொண்டு வரக்கூடும்; அப்போது இவ்வானரர்கள் இவற்றை அவர்களிடம் கொடுத்து நம் விஷயத்தை உரைக்கக்கூடும்' என்று நினைத்தே இவ்வாபரண மூட்டையை இவர்களுக்கு நேரே போட்டுச் சென்றாள்.)

இராமர் அந்த ஆபரணங்களைப் பார்த்தவுடனே சீதாபிராட்டி அணிந்திருந்தவைகளென்றுணர்ந்து, துக்கமேலிட்டதால் கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகி வடிய ஆவி சோர்ந்து மூர்ச்சித்து விட்டார். உடனே சுக்கிரீவன் அவரை யெடுத்துத் தன் மார்பில் தாங்கிக்கொண்டு அவருடைய நிலைமைக்காக மனங்கலங்கிக் கண்ணீர் விட்டழுது அவர் முகத்தை நோக்கி, "சுவாமி! நான் இந்த ஆபரணங்களைக் காட்டி உமக்கு மிகுந்த துக்கத்தை உண்டாக்கி விட்டேன். ஆயினும் நீர் துயரப்படவேண்டாம்; இராவணன் சீதாபிராட்டியாரை எங்கே கொண்டுபோய் வைத்திருந்தாலும் நான் தேடிக் கொண்டுவந்து திருச்சமுகத்தில் சேர்க்கின்றேன், கேவலம் அந்த இராவணன் தங்களுக்கு முன் எம்மாத்திரம்! அவனைக் கொல்வதற்குத் தாங்கள் முயற்சி யெடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. நானே சென்று இராக்ஷத சேனைகளை யெல்லாம் ஒழித்து அவனையும் மடிக்கின்றேன்; மகாவீர புருஷராகிய உமது தம்பியும், வானர வீரர்களாகிய

நாங்களு மிருக்கும்போது நீர் எதற்காகக் கவலைப் படவேண்டும்! என்னுடைய குறையை வேண்டுமானால் பின்னே தீர்த்துக்கொள்ளலாம்; இப்பொழுது முதலில் எல்லோரும் சேர்ந்து ஜானகியாரைக் கொண்டுவரும் முயற்சியைச் செய்வோம்" என்று அன்பு ததும்பும் வார்த்தைகளைக் கூறினான்.

இந்த வார்த்தைகள் அமுத ஊற்றுப்போலச் சிறிது செவிகளிற் புகவே இராமபிரான் மூர்ச்சை தெளிந்து கண்களைத் திறந்து பார்த்துச் சுக்கிரீவனை நோக்கி, "தம்பி! ஜானகி மிகுந்த துயர்க்கடலில் மூழ்கியிருக்க நான் விரைந்து அவளை மீட்காமலிருக்கின்றேன்; இத்தகைய எனக்கு என்ன சிறப்பிருக்கின்றது" என்று பல துக்கமான வார்த்தைகளைக் கூறிப்புலம்பினார். சுக்கிரீவன் மேலும் சில தைரியமான வார்த்தைகளைச் சொல்லி அவரைத் தேற்றினான். பின்னர் இராமர் துக்கம் நீங்கிச் சுக்கிரீவனை நோக்கி, "சகோதர! உன்னுடைய அமுத மொழிகளால் நான் துயரம் நீங்கப் பெற்றேன்; நீ இப்பொழுது உன் குறையைப் பின்னால் தீர்த்துக்கொள்ளலாமென்று கூறியது தக்கதன்று; எனக்கு எவ்வளவு துன்பங்கள் நேர்ந்திருந்தபோதிலும் முன்னே உன் குறையைப் போக்கிய பின்னர்த்தான் என்னுடைய காரியங்களைக் கவனிக்கவேண்டும்; நான் அடுத்தோரை ஆதரிக்கவே ஜன்ம மெடுத்திருக்கின்றேன்" என்றார். அனுமார், அவருடைய அபிப்பிராயத்தைத் தழுவி, இராமரை நோக்கி, "சுவாமி! தாங்களுரைத்ததே தகுதியானது; அதிற் பல நன்மைகளு மிருக்கின்றன; இராக்ஷதர்களோ மகாமாயையை யுடையவர்கள்; நாம் பிராட்டியாரைத் தேடி வருகிறோமென்று தெரிந்தால் இராவணன் அவரை வெவ்வேறிடங்களில் மாற்றிமாற்றி மறைத்துக்கொண்டே யிருப்பான். நாம், பிராட்டியாரிருக்குமிடம் தெரிந்து

அங்கே சென்றால் அவன் அவரை வேறோரிடத்திற் கொண்டுபோய் விடுவான்; ஆதலால் உலக முழுவதிலும் நான்கு திக்குகளிலும் அநேகர் சென்று தாயாரை ஏக காலத்தில் தேடவேண்டும்; அவ்வாறு தேடுதற்கு அநேகர் வேண்டும். வாலியினிடத்திலோ எழுபது வெள்ளம் வானரசேனைகளிருக்கின்றன; முதலில் வாலியைக் கொன்று சுக்கிரீவருக்கு இராஜ்ஜிய பட்டாபிஷேகம் செய்துவிட்டால் அந்த எழுபது வெள்ளம் சேனையும் தம் வசப்பட்டுப்போம். அவ்வாறாய் விட்டால் பிராட்டியாரைத் தேடுதற்கு அனுகூல மூண்டாய் விடும்" என்று கூறினார். இராமர், "இதுதான் தக்க உபாயம்; இப்பொழுதே நாமெல்லோரும் வாலி யிருக்குமிடத்திற்குச் செல்வோம் வாருங்கள்" என்றார். பின்னர், யாவரும் வாலியிருக்கும் திக்கை நோக்கி நடந்தார் கள்.

வாலி வதை.

இராமர் முதலியவர்கள் மேற்கூறியபடி நடந்து வாலி யிருக்கும் பர்வதம் போய்ச்சேர்ந்தார்கள். அப்போது இரா மர், சுக்கிரீவனைப் பார்த்து, "நீ தைரியமாகப்போய் அந்த வாலியைக் கூவியழைத்து அவனோடு யுத்தஞ்செய்; அத்தரு ணத்தில் நான் அவனைக் கொன்று விடுகிறேன்" என்றார். சுக்கிரீவன் அதற்கிசைந்து, வாலி யிருக்குமிடத்திற்குச் சமீ பத்திற்போய் நின்று, "வாலி! உன்னோடு நான் யுத்தம் புரிய வந்திருக்கின்றேன்; நீ உடனே புறப்பட்டுவா" என்று கர்ச் சித்தான். அப்போது நித்திரை செய்து கொண்டிருந்த வாலியின் செவிகளில் இந்தக் கர்ச்சனை புகவே அவன், உடனே எழுந்து "பர்வதத்தில் பயந்தொளிந்து கிடந்த பயலே! நீ போருக் கழைக்கின்றாய்! இதோ நிமிஷநேரத் தில் நான் உன்னை ஒழித்து விடுகிறேன்" என்று மிகுந்த கோபத்துடன் ஓடிவந்தான். அப்பொழுது அவன் மனைவி

யாகிய தாரை, ஸ்ரீராமர் சுக்கிரீவனுக்குத் துணைபுரிய வந்திருக்கிறாரென்பதைப் பிறர் சொல்லக் கேட்டுணர்ந்திருந்தபடியால் தன் கணவனுக்குத் தீங்கு வருமென்று நினைத்து அவனுக்கு முன்னே வந்து நின்று, "சுவாமி! இத்தனை நாள் வரை பயந்திருந்த உமது தம்பி இப்பொழுது தைரியமாக வந்திருப்பதால் அவருக்குப் பக்கத்துணை ஏற்பட்டிருத்தல் கூடும்; அதனால் உமக்குத் தீங்கு வருமென்று என் புத்தியில் தோன்றுகிறது; மேலும் இன்றைக்கு நல்லநாளுமன்று; ஆதலின் நீர் யுத்தத்திற்குப் போகவேண்டாம்" என்று அவனைத் தடுத்தாள். அதற்கு வாலி, "பெண்ணே! என்னை ஒருவராலும் ஜெயித்தல் முடியாது; ஆதலின், நீ தடை செய்யாதே" என்றான். தாரை அவன் வார்த்தையைக் கேளாமல் மேலும், "பிராணநாதா! ஸ்ரீராமரென்பவர் சுக்கிரீவருக்குத் துணையாய் உம்முடைய உயிரைப் போக்கவந்திருக்கிறாரென்று சிலர் சொல்ல நான் கேட்டேன்; இவ்விஷயம் உண்மையாவென்பதை விசாரித்துக்கொண்டுதான் நீர் யுத்தத்திற்குப் போகவேண்டும்" என்று கூறினாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே வாலி ஆச்சரியமுற்று அவளை நோக்கி, "அடிபேதாய்! இராமர்மீதா இந்த அபவாதமான வார்த்தையை நீ கூறுகின்றாய்! அவர் உலகத்தில் தருமத்தை நிலைநிறுத்த வந்த புண்ணிய புருஷரன்றோ! அவருக்கும் எனக்கும் எவ்வித பகையுமில்லையே; அப்படியிருக்க, கேவலம்! அந்தச் சுக்கிரீவனோடு அவர் சிநேகங்கொண்டு என்னைக்கொல்ல வருவாரா? இது நம்பத்தகாத விஷயம்; நீ பேசாமலிரு; நான் இதோ சென்று சுக்கிரீவனைக் கொன்று வருகின்றேன்" என்று அவளை விலக்கிவிட்டு விரைந்தோடிச் சுக்கிரீவனுக்கு முன்னேபோய் நின்று ஆர்ப்பரித்தான். அப்போது இராமர் வாலியைப் பார்த்துவிட்டு, இலக்குமணனை நோக்கி, "தம்பி! இவன்

எவ்வளவு திடசரீரத்துடன் இருக்கின்றான் பார்" என்றார். இலக்குமணன் அவனைப் பார்த்துவிட்டு இராமரை நோக்கி, "அண்ணா! இந்தச் சுக்கிரீவன், கொஞ்சமும் சகோதர வாஞ்சை யில்லாமல் இத்தகைய வீரனாகிய வாலியைக் கொல்ல இசைந்து நின்றானே! இப்பேர்ப்பட்டவன் அன்னியராகிய நமக்குத் துணை புரிவானென்பது என்ன நிச்சயம்" என்றான். அதற்கு இராமர், "தம்பி! உலகத்தில் எல்லோரும் சகோதர வாஞ்சை யுடையவர்களாயிருக்க மாட்டார்கள்; 'உடன் பிறந்தே கொல்லும் வியாதி' என்றபடி சகோதரர்கள் விரோதப் பான்மையுடையவர்களாகவேயிருப்பார்கள். அப்படி யிருப்பதனாற்றான் பரதனுக்கும், உனக்கும், சத்துருக்கனுக்கும் மகிமை யேற்பட்டிருக்கின்றது; உங்களைப்போல் எல்லோருமிருப்பார்களா? மேலும் சுக்கிரீவன் முதலியவர்கள் மிருக சுபாவ முடையவர்கள்; இவர்களுக்கு உங்களுடைய குணம் போன்ற பெருங்குணம் அமைவது அருமை; அதனோடு வாலியால் இந்தச் சுக்கிரீவன் படாத பாடெல்லாம் பட்டிருக்கின்றான். வாலியின் செய்கைகள் அநீதமானவை. அவற்றை இவனால் எவ்வாறு சகித்தல் முடியும்; ஒரு சமயம் இவன் சகித்திருந்தாலும் அவன் இவனை எந்தச் சமயத்திலாவது கொல்லாமல் விடான். இந்நிலைமையில் இவன் இத்தகைய கொடுங்காரியத்தைச் செய்துதான் தீரவேண்டும்" என்று சமாதானங் கூறினார்.

இப்படி இவர்கள் பேசிக்கொண் டிருக்கும்போதே வாலியும், சுக்கிரீவனும் கைகலந்து யுத்தஞ்செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இவர்களுடைய யுத்தம் பார்ப்பவர்களுக்கு மிகுந்த அச்சத்தை உண்டாக்கக் கூடியதாயிருந்தது. இருவரும் நெடுநேரம் வரை இளைக்காமல் யுத்தஞ்செய்தார்கள். முடிவில் வாலி மிகுந்த உக்கிரங்கொண்டு, சுக்கி

ரீவன் மயங்கும்படி அவனை அடித்துவிட்டான். சுக்கிரீவன் மனந்தளர்ந்து, ஒரு பக்கத்தில் மறைந்துநின்ற இராமரிடம் தந்திரமாக ஒதுங்கி, 'சுவாமி! ஏன் என்னை இவ்வளவு இளைப் படையும்படி விட்டு விட்டீர்கள்' என்னும் குறிப்பு விளங் கும்படி அவர் முகத்தை நோக்கினான். இராமர் வாலிமீது அஸ்திரப்பிரயோகம் செய்யாமலிருந்ததற்குக் காரணம், வாலிக்கும் சுக்கிரீவனுக்கும் பேதம் தெரியாமலிருந்ததே. சுக்கிரீவன், அவ்வாறு வாடிய முகத்துடன் இராமரைப் பார்க்கவே அவர், அவனை அன்புடன் நோக்கி, "சுக்கிரீவ! உனக்கும் அவனுக்கும் வேற்றுமை தெரியாம லிருந்தபடி யால் நான் அவன்மீது அஸ்திரப் பிரயோகம் செய்யாமலிரு ந்து விட்டேன்; நீ இப்பொழுது அடையாளந் தெரியும்படி இதைத் தரித்துக்கொள்" என்று ஒரு கொடிப் பூவை அவன் தலைமீதுசூட்டி அவனை அனுப்பினார். பின்பு சுக்கிரீவன் தைரி யத்துடன் சென்று வாலியை மோதினான். அவன், "இப் பொழுது பயந்தோடிய இவன் திரும்பிவந்து வீரத்துடன் நம்மை மோதுதற்குக் காரணம் என்ன?" என்று சந்தேகித்து முன்னிலும் அதிகமாகக் கோபங்கொண்டு சுக்கிரீவனுடைய உயிர் நிலையில் மாறிமாறிக் குத்தினான். சுக்கிரீவன் மூர்ச்சை யடைந்து சிறிதுநேரம் மயங்கிக்கிடந்து சற்றுத் தெளிவடைந் தெழுந்து இராமரிருக்கும் திக்கை நோக்கி ஓடினான். அப் போது வாலி அவனைவிடாமல் தொடர்ந்து பிடித்துத் தூக் கித் தரையில் மோதப்போனான். அப்போது இராமர், "இனியும் நாம் சும்மாவிருந்தால் வாலி, சுக்கிரீவனைக் கொன்று விடுவான்." என்று நினைத்து ஒரு பாணத்தை யெடுத்துக் கோதண்டத்தில் பூட்டி வாலியின் மார்புக்குக் குறிவைத்து இழுத்துவிட்டார். அந்தப்பாணம் வாலியின் மார்பில் பாய்ந்தது. உடனே வாலி, சுக்கிரீவனைக் கைநழுவ விட்டுச் சித்தங் கலங்கிப் பூமியில் வீழ்ந்து மார்பில் பாய்ந்த

அப்பாணத்தை ஊடுருவ வொட்டாமல் கரத்தால் பிடித்துக் கொண்டு "நமக்குத் தெரியாமல் இந்த ஆயுதத்தை ஏவிய வன் யாவன்? நம்முடையமார்பில் பாயும்படியான படையை யுடையவர்கள் மூவுலகங்களினுமில்லையே "என்று அடங் காக் கோபங் கொண்டு ஆகாயத்திற்கிளம்பிக் கீழே குதித் தும், திக்குகளிற் பாய்ந்து சுழன்று, தரையில் கையால் மோதியும் ஆர்ப்பரித்து அந்தப் பாணத்தை இன்னதென் றுணரும் பொருட்டு வெளியில் இழுத்துப் பார்த்தான். அது வரவில்லை. எனினும் அவன் அதனை அம்பென்று மாத் திரம் தெரிந்துகொண்டான். அவ்வாறு தெரிந்த மாத்திரத் தில், "இனி இதை எய்தவனுடைய பெயரைப் பிரயாசைப் பட்டாவது தெரிந்துகொள்ளாமல் விடக்கூடாது" என்று அவன் மிகுந்த உக்கிரங் கொண்டு இரண்டு கைகளையும், கால் களையும், வாலையும் அந்தப் பாணத்திற் சேர்த்து அதனை வெளியில் இழுத்து விட்டான். அவ்வாறு பாணம் வெளிப் படவே அவனுடைய மார்பிலிருந்து இரத்தவெள்ளம் பெருக்கெடுத் தோடிற்று. அதைக்கண்டு சுக்கிரீவனும் அவனோடு உடன் பிறந்த பாசத்தால் துக்கித்துப் பூமியில் வீழ்ந்து விட்டான்.

அதன்மேல் வாலி, வெளியில் இழுத்த பாணத்தைக் கோபத்தால் முறித்தெறிய முயன்றான். அவனால் அதனை யொடிக்க முடியவில்லை. அதனால் அவன், 'மேருவையும் சிதைக்கத்தக்க வல்லமையுடைய என்னால் இந்தப் பாணத் தை ஒடிக்க முடியவில்லையே! இத்தகைய பாணத்தில் யார் பெயர் எழுதப்பட்டிருக்கின்றதோ, அதையாவது பார்த் துத் தெரிந்து கொள்வோம்' என்று அதன் அடிப்பாகத்தை நன்றாக உற்றுநோக்கினான். அதில், தர்மசொரூபராகிய இராம ருடைய பெயர் எழுதப்பட் டிருக்கவே வாலிக்குண்டான

வியப்பிற்கும், விசனத்திற்கும் அளவில்லை. உடனே அவன், "அந்தோ! இராமனு இத்தகாத காரியத்தைச் செய்தான்;

"இல்லறந் துறந்த நம்பி யெம்மனோர்க் காகத் தங்கள்
வில்லறந் துறந்த வீரன் றோன்றலால் வேத நூலில்
சொல்லறந் துறந்தி லாத சூரியன் மரபுந் தொல்லை
நல்லறந் துறந்த தென்னு நகைவர நானுட் கொண்டான்"

இவ்வாறு சொல்லி மனங் கூசியதோடு மேலும் அவன் விசனம் சகிக்க முடியாமல் பல வெறுப்பான வார்த்தைகளைப்பேசினுன். அப்போது இராமர் அவனுக்குமுன்னே வந்து நின்றார். அவரைப்பார்த்தவுடனே வாலி, இரத்தம் போற் சிவந்த கண்களுடனே "அப்பா! என்ன நினைத்து என்ன காரியத்தைச் செய்தாய்!

"வாய்மையு மரபுங் காத்து மன்னுயிர் துறந்த வள்ளற்
றூயவன் மைந்த னேநீ பரதன்முன் றோன்றி னுயே
தீமைதான் பிறரைக்காத்துத் தான்செய்தாற்றீங்கன்றோமோ
தாய்மையு மன்றி நட்புந் தருமமுந் தழுவி நின்றாய்"

எல்லாத் தருமங்களையும் அறிந்த நீ தரும சாஸ்திர நெறி தவறி நடக்கலாமா?

"கோவியற் றரும முங்கள் குலத்துதித் தோர்கட் கெல்லாம்
ஓவியத் தெழுத வொண்ணு வுருவத்தா யுடைமை யன்றோ
ஆவியைச் சனகன் பெற்ற வன்னத்தை யமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்தபின்னைத்திகைத்தனைபோலுஞ்செய்கை"

அந்தோ! உன் மனைவியை அரக்கன் கொண்டுபோனதற்கு நீ என்னைக் கொல்லலாமோ?

"அரக்கரோ ரழிவு செய்து கழிவரே லதற்கு வேறோர்
குரக்கினத் தரசைக் கொல்ல மனுநெறி கூறிற் றுண்டோ
இரக்கமெங் குகுத்தா யென்பா லெப்பிழை கண்டா யப்பா
பரக்கழி யிதுநீ பூண்டாற் புகழையார் பரிக்கற் பாலார்."

நான் உனக்கொருகுறையும் செய்யவில்லையே; ஒழுக்கமும் நன்மையும் எளியவர்களுக்கு மட்டுந்தான் அவசியமானவையோ? வலியவர்களுக்கு அவை தேவையில்லையோ? அவர்கட்குப் பழியும் புகழாக முடியுமோ?

" கூட்டொரு வரையும் வேண்டாக் கொற்றவ பெற்ற தாதை
பூட்டிய செல்வ மாங்கே தம்பிக்குக் கொடுத்துப் போந்து
நாட்டொரு கருமஞ் செய்தா யெம்பிக்கிவ் வரசை நல்கிக்
காட்டொருக்கருமஞ் செய்தாய்கருமந்தானிதின்மே லுண்டோ"

நிரபராதியாகிய என்னைக்கொன்ற நீ இராவணனை நோக்கி, முறை தவறியவனென்று கோபிப்பதற்கு என்ன நியாயமிருக்கிறது. இருவர் போர் புரியும்போது நீ மறைந்துநின்று பாரபக்ஷமாக ஒருவர் மீது அம்பைச் செலுத்தியது நீதியாகுமா? நான் உனக்குப் பகைவனுமலலனே; இராவணனைக் கொல்லுதற்குத் துணைவேண்டி நீ இக்காரியத்தைச் செய்தனையோ? அப்படி உனக்குத் துணை வேண்டுமானால் மிக்க பலசாலியாகிய என்னைக்கொன்று அற்ப பலமுடைய சுக்கிரீவனைத் துணைக்கொள்வதால் உனக்கென்ன பயன்? நீ என்னைத் துணைக்கொண்டிருப்பாயானால் ஒரு நிமிஷ நேரத்தில் நான் இராவணனைக் கொண்டுவந்து உனக்கு முன்னே நிறுத்தி உன் குறைகளை யெல்லாம் போக்கிவிடுவேனே; நீ மறைந்து நின்று அம்பெய்தலாகிய அற்ப காரியத்தைச் செய்துவிட்டுச் சிறிதும் மனங்கூசாமல் எனக்கெதிரில் வந்து நிற்கின்றாயே" என்று பற்பலவிதமான கடின மொழிகளைக் கூறினான்.

இவைகளை யெல்லாம் கேட்டபின் இராமர் அவனை நோக்கி, "வாலி! நான் இப்போது தருமந்தவறி ஒன்றையும் செய்யவில்லை; உன் தம்பி, உன்மீது எவ்வளவோ பக்ஷமுடையவனும், 'நிரபராதியாயுமிருந்தும் நீ அவனைத் துன்பப்

படுத்தினாய்; அவனுடைய மனைவியையும் அபகரித்துக்கொண்டாய்; அவன் திக்கற்றவனாய் என்னிடம் வந்து அடைக்கலம் புகுந்து தன்குறையை நிவிர்த்திக்குமாறு வேண்டிக்கொண்டான்; நான் அநீதியைப் போக்கித் தருமத்தை நிலைநிறுத்தவே அவதரித்திருப்பதாலும், சுக்கிரீவனுக்கு அபயங்கொடுத்துவிட்டமையாலும் அவனையாளவும், தருமத்தை நிலைநிறுத்தவும் உன்னைக் கொல்லத் துணிந்தேன்; நீ உண்மையான நீதியை உணராமல் பேசுகிறாய்" என்று கூறினார். அதற்கு வாலி, "ஐயா! மிருக வர்க்கத்தைச் சார்ந்த எங்களுக்கு நீர் கூறிய நீதிகள் இல்லை" என்றான். இராமர், "நீ கூறுவது சரியன்று; நீங்கள் மிருக வகுப்பினராயினும் தேவர்களுக்குப் பிறந்தவர்களாதலின் நீதி சாஸ்திரங்களின் விதிப்படி நடக்கக் கடமைப்பட்டிருக்கின்றீர்கள்; மேலும் விலங்கினங்களிலும் பக்ஷிக் கூட்டங்களிலுங் கூட நீதியை அனுசரிப்பவைகள் உண்டு; கஜேந்திரன் செயலையும், சடாயு செயலையும் யோசித்துப்பார்; இவைகள் இப்படியிருந்தும், இந்திரனுக்குப் பிறந்த நீ தருமந்தவறி நடப்பது தகுதியாகாது" என்றார். வாலி, இராமருடைய வார்த்தைகளை ஆலோசித்துத் தான் செய்தது தவறென்றுணர்ந்து, "நான் செய்தது குற்றமேயெனினும் நீர் மறைந்திருந்து என்மேல் அஸ்திரப் பிரயோகஞ் செய்த காரணமென்ன?" என்று இராமரைக் கேட்டான்.

இலக்குமணன் அதற்குத் தக்க விடை கூறத்தொடங்கியவனாய் வாலியை நோக்கி, "என் தமையனார் உன்னைக் கொன்று சுக்கிரீவனைக் காப்பாற்றுவதாக அவனுக்கு முன்னரே வாக்களித்துவிட்டார். அவர் உனக்கெதிரில் வந்தால், நீயும் ஒரு சமயம் அவரைச் சரணாகதி யடைந்துவிடக்கூடும். அப்படியானால் சுக்கிரீவனுக்கு அவர் கொடுத்த

வாக்குத் தவறிவிடும்; அவ்வாறு நேராதிருத்தற்கு இத்த கைய செய்கை அவரால் செய்யப்பட்டது" என்றான். இவற்றையெல்லாம் கேட்கவே வாலிக்கு நீதி புலப்பட்டது. அதனால் அவன், இராமரைப் பலவாறு ஸ்தோத்திரஞ் செய்து மேலும் அவரை நோக்கி, "சுவாமி! எளியேன் அறி யாமையாற் பேசியவற்றைப் பொறுத்தருள வேண்டும்; எனக்கு மோக்ஷத்தைக் கொடுத்தருளவேண்டும்; என் தம் பியையும் எப்போதும் பாதுகாத்தருள வேண்டும்; தங்க ளுடைய திருப்பணியை அடியேன் ஒரு நிமிஷ நேரத்தில் நிறைவேற்றி விடுவேன்; எனக்கு அப்பாக்கியமில்லாமற் போய்விட்டது; எனினும் அனுமான் என்னைப் போலவே யிருந்து உமது காரியங்களை நிறைவேற்றி விடுவான். இவர் களைக் கொண்டு பிராட்டியாரைத் தேடச்செய்யும்; உமக்கு ஜெயமே உண்டாகும்" என்று சொல்லி விட்டுத் தன்னு டைய மரணத்தை உத்தேசித்துக் கண்கலங்கி நின்ற சுக்கிரீ வனுக்குத் தேறுதல் கூறி இராமருக்கு அடிமையா யிருக் கும்படி கட்டளையிட்டு விட்டுத் தன்னுடைய குமாரனாகிய அங்கதனை வரவழைக்கும்படி அவனிடம் கூறினான். சுக்கிரீ வன் அப்படியே அவனை வரவழைத்தான். அங்கதன் வந்த தும் வாலியின் நிலைமையைக் கண்டு அவன் மீது வீழ்ந்து புலம்பினான். அப்போது வாலி அவனுக்குத் தேறுதல் கூறி, "மகனே! இராமர் என்னைக் கொன்றதால் இவரை நீ பகைவ ரென்றெண்ணாதே; இவர் கையில் நான் இறக்க ஏதுவுண் டானதால் எனக்கு மோக்ஷபதம் கிடைத்துவிட்டது; நீ இன்று முதல் இவருக் கடிமையாயிரு" என்று இராமருக்கு அவனைக்காட்டி "சுவாமி! இவன் உமக்கு அடைக்கலம்" என் றான். உடனே இராமர் அங்கதனைப் பக்கத்தில் அழைத்து அவன் காத்தில் தம்முடையவாளைக் கொடுத்து, "இதை நீ தாங்கிக்கொண்டிரு" என்றார். அதன்மேல் வாலி, தன்

கையில் இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்த இராம பாணத்தை விட்டு விட்டான். அஃதவனுடைய மார்பைத் துளைத்துக்கொண்டு போய்விட்டது. வாலி! தேகத்தை நீத்துப் பரமபத மடைந்தான்.

அத்தருணத்தில் வாலியின் மனைவியாகிய தாரை யென்பவள் அவனிறந்ததை உணர்ந்து ஓடிவந்து அவன்மேல் வீழ்ந்து புலம்பிப் பின்னர் அங்கதனை நோக்கி, "மகனே! நம்முடைய வாழ்வெல்லாம் போய்விட்டது; எல்லோருடைய ஆபத்தையும் போக்குகின்ற ஸ்ரீ ராமர் நம்மைமட்டும் கலங்கும்படி செய்துவிட்டாரே" என்று பிரலாபித்தாள். அப்போது அநுமார் அவளைத்தேற்றி அவளுடைய வாசஸ்தானத்திற் கனுப்பிவிட்டு அங்கதனைக் கொண்டு வாலியின் ஈமக்கிரியைகளை முடிப்பித்தார். அத்தருணத்தில் சூரியன் அஸ்தமித்தான். இராமரும், மற்றவர்களும் சுக்கிரீவனுடைய வாசஸ்தானத்திற் போய்த் தங்கியிருந்தார்கள். அன்றிரவெல்லாம் இராமர் சீதையை நினைத்து வருந்திக்கொண்டிருந்தார். அன்றிரவு நீங்கி மறுநா ளுதயமாயிற்று.

சுக்கிரீவன் அரசியல்.

சூரியோதயத்தில் இராமர், சுக்கிரீவனுக்கு இராஜ்ஜிய பட்டாபிஷேகம் செய்யும்படி இலக்குமணனிடம் கூறினார். இலக்குமணன், பட்டாபிஷேகத்திற் குரிய பொருள்களையெல்லாம் சேகரிக்கும்படி அனுமாரிடம் தெரிவித்தான். அவர் யாவற்றையும் சேகரித்தார். பின்னர் இலக்குமணன், முடிசூட்டும் காரியத்தை நிறைவேற்றினான். சுக்கிரீவன் மகுடந்தரித்துக் கொண்டுவந்து இராமரை வணங்கினான். இராமர் அவனை மார்புறத் தழுவிக்கொண்டு, இராஜரீகம் நடத்த வேண்டிய விதங்களையெல்லாம் அவனுக்குக் கூறி, கிஷ்கிந்தையில் போயிருந்து மழைக்காலம் கழிந்தவுடன் வானர

சேனைகளைச் சேகரித்துக் கொண்டு, சீதாபிராட்டியாரைத் தேடுதற்கு வருமாறு கட்டளையிட்டார். சுக்கிரீவன், தன்னுடைய அரண்மனையில் வந்திருக்கும்படி இராமரைவேண்டினுன். அதற்கு இராமர், "தம்பி! உன்னைப்போன்ற அரசர்களிருக்குமிடத்தில் என்னைப்போன்ற விரத சீலர்கள் இருப்பது தகாது; மேலும் நான் அங்கே வந்திருந்தால் நீ என்னை உபசரிப்பதிலேயே காலத்தைக் கழிப்பாய்; அதனுல் இராஜகாரியங்கள் கெடும்; இன்னும் ஆரணிய வாசஞ் செய்யவந்த நான் நகரத்திலிருப்பதும் கூடாது; இதுதவிர சீதையைப் பிரிந்து துக்கத்தில் மூழ்கியிருக்கும் நான் அங்கே வந்திருந்தால், 'சீதையை இராக்ஷதன் கொண்டு போய்ச் சிறைவைத்திருக்க இராமன் அவளைத் தேடுவதை விட்டுச் சிநேகிதன் வீட்டில் சௌக்கிய மனுபவிக்கிறுன்' என்று உலகத்தார் என்னை நிந்திப்பார்கள்; ஆதலின் நான் இங்கிருந்தபடியே தவஞ் செய்துகொண் டிருக்கிறேன்; நான் சொன்னதையே நீ செய்" என்று சொன்னுர். சுக்கிரீவன், அதை மறுக்க முடியாமையால் துக்கத்துடன் புறப்பட்டுப்போனுன். பின்னர் இராமர் அங்கதனை அவனுடன் போய் வரும்படி அனுப்பிவிட்டு ஆஞ்சனேயரை நோக்கி, "நீயும் சுக்கிரீவனுடன் சென்று இராஜ காரியங்களுக்கு உதவியாயிருந்து வா" என்று கூறினுர். ஆஞ்சனேயர், இராமரிடத்திலேயே இருக்க விரும்பித் தம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். இராமர், "சுக்கிரீவன் புதிய அரசைப் பெற்றிருப்பதால் அவனுக்கு நீ துணையாயிருப்பதே நலம்" என்று ஆஞ்சனேயருக்குக் கூறினுர். அதன்மேல் ஆஞ்சனேயரும் அதை மறுக்காமல் சுக்கிரீவனுடனே சென்றுர். பின்னர் சுக்கிரீவன் கிட்கிந்தா பட்டணத்திற் பிரவேசித்துத் தன் தமையன் மனைவியாகிய தாரையைச் சேவித்துக்கொண்டு அவளைத் தாயாராகப்

பாவித்து, அவளுடைய கட்டளைக் கடங்கி, அங்கதனை இளவரசனாக்கி மந்திரிகள் சூழ இராஜ்ஜியத்தை நடத்திக் கொண்டிருந்தான். இராமரும், இலக்குமணனும் மதங்காசிரமமாகிய ரிசியமுக பர்வதத்திற் சேர்ந்து ஒரு பர்ணசாலை யுண்டாக்கி அதில் தங்கி யிருந்தார்கள்.

சரற்காலம்.

அங்ஙனமிருக்கும்போது, அது மாரிக்காலமானதால் சூரியன் உத்தராயணத்திலிருந்து தக்ஷணாயணத்தில் பிரவேசிக்க ஆகாயத்தில் மேகங்கள் கூடி மின்னிக்குமுறி மழையைப் பொழிந்தன. வாடைக்காற்று எங்கும் வீசத் தலைப்பட்டது. வனமெல்லாம் கானாறுகள் நீர்ப்பெருக்கெடுத்தோடின. அக்காலத்தில் இராமருக்குச் சீதை பிரிவால் அளவற்ற விசனமுண்டாயிற்று; அதனால் அவர் இலக்குமணனை நோக்கி, "தம்பி! மழையோ விடாமற் பெய்துகொண்டிருக்கிறது. எப்பொழுது இந்த மழைக்காலம் நீங்கி நாம் சீதையைத் தேடிக் காணப்போகின்றோமோ" என்று வருந்தினார். இலக்குமணன் அவருடைய வருத்தம் நீங்கும்படி அவரை நோக்கி, "அண்ணா! மழை நீங்குங் காலம் சமீபித்திருக்கின்றது; விரைவில் நாம் படைத் துணை சேர்த்துக்கொண்டு இராக்ஷதர்களை யொழித்துப் பிராட்டியாரை மீட்டு விடலாம்; வானரசேனைகளைச் சேர்ப்பதற்காகவே நாம் இந்த மழைக்காலம் நீங்கும் சமயத்தை எதிர்பார்த்திருக்கின்றோம்; ஆதலின் தாங்கள் கவலைப்படவேண்டாம்" என்று தேறுதலான வார்த்தைகளைக் கூறினான். அவ்வாறு கூறியும் இராமர், 'இந்த மழைக்காலம் எப்பொழுது தான் ஒழியுமோ' என்று ஏக்கமுற் றிருந்தார். அப்படியிருக்கும் போது சில தினங்கள் கழிந்தபின் மழைக்காலம் நீங்கிற்று.

கிட்கிந்தை வரலாறு.

அப்படி மழைக்காலம் நீங்கவே, இராமர் சீதையைத் தேடிக் காணவேண்டுமென்னும் அவாவினால், சுக்கிரீவன் சேனையுடன் விரைவில் வந்துவிடுவானென்று ஆவலோடு அவன் வரவை எதிர்பார்த்தார். அவ்வாறு சில தினங்கள் வரை எதிர் பார்த்திருந்தும், சுக்கிரீவன், சுகானுபவங்களில் மயங்கி யிருந்தபடியால் குறித்த காலத்தில் வரவில்லை; அதனால் இராமர் அவன்மீது வெறுப்புற்று இலக்குமணனை நோக்கி, "தம்பி! சுக்கிரீவன் இன்னும் வரவில்லை; அவன் வாராததற்குக் காரணமியாதோ; தனக்கு ஐசுவரியங் கிடைத்த ஆனந்தத்தில் மூழ்கி நம் காரியத்தை மறந்து விட்டானோ; அங்ஙனம் மறந்திருப்பானாயின் அவன் செய்ந் நன்றி கொன்றவனாகிறான்; இன்னும், நாம் வாலியைக் கொன்றதனால் அவன், 'ஒருசமயம் இராமர் நம்மையும் இப் படியே கொன்று விடுவார்; அவருடைய சிநேகத்தைவிட்டு நீங்கி யிருத்தலே நலம்,' என்று அஞ்சி யிருந்துவிட்டானோ; அல்லது நம்மை மதியாமலே யிருந்துவிட்டானோ; அவனு டைய அபிப்பிராயம் இன்னதென்று தெரியவில்லை; ஆத லால் நீ விரைவிற்சென்று அவன் எண்ணத்தை அறிந்துவா; அவன் நம்மை மறந்திருந்தாலும் அவமதித்திருந்தாலும் அவனிடத்தில், 'உன்னைக் கொன்றாலும் பாதகமில்லை; உன்னைக் கொல்லுதற்கு,

> "வெம்பு கண்டகர் விண்புக வேரறத்
> திம்பர் நல்லறஞ் செய்ய வெடுத்தவிற்
> கொம்பு முண்டருங் கூற்றமு முண்டெங்கள்
> அம்பு முண்டென்று சொல்லுநம் மானையே."

நாம் வாலியைக் கொன்றதன் பொருட்டு அவன் அஞ்சி யிருப்பானானால், 'வாலி கொடியனா யிருந்ததனால் நாம்

மறைந்து நின்று அவனைக் கொன்றோம்; மற்றயாரை அப்படிக் கொல்ல மாட்டோம்' என்று அவனுக்குக் கூறு. அவ்வாறு கூறி, அவனிடத்தும் மற்றவரிடத்தும் "நீங்கள் கூறிவந்த நாள் கழிந்தும் எம்மிடம் வராதிருக்கின்றீர்கள்; அதனால்,

"ஊரு மாளு மாசு நுஞ் சுற்றமும்
நீரு மாளுதி ரென்பதும் சேர்ந்தநாள்
வாரும் வார விராமெனின் வானரப்
பேரு மாளு மெனும்பொருள் பேசுவாய்."

இன்னும் அவர்கள் நம்மைக் காட்டினும் பலமுடையவர்களைத் தேடிக்கொள்ளலாமென்று நினைத்து வாராதிருப்பார்களாயின், " உன்னிலும் மிக்கவர் திரிலோகங்களிலு மில்லை " யென்று சொல். அதற்கும் அவர்கள் வர இசையாவிடில் நீ கோபித்து யுத்தஞ்செய்து அவர்களை ஹிம்சிக்காமல், பய முறுத்தி அதன்மேல் அவர்கள் சொல்லும் சொற்களை என்னிடம் வந்து கூறு" என்று ஆக்ஞாபித்து அவனைச் சுக்கிரீவனிட மனுப்பினார். இலக்குமணன் உடனே புறப்பட்டுக் கிட்கிந்தாநகரம் போய்ச் சேர்ந்தான். சில வானர வீரர்கள் இவனைக் கண்டதும் பயந்து விரைந்தோடி அங்கதனிடத்தில், "சுவாமி! இளையபெருமாள் அதிக கோபத்துடன் வருகிறார்; என்ன தீங்கு விளையப் போகிறதோ" என்று சொன்னார்கள். அங்கதன், இலக்குமணனுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்வதற்கு அவனிடத்திற் போகாமலே தூரத்திலிருந்தபடி அவன் உள்ளக் கருத்தைத் தெரிந்துகொண்டு அதனை அறிவித்தற்குச் சுக்கிரீவனுடைய அரண்மனைக்குப் போனான். அப்போது சுக்கிரீவன், இராமலக்குமணர்கள் தனக்களித்த ஐசுவரியத்தில் மூழ்கி ஆனந்தபரவசனாய் மதுமயக்கங்கொண்டு சயனித்திருந்தான். அங்கதன் அவனை எழுப்பி, அவன் முகத்தை

நோக்கி, "ஐயா! இலக்குமணர் கோபத்துடனே வருகிறார்," என்றான். சுக்கிரீவன், பாக்கியத்தின் களிப்பாலும், மது மயக்கத்தாலும், அங்கதனுடைய முகத்தைப் பார்த்தும் அவனுக்குப் பிரதி யுத்தர மொன்றுஞ் சொல்லாமல் மறு படியும் படுத்துக்கொண்டான். அங்கதன் மீண்டும் அவனை எழுப்ப முடியாமல் வெளியில் வந்து மந்திரி யாகிய அனுமாரை அழைத்துக்கொண்டு சில வானரக் வீரர்களுடன் தன் தாயாகிய தாரையிடம் சென்று வணங்கி, இலக்குமணன் கோபத்துடன் வருவதையும், சுக்கிரீவன் படுக்கையி லிருப்பதையும் தெரிவித்தான். அப்போது தாரை, அங்கதனையும், அனுமாரையும் நோக்கி, "நீங்கள் நன்றி மறந்தவர்களாய் விட்டீர்கள்; இராமரிடம் நீங்கள் படைகளைக் கூட்டிக்கொண்டு போவதாகச் சொல்லிவந்த நாளில் தவறாமல் சென்றாலல்லவோ சுகப்படு வீர்கள்; உங்களுக்குப் பேருபகாரஞ் செய்த இராமர், மனை வியைப் பிரிந்து, துக்கத்திலாழ்ந்திருக்க, நீங்கள் ஐசுவரி யத்தை அனுபவித்துக்கொண்டு களித்திருப்பது நீதியா குமா? நீங்கள் இவ்வாறு சத்தியந்தவறி அவர்களுடைய பகையைத் தேடிக்கொண்டீர்கள்; அவர்களோடு சண்டை செய்வீர்களானால் நீங்கள் மடிந்து போவீர்கள்; இனி என்செய்வது" என்று சில நீதிமொழிகளைக் கூறிக்கொண் டிருந்தாள். அத்தருணத்தில் இலக்குமணன் வருவதைக் கண்ட குரங்குகள் பயந்து கோட்டை வாயிலை மூடி மேலும் மலைகளையும் கற்களையுங் கொண்டு வழியை அடைத்தன. அதைக்கண்ட இலக்குமணன், "நாம் உள்ளே செல்லாமல் நம்மைத் தடுப்பதற்கு இவைகள் இங்ஙனம் வழியை அடைக்கின்றன" என்று நகைத்து, அந்தக் கோட்டை வாயிலருகிற் சென்று கதவைக் காலினால் உதைத்தான். உடனே கதவும், அடுக்கப் பட்டிருந்த மலைகளும் நொறுங்

கிப் போயின. நொறுங்கிய அவற்றின் துண்டுகள் நாலா பக்கங்களிலும் சிதறியடித்ததால் வானரக் கூட்டங்களில் சில உயிர்நீங்கின; சில காயமடைந்தன. மற்றவைகளெல்லாம் பயந்தோடிக் காடுகளில் ஒளித்தன. அதன்மேல் இலக்குமணன் நகரத்திற்குட் பிரவேசித்தான். தாரையுடனே பேசிக்கொண்டிருந்த அங்கதனும் அனுமாரும் இலக்குமணனைக் கண்டு தாரையிடத்தில், 'அம்மா! இதோ அவரும் வந்துவிட்டார்; இனி என்ன செய்யலாம்' என்று பயத்துடனே வினவினார்கள். அப்போது தாரை, "நீங்கள் விலகிச் செல்லுங்கள்; நான்போய் அவருடைய மனோபாவத்தை அறிந்து வருகிறேன்" என்று சொல்லி அவர்களை விலக்கிவிட்டுத் துரிதமாக நடந்து இலக்குமணனுக்கு முன்னே வந்து நின்றாள். அவள் பெண்ணுகையினாலே, 'பெண்ணென்றால் பேயும் இரங்கும்' என்றபடி அவளைக் கண்டவுடனே இலக்குமணன் கோபந்தணிந்து அவள் முகத்தைப் பார்க்க நாணித் தலைகுனிந்து நின்றான்.

அப்போது தாரை அவனைநோக்கி, "சுவாமி! தங்களுடைய பாதம் பட்டதால் எங்களுடைய இல்லம் புண்ணிய ஸ்தலமாயிற்று. எனினும் தாங்கள் வேகமாய் வந்ததைக் கண்டு இங்குள்ளவர்கள் பயப்படுகிறார்கள்; தாங்கள் ஸ்ரீ இராமபிரானைப் பிரிந்து இங்கு வந்ததற்குக் காரணமென்ன? அதைக் கூறியருளவேண்டும்" என்று உரைத்தாள். அப்போது இலக்குமணன், "இவ்வளவு இதமான வார்த்தைகளைக் கூறும் பெண்மணி யார்?" என்று நிமிர்ந்து பார்த்தான். தாரை அமங்கலியாய் எதிரில் நின்றாள். இலக்குமணன் அவளுடைய பரிதாப நிலைமையைப் பார்த்தவுடனே, "அந்தோ! நம் தாய்மார்களும் இப்படித்தானே யிருப்பார்கள்!" என்று அவர்களை நினைத்துக் கண்கலங்கித் துயரத்தால் சிறிது நேரம்வரை மௌனமாய் நின்று பின்னர் மனந்

தெளிந்து தாரைக்கு மறுமொழி கூறத்தொடங்கி, அவளை நோக்கி, "அம்மா! சீதா பிராட்டியாரைத் தேடுவதற்கு மழைக்காலம் நீங்கிய பின்னர் வருவதாக இராமரிடம் குறித்துச் சொல்லிவந்த தவணையின்படி சுக்கிரீவன் வரவில்லை; அதனால் ஸ்ரீராகவர் வருத்தமுற்றுச் சுக்கிரீவனிடம் சென்று வாராமலிருந்ததற்குக் காரணத்தை விசாரித்து வரும்படி என்னை யனுப்ப நான் வந்தேன்; அவருடைய விரோதத்தைச் சுக்கிரீவன் தேடிக்கொள்வானானால் அவனுடைய வாழ்வுக்கே கேடு சம்பவிக்கும்" என்றான். இதைக் கேட்டவுடன் தாரை, "சுவாமி! நீங்கள் கோபித்தால் வானரர்கள் வாழ்வதரிதாகும்; எல்லாச்செல்வங்களையும் கொடுத்தருளிய தங்கள் காரியத்தை அவர்கள் மறப்பார்களாயின் நற்கதியடையமாட்டார்கள்; மகா பராக்கிரமசாலியாகிய வாலியையே கொன்ற தங்களுக்கு, மற்ற எதிரிகளை ஜெயிப்பதற்கு வேறொரு துணையும் வேண்டுமோ; கேவலம்! இந்த வானரர்களையோ நீங்கள் அத்தகைய பெருங்காரியத்தை முடிப்பதற்குத் துணைக்கொள்ளப்போகின்றீர்கள்! இல்லை, இல்லை; பிராட்டியாரைத் தேடுவதற்கு மாத்திரம் இவர்களை உபயோகப்படுத்தலாமென்றே நீங்கள் நினைத்தீர்கள்; அக்காரியம் வானரர்களுக்குக் கிடைத்ததே பெரும்பாக்கியமாகும்; அப்படியிருக்க அவர்கள் ஸ்ரீ ராமபிரானுடைய காரியத்தில் கவலையற்றவர்களா யிருக்கமாட்டார்கள்; வானர சேனைகளைப் பற்பல விடங்களிலுமிருந்து அழைத்து வருதற்குத் தூதுவர்களை யனுப்பிவிட்டு அவர்கள் வருகைக்கெதிர் பார்த்திருக்கின்றார் சுக்கிரீவர்; ஆதலின், நீங்கள் கோபஞ் செய்யலாகாது" என்று கூறினாள். இந்த வார்த்தைகளைக் கேட்டதும் இலக்குமணன், "இவள் நல்ல நீதி சாஸ்திரங்களைக் கற்ற விவேகியா யிருக்கின்றாள்" என்று நினைத்துக் கோபந் தணிந்து நின்றான்.

அத்தருணத்தில் அனுமார் வந்து இலக்குமணனுடைய திருவடிகளை வணங்கி நின்றார். இலக்குமணன் அவரைப் பார்த்ததும், "சகல சாஸ்திரங்களையு முணர்ந்த நீரும் சுவாமி காரியத்தை மறந்துவிட்டீரோ" என்றான். அனுமார் அவனை நோக்கி, "சுவாமி! தாங்கள் அப்படிக் கூறலாகாது; என்னாலன்றோ ஸ்ரீராகவருக்கும் சுக்கிரீவருக்கும் சிநேக முண்டானது; அப்படியிருக்க நான் சுவாமி காரியத்தை மறந்துவிடுவேனோ; சுக்கிரீவரும் அதை மறக்கவில்லை; பேருதவிபுரிந்த உங்களை மறந்தால் எங்களுக்கு நற்கதி கிடைக்குமோ?

"சிதைவகல் காதற் றாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவியந் தணரை யாவைப் பாலரைப் பாவை மாரை
வதைபுரி குநர்க்கு முண்டா மாற்றலா மாற்றன் மாயா
உதவிகொன் றார்க்கென் றேனு மொழிக்கலாமுபாய முண்டோ?"

மேலும், உங்களுக்கு எங்கள் மீது கோபமுண்டானால் பிழைக்குமார்க்கமும் எங்களுக்குண்டோ? சுக்கிரீவர் வானர சேனைகளைக் கூட்டிவருவதற்குத் தூதுவர்களை நாலா பக்கங்களிலும் அனுப்பி அவர்களின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றார். அவர்கள் இதுகாறும் வரவில்லை; அதுதான் தாமதத்திற்குக் காரணம்; தாங்கள் வெறுப்புறாமல் சுக்கிரீவரிடம் வாருங்கள்" என்று அழைத்தார். அப்போது இலக்குமணன், "சேனைகளை அழைக்கப்போன தூதுவர்கள் வாராததால் தாமதமாயிற்று என்று இவர்கள் சொல்வது உண்மையே யெனினும், இவர்களுக்கு அக்கறை யிருந்தால் மேலும் தூதுவர்களை யனுப்பிச் சேனைகளை விரைவில் அழைத்துவரச் செய்திருக்கலாம்; அவ்வாறு செய்யாததனால் இவர்கள் சுவாமி காரியத்தில் சிறிது கவனக்குறைவாகவே யிருந்திருக்கிறார்கள்; அப்படி யிருந்தாலும் அகங்காரத்தால் மறந்திருக்க மாட்டார்கள்; சுகானுபவத்தில்

மயங்கிப் போயிருந்திருப்பார்கள் பாவம்! அதுவும் நாம் கொடுத்த பாக்கியமே; ஆதலின் இவர்கள்மீது நாம் கோபித்துக் கொள்ளலாகாது" என்று சாந்தமடைந்து அனுமாரை நோக்கி, "அனுமாரே! இராவணன் செய்த கொடுமையை உத்தேசித்துக் கிளம்பின கோபத்தால் நான் எல்லா வுலகங்களையும் அப்பொழுதே அழித்துவிடக் கருதினேன்; எனினும் அது நியாயமன்றென்று என் கோபத்தைத் தணித்துக் கொண்டு ஒழுங்கோடு எதையும் செய்யவேண்டு மென்று தீர்மானித்து ஸ்ரீ ராகவருக்குத் தேறுதல் கூறிப் பிராட்டியாரைத் தேடிக் கண்டு இராவணனைக் குலத்தோடு நாசப்படுத்துதற்கு அவரை அழைத்துக்கொண்டு வந்தேன்; இன்னும் சிறிது தூரம் சென்றபின் ஸ்ரீ ராகவர், ஒரு பாணத்தை ஏவுவாரானல் அது சென்று ஒரு நிமிஷநேரத்தில் பிராட்டியா ரிருக்கு மிடத்தைத் தெரிந்து கொண்டு வந்துவிடும். அப்படியிருந்தும் நாங்கள் இங்கே வந்தபோது எங்களுக்கு உங்களுடைய சிநேகம் ஏற்பட்டதாலும், நீங்கள் பிராட்டியாரைத் தேடிக் கண்டு வந்து விடுவதாகக் கூறியபடியாலும் உங்களுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்யும்பொருட்டு நாங்கள் உங்கள் வார்த்தைக் கிணங்கினேம்; அப்படியிருக்க நீங்கள் சொன்ன வாக்குத்தவறியது குற்றமே; எனினும் நீங்கள் எங்களை அவமதித்துக் கால தாமதப்படுத்தி யிருக்க மாட்டீர்கள்; எஃதெப்படி யிருந்தாலும் இராக்ஷதர்கள் கொஞ்சக்காலம் வாழவும், முனிவர்கள் துன்பம் விலகாதிருக்கவும் ஸ்ரீ ராகவருக்குக் கோபமுண்டாகவும் செய்து விட்டீர்கள்" என்று சொன்னன். அனுமார், "நடந்ததைக் குறித்து இனிச் சிந்திப்பதில் பயனில்லை; நாங்கள் ஒப்புக் கொண்ட காரியத்தைத் தவருமல் செய்து முடிப்போம்; இல்லையேல் உயிர் துறப்போம்; சுக்கிரீவரிடம் செல்லலாம் வாருங்கள்" என்ருர். இலக்குமணன் அனுமா

ருடனே சுக்கிரீவனிடம் சென்றான். தாரை, தன் மாளிகைக் கேகினாள்.

மேற்கூறியபடி இலக்குமணன் செல்லும்போது அங்கதன், சில மந்திரிகளுடனே வந்து இலக்குமணனைக் கண்டு வணங்கினான். இலக்குமணன், அவனை நோக்கி, "அங்கதா! உன் சிறிய தந்தையிடம் சென்று என்னுடைய வருகையைத் தெரிவி" என்றான். உடனே அங்கதன், சுக்கிரீவனுடைய சயன அறைக்குச்சென்று அப்பொழுதும் விழிக்காமல் உறங்கிக்கிடந்த அவன் பாதங்களை வருடி அவனை நித்திரையினின்று மெழுப்பி அவன் முகத்தை நோக்கி, "ஐயா! இலக்குமணர் மிகுந்த கோபத்துடன் நம்முடைய அரண்மனையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்" என்று தெரிவித்தான். இதைக்கேட்டவுடன் சுக்கிரீவன் திடுக்கிட்டெழுந்து அங்கிருந்த ஸ்திரீகூட்டங்களை யெல்லாம் அகற்றிவிட்டு, முன்னொரு முறை அங்கதன் வந்து கூறிய சமாசாரத்தைத் தான் மதுமயக்கத்தால் உணராதிருந்தவனானதால், 'நாம் ஒரு குற்றமும் செய்யாதிருக்க இலக்குமணர் ஏன் கோபங்கொண்டு வந்தார்' என்று அதிசயித்து, அங்கதனை நோக்கி, "அப்பா! இலக்குமணர் சீற்றத்தோடு வருதற்கு நான் செய்த குற்றமென்ன?" என்று வினவினான். அங்கதன், சுக்கிரீவன் சொல்லிவந்த தவணைப்படி இராமரிடம் செல்லாததால் அவன்மீது குற்றம் ஏற்பட்டதென்பதையும், அதனாலேயே இராமலக்குமணர்களுக்குக் கோபமுண்டாயிற் றென்பதையும், இலக்குமணன் அங்கே வந்தபின் நடந்த விஷயங்களையும், முன்னே வந்து இலக்குமணருடைய விஷயத்தைக் கூறும் போது சுக்கிரீவன் உணர்ச்சியின்றித் தூங்கியதையும் அவனுக்குச் சொன்னான்.

இவற்றை யெல்லாம் கேட்டதும் சுக்கிரீவன், 'அந்தோ! மதுமயக்க மன்றோ நம்மை இத்தகைய குற்றங்கட்குட்படுத்தி விட்டது' என்று மனம் நொந்து அங்கதனை நோக்கி, "மகனே! பஞ்சமாபாதகங்களுள் ஒன்றாகிய கள்ளுண்டலை நான் மேற்கொண்டதனால் மகாபாதகத்திற்குள்ளாகி விட்டேன்;

"வஞ்சமுங் களவும் பொய்யு மயக்கமு மரபில் கொட்பும்
தஞ்சமென் றோரை நீக்குந் தன்மையுங் களிப்புந் தாக்கும்
கஞ்சமெல் லணங்குந் தீருங் கள்ளினை லருந்தி னோரை
நஞ்சமுங் கொல்வ தல்லா னரகினை நல்கா தன்றே."

ஆதலின், இத்தகைய பாதகங்களை யெல்லாம் செய்விக்கும் கள்ளை இனி நான் எப்பொழுதும் அருந்த மாட்டேன்" என்று இலக்குமணனை எதிர்கொண்டழைக்கும்படி இராஜ விருதுகளுடன் அங்கதனை முன்னே அனுப்பிவிட்டுத் தான் பரிசனங்களுடன் பின்னே சென்று அரண்மனையின் தலைவாயிலில் இலக்குமணன்வரவுக் கெதிர்பார்த்து நின்றான். இலக்குமணனை எதிர்கொள்ளச் சென்ற அங்கதன், கிட்கிந்தா வீதியில் வந்துகொண்டிருந்த அவன் முன் சென்று வணங்கினான். அப்போது இலக்குமணன் அவனிடத்தில் "உங்கள் சுக்கிரீவமன்னன் எங்கிருக்கின்றான்?" என்றான். அங்கதன், "அவர் தங்களை எதிர்கொள்ள வந்து அரண்மனை வாயிலில் காத்திருக்கின்றார்" என்றான். அத்தருணத்தில் சுக்கிரீவனும் சகல சிறப்புக்களுடன் இலக்குமணனுக் கெதிரில் வந்தான். அவனைப் பார்த்தவுடனே இலக்குமணனுக்குக் கோபமுண்டாயிற்று; எனினும் அவன் அதனை அடக்கிக்கொண்டான்; பின்னர் இலக்குமணனும், சுக்கிரீவனும் ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டு இராஜ மாளிகைக்குட் போய்ச் சேர்ந்தார்கள். சுக்கிரீவன், இலக்குமணனைத் தனது சிம்மாசனத்திலேற்றி யிருக்கும்படி வேண்டினான். இலக்கு

மணன், "ஸ்ரீ ராகவர் காட்டில் புல்லின்மேல் தங்கியிருக்க நான் பொன்னுசனத்தி லிருக்கவேண்டுமோ!" என்று கண் கலங்கி நின்றான். சுக்கிரீவனும் மற்றவர்களும் இலக்குமணனுடைய துயரத்திற்கு வருந்தினார்கள்; அதன்மேல் சுக்கிரீவன் இலக்குமணனை நோக்கி, "சுவாமி! தாங்கள் ஸ்நானஞ் செய்து போசன மருந்த வேண்டும்" என்றான். அதற்கு இலக்குமணன், "நீ தேவியாரைத் தேடி இன்ன விடத்திலிருக்கிறாரென்று காட்டுவாயே யானால் அதுவே எனக்குத் திருப்தியான போசனஞ் செய்துவைத்ததாகும்; நான்,

" பச்சிலை கிழங்குகாய் பரம னுங்கிய
மிச்சிலே நுகர்வது வேறு தானென்று
நச்சிலே னச்சினே னுயி னுயுண்ட
எச்சிலே யதுவிதற் கேது வில்லையால்."

மேலும், நான் சென்று தமையனாருக்குக் கந்தமூல பலாதிகள் தேடிக்கொண்டுவர வேண்டும்; ஆதலின், இங்கே தாமதிக்கக்கூடாது" என்றான்.

சுக்கிரீவன், இலக்குமணனுடைய சகோதரவாஞ்சையைப் புகழ்ந்து, 'நாம் குரங்கினமாகையால் நமக்கித்தன்மையில்லாமற் போயிற்று' என்று தன்னைத்தானே நொந்துகொண்டு, 'இனி, சுவாமி காரியத்தில் நிமிஷமும் தாமதிக்கக்கூடாது' என்று, அனுமாரை நோக்கி, "வானர சேனைகளை அழைத்துவரச்சென்ற தூதர்கள் இன்னும் வாராமலிருப்பதால் நீரும் சென்று அவர்களைச் சேனைகளுடன் விரைவில் அழைத்துக்கொண்டு வாரும்" என்று சொல்லி அவரை அக்காரியத்திற் கனுப்பிவிட்டுத் தான், இராம சேவைக்குப் புறப்பட்டான். அங்கதனும், சில வானரப்படைத்தலைவர்களும் அவன்கூடச் சென்றார்கள். இலக்குமணன் கால்நடையாக நடந்து போனான். ஒன்பதினாயிரம் வானர

சேனைகள் முன்னும் பின்னும் சென்றன. சுக்கிரீவனுடைய பந்துக்களும் இருமருங்கும் சூழ்ந்து சென்றார்கள். அப்போது சுக்கிரீவன், இலக்குமணன் நடந்து செல்வதைக் கண்டு தானும் பூமியில் நடந்து சென்று ரிசியமுக பர்வதம் போய்ச் சேனைகளைப் பின்னே நிறுத்திவிட்டு அங்கதனுடனே இராமர் சமீபத்திற்சென்று அவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். இராமருக்கிருந்த கோபமெல்லாம் தணிந்துவிட்டது. உடனே அவர் சுக்கிரீவனை மார்புறத் தழுவிக்கொண்டு, சமீபத்தில் உட்காரவைத்து அவனிடத்தில் முதலில் தம்முடைய காரியத்தைப் பற்றி விசாரியாமல், "உன்னுடைய இராஜரீகம் செவ்வையாக நடைபெறுகின்றதா ?" என்று அவனுடைய க்ஷேமத்தையே விசாரித்தார். சுக்கிரீவன், "சுவாமி! தங்களுடைய கிருபை பூரணமாக எனக்கிருக்கும்போது சுகத்தில் என்ன குறையிருக்கப் போகின்றது; தாங்கள் கொடுத்த பாக்கியத்தினாலேயே களித்துக் கள்ளுண்ட வெறியால் நான் தங்கள் காரியத்திலும் கவனக் குறைவாயிருந்துவிட்டேன்; என்னைப்போல் நன்றி மறந்தவன் எவனுமிரான்" என்று கூறினான்.

இராமர் அவன்மீது கிருபை கூர்ந்து, அவனிடத்தில், "சுக்கிரீவா ! உலகத்தில் எத்தகையினர்க்கும் தவறுதல் ஏற்படுவது இயற்கை; ஆதலின் உன்னுடைய குற்றத்தை நாம் பாராட்டவில்லை; பரதனைப்போலவே உன்னை நினைத்திருக்கின்றோம்; மகா விவேகியாகிய அனுமான் எங்கே?" என்றார். சுக்கிரீவன், "சுவாமி! சேனைகளை அழைக்கப் போன தூதுவர்வாராததால் அவர்களை விரைவில் அழைக்க அனுமார் சென்றிருக்கின்றார்; இன்றைக்கோ நாளைக்கோ வந்து விடுவார்; இப்போது ஒன்பதினாயிரம் சேனைகளிருக்கின்றன; மற்ற சேனைகள் நாளைக்கு வந்துவிடும்; அவை

கள் வந்த பின்பு நாம் செய்யவேண்டிய காரியங்களைக் குறித்து யோசிக்கவேண்டும்" என்று சொன்னான். ஸ்ரீராமர் சந்தோஷித்துச் சுக்கிரீவனைத் தன் அரண்மனையிற் போயிருந்து மறுதினம் வரும்படி அனுப்பினார். சுக்கிரீவனும் அங்கதனும் திரும்பி நகரத்திற்குப் போனார்கள். அவர்கள் சென்றபின், இராமர் இலக்குமணனை நோக்கி, "சுக்கிரீவனிடம் நீ சென்றபின் நடந்த சங்கதிகளைக்கூறு" என்றார். அவன் அவ்வாறே நடந்தவற்றையெல்லாம் கூறினான். அதன்மேல் இராமலக்குமணர்கள் அந்த ரிசியமுகபர்வதத்திலிருந்து அன்றிரவைக் கழித்தார்கள்.

வானர சேனையைக் காணல்.

மறுநாள் விடிந்தவுடன் சுக்கிரீவனிடத்தில், சதவலி, சுசேஷணன், சுக்கிரீவன் மனைவியாகிய உருமையின் தந்தை, ஆஞ்சநேயரைப் பெற்ற கேசரி, கவாக்ஷன், காடிச்சேனைகட்குத் தலைவனாகிய இடும்பன், பனசன், நீலன், ததிமுகன், கவையன், சாம்பவன், துன்முகன், துமிந்தன், மயிந்தன், கெஜகோமுகன், ரிஷபன், தீர்க்கபாதன், வினதன், இரம்பன், அனுமார், தெய்வத்தச்சனென்கிற மயன் குமாரனாகிய நளன், கும்பன், சங்கன், வன்னி முதலிய தலைவர்கள் பல நிறமுள்ள அநேகம் வானர சைனியங்களுடனும், காடிச் சேனைகளுடனும் வந்து சேர்ந்தார்கள். அப்பொழுதே சுக்கிரீவன் இராமரிடம் சென்று, "சுவாமி! தங்களுடைய சேனைகள் வந்து விட்டன" என்றான். இராமர் மகிழ்ந்து அச்சேனைகளைப் பார்ப்பதற்கு இலக்குமணனுடனே ஓர் உயர்ந்த குன்றின் மேலேறி நின்றார். சுக்கிரீவன், சேனைகளிடம் போய அவற்றைப் பதினைந்து யோசனை அகல முடையனவாக அடக்கி,

வடக்கேயிருந்து தெற்கே நடக்கும்படி திட்டஞ்செய்து, படைத் தலைவர்களை மாத்திரம் தன்னுடன் அழைத்துக் கொண்டு திரும்பவும் இராமரிடம் சென்று "சுவாமி! சேனைகளைப் பார்த்தருளும்" என்றான். இராமர் அவற்றை நோக்கி, 'அளவிட முடியாதனவாயிருக்கின்றன' என்றறிசயித்து இலக்குமணனை நோக்கி, "தம்பி! இச்சேனைகளின் முடிவைக் காணுதல் அருமை; கண்ணுக்கெட்டிய தூரமட்டும் இவை வந்துகொண்டே யிருக்கின்றன; இவற்றை அளவிட்ட பின்பு நாம் நம்முடைய காரியங்களைச் செய்வதென்றால் அநேகம் நாட்கள் கழிந்துவிடும்; ஆதலின் இவை வந்து கொண்டே யிருக்கட்டும்; நாம் காரியத்தில் பிரவேசிப்போம்" என்றார். இலக்குமணன், "இவர்கள் எதையும் செய்யவல்லவர்கள்; இனி, இவர்களை யேவிப் பிராட்டியாரை விரைவில் தேடச் செய்யவேண்டும்" என்றான்.

சீதையைத் தேடுதற்கு வானரசேனைகளை அனுப்புதல்.

அதன்மேல் இராமர் சுக்கிரீவனை நோக்கி, "இந்தச் சேனைகட்குக் கணக்குண்டோ?" என்று வினவ, அவன், "சுவாமி! இந்த வானரக் கூட்டங்களுக்கு ஆதியில் பிரமதேவர் எழுபது வெள்ளமென்று ஒரு கணக்குச் சொல்லியிருக்கின்றார்; பிற்பட்ட காலத்தில் அநேகம் வானரக் கூட்டங்கள் உற்பத்தியாகி யிருக்கின்றன; அவைகளின் தொகை இவ்வளவென்று சொல்ல முடியாது; ஆனால், அவற்றிற்கு அறுபத்தேழுகோடி படைத்தலைவர்களுண்டு; அவர்கட்கெல்லாம் நீலன் அதிபதியா யிருக்கின்றான்" என்றான். இராமர் சந்தோஷித்துச் சுக்கிரீவனை நோக்கி, "இனி ஆகவேண்டிய காரியத்தைப் பார்" என்றார். உடனே சுக்கிரீவன் அனுமாரை நோக்கி, "வாயு புத்திரரே! பிராட்டியாரைத் தேடாமல் இனியும் தாமதிப்பது அழகன்று; நீர் எல்லா வல்ல

மையு முடையவர் ; ஆதலின் நீர்தாம் பிராட்டியாரைக் காணுவீர்; இராவணன் தென்றிசையில் சென்றதால் அங்கே தான் அவனுடைய நகரமிருக்கலாம்; அங்கே செல்லத் தக்கவர் நீரே; ஆகையால் அங்கதனையும், சாம்பன் முதலான படைத் தலைவர்களையும், இரண்டு வெள்ளம் வானர சேனைகளையும் அழைத்துக்கொண்டு நீர் தென்றிசைக்குச் செல்லவேண்டும்; மேற்குத்திசைக்கு விருஷபனும், வட திசைக்குச் சதவலியும், கிழக்குத்திசைக்கு வினதனும், சேனைகளுடன் செல்லட்டும்; நீர், நான் சொன்னபடியே புறப்பட்டுப்போய்ப் பிராட்டியாரைக் கண்டு ஒரு மாதத்திற்குள் திரும்பி வந்துவிட வேண்டும்; நீர் இங்கிருந்து புறப்பட்டு, விந்தியகிரி, நருமதைநதி, ஏமகூடபர்வதம், விதர்ப்ப தேசம், அகஸ்தியர் முன்னே வாசமாயிருந்த தண்டகாணியம், அங்குள்ள முண்டகத்துறை யென்னும் சோலை, அதற்கப்பாலுள்ள பாண்டுபர்வதம், அதன் சமீபத்திலுள்ள கோதாவரி, சுவணநதி, சூரியகாந்தமலை, சந்திரகாந்தமலை, நாகராஜன் கருடனுக்குப் பயந்து ஒளிந்து கொண்டிருக்கிற கொங்கணம், குலிந்தம் என்ற ஸ்தானங்கள், அருந்ததி பர்வதம், அதற்கப்பாலுள்ள பாலை நிலங்கள், அநேகம் நதிகள், சுனைகள், மலைகள், நாடுகள், வாசுகி முதலிய சர்ப்பங்களுக்குக் கருடன் அமிர்தங்கொடுத்த மரகத பர்வதம், முதலிய விடங்களுக்கெல்லாம் சென்று தேடும்; அப்பால் திருவேங்கடமலை யிருக்கின்றது; அங்கே பொன் முகரியென்னும் நதியுமுண்டு; முனிவர் ஆச்சிரமங்களும் அநேகமுண்டு; அந்தப் பர்வதத்திற்குச் சென்றால் பாவவிமோசனமாய் நீர் உடனே பரமபதமடைவீர்; அதனால் சுவாமி காரியம் விக்கினப்பட்டுப் போகும்; ஆதலால், நீர் அதன் சமீபத்திற் செல்லாமல் தூரத்திலிருந்தபடியே அதனைச் சேவித்துக்கொண்டு அதன் பக்

கத்தில் அன்னையாரைத் தேடிப்பார்த்துவிட்டு அப்பால் தொண்டைநாடு, காவிரிநதி, மலைநாடு, தமிழ்நாடு, பொதிகை, தமிழ்ச்சங்கம் நிலவும் மதுரை, பொருநை நதி, திருச்சங்கணித்துறை முதலிய விடங்களிலும் தேடிக் கொண்டு போனால் முடிவில் மகேந்திர பர்வதத்தையும், சமுத்திரத்தையுங் காண்பீர்; பின்னர் அதற்கப்பாலுந் தேடிப்போய் முன்னே நான் கூறிய ஒருமாதத் தவணைக்குள் வந்து சந்தோஷமான செய்தி தெரிவிக்கவேண்டும்; சுவாமியிடம் விடைபெற்றுக்கொண்டு விரைந்து செல்லும்" என்று சொன்னான்.

அப்போது இராமருக்கு, அனுமார் எப்படியும் சீதையைக் காணுவார் என்ற நம்பிக்கையிருந்தபடியால் அவர் ஆஞ்சநேயரிடத்தில், சீதையைப் பற்றிய சில குறிப்புக்களைச் சொல்லவிரும்பி அவரை அருகில் அழைத்து அவர் முகத்தைப்பார்த்து, "ஆஞ்சநேயா! நீ மகா சாமார்த்தியவான்; எப்படியும் சீதையைக் காண்பாய்; அவ்வாறு கண்டால் அவளைச் சந்தேகமறத் தெரிந்து கொள்வதற்கும், அவள் உன்னை என்னுடைய தூதனென்றுணர்ந்து கொள்வதற்கும், நீ கேட்டுக் கொள்ளவேண்டியவைகளும், அவளிடம் கூறத்தக்கவைகளுமாகிய சில அடையாளங்களை நான் சொல்கிறேன்; அவற்றை நீ கேட்டு மனத்தில் வைத்துக்கொள்வாயாக; சீதையினிடத்திலே ஸ்திரீகளுக்குரிய இலக்கணங்களெல்லாம் ஒன்றேனும் குறைவுபடாமல் பொருந்தியிருக்கும்; வேணுகானம் யாழோசை முதலியவைகளெல்லாம் ஒன்றாய் உருவெடுத்ததுபோலவே அவளுடைய குரலோசை அமைந்திருக்கும்; இனிய தமிழ்ப்பாடலின் செவ்வியநடையே அவளின் நடைக்கு உபமானமாம்; அவளுடைய திருமேனியின் நிறத்திற்கு மாந்தளிரும் பொன்னும் இணையாகமாட்டா;

அது தனக்குத்தானே நிகராம்; ஸ்திரீகளில் அவளுக்கு நிகரானவர் எவருமிரார்; இந்த அடையாளங்களால் அவளை நீ தெரிந்துகொள்; அவ்வாறு தெரிந்து கொண்ட பின், அவளிடத்திற் சென்று உன்மீது அவளுக்கு நம்பிக்கை யுண்டாகும்படி செய்துகொள்; எங்ஙனமெனில், நான் விசுவாமித்திரர் பின்னே முதன் முதல் மிதிலை நகரத்திற்குச் சென்றபோது சீதை கன்னிகாமாடத்தில் நின்று என்னை நோக்கினாள்; நானும் அவளைப் பார்த்தேன்; பின்பு ஜனக மகாராஜனுடைய சபைக்கு அவள் வந்தபோதும் நான் அவளைப் பார்த்தேன்; அவளும் கைவளையைத் திருத்துகிற பாவனையாக என்னைப் பார்த்தாள்; நான் மிதிலையில் வில்லொடித்ததைக் கேள்விப்பட்டபோது அவள், 'அந்தவில்லை ஒடித்தவர் விசுவாமித்திரருக்குப் பின்னே சென்ற வீர புருஷரல்லாவிடில் நான் என் உயிரை விட்டுவிடுவேன்; ஏனெனில் அவரை நான் முதலில் பார்த்தபோதே அவர் எனக்கு நாதராகவேண்டுமென்று கருதி விட்டேன்; வேறொருவர் வில்வளைத்து என்னை மணம் புரிய நேர்ந்தால் என் கற்புக்குப் பங்கம் வரும்' என்று சொன்னாள்; நான் வனத்திற்குப் புறப்படுங் காலத்தில், அவளும் கூட வருகிறேனென்றாள்; அப்போது நான் அவளிடத்தில் 'பெண்ணே! நீ காட்டிற்கு வந்தால் துயரப்படுவாய்; உன் துயரத்தைக் கண்டு என் மனம் துன்பப்படும்; ஆதலின், நீ வரவேண்டாம்' என்றேன். அதற்கவள், 'உமக்குக் காட்டில் நான் தவிர மற்றவைகளெல்லாம் மிகுந்த இன்பஞ் செய்வனவோ?' என்று கண்ணீர்விட் டழுதாள்; நாங்கள் நகரத்தைவிட்டு வனத்திற்குப் புறப்படும்போது அரண்மனை வாயிலைக் கடந்த மாத்திரத்திலேயே தன்னுடைய பேதைமைக் குணத்தால், 'ஆரணியம் எங்கே' என்று என்னைக்கேட்

டாள். இவற்றை யெல்லாம் நான் கூறியதாக நீ அவளிடம் சொல்லு; மேலும் நான் என்னுடைய கணையாழியையும் தருகிறேன்; அதையும் நீ அவளிடம் கொடு; அப்போது உன்மீது அவளுக்கு நம்பிக்கை யுண்டாய் விடும்; அதன் மேல் நீ அவள் சொல்வனவெல்லாம் கேட்டுக்கொண்டுவந்து என்னிடம் கூறு" என்று தம்முடைய முத்திரை மோதிரத்தைக் கழற்றி அவர் கையிற்கொடுத்து, "விரைவில் சென்று ஜெயத்துடன் திரும்புவாயாக" என்று சொல்லி அவரை அனுப்பினர். அனுமார், இராமரை நமஸ்கரித்து அவரிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டார். அங்கதனும், மற்றப்படைத்தலைவர்களும் வானர சேனைகளுடன் அவர்க்குப் பின்னே நடந்தார்கள்.

பிலம் நீங்கல்.

அதன்மேல் சுக்கிரீவன், மற்ற மூன்று திசைகளுக்கும் போகும்படி திட்டம் செய்திருந்த வானரர்களை ஆங்காங்கே செல்லுமாறு அனுப்ப அவர்களும் அதிக விரைவிற் சென்று அந்தத் திசைகளில் சீதா பிராட்டியாரைத் தேடினார்கள். தெற்குத் திசையிற் சென்ற அனுமார் முதலானவர்கள், விந்தியகிரி, நருமதையாறு, ஏமகூட பர்வதம் முதலிய விடங்களிலெல்லாம் தேடிப்பார்த்துச் சீதா பிராட்டியாரைக் காணாததால், அனுமார், அங்கதன், சாம்புவர் ஆகியவர்கள் தங்களுடன் வந்த இரண்டு வெள்ளம் சேனைகளைப் பிரித்து, "நீங்கள் ஒரு பக்கமாகச் சுற்றிக்கொண்டு மகேந்திர பர்வதத்திற்கு வந்து சேருங்கள்; நாங்களும் மற்றொரு பக்கம் சுற்றிக்கொண்டு அங்கே வந்து சேருகிறோம்" என்று ஒரு பக்கத்தில் போகும்படி அனுப்பிவிட்டு அதிகவேகமாய் நடந்து ஒரு பாலை வனத்திற்

புகுந்து அவஸ்தைப்பட்டார்கள். அதன் வெப்பம் அவர்களால் சகிக்க முடியாமலிருந்தது. அவ்வாறு அவர்கள் துன்பப்பட்டுச் செல்லும்போது அப் பாலைநிலத்தின் மத்தியில் ஒரு பில மிருக்கக்கண்டார்கள். அதைக் கண்டவுடனே அவர்கள், 'இனி நாம் இப்பாலை நிலத்திற் சென்றால் இறந்து போவோம்; ஆதலின், இந்தப் பிலத்திற்குள் நுழைந்து இதைவிட்டு வெளியேற ஏதாவது மார்க்கமிருக்கிறதாவென்று பார்ப்போம்' என்று அதற்குட் புகுந்து நெடுந்தூரம் சென்று மிகுந்த இருளான விடத்தில் அகப்பட்டுக் கொண்டார்கள். அந்த இருளோ அவர்களுக்கு மிகுந்த மதிமயக்கத்தை உண்டு பண்ணி விட்டது. அதனால் அனுமார் தவிர மற்றவர்கள், அடியெடுத்து வைக்கமுடியாமல் மனங்கலங்கி அனுமாரை நோக்கி, "இத்தருணத்தில் நீர்தாம் எங்களைக் காப்பாற்றவேண்டும்" என்று துதி செய்தார்கள். அனுமார் அவர்களை நோக்கி, "நீங்கள் பயப்படவேண்டாம்; ஸ்ரீராமருடைய கிருபையால் நமக்குப் பிராணச்சேதம் வராது; நீங்கள் என்னுடைய வாலைப்பிடித்துக் கொள்ளுங்கள்; நான் உங்களை இந்தப் பிலத்தினின்றும் வெளியேற்றி விடுகிறேன்" என்று வாலை வளரும்படி செய்தார். எல்லோரும் வாலைப்பிடித்துக்கொண்டார்கள்; பின்னர் ஆஞ்சனேயர் விஸ்வரூபம் எடுத்துக்கொண்டு கர்ண குண்டலங்களின் வெளிச்சத்தினால் சிறிது வழி தெரியக் காலால் தரையைத் தடவித்தடவி நெடுந்தூரம் நடந்து போய் ஒரு பட்டணத்தைக் கண்டார். அப்பட்டணம் அதிக சிங்காரமுடையதாயிருந்தும் மனித சஞ்சார மில்லாதிருந்தது. அதைக்கண்டவுடன் அனுமார் முதலிய மூவரும் 'இதுதான் இராவணனுடைய பட்டணமோ' என்று அதிசயித்து அதற்குட் புகுந்து பார்த்தார்கள். அங்கே சகல ஜீவராசிகளும்

மற்றவைகளும் சித்திரத்தில் எழுதப்பட்டிருந்தன. அவர்கள் 'இஃதென்னமாயையோ' என்று திகைத்தார்கள். அப்போது சாம்புவந்தர் பயந்து மற்றவர்களை நோக்கி, "ஐயன்மாரே! இது, நம்மை ஒழிக்கவேண்டி இராவணன் செய்த மாயையாயிருக்கும்; நாம் அபாயமான விடத்தில் வந்தகப்பட்டுக் கொண்டோம்; இனி என்ன நடக்குமோ தெரியாது" என்றார். அதைக்கேட்டு அனுமார், "இஃதென்ன மாயையாயிருந்தாலும் சரி; நாம் இந்தப் பிலத்தை விட்டு வெளியேற வழியில்லாமற் போகுமானால் இந்தப் பூமியை பெயர்த்துத் தின்றுகொண்டே வெளியேறி விடுவோம்; அது முடியாவிட்டால் அவ்வஞ்சனைக்காரராகிய இராக்ஷதரை இங்கேயே கண்டுபிடித்துக் கொன்றுவிட்டுப் பின்னர் நாம் மடிவோம்" என்று கோபத்துடன் கூறினார். மற்றவர்களும் அவர் அபிப்பிராயத்திற் கிணங்கினார்கள்.

அதன்மேல் எல்லோரும் அந்தப் பட்டணத்தைச் சுற்றிப் பார்த்தார்கள். அவ்வாறு பார்த்துக்கொண்டு வரும்போது அந்நகரமத்தியில் ஒரு பெண் தவஞ்செய்து கொண்டிருந்தாள். அவளுடைய நிலை உலகத்தை மறந்த யோக நிலையாயிருந்தது. அவர்கள், யாருமில்லாத அந்நகரத்தில் அவளைக் கண்டதும் அதிசயித்து வணங்கினார்கள். அனுமார் தவிர மற்றைய வீரர்கள் அவளை, 'ஜானகிதானோ' என்று நினைத்து அனுமாரை நோக்கி, "இந்தப் பெண்மணி தான் ஜானகியோ" என்று வினவினார்கள். அனுமார், ஸ்ரீ ராமபிரான், பிராட்டியாருக்குக் கூறிய குணங்களில் ஒன்றேனும் இம்மாதினிடமில்லை" என்றார். அத்தருணத்தில் நிஷ்டையிலிருந்த அந்தப்பெண் யோகங் குலைந்து அவர்களை நோக்கி, 'நீங்கள் யாவர்?' என்று வினவினாள். அவர்கள், தங்கள் விருத்தாந்தத்தைக் கூறினார்கள். அவள் ஆனந்தமுடையவளாய் எழுந்து, "ஸ்ரீ ராமபிரான் எங்கே யிருக்கின்

றார்?" என்று அவர்களைக் கேட்க, அவர்கள் இராமரிருக்கு மிடத்தையும் மற்ற விவரங்களையுங் கூறினார்கள். அவள் 'இன்றைக்கு என் தவம் முடிந்தது' என்று மகிழ்ந்து அவர் கட் குணவளித்து மிகுந்த உபசாரம் செய்தாள். பின்னர் அனுமார் அவளை நோக்கி, "அம்மையே! உம்முடைய விருத் தாந்தத்தையும், இந்நகரத்தியல்பையும் எமக்குக் கூற வேண்டும்" என்றார்.

அதற்கந்தமாது, "இந்நகரம் மயனுடைய தபோபலத் தால் பிரமாவினால் சிருஷ்டிக்கப்பட்டது. நான் தெய்வ லோகத்தி லிருப்பவள்; என் பெயர் ஸ்வயம்பிரபை; தெய்வ லோகத்திலுள்ள அரம்பா ஸ்திரீகளில் ஒருத்தி எனக்குயிர்த் தோழி. அவளை ஓர் அசுரன் இச்சித்தான். அவளுக்கும் அவன்மேல் இஷ்டமுண்டாயிற்று. அவளுடைய மனோ பீஷ்டத்தை யுணர்ந்த நான் அவளுக்கிந்த நகரத்தைத் தெரி வித்து, இங்கு வந்து அவனுடன் கூடியிருக்கும்படி சொன் னேன். அவள் என் சொற்படியே இந்நகரத்தில் வந்து அவ னுடன் கூடியிருந்தாள். அவளை விட்டுப்பிரிய முடியாமை யால் நானும் இங்கே வந்திருந்தேன். நாங்கள் அப்படி யிருக் கும்போது இந்திரன் அவ்வரம்பையைத் தேடிக்கொண்டு இங்கே வந்து அவ்வசுரனைக்கொன்று, அவளைக் கோபித்து நடந்ததை உள்ளவாறு கூறும்படி கேட்டான். அவள் இந்திரனுக்கு என்னைச் சுட்டிக்காட்டி, 'எல்லாக் காரியங் களும் இவளாலேயே நடை பெற்றன' என்று கூறினாள். இந்திரன் என்மீது கோபங்கொண்டு என்னை நோக்கி, 'நீ இந்நகரத்திற்றானே இருக்கக்கடவை; நீ வெளியேறி வாராத படி இதிலிருந்து செல்லும் பிலத்துவாரம் இருள் நிறைந்த தாகக் கடவது' என்று சாபமிட்டான். அப்போது நான் பயந்து, 'எனக்கெப்போது இச்சாபம் நிவிர்த்தியாகும்?' என்று இந்திரனைக் கேட்டேன். அதற்கவன், 'ஸ்ரீ ராமதூத

ரான அனுமார் பின்னொரு காலத்தில் இங்கே வருவார்; அப்போதுனக்குச் சாபவிமோசனமாகும்; அதன்மேல் நீ தெய்வ லோகத்திற்கு வருவாய்' என்று சொல்லி அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு போய்விட்டான். அது முதல் நான் இங்கே யிருக்கின்றேன்; என் உபயோகத்திற் குரிய எல்லா வஸ்துக்களும் இங்கே உள்ளன. எனினும் நான் அவற்றை விரும்பாமல் என் சாபம் விரைவில் விமோசனமாகும் பொருட்டு உம்மைக் காண வேண்டிச் செய்தற் கரிய தவத்தைச் செய்துகொண் டிருந்தேன். இப்போதும் மைக் கண்டதால் என் சாபம் நீங்கிவிட்டது. இந்தப் பிலமோ நூறுயோசனை விஸ்தீரணமுள்ளதா யிருக்கிறது. இதில் இருள் சூழ்ந்திருப்பதால் வெளியேறும் மார்க்கந் தெரியவில்லை. ஆதலின், நீர் தயவுசெய்து, நான் தெய்வ லோகம்போய்ச் சேரத்தக்க உபாயம் புரியவேண்டும்" என்று சொன்னாள். அப்போது மற்ற வானர வீரர்கள், அனுமாரிடத்தில், "நீர் எங்களைப் பிலத்தினின்றும் வெளி யேற்றினது போலவே இந்தப் பெண்ணையும் வெளியேற்றி விண்ணுலகிற் சேரும்படி செய்யும்" என்று சொன்னார்கள். உடனே அனுமார் விஸ்வரூபங்கொண்டு அந்தப் பிலத்தை அடியோடு பெயர்த்து மேற்குச் சமுத்திரத்தில் எறிந்தார். அது போய் வீழ்ந்தவிடம் ஒரு தீவாய் இன்னும் பிலத்தீப மென்னும் பெயருடன் விளங்கிக்கொண் டிருக்கின்றது. அவ்வாறு அனுமாரால் பிலம் பெயர்த் தெறியப்பட்டவுடன் பூமிக்கும் அவர்களிருந்த விடத்திற்கும் இடையில் வெளிச்ச முண்டாகிப் பூமிக்குச் செல்லும் வழிதெரிந்தது. அவ் வழியாய் அனுமார் முதலியவர்கள், அப்பெண்ணை அழைத் துக்கொண்டு பூமிக்கு வந்து சேர்ந்தார்கள். ஸ்வயம்பிரபை அனுமாரைத் துதித்து அவரிடத்தும் மற்றவர்களிடத்தும் விடைபெற்றுக் கொண்டு சுவர்க்கம் போய்ச்சேர்ந்தாள்.

அனுமார் முதலியவர்கள் அவ்விடத்தை விட்டுச் சென்று ஒரு பொய்கையினிடம் போய்ச் சேர்ந்தார்கள். சூரியாஸ்தமனமாயிற்று. அந்தப் பொய்கை ஓர் அசுரனுக்குச் சொந்தமானது.

ஆறுதாண்டல்.

வானரவீரர்கள் அங்குப்போய்ச் சேர்ந்தவுடன் அப்பொய்கையின் ஜலத்தைப் பருகி, அங்குள்ள காய்கனிகளைப் புசித்து இளைப்பாறி அந்தப் பொய்கைக் கரையில் படுத்துறங்கினார்கள். அப்போது அப் பொய்கைக்குச் சொந்தக்காரனாகிய அசுரன் வந்து அவர்களைப் பார்த்து, 'இவர்கள் யாரோ பயமில்லாமல் வந்து நம்முடைய பொய்கைக் கரையில் உறங்குகின்றார்கள்' என்று கோபித்து அங்கதனுடைய மார்பில் ஓர் அறை அறைந்தான். அங்கதன் விழித்தெழுந்து அவனை இராவணனென்று நினைத்து அவனுடைய மார்பில் தானும் ஓர் அறைகொடுத்தான். அவ்வறையினால் அவ்வசுரன் பூமியில் வீழ்ந்திறந்தான். அவன் வீழ்ந்த அதிர்ச்சியால் மற்றவர்களும் விழித்தெழுந்து அவ்வசுரனைப் பார்த்து அதிசயித்தார்கள். அப்போது அனுமார் அங்கதனை நோக்கி, "இவன் யார்? என்ன செய்தான்?" என்று வினவினார். அங்கதன் 'இவனைப்பற்றிய விருத்தாந்தமொன்றும் எனக்குத் தெரியாது; இவன் வந்து என் மார்பிலறைந்தான்; அதனால் நானும் இவனை அறைந்து வீழ்த்தினேன்" என்றான். அப்போது சாம்புவந்தர் அவ் வசுரனுடைய விருத்தாந்தந் தெரிந்தவராதலின், "இவனை நான் அறிவேன்; இவன் இந்தப் பொய்கைக்குரியவன்; துமிரனென்பதும், புட்களனென்பதும் இவனுடைய பெயர்கள்." என்று கூறினார்.

அதன்மேல் அவர்கள், அவ்விடத்தி லிருக்கலாகாதென்று அப்பொழுதே புறப்பட்டுச் சூரியோதய மாகும்

போது பெண்ணை நதியைச்சேர்ந்து பிராட்டியாரைத் தேடிப் பார்த்து அன்று அவ்விடத்தில் தங்கி, மறுநாள் அந்நதியைக் கடந்து விதர்ப்பதேசம், சிந்துதேசம், தண்டகாரணியம், முண்டகத்துறை, பாண்டுபர்வதம், கோதாவரிநதி, சுவண கத்துறை, குலிந்ததேசம், கொங்கணநாடுகள், அவற்றைச் சார்ந்த நெய்தனிலங்கள், அருந்ததி பர்வதம், மாகதபர் வதம், திருவேங்கடம், தண்டகநாடு, சோழநாடு, சேரநாடு, பாண்டிநாடு முதலிய விடங்களுக்கெல்லாம் சென்று சீதை யைக் காணுமல் முடிவில் மகேந்திரபர்வதம் போய்ச் சேர்ந் தார்கள்.

அனுமார் முதலியோர் சம்பாதியைக் காணல்.

மேற்கூறியபடி அனுமார் முதலியவர்கள் மகேந்திரபர் வதம் போய்ச்சேர்ந்தவுடன் தெற்குச் சமுத்திரத்தைக் கண் டார்கள். முன்னே இவர்களை விட்டுப் பிரிந்துபோனவானர சைனியங்களும் அங்கே வந்து சேர்ந்தன. எல்லோரும் ஒன்று கூடிச் சீதாபிராட்டியார் அகப்படாததைப்பற்றி யோசித்தார்கள். அவ்வாறு யோசித்து, "நம் அரசர் நமக் குக் கொடுத்த தவணை நாளும் நெருங்கிவிட்டது; நாம் நாடி வந்த காரியமும் கைகூடவில்லை; இனி நாம் என் செய்வோம்; தவஞ் செய்யலாமா? அல்லது விஷந்தின்று இறந்து போக லாமா?" என்று பேசினுர்கள். அங்கதன், "சீதாபிராட்டியார் அகப்படவில்லையென்று நாம் போய்ச் சொன்னுல் ஸ்ரீராமர் முதலியவர்கள் உயிர் விடுவார்கள்; நாம் அத்துக்கத்தைப் பார்ப்பதைவிட நமது உயிரைப் போக்கிக்கொள்வதே நலம்; ஆதலின், நான் இறந்து போகிறேன்; நீங்கள் போய் விஷ யத்தைக் கூறிவிடுங்கள்" என்று மற்றவர்களை நோக்கிக் கூறி னுன். சாம்புவந்தர் அவனிடத்தில், "நீ உயிர் விடுவது சரி யன்று; நாங்கள் மாண்டுபோகின்றேம்; நீ சென்று

நம் தலைவர்க்குச் சமாசாரத்தைக் கூறிவிடு" என்று சொன்னார்.

இவ்வாறு இருவரும் தர்க்கமாகப் பேசிக்கொண் டிருக்கும்போது அனுமார் அவர்களை நோக்கி, "நீங்கள் இப்போது இந்த வீண் யோசனை செய்துகொண் டிருப்பது தகுதியன்று; உலகத்தில் இன்னும் நாம் போகாத இடங்கள் எத்தனையோ இருக்கின்றன; எல்லா இடங்களிலும் சென்று தேடிப் பிராட்டியாரைக் காணாத பக்ஷத்தில் அப்பால் உயிரை விட்டுவிடலாம்; நமக்கேற்பட்ட தவணை நாள் கழிந்தாலும் பாதகமில்லை; பிராட்டியாரைக் கண்டு கொண்டோமானால் நம் தலைவர்கள் தாமதத்தைப் பற்றிக் கவனிக்க மாட்டார்கள்; ஆதலின் நாம் மேலும் தேவியாரைத் தேட ஆரம்பிப்போம்" என்று கூறினார். இவர்கள் இவ்வாறு பேசிக்கொண் டிருக்கும்போது, சடாயு இறந்ததைப்பற்றி மலைச் சிகரத்தின்மேல் வருந்திக்கொண்டிருந்த அவரது தமையனாகிய சம்பாதி, இவர்கள் கூடியிருந்து பேசுவதைக் கண்டு இவர்களை யாவரென்றறியும் பொருட்டு இவர்கள் சமீபத்தில் வந்தான். அவனைக் கண்டவுடன் வானர வீரர்களெல்லாரும் பயந்தோடினார்கள். அனுமார் மாத்திரம் பயப்படாமல் நின்று அவனை நோக்கி, இராக்ஷதனுடைய மாயாரூபமென்று நினைத்து, "அடவஞ்சகா! மாயாவடிவத்துடன் வருகின்ற நீ பிழைப்பாயா?" என்று கோபத்தோடு அவன் சமீபத்தில் நெருங்கி அவன் துக்கமுகத்துட னிருப்பதைக் கண்டு கோபந்தணிந்து அவனை நீ யாரென்று கேட்கத் தொடங்கினார். அவர் வாய் திறப்பதற்கு முந்தியே சம்பாதி அனுமாரை நோக்கி, "எவராலும் கொல்ல முடியாத சடாயுவைக் கொன்றவர் யாவர்?" என்று வினவினான். அதற்கு அனுமார், "நீயார்? உன்னுடைய உண்மையான விருத்தாந்தத்தைக் கூறினால், பின்னர் உன் கேள்விக்கு நான் விடை

பகர்வேன்" என்ருர். சம்பாதி தன்வரலாற்றைக் கூறினுன். அவன் சடாயுவுக்குத் தமையனென்பதை உணர்ந்த அனுமார் சோகமுற்று, 'உன்னுடையதம்பி இராவணனுற் கொல்லப்பட்டார்' என்று அவனுக்குக் கூறினுர். சம்பாதி சகோதர வாஞ்சையால் பலவாறு புலம்பி உயிர்விடத் துணிந்தான். அப்போது அனுமார், "இராமகாரிய நிமித்தமாக உயிர் விட்ட சடாயு நற்கதி யடைந்தார்; ஆதலின், அவர் பொருட்டு நீ வருந்தி உயிர் விட வேண்டாம்" என்று அவனைத் தேற்றினுர். அதன்மேல் சம்பாதி, "என் தம்பி இராவணனுடன் எதிர்த்ததற்குக் காரணமென்ன?" என்று அனுமாரிடம் கேட்டான். அனுமார் அதன் காரணத்தைக் கூறினுர். சம்பாதி, "ஸ்ரீராமர் விஷயத்தில் என் தம்பி உயிர் விட்டது மகா மேன்மையான காரியமாகும்" என்று சந்தோஷித்துத் தம்பியின் மரணத்தின் பொருட்டுத் தான் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்துவிட்டுப் பின்னர் அனுமார் முதலியவர்களை நோக்கி, "ஐயன்மீர்! நீங்கள் வந்து எனக்கு இராம காரியத்தைக் கூறிப் புண்ணியத்தை உண்டாக்கினீர்கள்; இன்னுமெனக்கொரு சகாயம் செய்யவேண்டும்: எனக்கு இறகுகள் குறைந்து போயிருக்கின்றன; நான் காதாற் கேட்கும்படி இப்போது நீங்கள் இராம நாம சங்கீர்த்தனம் செய்வீர்களேயானுல் அந்தச் சிறகுகள் வளரும்" என்று சொன்னுன். இந்த அதிசயத்தைப் பார்ப்போமென்று அனுமார், அங்கதன், சாம்புவந்தர் முதலானவர்களும், மற்ற வானரர்களும் இராமநாமபஜனை செய்தார்கள். சம்பாதிக்கு உடனே இறகுகள் வளர்ந்து அவன் மிக்க பராக்கிரமசாலியாய் விட்டான். வானரர்கள் அதிசயித்து இராமரைத் துதித்துச் சம்பாதியை வணங்கி, அவனுடைய பூர்வ சரித்திரத்தைச் சொல்லும்படி கேட்டார்கள்.

அப்போது சம்பாதி அவர்களை நோக்கி, "நானும், சடாயுவும் சூரியனுக்குச் சாரதியாகிய அருணனுடைய பிள்ளைகள். நாங்கள் கழுகுகளுக்கெல்லாம் அரசர்களாகி இராஜரீகம் செய்துவந்தோம்; அக்காலத்தில் எங்களுக்குத் தெய்வலோகத்தைப் பார்க்க வேண்டுமென்னும் விருப்ப முண்டாயிற்று. அதனால் இருவரும் விண்ணிற் பறந்து சென்றோம். அவ்வாறு பறக்கும்போது சூரியமண்டலத் திற் போனவுடன் முன்சென்ற என் தம்பி, சூரிய வெப்பத் தினால் தாக்கப்பட்டு வெதும்பிக் கதறினான். அப்போது நான் முன்சென்று என் சிறகின் நிழலால் அவனை மறைத்து உஷ்ணம் அவன் மீது தாக்காமல் காத்துக்கொண்டு வந் தேன். அவன் அதனால் சிற கிழக்காமல் உயிருடன் மீண்டு வந்தான். நானோ அவனைக் காக்கத் தொடங்கியதனால் சிறகெரிந்து, சரீரம் வெந்து, சாகாமல் வேதனையோடு லோகசாரங்கரென்னும் முனிவர் வாசஞ்செய்கின்ற மலைச்சா ரலில் வந்து விழ்ந்தேன். அங்ஙனம் வீழ்ந்த என்னைச் சூரி யன் பார்த்திரங்கி, 'பின்னொரு காலத்தில் சீதா பிராட்டி யாரைத் தேடிக்கொண்டு வானர வீரர்கள் உன்னிடம் வரு வார்கள்; அப்போது அவர்களுடைய வாக்கினால் இராம பஜனையை நீ கேட்பாயானால் உனக்குச் சிறகு வளர்ந்து நீ குளிர்ச்சியடைவாய்' என்று சொன்னான். அச்சமயம் எனக்குண்டாகி யிருந்த வெப்பஞ் சகிக்க முடியாமல் நான் உயிர்விடத் துணிந்தேன். அப்போது லோகசாரங்க முனிவர் என்னை நோக்கி, 'சமீபத்தில் இராமதூதர்கள் உன் னிடம் வருவார்கள். ஆதலின் நீ உயிர்விடாதே' என்று ரைத்தார். அதனால் நான்பிராணனை வைத்துக்கொண் டிருந் தேன். அக்காலத்தில் நான் துயரப்பட்டுக்கொண் டிருந் ததைப் பார்த்துச் சகிக்காமல் என் தம்பி உயிர்விடத் துணிந்தான். அப்போது நான் அவனை நோக்கி, 'நானே

வலியிழந்தவனைப் விட்டேன்; நீயும் இறந்துவிட்டால் கழுகு களுக்கு அரசனில்லை" என்றேன். என்னுடைய வார்த் தையை மறுக்க முடியாமல் அவன் கழுகுகளுக் கரசனானன். நான் இதுவரை துக்கத்தில் மூழ்கியிருந்து இப்போ துங் களால் துயர் நீங்கப்பெற்றேன்; சூரியன் கூறியபடி நீங் கள் இராமநாம பஜனை செய்ய என் கஷ்டம் நீங்கிய படியால் நீங்கள் சீதாபிராட்டியாரைத் தேடிக்கொண்டுவந் தவர்களாகவே யிருப்பீர்களென்று நான் நினைக்கிறேன்; ஆயினும், நீங்கள் இங்கேவந்த வரலாற்றை உங்கள் வாக்கி னல் கூறுங்கள்" என்ருன்.

வானரவீரர்கள் இராமரைத் துதி செய்துகொண்டு தாங்கள் சீதையைத் தேடிவந்த விவரத்தைக் கூறினர்கள். அதைக் கேட்டவுடன் சம்பாதி அவர்களை நோக்கி, "இராவ ணன் சீதாபிராட்டியாரைப் பூமியுடன் பெயர்த்தெடுத்துக் கொண்டு போகும்போது நான் பார்த்தேன்; அவன் இலங் கையில்தான் பிராட்டியாரைச் சிறைவைத் திருக்கிருன்; நீங்கள் இலங்கைக்குச் சென்ருல் சீதா தேவியாரைக் காண் பீர்கள்; இலங்கை எழுநூறுயோசனை விஸ்தீரணமுள்ளது. இராவணன் மகா கோபமும் வல்லமையு முடையவனுதலின் அவனுடைய இலங்கைக்குள் எதிரிகள் எவரும் செல்லுதல் இயலாது; மேலும் கடலைத்தாண்டி இலங்கைக்குட் செல்ல வேண்டும்; அஃதெல்லோராலும் இயலுங் காரியமன்று; ஆதலின் உங்களில் கடலைத்தாண்டிச் செல்லும் ஒருவர் மாத்திரம் சமுத்திரங்கடந்து இரகசியமாக இலங்கைக்குள் நுழைந்து பிராட்டியாரைக் கண்டு அவரிடத்தில், இராம பிரான் கூறியவற்றைக் கூறி, அவர் சொல்லும் விஷயங்களைத் தெரிந்துகொண்டு திரும்பவேண்டும்; அது முடியாமற் போனல் நீங்கள் எல்லோருமே திரும்பி இராகவரிடம் சென்று என் சொல்லை நம்பிப் பிராட்டியார் நிச்சயமாக

இலங்கையி லிருக்கிறுரென்று சொல்லுங்கள் ; நீங்கள் நன்ருக ஆலோசித்து இவ்விரண்டிலொரு காரியத்தை நிறைவேற்றுவது நலம்; என் தம்பி இறந்துபோனதால் கழுகுகள் அரசனற்றலைந்து விடக்கூடும் ; ஆதலின், நான் விரைந்து சென்று என் தம்பியின் அரசை ஏற்றுக்கொள்ளவேண்டும்” என்று சொல்லி அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு ஆகாயத்திற் பறந்து போய்விட்டான்.

அனுமார் கடல் தாண்ட மகேந்திர மேறுதல்.

அதன்மேல் அனுமார் முதலானவர்கள், செய்யவேண்டிய காரியங்களைப்பற்றி யோசித்தார்கள். அவர்களின் யோசனையில் கடலைத் தாண்டிப்போய்ச் சீதாபிராட்டியைக் கண்டு வருவதே யுக்தமென்பது தோன்றிற்று. அதனுல் அவர்கள், “நம்முள் சமுத்திரந்தாண்ட வல்லவர் யாவர் ?” என்று ஒருவரையொருவர் வினவினுர்கள். நீலன் முதலிய படைத்தலைவர் ‘சமுத்திரந்தாண்டல் எம்மால் முடியாது’ என்று கூறிவிட்டார்கள். அங்கதன், ‘நாண், சமுத்திரத்தைத் தாண்டிப் போய்விடுவேன் ; திரும்பிவர எனக்குச் சக்தியிராது’ என்ருன். சாம்புவந்தர், ‘எனக்கு முற்காலத்தில் இத்தகைய காரியங்களைச் செய்தற்கு வலிமையிருந்தது; ஸ்ரீமந்நாராயணர் இந்தப்பூமியை அளந்தபோது நான் அஷ்ட திக்குகளிலும் பிரதக்ஷணமாகச் சுற்றிச் சுற்றிப் பறையறைந்து வந்தேன். அப்படிச் சுற்றிவரும்போது மேருவானது என் காலில் மோதப் பாதம் ஊனமாய்ப் போயிற்று. அதனுல் இப்போது நான் கடல் தாண்டுவதற்கு வல்லமையற்றவனு யிருக்கின்றேன்’ என்று சொல்லி அங்கதனை நோக்கி, “இராஜகுமாரனே! இந்தக் காரியத்தை முடித்து நமக்குப் புகழை யுண்டாக்கத்தக்கவர் அனுமார் ஒருவரே” என்று சொல்லிப் பின்னர் ஆஞ்சநேயரைப்

பலவாறு ஸ்தோத்திரம் செய்து முடிவில் அவர் முகத்தை நோக்கி, "வாயுபுத்திரரே! நீர்தாம் கடல்தாவிச் சென்று பிராட்டியாரைக் கண்டு திரும்பி வந்து எல்லோருக்கும் உயிரை நிலைக்கச்செய்து புகழை யுண்டாக்கவேண்டும்" என்று கூறினர். அனுமார் சந்தோஷித்து வானர வீரர்களை நோக்கிக் கைகூப்பி, "மகா வீரர்களாகிய உங்களுக்கு நினைத்த மாத்திரத்தில் எதையும் செய்யும் வல்லமையிருந்தும், என் மீதிருக்கும் அபிமானத்தால் நீங்கள் என்னை மிக்க பலசாலியென்று கூறிவிட்டீர்கள். உங்களை இவ்வாறு கூறும்படி செய்தது நானியற்றிய தவப்பயனே; நீங்கள் இவ்வாறு என்னைப் பெருமைப்படுத்திக் கூறியதால் உங்கள் வார்த்தையை மறுக்காமல் நான் ஸ்ரீராமருடைய கிருபையைக் கொண்டு கடல்தாண்டி உங்கள் மனோபீஷ்டத்தை நிறைவேற்றுகிறேன். நீங்கள் இலங்கையை அடியோடு பெயர்த்துக்கொண்டு வர விரும்பினும் நான் அவ்வாறே அதைச் செய்கிறேன்; அல்லது இராக்ஷதர்களை யெல்லாம் மடித்துச் சீதாபிராட்டியாரை இங்கே கொண்டுவந்து விடச் சொன்னாலும் அங்ஙனமே அதையும் செய்கிறேன்; நான் இலங்கைக்குச் சென்று வருமட்டும் நீங்களெல்லோரும் இவ்விடத்திற்றனே யிருங்கள்; எனக்குச்செல்ல விடை கொடுங்கள்" என்று உற்சாகத்துடனே எழுந்தார். அவர்கள் அங்ஙனமே சந்தோஷத்துடனே அவருக்கு விடை கொடுத்து அவரை வாழ்த்தினார்கள். தேவர்கள் அவர் மீது புஷ்பமாரி பொழிந்தார்கள். அனுமார் ஆனந்தத்துடன் அந்த மகேந்திர பர்வதத்தின்மேலேறி விசுவரூபங்கொண்டு ஒரு பொற்றூண் போலப் பிரகாசித்து நின்றார்.

சுந்தரகாண்டம்.

அனுமார் கடல் தாவுதல்.

" அலங்கலிற் றோன்றும் பொய்ம்மை யரவெனப் பூத மைந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபா டுற்ற வீக்கம்
கலங்குவ தெவரைக் கண்டா லவரென்ப கைவில் லேந்தி
இலங்கையிற் பொருதா ரன்றே மறைகளுக் கிறுதி யாவார்."

மகேந்திர பர்வதத்தின் மேல் ஏறி நின்ற ஆஞ்சனேயர் மேல் நோக்கிப் பார்த்தார். அங்கே தெய்வலோகம் பிரகாசித்தது. அதைக் கண்டதும் அவர் 'இதுதான் இலங்கையோ' என்று ஐயப்பட்டு 'இஃது ஆகாயத்திலிருப்பதால் அஃதன்று' என்று தெளிந்து பார்வையைச் சற்றே தாழ்த்திக் கீழ் நோக்கிப் பார்த்தார். அப்போதவருக்கு அந்தத் தெய்வலோகத்தினும் மேற்பட்ட சிறப்பினையுடைய இலங்கை தெரிந்தது. அதைக்கண்ட மாத்திரத்தில் அனுமார் சீதையைக் கண்டதுபோலவே மகிழ்ந்து புஜங்களைத் தட்டி ஆர்ப்பரித்து நின்றபடியே இரண்டு கால்களையும் அழுத்தமாக ஊன்றி அதிக வலிமையோடு தாவ ஆரம்பித்தார். அப்போதந்தப் பர்வதம் குலுங்கி அதிலிருந்த ஜீவராசிகளெல்லாம் பயந்து நடுங்கி வெளியேறின. அவ்வாறு எல்லாம் நடுங்க அனுமார், அந்தப் பர்வதத்தின் சிகாம பூமியில் அழுந்தும்படி பாதங்களை அழுத்தி, வாலை வீசிநீட்டி, கால்களை மடக்கி, மார்பையொடுக்கி, தோள்கள் வளரக் கழுத்தைச் சுருக்கி, கைகளை நீட்டித் தலையை உயரத்தூக்கி, வாயினால் இராம நாமத்தைத் துதிசெய்துகொண்டு அதிக விசையாக மேலெழும்பினார். அவ்வாறு உக்கிரமாய் அவர் மேலெழும்பிப் பாய்ந்த விசையினால் அநேக விருக்ஷங்களும், கற்களும், ஜீவராசிகளும் அவர்க்குப் பின் சென்று சமுத்திரத்தில் வீழ்ந்தன. சமுத்திர ஜலம் இருபிளவாகி நாகலோகமும்

தோன்றியது. அலைகள் கிளம்பி அனுமாருக்கு முன்னே சென்று இலங்கையில் மோதின. இன்னும் பற்பல அதிசயமான செய்கைகள் நிகழ்ந்தன. இப்படி அவர் சமுத்திரத்தின் மேலே அதிக வேகமாய்த் தாவிச் செல்கின்ற காலத்தில், இந்திரனுக்குப் பயந்து சமுத்திர ஜலத்தில் மூழ்கி மறைந்திருந்த மைநாகபர்வதமானது மேலெழும்பி வளர்ந்து அனுமாருக்குக் குறுக்கே நின்றது. அனுமார் அதனை, 'இஃதென்ன! அஞ்சாமல் எதிரேவந்து நிற்கின்றது' என்று அதிசயமாக உற்று நோக்கினார். அவருக்கது மலை யென்று தெரிந்தது. உடனே அவர் அதனை அலக்ஷியமாகத் தலை கீழாகும்படி தள்ளிவிட்டுப் போனார். அப்பர்வதம் அஞ்சி, மிகுந்த பக்தியுடனே ஒரு மனிதனைப் போல வடிவெடுத்து அனுமாருக் கெதிரில் வந்துநின்று, "ஐயா! நீர் என்னைப் பகைவனென்று நினைக்கவேண்டாம்; நான் மைநாகபர்வதம்; பூர்வத்தில் இந்திரன், மலைகளின் சிறகுகளை அரியும்போது அஞ்சி வருந்திய என்னை, உமது தந்தையாகிய வாயுபகவான் இவ்விடத்தில் கொண்டுவந்து சேர்த்துச் சமுத்திர ஜலத்தில் மறைந்திருக்கும்படி செய்து இரக்ஷித்தார். நீர் அவருடைய குமாரரானபடியினாலே, அவர் செய்த நன்றிக்குப் பிரதி நன்றியாக நான் உமக்கு ஏதேனுமோர் உதவி செய்யலாமென்றே இங்குவந்தேன்; இஃதன்றி, 'இராமருடைய ஏவலை மேற்கொண்டு ஆஞ்சநேயர் சீதாபிராட்டியாரைத் தேடிக்கொண்டு வருகிறார்; நீ சென்று அவருடைய இளைப்பைத் தீர்த்துவா; இச்செய்கை உனக்கு மகா புண்ணியத்தை உண்டாக்கும்' என்று சமுத்திர ராஜனும் எனக்குக் கூறி என்னை உம்மிடம் அனுப்பினார்; ஆதலின், நீர் என்மீது சிறிதுநேரம் தங்கி இளைப்பாறி என்னிடம் விருந்துண்டு செல்லவேண்டும்" என்றுரைத்தது.

அனுமார் அவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் 'இவன் குற்றமில்லாதவன்' என்று நினைத்து அவனை நோக்கி, "இராமருடைய அனுக்கிரகத்தினால் எனக்கெவ்வித இளைப்புமில்லை; நான் இராம காரியத்தை நிறைவேற்றாமல் எதையும் புசிக்கமாட்டேன்; நீ இவ்வளவு அன்பான வார்த்தை கூறியதற்காக நான் மிகவும் திருப்தி யடைந்தேன்; இதுவே நான் உன்னிடம் விருந்துண்டதற்குச் சமானமாம். நான் இலங்கைக்குப் போய்க் காரியசித்தி பெற்றுத் திரும்பும்போது வேண்டுமானால் உன்னிடம் விருந்துண்டு செல்கிறேன்" என்று சொல்லி அப்பர்வதத்தினிடம் விடை பெற்றுக் கொண்டு அதற்கப்பால் விரைந்து சென்றார். அப்படி அவர் போகும்போது தேவர்கள் அவருடைய பராக்கிரமத்தைப் பரிசோதித்தறியவேண்டிச் சுரசையென்னும் ஒரு பெண்ணை அழைத்து, 'நீ போய் ஆகாயத்தில் தாவி வருகின்ற அனுமாருடைய வல்லமையை அளவிட்டறிந்து வா' என்று அவளை யனுப்பினார்கள். அவள் ஓர் இராக்ஷஸி வடிவங்கொண்டு அனுமாருக் கெதிரில் வந்து நின்று, 'அற்பக்குரங்கே! உனக்கு நான் வழி விடமாட்டேன்; நீ என் வாயிற் புகுந்துதான் போகவேண்டும்' என்று ஆர்ப்பரித்தாள். அனுமார் அவளுக்கஞ்சாமல், "உன் பசியைத் தணித்தற் பொருட்டு நீ என்னை உண்ண விரும்பினால் அப்படியே நான் என் தேகத்தை உனக்களிக்கிறேன்; ஆனால் நான் இராம காரியமாகப் போவதால் அக்காரியத்திற் கிடையூறு நேராமல் நீ என்னை விட்டுவிடு; நான் போய்க் காரியத்தை முடித்துக்கொண்டு திரும்பி வந்து உனக் கிரை யாகிறேன்" என்று நகைத்துக்கொண்டு சொன்னார். சுரசை, "உன்னை நான் விடமாட்டேன், இப்பொழுதே தின்னுவேன்" என்றாள். ஆஞ்சனேயர், "அப்படியானால் நான் உன் வாய்க்குள்ளே நுழைகின்றேன்;

உனக்கு வல்லமை யுண்டானால் நீ என்னைத் தின்றுவிடு பார்க்கலாம்" என்றார். அவள் தன்னுடைய பெருவாயைத் திறந்துகொண்டு நின்றாள். அப்போது அனுமார் அவளுடைய வாய் சிறிதும் தம்முடைய சரீரம் பெரிது மாகும்படி வளர்ந்து உடனே சுருங்கி அவள் ஒரு முறை சுவாசம் விடுவதற்குள் அவ்வாய்க்குள்ளே புகுந்து வெளிப்பட்டார். அவருடைய வல்லமையைக் கண்ட தேவர்களெல்லோரும் அவரை வாழ்த்தினார்கள். சுரசை தன்னுடைய யதார்த்த வடிவத்துடனே அவருக்கெதிரில் நின்று அவரைத்துதித்து, தன்னுடைய வரலாற்றை அவரிடம் கூறினாள். அவர் மகிழ்ந்து அவளை ஆசீர்வதித்து விட்டு வேகமாகச் சென்றார்.

அப்படி அவர் கொஞ்சத் தூரம் சென்றவுடன் ஏதோ ஒரு சக்தி அவரைக் கீழே யிழுத்தது. அது கண்டு அவர் 'இஃதென்ன!' என்றதிசயித்து, ஒவ்வொரு திசையிலும் ஒதுங்கிச்செல்ல முயன்று பார்த்தார். அவரால் எந்தப் பக்கத்திலும் செல்ல முடியவில்லை. அவர் ஒன்றும் தோற்றாமல் மதிமயங்கினார். அத்தருணத்தில் பயங்கரமான ரூபத்தையுடைய ஓர் இராக்ஷஸி அவர்க்கு முன்னே தோன்றி, 'இங்கே பயமில்லாமல் வந்த நீ யாரடா? உன்னை இப்பொழுதே விழுங்குகின்றேன் பார்' என்று அதட்டினாள். இவள் யாரென்றால், கடலில் படுத்துக்கொண்டு ஆகாயத்தில் தனக்கு நேராகச் சஞ்சரிக்கின்ற ஜீவராசிகளையெல்லாம் சுவாசத்தால் இழுத்துத் தன் வாயிலிட்டு விழுங்குகின்ற அங்காரதாரை யென்னும் இராக்ஷஸி. இவளுடைய சுவாசம்தான் மேற்கூறியபடி அனுமாரைக் கீழே யிழுத்தது. அதுதான் அவரை அவளுக்கு முன்னே கொண்டு போய்ச் சேர்த்து விட்டது. அவள் மேற்கூறிய

படி அனுமாரை அதட்டியவுடனே, அவர் அவளை நோக்கி, "ஆகாயம்வரை வளர்ந்து அப்பாற் செல்வதற்கு வழியில்லாமல் அடைத்துக்கொண்டு நிற்கின்ற நீ யாரடி?" என்று கோபத்துடன் கேட்டார். அவள், "எவர்களாயிருந்தாலும் என்னைக் கண்டால் நடுங்குவார்கள்; அப்படியிருந்தும் அற்பக்குரங்காகிய நீ அஞ்சாமல் என்னுடன் எதிர்த்துப் பேசுகின்றாய்; உன்னை இப்பொழுதே நான் மென்று தின்றுவிடுகின்றேன் பார்" என்று அவரை விழுங்குதற்கு வாயைத் திறந்தாள். உடனே அனுமார் வீராவேசமுற்று அவளுடைய வாயில் நுழைந்து வயிற்றைக் கிழித்துக்கொண்டு ஆகாயத்தில் எழும்பினார். அங்காரதாரை கதறிக்கொண்டு உயிர் விட்டாள். அதன்மேல் அனுமார், "இந்தக் கடல் சம்பாதி சொன்ன அளவைக் காட்டினும் மிக விஸ்தீரணமுடையதாயிருக்கின்றது; இதைக் கடப்பது மிகப்பிரயாசையா யிருக்கின்றது; மேலும் இடையிற் பற்பல இடையூறுகளும் நேருகின்றன; எப்படியாவது விரைவில் நாம் இலங்கையில்போய்ச் சேர்ந்துவிட்டால்தான் இத்துன்பங்களெல்லாம் நீங்கும்; அவ்வாறு சீக்கிரம் இலங்கையில்சேர்வதற்கு இராமநாம ஜெபமே தக்கதாம்; ஆதலின் நாம் அதை உச்சரித்துக்கொண்டு விரைந்து செல்லவேண்டும்" என்று ஸ்ரீராமநாம சங்கீர்த்தனம் செய்துகொண்டு வேகமாகச் சென்று சிறிது நேரத்தில் இலங்காபுரிக் கருகிலுள்ள பவளமலையைச் சேர்ந்தார். அங்ஙனம் சேர்ந்து அதன் மேல் நின்றுகொண்டு இலங்கா நகரத்தைப் பார்த்தார். அஃது, இந்திரபுரியினும் மேற்பட்ட சிறப்புடையதாய் விளங்கிற்று. அதனால் அவர், அந்நகரச் சிறப்புக்கள் ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துப் புகழ்ந்தார். அவ்வாறு புகழ்ந்து, "ஒரு சமயம் இராக்ஷதர்கள் நம்மைக் கண்டால் நம்மோடு சண்டை தொடுத்தாலும் தொடுப்பார்

கள்; ஆதலால் நாம் மறைவா யிருக்கவேண்டும்" என்று தம்முடைய விசுவரூபத்தைச் சுருக்கிக்கொண்டு சிறிய உருவமாய் அந்த மலையின் ஒரு பக்கத்திலிருந்தார். அப் போது சூரியாஸ்தமன மாயிற்று.

ஊர்தேடல்.

இருளானவுடன் அந்நகரத்தில் இராக்ஷதர்களாலும், மற்றவர்களாலும் அதிசயிக்கத்தக்க அநேகம் செய்கைகள் நடந்தன. பின் சந்திரோதய மாயிற்று. அத்தருணத்தில் அனுமார் 'இலங்கைக்குள் எந்த வழியாகப் போகலாம்' என்று ஆலோசித்து ஒரு வழியாற் செல்லத் துணிந்து அந்தப் பவளமலையை விட்டு எழுந்து நடந்து சமுத்திரம் போன்ற அகழி சூழ்ந்த சுவர்ணமதிலின் சமீபத்திற் போய் நின்று அதன் உன்னதத்தைப் பார்த்து, 'இது யாவராலும் கடக்கக்கூடாதது' என்று அதிசயித்துக் கோட்டை வாயிலருகே போய் ஒரு பக்கத்தில் மறைந் திருந்து பார்த்தார். அங்கே இராக்ஷதர்களுடைய காவல் கடினமாயிருந்தது. அங்குக் காவலாக நின்ற வீரர்களைப் பார்த்து, "நம்முடைய இராமபிரான் வானர சேனைகளு டன் இங்கே யுத்தத்திற்கு வந்தாலும் இவ்வாயிலைக்கடப்ப தருமையாகும்; நம்மாலும் இப்போதிதனைக் கடந்து செல்லுதல் முடியாது. இங்கு நிற்பவர்களோடு யுத்தஞ் செய்யத் தொடங்கினாலோ அது முடிய அநேக நாட்கள் செல்லும்; ஆதலின் நாம் இந்த வழியாகச் செல்லுதல் கூடாது; மதிலைத் தாண்டித்தான் உள்ளே செல்லவேண் டும்" என்று தீர்மானித்து அதைவிட்டு மற்றொரு பக்கத் தில் சென்றார்.

அப்பொழுது, அந்நகரத்தைக் காவல் புரிகின்ற இலங்கணி யென்பவள் மகா கோர வடிவத்துடன் ஓடி

வந்து அனுமாரைக் கண்டு சீறி 'ஆரடா இங்கே செல்கிற வன்! நில்' என்றதட்டினாள். அனுமார் 'வா! வா!!' என்று சொல்லி நகைத்துக்கொண்டே அவள் சமீபத்திற் சென்றார். அவள், அவரை நோக்கி, "அடே குரங்கே! நீ எனக்கு நிகரானவனல்ல; இத்தகைய உன்னோடு நான் யுத்தஞ்செய்வது எனக்கு அகௌரவமாகும்; உன்னைப் பார்த்தால் நீ ஏதோ வஞ்சனை செய்யக்கருதி இலங்கைக் குட் பிரவேசிக்க முயற்சி செய்துகொண்டு திரிபவன் போல் காணப்படுகின்றாய்; இதற்காக நான் உன்னைக் கொல்லவேண்டும்; எனினும் உனக்கு உயிர்ப்பிச்சை தரு கின்றேன்; நீ பிழைத்தோடிப் போ" என்று கூறினாள். அனுமார் பரிகாசமாக, 'நான் இந்த நகரத்தைப் பார்க்க வந்தேன்; அதனால் உனக்கென்ன தோஷம்?' என்று சிரித் துக்கொண்டே சொன்னார். அவள், 'அடா குரங்கே! நான் போகச் சொல்லியும் நீ போகாமல் என்னோடெதிர்த் துப் பேசுகின்றாய். சிவன் முதலியவர்களும் இங்கே வர அஞ்சுவார்கள்; அவர்கள் பாடே அப்படியிருக்க நீயா இந் நகரத்தைப் பார்ப்பவன்! நீ யார்?' என்று கோப நகை யுடன் கூறினாள். அப்போது அனுமாரும் புன் சிரிப்புக் காட்டினார். அவள் மேலும் கோபங் கொண்டு, "அடே! நீ யாரனுப்ப வந்தாய்? விரைவில் இவ்விடத்தை விட்டுச் செல்லாவிட்டால் உயிர் துறப்பாய்" என்றாள். அனுமார் 'நான் இந்நகரத்தைப் பார்க்காமல் போகமாட்டேன்' என்றார். இலங்கணி, "இவன் அற்பவானரனல்லன்; மகா தீர புருஷனாய் விளங்குகின்றான்; இவனை நாம் கொல்லா விடில் இவ்வூருக்கே தீங்கு வரும்" என்று மிக்க கோபத் துடன் சூலாயுதத்தை அனுமார் மீது எறிந்தாள். அனு மார் அதைப் பிடித்து ஒடித்தெறிந்தார். அஃதுணர்ந்த இலங்கணி அடங்காக் கோபத்துடன் இன்னும் அநேகம்

ஆயுதங்களைப் பிரயோகிக்க ஆரம்பித்தாள். அனுமார் அவள் கையிலிருந்த ஆயுதங்களை யெல்லாம் பறித்தெறிந்து விட்டார். அதன்மேல் அவள் பர்வதங்களைப் பிடுங்கி யெறிய ஆரம்பித்தாள். உடனே அனுமார் அவளுடைய இரண்டு கைகளையும் சேர்த்து ஒரு கையில் பிடித்துக்கொண்டு, 'பெண்ணாகையால் இவளைக் கொல்லலாகாது' என்று மற்றொரு கையால் ஓங்கி அவளுடைய மார்பில் ஓர் அறை அறைந்தார். அவள் உடனே பூமியில் வீழ்ந்து வாயினால் இரத்தங்கக்கிப் புரண்டு மூர்ச்சித்துச் சிறிது நேரத்திற்குள் தெளிந்து அனுமாரிடம் மிகுந்த பக்தியுடையவளானாள். ஏனெனில் பூர்வத்தில் அவள் இந்த இலங்கைக்குக் காவலாக வந்தபோது பிரமதேவன் அவளிடத்தில் 'பின்னொரு காலத்தில் ஒரு குரங்கினால் நீ அறையப் படுவாய்; அப்பொழுது இலங்கையின் காவலை விட்டு நம்மிடம் வந்துவிடு; அதற்குப் பின் இலங்கை அழிந்துபோகும்' என்று கூறி யிருந்தான். அந்த நினைவு அவளுக்கு வந்துவிட்டது. அதனால் அவள், பிரமதேவர் கூறிய வானரம் ஆஞ்சனேயரே யென்று நினைத்து அவர் மீதுள்ள விரோதத்தை விடுத்தாள்.

அவ்வாறு தனக்கு அனுமார் மீது பக்தி யுண்டாகவே அவள் உடனே எழுந்து அவருக்கெதிரில் போய் நின்று தன்னுடைய வரலாற்றைக் கூறி, "ஐயா! நீர் என்னைக்கொல்லாமல் விட்டுவிடும்; நான் பிரமலோகம் போகின்றேன்; இனி உம்முடைய காரியமெல்லாம் ஜெயமாகும்" என்று சொல்லி அவரிடம் விடை பெற்றுக்கொண்டு போய் விட்டாள். அதன்மேல் ஆஞ்சனேயர் சந்தோஷமாக மதிலைத் தாண்டி இலங்கா நகரத்திற்குள் பிரவேசித்து இரத்தினமயமாகிய மாளிகைகளைக் கண்டதிசயித்து, அந்த இராக் காலத்திலும், 'நிசிசரர்' என்னும் பெயருக்கேற்ப ஆந்

காங்கே இராக்ஷதர்கள் சஞ்சரித்துக்கொண் டிருப்பதைப் பார்த்து 'நாம் இவர்களுடைய கண்களுக்கு அகப்படக் கூடாது' என்று தம்முடைய வடிவத்தைச் சிறியதாக்கிக் கொண்டு ஒருவருக்கும் தெரியாமல் ஒதுங்கி நடந்து பசுத் தொழுவங்கள், யானைக் கூடங்கள், குதிரைக் கொட்டாரங் கள், வீடுகள், பூஞ்சோலைகள் முதலிய விடங்களிலெல்லாம் தாவிப் பார்த்தார். ஆங்காங்கே பற்பல இராக்ஷத ஸ்திரீ கள் பல சந்தோஷமான விழாக்களைச் செய்து தேவஸ்திரீ களும் விஞ்சையஸ்திரீகளும் தங்களுக்குப் பணிவிடை செய்யத் தங்கள் செல்வச் செருக்கைக் காட்டிக் கொண் டிருந்தார்கள். ஆஞ்சனேயர் அவர்களை யெல்லாம் பார்த் துக்கொண்டு கும்பகர்ணனுடைய மாளிகைக்குப் போனார். அங்கே ஒரு பெரிய மண்டபத்தில் கும்பகர் ணன் நித்திரை செய்துகொண்டிருந்தான். அவனுடைய சுவாசத்துக்கு நேரே அனுமார் போனவுடன் அது வெளிப்படும்போது அவரை அவ்வரண்மனை வாயில்வரை தள்ளிக்கொண்டு வந்து நிறுத்தி மீண்டு உட் செல்லும் போது நாசிக்குள்ளே இழுத்துக் கொண்டுபோய் விட் டது. அனுமார், "அடே அப்பா! இஃதென்ன தூக்க மடா சாமி! மூச்சே இவ்வளவு வேகமாயிருந்தால் இந்த ஆசாமியினுடைய தன்மை எப்படி யிருக்குமோ!" என்று பயந்து உடனே வெளியிற்றாவி ஓடிவந்து அவனுடைய கோர ரூபத்தைப்பார்த்து, 'இவன்றான் இராவணனாயிருப் பானோ' என்றநிசயித்துக் கோபத்துடனே அவன் சமீபத் தில் நெருங்கினார். அவனுக்குப் பத்துத்தலைகளும், இரு பது தோள்களும் இல்லாததால் அவர், 'இவன் இராவண னல்ல; வேறெவனோ; அவனாகவே இருந்தாலுமிருக்கட்டும்; இன்னும் சில தினங்களில் இவன் ஒழிகின்றவன்தானே' என்று அவ்விடத்தை விட்டு மாடங்கள், கூடங்கள், மாளி

கைகள், ஆடரங்குகள், சபாமண்டபங்கள், தேவாலயங்கள், வித்தியாசாலைகள் முதலிய விடங்களில் சீதா பிராட்டியாரைத் தேடிக்கொண்டுபோய் விபீஷணனுடைய மாளிகைக்குள் நுழைந்து, விபீஷணன் பாரிஜாத புஷ்பப் பந்தலில் படுத்திருப்பதைக் கண்டார். அவன் வடிவத்தால் நற்குணமுடையவனாய் விளங்கினான். அனுமார், 'இந்த இராக்ஷதர் கூட்டத்தில் இவன் மகா தர்மிஷ்டனா யிருத்தல்கூடும்' என்று அவன்மீ தன்புடையவராய் அம்மாளிகையைத் தாண்டி, இமைப்பொழுதில் பின்னும் பற்பல மாளிகைகளில் நுழைந்தும், இந்திரசித்தால் சிறை வைக்கப்பட்டிருந்த தேவஸ்திரீகள், காந்தர்வஸ்திரீகள், யக்ஷஸ்திரீகள், கின்னரப் பெண்கள், பன்னகஸ்திரீகள், வித்தியாதர மாதர்கள், கிம்புருஷஸ்திரீகள் முதலியவர்களுடைய இருப்பிடங்களில் பிரவேசித்தும் பிராட்டியாரைத்தேடிக்கொண்டேபோய் இந்திரனைச் சிறைவைத்த இந்திரசித்தின் அரண்மனைவாயிலை அடைந்து அங்குக் காவலிருந்தவர்களுக்குத் தெரியாமல் உள்ளே நுழைந்து அநேகம் ஸ்திரீகள் கூட்டத்தின் மத்தியில் உல்லாசமாகப் படுத்திருந்த இந்திரசித்தைப் பார்த்து, 'இவன் மிக்க அழகும் வீரமும் பொருந்தியவனா யிருக்கின்றான்; இவனுடைய துணையைப் பெற்றிருக்கும் இராவணனுக்கு என்ன குறை யிருக்கப்போகின்றது; இராமலக்குமணர்கள் இங்கே வந்து யுத்தஞ்செய்கின்ற காலத்தில் இவன் இளைக்காமல் பல தினங்கள் வரை போர் புரிவான்' என்று அவ்விடத்தை விட்டு நீங்கி, அதிகாயன், அவனுடைய தம்பிமார்கள், மற்றுமுள்ள படைத்தலைவர் முதலியவர்களின் மாளிகைகளிலும், மந்திரி பிரதானிகளுடைய மாளிகைகளிலும் தேடி அந்நகரத்தின் இரண்டாவது அகழியையும் மதிலையுங் கண்டார்.

அவ்வாறு பார்த்தவுடன், அவர், "இவற்றை நாம் எப்படித் தாண்டப் போகின்றோம்!" என்று மயங்கிப் பின்னர் ஊக்கங்கொண்டு வேகமாய்த் தாவி அவற்றைக் கடந்து, அர்த்தராத்திரியில் உட்பிரவேசித்து அங்கிருந்த மூன்றிலட்சம் தெருக்களையும், இரண்டுகோடி இராஜ வீதிகளையும் ஆராய்ந்து பார்த்து முடிவில் இராவணனுடைய மாளிகையைச் சுற்றி யிருக்கின்ற அகழியையும் மதிலையும் தாண்டி உள்ளே பிரவேசித்தார்.

அங்ஙனம் உட்புகுந்தவுடன் ஆஞ்சனேயர் அங்கே யிருந்த பற்பல வகை ஸ்திரீகளின் மாளிகைகள் நெருங்கிய நாலுகோடி வீதிகளிலும் பிராட்டியாரைத் தேடிப் பார்த்து விட்டு, இராவணனுடைய அரண்மனையை நாடிப் போய், மயன்மகளாகிய மண்டோதரி வாசஞ்செய்கின்ற அந்தப்புரத்தை யடைந்து, அம்மாளிகை எல்லாவற்றினும் சிறந்து விளங்கியபடியால், 'இதுதான் சீதாதேவி யிருக்கின்ற விடமோ' என்று சந்தேகப்பட்டு அதனுள்ளே சென்று பார்த்தார். அப்போது இராவணன் மனைவியாகிய மண்டோதரி மிக்க அலங்காரமுடையவளாய் அநேகம் ஸ்திரீகள் உபசரிக்கப் புஷ்ப சயனத்தில் படுத்திருந்தாள். அவளைக் கண்டதும் ஆஞ்சனேயர், சீதாதேவியே இலங்காபுரிக்குப்போனவுடன் மனவுறுதிகெட்டு இராமரை மறந்து, போகபாக்கியங்களை அனுபவித்துச் சயனித்துக்கொண் டிருக்கின்றாளென்று அவளை வெறுத்து மிகுந்த கோபங்கொண்டு, "அந்தோ! நான் எடுத்த தேகத்தால் அடையவேண்டிய பிரயோசனத்தை இழந்துவிட்டேன்! இவள் தன் கற்பையும், குடிப்பிறப்பின் உயர்வையும் இழந்து விட்டாளே! இனி ஸ்ரீராமருடைய கீர்த்திதான் நிலைநிற்குமா? நான் உயிர் தரிப்பேனோ? இந்த

இலங்கை தான் நிலைநிற்குமா? இராக்ஷதர்களும் இருப்பார்களா?" என்று மிக்க மனவேதனை யடைந்தவராய் மீண்டும், 'பிராட்டியார் அப்படி ஒழுக்கந்தவறி நடக்கக் கூடியவரல்லரே; இவள் வேறொருத்தியா யிருந்தாலு மிருக்கலாம்; ஆதலின் நாம் நன்றாக ஆராய்ந்து பார்த்துப் பின்னரே எதையும் பேசவேண்டும்' என்று அவளை நன்றாக உற்று நோக்கிச் சீதையின் இலக்ஷணங்கள் அவளிடத்தில் இல்லாதிருக்கக் கண்டு, "இவளிடத்தில் ஜானகியாரின் இலக்ஷணங்களில் சதாம்சத்தில் ஓரம்சமும் இல்லை; ஆனால் உத்தம ஸ்திரீகளின் இலக்ஷணங்களில் சில இருக்கின்றன; எனினும் இவளிடத்தில் சில அவலக்ஷணங்களும் தோற்றுவதாலும், தலையின் மயிர் அவிழ்ந்து சோர்ந்திருப்பதாலும், இவள் துர்வசனங்களைத் தூக்கத்தில் பிதற்றுவதாலும், நாயகனுக்கும், நகரத்திற்கும் அழிவுண்டாய் இவளும் துன்பத்தை யடைவாளென்பது விளங்குகின்றது. இவளை நாம் பிராட்டியாரென்று நினைத்தது தவறு; இவள் யாரோ தெரியவில்லை" என்று அவ்விடத்தை விட்டகன்று, அதியுன்னதமும், விசித்திரமும் பொருந்திய ஒரு மாளிகையிற் பிரவேசித்தார். அப்போது பல் துர் நிமித்தங்களுண்டாயின. அவற்றை ஆராய்ந்து அனுமார், 'சீக்கிரத்தில் இந்நகரம் பேரில்லாமல் அடியோ டழிந்துபோகும்" என்று தீர்மானித்துக் கொண்டு அம்மாளிகைக்குட் பிரவேசித்து, அநேகம் தேவ ஸ்திரீகள் சாமரைவீச மிக்க அலங்காரமாகிய மஞ்சத்தின் மேல் விரித்த புஷ்பசயனத்தில், சீதா பிராட்டியின் மேலுள்ள நினைவால் மனமும் உடலும் வெதும்பி, புஷ்பங்கள் தீய, வாயில் பற்பல விகாரமான வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு புரண்டு புரண்டு படுத்திருந்த இராவணனைக் கண்டார். அவனுடைய பத்துத் தலைகளாலும் இரு

பது தோள்களாலும் அவனே இராவணனென்பதை அவர் ஐயமற உணர்ந்து கொண்டார்.

அவ்வாறு அனுமார் தெரிந்துகொண்ட மாத்திரத்தில் 'நாம் இந்த மகாபாதகனைக்கண்டும் ஒழிக்காமல் விட்டுப்போகலாகாது; ஆதலின், இப்பொழுதே இவனை விண்ணுலகுக் கனுப்பிவிடவேண்டும்' என்று அடங்காக் கோபத்துடன் பற்களை நெறநெறவென்று கடித்துக் கொண்டு எழுந்தார். அவ்வாறெழுந்தவர், சற்று நிதானித்து, "இப்பொழுதிவனைக் கொல்வது தகாது; மேலும் இவனைக் கொல்லுமாறு இராமர் நமக்கு ஆக்ஞாபிக்கவில்லை. அது தவிரவும் இப்பொழுது நாம் இவனைக் கொன்று பிராட்டியாரை அழைத்துக்கொண்டு போவோமானால், உலகத்தார், 'ஸ்ரீராமர் மனைவியை இராவணன் எடுத்துக் கொண்டுபோய்ச் சிறைவைக்க, ஒரு குரங்கு போய் அந்த இராவணனைக் கொன்றுவிட்டது' என்று எளிதாகப் பேசுவார்கள்; அதனால், இராகவருக்கு இழிவுண்டாகும்; இவன் அவர்கையினாலேயே மடிந்தால்தான் அவருக்குச் சிறப்புண்டாகும்" என்று கோபத்தைத் தணித்துக்கொண்டு அதன்மேல், அந்த இராவணனுக்குரிய ஸ்திரீ கூட்டங்களுள் பிராட்டியார் இல்லாததாலும், இவன் மோகத்தினால் மெலிந்து புலம்புவதாலும் "சீதாதேவியார் கற்பழியாதிருக்கின்றாரென்பது ஐயமற விளங்குகின்றது; அவ்விஷயத்தில் நாம் கவலை கொள்ளவேண்டியதில்லை. இனி அவரைக் கண்டுகொண்டால் நமக்குள்ள சிறிது கவலையும் ஒழிந்துபோகும்" என்று அவ்விடத்தை விட்டு வெளியேறிச் சீதையைத் தேட ஆரம்பித்தார். அதற்குமேல் அங்கே தேடவேண்டிய இடமொன்றும் அவருக்குப் புலப்படாமையால், அவர், "அந்தோ! இனியென்செய்வது? நாம் இவ்விலங்கை நகர் முழுவதும் தேடியும் பிராட்டியார்

அகப்படவில்லையே; இந்தப்பாவி இராவணன் அவரைக் கொன்று விட்டானோ? அல்லது வேறெந்த வுலகத்திலேனும் கொண்டுபோய் வைத்திருக்கின்றானோ? ஸ்ரீராமர், 'அனுமான் சீதையைக் கண்டுவருவான்' என்று உறுதியோடிருப்பாரே; நான் போய் அவருக்கென்ன சொல்லுவேன்; இலக்குமணர் முகத்திலும் சுக்கிரீவர் முகத்திலும் எப்படி விழிப்பேன்; தவணை நாளோ கழிந்துவிட்டது. பிராட்டியாரைக் காணாமல் உயிர்விடத்துணிந்த அங்கதன் முதலானவர்களுக்கும், 'நான் பிராட்டியாரைக் கண்டு வருகின்றேன்' என்று உறுதி சொல்லிவந்தேன்; இனி அவர்களிடம் போய் என்ன சொல்லுவேன்; நான் நாடிவந்த காரியத்தை முடிக்காமல் திரும்பிச் செல்வதைக்காட்டிலும் இங்குள்ள இராக்ஷதர்களையும் இலங்கையையும் ஒழித்துவிட்டு என்னுயிரையும் போக்கிக் கொள்வதே நலம்" என்று பலவாறு புலம்பிப் பின்னர் இலங்கையைச் சார்ந்த சில சோலைகளிலும் வனங்களிலும் தேடிப் பார்ப்போமென்று சிற்சில விடங்களிற் புகுந்து முடிவில் அசோகவனத்தை யடைந்தார்.

அனுமார் சீதையைக் காணுதல்.

அங்குச் சேர்ந்தவுடன் அனுமார், 'இந்தச்சோலை மிகச் செழிப்பாயிருக்கின்றது; ஆதலின், பிராட்டியார் இதிலிருந்தாலு மிருக்கக்கூடும்; நாம் இதிற்புகுந்து பார்ப்போம்; இங்கும் பிராட்டியார் இல்லாத பக்ஷத்தில் இவ்விலங்கையை இராக்ஷதர்களுடன் நாசஞ்செய்துவிட்டு நாமும் இறந்து போவோம்" என்று ஒரு முடிவு செய்துகொண்டு, அசோக வனத்திற்குட் பிரவேசித்தார்.

அப்போது இராவணனால் அங்கே கொண்டுவந்து சிறை வைக்கப்பட்டிருந்த சீதாதேவி, அநேகம் இராக்ஷத ஸ்திரீகளின் காவலுக்குட்பட்டுத் துக்கத்தாலும் பயத்தாலும்

தேகம் மெலிந்து இராமரை அடிக்கடி நினைத்தழுது, கண்ணீர்விட்டு, உடம்பைப் பேணுதலை யொழித்துத் தலை சடையாய்த் தான் வரும்போது கட்டியிருந்த ஒரே வஸ்திரத்துடன், "அந்தோ! எனக்கிந்தத் துயரம் நீங்குங்காலம் என்றோ? என் நாதரும் இலக்குமணரும் என்ன செய்கின்றார்களோ? நானிருக்குமிடத்தை அவர்கள் அறிவார்களோ அறியமாட்டார்களோ? என்னை இராக்ஷதன் எடுத்துக் கொண்டுவரும்போது பார்த்த சடாயுவும் இறந்துபோனாரே; அவர்களுக்கு என் விஷயத்தைச் சொல்பவரெவர்? ஒருவாறு அவர்கள், நானிருக்குமிடத்தைத் தெரிந்துகொண்டாலும் என்னைச் சிறை மீட்பார்களோ? பிறன் கைவசப்பட்டவளென்று தள்ளி விடுவார்களோ? அல்லது என்னை இராக்ஷதர்கள் தின்றுவிட் டிருப்பார்களென்று நினைத்துத் தேடுந் தொழிலை விட்டிருப்பார்களோ? ஒருசமயம் அயோத்திக்கே திரும்பிப் போயிருப்பார்களோ" என்று பற்பல விதமாகப் புலம்பித் துயரப்பட்டுக்கொண் டிருந்தாள். அங்கே காவலிருந்த இராக்ஷத ஸ்திரீகளில் விபீஷணன் புத்திரியாகிய திரிசடை மட்டும் அவள்மீது அன்புடையவளா யிருந்தாள். மற்றவர்கள் அவளுக்கு விரோதிகளா யிருந்தார்கள். சீதை மேற்கூறியபடி புலம்பிக்கொண் டிருக்கும்போது திரிசடையும் மற்ற இராக்ஷத ஸ்திரீகளும் நித்திரை செய்துகொண் டிருந்தார்கள். இப்படி இவர்களிருக்க, மேற்கூறியபடி அனுமார் அந்த வனத்திற் போய்ச்சேர்ந்த சமயத்தில், ஜானகிக்கு இடப்புருவமும் இடக்கண்ணும் துடித்தன. அதனால் சீதாபிராட்டியார், பக்கத்தில் படுத்திருந்த திரிசடையை எழுப்பி, "அம்மா! உன்னுடைய இதமான வார்த்தைகளாலேயே நான் இவ்விடத்தில் உயிருடனிருக்கின்றேன்; நீயே எனக்கு வரும் நன்மை தீமைகளை ஆராய்ந்து சொல்லக் கூடியவளாயிருக்கின்றாய்; ஆதலின், நான் இப்

போது கேட்கப்போகும் விஷயத்திற்குத் தக்கபதில் உரைக்க வேண்டும்; எனக்கிப்போது இடப்புருவமும் இடக்கண்ணும் துடிக்கின்றன; இந்த நிமித்தத்தால் நன்மை யுண்டாகு மென்றே நான் நினைக்கின்றேன்; உன்னுடைய அபிப்பிராய மென்ன?" என்று வினவினள். திரிசடை அப்பொழுது தூக்கத்தில் சீதைக்கு நன்மை யுண்டாகத்தக்க சொப்பனங் கண்டு விழித்தாளாதலின், அதன் பலனையும், சீதையினிடத் தேற்பட்ட நன்னிமித்தத்தின் பலனையும் ஆராய்ந்து சீதைக்கு விரைவில் நன்மை யுண்டாகுமென்றுணர்ந்து, அவளை நோக்கி, "அம்மா! உன்னிடத்தி லுண்டானது நன்னிமித்தம்; இப்பொழுது சில நற்குறிகள் நிகழ நான் காண்கின்றேன்; மேலும் இப்போது என் பெரிய தகப்பனுகிய இராவணன், பத்துத்தலைகளிலும் எண்ணெயிட்டுக்கொண்டு, கழுதைகளையும் பேய்களையும் கட்டிய தேரின் மீதேறிச் சிவந்த வஸ்திரந்தரித்துத் தெற்கு நோக்கிச் செல்லவும், இன்னும் இந்நகரத்திலும் எங்கள் கூட்டத்திலும் பற்பல பயங்கர செய்கைகள் நடக்கவும் கனவுகண்டு விழித்தேன். இவற்றின் பலன்களை நன்றாக ஆராய்ந்து பார்க்கும்போது, ஸ்ரீ ராமரால் அனுப்பப்பட்ட தூதர் இப்போது வருவா ரென்பதும், இராக்ஷதர்களெல்லோரும் விரைவில் ஒழிவார்க ளென்பதும் விளங்குகின்றன. இப்போது நான்கண்ட கனவு முடிவதற்குள் நீ என்னை எழுப்பிவிட்டாய்; அங்ஙனம் எழுப்பாதிருந்தால் இன்னும் உண்டாகும் விசேஷங்களை யெல்லாம் நான் உணர்வேன்" என்றாள். இவற்றை யெல்லாம் கேட்டதும் சீதை மகிழ்ந்து திரிசடையை நோக்கி, "அம்மா! அப்படியானால் உன் சொப்பனத்தின் முடிபை உணரவேண்டும்; நீ அக்கனவைக் காணும்பொருட்டு விரைவில் மீண்டும் நித்திரை செய்வாயாக" என்று கூறினள். இப்படி யிவர்கள் பேசிக்கொண்டிருந்த சமயத்தில் அனுமார்,

பற்பல விடங்களிலும் தேடிக்கொண்டு அங்கேவந்து சீதையைக்கண்டார். அத்தருணத்தில், உறங்கிக்கிடந்த இராக்ஷஸிகளெல்லாம், "ஐயோ! பாழும் நித்திரைவந்து நம்மை மயக்கிவிட்டதே" என்று பயங்கரமான தொனியோடு பற்பல ஆயுதங்களைத் தாங்கிவந்து ஜானகியைச் சுற்றிக் காவலாக வளைந்து கொண்டார்கள். அவர்களைக்கண்டு சீதை ஒன்றும் பேசாமல் பயந்திருந்தாள். இவர்களை யெல்லாம் பார்த்தவுடன் அனுமார், "இங்கே நாம் மறைந்திருந்து இவர்களுடைய தன்மையைப்பற்றி ஆராயவேண்டும்" என்று ஒரு மரக்கிளையிலேறி மறைந்து இவர்களை நன்றாக ஆராய்ந்து பார்க்கத் தொடங்கினார்.

அவ்வாறு பார்க்கத்தொடங்கிய அனுமார் அவர்களை உற்று நோக்கி, நடுவில் மெலிந்த மின்னற்கொடி போன்றிருப்பவள் ஜானகி யென்றும், மற்றவர்கள் இராக்ஷஸ ஸ்திரீகளென்றும் ஐயமறத் தெரிந்துகொண்டார். அவ்வாறு தெரிந்து கொண்டவுடனே, "கண்டேன்! கண்டேன்!" என்று ஆனந்தக் கூத்தாடினார். அங்குமிங்கும் ஓடினார்; சீதையிருந்த பரிதாபமான நிலையைப்பார்த்து, "அந்தோ! பிராட்டியார் இராமத்தியானத்தோடு கூடித் தவஞ்செய்து தம் கற்பைக் காத்துக்கொண் டிருக்கிறார்; இவருடைய தன்மையை நாம் சிறிதும் உணராமல் இவர்மீது தவறு நினைத்தது மகா பாதகம்; இனி நம்முடைய காரியமெல்லாம் கைகூடும்; நாம் இராமபிரானுக்குச் சந்தோஷமான செய்தி தெரிவிக்கலாம்; இராக்ஷதர்கள் ஒழிந்து இராகவருக்கு ஜெயமுண்டாவது திண்ணம்; இந்த இராக்ஷஸிகளின் மத்தியில் பிராட்டியார் உயிர் வைத்துக்கொண் டிருந்தது அதிசயம்! நாம் இன்னும் சற்று நேரம் இங்குத்தானே மறைவாகத் தங்கியிருந்து மேலும் நடக்கும் விஷயங்களைப்

பார்ப்போம்" என்று அந்த மாக்கிளையிற்றுனே தங்கிச் சீதா பிராட்டியாரைப் பார்த்துக்கொண் டிருந்தார்.

சீதை இராவணனை நிந்தித்தல்.

அப்படி யிருக்கும்போது, சீதாதேவியின் எண்ணத்தால் தூக்கம் பிடிக்காமல் துன்பப்பட்டுக்கொண் டிருந்த இராவணன், அவளிடம் சென்று இதமான வார்த்தைகள் பேசி அவளைத் தன் எண்ணத்திற் கிணங்கச் செய்யலாமென்று கருதிச் சர்வாபரணாலங்கிருதனுகிப் பற்பல ஸ்திரீகள் புடைசூழ அசோக வனத்திற் பிரவேசித்துத் தன்னுடன் வந்த பெண்களையெல்லாம் ஒரு பக்கத்தில் நிறுத்திவிட்டுத் தான் மாத்திரம் தனியே சென்று சீதைக்கு முன்னே நின்றான். அவனைக் கண்டதும் ஜானகி பயந்து நடுங்கினுள். இராவணன் வந்திருப்பதையும், சீதை நடுங்குவதையும் கண்ட அனுமார், "சீதாபிராட்டியார் யாதோரிடையூறுமின்றி வாழவேண்டும்" என்று ஜானகியை வாழ்த்தினுர்.

அப்போது இராவணன் சீதா தேவியை நோக்கி, "பெண்கள் பூஷணமே! உன் விருப்பத்தால் நான் அடையும் துயரத்திற்கு அளவில்லை; நீ என்னுடைய வார்த்தைக் கிணங்குவாயானுல் என்னுடைய ஐசுவரியங்களுக்கெல்லாம் நீயே உரியவளாய்விடுவாய்; நானும் கவலையற்று வாழ்வேன்; கேவலம்! மானிடர்களை நீ கருதாதே; என்னுயிர் போகும் நிலைமையி லிருக்கிறது; ஆதலின் நீ என்னைக் காப்பாற்று" என்று சொல்லத்தகாத வார்த்தைகளையெல்லாம் சொல்லி அவளுக்கு முன்னே பூமியில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தான்.

அவனுடைய வார்த்தைகளைக் கேட்டவுடனே சீதைக்கு அடங்காக் கோபமுண்டாயிற்று. அதனுல் அவள்,

'இனி நாம் சும்மாவிருக்க லாகாது; நம் உயிர்போனாலும் போகட்டுமென்று கடினமொழிகளால் இவனைக் கண்டித்து இவனுக்குப் புத்திவரும்படி செய்தலே தக்கதாம்' என்று துணிந்து அவனை நோக்குதற்குப் பதிலாக அங்கே கிடந்த ஒரு துரும்பை நோக்கி, "அடா இராவணத் துரும்பே! என் கெடுமதியால் அழிந்து போகின்றாய்! இராகவரை நரரென்று அவமதித்துப் பேசாதே; அவருடைய பாணமானது இம்மூவுலகங்களையும் நிமிஷ நேரத்தில் எரித்துவிடக் கூடியது; அவருக்கு நீ யிருக்குமிடந் தெரியாததனாலேயே இதுவரை உன்னுயிர் நிலைத்திருக்கின்றது; உன்னிருப்பிடத்தை அவர் அறிந்தால் அப்பொழுதே நீ உன் குலத்துடனே மடிவாய்; நீ மகாவீரன் போலப் பேசுகின்றாய்; நீ சுத்தவீரனா யிருந்தால் அவரில்லாத சமயத்தில் இவ்வாறு வஞ்சனையாக என்னை எடுத்துக் கொண்டு வருவாயா? நீ தேவர்களையும் ஏவல் கொள்ளத் தக்க வரம் பெற்றிருக்கின்றோ மென்று அகங்கரித்திருக்கின்றாய்; அவ்வரம் இராம பாணத்துக்கு முன்னே நிற்க மாட்டாது; உலகத்திலுள்ளவர்களுக்குப் புண்ணிய வசத்தினாலேயே பெரும் பாக்கியம் கைகூடும்; தருமந் தவறிய விடத்து அச்செல்வம் நிலைநிற்க மாட்டாது. ஆதலின், ஏதோ புண்ணிய வசத்தினால் கிடைத்த உன் ஐசுவரியங்களை யெல்லாம் நீ பாவத்தால் ஏன் போக்கடித்துக் கொள்கிறாய்? நீ மகா சிரேஷ்டனென்று சொல்லிக் கொண்டே பெண்பாலாகிய என் காலில் வீழ்கின்றாயே; நீயும் ஒரு வீரனா! உனக்கென்ன கௌரவமிருக்கின்றது; அட நாயே! இவ்விடத்தில் நில்லாமல் அப்பால் போ" என்று நீ கண்சிவந்து கூறினாள். இந்த வார்த்தைகளைக் கேட்டதும் இராவணன் அடங்காக் கோபங்கொண்டு 'இவளைக்கொன்று தின்று விடுகிறேன்' என்று சீதையின்

சமீபத்தில் நெருங்கினன். அப்போது அனுமார் அவனுடைய செய்கையைப் பார்த்து, "இந்தப் பாதகனை நாம் இப்பொழுதே கொன்று இந்த இலங்கையைப் பெயர்த்துக் கடலில் எறிந்துவிட்டுச் சீதா பிராட்டியாரை அழைத்துக்கொண்டு ஸ்ரீராமரிடம் செல்வதே தகுதி" என்று அதிக கோபத்துடனே கையைப் பிசைந்து கொண்டிருந்தார்.

அத்தருணத்தில் மிகுந்த கோபத்தால் சீதையைக் கொல்லக் கருதிச்சென்ற இராவணனுக்கு அவள்மீதேற்பட்ட ஆசை யென்னும் நீரானது அக்கோபத் தணலைத் தணித்துவிட்டபடியால், அவன், சீதாபிராட்டியினெதிரில்போய் நின்று, பெண்ணே! நீ அறியாமையால் எனக்குக் கோபத்தை யுண்டாக்கிவிட்டாய்; அந்தக் கோபத்தால் நானுன்னைக் கொல்லுகிறேனென்று சொல்லிவிட்டேன்; எனினும் உன்னைக்கொல்ல என்மனந் துணியவில்லை; நான் ஏதோ அந்த நருடன் யுத்தஞ்செய்யப் பயந்து அவரறியாமல் உன்னைக் கொண்டுவந்து விட்டதாக நீ சொல்லுகிறாய்; அவர்கள் எனக்கு நிகரானவரல்லர்; அவரைக் கொன்றால் நீயும் இறந்துவிடுவாய் என்பதை யுத்தேசித்தே நான் உன்னை வஞ்சனையால் அவரறியாமல் கொண்டுவந்தேனென்பதை முன்னமே உரைத்திருக்கின்றேன்; அப்படியிருந்தும் இன்னமும் நீ அவர்களையே சிறப்பாகப் பேசுகின்றாய்; என்னோடெதிர்ப்பவர் உலகத்தில் எவருமிலர்; தேவர்களையும் நான் ஏவல் கொள்கின்றேனென்றால் என்னுடைய வல்லமையைப் பற்றி வேறென்னகூறவேண்டும்; இன்னமும் கொஞ்சம் பொறுக்கின்றேன்; நீ விரைவில் என்னுடைய வார்த்தைக்கிணங்காவிடில் அந்த இராம லக்குமணர்களையும் கொன்று அயோத்

திக்குச் சென்று அங்குள்ள பரதன் முதலானவர்களையும் வதைத்து, மிதிலைக்குச் சென்று உன்னைச் சார்ந்தவர்களையும் ஒழித்து முடிவில் உன்னுயிரையும் போக்கிவிடுவேன்; இன்னும் இரண்டு மாதத்திற்குள் எல்லாவற்றையும் நீ தெரிந்து கொள்வாய்" என்று அதட்டிப் பேசிவிட்டு அவளைவிட்டு நீங்கி அங்குக் காவலிருந்த இராக்ஷஸ ஸ்திரீகளை யழைத்து அவர்களிடம், "நீங்கள் பலவிதமாகப் பயமுறுத்தியாவது ஜானகியை எனக்கிணங்கச் செய்யவேண்டும்; இல்லாவிடில் நான் உங்களைக் கொன்றுவிடுவேன்" என்று கண்டிப்பான கட்டளையிட்டுவிட்டுத் தன் மாளிகைபோய்ச் சேர்ந்தான். அதன்மேல் அந்த இராக்ஷஸிகளெல்லாம் சீதையைவளைந்து கொண்டு பயங்கரமான பல வார்த்தைகளைச் சொல்லி "நீ விரைவில் இராவணனுக்கிணங்காவிடில் உன்னை நாங்கள் கொன்று தின்றுவிடுவோம்" என்று பயமுறுத்தினார்கள். அவர்கள் செய்த உபத்திரவங்களைச் சகிக்க முடியாமையால் ஜானகி நடுங்கிக் கண்ணீர்விட் டழுதுகொண் டிருந்தாள். அத்தருணத்தில் திரிசடை அவளை நோக்கி, "அம்மா! நான் முன்னமே கனுக்கண்டு அதன் பலனை ஆராய்ந்து உனக்கு விரைவில் துக்க நிவிர்த்தி யாகுமென்று கூறி யிருக்கின்றேனே; அப்படி யிருக்க நீர் இப்பொழுது எதற்காகத் துக்கப்படவேண்டும்; கவலையை விட்டுவிடும்" என்று கூறிவிட்டு இராக்ஷத ஸ்திரீகளை நோக்கி, "நீங்கள் இந்த உத்தமிக்குத் தீங்கு செய்வீர்களானால் அழிந்து போவீர்கள்" என்று சொன்னாள். அதைக்கேட்டு அவர்கள் அடங்கிப் பேசாம லிருந்துவிட்டார்கள்.

அனுமார் சீதையிடம் உருக்காட்டல்.

அப்போது மரத்தின்மேலிருந்து அங்கு நடந்தவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அனுமார், பிராட்டி

யாரைக் காண்பதற்கு இதுவே தக்க சமயமென்றுணர்ந்து அந்த இராக்ஷத ஸ்திரீகளுக்கெல்லாம் தூக்கம் வரும்படி ஒரு மந்திரத்தை உச்சரித்தார். அதனால் அவர்களெல்லோ ரும் சவங்களைப்போல் உறங்கி விட்டார்கள். அப்போது சீதை துக்கத்தினால் தூக்கம் பிடிக்காமல் தனித்திருந்த தால் தன்னுடைய நிலைமையை நினைத்து அடங்காத் துய ரங்கொண்டு, "ஆ! என் தலைவிதியே! என் நாயகர் என் னுடைய உயிரைக் காப்பாற்றுவாரா? அவருடைய கோதண்டத்தின் குணத்தொனியும் இந்த இலங்கையி லுள்ளவர்கள் காதில் கேட்குமா? நீ சொல்வாயாக" என்று விதியை நோக்கிக் கூறியும்,

"கல்லா மதியே கதிர்வா ணிலவே
செல்லா விரவே சிறுகா விருளே
எல்லா மெனையே முனிவீர் நினையா
வில்லா ளனையா தும்விளித் திலிரோ."

என்று சந்திரன் முதலியவற்றை நோக்கிக் கூறியும், இன் னும் பற்பல விதமான வார்த்தைகளை மரம் செடி கொடி முதலியவற்றை நோக்கிச் சொல்லியும், இராமரை விளித்து, "ஸ்ரீமந்நாராயணரே! உம்முடனே நான் காட்டுக்குப் புறப் பட்டபோது நீர் என்னை நோக்கி, 'பெண்ணே! நீ வனத் திற்கு வந்தால் மிகவும் வருந்துவாய்; ஆதலின், அரண்மனை யிற்றனே இரு' என்று கூறினீரே! அத்தகைய நீர் இப் போது நான் இராக்ஷதனுடைய நகரில் தனித்து வருந்தப் பார்த்திருப்பது நீதியாகுமா?" என்றும் பலவாறு புலம்பி முடிவில், "நம்நாதர் நாமிருக்கு மிடத்தை அறிந்து இங்கே வந்து நம்மை அழைத்துக் கொண்டுபோவது நிச்சயமில்லை. ஒரு சமயம் அவர் வந்து இராக்ஷதர்களைக் கொன்று நம்மை மீட்டாலும், 'இவள் பிறன் வசப்பட்டிருந்ததால் தோஷ முடையவளா யிருப்பாள்' என்று சந்தேகங்கொள்வா

ரானுல், நாம் எந்தச் சாக்ஷியத்தைக்கொண்டு அச்சமயத்தில் நம் பதிவிரதா தர்மத்தை நிலைநிறுத்தி அவர் சந்தேகத்தை நீக்குவோம். ஸ்திரீகள் எவ்வளவு பதிவிரதைகளாயிருப் பினும் அவர்கள் தம்மைச் சார்ந்த ஆடவரைவிட்டு வெளி யேறித் தனிப்பட்டுச் சஞ்சரித்தால் அவர்கள் கற்பிழந் திருக்கக் கூடுமென்று உலகத்தார் சந்தேகிப்பது இயற்கை; அச்சந்தேகத்தை நிவிர்த்தித்துக் கொள்ளுதல் பெண் களால் முடியாது. இவற்றையெல்லாம் யோசித்துப் பார்க் கும்போது நம் துக்கம் எவ்வழியிலும் நிவிர்த்தி யடைவ தாகக் காணவில்லை; ஆதலின், நாம் உயிரைப் போக்கிக் கொள்வதே நலம்; இப்பொழுது இராக்ஷஸிகள் நித்திரை செய்வதால் இதுதான் அதற்குத் தக்க சமயமாயிருக்கின் றது" என்று துணிந்து தற்கொலை செய்துகொள்ளும் பொருட்டு ஒரு குருக்கத்தி மாத்தினிடம் போய்ச் சேர்ந் தாள்.

அவளுடைய துணிவைக்கண்ட அனுமார், "அந்தோ! பிராட்டியார் உயிர்விடத் துணிகின்றூர்; இச்சமயம் அவ ரைத் தடுக்காவிடில் பெருந்தீங்காய் முடியும்" என்று நடுக்கத்துடன் மிக்க வேகமாய் மாத்தைவிட்டுக் கீழே பாய்ந்து, "இராமா! இராமா!!" என்று சொல்லிக் கொண்டே ஓடிப்போய் "அம்மா! லோகநாயகி, புவன காரணி!! பொறுக்கவேண்டும்; அவசரப்படலாகாது" என்று சொல்லிக்கொண்டே ஜானகியினுடைய பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்து நின்று, "தாயே! நான் ஸ்ரீரா மருடைய தூதன்; அவருடைய ஆக்ஞையால் உம்மைத் தேடிக் காணவந்தேன்; என்னைப்போலவே அநேக வானர வீரர்கள் உலகமெல்லாம் சென்று உம்மைத் தேடிக்கொண் டிருக்கிறூர்கள்; அடியேன் செய்த தவத்தால் உம்மைக் கண் டேன். தாங்கள் இங்கே யிருப்பது ஸ்ரீராகவருக்குத் தெரி

யாது; அவர் தாங்கள் இங்கிருப்பதை யுணர்ந்திருந்தால் இதுவரை இராக்ஷதர்கள் ஒழிந்துபோயிருப்பார்கள். என்னை யாரோவென்று நீங்கள் சந்தேகிக்கவேண்டாம்; நான் இராமதூத னென்பதற்குத் தக்க அடையாளங் கொண்டுவந் திருக்கின்றேன்; ஸ்ரீ இராமபிரான், தங்களிடம் கூறுமாறு சொல்லிய திருவாய் மொழிகளு மிருக்கின்றன; அவற்றையும் நான் கூறுகிறேன் கேட்டருளும்" என்று சொல்லி நின்றார்.

அப்போது ஜானகி, முதலில் அனுமாரை இராக்ஷதனோ வென்று நினைத்துக் கோபங்கொண்டு பின்னர் அவருடைய வார்த்தைகளையும், செய்கைகளையும் ஆராய்ந்து, "இவன் யாராயிருந்தாலு மிருக்கட்டும்; இராமநாமத்தைச் சொல்லி நம்மனத்தைக் குளிரச்செய்தான்; மேலும் நமக்கிரங்கிக் கண்ணீர் விட்டுப் புலம்புகின்றான். ஆதலின், இவனை யாரென்று நாம் விசாரிப்போம்" என்று ஆஞ்சனேயரை நோக்கி' "நீ யாரப்பா ?" என்று வினவினாள். அனுமார், தம்முடைய வரலாற்றையும், சுக்கிரீவன் முதலிய வானரர்களுடைய வரலாற்றையும், இராமருக்கும் தங்களுக்கும் சிநேகமுண்டான விதத்தையும், சீதையின் ஆபரணங்களைத் தாங்கள் இராமரிடம் சேர்த்த விவரத்தையும், அதன் மேல் நடந்த விஷயங்களையும் தாம் இலங்கைக்கு வந்து சேர்ந்தவரையில் கூறினார். சீதை அவற்றைக் கேட்டு ஆனந்தமேலிட்டு, 'என் உயிர்நிலைக்கும் மார்க்கமும் ஏற்பட்டதே' என்று கண்களில் ஆனந்தபாஷ்பம் பெருக அனுமாரை நோக்கி "அப்பா! அந்த இராகவருடைய உருவம் எப்படி யிருக்கின்றது ?" என்றாள். ஆஞ்சனேயர், இராமருடைய அங்க அடையாளங்களைப் பாதாதிகேச பரியந்தம் விவரமாகக் கூறினார். அவற்றை யெல்லாம் கேட்டதும் ஜானகி அனலிலிட்ட மெழுகுபோல மனமுருகி

ளுள். அதன்மேல் அனுமார்,இராமர் சீதைக்குக் கூறும் படி சொல்லிய குறிப்பான வார்த்தைகளையுங் கூறி இராம ருடைய முத்திரை மோதிரத்தையும் ஜானகியிடம் கொடுத் தார். ஜானகி அதைக் கண்டவுடனே, அடைந்த ஆனந்தத் தின் விதத்தை என்னென்று சொல்வது !

"இறந்தனர் பிறந்தபய னெய்தினர்கொ லென்கோ
மறந்தன ரறிந்துணர்வு வந்தனர்கொ லென்கொ
துறந்தவுயிர் வந்திடை தொடர்ந்ததுகொ லென்கொ
திறந்தெரிவ தென்னைகொலிந் நன்னுதலி செய்கை."

அவள் அதைப் பெற்றதனால்,

"இழந்தமணி புற்றர வெதிர்ந்ததென லானாள்
பழந்தன மிழந்தன படைத்தவரை யொத்தாள்
குழந்தையை யுயிர்த்தமல டிக்குவமை கொண்டாள்
உழந்துவிழி பெற்றதொ ருயிர்ப்பொறையு மொத்தாள்."

இவ்வாறு அவள் அளவிலா ஆனந்தங்கொண்டு அக்கணை யாழியைக் கண்களில் ஒற்றிக்கொண்டு மகிழ்ச்சியினால் மயிர்க்குச் செறிய, வாய்குளற ஆஞ்சனேயரை நோக்கி, "அனுமானே ! நீ என்னுயிரை நிலைக்கச்செய்தாய் ; இத் தகைய உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகின்றேன்; நீ என்றும் அழியாதிருப்பாயாக" என்று வாழ்த்தி மீண்டும் அவரை நோக்கி, "ஆஞ்சனேயா! இராம ரும், இலக்குமணரும் இப்பொழுது எங்கே யிருக்கின்றார் கள்? உன்னையும், மற்றவர்களையும் எவ்விடத்திற் கண்டார் கள்? என்னுடைய சமாசாரத்தை அவர்கள் எப்படி அறிந் தார்கள்?" என்று வினவினாள். அனுமார், இராமரைவிட்டுச் சீதை பிரிந்தது முதல், தாம் அவளைத்தேடி வந்தவரையில் நடந்த விஷயங்களை யெல்லாம் விளக்கமாகக் கூறிச் சீதை யின் பிரிவால் இராமர் ஆற்றொணாத்துயரத்தில் மூழ்கியிருப் பதையும் தெரிவித்தார். அவற்றையெல்லாங் கேட்ட

வுடனே ஜானகி, துக்கமும், சந்தோஷமும் மாறிமாறி யுண்டாகும் உள்ளத்தையுடையவளாய்க் கண்ணீர் தாரைதாரையாக ஒழுக மீண்டும் அனுமாரைப்பார்த்து, "அப்பா! இலங்கைக்கு வரும் மார்க்கத்தில் சமுத்திர மிருக்கின்றதே; அதை நீ எப்படிக் கடந்துவந்தாய்?" என்று வினவினுள். அதற்கவர், "அம்மா! இராமருடைய அனுக்கிரகத்தால் நான் என்னுடைய காலினுலேயே அதனைக் கடந்து வந்தேன்" என்று சொல்லச் சீதாபிராட்டியார், அதிசயித்து, "ஆஞ்சனேயா! இந்த அற்ப சரீரத்தைக்கொண்டு நீ எப்படிக் கடலைத் தாண்டினை? உன்னிடத்தில் அதற்குத்தக்க சித்தி என்ன விருக்கின்றது?" என்று புன்சிரிப்புடன் கேட்டாள். அனுமார் "தாயே! நான் இச்சரீரத்தைக் கொண்டு சமுத்திரத்தைத் தாண்டவில்லை; இராகவருடைய கிருபையால் பெரிய வடிவத்தைக் கொள்ளும் சக்தி என்னிடத்திலிருக்கின்றது. அந்தச் சரீரத்தை எடுத்துக்கொண்டுதான் நான் கடலைக்கடந்து வந்தேன்; அவ்வடிவத்தைக் காட்டுகின்றேன் பாரும்" என்று தம்முடைய விஸ்வரூபத்தைக் காட்டினுர். அவ்வடிவம் அண்டமுகடுவரை வளர்ந்து எவரும் பார்த்துப் பிரமிக்கத்தக்கதா யிருந்தது. அவ்வுருவத்தைப் பார்த்தவுடனே ஜானகி அதிசயித்து, 'இனி இராக்ஷதகுலம் மடிவதில் சந்தேகமேயில்லை' என்று சந்தோஷித்து ஆஞ்சனேயரை நோக்கி, 'குழந்தாய்! இந்த வடிவத்தைப் பார்க்கும் போது எனக்குப் பயமுண்டாகிறது; ஆதலின் இதனை விடுத்து உன்னுடைய எதார்த்த வடிவத்தை நீ எடுத்துக் கொள்வாயாக' என்ருள். அங்ஙனமே அனுமார் தம்முடைய இயற்கை யுருவைப்பெற்று அவளை வணங்கி நின்ருர். சீதை அவரை நோக்கி, "அனுமானே! உன்னுடைய உதவியைப் பெற்றதனல் இனி எங்களுடைய காரியமெல்லாம் ஜெயமாகும்" என்று பலவாறு அவரைப் புகழ்ந்துரைக்க, ஆஞ்ச

னேயர், ஜானகியை நோக்கி, "அம்மா! தாங்கள் என்னை இவ்வாறு புகழ்வதற்கு நான் அவ்வளவு சிறந்த வீரனல்லன்; இன்னும் என்னைக் காட்டினும் சிறந்துள்ள எத்தனையோ வானரவீரர்களிருக்கின்றனர்; அவர்களுக்கு முன் இராக்ஷத சேனைகள், சுழல்காற்றிலகப்பட்ட பஞ்சுபோலாம்" என்று சொன்னார். சீதாதேவி மிகுந்த சந்தோஷமடைந்தாள்.

சீதை, அனுமாரிடம் சூடாமணி யளித்தல்.

அதன்மேல் அனுமார் ஜானகியை நோக்கி, "தாயே! தாங்கள் இராக்ஷத கூட்டத்தின் மத்தியிலிருந்து அவஸ்தைப்படுவதை நான் பார்த்தும், தங்களை இனிமேலும் இங்கேவிட்டுச் செல்வது தகுதியான காரியமாக எனக்குத் தோற்றவில்லை; ஒருசமயம் நான் சென்றபிறகு இராக்ஷதன் தங்களைக் கொன்றுவிட்டால், பின்னர் இராமபிரான் இங்கே வந்து இராக்ஷதர்களை மடித்தாலும் ஒரு பயனுமில்லாமற் போம்; தங்களை நான் இப்பொழுதே எடுத்துக் கொண்டு போய்ச் சுவாமியிடம் சேர்த்து விட்டால் அவருடைய கவலையும் தீரும்; தங்களுடைய துக்கமும் நிவிர்த்தியாகும்; என்னுடைய சேவகத் தொழிலுக்கும் சிறப்புண்டாகும்; பின்னர் வேண்டுமானால் இராகவர் எங்களுடன் இங்குவந்து இராக்ஷதர்களை மடித்து உலகத்தாருக் குண்டாயிருக்கும் துன்பத்தை நிவிர்த்திக்கலாம்; ஆதலின் தாங்கள் என்னுடைய தோளின்மேல் ஆரோகணித்துக் கொண்டால் நான் இப்பொழுதே தங்களை இராமபிரானிடம் கொண்டு போய்ச் சேர்த்து விடுகிறேன் ; இடையில் எவரேனும் வந்தெதிர்த்தாலும் அவர்களையும் நாசப்படுத்திவிடுவேன்; அல்லது இலங்கையோடு பெயர்த்துத் தங்களைக் கொண்டுபோக வேண்டுமென்று தாங்கள் எனக்கு ஆக்ஞாபித்தாலும் நான் அப்படியே செய்கிறேன்; இன்னும் இவ்விலங்கையிலுள்ள

இராக்ஷதர்களை மடித்து இவ்விலங்காபுரியையும் சுட்டெரித்து விட்டுத் தங்களைக் கொண்டுபோக வேண்டுமென்றாலும் அப்படியும் நான் செய்வேன்; இவற்றுள் தங்களுக்கு எது சம்மதமோ அதனைத் தாங்கள் தெரிவித்தால் அக்கட்டளையை அடியேன் உடனே நிறைவேற்றி விடுகிறேன்; தயவுசெய்து தாங்கள் எனக்கேதேனு மொரு கட்டளையிடவேண்டும்" என்று கூறினார்.

இவ்வாறு அவர் கூறிய அன்புநிறைந்த வார்த்தைகளுக்காகச் சீதை மகிழ்ந்தாள். எனினும், தான் அனுமாருடன் செல்வது தகுதியன்றென்று அவளுக்குத் தோற்றியபடியால், அவள் ஆஞ்சநேயரை நோக்கி, "வாயு புத்திரனே! நீ கூறிய வார்த்தைகளுக்காக நான் மிகவும் மகிழ்ந்தேன்! நீ கூறியவற்றை யெல்லாம் செய்து முடிக்கத்தக்கவனென்பது எனக்குத் தெரியும்; ஆயினும், நீ என்னை எடுத்துக்கொண்டு செல்வது தகுதியன்று; நீ அவ்வாறு எடுத்துச் செல்லுங் காலத்தில் இராக்ஷதர்களில் எவரேனும் வந்து உன்னையெதிர்த்தால் நீ அவர்களுடன் போர் புரிவாயா? என்னைக் காப்பாற்றுவாயா? நீ ஒருவனாயிருப்பதால் அப்போது மிகுந்த கஷ்டப்படுவாய்; மேலும் நீ இந்திரிய நிக்கிரம் செய்தவனாயிருந்தாலும் புருஷ வடிவத்தோடு கூடியவனாதலின் என்னைத் தீண்டுதல் தகாது; அவ்வாறு தீண்டும் பக்ஷத்தில் பதிவிரதைகட்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்கிற நால்வகைக் குணங்களுள் பயிர்ப்பு என்ற சிறந்த குணம் என்னிடத்தில் இல்லாமற் போய்விடும்; தன் நாயகனைத் தவிர மற்றெந்த ஆடவரையும் தீண்டாதிருத்தலே பதிவிரதைகட்குரிய சிறந்த குணமாம்; இன்னும் எவ்வகைக் காரணத்தைக் கொண்டும் பதிவிரதைகளைத் தீண்டும் ஆடவருக்குத் தீங்குண்டாகும்; அதனாலேயே பெருந்துஷ்டனாகிய இராவணனும் என்னைத்தீண்டாமல் பர்ணகசாலையுடன்

பெயர்த் தெடுத்துக் கொண்டு வந்திருக்கிறான்; அவன் தீண்டியிருப்பானானால், நான் அப்பொழுதே உயிர் விட்டிருப்பேன்; இனிமேலும், அவன் துராக்கிருதமாக என்னைத் தீண்டுவானென்றும், அதனால் எனக்கு அழிவு நேரிடுமென்றும் நீ சந்தேகப்படவேண்டாம்; 'உனக்கிணங்காத ஸ்திரீகளை நீ தொட்டால் உன் சிரம் ஆயிரம் துண்டுகளாக வெடித்துப் போகும்' என்று பிரமதேவர் ஆதியில் அந்த இராவணனுக்குச் சாபமிட்டிருக்கின்றார்; அதனால், அவன் எப்பொழுதுமே என்னைத் தொடமாட்டான்; இந்த இரகசியத்தை விபீஷணன் புத்திரி திரிசடை எனக்குக் கூறி யிருக்கின்றாள்; அதனாலேயே நான், 'நமது நாயகர் வந்து நம்மை மீட்கும் வரையில் பொறுமையோ டிருப்போம்; அப்படி அவர் வாராவிடில் உயிர் விடுவோம்,' என்று இதுவரை இறவாமலிருந்தேன்; மேலும் இந்த இராவணனை ஒழிப்பது ஒருபெரிய காரியமன்று; நான் நினைத்தாலும் என்னுடைய பதிவிரதா தர்மத்தின் மகிமையினால் ஒரு நிமிஷநேரத்தில் அவனை எரித்து விடுவேன்; அப்படிச் செய்தால் இராகவருக்குச் சிறப்பில்லாமற் போகும்; அவரேவந்து இந்த இலங்கையுடன் இராவணனை நாசப்படுத்தி என்னுடைய சிறையை நீக்குவதுதான் அவருக்குக் கௌரவமாகும்; ஆதலின் நீ என்னைக் கொண்டுபோம் எண்ணத்தை விட்டு விரைவில் இராகவரிடம் சென்று என்னுடைய நிலைமையைக் கூறி அவரை, வானர சேனைகளுடன் இங்கே அழைத்துக்கொண்டுவா; அவருடைய கையினால் இந்த இலங்கையும் இராக்ஷத கூட்டங்களும் நாசமடைவதை நான் பார்க்கவேண்டும்" என்று கூறினாள்.

இந்த நீதிகளெல்லாம் மிகவும் சிரேஷ்டமானவைகளாயிருந்தபடியால் அனுமார் ஜானகியின் வார்த்தைகளுக்கிணங்கி அவளை நோக்கி, "தாயே! தங்கள் திருவுள்ளம்

அப்படியானால், தாங்கள் சில தினங்கள் வரை, இங்கேற்படும் துன்பங்களைச் சகித்துக்கொண் டிருங்கள்; நான் இப்பொழுதே சென்று சுவாமியை விரைவில் அழைத்து வருகின்றேன்; அவருக்குத் தாங்கள் சொல்லவேண்டிய விஷயங்களிருந்தால் அடியேனிடம் தெரிவியுங்கள்" என்றார். அதன்மேல் ஜானகி அனுமாரைப்பார்த்து, "அப்பா! நான் உன்னைப் பார்த்த தைரியத்தினால் இன்னும் ஒரு மாதம் வரை உயிருடனிருந்து இராமர் வரவுக் கெதிர்பார்த்திருப்பேன்; அதற்குள் என் நாதர் வராவிடில் நான் உயிர்விடுவது நிச்சயம்; என்னைக் காத்தற்கு அவருக் கிஷ்டமில்லாவிடினும், அவருடைய வீரத்தையேனும் காத்துக்கொள்ளும்படி அவருக்கு நீ சொல். இராகவர் என்னைவிட்டுப் பிரிந்து போன காலத்தில் இலக்குமணர் என்னைக் காத்திருந்தவாதலால் அவரே என்னுடைய சிறையை நீக்கக் கடமைப்பட்டிருக்கிறாரென்பதை நீ அவருக்குக் கூறு; ஒரு மாதத்திற்குள் சுவாமி இங்கே எழுந்தருளாவிட்டால் நான் இறந்து போவது நிச்சயமாதலால் அந்த ஒரு மாதத்திற்குமேல் கங்கையில் எனக்குச் செய்யவேண்டிய கடமைகளைச்செய்து விடும்படி அவருக்குக் கூறிவிடு; அவ்வாறு எனக்கு ஈமக் கடன்களைச் செய்து முடித்தபின்னர் என் மாமிமார் மூவருக்கும், 'உங்கள் மருமகள் இறந்து போய்விட்டாள்; அவள் உங்களுக்கு நமஸ்காரஞ் செய்தாள்' என்று கூறி விடும்படிக்கும் அவரிடம் சொல்; ஒரு சமயம் அவர் இதனைக் கூற மறந்துவிட்டாலும் நீயாவது கூறிவிடு; ஸ்ரீ ராமபிரான் என்னைக் கலியாணஞ்செய்த அன்றைக்கு, என்னிடம், 'இந்த ஜன்மத்தில் நான் உன்னைவிட்டு மற்றொரு பெண்ணைத் தொட மனத்தினாலும் நினைக்கமாட்டேன்' என்று கூறினார். இதை நான் இப்போது அவருக்கு ஞாபகப்படுத்தும்படி சொன்னதாகவும் கூறு; இன்னும் நான் இங்கிருந்தபடியே துக்கத்

தினல் இறந்துவிட்டாலும மறு ஜன்மமெடுத்தாவது அவ ரைத்தழுவத் தவஞ்செய்துகொண் டிருக்கின்றேனென்றும் சொல்; அந்தோ! நான் அவருடைய பட்டாபிஷேக மகோற் சவத்தைக் கண்டுகளிக்கும் பாக்கியமில்லாத பாவி யாகிவிட் டேன் ; அனுமானே ! இன்னுமொன்று கேள் : அவர், அயோத்தியிலுள்ளவர்கள் தம்மைப் பிரிந்து வருந்துவதை நினைத்து அங்கே மீண்டுசெல்ல நினைப்பாரேயன்றி என்னைத் தேடி இவ்விடத்திற்கு வரமாட்டாரென்று ஓர் எண்ணம் எனக்குதிக்கின்றது; அப்படி அவர் நகரத்திற்குத் திரும்பிச் செல்ல நினைப்பாரானால் அவரை அழைத்துக்கொண்டுபோய் அவருக்கு முடிசூட்டி வைக்கும்படி நீ உங்கள் சுக்கிரீவமகா ராஜருக்குச் சொல்; அவர்களுடன் நீயும் அந்தப்பக்கம் சென்றால் மிதிலைக்குச் சென்று என் மாதாபிதாக்கள் முதலிய பந்து ஜனங்களுக்கு நான் வந்தனம் செய்ததாகக் கூறு" என்று சொல்லிக் கண்ணீர்விட் டழுதாள்.

இவற்றையெல்லாம் கேட்டவுடனே அனுமார் மனம் பதைத்து ஜானகியை நோக்கி, "தாயே! தாங்கள் இப்படிப் பட்ட வார்த்தைகளைக் கூறுதல் தகாது; தங்களுடைய பிரி வால் ஸ்ரீராகவர் படும்பாட்டை அளவிட்டுச் சொல்லுதல் இயலாது; அப்பேர்ப்பட்ட புண்ணிய புருஷர் உம்மைச் சிறையிலிருந்து மீட்காமல் விட்டு நகரத்திற்கேகிப் பட்டாபி ஷேகமும் செய்துகொள்வாரா? நானும் மற்றைய வானர வீரர்களும் இந்த இலங்கையிற் புகுந்து இராக்ஷதர்களை மடிக்காமல் விட்டு விடுவோமா? நான்போய்த் தங்களுடைய நிலைமையை இராகவருக்குக் கூறுவதுதான் தாமதம்; தங்கள் விஷயத்தைக் கேள்விப்பட்ட மாத்திரத்திலேயே அவர் வானரசேனைகளுடன் இவ்விலங்கையிற் புகுந்து இராக்ஷதர் களை யெல்லாம் மடித்து இராக்ஷஸ ஸ்திரீகளெல்லாம் தாலி யறுபட்டு இரத்தவெள்ளத்தில் வீழ்ந்து புரண்டழச் செய்

வார்; இதனை நீர் விரைவில் பிரத்தியக்ஷமாகப் பார்க்கப் போகின்றீர்; உம்மை இங்கே கலங்கவிட்டு நாங்கள் வேறு தொழிலிற் பிரவேசிக்க மாட்டோம்; ஆதலால் நீர் கலங்கிக் கண்ணீர் விடவேண்டாம்; எனக்கு விடைகொடும்; நான் துரிதமாகப்போய்ச் சுவாமியை அழைத்து வருகின்றேன்" என்றார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் சீதை மிக்க மகிழ்ச்சியடைந்து ஆஞ்சனேயரை நோக்கி, "அப்பா மாருதி! என்னுடைய மனத்துயரத்தால் நான் இவ்வாறு கூறினேன்; எனினும் உன்னுடைய உறுதி வாக்கியங்களால் தெளிவடைந்தேன்; இனி நீ விரைந்து செல்வாயாக; இன்னும் நீ என்னைக் கண்டது சுவாமிக்கு நிச்சயமாக விளங்கும்படி. சில முக்கியமான அடையாளங்களையும் கூறுகின்றேன்; அவற்றை நீ தெரிந்துகொள்; பூர்வத்தில் இந்திர குமாரனாகிய சயந்தன், தன்னுடைய குறும்புத்தனத்தினால் காகவ்டிவ மெடுத்து வந்து தன்னுடைய கூரிய வாயினால் என்னுடைய சரீரத்தில் குத்தி எனக்கு உபத்திரவத்தை உண்டாக்கினான். அப்போது இராகவர் கடுஞ்சினமடைந்து அவன்மீது ஒரு பாணத்தைச் செலுத்தினார். அவன் பயந்தோடிப் ப்றபல தேவர்களிடத்தும் அடைக்கலம் புகுந்தான்; அவர்கள், 'இராமபாணத்தைத்தடுத்து உன்னைக்காப்பாற்றுதல் எங்களால் முடியாது; நீ இராமபிரானுடைய சரணத்தையே அடைவாயாக' என்றார்கள். அவன் அவ்வாறே இராகவருடைய பாதங்களையடைந்து ஸ்தோத்திரம் பண்ணினான். சுவாமி மனதிரங்கி அவனுயிரைப் போக்கும்படி விட்ட பாணத்திற்கு, அவனுடைய ஒரு கண்ணைக் கிரகித்துக்கொள்ளும்படி கட்டளையிட அவ்வம்பானது அவ்வாறே செய்தது. அதன்மேல் இராகவர் அவனை நோக்கி, 'நம்மிடம் சரணம் புகுந்ததால் நாம் உன்னுடைய குற்றத்தைப் பொறுத்து உன் நேத்திரங்களில்

ஒன்றை வாங்கினேம்; இதற்கறிகுறியாக இன்று முதல் நீ எடுத்த வடிவத்தையுடைய காக்கைகளுக்கெல்லாம் இரண்டு கண்களுக்கும் மத்தியில் ஒருமணியேயிருந்து இரண்டு பக்கங்களிலும் மாறிமாறிப் புரண்டு ஒற்றைக்கண் பார்வையே ஏற்படக்கடவது' என்றுரைத்தருளினர். அதன்மேல் காகாசுரனுக வடிவங்கொண்டிருந்தசயந்தன், தன்னுடைய இயற்கை வடிவம்பெற்று ஸ்ரீ ராமபிரானை வணங்கித் தெய்வலோகம் போயினன்; மற்றொருசமயம் நானும் சுவாமியும் அயோத்தியிலிருக்கும்போது நான் வளர்த்த கிளியொன்றிற்கு என்ன பெயரிடலாமென்று சுவாமியிடம் கேட்க, அவர், 'என் தாயாகிய கைகேயியின் பெயரை வை' என்று தமக்குச் சிற்றன்னையின்மீதிருந்த அன்பை விளக்கினர். இந்த விஷயங்களை நான் அவருக்கு ஞாபக மூட்டும்படி கூறச்சொன்னதாகவும் நீ சொல்" என்று கூறிவிட்டு மேலும் இராகவருக்கு ஒரு தக்கபொருளை அடையாளமாக அனுப்பவேண்டுமென்று கருதித் தன்னிடமிருந்த சூடாமணியென்னும் இரத்தினத்தையெடுத்து ஆஞ்சநேயருக்குக் காட்டி, "அனுமானே! நான் கூறிய எல்லாவற்றினும் இதுதான் நீ என்னைக் கண்டதற்குச் சிறந்த அடையாளம்; இதை நீ சுவாமியிடம் கொண்டுபோய்க் கொடுத்தால் அவர் என்னைக் கண்டதாக நிச்சயித்து மகிழ்வார்" என்று அவர் கையிற் கொடுத்தாள். அவர் அம்மணியை அன்புடன்வாங்கி வஸ்திரத்தில் பதனம்பண்ணி வைத்துக்கொண்டு 'இனி எல்லாம் அனுகூலமாகவே முடியும்' என்று ஆனந்தங்கொண்டு ஜானகியாரைச் சுற்றி மும்முறை வலம் வந்து அவளுடைய பாதங்களில் வீழ்ந்து சேவித்து அவளிடம் விடைபெற்றுக்கொண்டு, அவள் தம்மை வாழ்த்தியனுப்ப அவ்விடத்தை விட்டு நீங்கினர்.

அனுமார் இராவணனுடைய வனத்தை அழித்தல்.

அவ்வாறு நீங்கிய ஆஞ்சனேயர், வடதிசை நோக்கிச் செல்லத் தொடங்கினர். அப்படிச் செல்லும்போது அவர், "நாம் இங்கேவந்து பிராட்டியாரைக்கண்டு அவரிடம் அடையாளம் வாங்கிக்கொண்டு போவதுமாத்திரம் போதாது; இன்னும் ஏதாவதொரு பிரதாபமான காரியத்தைச் செய்துவிட்டுச் செல்வதே நமக்குச் சிறப்பாகும்; இலங்கையை அழித்துப் பிராட்டியாரை எடுத்துக் கொண்டுபோக நினைத்தும் அவர் அதற்குச் சம்மதிக்கவில்லை. அது முடியாமல்போயினும் இங்கே கலகத்தை உண்டுபண்ணிச் சில இராக்ஷதர்களையாவது மடித்துச் சில சேஷ்டைகளைச் செய்துவிட்டுப் போகவேண்டும்; நாம் முதலில் இங்குள்ள சோலையை அழித்தால் இராக்ஷதர்கள் போருக்கு வருவார்கள்; அப்படி வரும்போது நாம் நினைத்ததை நிறைவேற்றிக் கொள்ளலாம்" என்று தீர்மானித்து உடனே விஸ்வரூபமெடுத்து அந்த அசோக வனத்தையும், அதிலுள்ள தடாகங்கள், செய்குன்றுகள், வசந்த மண்டபங்கள் முதலியவற்றையும் சூரியோதய மாவதற்குள் அழித்துவிட்டு மறுநாள் விடியுந்தருணத்தில் அங்கே உருத்திர மூர்த்திபோல நின்றார்.

அப்படி நிற்கின்ற சமயத்தில் முன்னே அனுமார் ஜெபித்த மந்திரத்தால் உறங்கிக்கிடந்த இராக்ஷஸ ஸ்திரீகளெல்லோரும் விழித்தெழுந்து அனுமாரைப் பார்த்து "அம்மம்மா! இவன் யாரோ தெரியவில்லையே" என்று அதிசயித்து நடுங்கிச் சீதையை நோக்கி, "இவனுடைய வரலாறு உனக்குத் தெரியுமோ?" என்று வினவினார்கள். அதற்கவள், 'எனக்கொன்றுந் தெரியாது' என்று கூறி விட்டாள். அதன்மேல் இராக்ஷஸ ஸ்திரீகள் அனுமாருக்கெதி

ரில் நிற்கப் பயந்து வயிற்றிலடித்துக்கொண்டு நாலா திக்கு களிலும் ஓடி விட்டார்கள். அப்போது அனுமார், அவ்விடத்தில் மகா சிறப்புடன் அமைந்த இராவணனுடைய யாக மண்டப மொன்றிருக்கக்கண்டு அதனை அடியோடு பெயர்த்தெடுத்து இலங்கை நகரின்மேல் விட்டெறிந்தார்; அது போய் விழ்ந்த மாத்திரத்தில் அநேகம் கட்டிடங்கள் நாசமாயின; பல இராக்ஷதர்கள் நசுங்குண்டு மாய்ந்தார்கள். அங்கே காவலிருந்த தேவர்கள், அனுமார் அசோகவனத்தை அழித்ததையும், யாக மண்டபத்தைப் பெயர்த்தெறிந்ததையுங் கண்டு நடுநடுங்கி விரைந்தோடி இராவணனிடத்தில் அனுமாருடைய அதிசயச் செயல்களைக் கூறினார்கள். இராவணன், 'அற்பக்குரங்கா நம்முடைய சோலையையும் யாக மண்டபத்தையும் அழித்தது!' என்று கோபச்சிரிப்புச் சிரித்தான். சோலையின் காவலர்களாகிய தேவர்கள், 'இராவணேஸ்வரா! அந்தக் குரங்கை அற்பமானதென்று கருதலாகாது; அதற்கு மும்மூர்த்திகளும் இணையாக மாட்டார்கள்; அது மிக்க பயங்காமாகிய வடிவத்தையுடையதா யிருக்கின்றது' என்றார்கள். அத்தருணத்தில் அனுமார் அங்குள்ளவர்களின் நெஞ்சந் திடுக்கிடும்படி அட்டகாசஞ் செய்து ஆர்ப்பரித்தார்.

கிங்கரர் வதை.

மேற்கூறியபடி அனுமார் ஆர்ப்பரித்த முழக்கமானது இராவணனுடைய இருபது செவிகளிலும் நுழைந்தது. அப்போது இராவணன், 'இஃதென்ன ஆச்சரியம்! ஒரு குரங்கிற்கு இவ்வளவு சாமர்த்தியமா இருக்கின்றது?' என்று பெருமூச்சு விட்டு மிகுந்த கோபத்துடனே அநேகம் இராக்ஷத கிங்கரர்களை அழைத்து அவர்களிடம் "நீங்கள்சென்று அந்தக் குரங்கைக் கொல்லாமல் உயிருடன் பிடித்துக் கட்டிக்கொண்டு வருவீராக" என்று ஆக்ஞாபித்தான்.

உடனே அந்தக் கிங்கரர்கள் அநேகம் ஆயுதங்களுடன் பயங்கரமான சப்தமிட்டுக்கொண்டே சென்று அனுமாரைக் கண்டு வளைந்துகொண்டு அவர்மீது பாணங்களைச்சொரிந்தார்கள். அவர், ஒரு பெரிய விருக்ஷத்தை வேருடன் பிடுங்கிக் கொண்டு அதினல் மோதிச் சிறிது நேரத்திற்குள் அவர்களெல்லோரையும் நாசப்படுத்தி எங்கும் இரத்த வெள்ளம் பெருகியோடவும், பிணங்கள் மலைபோற் குவியவும் செய்துவிட்டார். வன காவலர்கள் விரைந்தோடி இராவணனிடத்தில், கிங்கரர்களெல்லோரும் ஒழிந்துபோனதைக் கூறினர்கள்.

ஜம்புமாலி வதை.

அதைக் கேட்டதும் இராவணன் தனக்குண்டாகிய கோபத்தை அடக்க முடியாதவனய்ப் பக்கத்தில் வணங்கி நின்ற அதிவீரனகிய ஜம்புமாலியை நோக்கி, "நீ இப்பொழுதேசென்று அந்தக் குரங்கைப் பிடித்துக் கட்டிக் கொண்டுவந்து என் முன்னே நிறுத்தி என்னுடைய கோபத்தைத் தணிப்பாயாக" என்று கூறினன். அவன் உடனே தன் சேனைகளுடனும், இராவணனல் கூட்டியனுப்பப்பட்ட சேனைகளுடனும், தன்பிதாவும் இராவணனுடைய முதல் மந்திரியுமாகிய பிரகஸ்தனென்பவனல் அனுப்பப்பட்ட சேனைகளுடனும், மற்ற இராக்ஷத சிரேஷ்டர்களால் அனுப்பப்பட்ட சேனைகளுடனும், யுத்த சன்னத்தனய் ஆயுதங்களைத் தாங்கித் தேர்மீதேறிப் புறப்பட்டுப் போயினன். அப்போது அனுமார், 'இன்னும் என் இராக்ஷதர்கள் யுத்தத்திற்கு வரவில்லை' என்று அந்தச் சோலையின் வாயிலிலுள்ள தோரண கம்பத்தின் மேலேறி யுட்கார்ந்து இராக்ஷதர்களெல்லோரும் திடுக்கிடும்படி கர்ச்சனைபுரிந்து தோள்களைத் தட்டி இராக்ஷதர்கள் வரும்வழியை நோக்கிக்

கொண்டிருந்தார். அத்தருணத்தில் ஜம்புமாலி, வழியில் பிணங்களும் இரத்தவெள்ளமும் நிறைந்திருந்தபடியால் வழிதெரியாமல் மயங்கித் தன் சேனைகளுடன் அந்தப் பிணக் குவியல்களின் மேற்சென்று அனுமாரிருக்குமிடத்தில் நெருங்கிச் சேனைகளை அணிவகுத்து நிறுத்தி முன்னும் பின்னும் வரச்செய்து நடுவே தன் தேரைச் செலுத்திக் கொண்டு போனன். அவன் வரவைக்கண்ட அனுமார் மிகவும் உற்சாகத்துடனே தோரண கம்பத்தை விட்டுக் கீழே பாய்ந்து யுத்தசன்னத்தராய் நின்றார். அப்போது ஜம்புமாலியின் சேனையிலுள்ள வீரர்கள் அவர்மீது ஆயுதங்களைப் பிரயோகித்தார்கள். மாருதி அவ்வாயுதங்களை யெல்லாம் கரங்களாற்பிடித்துப் பொடிப்பொடி யாக்கிவிட்டு அங்கே கிடந்த எழுவாயுத மொன்றை யெடுத்துக்கொண்டு அந்த இராக்ஷத கூட்டத்தில் பிரவேசித்துஅவர்களையும் மற்றப் படைகளையும் அடித்து நாசப்படுத்தினர். அவ்வாறு தன் சேனைகள் நாசமானதைக் கண்ட ஜம்புமாலி, கோபங்கொண்டு இராக்ஷதர்களுடைய இரத்த நதியிலும் நிணச்சேற்றிலும் தன்னுடைய தேரைச் செலுத்தி அனுமாருக் கெதிரில் போய் நின்றான். அப்போது அனுமார் அவனை நோக்கி, "அடே இராக்ஷதா! நீ சேனைகளை யெல்லாமிழந்து இளைத்தவனு யிருக்கின்றாய்; இளைத்தவருடன் போர் செய்வது நீதியாகாது; நீ என்னுடன் எதிர்த்தால் இப்பொழுதே இறந்து போவாய்; ஆதலின் உயிர்தப்பிப் போய்விடு" என்றார். ஜம்புமாலி அவரை நோக்கி, 'அடே வானரா! முன்னே யுத்தத்திற்கு வந்து இறந்தொழிந்த சோம்பேறிகளைப்போல என்னையும் நினைத்தாயா? உன்னுடைய சமர்த்தை நான் பார்க்கிறேன்' என்று சொல்லி அவர்மீது அநேகம் பாணங்களைப் பிரயோகித்தான். அனுமார், தம் கையாயுதத்தினுல் மோதி அவற்றை யெல்லாம் பொடிப் பொடியாகச்செய்துவிட்டார்;

ஜம்புமாலி அதன்மேல் அவர் சமீபத்தில் நெருங்கிச்செல்லப் பிரயத்தனப்பட்டு அங்கே கிடந்த பிணக்குவியலில் தன் தேரைச் செலுத்த முடியாமல் திகைத்து அவ்விடத்திற் றுனே நின்று ஓர் அர்த்தசந்திர பாணத்தை விடுத்து அனுமார் கையிலிருந்த ஆயுதத்தைத் துண்டாக்கி விட்டான். அனுமார் சிறிது மனஞ்சலித்து, அவன், மேலும் எய்த பாணங்களை யெல்லாம் கையினுற் பற்றிச் சின்னுபின்னப் படுத்திவிட்டு முடிவில் வீராவேசங்கொண்டு அவனுடைய தேரின்மேற் பாய்ந்து, அவன் கைவில்லைப் பறித்து அவன் கழுத்தில் மாட்டி விசையாக முறுக்கி யிழுத்தார். அவ்வாறி ழுக்கவே அவனுடைய தலை அறுபட்டு வீழ்ந்தது. அதன் மேல் ஆஞ்சனேயர் அவனுடைய தேரையும், குதிரைகளை யும், சாரதியையும் மிதித்துச் சிதைத்துவிட்டு மீண்டும் அந்தத் தோரண ஸ்தம்பத்தில் ஏறிக்கொண்டார். அங்கே மடிந்த இராக்ஷதர்களுடைய பிணங்களை இரத்தவெள்ளம் இழுத்துக்கொண்டுபோய் இலங்கா நகரத்தின் பற்பல விடங் களிலும் எறிய அங்குள்ளவர்க ளெல்லாரும் நடுங்கி யோடி னுர்கள். இறந்த இராக்ஷதர்களுடைய மனைவிமார்களின் அழுகுரல் மிகுந்தது. அத்தருணத்தில் அந்தப் பூங்கா வனத்தைக் காத்துக்கொண்டிருந்த தேவர்கள் இராவண னிடத்திற் சென்று ஜம்புமாலி யிறந்த செய்தியைத் தெரி வித்தார்கள். அதைக் கேட்ட இராவணன், கண்களில் இரத்தஞ் சொரியக் கோபித்து, "நானே சென்று அந்தக் குரங்கைப் பிடித்துக் கொண்டு வருகின்றேன்" என்று எழுந்தான்.

பஞ்ச சேனுதிபதிகள் வதை.

அத்தருணத்தில், இராவணனுடைய சேனுதிபதிக ளாகிய விரூபாக்ஷன், யூபாக்ஷன், துர்த்தவாஷன், பிரகஸ்

தன், பாசகர்ணனென்னும் ஐவரும் இராவணனை நோக்கி "இலங்காதிபரே! நீர் ஓர் அற்பமான குரங்கின்மேல் படையெடுத்துச் செல்வதைக் காட்டினும் இழிவு வேறொன்றுமில்லை; நாங்கள் போய் அந்தக் குரங்கைப் பிடித்துவருகிறோம்" என்று சொன்னார்கள். இராவணன் அப்படியே செல்லும்படி அவர்களுக்கனுமதி யளித்தான். அதன்மேல் அவர்கள் மிகுந்த சேனைகளுடனே புறப்பட்டுப் போனார்கள். அவர்கள் எப்பேர்ப்பட்டவர்களெனில் எமனும் அஞ்சத்தக்க பராக்கிரமமுடையவர்கள். இத்தகைய அவர்கள் போர்க்கோலத்துடனே புறப்பட்டுப்போய் அனுமார் ஏறியிருந்த தோரணஸ்தம்பத்தை வளைந்து கொண்டு அவரைப் பார்த்து, "இந்தச் சிறிய குரங்கா பல இராக்ஷதர்களை மடித்துவிட்டது!" என்று அதிசயித்தார்கள். அத்தருணத்தில், அனுமார், தேவேந்திரனுடைய நகரத்தின் வாயிலிலிருந்து கொண்டு வந்து அங்கே நாட்டப்பட்ட அந்தத் தோரண ஸ்தம்பத்திலிருந்தபடியே விஸ்வரூபங் கொண்டார். அவ்வடிவத்தைப் பார்த்தவுடன் இராக்ஷதர்கள் அதிசயித்து மிகுந்த கோபங்கொண்டு அவர்மீது எண்ணிறந்த ஆயுதங்களைப் பிரயோகஞ் செய்தார்கள். அவற்றிற்கெல்லாம் ஆஞ்சநேயர் சிறிதும் கலங்காமல், தம்மீது இராக்ஷத வீரனொருவன் எறிந்த இருப்புத் தடியொன்றைக் கையிற் பற்றிக்கொண்டு அந்த இராக்ஷத சேனைகளை யெல்லாம் சிறிது நேரத்திற்குள் நாசஞ் செய்துவிட்டார். முந்தின யுத்தங்களைக் காட்டினும் இந்த யுத்தம் வெகு சாமர்த்தியமாக நடை பெற்றது. இவ்வாறு இராக்ஷத சேனைகள் மடிந்ததைக் கண்ட பஞ்ச சேனாதிபதிகள் மிகுந்த ஆத்திரத்தோடு தேர்களைச் செலுத்திக் கொண்டுபோய் அனுமார் சமீபத்தில் நெருங்கி அநேகம் அஸ்திரங்களை அவர்மீது செலுத்தினார்கள். மாருதி அவற்றையெல்லாம் பொடியாக்கி

விட்டு அந்தச் சேனாதிபதிகளில் ஒருவனுடைய தேரைச் சின்னாபின்னப் படுத்தினார். அதிலிருந்தவன் ஆகாயத்திற் கிளம்பி நின்று அனுமார்மீது பாணங்களைச் சொரிந்தான். உடனே மாருதி அவனைத் தம் இரும்புத் தடியால் அடித்துக் கொன்றார். அதைக்கண்டு மற்ற நால்வரும் கடுஞ்சின மடைந்து ஆஞ்சநேயர் மீது அளவற்ற ஆயுதங்களைப் பிரயோகித்தார்கள். அப்போது அனுமார் வேகங்கொண்டு பாய்ந்து அவர்களுள் ஒருவனைத் தேருடன் எடுத்து ஆகாயத்திற் சுழற்றி யெறிந்தார். அத்தேர் மேலேபோய்ப் பூமியில் வீழ்வதற்கு முன் அதிலிருந்த வீரன் நிலத்திற் பாய்ந்தான். அனுமார் அப்பொழுதே அவன் மேற் பாய்ந்து அவனை மிதித்துக் கொன்று விட்டார். அதுகண்டு மற்ற மூவரும் முன்னிலும் அதிகமான வீரங்கொண்டு அவரைத் தாக்கினார்கள். அப்போது ஆஞ்சனேயர் அவர்களுள் இரண்டு பேர்கள் ஏறியிருந்த தேர்களை இரண்டு கைகளிலும் அலக்ஷியமாக எடுத்துக்கொண்டு கழுகுபோல மேலெழும்பினார். அவ்வாறெழும்பிய வேகத்தினால் அத்தேர்களிற் கட்டிய புரவிகள் மடிந்தன; சாரதிகளும் கீழே நழுவி வீழ்ந்திறந்தார்கள். அப்போது அத்தேர்களிலிருந்த வீரர்கள் ஆகாயத்திற் கிளம்பிப் போனார்கள். அனுமார் விரைவாக அவர்களுக்கு முன்னே சென்று அவர்களைப் போக வொட்டாமல் தடுத்தார். அவர்கள் பாணப் பிரயோகஞ் செய்தார்கள். அனுமார் அவர்களுடைய விற்களை முறித்து விட்டார். பின்னர் அவர்கள் ஆஞ்சனேயருடனே மல்யுத்தஞ் செய்யத் தலைப்பட்டார்கள். அப்போது மாருதி அவர்களை வாலினால் வளைத்து இறுக்கினார். அவர்கள் எலும்பு நொறுங்கி யிறந்து வீழ்ந்தார்கள். அதன்மேல் அனுமார் எஞ்சிநின்ற மற்றொரு சேனாதிபதியின் தலைமேற் பாய்ந்து அவனையும் பூமியில்

அழுத்திக் கொன்றுவிட்டார். இந்த யுத்தத்தில் இறந்து போகாமல் தவறியிருந்த சில இராக்ஷதர்கள்விரைந்தோடிப் பஞ்ச சேனாதிபதிகளும், சேனைகளும் ஒழிந்துபோனதை இராவணனிடம் கூறினார்கள்.

அக்ஷயகுமாரன் வதை.

அவ்வார்த்தைகளைக் கேட்டவுடனே இராவணன் கண்கள் சிவந்து, 'இஃதென்ன ஆச்சரியம்! ஒரு குரங்கு இங்கிருந்து போகின்றவர்களையெல்லாம் மடித்துக்கொண் டேயிருக்கின்றது; இனியும் நாம் சும்மா விருக்கலாகாது' என்று சீறி யெழுந்து ஆஞ்சனேயருடன் யுத்தஞ் செய்வ தற்குப் பிரயாணமானான். அப்போது அவனுடைய இளைய புத்திரனாகிய அக்ஷய குமாரன் அவனை நோக்கி, "தந்தையே! இந்தச் சிறிய காரியத்திற்கு நீங்களா போக வேண்டும்;நீர் அடியேனுக்குக் கட்டளையிட்டால் நான் அந்தக் குரங்கைப் பிடித்துக்கொண்டு வரமாட்டேனா! முன்னொரு சமயம் நீர் இந்திரன்மேற் கோபங்கொண்ட காலத்தில் நான் பக்கத்திலிருக்கும்போதே என்னை மதிக்காமல் அவ் விந்திர னைப் பிடித்துக்கொண்டு வரும்படி என் தமையனை யனுப்பி னீர். அப்போது அக்காரியத்திற்கு என்னை நீர் அனுப்ப வில்லையே என்று நான் விசனித்துக்கொண் டிருந்தேன்; அஃதெனக்கொரு குறையாகவே யிருந்து வருகின்றது; அக்குறை தீர இப்பொழுது இந்தக் குரங்கையாவது பிடித்துக்கொண்டு வரும்படி எனக்குக் கட்டளை யிடும்" என்றான். இராவணன் அவனுடைய வீரமாகிய வார்த்தை கட்கு மகிழ்ந்து, அவன் எப்படியும் அனுமாரைப் பிடித்து வருவானென்ற நிச்சயத்தினால் அவனிஷ்டப்படியே யுத்தத் திற்குச் செல்லும்படி அவனுக்குக் கட்டளை யிட்டான்.

அக் கட்டளையின்படியே அக்ஷய குமாரன் போர்க் கோலங்கொண்டு, முன்னொரு யுத்தத்தில் இந்திரன் இளைத்துப் பயங்கொண்டு விட்டோடிய இருநூறு குதிரைகளைப் பூட்டிய தேரில் ஏறிப் புறப்பட்டான். அவனுடனே பன்னீராயிரம் இராக்ஷத குமாரர்களும், இலக்ஷம் மந்திரி குமாரர்களும், இலக்ஷம் பிரதானிகளுடைய குமாரர்களும், இராவணனுக்குத் தேவரம்பைகளின் வயிற்றிற்பிறந்த இலக்ஷம் குமாரர்களும் தேரேறிப் புறப்பட்டார்கள். அக்ஷயனுக்குச் சொந்தமான ஒருவெள்ளம் சேனையும் உடன் சென்றது. அப்போது பல துர்ச்சகுனங்கள் நிகழ்ந்தன. இத்தகைய சேனைகளுடன் அக்ஷய குமாரன் புறப்பட்டுப்போய் அனுமாரிருக்கு மிடத்தைச் சமீபித்தபோது ஆஞ்சனேயர் அவனைப் பார்த்து, "இவன் இராவணன்தானோ' அல்லது அவன் பிள்ளை இந்திரஜித்தோ! இவ்விருவருள் ஒருவனாயிருந்தால் நம்தோள் தினவுதீர நாம் இவனோடு யுத்தஞ்செய்து ஒருகை பார்க்கலாம்; இவனைக் கொன்றாலும் நமக்குச் சிறப்புண்டு; ஸ்ரீ இராகவருடைய காரியங்களும் ஜெயமாகும்" என்று சந்தோஷித்து இராமரை ஸ்தோத்திரம் பண்ணினார். அப்போது அக்ஷய குமாரன் இன்னும் கொஞ்சம் சமீபத்தில் சென்றபடியால் அவனை நன்றாகப் பார்த்து 'இவன் இராவணனு மல்லன், இந்திரஜித்து மல்லன், வேறெவனோ நீலமலைபோ லிருக்கின்றான்; எவனா யிருந்தாலு மிருக்கட்டும்; சிறிது நேரத்திற்குள் நாம் இவனை எமனுலகிற் கனுப்பி விடுவோம்' என்று தோரண ஸ்தம்பத்தின்மே லிருந்தார்.

அப்போது சமீபத்தில் நெருங்கிய அக்ஷய குமாரன் அனுமாரைப் பார்த்து, "இந்தக் குரங்குதானா நம்முடைய இராக்ஷத கூட்டங்களை யெல்லாம் மடித்துவிட்டது" என்று சிரித்தான். அவனுடைய சாரதி அவனிடத்தில்

'ஐயா ! இதை நீர் அலக்ஷியமாக நினைக்கவேண்டாம்; முந்தி நம்முடைய இராவணேசுவாருடன் எதிர்த்த வாலியும் குரங்குதானே ; நீர் எதற்கும் ஜாக்கிரதையாகவே நடந்து கொள்ளவேண்டும்" என்றான். அதற்கவன், 'இந்தக் குரங்கு எப்பேர்ப்பட்டதாயினும் நான் இதனைக் கொன்று விடுகிறேன் பார்' என்றுரைத்தான். அத் தருணத்தில் இராக்ஷத சேனைகளெல்லாம் அனுமாரை வளைந்துகொண்டு கணக்கற்ற ஆயுதங்களை அவர்மீது பிரயோகித்தன. சிறிது நேரத்திற்குள் அனுமார் அந்தச் சேனைகளையெல்லாம் நாசப்படுத்தி எங்கும் பிணக்காடாக்கி இரத்தவெள்ள மோடும்படி செய்து விட்டார். அப்போது தனித்து நின்ற அக்ஷயகுமாரன் அஸ்திரப்பிரயோகஞ் செய்து கொண்டே அனுமாருக் கெதிரில் சென்றான். ஆஞ்சனேயரும் அவன் சமீபத்தில் நெருங்கினர். அப்போது அக்ஷய குமாரன், நெருப்பைக் கக்குகின்ற பதினன்கு பாணங்களை அனுமார் மீது செலுத்தினன். அனுமார் தம் கையிலிருந்த இருப்புத் தடியால் அவற்றைப் பொடியாக்கி விட்டார். அக்ஷயன் அதன்மேல் பல அஸ்திரங்களை ஏவி அனுமாருடைய ஆயுதத்தை நாசப்படுத்தி அவர்மீது பல பாணங்களைப் பிரயோகித்தான். மாருதி அவற்றை யெல்லாம் கையினல் தட்டி விலக்கிக்கொண்டே போய் அக்ஷய குமாரனுடைய தேரின் மேல் பாய்ந்து அதனைப் பூமியிலழுத்திச் சாரதியைக் கொன்று குதிரைகளையும் மடித்துவிட்டார். அக்ஷயகுமாரன் கடுஞ்சினமடைந்து அனுமாருடைய மார்பிலும் தோள்களிலும் அநேகம் அஸ்திரங்களைச் செலுத்தினன். அவற்றிற் கெல்லாம் அனுமார் தளர்ச்சியடையாமல் அவனுடைய வில்லை ஒரு கையினற் பறித்துக்கொண்டு அவனுக்கெதிரில் நின்றார். அவன் அந்த வில்லை இரண்டு கைகளினலும் பிடித்திழுத்தான். அனுமாரும் அதனை விடாமல் பலங்கொண்

டிழுத்தார். இந்தப் போராட்டத்தில் அந்தவில் முறிந்து விட்டது. பின்னர் அக்ஷய குமாரன் உடைவாளை யுருவிக் கொண்டு அனுமாரைக் குத்தினன். ஆஞ்சனேயர் மிகுந்த கோபத்துடனே அந்த வாளைப்பறித்து முறித்தெறிந்து விட்டார். உடனே அவன் மல்யுத்தஞ் செய்யத் தொடங்கி அனுமாரை இரண்டு கைகளினாலும் இறுகக் கட்டிப்பிடித்தான். அப்போது அனுமாரும் அவனை வாலினாலும் கைகளினாலும் இறுக்கிப்பிடித்து நெருங்கிக்கொண்டு அவனுடைய பற்களுதிரும்படி கன்னத்தில் ஓர் அறை அறைந்து, பிடரியில் குத்தி அவனைக் கீழேதள்ளி அவன்மேலேறிக்கொண்டு கையினால் அவனுடைய தேகத்தை அறைத்துத் தேய்த்து விட்டார். அவன் உயிர் துறந்தான். அவனிறந்ததைக் கண்ட மாத்திரத்தில் அங்கே எஞ்சிநின்ற இராக்ஷதர்களெல்லோரும் நாலாதிக்குகளிலும் பயந்தோடினார்கள். அத்தருணத்தில் அங்கு காவலிருந்த தேவர்கள் விரைந்தோடி அக்ஷய குமாரன் இறந்த செய்தியை இராவணனிடம் தெரிவித்தார்கள். அச்சமாசாரம் எங்கும் பரவியது. மயன் குமாரத்தியும், இராவணன் மனைவியுமாகிய மண்டோதரி தன் பிள்ளையாகிய அக்ஷய குமாரன் இறந்ததைக் கேள்விப்பட்டு ஓடிவந்து இராவணனுடைய பாதத்தில் வீழ்ந்து புலம்பினாள். இலங்கையிலுள்ள மற்றவர்களும் கதறினார்கள்.

அனுமார் இந்திரஜித்தினிடம் கட்டுப்படல்.

அவ்வாறு எல்லோரும் கதறியழும்போது இராவணன், கண்களில் நெருப்புப் பொறி சிதற அனுமார் மீது அடங்காக் கோபங்கொண்டான். அப்போது இந்திரஜித்து தன் தம்பி யிறந்தானென்ற செய்தி கேட்டதும் உருத்திர மூர்த்திபோல் கோபங்கொண்டு அனுமாருடனே யுத்தஞ் செய்யும் பொருட்டுப் போர்க்கோலங் கொண்டு ஆயிரத்திரு

நூறு பேய்கள் பூட்டிய தேரின்மேலேறிப் புறப்பட்டு அநேகம் படைகள் தன்னைச் சூழவந்து இராவணனைக் கண்டு அவனுடைய பாதங்களில் விழ்ந்து சேவித்து, இறந்து போன தம்பியைக் குறித்துக் கதறிப்புலம்பினான். இராவணனும் அவனை மார்பிற்றழுவிக்கொண்டு அழுதான். அங்கிருந்த இராக்ஷத ஸ்திரீகளும் கதறினார்கள். சிறிது நேரம் வரை எல்லோரும் இவ்வாறு துக்கங்கொண்டாடிய பிறகு இந்திரஜித்து அழுகுரலை விலக்கிவிட்டு இராவணனை நோக்கி, "தந்தையே! அந்தக் குரங்கினுடைய பலத்தை ஆராய்ந்துணராமல் அதன்மேல் அநேகம் இராக்ஷதர்களையும், என் தம்பியையும் ஏவி எல்லோரையும் ஒழித்துவிட்டீர்; அந்தக் குரங்கினால் நமக்கிப்போது ஏற்பட்டிருக்கும் இழிவு, அதை நாம் கொன்றாலும்தீராது; எனினும் அதை நாம் சும்மாவிட்டு விடலாகாது; நானேபோய் அதனைப் பிடித்துக் கொண்டு வந்துவிடுகிறேன் ; நீர் கவலைப்படவேண்டாம்" என்று சொல்லிவிட்டு அனுமாரிருக்குந் திக்கை நோக்கிச்சென்று, யுத்தகளத்தில் புகுந்து அங்கே யிறந்து கிடந்தவர்களைப் பார்த்து ஆச்சரியத்தையும் விசனத்தையுமடைந்து, "ஒரு குரங்கே இத்தனை பேர்களையும் மடித்துவிட்டதே ; இனி அந்த இராம லக்குமணர்கள் யுத்தத்திற்கு வந்தால் என்ன தான் செய்யமாட்டார்கள்; கேவலமான இந்தக் குரங்கிற்கு இவ்வளவு தூரம் இடங்கொடுத்த நமது வீரம் நன்றாயிருக்கின்றது!" என்று மேன்மேலும் கோபம் பொங்க அநேகம் பிணக்குவியல்களையும் இரத்த வெள்ளத்தையும் கடந்து போய்த் தம்பியின் சரீரத்தைக் கண்டான்.

அதைக் கண்டவுடனே அவன் தேரின்மேலிருந்தபடியே மெய்சோர்ந்துவில்லையும் கையிலிருந்து நழுவவிட்டுப் பெருமூச்செறிந்து அத்தேகத்தை நோக்கிப் பல துக்கமான

வார்த்தைகளைச் சொல்லிப் புலம்பினான். அவ்வாறு புலம்பிக் கொண்டிருக்கும்போதே 'இத்தகைய நம் தம்பியைக் கொன்றவனை உயிருடன் விடலாமா!' என்று அவனுக்கு அடக்கமுடியாத கோபம் ஜனித்தது. அந்தக் கோபத்தால் அவன் விசனத்தை விடுத்துச் சர்வசங்கார காலத்தில் தோன்றும் உருத்திர மூர்த்திபோல உக்கிரத்தோடு விளங்கினான். அத்தருணத்தில் ஆஞ்சனேயர் அவனைக்கண்டு, "இவன்தான் இந்திரஜித்தென்பவன்; இவனை நாம் கொன்றால் நம்முடைய காரியங்களெல்லாம் அனுகூலமாகவே முடியும்" என்று சிந்தித்தார். அத்தருணத்தில் இராக்ஷத சேனைகள் முன்னேறிச்சென்று அனுமாரை வளைந்துகொண்டு அவர் மீது அஸ்திரங்களைச் சொரிந்தன. அனுமார் 'வாருங்கள்! வாருங்கள்!!' என்று சந்தோஷித்துத் தோரண ஸ்தம்பத்தை விட்டுக் கீழே குதித்துப் பெரிய ஒரு மராமரத்தை வேருடனே பிடுங்கி எடுத்துக் கரத்திற் பிடித்துச் சுழற்றிக் கொண்டு போர்செய்யத் தொடங்கினார். அந்த யுத்தத்தில் எண்ணற்ற சேனைகள் இறந்தன. இந்திரஜித்து பெரும்பான்மையும் சேனைகளை யிழந்து தனிப்பட்டவனாய் விட்டான். அதனால் அவன், வியப்பும், கோபமும் அதிகரித்தவனாய்த் தேரைச் செலுத்திக்கொண்டு அனுமாருக் கெதிரேபோய் நின்று சில வீரமான வார்த்தைகளைப் பேசி வில்லை வளைத்திழுத்துக் குணத்தொனி பண்ணினான். அனுமாரும் அவனை நிந்தித்துப்பேசிக் கர்ச்சனை புரிந்தார். இந்திரஜித்து கோபங்கொண்டு அவர் சிரசிலும் மார்பிலும் சில பாணங்களை அழுத்தினான். அப்பொழுது ஆஞ்சனேயர் அவன் திடுக்கிடும்படி விசுவரூபங்கொண்டார். இந்திரஜித்து அவருடைய வடிவ முழுமையும் பார்க்க முடியாமல் திகைத்து நின்று அஸ்திரப் பிரயோகஞ்செய்தான். மாருதி அவற்றையெல்லாம் கையால் தட்டிவிட்டு அவனுடைய தேரிற்பூட்டிய பேய்ப் புரவிகளை

மாய்த்துச் சாரதிகளை நாசஞ்செய்து தேரையும் அழித்துவிட்டார். உடனே இந்திரஜித்துக்கு வேறொரு உதவித்தேர் வந்தது. அவன் அத்தேரிலேறிக்கொண்டு அனுமாருடைய தேக முழுவதிலும் பாணங்களை நிறைத்து விட்டான். அவர் அவற்றையெல்லாம் உதறித் தள்ளிவிட்டுத் தேரின்மேற் பாய்ந்து அவனுடைய வில்லை ஒடித்துவிட்டார். உடனே இந்திரஜித்து, பூர்வத்தில் இந்திரன் தனக்குப் பயந்து எறிந்துவிட்டுப் போகத் தான் கைப்பற்றி வைத்திருந்த பிரசண்ட தநுசை யெடுத்து வளைத்து நூறு பாணங்களைத் தொடுத்துப் பிரயோகித்து அனுமாருடைய தேகத்தில் பலகாயங்களை உண்டாக்கினன். அவர் சிறிதுநேரம் ஆயாச மடைந்து பின்னர்த் தெளிந்து உக்கிரங்கொண்டு பாய்ந்து தம் கையிலிருந்த மராமரத்தினால் அவனுடைய தலையில் ஓங்கி ஓர் அடி அடித்தார். அந்த அடியினால் அவன் கிரீடம் நொறுங்கித் தலைபிளந்து இரத்தம் பெருகியோட மெய் தளர்ந்து சிறிதுநேரம் மயங்கியிருந்து பின்பு தெளிந்து மிகுந்த கோபாவேசங்கொண்டு அனுமார்மீது கடூரமான ஆயிரம் பாணங்களை யேவினன். அவைகள் வந்து தேகத்திற் பாயவே மாருதி ஆத்திரங்கொண்டு அவனைத் தேருடனே யெடுத்து ஆகாயத்திலெறிந்து கர்ச்சித்தார். இந்திரஜித்து கண்ணிமைப்பதற்கு முன்னே தேருடனே ஆகாயத்திற் சென்று பூமியில் வந்து வீழ்ந்து, அந்த நிமிஷத்திலேயே தேரைவிட்டு வெளியிற்கிளம்பி ஆகாயத்தி லெழும்பினன். அத்தருணத்தில் அனுமார் அவனுடைய சேமத்தேர்களை யெல்லாம் உதைத்து நொறுக்கித் தள்ளிவிட்டார்.

அதனால் இந்திரஜித்து ஏறுகிறதற்குத் தேரு மில்லாமல் அனுமாருக் கெதிரில் நின்றுபோர் செய்தற்குப் பலமு மில்லாமல் சங்கடப்பட்டு, "இனி என் செய்வது ? நமக்

கவமானம் நேரிடும் போலிருக்கின்றதே ; நம்மிடத்தில் இப்போது பிரமபாசமொன்றுதா னிருக்கின்றது ; இதை யாவது இந்த ஆபத்துக் காலத்தில் பிரயோகித்துப் பார்ப் போம்" என்று அதனை யெடுத்துப் பூஜித்து அனுமாரு டைய தோளுக்கு இலக்குப் பார்த்து விட்டான். அப்பாச மானது சென்று அனுமாருடைய தோள்களை இறுக்கிக் கட்டிவிட்டது. அதனால் அனுமாருக்கு உபத்திரவ முண்டா யிற்று. அவர் சிறிது சோபமுற்றுத் தோரண ஸ்தம்பத் தில் சாய்ந்தார். சிறிது நேரத்திற்குள் அவருக்குப் பிரக்ஞை வந்து விட்டது. அவ்வாறு ஞாபகம் வந்தவுடனே அவர், 'இப்பாசத்தால் நமக்கு வருத்தம் நேரிட வேண்டிய காரண மென்ன?' என்று யோசித்தார். அப்போது அவருக்கது பிரமபாசமென்பது விளங்கிற்று. அதன் மேல் அவர், "இந் திரஜித்து இதனை, பிரமனுடைய வரப்பிரசாதத்தினால் பெற் றிருக்கின்றான்; இதற்கு நாம் மீறினால் பிரமதேவருக்கிழி வுண்டாகும்" என்று ஒன்றும் செய்யாமல் ஸ்ரீராமரைத் தியானித்துக்கொண்டு கண்களை மூடினபடியே அசைவற்று நின்றார். இந்திரஜித்து, 'குரங்கினுடைய சேஷ்டைகளெல் லால் ஒடுங்கிவிட்டன' என்று சந்தோஷித்து அனுமாருக்குச் சமீபத்தில் வந்தான். ஆங்காங்கே பயந்து பதுங்கிக் கிடந்த இராக்ஷதர்களெல்லோரும் பயம் நீங்கி ஓடிவந்து அனு மாரைக் கட்டியிருக்கும் சர்ப்பரூபமான பாசத்தின் வாலை யும் தலையையும் பற்றி யிழுத்தார்கள். அனுமார் கட்டுப் பட்டதை யுணர்ந்து இலங்கையிலுள்ளவர்களெல்லோரும் சந்தோஷித்து ஆரவாரித்தார்கள்.

அனுமார் பாசத்தினின்றும் விடுபடல்.

அதன்மேல் இந்திரஜித்துவின் கட்டளையால், ஐம்பதி னாயிரம் இராக்ஷத கிங்கரர்கள், பாசக்கட்டுடனே அனு

மாரை இழுத்துக்கொண்டு இலங்கைவீதியிற் சென்றார்கள். இந்திரஜித்துவும் உடன் சென்றான். அப்போது அந்நகரத்திலுள்ளவர்களெல்லோரும் அனுமாரைப் பார்த்து இகழ்ந்தும், புகழ்ந்தும், சந்தோஷித்தும், கோபித்தும் பற்பல விதங்களாகப் பேசினார்கள். அனுமார், "இந்தப் பாசத்தினின்றும் விடுபட்டுச்செல்ல நம்மால் இயலும்; எனினும் பிரமாவுக்கு இழிவுண்டாகா திருத்தற் பொருட்டு நாம் இந்தப் பாசத்திற்குக் கட்டுப்பட்டதாக உலகமறியச் செய்யவேண்டும்; மேலும் நாம் இப்படியே அடங்கிச் சென்றால் இந்திரஜித்து நம்மை இராவணனிடத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பான்; நாம் அங்கேசென்றால், இராவணனைப் பற்றிய அநேகம் விஷயங்களை உணர்ந்து கொள்ளலாம்; அவனோடு பேசலாம்; இராமருடைய பிரதாபத்தை அவனிடம் கூறலாம்; பற்பல நீதிகளையும் எடுத்துரைக்கலாம்; அவன் நம்முடைய வார்த்தைகளால் ஜானகியாரை இராமரிடம் சேர்ப்பித்து வணங்கி மன்னிப்புக் கேட்டுக் கொண்டாலும் கேட்டுக் கொள்வான்; இன்னும் அவனுடைய மனப்போக்கையும் நாம் தெரிந்து கொள்ளலாம்; அவன் நம்முடைய வார்த்தைகளை மதியால் நமக்குத் தீங்குசெய்ய நினைப்பானாயின் நாம் இந்தக் கட்டினின்றும் நீங்கி இன்னும் எஞ்சியிருக்கும் இராக்ஷதர்களையும் மடித்துவிட்டுப் போய்விடலாம்" என்று தீர்மானித்துக்கொண்டு அடக்கமாகச் சென்றார். அவரை இந்திரஜித்து இராவணனுடைய அரண்மனைக்குக் கொண்டு போனான்.

இராவணனிடத்தில் தூதுவர்கள் ஓடி "சுவாமி! தங்களுடைய ஜேஷ்ட புத்திரர் பிரமபாசத்தால் அந்தக் குரங்கைக் கட்டிக்கொண்டு வருகின்றார்" என்று சொன்னார்கள். இராவணன் அடங்கா மகிழ்ச்சிகொண்டு இரத்தின ஹார

மொன்றை அவர்களுக்கு நற்பரிசாக அளித்து, 'நீங்கள் இந்திரஜித்துவிடம் சென்று அந்தக் குரங்கைக் கொல்லாமல் நான் கொண்டுவரச் சொன்னதாகக் கூறுங்கள்' என்று சொல்ல, அவர்கள் அவ்வாறே சென்று இந்திரஜித்திடம் அதனைக் கூறினார்கள். அப்போது அனுமார் கட்டுண்டதைச் சீதா பிராட்டியார், கேள்விப்பட்டு, 'அந்தோ! நம்முடைய காரியங்களுக்கெல்லாம் இடையூறு நேர்ந்துவிட்டதே' என்று பலவாறு புலம்பிக்கொண் டிருந்தாள். இப்படி யிருக்கும்போது இந்திரஜித்து அனுமாரை, இராவணனுடைய சபா மண்டபத்திற் கொண்டுபோய்ச் சேர்த்தான்.

அங்கே ஆஞ்சநேயர் போய்ச் சேர்ந்தவுடன் சிம்மாசனத்திலிருந்த இராவணனைப் பார்த்துப் பத்துத்தலை நாகத்தைக் கண்ட கருடனைப்போல மனங்கொதித்து, "இந்தச் சண்டாளன் நேற்றிரவு நித்திரை செய்துகொண்டிருக்கும்போது நாம் இவனைப்பார்த்து 'இப்போதிவனைக் கொல்லலாகாது' என்று விட்டுப் போயினோம்; ஆயினும், இந்தச் சமயத்தில் பலாறிய இவனைக் கொல்லாமல் விட்டுப் போகக் கூடாது; நம்மைக் கட்டியிருக்கும் பாசத்தைப் பொடியாகப் போகும்படி அறுத்தெறிந்து விட்டு இவன்மேல் சிங்கத்தைப்போல நாம் பாய்ந்து இப்பாவியைக் கொல்வதே சரி" என்று யோசித்தார். அப்படி யோசித்தவர் பின்னும் "நாம் செய்யும் இந்த யோசனை சரியான தன்று; இவனோ மகா பலவந்தன்; இவனை நாம் தனியே கொல்வது முடியாது; இவனாலும் நம்மைக் கொல்லுதல் இயலாது; இப்போது நாம் போர் செய்யத் தொடங்கினால், ஜெயாபஜெய மின்றி வீணே பல நாட்கள் கழிந்துவிடும்; அதனால், 'ஒரு மாதம் வரையில்தான் உயிர் வைத்துக் கொண்டிருப்பேன்' என்ற சீதா தேவியாரும் ஆவியைப் போக்கிக்கொள்வார்; மேலும்

இராகவர் இவனைக் கொல்வதாகச் சபதஞ் செய்திருக்கிறார்; அச்சபதத்திற்கும் இடையூ றுண்டாகும்; இவன் இராம பாணத்தினாலேயே மாளவேண்டும்; ஆதலின் நாம் இவனிடத்தில் தூதனாகவே யிருந்துபேசி உபாயமாக இவ்விடத்தை விட்டு நீங்கவேண்டும்" என்று ஒன்றும் செய்யாமல் இராவணனுக்குச் சமீபத்தில் போய் நின்றார். அப்போது இந்திரஜித்து இராவணனுக்கு அநுமாரைச் சுட்டிக் காட்டி 'ஐயா! இந்தக் குரங்குருவமானவன், சங்காரகர்த்தாவைப் போன்ற வீரமுடைய மகா சேகவன்' என்றான். அப்போது இராவணன் கண்களிலும் வாய்களிலும் நெருப்புப் பொறிகள் பறக்கப் பற்களைக் கடித்துப் பெருமூச் செறிந்து அநுமாரைப் பார்த்துக் கூற்றுவனைப் போன்று கொதித்து அதட்டினான். அவ்வாறு அதட்டி,

"நேமியோ குலிசியோ நெடுங் கணிச்சியோ
தாமரைக் கிழவனோ தறுகட் பலீறலைப்
பூமிதாங் கொருவனோ பொருது முற்றுற
நாமமு முருவமுங் கரந்து நண்ணினாய்.

நின்றிசைத் துயிர்கவர் நீலக் காலனோ
குன்றிசைத் தயிலுற வெறிந்த கொற்றனோ
தென்றிசைக் கிழவனோ திசைநின் றாட்சியர்
என்றிசைக் கின்றவர் யாருள் யாவனீ.

அந்தணர் வேள்வியி னாக்கி யாணையின்
வந்துற விடுத்ததோர் வயவெம் பூதமோ
முந்தொரு மலருளோ னிலங்கை முற்றுறச்
சிந்தெனத் திருத்திய திகிரித் தெய்வமோ.

ஆரைநீ யென்னையிங் கெய்து காரணம்
ஆருனை விடுத்தவ ரறிய வாணையால்
சோர்விலை சொல்லுதி யென்னச் சொல்லினான்
வேரொடு மமரர்தம் புகழ் விழுங்கினான்."

இவ்வாறு இராவணன் கேட்கவே அனுமார் அவனை நோக்கி, "நான், நீ இப்போது கூறிய இந்திரன் முதலியவர்களுள் ஒருவனுமல்லன்; அவர்களுடைய ஏவலைப்பெற்று வந்தவனு மல்லன் : கோதண்டபாணியாகிய ஸ்ரீ இராகவருடைய தூதன் யான். அவர் யாரென்றால்,

"தேவரும் பிறரு மல்லர் திசைக்களி றல்லர் திக்கிற்
காவல ரல்ல ரீசன் கைலையங் கிரியு மல்லர்
மூவரு மல்லர் மற்றை முனிவரு மல்ல ரெல்லைப்
பூவல யத்தை யாண்ட புரவலன் புதன்வன் போலாம்.

மூலமு நடுவு மீறு மில்லதோர் மும்மைத் தாய
காலமுங் கணக்கு நீத்த காரணர் கைவில் லேந்திச்
சூலமுந் திகிரி சங்குங் கரகமுந் துறந்து தொல்லை
ஆலமு மலரும் வெள்ளிப் பொருப்பும்விட் டயோத்தி வந்தார்

அவர் அப்படி வந்ததற்கு நீ,

"காரணங் கேட்டி யாயிற் கடையிலா மறையின் கண்ணும்
ஆரணங் காட்ட மாட்டா வறிவினுக் கறிவு மன்னோர்
போரணங் கிடங்கர்கௌவப் பொதுநின்று முதலே யென்ற
வாரணங் காக்க வந்தா ரமரரைக் காக்க வந்தார்.

அறந்தலை நிறுத்தி வேத மருள்சுரந் தறைந்த நீதித்
திறந்தெரிந் துலகம் பூணச் செந்நெறி செலுத்தித் தீயோர்
இறந்துக நூறித் தக்கோ ரிடர்துடைத் தேக வீண்டு
பிறந்தனர் தம்பொற் பாத மேத்துவார் பிறப் பறுப்பார்."

ஆதலின், மிக்க அநீதியுடையவனாகிய நீ,

"ஈட்டிய வலியு மேனை யியற்றிய தவமும் யாணர்
கூட்டிய படையுந் தேவர் கொடுத்தநல் வரமுங் கோட்பும்
தீட்டிய பிற வுமெய்தித் திருத்திய வாழ்வு மெல்லாம்
நீட்டிய பகழி யொன்றால் முதலொடு நீக்க நின்றார்.

அன்னவர்க் கடிமை செய்வே னுமமு மநுமனென் பேன்
நன்னுதல் தன்னைத் தேடி நாற்பெருந் திசையும் போந்த
மன்னரிற் றென்பால் வந்த தானைக்கு மன்னன் வாலி
தன்மக னவன்றன் றூதன் வந்தனென் றனியே னென்றார்.''

இவ்வாறு அனுமார் கூறியதைக் கேட்ட இராவணன் நகைத்து அவரை நோக்கி, "வாலிபுத்திரன் அனுப்ப வந்த தூதனே! அந்த வாலி சுகமாயிருக்கின்றானோ?" என்று தான் முன்னே வாலியின் வாலில் கட்டுண்டு வருந்திய பயத்தை மனதில் வைத்துக்கொண்டு வினவினான். அக் குறிப்பை யுணர்ந்த அனுமார் சிரித்து, "இராக்ஷதனே! நீ பயப்படாதே; எங்கள் இராமபிரானுடைய ஒரே பாணத்தினால் அந்த வாலி இறந்துபோய் விட்டான்; அவனுடைய வாலும் போய்விட்டது; இப்போது எங்களுக்குச் சுக்கிரீவர் அரசரா யிருக்கின்றார்" என்றார். அதைக் கேட்டு இராவணன், "அந்த இராமன் வாலியை ஏன் கொன்றான்? அந்த இராமன் எங்கே யிருக்கின்றான்? அவன் மனைவியை அங்கதன் தேடவேண்டிய காரணமென்ன!" என்று வினவினான். அதற்கு மாருதி, இராமர் சீதையைத் தேடிக்கொண்டு வந்ததையும், சுக்கிரீவனுக்கும் அவருக்கும் உறவுண்டான விதத்தையும், சுக்கிரீவன் வேண்டியபடி இராமர் வாலியைக் கொன்றதையும், பின்னர் இராமருக் குதவி செய்யவேண்டிச் சுக்கிரீவன் அவரனுமதி பெற்றுச் சீதையைத் தேட வானர சேனைகளை அனுப்பியதையும், தென்றிசைக்கு வந்த சேனைகளுக்குத் தலைவனாகிய அங்கதன் அனுப்பத் தாம் இலங்கைக்கு வந்ததையும் கூறி மேலும், "நான் இப்போது இங்கே அங்கதன் அனுப்ப வந்த தூதனாயினும், அங்கதன் சுக்கிரீவருக் கடங்கியவனாதலானும், சுக்கிரீவர் இராமருக் கடங்கியவராதலானும், நாங்கள் பிரவேசித்திருப்பது இராம காரியமாதலானும் சுக்கிரீவருக்கும் தூதன்றான்; முன்

னுரைத்தபடியே இராகவருக்கும் தூதன்றான்" என்று சொன்னார்.

இராவணன், "உங்கள் தலைவனாகிய வாலியைக்கொன்ற அந்த இராமனுக்கு நீங்கள் அடிமைவேலை செய்வது இழிவன்றோ? நீ அந்தச் சுக்கிரீவன் கட்டளையைப் பெற்று எனக்கென்ன தெரிவிக்க வந்தாய்? தூதனாக வந்த நீ யுத்தஞ் செய்யவேண்டிய காரணமென்ன? நீ தூதனென்று சொன்னதால் உன்னை நான் கொல்ல மாட்டேன்; நீ பயப்படாமல் உண்மையைச்சொல்" என்றான். அப்போது ஆஞ்சனேயர் இராவணனுக்குச் சில நீதிகளை எடுத்துச் சொல்வதற்கு இதுதான் தருணம் என்று ஆலோசித்து, அவனை நோக்கி, "இலங்காதிப! நீ பற்பல தவங்களைச் செய்து மிக்க சிறப்படைந்திருந்தும் இப்போது தருமந்தவறி நடந்து அச் சிறப்பைப் போக்கிக் கொள்ள வழி தேடி யிருக்கின்றாய்; மகா பதிவிரதையாகிய ஜானகியாரை நீ விரும்பி எடுத்துக் கொண்டு வந்து துன்பப்படுத்துவதால் இராமருடைய பாணத்தால் குலத்தோடும் நாசமடைவாய்;

"திறந் திறம்பிய காமச் செருக்கினால்
மறந்து தத்த மதியின் மயங்கினார்
இறந் திறந்திழிந் தேறுவ தேயலால்
அறந் திறம்பின ராருள ராயினார்.

நாமத் தாழ்கடன் ஞாலத் தவிர்ந்தவர்
ஏமத் தான்மறைந் தாரிள மாதர்பால்
காமத் தாலிறந் தார்களி வண்டுறை
தாமத் தாரின ரெண்ணினுஞ் சால்வரோ.

பொருளுங் காமமு மென்றிவை போக்கிவே
றிருளுண் டாமென வெண்ணல ரீதலும்
அருளுங் காதலிற் றீர்தலு மல்லதோர்
தெருளுண் டாமென வெண்ணலர் சீரியோர்."

ஆதலின், பெண்ணாசையாகிய இத்தீய எண்ணத்தை நீ விட்டுவிடு; உன்னுடைய உயிரும் செல்வமும் நிலைக்க வேண்டுமானால் சீதா பிராட்டியாரைக் கொண்டுபோய் ஸ்ரீ இராகவரிடம் சேர்ப்பித்து நீ செய்த குற்றத்தை மன்னிக்கும்படி வணங்கிக் கேட்டுக்கொள்; இவற்றை யெல்லாம் உனக்குக் கூறும்படி சுக்கிரீவர் என்னிடம் உரைத்தார்" என்றார். இராவணன், "இனி நான் குரங்குகளின் புத்தியைக் கேட்டுத்தான் நடக்கவேண்டும்; சுக்கிரீவன் நீதியும், அந்த மானிடர்களின் வீரப்பிரதாபமும் ஒருபக்க மிருக்கட்டும்; இந்த இலங்கா நகரத்தில் தூதாக வந்த நீ இராக்ஷதர்களை யெல்லாம் மடித்த காரண மென்னடா?" என்று கோபித்து மாருதியிடம் வினவினான். அப்போது அனுமார், "இவன் மரியாதை தவறிப் பேசுவதால் இனி நாமும் மரியாதைத் தாழ்வாகவே பேசவேண்டும்" என்று தீர்மானித்துக்கொண்டு அவனைச் செருக்குடன் நோக்கி, "அடா இராக்ஷதா! உன்னை நான் நேரே பார்க்க முடியாமையால், பூங்காவனத்தை அழித்தால் அதன் மூலம் உன்னைப் பார்த்தல் நேருமென்று சோலையை அழித்தேன்; அப்போது சில இராக்ஷதர்கள் வந்து என்கருத்தை யுணராமல் என்னைக் கொல்லத்துணிந்தார்கள்; அதனால் நான் அவர்களைக் கொன்றேன்; பின்னர் இந்திரஜித்துவர உன்னைப் பார்க்கவேண்டு மென்னும் நோக்கத்தால் பிரமபாசத்திற் கட்டுண்டவன்போல நடித்து இங்கு வந்து சேர்ந்தேன்" என்றார். இந்த வார்த்தைகள் செவிகளிற் புகுமுன்னரே இராவணன் நெருப்பைப்போலக் கொதித்துக் கொலையாளிகளை நோக்கி, "இந்தத் துஷ்டக்குரங்கை நசுக்கிக் கொல்லுங்கள்" என்று சொன்னான். உடனே கொலையாளிகள் திரண்டு அனுமாரிடம் வந்தார்கள்.

அப்போது மகா நீதிமானாகிய விபீஷணர் எழுந்து அக்கொலையாளிகளை நிறுத்திவிட்டு இராவணனை நோக்கி, "மகா கீர்த்திமானாகிய இலங்காதிபரே! தூதாக வந்தவனைக் கொல்லலாகாது;

"பூதலப் பரப்பி னண்டப் பொகுட்டினுட் புறத்துப் பொய்தீர்
வேதமுற் றியங்கு வைப்பின் வேறுவே றிடத்து வேந்தர்
மாதரைக் கொலைசெய் தார்க ளுளரென வரினும் வந்த
தூதரைக் கொன்று ளார்கள் யாவரே தொல்லை நல்லோர்."

நாம் இவனைக் கொன்றால் பலரும் நம்மை ஏளனம் செய்வார்கள்; மேலும் இவனை உயிருடன் விட்டாலன்றோ இவன் போய் நம்முடைய எதிரிகளுக்கு இங்குள்ள நமது வீரப் பிரதாபங்களைக் கூறுவான்; கொன்று விட்டால் அவற்றை எவர் கூறுபவர்? இன்னுமொன்று: இவனைக் கொன்றால், நீ உன்னுடைய இயற்கைகளை எதிரிகட்குத் தெரிவிக்கப் பயந்து இவனுயிரைப் போக்கி விட்டதாக உலகத்தார் கருதுவார்கள்; இராம லக்குமணர்கள் சூர்ப்பநகியை எதன் பொருட்டுக்கொல்லாமல் நம்மிடம் அனுப்பினார்கள்? அவர்களுடைய வல்லமையை அறிவித்தற் பொருட்டல்லவா? ஆதலின், இவற்றை யெல்லாம் நீர் யோசித்து இவனைக் கொல்லாமல் அனுப்பி விடுவதே நலமாகும்" என்றார். இராவணனுக்கு அவர் கூறியது உத்தமமானதாகத் தோற்றிய படியால், அவன், 'தம்பி! நீ கூறுவது நியாயந்தான்' என்று கூறிவிட்டு அனுமானை நோக்கி "நீ விரைவிற் சென்று இங்கு நடந்தவற்றை அந்த மானிடரிடம் கூறி அவர்களை யுத்தத்திற்கு அழைத்துக் கொண்டுவா" என்று சொல்லிவிட்டு அங்கே நின்ற ஏவலாளரை நோக்கி, "நீங்கள் இந்தக் குரங்கினுடைய வாலில் நெய்ச் சீலைகளைச் சுற்றி அதில் நெருப்பைக்கொளுத்தி இதனை, இப்பட்டணத்தைச் சுற்றி இழுத்

துக்கொண்டு போய் இந்த எல்லையை விட்டுப் போகும்படி அப்பால் தூரத்தி விடுங்கள்" என்றுசொன்னான். அப்படியே செய்வதற்கு அநேகம் இராக்ஷதர்கள் இரைச்சலிட்டுக் கொண்டு வந்து கூடினார்கள். அத்தருணத்தில் இந்திரஜித்து பிரம பாசக்கட்டுடன் அனுமார் வாலில் நெருப்பிடுவது தோஷமென்று அப்பாசத்தின் கட்டை அவிழ்த்து விட்டான்.

அதன்மேல் அங்குவந்து கூடிய இராக்ஷதர்கள் இலங்காபுரியிலுள்ள கயிறுகளை யெல்லாம் தேடி யெடுத்துக் கொண்டுவந்து மலைபோலக் குவித்துக்கொண்டு அவற்றால் ஆஞ்சனேயரை இறுக்கிக்கட்டி யிழுத்துக்கொண்டுபோனார்கள். அப்போது அனுமார், "நாம் முன்னே பிரமபாசத்தை அறுக்கலாகாதென்று அஞ்சியிருந்தோம்; இப்போது இவர்களே அதை நீக்கிவிட்டு வேறு கயிறுகளால் நம்மைக் கட்டியது நமக்கு மிக்க அனுகூலமாகி விட்டது; ஒரு நிமிஷ நேரத்தில் நாம் இந்தக் கட்டைச் சிதைத்து விடலாம்; இன்னும் இவர்கள் நம்முடைய வாலில் நெருப்பைக் கொளுத்துவதானது, 'இந்த இலங்கையை நீ சுட்டெரித்துவிடு' என்று இவர்களே நம்மை ஏவியதாகின்றது; நம்முடைய வாலி விடும் நெருப்பைக் கொண்டு இந்த நகர முழுவதையும் சுட்டெரித்து விடலாம்" என்று நிச்சயம் பண்ணிக்கொண்டு, அவர்கள் தம்மை அற்பமான கயிறுகளால் கட்டி யிழுப்பதற்கும், உபத்திரவஞ் செய்வதற்கும் அஞ்சி யொடுங்கினவரைப் போல அவர்களுடனே அடக்கமாகச் சென்றார். அதன் மேல் இராக்ஷதர்கள் அவரை அரண்மனை வாயிலுக்கப்பாற் கொண்டுபோய் ஓரிடத்தில் நிறுத்தி, அநேகம் சீலைகளைக் கொண்டுவந்து அவருடைய வாலில் நெருக்கிச் சுற்றி அவற்றின்மேல் தைலங்களைக் குடங்குடமாக ஊற்றி வாலின் நுனியில் நெருப்பைக் கொளுத்தி விட்டு, அவ

ருடைய கைகளிலும், கால்களிலும், இடுப்பிலும் தொங்க விட்டுக் கட்டிய கயிறுகளைப் பக்கத்துக்கு நூறுயிரம் பேர் கள் விகிதம் இறுக்கிப்பிடித்து அவரை இழுத்துக் கொண்டு போனார்கள். அநேகம் இராக்ஷத வீரர்கள் ஆயுதபாணிக ளாய் அவருக்கு முன்னும் பின்னும் சென்றார்கள். அந் நகரத் தெருக்களிலுள்ளவர்கள் அனுமாரைப் பார்த்துப் பற்பல விதமாகப் பேசிக்கொண் டிருந்தார்கள். சிலர் ஜானகி யிடத்திலும் சென்று அனுமார் செய்தியைத் தெரி வித்தார்கள். சீதை மனங்கலங்கி அழுது அனுமாரைச் சுடாதிருக்கும்படி அக்கினிதேவனை ஸ்தோத்திரம் பண்ணி னாள். அதனால் அவன், மாருதியைச் சுடாமல் அவருக் குக் குளிர்ச்சியைக் கொடுத்துக்கொண் டிருந்தான். அத் தருணத்தில் இராக்ஷதர்களால் அனுமாரின் வால் நுனியில் இடப்பட்ட நெருப்பானது அவருடைய தேகத்தின் நாலா பக்கங்களிலும் பற்றி யெரிந்தது. அவ்வாறு எரிந்தும் அவ ருக்கு உஷ்ணம் சிறிதும் தோற்றவில்லை. அதனால் அவர், 'இது சீதாபிராட்டியாருடைய கற்பின் மகிமையே' என்று சந்தோஷித்துச் சென்றார்.

அவ்வாறு சென்றவர் அந்த இராக்ஷதர் கூட்டத் துடனே அந்நகரத்தின் பற்பல தெருக்களிலுள்ள அதிசயங் களையெல்லாம் பார்த்துக்கொண்டேபோய் முடிவில் அவர் களைவிட்டு நழுவுதற்கு எண்ணங்கொண்டு, தம்மைப் பிடித் திருந்த இராக்ஷதர்க ளெல்லோரும் கயிறுகளுடன் தொங் கும்படி ஆகாயத்திற் கிளம்பினார். அப்போது அவரைப் பற்றிக்கொண்டிருந்த இராக்ஷதர்க ளெல்லோரும் கீழே வீழ்ந்து சின்னபின்னமாய்ப் போனார்கள். அதன் மேல் அவர் இந்த இலங்கையைக் கொளுத்திவிடுவோ மென்று இராகவரைத் தியானித்துக்கொண்டு அந்நகரத்தின் மேல் தமது வாலை நீட்டினார்.

இலங்கா தகனம்.

அப்படி நீட்டியவர் அந்நகரத்தின் அழகியமாளிகைகள் தோறும் தாவித்தாவி நெருப்பைக் கொளுத்தினர். எங்கும் அக்கினிபற்றிச் சுவாலைவிட்டெரிய ஆகாயத்திலும் புகை மூடிக்கொண்டது. பொற்கட்டிடங்களெல்லாம் உருகிப்போய்விட்டன; இரத்தின மாளிகைகளெல்லாம் நீருய்ப் போயின; சோலைகளெல்லாம் கரிந்து நாசமாயின; ஆயுதங்களெல்லாம் உருகி நீராயோடிவிட்டன; யானை குதிரைகளெல்லாம் வீறிட்டுக் கதறி மாய்ந்தன; அநேகம் இராக்ஷதர்கள் தப்பியோட மார்க்கமின்றிப் பற்பலவிதமாக நெருப்பிலும் புகையிலும் அகப்பட்டு மடிந்தார்கள்; இராக்ஷத ஸ்திரீகள் பலரும் குழந்தைகளுடன் கூக்குரலிட்டு மடிந்தார்கள். அநேகம் பக்ஷிக் கூட்டங்களும் விலங்கினங்களும் ஆங்காங்கே அக்கினியிற் சிக்கி மடிந்தன; இலங்கை நகரெங்கும் நெருப்புமயமா யெரிந்துகொண் டிருந்தது. இன்னும் அங்கே நெருப்பினுலுண்டான விபரீதங்கள் அநேகம். இவ்வாறு இலங்காநகர முழுவதையும் எரித்த் தீயானது முடிவில் இராவணனுடைய அரண்மனையிலும் பற்றிக்கொண்டது. அத்தருணத்தில் அங்கிருந்த ஸ்திரீகளெல்லாரும் பயந்து நாலா திக்குகளிலும் சிதறி யோடினர்கள். இராவணன், தன்னைச்சார்ந்த சிலரோடு ஒரு விமானத்திலேறிக்கொண்டு ஆகாயத்தில் தப்பி யோடிவிட்டான். அவனுடைய மாளிகை உயர்ந்த சுவர்ணத்தால் கட்டப்பட்டதாதலின், சிறிது நேரத்திற்குள் உருகி ஒரு பிண்டரூபமாகிவிட்டது.

இவ்வாறு இலங்கை முழுவதும் எரிந்துபோனதைக் கண்டவுடனே இராவணன், ‘இன்ன காரணத்தால் இது நேர்ந்தது’ என்பதை யுணராதவனுய் வயிற்றெரிச்சல்

கொண்டு ஆகாயத்தி லிருந்தபடியே நெருப்பில் அகப்பட்டிறந்துபோகாமல் ஒரு பக்கத்தில் ஒதுங்கிநின்ற இராக்ஷதர்களை நோக்கி மிகுந்த கோபத்துடன், "இஃதென்ன ஊழிக்காலமோ! நம்முடைய இலங்கையை அக்கினி தகிக்க வேண்டிய காரணமென்ன?" என்று அதட்டிக்கேட்டான். அவர்கள், "ஐயா! நாங்கள் அந்தக் குரங்கின் வாலில் நெருப்பைக்கொளுத்தி அதனைவெளியிற் றுரத்தினோம்; அது வெளியிற்செல்லாமல் நம் நகரத்திலேயே பாய்ந்து அந் நெருப்பினாலேயே எல்லாவற்றையும் கொளுத்தி எரித்துவிட்டது" என்றார்கள். இராவணன் அக்கினியைப் போற் கொதித்து, "இஃதென்ன ஆச்சரியம்! அந்தக்குரங்கு சேஷ்டையால் நெருப்பிட்டாலும் அக்கினிதேவன் எப்படித் தைரியங் கொண்டு நம் நகரத்தை எரித்தான்! உடனே அந்த அக்கினியையும், துஷ்டத்தனமுள்ள குரங்கையும் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டு வாருங்கள்" என்று சொன்னான். இந்த வார்த்தையைக் கேட்டவுடனே 'அப்படியே செய்கிறோம்' என்று இராக்ஷத ஸப்த வீரர்களும், பின்னும் அநேகம் இராக்ஷதர்களும் ஆயுதபாணிகளாய்ப் போர்க் கோலத்துடன் அனுமாரைத் தேடிக்கொண்டு போய், ஒரு பக்கத்தில் ஆனந்தத்துடன் உட்கார்ந்திருந்த ஆஞ்சநேயரைப் பார்த்து 'பிடியுங்கள்! பிடியுங்கள்!! அடியுங்கள்! அடியுங்கள்!!' என்று அவர் சமீபத்தில் நெருங்கினார்கள். அப்போது அனுமார் அங்குச்சென்ற இராக்ஷதர்களை வாலினால் வளைத்துக் கால்களாலும் கைகளாலும் நெருக்கிக் கொன்றுவிட்டார். தவறி யோடிய சிலர் சமுத்திரத்தில் வீழ்ந்திறந்தார்கள். அவ்வாறு இராக்ஷதர்கள் சின்னபின்னமாய்ப் போனதைக் கண்ட ஸப்த வீரர்கள் மிக்க வீரத்துடன் நெருங்கி மாருதியுடன் யுத்தம் புரிந்தார்கள். ஆஞ்சநேயர், அவர்களை ஒரே அறையில் ஒழித்துவிட்டார். அத்தருணத்தில்,

'இலங்கை நகர் முழுவதும் எரிந்துவிட்டதோ' என்று வேடிக்கை பார்க்கச் சென்ற விஞ்சையர்கள், 'சீதாபிராட்டியாரிருக்கும் அசோகவனம் மாத்திரம் எரியவில்லை; இஃதவருடைய கற்பின் மகிமையே' என்று பேசிக்கொண்டு போனார்கள். இந்த வார்த்தையைக் கேட்ட ஆஞ்சனேயர் மிகவும் ஆனந்தங்கொண்டு, அப்பொழுதே சீதா தேவியின் எதிரில்போய் வணங்கி நின்றார். அதற்குமுன், அனுமாருக்கு அக்கினியால் அபாயம் நேருமோவென்று பயந்து துக்கித்திருந்த ஜானகி, அனுமாரைப் பார்த்தவுடன் அவர்செய்த காரியங்களை யெல்லாம் அவரிடம் விசாரித்துணர்ந்து மகிழ்ச்சியடைந்தாள். அதன்மேல் ஆஞ்சனேயர், 'பிராட்டியாரோடு பேசவேண்டிய விஷயங்களெல்லாம் முன்னரே பேசி முடிந்துவிட்டன; ஆதலின் இப்பொழுது நாம் இவரிடம் விடை பெற்றுக்கொண்டு செல்வதே தகுதி' என்று ஜானகியைநோக்கி, "தாயே! நான் போய்வருகின்றேன்" என்று வணங்கி அவ்விடத்தை விட்டுச் சென்றார். அவர் சென்றவுடனே அக்கினியும் இராக்ஷதர்களுடைய கண்களுக்கு அகப்படாமல் மறைந்தோடிப்போனான்.

அனுமார் இலங்கையை விட்டு மீளுதல்.

மேற்கூறியபடி சீதையிடம் விடைபெற்றுச் சென்ற அனுமார், விரைவில்போய் ஸ்ரீ இராமருக்குச் சமாச்சாரம் தெரிவிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் ஓர் உயர்ந்த பர்வதத்தின் சிகரத்திலேறி விஸ்வரூபமெடுத்து வளர்ந்து இராகவருடைய பாதங்களை மனதிற்றியானித்து ஆகாயத்திற் கிளம்பிப்பாய்ந்து, தம்முடைய வரவுக் கெதிர்பார்த்துக் கொண்டிருந்த மேனாதேவியின் பிள்ளையாகிய மைநாகபர்வதத்தின்மேல் சேர்ந்தார். மைநாகபர்வதம் அவருக்குவேண்டிய உபசாரங்களைச் செய்து இலங்கையில் நடந்த விஷயங்

களை அவரிடம் விசாரிக்க, அவர் அங்கு நிகழ்ந்தவைகளை யெல்லாம் அதனிடம் கூறிவிட்டு விடை பெற்றுக்கொண்டு அங்கிருந்து கிளம்பி ஒரு கணப்பொழுதில், அங்கதன், ஜாம்புவந்தர் முதலியவர்களிருக்கும் மகேந்திர பர்வதத்தின் மேல் குதித்தார். அனுமாருடைய முகக்குறிப்பைப் பார்த்த வுடன், அவர்களெல்லோரும், அவர்போன காரியம் அனு கூலமாகவே முடிந்திருக்கின்ற தென்றுணர்ந்து சந்தோஷத் தால் ஆரவாரித்தார்கள்; சிலர் அனுமாரைப் புகழ்ந்தார்கள்; சிலர் அவரைத் தழுவிக்கொண்டார்கள்; பல வானர வீரர்கள் ஆனந்தக் கூத்தாடினார்கள். சிலர் அவருக்கு இளைப்புத் தீரும்படி காய்கனி கிழங்குகளைக் கொண்டுவந்து கொடுத்து அவரை உபசரித்தார்கள். அனுமார்மீது ஆயுதங்கள் பட்ட புண்களைப்பார்த்து, 'இவர் இராக்ஷதர்களோடு போர்புரிந்து பிரயாசையின்மேல் குறித்த காரியத்தை முடித்துக்கொண்டு வந்திருக்கின்றார்' என்று பலர் அவருடைய கஷ்டத்திற் காகப் பெருமூச்சு விட்டுத் துக்கித்தார்கள். அப்போது அனுமார், அங்குள்ளவர்களை முறைப்படி வணங்கி உட் கார்ந்து அவர்களை நோக்கி "மகாவீரர்களே! உங்களுக்கெல் லாம் ஜானகியார் ஆசிர்வாதம் கூறினார்கள்" என்று சொன் னார். இந்த வார்த்தையைக் கேட்டதும் அங்கிருந்தவர்க ளெல்லோரும் எழுந்து சீதா பிராட்டியாரிருக்கும் திக்கை நோக்கி நமஸ்கரித்து, அளவற்ற ஆனந்தத்துடன் ஆஞ்ச னேயரை நோக்கி, "ஐயா! வாயுபுத்திரரே! நீர் இங்கிருந்து சென்றது முதல் திரும்பி வந்தவரை நடந்தவற்றை யெல் லாம் விவரமாகக் கூறவேண்டும்" என்று கேட்டுக்கொண் டார்கள். அனுமார், தாம் இராக்ஷதர்களை மடித்ததையும், இலங்கா நகரத்தை எரித்ததையும் கூறினால் அது தற்புகழ்ச் சியாக முடியுமென்று அவற்றை மாத்திரம் மறைத்து மற்ற விஷயங்களை யெல்லாம் கூறினார். அவர் அவ்வாறு தம்மு

டைய வீரப்பிரதாபமான செய்கைகளைச் சொல்லாவிடினும், அவருடைய தேகத்திலிருந்த காயங்களாலும், முன்னே இலங்கை யிருக்கும் திக்கில் புகை கிளம்பியதாலும் அவர்கள், அவற்றை யெல்லாம் தெரிந்துகொண்டு தற்புகழ்ச்சியை விரும்பாத அவருடைய பெருந் தன்மையைப் பலவாறு புகழ்ந்து அவரை நோக்கி, "ஐயா! இனிமேல் நாம் செய்ய வேண்டியதென்ன?" என்று வினவினார்கள். அவர், "இனி நாம்சிறிதும் தாமதிக்காமல் இராகவரிடம் சென்று, பிராட்டியாரைக் கண்ட சுபச் செய்தியைக் கூறி அவருடைய மனத் துயரத்தை ஆற்றவேண்டும்" என்றார்.

உடனே எல்லோரும் புறப்பட்டு நடுப்பகல் நேரத்தில் முன் வாலிக்குச் சொந்தமாயிருந்து இப்போது சுக்கிரீவனுக்கு உரியதாயிருக்கும் மதுவனத்திற் போய்ச் சேர்ந்தார்கள். அவ்வனத்தில் தேன் கூடுகள் மிகுதியாயிருந்தன. அவற்றைக் கண்டதும், முன்னே சீதாதேவியைக் காணாததால் சரியாக ஆகாரங்கொள்ளாதிருந்த வானர வீரர்களெல்லோரும் அப்போதுண்டான சந்தோஷத்தால் அங்குள்ள தேனை வயிறு நிறைய உண்ணவேண்டுமென்று விரும்பினார்கள். அவர்களுடைய விருப்பத்தை யுணர்ந்த அநுமார் அங்கதனிடத்திற் சென்று, "ஐயா! வானரசேனைகள் பசியால் இளைத்துப் போயிருக்கின்றன; ஆதலின், இந்த வனத்திலுள்ள மதுவை உண்ணும்படி அவற்றிற்கு அநுமதி கொடுக்கவேண்டும்" என்று சொன்னார். அவன், அப்படியே உண்ணுமாறு உத்தரவளித்தான். அநுமார் வானரர்கட்கு அதனைத் தெரிவித்தார். வானரர்களெல்லோரும் அப்பொழுதே அவ்வனத்திற் பிரவேசித்துத் தேன் கூடுகளைச் சிதைத்து அவற்றிலிருந்தொழுகிய மதுவைக்குடித்து, மதுவெறியால் மரங்களிற்றாவிக் கிளைகளை யொடித்து, புஷ்பங்

களைப் பறித்துக் காய்கனிகளை யுதிர்த்துக் களிப்புற்று விளையாடினர். அப்போது அவ்வனத்திற்குக் காவலாயிருந்த வானரர்கள் வந்து அவர்களைத் தடுத்தார்கள். அவர்கள் அக்காவல் வானரரை அதட்டிப்பேசி நன்றாகப் புடைத்தனுப்பி விட்டார்கள். உடனே அவர்கள் தங்களுக்குத் தலைவனாகிய ததிமுகனென்பவனிடத்திற் போய், "ஐயா! அங்கதனுடைய ஏவலினால் அநேகம் வானரர்கள் வந்து நம்முடைய மதுவனத்தை அழித்தார்கள்; நாங்கள் போய் அவர்களைத் தடுத்தும் கேளாமல் அவர்கள் எங்களை அடித்துத் துன்பப்படுத்தி விட்டார்கள்" என்று கூறினார்கள். ததிமுகன், சுக்கிரீவனுடைய ஏவல் பெற்றே அங்கதன் வந்திருக்கிறானென்பதையும், அவன்மீது சுக்கிரீவன் விசுவாசமுடையவனாயிருக்கின்றானென்பதையும் உணராமல், சுக்கிரீவனுக்கு விரோதமாய் அவன் மதுவனத்தை அழிக்கத் துணிந்தானென்று நினைத்து மிகுந்த கோபங்கொண்டு, "இந்த அங்கதனுடைய தந்தையாகிய வாலி சுக்கிரீவனுக் கிடர்செய்து அழிந்து போனதை இவன் நினைக்கவில்லை போலும்; வாலியைப்போலவே இவனும் அக்கிரமம் செய்யத் துணிந்துவிட்டான்; இவனுடைய வல்லமையை நான் அறிகிறேன்" என்று அநேகம் வானரசேனைகளுடன் மதுவனத்திற்குள் நுழைந்தான். அவனைக் கண்ட வுடனே அங்கதனுடைய சேனைகள் பயந்து அங்கதனிடத்திற் போய்ச் சேர்ந்தன. அப்போது ததிமுகன் அங்கதன் சமீபத்திற் சென்று, "அங்கதா! இந்திரனால் இம்மதுவனம் வாலிக்குக் கொடுக்கப்பட்டு அவ்வாலி இறந்தபின் சுக்கிரீவருக்கு வசமாகி என்னுடைய காவலுக்குட்பட்டிருக்கிறது; இங்கே தேவர்களுங் கூடப் பிரவேசிக்க மாட்டார்கள்; அப்படியிருக்கச் சுக்கிரீவருடைய வல்லமையையும் என்னுடைய காவலையும் மதியாமல் நீ வானரர்களை ஏவி இவ்வனத்தை அழிக்கச்

செய்தாய்; இன்றோடு உன் வாழ்வு ஒழிந்து போய்விட்டது" என்று உக்கிரத்துடனே ஒரு கருங்கற்பாறையைப் பெயர்த்தெடுத்து அங்கதன் மேல் விட்டெறிந்தான். உடனே அங்கதன் கடுஞ்சினமடைந்து அந்தக் கற்பாறையைப் புறங்கையால் தட்டிவிட்டுத் ததிமுகனைப் பிடித்துக் கையை முடக்கிக்கொண்டு அதனால் அவன் முகத்தில் இரத்த மொழுகும்படி பன்முறை வேகமாகக் குத்திப் பின்னும் அவன் பிரமிக்கும்படி அவனை அடித்து, 'நீ போய் இங்கு நடந்ததைச் சுக்கிரீவருக்குச் சொல்' என்று துரத்திவிட்டு அவனைச் சார்ந்த வானரர்களைப் புடைக்கும்படி தன் சேனைகளுக்குக் கட்டளை யிட்டான்.

அந்த உத்தரவு அவன் வாயிலிருந்து வெளிப்படுவதற்கு முந்தியே அவர்கள் பாய்ந்து ததிமுகனைச் சார்ந்தவர்களை நன்றாய்ப் புடைத்து விட்டார்கள். அவர்கள் களைத்து வீழ்ந்துபோனார்கள். அங்கதன், அவர்களை நோக்கி, "நீங்களும் போய்ச் சுக்கிரீவரிடத்தில் இங்கு நடந்ததைக் கூறுங்கள்" என்றான். அவர்கள் பயந்தோடினார்கள். பின்னர் அங்கதனுடைய சேனைகள் மீண்டும் மதுவனத்திற் பிரவேசித்துத் தங்கள் விருப்பந் தீருமட்டும் தேனைக் குடித்துக் காய்கனி கிழங்குகளை யுண்டு அவற்றைக் கொண்டுவந்து தங்கள் தலைவர்களுக்கும் கொடுத்து மகிழ்ந்தன. பின்னர் அங்கதன் முதலிய எல்லோரும் சூரிய வெப்பம் தணிந்தவுடன் அவ்விடத்தை விட்டுப் புறப்படலாமென்று அந்த மதுவனத்திற்கடுத்த உபவனத்தில் தங்கி யிருந்தார்கள்.

இவர்கள் இப்படியிருக்க, ரிசியமுக பர்வதத்தில் சுக்கிரீவனோடு தங்கியிருந்த இராமர், சீதாபிராட்டியாரை நினைந்து சோர்வுற்றிருந்தார். சுக்கிரீவன், அவரை இதமான வசனங்களால் தேற்றிக்கொண் டிருந்தான். அப்படி யிருக்

கும்போது தென்றிசை தவிர மற்ற மூன்று திசைகளிலும் சீதாபிராட்டியாரைத் தேடிச்சென்ற வானர வீரர்களெல்லோரும் திரும்பி வந்து, காணவில்லையென்று சொல்லிவிட்டார்கள். அதனால் இராமர் மிகவும் சோகித்துச் சுக்கிரீவனை நோக்கி, "அப்பா! சுக்கிரீவா! நாம் செய்த முயற்சிகளால் ஒன்றும் அனுகூல மாகவில்லை; குறித்த நாட்களும் கழிந்துவிட்டன; தென்றிசை தவிர மற்ற மூன்று திக்குகளிலும் சென்றவர்கள் திரும்பிவந்து பயனில்லை யென்று சொல்லி விட்டார்கள்; தென்றிசைக்குச் சென்றவர்கள் மாத்திரம் வரவில்லை; அவர்கள் இறந்து போனார்களோ, அல்லது இராக்ஷதர்களுடைய சிறையில் அகப்பட்டுக் கொண்டார்களோ; சீதையைக் காணாததால் இந்தத் துக்க சமாசாரத்தை எப்படிப்போய் இராமரிடம் சொல்லுகிறதென்று வாராமலிருக்கின்றார்களோ; ஒன்றும் தெரியவில்லையே" என்று விசனித்துக்கொண் டிருந்தார். அத்தருணத்தில் அங்கதனால் அடித்துத் துரத்தப்பட்ட ததிமுகன், தன் சேனைகளுடனே, தலையில் இரத்தமொழுக ஓடிவந்து சுக்கிரீவனுக்கு முன்னே நின்று அழுதுகொண்டு "ஐயா! இன்றோடு நம் மதுவனம் அழிந்து போயிற்று" என்று சொன்னான். சுக்கிரீவன், இரத்தம் ஒழுகுகின்ற ததிமுகனுடைய முகத்தைப் பார்த்து, "யாரால் மதுவனம் அழிக்கப்பட்டது?" என்று கேட்டான். ததிமுகன் அங்கதனும் அவனுடைய சேனைகளும் செய்தவற்றை யெல்லாம் கூறினான்.

அதைக் கேட்டவுடன் சுக்கிரீவன் மிக்க ஆனந்தத்தோடு இராமரை நோக்கி, "சுவாமி! நம்முடைய காரியம் ஜெயமாயிற்று; அங்கதன் முதலானவர்கள், பிராட்டியார் இருக்குமிடத்தைத் தெரிந்துகொண்டு சந்தோஷமாகத் திரும்பி வந்திருக்கின்றார்கள்; அந்த மகிழ்ச்சியினாலேயே

மதுவனத்தை யழித்துத் தேனைக்குடித்து விளையாடி யிருக்கின்றார்கள்; நீர் இனி விசனப்பட வேண்டியதில்லை" என்று சொன்னான். இராமர், 'சரி; அவர்கள் வந்து என்ன தெரிவிப்பார்களோ; வந்த பின்னரே அச்செய்தி தெரியும்" என்று சிந்தித்துக்கொண்டிருந்தார். சுக்கிரீவன், ததிமுகனை நோக்கி, "அங்கே அங்கதனோடு வந்திருப்பவர் எவரெவர்?" என்று வினவினான். ததிமுகன், 'அனுமார், மயிந்தன், ஜாம்புவந்தர் முதலாகப் பதினேழு வானர சிரேஷ்டர்கள் மிகுந்த சேனைகளுடன் வந்திருக்கிறார்கள்' என்று சொன்னான். சுக்கிரீவன், தன்னுடைய மதுவனம் அழிந்ததற்கும் விசனப்படாமல் அத்ததிமுகனை நோக்கி, "ததிமுகா! அங்கதன் கெட்ட சுபாவமுடையவனல்லன்; சீதாபிராட்டியாரைக் கண்டு வந்திருக்கின்ற சந்தோஷத்தினால் அவ்வாறு செய்திருக்கின்றான்; மேலும் அவன் இளவரசனாகவு மிருக்கின்றான்; ஆதலின் அவனுக்கும் நீ தாழ்ந்திருப்பதுதான் தகுதி; நீ அவனை மதியாமல் பேசியதற்காக அவனிடத்திலேயே சென்று மன்னிப்புக் கேட்டுக்கொள்"என்று சொன்னான். ததிமுகன் அவ்வாறே தன் சேனைகளுடன் திரும்பிப்போய் அங்கதனைக் கண்டு நமஸ்கரித்து, அவனிடம் "ஐயா! நான் செய்த குற்றத்தை நீர் மன்னித்தருளவேண்டும்" என்று அவனுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். அதன்மேல் அங்கதன் கோபந் தணிந்து ததிமுகனுக்கு அன்பான வார்த்தைகளைக் கூறிவிட்டு, அனுமாரை நோக்கி, "ஆஞ்சனேயரே! ஸ்ரீராமபிரான் மிக்க துக்கத்துட னிருப்பாராதலின் நீர் அவரிடம் முந்திச்சென்று பிராட்டியாரைக் கண்ட சந்தோஷ செய்தியைக்கூறி அவருடைய கலக்கத்தை நீக்க வேண்டும்" என்றுரைத்தான். அவர் அப்படியே புறப்பட்டு இராமரிடம் சென்றார். அவர் சென்ற பின்னர்,

சூரியவெப்பந் தணிந்தவுடனே அங்கதன் முதலானவர்கள் இராமரிடம் புறப்பட்டார்கள்.

இவர்கள் இப்படிப் போய்க்கொண் டிருக்கையில், இராமர் சுக்கிரீவனை நோக்கி, "இப்போது தென்றிசையி லிருந்துவரும் வானர வீரர்கள் ஜானகியை கண்டோமென்று சொல்வார்களோ இல்லையென்று சொல்வார்களோ?" என்று கேட்டார். அவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும் போதே ஆஞ்சனேயர், ஸ்ரீராமர், சுக்கிரீவன் முதலியவர் களுக்கெதிரில் தென்றிசையில் அவர்களுடைய கண்களுக் கெதிர்ப்பட்டார். அவரைக் கண்டதும் சுக்கிரீவன் மிக்க ஆனந்தத்துடனே இராமரை நோக்கி, "இதோ அனுமான் வந்தான்" என்று சொல்ல, இராமர், அனுமார் வரும் திக்கை நோக்கினர். அப்படிப் பார்க்கும்போதே ஆஞ்ச னேயர், சீதாபிராட்டியார் இருக்கும் தென்றிசையை நோக் கிச் சிரமேற் கரங்களைக் கூப்பிச் சேவித்துக்கொண்டே இராமருக்குச் சமீபத்தில் வந்து அவருடைய பாதங்களில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து பணிந்தார். அச்செய்கைகளையும், அவரின் முகக்குறிப்பையும் இராமர் பார்த்து, ஜானகி சுகமா யிருக்கிறாளென்று தெரிந்துகொண்டார். உடனே அவ ருடைய தோள்கள் பூரித்தன; கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் ஒழுகிற்று. அவர் மனத்திலுள்ள துக்கம் நீங் கிற்று. அப்போது மாருதியானவர் இராமபிரானை நோக்கி, "சுாமி! நான் கண்டேன்; கருணாநிதியைக் கண்டேன்; ஜானகி யன்னையை இலங்காபுரியில் எழுந்தருளி யிருக்கக் கண்டேன்; அவருடைய குணவிசேஷங்கள் அளவிடற் கரியனவாம்; இலங்கா நகரத்தில் அசோகவனமென்னும் இருண்ட சோலைக்குள், இளைய பெருமாள் கட்டிய பர்ணக சாலையிலே பிராட்டியார் எழுந்தருளி யிருக்கின்றார். இராவ

ணன் அவரைத் தீண்டாமல் அப்பர்ணகசாலையுடன் பெயர்த்தெடுத்துக் கொண்டு போயிருக்கின்றான். அதனாலேயே பிராட்டியார் அதில் தங்கியிருக்கிறாரென்பதும், அவர் கற்புக் கெடவில்லையென்பதும் விளங்குகின்றன; அவர் தங்களையே சிந்தித்துக் கொண்டிருக்கிறார்; இன்னும் ஒரு மாதத்திற்குள் தாங்கள் வந்து இராக்ஷதர்களை மடித்துப் பிராட்டியாரைச் சிறையினின்றும் மீட்காவிடில் அவர் பிராணத்தியாகம் செய்து கொள்வதாக உறுதிகொண் டிருக்கின்றார்; இனித் தாங்கள் தாமதிக்காமல் இலங்கை நோக்கிப் புறப்படவேண்டும்" என்று சொல்லியதோடு தமது பிரதாபந் தவிர அங்கு நடந்த மற்ற விவரங்களையும் கூறிச் சீதாபிராட்டியார் கொடுத்த சூடாமணியை எடுத்து இராமர் கையில் கொடுத்தார்.

அந்தச் சூடாமணியை வாங்கியவுடனே இராமர் மனத்திலிருந்த துக்க மனைத்தும் நீங்கிவிட்டது; இராமர் சீதாபிராட்டியாரைத் திருமணஞ்செய்த காலத்தில் அவர் கரத்தைப் பிடித்தபோது அவருக்கு எவ்வளவு சந்தோஷமுண்டாயிற்றோ அவ்வளவு மகிழ்ச்சி யுண்டாயிற்று. தேகத்தில் உள்ள உரோமங்கள் சிலிர்த்தன; ஆனந்தக் கண்ணீர்பெருகிற்று; அவருடைய மார்புந்தோளுந் துடித்தன; இதழுந் துடித்தது. அத்தருணத்தில் அங்கதன் முதலானவர்களும் வந்து ஸ்ரீராமபிரானையும் சுக்கிரீவனையும் கண்டு வணங்கினார்கள். அப்போது சுக்கிரீவன் எழுந்து இராமரை நோக்கி வணங்கி, "சுவாமி! இனியேன் நாம் தாமதிக்க வேண்டும்? இலங்கை நோக்கிப் புறப்படலாம்" என்றான். உடனே இராமர், "அப்படியே புறப்படலாம்; இலங்கையை நோக்கிப் பிரயாணமாகும்படி நம்முடைய சேனைகளுக்குக் கட்டளையிடுவாயாக" என்று சுக்கிரீவனிடம் கூறினார். அவன் அங்ஙனமே சேனைத் தலைவர்களுக்குக் கட்டளை யிட்டான். பிர

யாண பேரிகை அடிக்கப்பட்டது. வானர சேனைகளெல்லாம் தென்றிசை நோக்கிப் புறப்பட்டன. இராமர், "இந்தச் சேனைகள் நாட்டின் வழியாகச் சென்றால் இவற்றைப் பார்த்து உலகத்தார் பயப்படுவார்கள்; மேலும் இவைகளுக்கு ஆகாராதிகளுக்கும் கஷ்டமாயிருக்கும்; ஆதலின் இவைகளைக் காடுகளின் மார்க்கமாகவே செல்லும்படி செய்" என்று சுக்கிரீவனுக்குக் கட்டளையிட அவன் அவ்வாறே போகுமாறு சேனைகளுக்குக் கட்டளையிட்டான். அப்படியே சேனைகள் காடுகளின் வழியாய்ச் சென்றன. ஸ்ரீராமரும், இலக்குமணனும், சுக்கிரீவன் முதலானவர்கள் சூழ்ந்து வரவும், அனுமார் இலங்கையின் விருத்தாந்தத்தைச் சொல்லிக்கொண்டு போகவும் சென்று பவளமலையில் ஒருபகல் தங்கிப் பின்னர் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுப் பன்னிரண்டு நாள் வழி நடந்து தென் சமுத்திரத்தைக் கண்டனர்.

உயுத்த காண்டம்.

இராவணனுடைய மந்திரா லோசனை.

மேற்கூறியபடி தென் சமுத்திரத்தைக் கண்டவுடனே வானர சேனைகள் விரைவில் இலங்கைக்குச் சென்று இராக்ஷதர்களை மடித்து இராமருக்கு வெற்றியை உண்டாக்க வேண்டுமென்னும் விருப்பத்துடனே விரைந்து சென்றார்கள். பிறகு எல்லோரும் தெற்குக் கடலருகே போய்த் தங்கினார்கள். அவ்வாறு போய்ச் சேர்ந்தவுடனே இராமர், மேல் நடக்கவேண்டிய காரியங்களைப்பற்றி யோசித்துக்கொண் டிருந்தார்.

இப்படி யிருக்குங்காலத்தில், இராவணன், ஆஞ்சநேயரால் எரிக்கப்பட்ட இலங்காபுரியை நல்ல விதத்தில் ஸ்தாபிக்

கும்படி பிரமதேவரிடம் சொல்ல, அவர், உடனே மயனை அழைப்பித்து அவனிடத்தில் அக்காரியத்தைச் செய்யும்படி ஆக்ஞாபித்தார். அவன், முன்னிருந்ததைக் காட்டினும் பதின் மடங்கதிகமான அழகோடு விளங்கும்படி இலங்கை நகரை நிர்மாணம் செய்தான். இராவணன் அதைக்கண்டு சந்தோஷித்துப் பிரமதேவரைக் கொண்டாடி, மயனுக்கும் நற்பரிசளித்தான். அதன்மேல் அவன் மிகவும் அலங்காரமாக அமைக்கப்பட்ட மகா மண்டபத்தில் உள்ள சிம்மாதனத்தில் வீற்றிருந்து, மேல் நடக்கவேண்டிய காரியங்களைப்பற்றி ஆலோசிக்கக் கருதித் தனக்குரியவர்களாகிய மந்திரி சிரேஷ்டர் முதலியவர்களை வரவழைத்து அருகில் வைத்துக்கொண்டு அவர்களை நோக்கி, "எனக்குறுதிச் சுற்றமான மந்திரி முதலியவர்களே! ஓர் அற்பக் குரங்கினால் என்று மழியாத இலங்கா நகரம் அழிந்து போயிற்று; நம்மைச் சார்ந்த அநேகரும் மாண்டு போயினார்கள்; இந்நகரமெங்கும் துக்கமே பாவி யிருக்கின்றது; நாம் அந்தக் குரங்கையும் கொல்லாமல் விட்டு விட்டோம்; இனி நமக்கு என்ன பெருமை யிருக்கின்றது" என்று விசனத்தோடு கூறினான். அப்போது, பிரகஸ்தன், மகோதரன், வஜ்ரதந்தன், துன்முகன், மகா பாரிசன் முதலிய மந்திரிகள், ஆஞ்சநேயர், இராமலக்குமணர்கள் முதலியவர்களை இகழ்ந்தும், இராவணனைப் பலவாறு புகழ்ந்தும் பேசியதோடு, சத்துருக்களைக் கொல்வதே சரியென்றும், அதற்குத் தங்களை அனுப்பினால் எளிதில் அக்காரியத்தை முடிப்பதாகவும் கூறினார்கள். அவர்களுடைய வார்த்தைகளை யெல்லாம் கேட்ட கும்பகர்ணன், அவர்களை நோக்கி, "நீங்கள் காரியாகாரியம் தெரியாமல் பேசுகின்றீர்கள்; ஆதலின் உங்கள் பேச்சை நிறுத்துங்கள்" என்று அவர்களை விலக்கிவிட்டுத் தன் தமையனாகிய இராவணனை நோக்கி, "அண்ணா! நீர் சிரேஷ்டமான பிரமகுலத்தில்

உதித்தும், சகல சாஸ்திரங்களையும் ஓதி யுணர்ந்தும் இப்போது பாப கிருத்தியத்தைச் செய்யத் துணிந்தீர்; பட்டணம் அழியும் மார்க்கத்தை நீரே தேடிக்கொண்டீர்; பின்னர் நகரம் அழிந்து உமக்கிழிவுண்டாய் விட்டதென்று கவலையுமடைகின்றீர்; அன்னியருடைய மனைவியை இச்சித்ததாலன்றோ இக்கேடு விளைந்தது; இன்னும் நீர் வெட்கத்தை விடுத்து உம்முடைய மனைவிமார்க ளெல்லோரும் சிரிக்கும்படி அடிக்கடி சீதை காலில் வீழ்ந்து வணங்குகின்றீர்; இதைக் காட்டிலும் வேறு கேவலமுண்டோ? உம்முடைய பிரதாபம் நன்றாயிருக்கின்றது; இனி இந்த இழிவை நீக்கிக் கொள்ளலா மென்றாலோ அஃது எவ்விதத்தாலும் முடியாததாயிருக்கின்றது; சீதையை விட்டு விடலாமென்றாலும் நாம் மானிடர்க் கிளைத்துவிட்டோம் என்னும் கெட்ட பேர் நமக்குண்டாகி விடும்; ஆதலின் நாம் இனி அவர்களுடன் யுத்தஞ்செய்தே தீரவேண்டும்; சிறிது தாமதிப்போமானால் நம் பழைய விரோதிகளாகிய தேவர்களும் அவர்களுடன் கூடிக்கொள்வார்கள்; அப்படி அவர்களுக்குப் படைத்துணை சேர்வதற்கு முந்தியே நாம் விரைந்து கடலைத் தாண்டிப் போய் அந்த மானிடர்களையும், வானரர்களையும் கொன்று விடவேண்டும்" என்று கூறினான்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே இராவணன் கும்பகர்ணனைப் பார்த்து, "தம்பி! நீ முடிவிற் கூறியபடி அவர்களை விரைவிற் கொன்று விடுவதுதான் நலம்; நானும் அதைத் தான் நினைத்தேன்; நாம் இப்பொழுதே சத்துருக்களைக் கொல்வதற்குப் புறப்படுவோம்; நம்முடைய சேனைகளையெல்லாம் யுத்தத்திற்குப் புறப்படும்படி செய்" என்று அவனிடம் ஆக்ஞாபித்தான். அப்பொழுது இராவணனுடைய சிரேஷ்ட புத்திரனாகிய இந்திரஜித்து எழுந்து இராவணனை நோக்கி, "தந்தையே! அந்த மனிதர்களைக்

கொல்வதற்கு நீர் போக வேண்டுமோ? என்னை அனுப்பும்; நான் சென்று அந்த வானரர்களைக் கொன்று, இராம லக்குமணர்களுடைய சிரங்களைக் கொய்துகொண்டு வருகிறேன்” என்று சொன்னான்.

அப்போது மகா புத்திமானாகிய விபீஷணன் எழுந்து இந்திரஜித்தை நோக்கி, “அப்பா! நீ சிறுபிள்ளைத் தனமாக நீதி தவறிப் பேசுகின்றாய்; உனக்குப் பின் வருவது தெரியாது; நீ பேசாமலிரு” என்று அதட்டி அவனை அடக்கிவிட்டு இராவணனைப் பார்த்து, “அண்ணா! நான் சொல்வதைக் கேளும்; நீர் சகல போகபாக்கியங்களையும் இழந்துவிடப் போகிறீரென்று பரிவுகொண்டே நான் சில வார்த்தைகள் சொல்லத் துணிகின்றேன்; நீர் என்சொல் முழுவதையும் கேட்டபின்பு வேண்டுமானால் என்மீது கோபித்துக் கொள்ளும்; உம்முடைய நகரமும், பிரதாபமும் ஜானகியென்கிற லோக மாதாவினுடைய கற்பினால் வெந்ததல்லாமல் ஒரு குரங்கினால் எரியவில்லை; உலகத்தில் எவர்களுக்கும் ஆபத்தும் சம்பத்தும் பெண்ணினாலும் பொன்னினாலும் மண்ணினாலுமே வரத் தக்கவைகள்; இவற்றை அநீதியாகக் கைப்பற்றினால் ஆபத்து நேரும்; நீர் இப்பொழுது சீதாதேவியாரை அநீதியாகக் கைப்பற்றியிருப்பதால் உமக்கு ஆபத்தே நேரும்; மேலும் நீர் இராமலக்குமணர்களை வெல்லல்முடியாது. ஏனென்றால் நீர் ஆதியில் பிரமாவை நோக்கித் தவஞ்செய்து தேவர், தானவர் முதலானவர்களை ஜெயிக்கும்படி வரம்பெற்றபோது மானிடர்களை வெல்ல வரம் பெறவில்லை; நீர் மனிதரை வெல்லமாட்டீரென்பதற்குக் கார்த்தவீரியார்ச்சுனனிடத்தில் தோல்வியடைந்ததே தக்கசான்றாகும்; இஃதன்றி வானரர்களையும் நீர் ஜெயிக்கமாட்டீர்; ஏனென்றால் நீர் கைலையைப் பெயர்த்தபோது நந்திதேவர், ‘நீ வானரர்களால் பல மழி

யக் கடவாய்' என்று உமக்குச் சாபங்கொடுத் திருக்கின்றார்; இதை வாலியினிடத்தில் நீர் தோற்றுப் போனதால்பிரத்தி யக்ஷமாகக் கண்டிருக்கிறீர். மேலும் பூர்வத்தில் வேதவல்லி யென்னும் முனிபுத்திரி, மகாவிஷ்ணுவே தன் நாயகனாக வேண்டுமென்று தவம்பண்ணிக் கொண்டிருக்கும் போது அவளை நீர் கற்பழிக்கத் தொடங்கினீர்; அவள் 'உனக்கு நானே எமனாவேன்' என்று சொல்லிவிட்டு அக்கினிப்பிர வேசமானாள்; அவள்தான் இந்தச் சீதையாகவந்து இராம ரிடத் திருந்து இங்கு வந்திருக்கிறாள்; ஆகாயத்தில் இரதத் தினை நடத்திச் சம்பராசுரனைக் கொன்ற தசரதன், தேவேந் திரன் விருஷபமாய்த் தன்னைச்சுமக்க அதன் மேலேறிச் சென்று அசுரர்களைச் சங்கரித்த காகுஸ்த மகாராஜனும், தன்னிடத்திலிட்ட வித்துக்களையெல்லாம் முளைக்க வொட் டாமல் தனக்குள்ளே யிழுத்து மதப்பட்டிருந்த பூமிதேவி யின்மேல் பாணப்பிரயோகம்பண்ணி அதன் மதத்தை யடக்கி, அது பசுவுருக் கொண்டு வந்து தானியம் முதலிய சகல பதார்த்தங்களையும் கொடுக்கும்படி அதன் மடியி லிருந்து கறந்தெடுத்த பிருது மகாராஜனும், சமுத்திரத் தைத் தோண்டிய சகரர்களும், ஆகாய கங்கையைப் பூமியிற் கொண்டுவந்த பகீரதனும் அவதரித்த மனுவமிசத் தில் உற்பவித்தவன். அந்தத் தசரதனுடைய புத்திரர்களே உமக்கிப்போது சத்துருக்களா யிருப்பவர்கள்; அவர்கள் மகாவீர புருஷர்கள்; பிரமதேவருக்கெதிராக உலக சிருஷ்டி செய்யத் தொடங்கிய விசுவாமித்திரரால் கொடுக்கப்பட்ட அஸ்திர சஸ்திரங்களைப் பெற்றிருக்கின்றார்கள்; முன் அசு ரர்களுடன் எதிர்த்துத் தேவர்கள் இளைத்த சமயத்தில் அவர்களுக்கு ஜெயத்தை உண்டாக்கும் பொருட்டு எடுத்து வளைத்து யுத்தஞ்செய்து ஜெயத்தை உண்டாக்கிய விஷ்ணு வினுடைய வில்லையும், முப்புரங்கள் நீறாகும்படிகைலைநாதன்

பிரயோகித்த திவ்வியாஸ்திரத்தையும், அகஸ்தியர் கொடுக்கப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்; அந்த ஆயுதங்களெல்லாம் மிக்க வலிமை பொருந்தியவைகள்; அந்த இராமலக்குமணர்கள் இராக்ஷத குலத்தை யெல்லாம் கருவறுக்க அவதரித்திருக்கின்றார்கள்; அவர்கள் நம்மை ஒழித்து விடுவார்களென்ற தைரியத்தினால், நமக்குப் பயந்திருந்த தேவர்களும் முனிவர்களும் அவர்களைத் துணைக்கொண்டு செழித்திருக்கின்றார்கள்; நமக்குத் துர்ச்சகுனங்கள் எங்கும் காணத் தலைப்படுகின்றன; இன்னுமொன்று நீர்கவனிக்கவேண்டும்: நம்முடைய விரோதிகளாகிய தேவர்களே அந்த மானிடர்களாகவும், வானரர்களாகவும் அவதரித்து வந்திருக்கின்றார்கள்; ஆதலால், நம்முடைய வாழ்வு நிலைக்கும்படி நீர் சீதையை விட்டு விடுவது நலம்” என்று கூறினான்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட இராவணன், கையோடு கையறைந்து கண்களில் நெருப்பெழ விபீஷணனை நோக்கி, “பேதையே! என்ன நீ பைத்தியம் பிடித்துஉளறுகின்றாய்; மானிடர்களை வெல்ல நான் வரம் பெறவில்லை யென்று சொன்னாய்; அஷ்ட திக்குகளையும், அஷ்ட கஜங்களையும் ஜெயித்துக் கைலையைப் பெயர்த்தபோது நான் எந்த வரத்தைப் பெற்றிருந்தேன்; என்னுடைய பலத்தினாலன்றோ அவற்றைச் செய்தேன்; நந்திகொடுத்த சாபத்தால் குரங்குகள் நம்மை வெல்லுமென்று நீ நினைக்கின்றாய்; நாம் இதுவரை தேவர்கள் முதலிய பலரிடத்தும் எத்தனையோ சாபங்களைப் பெற்றிருக்கின்றோம்; அந்தச் சாபங்கள் நம்மை என்ன செய்துவிட்டன; தேவர்களே அந்த மானிடர்களாக வந்திருக்கிறார்க ளென்கிறாய்; தேவர்கள்தாம் நமக்கஞ்சி யோடினவர்களன்றோ? அப்படியிருக்க அவர்களால் என்ன செய்ய முடியும்; வாலிக்கு நான் தோற்றே

னென்று நீ சொன்னாய்; அவன், எதிரியின் பலத்தில் தனக்குப் பாதி வரவேண்டுமென்று சிவனிடத்தில் வரம் பெற்றிருந்தான்; அதை நான் அறியாமல் அவனுக்கெதிரே நின்றதனாலன்றோ தோற்றேன்; இந்த உண்மையை அறிந்ததனால் இராமன்மறைந்துநின்று அவனைக்கொன்றான். மிதிலையில் ஊனமாகிய வில்லை யொடித்துக் கிஷ்கிந்தையில் ஓட்டையான மாமரங்களின்மேல் பாணஞ்செலுத்தி, அயோத்தியில் கூனியின் உபாயத்தால் அரசிழந்து, காட்டில்வந்து, நான் செய்தமாயையால் தன் மனைவியைப் பறிகொடுத்து மானங்கெட்டு இன்னும் உயிரைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற அந்த மனிதனா என்னை ஜெயிப்பவன்! நீயன்றி வேறு யாரும் அவனைப் புகழ்ந்து பேசமாட்டார்கள்; உனக்குப் புத்தியில்லை; நீ இவ்விடத்தை விட்டு எழுந்துபோ" என்று துடிதுடித்துக் கூறினான்.

இவ்வாறு கூறியும் விபீஷணன் சகோதர வாஞ்சையினால் அவனை வெறுக்காமல் மேலும் அவனை நோக்கி, "அண்ணா! தனக்கு மேற்பட்ட பொருள் வேறொன்றுமின்றி ஒப்பற்றிருக்கின்ற •பராபரவஸ்துவாகிய ஸ்ரீமந் நாராயணரே நம்மைத் தொலைப்பதற்கு இராமனாக வந்து அவதரித்திருக்கின்றார்; அவரை நீர் அவமதித்துப் பேச வேண்டாம்" என்று அவனுடைய பாதங்களைப்பிடித்துக் கொண்டு வணங்கிச் சொன்னான். அதைக்கேட்டுத் தசக்கிரீவன் நகைத்து "ஆ! ஆ!! அந்த மனிதனை விஷ்ணுவென்றா நீ புகழ்ந்து பேசுகின்றாய்! அந்த விஷ்ணு எத்தனையோ முறை எனக்குத் தோற்றோடியவன் ; அவனோ என்னை ஜெயிக்கப் போகின்றான்! நீ மிகவும் யுத்தத்திற்குப் பயந்தவன்; யுத்தம் நேரிட்டால் நீ எனக்கு உபபலமாயிருந்து போர் செய்யவேண்டியதில்லை ; இந்த இலங்கைக் கோட்டைக் குள்ளே தானே யிருந்துவிடு" என்று கூறி

விட்டுப் பக்கத்தி லிருந்தவர்களை நோக்கி, 'இவனுடைய அறியாமையைப் பார்த்தீர்களா!' என்று ஆர்ப்பரித்தான்.

விபீஷணன், இராவணனுக்கு இரணியன் கதை கூறல்.

அதன்மேலும் விபீஷணன், 'ஐயோ! தமையன் கெட்டுப் போவானே' என்ற பக்ஷாதாபத்தால், அவன் வெறுத்துப் பேசியதற்கெல்லாம் மனஸ்தாபங் கொள்ளாமல் அன்புடன் அவன் முகத்தை நோக்கி, "அண்ணா! அந்த விஷ்ணுவைச் சாமானியரென்று நீர் நினைக்கவேண்டாம்; உம்மைப் போலவே அனேகம் நிகரற்ற வீரர்கள் அவரை அவமதித்து அவரால் அழிவடைந்திருக்கிறார்கள்; அவர்களுள் இரணியனும் ஒருவனாவான். அவனுடைய சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேளும்:—அந்த இரணியன், வேதத்திற் சொல்லியிருக்கின்ற தவங்களை யெல்லாம் செய்து தான், நினைத்த வரங்களை யெல்லாம் பிரமதேவனிடம் பெற்று, மகாபலவந்தனாய், மானிடராலும், தேவராலும், விலங்குகளாலும், பறவைகளாலும், உலகத்திலுள்ள மற்றப் பிராணிகளாலும் அழிவுறாத தன்மையுடையவனாய், சகலலோகத்தார்களும் தன்னையே தெய்வமென்று நினைத்துக் கொண்டாடும்படி முற்காலத்தில் வாழ்ந்திருந்தான். தேவர்களுங் கூட அவனையே பூஜித்துவந்தார்கள். பிரமா, தேவகுருவாகிய பிரகஸ்பதி முதலியவர்களும் அவனுடைய கீர்த்திப் பிரதாபங்களையே படித்துக்கொண் டிருந்தார்கள். வேதங்களும், அவற்றிற்கு அதிதேவதைகளும், 'இரணியநமா' வென்றே அவனுடைய பெயரை உச்சரித்துக்கொண் டிருந்தன. சகலரும் ஜபதபங்கள் முதலியவைகளை அவனை நோக்கியே செய்துகொண்டு வந்தார்கள். இன்னும் அந்த இரணியன், மேற் கூறியபடி தேவர் முதலியவர்களால் அழிவுறாததோடு, மண்ணிலும்

மடியான் ; வானிலும் அழியான் ; நீரிலும் சாகான் ; நெருப்பிலும் வேகான் ; காற்றிலும் இறவான் ; எப்பேர்ப் பட்டவர் இடுஞ்சாபத்தாலும் அவனுக்கழிவில்லை ; அகத்திலும் சாவில்லை; புறத்திலும் சாவில்லை; இரவிலும் இறப்பில்லை; பகலிலும் அழிவில்லை; எவ்வித ஆயுதங்களாலும் ஒழிவில்லை; யமன் வந்து அவனைப் பிடித்துக்கொண்டு போனாலும் அவன் சாகமாட்டான்; பஞ்ச மகா பூதங்களும் ஒருருக்கொண்டு அவனைக் கொல்ல வந்தாலும் அவன் மாளான்; மந்திரங்களாலும் மடியான்; ஔஷதங்களாலும் அழியான்; பெற்ற பிதாவே அவனைக் கொல்ல நினைத்தாலும் அவனாலும் அஃதியலாது.

இத்தகைய பிரதாபத்துடன் அவன் வாழ்ந்து வருங் காலத்தில் அவனுக்கு ஓர் அருமைத் திருப்புதல்வன் உதித்தான். அவன் மிக்க அறிவுடையவன்; மகா பரிசுத்தன் ; அளவிறந்த தவத்தை யுடையவன். அவனுக்கு இரணியாசுரன், 'பிரகலாதன்' என்னும் பெயர் சூட்டினான். அவன், அப்பெயருடன் வளர்ந்து ஐந்து வயதடைந்தபோது, இரணியாசுரன், அசுரகுருவாகிய சுக்கிராசாரியரின் புத்திரனை சண்டமார்க்க னென்பவனை அழைத்துப் பிரகலாதனுக்குச் சாஸ்திராப்பியாசம் செய்விக்கும் படி அவனிடம் கட்டளையிட்டான். அந்த ஆசிரியன் அவ்வாறே பிரகலாதனைக் கல்விக்கழகத்திற் கழைத்துக் கொண்டுபோய் வேதத்தை ஓதுவிக்கத் தொடங்கி, அப் புத்திரன் முகத்தை நோக்கி, 'ஐயா ! பிரகலாதா ! 'இரணியநமா' என்று உன் பிதாவினுடைய நாமத்தை முன்னே உச்சரி' என்று சொன்னான். பிரகலாதன் இளமையிலேயே உண்மையான தெய்வ சொரூபத்தை யுணர்ந்தவனாதலின், தன் குரு, தெய்வநாமத்தைப் பிரதமத்தில் கூறச் சொல்லாமல், தன் தந்தையின் பெயரை உச்சரிக்கச் சொன்னதற்கு

அருவருத்து இரண்டு செவிகளையும் மூடிக்கொண்டு ஆசிரியரை நோக்கி, 'பேரறிவுள்ள உபாத்தியாயரே ! நீர், தேவநாமத்தை விடுத்து என் தந்தையின் பெயரைக் கூறச் சொல்வது நன்மையன்று; நான் தேவநாமத்தையே கூறுவேன்' என்று, வேதத்தின் முடிவில் தத்துவார்த்தமாய் விளங்கும் பிரஹ்ம சாக்ஷாத் காரத்தின் நாமமாகிய, 'ஹரி ஓம் நமோ நாராயணாய' என்பதை, நாவினாற் சொல்லி, மனதுருகி, இரண்டு கைகளையும் சிரசின்மேற் கூப்பி அஞ்சலிபண்ணி ஸ்தம்பித்துப் பகவத்தியானத்தி லிருந்தான். அதைக் கண்டவுடன் அந்த ஆசிரியன், மனந்திடுக்கிட்டு நடுநடுங்கிப் பிரகலாதனை நோக்கி, 'அடா பாவி! அந்தோ! என்னையுங் கெடுத்து, உன் வாயிலும் மண்ணைப் போட்டுக் கொள்ளத் துணிந்து விட்டாயே! உன் தந்தைக்கு முற்றும் விரோதமானதும், பிரமாதி தேவர்களும் சொல்வதற் கஞ்சுவதும், அயோக்கியமானதுமா யிருக்கின்ற ஏதோ ஒன்றை நீ சொல்கின்றாயே; இவ்வாறு கூறுதற்குக் காரணமென் ?' என்று வினவினான். அதற்குப் பிரகலாதன், 'ஐயா ஆசிரியரே! வேதாத்தியயனம் பண்ணுகிறவர்கள், ஆதியிலும் அந்தத்திலும் அந்த வேதத்தின் முதற் பொருளாகிய ஸ்ரீஹரியைத் துதிசெய்வது வழக்கம் ; அதன் படியே நானும் அந் நாமத்தை உச்சரித்தேன்; இதிலென்ன தவறு ?' என்றான். இதைக் கேட்டதும் சண்ட மார்க்கன், 'உன் தந்தை இப்போது எல்லாத் தேவர்களுக்குந் தலைவரா யிருக்கின்றார் ; அவருடைய பெயரைத்தான் முதலிற் சொல்லவேண்டும்; எல்லாச் சாஸ்திரங்களையு முணர்ந்த நானே அதனைச் சொல்லும்போது நீ தடை செய்வதற்கு என்ன நியாயமிருக்கின்றது? என்னைக் காட்டிலும் நீ விஷயங்கள் தெரிந்தவனா? இனிக் கர்ணகடூரமான அந்த அரியின் பெயரைச் சொல்லி என் குடியைக் கெடுத்து விடாதே' என்று சொன்னான்.

இவற்றைக்கேட்டதும் பிரகலாதன், 'நான் அந்த ஆதி நாராயணனுடைய திருநாமத்தை யன்றி வேறொன்றையு மறியேன்; அவர் எனக்குள்ளே புகுந்து என்னிருதயத்தைத் தமக்கு உறை விடமாகக்கொண் டிருக்கிறார்; அவரை அடைவதைவிட நான் பெறுவதற்குரிய பயன் வேறொன்று மில்லை; ஆரணியவாசஞ் செய்தும், மலைக் குகைகளில் தங்கியும், கிருஷ்ணாசனத்தமர்ந்தும், சிகைமுண்டிதம் செய்தும், சடை வளர்த்தும், அக்கினிமத்தியிலிருந்தும், தவம் பண்ணியும், அஷ்டாங்க யோகங்களைச் செய்தும், ஞானநிஷ்டை சாதித்தும் மோக்ஷத்தை யடைந்த முக்தாத்மாக்கள் பெற்ற இன்பத்தைக் காட்டினும், ஸ்ரீமந் நாராயணருடைய பாதாரவிந்தத்தை யடைவது மேலான பாக்கியமாகும்; ஐயா! உபாத்தியாயரே! உமக்கும் அதைவிடச் சிறந்த பாக்கியம் வேறொன்றுமில்லை; நீரும் அந்த ஹரிநாமத்தைச் சொல்லி இந்த அனுஷ்டானத்தையே கைக்கொண்டு உம்முடைய ஆத்மா உஜ்ஜீவிக்கின்ற விதத்தைத் தேடிக்கொள்ளும்' என்று சொன்னான்.

இந்தவார்த்தைகளைக் கேட்டவுடனே, சண்டமார்க்கன், வேறொன்றும் சொல்ல வகையறியாதவனாய், மதிமயங்கி, 'இனி என்ன செய்கிறது? என் பிராணனுக்கே முடிவு வந்திருக்கின்றது; இவனோ நம் சொல்லைக் கேட்க மாட்டான்; நாம் இரணியனிடத்திற் போய் இதைச் சொன்னால் அவன் என்ன சொல்வானோ; 'நான் உன்னிடம் இவனுக்கு வேதங் கற்பிக்கச் சொன்னதற்கு நீ எதையெதையோ சொல்லி இவன் புத்தியைக் கெடுத்துவிட்டாயே' என்று குற்றத்தை நம் தலைமீதே சுமத்தி நம்மைக் கோபிப்பானோ; அந்தக் கோபத்தினால் கொலைசெய்து விடுவானோ; எதையும் நான் அறிகிலேன். இது வரையில் நான் சுகமாக ஜீவித்திருந்தேனே; இப்பொழுதிந்தப் பிள்ளை தோன்றி என் வாழ்

வைக் கெடுக்க வகைதேடி யிருக்கின்றனே; நான் இரணிய னுடைய கோபத்திற்கு எப்படித் தப்புவேன்' என்று எண் ணாது மெண்ணி மனம் புண்ணாகி, பயந்து நடுநடுங்கிக் கொண்டேபோய் இரணியனைக் கண்டு அவனுக்கு முன்னே சாஷ்டாங்கமாக வீழ்ந்து சேவித்து எழுந்து நின்று வாய் பொத்திக் கொண்டு, பிரகலாதன் விஷயத்தைத் தான் நேரில் உணர்ந்ததாகச் சொன்னாலும் தனக்குத் தீங்கு வருமென்றஞ்சி, அதைக் கனவில் கண்டதாகப் பாவனை செய்து, அவனை நோக்கி, 'சுவாமி! அடியேனொரு விபரீத மான கனவுகண்டேன்; அதைச் சமுகத்தில் தெரிவிக்க வந் தேன்' என்று சொன்னான். (பிரகலாதனிடம் நேரில் கேட் டதை நான் கவனத்துடன் கேட்காமல் அருகருத்துச் சொப்பனத்தில் கேட்டது போலக் கேட்டேனென்பதைக் குறிப்பிடுவதற்கே அவன் இவ்வாறு கனவு கண்டதாகச் சொன்னான்). அதைக் கேட்டதும் இரணியன், அவனை நோக்கி, 'அஃதென்ன கனவு? அதை நீர் சொல்லும்' என் றான். அதற்குச் சண்டமார்க்கன், 'ஐயா! உம்முடைய தவப் புதல்வன், இம்மை மறுமை இரண்டிலும் வாயினாற் சொல் லத் தகாததும், மனத்தினால் நினைக்கக் கூடாததுமாகிய வார்த்தையை, எவரும் சொல்லிக் கொடுக்காமலே தானே சொல்லிக்கொண் டிருக்கின்றான்; அதனை அடியேன் நாவி னாற் சொன்னால் என் நாவும் அழுகிப்போய் விடும்; நானும் நரகத்திற் போய் வீழ்வேன்' என்றான். இரணியன் அதி சயித்து, 'என் குமாரனை இப்பொழுதே நீங்கள் அழைத் துக்கொண்டு வாருங்கள்' என்று அங்கு நின்ற தூதர்களுக் குக் கட்டளை யிட்டான். அவர்கள் உடனே சென்று அவனை அழைத்து வந்தார்கள். பிரகலாதன் வந்ததும் பிதாவை வணங்கினான்.

அப்போது இரணியன், பிரகலாதனை மார்போடு சேர்த்துத் தழுவிக்கொண்டு, அவன் முகத்தை அன்புடன் நோக்கி, 'அப்பா! பிரகலாதா! உன் உபாத்தியாயர் வெறுக்கும்படி நீ என்ன கூறினை? அதை என்னிடம் சொல்' என்முன். அதற்குப் பிரகலாதன் 'ஐயா! வேத மோதும்போது பிரதமத்தில் எதைச் சொல்ல வேண்டுமோ அதைத்தான் நான் கூறினேன்; வேறே தவருன வார்த்தை யொன்றும் சொல்லவில்லை' என்முன். இரணியன், 'நீ எதைச் சொன்ஞயோ அதைச் சீக்கிரம் கூறு' என்முன். பிரகலாதன் 'தந்தையே! தன்னை ஜபிப்பவர்களுக்கு இவ்வுலகத்தில் மனேபிஷ்டங்களை யெல்லாம் கொடுப்பதும், அவற்றை அனுபவித்த பின்னர் மோக்ஷத்தை அளிப்பதும், தன்னை ஜபித்து ஓமங்களையும் யாகங்களையும் செய்தவர்களை அவற்றிற்குரிய பதவிகளிற் சேர்ப்பதும், ஏகவஸ்துவாயிருக்கின்ற ஆதி பரம்பொருளின் திவ்விய திருநாமமே; அது பிரணவத்தோடு கூடிய 'ஹரி ஓம் நமோ நாராயணுய' என்னும் திருமந்திரமே யாகும்; பூமண்டல முதல் பிரமலோக பரியந்தம் தங்கி யிருக்கின்ற எண்ணிலடங்காத பூதபௌதிக சராசரங்கள் எல்லாவற்றினுள்ளும் கலந்து நிறைந்து அந்தக்கரணங்களிலும் பொருந்தி, அங்கிருந்து உதயமாகின்ற உணர்வினல் அறியப்படுவது இந்த அஷ்டாக்ஷர மந்திரமேயன்றி வேறில்லை. முக்கட் செல்வன், பிரமன் முதல் மனிதர்கள் ஈருக உள்ளவர்களில் இத் திருமந்திரத்தை மறந்தவர்கள் இறந்தவர்களே; உம்முடைய ஆத்மாவுக்கும், இவ்வுலகிலுள்ள மற்ற ஆத்மாக்களுக்கும் இது உறுதிபயக்கத்தக்கதென்பதை நான் உணர்வேன் ; ஆதலின், நான் வேத மோதும்போது தொடக்கத்தில் உயிர்க்குயிராகிய இம் மந்திரத்தைக் கூறினேன்' என்று சொன்ஞன்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே இரணியாசுரனுக்குத் தாங்க முடியாத கோப முண்டாய்விட்டது; அதனால் அவன், தன் கையில் மின்னலைப் போல் பிரகாசித்துக் கொண்டிருந்த வேலாயுதத்தைச் சுழற்றிக் கண்களில் நெருப்பெழப் பிரகலாதனைப் பார்த்து, 'அடா துஷ்டா! நான் பிறந்தநாள் முதல் இதுவரை இந்தப் பெயரை எவரும் நாவினால் சொன்னதுமில்லை, மனத்தால் நினைத்ததுமில்லை; அப்படி எவரேனும் தவறிச் சொன்னாலும் நினைத்தாலும் என்னுடைய சக்கராஞ்ஞையானது அவருடைய நாவையறுத்து நெஞ்சைப் பிளந்து அவரைத் தகித்துவிடும்; அப்படியிருக்க, அத்தகைய எனக்குப் பிள்ளையாய்ப் பிறந்த நீ இந்த அருவருப்பான நாமத்தைக் கூறுகின்றாய்; உனக்கென்ன தைரியம்! நீ இதனை எவரிடத்திற் கற்றுக் கொண்டாய்? திரிலோகங்களிலுமுள்ள சகலரும் என்னுடைய பாதத்தையே தியானஞ்செய்து என் பெயரையே சொல்லித் துதிக்கின்றார்கள். ஆதலால், அவர்கள் உனக்கு இதனைச் சொல்லி யிருக்கமாட்டார்கள்; பின்னை எவ்வாறு நீ இதனை உணர்ந்துகொண்டாய்? அடே! நீ சொல்லிய அந்த நாமத்தையுடைய விஷ்ணு, அநேகம் முறை என்னுடன் எதிர்த்துத் தோற்றோடிக் கடலிலே வீழ்ந்து இன்னமும் எழுந்திராமல் உறங்கிக் கிடக்கின்றான்; அப்பேர்ப்பட்டவனை உயர்ந்தவனென்று நீ எதனால் உணர்ந்தாய்? அப்படி நீ கருதும் படி உனக்கு அவனைச் சொன்னவர் யாவர்? அவரை நீ காட்டு; இப்பொழுதே நான் அக்கொடியர் உயிரைப் போக்கிவிடுகின்றேன்; மேலும் அந்த விஷ்ணு, நம் குலத்திற்கெல்லாம் ஜன்மவிரோதி; அவன் இதுவரை, நம் குலத்தவர்களில் எத்தனையோ பேர்களைக் கொன்றிருக்கின்றான்; அப்பேர்ப்பட்ட சத்துருவின் பெயரை நீ சொல்வது, எலி தனக்குப் பகையாகிய பாம்பின் பெயரைச் சொல்வது போன்றிருக்கின்றது;

இவ்வாறு சொல்வதால் உனக்கேற்படும் பயன்யாது? உனக்கிந்தத் துர்ப்புத்தி வந்ததற்குக்காரணமென்ன? பதினன்கு உலகங்களையும் தன் வயிற்றில் அடக்கிவைத்துக் கொள்ளத் தக்க சாமர்த்தியமுடையவனும், என் தமையனுமாகிய இரணியாக்ஷனென்பவனை, அந்த விஷ்ணு ஒரு பன்றிவடிவெடுத்துக் கொம்பினுல் குத்திக்கொன்ருன்; அந்தக் கொடிய பகைவனுடைய பெயரைச் சொல்லுதற்கோ உன்னை நான் பெற்றேன்; நீ எனக்குப் பிள்ளையாயிருந்தும் என் பெயரைச் சொல்லுவதற்குக் கூசுகின்ருய்; தகப்பனுடைய பெயர்சொல்லாத பிள்ளை தாரணியில் ஜனித்தென்ன பயன்? இன்னும் எல்லாவுலகங்களுக்கும் நானே கர்த்தாவாயிருக்கின்றேன்; சிருஷ்டி, திதி, சம்மாரம் என்னும் முத்தொழில்களும் என்னலேயே நடைபெறுகின்றன; இப்படிப் பிரத்தியக்ஷமாக என்னிடம் சகல வல்லமைகளும் உண்டாயிருப்பதை நீ பார்த்தும், கண்ணுற் காணுத ஒருவனைச் சகல வஸ்துக்களுக்கும் மூலகாரணமாகக் கருதியது என்ன மதியீனம்! நீ எனக்குப் புத்திரனும், அறியாச் சிறுவனுயுமிருப்பதை முன்னிட்டு நீ செய்த குற்றத்தை நான் பொறுத்துக்கொண்டேன்; இனி இப்படி எனக்குப் பொருந்தாத வார்த்தைகளை நீ பேசாதே; உபாத்தியாயர் எதைச்சொல்லிக்கொடுக்கின்ருரோ அதையே சொல்; இனி நீ சென்று கிரமமாக வேதத்தை ஓது' என்று சொன்னன்.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டேயிருந்த பிரகலாதன், மீண்டும் இரணியனை நோக்கி, 'தந்தையே! நீர் சொன்னவைகளெல்லாம் விவேகத்தோடு கூடியவைகளல்ல; நான் இன்னும் சில வார்த்தைகள் கூறுகிறேன்; அவற்றை நீர் கோபியாமல் கேட்டருளும்; ஆதிமூலத்தை யன்றி

இங்கே வேறொன்றும் தோற்றுவதற்கு ஹேது வில்லை; வித்தில்லாத விளைவு உலகத்திலுண்டோ? உம்முடைய அஞ்ஞானத்தால் இவ்வுண்மை உமக்கு விளங்கவில்லை; உம்முடைய மயக்கத்தை யொழித்து விவேகத்தைக்கொண்டு நீர் ஆராய்ந்து பார்ப்பீராகில் உமக்கிந்த உண்மை நன்கு விளங்கும்; உலகங்களை யெல்லாம் தனக் குள்ளிருந்து தோற்றுவித்தும், தானும் அவற்றினுள்ளே கலந்திருந்தும், தனக்கு முன்னுமின்றிப் பின்னுமின்றி ஒப்புயர்வற்ற ஏகவஸ்துவாய் எப்பொழுதும் அழியாதிருக்கின்ற நாராயணருடைய மகிமை எவராலும் அளவிடற்கரியதாம். சுவர்க்க மத்திய பாதலமென்னும் மூன்றுலகங்களாகியும், முக்குணங்களாகியும், யாவரும் பரவையுமாகியும், இவற்றோடு கலந்தும்,வேறுபட்டும் இருக்கின்ற அந்தப் பரம்பொருளின் கிருத்தியங்களைப் பிரமாதி தேவர்களும், முனிவர்களுங்கூட உணரமாட்டார்கள். அந்தப்பரமாத்மா, கர்மமும், அந்தக்கர்மத்தின் பயனும், அப்பயனைத் தருகின்ற கர்த்தாவுமாயிருக்கின்றார்; சகலருடைய நினைவிலும், செய்கையிலும், சொல்லிலும் வாழ்ந்திருக்கின்றார்; இந்திரியங்கள்தோறும் கலந்திருக்கின்றார். முன்னே ஏகாக்ஷரமாகிய பிரணவமும், அதற்கடுத்து துவி யாக்ஷரமாகிய நம சப்தமும், அப்பால் பஞ்சாக்ஷரமாகிய நாராயணாய வென்பதும் கூடிய எட்டெழுத்தும், மூன்றுபதமும், இரண்டு சந்தியுமாய்த் தழைத்திருக்கின்றார். காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்களினாலுண்டாம் தீமைகளை யெல்லாம் தீர்க்கின்ற அந்தப் பரிபூரண எம்பெருமானுடைய திருநாமத்தையும், அதன் மகிமையையும் அறிந்து துதிக்காதவர்கள், அவருடைய இருப்பை யுணரமாட்டார்கள். இப்பேர்ப்பட்ட மகிமை வாய்ந்த பரமாத்துமாவை நீர் இகழ்ந்து பேசுகின்றீர்; இதனால், உம்முடைய செல்வமும் தீர்க்காயுளும் ஒழிந்துபோம்; அப்படி நீர் கெட்

டுப் போகாம லிருப்பதற்காக, நானுவது அவருடைய திரு நாம மந்திரத்தை உச்சரித்து, உமக்கு மன்னிப்பைத் தேடிக் கொள்ளலாமென்று கருதி நான் அந்த ஜெகதீஸ்வரனுக்குத் தண்டன் சமர்ப்பித்து வேதாத்தியயனத்தின் ஆரம்பத்தில் மங்களா சாஸனமாக அவ்வஷ்டாக்ஷரத்தைச் சொன்னேன்; இதை நீர் தடுப்பது அழகல்ல' என்று தைரியமாகச் சாற்றினுன்.

இவ்வாறு பிரகலாதன் கூறவே, இரணியாசுரனுக்கு முன்னிலும் பன்மடங்கதிகமான கோபம் மூண்டு விட்டது. ஆலகால விஷத்தைப் போலுண்டாகிய அக்கோபத்தினுல், உலகங்களெல்லாம் நடுங்கின; சூரியனும் சந்திரனும், ஆகாயமும் சுழன்றன; பூகம்பமுண்டாயிற்று; அவனுடைய கண்களில் உதிரம் ஒழுகிற்று; புகை கிளம்பிற்று; யுகாந்த கலாக்கினியைப் போல உக்கிரமாகிய அக்கினிச் சுவாலை எழுந்து ஜொலித்தது. இவ்வித பயங்கரமாகிய கோபத்தை யடைந்த அவ்விரணியன், இடியைப் போல் முழங்கி, ஆ! ஆ!! என்று கர்ச்சித்துக் கையால் பூமியிலறைந்து, சிம்மம்போல் துள்ளியெழுந்து உடலைக் குலுக்கி, மலைக்குகை போல வாயைத் திறந்து, பிரகலாதனை மென்று உமிழ்ந்து விடுபவனைப் போல உறுக்கிப்பார்த்து, 'என்னிடம் பிறந்த இவனே எனக்குப் பகையாய் விட்டான்; எனக்குப் பிள்ளையாகத் தோன்றியும் என் ஜன்மவிரோதியைக் கொண்டாடி அவனுக்குத் தான் அடிமை யென்றும் கூறுகின்றுன்; இந்தச் சண்டாளனை, குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பை, துராத்மாவை, எனக்கு விஷம்போன்ற இவனை இனி இமைப்பொழுதும் இவ்வுலகத்தில் வைக்கலாகாது; இப்பொழுதே இவனைக் கொண்டுபோய்க் கொலை செய்து விடுங்கள்' என்று அருகில் நின்ற அசுரர்களிடம் ஆக்ஞாபித்தான்.

அந்த ஆக்ஞை பிறக்கவே, காலனைப் போன்றவர்களாகிய அவ்வசுரர்கள், ஒரு யானைக்குட்டியைப் பல சிங்கக்கூட்டங்கள் இழுத்துக்கொண்டு போவது போலப் பிரகலாதனைப்பற்றி யிழுத்துக்கொண்டு போய் அரண்மனை வாயிலுக்கு வெளியில் நிறுத்தி, மழு, வாள், சூலம், வேல், குந்தம், கதை முதலிய அநேகமாயிரம் ஆயுதங்களை மாறிமாறி அவன் மீது பிரயோகித்து, 'இவனை இப்பொழுதே கொன்று விடுகிறோம்' என்று ஆர்ப்பரித்துக் கோபக் கண்களோடு அதட்டி, வலிகொண்டமட்டும் அடித்தும், குத்தியும், வெட்டியும், எற்றியும், மோதியும், முட்டியும் பலவித கொடுஞ் செய்கைகளைச் செய்தார்கள். அப்போது பிரகலாதன், அத்துன்பங்களுக்குச் சிறுதும் அஞ்சாமல் ஸ்ரீமந் நாராயணருடைய திருவடிகளை நெஞ்சிலிருத்தி அஷ்டாக்ஷரத்தைத் தியானம் பண்ணிக்கொண்டிருந்தான். அதனால், அவன்மேல் பிரயோகிக்கப்பட்ட ஆயுதங்களெல்லாம் அவனுக்குச் சிறிதேனும் உபத்திரவம் செய்யாமல் முறிந்து பொடிகளாய்ப் போயின. அவ்வாறானதைக் கண்ட அசுரர்கள் அதிசயித்து இரணியனிடம் சென்று அந்த அற்புதத்தைக் கூறினார்கள். அதைக்கேட்டு இரணியன், ஆச்சரியமும் கோபமும் அடைந்து, 'அவன் ஏதேனும் மந்திரபலத்தால் அந்த ஆயுதங்கள் தன் உடம்பிற் பாயாமற் செய்துகொண்டிருப்பான்; இனி நீங்கள் அக்கினியை வளர்த்து அதிலே அவனைத் தூக்கிப் போடுங்கள்' என்று அவர்களுக்குக் கட்டளையிட்டான். உடனே அவர்கள் சென்று, மிக்க அகலமும், நீளமும், ஆழமுமுள்ள ஒரு குழிவெட்டி, அதிலே பெரிய பெரிய புளியங் கட்டைகளைப் போட்டு ஆயிரங்குடம் எண்ணெயும் நெய்யும் சொரிந்து தணல் மூட்டி யெரித்து அக்கினிச்சுவாலை ஆகாய மட்டும் எழுந்த பிறகு, பிரகலாதனுடைய கைகளையும் கால்களையும்கட்டி அவனை அதிலே தூக்கிப்போட்டார்கள். அவன்,

ஹரிநாமத்தை ஜபித்துக்கொண்டு அந்நெருப்பிலே வீழ்ந்தான். நாராயணமூர்த்தியினுடைய கிருபையினாலே பிரகலாதனுக்கு அந்நெருப்பானது குளிர்ந்து சந்தனக் குழம்புபோலாய் விட்டது. அதனால் அவன், யாதொரு துன்பமுமடையாமல் ஹரி பஜனை செய்துகொண்டிருந்தான். அதைக் கண்ட அசுரர்கள் மிக்க வியப்படைந்து, இரணியனிடம் விரைந்தோடி, நெருப்பும் பிரகலாதனை ஒன்றுஞ் செய்யாதிருந்த தன்மையைக் கூறினார்கள். இரணியன், கண்களில் நெருப்பெழக் கோபித்து, 'அந்த அக்கினியும் அவனிடத்தில் சாந்தம் காட்டினானா? அந்த அக்கினிதேவனைப் பிடித்துச் சிறைப் படுத்திவிட்டுப் பிரகலாதனென்னும் பெரும்பாவியை அஷ்டமாநாகங்களிடம் விடுத்து அவற்றால் கடிப்பித்துக் கொல்லச் செய்யுங்கள்' என்று அவ்வசுரர்களிடம் கூறினான். உடனே அவ்வசுரர்கள் இரணியனுடைய கட்டளையை அஷ்டமா நாகங்களிடம் தெரிவித்தார்கள்; உடனே அனந்தன், வாசுகி, சங்கன், குளிகன், பதுமன், மகாபதுமன், தக்ஷன், கார்க்கோடகன் என்னும் எட்டுநாகங்களும் வந்து விஷாக்கினியைக் கக்கிக்கொண்டு, மரணமடையத்தக்க திதி நக்ஷத்திரங்களில் பிரகலாதன் திருமேனியில் பற்கள் பதியும்படி மாறிமாறிக் கடித்தன. அவ்வாறு அவைகள், காளி, காளாஸ்திரி, யமன், யமதூதனென்கிற நான்கு பற்களும் பதியும்படி ஓயாமற் கடித்தும் பிரகலாதன் சிறிதேனும் சரீரம் துடிக்காமல் ஸ்ரீ நாராயணருடைய திருநாமத்தையே உச்சாரணம் பண்ணிக்கொண்டிருந்தான். அவனுடைய தேகத்தில் பாம்புகள் கடித்த விடங்களிலெல்லாம் விஷம் ஒழுகுவதற்குப் பதிலாக அமுதம் ஒழுகிக்கொண்டிருந்தது. பாம்புகளின் பற்களெல்லாம் கடிக்கக் கடிக்க வலியற்று முறிந்து உதிர்ந்து விட்டன. அதனால் அந்த நாகங்கள் வலிமையற்று ஒன்றும் செய்யவியலாமல் விழித்

துக்கொண்டிருந்தன. அசுரர்கள், இரணியனிடம் போய், அந்த நாகங்களாலும் ஒன்றும் செய்ய வியலாமற் போனதைத் தெரிவித்தார்கள்.

இரணியன் கோதித்தெழுந்து, 'அவனை திக்கஜங்களுள் ஒன்றினிடம் கொண்டுபோய்ப் போட்டு அதன் காலால் இடறிக் கொல்லுமாறு அதனை ஏவுங்கள்' என்று அவர்களிடம் உரைத்தான். உடனே அவர்களிற் பலர் கிழக்குத் திசைக்குச் சென்று, இந்திரன் ஏறுகின்ற நான்கு கொம்புகளையுடைய ஐராவதமென்னும் வெள்ளை யானையைக் கண்டு அதனிடம் இரணியன் கட்டளையைத் தெரிவித்து, அதைக் கொண்டுவந்து நிறுத்தி, பிரகலாதனைக் கைகளையும் கால்களையும் சேர்த்திறுக்கிக் கட்டி எடுத்துக்கொண்டு போய் அதன் முன்னே போட்டார்கள். அப்போது உண்மைப் பொருளை உணர்ந்தவனாகிய பிரகலாதாழ்வான், அந்த யானையைப் பார்த்து, 'ஐராவதமே! உன் தாயைப் பெற்ற பாட்டனாகிய கஜேந்திரனை முற்காலத்தில் ஒரு முதலையானது பிடித்துக் கொள்ள, அந்தக்கஜேந்திரன் வருந்தி 'ஆதிமூலமே' என்றழைத்தபோது அவன் முன்னே தோன்றி அவனை இரக்ஷித்த நாதன் எவனோ அவன் என் இருதயத்தில் குடிகொண்டிருக்கிறான்; ஆதலால், நீ அவனை உத்தேசித்து என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்துவிட்டுப் போ' என்று சொன்னான். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே அந்த வெள்ளை யானையானது 'இவன் சாக்ஷாத் ஹரி பக்தன்; ஆதலின், இவனை ஒன்றுஞ் செய்யலாகாது' என்று, பிரகலாதனைப் பிரதக்ஷணமாகச் சுற்றி அவனுக்குத் தண்டன் ஸமர்ப்பித்துவிட்டுத் திரும்பிச் சென்றது. இந்தச் செய்தியை உடனே அசுரர்கள் இரணியனுக்குத் தெரிவித்தார்கள். அதைக் கேட்ட வுடனே இரணியன் அடங்காச் சீற்றங்கொண்டு, 'எனக்குப் பயந்துபோய்ச் சமுத்திரத்தில் மறைந்து கிடக்

கின்ற அந்த விஷ்ணுவைப் பெரிய பொருளென்று மதித்து, என்னுடைய ஆக்ஞையைக் கடந்து சென்ற அந்த யானையைக் கொல்லுங்கள்' என்று அவ்வசுரர்களை ஏவினான். அவ்வாறே அவர்கள் விரைந்தோடி அதனைக் கொல்ல முயன்றார்கள். அதைக்கண்டு அந்த யானை பயந்து, 'இரணியனோ பொல்லாதவனா யிருக்கின்றான்; பிரகலாதனோ ஹரி பக்தனா யிருக்கின்றான்; இரணியன் கட்டளையை மீறினாலோ நமது உயிர் போய்விடும்; பிரகலாதனைக் கொன்றாலோ ஸ்ரீமந்நாராயணருக்கு அபசாரப்பட்ட குற்றம் நம்மீது சாருகின்றது; இவ்விரண்டில் நாம் எதைச் செய்யலாம்? இதேது பெரிய சங்கடமாக வந்து நேர்ந்ததே! நாம் ஆலோசித்துத்தான் ஒரு காரியத்தைச் செய்யவேண்டும்' என்று சிறிது நேரம் சிந்தித்து, 'பிரகலாதனை எப்படியும் சுவாமி காப்பாற்றிக் கொள்வார்; நாம் இப்போது இரணியனுடைய கட்டளைப்படி நடந்து நம் உயிரைப் பாதுகாத்துக் கொள்வோம்' என்று தீர்மானித்துப் பிரகலாதனிடம் வந்து, தன்னுடைய கொம்புகளினால் அவனுடைய மார்பில் குத்தி யழுத்திற்று. உடனே அந்தக் கொம்புகள் நான்கும் இளம் வாழைத்தண்டுகள் போல முறிந்துவிட்டன. பிரகலாதன் எவ்வித துன்பமுமடையாதிருந்தான்.

உடனே அசுரர்கள் விரைந்துபோய், ஐராவதம் திரும்பி வந்து பிரகலாதனைப் பாய்ந்ததையும், அதன் கொம்புகள் முறிந்து விட்டதையும் மொழிந்தார்கள். அதைக் கேட்டதும் இரணியனுக்குண்டான ஆத்திரத்திற்கோ அளவில்லை. அவன் கோடைக் காலத்துச் சூரியனைப் போலக் கொதிக்கின்ற கண்களை யுடையவனாய்க் கோபித்து, 'அவன் என்ன மாயமந்திரம் கற்றிருக்கின்றான்! அவனுடைய மந்திரவன்மையை நான் அறிகின்றேன்; அவனைக் கட்டித் தூக்கிக் கொண்டுபோய், எழுநிலைகளுடைய நமது கோபுரசிகரத்தின்

மீதேற்றி அங்கிருந்து கீழே தள்ளிவிடுங்கள் ; அப்போது அவனுடைய மந்திரம் என்ன செய்கிறதென்று பார்க்கலாம்; இதில் கட்டாயம் அவன் ஒழிந்துபோவான்; இதை நீங்கள் விரைந்து செய்யுங்கள்' என்று அவர்களிடம் உத்தரவு செய்தான். உடனே கொலைபாதகர்களாகிய அவ்வசுரர்கள் அவன் கட்டளைப்படியே, பிரகலாதனைக் கட்டித் தூக்கிக்கொண்டு போய்க் கோபுர சிகரத்தின் மேலேற்றி அங்கிருந்து தலை கீழாக உருட்டிக் கீழே தள்ளிவிட்டார்கள். அப்போது பூமாதேவியானவள், 'இரணியாக்ஷன் நம்மைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு போனகாலத்தில், வராகாவதாரமெடுத்து அவனைக் கொன்று, நம் ஆபத்தை நீக்கிய விஷ்ணுமூர்த்திக்கு இவன் பக்தனுதலால் இவனை நாம் பாதுகாக்கவேண்டும்' என்று மாந்தளிருக் கொப்பாகிய தன் கைகளால் அந்தப் பிரகலாதனை ஏந்திக்கொண்டாள். பிரகலாதன் யாதொரு ஆபத்துமின்றிப் பூமியின் மேல் பூரணச் சந்திரனைப் போன்று விளங்கினுன். இந்த அற்புதத்தையும் அசுரர்கள் இரணியனுக் கறிவித்தார்கள். அதன் மேலும் அவன் தன்னுடைய மூர்க்கத்தை விடாமல் 'அந்தப் பாதகன் எதனுலும் சாகாதிருக்கின்ருன்; எப்படியும் அவனைக் கொல்லாமல் விடக்கூடாது; அவனைப் பெரியமலையுடனே சேர்த்துக்கட்டிச் சமுத்திரத்தில் தூக்கிப் போட்டு விடுங்கள்' என்று கொலையாளிகளுக்குக் கட்டளையிட்டான். அவர்கள் அப்படியே பிரகலாதனை மலையோடு சேர்த்துக்கட்டி வாரிதியில் தூக்கிப் போட்டார்கள். அப்போது அந்த மலையானது பிரகலாதாழ்வானைத் தாங்கியபடியே சமுத்திரத்தில் ஆழ்ந்துவிடாமல் சுரைக் குடுக்கைபோல மிதந்துகொண்டிருந்தது; அவனுக்கு அந்தப் பெரிய சமுத்திரம் சிறிய மடுவைப் போல தோற்றிற்று. ஆதலால் அவன், சிறிதும் அஞ்சாதவனுய் முகுந்தனைப் பாடித் துதித்துக்கொண்டிருந்

தான். அந்த அற்புதச் செயலையும் அசுரர்கள் சென்று இரணியனிடம் சொன்னார்கள்.

அப்போது இரணியன் 'அவனை என் முன்னே கொண்டுவந்து நிறுத்துங்கள்' என்றான். அப்படியே கொலையாளிகள் பிரகலாதனைக் கட்டவிழ்த்துக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அவனை எதிரில் பார்த்தவுடனே இரணியன் சரீரம் புழுங்கி, 'இந்தப் பாதகனுக்கு விஷங் கலந்த ஆகாரங்களை ஊட்டி இவனைக் கொல்லுங்கள்' என்று அசுரர்களுக்குக் கட்டளை யிட்டான். அவர்கள் அவ்வாறே விஷமிஸ்ரமான ஆகாராதிகளைப் பிரகலாதனுக் கூட்டினார்கள். பிரகலாதன் அவற்றை யெல்லாம் அமுதத்தை உட்கொள்வதுபோல் உண்டு யாதோரிடும்பையு மின்றி யிருந்தான். அதன்மேல் இரணியன் பற்களைக் கடித்துக்கொண்டு கொலைஞர்களை நோக்கி, 'இவனை வட்டப் பட்டடையில் கட்டிச் சுருட்டிப்போட்டு இருப்புச் சம்மட்டி கொண்டு பலமாக அடியுங்கள்' என்று சொன்னான். அவர்கள் அப்படியே அவனை அடித்தார்கள். எத்தனையோ முறை அவர்கள் ஓங்கி ஓங்கி அடித்தும் பிரகலாதனை அந்த அடிகள் தாக்கவேயில்லை. அவன், தனக்குள்ளே அந்தர்யாமியா யிருக்கின்ற ஹரிவாசுதேவருடைய நாமரூப குணங்களை இடை விடாமல் தியானித்துக்கொண் டிருந்தான்; அசுரர்கள், தன்னை அடிக்கிறார்களென்ற சிந்தனை சிறிதுமே அவனுக்கில்லை. இந்த நிலைமையைப் பார்த்தவுடன் இரணியன் மனங்கொதித்து, 'நான் என்ன செய்தாலும் இவன் ஏதோ ஒரு மாயையால் உடல் பின்னப் படாமலும் உயிர் போகாமலு மிருக்கின்றான். இனி நானே இவனைக் கொன்றுவிடுகின்றேன்' என்று, அடங்காக்கோபத்துடன் பிரகலாதனுக்குச் சமீபத்தில் போனான்.

அப்போது பிரகலாதன் அவனைப் பார்த்து வணங்கி, 'ஐயா தந்தையே! என்னுடைய உயிரை வாங்குதற்கு நீர் பிரயாசைப்படவேண்டாம்; இஃதும்மால் இயலுங்காரிய மன்று; ஸ்ரீமந் நாராயணர் நினைத்தால் மாத்திரம் என்னுயிரைப் போக்கலாமேயன்றி மற்றவர்களால் அது முடியாது,' என்றான். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் இரணியன் 'இவன் யாரோ ஒருவன் தனக்குக் கடவுளா யிருக்கின்றானென்று சொல்கின்றானே; அவனைக் காட்டும்படி நாம் இவனிடம் கூறுவோம்; அப்படி இவன் காட்டுவானானால் அவனை இன்னவனென்றுவது நாம் தெரிந்து கொள்வோம்' என்று கோபத்தை யடக்கிக்கொண்டு பிரகலாதனை நோக்கி, 'அடே! எவனோ உலகங்களை உண்டாக்கினானென்றும், அவனே எல்லாவற்றிற்கும் கர்த்தாவென்றும் நீ சொல்லிக் கொண்டிருக்கின்றாயே! அவன் யார்? என் பெயரையே எப்பொழுதும் துதிசெய்துகொண்டிருக்கின்ற திரிமூர்த்திகளில் ஒருவனா? அல்லது எல்லா ஐசுவரியங்களையு மிழந்து எனக் கடங்கிக் கிடக்கின்றதேவர்களில் ஒருவனா? அன்றி மனிதர் நாகர்களில் ஒருவனா? அவன் இன்னவனென்பதைச் சீக்கிரம் நீ சொல்' என்று அதட்டினான். அதற்குப் பிரகலாதன், 'நீர் அவரைத்தெரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்பதால் நான் கூறுகிறேன்கேளும்; நான் முன் உரைத்தபடியே சகல உலகங்களையும் படைத்தவரும், அவற்றினுள் பற்பல வகையான உயிர்களை உண்டாக்கியவரும், அந்த உயிர்கள் தோறும் அந்தர்யாமியா யிருப்பவரும், பூவில் மணமும் எள்ளில் எண்ணெயும் போல சகல வஸ்துக்களிலும் கலந்து நிறைந் திருக்கின்றவருமாகிய மகாவிஷ்ணுவே உண்மைக் கடவுள்; அவர் என் கட்புலன் செல்லும் எந்த விடத்திலு மிருக்கின்றார்; அவருடைய மகிமையைப்பற்றி நான் உம்மிடம் கூறியும் நீர் அவரை மதிக்கவில்லை; அதனால் அஞ்

ஞான இருள் சூழ்ந்த உமது கண்களுக்கு அவர் புலப்பட மாட்டார்; நீர் பக்தியோடு அவரைத் தியானிப்பீரானால் அவர் உமக்குத் தரிசனங் கொடுப்பார்; இன்னும் அவருடைய பெருமைகள் அளவிடற்கரியன; சாத்துவிகம், இராஜஸம், தாமசம் என்னும் முக்குணங்களும் அவருடையவைகள்; வெண்மை, பசுமை, செம்மை ஆகிய மூவுருவங்களும் அவருடையவைகள்; சோம, சூரியாக்கினியாகிய முச்சுடர்களும் அவருடைய கண்கள்; காருகபத்தியம், தக்ஷிணாக்கினி, ஆகவனீயம் என்னும் வேதாக்கினிகள் மூன்றும் அவருடையவைகள்; சுவர்க்க மத்திய பாதாளமாகிய மூவுலகங்களும் அவருடையவைகள்; ஆதியும், அந்தமும், நடுவுமுண்டாயிருக்கின்ற பொருள்களுக்கெல்லாம் அவரே சாக்ஷியாயிருக்கின்றார்; இவை வேதசம்மதமான அபிப்பிராயங்கள்; இவையே சத்தியமானவை' என்று சொன்னான்.

இவற்றைக் கேட்டதும் இரணியன், தன்னுடைய கோரதந்தங்கள் வெளியில் தெரியும்படி கலகலவென்று கை கொட்டிச் சிரித்துப் பிரகலாதனை நோக்கி, 'அட பைத்தியம் பிடித்த பதரே! உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களிலும் அந்த ஹரியென்பவன் கலந்து நிறைந்திருக்கின்றானென்று சொல்கின்றாயே; அப்படியானால், அவனை இங்கே ஓரிடத்தில் காட்டு; நான் அவனைப் பார்த்தபின், செய்ய வேண்டியதைச் செய்கிறேன்' என்றான். அப்போது பிரகலாதன், 'ஐயா! அந்தப் புருஷோத்தமர் எங்கும் நிறைந்திருக்கின்றாரென்பதுஉண்மையே; அணுவிலுமிருக்கின்றார்; அந்த அணுவின் அநேகங் கூறுகளில் ஒன்றாகிய பரமாணுவிலுமிருக்கின்றார்; மகா மேருவிலுமிருக்கின்றார்; இன்னும் சகல சராசரங்களிலுமிருக்கின்றார்; சாணிலுமிருக்கின்றார்; அவரில்லாத இடமே இல்லை; அவர் உமக்குப் பிரத்தியக்ஷ

மாகக் கூடாதவராயினும், என்னுடைய பக்தியின் உண்மையை விளக்கும் பொருட்டு நீர் குறிப்பிட்ட ஏதேனுமோரிடத்தில் அவரை நான் காட்டுகிறேன்; உமக்கிஷ்டமானால் இவ்வுண்மையைப் பரீக்ஷித்துப்பார்த்துக்கொள்ளும்' என்று கூறினான். இரணியன் ஆத்திரங்கொண்டு இடியைப்போல் பெருந் தொனியிட்டுப் பிரகலாதனை நோக்கி, எதிரே நின்ற ஒரு தூணை அவனுக்குச் சுட்டிக்காட்டி, 'சண்டாளா! அப்படியானால் அந்த ஹரியை இந்தத் தூணில் காட்டு; இங்கே நீ காட்டாமற் போவாயானால், மத யானையைச் சிங்கம் அறைந்து கொல்வதுபோல உன்னை நான் ஒரே அறையில் கொன்று உன் உதிரத்தைப் பருகி உடலையும் தின்று விடுவேன்' என்று சொன்னான்.

உடனே பிரகலாதன், 'தந்தையே! நீர் என்னைக் கொன்று விடுவதாக அடிக்கடி வாய்கூசாமற் சொல்லி விடுகின்றீர். அஃதும்மால் இயலுங் காரியமன்று என்று நான் சொல்லியும் அதை மறந்துவிட்டீர்; இப்பொழுது என்னுடைய பகவான் நீர் காட்டிய இந்தத் தூணில் கட்டாயம் வெளிப்படுவார்; அவர் அவ்வாறு தோற்றாமற்போவாரானால், நீர் என்னைக் கொல்வதற்குப் பிரயாசைப்படவேண்டாம்; நானே என்னுயிரை மாய்த்துக்கொள்வேன்; அப்படிச் செய்யாமல் நான் உயிருடன் இருப்பேனானால் அவருக்கு உண்மைப் பக்தனாகேன்' என்று பிரதிக்ஞை பண்ணினான். இந்தவார்த்தைகளைக் கேட்டவுடனே இரணியன், வக்கிரதந்தங்கள் பிரகாசிக்கக் கோபச் சிரிப்புச் சிரித்து வடவைக்கனல்போல் கொதித்தெழுந்து, இடி இடித்ததுபோலஆர்ப்பரித்து, 'ஆ! ஆ!! அந்தப் பஞ்சைப்பயல் விஷ்ணு நெஞ்சமஞ்சாமல் இந்தத் தூணிலோ வந்திருக்கின்றான்! எங்கே அவனை என் முன் வரச்சொல்' என்று சுவர்ண மயமான அந்தத் தூணைத் தன்னுடைய கையினால் ஓங்கி உக்கிரத்

துடனே அறைந்தான். அப்படி அறைந்தகை அந்தத் தூணில் படுவதற்கு முந்தியே, ஆதிமூலப் பொருளாகிய விஷ்ணுமூர்த்தி நரசிம்மாவதாரமாய் அத் தூணிற்குள்ளி லிருந்து சகல புவனங்களும் கிடுகிடுவென்று நடுங்கும்படி வெகு உக்கிரமாகக் கர்ச்சனை புரிந்தார். எவராலும் தேடிக் காண முடியாத சர்வ பரிபூரணராகிய எம்பெருமான், தம்மு டைய உண்மைப் பக்தனாகிய பிரகலாதாழ்வானுடைய பிர திக்ஞை நிறைவேறும்பொருட்டு அவ்வாறு அத் தூணிற் குள் தோன்றிக் கர்ச்சனை புரிந்த மாத்திரத்தில் பிரகலாதன், தன்னுடைய எண்ணம் நிறைவேறியதற்காக ஆனந்தக் கட லில் மூழ்கி எழுந்து கூத்தாடினான்; ஆனந்தக் கண்ணீர் விட்டழுதான்; ஹரி வாசுதேவனுடைய ஆயிரந் திருநாமங் களையுஞ் சொல்லித் துதித்துப்பாடினான்; சிரசின்மேற் கரங் களைக் கூப்பிக்கொண்டு சாஷ்டாங்கமாக அவரெதிரில் வீழ்ந்து சேவித்தான்; மான் கன்றுபோலத் துள்ளித்துள்ளி அங்குமிங்கும் ஓடினான்; எம்பெருமானைப் பலவாறு கொண் டாடினான். அத்தருணத்தில் இரணியன், கையோடு கை யறைந்து கோடை யிடிபோல் கொக்கரித்து, ஆங்காரத் துடன் அதட்டி, அத்தூணை நோக்கி, 'இந்தத் தூணில் கர்ச்சித்தவன் யாரடா? இந்தச் சிறு பயல் சொன்ன விஷ்ணுவென்னும் பஞ்சை நீதானா? எனக்குப் பயந் தோடிச் சமுத்திரத்தில் மறைந்திருந்த நீ ஒரு சமயம் அங்கு நான் வரக்கூடுமென்றஞ்சி இத் தூணிற்குள் வந்து ஒளிந்திருக்கின்றாயோ? அடே! என்னுடன் யுத்தம் பண் ணத்தக்க வல்லமை உனக்கிருந்தால் இப்பொழுதே வெளி யேறி வா; பேடியே! ஏன் காலதாமதம் செய்கின்றாய்' என்று கூறி ஆத்திரத்துடனே அத்தூணை உதைக்கப் போனான்.

ஆ! ஆ!! எம்பெருமானுடைய மகிமையை நாம் என்னென்றெடுத்துரைப்போம்! அந்தக் கொடியனாகிய இரணியன் அவ்வாறு ஆர்ப்பரித்துத்தூணுக்குச் சமீபத்தில்நெருங்கிய மாத்திரத்தில் அண்டங்களெல்லாம் அதிரும்படி, படீரென்று அந்தத் தூண் பிளந்தது. அதிலிருந்து ஹரி வாசுதேவர் உக்கிர நரசிம்மமாக வெளியில் தாவினார். அவ்வாறு உதித்தவுடனே அந்த நரசிம்ம சொரூபமானது அண்டமுகடுவரை வளர்ந்தது; அஷ்டதிக்குகளிலும் தன்னுடைய சரீரம் வியாபிக்கும்படி விசாலித்தது; அவ்வடிவத்தில் எண்ணத் தொலையாதகைகளும், கால்களும், முகங்களும் உண்டாயிருந்தன. இத்தகைய பயங்காரூபத்துடன் தோன்றிய நரசிம்ம மூர்த்தியானவர், யுகாந்தகால சண்டமாருதத்தைப் போல் ஆர்ப்பரித்துச் சீறி வடவைக்கனலைப்போலக் கொதித்தெழுந்து அங்கு நின்ற பிரகலாதாழ்வானும் இரணியனும் தவிர மற்ற அசுரர்களை யெல்லாம் ஒரு நொடிக்குள்ளே கொன்று குவித்துவிட்டு மகா ஆங்காரத்துடனே இரணியன் மீது பாய இடியைப்போல முழங்கித் திரும்பினார். அப்பொழுதும் அந்தக்கொடிய இரணியன், தன்னுடைய அகங்கார மொடுங்காமல் தானும் ஆர்ப்பரித்து, 'அடே! நீ எந்த வடிவத்துடன் வந்தாலும் நான் அஞ்சேன்; இதோபார் உன்னை என் வாளுக்கிரையாக்குகின்றேன்' என்று வீரமொழிபேசித் தனது வலக்கையில் வஜ்ஜிர வாளைப் பிடித்து, இடக்கையில் கேடயத்தைத் தாங்கி, அஷ்டகுல பர்வதங்களும் அதிரும்படி அதட்டி உதட்டை மடித்துக்கொண்டு உக்கிர நரசிம்ம மூர்த்தியோ டெதிர்த்து நின்றான். அப்போது பிரகலாதன், தன்னுடைய தந்தை மதியீனத்தால் மடியப்போகின்றானென்று பரிந்து, அவனை நோக்கி,' தந்தையே! நீர் இந்த நரசிம்ம மூர்த்தியைப்பார்த்தும் கூட உமக்குப் புத்திவரவில்லை; ஐயோ! நீர் வீணாக மடிந்துபோகப் போகின்றீர்; அங்ஙனம்

மடியவேண்டாம்;உம்முடைய மூர்க்கத்தை விடுத்து இச்சமயத்திலாவது இவரை வணங்கிக் கொள்ளும்; நீர் இவருக்கு இதற்குமுன் அளவற்ற அபராதங்களைச் செய்திருந்தபோதிலும் என் பொருட்டு அவற்றையெல்லாம் இவர் மன்னித்து உம்மீது கருணை செலுத்துவார்; ஆதலின் நீர் வாளை யெறிந்துவிட்டு வாசுதேவருடைய மலர்ப் பாதங்களைப் பற்றிக் கொள்ளும்' என்று இதமான வார்த்தைகளைக் கூறினான். அந்த வார்த்தைகளெல்லாம் இரணியாசுரனுடைய கெட்ட காலத்தால் அவன் செவிக்கேறவில்லை. அவன் அந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே முன்னிலும் மும்மடங்கதிகமான சினங்கொண்டு பிரகலாதனைநோக்கி, 'அடே குலத்துரோகி! எனக்கிந்தச் சமயத்தில் நீ புத்திகூறவா வந்தாய்! யானோ இவனை வணங்குவேன்? உன்னைப் போன்ற பேடியன்றோ வணங்கவேண்டும்; நான் நரசிங்க ரூபமாக வெளிப்பட்டிருக்கின்ற இந்தத் திருட்டுப்பயலுடைய தோள்களையும் கால்களையும் வெட்டித் தள்ளி, உன்னையும் இரண்டுதுண்டுகளாகும்படி அறுத்துவிட்டு என்னுடைய வாளை வணங்குவேனே யன்றி மற்றெவரையும் வணங்கமாட்டேன். என் தேவிமார்களுடைய ஊடல் காலத்தில் அவர்களிடத்துங்கூட வணங்காத நான் கேவலம் விஷ்ணுவாகியமிருகத்தினிடமோ வணங்குவேன்! துஷ்டா! நீ என்முன் நில்லாதே' என்று அதட்டிவிட்டு வாயைத்திறந்து 'ஆ! ஆ!!' என்று சப்தமிட்டுக்கொண்டு வாளைச் சுழற்றியபடியே நரசிம்மமூர்த்தியின் முன்னே பாய்ந்தான்.

அவ்வாறு பாய்ந்த மாத்திரத்தில் உக்கிர நரசிம்மமூர்த்தியானவர், வீரகர்ச்சனை புரிந்துகொண்டு, கணிதசாஸ்திர பண்டிதர்களாலும் கணக்கிட்டு இவ்வளவென்று சொல்லிமுடியாத தம்முடைய எண்ணிறந்த கைகளாலும்,

கால்களாலும் அந்த இரணியாசுரனைச் சேர்த்துக் கட்டிப் பிடித்தார். அவனும் அவரை இறுக்கிக் கட்டிப்பிடித்தான். இப்படி ஒருவரை யொருவர் கட்டிப்பிடித்து இருவரும் மகா உக்கிரமாகச் சண்டை செய்தார்கள். அந்த யுத்தத் தால் சகல புவனங்களும் நடுங்கின. அப்படி யுத்தம் நடக் கும்போது ஆரம்பத்திலேயே கண்மூடித் திறப்பதற்குள், நரசிம்ம மூர்த்தியானவர் அண்டங்களெல்லாம் நடுங்கும்படி ஆர்ப்பரித்து, இரவும் பகலும் சந்திப்பதாகிய சந்தியாகாலத் தில் (அதாவது, அந்திநேரத்தில்) அந்த இரணியாசுரனைத் தூக்கிக்கொண்டு போய் அவனுடைய கோபுரவாயிற்படியில் உட்கார்ந்து, அவனுடலைத் தம்முடைய திருத்துடைகளின் மீது வைத்து, வச்சிராயுதங்களைப் போன்ற கைகளின் நகங்களாலே அவன் மார்பை இரண்டாகப் பிளந்து, அவ னுதிரத்தையெல்லாம் பூமியிற் சிந்தாதபடி வாயினுல் உறிஞ் சிக் கொப்பளித்து, அவனுயிரைப் போக்கி வீராவேசத் துடன் விளங்கினுர். அந்த இரணியன், உலகத்தில் உண் டாகும் எந்தப்பிராணியாலும், எவ்வகை ஆயுதங்களாலும், இரவிலும் பகலிலும், உள்ளிலும் புறம்பிலும் தனக்குச் சாவில்லாத வரம்பெற்று விஷ்ணுவோடு விரோதங்கொண் டிருந்தபடியினுலே, முன் சில முறை அவன் எதிர்த்தும் அவர், 'இவனைச் சமயமறிந்து கொல்லவேண்டும்' என்று அச்சமயங்களில் அவனைக் கொல்லாமல் விட்டிருந்து, அவன் ஒழியுங்காலம் வந்தவுடன் இத்தருணத்தில் இவ்வாறு நரவடிவமும் மிருகவடிவமுங் கலந்த நரசிம்மமூர்த்தியாய்த் தூணில் பிறந்து, சந்தியாகாலத்தில் அவனைத் தம் துடை களின் மீது வைத்து உள்ளும் புறமுமற்ற கோபுர வாயிற் படியில் தம்முடைய நகங்களையே ஆயுதமாகக்கொண்டு அவனுடைய மார்பைப்பிளந்து இரத்தத்தை உறிஞ்சிச் சங்கரித்தார். அப்படிச் சங்கரித்துவிட்டு அந்த உக்கிர

நாசிம்மமூர்த்தியானவர், தம்முடைய தேகம் எல்லாவிடங்களிலும் நிறைபவும், திருவடிகளின் கீழ்ப்பாகங்கள் வாக்கினுலும் மனத்தினுலும் அறிவினுலும் அளவிடக் கூடாதபடி பாதலத்திற்குக் கீழே வியாபிக்கவும், இடைப்பிரதேசம் ஆகாயத்திற்கப்பால் உயர்ந்திருக்கவும், திருமுடி சத்திய லோகத்திற்கப்பால் பிரமாதி தேவர்களாலும் காணமுடியாதபடி வளர்ந்திருக்கவும், எவரும் அஞ்சத்தக்க விசுவரூபத்துடனே உக்கிரந்தணியாமல் ஓங்கி நின்ருர்.

அச்சமயத்தில் இரணியாசுரனுக்குப் பயந்தோடி மறைந்திருந்த தேவர்களும், முனிவர்களும், மற்றவர்களும் இரணியன் ஒழிந்த செய்தி தெரிந்து ஓடிவந்து அந்த உக்கிர நரசிம்மமூர்த்தியைக் கண்டு அவருடைய கோபத்திற்கஞ்சி, இரண்டு பக்கங்களிலும் நின்றுகொண்டு, 'எம்பெருமானே! கொடியனுகிய இரணியன் ஒழிந்துபோனபடியால் இனிக் கோபந்தணிந்து எங்களை ஆட்கொண்டருளவேண்டும்' என்று ஸ்தோத்திரம் செய்தார்கள். அப்போது நரசிம்மமூர்த்தியானவர் சமஸ்த தேவர்களையும் பார்த்து, 'அமரர்களே! இனி நீங்கள் அஞ்சவேண்டாம்' என்று அபயஸ்தம் கொடுத்தருளினுர். அதன்மேலும் தேவர்கள், அவருடைய உக்கிரம் தணிந்ததோ இல்லையோ என்று சந்தேகங்கொண்டு அவருக்குள்ள கோபம் பூரணமாகத் தணியவும் தாங்கள் நிர்ப்பயமாக அவரிடம் நெருங்கவும் கருதி, அவர் சாந்தமடையும்பொருட்டு, ஸ்ரீ மகாலட்சுமி தேவியை அவரிடம் எழுந்தருளும்படி வேண்டினுர்கள். அப்படியே இலக்குமிதேவி நரசிம்மமூர்த்தியின் சமீபத்தில் எழுந்தருளினுள். அவ்வாறு தமக்கெதிரில் எழுந்தருளிய ஸ்ரீ மகாலட்சுமியை நாசிம்மமூர்த்தியானவர் கடா

க்ஷித்தருளினார். அப்பொழுது அவருடைய முகத்தில் சாந்தக் குறியும் சந்தோஷக்குறியும் விளங்கின. அதன்மேல் அமரரும், முனிவரும், மானிடரும், மற்றைபரும் அவர் சமீபத்தில் நெருங்கி எண்ணிறந்த துதிகளைப்பாடி அவரைக் கொண்டாடினார்கள்.

அதன்மேல் ஸ்ரீ நரசிம்ம மூர்த்தியானவர், சந்தோஷத்துடனே தமக்கெதிரில் கைகூப்பி ஸ்தோத்திரம்செய்து கொண்டு நின்ற பிரகலாதாழ்வானை நோக்கி, 'என் அருமைப் பக்தனே! உன்னுடைய தந்தையை உனக்கெதிரில் நான் கொன்ற காலத்திலும் நீ சிறிதும் மனங்கலங்காமல், தர்ம மார்க்கத்தையே உறுதியாகப் பற்றி என் மீதுள்ள பக்தியை அகற்றுதிருந்தனை; இத்தகைய பக்திமானாகிய உனக்கு நானென்ன கைம்மாறியற்றப் போகின்றேன்! இனி, உன் குலத்தார் எனக்கெவ்வளவு குற்றங்களைச் செய்தபோதிலும் உன்னை உத்தேசித்து நான் அவர்களைக் கொல்லமாட்டேன்; நீ என்னிடம் எவ்வளவு நன்மைகளை வேண்டினும் நான் செய்வேன்; நீ வேண்டிய வரத்தை என்னிடம் கேட்டுக்கொள்' என்று அன்பான வார்த்தைகளைக் கூறினார். அப்போது பிரகலாதன் அளவற்ற ஆனந்தக்கடலில் மூழ்கி அவரடியில் வீழ்ந்து சாஷ்டாங்கமாகச் சேவித்தெழுந்து, அவருக்கு முன்னே அஞ்சலியஸ்தனாய் நின்று, 'சுவாமி! உம்மால் நான் இதுவரை அடைந்திருக்கும் பேறுகளுக் களவில்லை; இவற்றைக் காட்டினும் மேன்மையாக நான் பெறவேண்டியது இனியொன்றுமில்லை; ஆயினும் இன்னொருவரம் மாத்திரம் அடியேன் கேட்டுக் கொள்கின்றேன்; அதாவது, நான் இனி எவ்வகை இழிந்த பிறப்புக்களை அடையினும், அப்பிறப்புக்கள்தோறும் உம்மிடத்தும், உம்முடைய அடியாரிடத்தும், அன்பு நீங்காதவனா யிருக்க

வேண்டும்; இந்தவரம் மாத்திரம் எனக்களித்தாற் போதும்' என்றான்.

இவற்றையெல்லாம் கேட்டு நரசிம்மமூர்த்தி அளவற்ற ஆனந்தத்தை யடைந்து பிரகலாதனை நோக்கி, 'பக்தசிரோமணியே! உனக்கினி இழிபிறப்பு முண்டாகுமோ! நீ இவ்வுலகத்தை ஆண்டு தேவர்களுக்கும் தலைவனாய் முடிவில் நம்பதத்தை யடைந்து, சமஸ்தமும் அழியுங்காலத்திலும் அழியாமல் என்னைப்போல் நித்தியனாய் ஜீவன் முக்தனாகக் கடவாய்; இந்த மூன்று லோகவாசிகளும் உனக் கடிமையாவார்கள்; அவர்க ளெல்லோரும் என்னை வணங்கி அடையும் பிரயோசனங்களை யெல்லாம் உன்னை வணங்கி அடைவார்கள்; எனக் கன்பானவர்களெல்லாம் உனக்கன்பராவார்கள்; தர்மமும், சத்தியமும், தெய்வபக்தியும், நான்கு வேதங்களும், ஞானமும், பொறுமையும், மற்ற நற்குணங்களும் உன்னிடம் ஓங்கிவளர்வனவாக; இனி எனக்கும் உனக்கும் எவ்வித பேதமுமில்லை'என்று அவனுக்கு வரங்கொடுத்து, உடனே தேவர்களை யெல்லாம் அழைத்து அவர்களை நோக்கி, 'நீங்கள் பிரகலாதாழ்வானுக்கு இராஜ்ஜிய பட்டாபிஷேகம் செய்து மேலும் நடக்கத்தக்க சிறப்புக்களை நடத்துவீராக' என்று கட்டளையிட்டார். அவ்வாறே தேவர்கள் மகுடாபிஷேகத்திற்கு வேண்டிய காரியங்களை யெல்லாம் நடத்தினார்கள்; பிரமதேவரே ஓமம் வளர்த்து மந்திரங்களை ஓதினார்; சாக்ஷாத் நாராயணமூர்த்தியே திருமுடியை எடுத்துப் பிரகலாதாழ்வான் சிரமீது சூட்டினார். முனிவர்களெல்லோரும் வேதபாராயணஞ் செய்து நரசிம்மமூர்த்தியையும், பிரகலாதனையும் வாழ்த்தினார்கள். திரிலோகத்தார்களும் ஜெயஜெயவென்று போற்றினார்கள். இவ்வாறு சகல சிறப்புக்களுடனும் மகுடாபிஷேகம் பெற்ற பிரகலாதாழ்வான், பின்னர்ச் சிம்மாசனத் திருந்து நெடுங்

காலம்வரை நீதியுடன் அரசாண்டு முடிவில் ஸ்ரீவைகுண்ட நாதனுடைய மலரடியைச் சார்ந்து நித்தியவாழ்வை அடைந்து பேரின்ப மெய்தினன். இது பூர்வவிருத்தாந்த மாகும்" என்று இரணியனுடைய சரித்திர முழுவதையும் சொல்லி, "இலங்காதிபரே! நீர் இதை நன்றாக ஆலோசிக்க வேண்டும்; அந்த விஷ்ணுவை அவமதிப்பீரானால் உமக்கு நிச்சயமாகத் தீங்குவிளையும்" என்று கூறினன்.

விபீஷணன் அடைக்கலம்.

இவ்வாறு பற்பல நீதிகளை விபீஷணன் எடுத்துக் கூறி யும் இராவணன், சீதையினிடத்தில் வைத்திருந்த ஆவலால் அவற்றையெல்லாம் மனத்துட் கொள்ளாமல் கண்கள் சிவந்து மிகுந்த கோபமுடையவனாய் விபீஷணனை நோக்கி, "அடா தைரியமற்ற பேடியே! அந்த விஷ்ணு, என்னைக் காட்டிலும் பலமுள்ள இரணியனைக் கொன்றானென்று நீ பயப்படுகின்றாய்; ஒருவனுக்கு முடிவு காலமாகிய மரணம் வந்தபோதுதானே பலம் குறையும்; ஒருவரை யொருவர் ஜெயிப்பது வல்லமையினாலன்று; இதை நீ உணராமல் பேசு கின்றாய்; பிரகலாதன், தந்தைக்கு விரோதியானவன் மேல் பக்தி செலுத்தினன்; அவனைப்போலவே நீயும் என் பகைவ ரிடத்தில் விசுவாசம் வைத்திருக்கின்றாய்; நீ மானிடர்களுக் குதவியாயிருந்து என்னை மடித்து என்னுடைய இராஜ்ஜி யத்தைக் கைப்பற்றிக்கொள்ள நினைத்திருக்கின்றாய்; நீ முந்தியே அந்த மனிதர்களைக் கண்டு என்னைக்கெடுக்கவேண் டிய சூழ்ச்சிகளை யெல்லாம் அவர்களுடனே கலந்து ஆலோ சித்திருக்கின்றாய்; அன்றைக்கு அந்தக் குரங்கை நான் கொல்லப்போகும்போது நீ 'தூதனைக் கொல்வது நீதியா காது' என்று என்னைத் தடுத்து விட்டாய்; உன்மனதில் சூதிருக்கின்றது; உன்னைக்காட்டிலும் கொடிய விரோதிகள்

எனக்கு வேறே யாரிருக்கின்றார்கள் ; விஷத்தைக் கூட வைத்திருப்பதுபோல உன்னை நான் பக்கத்தில் வைத்திருப்பதால் எனக்குத் தீமையே விளையும்; இத்தகைய உன்னைக் கொன்றுவிடுவதே தகுதியானது; எனினும், சகோதர ஹத்தி நேருமென்பதை நினைத்து உன்னைக் கொல்லாமல் விடுகிறேன்; நீ சீக்கிரம் வெளியிற் போய்விடு" என்று கடிந்து பேசினான்.

விபீஷணன், 'இனி இவனுக்கு நீதி சொல்வதிற் பயனில்லை; நாமும் இங்கே இருக்கலாகாது' என்று அவ்விடத்தைவிட்டெழுந்து ஆகாய மார்க்கத்தில்போய் நின்று இராவணனைப் பார்த்து, "அண்ணா! நெடுங்காலம் நிலைத்திருக்கும் உன்னுடைய வாழ்வை நீயே கெடுத்துக் கொள்கின்றாய்; நீ விரைவில் இராமபாணத்தால் உன் குலத்துடனே நாசமடைவாய்; நான் போகின்றேன்; என் குற்றத்தை நீ பொறுத்துக் கொள்" என்று சொல்லிவிட்டு அந்த இலங்கா நகரைக் கடந்து வெளியிற் புறப்பட்டான். அப்போது அனலன், அனிலன், அரன், சம்பாதி என்ற நான்கு மந்திரிகளும் இராவணனுடைய செய்கை தங்களுக்குப் பிடிக்காததால் விபீஷணனோடு புறப்பட்டார்கள். அங்ஙனம் புறப்பட்டவர்கள். மிகுந்த வானரப் படைகளுடனே இராமலக்குமணர்கள் சமுத்திரக்கரையில் வந்து தங்கி யிருக்கிறார்க ளென்பதைச் சிலர் சொல்லக் கேட்டு ஓரிடத்திற் போயிருந்து மேல் நடக்க வேண்டியதைப் பற்றி ஆலோசிக்கத் தொடங்கினார்கள். அப்போது விபீஷணன், தன்னுடன் வந்த மந்திரிகளை நோக்கி, "தோழர்களே! தர்மசிந்தனை யுள்ளவர்களிடத்தில் எனக்குப்பக்ஷமுண்டா யிருக்கிறது; என் தமையன் தர்மத்தைக் கைவிட்டபடியால் நான் அவனைவிட்டு நீங்கி விட்டேன்; இனி நான் செய்யவேண்டியதென்ன?" என்று கேட்டான். அதற்கவர்கள், "ஐயா! நீர், தர்மசொரூபியாகிய

இராகவரிடத்திற் சேர்வதே நல்லது" என்று கூறினார்கள். விபீஷணன் அவர்களை நோக்கி, "நண்பர்களே! நீங்கள் நல்ல வார்த்தை யுரைத்தீர்கள்; அந்த இராகவரை நான் முன்னே பார்த்ததுமில்லை, அவரைப் பற்றிக் கேள்விப்பட்டதுமில்லை; அப்படி யிருந்தும் அவரிடத்தில் எனக் கன்புண்டா யிருக்கின்றது; இதற்குக் காரணந்தெரியவில்லை: அவர் என்னுடைய பிறவிப்பிணியை அகற்றும் மருந்துபோல காணப்படுகின்றார். ஆதலின், நாம் அவரிடத்தே அடைக்கலம் புகுவதே நலம்" என்று அவர்களை அழைத்துக்கொண்டு கடலைத்தாண்டி இராமர் இருக்குமிடத்திற்குச் சமீபத்திற் போனான். வானர சைனியங்கள் கணக்கற்றவைகளாய் அவனுக்குத் தோன்றின; அவற்றைக் கண்டதும் அவன் அதிசயித்து, அப்போது இராக்காலமா யிருந்ததால் இராமரிடம் செல்வது தகுதியன்றென்று நினைத்துத் தன் துணைவருடன் ஓரிடத்தில் தங்கியிருந்தான். சிறிது நேரத்திற்குள் சூரியன் உதயமாயிற்று.

அத்தருணத்தில் இராகவர், சமுத்திரத்தைத் தாண்டிச் செல்லவேண்டுமென்னும் நினைவு கொண்டவராய்க் கடற்கரையில் உலாவிக்கொண் டிருந்தார். அங்குள்ள விநோதங்களும், நெய்தனிலப் பொருள்களும் அவருக்குச் சீதா பிராட்டியாரின் நினைவை யுண்டாக்கின; அதனால் அவர் சீதையை நினைத்துப் பெருமூச்செறிந்து விசனித்தார். அப்போது இலக்குமணன், சுக்கிரீவன், சாம்புவந்தர், அனுமார் முதலியவர்கள் அவருக்குத் தேறுதல் கூறி அவருடைய விசனத்தை மாற்றினார்கள். அதன்மேல் இராமர் தமதிருப்பிடத்தில் வந்து தங்கி யிருந்தனர். அத்தருணத்தில், விபீஷணன், தன் துணைவர்களுடன் வானர சேனை யிருக்கு மிடத்திற்கு வந்து சேர்ந்தான். அவனையும், அவனுடைய துணைவரையும் வானரசேனைகள் பார்த்த

வுடனே, "ஓகோ! இராக்ஷதர்கள் நமக்கேதோ தீங்கு செய்ய வந்திருக்கின்றார்கள்; இவர்களைப் பிடியுங்கள், அடியுங்கள்" என்று அவர்களைச் சுற்றிக் கொண்டார்கள். அப்போது விபீஷணன், "இவ்விடத்தில் எனக்கு வேறோர் துணையுமில்லை; ஸ்ரீராகவ மூர்த்தியே! நான் உமதடைக்கலம்" என்று கூவினான். அந்தச் சப்தமானது இராமருடைய செவிகளில் நுழைந்த மாத்திரத்தில் அவர், இலக்குமணன், சுக்கிரீவன், அனுமார், சாம்பவர் முதலானவர்களை நோக்கி, "எனக்கபயம் என்று சொல்லுகிறவன் யார்? நீங்கள் போய் அவனைப் பாருங்கள்" என்றுரைத் தருளினார். அவர்கள் அங்கே செல்வதற்குள், வானரர்கள் கூடிக் கொண்டு, விபீஷணன் முதலியவர்களை அதட்டிப் பயமுறுத்திப் பலவிதமான கடூரவார்த்தைகளைப் பேசித் துன்பப் படுத்தத்தொடங்கினார்கள். அவர்கள் செய்கையை உணர்ந்த இராகவர், விபீஷணன் முதலியவர்களைக் கொல்ல வேண்டாமென்று வானரர்களைத் தடுக்கும்படி மயிந்தன், துமிந்தன் என்பவர்களை அங்கே அனுப்பினார். அவர்கள் விரைந்து போய் வானரர்களை விலக்கி, விபீஷணன் முதலியவர்களுடைய முகக்குறிப்பைப் பார்த்து அவர்கள் விரோத சிந்தனையுடையவர்களல்ல வென்று தெரிந்துகொண்டு அவர்களை நோக்கி, "நீங்கள் யாவர்? இங்கே வந்த காரணமென்ன?" என்று கேட்டார்கள்.

அவ்வாறு கேட்டவுடன், விபீஷணன் தோழரில் அனலன், அவர்களுக்கு விபீஷணனைக் காட்டி, "நண்பர்களே! நாங்கள் விரோதிகளல்லர்; இவர், பிரமாவினுடைய குமாரரான புலஸ்தியருடைய புத்திரர்; விபீஷணரென்னும் பெயருடையவர் ; ஸ்ரீராமருடைய திருவடிகளுக்கு அடைக்கலமாக வந்தார்; இவர் நாராயண மூர்த்தியினிடத்தில் மிக்க அன்புடையவர்; தருமந்தவறாதவர்; இராவணனிடத்தில்

நற்புத்திகூறி அவனால் வெறுக்கப்பட்டார்; அதனால் அவனை விட்டு நீங்கி வந்து விட்டார்” என்று சொன்னான். இந்த வார்த்தைகளைக் கேட்டதும் மயிந்தன் திரும்பிவந்து இராகவரிடம் விபீஷணனுடைய வரலாற்றைக் கூறினான். இராகவர், சுக்கிரீவன் முதலியவர்களைப் பார்த்து, “இந்த விபீஷணன், நாம் அடைக்கலமாகக் கொள்ளத் தக்கவனா, தள்ளத் தக்கவனா? இதைப் பற்றி நீங்கள் நன்றாக ஆராய்ந்து சொல்லுங்கள்” என்று உரைத் தருளினார்.

அப்போது சுக்கிரீவன் இராகவரை நோக்கி, “சுவாமி! சண்டை அடுத்திருக்கும் இச்சமயத்தில் இவன் தமையனை விட்டு நீங்கி வந்திருக்கின்றான்; இராவணன் எவ்வளவு கெட்டவனா யிருந்தாலும் இவன் இச்சமயத்தில் அவனை விட்டு நீங்குதல் தகுமா? சகோதரனிடத்திலேயே அன்பில்லாத இவன், நம்மிடத்தில் அன்புடையவனா யிருப்பானென்பது என்ன நிச்சயம்; மேலும் இராக்ஷதர்களை நம்பலாகாது; இவன் செய்கை அறிவுடையோர் வெறுக்கத் தக்கதா யிருக்கின்றது;

‘தகையுறு தம்முனைத் தாயைத் தந்தையை
மிகையுறு குரவரை யுலகின் வேந்தனைப்
பகையுற வருதலுந் துறந்த பண்பிது
நகையுற லன்றியு நயக்கற் பாலதோ’

தருமத்தையே விரும்பினபோதிலும் பந்துக்களை யெல்லாம் விட்டுப் பகையாளிகளிடம் சேர்ந்து கொள்ளுதல் நீதியாகுமா?

‘விண்டுழி யொருவிலை நிற்பர் மெய்ம்முகம்
கண்டுழி யொருவிலை நிற்பர் கைப்பொருள்
கொண்டுழி யொருவிலை நிற்பர் கூழுடன்
உண்டுழி யொருவிலை நிற்ப ருற்றவர்’

நல்ல பந்துக்களுடைய செய்கை இதுவாயிருக்க இவன் இராவணன் செழிப்புற்றிருக்குங் காலத்தில் உடனிருந்துண்டு வாழ்ந்து கேடுற்ற காலத்தில் அவனைப் பிரிந்து வந்துவிட்டான். இத்தகைய விசுவாச காதகனை நாம் சேர்க்கலாகாது," என்று கூறினான். அதன்மேல் இராமர், பக்கத்தில் நின்ற சாம்புவந்தன், நீலன் முதலியவர்களுடைய அபிப்பிராயத்தைக் கூறும்படி அவர்களிடம் சொன்னார். அவர்கள்,

" தங்குலக் கிளைஞரைத் தருக்கும் போரிடைப்
பொங்குநர்க் கொன்றவர்க் கெளியர் போந்தர்வ
மங்கையர் திறத்தினின் வயிர்த்த சிந்தையர்
சிங்கலில் பெரும்பொரு ளிழந்து சீறினோர்.

பேரபி மானங்க ளுற்ற பெற்றியோர்
போரிடைப் புறங்கொடுத் தஞ்சிப் போந்தவர்
நேர்வரு தாயத்து நிரப்பி னோர்பிறர்
சீரியர் கிளைஞரை மடியச் செற்றுளோர்.

அடுத்தநாட் டரசியல் புடைய வாணையாற்
படுத்தவர்ப் பட்டவர் பகைஞ ரோடொரு
மடக்கொடி பயந்தவர் மைந்த ராயினும்
உட்கொளத் தகையர்நம் முழைவந் தொன்றினால்"

இவனோ இத்தகைய துர்க்குணங்களிற் பெரும்பான்மையான தீக்குணங்கள் பொருந்தியவனா யிருக்கின்றான்; ஆதலின், இவனை நாம் சேர்த்துக் கொள்ளுதல் தகாது" என்று கூறினார்கள். அதன்மேல் இராமர் மிகுந்த மதிநுட்ப முடையவராகிய அனுமாரைப் பார்த்து "உன்னுடைய அபிப்பிராயமென்ன?" என்று வினவினார். அதற்கு மாருதி வணக்கமாக இராமபிரானைத் தொழுது நோக்கி, "சுவாமி! இங்கே மற்ற பெரியோர்கள் கூறிய அபிப்பிராயங்களெல்லாம் உயர்ந்த நீதியோடு பொருந்தியவைகளே; ஆயினும், அடியேன் கண்

ஞூரக்கண்ட சில காரியங்களைக் கொண்டு இந்த விபிஷணர் விஷயத்தில் ஒருவிதமான அபிப்பிராயங் கொண்டிருக்கிறேன்; அதைவெளியிடுகிறேன் கேட்டருளவேண்டும்; நான் இலங்கைக்குச் சென்றிருக்குங் காலத்தில் இராவணன் என்னைக் கொல்ல முயன்றபோது அவனிடத்தே 'தூதரைக் கொல்வது தருமமாகாது' என்று நீதி கூறி இவர் அதனை விலக்கி விட்டார். இராத்திரி காலத்தில் நான்இவருடைய மாளிகையில் பிரவேசித்தபோது அதுபிராமணகிருகம்போல் பிரகாசித்துக்கொண்டிருந்தது; அங்கே நற் சகுனமும் உண்டாயிற்று. இவருடைய குமாரத்தியாகிய திரிசடை யென்பவள் சீதாபிராட்டியாரின் பக்கத்திலிருந்து பல தைரியமான வார்த்தைகளைக் கூறி, இராவணனாலும், மற்ற இராக்ஷஸிகளாலும் பிராட்டியாருக்கேற்பட்டஅச்சத்தை நீக்கிக்கொண்டிருந்தாள். மேலும் இவருடைய முகக்குறிப்பால் இவர் வஞ்சனையற்றவரென்பது விளங்குகின்றது; இவர் தங்களுடைய மகிமையைக் கேள்விப்பட்டுத் தங்களுடைய கிருபையைப் பெற்றுப் பரமபத வாழ்வை யடைய வேண்டுமென்று இங்கு வந்திருக்கின்றாரேயன்றி வேறொன்றையும் குறித்து வரவில்லை; மேலும் இராக்ஷதர்களுடைய அரசாட்சியானது கொடுங் கோன்மையுடையதாதலின் அதனை வெறுத்துவிட்டார்; அதனால் இவரைச் சகோதரத்துரோகி என்று நாம் கருதலாகாது; இவர் இலங்கை இராஜ்ஜியத்தையும் விரும்பினவரல்லர்; களங்கமற்ற மனதுடையவர்; மேலும் இராக்ஷதர்களுடைய வஞ்சனைகளோ அளவிடற்கரியன; அவற்றை உணர்ந்து கொள்வதற்கும் இலங்கையின் அரண் முதலியவற்றைத் தெரிந்து கொள்வதற்கும் இவருடைய துணை நமக்கவசியமாகின்றது: இராக்ஷதர்களை ஜெயிப்பது நமக்கெளிதாயினும், பகைவருடைய இரகசியங்களைத் தெரிந்துகொண்டு நாம் போர் தொடங்குவோமானால் இன்

னும் எளிதாகும்; ஆதலின், இவரை நாம் ஏற்றுக்கொள்வதே நல்லதென்று என் புத்தியிற் படுகின்றது" என்று சொன்னார்.

இவற்றை யெல்லாம் கேட்டதும் இராமர் சந்தோஷித்து, மற்றவர்களை நோக்கி, "அனுமான் கூறியது சிரேஷ்டமான ஆலோசனை யாகும்; அந்த விபீஷணன் தோஷ மற்றவனாகவே விளங்குகின்றான்; அவன் எப்படியிருந்தாலும் சரி; அடைக்கலம் புகுந்தவனைத் தள்ளுதல் தகாது;

'உய்யகிற் கபய மென்றா னுயிரைத்தன் னுயிரி னோம்பாக்
கய்யனு மொருவன் செய்த வுதவியிற் கருத்தில் லோனும்
மய்யற நெறியி னோக்கி மாமறை நெறியி னின்ற
மெய்யினைப் பொய்யென் றானு மீள்கிலா நரகின் வீழ்வார்,

ஆதலின் இவனைத் தள்ளக்கூடாது" என்று சொல்லிச் சுக்கிரீவனைப் பார்த்து "சூரிய குமாரனே! நீ சந்தேகப்படாமல் விபீஷணனை என்னிடத்திற்கு அழைத்துவா" என்று கூறினார். சுக்கிரீவன், விபீஷணனை அழைக்கச் சென்றான். அப்போது மயிந்த னென்னும் சேனைத்தலைவன், சுக்கிரீவனை விபீஷணனுக்குக் காட்டி, 'இராகவர் உம்மை அழைத்துக்கொண்டு வரும்படி இந்தச் சுக்கிரீவரை அனுப்பி யிருக்கின்றார்' என்றான். உடனே விபீஷணன் சுக்கிரீவனை எதிர்கொள்ளச் சென்றான்.

"தொல்லருங் கால மெல்லாம் பழகினுந் தூய ரல்லார்
புல்லல ருள்ளந் தூயார் பொருந்துவ ரெதிர்ந்த ஞான்றே
ஒல்லைவந் துணர்வு மொன்ற விருவரு மொருநா ளுற்ற
எல்லியும் பகலும் போலத் தழுவின ரெழுவிற் றோளார்"

இவ்வாறு சுக்கிரீவனும், விபீஷணனும் தழுவிக்கொண்ட பின்பு, சுக்கிரீவன் விபீஷணனை நோக்கி, "இராகவர் உமக்கு

அபயங் கொடுத்தார். நீர் சீக்கிரம் வந்து அவரடியை வணங்கிக்கொள்ளும்" என்று கூறினன். அந்த வார்த்தை செவிகளில் நுழைவதற்கு முந்தியே விபீஷணன், "நான் பெரும் பாக்கியசாலியாய் விட்டேன்; தமக்கு மிக்க விரோதியின் தம்பியான என்னிடத்திலும் இராகவர் பக்ஷம் வைத்தாரென்றால் நான் அவருடைய பெருங்குணத்தை என்னென்றுரைப்பேன்" என்று கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருக உடல் புளகிக்கக் கூறினன். அதற்குச் சுக்கிரீவன், "நம்முடைய சுவாமி, தம்மைச் சரணடைந்தவர் எவரானாலும் அவர்களை ஆதரிக்கத்தக்க அருங்குணமுடையவர்; நீர் விரைந்து சென்று அவருடைய கிருபையைப் பெற்றுக்கொள்வீராக" என்றான். உடனே விபீஷணனவன், சுக்கிரீவனும் மற்ற வானர வீரர்களும் புடைசூழ வந்து, ஸ்ரீ ராமருடைய உருவத்தைக் கண்களாரக் கண்டு பலவாறு புகழ்ந்து, இராஜகிரீடத்தை நீக்கிவிட்டுக் கைகளைச் சிரசிற் கூப்பிக்கொண்டு போய் அந்த இராமரின் அடித்தாமரைகளில் வீழ்ந்து பணிந்தான். இராகவர் அவன்மீது அன்புடையவராய், 'எழுந்திருக்கக்கடவாய்' என்று அவனுக்குக் கட்டளையிட்டு அவனைக்கடாக்ஷித்து நோக்கி இனிய வசனங்களால், 'இந்த உலகமும் என் பெயரும் எத்தனை காலமிருக்குமோ அதுவரை இலங்கையின் ஐசுவரிய முழுமையும் உனக்கே சொந்தமாகும்படி நான் அவற்றை இப்போது கொடுத்து விட்டேன்' என்று வாக்குத்தத்தம் பண்ணினர். அதைக்கேட்டு எல்லோரும் தங்கள் தங்களுக்குப் பெரிய செல்வம் கிடைத்ததுபோல நினைத்து மகிழ்ந்தார்கள். விபீஷணன், 'நான் கிருதார்த்தனானேன்' என்று பன்முறை இராமருடைய பாதங்களில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து பணிந்து பணிந்தெழுந்தான். அப்படிப்பணிந்த விபீஷணன்மீது இராமர் மேன்மேலும் மிக்க கருணையுடையவராய், இளைய பெருமாளை நோக்கி, 'இலக்கு

மணா! குற்றமற்ற உள்ளத்தையுடைய இந்த விபீஷணனுக்கு இலங்கை ஆட்சி உரியதென்பதற் கறிகுறியாக நீ முடி சூட்டக்கடவாய்' என்று கட்டளையிட்டார். அப்போது விபீஷணன் இராமரை நோக்கி, "சுவாமி! இந்த ஏழைமீது கிருபை கூர்ந்து எனக்கு நீர் முடிசூட்டச் சொன்னது சரியே. ஆயினும், மகா கொடிய இராக்ஷஸனான இராவண னுக்கு நான் தம்பியென்ற சம்பந்த மொழியும்படி, தேவரீர், திருத்தம்பியாராகிய பரதாழ்வாருக்குச் சூட்டிய தங்கள் திருப்பாதுகையையே அடியேனுக்கும் முடியாகச் சூட்டி யருளவேண்டும்" என்று இரந்து கேட்டுக்கொண்டான். அதைக்கேட்டவுடன் இராமர் மனமுருகி, "விபீஷணா! முத வில் நான் மூன்று சகோதரர்களோடு பிறந்தேன்; பின்னர் நாங்கள் குகனோடு சேர்ந்து ஐந்து பேர்களாயினோம்; அதன் மேல் சுக்கிரீவனைச் சேர்ந்து ஆறுபேர்களாயினோம்; இப் போது உன்னோடு கூடி ஏழுபேர்களாயினோம்" என்று சொன்னார். உடனே விபீஷணன், "இதினும் மேம்பட்ட பாக்கியமும் எனக்கினி வேறுண்டோ" என்று இராகவரு டைய திருப்பாதுகையை எடுத்து முடியிற் சூட்டிக்கொண்டு நின்றான். இராமலக்குமணரும், மற்றவர்களும் அவனுடைய பக்தியை வியந்து சந்தோஷித்தார்கள். தேவர்கள் புஷ்ப மாரி பொழிந்தார்கள்.

அதன்மேல் இராகவர், சுக்கிரீவனையும், இலக்குமண னையும் பார்த்து, "இனி நீங்கள் இலங்காதிபத்திய முழுவ தும் விபீஷணனுக்கே சொந்தமாகும் என்று கட்டியங்கூறச் செய்து, இந்த விபீஷணனை விமானத்திலேற்றி நம் பாடிவீட் டைச்சுற்றி வானரசேனைகளுடன் ஊர்வலம் வரச்செய் யுங்கள்" என்று கட்டளையிட்டார். அவ்வாறே வானரர் சில ரால் கட்டியங்கூறப்பட்டது. ஊர்வலமும் நிறைவேறிற்று. தேவர்களும் முனிவர்களும் சந்தோஷித்தார்கள். ஊர்வலம்

வந்த விபீஷணன் இராமரைப் பணிந்து நின்றான். பின்னர் இராமர் கட்டளையால் அவனுக்கொரு விடுதி கொடுக்கப்பட்டது. அதில்போய் அவன் அகமகிழ்ச்சியோடு தங்கியிருந்தான். சூரியாஸ்தமனமாயிற்று. இரவு வந்ததும் இராமர் சீதையை நினைத்து வருந்தினார். அப்போது சுக்கிரீவன் அவரை நோக்கி, "சுவாமி! இனி விபீஷணரோடு கலந்து ஆலோசித்து மேல்நடக்க வேண்டிய காரியங்களிற் பிரவேசியாமல் இப்படித் துக்கப்படுவது தகுதியாமோ?" என்றான். உடனே இராமர் கவலை நீங்கி அப்போதே விபீஷணனை அழைத்துவரும்படி சுக்கிரீவனுக்குக் கட்டளையிட அவன் அவ்வாறே அழைத்துவந்தான். இராமர் விபீஷணனைப் பக்கத்தில் உட்காரச் செய்து அவனைப்பார்த்து, "தம்பி விபீஷணா! நாம் விரைவில் இராவணனோடு யுத்தந்தொடங்கப் புறப்படவேண்டி யிருப்பதனாலே இலங்கையின் இரகசியங்களை யெல்லாம் தெரிந்து கொள்ளவேண்டும்; ஆதலின் அவற்றை நீ விவரமாகக் கூறக்கடவாய்" என்று சொன்னார்.

அப்போது விபீஷணன் இருகரங்களையுங் கூப்பிக்கொண்டு இராமர் திருமுகத்தை நோக்கி, "சுவாமி! முன்னொரு காலத்தில் ஆதிசேஷனும், வாயு பகவானும் தங்கள் தங்களுடைய வல்லமைகளைப்பற்றி உயர்த்திப்பேசி வாது செய்து கொண்டார்கள். அந்த வாதத்தில் ஒவ்வொருவருடைய வலிமையையும் அளந்தறிதற்பொருட்டு ஆதிசேஷன் மேருமலையை மூடிக்கொள்கிறதென்றும், வாயு அவனைப் பெயர்த்துத்தள்ள முயற்சி செய்கிறதென்றும், இவற்றில் யார் தம்முடைய காரியத்தை நிறைவேற்ற முடியாமற்போகிறாரோ அவரே வலியிற் குறைந்தவரென்றும் தீர்மானித்துக் கொண்டு, இருவரும் தாங்கள் குறித்த காரியங்களைச் செய்தார்கள். அப்போது வாயு தன்னுடைய முழுப் பலத்தை

புங்கொண்டு மோதினதால் மேருவின் ஒரு சிகரம் சிதைந்து சமுத்திரத்தில் வீழ்ந்தது; அதுவே இலங்கைத் தீவாயிற்று; அந்த இலங்கை எழுநூறு யோசனை விஸ்தாரமுள்ளதாகும்; அதைச் சூழ்ந்த கோட்டை இலட்சம் யோசனை ஆழ்ந்ததும், சூரிய மண்டலத்துக்கு மேற்பட்டு உயர்ந்ததுமாகும்; அதைச் சுற்றிலுமுள்ள யந்திர தந்திரங்கள் எண்ணில; அந்தக் கோட்டைக்குச் சமுத்திரமே அகழியாக விருக்கின்றது; அந்தக் கோட்டையின் வடக்கு வாசலில் பதினாறு கோடி அரக்கர்கள் காவலா யிருக்கின்றார்கள்; மேற்கு வாசலில் பதினெட்டுக்கோடி அரக்கர்களுண்டு; தெற்கு வாசலில் பதினாறு கோடி பேர்களிருக்கின்றார்கள்; கிழக்கு வாயிலிலும் பதினாறு கோடி அரக்கர் காவல் புரிகின்றார்கள்; இவர்களெல்லோரும் எமனும் அஞ்சத்தக்க வல்லமையுடையவர்கள்; ஆகாயத்தில் முப்பத்திரண்டு கோடி பேர்கள் காவலிருக்கின்றார்கள்; பூமிக்குள் பதுங்கிக்கொண் டிருப்பவர்களுக்குக் கணக்கே கிடையாது; அந்தக் கோட்டைக்கு உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் ஆயிரங்கோடி அரக்கர்கள் காற்றையே ஆகாரம் பண்ணிக்கொண்டு காற்றுடியைப் போலச் சுற்றித்திரிந்து காவல் புரிகின்றார்கள்; அந்த இலங்கைக்கு இதேவிதமான மூன்று அரண்களுண்டு; அவைகளைக் காக்கின்ற இராக்ஷதர்கள் தொண்ணூறு கோடிபேர்கள்; இன்னும் இராவணனுக்குப் படைத்துணையாய் ஆயிரத்தறுநூறு கோடி இராக்ஷதர்க ளிருக்கின்றார்கள்; அவனுடைய அரண்மனை வாசலில் கோடிகோடி இராக்ஷதர்களிருக்கின்றார்கள்; இன்னும் அவனுடைய இராஜமாளிகையின் வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் விஷக்கண்ணர்களும், அக்கினிக் கண்ணர்களும், கோபக்கண்ணர்களும், இமையா நாட்டம் பெற்றவர்களுமாகிய அறுபத்துநாலுகோடி இராக்ஷதர்க ளிருக்கின்றார்கள்; இன்னும் ஆயிரம் வெள்ளம்

சைனியங்கள் அவனுக்கு மூலபலமாயிருக்கின்றன; பதினுயிரம் தேரும் இருபதினுயிரம் யானைகளும் நாற்பதினுயிரம் குதிரைகளும், எண்பதினுயிரம் ஒட்டகங்களு மிருக்கின்றன; இராவணன் தவஞ்செய்து சிவனிடத்தில் வாளாயுதம் பெற்றிருக்கின்ருன்: அவனுக்குத் துணையானவர்களும் அநேகம் வரங்களையும் பலங்களையும் பெற்றிருக்கின்ருர்கள். ஐராவதத்தைப் பின்னிடச் செய்தவனும், தேவர்களைப் புறங்கண்டவனும், அஷ்டதிக்கஜங்களுடையவலிய கொம்புகளைப் பிடுங்கிக் கொண்டவனுமான கும்பகர்ணன் இராவணனுடைய தம்பி; இராவணனுடைய மூத்தபிள்ளையாகிய இந்திரஜித்து இந்திரனை வென்று சூரிய சந்திரர்களைச் சிறை வைத்தவன்; அதிகாயனென்பவன் அவனுக்குத் தம்பி; அவன் அந்த இந்திரஜித்தையும் ஜெயிக்கத்தக்கவன்; இவ்விருவரன்றி இராவணனுக்கு தேவாந்தகன், நராந்தகன், திரிசிரா என்னும் மூன்று பிள்ளைகளுண்டு; அவர்கள் திரிமூர்த்திகளையும் ஜெயிக்கத் தக்கவர்கள். இராவணனுடைய பலமோ அளவிடற் கரியது. அவன், பிரமாவின் பௌத்திரரும், காசிபரின் புத்திரருமான புலஸ்தியருடைய புத்திரன். அவன் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்து எல்லாச் சிறப்புக்களையும் பெற்ருன்; கைலையையும் பெயர்த்தான்; அஷ்டதிக் கஜங்களையும் தந்தங்கள்முறியும்படி தாக்கினுன் ; தேவர்களை நடுங்கச் செய்தான் ; காலகேயர்களைக் கொன்ருன் ; குபேரனும் அவனுக்கெதிர் நிற்கமாட்டாமல் அந்த இலங்கையைவிட்டு ஓடிப்போய்விட்டான் ; யமனும் அவனுக்குப் பயந்திருக்கின்ருன் ; சூரியன் பயந்து இலங்கையை விட்டொதுங்கிச் செல்கின்ருன் ; இன்னும் அந்த இராவணன் வருணனை ஜெயித்து அவனுடைய பாசத்தைப் பிடுங்கிக் கொண்டான். அந்த இராவணனுடைய பலம் தேவரீரால்

அழியுமேயன்றி மற்றொருவராலும் அழியாது. அவன் இவ்வளவு அரண்களோடும் பலத்தோடும் இருந்தும் ஆஞ்சனேனேயர் அங்கே வந்தபோது அவரால் அநேகம் இராக்ஷதர் மடிந்து போயினார்கள்; இலங்கைநகரும் சுட்டெரிக்கப்பட்டது. இன்னும் இராவணனுடைய பஞ்ச சேனாதிபதிகளையும், எண்பதினாயிரம் கிங்கரர்கள், ஜம்புமாலி யென்னும் மகாவீரன் ஆகிய இவர்களையும் அனுமார் மடித்துவிட்டார். இராவணன் கனிஷ்ட புத்திரனாகிய அக்ஷய குமாரனும் மாருதியால் கொல்லப்பட்டான்; இலங்கை எரிக்கப்பட்ட போது மாண்ட இராக்ஷதர்களுக்களவில்லை; இராவணன் அந்த இலங்கையில் இருக்கச் சகிக்காமல் ஏழு நாள் வரை ஆகாயத்திலே நின்றுவிட்டான். இலங்கை எரிந்த பின்பு இராவணன் பிரமதேவரைக்கொண்டு மீண்டும் அதனைப் புதிப்பித்துக்கொண் டிருக்கின்றான்; நான் இந்த அனுமாருடைய பிரதாபத்தைக் கண்ணாரக் கண்டதனாலும், தங்களுடையமகிமையைக் கேள்விப்பட்டதனாலுமே இனி இராவணன் அழிந்து போவானென்றுறுதி கொண்டு தங்கள் திருச்சமுகத்தில் வந்து அடைக்கலம் புகுந்தேன்" என்று கூறினான்.

அனுமார், இலங்கையை எரித்ததையும், இராக்ஷதர்களை மடித்ததையும் முன்னே இராமரிடம் சொல்லவில்லை. ஏனெனில் அவற்றால் தமக்குத் தற்பெருமை யுண்டாகுமென்று அவற்றை நீக்கி மற்றவைகளை மாத்திரம் கூறினார். அதனால், விபீஷணர் மூலம் ஆஞ்சனேயருடைய வல்லமைகளைக் கேள்விப்பட்டவுடனே இராமர் அதிசயித்து அனுமாரைப் பார்த்து, "மாருதி! நீ இராவணனுடைய பலத்தில் பாதியைக் குறைத்துவிட்டாய்; சீதையையும் நீயே அழைத்துக் கொண்டு வந்திருப்பாய்; அதனால் என்னுடைய வீரம்

விளங்காமற் போகுமென்று அவனை விட்டு வந்தாய் போலும்? அப்படியானாலும் நாங்கள் இனி இலங்கைக்குப் போய்ச் செய்து பெருமை யடையவேண்டிய பெருங்காரியம் ஒன்றுமில்லை; ஏன்னால் இராவணனுக்கு எவ்வளவோ பலங் குறைந்துவிட்டது; இவ்வளவு காரியங்களை நீ முடித்தும் தற்பெருமை யுண்டாகுமென்று அவற்றை யெல்லாம் என்னிடம் சொல்லாமல் விடுத்திருக்கின்றனை; உன்னுடைய பெருமையை நான் என்னென்றுரைப்பேன்; என்னுடைய செல்வ மெல்லாம் உருவெடுத்து வந்ததுபோன்ற ஆஞ்சனேயா! நீ மறு கற்பத்தில் பிரமதேவருடைய பதவியை அடையக் கடவாய்" என்று வாழ்த்தினர். அனுமார் அவருடைய பாதங்களில் வீழ்ந்து சேவித்து ஒன்றும் பேசாமல் வாய்பொத்திக்கொண்டு நின்றார். அவருடைய பிரதாபத்தைக் கேள்விப்பட்ட சுக்கிரீவன் முதலானவர்களும் ஆச்சரியமடைந்து அவரைப் பலவாறு கொண்டாடினர்கள்.

வருணன் அடைக்கலம்.

பின்பு விபீஷணன், இராமரை நோக்கி, "சுவாமி! இனிக் கடலைத்தாண்டி இலங்கைக்குப் போகும் மார்க்கத்தைத் தேடவேண்டும்; அதற்கு வருணனுடைய உதவி அவசியமாகின்றது; ஆதலால் சமுத்திர இராஜனாகிய வருணனை வரவழைக்க வேண்டும்" என்று கூறினன். இராமர் விபீஷணனுடைய வார்த்தை நன்று யிருக்கிறதென்று அவன் கூறியதைச் செய்ய, வானர சைனியங்களோடு சமுத்திரக்கரையின் ஓரத்தில் சென்றார். அப்போது இராக்காலம் வந்தது; சந்திரோதயமு மாயிற்று. அவ்விடத்தில் இளைய பெருமாள் இராமருக்குத் தருப்பாசயனம் அமைத்துக் கொடுத்தார். வருணனை வரவழைப்பதற்காக இராமர் அந்தத் தருப்பாசயனத்தில் வருண மந்திரத்தை ஜெபித்துக்

கொண்டு சயனித்திருந்தார். இவ்வாறு ஏழு நாள் வரை சயனித்திருந்தும் வருணன் வரவில்லை. அதனால் இராமர் கடுஞ்சின மடைந்து, "நாம் மனைவியைப் பிரிந்து வருந்திக் கடலைத் தாண்டிச் செல்ல உதவி பெறும் பொருட்டு அந்த வருணனை வரும்படி வேண்டியும் அவன் வழிகொடுத்தற்கு வாராதிருக்கின்றான்; அவன் நம்மைக் கேவலமான மனித னென்று நினைத்து விட்டான் போலும்; ஒருவர் மற்றொருவ ரிடத்தில் ஒன்றைப் பெற்றுக் கொள்வதானால் தங்கள் அதி காரத்தைக் காட்டினால் மாத்திரந்தான் அது நிறைவேறும்; இரந்து கேட்பது எளிதிற் கைகூடாது; ஆதலின், இந்த வருணனிடத்தில் நம்முடைய வல்லமையைக் கொஞ்சம் காட்ட வேண்டும்; ஒரு நிமைப்போதில் இந்தச் சமுத்திர ஜலத்தை யெல்லாம் வறட்டி இதன் வழியாக என்னுடைய சேனைகளெல்லாம் நடந்து போகும்படி நான் செய்கிறேன்" என்று இலக்குமணனை நோக்கி, "வில்லைக் கொடு கொடு" என்று கேட்டார். உடனே இளையபெருமாள் அவரிடம் வில் லைக்கொடுத்தார். இராமர் அதை வாங்கி வளைத்து அதில் வடவாமுகாக்கினியிலும் மிகுந்த உக்கிரத்தையுடையபாணங் களைத் தொடுத்துச் சமுத்திரத்தின்மீது பிரயோகித்தார். அந்த இராம பாணங்கள் சப்தசாகரங்களையும் சுட்டெரித் துச் சக்கரவாளகிரிக் கப்புறத்திலிருக்கின்ற இருளையும்நாசப் படுத்தி விட்டன. சமுத்திரங்களிலிருந்த சகல ஜீவராசிகளும் மாண்டு பிரமபத மடைந்தன. அப்படி எல்லாம் வெந்தும் வருணன் வரவில்லை. அதனால் இராமர் முன்னிலும் அதிக கோபங்கொண்டு, பிரமாஸ்திரத்தை யெடுத்து வில்லிற் பூட் டினார். அப்போதே வருணனுக்கு நாவறண்டு போயிற்று. அதனால் அந்த வருணன் கண்ணீர் விட்டுக்கொண்டு, மனம் நடுங்கி, வாய்குளறி, வேகின்ற தலையோடும், கருகிய மேனி யோடும், தொழுத கையோடும் புறப்பட்டு எங்கும் மிகுந்த

புகைசூழ்ந்துகொண் டிருந்தபடியால் வழி தெரியாமல் தட்டுண்டு தடுமாறி மிகுந்த வருத்தத்துடனே ஓடி இராமருக்கெதிரில் நின்று, "சுவாமி! நான் கடலுக்கப்புறம் நின்றதால் தேவரீர் என்னைச் சிந்தித்ததை உணராமற்போயினேன்; உம்முடைய கோபத்தை அடியேனால் பொறுக்கமுடியுமோ? நீர் கோபத்தைத் தணித்தருளவேண்டும்; எளியேனை இரக்ஷித் தருளவேண்டும்; எனக்குத் தாயும் நீரே! தந்தையும் நீரே" என்று ஸ்தோத்திரம்பண்ணி அவருடைய பாதங்களில் வீழ்ந்து பணிந்தான்.

அப்போது இராமமூர்த்தி கோபந்தணிந்து வருணனை நோக்கி, "சமுத்திர ராஜனே! நாம் கோபமாறினோம்; நீ பயப்படாதே; நாம் உன்னைச் சிந்தித்தும் நீ வாராமலிருந்ததற்குக் காரணமென்ன?" என்று வினவினார். அதற்கு வருணன், "சுவாமி! ஏழு சமுத்திரங்களுக்கும் அப்புறத்தில் மீன்கள் சண்டை செய்துகொண் டிருந்ததை நான் விலக்கப் போயிருந்தேன்; அதனால் தாங்கள் சிந்தித்ததை நான் அறியமாற் போயினேன்; கொஞ்சமேனும் தெரிந்திருந்தால் நான் வாராமலிருப்பேனா" என்று சொன்னான். அதன்மேல் இராமர் இரக்கமுற்று, அவனிடத்தில் "அஃதிருக்கட்டும்; நான் உன்மீது தொடுத்த இந்தப்பாணம் வீண்போகமாட்டாது; ஆதலின் இதைப் பிரயோகிப்பதற்கு ஓர் இலக்குப் பார்த்துச்சொல்" என்றுரைத்தார். அதற்கு வருணன், "சக்கரவர்த்தி குமாரரே! மருகாந்தார*மென்னுந் தீவிலே நூறுகோடி பேர்களுக் கதிகமாகிய அசுரர்களிருக்கின்றார்கள்; அவர்கள் இவ்வுலகத்திலுள்ள அநேகம் ஜீவன்களைத் தின்றுவிட்டார்கள்; எனக்கும் அவர்கள் மிக்க பகையாளிகள்; ஆதலின் இந்தப் பாணத்தை அவர்கள்மீது செலுத்தவேண்டும்" என்று சொன்னான். இராமர் அப்படியே அந்த அசுரர்களைச் சங்கரித்து வரும்படி தாம் வில்

வில் தொடுத்திருந்த பிரமாஸ்திரத்தை எவினுர். அது சென்று ஒரு நிமைப்போதில் அவர்களை நாசமாக்கி விட்டுத் திரும்பி வந்து இராமருடைய அம்பருத் தூணியில் சேர்ந்தது. அதன்மேல் இராமர் வருணனை நோக்கி, "சமுத்திர ராஜனே! இராவணுதி இராக்ஷதர்களை மடிப்பதற்கு நாங்கள் இந்தச் சமுத்திரத்தைத் தாண்டிச் செல்லவேண்டும்; அதற்கு நீ வழி காட்டவேண்டும்" என்று சொன்னுர். உடனே வருணன், "சுவாமி! இந்தக்கடல் மிக்க ஆழமுடையது; இதன் ஜலத்தை வேறுபாயங்களால் அகற்றுதல் முடியாது; ஆதலின் நான் இதன்மேல் அடுக்கும் வஸ்துக்களை விழவொட்டாமல் தாங்கிக் கொள்கிறேன்; தேவரீர் என்மீது ஓர் அணையைக்கட்டி அதன் வழியாக இலங்கைக்குச் செல்லலாம்" என்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டான். உடனே இராமர் மலைகளைக் கொண்டுவந்து வருணன் சொன்னபடி அடுக்கிச் சேதுகட்டும்படி வானரர்களுக்குக் கட்டளை யிட்டுவிட்டுத் தம் இருப்பிடம் போய்ச்சேர்ந்தார். வருணனும் இராமரிடம் விடை பெற்றுக்கொண்டு அணைக்கட்டைத் தாங்குவதற்குப் போய்விட்டான்.

சேது பந்தனம்.

பின்னர், சுக்கிரீவன் அநேகம் வானர மந்திரிகளுடனும், விபீஷணனுடனும் அணைக்கட்டவேண்டிய விஷயத்தைப் பற்றி ஆலோசித்து அதற்காக வானர தச்சனுகிய நளனை வரவழைத்து அவனிடத்தில், "சமுத்திரத்தில் அணைக் கட்டவேண்டும்" என்றுன். நளன், 'மலைகளைப் பெயர்த்தெடுத்துக்கொண்டு வரும்படி நம் வானரசேனைகளுக்குக் கட்டளையிட்டால் அச்சேனைகள் அவற்றைக்கொண்டு வரும்; நான் அந்த மலைகளால் சேதுவைக் கட்டிமுடிப்பேன்' என்றுன். சாம்புவந்தர் அவ்வாறே மலைகளைக் கொண்டுவருமாறு

வானரர்களுக்குக் கட்டளையிட்டார். உடனே வானரர்கள் வெகு தூரங்களிற் சென்று அநேகம் மலைகளைப் பெயர்த்துத் தோள்களிலும் சிரசிலும் சுமந்துகொண்டும், காலால் உருட்டிக்கொண்டும், வாலிற்கட்டி யிழுத்துக்கொண்டும் வந்து நளனிடம் சேர்த்தார்கள். அவன் அவைகளை வானரர்கள் எடுத்துக்கொடுக்கக் கொடுக்க ஒருகையை நீட்டி வாங்கி வருணன் முதுகில் வைத்தடுக்கி உயரமாகவும் ஒழுங்காகவும் அணையைக் கட்டி முடித்தான். மூன்று நாட்களுக்குள் சேதுகட்டி முடிவுபெற்றது. அதன்மேல் சுக்கிரீவனும், மற்றுமுள்ள வானரத்தலைவர்களும் இராமரிடம் வந்து வணங்கி, "சுவாமி! நூற்றிரண்டு யோசனை நீளமும், பத்து யோசனை அகலமுமான சேதுகட்டி முடிந்தது" என்று கூறினார்கள்.

ஒற்றரை விடுத்தல்.

அப்போது இராமர் சந்தோஷித்து அவ்வாறு திருவணைக் கட்டி முடித்த நளனை மார்போடு சேர்த்துத் தழுவி அவனுக்கு உபசார வார்த்தைகள் கூறிவிட்டுப் பின்னர் எல்லோரையும் அழைத்துக் கொண்டுபோய் வெகு விசித்திரமாகக் கட்டப்பட்டிருக்கும் சேதுவைப் பார்த்துச் சீதாபிராட்டியாரைக் கண்டதுபோலவே மகிழ்ந்து, 'நீங்கள் இவ்வளவு விரைவில் இந்த அணையைக் கட்டி முடித்தது மிகவும் அருமை' என்று வானரர்களைக் கொண்டாடிச் சைனியங்களுக்கு முன்னே விபீஷணனும், பின்னே ஆஞ்சநேயரும் நின்று அவற்றை நடத்திக்கொண்டு சேதுவின்மேற் செல்லும்படி அவர்களுக்கு ஆக்ஞாபித்து, அவர்களும் சேனைகளும் முன்னே செல்ல, தமக்குப் பின்னே இளைய பெருமாள் செல்லத் தாம் உற்சாகத்தோடு இலங்கை நோக்கிச் சென்றார். வானர சேனைகள்நெருக்கமாகப் பற்பல விநோதங்களைச் செய்துகொண்டு சென்றன. இராகவர் மீது

சூரிய வெப்பம் படாமல், சில வானரர்கள் சந்தன விருக்ஷங்களையும், சுரபுன்னை விருக்ஷங்களையும் பிடுங்கிக் குடையாகப் பிடித்துக்கொண்டு சென்றார்கள். இன்னும் பல வானரர்கள் மரக்கிளைகளால் குளிர்ந்த பரிமளக்காற்று வீசும்படி இராமர் மீது விசிறிக்கொண்டே சென்றார்கள். இவ்விதமாகச் சென்ற இராமர் சேனைகளுடன் சேதுவைக் கடந்து அக்கரை சேர்ந்து இலங்கா நகரத்தின் சமீபத்திலிருக்கின்ற ஒரு மலையின்மேல் தங்கி, நீலனென்கின்ற வானரவீரனை நோக்கி, "நாமும் நம்முடைய சேனைகளும் தங்குவதற்குத் தக்க பாடி வீடுகளை நீ அமைக்கக் கடவாய்" என்று கட்டளை யிட்டார். அவன் அக்கட்டளையை நளனுக்குச் சொன்னான். நளன், தன் பிதாவாகிய மயனும் நாணமடையும்படி ஒவ்வொருவருக்கும் தகுதியாகக் கூடாரங்கள் அமைத்து விட்டு, இராமருக்கு அம்மலைச் சிகரத்தில் சிறப்பான பர்ணசாலை யொன்று கட்டி முடித்தான். எல்லோரும் தங்கள் தங்களுக்குரிய ஸ்தானங்களிற் சேர்ந்திருந்தார்கள். அப்போது சூரியன் அஸ்தமிக்க மூன்றாம் பிறைச்சந்திரன் உதயமாயிற்று.

அந்தச் சந்திரோதயமானது இராமருக்குச் சீதையின் நினைவை யுண்டாக்கி மிகுந்த மனக்கலக்கத்தை விளைவித்தது. அதனால் அவர் மிகுந்த துயரப்பட்டுக் கொண்டிருந்தார். அப்படி யிருக்கும்போது இராவணன், இராமர் முதலியவர்கள் அங்கே வந்திருப்பதையுணர்ந்து அவர்களுடைய பலாபலங்களைத் தெரிந்து வரும்படி இரண்டு ஒற்றர்களை அவர்களிருக்குமிடத்திற் கனுப்பினான். அவர்கள் குரங்கின் வடிவமெடுத்துக் கொண்டு வந்து வானர சேனைக்குள் இரகசியமாகப் புகுந்து சேனையின் அளவைக் கணக்கிட்டுக் கொண்டு திரிந்தார்கள். அப்போது மகாவிவேகியான விபீஷணன் அவர்களுடைய சூதை யுணர்ந்து அவர்களைப் பிடித்

துத் தம்முடைய கைகளால் குத்திக்குமைத்து ஊனுங் கொடிகளால் இறுக்கிக்கட்டி இராமருக்கு முன்னே கொண்டுவந்து நிறுத்தி, 'உளவறிதற் பொருட்டு இராவண னால் அனுப்பப்பட்ட திருடர்கள் இவர்கள்' என்று சொன் னன். அப்போது இராமர் அவர்களை விரோதிகளென் றுண ராமல், வானரர்களென்றும், அவர்கள் பகைவர்க்கிணங்கி ஏதோ குற்றஞ் செய்திருக்கிறார்களென்றும் நினைத்து, "இவர்கள் நமக்குக் கெடுதியைச் செய்திருந்தாலும் நம்மைச் சரணடைந்திருக்கின்ற வானரர்களைச் சார்ந்தவர்களா யிருப் பதால், இவர்களைத் துன்பப்படுத்தாமல் விட்டுவிடக் கட வாய்" என்று விபீஷணனுக்குக் கூறினார். அவர் இவ்வாறு சொன்னவுடனே அவ்வார்த்தை அந்த இராக்ஷஸ திருடர் கள் இராமரை ஏமாற்றுதற்கு அனுகூலமா யிருந்தபடியால் அவ்வஞ்சகர் அவரை நோக்கி, "சுவாமி! இந்த விபீஷணன் தந்திரமாக உங்களிடம் அடைக்கலம் புகுந்ததுபோல நடித்து வானரர்களாகிய எங்களை யெல்லாம் கபடத்தால் கொன்று தங்களுடைய பலத்தைக் குறைக்கச் சூழ்ச்சி செய்து வரு கின்றான்; உள்ளபடியே நாங்கள் வானரர்கள்; நீங்கள் இவ னுடைய கபடவார்த்தையை நம்பாமல் எங்களை அங்கீகரித் தருளவேண்டும்" என்று கூறினார்கள். உடனே விபீஷ ணன் இராமரை நோக்கி, "சுவாமி! இவர்கள் வானரர்களல் லர்; கொடிய இராக்ஷதர்கள். நம்மை ஏமாற்றுதற்கு இயற் கையுருக் கரந்து வானர வுருக்கொண்டு வந்திருக்கின்றார் கள்; இராவணனால் அனுப்பப்பட்ட சுகன், சாரணன் என் னும் தூதர்கள் இவர்கள்; இவர்களுடைய மாறுபாட்டை இதோ நான் காட்டுகின்றேன் பாருங்கள்" என்று ஒரு மந் திரத்தை ஜெபித்தான். அதனால் உடனே இராக்ஷதர்கள் தங்கள் இயற்கை வடிவத்தோடு விளங்கினார்கள். இராமர் அந்தக் கொடியர்களைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு, "நீங்

கள் கெடுதிசெய்ய வந்தாலும் நான் உங்களைக் கொல்ல மாட்டேன்; ஆதலால் நீங்கள் பயப்பட வேண்டாம்; நீங்கள் எதை உத்தேசித்து இங்கே வந்தீர்கள்?" என்று வினவினார். அதற்கவர்கள், "நாங்கள் இங்குள்ள உளவறிந்து செல்லத்தான் வந்தோம்" என்று கூறினார்கள்.

இராமர், "அப்படியா! நான் உங்களைச் சிறைப்படுத்தாமலும் விட்டுவிடுகிறேன்; இராவணனுடைய விருப்பப்படியே நீங்கள் அவனிடம் சென்று, இலங்கையின் ஐசுவரியங்களெல்லாம் என்னால் விபீஷணனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவென்றும், நான் சேதுகட்டி முடித்து அளவற்ற வானரசேனைகளுடன் இங்கே வந்திருக்கின்றேனென்றும், இலங்கை இருக்குமிடம் எனக்குத் தெரியாதிருந்ததனாலேயே அந்த இராவணன் இதுவரை உயிருடனிருக்க ஏதுவுண்டாயிற்றென்றும், அவன் என் தந்தையாகிய சடாயுவைக் கொன்று அவருடைய பந்துக்களுக்கு விசனத்தையுண்டாக்கியது போலவே நான் இனி அவனைக்கொன்று அவனுடைய சுற்றத்தார் அழும்படி செய்வேனென்றும், சீதையைச் சிறையிலிட்ட அந்த மகாபாதகனை நரகமாகிய சிறைச்சாலையில் வைக்க நான் வந்திருக்கின்றேனென்றும் நான் சொன்னதாகச் சொல்லுங்கள்" என்று வானரர்களுக்கு அவர்களைக் காட்டி, 'இவர்களைத் துன்புறுத்தாமல் நம் பாடி வீட்டிற் கப்பால் கொண்டுபோய் விட்டுவிடுங்கள்' என்று கூறினார். வானரர்கள் அப்படியே அவர்களைக் கொண்டுபோய் விட்டார்கள். அந்தத் தூதுவர்கள் 'பிழைத்தோம் பிழைத்தோம்!' என்று ஓட்டம் பிடித்தார்கள்.

அவர்கள் அப்படி ஓடிக்கொண் டிருக்கும்போது, இராவணன், இராமர் இலங்கையின் சமீபத்தில் வந்திருப்பதையும் மற்ற விவரங்களையும் உணர்ந்து, இரவில்,

தன் கருத்திற்கிசைந்த மந்திரிமார்களுடனே மந்திராலோசனை சபைக்குச் சென்று அம்மந்திரிகளை நோக்கி, "அந்த மனிதர்கள் நமது நகரத்திற்குச் சமீபத்தில் வந்திருக்கின்றார்களே; இனிநாம் என்ன செய்யலாம்?" என்று வினவினான். அப்போது இராவணனுடைய தாயைப் பெற்ற பாட்டனாகிய மாலியவான் அவனைப் பார்த்து, "அப்பா இராவணா! அந்த இராமருடைய பாணங்களால் சமுத்திரராஜன் பட்டபாடு முதலியவற்றையும், அவர் அணைக்கட்டி முடித்து இலங்கையிற் பிரவேசித்திருப்பதையும் நினைக்க என் மனம் நடுங்குகின்றது; மேலும் முன்னே ஒரு குரங்கு வந்து செய்துபோன செய்கைகளையும் நாம் பிரத்தியக்ஷமாகப் பார்த்தே யிருக்கின்றோம்; அப்படியிருக்க அந்த மனிதர்களுடைய பலாபலத்தைப்பற்றி நாம் ஆலோசிக்கவும் வேண்டுமோ!" என்று சொன்னான். அதற்கு இராவணன் பற்களை நறநறவென்று கடித்துக் கோபித்து அவனைப் பார்த்து, "மாலியவானே! உனக்கு அவர்கள் விஷயத்தில் பயமாயிருந்தால் அந்த விபீஷணன் போனதுபோல நீயும் அந்நரர்களிடத்திற் போய்விடு" என்றான். மாலியவான், 'துஷ்டர்களுக்குப் புத்தி சொல்வதாற் பயனில்லை' என்று மௌனமா யிருந்துவிட்டான். அதன்மேல் பிரகஸ்தனென்கிற சேனாபதி யெழுந்து அந்தமாலியவானை நோக்கி, "ஐயா! நீர் அந்த அற்பமானிடர்கள் இந்தச் சிறு கடலைத் தாண்டி வந்துவிட்டதை ஒரு சிறப்பாகப் பேசுகின்றீர்; அஷ்டதிக்குப் பாலகர்களையும் வென்ற நம் இலங்காதிபருடைய வல்லமையைச் சிறிதும் கருதவில்லை. அவர்களுடைய நாசகாலமே அந்த மானிடர்களையும் வானரர்களையும் இங்கே இழுத்துக் கொண்டுவந்து விட்டிருக்கின்றது" என்று சொன்னான்.

அப்போது முன்னே கூறியபடி இராமரிடமிருந்து விடுபட்டோடிவந்த தூதுவர்கள் நடுங்கிய நெஞ்சுடன் இராவணனுக்கு முன்னேவந்து நின்று தாங்கள் கண்ட காட்சிகளையும், விபீஷணனுடைய செய்கையையும், இராமர் சொல்லியனுப்பியவைகளையும் கூறினார்கள். அப்போது மகோதரன் இராவணனைப் பார்த்து, "ஐயா! இலங்காதிபரே! இனி நாம் ஆலோசிக்கவேண்டிய தென்ன விருக்கின்றது? அந்தச் சீதையை விட்டுவிடுவதும் கேவலமாகும்; அவர்களைக் கொல்வதன்றி வேறொன்றையும் இனி யோசிக்கலாகாது; யுத்தம்புரியஎனக்குமாத்திரம் நீர் உத்தரவு கொடுப்பீரானால் நான்சென்று அவர்களை எளிதில் வென்றுவருவேன்" என்று அவன் மனதிற் கிசைந்தபடி பேசினான். அப்போது மாலியவான் மீண்டும் இராவணனை நோக்கி, "அப்பா இராவணா! நம்மோடு சண்டைக்கு வந்திருப்பவர் தேவதேவனான விஷ்ணுமூர்த்தி யென்று பெரியோர் கூறுகின்றார்கள்; அவருக்கிளையவரான இலக்குமணரை ஆதிசேஷனென்கின்றார்கள்; வாலியையும் அவன் பிள்ளையையும் தேவேந்திரனென்றும், நீலனை அக்கினிதேவனென்றும், அனுமானை வாயுவும் சிவனுமென்றும், அனுமான் இனிமேல் பிரமாவாகப் போகிறானென்றும், அந்தப் பிரமபதவியை அவனுக்குக் கொடுத்தவர் இராமரேயென்றும், மற்ற வானரர்களெல்லாரும் தேவர்களென்றும், சீதையை இலக்குமியென்றும், தேவர்களுடைய வேண்டுதலால் விஷ்ணு உன்னை மடிப்பதற்கே மனிதர் வடிவெடுத்து இராமராக வந்திருக்கிறாரென்றும், இராமதூதரால் இலங்கையைக் காத்துக்கொண்டிருந்த தேவதை உதைப்பட்டு ஓடிவிட்டதென்றும், அதனாலேயே இந்த யுத்தம் சம்பவித்ததென்றும் சொல்லுகிறார்கள்; இவற்றை யெல்லாம் உன் தம்பி விபீஷணன் இங்குள்ளவர்களுக்குச் சொல்லிவிட்டுப் போனானும்; இவ்விவரங்களை

நான் கேள்விப்பட்டதனாலும், என் குலம் ஆதியில் விஷ்ணு வினாலேயே நாசமானபடியாலும், இப்பொழுதும் நமக்கு அவனால் கெடுதி நேருமென்று எனக்கச்ச முண்டாகின்றது; அதனாலும் உன்மீ தெனக்குள்ள பக்ஷத்தாலும் பின் விளை வதைக் குறித்து நான் வருந்தி உனக்கு இவற்றைக் கூறி னேன்; இனியாவது நீ சீதையைவிட்டுவிடுவாயானால் துன்ப மடையா திருக்கலாம்" என்று சொன்னான். இராவணன் இவற்றை யெல்லாம் கேட்டும் புத்தி தெளியாமல் அவனை நோக்கி, "நீ சொன்னவைகளெல்லா மிருக்கட்டும்; சிவனும் விஷ்ணுவும் வேறு ஜென்மமெடுத்து வந்தால்தானென்ன! அவர்களை நான் பஞ்சாய்ப் பறக்கடித்து விடுவேன்" என்று கோபத்தோடு கூறினான். அப்போது இரவு நீங்கி விடியற் காலமாயிற்று.

மகுட பங்கம்.

அப்போது இராமர், சுக்கிரீவன் முதலானவர்களுடனே சுவேலா பர்வதத்தின் சிகரத்திலேறி நின்று இலங்காபுரி யைப் பார்த்துவிட்டு, இளையபெருமாளை நோக்கி, "அப்பா இலக்குமணா! இந்த இலங்கா நகரம் சுவர்க்கலோகத்தினு மேம்பட்ட சிறப்புடையதாய் விளங்குகின்றது; இதிலுள்ள மாளிகைகளின் ஒளியையும் மற்ற சிறப்புக்களையும் பார்" என்று அந்நகரத்தை அவனுக்குக் காட்டினார். இலக்குமணன் அதைப்பார்த்து அதிசயித்து நின்றான். அத்தருணத்தில் இராவணன், வானர சைனியங்களுடைய பெருமையைக் காணும்படி அநேகம் இராக்ஷதக் கூட்டங்களுடனே உத்தர கோபுரத்தின் மீதேறி ஸ்ரீராமரைத் தன்னுடைய இருபது கண்களாலும் பார்த்தான். அங்ஙனம் பார்த்த மாத்திரத்தில் அவனுடைய பத்துவாய்களும் மடிந்தன; இருபது கண் களிலும் நெருப்புப் பொறி பறந்தது; நெஞ்சில் கோபாக் கினி பற்றியெரிந்தது; இடக்கண்களும், இடத்தோள்களும்

துடித்தன. இவ்வாறு துர்ச்சகுனங்களுடன் அவன் இராமரைப் பார்த்தவுடன், அதிக கோபத்தோடு சாரனென்கிற ஒற்றனைப் பார்த்து, "இராமனை, அவனுடைய வடிவத்தால் நான் தெரிந்துகொண்டேன்; மற்றவர்களை நீ இன்னாரின்னாரென்று எனக்குக் காட்டு" என்றான். அப்படியே அவன் இலக்குமணன், சுக்கிரீவன், சாம்புவந்தர், அங்கதன், அனுமார் முதலியவர்களையும், மற்ற வானர வீரர்களையும் தனித்தனியாக அவனுக்குக் காட்டி "வானர சைனியங்களை அளவிட்டுக் கூறுதல் இயலா" தென்று சொன்னான். அப்படி அவன் சொன்னதைக் கேட்டு இராவணன் கோபச்சிரிப்புச் சிரித்து, "சாரா! நீ யென்ன காட்டில் திரிகின்ற அற்பக் குரங்குகளைப் புகழ்கின்றாய்; அவைகளால் என்னை என்ன செய்ய முடியும்?" என்று அவனிடம் சொன்னான்.

அத்தருணத்தில் இராமர், கோபுரத்தின் மேல் நின்ற இராவணன் முதலியவர்களைப் பார்த்துவிட்டுப் பக்கத்தில் நின்ற விபீஷணனை நோக்கி, "தம்பி! நம்முடைய சேனைகளைக் காணும்பொருட்டு அதோ கோபுரத்தின் மேலேறி அநேகம் இராக்ஷதர்கள் கூடி நிற்கின்றார்கள்; அவர்களை இன்னாரின்னாரென்று நீ எனக்குத் தெரிவிக்கக் கடவாய்" என்று சொன்னார். அவன் அப்படியே காட்டத்தொடங்கி முதலில் இராவணனைச் சுட்டிக்காட்டி, 'அதோ தேவஸ்திரீகளுக்கு மத்தியில் நிற்கின்றவன்தான் இராவணன்' என்று சொல்லி மற்றொருவனைக் காட்ட ஆரம்பித்தான். அப்படி இராவணனைக் காட்டிய மாத்திரத்தில் சுக்கிரீவன், கண்களில் நெருப்பெழக் கோபித்துக் குபீரென்று பாய்ந்து இராவணனுக்கெதிரில் போய் நின்றான். அவனைப் பார்த்ததும் இராவணன், 'நீ யார்? இவ்விடத்திற்கு என்ன காரியமாக வந்தனை?' என்றான். சுக்கிரீவன் அதற்கொன்றுஞ் சொல்லாமல் அவ

னுடைய மார்பில் இரண்டு கைகளாலும் ஓங்கிக் குத்தினன். அதனால் இராவணன், கடுஞ்சினமடைந்து இருபது கைகளாலும்சுக்கிரீவனை ஓங்கியடித்துக் காலால் எற்றினன். உடனே சுக்கிரீவன் இராவணனுடைய பத்துத் தலைகளிலும் முகத்திலும் காலால் எட்டி யுதைத்தான். இராவணன் அவனுடைய இரண்டு கால்களையும் பிடித்து அவனைச் சுற்றிக் கீழேபோட்டு மிதித்தான். உடனே சுக்கிரீவன் துள்ளியெழுந்து இராவணனைக் கீழே தள்ளி அமுக்கிக்கொண்டு அவனுடைய வாயிற் குத்தி அதினின்று மொழுகுகின்ற இரத்தத்தை வாரிக் குடித்தான். இப்படி இவர்களுக்குள் யுத்தம் நடந்துகொண்டிருக்க, இராமர், சுக்கிரீவன் தனித்துப்போய் இராவணனோடு யுத்தஞ்செய்வதை யுணர்ந்து, "என்னுயிர்க்குயிரான சுக்கிரீவா! உன்னைக்கொண்டே நான் எல்லா நன்மைகளையும் அடைய உத்தேசித் திருந்தேனே; இப்போது நீ முன் கோபத்தால் தனியே பாய்ந்து இராக்ஷதர்களிடத்தில் அகப்பட்டுக்கொண்டாயே; அந்தோ! நீ திரும்பி வாராவிட்டால் என்னுயிர் தரிக்காதே; அதன்மேல் மற்றவர்களும் உயிர் விடுவார்களே; பகைஞர் செருக்கடைவார்களே; நான் வானர சைனியங்களில் ஒருவராவது குறையாதபடி அச்சேனையுடன் திரும்பி ஜெயத்துடன் அயோத்திக்குச் சென்றாலல்லவா எனக்குச் சிறப்புண்டாகும்" என்று பலவாறு புலம்பினர். அப்போது இராவணனோடு இளைக்காமல் யுத்தஞ் செய்து கொண்டிருந்த சுக்கிரீவன், இராவணனுடைய கிரீடங்களி லிருந்த பத்து ஜீவரத்தினங்களையும் பறித்துக் கொண்டு வேகமாகப்பாய்ந்து இராமருக்குமுன்னே குதித்து அவருடைய பாதங்களில் அந்த இரத்தினங்களைக் காணிக்கையாக வைத்து வணங்கி நின்றான்.

இராமர் அவனைத் தழுவிக்கொண்டு அவன் முகத்தை

நோக்கி, "தம்பி! நீ என்ன நினைந்து என்ன செய்தாய்! நான் கலங்கும்படி நீ இக்காரியத்தைத் துணிந்து செய்யலாமா? உனக்கபாயம் நேர்ந்தால் என் கதி என்னாகும்" என்று பக்ஷமான வார்த்தைகளைக் கூறினார். அதற்குச் சுக்கிரீவன், "சுவாமி! அந்தப் பாவியாகிய இராவணனைப் பார்த்தவுடனே எனக்குண்டான கோபம் சகிக்க முடியவில்லை; அதனால் அவனை எமனுலகுக்கனுப்ப வேண்டுமென்று நான் பாய்ந்தேன்; எனினும் என்னால் அது கூடியலாமற் போயிற்று; இந்த அற்பக் காரியத்தையே நான் முடித்து வந்தேன்; தேவரீர் பொருட்டுச் சடாயுவும், குகனும் செய்த பெருங் காரியத்தைப் போன்ற ஒன்றை யேனும் செய்து முடிக்காமற் போயினேனே என்று நான் விசன முறுகின்றேன்" என்று கூறி வருத்தமுற்று நின்றான். அப்போது விபீஷணன், சுக்கிரீவனை நோக்கி, "இராவணனுடைய கிரீடம் அவன் தலையைப் பார்க்கிலும் சிறந்ததாகும்; அப்பேர்ப்பட்ட கிரீடங்களின் மணிகளை நீர் பறித்துக்கொண்டு வந்து விட்டபடியால் அவன் கீர்த்தியை வேரோடு பறித்துவந்தவராய்விட்டீர்; இக்காரியம் எவராலும் செய்யமுடியாது; நீர் செய்துவந்த காரியம் அவனை ஜெயிப்பதற்கு அஸ்திவாரம் போட்டுவந்த மாதிரியாய் விட்டது; இதைக்காட்டிலும் வீரச்செயல் வேறென்ன விருக்கின்றது?" என்று அவனைப் புகழ்ந்து கூறினான். இராமர், "அது வாஸ்தவந்தான்; தம்பி செய்த காரியம் எவராலும் செய்தற்கியலாது; எனினும் பராக்கிரமத்தில் மிகுந்த வீரர்கள் தற்பெருமை கூறமாட்டார்களாதலின், இந்தச் சுக்கிரீவன் தான் செய்த காரியத்தை அற்பமானதென் றுரைக்கின்றான்" என்று சுக்கிரீவனுக்குத் திருப்தி யுண்டாகும்படி பேசினார். அப்போது சூரியாஸ்தமன மாயிற்று.

அணி வகுத்தல்.

அதன்மேல் இராமர், சுக்கிரீவன் செய்து வந்த காரியத்தைக் குறித்துச் சந்தோஷித்துச் சுவேலாசலத்தை விட்டிறங்கித் தமதிருப்பிடம் போய்ச் சேர்ந்து, படைகளை அணி வகுத்துச் சேனைத் தலைவர்களை அவரவர்க்குத் தக்க விடங்களில் நிறுத்தும்படி சுக்கிரீவனுக்குக் கட்டளையிட்டார். அக்கட்டளையின்படியே பதினேழு வெள்ளம் சேனைகளுடன் அனுமார் இலங்காபுரியின் மேலைக்கோட்டை வாயிலிலும், அங்கதன் பதினேழு வெள்ளம் சேனைகளுடன் தெற்கு வாயிலிலும், நீலன் அநேகம் படைத்தலைவர்களடங்கிய பதினேழுவெள்ளம் சேனைகளுடன் கீழை வாயிலிலும், பதினேழுவெள்ளம் சேனைகளுடனும், சுக்கிரீவனுடனும் இராமரும் இலக்குமணனும் வடக்கு வாயிலிலும் நின்று சண்டை தொடங்கவேண்டுமென்றும், இரண்டு வெள்ளம் சேனைகள் மற்ற சைனியங்களுக்கு ஆகாராதிகள் தேடிக் கொண்டு வந்து கொடுக்கவேண்டுமென்றும், விபீஷணன் ஒவ்வொரு கோட்டை வாயிலிலும் சென்று மருமங்கள் தெரிந்து சொல்ல வேண்டுமென்றும், ஏற்பாடாயிற்று. அவ்வாறே அவற்றைச் செய்ய எல்லோரும் ஆயத்தமாயிருந்தார்கள். இவர்கள் இப்படியிருக்க, கிரீடங்களின் ஜீவரத்தினங்களை யிழந்த இராவணன், ஒருநாளும் இப்படிப்பட்ட அவமானத்தை அடைந்ததில்லையாதலால் மிகுந்த வெட்கத்தை யடைந்து கோபுரத்தை விட்டிறங்கி, அன்றிரவு இராமர் படையில் நடக்கும் ஏற்பாடுகளை அறிந்து வரும்படி சார்த்தூலன் என்னும் தூதனை அங்கனுப்பிவிட்டு, ஒருவருடனும் பேசாமல் தன் படுக்கை அறையிற் சேர்ந்து மிக்க கவலை யுற்றிருந்தான். அப்போது இராமர் படைக்குச் சென்ற சார்த்தூலன் அங்குள்ள உள வறிந்துகொண்டு திரும்பிவந்து இராவணனுக்கு முன்னே வணங்கி நின்றான்.

இராவணன் அவனை நோக்கி, "நீ என்ன தெரிந்துகொண்டு வந்தாய்?" என்றான். அவன் இராமர் படையில் முன்கூறிய படி நடத்திருந்த ஏற்பாடுகளைக் கூறினான்.

அவற்றைக் கேட்டதும் இராவணன், கண்களில் நெருப்பெழக் கோபித்து, "நாளையதினம் நான் அவர்களை அடியோடு நாசஞ் செய்துவிடுகின்றேன்" என்று பற்களை நெறநெறவென்று கடித்துக்கொண்டு பத்துக்கோடி பேய் கள் காவல் புரிகின்ற ஒரு பளிங்கு மண்டபத்தைச் சேர்ந்து மந்திரிகளை வரவழைத்து அவர்களை நோக்கி, "குரங்குக்கூட் டங்கள் வந்து நம்மை வளைந்து கொண்டிருக்கின்றனவே! இதற்கென்ன செய்யலாம்?" என்று வினவினான். அப் போது இராவணனுக்கு மாதுலனாகிய நிகும்பன் கடுஞ்சின மடைந்து, "இராவணா! நமக்கு எவ்வளவோ சேனைகளிருந் தும் எதிரிகள் எளிதில் வந்து நம் கோட்டையை வளைந்து கொண்டார்கள்; அந்தக் குரங்கு வீரர்கள் கையில் ஆயுத மில்லாமலே எவ்வளவோ பெரியகாரியங்களை யெல்லாம் செய்து வருகின்றார்கள்; ஆயுதம் பிடித்தவர்களாகிய அந்த இராமலக்குமணர்கள் வந்து யுத்தஞ் செய்யுங்காலத்தில் என்ன தீங்கு விளையுமோ? இனிச் சீதையை விட்டு நாம் அவர்களிடம் அடைக்கலம் புகுவதல்லாமல் பிழைப்பதற்கு வேறென்ன மார்க்கமிருக்கின்றது!" என்று கூறினான். இரா வணன், அவ்வாறு கூறிய மாமனைக் கோபித்து, 'நீ நம்மு டைய வல்லமையை உணராமல் பேசுகின்றாய்; நீ பேசாம லிரு' என்று அதட்டி விட்டு உடனே, பிரகஸ்தன் இரு நூறு வெள்ளம் இராக்ஷஸ சேனைகளுடனும் அவன் பந் துக்களுடனும் கிழக்கு வாயிலைக் காத்துக் கொள்ளும்படிக் கும், மகோதரன், மகாபாரிசனுடனும், இருநூறுவெள்

ளம் சேனைகளுடனும் தெற்கு வாயிலைக் காத்துக்கொள்ளும் படிக்கும், இந்திரஜித்து இருநூறு வெள்ளம் சேனைகளுடனே மேற்கு வாயிலைக் காக்கும்படிக்கும், விரூபாக்ஷன் மூலச் சேனையுடனும் மந்திரிகளுடனும் பட்டணத்தைக் காத்துக்கொள்ளும்படிக்கும் ஏற்பாடுசெய்து, இருநூறு வெள்ளம் சேனைகளுடனே தான் வடக்கு வாயிலைக் காத்துக்கொள்ள ஆயத்தமானான். இருகக்ஷியாரும் யுத்தாபேக்ஷை யுடையவர்களாய்ப் பொழுது விடிவதை எதிர்பார்த்திருந்தார்கள். சூரியனும் உதயமாயினான். அப்போது இராமருடைய சேனைகள் தங்கள் தங்களுக்கேற்பட்ட ஸ்தானங்களிற்போய் நின்று இலங்கை நகரை வளைத்துக்கொண்டு ஆர்ப்பரித்தன. இராமரும் இளையபெருமாளுடனும் சுக்கிரீவனுடனும் வடக்கு வாயிலுக்குப் போய் இராவணன் வருகைக் கெதிர்பார்த்திருந்தார்.

அங்கதன் தூது.

இராமர் அவ்வாறு காத்திருந்தும் இராவணன் யுத்தத்திற்கு வரவில்லை. அதனால், இராகவர் விபீஷணனை நோக்கி, "தம்பி! சீதையை விட்டு விடுகின்றாயா, அல்லது யுத்தத்திற்கு வருகின்றாயா என்று இராவணனிடம் கேட்டு வரும்படி ஒரு தூதனை அனுப்பலாமென்று நான் நினைக்கின்றேன்; அதுதான் யுத்த தருமம்" என்று சொன்னார். விபீஷணன், 'அது நியாயந்தான்' என்று கூறினான். அருகேயிருந்த சுக்கிரீவன் "அவ்வாறு செய்வது அரசர்க்கடுத்ததே" என்றான். இவற்றைக்கேட்டதும் இலக்குமணன், இராமரை நோக்கி, "அண்ணா! இது யுத்த தர்மமாயினும் அந்தக் கொடியனை நாம் இரந்து கேட்பது தகாது; மேலும் நாம் அவனைக் கருவறுக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்றோம்; ஒரு சமயம் அவன் சமாதானத்திற் கிணங்கி

விடுவானானால் நம் சபதங்கள் நிறைவேறாமற்போம்; தேவர்கள் துயரம் தீராது; ஆதலால், போர்செய்து எவ்விதத்திலும் அவனைக் கொல்வதே தக்கதாகும்” என்றான். அதற்கு இராமர் சிரித்துக்கொண்டு, “தம்பி! நான் செய்த சபதங்களை மறந்து விடவில்லை; அவனுக்கு முடிவுகாலம் கிட்டியிருப்பதால் அவன் சமாதானத்திற் கிசையமாட்டான்; எப்படியும் யுத்தம் நடந்தே தீரும்; அவனும் ஒழியவே போகின்றான்; ஆயினும், யுத்தம் தொடங்கும்போது தூதனுப்பவேண்டியது முறைமையாகலின், நாம் ஒரு தூதனையனுப்புவதே கிரமம்” என்று சொல்லி அவனைச் சமாதானப்படுத்திவிட்டு, “தூதனாக யாரை அனுப்பலாம்; அனுமானையனுப்பினால், ‘அவர்களிடம் இவன் தவிர வேறே ஆள் இல்லை போலிருக்கிறது’ என்று எதிரிகள் நினைப்பார்கள். ஆதலால் வேறொருவனையே அனுப்பவேண்டும்; அவன், இராக்ஷதர்கள் அக்கிரமம் பண்ணினாலும் அனுமானைப்போல அவர்களை நாசஞ்செய்துவிட்டு வரத்தக்கவனா யிருக்கவேண்டும்; அங்கதன்றான் அதற்குத் தகுதியானவன்” என்று அங்கதனைச் சமீபத்தில் அழைத்து, “என் புத்திரனே! நீ எதிரியினிடம் சென்று ‘சீதையை விடுகின்றாயா? அல்லது போரில் உன் ஆவியை விடுகின்றாயா? இவ்விரண்டில் யாதுன் அபிப்பிராயம்?’ என்று கேட்டு அவனுடைய மனோபாவத்தைத் தெரிந்து வரவேண்டும்” என்று சொன்னார். அங்கதன், ‘அனுமாருக்கிரண்டாவதாக நான் இராமரால் தூதுவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது என் தவப்பயனே’ என்று மகிழ்ந்து அதற்கிசைந்து இராமரிடம் விடை பெற்றுக் கொண்டு விரைந்து சென்று இராவணனிருக்கின்ற விடத்திற்குச் சமீபத்திற்போய்ச் சேர்ந்தான். அங்குள்ள இராக்ஷதர்கள் அவனைக்கண்டு அனுமானே வந்தானென்று பயந்து இராவணனிடத்தில் ஓடி, ‘முந்திவந்த குரங்கு வந்துவிட்டது’

என்று முறையிட்டுக் கொண்டார்கள். இராவணன் அவர் களைப் பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தான்.

அப்போது அங்கதன் அவனுக்குச் சமீபத்திற் சென்று அவனுடைய வடிவத்தைப் பார்த்து, 'இவன் மகாவீரன்; இராமரையன்றி இவனை வேறெவராலும் ஜெயித்தல் முடியாது' என்று அதிசயித்து அவனெதிரில் நின்றான். அப்போது இராவணன் மிக்க கோபத்துடனே அங்கதனைப் பார்த்து, "நீ யாவன்? எதன்பொருட்டிங்கு வந்தாய்?" என்றான். அங்கதன், "நான் எல்லாவற்றிற்கும் நாதராகிய இராகவருடைய தூதன்; அவர் நியமித்த கட்டளையை உனக்குத் தெரிவிக்கவந்தேன்" என்று சொன்னான். அதற்கு இராவணன், "அற்பக் குரங்குகளைத் துணை சேர்த்துக் கொண்டு சிறு குட்டையாகிய கடலைத் தாண்டிவந்து, இன்னும் யுத்தம்தொடங்காமல் பயந்துகொண்டு உன்னைத் தூதனுப்பிய அந்த நரனே லோகநாயகன்; அவன் யாராயிருந்தாலு மிருக்கட்டும்; அவனுக்குத் தூதனாகவந்த நீ யார்?" என்று வினவினான். அதற்கு அங்கதன், "இந்திரனுடைய குமாரரும், உன்னைத் தன்வாலில் கட்டிக்கொண்டு திரிந்தவரும், மந்தரகிரியினால் அமுதங்கடைந்து தேவர்களுக்குக் கொடுத்தவருமாகிய வாலியின் புத்திரன் நான்; என் பெயர் அங்கதன்" என்றுரைத்தான். உடனே இராவணன், "நீ சொன்ன கதையினாலே உன் தந்தை எனக்குப் பழக்கமுடையவனென்பது உனக்கு விளங்கும்; மகாவீரனாகிய வாலிக்கு நீ புத்திரனாயிருந்தும் மனிதனுக்குத் தூதனானது மிக்க வியப்பு! தகப்பனைக் கொன்றவனுக்கு நீ தொண்டு செய்வதைக் காட்டிலும் உனக்கு வேறே இழிவென்ன விருக்கின்றது; அந்த மனிதனுடைய சேர்க்கையை நீ விட்டு விடு; வாலிக்குப் பிள்ளையாகையால் நீ எனக்கும் பிள்ளையா

கின்றாய்; உனக்கு நான் நலம்செய்ய நாடுகின்றேன்; உனக்கு வானராதிபத்தியம் நானே கொடுத்தேன்; உனக்கு நல்லகாலம் பிறந்ததால் நீ இங்கே வந்து சேர்ந்தாய்; இனி உனக்குண்டாகிய இழிவும் நீங்கிவிடும்; நாளைக்கே இந்த மனிதர்கள் என் கையால் இறந்து போவார்கள்; நீ நெடுங் காலம் கிஷ்கிந்தையை அரசுபுரிவாய்; என்னிடத்திலேயே நீ இருந்து விடு" என்று சொன்னான். அங்கதன் இவற்றை யெல்லாம் கேட்டுச் சிரித்துக்கொண்டு இராவணனை நோக்கி, "இங்குள்ளவர்களுக்கெல்லாம் முடிவுகாலம் சமீபித்திருக் கின்றது என்பதை யுணர்ந்தே உன் தம்பி எங்களிடம் வந்து அடைக்கலம் புகுந்தான்; இதை யுணராமல் நீ வாய்க்கு வந்ததைப் பேசுகின்றாய்; என்னையும் உன் வசஞ் செய்யப் பார்க்கின்றாய்; இராமதூதுவனாயிருக்கின்ற நான் உன்னிடத் தில் தானா அரசாட்சியைப் பெற்றுக் கொள்ளவேண்டும். அவ்வாறு பெறுவது, சிங்கம் நாய்கையில் மகுடாபிஷேகம் பெற்றது போலல்லவா ஆகும்" என்று சொன்னான்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே இராவணனுக்கு அங்கதனைக் கொல்லத்தக்க கோப முண்டாய் விட்டது; அதனால் அவன் சிங்கத்தைப்போலக் கர்ச்சித்து, "மனி தரை நம்பிச் சாகத் துணிந்திருக்கின்ற குரங்கே! நீ வந்த காரியத்தைச் சொல்" என்று கூறினான். அதற்கு அங்க தன், "யுத்தத்திற்குப் பயந்து கோட்டைக்குள்ளே பதுங்கி யிருக்கின்ற நீ சீதாபிராட்டியாரை விட்டு விடுகிறாயா, அல் லது போர்செய்து உயிரை விடுகிறாயா என்று உன்னைக் கேட்டு உன் அபிப்பிராயத்தைத் தெரிந்து வரும்படி இராக வர் என்னை இங்கே யனுப்பினார்; அவர்உன்பந்துக்களையெல் லாம் மடித்தபோதும், உன்கண் முன்னாலேயே அனுமார் இலங்கையைக்கொளுத்தியபோதும்,இன்னும் மற்றகாரியங்

கள் நடந்தபோதும், உண்டாகாத வீரமா இனி உனக்குண் டாகப் போகிறது; நீ இராம பாணத்தால் ஒழிந்துபோவது நிச்சயம்; அப்படி மடிவதற் கிஷ்டமா? பிராட்டியாரை இராமரிடம் சேர்த்து அவர் பாதங்களை வணங்கிப் பிழைத் திருக்க இஷ்டமா? உன் அபிப்பிராயத்தைச் சீக்கிரம் தெரி விப்பாயாக" என்று சொன்னான். இந்த வார்த்தைகள் செவியிற் புகுந்த மாத்திரத்தில் இராவணன், அங்கதனுயிர் முழுவதையும் வாரியுண்டு விடுகிறவனைப் போலக் கோபங் கொண்டு, நான்கு இராக்ஷத வீரர்களைப் பார்த்து, 'இவனைப் பிடித்து மூளை சிதறிப்போகும்படி பூமியில் அறையுங்கள்' என்று கூறினான். அப்படியே அவர்கள் வந்து அங்கதனைப் பிடித்தார்கள். உடனே அங்கதன் நால்வரையும் தூக்கிக் கொண்டு ஆகாயத்தில் எழும்பி அவர்களுடைய தலைகளை அறுத்து இராவணனுடைய கோபுர வாயிலில் விழும்படி அவர்களைக் காலினாலே மிதித்துத் தள்ளிவிட்டு அங்கு நின்ற இராக்ஷஸ கூட்டங்களை நோக்கி, "பாவிகளே! இராமபாணம் வருவதற்குள் நீங்களெல்லோரும் ஓடிப் பிழையுங்கள்" என்று ஆரவாரித்துச் சொல்லிக்கொண்டு அங்கிருந்து புறப் பட்டு இராமருக்கு முன்னே வந்திறங்கி அவருடைய பாதங் களை வணங்கினான். இராமர் 'இராவணனுடைய அபிப் பிராயமென்ன?' என்று அவனிடம் வினவினார். அங்கதன், அங்கு நடந்த விஷயங்களை யெல்லாம் சொல்லி, 'சுவாமி! அந்த இராவணனுடைய பத்துச் சிரங்களையும் அறுத்துத் தள்ளினாலல்லாமல் அவன் அகங்காரமொடுங்காது' என்று கூறிவிட்டு வானரப் படைத் தலைவர்களைப் பார்த்து, "இனி யுத்தந் தொடங்குவதே காரியம்; நம்முடைய சேனைகளுக் கெல்லாம் போர்க்கெழும்படி சொல்லுங்கள்; இலங்கையின் அகழிகளைத் தூர்த்துப்போடுங்கள்; இராக்ஷதர்களை யுத்தத்

நிற்கழையுங்கள்; கோட்டை மதில்களை முற்றுகையிட்டுக் கொள்ளுங்கள்" என்று ஆக்ஞாபித்தான்.

இராவணனுடைய முதற்போர்.

அங்கதன் கட்டளையைக் கேட்டவுடனே எழுபது வெள்ளம் வானரசேனைகளும் புறப்பட்டு மலைகளையும் மரங்களையும் பிடுங்கிக் கொண்டுவந்து இலங்கையின் அகழியைத் தூர்த்துவிட்டுக் கோட்டை மதில் முழுவதையும் தாங்களேறிச் செல்வதற்கு வரப்பாக்கிக்கொண்டு அதன்மேலேறி நின்று கர்ச்சித்தன. இராக்ஷதசேனைகளும் வீராவேசத்தோடு கோட்டைக்குள்ளிருந்து சண்டைக்குக் கிளம்பி வந்தன; இரண்டு படைகளும் எதிர்த்துப் போர்செய்யத் தொடங்கின; வானரர்கள் அநேகம் மலைகளையும் மரங்களையும் தங்கள் பற்களையும் ஆயுதங்களாகக்கொண்டு எண்ணிறந்த இராக்ஷதர்களைக் கொன்று குவித்தார்கள். இராக்ஷதர்கள் பற்பல அஸ்திர சஸ்திரங்களையேவி அளவற்ற வானரர்களை மடித்தார்கள். இரத்தவெள்ளம் அதிகரித்ததால் வானரசேனைகள் மதிலை விட்டிறங்கி யோடிவிட்டன. இராக்ஷதசேனைகள் மேட்டு நிலங்களிற் போய் நிறைந்து. வானரசேனைகள் ஓட்டம் பிடித்ததைப் பார்த்துக் கை கொட்டிச் சிரித்தன. அதன்மேல் அளவிடக்கூடாத இராக்ஷதப்படைகள் கோட்டையை விட்டு வெளியேறிவந்து வடக்குவாயிலிலிருந்த வானரசேனைகளை நெருக்க அவைகள் தளர்ந்து சுக்கிரீவனிடம் ஓடிவிட்டன. அப்போது சுக்கிரீவன்கோபங்கொண்டு ஒரு மாமரத்தைப்பிடுங்கி இராக்ஷத சேனைகள் மேல் வீசியடித்தான். அதனால் நால்வகைச் சேனைகளு முருண்டன. அப்போது வச்சிர முஷ்டியென்னும் இராக்ஷதன் தன்தேரைச் செலுத்திக்கொண்டு வந்து அளவற்ற சரங்களைவிடுத்து வானரர்களைச் சின்னபின்னப்படுத்தினான்.

உடனே சுக்கிரீவன் அவன்மேற் பாய்ந்து அவனைக்கொன்று சிதைத்தான். அங்கிருந்த இராக்ஷத சேனைகள்பயந்தோடி விட்டன. வானரர்கள் சந்தோஷமாக ஆர்ப்பரித்தார்கள். இவர்கள் செய்தி இப்படியிருக்க, கிழக்கு வாசலிலுள்ள வானரர்களுக்கும் இராக்ஷதர்களுக்கும் சண்டைநிகழ்ந்தது. அதில் பல வானரர்களும் இராக்ஷதர்களும் மடிந்தார்கள். அப்போது நீலன் ஒரு பெரிய மராமரத்தைப் பிடுங்கிக் கொண்டுவந்து இராக்ஷதர்கள்மீது மோதினன்; அதனுல் அநேகம் இராக்ஷதர்கள் மடிய மற்றவர்கள் ஓட்டம் பிடித் தார்கள். அப்போது அங்கு நின்ற இராக்ஷதசேனைத் தலைவனை கும்பானுவென்பவன் அநேகம் அஸ்திரங்களைப் பிரயோகித்துப் பல வானரர்களைக்கொன்றுன். அதைப்பார்த்த இடும்பனென்பவன் ஒரு பர்வதத்தைப் பெயர்த்துக் கும்பானுவின்பேரில் எறிந்தான். கும்பானு அதைத்தட்டிவிட்டு வானரர்கள் ஓடும்படி யுத்தஞ்செய்து இடும்பன் மார்பில் ஒரு குத்துக்குத்தினுன். இடும்பன் அவனைப் பிடித்துத் தூக்கிப் பூமியிலறைந்து கொன்றுன். அதைக்கண்டு சுமாலி புத்திரனுன பிரகஸ்தன் வில்லைவளைத்து அளவற்ற பாணங்களையேவி வானரசேனைகள் சிதறிப்போகும்படி செய்தான். அதைப்பார்த்து இடும்பன் கோபங்கொண்டு ஒரு மலையைப் பிடுங்கி யெறிந்து அவனுடைய வில்லும் தேரும் குதிரைகளும் நாசமாகும்படி செய்தான். அந்தப் பிரகஸ்தன்வாயை மடித்துக்கொண்டு இடும்பனைக் கொல்ல ஓடிவந்தான். நீலன் அவனுக்கெதிரே போய் அவனைத் தன் கையினுல் ஓங்கியறைந்தான். பிரகஸ்தனும் நீலனுடைய மார்பில் குத்தினுன். பின்னர் நீலன் பிரகஸ்தனை வாலினுல் சுற்றிக்கொண்டு அடித்துக்கொன்றுன். மற்ற இராக்ஷதர்கள் பயந்தோடினுர்கள். இவர்கள் கதி இப்படியாகத் தெற்கு வாசலில் சுபாரிசனென்கிற படைத்தலைவனையும் அநேகம் இராக்ஷதர்களையும்

அங்கதன் கொன்று குவித்து விட்டான். மற்ற இராக்ஷதர்கள் ஓடிவிட்டார்கள். மேற்கு வாசலிற்சென்ற இருநூறு வெள்ளம் இராக்ஷத சேனைகளும், துன்முகனும் அனுமாரால் கொல்லப்பட்டார்கள்.

இப்படி நான்கு வாசல்களிலும் சென்ற படைத்தலைவர்களும் இராக்ஷதர்களும் மடிந்த செய்தியைத் தூதுவர்கள் சென்று இராவணனிடம் தெரிவித்தார்கள். இராவணன், கண்களில் தீப்பொறி பறக்கக் கோபித்து அநேகம் வில்வீரர்களான இராக்ஷதர்களைக் குதிரைப் படையுடன் சென்று வானர வீரர்களுடன் யுத்தஞ் செய்யும்படி முன்னே அனுப்பிவிட்டுத் தான் பெரிய மலைபோன்ற வில்லையும் அம்புகளையும் மற்ற ஆயுதங்களையும் தாங்கி, வச்சிர கவசத்தை மார்பிலணிந்து, தும்பைமாலை சூடி, ஆயிரங் குதிரைகள் பூட்டிய தேரிலேறி, உருத்திரமூர்த்தியை வணங்கி, இரணபேரிகை முழங்க, நால்வகைச் சேனைகளுடன் புறப்பட்டு இரணகளம் வந்து சேர்ந்தான். அப்போது வானர தூதுவர்கள் இராமரிடம் ஓடிவந்து, 'இராவணன் யுத்தகளம் வந்து சேர்ந்தான்' என்று தெரிவித்தார்கள். அதைக் கேட்டவுடனே இராமருக்குச் சீதையை மீட்டதற்கொப்பான சந்தோஷமுண்டாயிற்று. அவருடைய தோள்கள் பூரித்தன. அவர் அதிக உற்சாகத்தோடு மரவுரி தரித்து, இடப்பக்கத்தில் வாளை இறுக்கிக்கட்டி, பாதங்களில் வீரகண்டைகளைத் தரித்து, மார்பில் வச்சிர கவசமணிந்து, முன்கைத் தோல் கட்டி, விரற்புட்டில்கள் அணிந்து, அக்ஷயதூணியைத் தோளிற்கட்டி, நெற்றிப்பட்டந்தரித்து, ஆத்திமாலையுடனே துளவ மாலையையும் தும்பைமாலையையும் தரித்து, கோதண்டமென்னும் வில்லை இடக்கையிற் பிடித்துப் புறப்பட்டு வானர சேனைகளின் முன் அணியில் நிற்கின்ற இலக்குமணனுடனே கூடினார். உடனே இராக்ஷதர்களும், வானரர்

களும் எதிர்த்து யுத்தஞ் செய்தார்கள். அந்தச் சண்டையில் அநேகம் இராக்ஷதர்களும் வானரர்களும் மடிந்தார்கள். எங்கும் பிணக் குவியலாயிற்று; இரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. அத்தருணத்தில் இராவணன் கண்களில் நெருப்புப்பொறி பறக்கத் தன் வில்லை வளைத்துக் குணத்தொனி பண்ணினான். அந்த வில்லோசையைக் கேட்டவுடனே விபீஷணனும், இளையபெருமாளும், சுக்கிரீவனும் தவிர அங்கே நின்ற மற்ற வானரர்களெல்லோரும் பயந்தோடினார்கள். அப்போது சுக்கிரீவன், ஒரு பெரிய மலையைப் பிடுங்கி இராவணன் பேரில் விட்டெறிந்து நகைத்தான். இராவணன் ஓர் அம்பினால் அம்மலையை உடைத்துத் தள்ளிவிட்டு, மற்றொரு பாணத்தைச் சுக்கிரீவன் மார்பிற் செலுத்தினான். அந்தப்பாணம் மார்பில் அழுந்தவே சுக்கிரீவன் சரீரம் பதைத்தான். அப்போது மேற்கு வாசலிலிருந்த அநுமார் ஓடிவந்து சுக்கிரீவனுக்கு முன்னே நின்றுகொண்டு இராவணனைப் பார்த்து, "இராவணா! எங்கள் தலைவர் இளைப்புத் தீர்ந்து வருவதற்கு முன் நீ என்னுடன் போர் செய்கிறாயா?" என்று கேட்டார். இராவணன் கோபத்துடன், "செய்கிறேன் நீ வா" என்றான். உடனே அநுமார் ஒரு மலையைப் பிடுங்கி அவன் மேலெறிந்தார். அந்தப் பர்வதம் அவனுடைய வாகுவலயத்தைப் பொடிப் பொடியாக்கிவிட்டுத் தானும் தூளாய் உதிர்ந்துவிட்டது. பின்னும் அநுமார் வேறொரு பர்வதத்தைப் பெயர்த்தார். அப்போது இராவணன் அவருடைய கையிலும் தோளிலும் அழுந்தும்படி பத்துப் பாணங்களை எவினான். அவற்றிற்கு அநுமார் இளைக்காமல் அந்த மலையை விட்டுவிட்டு ஒரு மராமரத்தை பிடுங்கிச் சுழற்றி யெறிந்து இராவணனுடைய தேர்ச்சாரதியையும் பல இராக்ஷதர்களையும் மடித்துவிட்டார். இராவணன் வேறு சாரதியை நியமித்துக்கொண்டு

தேரை வேகமாகச் செலுத்தி நூறு பாணங்களை அனுமார் மீது பிரயோகித்தான். அவை மாருதியின்மேல் அழுந்தவே அவர் சரீரம் நொந்து மெய்ம்மறந்து போயினார். அதன்மேல் இராவணன், "குரங்குகளே! நீங்கள் கல்லையும் மரத்தையும் பல்லையும் கொண்டா என்னை ஜெயிக்கவந்தீர்கள்!" என்று வானர சேனைகளின்மீது எண்ணிறந்த பாணங்களைப் பிரயோகித்தான். வானரர்கள் அவற்றால் துன்பத்தை யடைந்தார்கள். அந்நிலைமையைக் கண்ட இலக்குமணன் கோபங்கொண்டு, இராவணனுக்கு முன்னே போய் நின்று 'இன்றைக்கு இவனைக்கொன்று விடவேண்டும்' என்று வில்லை வளைத்துக் குணத்தொனி பண்ணினான். பகைவர்கள் அதைக்கேட்டு நடுங்கினார்கள். இராவணன் இலக்குமணனைப் பார்த்து, 'இவன் மனிதன்தானோ!' என்று ஆச்சரியப் பட்டான். இலக்குமணன் எண்ணிறந்த பாணங்களை எதிரி படைகளிற் பிரயோகித்தான். அநேகம் இராக்ஷஸப் படைகள் மடிந்தன; எங்கும் இரத்தப் பிரவாகமாயிற்று. அப்போது பத்துக்கோடி இராக்ஷதர்கள் இலக்குமணனைச் சுற்றிக்கொண்டு பற்பல ஆயுதங்களைப் பிரயோகித்தார்கள். நிமிஷ நேரத்தில் இலக்குமணன் அவர்களை யெல்லாம் நாசம் பண்ணிவிட்டான். அதைக்கண்டு இராவணன் கடுஞ்சின மடைந்து வந்து இலக்குமணனுடன் எதிர்த்தான். இலக்குமணன் அவனைக் கண்டதும், 'எங்களை வஞ்சித்துப் பிராட்டியாரை அபகரித்துக் கொண்டுவந்த திருடா! இன்று நீ உயிர் தப்பிப்போக மாட்டாய்' என்று அநேகம் பாணங்களை அடுக்கடுக்காக அவன்மீது பிரயோகித்தான். அவற்றை யெல்லாம் இராவணன் தன்மேற் படவொட்டாமல் தடுத்துவிட்டான். மேலும் தீக்ஷணியமான அம்புகளை இலக்குமணன் செலுத்தினான். இராவணன் அவற்றை விலக்கி இலக்குமணனுடைய அம்பறாத் தூணியை அறுத்துவிட்டான்.

அத்தருணத்தில் இளைப்பாறியிருந்த அனுமார் இராவணனுக்கு முன்னே வந்து நின்று, "நீ எல்லோரையும் ஜெயித்த வல்லமைசாலி யென்பதை என்னுடைய ஒருகைக் குத்தினாலேயே போக்கி விடுகிறேன்; இப்போது நான் உன் மார்பில் ஒரு குத்துக் குத்துகிறேன்; அதற்கு நீ சாகாமலிருந்தால் என்னுடைய மார்பில் ஒரு குத்துக்குத்து; அதற்கு நான் சாகாமலிருப்பேனானால் அதன்மேல் நான் உன்னோடு எப்பொழுதும் போர் செய்கிறதில்லை" என்று சொன்னார். இராவணன் அதற்கிசைந்து, 'அப்படியே என் மார்பில் குத்து' என்று வீரத்தோடு நின்றான். உடனே அனுமார் உக்கிரங்கொண்டு அவன் தேரிற் பாய்ந்து அவனுடைய நெஞ்சில் பலங்கொண்டு குத்தினார். அந்தக் குத்தினால் இராவணனுடைய கண்களில் அக்கினி உதிர்ந்தது; அவன் மூளை கலங்கிப்போயிற்று; அவனுடைய மார்பில் பூர்வத்தில் அழுந்திப்போயிருந்த திக்கஜங்களுடைய தந்தங்களெல்லாம் கீழே உதிர்ந்து போயின; இராவணன் தளர்ச்சியடைந்து சாய்ந்தான். இராக்ஷதர்கள் பயந்தார்கள்; வானரர்கள், 'இராவணன் தோற்றான்' என்று ஆர்ப்பரித்தார்கள். சிறிது நேரம் சென்று இராவணன் மூர்ச்சை தெளிந்து பெருமூச்சு விட்டு வாயினால் இரத்தங் கக்கிக்கொண்டு அனுமாரை நோக்கி, "அனுமானே! நீயே மகாவீரன்; மனவருத்தமென்பதையே அறியாத நான் அதை அறியப் பண்ணினாய்; இனி உன் மார்பிலே நான் குத்துகிறேன்; அதை நீ சகித்துக்கொள்வாயானால் உனக்குச் சமானமானவர்கள் இவ்வுலகத்தில் இல்லை" என்று சொன்னான். அனுமார் அவனுடைய வீரத்தைப் புகழ்ந்து, 'அப்படியே நீ குத்து' என்று அவனுக்கெதிரில் நின்றார்; இராவணன் பற்களைக் கடித்துக்கொண்டு இருபது கைகளாலும் அவருடைய மார்பில் குத்தினான். அந்தக் குத்தினால் அனுமார் மெய்சலித்துப் பதைத்தார்.

அப்போது வானர வீரர்களனைவரும் ஆளுக்கொரு பர்வதத்தைப் பிடுங்கி இராவணன்மே லெறிந்தார்கள். அம்மலைகளுக்குப் பயந்து இராக்ஷஸ சேனைகள் ஓடின. அதைக் கண்ட இராவணன் கோபங்கொண்டு அநேகம் பாணங்களை ஏவி அந்த மலைகளை உடைத்துக் கீழே தள்ளினான்; அப்படித் தள்ளுண்டு வீழ்ந்த மலைகளால் இராவணனுடைய மாலைகள் அறுபட்டு அநேகம் படைகளும் நசுங்கிப்போயின. அதன் மேல் இராவணன், 'இந்தக் குரங்குக் கூட்டங்களையும் மனிதர்களையும் நான் இப்பொழுதே கொன்றுவிடுகின்றேன்' என்று பத்துக் கைகளிலும் பத்து விற்களை யெடுத்துக்கொண்டு சரங்களை மாரிபோற் பொழிந்தான். அந்தப் பாணங்களால் அநேகம் வானரசேனைகள் மடிந்தன; நீலன் அம்புபட்டுக் கீழே வீழ்ந்தான்; கவையன் மூர்ச்சை யடைந்தான்; அங்கதனும் மூர்ச்சையானான்; சாம்பவன் சுருண்டான்; மற்ற வானர வீரர்கள் அவஸ்தையுடன் ஓடிவந்து இளையபெருமாளிடம் முறை யிட்டார்கள்.

அப்போது இலக்குமணன் கோபங்கொண்டு இராவணன் விட்ட பாணங்களை யெல்லாம் அஸ்திரங்களால் அறுத்துத்தள்ளி அவனுடைய பத்து விற்களையும் முறித்துவிட்டான். இராவணன் இலக்குமணனை நோக்கி, 'உன் வீரமும் அழகும் நன்று யிருக்கின்றன' என்று சொல்லிவிட்டுப் பிரமா கொடுத்த வேலாயுதத்தை அவன்மே லெறிந்தான். இலக்குமணன் அநேகம் அம்புகளால் அதனைத் தடுத்தும் அவ் வேலாயுதமானது அவற்றை யெல்லாம் சிதைத்துவிட்டு இலட்சுமணனுடைய மார்பில் வேகமாய்ப் பாய்ந்தது. இலக்குமணன் சோர்ந்து வீழ்ந்தான். வானரசேனைகள் ஓட்டம் பிடித்தன. அப்போது இராவணன், இலக்குமணனைப் பார்த்து, 'இவன் சாகவில்லை; மூர்ச்சித்திருக்கின்றான்; ஆதலின் நாம் இவனை எடுத்துக்கொண்டு போய்விட வேண்டும்'

என்று தேரை விட்டிறங்கி யோடிவந்து இளையபெருமாளைத் தூக்கினான். அப்போது இலக்குமணன், அந்த இராமரே ஸ்ரீயப்பதி என்று தியானித்துக்கொண்டு மூர்ச்சித்திருந்தானாதலின் இராவணனால் அவனைத் தூக்க முடியவில்லை. அதனால் அவன் பெருமூச்சு விட்டுக்கொண்டு நின்றான். அத்தருணத்தில் அனுமார் மூர்ச்சை தெளிந் தோடிவந்து இராவணனை யிடித்துத் தள்ளிவிட்டு இலக்குமணனை யெடுத்துக்கொண்டு போய் இராமரிடம் சேர்த்தார். அதன்மேல் இராமர் இராவணனோடு எதிர்ப்பதற்குப் புறப்பட்டார். இராவணனும் அவருக்கு நேரே தேரைச் செலுத்திக்கொண்டு வந்தான். அப்போது அனுமார் இராமரை நோக்கி, "சுவாமி! அந்த இராவணன் தேரின்மேலேறி வரும்போது தாங்கள் கீழே நின்றெதிர்ப்பது தகாது; தேவரீர் என் தோளின்மீது ஏறி யருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார். இராமர் அப்படியே அவர் தோளில் ஏறிக்கொண்டார். அனுமார், 'சுவாமியைச் சுமக்கும்பாக்கியம் நமக்குக் கிடைத்ததே' என்று சந்தோஷித்தார். அதன்மேல் இராமர் கோதண்டத்தை யெடுத்து வளைத்துக் குணத்தொனி பண்ணினார். அதைக்கேட்டு இராக்ஷதர்கள் கலங்கினார்கள். அப்போது இராவணன் ஏழு தீவிரமான பாணங்களை அவர்மீது எவினான். இராமர் அவற்றைப் பதினாலு துண்டங்களாக்கிவிட்டு அக்கினிக்குச் சமானமான ஐந்து பாணங்களை அவன்மீது பிரயோகித்தார். அவன் அவற்றை விலக்கிவிட்டுப் பத்து அம்புகளை இராமர்மீது செலுத்தினான். அநேகம் இராக்ஷதர்கள் பற்பல ஆயுதங்களை வானரர்கள்மீது எவினார்கள். இராமர் பத்துப் பாணங்களால் இராவணன் அம்புகளைச் சிதைத்துவிட்டு, வேறு சில அம்புகளாலே மற்ற இராக்ஷதர்கள் விடுத்த ஆயுதங்களை வானரர்மீது படவொட்டாமல் விலக்கி அநேகம் இராக்ஷதர்களைக் கொன்று குவித்தார். அப்போது அவ

ரைத் தாங்கியிருந்த அனுமார், ஆகாயத்திலும், இராவணன் முகங்களுக் கெதிரிலும், மற்ற இராக்ஷதர்களுக் கெதிரிலும் தாவி, இடசாரிவலசாரியாகச் சுழன்று திரிந்தார். அப்படிச் சுழன்று திரியும்போதெல்லாம் இராமர் மேலும் மேலும் எண்ணிறந்த பாணங்களைப் பிரயோகித்துக் கொண்டிருந்த படியால் எங்கும் இராக்ஷதப் பிணங்கள் குவிந்தன; கவந்தங் களாடின; பேய்க்கூட்டங்கள் களித்தாடின; இரத்தப் பிரவாகம் பெருகி நால்வகைப் படைகளையும் இழுத்துக்கொண் டோடியது; அநேகம் இராக்ஷத ஸ்திரீகள் ஓடிவந்து தங்கள் கணவர் பிரிவைச் சகிக்காமல் மடிந்தார்கள்.

இப்படித் தன்னுடைய படைகள் மாண்டு எங்கும் பிணக்குவியலாய் விட்டதை இராவணன் பார்த்து நெருப் பைப்போல் கொதித்து இரண்டு பாணங்களை எடுத்து வேக மாக இராமருடைய தோள்களில் அழுந்தும்படி விட்டான். இராமர் அவற்றிற்குச் சலிக்காமல் புன்னகை புரிந்து ஒரே திவ்யாஸ்திரத்தால் அவனுடைய வில்லை ஒடித்துவிட்டார். அவன் மறுவில்லெடுத்துப் பாணந்தொடுத்தான். அப்போது இராமர் தெய்வீக அஸ்திரங்களால் அவனுடைய தேர்க்குதி ரைகளையும், குடை கொடிகளையும், யானைகளையும், கவசத்தை யும், சேமத்தேர்களையும் நாசப்படுத்திவிட்டார். உடனே இராவணன் தேரைவிட்டுக் கீழே குதித்தான். இராமர் சில பாணங்களை யேவி அவனுடைய கிரீடங்களைத் தள்ளிக் கொண்டுபோய்ச் சமுத்திரத்தில் போட்டுவிடும்படி செய்து விட்டார். எப்போதும் எவரிடத்தும் தோல்வியடையாத இராவணன், அப்படி எல்லாம் இழந்துபோகவே அபஜெயப் பட்டு வெறுங்கையனாய் வெட்கப்பட்டுத் தரையைப் பார்த் துக்கொண்டு நின்றான். அப்படி நின்றவனைக் கிருபா நிதியா கிய இராமர் பார்த்து வெறுங்கையனைக் கொல்லலாகா

தென்று, "இராவணா! உன் அக்கிரமம் இன்று அழிந்துவிட்டது; இப்போது நீ உயிர்தப்பி யோடிவிடு; சிறிதுநேரம் நிற்பாயானல் உன் பிராணன் போய்விடும் ; நீ போய் வேறு படைகளைச் சேர்த்துக்கொண்டு வந்தாலும் உன் குலத்தோடு நாசமடைவது நிச்சயம்; நீ உயிர்தப்பி யிருக்கவேண்டுமானல் இங்கே சீதையைக் கொண்டு வந்து விட்டு விபீஷணனை இலங்கைக் கதிபனுக்கி அவனிட்ட ஏவலைச் செய்து கொண்டிரு ; மடியவேண்டுமானல் யுத்தத்திற்குவா ; இப்பொழுது உனக்கமைந்திருந்த உப பலங்களெல்லாம் போய் விட்டன; ஆதலால் உன்னல் இப்போது யுத்தஞ்செய்தல் முடியாது; நீ இன்றுபோய் நாளைக்குவா" என்று கிருபை யுடனே சொன்னர். இராவணன் சகிக்க முடியாத அவமானத்துடன் அவ்விடத்தை விட்டகன்ருன்.

கும்பகர்ணன் வதை.

அவ்வாறு வெட்கிச்சென்ற இராவணன் தன்னுடைய பலமெல்லாங் குன்றிக் கிரீடங்களையும் ஆயுதங்களையும் இழந்து வெறுங்கையனுய்க் கால் நடையாகப் போய்ச் சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில் நகரத்தில் புகுந்து, எதிரில் வருகிறவர்களைப்பாராமல் பூமியைப்பார்த்தபடியே மாளிகை சேர்ந்து ஒரு பொற்சிம்மாசனத்தில் தனியே யிருந்து மனோவேகன், வாயுவேகன், மருத்தன், மேகன் என்னும் நான்கு தூதர்களை வரவழைத்து, 'நீங்கள் இப்பொழுதே விரைந்து சென்று, சப்த சமுத்திரங்கள், சப்த தீபங்கள், பர்வதங்கள், பாதாள லோகம், சக்கரவாளகிரி முதலிய விடங்களி லிருக்கின்ற இராக்ஷதர்களை யெல்லாம் அழைத்துக் கொண்டு வாருங்கள்' என்று ஆங்காங்கே அனுப்பிவிட்டு, "தோல்வி யடைந்தோமே" என்று ஒரு புஷ்ப மெத்தையின்மேல் சாய்ந்து பெருமூச்சு விட்டுக்கொண்டு சோர்ந்து கிடந்தான்.

அப்போது மாலியவான் அங்கே வந்து அவனைப் பார்த்து, "அப்பா பேரப்பிள்ளாய்! நீ என் முகம்வாடி யிருக்கின்றாய்?" என்று கேட்டான். இராவணன் இராமலக்குமணர்களுடைய பிரதாபங்களையும் வில் வல்லமைகளையும், தான் அபஜெயப்பட்டதையும் அவனிடங்கூறி விசனப்பட்டான். மாலியவான், "ஐயா! நான் முந்தியே அவர்களுடைய தன்மையைக் கூறினேன். அப்போது நீ கோபித்துக் கொண்டாய்; விபீஷணன் நல்ல புத்தி சொன்னான்; அவனையும் நீ சினந்தாய்; இப்போது விசனப்படுகின்றாய்; இனியாவது ஜானகியைவிட்டு விட்டால்தான் நீ பிழைப்பாய்; இல்லாவிட்டால் நீ யாவற்றையுமிழந்து மடிவது நிச்சயம்" என்று கூறினான். அப்போது மகா துராத்மாவாகிய மகோதரன் ஓடிவந்து மாலியவானைக் கோபித்துப் பார்த்து, 'நீ என்ன அற்பமானவார்த்தைகளைப் பேசுகிறாய்! நீ பேசாமலிரு' என்று சொல்லிவிட்டு இராவணனை நோக்கி, "இலங்காதிபரே! ஒரு காரியத்தை ஆரம்பித்துவிட்டால் எதுவந்தாலும் மனஞ் சலிக்காமல் அதனை முடிவுவரை நிறைவேற்றி விடுவதே வீரர்களுடைய செய்கையாகும்; மும் மூர்த்திகளும் உமக்குப் பயந்திருக்க நீர் அற்ப மனிதர்களுடைய சிறு செய்கைகளுக்கு மனமிளைப்பது அதிசயமாயிருக்கின்றது; ஒரு சமயம் வென்றவர் தோற்பதும், தோற்றவர் வெல்வதும் உலகியற்கை; நீர் இந்தச் சிறு தோல்வியைப்பற்றி மனஞ்சலிக்கலாகாது; நாம் யுத்தஞ் செய்தே தீரவேண்டும்; நமக் கென்னபலம் குறைந்து விட்டது! உமது தம்பியாகிய கும்பகர்ண னிருக்கும்போது நாம் எதற்காகக் கவலைப்பட வேண்டும்; அவரை யுத்தத்திற் கனுப்பினால் கண்டவுடனே அந்த நரர்களும் வானரர்களும் ஓட்டம் பிடிப்பார்கள்; அப்படி ஓடா

மல் நிற்பார்களே யானுல் அவரால் மடிந்தே போவார்கள்" என்று சொன்ணுன்.

இந்த வார்த்தையைக் கேட்டவுடனே இராவணன், "நல்ல உபாயஞ் சொன்ணுய்!" என்று மகோதரனைப் புகழ்ந்து கூறிவிட்டு உடனே தூதுவர்களை அழைத்து 'நீங்கள் விரைந்து சென்று என் தம்பி கும்பகர்ணனை அழைத்து வாருங்கள்' என்று அவனிட மனுப்பினுன். கும்பகர்ணனுக்கு அப்போது தூங்குங்காலம் வந்தபடியால் அவன் நித்திரை செய்துகொண்டிருந்தான். அத்தருணத்தில் இராவணனுல் அனுப்பப்பட்ட தூதுவர்கள் கும்பகர்ணனுடைய பள்ளியறைக்குச்சென்று அவன் பக்கத்தில் நின்று, "ஐயா! உமது தமையனுர் உம்மை அழைக்கின்றுர்; எழுந்திரும் எழுந்திரும்" என்றுகூவி இருப்புலக்கையால் அவன் தலையிலிடித்தும், செவிகளிற் குத்தியும் அவனை எழுப்பினுர்கள். அவன் விழிக்கவில்லை. அதனைத் தூதுவர்கள் இராவணனுக்குத் தெரிவித்தார்கள். அதன்மேல் இராவணன் ஆயிரக்கணக்கான யாளி, குதிரை, யானை முதலியவற்றை அவன் தேகத்திலேற்றி மிதிக்கச்செய்தும், மல்லர்களைவிட்டு வாத்திய வொலி முழக்கச்செய்தும், பல ஆயுதங்களால் அவனுடைய பல அவயவங்களிலும் குத்தி யிடிக்கச் செய்தும் அவனை எழுப்புவித்துப்பார்த்தான். அவன் எழுந்திருக்கவேயில்லை. அவனைத் தட்டி யெழுப்பச்சென்ற மல்லர்களெல்லோரும் அவனுடைய சுவாசத்திலகப்பட்டு அலைபோல் அங்குமிங்கும் அலைந்து அவஸ்தையடைந்து ஓடி வந்துவிட்டார்கள். அதன்மேலும் இராவணன் 'எப்படியாவது அவனை எழுப்பியே தீரவேண்டும்' என்று மல்லர்களுக்குக் கட்டளையிட்டான். அவர்கள் மீண்டும் சென்று இருப்புலக்கைகளைக் கொண்டு அந்தக் கும்பகர்ணனுடைய இரண்டு கன்னங்களிலும் ஓங்கியோங்கி அடித்தார்கள். அதன்மேல் பெரிய தேகத்தையுடைய அங்

தக் கும்பகர்ணன் கொட்டாவி விட்டுக்கொண்டு விழித்தெழுந்து நின்றான். அப்போது அவனுடைய சமையற்காரர்கள் அறுநூறுவண்டி மாமிசமும், பதினாயிரம்குடம் கள்ளும் கொண்டுவந்து அவனுக்குக் கொடுத்தார்கள். அவன் அவற்றையெல்லாம் உண்டு பசியடங்காமல் மேலும் ஆயிரத்திருநூறு எருமைக்கடாக்களைச் சிற்றுண்டியாகத் தின்றுவிட்டு, 'இன்னமும் ஆகாரமிருந்தால் கொண்டு வாருங்கள்' என்று சுயம்பாகிகளிடம் சொல்லிக்கொண்டு படுக்கையில் உட்கார்ந்தபடியே தூங்கினான். அப்போது தூதர்கள் இராவணனுடைய கட்டளையை அவனுக்குத் தெரிவித்தார்கள். உடனே கும்பகர்ணன் எழுந்து இராவணனிடம் சென்று வணங்கினான். இராவணன் அவனைத் தூக்கி மார்புறத்தழுவி, ஆசனத்தில் உட்கார வைத்து, அவனுக்கு அநேக குடங்களில் நிரப்பி வைத்திருந்த இரத்தத்தையும் கள்ளையும் குடிப்பாட்டி, வெண்பட்டு வஸ்திரங்களை உடுத்தி, பற்பல ஆபரணங்களை யணிவித்து, இந்திரன் தோல்வியடைந்து போட்டோடிய நெற்றிப் பட்டத்தைக் கட்டி, செஞ்சந்தனக் குழம்பை உடம்பிற் பூசி, சிவன் கொடுத்த கவசத்தை மார்பி லணிவித்தான்.

இப்படி இராவணன் அவனை அலங்கரிக்கும்போது அவனுக்கு இடப்புருவமும் இடத்தோளும் துடித்தன. அப்போது கும்பகர்ணன் இராவணனை நோக்கி, "அண்ணா! எதற்காக என்னை இப்படி அலங்கரிக்கின்றாய்?" என்று வினவினான். அதற்கு இராவணன், "தம்பி! இரண்டு மனிதர்கள் வானரங்களுடன் வந்து நம்முடைய கோட்டையை வளைந்து கொண்டிருக்கின்றார்கள்; நீ போய் அவர்களைக் கொன்று வரவேண்டும்; அதன் பொருட்டே உனக்கிந்த அலங்காரம் செய்யப்படுகின்றது" என்று சொன்னான். கும்பகர்ணன் முன்னே சீதையின் விஷயமாகச் சில நல்ல வார்த்தைகள்

கூறிவிட்டு நித்திரைக்குப் போய்விட்டானாதலின், பின்னே நடந்திருக்கும் சங்கதிகளை அவன் உணரான்; ஆதலின் அவன் இராவணனைப் பார்த்து, "அந்தோ! அந்தச் சீதாபிராட்டியை நீ இன்னும் விட்டு விடாதிருந்து யுத்தத்தை வரவழைத்துக் கொண்டாய்! இனி நீ உன் குலத்துடனே அழிந்து போவது நிச்சயம்; விபீஷணன் இராமரோடு சேர்ந்து நல்ல பாக்கியம் பெற்றான்; நீ பிழைத்திருக்க வேண்டுமானால் சீதாதேவியாரை இராமரிடம் சேர்ப்பித்து விட்டு அவருடைய பாதத்தை வணங்கிக்கொள்" என்று சொன்னான். இதைக் கேட்டதும் இராவணன் கண் சிவந்து, "கும்பகர்ண! நான் அற்ப மனிதர்களையும் குரங்குகளையும் கொன்றுவா உன்னை அழைத்தேனே யன்றிப் பின் நடக்கும் காரியங்களைச் சொல்வதற்கு அழைக்கவில்லை; நீ அந்த மானிடர்க்குப் பயந்து விட்டாய்; மனிதர்களையும் குரங்குகளையும் வணங்கி வயிறுவளர்க்கும் செய்கை விபீஷணனுக்கும் உனக்குமே யுரியது; இனி நீ அரை நிமிஷமும் இங்கே நில்லாதே; நித்திரை செய்யப்போ" என்று கூறிவிட்டு உடனே, "என்னுடைய தேரையும்ஆயுதங்களையும் கொண்டு வாருங்கள்; நானே யுத்தத்திற்குப் போகிறேன்" என்று பக்கத்தில் நின்றவர்களிடம் கூறிச் சண்டைக்குப் புறப்பட எழுந்தான். அதைக்கண்டு கும்பகர்ணன் மனம் நொந்து இராவணனுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி யெழுந்து நின்று சூலாயுதத்தை வலக்கையிற் பிடித்துக்கொண்டு அவன் முகத்தை நோக்கி "அண்ணா! நீர் கோபித்துக் கொள்ளவேண்டாம்; உமக்குப் பின்வரும் கெடுதிகளை உத்தேசித்து நான் சில வார்த்தைகள் கூறினேன்; நம்முடைய கெட்ட காலத்தால் அவை உமது செவிக்கேறவில்லை; நான் யுத்தத்திற்குச் சென்று திரும்பிவரப்போகிறதில்லை; இந்திரஜித்துவும் இலக்குமணனால் அழிந்துவிடப் போகின்றான்;

இராமபாணத்தால் நீரும் அழிவீர், உம்முடைய படைகளும் அழியும்; இனி ஆகவேண்டிய காரியங்களை நீர் கொஞ்சம் ஆலோசித்துச் செய்யும்; உமக்கும் எனக்குமுள்ள சகோதரத்துவம் இன்றோ டொழிந்தது; நான் ஏதாவது குற்றஞ் செய்திருந்தால் நீர் பொறுத்துக்கொள்ளும், நான்போய்வருகிறேன்" என்றுயுத்தத்திற்குப் புறப்பட்டு விட்டான். அப்போது இராவணன் இரத்தக்கண்ணீர் விட்டழுதான். கும்பகர்ணனுடைய பெண்சாதி பிள்ளைகள் முதலிய சுற்றத்தார்கள் யாவரும் அழுதார்கள். அப்படி அழுகிறவர்களைப்பார்த்துக் கும்பகர்ணனும் அழுதுகொண்டு போய் உத்தர கோபுர வாயிலை யடைந்து ஆயிரக்கணக்கான சிங்கங்களும் யாளிகளும், யானைகளும், பூதங்களும் பூட்டப்பட்ட ஒரு பெரிய தேரிலேறி யுத்த பூமியை நோக்கிச் சென்றான். அளவற்ற பல கொடிய ஆயுதங்களையும், கள்ளுச்சாடிகளையும் தூக்கிக்கொண்டு அநேகம் இராக்ஷதர்கள் அவனுடன் இரண்டு பக்கங்களிலும் சென்றார்கள். வெந்த மாமிசத்துண்டங்கள் நிறைந்த ஆயிரம் வண்டிகளைப் பல இராக்ஷதர்கள் ஓட்டிக்கொண்டு இரண்டு பக்கங்களிலுமிருந்து அவற்றை யெடுத்து அவனுக்குத் தின்னக் கொடுத்துக்கொண்டே சென்றார்கள். நால்வகைச் சேனைகளும் அவனைச் சூழ்ந்து சென்றன.

இப்படிச் சென்ற கும்பகர்ணனை இராமர் பார்த்து இராவணனென்று நினைத்து, அவன் தேரில் வீணைக்கொடியில்லாமல் சிங்கக்கொடி கட்டியிருக்கக் கண்டு அவனல்லவென்றும், அவனே வேற்றுருவங்கொண்டு வருகின்றானோவென்றும் ஐயுற்றுப் பக்கத்திலிருந்த விபீஷணனைப் பார்த்து, "இவன் யார்?" என்று கேட்டார். விபீஷணன், "சுவாமி! இவன் இராவணனுக்குத் தம்பியும், எனக்கு மூத்தவனுமாகிய கும்பகர்ணன்; இவன் நித்திரை நீங்குங்காலத்

தில் தேவர்கள் நாசமடைவார்கள்; இவன் தவத்தினால் மிகுந்த வரங்களைப் பெற்றவன்; தேவர்களை யொழிக்கும் சூலாயுதத்தையுடையவன்; இவன், சீதாபிராட்டியாரை விட்டுவிட்டால்தான் நமக்கு க்ஷேமமுண்டாகு மென்று இராவணனுக்கு மூன்றுமுறை சொல்லியும் அவன் கேளாத தால், தான் சாவதே நல்லதென்று அவனை வெறுத்து நம் மோடு யுத்தஞ்செய்ய வந்திருக்கின்றான்" என்று மிகுந்த துக்கத்துடன் சொன்னான். அப்போது சுக்கிரீவன் இராமரை நோக்கி, "சுவாமி! அப்படியானால் அந்தக் கும்பகர்ண னுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து அவனுக்குநம்மோடு சேர்ந்துகொள்ள இஷ்டமிருக்கும் பக்ஷத்தில் நாம் அவனைச் சேர்த்துக்கொள்ளலாம்; அதனால் விபீஷணருக்கும் துக்கம் நீங்கும்" என்றான். இராமர், "அப்படியேசேர்த்துக்கொள்ள லாம்; ஆனால் அவனிடம் சென்று இந்த விஷயத்தைப் பற்றிப் பேசி வரத்தக்கவர் யாவர்?" என்றார். விபீஷணன், 'தேவரீருக்குத் திருவுளமிருந்தால் நான் போய்வருகிறேன்' என்றான். இராமர் அப்படியே கும்பகர்ணனிடம் சென்று வரும்படி விபீஷணனை அனுப்பினார்.

விபீஷணன் உடனே கும்பகர்ணனுக்கு முன்னே சென்று வணங்கிநின்றான். அவனைக் கண்டதும் கும்பகர் ணன், 'இவன் இராமரோடு சேர்ந்திருக்க இஷ்டமில்லாமல் நம்மைக் கண்டதும் இங்கே திரும்பி வந்துவிட்டானக்கும்' என்று நினைத்து அவனை வாரியெடுத்து மார்போடணைத் துக் கொண்டு கண்ணீரொழுக அவன் முகத்தை நோக்கி, "தம்பி! நீ இராகவரிடம் அடைக்கலம் புகுந்து இருமைச் சுகங்களையும் அடைந்தாயென்று கேள்விப்பட்டு நான் மகிழ்ந்திருந்தேனே; அப்படியிருக்க நமன் வாய்க்கிரையாக விருக்கும் எங்களிடம் நீ திரும்பவும் என்வந்தாய்? அந்தோ!

நாங்களெல்லோரும் மடிந்துபோவோம்; நீ யிருந்தாலும் எங்களுக்கு எள்ளுந்தண்ணீரு மிறைப்பாய்; நீ எங்களுடன் சேர்ந்திறந்து விட்டால் எங்களாவி கடைத்தேறுதற்குப் பிதுர்க்கட னாற்றுபவரெவர்? ஆகையால் நீ இங்கே சிறிது நேரமாவது தாமதிக்காமல் திரும்பி அவர்களிடமே போய் விடு" என்று இரக்கத்தோடு கூறினான். அதற்கு விபீஷணன், "அண்ணா! நான் அந்த இராமலக்ஷ்மணர்களைப் பிரிந்து வந்து விடவில்லை; நீ மிக்க நீதிமானாயிருப்பதால் உனது மரணத்தை விலக்கலாமென்று வந்தேன்; நீ வீணாக அந்த இராக்ஷதர்களுக்காக என் உயிரைக் கொடுக்கப் போகின்றாய்; நீ இராமரோடு வந்து சேரச் சம்மதித்தால் இராமர் என்னை ஆதரித்ததுபோல உன்னையும் காப்பாற்றுவதாகச் சொல்லுகின்றார்; அவரால் எனக்குக்கொடுக்கப்பட்ட இலங்காதிபத்தியத்தை நான் உனக்கே கொடுத்து ஏவல் புரிகின்றேன்; நீ நெடுங்காலம் சுகத்துடன் வாழ்ந்து பின்னர்ப் பரமபதத்தையும் அடையலாம்; உன்னைப்பற்றி நான் துக்கப்படுகின்றேன்; ஆதலின், என் சொல்லை நீ அங்கீகரித்து என்னுடைய துயரத்தை நீக்கி யருள்வாயாக" என்று கூறினான். இவற்றைக் கேட்டவுடனேகும்பகர்ணன் இரத்தக் கண்ணீர்விட்டு அவன் முகத்தைநோக்கி, "தம்பி! நம் தமையன் கெட்டவனா யிருந்தாலும் இதுவரை என்னை ஆதரித்து வந்திருக்கின்றான்; இப்போது நம்பி யுத்தத்திற்கு மனுப்பியிருக்கின்றான்; மேலும் இராமலக்ஷ்மணர்கள் நல்லவர்களா யிருந்தாலும் நம் சகோதரியாகிய சூர்ப்பனகியை அவமானப்படுத்தி யிருக்கின்றார்கள்; அப்பேர்ப் பட்டவர்களோடு சேர்ந்துகொள்ள எனக்கிஷ்டமில்லை; நான் அவர்களையும் அவர்களுடையபடைகளையும்ஜெயிக்கலாமென்றெண்ணி யிருக்கின்றேன்; இராமலக்ஷ்மணர்கள் தவிர மற்றவர்களை நான் கொன்று விடுவேன்; என்றாலும் நான் பிழைப்ப

தரிது; இராவணன் பொருட்டு என்னுயிரை விடுத்துச் சோற்றுக்கடனைத் தொலைத்து விடுகின்றேன்; நீ விரைந்து அவர்களிடம் போய் விடு" என்று அவனைப் பன்முறை தழுவிக்கொண்டு நாம் பிரிந்துவிடப் போகின்றோமே என்று புலம்பினான். விபீஷணன் தாங்கமுடியாத துயரத்தோடு அழுதுகொண்டே அவனை விட்டுப் பிரிந்துவந்து இராமரிடம் அவன் இணங்காததைக் கூறிவிட்டான். இராகவர், 'விதிப்படிதான் எதுவும் நடக்கும்; அவன் என் செய்வான் பாவம்' என்று விபீஷணனுக்குச் சமாதானம் கூறினார்.

அவ்வாறு சொல்லிக்கொண் டிருக்கும்போதே கும்பகர்ணனுடன் வந்த இராக்ஷதசேனைகள் வானரர்களைவளைந்துகொண்டு போர் செய்யத் தொடங்கின. வானர வீரர்களும் அவர்களுடன் எதிர்த்தார்கள். அந்தச் சண்டையில் பல இராக்ஷதர்களும், அனேகம் வானரர்களும் மடிந்தார்கள். அத்தருணத்தில் கும்பகர்ணன் தன் தேரை வானர சேனைகளுக்கு மத்தியிற் செலுத்திப் பற்பல வானரர்களைப் பற்பல விதங்களாகக் கொன்றுவிட்டு வசந்தனென்கிற வானரப் படைத்தலைவனைப் பிடித்து நசுக்கி அவனுடைய உதிரத்தை வாரி மார்பில் பூசிக்கொண்டான். அதுகண்ட நீலன் பெரிய மலையொன்றைப் பெயர்த்தெடுத்துக் கும்பகர்ணன்மேலெறிய அவன் அதைச் சூலாயுதத்தால் நொறுக்கிவிட்டுச் சிரித்தான். அதன்மேல் நீலன் கும்பகர்ணனுக்கெதிரில் குதித்து அவனைப் பன்முறை கைகளால் குத்தியும், கால்களால் உதைத்தும் அவன் அசையாதிருந்தான். அதுகண்டு நீலன் திகைத்து நின்றான். அப்படி வெறுங்கையோடு நின்ற நீலன்மீது கும்பகர்ணன் சூலத்தைச் செலுத்தக் கூடாதென்று தன் இடக்கையால் அவனை ஒருகுத்துக் குத்தினான். நீலன் சோர்ந்து விழுந்தான். அதைக்கண்ட அங்கதன்

பெரிய மலையைப் பிடுங்கிக் கும்பகர்ணன்மேல் விட்டெறிந்தான். கும்பகர்ணன் அதனைத் தோளினால்தட்டித் தூளாக்கி விட்டான். அங்கதன் கோபமுற்று ஒன்றியாய் நின்றான். அப்போது கும்பகர்ணன் ஓர் இருப்புலக்கையை அங்கதன் மேலெறிந்தான். அங்கதன் அதைத் தன் கையினால் பற்றிப் பிடித்துக்கொண்டு அதனால் கும்பகர்ணனை அடித்து அவன் தேகத்தில் இரத்த மொழுகச்செய்து கர்ஜ்ஜித்து அவனெதிரே நின்றான். அப்போது கும்பகர்ணன் அவனை நோக்கி, 'நீ யார்?' என்றான். அதற்கு அங்கதன், "உன் தமையனை வாலிற் கட்டிக்கொண்டு திரிந்த வாலியின் புத்திரன் நான்; என்பெயர் அங்கதன்; நான் உன்னை என்வாலிற் கட்டிக்கொண்டுபோய் இராமர் சன்னிதியில்விட வந்திருக்கின்றேன்" என்றான். அதைக்கேட்டுக் கும்பகர்ணன், "நீ கொஞ்சமாவது நாணமின்றி உன் தகப்பனைக் கொன்றவர்க்குதவிசெய்ய வந்திருக்கின்றாய்;அத்தகைய நீ சாகவந்தாயேயன்றி என்னை வாலிற்கட்டிக் கொண்டுபோக வரவில்லை" என்று சொன்னான். அங்கதன் கண்சிவந்து தன் கையிலிருந்த இருப்புலக்கையால் அவனை ஓங்கி யடித்தான். அது துண்டு துண்டுகளாய் முறிந்து போயிற்று. உடனே கும்பகர்ணன் அங்கதனை ஒரு குத்துக் குத்தினான். அங்கதன் பூமியில் வீழ்ந்து மூர்ச்சையடைந்தான். அப்படி வீழ்ந்த அங்கதன் மார்பில் கும்பகர்ணன் மேலும் சூலாயுதத்தை எறிய யத்தனித்தான். அதைக்கண்டு அனுமார் ஓடிவந்து அவனுடைய பிரயத்தனம் நிறைவேறாமற் போகும்படி ஒரு மலையை எடுத்து அவன் மேலெறிந்து கர்ஜ்ஜித்தார். அந்த மலை அவனுடைய தலையில் பாய்ந்து பொத்துக்கொண்டது. உடனே அவன் அப்படிப் பாய்ந்த மலையைப் பிடுங்கி அனுமாருடைய மார்பிலெறிந்து கர்ஜ்ஜித்தான். ஆஞ்சநேயர் அந்தமலையை இலக்ஷியம் பண்ணாமல் தட்டிவிட்டு மற்றொரு

பெரிய மலையைப் பெயர்த்துக்கொண்டு, கும்பகர்ணனைப் பார்த்து, "இதை நான் உன்மேல் எறிகின்றேன்; இதனால் நீ நிமிஷநேரத்தில் மாண்டேபோவாய்; அப்படிச் சாகாமல் நீ இதைத்தடுத்து விடுவாயானால் அதன்மேல் நான் உன்னோடு சண்டை செய்யாமல் போய்விடுவேன்; இதற்கு நீ சம்மதிக்கிறாயா?" என்றார். கும்பகர்ணன், 'அப்படியே அதனை எறிபார்க்கலாம்' என்றான். அனுமார் உடனே அந்த வஜ்ஜிரமலையை அவன் மேலெறிந்தார். அவன் அதனைத் தோளினால் தாங்கிப் பொடியாக்கிவிட்டு இளைப்படையாமல் நின்றான். அதைக்கண்ட அனுமார், 'இவன் மகாசமர்த்தன்; இவனை இராமபாணந்தான் கொல்லவேண்டும்' என்று அவனோடு சண்டை செய்யாமல் திரும்பிப் போய்விட்டார்.

அதன்மேல் கும்பகர்ணன், 'அந்த இரண்டு மனிதர்களும் எங்கே யிருக்கின்றார்களோ தெரியவில்லையே' என்று இராமலக்குமணர்களைத் தேடிக் கர்ஜ்ஜித்தான். அந்த முழக்கத்தைக் கேட்டவுடனே இலக்குமணன் தனியே போய் அவனுடனெதிர்த்து அநேகம் பாணங்களைப் பிரயோகித்தான். அவற்றுள் சில பாணங்கள் கும்பகர்ணனைச் சிறைக்கூடம்போல் வளைந்துகொண்டன; பின்னும் பல பாணங்கள் அநேகம் இராக்ஷதர்களையும், யானை, குதிரை, தேர் முதலியவற்றையும் நாசப்படுத்திவிட்டன. இன்னும் சில பாணங்கள் மேலும் எதிரிகள் அகப்படவில்லையே என்று சுற்றிக்கொண்டு திரிந்தன. அப்போது பிராணனுடனிருந்த இராக்ஷதர்கள் அந்தப் பாணங்களைக் கண்டு 'இனி நாம் பிழைப்பது அரிது; கும்பகர்ணனும் சிறிது நேரத்திற்குள் மடிந்துபோவான்' என்று பயந்தோடினார்கள். கும்பகர்ணன் இலக்குமணனுடைய சாமர்த்தியத்தைப் பார்த்து, 'இவனே வில்வீரன்' என்று அவனைப் பன்முறை புகழ்ந்து அவனுக்கெதிரில்

தேரைச் செலுத்தி யுத்தஞ்செய்யத் தொடங்கினான். அத்தருணத்தில் ஆஞ்சனேயர், 'கும்பகர்ணன் தேரிலிருந்து யுத்தஞ் செய்கையில் இளையபெருமாள் தரையில் நின்று சண்டை தொடுப்பது தகாது' என்று இலக்குமணனிடம் வந்து, "சுவாமி! என் தோளின்மீது ஆரோகணித்து யுத்தஞ் செய்தருளும்" என்று சொல்ல, அவன் அப்படியே அனுமார் தோளில் ஏறிக்கொண்டான். அப்போது கும்பகர்ணன் இலக்குமணனை நோக்கி, "இலக்குமணா! யாதொரு குற்றமுஞ் செய்யாத சூர்ப்பனகியின் மூக்கையறுத்த உன்கையை நான் இப்போது அறுக்காமல் விடமாட்டேன்" என்று கோபித்துச் சொன்னான். அதற்கு இலக்குமணன், "அடா கும்பகர்ணா! நான் உனக்கு மாறுத்தரம் என் வில்லினாற் சொல்வேனேயன்றி வாயினாற் சொல்லமாட்டேன்" என்று தன் வில்லைக்காட்டினான். அதைக்கேட்டுக் கும்பகர்ணன் கண்களில் தீப்பொறிபறக்கப் பதினெட்டு அக்கினி முகாஸ்திரங்களை இலக்குமணன்மீது விடுத்தான். அந்தப்பாணங்களை இலக்குமணன் நான்கு அம்புகளால் அறுத்தெறிந்தான். அதன்மேல் கும்பகர்ணன், பிரமாவினிடம் பெற்ற ஆயிர முகங்களுள்ள அஸ்திரமொன்றை யெடுத்து இலக்குமணன் மீது பிரயோகித்தான். இலக்குமணன் ஒரு தேவாஸ்திரத்தை விடுத்து அதனை இரண்டாயிரந் துண்டுகளாக அறுத்து வீழ்த்தினான். அதுகண்டு கும்பகர்ணன் கடுஞ்சின மடைந்து அனுமார்மீது பன்னிரண்டு பாணங்களையும் இலக்குமணன்மீது இரண்டு பாணங்களையும்விடுத்து மேலும் நூற்றுக்கணக்கான பாணங்களைத் தொடுத்து எங்கும் பாணமயமாகச் செய்துவிட்டான். உடனே இலக்குமணன் கொடூரமாகிய சில அம்புகளை யேவி அந்தப்பாணங்களை யெல்லாம் அறுத்துத் தள்ளியதோடு கும்பகர்ணனுடைய தேரையும்,

அதிற்பூட்டிய குதிரைகள் முதலியவற்றையும், அவன் சாரதியையும், வில்லையும் நாசஞ் செய்துவிட்டான்.

அவ்வாறு எல்லாம் அழியவே கும்பகர்ணன் பூமியில் நின்று 'இலக்குமணனை இதோ கொல்லுகின்றேன்' என்று சூலாயுதத்தை எடுத்தான். இலக்குமணனும் அப்போது வாகனத்திலிருந்து தான் சண்டை தொடுப்பது யுத்ததருமமன்றென்று ஆஞ்சனேயர் தோளைவிட்டுக் கீழே குதித்துக் கும்பகர்ணனோடு எதிர்த்து நின்றான். அப்போது கும்பகர்ணனுக்குதவியாக இராவணனால் அனுப்பப்பட்ட சேனைகள் முன்னிலும் இரண்டுபங்கதிகமாக வந்து இலக்குமணனைச் சுற்றிக்கொண்டு ஆயுதப்பிரயோகஞ் செய்தன. இலக்குமணன் உக்கிரத்தோடு அந்த ஆயுதங்களை யெல்லாம் துண்டு துண்டாகச் செய்து அந்த இராக்ஷத சேனைக்குள்ளே புகுந்து அவர்களுடைய தலைகளை யறுத்து மலைபோலக் குவித்துச் சதுரங்க சேனைகளையும் சின்னபின்னப் படுத்தினான். அப்போது மற்றொரு பக்கத்தில் யுத்தஞ் செய்து கொண் டிருந்த சுக்கிரீவன் ஒரு பெரிய மலையைப் பெயர்த்துக் கும்பகர்ணனுடைய தோளின்மீது எறிந்தான். கும்பகர்ணன் தன் உள்ளங்கையினால் அதைப் பந்தைப் பிடிப்பது போல பிடித்துப் பிசைந்து தூளாக்கிக் காற்றில் தூற்றினான். சுக்கிரீவன் வேறொரு மலையைப் பெயர்த்துக் கொண்டுவர நினைத்தான். அச்சமயம் கும்பகர்ணன் சூலாயுதத்தைச் சுக்கிரீவன்பேரில் எறிந்தான். ஆஞ்சனேயர் குபீரென்று பாய்ந்து அந்தச் சூலாயுதத்தைப் பிடித்து முறித்தெறிந்து விட்டார். அதைக் கண்டு கும்பகர்ணன், 'நீ என்னோடு சண்டைசெய்ய வருகின்றாயா?' என்று அனுமாரைக் கேட்டான். அதற்கவர் 'நான் முந்தியே உன்னுடன் சண்டை செய்வதில்லை யென்று கூறி யிருக்கின்றேன்; ஆத

லால் அதற்கு விரோதமாக இப்போது யுத்தம் புரியமாட்டேன்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். பின்பு கும்பகர்ணன் நிராயுதபாணியாய் ஒரு பக்கத்தில் நிற்கக் கண்டு சுக்கிரீவன் அவனோடு மல்யுத்தஞ் செய்ய ஆரம்பித்தான். இருவரும் சிறிது நேரம் ஒருவரை யொருவர் கைகளாற் குத்தியும், கால்களால் உதைத்தும், புஜங்களால் தாக்கியும், தலையால், மோதியும் யுத்தஞ் செய்தார்கள். கடைசியில் கும்பகர்ணன், சுக்கிரீவனைக் கைகளாற் கட்டியிறுக்க, அவன் மூர்ச்சை யடைந்தான். அப்போது கும்பகர்ணன் சுக்கிரீவனை மார்பிலணைத்துத் தூக்கிக்கொண்டு இலங்கையை நோக்கி விரைந்து சென்றான்.

அதைக் கண்டு வானரர்க ளெல்லோரும், 'இனி என் செய்வது' என்று அவன் பின்னே தொடர்ந்து சென்றார்கள். ஆஞ்சனேயர் முன்னே அவனோடு சண்டை செய்வதில்லை யென்று சொல்லிவிட்டபடியால் அப்போது ஒன்றுஞ் செய்யமுடியாமல் கையைப் பிசைந்துகொண்டு அவன் பின்னே சென்றார். சில வானரர்கள் ஓடி இந்தச் செய்தியை இராமரிடம் தெரிவித்தார்கள். உடனே இராமர் கோபித்து விரைந்துசென்று இலங்கைக் கோட்டை வாயிலை யடைந்து எந்த வழியிலும் கும்பகர்ணனைப் போகவொட்டாமல் அவனை உள்ளே வைத்து ஆகாயத்தையும் மூடிக்கொள்ளும்படி சர்ப்பபந்த விட்டுவிட்டார். அதனால் ஆகாயத்தில் வேகமாகச் சென்ற கும்பகர்ணன் எங்கும் போக முடியாமல் வழி தேடித்திரிந்தான். அப்போது இராமர் அவனுக் கெதிர்ப்பட்டார். அவரைக் கண்டதும் கும்பகர்ணன் கடுஞ் சினமடைந்து, "நான் உன்னையே தேடிவந்தேன்; நீ எதிர்ப்படவில்லை; மற்றவர்கள் வந்து என்னோடு போர் தொடுத்து மடிந்தும் இளைத்தும் ஒதுங்கியும் போயினார்கள்; இந்தக்

குரங்கு மாத்திரம் கர்வங்கொண்டு என்னிடம் வந்து அகப்பட்டுக் கொண்டது; இவனை நான் இலகுவில் எடுத்துக்கொண்டு வந்து விட்டேன்; நீ இப்போதுதான் இவனை மீட்க வந்திருக்கின்றாய்; உனக்கு வல்லமை யுண்டானால் இவனை நீ மீட்டுவிடு பார்க்கலாம்; அப்படி மீட்பாயானால் சீதையையும் மீட்டு வடுவாய்” என்று சொன்னான். அதற்கு இராமர், ‘சுக்கிரீவனைப் பிணித்திருக்கின்ற உன்னுடைய வலியதோளை இப்பொழுதே அறுத்துத் தள்ளாவிட்டால் இனி நான் வில்லைக் கையிலெடுக்க மாட்டேன்” என்றார். அப்போது கும்பகர்ணன் இராமரால் இடப்பட்ட சரப்பந்தலைச் சிதைக்க முயற்சித்தான். அதைக் கண்டு இராமர் இரண்டு பாணங்களை யேவி அவனுடைய நெற்றியைப் பிளந்து விட்டார். அவன் மூர்ச்சை யடைந்தான். அவன் நெற்றியிலிருந்து வடிந்த இரத்தமானது சுக்கிரீவனுடைய முகத்திற் பாய்ந்தது. உடனே சுக்கிரீவன் மயக்கம் நீங்கிக் கும்பகர்ணனுடைய நெற்றியில் இராமபாணம் தைத்திருப்பதையும், இராமர் எதிரில் நிற்பதையுங் கண்டு தைரியமடைந்து அந்தக் கும்பகர்ணனுடைய மூக்கையும் செவிகளையும் வேருடன் பிடுங்கிக்கொண்டு குபீரென்று பாய்ந்து வானர சேனையிற் சேர்ந்தான். அதைக் கண்டு வானர வீரர்களும், இராமரும் சந்தோஷித்தார்கள்.

பின்னர், கும்பகர்ணன் மூர்ச்சை தெளிந்து, சுக்கிரீவன் போய் விட்டதையும், தன் செவிகளும் நாசியும் போய் இரத்த வெள்ளம் மேனியெங்கும் ஒழுகிக் கொண்டிருப்பதையும் பார்த்து மிகவும் துக்கித்து, ‘இந்த இராமனையும் என்னைப்போ லாகும்படி நான் செய்து விடுகின்றேன்’ என்று ஆயிரம் பேய்கள் சுமந்து கொண்டுவந்து கொடுத்த கேடகத்தை இடக்கையிற்பிடித்து, இரண்டாயிரம் பேய்கள்

தூக்கிக் கொண்டுவந்து கொடுத்த வஜ்ஜிரவாளை வலக்கையிற் பிடித்து எதிரேறிச் சென்று கேடகத்தைச் சுழற்றி வானரப் படைகளின்மேலெறிந்தான். அதிலிருந் துண்டாகிய காற்றானது வானரக் கூட்டங்களையெல்லாம் வாரிக்கொண்டுபோய் அஷ்டதிக்குகளிலும் எறிந்துவிட்டது. மறுபடியும் இரண்டாயிரம் பேய்கள் சுமந்து கொண்டுவந்து வேறொரு கேடகத்தைக் கொடுக்கக் கும்பகர்ணன் வாங்கிக்கொண்டு சுழற்றி வாளாயுதத்தை வீசி யுத்தஞ்செய்தான். அந்த வாளாயுதத்தால் அனேகம் வானரப்படைகள் மாண்டொழிந்தன. அப்போது சாம்புவந்தர் இராமரை நோக்கி, "சுவாமி! வானரசேனைகள் இவனால் நாசமாகின்றன; இந்தக் கும்பகர்ணனை விரைவிற் கொல்லாவிடில் நமக்கு மிக்க கெடுதி சம்பவிக்கும்" என்று முடுக்கினார். இராமர், 'அப்படியே இவனை இன்றைக்குக் கொன்று விடுகிறேன்' என்று சபதம் பண்ணிக்கொண்டு கும்பகர்ணனுக் கெதிரில் போய் நின்று வேகமான பாணங்களைப் பிரயோகித்தார். கும்பகர்ணன் அவைகளை வாளினால் நொறுக்கிவிட்டான். உடனே இராமர் ஓர் அஸ்திரத்தைப் பிரயோகித்து அவனுடைய வாளை முறித்துவிட்டார். அவன் வேறொருவாளையெடுத்தான். அதையும் இராமர் துணித்துவிட்டு அவனுடைய கேடகத்தையும் கவசத்தையும் அறுத்தார். அப்போது கும்பகர்ணனுக்கு மேலும் இராவணனால் அனுப்பப்பட்ட உதவிச்சேனைகள் வந்தன. கும்பகர்ணன் அவற்றை அணிவகுத்து நிறுத்திச் சூலாயுதத்தை எடுத்துக்கொண்டு இராமருடன் மீண்டும் வீரத்தோடெதிர்த்தான். இராமர் எண்ணிறந்த அஸ்திரங்களை யேவி அநேகம் இராக்ஷதர்களையும், இரதகஜதுரகங்களையும் அழித்தார். கும்பகர்ணன் படைகளை யிழந்து தனித்தவனாய் விட்டான்.

அப்போது இராமர் அவனை நோக்கி, "கும்பகர்ண நீ! தனியனாய்விட்டாய்; விபீஷணனுடன் பிறந்தவனென்பதை உத்தேசித்து நான் உனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தேன்; ஆதலால் நீ இன்றுபோய் நாளைக்கு யுத்தத்திற்குவா; இப்பொழுது சண்டை செய்வாயானால் நீ மடிந்து போவாய்; இன்றைக்கே மடிய உனக் கிஷ்டமா? போய்விட இஷ்டமா?" என்று கேட்டார். அதற்குக் கும்பர்ணன், "நான் இந் நிலைமையோடு திரும்பிப் போக மாட்டேன்; உங்களையெல்லாம் கொன்றே செல்லுவேன்" என்று ஒரு மலையைப் பெயர்த்தெடுத்து இராமருடைய திருமுடிக்குக் குறிவைத் தெறிந்தான். இராமர் அதைத் தூளாக்கி விட்டார். பின்னர்க் கும்பகர்ணன் சூலத்தைப் பிரயோகிப்பதற்கு வலக்கையிற் பிடித்தான். இராமர் சில பாணங்களால் அச் சூலத்தைத் துண்டாக்கி விட்டு மேலும் சில பாணங்களை அவன் கவசத்தின்மீது ஏவினார். அந்தக் கவசம் சிவனால் அவனுக்குக் கொடுக்கப்பட்டதாதலின் அப்பாணங்கள் அதனைத் துளைக்கமுடியாமற்போயின. அதை யுணர்ந்த இராமர் சிவாஸ்திரத்தைத்தொடுத்து அதன்மீதேவினார். அதனால் அக்கவசம் துண்டு துண்டுகளாய் வீழ்ந்து விட்டது. உடனே கும்பகர்ணன் மிகுந்த கோபத்தோடு ஒரு வஜ்ஜிர தண்டத்தைக் கையிலேந்திக்கொண்டு வானர சேனைகளைச் சின்னபின்னமாக அடித்துச்சிதைத்தான். அப்போது இராமர் பல்லாயிரக் கணக்கான பாணங்களை யேவி அவன் தேகத்தைச் சல்லடைக் கண்களாகத் துளைத்துவிட்டார். அவ்வாறு செய்தும் அவன் இளைக்காமல் கர்ஜித்துக்கொண்டு இடசாரி வலசாரியாகச் சுற்றி வந்தான். அதன்மேல் இராகவர் பத்துக் கூரிய பாணங்களைத் தொடுத்து அவனுடைய வஜ்ஜிர தண்டைத் துணித்துவிட்டார். பின்னரும் கும்பகர்ணன் சுவர்ண கேடகத்தையும் வாளாயுதத்தை

யும் எடுத்துக்கொண்டு, 'என் சபதத்தை நிறைவேற்றிக் கொண்டுதான் நான் போவேன்' என்று ஆர்ப்பரித்தான். அதைக் கேட்டு இராம மூர்த்தியானவர், அவனுடைய வலத் தோளை வாளாயுதத்துடனே துணித்து விட்டார். அப்படி வீழ்ந்த கையைக் கும்பகர்ணன் இடக்கரத்தி லெடுத்துக் கொண்டு வீரத்துடனே அநேகம் வானரர்களை அதனால் அடித்து யமனுலகுக்கனுப்பிவிட்டு இராமரைநோக்கிக் கர்ஜ ஜித்துக்கொண் டோடினன். அப்போது இராமர் அவனு டைய இடக்கையையும்அறுத்துச்சமுத்திரத்தில் தள்ளினர். இப்படி இரண்டு தோளுமற்றும் கும்பகர்ணன் இளைக்காமல் காலால் மிதித்தும் வாயாற்கடித்தும் அநேகம் வானரர்களைக் கொன்று விட்டான். அப்போது இராமர் அவனுடைய வலக்காலை யறுத்து விட்டார். அதன்மேலும் அவன் இடக் காலால் குந்திக்குந்தி வேகமாயோடி வானரப் படைகளிற் றுவி மிகுந்த சேதத்தை உண்டாக்கி வந்தான். அதன்மேல் இராமர் அக்கினி முகாஸ்திரத்தைத் தொடுத்து அவனுடைய இடக்காலையு மறுத்துவிட்டார். அவன் கால்களும் கைகளு மிழந்தும் வலியொடுங்காமல் மலைபோல் கீழேவீழ்ந்து அங்கு மிங்குமாக உருண்டு எண்ணிறந்த வானரர்களை நசுக்கிக் கொன்று மலைகளை வாயினுற் கவ்வி மென்று உமிழ்ந்து வீசி அவற்றாலும் பல வானரர்களைக் கொன்றான். அப்போது இராமர் அவனுடைய வீரத்தைக் கொண்டாடினர். அத்த ருணத்தில் கவந்தமா யுருண்ட கும்பகர்ணன் இராமருடைய திருமுகத்தை உற்று நோக்கினன். அந்த முகதரிசனத்தால் அவனுக்கு விவேக முண்டாயிற்று.

அதனால் அவன் மிகுந்த பக்தியோடு இராமருடைய பெருமையைச் சிந்தித்து, அவர் திருமுகத்தை நோக்கி, "புருவுக்காகத் தலையேறின சிபிச்சக்கரவர்த்தியின் மரபி

னுதித்த ஐயனே! கோதண்டக் கையனே! இனி உம்மாலும் உமது தம்பியாலும் இராக்ஷதர்கள் குல முழுவதும் ஒழிவது நிச்சயம்; அப்படி யிறந்தாலும் அவர்களுக்குப் பரமபதங் கொடுத்தருள நீர் கடமைப்பட் டிருக்கின்றீர்; என்னுடைய தம்பி விபீஷணன் மகா நீதிமான்; உம்மை நம்பியிருக்கின்றான்; இவன் உங்களோடு வந்து சேர்ந்திருப்பதால் அந்த இராவணன் இவனைக்கண்டால் கொல்லாமல் விடான்; ஆதலால் இவன் எப்பொழுதும் உம்மோடாவது, இளையபெருமாளோடாவது, அனுமாரோடாவது சேர்ந்தே யிருக்கும்படி செய்து நீர் இவனைப் பாதுகாத்தருளவேண்டும்; மூக்குஞ்செவிகளும் அறுபட்ட என்னுடைய முகத்தைப் பார்த்தால் தேவர்களும் ரிஷிகளும் சிரிப்பார்கள்; ஆதலால் அவர்கள் பார்ப்பதற்குள் என்தலையைஅறுத்துக்கடலிற் போட்டுவிடவேண்டும்; இந்தவரம் எனக்குக் கொடுத்தால் போதும்" என்று வணங்கிப் பிரார்த்தித்தான். இராமர் அப்படியே அவனுக்கு வரங்கொடுத்து உடனே ஒரு திவ்வியாஸ்திரத்தை விடுத்து அவனுடைய தலையைத் துணித்துப் பிறகு வாயு வாஸ்திரமொன்றை யேவி அத்தலையைச் சமுத்திரத்தில் கொண்டுபோய் போடச்செய்தார். உடனே அத்தலை கடலில் மூழ்கிவிட்டது. கும்பகர்ணனால் துன்பப்பட்டுக் கொண்டிருந்த தேவர்களும் முனிவர்களும் களித்து ஆனந்தக் கூத்தாடினார்கள். அவனுக்குப் பயந்தோடியிருந்த வானரசேனைகள் திரும்பி இராமரிடம் வந்து சேர்ந்தன. அங்கே மடியாமல் எஞ்சிநின்ற இராக்ஷதர்கள் கும்பகர்ணனிறந்த செய்தியை இராவணனிடம் தெரிவிக்க ஓடினார்கள்.

இராவணன், மாயா ஜனகனைக்காட்டிச் சீதையைத் துன்புறுத்தல்.

கும்பகர்ணன் இவ்வாறு மடிந்துபோயிருக்க, இராவணன் அச்செய்தியை உணராமல், 'எப்படியும் அவன் ஜெயம்

பெற்று வருவா' னென்று நினைத்து மகிழ்ந்து சீதையின் பாற் புத்தியைச் செலுத்தி, மகோதரனை நோக்கி, "ஐயா! நான் என்ன செய்தாலும் சீதைமனம் என்பால் திரும்ப வில்லையே! அதனால் என் ஆவிசோருகின்றதே; அவளை நான் எளிதிற் கூடத்தக்க ஒருபாயமிருந்தாற் சொல்லுமே" என்றான். அதற்கு மகோதரன் "சுவாமி! நம்முடைய இராக்ஷஸ மாயையினால் மருத்துவனென்பவனை, ஜனகனைப்போலாகும்படி உருவைமாற்றிக் கட்டிக் கொண்டு போய்ச் சீதைக்கு முன்னே நிறுத்தி, அவள் உமதெண்ணத்திற் கிணங்கினால் அவனை விட்டுவிடுவதாகக் கூறின், அவனை விடுவித்தற் பொருட்டு அந்த ஜானகி உம்மோடு சிநேகமாவாள்; இந்த உபாயத்தை நான் செய்கின்றேன்" என்றான். இராவணன் உடனே மகிழ்ந்து மகோதரனைத் தழுவிக்கொண்டு, "என் அருமைத் தோழனே! விரைவில் நீ சொன்ன காரியத்தைச் செய்" என்று அவனுக்குக் கூறிவிட்டு, 'இந்த வஞ்சனைக்குச் சீதை என்ன செய்கிறாள் என்பதை நாம்போய்ப் பார்க்கலாம்' என்று அப்பொழுதே புறப்பட்டுப் போய் அசோகவனத்திலிருக்கின்ற சீதைக்கு முன்னே ஒரு பொற் சிம்மாசனத்தில் உட்கார்ந்து அந்தப் பிராட்டியாரை நோக்கி, "பெண்கள் நாயகமே! நான் யுத்தகளம் போய்வந்தேன்; இனி எனக்கே ஜெயமுண்டாகப் போகிறது; வீரனாகியநான் உனக்கடிமையா யிருக்கிறேன். என்மீது நீ என்றைக்கு இரக்கம் வைக்கப் போகின்றாய்? இனி என் ஆவி நிலைப்பதரிதாகும்; நீ தயவுசெய்து என்னுயிரை நிலைக்கச் செய்ய வேண்டும்" என்று பல இழிசொற்களைப் பிதற்றி அவளுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். அப்போது சீதாபிராட்டி பயந்து நடுங்கி அவனைப் பார்ப்பதற்குப் பதிலாக அங்கே கிடந்த ஒரு துரும்பைப் பார்த்துக்கொண்டு அவனை

அத்துரும்பென்றே நினைத்து, "ஓ இராவணத் துரும்பே! உனக்கு நான் விஷம்; நீ என்னிடம் நெருங்குவாயானால் மடிந்தே போவாய்; பதிவிரதைகளைத் துன்புறுத்துதல் வீண் போகாது; நீ யுத்தகளஞ் சென்று வந்ததாகக் கூறினாய்; அப்படிப்போயிருந்தால் ஸ்ரீராகவர் உன்னைக் கொல்லாமலிருப்பாரோ? ஒரு சமயம் அவருக்கு நீ பயந்தோடி வந்திருப்பாய்; நான் இராகவரைப் பிரிந்த போதே உயிர் நீத்திருப்பேன்; எனினும், அவர் இளைய பெருமாளோடு வந்து உன்னைச் சுற்றத்தோடு நாசஞ்செய்து என்னை மீட்டுக் கொள்வார் என்ற தைரியத்தால் உயிர் வைத்திருக்கின்றேன்; பதிவிரதைகள் தங்கள் நாயகரிடத்தன்றி வேறொருவரிடத்தில் எவ்வகைக் காரணத்தைக் கொண்டும் சிந்தை செலுத்தார் என்பதை நீ நன்று யுணர்ந்துகொள்" என்று சொன்னாள். இவற்றைக் கேட்டதும் இராவணன் கோபித்துச் சீதையைப் பார்த்து, "பெண்ணே! இராமன் என்னைக் கொன்று உன்னை மீட்டுவிடுவானென்பதை நீ மறந்துவிடு; நான் உன் இனத்தவர்களையெல்லாம் நிச்சயமாக மடித்துவிடுவேன்; இதை நீ நாளையே பார்க்கப் போகின்றாய்; இன்னும், அயோத்திக்கும் மிதிலைக்கும் சென்று உன் பந்துக்களையும், தந்தையாகிய ஜனகனையும் பிடித்துக் கட்டிக் கொண்டு வரும்படிக்கும், அவர்கள் எதிர்த்தால் உடனே எல்லோரையும் கொன்று விடும்படிக்கும் சில இராக்ஷத வீரர்களை நான் அனுப்பி யிருக்கின்றேன்; அவர்கள் அப்படியே அக்காரியங்களைச் செய்து வருவார்கள்; அவ்வாறு உன் சுற்றத்தார் கட்டுப்பட்டு வரும்போது நீ என்ன செய்வாயோ! உன் சமர்த்தை நான் பார்க்கிறேன்" என்றுசொல்லிப் பயங்காட்டினான். சீதை இந்த வார்த்தைகளைக் கேட்டதும், "அந்தோ! இந்த இராக்ஷதர்கள் எதைத்தான் செய்யமாட்டார்கள்; அப்படி நம் பந்துக்களுக்கும் துன்பம் விளைந்

தால் நாம் என் செய்வோம்! ஆ தெய்வமே! தருமமும் பொய்த்து விட்டதே! இனியாதாமோ நான் ஒன்றையு மறியேனே" என்று கண்ணீர் விட் டழுதுகொண் டிருந் தாள்.

அத்தருணத்தில் மகோதரன் முன்னுரைத்தபடியே மாயாஜனகனைக் கட்டிக்கொண்டு வந்து இராவணனுக்கு முன்னே நிறுத்தினன். சீதை அவனைத் தன் தந்தை யென்றே நினைத்து, உடல் பதைத்து முகத்திலறைந்து கொண்டு அவன் முகத்தை நோக்கி, "ஐயா! பிதாவே! என் பொருட்டுமக்கும் இக்கதி நேர்ததே; இதற்கோ நீர் என்னைப் பெற்றீர்; மகாவீரரும், தர்மிஷ்டருமாகிய நீர் இந்த அற்பர்களாகிய இராக்ஷதர்களிடத்தில் கட்டுண்ட தென்னமாயம்?" என்று கதறியதோடு தன் தாய், தங்கை, சுற்றத்தார் முதலியவர்களை நினைத்து, "ஐயோ! என்பந்துக் களே! என் தந்தைக்கு இக்கதி நேர்ந்ததை நீங்கள் உணர்ந் தீர்களோ இல்லையோ? உங்களுக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்ததோ? நீங்களும் இவர் கூடவே வந்து வழியிலிறந்து போனீர்களோ? இந்த இராக்ஷதர்கள் ஆகாய மார்க்கமாக வந்தபோதிலும் மிதிலைக் கோட்டைக்குள் நுழைதல் முடி யாது; ஆதலால் இவர்கள் இவரை மாயையால் ஏமாற்றிக் கொண்டு வந்திருப்பார்களோ? அப்படியானல் இவர் செய் தியை உங்களுக்கு யார் தெரிவிக்கப்போகின்றார்கள்? இப்படி இவரைக் கொண்டுவந்த இக்கொடியர்கள் அயோத்திக்கும் சென்று அங்குள்ள பரதர்முதலியவர்களையும் கொண்டுவந்து விடுவார்களே; ஐயோ! அவர்கள் பிறந்து ஒருசுகமுங் காணுத வர்களன்றோ" என்று பலவாறு புலம்பினள். அப்போது துராத்மாவாகிய இராவணன், 'இவள் மனத்தைத் திருப்பு வதற்கு இதுதான் சமயம்' என்று அவள் முகத்தைக் குளிர்ந்த பார்வையாகப் பார்த்து "ஜானகி! உன்னுடைய

உறவைப் பெறவேண்டுமென்னும் ஆசையினாலே நான் இந்தக் கொடுங் காரியத்தைச் செய்துவிட்டேன்; நீ எனக்கிணங்குவதானால் நான் உன் தந்தையையும் சுற்றத்தார்களையும் கொல்லாமல் விட்டுவிடுகிறேன்; எல்லா ஐசுவரியங்களையும் உன் தந்தைக்கே கொடுத்துவிடுகிறேன்; தேவர்களையெல்லாம் உன் தந்தைக் கடிமைகளாக்கி நானும் பணிவிடை செய்கிறேன்; நீ ஓர் அன்பான வார்த்தை கூறினால் போதும்" என்று சொன்னான். சீதை அவன் நின்றதிக்கில் தரையை நோக்கி மனங்கொதித்து, "அடா இராவணப் பதரே! இந்திர போகத்தை இந்திரனே அனுபவிக்கப் போகின்றான்; இலங்கையை விபீஷணர் ஆளப்போகின்றார்; நீயும், உன் பந்துக்களும் இராமபாணத்தால் மடியப் போகின்றீர்கள்; இந்திரஜித்து இளையபெருமாளால் ஒழியப் போகின்றான்; நீங்கள் ஒழிந்துபோன சந்தோஷ செய்தியை அனுமார் வந்து சொல்ல நான் கேட்கப்போகின்றேன்; இவற்றையெல்லாம் உணராமல் நீ ஏதோ பிதற்றுகின்றாயே; பேசாமல் எழுந்துபோ" என்று மொழிந்தாள். இந்த வார்த்தைகளைக் கேட்டதும் துஷ்டனாகிய இராவணன் தீப்பொறி பறக்கக் கண்களை விழித்துப் பற்களைக் கடித்துக் கையை முறுக்கிக்கொண்டு சீதையைக் கொல்பவன் போல அவள்மீது பாய்ந்தான். அத்தருணத்தில் சூதனான மகோதரன் அவனுக்கு முன்னேபோய் நின்று, "இவளுடைய தந்தை இவளுக்குப் புத்தி கூறினால் இவள் கேட்பாள். நீர் இவளைக் கோபிக்கவேண்டாம்; ஜனகன் இப்போது இவளுக்கு வேண்டிய புத்திமதிகளைக் கூறுவான்; நீர் பேசாமல்உட்காரும்" என்று அவனைத் தடுத்தான். அவன் திரும்பிவந்துஆசனத்தின்மீது உட்கார்ந்தான்.

பின்பு, மகோதரன் சீதைக்குப் புத்திகூறும்படி மாயா

ஜனகனுக்கு ஜாடைகாட்டினன். அதன்படி மாயாஜனகன் சீதையை நோக்கி, "அம்மா! நீ இந்த இராவணன் இஷ்டத் திற்கிசையா விட்டால், நானும் என்குலமும் பிழைப்பதரி தாகும்; இராவணனே சிறந்த புருஷனுயிருக்கின்றான்; நீ இவனுக்குப் பட்டத்துத் தேவியாவது சிறப்பாகும்; ஆத லால் நீ இவனுக்கிணங்கிச் சுகப்படுவதோடு என்னையும் சிறை நீக்குவாய்" என்று அவளுடைய திருவடிகளில் வீழ்ந்து கதறினன். இந்த வார்த்தைகளைக் கேட்டதும் சீதை செவிகளை மூடிக்கொண்டு, "அரி ஹரி! என்பிதா இத் தகைய இழிவான வார்த்தைகளைக் கூறமாட்டாரே! இஃ தென்ன விபரீதகாலம்!" என்று பெருமூச்சு விட்டழுது கொண்டு அந்த மாயாஜனகனை நோக்கி, "ஐயோ! நீ க்ஷத் திரிய குலத்திற் பிறந்தும் வீரமிழந்து தகாத வார்த்தை களைக் கூறினயே! நீயும் உன் குலமும் அழிவதானாலும் நான் முறைதவறி வாழ்ந்திருக்கமாட்டேன்; இராகவருக்கே சொந்தமா யிருக்கின்ற நான் என்னுயிரைக் காத்தற் பொருட்டு இந்த நாயைத் தொடுவேனே? இராஜ சிங்கத் துடன் வாழும் ஒரு பெண்சிங்கம் கேவலம் பிணந்தின்னும் நரிக்குட்டியை விரும்புமோ? இராமர் வந்து நம்மை மீட் டால் மீட்கட்டும், இல்லையேல் நாம் உயிர் விடுவோம்" என்று கூறினள். உடனே இராவணன் கொதித்தெழுந்து, "பேதாய்! அப்படியா! இதோ உன் தந்தையை நான் கொல்லுகிறேன் பார்" என்று உடைவாளை உருவினன். சீதை அதற்கஞ்சாமல், "அடா பேடியே! நீ ஒருபோதும் என் தந்தையைக் கொல்லமாட்டாய்; விரைவில் மடியப் போகிறவன் நீயே; இராமபாணம் உன்வரவுக் கெதிர்பார்த் திருக்கின்றது" என்று சொன்னாள். இராவணன் மேலும் சீறிக்கொண்டு மாயா ஜனகனை வெட்டச் செல்பவன்போல் அவன் சமீபத்தில் ஓடினன். அப்போது தந்திரக்காரனாகிய

மகோதரன், "ஜனகன்தான் நமக்கனுகூலமான வார்த்தைகளைச் சொன்னனே; இவள் இணங்காததற்கு அவன் என் செய்வான்; அவன்மீது குற்றமில்லை; அந்த இராமலக்ஷ்மணர்களைக் கொன்றுவிட்டால் இவள் தானே நமக்கு வசமாவாள்; ஜனகனைக்கொன்றால் இவள் எப்பொழுதும் துக்கப்பட்டுக் கொண்டே யிருப்பாள்; அதனுல் இவளிடம் நீர் சந்தோஷத்தை யடைதல் முடியாது; ஆதலால் அந்த மனிதர்களையே விரைவில் கொல்ல முயற்சி செய்யும்" என்று இராவணனைத்தடுத்தான். அவன் அவ்வார்த்தைகளால் கோபம் நீங்கினவனைப்போல ஆசனத்தில் உட்கார்ந்தான்.

ஐயோ! அவன் தானென்றுநினைக்கத்தெய்வமொன்று நினைத்து வேறொன்றாய் முடிந்துவிட்டது. முன்னே கும்பகர்ணன் இறந்த செய்தியை அவனிடம் தெரிவிக்க ஓடி வந்தவர்களுள் ஒருவன் அத்தருணத்தில் விரைந்தோடி வந்து கும்பகர்ணன் மரணத்தை மெதுவாக அவன் செவியிற் புகுத்திவிட்டான். அந்த வார்த்தையைக் கேட்டவுடனே இராவணன் தன் பத்துக் கிரீடங்களும் தரையிற்புரளும்படி திடீரென்று கீழே வீழ்ந்து, "ஐயோ! தம்பி! போய் விட்டாயோ! இனி உன்னை நான் எப்போது காணப் போகின்றேன்; எப்படி உயிர் தரிப்பேன்; தேவர்களுடைய ஆயுதங்களுக்கெல்லாம் அசையாத நீ அற்ப மனிதரின் பாணங்களால் மாண்டனையே! என்னுடைய பலமெல்லாம் குறைந்துவிட்டதே; இனி நான் என் செய்வேன்" என்று பலவாறு புலம்பிக் கழுதை கதறுவதுபோல் கதறினன். அப்போது சீதாபிராட்டி அவன் அழுவதைப் பார்த்து, 'உனக்கு வருங்கேட்டை நினைக்காமல் சிறிதுநேரத்துக்கு முன் நீ என்னைத் துன்பப்படுத்தினையே பாவி!' என்று அவனை மனதிற்குள் நிந்தித்துத் துக்கம் நீங்கிக் களிப்படைந்தாள். திரிசடையும் சந்தோஷமுற்றாள். பின்னர் இராவணன் 'இதோ

அந்த மனிதர்களைக் கொன்று அவர்களுடைய இரத்தத்தாலேயே என் தம்பிக்குத் திலதர்ப்பணஞ் செய்கின்றேன்' என்று சீறிக்கொண்டு அவ்விடத்தை விட்டோடினான். மகோதரனும், 'நமக்கும் இக்கதிதான் நேரும்' என்று உடல் பதைத்துப் பக்கத்தில் நின்ற இராக்ஷதர்களை நோக்கி, 'இந்த ஜனகனை ஓரிடத்திற் கொண்டுபோய் வையுங்கள்' என்று சாடைகாட்டி மாயா ஜனகனைக் கொண்டு போகும் படி செய்துவிட்டுப் போயினான். அப்போது திரிசடை, இராவணனும் மகோதரனும் மாயா ஜனகனைக் காட்டிச் செய்த சூதை ஜானகிக்குத் தெரிவித்தாள். அதைக்கேட்டுச் சீதை தன் மனக்கலக்கம் நீங்கியிருந்தாள். கோபித்துச் சென்ற இராவணன் தன் அரண்மனை சேர்ந்து அங்கு நின்ற இராக்ஷத வீரர்களை நோக்கி, "நீங்கள் சேனைகளுடன் போய்த் தோல்வியடைந்து வருகின்றீர்களேயன்றி வெற்றி பெற்று வரவில்லை; கும்பகர்ணனையும் இரணகளத்தில் மடியும்படி விட்டு விட்டீர்கள்; நீங்களிருந்து என்ன பயன்? இனி நீங்கள் அந்த மனிதர்களை ஜெயிப்பதானால் மாத்திரம் சண்டைக்குச் செல்லுங்கள், இல்லையேல் இங்கேயே உயிரை விட்டு விடுங்கள்; இவ்விரண்டில் உங்களுக்கெது சம்மதம்?" என்று கேட்டான்.

அதிகாயன் வதை.

அப்போது இராவணனுடைய இளையகுமாரனான அதிகாயன் சினந்தெழுந்து இராவணனை நோக்கி, "தந்தையே! நானொருவனிருக்கின்றேனென்பதையும் நினையாமல் நீர் எல்லோரையும் சேர்த்து வீர மற்றவர்களென்று சொல்லி விட்டீரே; நான் தானவர்களையும் தேவர்களையும் புறங்கண்டவனென்பதை நீர் சிறிதும் சிந்திக்கவில்லை; என்னைச் சண்டைக் கனுப்பும்; நான் சேனா சமுத்திரங்களோடு போக

வேண்டுமானாலும் செல்கின்றேன், தனியே செல்லவேண்டு மானாலும் செல்கின்றேன்; அவ்வாறு சென்று எல்லோரை யும் கொன்று இராமனைக் கட்டிக்கொண்டு வருகின்றேன்; என்னுடைய சமர்த்தைக் கொஞ்சம் பாரும்” என்று வீரத் தோடு கூறினான். அதைக்கேட்டு இராவணன் மகிழ்ந்து அவனைநோக்கி, “அதிகாயா! உன் வீரமேவீரம்; நீ இலக்கு மணனைக் கொன்று விடுவாயானால் நான் இராமனை எளிதில் முடித்து விடுவேன்; நீ மூவாயிரம்கோடி பதாதிகளும், யானைகளும், குதிரைகளும், தேவர்களும் சூழ நடுவிலமர் ந்து சண்டைக்குச் செல்வாயாக” என்று சொன்னான். அப் படியே அதிகாயன் நால்வகைப்படைகளும் சூழ, கும்பன், நிகும்பன், அகம்பன் என்பவர்கள் தேரிலேறி இருமருங்கும் செல்ல, ஆயிரங் குதிரைகள் பூட்டிய தேரிலேறி யுத்தகளத் தை நோக்கிப் புறப்பட்டுப் போனான். அவ்வாறுபோனவன் இராக்ஷதப்பிணங்கள் குவிந்து கிடந்த இரணகளத்தைப் பார்த்து நெஞ்சம் புழுங்கி, கரியமலை கிடப்பதுபோல் கிடந்த தன் சிற்றப்பனுடைய தேகத்தைக் கண்டு ஆவி சோர்ந்து, ‘அந்தோ! நானிவற்றைப் பார்ப்பதற்கோ இங்கு வந்தேன்’ என்று பெருமூச்சுவிட்டு, ‘அந்த இராமனுடைய தம்பியை நான் கொன்று அவ்விராமனையும் துன்பப்படச் செய்கிறேன்’ என்று சபதம் பண்ணிவிட்டு மயிடனென்கிற தூதனை யழைத்து, இலக்குமணனைத் தான் கொல்ல வந்தி ருப்பதாக அவனிடம்தெரிவித்து அவனுடைய அபிப்பிரா யத்தை அறிந்துவரும்படி அனுப்பினான். அத்தூதன் இராம ரிருக்குமிடத்திற்போய்ச் சேர்ந்தான். வானரவீரர் அவனைக் கண்டு துன்புறுத்தத் தொடங்கினார்கள். அவன், பயந்து, ‘நான் ஒரு சமாச்சாரம் சொல்ல வந்த தூதுவன்’ என்றான். இராமர் அவனைப் பார்த்து, ‘நீ என்ன தெரிவிக்கவந்தாய்?’ என்றார். அதற்கவன், ‘உமது தம்பியாரிடத்தில் அதைத்

தெரிவிக்க வேண்டும்' என்று சொன்னான். உடனே இலக்குமணன், அவனை நோக்கி, 'அப்படியே என்னிடம் தெரிவி' என்றான். அதற்கு அத்தூதன், "இலங்காதிபரின் இளையபுத்திரராகிய அதிகாயரென்பவர் உம்மோடு யுத்தஞ்செய்ய வந்திருக்கின்றார்; அவர் உம்மைக் கொல்லப் போகின்றாராம்; ஆதலின் உம்மை யுத்தத்திற்கு வரச்சொன்னார்" என்று கூறினான். இராமர் அப்படியே சண்டைக்குப் போய்வரும்படி இலக்குமணனுக்குக் கட்டளையிட்டார். அப்போது விபீஷணன் இராமரை நோக்கி, "சுவாமி! அந்த அதிகாயன் இராவணனைக்காட்டிலும் மகாவீரன்; சங்கரமூர்த்தி அவன் மீது சூலத்தைப் பிரயோகித்தபோது அவன் அதைப் பிடித்துக் கொண்டு அலக்ஷியமாகப் பேசியவன்; மேலும் விஷ்ணுமூர்த்தியின் சக்கரமும், இந்திரன் வஜ்ஜிரப்படையும் அவனை ஒன்றும் செய்யமுடியாமற் போயின; இன்னும் அவன், தேவர்கள் தன்முன்னின்று ஆயுதப் பிரயோகஞ் செய்யக் கூடாத வரமும்பெற்றிருக்கின்றான். அவன் வீரத்தைப்பற்றி இன்னொருசரித்திரமுண்டு: முன்னேவானவரின் ஐசுவரியங்களைத் தம்வசப்படுத்திக் கொண்டிருந்த மது, கைடவர்கள் என்னும் அசுரர்கள் விஷ்ணு மூர்த்தியோடு போர் செய்தபோது அவர் அனேக நாட்கள் வரை அவர்களுடன் நின்று சலியாமல் யுத்தஞ் செய்தார். அவர்கள் அவருடையவீரத்தைப்பற்றிச் சந்தோஷித்து அவரை நோக்கி, 'நீர் வேண்டிய வரத்தை எம்மிடம் கேட்டுக்கொள்ளும்; நாங்கள் தருகின்றோம்' என்றார்கள். அதற்கு விஷ்ணு, 'உங்களை நான் ஒடுக்கும்படியான வரம் எனக்குவேண்டும்' என்றார். வாக்குத்தவறாத அவர்கள், 'நாங்கள் உம்முடைய துடையிலிறந்து போவோம்; நீர் துணிந்து எங்கள் சமீபத்தில் வந்து உம்முடைய துடையை எங்களுக்கிருப்பிடமாகக்கொடுத்து எங்களைமுடித்துவிடும்' என்றார்கள். அப்படியே விஷ்ணு விஸ்வரூபங் கொண்டு உலகங்களுக்கு

மேற்பட்டு வளர்ந்து அவர்கள் சமீபத்தில் நெருங்கிநின்று இடத்துடையை நீட்டினார். மதுகைடவர்கள் அத்துடையி லேறிநின்றார்கள். அப்போது விஷ்ணு கதையால் அவர்களை அடித்துக் கொன்றார். அவர்களுள் மது வென்பவனுடைய மாமிசம் பட்டபடியாலேயே பூமிக்கு மேதினியென்று பெய ருண்டாயிற்று. அந்த மது வென்பவனே அதிகாயனாக வந்து பிறந்திருக்கின்றான். ஆதலால் அவனுடன் போர் செய்ய இளையபெருமாள் தனித்துச் செல்லலாகாது; நாமும் இவருடன் செல்லவேண்டும்" என்று சொன்னான். அதற்கு இராமர், "விபீஷணா! அவன் எப்பேர்ப்பட்டவனா யிருந்த போதிலும் இலக்குமணன் அவனை எளிதிற் கொல்வான்; இராக்ஷச குலமுழுவதும் இவன் கையினாலேயே மடியப் போகின்றது; ஆதலால் நீ அஞ்சவேண்டியதில்லை; வேறொரு துணையும் இவனுக்கு வேண்டியதில்லை; நீ மாத்திரம் வேண்டு மானால் இவனுடன் போய்வா" என்று கூறினார். இலக்கு மணன் விபீஷணனுடன் இராமரை வணங்கிப் புறப்பட்டுப் போய் அதிகாயன் நிற்கின்ற இரணகளத்திற் சேர்ந்தான்.

அப்போது வானர சேனைகளும் அதிகாயனுடைய சேனைகளும் எதிர்த்தன. யுத்தமும் மும்முரமாய் நடந்தது. அதில் அநேகம் இராக்ஷஸர்களும் வானரர்களும் மடிந்தார் கள். வானரர்கள் மடிந்ததைக் கண்ட இலக்குமணன் 'பயப் படாதீர்கள்' என்று அவர்களுக்குத் தைரியஞ் சொல்லிவிட்டு எண்ணிறந்த பாணங்களை இராக்ஷஸப் படைகளின்மீது ஏவி னான். அவற்றால் எங்கும் இராக்ஷதப் பிணங்கள் குவிந்து விட்டன; அவர்களுடைய கரிபரி தேர்களும் ஆயுதங்களும் சின்னபின்னமாய்ப் போயின. அத்தருணத்தில் தாருகன் என்னும் இராக்ஷத னொருவன் தேரேறி வந்து இலக்கு மணன் மீது அநேகம் பாணங்களைச் சொரிந்தான். இலக்கு

மணன் சில பாணங்களால் அவற்றைப்போக்கி அவனுடைய தலையையு மறுத்துத் தள்ளினன். அதன்மேல் காலன், குலிசன், காலசுங்கன், மாலன், மருத்தன், கணிச்சி யென்னும் இராக்ஷதர்கள் வீரத்துடன் வந்து இலக்குமணன் மீது பற்பல ஆயுதங்களை எவி ஆர்ப்பரித்தார்கள். சிறிது நேரத்திற்குள் இலக்குமணன் தன் வில் வல்லமையால் அந்த ஆயுதங்களைச் சிதைத்து அவர்களுடைய தலைகளையு மறுத்து அவர்களுக்குதவியாக வந்த நால்வகைப் படைகளையும் மடித்து விட்டான். உடனே அதிகாயனுடைய சேனு வீரர்கள் ஐம்பத்தாறுயிரம் மதயானைகளைச் செலுத்திக் கொண்டு வந்து இலக்குமணனைச் சூழ்ந்து அவன் மேல் அளவற்ற ஆயுதங்களைப் பிரயோகித்தார்கள். இலக்குமணன் சிறிது நேரத்திற்குள் அவர்களையுங் கொன்று அந்த யானைகளையும் சின்னபின்னப்படுத்தி விட்டான். அத்தருணத்தில் இன்னும் அநேக துஷ்ட இராக்ஷதர்கள் அறுபத்தாறுயிரம் யானைகளைச் செலுத்திக் கொண்டுவந்து இலக்குமணனை நோக்கி, 'இனி இந்த யானைகளை உன் அஸ்திரங்களால் நீ கொன்றுவிடு பார்க்கலாம்' என்று சொல்லி அவனுடன் யுத்தஞ் செய்தார்கள். இலக்குமணன் அநேகம் பாணங்களை யேவி அந்த யானைப்படைகளையும் நாசமாக்கி எங்கும் இரத்தப் பிரவாகம் ஓடச்செய்து விட்டான். இப்படி அவைகள் ஒழியவே மேலும் அதிகாயனுக்குத் துணையாக இராவணனுல் அனுப்பப்பட்ட ஒருகோடி யானைகளை இராக்ஷதவீரர்கள் செலுத்திக்கொண்டுவந்து இலக்குமணனுடன் எதிர்த்தார்கள். அந்தயானைகள் இலக்குமணனை நான்கு பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டன; முப்பத்தாறு யோசனை தூரமட்டும் நான்குதிக்குகளிலும் யானைகளுடைய சஞ்சாரமாகவேயிருந்தது. வானரக் கூட்டங்களெல்லாம் அந்தயானைகளால் மிதிக்கப்பட்டு நசுங்குண்டு குழம்பாய்ப் போயின.

அவ்வாறுக்கவே இலக்குமணன் கடுஞ்சினமடைந்து பதினயிரக் கணக்கானபாணங்களை எவி அந்த யானைகளை இலக்ஷக் கணக்காகக்கொன்று குவித்துக்கொண் டிருந்தான். அவன் எவியபாணங்கள் யானைகளைக் கொன்றதோடு அநேகம் இராக்ஷதர்களையும் மடித்துக்கொண்டிருந்தன. இப்படியிருக்க மற்றொரு பக்கத்தில் ஆஞ்சனேயர் வந்து புகுந்து ஒரு மாரா மரத்தைப் பிடுங்கிக்கொண்டு அந்த யானைக் கூட்டத்திற் சாடியும், யானைகளைப்பற்றி யிழுத்தும், பிளந்தும், கீறியும், முறித்தும், குடைந்தும், கிழித்தும், துண்டித்தும், வாரியெறிந்தும், பூமியிற் போட்டரைத்தும், வாலினல் வளைத்துக்கட்டி மோதியும் க்ஷணநேரத்திற்குள் இலக்ஷக்கணக்காகக் கொன்றுவிட்டார். அதற்குள் மற்ற யானைகளையெல்லாம் இலக்குமணன் கொன்றுகுவித்தான். பின்னர் இராக்ஷதர்கள் பயந்தோடினர்கள்.

இவ்வாறு யானைக் கூட்டங்கள் மடிந்ததைக் கண்டு தேவாந்தகன் என்பவன் தனித்தேர் செலுத்திக்கொண்டு வந்து, சில பாணங்களை அனுமார்மீது செலுத்தி அவர் தேகத்தைச் சல்லடைக் கண்களாகத் துளைத்துவிட்டுக் கர்ஜ்ஜித்தான். அனுமார் ஒரு மாராமரத்தைப் பிடுங்கி அவன் மேலெறிந்தார். அவன் அதைத் துண்டாக்கிவிட்டான். அனுமார் அதன்மேல் ஒரு மலையைப் பெயர்த்து அவன்மீதெறிந்தார். அவன் அதையும் பாணத்தால் உடைத்துத் தள்ளினன். உடனே அனுமார் கோபங் கொண்டெழுந்து அவன்மேற் பாய்ந்து அவனுடைய வில்லை முறித்துவிட்டார். தேவாந்தகன் ஒரு தோமாயுதத்தை யெடுத்து அனுமாருடைய இடத்தோளில்மோதி ஆர்ப்பரித்தான். அதற்கு அனுமார் கண்சிவந்து அத்தோமாத்தையே பிடுங்கிக்கொண்டு அதனல் அவனுடைய தேரையும் சாரதியையும் போக்கினர். பின்னர் அவன் சூலாயுதத்தை எடுக்கப்

போனான். அதற்குள் ஆஞ்சனேயர் அவன்மேற்பாய்ந்து அவனுடைய பிடரில் ஒரு குத்துக்குத்தித் தலையைத்திருகி அவனைக் கொன்றுவிட்டார். அதைப்பார்த்து அதிகாயன் கடுஞ்சினமடைந்து தன் தேரைச்செலுத்திக்கொண்டு அனுமாருக்குமுன்னே வந்து அவரைநோக்கி, "அற்பக்குரங்கே! முந்தி நீ என் தம்பி அக்ஷயகுமாரனைக் கொன்றபோது கடலைத் தாண்டி ஓடிப்போய் விட்டபடியினாலே தப்பிப் பிழைத்துக் கொண்டாய்; இப்போது வந்து தேவாந்தகனைக் கொன்று எனக்கெதிர்பட்டபடியால் இனித் தப்பிப் போகமாட்டாய்; இலக்குமணனையும் உன்னையுங் கொல்லாமல் நான் திரும்பிப் போகமாட்டேன்" என்று கைகளைப் பிசைந்து கர்ஜித்தான். அனுமார் சிரித்துக்கொண்டே அவனை நோக்கி அவனுக்குப்பின்னே நின்ற திரிசிரனென்பவனை அவனுக்குச் சுட்டிக்காட்டி, "அதிகாயா! நீ சொன்னபடியே செய்யலாம்; உனக்குப் பின்னால் நிற்கின்ற திரிசிரனையும் என்முன் வரச்சொல்; உங்களிருவரையும் நான் ஏககாலத்தில் பூமியில் போட்டரைத்து விட்டுப் போகின்றேன்" என்றார். அதைக் கேட்டுத் திரிசிரனும் அவருக்கு முன்னே ஓடி வந்தான். உடனே ஆஞ்சனேயர் அதிகாயன் தேரில் தாவி அவனைக் கலங்கச் செய்துவிட்டுப் பக்கத்தில் நின்ற திரிசிரனைப் பிடித்துக் கீழே தள்ளிக் காலால் மிதித்து அரைத்துக் கொன்றுவிட்டு, மேற்கு வாசலிலும் போர் நடந்தபடியால் இமைப்பொழுதில் அங்கே போய்ச் சேர்ந்தார்.

அதன்மேல் அதிகாயன் பல்லைக் கடித்துக்கொண்டு தன் தேருடன் இலக்குமணனுக்கு முன்னே வந்தெதிர்த்தான். இலக்குமணனும் அவனுடன் போர்செய்யத் தொடங்கினான். அப்போது அங்கதன் வந்து இலக்குமணனைத் தன் தோள்மீதேறி யுத்தஞ் செய்யும்படி வேண்டினான். இலக்கு

மணன் அப்படியே அவன் தோள்மீதமர்ந்தான். அங்கதன் இளையபெருமாளைத் தூக்கியபடியே எல்லாத் திக்குகளிலும் சாரியோடித் திரிந்தான். அதிகாயனும் தன்தேரைப் பற்பல விதமாகச் செலுத்திப் பாணங்களைப் பிரயோகித்தான். இலக்குமணன் பிரயோகித்த பாணங்களுக்கோ அளவில்லை. அவற்றால் அதிகாயனுடைய படைகளெல்லாம் நாசமடைந்தன. அதன்மேல் இலக்குமணன் அவனை நோக்கி, "உன்னுடைய படைகள் ஒழிந்தன; தனித்த நீ மாத்திரம் இப்போது போய்விடுகின்றாயா? என்னுடன்எதிர்த்து நிற்கின்றாயா?" என்று கேட்டான். அதற்கு அதிகாயன், 'நான் உன்னைக் கொல்லாமல் போகமாட்டேன்' என்று தன் சங்கத்தையெடுத்து முழக்கி வில்லை வளைத்துக் குணத்தொனி பண்ணினான். உடனே இலக்குமணன் ஒரு பாணத்தை அவன்மேற் செலுத்தினான். அவன் அக்கினி யாஸ்திரத்தால் அதைத் துண்டாக்கிவிட்டுப் பதினாறு பாணங்களை இலக்குமணன் மீது பிரயோகித்து, 'உனக்குச் சமர்த்துண்டானால் இவற்றை விலக்கு பார்க்கலாம்'என்று அவனிடம் கூறிக் கர்ஜ்ஜித்தான். இலக்குமணன் அவற்றை நாசஞ் செய்துவிட்டு மேலும் பல அம்புகளை அவன் மேற் செலுத்தினான். அவன் அவற்றைத் துண்டுகளாக்கிவிட்டு இளைய பெருமாள்மீது சில பாணங்களையேவினான். இலக்குமணன் அக்கினிமுகாஸ்திரங்களால் அவற்றைப் பொடியாக்கிவிட்டுத் தெய்வத்தன்மையுள்ள சில பாணங்களைப் பிரயோகித்து அவனுடைய கவசத்தைப் பிளந்து மார்பைத் துளைத்து அவனை மூர்ச்சையடையச் செய்து விட்டு அவன் சோகந்தீர்ந்து எழுவதற்குள் கோடிக் கணக்கான பாணங்களைப் பிரயோகித்து எஞ்சி நின்ற அவனுடைய சேனைகளையெல்லாம் நாசப்படுத்தி விட்டான். அதிகாயன் சோகம் தீர்ந்தும் தீராமலுமிருக்கும்போதே தன் சேனைகள் சின்னபின்னமானதைக் கண்டு, கோபங் கொண்டு,

அளவற்ற பாணங்களைத் தொடுத்து விடுத்து, ஆகாய மெல்லாம் பாணமயமாகச் செய்துவிட்டு, அங்கதன் நெற்றியிலும் தோளிலும் மார்பிலும் இரணமாகும்படி சில பாணங்களை யேவி, இலக்குமணன் மீதும் மூன்று பாணங்களைச் செலுத்தி வெற்றிச் சங்கத்தை யெடுத்து முழக்கினான். அங்கதன் தேகத்தில் அம்புகள் பட்டதால் இரத்தவெள்ள மொழுகிற்று. அதை இளையபெருமாள் பார்த்துப் பதறி ஆயிரம் பாணங்களைச் செலுத்தி அவன் தன் மீதேவிய அம்புகளை நாசப்படுத்தி, அவனுடைய சாரதியையும், குதிரைகளையும், வில்லையும் ஒழித்து விட்டான். அதிகாயன் வேறு வில்லெடுத்து அவனை யெதிர்த்தான். இலக்குமணன் அவன் மீது சில அக்கினி முகாஸ்திரங்களை யேவினான். அவை அவனுடைய மார்பைத் துளைத்தன. அங்ஙனம் துளைத்தும் அவன் சலிக்காமல் பாணப்பிரயோகம் செய்ய ஆரம்பித்தான். அப்போது இலக்குமணனிடம் வாயுதேவன் வந்து 'இவன் பிரமாஸ்திரத்தா லல்லாமல் வேறொன்றினாலும் சாகமாட்டான்' என்று சொல்லி மறைந்தான். உடனே இலக்குமணன் இரண்டு பாணங்களுடன் சேர்த்துப் பிரமாஸ்திரத்தை அவன்மீது செலுத்தினான். அது சென்று அதிகாயனுடைய தலையை அறுத்துக்கொண்டு போய்விட்டது. அதைக்கண்டு தேவர்கள் சந்தோஷித்தார்கள். அங்கே சாகாமல் நின்ற இராக்ஷதர்கள் ஓட்டம் பிடித்தார்கள். வானரர்கள் ஆர்ப்பரித்தார்கள். இளைய பெருமாளும் அங்கதன் தோளை விட்டிறங்கினான். விபீஷணன் இலக்குமணனைக் கொண்டாடி, 'இனி இவரால் இந்திரஜித்து மடிவது திண்ணம்' என்று நிச்சயம் பண்ணினான்.

எல்லோரும் சந்தோஷித்துக் கொண்டிருக்கும்போது நராந்தகன் என்பவன், 'என் தமையன் அதிகாயன் இறந்து

விட்டதால் இனிச் சண்டை முடிந்ததென்று போய் விடாதே; இதோ உன்னைக் கொல்வதற்கு நானிருக்கின்றேன்' என்று தேரிலிருந்து குதித்து வாளாயுதத்தை வீசிக்கொண்டு இலக்குமணனுக் கெதிரில் வந்து நின்றான். சிறிது நேரம் வானரர்களுக்கும் அவனுக்கும் யுத்தம் நடந்தது. அவன் இளைக்காமல் வானர சேனைக்குள்ளே புகுந்து ஆர்ப்பரித்தான். அங்கதன் ஒரு பெரிய விருக்ஷத்தைப் பிடுங்கி அவன்மேல் மோதினான். அவன் வாளால் அதனைத் துண்டுபடுத்தி விட்டான். உடனே அங்கதன் அவன் மேற்பாய்ந்து அவனைப் பிடித்துக் குத்தி அவனுடைய வாளாயுதத்தையே பிடுங்கிக்கொண்டு அதனால் அவன் சரீரத்தை இருகூறாக வெட்டிவிட்டுக் கர்ஜ்ஜித்தான்.

அதன்மேல் மஸ்தனென்பவன் மதயானையின் மீதேறிக்கொண்டு வந்து அங்கதனோ டெதிர்த்தான். அந்த யானையால் பலவானரங்கள் அழிந்தன. அப்போது நீலனென்னும் வானரவீரன் ஒரு மாமரத்தைப் பிடுங்கிச் சுழற்றிக்கொண்டு மஸ்தனோ டெதிர்த்தான். மஸ்தன் பன்னிரண்டம்புகளால் அந்த மரத்தைத்துண்டாக்கினான். அதன்மேல் நீலன், ஒரு மலையைப் பெயர்த்தெடுக்கப் போனான். அப்போது மஸ்தன் ஏறிவந்த யானை அந்த நீலனைப் போகவிடாமல் பிடித்துத் தந்தங்களினாற் குத்த யத்தனித்தது. நீலன் அதன் துதிக்கையையும் தலையையும் சிதைத்து விட்டுக் குபீரென்று பாய்ந்து போய்விட்டான். யானை இறக்கவே மஸ்தன் ஆகாயத்திற் கிளம்பி நின்று நீலன் மீது அர்த்தசந்திர பாணங்களை மழைபோலச் சொரிந்தான். நீலன் அந்த யானையின் தந்தங்களைப் பிடுங்கி அவன்மீ தெறிந்தான். மஸ்தன் அவற்றை அம்பினாலறுத்துத் தள்ளிவிட்டு வேறொரு யானைமே லேறிக்கொண்டு நீலனுக் கெதிரில் வந்தான்.

நீலன் அவன்மேற் பாய்ந்து, அவன் கைவில்லுடனே அந்த யானைக்கு முன்னே விழும்படி அவனைத் தள்ளினான். அந்த யானை, மஸ்தனைத் தன் எஜமானனென்று தெரியாமல் எதிரியென்று நினைத்துக் காலாலுதைத்துத் துதிக்கையாற் பற்றி அங்குமிங்குமாக இழுத்தது. யானை செய்த துன்பத்தைச் சகிக்க முடியாமல் அவன் தானே அந்த யானையைக் கொன்றான். அச்சமயத்தில் நீலன் பாய்ந்து அவனுடைய மார்பில் ஒரு குத்துக்குத்தினான். அந்தக் குத்தினால் மஸ்தன் மாண்டு போயினான்.

அவன் மடிந்ததைக்கண்டு வயமஸ்தனென்கிற இராக்ஷதவீரன் ஆயிரம் பேய்கள் இழுக்கும் தேரிலேறிக் கொண்டு அங்கே வந்து ஆர்ப்பரித்தான். விருஷபனென்கிற வானரவீரன், 'இவனோடு நாமெதிர்ப்போம்' என்று அவனுக்கு முன்னே போய்த் தோள் தட்டி நின்றான். வயமஸ்தன் அவனை நோக்கி, 'கேவலமாகிய உன்னோடு நான் போர் செய்யமாட்டேன்; அதிகாயனைக் கொன்றவனைக் கொன்று விட்டுத்தான் குரங்குகளின்மீது திரும்புவேன்' என்றான். விருஷபன், 'நான் உன்னை விட்மாட்டேன்; என் கைக்கு நீ தப்பினால், அப்பால் போகலாம்' என்றான். வயமஸ்தன் கோபித்து அவன்மீது பத்துப்பாணங்களைப் பிரயோகித்தான். அந்தப் பாணங்கள் பட்டு அவன் மார்பில் இரத்தம் பெருகிற்று. அவன் அந்த இரத்தத்தோடு பாய்ந்து வயமஸ்தனுடைய தேரைத் தூக்கி ஆகாயத்தில் விட்டெறிந்தான். அதில் கட்டியிருந்த பேய்களெல்லாம் பறந்துபோய் விட்டன. தேர் வயமஸ்தனுடனே கடலில் வீழ்ந்து விட்டது. வயமஸ்தன் எல்லாவற்றையும் கடல்நீரில் நழுவவிட்டுத் தான்மாத்திரம் நிருவாணமாய் மேலயெழும்பிப் பூமியில் வந்திறங்கினான். அவன் மண்ணிற் குதிப்பதற்கு முன்னே விருஷபன் மேலே கிளம்பி ஆகாயத்தில் அவனைக் கட்டிப்

பிடித்திறுக்கிக் கொன்ருன். அவன் ஆவி மேலே போய் விடத் தேகம் கீழே பொத்தென்று வீழ்ந்தது.

இவன் முடிந்தபின்பு மற்ருெரு பக்கத்தில் சுக்கிரீவனும், கும்ப னென்கிற இராக்ஷஸ வீரனும் எதிர்த்துப்போர் செய்தார்கள். கும்பன் தண்டாயுதத்தால் சுக்கிரீவனை ஓங்கி யடித்தான். சுக்கிரீவன் தன் கையிற் பிடித்திருந்த மாமரத்தால் அந்த அடியைத் தாங்க அம்மரம் தூளாய் விட்டது. பின்னர்ச் சுக்கிரீவன் அவனைக் கொல்வதற்கு உக்கிரமாய்ப் புறப்பட்டான். அப்போது நீலன் ஒரு தண்டாயுதத்தைக் கொண்டுவந்து அவன் கையிற்கொடுத்தான். சுக்கிரீவன் அத்தண்டைக்கொண்டு கும்பனுடைய தோளிலும் மார்பிலும் அடிக்க அவன் சற்று சோர்வுற்று உடனே தெளிந்து தன் கதையால் சுக்கிரீவன் தோளில் அடித்தான். இப்படி இவர்கள் சண்டை செய்யும்போது சிறிது நோத்திற்குள் இருவருடைய கதைகளும் பொடிப் பொடியாய்ப் போய்விட்டன. பின்னர் இருவரும் கொஞ்ச நேரம் கைச் சண்டை செய்தார்கள். அதிலும் கும்பன் இளைக்காமல் நின்று சிரித்தான். அதன்மேல் சுக்கிரீவன் மிகுந்த கோபங் கொண்டு அவன் வாயில் கையைவிட்டு நாவைப் பிடுங்கி அவனைக் கொன்ருன்.

அதன்மேல் நிகும்பனென்னும் இராக்ஷதவீரன்மிகுந்த கோபத்துடன் வந்து வானர வீரர்களுடன் எதிர்த்தான். அங்கதன் அவனேடு சண்டை தொடுத்தான். இவ்விருவருக்கும் பலமான யுத்தம் நடந்தது. அப்போது நிகும்பன் ஒரு சூலாயுதத்தை யெடுத்து அங்கதனைக் குத்தப் போனன். அங்கதன் ஒரு விருக்ஷத்தைக் கொண்டு அக்குத்தைத் தடுத்து விட்டான். நிகும்பன் மீண்டும் சூலத்தை யெடுத்து அங்கதன்மே லெறிய யத்தனித்தான். அத்தருணத்தில்

அனுமார் அங்கே வந்து திடீரென்று குதித்து ஒரே அறையில் நிகும்பனைக் கொன்றுவிட்டுத் தம்மிடத்திற்குத் திரும்பிப் போய்விட்டார். இறவாமல் நின்ற இராக்ஷதர்கள் வானரர்களோடு எதிர்த்துப் போர் செய்ய முடியாமல் ஓடி விட்டார்கள்.

அதன்மேல் தூதுவர்கள் ஓடி அதிகாயன் முதலியவர்களெல்லோரும் மடிந்த செய்தியை இராவணனிடம் தெரிவித்தார்கள். இராவணன் துக்கமும் வெட்கமும் கோபமும் அதிகரிக்கப் பூமியில் வீழ்ந்து "அந்தோ! என் அருமைப் பிள்ளைகளெல்லாம் போய் விட்டார்களே' என்று புலம்பினன். அத்தருணத்தில், அவனுடைய மனைவியும், அதிகாயன் தாயுமாகிய தானியமாலி யென்பவள், மகனிறந்த செய்திகேட்டோடி வந்து இராவணனுடைய பாதத்தில் வீழ்ந்து, "இலங்கேஸ்வரா! அந்த மனிதர்களுடைய வல்லமையை நீக்க உம்மால் முடியாமல் போய் விட்டதே; நான் பெற்ற மகா வீரனை அதிகாயனும் போய்விட்டானே; அக்ஷய குமாரனும் மாண்டானே; மற்ற பிள்ளைகளும் மாண்டார்களே; இனி யெனக் கென்ன சிறப்பிருக்கின்றது? எஞ்சி யிருப்பவன் மண்டோதரியின் புத்திரனை இந்திரஜித்து மாத்திரந்தானே; சீதையை நீர் விரும்பியதாலல்லவோ உமக்கித்தனை தீங்குகளும் நேர்ந்தன; உமது தம்பி விபீஷணர் சொல்லையும், பாட்டன் சொல்லையும் நீர் கேட்காமற் போனீரே; மூத்ததம்பி கும்பகர்ணனையும் இழந்து விட்டீரே; இனி உமது அரசாட்சி நடைபெறுவது சந்தேகந்தான்; அதிகாயனை என்று நான் காணப் போகின்றேன்" என்று கதறியழுது புலம்பினள். ஊர்வசியும், மேனகையும் அவளை யெடுத்துக் கொண்டுபோய் அந்தப் புரத்தில் சேர்த்தார்கள். அந்தப்புரத்திலுள்ள இராக்ஷஸ ஸ்திரீகளெல்லோ

ரும் அழுதார்கள். இலங்கா நகரமெங்கும் அழுகைக் குரலே மிகுந்திருந்தது.

இலக்குமணன் மூர்ச்சை.

அவ்வாறு இலங்கையெங்கும் அழுகைக்குரல் மிகவே இந்திரஜித்து அதைக்கேட்டு, 'இப்படி அழுகை மிகுவதற்குக் காரணமென்ன?' என்று பக்கத்தில் நின்ற இராக்ஷதர்களைக் கேட்டான். அவர்கள் நடந்ததைக் கூறுதற்குப் பயந்து ஒன்றும் சொல்லாமல் நின்றார்கள். அதனால் இந்திரஜித்து, உடனே இராவணனிடத்திற்குப்போய், "தந்தையே! எங்கும் துக்கம் பரவியதற்குக் காரணமென்ன?" என்று கேட்டான். அவன், அதிகாயன் முதலியவர்கள் இறந்ததைக் கூறினான். இந்திரஜித்து கண்களில் நெருப்பெழக் கோபித்து, 'அவர்களைக்கொன்றவர்கள் யாவர்?' என்றான். இராவணன், 'இலக்குமணனும், மற்ற வானரவீரர்களும் கொன்றார்களாம்' என்று கூறினான். அதைக் கேட்டவுடன் இந்திரஜித்து, அவனை நோக்கி, "ஐயா! அந்த மனிதர்களுடையவல்லமையை நீர் அறிந்திருந்தும் அதிகாயன் முதலிய சிறுவர்களை அவர்களுடன் போர்செய்ய அனுப்பலாமா? என்னை யனுப்பலாகாதா? இனி நடந்துபோனவைதப்பற்றி நாம் யோசிப்பதிற் பயனில்லை; நான்போய் என் தம்பிகளைக் கொன்றவர்களைக் கொன்று திரும்புகிறேன்" என்று கூறினான். இராவணன் அவனை நோக்கி, "அப்பா! மகாவீரனாகிய உன்னை அந்த அற்பர்களோடு சண்டைசெய்ய அனுப்புவது கேவலமென்று நான் நினைத்தேன்; அதனால் இத்துக்கம் நேர்ந்தது" என்று சொன்னான்.

அதன்மேல் இந்திரஜித்து, சகல ஆயுதங்களுடனும் போர்க்கோலங்கொண்டு இலக்ஷம் யாளிகளும், இலக்ஷம் சிங்கங்களும் பூட்டிய விசாலமான தேரிலேறி, ஆயிரம்

சேமத்தேர்கள் பின்னே வரவும், நாற்பதுவெள்ளஞ் சேனை கள் இருபக்கத்திலும் சூழ்ந்துவரவும், தூமாக்ஷனும் மகா பாரிசனும் தன் தேரைத் தொடர்ந்து மெய் காப்பாளராய் வரவும், ஆயிரயாயிரகோடி தேர்வீரர்கள் உள்ளணியாகச் சூழ்ந்துவரவும், இரண்டாயிர மாயிரகோடி யானை வீரர்கள் புறவணியாகச் சூழ்ந்துவரவும், அவர்களுக்கு முன்னே ஆயிர மாயிரம் குதிரை வீரர்கள் செல்லவும், படைமுகங்களில் சேனுதிபதிகள் கடலைப்போற் செல்லவும் இரணகளம் நோக் கிப் புறப்பட்டுப் போனான். அங்கே அதிகாயனிறந்தபடி யால் இனி இராவணனாவது இந்திரஜித்தாவது யுத்தத்திற்கு வரக்கூடுமென்று இரணகளத்தை விட்டுப் போகாமலிருந்த இலக்குமணன் அவ்வாறு சென்ற இந்திரஜித்தைக்கண்டு, "இவன்யார்?" என்று விபீஷணனிடம் கேட்டான். அதற்கு விபீஷணன், அவனிடம் இந்திரஜித்தின் வரலாற்றைக் கூறி, "இவனோடு மகா வீரர்களெல்லாரும் வருகின்றார்கள்; ஆத லால் நாமும் தகுந்தவர்களை உதவியாக வைத்துக்கொண்டு இவன் மேல் சண்டைதொடங்குவது நலம்" என்றான். அப் படியே இலக்குமணன் அனுமார் முதலிய வானர வீரர்களைச் சேர்த்துக் கொண்டான். வானர சேனைகளும் இராக்ஷத சேனைகளும் நெருங்கி யுத்தம்செய்ய ஆரம்பித்தன. அந்த யுத்தத்தில் பற்பல ஆயுதங்களால் அநேகம் இராக்ஷதர் களும் வானரர்களும் இறந்தார்கள். அனுமார், அங்கதன், நீலன், குமுதன், இடபன், சாம்பவன், மயிந்தன், பனசன், துமிந்தன், கவையன், கேசரி முதலிய வானர வீரர்களெல் லோரும் முன் வைத்தகாலைப் பின்வைக்காமல் ஆயுதங்களை யும் மலைகளையும், மரங்களையும் கொண்டு போர்புரிந்து எண் ணிறந்த இராக்ஷதர்களை மடித்து எங்கும் பிணக்குவியலாகச் செய்து ஆர்ப்பரித்து நின்றார்கள். அவர்கள் அவ்வாறு போர் செய்கிறதைக்கண்டு இந்திரஜித்து கோபங்கொண்டு வேக

மாகத் தேரைச்செலுத்திக் கொடிய பாணங்களை நாலா பக்கங்களிலும் சிதறி வானரவீரர்கள் ஏவிய ஆயுதங்களையும், மலைகளையும், மரங்களையும் பொடிப்பொடியாக்கி அவர்களையும் கலங்கச் செய்து தன்னோடெதிர்ப்பா ரின்மையால் பாணப்பிரயோகஞ் செய்யாமலிருந்தான். அதைக்கண்டு சுக்கிரீவன் ஒரு மராமரத்தைப் பிடுங்கிக்கொண்டு இந்திரஜித்துவின் சமீபத்தில் நெருங்கி, அவன் சேனைகள்மீது சுழற்றியடித்தான். அந்த அடியினால் இராக்ஷதர்கள் நடுங்கினார்கள். உடனே இந்திரஜித்து, சுக்கிரீவன் நெற்றியிலிரண்டு பாணங்களையும், மார்பில் ஐந்து பாணங்களையும் ஏவி அவன் பிடித்திருந்த மரத்தையும் தூளாக்கிவிட்டான். அப்போது ஆஞ்சனேயர் ஒருமலையை யெடுத்து இந்திரஜித்துவின்மே லெறிந்தார். இந்திரஜித்து அதைத் தூளாக்கிவிட்டு அனுமாரை நோக்கி, "அடே! வாவா! உன்னைக் கொல்லத்தான் நான் வந்தேன்; நீ மலைகளையும் மரங்களையும் கொண்டா என்னை ஜெயிக்கப் போகிறாய்!" என்றான். அதற்கு அனுமார், "அடா அற்பனே! வில்லெடுத்துச் சண்டை செய்ய வேறே இரண்டு வீரர்களிருக்கின்றார்கள்; அவர்களுடைய வில் வீரத்தை நீ இன்றைக்கோ நாளைக்கோ காண்பாய்; உனக்கிப்போது என்னோடு சண்டைசெய்ய விருப்பமா? இளைய பெருமாளோடு போர்தொடுக்கவிருப்பமா? அல்லது இராமபிரானோடு எதிர்க்க இஷ்டமா? உன் விருப்பத்தைச் சொல், நாங்கள் அப்படியே யுத்தஞ் செய்கிறோம்" என்று சொன்னார். உடனே இந்திரஜித்து, "அடே! அந்த இலக்குமணன் எங்கே யிருக்கின்றான்; அவனை நீகாட்டு; முதலில் நான் அவனைக் கொன்றுவிட்டுப் பிறகு எல்லோரையும் மடிக்கப் போகின்றேன்" என்று பற்களைக் கடித்துக்கொண்டு தொளாயிரம் பாணங்களை அனுமார் மீது செலுத்தினான்.

அனுமார் ஒரு மலையைப் பிடுங்கிக்கொண்டு சிறிது நேரம் அவனோடு யுத்தஞ்செய்து இளைத்துப்போனார். அதன் மேல் நீலன், அங்கதன் முதலிய வீரர்களெல்லாரும் அவனுடனெதிர்த்துச் சோர்ந்து போனார்கள். வானரசேனைகள் மிகுதியும் மாண்டுபோயின. அப்போது இலக்குமணன், 'நான் மாத்திரம் எதிர்த்து நின்று இவனைக் கொல்லாமல் வீணாக வானரர்களைப் போர் செய்ய விட்டு மடித்துவிட்டேன்' என்று விபீஷணனிடம் சொல்லிவிட்டு மிகுந்த கோபத்துடன் இந்திரஜித்துவின் முன்னே போய் நின்றான். அவன், இலக்குமணனைப் பார்த்துவிட்டு, 'இவன்தானா அதிகாயனைக் கொன்றவன்' என்று சாரனென்னும் தூதனிடம் கேட்டான். அவன், 'ஆம்' என்றான். உடனே இந்திரஜித்து இலக்குமணன்மேல் பாணந்தொடுக்கத் தொடங்கினான். அதற்குள் அவனோடுவந்த நூறுகோடி இராக்ஷதர்கள் இலக்குமணனைச் சுற்றிக்கொண்டார்கள். அவர்களையும் அவர்களுடன் வந்த நால்வகைப் படைகளையும் இலக்குமணன் சிறிது நேரத்தில் ஒழித்துவிட்டான். அதைக்கண்டு இந்திரஜித்து வந்து அவனுடன் போர் தொடுக்க ஆரம்பித்தான். இலக்குமணனும் ஆஞ்சனேயருடைய வேண்டுதலால் அவர் தோள்மீதேறி அவனை எதிர்த்தான். அங்ஙனம் எதிர்த்ததும் இந்திரஜித்தும் இலக்குமணனும் நாகாஸ்திரம், அர்த்தசந்திர பாணங்கள், கமலமுகபாணங்கள், வஜ்ஜிரமுகாஸ்திரம், திரிமுகாஸ்திரம், அஞ்சலியாஸ்திரம், கர்ணாஸ்திரம் முதலியவற்றை மாறிமாறிக் கோடிக்கணக்காகப் பிரயோகித்தார்கள். அவர் செய்கைகளால் எங்கும் பாணங்களே நிறைந்து விட்டன. அப்போது இந்திரஜித்து ஆயிரம் பாணங்களை அனுமாருடைய தோளின்மீது பிரயோகித்து அவரை மூர்ச்சையடையும்படி செய்துவிட்டு, ஆயிரத்து நானூறு பாணங்களால் இலக்குமணனுடைய கவசத்தைப் பிளந்து தோளி

லும் காயப்படுத்திவிட்டான். அதனால் இலக்குமணன் அதிக சினங்கொண்டு பதினாயிரம் பாணங்களால் இந்திரஜித்துவி னுடைய தேரிற்பூட்டிய சிங்கங்களைக் கொன்று, விருதுக் கொடியை அறுத்து, மேலும் பதினாயிரம் கொடிய அம்பு களால் கவசத்தைச் சிதைத்து அவன் தோளிலும் மார்பி லும் காயப்படுத்தி இரத்தமொழுகச் செய்தான். இந்திர ஜித்து அவற்றிற்கெல்லாம் சலிக்காதவனாய் ஆயிரங் குதிரை கள் பூட்டிய வேறொரு தேரிலேறி ஆயிரங்கோடி பாணங்க ளைப்பிரயோகித்தான்; இலக்குமணனும் அவற்றிற்கிணையான பாணங்களைச் செலுத்தினான்; இப்படி மாறிமாறி அவர்கள் அம்புகளைச் செலுத்திக்கொண் டிருக்கும்போது மாருதி ஓர் உதை உதைத்து அந்த இந்திரஜித்துவின் தேரை நொறுக்கி விட்டார். அதன்மேல் அவன் ஆயிரம் பேய்கள் பூட்டிய வேறொரு தேரிலேறினான். இலக்குமணன் அதனை ஐம்பது பாணங்களால் சிதைத்துவிட்டான். இப்படி அவன் மேலும் மேலும் தேரேறுகிறதும் இலக்குமணன் அதைச் சிதைக் கிறதுமாய் இலக்குமணனுடைய அளவற்ற பாணங்களால் அவனுடைய ஆயிரந் தேர்களும் தொலைந்துவிட்டன. அந்தச் சமயம் பத்து இலக்ஷம் இராக்ஷதர்கள் நால்வகைப்படையு டன் இந்திரஜித்துக்குத் துணையாக வந்தார்கள். இந்திரஜித்து அவர்கள் கொண்டுவந்த சிம்மங்கள் பூட்டிய தேரொன்றி லேறி அஷ்டதிக்குகளிலும் சரங்களையேவி நிறைத்துவிட் டான். இலக்குமணன் அநேக பாணங்களை யேவி அவற்றை யெல்லாம் ஒழித்துவிட்டு அநேகம் இராக்ஷஸப் படைகளை யும் நாசஞ் செய்துவிட்டான். அனுமாரும் பல இராக்ஷதர் களை மடித்தார். அத்தருணத்தில் மூர்ச்சையாயிருந்த சுக்கி ரீவன், நீலன், அங்கதன் முதலானவர்கள் தெளிந்துவந்து பல இராக்ஷஸர்களை மடித்தார்கள். மேலும் அங்கதன் ஒரு மலையைப் பிடுங்கி யெறிந்து இந்திரஜித்தின் தேரைச்

சிதைத்துவிட்டான். இந்திரஜித்து வேறொரு தேரிலேறி அநேகம் பாணங்களைச் சொரிந்து அங்கதனைப் பார்த்து வீரம் பேசினன். அத்தருணத்தில் இலக்குமணன் எஞ்சியிருந்த இராக்ஷதப் படைகளையும் ஒழித்துவிட்டான். இந்திரஜித்து அதைக்கண்டு கோபித்து மேலும் வந்த பெருஞ் சேனைகளைச் சேர்த்துக்கொண்டு, தன் தேரைக் காத்துக்கொண்டிருந்த மகாபாரிசன், தூமாக்ஷன் என்ற இருவருடன் இலக்குமணனை எதிர்க்கச் சென்று இரத்த வெள்ளத்தில் தன் தேரைச் செலுத்தமாட்டாமல் மரம் போல் நின்றான். அப்போது இலக்குமணன் அவனுக்கெதிரில் வந்து பத்துப் பாணங்களை அவன்மே லேவினன். இந்திரஜித்து அநேக பாணங்களைச் செலுத்தி அவற்றைப் பொடியாக்கி விட்டு எதிர்த்த வானரவீரர்களை யெல்லாம் மூர்ச்சை யாக்கினன். அவனுடைய செய்கையைக் கண்ட இலக்குமணன் வீராவேசத்தோடு கொடுமையான பாணங்களை யேவி இந்திரஜித்துவின் மேனியெல்லாம் இரத்தமாகும்படி செய்துவிட்டு மற்ற இராக்ஷத சேனைகளைச் சின்னபின்னப் படுத்தினன். பாணங்கள் அதிகமாகத் தைத்ததால் இந்திரஜித்து மிக்க வருத்த மடைந்தான். மகாபாரிசனும் தூமாக்ஷனும் நடுங்கினர்கள். மற்ற இராக்ஷதர்களில் ஒருவராவது நில்லாமல் ஓட்டம் பிடித்தார்கள்.

இந்திரஜித்து தனக்கேற்பட்ட வருத்தத்தால் 'இந்த இலக்குமணனை இப்பொழுதே கொன்று விடுகிறேன்' என்று சினந்து அநேக பாணங்களை அவன்மேல் விடுத்தான். உடனே இலக்குமணன் பாணப் பிரயோகம் பண்ணி அவற்றை விலக்கி இந்திரஜித்துவின் கவசத்தைக் கிழித்து விட்டான். அத்தருணத்தில் மகாபாரிசனும், தூமாக்ஷனும் அனுமார்மீதும், இலக்குமணன் மீதும் அநேக பாணங்களைச்

செலுத்தினர்கள். இலக்குமணன் வீரத்தோடு அவற்றைத் துண்டித்து அவர்களுடைய விற்களையும், தேர்களையும், தேர்க் குதிரைகளையும், சாரதிகளையும் ஒழித்து விட்டான். அதன்மேல் அந்த வீரர்கள் வஜ்ஜிரதண்டங்களை எடுத்துக் கொண் டோடி வந்து ஆஞ்சனேயரை மோதி யடித்தார்கள். அனுமார் அவர்களின் இரண்டு தண்டங்களையும் பறித்துக் கொண்டார். அந்தத் துஷ்டர்கள் அதன்மேல் பிழைப்பதரி தென்று பயந்தோடிவிட்டார்கள். அத்தருணத்தில் அங்கதன், குமுதன், நீலன், சாம்பவன், சுக்கிரீவன், மயிந்தன், அவன்தம்பி துமிந்தன், சதவலி, பனசன் முதலான வீரர்கள் மூர்ச்சை தெளிந்து மலைகளைப் பெயர்த்தெடுத்துக் கொண்டு வந்து ஏககாலத்தில் இந்திரஜித்தின் மேல் எறிந்தார்கள். அவன் அம்புகளாள் அவற்றைச் சிதற அடித்து நொறுக்கி விட்டான். மறுபடியும் வானரவீரர்கள் மலைகளையும், மரங்களையும் பிடுங்கி அவன்மேலெறிந்து அவனிடம் நெருங்கினர்கள். அப்போது சூரியன் அஸ்தமித்தான். எங்கும் இருள் மூடிக்கொண்டது. அதைக்கண்டு விபீஷணன் இலக்குமணனிடத்தில், "சுவாமி! இன்னும் கால் நாழிகையில் நீர் இந்திரஜித்தைத் தொலைத்தால்தான் அவன் சாவான்; இல்லாவிட்டால் அதற்குமேல் இராக்ஷதர்களுடைய மாயா காலம் வந்து விடும்; அப்படியானல் அவன் ஆகாயத்திற் பாய்ந்து ஏதாவது மோசம் செய்து நம்மை வென்றுவிடுவான்" என்று சொன்னன். இலக்குமணன், 'அப்படியானல் நான் அவனை இதோ கொல்லுகிறேன்' என்று பல பாணங்களால் அவனுடைய தேரை நொறுக்கினன். உடனே இந்திரஜித்து, 'இனி நாமிங்கிருந்தால் இலக்குமணனுடைய அம்பினல் இறந்து விடுவோம்' என்று பயந்து ஆகாயத்திற் பாய்ந்து மேகத்துக்கு மேலேபோய் மறைந்து, அணுவைப்போல் சிறிதாகிய சூக்ஷ்ம தேகத்தை யெடுத்துக்

கொண்டு நாகபாசத்தை இலக்குமணன் முதலியவர்கள் மீது பிரயோகிக்க, மந்திரித்து எடுத்தான். இவன் செய்கை இப்படி யிருக்க, வானரவீரர்கள் இந்திரஜித்து பயந்தோடி விட்டானென்று ஆர்ப்பரித்தார்கள். இலக்குமணனும் அப் படியே நினைத்துச் சிரித்து அனுமார் தோளை விட்டிறங்கி, வில்லையும் அம்பறாத் தூணியையும் அங்கதனிடம் கொடுத்து விட்டுத் தேகத்தில் பாய்ந்திருந்த அம்புகளைப் பிடுங்கிவிட் டுக் கால்கைகளை உதறி இளைப்பாறிக்கொண்டிருந்தான். அப் படி யிருக்கும்போது இந்திரஜித்து முன் சொல்லியபடி எடுத்த நாகபாசத்தைப் பிரயோகித்து விட்டான். அந்தப் பாசமானது அக்கினியைக் கக்கிக் கொண்டுவந்து இலக்கு மணனுடைய தோள்களை இறுக்கிக் கட்டிவிட்டு மற்ற வானரவீரர்களையும் தனித்தனியே ஒவ்வொரு பாம்பைப் போலச் சுற்றி வளைத்துக் கட்டிவிட்டது. அப்போது இலக் குமணன் அதை இந்திரஜித்தின் மாயமென்றுணராமலும், கொஞ்சமாவது விசனப்படாமலும், பயப்படாமலும், திகைத்து அதற்கு ஒடுங்கி ஒன்றுந் தோன்றாமல் இரண களத்தையும் ஆகாயத்தையும் பார்த்தான்; அப்போது ஆஞ்சனேயர், அதனை இந்திரஜித்துவின் மாயையென் றெண்ணி, 'அவனை இதோ தேடிப் பிடித்துக்கொண்டு வரு கின்றேன்' என்று உக்கிரங்கொண் டெழுந்தார். அதற்குள் அந்தப் பாசம் அவர்தோளையும் இறுக்கிக் கட்டிவிட்டது. அப்போது வானரவீரர்கள் துயரப் பட்டார்கள். அதன் மேலும் இந்திரஜித்து மின்னல்கள் ஓடுகின்றனபோலவும், இடிகள் வீழ்வனபோலவும் அநேகம் பாணங்களைப் பிரயோ கித்தான். அவை பாயவே வானரர்கள் மூர்ச்சையானார்கள். இலக்குமணனும் மூர்ச்சை யடைந்தான். உடனே இந்திர ஜித்து, "நான், என் சபதத்தை நிறைவேற்றி விட்டேன்; என் உடற்புண்ணை ஆற்றிக்கொண்டு நாளைக்கே வந்து மற்ற

காரியங்களை முடிப்பேன்" என்று தன் பிதாவின் மாளிகை போய்ச் சேர்ந்து இராவணனிடத்தில், 'ஐயா! நான் வெற்றி பெற்றேன்' என்று யுத்தகளத்தில் நடந்தவற்றையெல்லாம் சொல்லி அவனைத் தேற்றிவிட்டுத் தன்மாளிகை போய்ச் சேர்ந்தான்.

அதன்மேல் யுத்த பூமியில் இலக்குமணனோடு நின்ற விபீஷணன் மாத்திரம் நாக பாசத்தால் கட்டுப்படாமல் நின்றதால், எல்லோரும் கட்டுப்பட்டுக் கிடைப்பதைக் குறித்து விசனித்துச் செய்வதின்னதென் றுணராமல் புலம்பினன். அப்போது அவனுடனிருந்த அனலனென்ற இராக்ஷஸ மந்திரி அவனை நோக்கி, "ஐயா! மேல் நடக்கவேண்டிய காரியங்களைச் செய்யாமல் நீர் புலம்பிக்கொண் டிருப்பது தகுதியன்று; நீர் இவ்விடத்திலிருந்து இவர்களைக் காத்துக் கொள்ளும்; நான் விரைந்து சென்று நடந்தவற்றை இராமருக்குக் கூறுகிறேன்" என்று சொல்லிவிட்டு உடனே இராமர்பாற் சென்று இரணகளத்தில் நடந்தவைகளைச் சொன்னான். அந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே இராமர் துக்க சாகரத்தில் மூழ்கி உடல்பதறி ஒன்றும் பேசாமல் படபடப்புடன் விரைந்தோடி யுத்தபூமியைச் சேர்ந்து எங்கும் இருள் மூடிக்கொண் டிருந்தபடியால் இலக்குமணன் கிடக்குமிடந் தெரியாமல் மயங்கி, அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகித்து எங்கும் வெளிச்சமுண்டாகச் செய்து அவ்வெளிச்சத்தின் உதவியால் தம்பியைப் பற்பல விடங்களில் தேடி ஒரு மங்கலகரமான இடத்தில் இலக்குமணன் கிடக்கக்கண்டு, அவன்மீது வீழ்ந்து தழுவிக் கொண்டு, "அப்பா! தம்பி இலக்குமணா! இனி நீ பிழைப்பாயோ! நீ இறந்தால் என்னுயிர் தரிக்குமோ!" என்று கண்ணீர் விட்டழுது அவன் பாதங்களைத் தடவினார்; கண்கள் சிமிட்டுகின்றனவா வென்று பார்த்தார்; மார்பைத்

தொட்டுப்பார்த்து அதில் துடிப்பிருந்ததால் நெஞ்சந் துடிக்கிறதென்றார்; அவனைத் தூக்கித் துடைமேல் வைத்தார்; மீண்டும் பூமியில் வைத்தார். 'அந்தத் திருடன் போய் விட்டானே' வென்று வில்லை நோக்கினார்; நாகபாசத்தைப் பார்த்தார். இதழைக் கடித்தார். விபீஷணனை நோக்கி, "இந்திரஜித்துவுக்கும் இலக்குமணனுக்கும் சண்டை நேர்ந்ததை எனக்குத் தெரிவிக்காமற் போயினையே; அஃதெனக்குக் கொஞ்சம் தெரிந்திருந்தால் நான் வந்து அவனைக் கொன்றிருப்பேனே" என்றார். அதற்கு விபீஷணன், "சுவாமி! இளையபெருமாள் அவனுடைய வல்லமைகளைத்தொலைத்து விட்டார்; அதனால் அவன்சிக்கிரம் இறந்து போவானென் றுறுதிகொண்டு நான் தங்களிடம் வந்து சங்கதி தெரிவிக்காமலிருந்தேன்; முடிவில் அஸ்தமிக்கும் சமயமாய்விட்டது; நான், 'அவனை விரைந்து கொல்லவேண்டும்; இல்லாவிட்டால் அவன் இரவில் ஏதாவது வஞ்சனை செய்வான்' என்று இலக்குமணரிடம் தெரிவித்தேன். அவரும் அவனைக்கொல்ல ஆயத்தமானார்; அதற்குள் அவன் ஆகாயத்திற் போய் மறைந்து நாகபாசத்தை விடுத்து எல்லோரையும் கட்டிவிட்டான். நம்மவர்களெல்லாம் இறந்து போகவில்லை; மூர்ச்சித்திருக்கின்றார்கள்; பாசம் அறுபட்டால் மயக்கம் நீங்கி யெழுந்திருப்பார்கள்; தேவரீர் துக்கப்பட வேண்டாம்" என்று சொன்னான். இராமர், "இந்தப் பாசத்தை அவனுக்குக் கொடுத்தவரார்? இது நீங்குதற்கு உபாயமெது?" என்று விபீஷணனைக் கேட்டார். அதற்கு விபீஷணன், "இது பிரமதேவருடைய யாகத்திலுண்டானது; ஈசுவரன் அவரிடம் இதனை ஒரு காலத்தில் பெற்றார். ஈசுவரனை நோக்கித் தவஞ்செய்து இந்திரஜித்து அவரிடம் இப்பாசத்தைப் பெற்றான்; இதுதான் முன்னே இந்திரனையும் அனுமாரையும் கட்டியது; இது தானே விட்டால்

தான் விடும்; அல்லது தன்னால் பிணிக்கப்பட்டவர் இறந்தால்தான் விடும்; வேறொரு வகையினாலும் இதனை நீக்கல் முடியாது" என்று சொன்னான்.

இராமர், "அப்படியானால் அந்தத் துஷ்டனுக்கு இப்படிப்பட்ட பாசத்தைக் கொடுத்த தேவர்களை எதிர்க்கலாமா? அல்லது இந்த உலகத்தை யெல்லாம் அழித்து விட்டு நானும் இறந்து போகலாமா? அல்லது இலங்கையை அழித்து இராக்ஷதர்களைக் கருவறுத்து விடலாமா? இவற்றுள் எது செய்யத்தக்கது; நீ சொல்லப்பா!" என்று விபீஷணனை நோக்கிக் கூறிவிட்டு, இலக்குமணன் விஷயத்தைக் காட்டிலும் மற்ற வானரர்கள் விஷயத்தில் பரிவுகொண்டு புலம்பி மீண்டும் இலக்குமணனுக்குச் சமீபத்திற்போய் நாகபாசத்தைப் பலமுறை உற்றுப் பார்த்துப் பெருமூச்சு விட்டுத் துக்கித்து இன்னது செய்வதென் றுணராதிருந்தார். அப்போது தேவர்களுடனே ஆகாயத்தில் நின்ற கருடாழ்வான், தனது பகவானாகிய விஷ்ணு மூர்த்தியின் அவதாரமாகிய இராமர் துக்கிப்பதைப்பார்த்துச் சகிக்காமல் மிகுந்த பக்தியினால் உடனே அதனை நீக்கக்கருதி அதிவேகமாகஇரணகளத்தில் இறங்கி, ஸ்ரீராமருக்கு முன்னேபோய் நின்று தொழுதுகொண்டு "சுவாமி! உமது யதார்த்த சொரூபத்தை மறந்து விட்டீரோ? அடியார்களுடைய துக்கங்களை யெல்லாம் போக்கியருளும் கடவுளாகிய நீர் இப்பொழுது வருத்தப் படுவதாக நடிக்கின்றீரே; தேவரீர் இனித் துக்கப்படவேண்டாம்; நான் உமது கவலையை நீக்குகின்றேன்" என்று மேலேபறந்து வட்டமிட்டு இராமரை வலமாகச் சுற்றிவந்து அவருக்கு முன்னே நின்று அந்த யுத்தபூமி முழுவதும் பரவும்படி தன்னுடைய சிறகின் காற்றை வீசினான். கருடன் நிழல் பட்டாலே பாம்புகள்மடிவது இயற்கையாதலின், அந்தக் காற்றுப்பட்ட மாத்திரத்தில்

நாகபாசம் சிதறிப்போய்விட்டது. அதனால் தனித்தனியே கட்டப்பட்டவர்களெல்லோரும் விடுபட்டார்கள்; அவர்கள் தேகத்திலுள்ள புண்களும் ஆறிவிட்டன. உடனே இலக்குமணன் எழுந்து இராமருக்கு முன்னே வணங்கி நின்றான். மற்ற வானரவீரர்களும் வந்து இராமரை வணங்கினார்கள். இராமர், இலக்குமணனைத் தழுவிக்கொண்டு சந்தோஷித்து, மற்ற வானரர்களையும் பார்த்துக்கடாக்ஷித்துக் கையால் அணைத்துக்கொண்டு, "பறவை ரூபமாக வந்தவருடையகாற்றுப் பட்டமாத்திரத்தில் பாசம்நீங்கிவிட்டதே! இவர் யாரோ தெரியவில்லையே; நம்மிடம் பக்தியுடையவராயிருக்கின்றார்" என்று கருடனுக்கு முன்னே போய்நின்று, அவனைநோக்கி, "ஐயா! நீர் யாவர்? எமக்கு இத்தகைய உதவிசெய்த உமக்கு நாங்கள் என்ன பிரதியுபகாரம் செய்யப்போகின்றோம்; எங்கள் மீது உமக்கு அன்புண்டானதற்குக் காரணமியாது?" என்றுவினவினார். அதற்குக் கருடன், "சுவாமி! உமக்கும் எனக்கும் பழைய உறவிருக்கின்றது; தேவரீர் இராக்ஷஸசம்மாரம் செய்து முடிந்தபிறகு நான் வந்து அவ்விவரத்தைத் தெரிவிக்கின்றேன்; அடியேனுக்குப் போக விடைகொடுத்தருளும்" என்று அவரை வணங்கிக்கொண்டு தன்னிருப்பிடம் போய்விட்டான். இராமர், கருடன் செய்த உபகாரத்தை யெண்ணி அதிசயமும் ஆனந்தமு மடைந்திருந்தார்.

இராவணன் படைத்தலைவர் வதை.

அப்படியிருந்த இராமர், சந்தோஷ ஆரவாரம் செய்யும்படி வானர வீரர்களுக்கு ஆக்ஞாபித்தார். அவர்கள் ஆனந்த முழக்கஞ் செய்தார்கள். இந்திரஜித்து ஜெயம்பெற்றுவந்தானென்று சந்தோஷமாகப் படுத்திருந்த இராவணன், அவ்வானரர்கள் செய்த ஆரவாரத்தைக் கேட்டுப் படுக்கையை

விட்டெழுந்து, 'யுத்தத்தில் எதிரிகளெல்லோரு மிறந்து போனார்களென்று இந்திரஜித்து சொன்னது உறுதியற்றதா யிருக்கின்றதே; இன்று அவர்கள் தர்மதேவதையின் உதவி யால் பாசத்தினின்று நீங்கினார்கள்போலும்' என்று விரைந்து இந்திரஜித்துவிடம் சென்றான். அப்போது இலக்குமணனு டைய பாணங்களால் துளைக்கப்பட்ட தேகத்தையுடைய இந்திரஜித்து இரணவேதனையால் எழுந்திருக்க முடியாமல் படுத்த படுக்கையிலேயே வருத்தத்துடன் இரண்டு கைகளை யுந்தூக்கி இராவணனுக்கு வணக்கஞ் செய்தான். அதைக் கண்டு இராவணன் மனங்கலங்கி அவனை நோக்கி, "அப்பா! உனக்கு நேர்ந்த வருத்தமியாது?" என்று வினவினான். அதற்கு இந்திரஜித்து, "அந்த இலக்குமணனுடைய பாணங் கள் பட்டதாலுண்டான துன்பம் என்னால் சகிக்க முடிய வில்லை; நான் தந்திரத்தினால் அவர்களைக் கொன்று வந்தேனே யன்றி என்னுடைய வன்மையாலதனைச் செய்யவில்லை; நான் எப்போதும் இவ்வாறு துன்பப்பட்டதில்லை; அந்த இராமன் மாத்திரம் மிஞ்சியிருக்கின்றான்; அவனை இனி எப்படியாவது தொலைத்து விடலாம்" என்றான். இராவணன், "இலக்கு மணனுடைய விற் குணத்தொனியும் வானரவீரர்கள் முழக்க மும் கேட்கின்றனவே; அவை உன் செவியிற் படவில்லை போலும்; பாசத்தினின்றும் அவர்கள் எப்படி விடுபட்டார் கள்?" என்றான். அதற்கு இந்திரஜித்து, "என் கண்முன் பாகவே அவர்கள் மயங்கி வீழ்ந்து போனார்கள்; அப்பேர்ப் பட்டவர்கள் எழுந்தார்களென்பது எனக்குச் சந்தேகமா யிருக்கிறது" என்றான். அப்போது எதிரிகளின் உளவறியப் போன சில தூதர்கள் வந்து, போர்க்களத்தில் நடந்த செய்திகளையெல்லாம் இராவணனிடம் கூறினார்கள். உடனே இராவணன் கோபித்து, "அந்தக்கருடன் நமக்குச் சிறிதும் அஞ்சாமல் வந்து இந்தக் காரியத்தைச் செய்து போயிருக்

கின்றான்; என் பாணங்களால் அவன் பன்முறைவருந்தியதை மறந்து விட்டான் போலும்; அவனிருக்கட்டும்; பின்னே அவனைப்பற்றிக் கவனிக்கலாம்; இப்போதெழுந்திருக்கும் எதிரிகளை ஒழிக்கவேண்டுமே; நீயேதான் அதற்குத் தகுதியானவன்" என்று இந்திரஜித்துவிடம் கூறினான். அவன், "எனக்கு மெத்த இரணவேதனையா யிருக்கின்றது. இன்றிருந்து வேதனையை ஆற்றிக்கொண்டு நான் நாளைக் குச் சென்று எல்லோரையும் மடித்து உமக்குச் சந்தோஷத்தை யுண்டாக்குகிறேன்" என்றான். இராவணன், 'அப்படியே நீ அதைச் செய்' என்று அவனிடம் கூறிவிட்டுத் தன் மாளிகை போய்ச் சேர்ந்தான்.

அப்போது வானரர்களுடைய ஆர்ப்பரிப்பைக் கேட்டு இராக்ஷதர்களெல்லாம் இராவணனிடம் வந்து,'நாங்கள் சண்டைக்குப் போகிறோம்' என்றார்கள். அவர்களுடன் மகாபாரிசனும், தூமாக்ஷனும், 'நாங்களும் யுத்தத்திற்குச் செல்கிறோம்' என்றார்கள். இராவணன் அவர்களை நோக்கி, 'அப்படியே போய்வாருங்கள்' என்று சொன்னான். அதைக் கேட்டவுடன் அங்கு நின்ற தூதர்கள், இராவணனை நோக்கி, "ஐயா! இந்திரஜித்து படைகளை யிழந்து தனிப்பட்டு நிற்கும்போது இந்த மகாபாரிசனும், தூமாக்ஷனும் அவரை விட்டுப் பயந்தோடி விட்டார்கள்" என்று அவ்விருவரின் தைரியமிழந்த செயலைச் சொன்னார்கள். உடனே இராவணன் கோபித்து அவ்விருவரையும் நன்றாய்ப் புடைக்கும்படி தூதர்களுக்குக் கட்டளையிட்டான். அவர்கள் அப்படியே அவ்விருவரையும் அடித்தார்கள். அதன் மேலும் இராவணன் சினந்தீராமல், "இந்த இருவர்களின் மூக்குகளை யரிந்து இவர்களை நான்கு தெருக்களிலும் நடத்தி 'இவர்கள் யுத்தத்தில் பயந்தோடினவர்கள்' என்பதை எல்

லோருக்கும் தெரிவியுங்கள்'' என்று அத் தூதுவர்களுக்குக் கட்டளை யிட்டான். தூதுவர்கள் அப்படியே அதைச் செய்யப் போனார்கள். அப்போது மாலியென்பவன் அவர்களைத் தடுத்துவிட்டு இராவணனை நோக்கி, "ஐயா! இது தகாது; எப்பேர்ப் பட்டவர்களும் யுத்தத்தில் தோற்பதும், தோற்றவர்கள் மற்றொருசமயம் ஜெயிப்பதும் இயற்கை; அந்த இராமனுக்கு முன்னே எவர்தாம் இளைக்காமல் நிற்பார்கள்? இந்திரஜித்துவே இளைத்துப் படைகளை யிழந்து தனித்துப் போயினனென்றால் சாமானியராகிய இவர்களால் எதிர்த்து நிற்றல் முடியுமா?" என்று சமாதானங் கூறினன். அப்போது மகாபாரிசனும் தூமாக்ஷனும் இராவணனை நோக்கி, "ஐயா! உமது குமாரன் இந்திரஜித்து இலக்குமணனுக்குப் பயந்து ஒரு பக்கத்தில் ஒதுங்கி ஆகாயத்தில் மறைந்து ஒரு மாயையைச் செய்துவிட்டுத் தப்பிப் பிழைத்தோடி வந்து விட்டான். நாங்கள் அவனைப்போல் பயந்து வரவில்லை; எதிரிகளுடன் எதிர்த்து நின்று இளைத்துப் போனதால் மீண்டும் பக்கபலத்துடன் வந்து யுத்தஞ் செய்யலாமென்று திரும்பி வந்தோம்; அப்படி வந்தாலும் மீண்டும்போய் யுத்தஞ் செய்யாமலிரோம்; இன்னும் மூன்று தினங்களுக்குள் எதிரிகளை வெல்வோம், அல்லது எங்களுயிரையாவது போக்கிக்கொள்வோம்; நீர் எங்களுக்கு யுத்தஞ்செய்ய அனுமதிகொடும்" என்று சொன்னார்கள்.

அதன்மேல் இராவணன் கோபம் நீங்கிப் பத்துவெள்ளம் காலாட்படைகளுடனும், அவர்கட்குத் தக்க யானை, தேர், குதிரைகளுடனும் சண்டைக்குச் சொல்லும்படி அவர்களுக்கு உத்தரவளித்தான். அவர்கள் அப்படியே புறப்பட்டார்கள். அவர்களுடன் யாககேது, சூரியகேது, மாலி, பிசாசன், வஜ்ரதந்தன் என்ற படைத்தலைவர்களும்

இராவணனுடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டு புறப் பட்டுப் போனார்கள். இந்தப் படைகள் இரணகளம் சேர்ந்த வுடன் இராமர் விபீஷணனை நோக்கி, "முன் இங்கே வந்து தன்மாயையால் வெற்றிகொண்டு போனவன் இந்தப் படை களுடன் வந்திருக்கின்றானோ?" என்று கேட்டார். அதற்கு விபீஷணன், "சுவாமி! அவன் வரவில்லை; மகாபாரிசன் முத லியவர்கள் வந்திருக்கின்றார்கள்" என்று கூறினான். உடனே வானரவீரர்கள் இராக்ஷதர்களுடன் போர் செய்யத்தொடங் கினார்கள். இராமரும் பாணப்பிரயோகம் பண்ணினார். அப் போது இருபடைகளிலும் பற்பல சேதங்களுண்டாயின. அதன்மேல் ஆஞ்சனேயரும் தூமாக்ஷனும் எதிர்த்தார்கள். மகா பாரிசனோடு அங்கதன் எதிர்த்தான். மாலியோடு நீலன் எதிர்த்தான். பிசாசனோடு பனசன் போர் செய்தான். சூரிய கேதுவோடு சுக்கிரீவன் யுத்தஞ் செய்தான். யாககேது வோடு இலக்குமணன் போர் புரிந்தான். வஜ்ரதந்தனோடு விருஷபன் போரிட்டான். மற்ற வானரர்கள் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு இராக்ஷதரோடு எதிர்த்துக் கொண்டார் கள். இவ்வாறு சண்டை நடக்கும்போது பத்து வெள்ளம் இராக்ஷஸ சேனைகளில் ஆறுவெள்ளம் சேனைகளை இராமர் கொன்றுவிட்டார். மற்ற நான்கு வெள்ளம் சேனைகளையும் இலக்குமணன் ஒழித்துவிட்டான். அனுமாரும், தூமாக்ஷ னும் சண்டை செய்ததில் சிறிது நேரத்திற்குள் அனுமார் அவனுடைய் தேரை அழித்துவிட்டார். அதன்மேல் தூமா க்ஷன் வில்லுடனே ஆகாயத்திற் கிளம்பினான். அப்போது இலக்குமணன் பாணத்தால் அவனுடைய வில்லை முறித் தெறிந்தான். உடனே அனுமார் அந்தத் தூமாக்ஷனைப் பிடித் துக் கீழேதள்ளி அவனுடைய தலையைக் கிள்ளிக் கடலில் எறிந்துவிட்டார். அங்கதனும் மகாபாரிசனும் சிறிது நேரம் யுத்தம்செய்த பின்னர் அங்கதன் அவனுடைய வில்லை

முறித்து அவனையும் தேரோடு தூக்கி ஆகாயத்தில் விட்டெறிந்தான். மகாபாரிசன் தேரை விட்டிழிந்து சூலாயுதத்தை அங்கதனுடைய மார்பில் விட்டெறிந்தான். இராமர் அந்தச் சூலத்தை அறுத்துக் கீழே தள்ளினர். அப்போது அங்கதன் அந்த மகாபாரிசனைப்பிடித்து இருபிளவாகப் பிளந்தெறிந்துவிட்டான். நீலனும் மாலியும் யுத்தஞ் செய்ததில், நீலன் ஒரு மலையினல் மாலியின் வில்லை முறித்துவிட்டான். அவன் வாளைக் கையிலேந்தித் தேரிலேறி நீலன் சமீபத்தில் நெருங்கினன். அப்போது மற்றொரு பக்கத்தில் நின்ற குமுதன் ஒரு மலையைப் பெயர்த்தெறிந்து மாலியின் தேரைப் பொடியாக்கி விட்டான். அதன்மேல் நீலன் ஒரு மாமரத்தைப் பிடுங்கி மாலிமேல் எறிந்தான். அதை அவன் வாளினல் சிதைத்துவிட்டு நீலன் மீது பாய்ந்தான். அப்போது இலக்குமணன் பாணத்தால் அவனுடைய தோளை வாளுடன் அறுத்துவிட்டான். அவ்வாறு தோள் அறுபட்டும் அவன் யுத்தஞ்செய்வதை நிறுத்தவில்லை. அப்படி அவன் யுத்தஞ் செய்தும் இலக்குமணன், 'இனி இவனுடன் நாம் போர் செய்வது நமக்குப் பெருமையாகாது' என்று அவனை விட்டுப் போய்விட்டான். பின்னர் அவன் தோளறுப் புண்டதனுலேயே வலியிழந்து ஒழிந்து போனன். அதன்மேல் இலக்குமணன் யாககேதுவை ஒரே பாணத்தால் கொன்றுவிட்டான். சுக்கிரீவன், முன்னொரு தினம் தன் பிதாவாகிய சூரியனோடெதிர்த்து ஜெயம் பெற்றவனுகிய 'சூரியகேதுவைச் சிறிது நேரத்திற்குள் கொன்றுவிட்டான்; இடபன் வஜ்ரதந்தனுடைய தேரும் வாளும் அழியும்படி ஒரு மலையைப்பிடுங்கி அவன்மேலெறிந்தான். வஜ்ரதந்தன் பெரிய தண்டாயுதத்தால் இடபனை அடித்தான். அந்த அடியினல் இடபன் சோர்ந்துபோனன். அத்தருணத்தில் ஆஞ்சனேயர் வஜ்ரதந்தனுக்கு முன்னே வந்து குதித்தார். வஜ்ரதந்தன்

அனுமாருடைய மார்பில் ஒரு குத்துக் குத்திவிட்டுப் போனான். அப்படிப் போனவனை அனுமார் இடக்கரத்தாற் பிடித்து அவன் கையிலுள்ள தண்டாயுதத்தைப் பறித் தெறிந்துவிட்டு வலக்கரத்தால் ஓங்கி அவனைக் குத்திக்கொன்றார். பசாசன் என்னும் இராக்ஷஸவீரன், பனசன் என்னும் வானர வீரனுடைய மார்பில் இரத்தமொழுகும்படி ஒரு தோமரத்தை யெடுத்தெறிந்துவிட்டு, ஒரு குதிரைமீதேறி யுத்தஞ் செய்தான். அந்த யுத்தத்தில் பல வானரர்கள் வருத்த மடைந்தார்கள். அப்போது இலக்குமணன் அந்தப் பசாசனுடைய தலையை பாணத்தால் அறுத்துவிட்டான்.

மகரக்கண்ணன் வதை.

இங்ஙனம் இராக்ஷத வீரர்கள் மடியவே சில தூதுவர்கள் ஓடி இராவணனிடம் அவர்கள் மடிந்த செய்தியைத் தெரிவித்தார்கள். அதனால் இராவணன் மிக்க துக்கமடைந்தான். அத்தருணத்தில் கரனுடைய புத்திரனான மகரக் கண்ணனென்பவன், இராவணனை நோக்கி, "ஐயா! நானிருக்கும்போது நீர் எதற்காகத் துக்கப்பட வேண்டும்; என் தகப்பனைக் கொன்ற அந்த இராமனை நான் கொல்ல வேண்டுமென்ற ஆத்திரத்துட னிருக்கின்றேன்; நீர் என்னை அங்கே அனுப்புவீரானால் நான் யுத்தத்தில் ஜெயம்பெற்று வருவேன்" என்று சொன்னான். இராவணன் அப்படியே அவன் யுத்தத்திற்குச் செல்ல அவனுக்கு உத்தரவளித்தான். அந்த மகரக் கண்ணன், தனக்குச் சொந்தமான ஐந்துகோடி சைனியங்களுடன் தேரேறிப் புறப்பட்டான். இராவணனும் ஐந்து வெள்ளஞ் சேனைகளையும், இரத்தக் கண்ணன், கங்கன் என்பவர்களையும் அவனுக்குக் காவலாக அனுப்பினான். எல்லோரும் கர்ச்சனையுடன் யுத்தகளம் போய்ச் சேர்ந்தார்கள். இருதிறப் படைகளும் போர்செய்ய ஆரம்

பித்தன. அப்போரில் பல இராக்ஷதர்களும் வானரர்களும் மடிந்தார்கள். அப்போது மகராக்கண்ணன் தேரைச் செலுத்திக்கொண்டுபோய் இராமருக்குமுன்னே நின்று, "என் தந்தையைக் கொன்ற உன்னை நான் இப்போது கொல்ல வந்தேன்" என்று கூறினன். அதற்கு இராமர், "ஆண் பிள்ளையாகிய உனக்கு அது தகுந்ததுதான்" என்று புன்சிரிப்போடு புகன்றார். உடனே மகராக்கண்ணன் கோபித்து இடியைப்போல் முழங்கி இராமர் மீது பாணங்களை எவினன். இராமர் அக்கினி முகாஸ்திரங்களை ஏவி, அவனேவிய அம்புகளைத் துண்டித்து, அவனுடைய மார்பில் ஓர் அக்கினி முகாஸ்திரத்தைச் செலுத்தினர். அந்தப் பாணம் அவனுடைய மார்பில் அழுந்தியும் அவன் இளைக்காமல் ஆயிரம் வஜ்ரபாணங்களை இராமருடைய கவசத்தில் பிரயோகித்து ஆர்ப்பரித்தான். உடனே இராமர் ஆறு பாணங்களைப் பிரயோகித்து அவனுடைய தேர்க் குதிரைகளையும், வில்லையும், பாகன் தலையையும் போக்கி விட்டார். அதன்மேல் மகராக்கண்ணன், மார்பில் தைத்த பாணத்துடனும், வாயில் வடியும் இரத்தத்துடனும் தன்னுடைய மந்திரபலத்தினல் ஆகாயத்தில் மறைந்து வாயுவாஸ்திரம் வருணஸ்திரம் முதலிய அம்புகளின் மூலமாக இடிகளும், மழையும், காற்றும், அக்கினியும் உண்டாகும்படி செய்தான். வானரர்கள் அவற்றிற்குப் பயந்து நாலாபக்கங்களிலும் ஓட்டம் பிடித்தார்கள். அக்கினி மழையாலும், கல்மழையாலும் ஆயிரங்கோடி வானரர்கள் மாண்டார்கள். அப்போது இராமர் அவற்றைக் கண்டு விபீஷணனை நோக்கி, "இந்த அனர்த்தங்கள் எதனல் விளைகின்றன?" என்று வினவினர். அதற்கு விபீஷணன், "சுவாமி! அந்த மகராக்கண்ணன் செய்த தவத்திற்காக வாயுவாலும் வருணனலும் அவனுக்குக் கொடுக்கப்பட்ட அஸ்திரங்களால் இவை யுண்டாகின்றன" என்றான். இரா

மர், 'அப்படியா! இதோ அவற்றை நான் போக்கி விடுகின்றேன்' என்று வாயுவாஸ்திரத்தையும் வருணாஸ்திரத்தையும் கோதண்டத்தில் பூட்டி இராம பாணத்தோடு சேர்த்துப் பிரயோகித்தார். அவற்றால் உடனே அந்த மழை, காற்று முதலியவைகளெல்லாம நீங்கிப்போயின.

அதன்மேல் மகரக்கண்ணன் தன்னுடைய மாயையால் ஆகாயமெங்கும் தன் உருவமே தோற்றச்செய்து தான் மாத்திரம் மறைந்துகொண்டு, கோடிக்கணக்கான சூலாயுதங்களை யேவி எங்கும் பரப்பிவிட்டான். இராமர் அவனுடைய மாயையை உணர்ந்து, அவன் உடம்பிலிருந்து வடிந்த இரத்தத்தால் அவன் மறைந்திருக்கு மிடத்தைத் தெரிந்துகொண்டு அதற்கு நேராக இராம பாணத்தைப் பிரயோகித்தார். அந்தப்பாணத்தால் மகரக்கண்ணன் தலையறுப்புண்டு பூமியில் வீழ்ந்திறந்தான். அதன்மேல் குருதிக்கண்ணன் தேரேறிவந்து போர்செய்யத் தொடங்கினான். அவனோடு நளன் என்னும் வானரத்தச்சன் எதிர்த்தான். சிறிதுநேரம் வரை இருவர்க்கும் யுத்தம் நடந்தது. முடிவில் நளன், குருதிக்கண்ணனைக் கொன்று விட்டான். அவனிறக்கவே, சங்கனென்னும் இராக்ஷஸவீரன் வீரத்துடன்வந்து போர் தொடுத்தான். பனசனென்னும் வானரவீரன் அவனோடெதிர்த்தான். சங்கன் பத்தம்புகளைப் பிரயோகித்துப் பனசனுடைய தோள்களிலும் மார்பிலும் அழுத்தினான். பனசன் அதன்மேல் அந்தச் சங்கனைத் தேரோடுதூக்கினான். சங்கன் தேரைவிட்டுக் கீழேகுதித்தான். பனசன் அந்தத் தேரைக்கொண்டே சங்கனுடைய சிரசில் மோதினான். அந்த அடிபட்டவுடன் சங்கன் கீழேவீழ்ந்து மீண்டும் எழுந்து ஆகாயத்திற்பாய யத்தனித்தான். அப்போது பனசன் அந்தச் சங்கனைப் பிடித்துக் கீழே தள்ளிக்

காலால் உதைத்துக் கொன்றான். எஞ்சியிருந்த இராக்ஷத சேனைகளெல்லாம் இராம பாணங்களாலும், வானரர்கள் ஏவிய மலைகளாலும், மரங்களாலும் மாண்டொழிந்தன. தூதுவர்கள் இச்செய்தியைத் தெரிவிக்க இராவணனிடம் ஓடினார்கள்.

இந்திரஜித்து யுத்தம்.

மேற்கூறியபடி ஓடிய தூதர்கள், மரக்கண்ணன் முதலிவர்கள் இறந்த துக்க செய்தியை இராவணனுக்குத் தெரிவித்தார்கள். அவன், அதைக் கேட்டதும் ஆத்திரத்தோடு இந்திரஜித்துவை அழைத்து வரும்படி அத் தூதர்களை அனுப்பினான். அவர்கள் போய் அவனுக்கு இராவணனுடைய கட்டளையைத் தெரிவித்தார்கள். இந்திரஜித்து அத்தூதுவர்களை நோக்கி, "யுத்தத்திற்குச் சென்ற இராக்ஷத வீரர்கள் மடிந்து போனார்களோ?" என்று வினவினான். அவர்கள், 'ஆம்' என்றார்கள். உடனே இந்திரஜித்து புறப்பட்டு வந்து இராவணனிடத்தில், "ஐயா! உமது பிள்ளைகள் இவ்வளவு சீக்கிரத்தில் இறந்தும் நீர் அவர்களைப்பற்றிச் சிறிதும் கவலையடையாதிருக்கின்றீர்; இனி என்ன நேருமோ" என்று மனம் வெதும்பிச் சொல்லிவிட்டு அவனை வலஞ்சுற்றி வணங்கிக்கொண்டு ஆயிரம் சிங்கங்கள் பூட்டிய தேரிலேறிப் போர்ப்பறை முழங்க யுத்தகளம் நோக்கிப் புறப்பட்டான். அவனுக்குதவியாக அறுபது வெள்ளம் இராக்ஷதப் படைகளும், யானைகளும், குதிரைகளும், தேர்களும் பெருங்கூட்டமாகச் சென்றன. ஆயிரங்கோடி வீரர்கள் தேர்களில் ஏறிக்கொண்டு இந்திரஜித்துவின் தேரைச் சூழ்ந்து சென்றார்கள். இந்திரஜித்து இரணகளம் போய்ச் சேர்ந்ததும் தன் சேனைகளை அணிவகுத்து நிறுத்தி, தேவேந்திரன் தனக்குத் தோற்றுக் காணிக்கை

யாகக் கொடுத்துவிட்டுப் போன வலம்புரிச் சங்கை யெடுத்து முழக்கினான். அத்தொனியைக்கேட்டு வானரர்கள் ஓட்டம் பிடித்தார்கள். அதன்மேல் இந்திரஜித்து வில்லைவளைத்துக் குணத்தொனி பண்ணினான். அதனாலும் வானரர்கள் கலங்கினார்கள்.

இராமர் அச்செய்கைகளைக் கண்டு கோபித்தெழுந்து கோதண்டத்துடன் ஆஞ்சனேயர் தோளின்மீதேறி யுத்தத்திற்கு ஆயத்தமாய் நின்றார். இலக்குமணன் அங்கதனுடைய தோளிலேறி நின்றான். நீலன் முதலான வானரவீரர்கள் விருக்ஷங்களையும் மலைகளையுங் கையிற்கொண்டு போர்செய்யத் தொடங்கினார்கள். அப்போது இராமர் அவர்களை நோக்கி, "அந்தத் துஷடன் தேவாஸ்திரங்களைப் பிரயோகிப்பான்; அவற்றை உங்களால் தடுத்தல் முடியாது; ஆதலால் நீங்கள் பின்னே நின்று நானும் இலக்குமணனும் செய்யும் யுத்தத்தைப் பார்த்துக்கொண்டிருங்கள்" என்று சொன்னார். அவர்கள் அப்படியே நின்று விட்டார்கள். பிறகு இராமலக்குமணர்களிருவரும் இராக்ஷதப் படைகளின்மீது அநேக பாணங்களைப் பிரயோகித்தார்கள். அவற்றால் எங்கும் இராக்ஷதப் பிணக்குவியல்கள் நிறைந்துவிட்டன. அனுமாரும் அங்கதனும் இராமலக்குமணர்களைத் தூக்கியபடியே எங்கும் காற்றைப்போலச் சுழன்று சாரிசுற்றித் திரிந்தபடியால் எவ்விடத்திலும் அவர்களுடைய உருவங்களே காணப்பட்டன. அவர்கள் செய்யும் சண்டைகளே விளங்கின. சிறிது நேரத்திற்குள் இந்திரஜித்துக்குத் துணையாக வந்த ஆயிரங்கோடி தேர் வீரர்கள் தவிர மற்ற அறுபது வெள்ளம் இராக்ஷத சேனைகளும் அழிந்து போய்விட்டன. அப்போது இந்திரஜித்து தேரின்மேல் வில்லைப்பிடித்தபடியே நின்று, "இராமலக்குமணர்கள் இருவர் தாமே; இவர்கள் எப்படி இவ்வளவு

சேனைகளையும் கொன்றுவிட்டார்கள் ; சபித்துத்தான் கொன்று விட்டார்களோ! எங்கும் பல இராம லக்குமணர்களும், அனுமார்களும், அங்கதர்களும் தோற்றுகின்றார்களே! அவர்களுடைய பாணப் பிரயோகங்களே எவ்விடத்தும் காணப்படுகின்றனவே!" என்று ஆச்சரியமுற்றுப் பிரமை யடைந்தான். அவசகுனமாக அவனுடைய இடத் தோள் துடித்தது. இந்திரஜித்து அவ்வாறு பிரமித்து நிற்கும்போது அவனுக்குத் துணையாக வந்து சாகாமல் நின்ற ஆயிரங்கோடி தேர் வீரர்களும் வந்து இராமலக்குமணர்களை எதிர்த்தார்கள். அவர்களைக் கண்டதும் அனுமார் தோள்களைத் தட்டி வீரகர்ச்சனை செய்தார். அதைக்கேட்டு அவ் வீரர்களிற் சிலர் மூர்ச்சையானார்கள். சில இராக்ஷதர்கள் பயந்தோட யத்தனித்தார்கள். இந்திரஜித்து அவர்களை நோக்கி, 'இந்தக் கர்ச்சனைக்குப் பயந்த நீங்கள் இப்போதே போய் விடுங்கள்' என்று கோபித்துவிட்டுத் தனித்தேருடனே இராம லக்குமணர்களுக்கு முன்னே வந்தான். அவன் செய்கையைக்கண்டு அந்த ஆயிரங்கோடி தேர்வீரரும் தைரியங்கொண்டு அவனுடனே இரணகளத்தில் வந்து நின்றார்கள்.

அத்தருணத்தில் இலக்குமணன் இராமரை நோக்கி, "சுவாமி! இந்த இந்திரஜித்து முன்னே என்னை நாகபாசத்தாற் கட்டி ஜெயமடைந்ததாக ஒரு பெயர் உண்டாகியிருக்கின்றது; இவனை நானே கொன்றால்தான் அந்தப் பெயர் மறையும்; ஆதலால் இவனுடன் நான் மாத்திரம் எதிர்த்து இவன் தலையை அறுத்துக்கொண்டு வந்து தங்களுடைய பாதத்தில் வைக்கின்றேன் ; அப்படி நான் செய்யாமற் போவேனானால் இனிக் கையில் வில்லெடுப்பதில்லை" என்று சபதங்கூறினான். இராமர் அதைக்கேட்டுச் சந்தோஷித்து, அவனை நோக்கி, "தம்பி! நீ கூறியபடியே செய் ; உனக்கு

ஜெயமுண்டாகும்' என்று ஆசீர்வதித்தார். இலக்குமணன் சந்தோஷித்து இராமரை வணங்கி வீராவேசத்துடன் இரணகளத்திற் சேர்ந்து இந்திரஜித்து முதலிய இராக்ஷதர்களுடன் எதிர்த்து நின்றான். அப்போது இராக்ஷதர்கள் சகல ஆயுதங்களையும் மேகவருஷத்தைப் போல இலக்குமணன் மீது வீசி யெறிந்தார்கள். இலக்குமணன் அநேகபாணங்களைப் பிரயோகித்து அவற்றைப் பொடியாக்கிவிட்டு மேலும் கொடிய அம்புகளை இராக்ஷதப் படைகள்மீது செலுத்தினான். அவற்றால் அநேகம் இராக்ஷதப்படைகள் மடிந்தன. அப்போது இராமரும் ஆஞ்சனேயர்மீது ஏறிக்கொண்டு வந்து மற்றொரு பக்கத்தில் அஸ்திரப்பிரயோகஞ் செய்தார். அவராலும் அநேகம் இராக்கத சேனைகள் ஒழிந்தன. சிறிது நேரத்திற்குள் எல்லாப்படைகளு மொழிந்து இந்திரஜித்து மாத்திரம் ஒற்றைத் தேருடன் நின்றான். அப்படி நின்ற அவன் இராம லக்குமணர்களைப் பார்த்து, "நீங்கள் இருவரும் ஏககாலத்தில் என்னிடம் போர்தொடுத்து மாண்டு போகின்றீர்களா? அல்லது சேனைகளைச் சேர்த்துக் கொண்டு எதிர்த்து மாள்கின்றீர்களா? தனித்தனியே சண்டைசெய்து மாள்கின்றீர்களா? உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள்" என்று கேட்டான். அதற்கு இலக்குமணன், "அடா! இராவண குமாரா! எவ்வகைப் போரினாலாவது உன்னை நானொருவனே கொல்வதாகச் சபதஞ் செய்திருக்கின்றேன்" என்று சொன்னான். இந்திரஜித்து, "அப்படியானால் உன்னை முன்னே கொன்றுவிட்டு அப்பால் நான் உன் தமையனைக் கொல்கின்றேன்; என்னுடன் வந்த அறுபதுவெள்ளம் சேனைகளையுங் கொன்ற நீங்களிருவரும் வருந்தும்படி முதலில் உங்கள் எழுபது வெள்ளம் வானரப்படைகளையும் ஒழித்து விடுகிறேன்; முடிவில் உங்களைக் கொன்று உங்களுடைய இரத்தத்தால் என்

சிற்றப்பன், தம்பிமார் முதலியவர்களுக்குத் திலதர்ப்பணம் செய்யாமற் போகமாட்டேன்" என்று சபதங் கூறினான். அதைக்கேட்டு இலக்குமணன் கோபித்து அவனை நோக்கி, "அடே பேதாய்! இராவணனுக்கும், மற்றவர்களுக்கும் உத்தரகிரியை செய்ய வேண்டியவன் நீயானாலும், 'நீ இன்றைக்கே மடிந்துபோவாயாதலின் உனக்கு இராவணன் உத்தரகிரியை செய்யப்போகின்றான்; இதை உணராமல் நீ வாய்மதம் பேசுகின்றாயே" என்றான்.

அதைக் கேட்டவுடனே இந்திரஜித்து கோபங்கொண்டு அநேகம் அக்கினி முகாஸ்திரங்களை இலக்குமணன்மீது பிரயோகித்து, அங்கதன்மீது ஆயிரம் பாணங்களையும், மற்ற வானர வீரர்கள்மீது அநேகம் பாணங்களையும் விடுத்து எங்கும் பாணமயமாகும்படி செய்துவிட்டான். உடனே இலக்குமணன் எண்ணிறந்த பாணங்களைச் செலுத்தி அவனேவிய பாணங்களைத் தூளாக்கிவிட்டு மேலும் அவன்விடும் தேவாஸ்திரங்களை யெல்லாம் அந்த அந்தத் தேவாஸ்திரங்களைக் கொண்டே கண்டித்து அவனோடெதிர்த்து நின்றான். இராமர் இந்திரஜித்தின் மேல் அம்பு செலுத்துதல் தருமமாகாதென்று இலக்குமணனுக்குப் பின்னே வெறுமனே நின்றார். அதன்மேல் இலக்குமணன், பாணங்களை விடுத்து இந்திரஜித்தின் தேரிற் பூட்டியிருந்த ஆயிரம் சிம்மங்களையுங் கொன்று விட்டான். இந்திரஜித்து அத்தேரிலிருந்தபடியே அங்கதன் தோள்களில் அநேகம் பாணங்களை ஏவிவிட்டுச் சங்கநாதஞ் செய்தான். உடனே இலக்குமணன் பத்துத் திவ்யபாணங்களை யேவி அவனுடைய வஜ்ரகவசத்தைப் பொடியாக்கிவிட்டு வில்லில் குணத்தொனி செய்துநின்றான். அத்தருணத்தில் இந்திரஜித்து கண்மூடித் திறப்பதற்குள் ஆகாயத்திற்போய் மறைந்து விட்டான்.

பிரமாஸ்திரத்தால் இலக்குமணன் முதலிய எல்லோரும் மூர்ச்சையாதல்.

அவ்வாறு மறையவே இலக்குமணன், "இந்திரஜித்து மறைந்துவிட்டானாதலால், ஏதாவது மாயைசெய்து நம் படைகளை அழித்து விடுவான்; ஆதலால் பிரமாஸ்திரத்தைப் பிரயோகித்துவிட்டால், அஃது அவன் எங்கேயிருந்தாலும் அவனைத் தேடிக்கொன்றுவிடும்" என்று இராமரிடம் கூறினன். அதற்கு இராமர், "தம்பி! நீ அவசரப்பட்டுப் பிரமாஸ்திரத்தைப் பிரயோகித்து விடாதே; அது மூன்றுலகங்களையும் நாசப்படுத்திவிடும்; அவன் பொருட்டு உலகங்களை அழித்துவிடுதல் தகாது" என்று கூறினர். அவர் சொற்படியே இலக்குமணன் அதைவிடுக்காமலிருந்துவிட்டான். இந்திரஜித்து அவர்களுடைய அபிப்பிராயத்தைத்தெரிந்துகொண்டு, "அந்தப் பிரமாஸ்திரத்தையே நாம் இவர்கள்மீது பிரயோகித்து விடலாம்; அதைப்பற்றி இலங்கைக்குப்போய் நம் தந்தையோடு கலந்துபேசி யோசித்துக் கொண்டு வரவேண்டும்" என்று இலங்காபட்டணம்போய்ச் சேர்ந்தான். அப்போது சூரியாஸ்தமனமாயிற்று. அதன் மேல் இராமர் விபீஷணனை நோக்கி, "நம்முடைய சேனைகள் இரவும் பகலும் ஓயாமல் சண்டைசெய்து இளைத்துப் போய்விட்டன; நாம் எல்லோருக்கும் ஆகாரம் கொடுக்கவேண்டும்; ஆதலால் நீ எங்கேனும் சென்று உணவுப் பொருள்களைத் தேடிக்கொண்டுவா" என்று கட்டளையிட்டார். விபீஷணன் அப்படியே உணவுப் பொருள்கள் தேடிவாரத் தன் மந்திரிகளோடு அவை கிடைக்கு மிடத்திற்குச் சென்றான். அதன் மேல் இராமர் இலக்குமணனை நோக்கி, "தம்பி! இந்திரஜித்து தேவாஸ்திரங்களுக்குப் பூசைசெய்து விட்டு அதன்மேல் வந்து நம்மீது அவற்றைச் செலுத்தலாமென்று அப்பூஜை

யை நிறைவேற்றப் போயிருப்பான்; ஆதலால் நாமும் அஸ்திரபூஜை செய்துகொள்ள வேண்டும்; நான் போய் அதனைச் செய்துவிட்டு வருகின்றேன்; நான் திரும்பி வரும்வரை நீ நம் சேனைகளைப் பத்திரமாகப் பாதுகாத்துக்கொண் டிரு" என்று சொல்லிவிட்டுப் பாடிவீட்டிற் சேர்ந்து அப்பூஜையைச் செய்துகொண்டிருந்தார்.

இவர்களிப்படி யிருக்க, இலங்கைக்குச் சென்ற இந்திரஜித்து இராவணனைக்கண்டு அவனிடத்தில், "ஐயா! இலக்குமணன் என்மீது பிரமாஸ்திரப் பிரயோகம்பண்ண உத்தேசித்து இராமன் தடுத்ததால் அதைநிறுத்தியிருக்கின்றான்; இனிச் சமயம் நேர்ந்தபோது அதனைப்பிரயோகித்தாலும்பிரயோகிப்பான்; அவன் அவ்வாறு செலுத்துவதற்குள் நான் அந்தப் பிரமாஸ்திரத்தையே அவர்கள் மீது பிரயோகித்து விடவேண்டும்; அவ்வாறுசெலுத்தும் போது எதிரிகளுக்குத் தெரியாமல் மறைந்துநின்றே அதனை ஏவிவிடவேண்டும். ஏனென்றால் நான் பாணப்பிரயோகஞ்செய்வதை இலக்குமணன் உணர்ந்தால் அவனும் பிரமாஸ்திரத்தையே விடுத்து அதனை நாசஞ் செய்வதோடு என்னையும் நம் படைகளையும் தொலைத்து விடுவான்; ஆதலால் முதலில் நாம் அவர்களோடு சண்டை செய்ய அளவில்லாத படைகளை ஏவ வேண்டும்; அப்படைகள் போய்ச் சண்டை செய்யும் போது நான் அப்படைகளுக்குப் பின்னே மறைந்து பிரமாஸ்திரத்தைத் தொடுத்து விடவேண்டும்" என்று கூறினான். உடனே இராவணன் பக்கத்தில் நின்ற மகோதரனை நோக்கி, "நீ நூறு வெள்ளஞ்சேனைகளையும், அவற்றிற்குத் தலைவரான அகம்பன் முதலான வீரர்களையுங் கூட்டிக்கொண்டு போய் அந்த மனிதர்களோடு எதிர்க்க வேண்டும்" என்றான். அப்படியே மகோதரன் படைகளுடன்

போய் இலக்குமணன் நின்ற விடத்தில் வானரப்படைக ளுடன் போர் தொடுத்தான். வானரர்களுக்கும் இராக்ஷதர் களுக்கும் மும்முரமான யுத்தம்நடந்தது. அந்த யுத்தத்தில் இருதிறப் படைகளிலும் பற்பல சேதங்களுண்டாயின. இலக்குமணனும் அளவற்ற பாணங்களைச் செலுத்தி அநே கம் இராக்ஷதப்படைகளை மடித்துக்கொண்டு திரிந்தான். ஆஞ்சனேயர் கும்பகர்ணனால், அங்கே போட்டுவிடப்பட்ட ஒரு தண்டாயுதத்தைக் கையிலெடுத்துக்கொண்டு எதிரி களைத் தாக்கி இரணகளமெங்கும் திரிந்தார். சுக்கிரீவன், நீலன், அங்கதன், சாம்பவன், பனசன் முதலிய வானரவீரர் களும் மிகுந்த கோபங்கொண்டு இராக்ஷதப் படைகளில் புகுந்து ஆங்காங்கே பிரிந்து தனித்தனியே யுத்தஞ்செய்து பல இராக்ஷதர்களை மடித்துக்கொண்டு திரிந்தார்கள். அப் போது, முன்னே தாருகாசுரனு யிருந்து சுப்பிரமணியரோ டெதிர்த்துமாண்டு இராக்ஷதனுகவந்து பிறந்த அகம்பனென் பவன் ஆயிரங் கழுதைகள் பூட்டிய தேரிலேறிக்கொண்டு வந்து ஆஞ்சனேயரோ டெதிர்த்து அநேகம் பாணங்களை அவர்மீது செலுத்தினன். அனுமார் அவற்றை யெல்லாம் தண்டாயுதத்தால் போக்கிவிட்டு அநேகம் இராக்ஷதப்படை களையும் நாசஞ்செய்து விட்டார். அவர் செய்கையைக்கண்ட அகம்பன் கடுஞ்சினமடைந்து அளவற்றகொடியபாணங்களை அவர் தோள்களிலும் மார்பிலும் செலுத்தினன். அந்தப் பாணங்கள் பட்டதால் அவர் தேகமெங்கும் இரத்த மொழு கிற்று; அவர் சிறிது வருத்த மடைந்தார். எனினும் அவர் அவ்வருத்தம் நீங்குதற்குள் ஆத்திரங்கொண்டு பாய்ந்து அவனுடைய தேரிற் பூட்டிய கழுதைகளையும், தேர்த்தட் டையும், சாரதியையும் தண்டத்தினல் மோதி அழித்து விட்டார். அதன்மேல் அகம்பன் ஒரு தண்டாயுதத்தை

யெடுத்துக்கொண்டு மாருதி சமீபத்தில் நெருங்கினன். இருவருக்கும் சிறிதுநேரம் மல்யுத்தம் நடந்தது. முடிவில் அனுமார் அகம்பனுடைய மார்பில் தண்டாயுதத்தால் ஓங்கி யடித்தார். அவன் அந்த அடியைத் தன் தண்டத்தினுல் தட்டி விலக்கினன். அப்படி விலக்கியவுடனே அவனுடைய தண்டம் பிடித்த கைமுறிந்து தண்டாயுதமும் நொறுங்கி விட்டது. அதன்மேல் அவன் தன் இடக்கையால் அனுமாருடைய மார்பில் ஓங்கி யறைந்தான். உடனே அனுமார் தம்முடைய இடக்கையினுல் அகம்பனுடைய மார்பில் குத்திக் கன்னத்திலோர் அறை யறைந்து அவனைக் கீழே தள்ளிக் கொன்ருர். அவனுடன் வந்து இறந்த இராக்ஷதர்கள் தவிர மற்றவர்கள் ஓட்டம் பிடித்தார்கள். மற்றொரு பக்கத்தில் இலக்குமணனுடைய பாணங்களால் எதிரிகளுடைய நால் வகைப் படைகளில் அனேகம் மாண்டொழிந்தன. அத்தருணத்தில் வானரவீரர்களும் இலக்குமணனும் தனித்தனியே பிரிந்து நெடுந்தூரங்களுக்கு அப்பால் நின்று யுத்தஞ்செய்த படியால் அவர்களுள் ஒருவர் நிலைமை மற்றொருவருக்குத் தெரியாமலிருந்தது. இந்த நிலையில் அனுமார் இலக்குமணனைக் காணவேண்டுமென்று நினைத்து அவனுடைய நாணொசையைக் கேட்டு அதன் வழியாகவே சென்று மிக்க பிரயாசையின் பேரில் அவனைக்கண்டு வணங்கினர். இலக்குமணன் மற்றவர்களுடைய செய்தி தெரியாமல் அதனையறிய ஆவலுடனிருந்தாஞதலால் அவரைக் கண்டவுடன் சந்தோஷித்து, "அனுமானே! இஃது இராக்காலமானதால் இரணகளத்தில் நடந்த விஷயமொன்றும் எனக்குத் தெரியவில்லை; சுக்கிரீவர், அங்கதன் முதலியவர்கள் எங்கே நிற்கின்ருர்கள்?" என்று கேட்டான். அதற்கு ஆஞ்சனேயர், "சுவாமி! மிகுந்த இருளாயிருப்பதால் எனக்கு அவர்கள் நிற்குமிடந் தெரியவில்லை; வானரசேனைகள் பலவாருகப் பிரிந்து போய்

விட்டன; தேவதாஸ்திரத்தைக்கொண்டு நீர் இந்த இருளைப் போக்கவேண்டும்; இல்லாவிடில் வானரர்கள் உம்மிடம் வந்து சேரமாட்டார்கள்” என்று சொன்னார்.

அதைக்கேட்டதும் இலக்குமணன் பாசுபதாஸ்திரத்தையும் வேறு சில பாணங்களையுந் தேர்ந்தெடுத்து இராக்ஷதர்கள் மீது பிரயோகித்தான். பாசுபதாஸ்திரம் இராக்ஷதர்களை யெல்லாம் நிமைப்போதில் மடித்து எங்கும் வெளிச்சத்தை உண்டாக்கி விட்டது. மகோதரன் நம் மாயை நீங்கி விட்டதென்று பாய்ந்து ஆகாயத்திற்போய் மறைந்து விட்டான். வானரவீரர்களெல்லோரும் யாதொரு வருத்தமுமின்றி இலக்குமணனிடம் வந்து சேர்ந்து சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். இலக்குமணனும் சந்தோஷித்தான். சில தூதர்கள் ஓடி, நூறு வெள்ளம் இராக்ஷத சேனைகளும் மடிந்து, அகம்பனும் தொலைந்து, மகோதரனும் மறைந்ததை இராவணனிடம் தெரிவித்தார்கள். இராவணன் அவர்களை நோக்கி, “ஒரு வில்லையுடைய அந்த மனிதன் அவ்வளவு படைகளையும் இவ்வளவு சீக்கிரத்தில் எப்படிக் கொன்றான்?” என்று கேட்டான். அவர்கள், “சுவாமி! அந்த இலக்குமணன் உருத்திரருடைய அஸ்திரத்தினால் விரைவில் எல்லோரையும் முடித்துவிட்டான்; இராமன் யுத்தஞ்செய்யாமல் பாடி வீட்டிலிருக்கிறான்; விபீஷணன் ஆகாராதிகள் கொண்டு வரப் போயிருக்கின்றான்” என்றார்கள். இராவணன், ‘அப்படியா! அவன் போர் செய்தான்!’ என்று கோபச் சிரிப்புச் சிரித்தான்.

அத்தருணத்தில் இந்திரஜித்து, ‘இதுதான் நாம் பிரமாஸ்திரந் தொடுப்பதற்குத் தகுந்தகாலம்’ என்று ஓர் ஆலமரத்தினடியிற்சென்று, இராக்ஷஸ வேதியர்களைக் கொண்டு, அம்பினால் சமிதைகளைச் சேர்த்து, அக்கினி மூட்டி அதில்

தும்பைமலரும், காரெள்ளும், கறுத்த வெள்ளாட்டின் கொம்பும், பல்லும், இரத்தமும், மாமிசமும் கிரமமாகச்சொரிந்து, எண்ணெயால் ஓமம் வளர்த்து, மூலயாகஞ்செய்து ஆகாயத்திற் சென்று ஒருவரு மறியாதபடி மேகக் கூட்டத்திற்குள் மறைந்தான். மகோதரன் இந்திரஜித்து வந்ததை யுணர்ந்து அவனுக்குதவியாகத் தானொரு மாயஞ்செய்யக் கருதி இந்திரனைப்போல வேடமெடுத்து, ஒரு யானையை ஐராவதத்தைப் போலாக்கி அதிலேறி, இராக்ஷதர்களை முனிவர்களைப் போலவும் தேவர்களைப் போலவும் வடிவெடுக்கச் செய்து அவர்களைத் துணையாகச் சேர்த்துக்கொண்டு இலக்குமணனுக் கெதிரில் சண்டைக்குப் போனான். அவனைப் பார்த்ததும் வானரர்கள் பயந்தோடி விட்டார்கள். அப்போது இலக்குமணன் அனுமாரைப் பார்த்து, "தேவர்களும், முனிவர்களும் நம்மீது என் சண்டைக்கு வருகிறார்கள்?" என்று அதிசயத்துடன் கேட்டான். அப்படி இலக்குமணன் புத்தி மயங்கியிருந்த தருணத்தில் இந்திரஜித்து அவன்மீது பிரமாஸ்திரத்தைப் பிரயோகித்துவிட்டான். அதிலிருந்து அநேக கோடி பாணங்கள் புறப்பட்டு இலக்குமணன்மீது வந்து பாய்ந்தன. இலக்குமணன் அறிவடங்கி மயங்கி ஒடுங்கி விட்டான். அத்தருணத்தில் அனுமார், இந்திரன் வேடந்தாங்கி வந்த மகோதரனை இந்திரனென்றும், அவனே அந்த அஸ்திரப் பிரயோகஞ் செய்தானென்றும் நினைத்து, "இஃதென்ன அதிசயம்! இந்திரனேன் இவ்வாறு இதனைச் செய்தான்? நான் இவனை யானையோடு சேர்த்துவாரிப் பூமியிலறைகின்றேன்" என்று கோபித்தெழுந்தார். அதற்குள் மேற்கூறிய பிரமாஸ்திரத்திலிருந்து வெளிப்பட்டு அவர் தேகத்திலும் ஆயிரங்கோடி பாணங்கள் வந்து பாய்ந்தன. அவற்றால் அவரும் மயங்கி வீழ்ந்தார். அதன்மேலும் அதிலிருந்து எண்ணிறந்த பாணங்கள் வந்து பாய்ந்ததனால் சுக்கிரீவன்,

அங்கதன், சாம்புவர், முதலிய வானரவீரர்கள் நினைவற்று வீழ்ந்தார்கள்; மற்ற வானரர்களும் ஒருவரேனுமில்லாமல் மடிந்துபோனார்கள். அதன்மேல் இந்திரஜித்து தன்னுடைய வெற்றிச்சங்கத்தை முழக்கிவிட்டு இராவணனிடம் போய்த் தான் ஜெயம் பெற்றதைக் கூறினான். இராவணன் ஆனந்த முற்று, 'அந்த இராமன் இறக்கவில்லையோ?' என்றான். அதற்கு இந்திரஜித்து, "ஐயா! அவன் எங்கேயோ போய் விட்டான்; அதனால் அவன் உயிர் தப்பினான்" என்றான். இராவணன், 'நீ சொல்வது சரிதான்' என்று இந்திரஜித்தைக் கொண்டாடினான். பின் இந்திரஜித்தும் மகோதரனும் தங்கள் தங்கள் அரண்மனைக் கேகினார்கள்.

இவர்கள் செய்கை இப்படியிருக்க, பாடிவீட்டில் அஸ்திர பூஜை செய்துகொண்டிருந்த இராமர் அதனை நிறைவேற்றி விட்டு இரணகளத்திற்குத் திரும்பி வந்தார். அங்கே மிக்க இருளா யிருந்தபடியால் அவருக்கு ஒன்றுந் தெரியவில்லை. யுத்தகளத்தில் யாதொரு சந்தடியுமில்லாதிருந்தது. அதனால் அவர், 'இராக்ஷதர் மாயையால் நம்மவர்க்கு ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கின்றது' என்று திடுக்கிட்டு அக்கினி யாஸ்திரத்தைப் பிரயோகித்து வெளிச்ச முண்டாக்கிக் கொண்டு இரணகளத்திற் புகுந்து மயங்கியும் மடிந்தும் கிடந்த சுக்கிரீவன், அனுமார், அங்கதன், சாம்புவர், முதலியவர்களைக் கண்டு, "அந்தோ! என் பொருட்டு நீங்களெல்லாம் உயிரைப் பறி கொடுத்தீர்களே!" என்று ஒவ்வொருவரைப் பற்றியும் இரக்கமான வார்த்தைகளைக் கூறிப் புலம்பிக்கொண்டே போய் இலக்குமணனைக் கண்டார். அவனைப் பார்த்தவுடனே அவருக்குச் சகோதரவாஞ்சையா லுண்டான துக்கம் அளவிடற்கரியதா யிருந்தது. அதனால் அவர், "ஆ! தம்பி! நீயும் இறந்தனையோ! இதோ நானும்

உன்னுடன் வந்து விட்டேன்" என்று அடியற்ற மரம் போல் பூமியில் வீழ்ந்து இலக்குமணனைத் தழுவிக்கொண்டு மூர்ச்சையானார். அவருடைய உயிர்மாத்திரம் நீங்காமலிருந்தது. அவருக்கு உணர்ச்சியென்பதே இல்லை. அப்போது,

" தாங்கு வாரில்லை தம்பியைத் தழீஇக்கொண்ட தன்னை
வாங்கு வாரில்லை வாக்கினுற் றெருட்டுவா ரில்லை
பாங்க ராயுள்ளோர் யாவரும் பட்டனர் பட்ட
தீங்கு வாலிது தமியனை யார்துயர் தீர்ப்பார்."

அப்படி அவர் தாங்குவாரில்லாமல் மூர்ச்சையாகிக் கிடப்பதைப் பார்த்துத் தேவர்களெல்லோரும் துக்கமடைந்தார்கள். இராமர் ஒரு நாழிகைவரையில் மூர்ச்சையாயிருந்து பின்னர்ச் சிறிது உணர்வடைந்தார்; தம்பியின் முகத்தையுற்றுப்பார்த்தார். அவ்வாறு பார்த்ததும், "ஐயோ! தம்பி பரமபதமடைந்தான்; இனி ஒருபோதும் திரும்பப்போகிறதில்லை; இத்தகைய உடற் பிறப்பை நான் எந்த ஜன்மத்தில் காணப்போகின்றேன்; ஆ! என் அருமைச் சகோதரா! என்னோடு தொடர்ந்து காட்டிற்குவந்து ஆகாரமும் நித்திரையுமின்றி எனக்குத் தொண்டு புரிந்துவந்த உன்னை நான் எவ்வாறு பிரிந்திருப்பேன்? இத்துயரங் காண்பதற்கோ உன்னை உடனழைத்து வந்தேன்; நாம் தர்மத்தைக் கைக்கொண்டதற்குக் கிடைத்த பலன் இதுதானோ; நீ இறந்தபின் இனி என்னவிருக்கின்றது; நானுமிறப்பேன்; ஜானகியுமிறப்பாள்; பாதன் முதலியவர்களு மிறப்பார்கள்; நம்முடைய சபதங்களும் நிறைவேறுமற் போயினவே" என்று நெடுநேரம் வரை பன்னிப்பன்னிப் பற்பல விதங்களாகப் புலம்பி மீண்டும் இலக்குமணனைத் தழுவிக்கொண்டு மூர்ச்சையாகி விட்டார். அதைக்கண்டு தேவர்களும் பலவாறு புலம்பித் துக்கமுற்றார்கள்.

அவ்வாறு இராமர் மரணத்திற்குச் சமமான மூர்ச்சையடைந்தவுடன் சில இராக்ஷதர்கள் விரைந்தோடி இராவணனிடத்தில், "ஐயா! இந்திரஜித்தின் பாணத்தால் இலக்குமணனும் வானரர்களும் இறந்தார்கள்; அவர்களிறந்த துக்கத்தால் இராமனும் மாண்டான்" என்று கூறினார்கள். அவ்வார்த்தைகளைக் கேட்டு இராவணன் அளவிலடங்காச் சந்தோஷங்கொண்டு அத்தூதுவர்களுக்குச் சன்மானஞ் செய்து, தன் வெற்றியை நகரெங்கும் முரசறைந்து தெரிவிக்கும்படி ஆக்ஞாபித்துவிட்டு மருத்தனென்னும் இராக்ஷஸனையழைத்து, யுத்தத்தில் மடிந்த இராக்ஷதப் பிரேதங்களையெல்லாம் எடுத்துக் கடலிலெறிந்து விடும்படி அவனுக்கு உத்தரவளித்தான். அவன் அப்படியே அவ்வேலையைச் செய்து விட்டான். அதன்மேல் இராவணன் அங்குநின்ற பல இராக்ஷஸ ஸ்திரீகளை நோக்கி "நீங்கள் சீதையைப் புஷ்பக விமானத்திலேற்றி இரணகளத்திற்குக் கொண்டுபோய் அந்த இராமலக்குமணர்களும், வானரர்களும் இறந்ததை அவளுக்குக் காட்டுங்கள்; இறந்துபோன அவர்களைப் பார்த்தால்தான் அவள் அவர்களாசையை மறந்து என்மீது விருப்பங் கொள்ளுவாள்" என்று சொன்னான். அப்படியே அந்த ஸ்திரீகளெல்லோரும் ஜானகியை இரணகளத்திற் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். சீதை அங்குப்போய் இராமலக்குமணர்களைப்பார்த்தவுடன் விஷத்தை யுண்டவளைப் போன்று திடீரென்று புஷ்பகவிமானத்தில் வீழ்ந்து மூர்ச்சையாகிவிட்டாள். அவளுடைய துக்கத்தைப் பார்த்த தேவமாதர்களும் அழுதார்கள். இரக்கமற்ற இராக்ஷத ஸ்திரீகளும் அழுது ஜானகிக்கு உபசாரஞ்செய்து களைப்பை ஆற்றினார்கள். அதன்மேல் சீதாபிராட்டி மூர்ச்சை தெளிந்து மீண்டும் இராமலக்குமணர்களைப் பார்த்து, முகத்திலும் மார்பிலும் அறைந்து வயிற்றைப் பிசைந்து, நெருப்பில் வீழ்ந்த பூங்

கொடிபோல் மேனிவாடி நெஞ்சம்பதைத்து, உயிர்சோர்ந்து அந்தப் புஷ்பக விமானத்தின்மீது திடீரென்று வீழ்ந்து புரண்டு, "ஐயோ! தெய்வமே! நானிந்தத் துயரங்காணவோ ஜன்ம மெடுத்தேன்; ஆ! என் பிராணநாதரே! நீர் வந்து என் சிறையை மீட்பீரென்ற தைரியத்தினாலல்லவோ நான் இது வரை உயிர் வைத்திருந்தேன்; இளைய பெருமாளே! நீர் இராக்ஷதர்களை மடித்து என் துயரத்தை நீக்குவீரென்று நான் நினைத்திருந்தேனே. ஆஞ்சனேய! இராக்ஷதர்கள் மடிந்த சந்தோஷ செய்தியை நீ என்னிடம் வந்து தெரிவிப்பா யென்று நான் கருதியிருந்தேனே; ஏ வானரவீரர்களே! நீங் கள் இலங்கையை அழித்து எனக்குச் சந்தோஷத்தை உண் டாக்குவீர்களென்று நான் உறுதிகொண் டிருந்தேனே; என் எண்ணமெல்லாம் பாழாகும்படி நீங்கள் மடிந்து போனீர்களே; இனி நான் உயிர் வைத்திரேன்" என்று இரா மர்மீது வீழ்ந்து ஆவியைப் போக்கிக்கொள்ளப் போனாள்.

அப்போது திரிசடை அவளைத் தடுத்து மற்ற இரா க்ஷத ஸ்திரீகள் அயர்ந்திருந்த சமயம் பார்த்து மெதுவாக அவள் செவியில், "அம்மா! இராமர் இறக்கவில்லை; இலக்கு மணர் முகத்தில் நல்ல தேஜஸ் வீசிக்கொண்டிருக்கிறது; அனுமார் சிரஞ்சீவியாதலின் இறக்கமாட்டார்; எல்லோ ரும் மூர்ச்சையடைந் திருக்கின்றார்கள்; இந்தப் புஷ்பக விமானம் அமங்கலிகளைத் தாங்கிக்கொண்டிருக்கமாட்டாது; இஃதுன்னைத் தாங்கிக்கொண் டிருப்பதனாலேயே இராமர் இறக்கவில்லை யென்பது நிச்சயமாக விளங்குகின்றது; அவர் இறந்தால் உலகங்களெல்லாம் அழிந்துவிடும்; சிறிது நேரத்திற்குள் ஏதேனு முபாயத்தால் எல்லோரும் உயிர்த் தெழுவார்கள்; இதற்குமுன் இராக்ஷதர்களால் நேர்ந்த ஆபத்துக்களெல்லாம் இலகுவில் விலகிப்போனதை நாம்

அறிந்தே யிருக்கின்றோம்; அவைபோல் இதுவும் சீக்கிரம் நீங்கிவிடும்; மகா பதிவிரதையாகிய உனக்குக் குறைவொன்றும் வாராது; நீ கவலைப்படவேண்டாம்" என்று கூறினாள். அதன்மேல்சீதை சிறிது மனந்தேறித் திரிசடையைநோக்கி, "அம்மா! உன்னுடையஉறுதி வாக்கியங்களினாலேயே நான் இதுவரை பிழைத்திருந்தேன்; இன்னும் உன் வார்த்தையை நம்பி இன்றிரவுவரை உயிர் வைத்திருக்கின்றேன்; அதற்குள் இவர்கள் பிழைக்காவிடில் ஆவியைப் போக்கிக் கொள்கின்றேன்" என்று சொன்னாள். அதன்மேல் இராக்ஷத ஸ்திரீகள் ஜானகியை அசோக வனத்திற் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

அனுமார் சஞ்சீவி கொணர்தல்.

சீதை சென்ற பிறகு, இராமர் சொற்படி உணவுப் பொருள்கள் கொண்டுவர அவை கிடைக்குமிடத்திற்குப் போன விபீஷணன் அவற்றைத் தேடிக்கொண்டு திரும்பி வந்து பாடி வீடுசேர்ந்து அங்கே இராமர் இல்லாதபடியால், தான் கொண்டுவந்த அந்தக் கிந்தமூலபலாதிகளை அவ்விடத்தில் வைத்துவிட்டு இரணகளம் போய்ச் சேர்ந்து வானரர்கள் மாண்டு கிடப்பதையும், மத்தியில் இலக்குமணன் மரணமாகிக் கிடப்பதையும், அவனைத் தழுவினபடியே இராமர் வீழ்ந்து கிடப்பதையும் பார்த்துத் திடுக்கிட்டு, இந்திரஜித்து பிரமாஸ்திரப்பிரயோகஞ் செய்ததால் இலக்குமணன் முதலியவர்கள் இறந்தார்களென்றும், இராமர் இலக்குமணன் பொருட்டு வருந்தி மூர்ச்சை யடைந்திருக்கிறாரென்றும் உணர்ந்து, மனம்பதறி அழுது ஆவிசோர்ந்து, "ஆ! பாவி என்ன கொடுஞ் செய்கையைச் செய்துவிட்டான்" என்று சிறிது நேரம் மயங்கியிருந்து பின்னர்த் தெளிந்து, "தரும சிந்தனை யுடையவர்களுக்கு ஒரு தீங்கும் வராது; எப்படியும்

இவர்கள் பிழைத்தெழுவார்கள்; அதற்குத் தக்க உபாயத்தைநாம் தேடவேண்டும்; இராமர் மூர்ச்சை தெளிவதற்குள், அதைப்பற்றி ஆலோசிப்பதற்கு எவரேனும் அகப்படுகிறார்களா என்று நாம் தேடி, யாரையாவது பார்க்கவேண்டும்" என்று ஒரு கொள்ளிக் கட்டையைக் கையிலெடுத்துக் கொண்டு அந்த வெளிச்சத்தால் இரணகளத்தைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தான். அப்படித் தேடிவரும்போது ஓரிடத்தில் ஆஞ்சனேயர் பிணங்களின்மீது மிகுந்த கோபக் குறி யுடனே படுத்திருந்தார். விபீஷணன் அவரைக்கண்டு அவருக்கு உயிர் இருக்கிறதென்பதைத் தெரிந்துகொண்டு, அவர் தேகத்தில் பதிந்திருந்த அம்புகளை யெல்லாம் பிடுங்கி யெறிந்துவிட்டு மேகஜலம்கொண்டுவந்து அவருடைய முகத்தைக் கழுவினன். அந்த ஜலத்தின் குளிர்ச்சியால் அனுமார் தூங்கி யெழுந்தவர்போல் சோபம்நீங்கி யெழுந்தார். விபீஷணன் ஆனந்தத்துடன் அவரைத் தழுவினன். அவரும் அவனைத் தழுவிக்கொண்டு "சுவாமி பக்கத்தில் எழுந்தருளி யிருக்கின்றாரோ" என்று வினவினர். அதற்கு விபீஷணன் "சமீபத்தில் இலக்குமணனைத் தழுவிய படியே சுவாமி மூர்ச்சை யடைந்திருக்கின்றார்; அவர் மூர்ச்சை தெளிந்த பின் என்ன கட்டளையிடுவாரோ அதை நான் அறியேன்" என்றான். அனுமார், "நாம் சாம்பவரைக் கண்டால் அவர் எல்லோரும் பிழைக்கும் மார்க்கத்தைக் கூறுவார்" என்றார். பின்னர் இருவரும் அவரிடம்செல்லத் தீர்மானித்து எழுந்து சிறிதுதூரம் போய்ச் சாம்பவரைக் கண்டார்கள்; சாம்பவர் பிரமாஸ்திரத்தால் மயக்கமுற் றிருந்தாராதலின், அவர்கள் வரும் சந்தடியைக் கேட்டு இன்னவரென்று அவர்களைத் தெரிந்துகொள்ள முடியாமல், "நீங்கள் யார்?" என்று அவர்களிடம் கேட்டார். அவ்விருவரும் தாங்கள் இன்னாரென்பதை அவருக்குத் தெரிவித்தார்கள். உடனே சாம்

பவர் சந்தோஷித்து, ஆஞ்சனேயரை நோக்கி, "இந்திரஜித்துவின் பிரம்மாஸ்திரம் இராமரை ஒன்றுஞ் செய்ய மாட்டாது; அவர் இப்போது என்ன செய்கிறார்?" என்று கேட்டார். அனுமார் இராமர் மூர்ச்சை யடைந்திருப்பதை அவரிடம் கூறினார்.

அதன்மேல் சாம்பவர் அனுமாரை நோக்கி, "வீரபுருஷனே! எவரேனும் சஞ்சீவியை இங்குக் கொண்டுவந்தால் நம்மவர்களெல்லோரும் பிழைத்துக்கொள்வார்கள்; அதைக் கொண்டுவரும் ஆற்றல் உமக்குத்தான் உண்டு; அது வெகு தூரத்திலிருக்கின்றது; இந்தச் சமுத்திரத்துக் கப்பால் ஒன்பதினாயிரம் யோசனை தூரத்தில் இமவத் பர்வதமிருக்கின்றது; அதை நீர் தாண்டிச்சென்றால் ஒன்பதினாயிரம் யோசனை தூரத்துக்கப்பால் உமக்கு ஏமகூடபர்வதம் தோன்றும்; அந்த மலைக்கப்புறம் வடக்கே ஒன்பதினாயிரம் யோசனை தூரத்தில் நிஷதகிரி யிருக்கின்றது; அதற்கப்பால் ஒன்பதினாயிரம் யோசனை தூரத்தில் வடகிரி யிருக்கின்றது; அதற்கப்பால் ஒன்பதினாயிரம் யோசனை தூரத்தில் நீலகிரி யிருக்கின்றது; அதற்கப்பால் நாலாயிரம் யோசனை தூரத்தில் கருமலை யிருக்கின்றது. அதிலேதான் சஞ்சீவி யிருக்கின்றது. அதில், இறந்தவர்களைப் பிழைக்கச் செய்யும் மிருதசஞ்சீவனி, துண்டான தேகத்தைப் பொருந்தச் செய்யும் சந்தானகரணி, தேகத்தில் பதிந்த ஆயுதங்களை விலக்கும் சல்லியகர்ணி, அழிந்த உருவத்தை மறுபடியும் கொடுக்கும் சமனியகரணி என்னும் நான்கு வகைகளுண்டு. அவற்றை அநேகம் தேவர்கள் காத்துக்கொண் டிருக்கிறார்கள். அங்கே எவரும் நெருங்காதபடி ஒருசக்கரமும் சுழன்றுகொண்டிருக்கின்றது. இந்தக் காவல்களைத் தந்திரமாகத் தாண்டி நீர் சூக்ஷுமசரீரத்தோடு அங்கே போகவேண்டும்; அப்படிப் போகாவிட்டால் அந்த மருந்துகள் உம்மைக்கண்ட மாத்தி

ரத்தில் மறைந்துவிடும்; ஆகையால் வெகு ஜாக்கிரதையாகப் போய் நீர் அவற்றைக் கொண்டுவரவேண்டும்" என்று கூறினார். அனுமார் அதற்குச் சம்மதித்து அவ்விரவு பாதி கழிவதற்குள் தாம் அவற்றைக்கொண்டு வருவதாகச் சொல்லி உடனே சாம்பவரிடமும் விபீஷணனிடமும் விடை பெற்றுக்கொண்டு விசுவரூபமெடுத்து, ஆகாயத்திற் பாய்ந்து இமவத்பர்வதத்தைச் சேர்ந்தார். அங்கிருந்த தேவர்களும் முனிவர்களும் அவரை வாழ்த்தினார்கள். அதன்மேல் அவர் அதை விட்டுப் பாய்ந்து கைலேயங்கிரியைத் தாண்டிப்போனார். அப்போது சிவபெருமான் உமாதேவிக்கு ஆஞ்சனேயரைக் காட்டி, அவர் சஞ்சீவியைக் கொண்டு வரப்போகும் விவரத்தைக் கூறி, 'இவரால் வானரர்கள் உயிர்பெற்றெழுந்து நாளைக்கு மகாயுத்தஞ் செய்யப் போகிறார்கள்; இராக்ஷதர்கள் ஒழியப்போகின்றார்கள்; நாம் வேடிக்கை பார்க்கப்போகலாம்' என்றார். அதன்மேல் அனுமார் ஆயிரம் யோசனை தூரம் கடந்து ஹேமகூடம் சேர்ந்து, அங்குள்ள தேவர்களைக்கண்டு, அதைக்கடந்து நிஷதபர்வதத்தின் உச்சியில் குதித்து, அதைக்கடந்து சம்புநாவல் விருக்ஷத்தைக்கண்டு, பிரமநகரத்தையும் அதன் மத்தியிலிருக்கும் மூல சுவர்ணதாமரைப் புஷ்பத்தின்மீதுள்ள பிரமாவையும் தரிசித்து, அந்தப் புஷ்பத்திற்கு ஈசானிய திசையிலுள்ள அர்த்தநாரி பாகராகிய உருத்திரமூர்த்தியைக் கண்டு வணங்கி, விஷ்ணுவைக்கண்டு சேவித்து, தேவேந்திரனைப் பார்த்துக் கும்பிட்டு, அஷ்டதிக்குப் பாலகர்களைக் கண்டு வணங்கி, அந்த மலையையுந் தாண்டி உத்தர குருக்ஷேத்திரத்தை யடைந்தார். அது மேருவிற்கு வடக்கிலுள்ளதாதலால் மேருவின் தென்பாகத்தைச் சுற்றிவந்த சூரியன் அவ்விடத்தில் மேற்கில் உதயமாயிற்று. அவர் அதைக் கண்டு, அதன் உண்மையை உண

ராமல், வழக்கம்போல் இரவு கழிந்து சூரியோதயமாவதாக நினைத்து "ஓகோ! பொழுது விடிந்து விட்டதே; நான் பாதிராத்திரிக்குள் வந்துவிடுகிறேனென்று அவர்களிடம் கூறிவந்தேனே; இனி என் செய்வேன்" என்று நன்ருக ஆலோசித்துப் பார்த்தார். அப்போது உதயமான சூரியன் அவருக்கு இடப்பாகத்தில் விளங்கிற்று. அதனுல் வடக்கு நோக்கிச் சென்ற அவர், தமக்கு இடப்பாகமாகிய மேற்குத் திக்கில் சூரியன் தோற்றுவதைக்கண்டு, "ஓகோ! சூரியன் மேருவுக்குத் தெற்கிலிருந்து சுற்றி வடக்கில் திரும்பும்போது மேற்கே உதயமாகுமென்றும், தெற்கே நடுராத்திரி யாகுமென்றும் வானசாஸ்திரங்கள் கூறுகிறபடி இப்போது சூரியன் மேற்கே வந்திருக்கிறது; நாம் மேருவிற்கு வடக்கில் வந்துவிட்ட படியால் மேற்கே சூரியோதயம் தோற்றுகின்றது; இப்போது தெற்கில் நடுராத்திரி சமயமாயிருக்கும்; ஆதலின் நாம் விரைந்து செல்லவேண்டும்" என்று தெளிவடைந்து அந்தக் குருபூமியைத் தாண்டி நீலமலையையுங் கடந்து சஞ்சீவி பர்வதத்தைக் கண்டு தூரத்தில் நின்று, அதைப்பார்த்தார். அதில் சஞ்சீவி மருந்துகள் சூரியனைக் காட்டிலும் அதிக பிரகாசமாகத் தெரிந்தன. அத்தோற்றத்தால் அவர் அதனை, 'இதுதான் சாம்பவர் சொன்ன சஞ்சீவி மலை' என்று துணிந்து, திடீரென்று அந்த மலையின் மீது பாய்ந்தார். அவ்வாறு பாயவே அந்த மலையானது பாதாளத்தில் மறைந்து விட்டது. அப்போது அதனைக் காத்திருந்த தேவதைகள், அனுமாரைப்பார்த்து "நீ யாவன்?" என்று கோபத்துடன் கேட்டன. அனுமார், தம் வரலாற்றையும், தாம் அங்குச்சென்ற காரணத்தையும் அவைகளிடம் தெரிவித்தார். அத்தேவதைகள் "அப்படியானுல், நீர் உமக்கு வேண்டிய மருந்துகளைக் கண்டு நோவச் செய்யாமல் எங்களிடம் காட்டும்; நாங்கள்

அவற்றைத் தருகின்றோம்" என்று சொல்லி மறைந்து விட்டன. பின்னர் விஷ்ணு சக்கரமும் ஆஞ்சனேயருக்குப் பிரத்தியக்ஷமாகி மறைந்து விட்டது. அப்போது ஆஞ்சனேயர் "அந்த மருந்துகளை இன்னின்னவை யென்று நம்மால் காணுதல் முடியாது; அந்தத் தேவதைகளையும் இனிக்காணுதல் சாத்தியமன்று; ஆதலால், இந்த மலையை அடியோடு பெயர்த்து அங்கே கொண்டு போய்விட்டால் இதிலுள்ள மருந்துகளின் வாடை பட்டவுடன் நம்மவர்கள் பிழைத்துக்கொள்வார்கள்" என்று துணிந்து பாதாளத்தில் மறைந்த அந்த மலையைக்கண்டு அடியோடு பெயர்த்தெடுத்து ஒரு பந்தைப்போல அலக்ஷியமாகத் தூக்கினார்.

இவர் செய்கை இப்படியிருக்க, இரணகளத்தில் நின்ற சாம்பவரும், விபீஷணனும் விரைந்து இராமரிடம் போய் அவருடைய திருவடிகளைப் பிடித்துக்கொண் டிருந்தார்கள். சிறிது நேரத்தில் இராமர் மூர்ச்சை தெளிந்து அவர்களைப் பார்த்து, விபீஷணனை நோக்கி, "நீ குறித்த காரியத்தை நிறைவேற்றி வந்தாயோ?" என்று வினவிப் பின்னர் சாம்பவரைப் பார்த்து, "சாம்பவா! நீ பிழைத்து வந்தாயோ?" என்று கேட்டுவிட்டு, அதன்மேல் இருவரையும் நோக்கி, "அன்பர்களே! நான் இராவணனைக் கண்டும் கொல்லாமல் வந்துவிட்டேன்; இந்திரஜித்துவின் மேல் இலக்குமணன் பிரம்மாஸ்திரந் தொடுக்கப் போனதையும் தடுத்துவிட்டேன்; அதனால் அந்த வஞ்சகனாகிய இந்திரஜித்து நம்மவர்களைக் கொன்று விட்டான்; இனி யானிருந்தாவ தென்ன? இராக்ஷதர்களை மடித்தாலும் பயனென்ன? நான் உயிரை விட்டுவிடுகிறேன்" என்று பலவாறு புலம்பினார். அப்போது சாம்பவர் அவரை நோக்கி, "சுவாமி! உம்முடைய மகிமை எனக்குத் தெரியும்; அதனை நீர் உண

ராதவர்போல் துக்கப்படுகின்றீர்; எல்லா ஜீவர்களுக்கும் ஆதாரமாயிருக்கின்ற உமக்கு மொரு துன்பம் வருமோ? அந்த இந்திரஜித்து பிரயோகித்தது பிரமாஸ்திரம்; அது எப்பேர்ப்பட்டவர்களையும் மடித்துவிடும்; ஆகையால் அது நம்மவர்களைக் கொன்றுவிட்டது. எனினும் உம்மிடத்தில் அதன் வல்லமை செல்ல வில்லை; உம்முடைய கிருபையால் ஆஞ்சனேயரும், நானும், விபீஷணரும் பிழைத்திருந்தோம்; நம்மவர்கள் இறந்ததைப்பற்றி நாம் விசாரப்பட வேண்டியதில்லை; அனுமார் மூர்ச்சை தெளிந்து சஞ்சீவி மருந்து கொண்டுவரப் போயிருக்கின்றார்; க்ஷணநேரத்திற்குள் வந்து விடுவார்; அவர் வந்ததும் எல்லோரும் பிழைத்துக் கொள்வார்கள்; அந்த மருந்தின் விவரத்தை நான்தான் அவருக்குக் கூறினேன்; அது பாற்கடல் கடைந்தகாலத்தில் அதில் உற்பத்தியானது; அதனை அடியேனும், என் பிதாவான பிரமாவும், சிவனும், உபேந்திரனும் அன்றி மற்றவர் அறியமாட்டார்கள்; அஃதுண்டான காலமுதல் எவரும் அதனைக் கையால் தொட்டதில்லை" என்று அதைப்பற்றிய சகல விருத்தாந்தங்களையுங் கூறினார். இராமர் அதனால் சந்தோஷித்து, 'அஃதப்படியானால் அனுமான் அதை நிச்சயமாகக் கொண்டு வந்து விடுவான்" என்று சொன்னார். அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும் போதே முன் கூறியபடி சஞ்சீவி மலையைத் தூக்கிய அனுமார் வேகமாகப் பாய்ந்து வந்துஅவர்களிருந்த விடத்திற்குமேல் ஆகாயத்தில் கர்ஜ்ஜித்தார். அந்த சப்தத்தைக் கேட்டதும் சாம்பவர், 'இதோ அனுமார் வந்துவிட்டார்" என்று கூறினார். அவ்வார்த்தை முடிவதற்குள் அனுமார் சஞ்சீவி மலையைத் தாங்கியபடியே பூமியில் பாதங்களை ஊன்றினார். சஞ்சீவி பர்வதம் இராக்ஷத சண்டாளர்களிருக்கும் இலங்கையில் இறங்கக்கூடாதென்று ஆகாயத்திலேயே நின்றுவிட்டது. அதன் காற்றுப் பட்ட

மாத்திரத்தில் வானரர்கள் எல்லோரும் பிழைத்துக்கொண்டார்கள். இலக்குமணன் தூங்கியெழுந்தவன்போல் எழுந்து நின்றான். உடனே இராமர் அவனைத் தழுவிக்கொண்டு சந்தோஷமடைந்தார். இராக்ஷதப் பிணங்களெல்லாம் மருத்தனால் கடலில் எறிந்து விடப்பட்டபடியால் ஒழிந்துபோயின. தேவர்களெல்லாம் ஆனந்தக் கூத்தாடினார்கள். இந்திரஜித்தினால் ஏவப்பட்ட பிரமாஸ்திரமானது, 'இனி உங்களுக்கு யாதொரு துன்பமும் வரமாட்டாது' என்று இராமரிடத்திற் சொல்லி வணங்கிக்கொண்டு விலகிப் போய்விட்டது. அத்தருணத்தில் ஆஞ்சனேயர் வந்து இராமருடைய பாதத்தில் வீழ்ந்து வணங்கினார். இராமர் அவரைத் தழுவிக்கொண்டு, "அப்பா! நீ யிருக்கும்போது எனக்கென்ன குறைவு வரப்போகின்றது" என்று கொண்டாடினார். சுக்கிரீவன் முதலிய வானர வீரர்களும் அவரைப் புகழ்ந்தார்கள். ஆஞ்சனேயர், தாம்சஞ்சீவி மலையையே கொண்டுவர நேர்ந்த காரணத்தை அவர்களுக்குக் கூறினார். அதைக்கேட்டு எல்லோரும் மகிழ்ச்சி யடைந்தார்கள். அதன்மேல் சாம்பவர், அனுமாரை நோக்கி, "வாயுபுத்திரரே! இந்தச் சஞ்சீவி மலை இங்கே யிருக்குமானால் இனிமேல் இறக்கும் இராக்ஷதர்களும் பிழைத்துக்கொண்டே யிருப்பார்கள்; ஆதலால், இதை நீர் மீண்டும் இருந்தவிடத்திற் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு வரவேண்டும்" என்று கூறினார். அனுமார் அப்படியே அதனைத் தூக்கிக்கொண்டு வடதிசை நோக்கிச் சென்றார்.

இவர்கள் செய்தி யிப்படியிருக்க இலங்கையில் இராவணன், 'எதிரிகளெல்லோரும் மடிந்துவிட்டார்க'ளென்று கற்பகப் பூம்பந்தரில் இருந்து நடன மாதரை ஆடவும் பாடவும் செய்து சந்தோஷங் கொண்டாடிக்கொண் டிருந்தான். அப்போது உயிர்த்தெழுந்த வானரர்களெல்லாம் ஆரவாரஞ்

செய்தார்கள். இராமலக்ஷுமணர்கள் வில்லை வளைத்துக் குணத் தொனி செய்தார்கள். அந்த ஆரவாரம் அவனுடைய செவிகளில் நுழைந்தது. அதனால் அவனுக்கெதிரில் ஆடல்பாடல்கள் செய்துகொண்டிருந்த ஸ்திரீகளெல்லோரும் வானரக் கூட்டங்களைப் போலத் தோற்றினார்கள். அச்செயகைகள் நிகழவே இராவணன் திடுக்கிட்டு ஒன்றுந் தோற்றாமல் பிரமையடைந்தான். அப்போது வண்டின்ரூபமாய் உளவறியப் போயிருந்த இராக்ஷத தூதர்கள் அங்கு வந்து இராவணனுடைய மாலையின் மீது ஏறியிருந்து கொண்டு மெதுவாக அவன்செவியில் எதிரிகள் பிழைத்துக் கொண்டதையும், மற்ற விவரங்களையுங் கூறினார்கள்.

இந்திரஜித்து மாயாசீதையை அனுமாருக்கு முன் வதைத்தல்.

அவற்றைக் கேட்டவுடனே இராவணன் மனங்கொதித்துத் தானிருந்த கற்பகப் பூப்பந்தரைவிட்டு மந்திராலோசனை மண்டபத்திற்குப் போனான். அங்கே இந்திரஜித்து, மகோதரன் முதலியவர்களும் வந்து சேர்ந்தார்கள். நடந்த காரியங்களை யெல்லாம் இராவணனே அவர்களுக்குக் கூறினான். அப்போது மாலியவான் இராவணனை நோக்கி, "அப்பா இராவணா! இறந்த எதிரிகள் சஞ்சீவியால் மீண்டும் பிழைத்தெழுந்தார்கள்; அவர்களிடத்தில் எல்லா வல்லமைகளும் நிறைந்திருக்கின்றன; நம்மால் அவர்களை வெல்லுதல் முடியாது; இனியாவது சீதையைக் கொண்டுபோய் அவர்களிடம் விடுத்து நாம் உயிர்தப்பிப் பிழைப்பது நலம்" என்றான். அந்த வார்த்தைகளைக் கேட்டதும் இராவணன் கண் சிவந்து கோபித்து, "தைரியமில்லாதவர்களெல்லோரும் எங்காவது ஓடிப்பிழைத்துக் கொள்ளுங்கள்; எது போனா

லும் போகட்டும்; நான் சீதையை விடமாட்டேன்; நாளைக்கு நான் மாத்திரம் போய் அந்த மனிதர்களையும் குரங்குகளையும் நாசப்படுத்தி விடுவேன்" என்று சொன்னான். அப்போது இந்திரஜித்து அவனை நோக்கி, "ஐயா! நான் விடுத்த பிரமாஸ்திரம் இராமனைத் தொடாமல் வந்து விட்டதனாலேயே அவன் அந்த விஷ்ணுவின் அம்சமே யென்பது விளங்குகின்றது. அவன் யாராயிருந்தாலு மிருக்கட்டும்; நான் நிகும்பலைக்குப் போய் ஒருயாகஞ் செய்யவேண்டும்; அந்த யாகம் பூர்த்தியானால் இறந்த நம் படைகளெல்லாம் உயிர்த்தெழும்; அதன்மேல் நாம் எதிரிகளை எளிதில் வெல்லலாம்" என்றான். இராவணன், 'அப்படியே அதனைச்செய்' என்றான். அதற்கு இந்திரஜித்து, "நான் அந்த யாகத்தைச் செய்தால் உன் தம்பி விபீஷணன் எதிரிகளுக்கு அதன் இரகசியத்தைக் கூறி விடுவான்; அவ்வாறு கூறினால் அவர்கள் வந்து அந்த யாகத்தை அழித்து விடுவார்களே; அப்படி அழிக்காதபடி நாம் ஒருபாயத்தைத் தேடிக்கொள்ள வேண்டுமே" என்றான். இராவணன், அதற்கென்ன உபாயஞ்செய்யலாம்?' என்றான். இந்திரஜித்து, "ஓர் இராக்ஷசியைச் சீதை போலாக்கி அவளைக்கொண்டு போய் அநுமானுக்கு முன்னே நான் வெட்டி விட்டு, அயோத்தியிலுள்ளவர்களைக் கொல்வதற்கு அங்கே போவதாகச் சொல்லிப் போக்குக் காட்டி நிகும்பலைக்குப்போய் விட்டால், அநுமான், மற்றவர்களிடத்தில் அவ்விவரங்களைக் கூறுவான்; எல்லோரும் 'சீதை இறந்துவிட்டாள்; இந்திரஜித்து அயோத்திக்குப் போயிருப்பதால் அங்குள்ளவர்களையுங் கொல்வான்; ஆதலால் அவர்களையாவது காப்பாற்றும் பொருட்டு நாம் அங்கே செல்லவேண்டும்' என்று அங்கே போய் விடுவார்கள்; அப்படிப் போகாவிட்டாலும், செய்தி தெரிந்துவரும் பொருட்டு அநுமானையாவது அங்கனுப்பிவிட்டுத் துக்கசாகரத்தில்

மூழ்கிக் கலங்கி யிருப்பார்கள் ; அந்தக் கலக்கம் நீங்குவதற்குள் நான் யாகத்தை முடித்து அதிலுண்டாகும் ஆயுதங்களால் அவர்களைக்கொன்று உமக்கு ஜெயத்தை உண்டாக்குவேன்" என்றான். இராவணன் 'அது நல்லயோசனைதான்' என்றான். இந்திரஜித்து உடனே மாயா சீதையை உண்டாக்கிக் கொண்டுவரப் போயினான்.

இவர்கள் செய்கை இப்படியிருக்க யுத்தகளத்தில் சுக்கிரீவன் முதலிய வானரவீரர்கள் இராமரை நோக்கி, "சுவாமி! நாங்கள் இப்பொழுதே இலங்கையைச் சுட்டுவிடுகிறோம்" என்று சொன்னார்கள். அவர் 'அப்படியே செய்யுங்கள்' என்றார். உடனே சுக்கிரீவனும், பதினேழு வெள்ளம் வானரர்களும் ஆளுக்கொரு கொள்ளிக்கட்டையாக, எண்ணிறந்த கொள்ளிக் கட்டைகளை யெடுத்துக்கொண்டு இலங்கைக்குள் அவற்றை வீசியெறிந்தார்கள். இராமலக்குமணரும் பல அம்புகளை அந்நகரத்திற்குள் பிரயோகித்தார்கள். அவற்றால் இலங்காநகரம் எரிந்து அங்குள்ள பல மாடமாளிகை கூடகோபுரங்களும் இடிந்து வீழ்ந்தன. இலங்கையிலுள்ளவர்கள் பயந்து கதறிக்கொண்டு அந்தாத்திலெழும்பிப் போனார்கள். இங்கே இப்படி நடந்துகொண்டிருக்க, சஞ்சீவிமலையைத் திருப்பிக் கொண்டு போன அனுமார் அதனை முன்னிருந்த விடத்தில் வைத்துவிட்டுத் திரும்பி வந்து இலங்கைக் கோட்டையின் மேற்குவாயிலைச் சேர்ந்து வீரகர்ஜ்ஜனை செய்தார். அதைக்கேட்டு இலங்கையிலுள்ளவர்களெல்லோரும் நடுங்கிவிட்டார்கள். அனுமார் அங்கே வந்ததை இந்திரஜித்துணர்ந்து தான் குறித்தபடியே மாயா சீதையை உண்டாக்கித் தலைமயிரைப்பற்றி யிழுத்துக் கொண்டுபோய் அவருக்கு முன்னே நிறுத்தி, "இவள் நிமித்தமாகப் பல துன்பங்கள் விளைந்தனவென்று என்

தந்தை இவளை வெறுத்து வெட்டும்படி எனக் குத்தரவளித் திருக்கின்றார். ஆதலால், நான் இந்தச் சீதையைக் கொல் லப்போகின்றேன்" என்று கூறினான். ஆஞ்சநேயர் மனங் கலங்கி, "இவனோடு நாம் சண்டை தொடுத்தால் இவன் முதலில் பிராட்டியாரைக் கொன்று விட்டுத்தான் அப்பால் நம்பக்கம் திரும்புவான்; ஆதலால் அச்செய்கைநேர்ந்து விடாதபடி இவனுக்கு நீதி வார்த்தைகளைக் கூறித் தந்திர மாக அதனை விலக்கி அன்னையின் ஆவியைக் காப்பாற்ற வேண்டும்" என்று துணிந்து, "பெண்ணைக் கொல்வது மகா பாதகமாகு" மென்று அவனிடம் பல நீதிகளைக்கூறிச் சீதையைக்கொல்லாமல் விட்டுவிடும்படி அவனைப் பலவாறு ஸ்தோத்திரம் பண்ணினார். அந்த மாயா சீதையும் தன்னை விட்டுவிடும்படி அவனைப் பன்முறை கெஞ்சிக்கேட்பவள் போன்று கேட்டு நடித்தாள். இந்திரஜித்து ஒருவர் வார்த் தையையும் சட்டை பண்ணாதவன்போல நடித்துக் கோபித்து, "இவளை நான்விடமாட்டேன்; இதோ கொன்று விட்டு உடனே அயோத்திக்குப் போய் அங்குள்ளவர்களை யும் அழித்து விடுகிறேன்" என்று அந்த மாயாசீதை துள்ளத்துடிக்க அவளை வெட்டி விட்டுத் தன் படைகளுடன் அயோத்திக்குச் செல்பவன் போல புஷ்பகவிமானத்திலேறி வடக்கு நோக்கிப் போக்குக்காட்டி நிகும்பலைக்குப் போய் யாகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்ய ஆரம்பித்தான்.

மாயா பிராட்டியின் கொலையைக் கண்ட அனுமார் உடனே மூர்ச்சித்து சிறிது நேரஞ்சென்று தெளிந்து, அச் சீதையை நினைத்துக் கல்லுங்கரைய மனமுருகிப் புலம்பி, "அந்தத் திருட்டுப் பயல் அயோத்திக்குப் போயி ருக்கிறான்; நாம் அவனைத் தொடர்ந்து போய்க் கொல்லலா மென்றால், இங்கு நடந்ததை இராமபிரானுக்குத் தெரிவிக்க

வேறொருவருமில்லை; ஆதலால், நாம் அவரிடம் சென்று பிராட்டியாரின் மரணத்தைக்கூறிவிட்டு இறந்துபோவோம்; அல்லது அவர் நியமித்ததைச் செய்வோம்" என்று உறுதி செய்துகொண்டு அழுதபடியே ஓடி இராமர் திருவடியில் வீழ்ந்து மாயா சீதையிறந்ததை அவரிடம் கூறி விட்டு மூர்ச்சையடைந்தார். அனுமார் கூறியதைக் கேட்டு வானரர்களெல்லோரும் இராமர் பாதத்தில் வீழ்ந்தழுதார்கள். இராமர் ஒன்றுந் தோன்றாமல் திடீரென்று பூமியில் வீழ்ந்து மூர்ச்சையானார்; தாயிழந்த கன்றைப்போல் இலக்குமணனும் வீழ்ந்து மூர்ச்சித்தான்; விபீஷணன் நடுங்கி, 'அந்தச் சிறுபயல் இந்திரஜித்து பிராட்டியாரைக் கொன்றிருந்தாலும் கொன்றிருப்பான்' என்று அழுதுகொண்டு, குளிர்ந்த நீரை இராமர் முகத்தில் தெளித்து அவருடைய மயக்கத்தைப் போக்கினான். அவர் மூர்ச்சை தெளிந்து கண்விழித்தெழுந்தார். இலக்குமணனும் மூர்ச்சை தெளிந்து இராமரை நோக்கி, "அண்ணா! ஊழ்வலியால் துன்பம் வந்தகாலத்தில் நம்மைப் போன்றவர்கள் வருத்தபடலாமா? நாம் பிராட்டியாரின் பொருட்டு உயிரை விட்டுவிடுவோமானால் இராக்ஷதர்களுடைய எண்ணம் நிறைவேறி அவர்கள் சந்தோஷித்துச் சிரிக்க மாட்டார்களா? நாம் அந்த இராக்ஷதர்களை மடித்து மூன்றுலகங்களையும் சுட்டெரித்து நம்முடைய வல்லமையைக் காட்டுதலன்றோ நமது வீரத்திற்கழகு; தருமந் தவறியபோது நாம் உலகங்களை எதற்காகவைக்க வேண்டும்; இனித்தாமதிக்காமல் எல்லாவற்றையும் நாசப்படுத்துதற்கு நீர் எழுந்திருப்பீராக" என்று கூறினான். சுக்கிரீவன் முதலிய வானரவீரர்கள் எழுந்து, "இப்பொழுதே நாங்கள் இந்த இலங்கையையும் மற்ற உலகங்களையும் நாசப்படுத்தி விடுகின்றோம்" என்று அவற்றைச் செய்யப் புறப்பட்டார்கள். அப்போது அனுமார் இராமரிடத்தில், "சுவாமி! அந்த

இந்திரஜித்து அயோத்தியிலுள்ளவர்களையும் கொல்கிறேனென்று அத்திசை நோக்கிப் போயினான்" என்றார். அதைக் கேட்டவுடனே இராமர், "அந்தோ! என்னுடைய தீவினையானது அங்கேயுமா சென்றுவிட்டது; அந்தப்பாவி பல வஞ்சனைகளைச்செய்து அங்குள்ளவர்களையும் நாசப்படுத்தி விடுவானே; அவர்களுக்கு ஆபத்தை விலக்க ஆஞ்சனேயனைப்போன்ற துணைவன் யாருமில்லையே" என்று புலம்பி அநுமாரை நோக்கி, "மாருதி! இங்கே என்ன நடந்தாலும் நடக்கட்டும்; நாம் இப்பொழுதே அயோத்திக்குப் போக வேண்டும்; ஆகாயமார்க்கமாக அயோத்திக்கு விரைவில் போய்ச்சேருவதற்குமார்க்கமிருந்தால் நீ சொல்; அங்கேயே நாம் இந்திரஜித்துவைத் தொலைத்துவிட்டுத் திரும்பிவந்து மற்றகாரியங்களைப் பார்க்கலாம்" என்று சொன்னார். அதைக் கேட்டு இலக்குமணன், இராமரை நோக்கி, "அண்ணா! அந்தப் பரதரும் சத்துருக்கனும் இந்த இந்திரஜித்துவால் மடிவதற்குச் சாமானியர்களா! இவன் அங்கே சென்றால் அவர்களால் இறப்பது திண்ணம்; நீர் அவர்களைப்பற்றிக் கவலையடையவேண்டாம்" என்று கூறினான். அப்போது அநுமார் இராமரை நோக்கி, "சுவாமி! நீர் அடியேன் தோளில் ஏறியருளினால் இந்தக்ஷணத்திலேயே உம்மை அயோத்தியில் கொண்டுபோய் விடுகிறேன்; அல்லது எனக்கு மாத்திரம் உத்தரவு கொடுத்தால் நானொருவனே விரைந்து சென்று அந்தப் பாவியைக்கொன்று திரும்புகிறேன்; நான் முந்தி அவனுக்கு நீதி கூறிப் பிராட்டியாரைத் தந்திரமாக அவனிடத்தினின்றும் விடுவிக்கலாமென்று கருதியதால் அவனைக் கொல்லாமல் மோசம் போய்விட்டேன்; நான் பேசிக்கொண்டிருக்கும்போதே திடீரென்று அவன் அன்னையாரை வாளால் வீசி விட்டு நான் மூர்ச்சையடைந்த சமயம் ஓடிப்போய் விட்டான். அங்ஙனம் ஓடாவிட்டால் நான்

அவனை முந்தியே கொன்றிருப்பேன்; இப்போது நீரும் இலக்குமணரும்வேண்டுமானாலும் என்தோளில் ஏறுங்கள்; அவன் அயோத்திக்குப்போய்ச் சேருவதற்குள் உங்களை நான் அங்கே கொண்டுபோய் விடுகின்றேன்" என்று கூறினார். இராமலக்குமணர்கள் அப்படியே அனுமார் தோளில் ஏறப்போனார்கள்.

அப்போது விபீஷணன் இந்திரஜித்து செய்கையில் சந்தேகங்கொண்டு இராமரைநோக்கி, "சுவாமி! நீங்கள் சற்றே பொறுக்கவேண்டும்; அந்த இந்திரஜித்து சீதாபிராட்டியாரைக் கொன்றானென்கிற விஷயத்தில் எனக்குச் சந்தேகமாயிருக்கிறது; அவன் ஏதேனும் மாயஞ் செய்திருப்பான்; ஏனென்றால் உலகமாதாவாகிய சீதாபிராட்டியாரைக் கொல்லல் அவனால் முடியாது; அவர் இறந்தால் உலக முழுவதுமே அழிந்துவிடும்; அப்படி யொன்றும் நேராதபடியால் பிராட்டியார் உயிருடனிருப்பாரென்றே நான் நினைக்கிறேன்; ஆதலால், நான் போய்ப் பிராட்டியார் இருக்குமிடத்தில் அவரை ஆராய்ந்து பார்த்து வருகின்றேன்; அவ்வாறு வந்த தன்மேல் நாம் அவரைப்பற்றிய உண்மையைத்தெரிந்து கொண்டு எதையும் செய்யலாம்" என்றான். இராமர் அதற்குச் சம்மதித்தார். உடனே விபீஷணன் வண்டின் வடிவமாகிச்சென்று அசோக வனத்தில் பார்த்தான். அங்கே சீதையிருந்தாள். மற்றொருபக்கத்தில் இராவணனுடைய படைகள் யாகசமித்துக்களைக் கொண்டு நிகும்பலை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களை விபீஷணன்கண்டவுடன் "ஓகோ! அந்த இந்திரஜித்து மாயஞ்செய்து நிகும்பலையில் யாகஞ்செய்யத் தொடங்கி யிருக்கின்றான்" என்று விரைந்தோடி வந்து இராமரிடத்தில், "சுவாமி! இந்திரஜித்து நம்மை ஏமாற்றி நிகும்பலையில் யாகஞ்செய்யத் தொடங்கியிருக்கின்றான்; ஜானகியார் க்ஷேமமாயிருக்கின்

ருர்'' என்ருன். அவற்றைக்கேட்டதும், வானரர்கள் ஆனந்தக் கூத்தாடினூர்கள். இராமர் விபீஷணனைத் தழுவிக் கொண்டு பலவாறு கொண்டாடினுர். அதன்மேல் விபீஷணன் இராமரைப் பார்த்து "சுவாமி! இந்திரஜித்து அந்த யாகத்தை முடிப்பானுனல் நமக்குத் தீங்காய் முடியும்; உடனே நாம் அந்த யாகத்தைச் சிதைக்கவேண்டும்; இளைய பெருமாளை நீர் என்னுடன் அனுப்பினுல் அவர் உதவியைக் கொண்டு நான் சென்று யாகத்தையும் அழித்து அவனையுங் கொன்று வருகின்றேன்" என்று சொன்னுன்.

இந்திரஜித்து வதை.

அவ்வாறு விபீஷணன் கூறியதைக் கேட்டவுடனே இராமர் அப்படியே செய்யலாமென்று இலக்குமணனைத் தழுவிக்கொண்டு, யுத்த தந்திரங்களையெல்லாம் அவனுக்குபதேசித்துத் தம்முடைய வில்லையும், கவசத்தையும் அம்பறுத் தூணியையுங் கொடுத்து, "தம்பி! நீ மாருதி முதலான வானரவீரர்களையும் துணையாக அழைத்துக் கொண்டு நிகும்பலைக்குப் போய் இந்திரஜித்தை வதை செய்து விட்டுவா; உனக்கு ஜெயமுண்டாகும்" என்று ஆசிகூறி நிகும்பலைபோக விடை கொடுத்து, விபீஷணனை நோக்கி, "அப்பா! நீ அங்குச்சென்று இராக்ஷதர் செய்யும் மாயைகளைத் தம்பிக்குத் தெரிவித்து உதவிசெய்து ஜெயம் பெற்றுவா" என்று சொல்லி எல்லோரையும் நிகும்பலைக்கனுப்பி இலக்குமணன் பிரிவுக்காகச் சற்று மனங்கலங்கி யிருந்தார். இலக்குமணன் விபீஷணனுடனும், சுக்கிரீவன் முதலிய வானரவீரர்களுடனும், வானரசைனியங்களுடனும் புறப்பட்டுப் பல காடுகளையும், மலைகளையுந் தாண்டி விரைவாக நிகும்பலை போய்ச் சேர்ந்தான். அங்கே இராக்ஷதவீரர்கள் யாகசாலையமைத்துச் சக்கரயூபஸ்தம்பம் நாட்டி அதைச் சுற்றிலும்

காவலிருந்தார்கள். வேள்விச்சாலையின் மத்தியில் இந்திரஜித்து ஓமாக்கினியுடன் கூடியிருந்தான். நால்வகைப் படைகளும் ஆயிரங்கோடிக்கு மேற்பட்டு யாகசாலையைச் சுற்றிலும் அணியணியாகச் சூழ்ந்து நின்றன. அங்கே நெருங்கியவுடன் வானரர்கள் ஆர்ப்பரித்தார்கள். அவர்களைக்கண்டு இராக்ஷதர்களும் சூழ்ந்துகொண்டார்கள். இருதிறப் படைகளுக்கும் கொடிய யுத்தம் நடந்தது. அதில் இராக்ஷதர்கள் வலிய பல ஆயுதங்களைப் பிரயோகித்ததால் அநேகம் வானரர்கள் மடிந்தார்கள். அப்போது விபீஷணன், இலக்குமணனை நோக்கி, "சுவாமி! விரைவில் அந்த யாகத்தைச் சிதைக்கவேண்டும்; சிதைக்காவிடில் நாம் எதிரிகளை ஜெயிப்பதருமை" என்றான். அதைக்கேட்டவுடனே இலக்குமணன் எண்ணிறந்த பாணங்களை இராக்ஷதப் படைகளின் மீது எவினான். அவற்றால் அநேகம் யானைகளும், குதிரைகளும் மடிந்தன; இராக்ஷதர்களுடைய தலைகளும் தேகங்களும் அறுப்பட்டு ஓமாக்கினியில் வீழ்ந்தன; அனேகம் தலைகள் வீழ்ந்து பூரண கும்பங்களை உடைத்து விட்டன; இரத்த வெள்ளம் புரண்டு ஓமாக்கினியை அவித்து விட்டது; இராக்ஷதர்களின் கைகள் வாளுடன் அறுப்பட்டு வீழ்ந்ததனால் யாகத்திற்குக் கட்டப்பட்டிருந்த எருமைக்கடாக்கள் மடிந்து துர்ச்சகுனத்தைக் காட்டின. அநேகம் இராக்ஷஸ சேனைகள் மாண்டொழிந்தன. இந்திரஜித்து ஜெபித்த மந்திரமும் தடுமாறிப் போயிற்று. இந்திரஜித்துவின் இருபத்தைந்து வெள்ளஞ்சேனையில் பத்தக்குரோணி சேனைதான் மீதியிருந்தது.

இந்திரஜித்து இவற்றையெல்லாம் பார்த்ததும்மிகுந்த துக்கமும் கோபமும் அடைந்து, "எப்படியோ எதிரிகள் நம்முடைய இரகசியத்தைத்தெரிந்துகொண்டுவந்து யாகத்தை அழித்து விட்டார்கள்; இனி நாம் யாகஞ்செய்ய நினைப்பது

தவறு. யாகம் கெட்டதே நமக்கு அபஜெயமுண்டாகு மென்பதற்கு ஓர் அறிகுறியாகி விட்டது; இனி என்ன செய்யலாம்" என்று யோசித்துக்கொண் டிருந்தான். அப்போது வானரவீரர்கள் எஞ்சிநின்ற இராக்ஷத சேனைகள் மீது மலைகளையும் மரங்களையும் பிடுங்கி யெறிந்து அவற்றைச் சின்னபின்னப் படுத்தினார்கள். ஆஞ்சனேயர் ஒரு மாமரத்தைப் பிடுங்கி இராக்ஷத சேனைகளை மோதி யடித்துத் துரத்திவிட்டு இந்திரஜித்துவுக் கெதிரில்போய் நின்று, "அடாதிருடா! நீ எங்களுடன் எதிர்த்து நின்று யுத்தஞ் செய்வதற்கஞ்சி வஞ்சனைசெய்து எங்களை ஏமாற்றி இங்கே வந்து யாகஞ்செய்யத் தொடங்கின யல்லவா? நீ அயோத்திக்குச் சென்று எல்லோரையும் கொன்று விட்டாயோ? ஜானகியாரைக் கொலை செய்து விட்டாயோ? நீ அயோத்திக்குச் சென்றிருந்தாலும் பரதரும் சத்துருக்கரும் உன்னைக்கொல்லாமல் விடுவார்களோ? வஞ்சகா! உன் மாயம் எங்களிடம் பலிக்குமா? உனக்கு யமனாகிய இளையபெருமாள் இதோ இங்கே வந்திருக்கின்றார்; இனி நீயும், உன்னைச் சார்ந்தவர்களும் ஒழிந்துபோவது நிச்சயமாகும்" என்றார். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் இந்திரஜித்து நெருப்பைப் போல் சுவாசம் விட்டுக் கோபித்து அவரைப் பார்த்து, "அடா குரங்கே! என்னால் இதற்கு முன் நீங்கள் பட்டபாட்டை மறந்து விட்டீர்களோ? என் யாகம் அழிந்து போய் விட்டதால் என் வல்லமை போய் விட்டதென்று நினைத்தீர்களோ? இதோ நான் ஒரு நொடிப் போதில் உங்களை நாசஞ்செய்து அந்த அற்ப மனிதர்களையும் ஒழித்துவிடுகிறேன்; இனி நீங்கள் சஞ்சீவியாலும் பிழைக்கமாட்டீர்கள்" என்று விரைந்து போர்க்கோலங் கொண்டு தேரிலேற்றி வில்லைவளைத்துக் குணத்தொனி பண்ணினான். அதைக் கேட்டு வானரர்கள் பயந்தோடினார்கள். வானராதிபதிகள்

மாத்திரம் தைரியங்கொண்டு நின்றார்கள். அப்போது அனுமார் இராக்ஷதர்கள் சிதறியோடும்படி ஒருபெரிய மலையைப் பெயர்த்து இந்திரஜித்தின்மே லெறிந்தார். இந்திரஜித்து தன் அஸ்திரத்தால் அதைத் தூளாக்கிவிட்டான். மறுபடியும் மாருதி வேறொரு மலையை எடுக்கப்போனார். அப்போது இந்திரஜித்து அவருடைய அவயவங்களில் பாயும்படி அநேக பாணங்களைப் பிரயோகித்தான். அவற்றால் அவர் சோகமடைந்தார். உடனே அங்கதன் முதலான வானர வீரர்கள் அவனோடெதிர்த்தார்கள். இந்திரஜித்து அவர்களை நோக்கி, "நீங்கள் என் வீணாக மடியவந்தீர்கள்; அந்த இலக்குமணனை எனக்குக் காட்டிவிட்டுப் போய்விடுங்கள்" என்று சொல்லி அவர்களை விட்டுவிட்டு இலக்குமணனை நோக்கிச் சென்றான். அவ்வாறு சென்றும் அவர்கள் அவனை விடாமல் அவன்மீது அநேகம் மலைகளையும் மரங்களையும் பிடுங்கி யெறிந்தார்கள். அவன் அவர்கள்மீது கோடிக்கணக்கான கொடிய பாணங்களை யேவினான். அவற்றால் அவர்கள் சோர்ந்து போனார்கள். அப்போது விபீஷணன் இலக்குமணனை நோக்கி, "சுவாமி! வானரக்கூட்டங்கள் வீணாய் மடிகின்றன; நீர் விரைவில் அந்தப்பாவியைக் கொல்ல வேண்டும்" என்று சொல்ல, இலக்குமணன் கோபத்தோடு இந்திரஜித்துவின் எதிரில் சென்றான். அப்போது அனுமார் சோர்வு நீங்கி யோடிவந்து இலக்குமணனைத் தம் தோள் மீதேறிக் கொள்ளும்படி வேண்டினார். அப்படியே இலக்குமணன் ஏறிக்கொண்டான். இந்திரஜித்து ஆயிரங்குதிரைகள் பூட்டிய தேரிலேறிவந்து இலக்குமணனோ டெதிர்த்தான். இருவரும் பாணப்பிரயோகஞ் செய்யத் தொடங்கினார்கள். இந்திரஜித்து தன்தேரை ஆயிரம்வித சாரிகளோடும்படி செய்தான். அனுமாரும் அந்தத் தேர்செல்லு மிடங்களிலெல்லாம் சென்று சாரி சுற்றிவந்தார். இவ்வாறு இந்திர

ஜித்துவும் இலக்குமணனும் இடசாரி வலசாரியாகச் சுற்றிப் பற்பல விடங்களில் சஞ்சரித்துப் பாணங்களைக் கோடி கோடியாகப் பொழிந்தார்கள். அவற்றால் இரண்டு படை களிலும் அநேகர் இறந்தனர்; யானை, குதிரைகள் இறந்த தற்கோ அளவில்லை; எங்கும் இரத்த வெள்ளமோடிற்று; உலகமெல்லாம் நடுங்கிப்போயிற்று. அதன்மேல் இந்திர ஜித்துவும், இலக்குமணனும் ஒருவர்மீ தொருவர் பற்பல பாணங்களைப் பிரயோகித்தார்கள். அவற்றால் ஒருவரும் இளைக்கவில்லை. பின்னர், இலக்குமணன் இந்திரஜித்துவின் கவசத்தையும் தேகத்தையும் துளைக்கும்படி சில பாணங் களைச் செலுத்தினான். இந்திரஜித்து அநுமாருடைய தோள் களில் சில பாணங்களை ஏவினான். அவை பட்டு அநுமா ருடைய தேகத்தில் இரத்த மொழுகிற்று; அதைக் கண்டு இலக்குமணன் கோபித்துப் பல பாணங்களை யேவி இந்திர ஜித்துவின் தேர்க்குதிரைகளையும், சக்கரங்களையும் போக்கி விட்டு, மேலும அவன்மேல் அநேகம் பாணங்களைச் சொரிந் தான். உடனே இந்திரஜித்து வேறொரு தேரிலேறி இலக்கு மணன் சிரசில் பத்துப் பாணங்களைப் பிரயோகித்தான். அவைகள் பட்டதால் இலக்குமணன் சிறிது நேரம் சோர்ந்து உடனே தெளிந்து பிறைமுகக்கணைகளைத் தொடுத்து விடுத்து அவற்றை அவன் விலக்குமுன் அவன் மார்பில் ஒரு பாணத்தை யேவினான். அஃது அவன் கவசத்தையும் மார் பையும் துளைத்துக்கொண்டு போய்விட்டது. 'அதனால் அவன் சோக மடைந்தான். அத்தருணத்தில் இலக்கு மணன் மேலும் சில பாணங்களை யேவி அவனுடைய கொடியை அறுத்துத் தோள்களையும் துளைத்துவிட் டான். இந்திரஜித்து சிறிது நேரம் சோகமடைந்து உடனே தெளிந்து இலக்குமணன் மீது எண்ணிறந்த பாணங்களைச் செலுத்தினான். இலக்குமணன் அவற்றை

யெல்லாம் விலக்கிவிட்டுச் சில அம்புகளால் அவன் தேகத்தைத் துளைத்து வில்நாரியையும் அறுத்தெறிந்தான். அப்போது இந்திரஜித்து பிரமையடைந்து நின்றான். உடனே விபீஷணன் இலக்குமணனிடத்தில், "சுவாமி! அவன் மனந் தளர்ந்து போனான்; இனிப் பிழைக்கமாட்டான்" என்றான்.

அதற்குள் இந்திரஜித்து தெளிந்து மிகுந்த கோபங் கொண்டு வாயுவாஸ்திரம், வருணாஸ்திரம், சூரியாஸ்திரம், சமுத்திராஸ்திரம் முதலியவற்றை இளையபெருமாள்மீது விடுத்தான். இலக்குமணன் அவ்வகையான அஸ்திரங்களைக் கொண்டே அவற்றைத் தடுத்து விட்டான். அதன்மேல் இராவண குமாரன் பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகித்தான். இலக்குமணன், பிரம்மாஸ்திரத்தை யெடுத்து, 'சத்துருவின் பேரில் மாத்திரம் போய் அவனுடைய அஸ்திரத்தை மாற்றக்கடவாய்' என்று மந்திரித்து விடுத்தான். அஃது அந்த அஸ்திரத்தைத் தொலைத்துவிட்டு சப்தலோகங்களையும் சுட்டெரிப்பது போல் உக்கிரமாக ஆகாயத்தை மூடிக்கொண்டு நின்றது. உடனே இலக்குமணன் வேறொரு அம்பை விடுத்து அதன் வேகத்தத யொடுக்கினான். பின்னர் இந்திரஜித்து நாராயணாஸ்திரத்தை யெடுத்து இலக்குமணனை நோக்கி, 'இதனால் நீ இறந்தேபோவாய்'என்று விடுத்தான். இலக்குமணன் இராமரைத் தியானித்துக்கொண்டு அதற்கெதிரில் நடந்து போனான். அந்த அஸ்திரம் அவனை வலமாகச்சுற்றி வணங்கிக் கொண்டு போய்விட்டது. அதைக்கண்டு இந்திரஜித்து, 'இவன் அந்த அஸ்திரத்துக் குரியவன்போலும்; யாராயிருந்தாலு மிருக்கட்டும்' என்று உடனே பாசுபதாஸ்திரத்தை யெடுத்து மந்திரித்து அவன்மேல் விடுத்தான். அஃது அக்கினியையும் விஷத்தையுங் கக்கிக்கொண்டு பல பயங்கரமான தோற்றங்களுடன் வந்தது. அதைக்

கண்டு தேவர்களும், முனிவர்களும், வானரர்களும் பயந் தோடினார்கள்; விபீஷணன் திடுக்கிட்டு இலக்குமணனை நோக்கி, "சுவாமி! இதை விரைவில் நீக்கவேண்டும்" என்றான். இலக்குமணன் நகைத்து, 'பயப்படாதீர்கள்' என்று வானரர்களுக்குத் தைரியங் கூறிவிட்டுப் பாசுபதாஸ்திரத்தை யெடுத்து, 'உலகத்திற்கு நீ ஒரு உபத்திரவமுஞ் செய்யாமல் எதிரியின் அஸ்திரத்தை மாத்திரம் அழித்துவரக் கடவாய்' என்று மந்திரித்து அதனெதிரில் செலுத்தினான். அது சென்று இந்திரஜித்துவின் அஸ்திரத்தினாலுண்டான பயங்கரமான செய்கைகளை யெல்லாம் போக்கி அந்தப் பாணத்தையும் ஒழித்து விட்டது. அதைக்கண்டு தேவர்களும் மானிடர்களும் சந்தோஷித்தார்கள். வானரர்கள் இலக்குமணனை விஷ்ணுவின் அம்சமென்று உறுதிசெய்து கொண்டார்கள். அப்போதும் இந்திரஜித்து இளைக்காமல் இலக்குமணனுடைய தோள்களிலும், நுதற்சுட்டியிலும் பாயும்படி சில பாணங்களை ஏவினான். இலக்குமணனும் கோடிக்கணக்கான பாணங்களை அவன்மீது பிரயோகித்துக் கொண்டிருந்தான். வானரர்கள் மலைகளைப்பிடுங்கி யெறிந்து இராக்ஷஸர்களை நாசப்படுத்திக்கொண் டிருந்தார்கள்.

அத்தருணத்தில் இந்திரஜித்து விபீஷணனைப் பார்த்து "சிற்றப்பா! எதிரிகள் உன் தங்கையின் மூக்கை யறுத்ததையும் நீ நினையாமல் மானங்கெட்டு அவர்களுடன் சேர்ந்து அவர்களுக்கு உளவுகளைச் சொல்லி எங்கள் காரியங்களைக் கெடுத்து வருகின்றாய்; நீ எங்களை யெல்லாம் மடித்துவிட்டு இலங்கையை ஆளலாமென்று நினைத்திருக்கின்றாய்; நாங்களெல்லாம் போனபின் நீ தனியாயிருந்து அரசு செய்வாயோ; குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்பே! இதுவும் ஒரு பிழைப்பா; உன் எண்ணம் கைகூடு

மென்று நீ நினைக்காதே; என் தந்தையைக் கொல்ல எவரா லும் முடியாது; நீ அவருடைய அம்பால் இறந்துபோவாய்; நானே இப்போதுன்னைக் கொன்று விடுவேன்; பழிக்கஞ்சி விட்டுவிட்டேன்" என்று வாய்க்குவந்தபடி திட்டினான். அப்போது விபீஷணன் அவனை நோக்கித் தலையசைத்துச் சிரித்து, "அப்பா இந்திரஜித்தே! நான் தர்மமார்க்கத் தைக் கொண்டவன்; ஆதலால், உன் தந்தை கொடிய பாவத்தில் பிரவேசித்ததுகண்டு அவனுக்குநற்புத்தி கூறி னேன். அதற்குன் தந்தை கோபித்து என்னைத் துரத்திவிட் டான்; அதன்மேல் நான் இராமபிரானிடம் அடைக்கலம் புகுந்தேனே தவிர ஐசுவரியத்தை இச்சித்து வரவில்லை. அதற்காக என்னை எவரும் நிந்திக்க மாட்டார்கள்; தர்ம முள் ளவர்கள் வாழ்வார்கள்; அதர்மிகள் நாசமடைவார்கள்; நீ சிறு பிள்ளைத்தனமாகப் பேசாதே" என்றான். இந்த வார்த்தை களைக் கேட்டதும் இந்திரஜித்து கடுஞ்சினமடைந்து அர்த்த சந்திர பாணத்தை விபீஷணன் கழுத்துக்குக் குறிவைத்து ஏவினான். இலக்குமணன் அம்புகளால் அதனைப்போக்கி விட்டான். விபீஷணன் கோபங்கொண்டு இந்திரஜித்துவின் மேற்பாய்ந்து தன் தண்டாயுதத்தால் அவனுடைய சாரதி யையும் குதிரைகளையும் கொன்று விட்டான். உடனே இந்திரஜித்து கோபித்துக் கோடி அம்புகளைப் பிரயோகித்து விபீஷணன் தோள்களிலும், இலக்குமணன் தோள்களிலும், வானர வீரர்களின் மார்பிலும் இரத்த வெள்ளம் பெருகச் செய்துவிட்டு வீரகர்ஜ்ஜனை செய்து, 'வேறொரு தேரிலேறிக் கொண்டு வந்துதான் யுத்தஞ் செய்யவேண்டும்' என்று இமைப்போதில் மேகத்தில் மறைந்து தேகத்தில் அம்புகள் பட்டதால் இரத்தமொழுக இராவணனிடம் போய்ச்சேர்ந் தான். அப்போது வானரர்கள், 'இந்திரஜித்து ஆகாயத்தில்

மறைந்து விட்டதால் முன்போல் ஏதேனும் மோசஞ் செய்து விடுவானோ' என்று மனங்கலங்கி யிருந்தார்கள்.

இங்குள்ளவர்கள் இப்படியிருக்க, தேகமெல்லாம் அம்புகள் பட்டு இரத்தமொழுகச் சென்ற இந்திரஜித்துவை இராவணன் பார்த்து, "மகனே! நீ மிகவும் வருத்தமுற்றிருக்கின்றாயே; உன்யாகம் அழிவுற்றதோ? நடந்ததென்ன? சொல்" என்றான். இந்திரஜித்து, "தந்தையே! உன் தம்பி என்னுடைய இரகசியங்களை யெல்லாம் எதிரிகளுக்குத் தெரிவித்து விட்டான்; அதனால் என்யாகம் அழிந்துவிட்டது; இலக்குமணனுடைய வில் வல்லமை அளவிடக் கூடாததா யிருக்கிறது; நானேவிய தேவாஸ்திரங்களெல்லாம் அவன் முன் ஒன்றுஞ் செய்யாமற் போய் விட்டன; இனி நாம் பிழைப்பதருமை; நாம் சீதையைக் கொண்டுபோய் இராமலக்குமணர்களிடம் விடுத்து அவர்களைச் சமாதானப் படுத்திக்கொள்வது நலம்" என்றான். இராவணன் இவற்றைக் கேட்டதும் இருபது புஜங்களும் குலுங்க நகைத்து இந்திரஜித்துவை நோக்கி, "அப்பா! நீ மனிதர்களுக்குப் பயந்து விட்டாய்; ஆதலின் உன் அரண்மனைக்குப் போ; நானொருவனே சென்று அவர்களை ஜெயித்து வருகின்றேன்; ஒருவாறு ஜெயிக்காமல் நான் மடிந்தாலும் எனக்கு வீரசுவர்க்கமும் கீர்த்தியும் கிடைக்கும்; இனி நான் சீதையை விட்டுவிட்டால் எவரும் என்னை மதிக்க மாட்டார்கள்" என்று சொல்லிச் சீறி யெழுந்து பக்கத்தில் நின்றவர்களை நோக்கி, "விரைவில் எனது தேரைக்கொண்டு வாருங்கள்" என்று ஆர்ப்பரித்தான். அப்போது இந்திரஜித்து அவன் பாதங்களில் வீழ்ந்து சேவித்து, "தந்தையே! கோபிக்க வேண்டாம்; நீர் உம்முடைய பிடிவாதத்தை விடாமலிருக்கின்றீர்; பின்னால் நடப்பதை நீரே தெரிந்துகொள்ளுவீர்"

என்று சொல்லி விட்டு ஒரு திவ்விய இரதத்திலேறித் தான் அதுவரையில் வெளிவிடாமல் வைத்திருந்த ஆயுதங்கள், மந்திரங்கள், ஆடையாபரணங்கள் முதலியவற்றையெல்லாம் விரும்பினவர்களுக்குத் தானஞ்செய்து விட்டு இராவணனைப் பார்த்துக் கண்ணீர் விட்டுக்கொண்டு யுத்தகளத்தை நோக்கிப் போனான். அப்போது இலக்குமணன் வில்லைப் பிடித்த பிடியே ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டிருந்து விபீஷணனை நோக்கி, "அந்தத் துஷ்டன் ஓடிவிட்டான் போலும்; அவனிருந்தால் ஏதாவது தீங்குசெய்வானல்லவா?" என்று சொன்னான். அப்படிச்சொல்லிக்கொண்டிருக்கும்போதே மேற்கூறியபடி சென்ற இந்திரஜித்து அவன் சமீபத்தில் நெருங்கி அவன்மீது பாணவருஷங்களைப் பொழிந்தான். இலக்குமணனும் அவனோடெதிர்த்துப் பாணப்பிரயோகம் பண்ணினான். அப்போது விபீஷணன், "சுவாமி! இனி இவனை விட்டால் நீர் ஜெயங்கொள்வதருமை" என்று இலக்குமணனிடம் கூறினான். உடனே அவன் இடியை நிகர்த்த அநேகம் அம்புகளை இந்திரஜித்தின்மீது மேலும்மேலும் ஏவினான். அவைகள் இந்திரஜித்துவின் தேகத்தைச் சல்லடைக் கண்களாகத் துளைத்துவிட்டன. அதன்மேல் இந்திரஜித்து, "இனி நாம் வில்லால் ஜெயம்பெறல் முடியாது" என்று நினைத்து வேலாயுதத்தை எடுத்து இலக்குமணன்மே லெறிந்தான். இலக்குமணன் அதனை ஓர் அக்கினியாஸ்திரத்தால் துண்டாக்கிவிட்டு மேலும் அநேகபாணங்களை ஏவி இந்திரஜித்துவின் தேகமெங்கும் புண்படுத்தி விட்டு, அம்பறாத்தூணியையும் அம்புகளையும் அறுத்துத்தள்ளி, சாரதியையும் கொன்றுவிட்டான். அதன்மேல் இந்திரஜித்து தானே தன் தேரைச் செலுத்திக்கொண்டு, தன்னுடைய தேகத்தில் பாய்ந்திருந்த

அம்புகளைப் பிடுங்கி இலக்குமணன்மீதும், அனுமார் முதலிய வானரவீரர்களின்மீதும் பிரயோகித்தான். இலக்குமணன் அவனுடைய அத்தகைய வீரத்தைக்கண்டு மெச்சினுன். அப்போது விபீஷணன் இலக்குமணனை நோக்கி, "சுவாமி! இவன் தேரைச் செலுத்திக்கொண்டு போய் ஆகாயத்தில் மறைந்து மாயஞ்செய்வான்; இவனைப் பகற்பொழுதிலேயே ஒழித்து விடவேண்டும்; இரவு வந்தால் இவன் சாகமாட்டான்" என்று சொன்னுன். இலக்குமணன், 'இவன் வலியிழந்து போனுன்; சீக்கிரம் நான் இவனைக் கொன்றுவிடுவேன்' என்முன். அதற்கு விபீஷணன், "சுவாமி! இவனுடைய வில்லும்தேரும் அழியாதவரையில் இவன் சாகமாட்டான்; தேரிற்கட்டிய பச்சைக் குதிரைகளும் சாகமாட்டா; இந்தத்தேர் சங்கரனுடையது" என்று சொன்னுன். உடனே இலக்குமணன் இந்திரஜித்து ஏறியிருந்த தேரை நாசப்படுத்திவிட்டான். அதில் கட்டியிருந்த குதிரைகள் பலவாருகப் பிரிந்து ஓடிவிட்டன. அங்ஙனம் தேரொழியவே இந்திரஜித்து மனங்கொதித்து ஆகாயத்திற் பாய்ந்து நின்று கர்ஜ்ஜித்து மலைகளைச் சொரிந்தான். அவற்ருல் அநேகம் வானரர்கள் நசுங்குண்டிறந்தனர். அப்போது இந்திரஜித்து இருந்தவிடம் இலக்குமணனுக்குத் தெரியவில்லை. அதனுல் இலக்குமணன் எல்லாத்திக்குகளிலும் பாணங்களை ஓயாமல் செலுத்திக் கொண்டிருந்தான். அவை எங்கும் நிறையவே அவற்றின் மத்தியில் இந்திரஜித்து இருப்பது இலக்குமணனுக்குத் தெரிந்தது. உடனே அவன் அர்த்த சந்திர பாணத்தைச் செலுத்தி இந்திரஜித்துவினுடைய இடக்காத்தை வில்லுடனே அறுத்துத் தள்ளினுன். அதனுல் இந்திரஜித்து அடங்காச் சினங்கொண்டு உருத்திரமூர்த்தியின் சூலத்தை யெடுத்து இலக்குமணன்மீது செலுத்தப் போனுன். அதனைப் பிரயோகிப்பதற்குள் இலக்குமணன்

ஒரு அர்த்தசந்திர பாணத்தை யெடுத்து, 'நீ எதிரியைக் கொல்லக்கடவாய்' என்று வில்லில் தொடுத்து இழுத்து விட்டான். அது அக்கினியைக் கக்கிக்கொண்டு போய் இந்திரஜித்துவின் தலையை அறுத்துத் தள்ளிவிட்டது. அவன் முண்டம் சூலம்பிடித்த கையுடனே கீழே விழ்ந்தது, அவன் கதி அவ்வாறாகவே அங்கு நின்ற இராக்ஷதர்களெல்லாம் ஆயுதங்களை யெறிந்துவிட்டு ஓட்டம் பிடித்தார்கள். தேவர்கள் சந்தோஷித்து அங்கே வந்து இறந்த வானரர்கள் எழக்கடவர்கள் என்று ஆசிர்வதித்தார்கள். அதனால், முன்னே மடிந்த வானரர்களெல்லோரும் உயிர் பெற்றெழுந்தார்கள். மேலும் தேவர்கள் இலக்குமணன்மீது புஷ்பமாரி பொழிந்தார்கள். அதன்மேல் இலக்குமணன் ஆஞ்சனேயர் மீது ஏறியபடியே இந்திரஜித்துவின் தலையை எடுத்துக்கொண்டு வரும்படி அங்கதனுக்குக் கட்டளையிட்டுத் திரும்பி இராமரிடம் சென்றான். அவன் கட்டளைப்படி அங்கதன் அத்தலையைக் கையிலெடுத்துக்கொண்டு அவனுக்கு முன் சென்றான். வானரப் படைகள் அவனைச் சூழ்ந்து சென்றன. இவ்வாறு சென்று எல்லோரும் இராமரிடம் சேர்ந்தவுடன் இலக்குமணன் அங்கதன் கையிலிருந்த இந்திரஜித்தின் தலையை வாங்கி அவர் பாதங்களில் வைத்து அவரை வணங்கினான்.

அப்போது இராமர் இலக்குமணன் வெற்றியை உணர்ந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து அவனைத் தழுவி, "தம்பி! இப்போது சீதை என்னிடம் வந்து சேர்ந்தது போல நான் சந்தோஷ மடைகிறேன்; 'தம்பி யுடையார் படைக்கஞ்சார்' என்ற ஆப்தவாக்கியத்தை நீயே உலகில் நிலைபெறச் செய்தாய்" என்று கொண்டாடி அவனுடைய தோளிற் கட்டியிருந்த அம்பறாத்தூணியை அவிழ்த்திறக்கி மார்பின் கவசத்தைக் கழற்றி, அவன் தேகத்தில் அம்பு

தைத்த புண்களைத் தமது திருத்தோள்களால் ஒற்றி ஆறும்படி செய்து, மேலும் அவனை நோக்கி, "அப்பா! இந்த வெற்றி வேறெவராலும் உண்டானதன்று; விபீஷணனாலேயே உண்டானது" என்று ஆனந்தக் கடலில் மூழ்கியிருந்தார்.

இவர்கள் இப்படியிருக்க, யுத்தபூமியிலிருந்த இராக்ஷத தூதர்கள் விரைந்தோடி இராவணனிடத்தில், "ஐயா! உம்முடைய புதல்வர் இறந்தார்" என்று மிக்க பயத்துடனே கூறினார்கள். அதைக்கேட்டு அங்கு நின்ற முனிவர்களும், அப்சரஸ்திரீகளும், "இராவணனுக்கு இதனால் மிகுந்த கோபமுண்டாகும். அக்கோபத்தால் இன்று உலக மழிந்துவிடும்" என்று நாலாபக்கங்களிலும் பயந்தோடி விட்டார்கள். தூதர்கள் சொல் செவிகளில் நுழைந்த மாத்திரத்தில் இராவணன் ஆத்திரங் கொண்டெழுந்து வாளை யுருவிக் கொண்டு அந்தத் துக்க சமாசாரத்தைச் சொன்ன தூதுவர்களை ஒரே வீச்சாக வீசி யெறிந்துவிட்டுத் திடீரென்று கீழே விழ்ந்து புரண்டுருண்டு இரத்தக் கண்ணீ ரொழுகவிட்டுப் பற்களை நெறநெறவென்று கடித்து, இடி இடித்தது போலக் கைகளைத் தரையில்மோதி, மகனை நினைத்துப் பலவாறு புலம்பி உடனே எழுந்து விரைந்தோடி இரணகளத்திற் புகுந்து அவனுடைய பிரேதத்தைத் தேடினான். ஓரிடத்தில் அவன் கை கிடந்தது. அதைக் கண்டவுடன் இராவணன் பதைபதைத்து அதனை யெடுத்துத் தன் மார்பில் சேர்த்தும், கழுத்தில் அணைத்தும், கண்ணிலொற்றியும் பெருமூச்சுவிட் டழுதுகொண்டே போய்ச் சிறிது தூரத்திற்கப்பால் இந்திரஜித்துவின் தேகம் கிடக்கக்கண்டு அதன் மேல் வீழ்ந்து மார்பில் தைத்திருந்த பாணங்களைப் பறித்து, முறித்தெறிந்து விட்டுத் தலையைக் காணமல் 'அந்தோ! அம்மனிதர்கள் தலையைக் கொண்டுபோய் விட்டார்

கள்' என்று துக்கித்து, "என் பிள்ளையின் சிரசையும் உயிரையும் கொண்டுபோன அந்த மனிதர்கள் நிலை பெற்றிருக்க நான் ஆவியைச் சுமந்துகொண் டிருக்கின்றேனே; எதிரி படைகள் நாசமாகாமல் என் சேனைகள் முழுவதும் நாசமாய் விட்டனவே; அப்பா இந்திரஜித்தே! நான் சீதையென்னும் பெண்ணின்மேல் வைத்த ஆசையால், நீ எனக்குச் செய்ய வேண்டிய ஈமக்கடன்களை நானே உனக்குச் செய்ய நேர்ந்தேன்; மகாவீரனாகிய உன்னை யிழந்த எனக்கு இனி வாழ்வுண்டாகப் போகிறதா?" என்று கதறிப் புலம்பி அந்தத் தேகத்தை எடுத்துக் கொண்டு நகரத்திற்குப் போனான். அவனுடைய நிலைமையைப் பார்த்து அங்குள்ள இராக்ஷதர்களெல்லாம் துக்க சாகரத்தில் மூழ்கினார்கள். இந்திரஜித்துவின் மனைவி மார்கள் தலையில் கையை வைத்துக் கதறினார்கள். அவன் தாயாகிய மண்டோதரி ஓடிவந்து பிரேதத்தின்மேல் வீழ்ந்து மூர்ச்சித்துப் பின்னர்த் தெளிந்து அவனுடைய வீரப்பிரதாபங்களை எடுத்துச் சொல்லிச் சொல்லி அழுது, முடிவில், "அந்தோ! சீதையென்னும் விஷத்தினால் இத்தீமைகள் நேர்ந்தன; நாளை இலங்காதிபருக்கும் இக்கதிதான் நேரும்; பின்னால் என்னுடைய வாழ்வென்னாகும்?" என்று புலம்பினாள். அதைக் கேட்டதும் இராவணன் மிகுந்த கோபங்கொண்டு, "அந்தச் சீதையினாலல்லவா என் பந்துக்களெல்லாம் இறந்தார்கள். அவளை நான் இப்பொழுதே தொலைத்து விடுகின்றேன்" என்று சீதையை வெட்டுதற்கு வாளை உருவிக்கொண்டு ஓடினான். அப்போது மகோதரன், 'ஐயோ! இவன் வீணாகப் பெண்பழியைத் தேடிக்கொள்ளப் போகின்றானே' என்று அவனுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி அவனை நோக்கி, "ஐயா! நீ எப்பொழுதும் ஒழியாத பழியைத் தேடிக்கொள்ளத் துணிந்திருக்கின்றாய்; அந்த உத்தமியைக்

கொன்றால் எல்லோரும் உன்னை நிந்திப்பார்கள்; தோஷ மற்றவளைக் கொல்வதாற் பயனென்ன? மேலும் அவளிறந் தால் இராமலக்குமணர்கள், 'இனிச் சண்டையை எதற் காகச் செய்யவேண்டும்' என்று போர்செய்யாமற் போய் விடுவார்கள்; அப்படிப் போய்விட்டால் உன்னால் அவர்களை ஜெயித்தல் முடியவில்லையென்று யாவரும் பேசுவார்கள்; அஃது உன் வீரத்திற்குக் குறைவாகும்" என்று சொன்னான். அதைக் கேட்டதும் இராவணன் கையிற் பிடித்த வாளைப் பூமியிலெறிந்துவிட்டு, "என் பிள்ளையைக் கொன்றவர்களைக் கொல்லாமல் நான் திரும்பி வரமாட்டேன்; இந்திரஜித்து வின் தேகத்தைத் தைலதோணியில் போட்டு வையுங்கள்" என்று பக்கத்தில் நின்றவர்களுக்குச் சொல்லிவிட்டு, தூது வர்களை நோக்கி, "நீங்கள் விரைந்து சென்று நமக்கு மூல பலமாக இன்னும் அஷ்டதிக்குகளிலும், சப்த தீவுகளிலு மிருக்கின்ற இராக்ஷத சேனைகளை யெல்லாம் அழைத்துக் கொண்டு வாருங்கள்" என்று சொன்னான்.

மூல பலவதை.

அவன் கட்டளைப்படியே தூதுவர்கள் சென்று அந்த இராக்ஷஸ சேனைகளை அழைத்துக்கொண்டு வந்துவிட்டார் கள். அவர்கள் எல்லோரும் இலங்கைக்கு வெளியில் வந்து கூடினார்கள். அவர்கள் எப்பேர்ப்பட்டவர்க ளென்றால், தானவர்களுடைய யாகத்தில் பிறந்தவர்களும், தேவர்களை ஜெயித்தவர்களும், மாயையில் முதன்மையானவர்களும், மேகமண்டலத்தை அளாவிய தேகத்தை யுடையவர்களும், ஆலகால விஷத்துடன் பிறந்தவர்களும், யமனைச் சக்கர வாளகிரியில் விலங்கிட்டு வைத்துப் பிரமன் கெஞ்சிக் கேட் டுக்கொண்டதன்மேல் விட்டவர்களும், தாகத்துக்குச் சப்த சாகரங்களையும் பருகுகின்றவர்களும், சப்த குலாசலங்களை

யும் பெயர்த்தெடுக்கத் தக்கவர்களும், சிவபெருமான் காளியை மோகித்தபோது பிறந்தவர்களும், உருத்திர மூர்த்தியின் நெற்றிக்கண்ணில் பிறந்தவர்களும், சிவன் யம னுடைய மார்பில் உதைத்தபோது அவன் கக்கின இரத் தத்தில் பிறந்தவர்களும், வாசுகி விஷத்தைக் கக்கினபோது அதில் பிறந்தவர்களும், சிவன் திரிபுரங்களை யெரித்த போது அந்த அக்கினியில் பிறந்தவர்களும் ஆவார்கள். அவர்களுடைய மாயங்களையும், வரங்களையும், தவங்களையும் அளவிட்டுச் சொல்லுதல் முடியாது. இத்தகைய அவர்கள் வந்தவுடன் தூதுவர்கள் இராவணனிடம் சென்று, "சுவாமி! மூலபல இராக்ஷதர்கள் எல்லோரும் வந்து விட்டார்கள்; அவர்களுள் ஒருவனே எதிரிகளை வாயிற்போட்டுக் கொள் வான்" என்று சொன்னார்கள். இராவணன் 'அந்தச் சேனை களின் கணக்கென்ன?' என்று அவர்களைக் கேட்டான். அவர் கள், 'அவற்றின் கணக்கை அளவிடல் முடியாது' என்றார் கள். உடனே இராவணன், "நீங்கள் போய் அந்தச் சேனைத் தலைவர்களை என்னிடம் அழைத்து வாருங்கள்" என்று தூதுவர்களுக்குக் கட்டளையிட்டான். அவர்கள் போய் அத் தலைவர்களை அழைத்து வந்தார்கள். அந்தச் சேனாதிபதிகள் வந்ததும் இராவணனைக் கண்டு வணங்கினார்கள். இராவ ணன், தனக்குச் சம்பவித்தவைகளை யெல்லாம் அவர்க ளிடம் கூறினான். அவர்கள் "அற்ப மனிதர்களும், குரங்குக ளுமா இவ்வளவு காரியங்களையும் செய்துவிட்டார்கள்; அவர் களை நாசஞ்செய்தல் இங்குள்ளவர்களால் முடியவில்லையா? எங்களை அந்த அற்பர்கள் மீது ஏவுதற்குத்தானா நீர் வா வழைத்தீர்" என்று இராவணனிடம் கூறிச் சிரித்தார்கள்.

அப்போது மாலியவான் அவர்களை நோக்கி, "நீங்கள் இராம லக்ஷ்மணர்களையும், வானரர்களையும் சாமானிய

றென்று நினைத்தல் கூடாது; அவர்களால் நம் பந்துக்களெல்லாரும் மடிந்தார்கள்; இப்போது நானும், இன்னுஞ் சிலரும், முந்நூறு வெள்ளம் மூலச்சேனுவீரர்களும் மாத்திரமேயிருக்கின்றோம்" என்று எதிரிகள் செய்த பல வல்லமையான காரியங்களை யெல்லாம் எடுத்துக் கூறினன். அவற்றையெல்லாம் கேட்டதும், அவர்களுள் வன்னி யென்னும் சேனைத் தலைவன், இராவணனை நோக்கி, "ஐயா! உமது பாட்டன் மாலியவானுக்குச் சீதையைவிட்டு நீர் அந்த மனிதர்களைச் சமாதானப்படுத்திக் கொள்வது நலமென்ற அபிப்பிராய மிருக்கின்றது; எனினும் அதை முந்தியே நீர் செய்திருக்க வேண்டும்; இப்போது செய்வது கேவலமாகும்; நீர் இங்கேயே இரும்; நாங்கள் போர்க்களம் சென்று அந்த மனிதர்களையும் குரங்குகளையும் நாசப்படுத்திவிட்டு வருகின்றோம்" என்று கூறினன். அதைக்கேட்டு இராவணன் சந்தோஷித்து 'வன்னியையும் மற்ற சேனாதிபதிகளையும் நோக்கி "நானொரு பக்கத்தில் சென்று வானரர்களைத் தொலைத்துவிடுகிறேன்; நீங்கள் போய் அந்த மனிதர்களை மாத்திரம் கொன்று விடுங்கள்" என்று ஆக்ஞாபித்து அவர்களை யுத்தத்திற் கனுப்பிவிட்டு, அவர்கள் சேனைக்கு முன்னே தன்னுடைய மூலச் சேனைகளையு மனுப்பி, எல்லோரும் சென்ற பின்பு தானும் போர்க்கோலங் கொண்டு தேரிலேறிப் போய் இராமர் சேனைகளின்மீது ஒரு பக்கத்தில் பிரவேசித்தான். மேற்கூறிபடி சென்ற மூலபல இராக்ஷத சேனைகள் யுத்தகள மெங்கும் நிறைந்தன. அவற்றைக் கண்டதும் வானர சேனைகள் ஒருவரையும் நம்பாமல் பயந்து ஓட்டம் பிடித்தன. சுக்கிரீவனும், அனுமாரும், அங்கதனும் மாத்திரம் இராம லக்ஷுமணர்களை விட்டுப் பிரியமுடியாமல் அங்கே நின்றுகொண் டிருந்தார்கள். அப்போது இராமர், விபீஷணனை நோக்கி, "இந்தப் படைகள் இதுவரை எங்கே யிருந்

தன?" என்று கேட்டார். அதற்கு விபீஷணன், "சுவாமி! இவைகள் அஷ்ட திக்குகளிலும், சப்த தீவுகளிலு மிருந்தவைகள்; முன்னாலே வருகின்ற சேனைகள் இராவணனுக்கு மூலப் படைகளாக இருந்தவைகள்; முடிவாக அவன் எல்லாவற்றையும் திரட்டி இங்கே யனுப்பி யிருக்கிறான்; இனி எவ்விடத்திலும் ஓர் இராக்ஷதன் கூட இல்லை; இவர்களுடைய முடிவு காலம் இவர்களைப் பிடரியைப் பிடித்துத் தள்ள இவர்கள் உயிர் விடுவதற்கு இங்கே வருகின்றார்கள்" என்று சொன்னான்.

அதைக் கேட்டு இராமர் சிரித்து, "அவர்களை நிமிஷ நேரத்தில் நான் ஒழித்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டு அங்கதனை நோக்கி, "நீ சென்று, ஓடிப்போன நம்முடைய வானர சேனைகட்குத் தைரியங்கூறி அவைகளை அழைத்துக்கொண்டுவா" என்றார். அவ்வாறே அங்கதன் விரைந்து ஓடிய வானரர்களிடம் சென்று, "நீங்களேன் ஓடிவந்து விட்டீர்கள்?" என்று கேட்டான். அவர்கள், ஐயா! அந்த இராக்ஷதர்களை நாங்கள் பார்த்தால் எங்களுக்குப்பயங்கர முண்டாகிறது; அவர்கள் எண்ணத் தொலையாதவர்களாயிருக்கின்றார்கள்; ஆயிரந்தலைகளை யுடையவர்களாயு மிருக்கின்றார்கள்; பத்துத்தலை இராவணனையே ஜெயிக்கமுடியாமல் நாம் திண்டாடும்போது அவர்களை இப்போது எவ்வாறு ஜெயிப்போம்; அவர்களுள் ஒருவனே எழுபது வெள்ளம் சேனைகளையும் வாயிற் போட்டுக் கொள்ளுவான்; அவர்களை ஜெயித்தல் இராம லக்குமணர்களாலும் முடியாது; திரிமூர்த்திகளாலும் முடியாது; நாங்கள் அவர்களுக்கெதிர்ப்பட்டு அவர்களால் எங்கள் உயிரை ஏன் வீணாகப் போக்கிக்கொள்ள வேண்டும்; இந்த உலகத்தை இராமர் ஆண்டாலென்ன இராக்ஷதர் ஆண்டாலென்ன; அந்த ஆளுகையால் நாங்கள் என்ன இலாபத்தை அடையப் போகின்றோம்? எங்களுக்கு

உணவளிக்கக் காடுகளிருக்கின்றன; நாங்கள் பிழைத்தோடிப் போகின்றோம்; நீர் எங்களைத் தடுத்து அந்த யமன்களுக்கு முன்னே கொண்டு போகாமல் விட்டு விடும்" என்று கெஞ்சினார்கள். அப்போது அங்கதன் அங்கே தலை குனிந்து நின்ற சாம்புவந்தரை நோக்கி, "ஐயா பெரியவரே! இராமருடைய மகிமையைப்பற்றி முன்பு நீரே எங்களுக்கு எடுத்துக் கூறியிருக்கின்றீர்; அப்படியிருக்க அதனை மறந்து நீரும் அந்த இராக்ஷதர்களுக்குப் பயந்தோடி வந்து விட்டீரே; எஃது எப்படி யிருந்தாலும் யுத்தத்திற்குப் பயந்தோடுதல் வீரர்களுக் கழகாகுமோ" என்று கூறினன். அதற்குச் சாம்புவந்தர் வெட்கமுந் துக்கமுமுடையவராய், "அந்தப் பயங்கர வடிவத்தை யுடைய இராக்ஷதர்களைப் பார்த்தவுடனே தைரியங்கொண்டு நிற்றல் என்னால் முடியவில்லை; அதனால் நான் பயந்தோடி வந்துவிட்டேன்; நானே அப்படி ஓடி வந்தபோது கேவலம் மற்ற வானரர்கள் நிற்பார்களா? எப்படியிருந்தாலும் சண்டைக்குப் பயந்தோடுகின்றவர்களுக்கு மறுமையில் நரகங்கிடைக்கும். ஆதலால் இப்போது நாங்கள் திரும்பி வருகிறோம்; ஆனால் நான் இராமர் முகத்தில் விழிப்பதற்கு வெட்கப்படுகிறேன்" என்றார். அதைக் கேட்டு அங்கதன், "யுத்தத்தில் முன்னேறுவதும் பின் வாங்குவதும் வீரர்களுக்கு இயற்கையாக ஏற்படுவனவே. நீர் எதிரிகட்குப் பயந்தோடி வந்ததைப்பற்றி இராமர் உம்மை அவமதிக்கமாட்டார். ஆதலால் நீர் வெட்கப்படாமல் யாவரையுமழைத்துக்கொண்டு என்னுடனே வாரும்" என்றான். அப்படியே சாம்பவர் மற்ற வானரர்களை அழைத்துக் கொண்டு திரும்பிவந்து இராமரிடம் சேர்ந்தார். அதன்மேல் இராமர் அவர்களுக்குத் தைரிய வார்த்தை கூறி விட்டு இலக்குமணனை நோக்கி, "தம்பி! இப்போது இங்கு வந்திருக்கும் இராக்ஷதர்கள் எப்பேர்ப்பட்டவர்களாயிருந்தாலும்

அவர்களை நானொருவனே கொன்று குவித்து விடுகின்றேன்; நான் அவர்களை நாசப்படுத்தி வரும்வரையில், அந்த இராக்ஷதர்கள் வானரர்களை வருத்தப்படுத்தாமல் நீ ஆஞ்சநேயனுடனும், சுக்கிரீவனுடனும் கூடி அவர்களைக் காத்துக்கொள்; எனக்குத் துணையாயிருக்கவேண்டுமென்று நினைக்கவேண்டாம்" என்றார். இலக்குமணன் அதற்கிசைந்து வானர சேனைகளிருக்குமிடத்தை நோக்கிப் புறப்பட்டான். அனுமார் இராமருக்கு வாகனமாயாவது அடிமையாளாயாவது இருக்க விரும்பித் தம்முடைய அபிப்பிராயத்தைச் சொன்னார். அதற்கு இராமர், "அனுமானே! இராவணன் இலக்குமணனிடம் வந்தெதிர்ப்பானானால் அப்போது உன்னுடைய உதவி இலக்குமணனுக்கு வேண்டும்; ஆதலால் நீ அவனுடனிருந்து வானரர்களைக் காத்துக்கொள்" என்றார். அனுமார் மறுவார்த்தை பேசாமல் இலக்குமணனுடன் போனார். அதன்மேல் விபீஷணனையும் சுக்கிரீவனையும் இலக்குமணனுக்குத் துணையாகச் செல்லும்படி இராமர், அவர்களுக்கு ஆக்ஞாபித்தார். அவர்களும் அப்படியே இலக்குமணனோடு சென்றார்கள். மற்ற வானரவீரர்களும் அவர்களுடன் சென்றார்கள்.

அப்படி எல்லோரும் சென்று வானர சேனைகளைக் காத்துக்கொண்டார்கள். பின்பு, இராமர் போர்க்கோலங் கொண்டு மூலபல சேனைகளுக்கு முன்னே வந்து நின்றார். மூலபல இராக்ஷதர்கள் இராமரைப் பார்த்து, "இவன் யாதொரு வாகனமுமில்லாமல் தனித்து வந்து நிற்கின்றானே; எப்படி நம்மை ஜெயிக்கப் போகின்றான்" என்று ஒரு சிங்கத்தை அநேகம் யானைகள் சூழ்ந்து கொண்டது போல் அவரை வளைந்து கொண்டார்கள். அப்போது இராமர் வில்லை வளைத்துக் குணத்தொனி பண்ணினார். அந்தக் கேட்டவுடன், இராக்ஷத சேனைகளெல்லாம் நடுக்கங்கொண்

டன. அதன்மேல் இராமர் எதிரிகளின் தேகங்களிலும், வாகனங்களிலும், ஆயுதங்களிலும் அம்புகளை அளவில்லாமல் சொரிந்தார். அவற்றால் எதிர்ப்பட்ட இராக்ஷதர்களெல்லாரும் மடிந்தார்கள்; அநேகம் யாளிகளும், யானைகளும், குதிரைகளும், தேர்களும், ஆயுதங்களும், அறுபட்டு வீழ்ந்தன; எங்கும் இரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடியது; அந்த வெள்ளத்தில் மூழ்கி அநேகம் படைகள் இறந்தன. ஆரம்பத்திலேயே இராக்ஷதப்படைகளில் இவ்வளவு சேதங்களுண்டாகவே, அடுத்த படையில் வந்த அநேகம் இராக்ஷதர்கள் பற்பல ஆயுதங்களைப் பிரயோகித்து எண்ணிறந்த மலைகளையும் மரங்களையும் பிடுங்கி இராமர்மீது எறிந்தார்கள். சிலர் ஆயுதங்களில்லாமல் வாயால் மாத்திரம் அவரை வைதார்கள். அவர்கள் மீதும் இராமர் மாரியைப் போல் அளவற்ற கொடியபாணங்களைச் சொரிந்தார். அவற்றால் அவர்கள் தலையறுப்புண்டு வீழ்ந்தார்கள்; அவர்களேவிய நூற்றுக்கோடிக் கணக்கான வேல்கள் முதலிய ஆயுதங்களெல்லாம் பொடிப்பொடியாய்ப் போயின. இரத்த வெள்ளம் பெருகிற்று. அதில் அகப்பட்ட யானைக் கூட்டங்கள் கரையேற முடியாமல் சமுத்திரத்தில் அவ்வெள்ளத்தால் கொண்டுபோய்ச்சேர்க்கப்பட்டு மடிந்தன. அதன்மேல் அவர்களுக்குப் பின்வந்த இராக்ஷதர்கள் ஈக்கள் மொய்த்துக் கொண்டதுபோல் இராகவரை மொய்த்துக் கொண்டார்கள். இராமர் அவர்களையும் நிமிஷ நேரத்தில் ஒழித்து விட்டு அப்பால் நின்ற மூலபல சைனியங்களிற் பிரவேசித்து எங்கும் இடசாரி வலசாரியாகத் திரிந்து பாணங்களை ஓயாமற் சொரிந்தார். அச்செய்கையால் எங்கும் அவருடைய உருவங்களே தோன்றின. அத்தோற்றங்களைக் கண்டு இராக்ஷதர்களெல்லாரும், "இஃதென்ன! முன்னே ஓர் இராமன்தானிருந்தான்; இப்பொழுது எண்ணிறந்த இராமர்கள் தோன்று

கின்றார்களே" என்று மயங்கினார்கள். அப்பொழுதும் அவர் ஏவிய இராம பாணங்களால் எண்ணிறந்த இராக்ஷதப்படைகள் ஒழிந்தன.

அப்போது வன்னியென்னும் மூலபல இராக்ஷஸ சேனாதிபதி, மூலபல சேனாவீரர்களைப் பார்த்து "ஒரு மனிதன் நம்முடைய சேனைகளைக் கொன்று கொண்டிருக்க, நீங்களெல்லோரும் மயங்கி யிருக்கின்றீர்களே; உங்கள் வீரம் நன்றாயிருக்கின்றது; எல்லோரும் ஒருமிக்க அவன் மீது பாயுங்கள்" என்று ஆத்திரத்தோடு கூறினான். அதைக் கேட்டதும் எழுவெள்ளம் இராக்ஷத சேனைகள் திரண்டு இராமரை வளைந்துகொண்டு அவர்மீது ஆயுதப்பிரயோகம் செய்தன. அப்போது இராமர் அஸ்திரப் பிரயோகஞ் செய்து அவர்களையும், அவர்களின் ஆயுதங்களையும், தேர், கரி, பரி முதலியவைகளையும் நாசப்படுத்திவிட்டு மேலும் நின்ற எண்ணிறந்த இராக்ஷஸப் படைகளின்மீது ஆயிரக் கணக்கான பாணங்களையேவி, பின்னரும் எண்ணிறந்த பாணங்களால் தமக்கு முன்னே மகா பேரணிவகுத்து அதில் ஊசியும் நுழையாதபடி செய்தார். அப்போது அவர் ஏவிய பாணங்களால் ஆயிரம் அம்புகளுக்குப் பதினாயிரம் பேர்விகிதமாக அளவற்ற இராக்ஷதர்கள் மடிந்தார்கள். இன்னும் அநேகர் இராமரிட்ட அம்பணியைச் சிதைத்துவிட்டு வர யத்தனித்து அவ்வணியிற் புகுந்து, அதிலுள்ள பாணங்களாலேயே மடிந்தார்கள். எஞ்சி நின்ற இராக்ஷதர்கள் இராமர்மீது பலஆயுதங்களை விடுத்தார்கள். அங்ஙனம் ஏவிய படைகள் நொறுங்கி வீழ்ந்தனவேயன்றி இராமரை யொன்றும் செய்யவில்லை. அவ்விடத்தில் இராமரால் நூறு வெள்ளம் மூலபல சேனைகள் ஒழிந்தன. பின்னர் நாலா பக்கங்களிலும் பரவி யிருந்த நூறாயிரகோடி இராக்ஷஸப் படைத்தலைவர்கள் மிகுந்த கோபத்தோடு தங்கள் வாகனங்களைச்

செலுத்திக்கொண்டு வந்து இராமர்மீது இடியை நிகர்த்த பற்பல ஆயுதங்களை விடுத்தார்கள். அப்போது இராமர் கண் சிவந்து கொடிய பற்பல விஷக் கணைகளை மாரிபோற் சொரிந்து சிறிது நேரத்திற்குள் அவர்களுடைய தலைகளை யெல்லாம் அறுத்துத் தள்ளிவிட்டார். அவர்கள் இறந்த வுடனே அவர்களுடன் வந்த இராக்ஷஸப் படைகளெல் லாம் பயந்தோடி விட்டன. அப்படி யோடியவர்களைச் சில ராக்ஷத வீரர்கள் தடுத்துத் திருப்பி யழைத்துக்கொண் டும், இரதங்களிலும் யானைகளிலும் குதிரைகளிலும் சிம்மங் களிலும் ஏறிக்கொண்டும், இடிகளையும் மின்னல்களையும் நிகர்த்த பாணங்களை ஏவிக்கொண்டும் வந்து இராமருடன் எதிர்த்தார்கள். இராமர், அவர்களைநோக்கி 'வாருங்கள்!!' என்று அவர்கள்மீது அக்கினி முகாஸ்திரங்களை மழை போலச் சொரிந்தார். அவற்றால் ஒரு பாணத்திற்கு அனே கம் இராக்ஷதர் படைகள் விகிதம் எண்ணிறந்த இரதகஜ துரக பதாதிகள் மாண்டொழிந்தன. அப்போது மாண்ட வர்கள் தவிர மீதி யிருந்தவர்கள் தப்பியோடாதபடி இரா மர், பாணங்களால் மதில்கட்டி அவர்கள் செல்லும் வழியை அடைத்து விட்டு மேலும் அளவற்ற அம்புகளை அவர்கள் மீது ஏவினார். அப்பாணங்களுக்குப் பயந்து அவர்களெல் லோரும் நடுங்கியோடி அந்த மதிலைக் கடக்க முடியாமல் ஒரு மூலையில் ஒதுங்கினார்கள். அதுவரை ஆயிரம் வெள்ளம் இராக்ஷத சேனைகள் இராமபாணங்களால் ஒழிந்து போய் விட்டன. அப்போது அவ்வாறொதுங்கிய இராக்ஷதர்கள், "இதுவரை நம்முடைய பலத்தை எவரும் ஒடுக்கினதில்லை; இந்த ஒரு மனிதன் அடக்கிவிட்டான்; இதுவரை இவனால் ஆயிரம் வெள்ளம் சேனைகள் தொலைந்தன; நாம் தப்பி யோடி விடலாமென்று நினைத்தால் பாண மதில் நம்மைத் தடுத்துக்கொண் டிருக்கின்றது; ஆதலால் நாமெல்லோரும்

ஒரே முகமாகச் சென்று அந்த மனிதனுக்கே உயிரைக் கொடுத்து விடலாம்" என்று எல்லோரும் திரண்டுவந்து இராமர்மீது பல திறப்பட்ட ஆயுதங்களைப் பிரயோகித்தார்கள். அப்போது இராமர் காந்தருவாஸ்திரத்தை அவர்கள் மீது பிரயோகித்து விட்டார். அது சர்ப்பத்தைப் போலவும், கருடனைப்போலவும் வேகங்கொண்டு பாய்ந்து பத்துக் கோடி இராக்ஷஸ வீரர்கள் தவிர, அவர்களுடன் வந்த மற்ற மூலச்சேனைகளை யெல்லாம் இமைப் பொழுதுக்குள் சூரணமாக்கி விட்டது. எஞ்சிநின்ற அந்தப் பத்துக்கோடி வீரர்களும், "இந்த இராமன் நம்மிலொருவனைக் கொல்லுவானுல் நிச்சயமாக இராவணனைக் கொல்லுவான்; எனினும் நாம் தனித்தனியே செல்வோமானுல் ஒரு வேளை இவனுக் கிளைத்துப் போனுலும் போவோம்; ஆதலால் நாமெல்லோரும் ஒன்ருகச்சேர்ந்து இவனுடன் போர்தொடுப்போம்" என்று நிச்சயம் பண்ணிக்கொண்டு இராமருக்கு முன்னே வந்து தோள்களைத் தட்டி ஆர்ப்பரித்தார்கள். உடனே இராமருக்கும் அவர்களுக்கும் மும்முரமான யுத்தம் நடந்தது. அதில் அந்த இராக்ஷதர்கள் எண்ணிறந்த ஆயுதங்களை இராமர்மேல் ஏவினுர்கள். இராமர் அவ்வாறு அவர்களேவிய ஆயுதங்களைத் தம்முடைய அம்புகளால் போக்கி விட்டு அநேகம் திவ்வியாஸ்திரங்களை அவர்கள் மேல் பிரயோகித்தார். அவற்ருல் அநேகர் தேரோடு மடிந்தார்கள்; சிலருடைய கைகள் வில்லுடனே அறுந்து வீழ்ந்தன; இரத்த வெள்ளம் பெருகிற்று; அதில் அநேகம் யானை குதிரைகள் வீழ்ந்திறந்தன; மேலும் இராமர் பற்பல விடங்களிலும் சாரிசுற்றி அஸ்திரப் பிரயோகஞ் செய்தார். அதனுல் அங்குள்ள இராக்ஷத வீரர்களுக்கு எங்கும் இராமர் வடிவங்களே காணப்பட்டன. அவ்வடிவங்களால் அவர்கள் மயங்கி ஒருவரையொருவர் இராமர் என்று நினைத்து வெட்

டிக்கொண்டு அவர்களிற் பலர் மடிந்தார்கள். இராமருடைய கோதண்டத்தில் கட்டிய மணி யோசையையும் அதன் குணத்தொனியையுங் கேட்டுப் பல வீரர்கள் இறந்தார்கள். யானை குதிரைகளும் மாண்டன. அதுவரை இராமருக்கு முன்னே ஒரு பக்கத்தில் நின்ற இரண்டுகோடி இராக்ஷத வீரர்கள் மாண்டு போனார்கள்.

பின்னர், எஞ்சியிருந்த வீரர்களெல்லோரும் திரண்டு மிகுந்த ஆத்திரங்கொண்டு தேவாஸ்திரங்களை யெல்லாம் இராமர்மீது பிரயோகித்தார்கள். அந்த அஸ்திரங்களைக் கண்டு தேவர்களும் நடுநடுங்கினார்கள். இராமர் அவற்றைக் கண்டு புன் சிரிப்புக்கொண்டு அவற்றுள் ஒவ்வொரு பாணத்திற்கும் அதனதன் இனங்களாகிய பாணங்களை எவி அந்த எல்லா அஸ்திரங்களையும் கண்டித்துவிட்டு, மேலே தாமும் தேவாஸ்திரங்களைச் செலுத்தினால் அவர்கள் நாசமாவதோடு உலகங்களுக்கும் கெடுதி சம்பவிக்கு மென்று அவற்றைச் செலுத்தாமல் குரூரமாகிய வேறு பல அம்புகளை யேவி அவர்கள் தலைகளை யெல்லாம் அறுத்துத் தள்ளிவிட்டார். அவர்கள் இறந்ததோடு மூலபல சேனைகள் யாவும் ஒன்று தவறாமல் ஒழிந்து போயின. அங்ஙனம் ஒழிந்ததைக்கண்டு சகல தேவர்களும் சந்தோஷித்து அந்தச் சந்தோஷத்தால் இராமர்மீது மலர்களையும், சந்தனக் குழம்பையும் வாரி யிறைத்தார்கள். அவற்றால், இராமர் யுத்த ஆயாசந் தீர்ந்து இலக்குமணன் முதலியவர்கள் இருக்குமிடத்தை நோக்கிச் சென்றார்.

இராவணன் வதை.

இராமர் செய்கை இப்படியிருக்க, இலக்குமணனும் வானரர்களும் என்ன செய்தார்களென்றால், இலக்குமணன், சுக்கிரீவன் முதலியவர்கள் இராமரிடம் விடை பெற்றுச்

சென்றபின் வானர சேனைகளை ஓரிடத்திற் சேர்த்துப் பாது காத்துக்கொண்டு நின்றார்கள். இராவணன் முன்னே சொன்னபடி மூலபல சேனைகளை இராமர்மீது ஏவிவிட்டு, தேவர்களை வென்ற வில்லுடன், ஆயிரங் குதிரைகள் பூட்டிய தேரிலேறி, நூறு கோடி தேர்வீரர்களும், இருநூறு கோடி குதிரை வீரர்களும், பத்துக்கோடி யானை வீரர்களும், ஆயிரத்து முந்நூறு கோடி பதாதிவீரர்களும் புடைசூழ, இரண பேரிகைகள் முழங்க யுத்தகளஞ் சேர்ந்து மேற்கூறியபடி கூடி நின்ற வானர சேனைகளைக் கண்டு அச்சேனாவீரர்கட்கு முன் வீரகர்ஜ்ஜனை செய்தான். அங்ஙனம் கர்ஜ்ஜித்த அவனையும் இராக்ஷத சேனைகளையும் கண்டவுடன் வானரர்களும் திடங்கொண்டு தமக்குள்ளே அணிவகுத்து நின்று தோள்களைக் கொட்டி ஆரவாரித்தார்கள். அதன்மேல் இருதிறப் படைகளும் யுத்தஞ்செய்ய ஆரம்பித்தன. அச்சண்டையில் இரண்டுபக்கங்களிலும் பற்பல சேதங்கள் உண்டாயின. அப்போது இலக்குமணனும் கையில் வில்லேந்தி எங்கும் சாரிகைதிரிந்து, அளவிறந்த அம்புகளை யேவி அநேகம் இராக்ஷத சேனைகளைக் கொன்றான். மேலும் வானரர்கள் இராக்ஷதர்களைக் கடித்துச் சின்னாபின்னப் படுத்தினார்கள். அரக்கர் அநேகம்படைகளை அவர்கள்மீது செலுத்தினார்கள். அவ்வாறு ஏவிய ஆயுதங்கள் அவ்வானரர்களைக் காயப்படுத்தவில்லை. அச்செய்கைகளைக்கண்ட இராவணன், ‘இனி நாம் தாமதித்திருந்தால் அரக்கர்களெல்லோரும் மடிவார்கள்’ என்று ஆத்திரங்கொண்டு கொடிய அம்புகளை வானரர்கள்மீது அணியணியாகப் பிரயோகித்தான். அவற்றால் வானரர்கள் சின்னாபின்னப்பட்டு நாலாதிக்குகளிலும் பயந்தோடினார்கள். அவ்வாறு ஓடுவதைக்கண்டு இலக்குமணன் அவர்களைத் தடுத்துப் பயப்பட வேண்டாமென்று அவர்களுக்குத்

தைரியங் கூறிவிட்டு அனுமார் தோளின்மேலேறிக்கொண்டு இராவணனோடெதிர்த்தான். அவன் நூறுகோடிக்கு அதிகமான அம்புகளை இலக்குமணன் மீது செலுத்தினான். இலக்குமணன் தன் அம்புகளால் அவற்றை அறுத்துத் தள்ளினான். உடனே இராவணன், இலக்குமணனுடைய தோள்களிலும் மார்பிலும் அழுந்தும்படி பத்துப் பாணங்களைச் செலுத்தினான். இலக்குமணன் அவற்றிற்குத் தளராமல் இலங்காதிபனுடைய தோள்களிலும் மார்பிலும் தைக்கும்படி பத்து அம்புகளை எவினான். அவைகள் பட்டவுடன் இராவணன், அவஸ்தை யடைந்து, "ஒகோ! நாம் தெரியாமல் வந்து இந்தச் சிறுவன் கையில் அகப்பட்டுக் கொண்டோம்; திரும்பிப் போய்விடலாமென்றாலோ அது கேவலமாகமுடியும்; நாம் எந்த அஸ்திரங்களைச் செலுத்தினாலும் இவன் தடுத்துவிடுவான்; ஆயினும் கொஞ்சநேரம் எதிர்த்துப்பார்ப்போம்" என்று சிவனிடத்திலிருந்து பெற்ற மோகனாஸ்திரத்தை யெடுத்து மந்திரித்து இலக்குமணன் மீது விடுத்தான். அதைக்கண்டு விபீஷணன், "இந்த அஸ்திரத்தை நாராயணாஸ்திரத்தால் அறுத்துத்தள்ளும்" என்று இலக்குமணனிடம் சொன்னான். அவன் அப்படியே அதனை அறுத்து விட்டான்.

அதைக்கண்டு இராவணன், "இந்த விபீஷணன் எதிரிகளுக்கு உபாயங்களைச் சொல்லியல்லவா நமக்குக் கேட்டையுண்டாக்குகிறான்; இவனை நான் முதலில் ஒழித்து விடுகிறேன்" என்று, தான் மண்டோதரியைக் கலியாணஞ் செய்தகாலத்தில், தன் மாமனாகிய மயனால் தனக்குக் கொடுக்கப் பட்டதும், பிரமனுடைய யாகத்தில், உற்பத்தி யானதுமாகிய வேலாயுதத்தை யெடுத்து விபீஷணன் மேல் எறிந்தான். விபீஷணன் அந்த வேலினுடைய வல்லமையை உணர்ந்தவனாதலால், இலக்குமணனை நோக்கி, "இராமாநு

ஜரே! இந்த வேல் என்னுயிரை வாங்காமற் போகாது; இதைத் தடுக்கும் உபாயமொன்றுமில்லை" என்றான். இலக்குமணன், 'இதோ நான் அதைத் தடுத்து விடுகின்றேன்' என்று உக்கிரமான பல ஆயுதங்களை அதன் மீது செலுத்தினான். அவை அதனைத் தடுக்கமுடியாமற் போயின. அதன்மேல் இலக்குமணன், "இந்த வேல் கட்டாயம் விபீஷணரைக் கொன்றுவிடும்; இராமரிடம் அடைக்கலம் புகுந்த இவரை நம் கண்ணெதிரே நாம் சாகவிட்டால் நமக்குப் பழிவந்து சாரும்; ஆதலால் நம்முடைய உயிரைக் கொடுத்தாவது இவரைக் காப்பாற்ற வேண்டும்" என்று விபீஷணனுக்கு முன்னே சென்று வேலுக்கு எதிரில் தன் மார்பைக் காட்டிக்கொண்டு நின்றான். விபீஷணன் அவனை விலக்கி விட்டுத் தானே முன் சென்று நின்றான்; அவ்விருவரையும் விலக்கி அங்கதன், 'நான் சாகிறேன்' என்று முன்னேபோய் நின்றான்; சுக்கிரீவன் அம்மூவரையும் தடுத்துவிட்டுத் தான் வேலுக்கு மார்பைக் காட்டி நின்றான்; ஆஞ்சனேயர், 'நானிருக்க நீங்களெல்லாம் என் போகின்றீர்கள்; இந்தச் சமயத்தில் உதவாமற் போனால் நான் இராகவருக்குச் சரியான அடிமையர்வேனா" என்று எல்லோருக்கும் முன்னே போய் நின்றார். முடிவில் இலக்குமணன், அவர்களையெல்லாம் விலக்கி விட்டு, 'நானே இந்த வேலை ஏற்றுக்கொள்வதற் குரிமை யானவன்; நீங்களெல்லாம் ஒதுங்கி நில்லுங்கள்' என்று முன்னே போய் நின்று வீரத்தோடு அந்த வேலைத் தன் மார்பில் ஏற்றுக் கொண்டான். அது பாய்ந்த மாத்திரத்தில் இலக்குமணன் கீழே சாய்ந்தான்; இராவணன் 'இப்போது இந்த வெற்றியே நமக்குப் போதும்' என்று சீக்கிரமாகத் தன் தேரைச் செலுத்திக்கொண்டு நகரத்திற்குத் திரும்பிப்போயினான். அப்படிப் போனவனை விபீஷணன், "அடா துராத்மாவே! நீ எங்கேதப்பியோடுகின்

ருய்; நில்! நில்!!" என்று தடுத்துத் தன்னுடைய தண்டாயுதத்தால் மோதியடித்து அவனுடைய தேர்க் குதிரைகளையும், சாரதியையும் அழித்து விட்டான். உடனே இராவணன் ஆகாயத்தில் எழும்பி நின்று அதிக கோபத்தோடு விபீஷணன் மேனியில் பத்தம்புகளை அழுத்தி விட்டு, அனுமார் மீதும் ஆயிரம் அம்புகளை ஏவி, 'யுத்தம் முடிந்தது' என்று ஆனந்தத்தோடு தன் நகரம் போய்ச் சேர்ந்தான்.

அதன்மேல் விபீஷணன், இலக்குமணன் சமீபத்தில் உட்கார்ந்து, 'இனி நான் உயிர் வைத்திருக்க மாட்டேன்' என்று புலம்பினன். அப்போது சாம்பவர் அவனை நோக்கி, "விபீஷணரே! இளையபெருமாளை எழுப்புதற்கு மார்க்கமிருக்கும்போது நீரேன் விசனப்படுகின்றீர்" என்று சொல்லிவிட்டு ஆஞ்சனேயருடைய மார்பில் தைத்திருந்த அம்புகளையெல்லாம் மிருதுவாகப் பிடுங்கிவிட்டு அவரைப் பார்த்து, "மகானுபாவரே! இராமபிரான், இளையபெருமாளுடைய நிலைமையைக் கண்டு வருந்துவதற்கு முன் நீர் சஞ்சீவியைக் கொண்டுவந்து இவரை எழுப்பி விடவேண்டும்" என்று கூறினர். உடனே ஆஞ்சனேயர் ஆகாயத்திற் கிளம்பிப் போய் அந்தச் சஞ்சீவி மருந்தைக் கொண்டு வந்தார். அதன் காற்று மேலேபட்ட மாத்திரத்தில் இலக்குமணன் உயிர்த்தெழுந்து, ஆஞ்சனேயராலேயே தான் பிழைத்ததை யுணர்ந்து அவரைத் தழுவிக்கொண்டு, விபீஷணன் யாதொரு அபாயமுமில்லாமலிருப்பதைப் பார்த்துச் சந்தோஷித்துப் பின்னர் எல்லோரையும் நோக்கி, "ஆஞ்சனேயன் இருக்கும்போது இராமபிரானுக்குத் துக்கமும் உண்டாகுமோ" என்று அவரைப் புகழ்ந்து பேசினன். அதன்மேல் எல்லோரும் எழுந்து, பிரேதக் குவியல்களையும் இரத்த வெள்ளத்தையும் தாண்டிப்போய், முன்னே கூறிய

படி அவர்களிருக்கும் திக்கை நோக்கி வந்துகொண்டிருந்த இராமரைக்கண்டு வணங்கினார்கள். அப்போது இராமர் அவர்களை நோக்கி, "உங்கள் பக்கம் நடந்த யுத்தம் எவ்வாறு முடிந்தது?" என்று வினவ, சாம்பவர் அங்கே நடந்தவைகளை யெல்லாம் விவரமாகக் கூறினார். அவற்றைக் கேட்ட இராமர் அனுமாரைத் தழுவிக்கொண்டு, "மாருதி! உன்னை யான் பெற்றிருக்கும்போது எனக்குத் துக்கமேது" என்று கொண்டாடிப் பக்கத்தில் கண்ணீரொழுக வணங்கி நின்ற இலக்குமணனை நோக்கி, "அப்பா இலக்குமணா! நீ விபீஷணனுக்காக உயிரைக் கொடுத்தது நம் மரபுக்குத் தக்கதே; புறுவுக்காகத் தம் சரீரத்தை அரிந்து கொடுத்த சிபிச் சக்ரவர்த்தியும் உனக் கீடாக மாட்டார்" என்று புகழ்ந்து, அவன் அணிந்திருந்த யுத்த பூஷணங்களை யெல்லாம் களைந்து, வில்லை ஆஞ்சனேயர் கையில் கொடுத்து விட்டுத் தம் தலையில் சுருண்டு நீண்டு தொங்கிய கேசத்தால் வீசி அந்த இலக்குமணனுடைய ஆயாசத்தை ஆற்றிக்கொண்டிருந்தார். அத்தருணத்தில் சுக்கிரீவன் இராமரை வணங்கி, "சுவாமி! இந்த உலகத்தையே புரட்டி விடத்தக்க மூலபல சேனைகள் வந்தனவே; அவை யெல்லாம் எவ்விதமாயின?" என்று கேட்டான். அதற்கு இராமர், "படைத் தலைவர்களுடன் நீ யுத்தகளஞ் சென்று அவர்களைப் பார்" என்றார். உடனே சுக்கிரீவன் வானர வீரர்களுடனும் விபீஷணனுடனும் போய்ப் போர்க்களத்தைப் பார்த்து மூலபலசேனைகள் கால்மாடு தலைமாடாக மாண்டு கிடப்பதைக் கண்டு "ஆ! ஆ!! இத்தனை பேர்களையும் சுவாமி ஒரு வில்லுடனே எப்படிக் கொன்றாரோ!" என்று அதிசய முற்றான்; மற்றவர்கள் "இவர்களைக் கொல்லும் விஷயத்தில் சுவாமிக்கு எவ்வளவு ஆயாசந் தோன்றிற்றோ" என்று வருந்தினார்கள்; பின் எல்லோரும் இராமரைப் பலவாறு கொண்டாடினார்கள். அவ்

வாறு கொண்டாடி, இராக்ஷதப் பிணங்கள் கண்ணுக்கெட்டாத தூரம் வரையில் பரவிக் கிடந்தபடியால், 'இரணகளம் முழுமையும் சுற்றி இந்தப் பிணங்களைப் பார்த்துக் கணக்கிட நம்மால் முடியாது; ஆதலால், நாம் சுவாமியிடமே திரும்பிப் போவோம்' என்று இராமரிடம் சென்று வணங்கி அவர் பக்கத்தில் உட்கார்ந்தார்கள்.

இவர்கள் இப்படி யிருக்க, வானரர்களைத் துன்பப் படுத்தி இலக்குமணனை வேலால் வீழ்த்திச் சென்ற இராவணன், ஜெயம் பெற்று வந்ததாக நினைத்துச் சந்தோஷித்து, யுத்தத்தைப்பற்றித் தன்னிடம் விசாரிக்க வந்தவர்களுக்கும், யுத்தத்தில் இளைத்து வந்தவர்களுக்கும் தன் மாளிகையில் விருந்து செய்து மது மாமிசங்களை உண்டு செருக்குற்றிருந்தான். அத்தருணத்தில் யுத்தகளத்திலிருந்து சென்ற சில தூதுவர்கள், மூலபல சைனியங்களெல்லாம் தொலைந்ததை அவன் செவிகளில் மெதுவாகச் சொன்னார்கள். அதைக் கேட்டவுடன் அந்த இராவணன் துடிதுடித்து, "அவ்வளவு சேனைகளையும் அந்த ஒருமனிதன் கொன்றுவிட்டானென்பதில் எனக்கு நம்பிக்கையில்லை; நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள்" என்றான். அப்போது மாலியவான், "அப்பா! இராவணா! அதில் நீ சந்தேகப் படாதே; அந்த இராமர் நிச்சயமாக எல்லோரையும் மடித்தேயிருப்பார்; அவர் இந்த உலகங்களை யெல்லாம் அழிக்கவேண்டு மென்றாலும் அழித்து விடுவார்; அவருக்கு இந்த மூலபல சேனைகள் எம்மாத்திரம்! சாக்ஷாத் பரப்பிரம வஸ்துவே அவர் என்று விபீஷணன் சொன்னது உண்மையே; எவ்விடத்திலும் வெற்றியே கொண்டுவந்த நீ இப்போது அவர் முன்பு அபஜெயப்பட்டு வருவதனாலேயே அவருடைய மகிமை உனக்கு விளங்கவில்லையா? இனி நீ வேறொன்றும் யோசிக்காதே; பேசாமல் சீதாபிராட்டியா

ரைக் கொண்டுபோய் அவரிடம் விடுவித்துப் பிழைக்கும் மார்க்கத்தைத் தேடிக்கொள்" என்று சொன்னான். இவற்றைக்கேட்டதும் இராவணன் மாலியவானைக் கோபத்தோடு பார்த்து "கிழட்டுப்பிணமே! உனக்கென்ன தெரியும்; நான் இலக்குமணனைக் கொன்று வந்தேன்; அவனிறந்த துக்கத்தால் வானரர்கள் அழுதுகொண்டிருக்கிறார்கள்; அம்மரணத்தைக் கேள்விப்பட்டவுடன் இராமனும் இறந்து போவான்; இனி எனக்குண்டாவது ஜெயமே" என்று சொன்னான். அவன் அவ்வாறு சொல்லி முடிப்பதற்குள்ளே அங்கே நின்ற தூதர்கள், பயத்துடன், அவனிடம் "எங்களிறைவரே! அனுமான் சஞ்சீவிமருந்து கொண்டுவந்ததால் இலக்குமணன் பிழைத்தெழுந்தான்; அதன்மேல் எல்லோரும் ஓரிடத்திற் சேர்ந்து குதூகலமாயிருக்கின்றார்கள்" என்றுரைத்தார்கள். அவற்றைக் கேட்டவுடன் இராவணன் திடுக்கிட்டு அவர்கள் சொல்லை நம்பாமல் தானே அவ்விஷயங்களை நேரில் பார்த்தறிய வேண்டுமென்று கோபுரத்தின் மேலேறி அளவற்ற இராக்ஷத சேனைகள் மடிந்துகிடப்பதையும், இலக்குமணன் பிழைத்ததால் வானரர்கள் ஆரவாரித்துக்கொண்டிருப்பதையும் பார்த்து, மனம் புண்ணாகி, ஆத்திரத்தோடு கோபுரத்தை விட்டிறங்கி மிக்க கோபங்கொண்டு வந்து கொலுக்கூடத்திலமர்ந்து மகோதரனை நோக்கி, "போரில் மாண்டவர்கள் தவிர இந்நகரத்தில் மீதியாயிருக்கும் இராக்ஷதர்களெல்லோரும் போர்க்கோலம் பூண்டு வரும்படி பணியாளரால் பறைசாற்றுவிக்கக்கடவாய்" என்று கட்டளை யிட்டான். அவன் அவ்வாறே அதனை நிறைவேற்றினான். உடனே ஆயிரத்து நானூறு கோடி இராக்ஷத வீரர்கள் நால்வகைப் படைகளுடன் இராவணன் முன் வந்து கூடினார்கள். அவர்களுக்குப் பின் இலங்கையில் சண்டைக்கு வரத்தக்க இராக்ஷதன் ஒருவனுமில்லை.

அவ்வாறு எல்லோரும் வந்து கூடியவுடன், இலங்காதிபன் தன் குலதெய்வமாகிய சிவபெருமானைப் பூஜித்து, தன் நகரத்திலுள்ள சிவாலயங்களுக்குச் சிறப்புச் செய்து, மற்ற நாட்களில் தான் செய்து கொண்ட அலங்காரங்களைக் காட்டிலும் அன்றைக்கு விசேஷமாக யுத்த அலங்காரங்களைச் செய்துகொண்டு, திரிலோகங்களையும் சுமந்து செல்லக்கூடியதும், குதிரைகளில்லாமலே நினைத்த விடங்கட்குச் செலுத்தத்தக்க எந்திரங்களமைந்ததும், திருப்பாற்கடலில் அமுதத்தோடு பிறந்தவைகளும், வடவாமுகாக்கினியினிடத்தும் பிரசண்ட மாருதத்திலும் ஜனித்தவைகளும், பகவானுடைய பச்சைக் குதிரையின் வமிசத்தில் தோன்றியவைகளுமாகிய குதிரைகளைப் பூட்டியதும், ஆகாயத்திலும், நெருப்பிலும், நீரிலும், மேருவின்மேலும் ஓடத்தக்கதும், ஆயிரங்கோடி மணிகளையுடையதும், இரத்தினங்களெங்கும் பதிக்கப்பெற்றதும், மகாவலிமையுள்ள ஆயுதச் சுமைகளையுடையதும், அழியா வியல்பினை யுடையதுமாகிய இரதத்திலேறி, மிக்க தானதர்மங்களைச் செய்து "இன்று எதிரிகளை மடிக்காமல் நான் திரும்புவதில்லை" என்று வீராவேசங்கொண்டு யுத்தத்திற்குப் புறப்பட்டான். அங்குக்கூடிய படைகளெல்லாம் அவனுடன் சென்றன. அவ்வாறு புறப்பட்ட அவன், தன் தோள்களைக் கொட்டி ஆரவாரித்து மேருவும் அதிரும்படி வில்லை வளைத்துக் குணத்தொனி செய்து மிகுந்த கோபத்தோடு யுத்தகளம் போய்ச் சேர்ந்தான்.

விபீஷணன் அவனைக் கண்டு இராமரிடம் விரைந்து சென்று, "சுவாமி! இராவணன் சேனைகளுடன் வந்துவிட்டான்" என்று சொன்னான். வானரர்கள், இராவணனுடைய உக்கிரத்தைக் கண்டு பயந்து, இராமரிடம் ஓடிவந்து, "சுவாமி! எங்களைக் காப்பாற்றவேண்டும்" என்று

அவரை ஸ்தோத்திரம் பண்ணினார்கள். இராமர் உக்கிரத்துடன் விபீஷணனையும் வானரவீரர்களையும் பார்த்து, "இன்றோடு ஜானகியின் துன்பமும், தேவர்கள் துயரமும் நீங்கிவிடும்" என்று சொல்லி யுத்த கோலங் கொண்டெழுந்தருளினார். அப்போது ஆகாயத்தில் வேடிக்கை பார்க்க வந்திருந்த தேவர்களுள் பரமசிவன், மற்ற தேவர்களை நோக்கி "இராக்ஷதர்களுடைய சண்டை இன்றோடு முடிவடையப் போகின்றது. இராமபிரான் இன்றைக்கு வெற்றியடையப் போகின்றார்; இனி இராக்ஷத வுபத்திரவம் நமக்கேற்படாது; ஆதலால், இராமருக்குப்பொன்னால் அமைத்த இரதத்தை அனுப்புங்கள்" என்று சொன்னார். இந்திரன் அப்படியே அந்த இரதத்தைக் கொண்டு வரும்படி தேவர்களுக்குக் கட்டளையிட்டான். அவர்கள் அக்கட்டளையை மாதலிக்குத் தெரிவித்தார்கள். உடனே மாதலி, தெய்விகம் பொருந்திய அத்தேரைக் கொண்டுவந்து இந்திரனுக்கு முன்னே நிறுத்தினான். அந்த இரதமோ எண்ணிலடங்காத சிறப்புக்களை யுடையது; இராவணனுடைய தேருக்கு எத்தனையோ மடங்கு உயர்ந்தது. இந்திரன் அதனைப் பார்த்ததும் மாதலியை நோக்கி, "நீ இந்தத் தேரைக் கொண்டு போய்ப் பூவுலகத்தில் சேர்த்து இராமரை இதில் எழுந்தருளச் செய்து அவருடைய யுத்தத்திற்குத் தக்கபடி இதனைச் செலுத்தக்கடவாய்" என்று கட்டளையிட்டான். அப்போது தேவர்கள், "ஒ சிரேஷ்டமான இரதமே! நீ இராமருக்கு ஜெயத்தை உண்டாக்கி எங்களுடைய துன்பத்தைப் போக்கக் கடவாய்" என்று கற்பகமலர்களை அதன்மேல் வாரி யிறைத்தார்கள். அதன்மேல் மாதலி அத்தேரை இராமருக்கு முன்னே கொண்டுவந்து சேர்த்தான். இராமர் அத்தேரைப் பார்த்ததும், "இத்தகைய சிறப்புடைய தேரை நாம் இதுவரை பார்த்ததில்லை; இது யாருடை

யதோ!" என்று அதிசயித்து மாதலியை நோக்கி, "இது யாருடையது? நீ ஏன் இதை என்னிடம் கொண்டு வந்திருக்கின்றாய்?" என்று வினவினார். அதற்கு மாதலி, "சுவாமி! இது, சிவபெருமானாலும், பிரம்மாவினாலும் பூர்வத்தில் சிருஷ்டிக்கப்பட்டது" என்று சொல்லி அதைத் தான் கொண்டு வந்த காரணத்தையுங் கூறி, மேலும், "இத்தேர், தன்மீதமர்வோர் அண்டங்களைத் தன்மேல் வைத்துத் தன்னை நடத்தினாலும் சலனமில்லாமற்சுமந்து செல்லும்; குறுக வேண்டியபோது குறுகும்; உயர வேண்டியபோ துயரும்; தேவரீருடைய பாணத்தைப்போல் வேகமாகச் செல்லும்; நீரின்மேலும், நெருப்பின் மேலும், ஆகாயத்திலும் செல்லும்; சப்த சமுத்திரங்களையும் பதினாலு லோகங்களையும் கணப்பொழுதில் சுற்றிவரும்" என்று கூறினான். இராமர் அவன் சொல்லை நம்பாமல், 'இத்தேர் இராக்ஷதர் மாயையால் நம்மைக் கெடுக்க அனுப்பப்பட்டதா யிருக்குமோ' என்று சந்தேகித்தார். அத்தேரிற் பூட்டிய குதிரைகள், அதையுணர்ந்து 'சுவாமி! இந்த மாதலி சொல்லியவைகளெல்லாம் உண்மையே; நீர் சந்தேகப்படவேண்டாம்' என்று இராமரிடம் கூறின. அதன்மேல் இராமர் மாதலியை நோக்கி, "நீ யார்?' என்று கேட்டார். அவன் தன் வரலாற்றைக் கூறினான்; பின்னர் இராமர் பக்கத்தில் நின்ற இலக்குமணனையும், அனுமாரையும் நோக்கி, 'இந்தத் தேரைப்பற்றி உங்களுடைய அபிப்பிராயமென்ன?' என்று கேட்டார். அவர்கள், 'இது நிச்சயமாக இந்திரனுடைய இரதமென்றே எங்கட்குத் தோன்றுகிறது' என்றார்கள். அதன்மேல் தேவர்களும் முனிவர்களும் களிக்க இராமர் அந்த இரதத்தின்மீது எழுந்தருளினார்: தேவர்கள் அவர் மீது புஷ்பமாரி பொழிந்தார்கள். மாதலி அத்தேரை யுத்தகளத்திற்குச் செலுத்தினான்.

இராவணன் அதைப் பார்த்தவுடன், அது தேவர்களால் இராமருக்கனுப்பப்பட்ட தென்பதைத் தெரிந்துகொண்டு, "நமக்கு நடுங்கிக் கிடந்த தேவர்கள், இன்றைய யுத்தத்தில் நாம் அந்த மனிதனால் மாண்டுவிடுவோ மென்று நிச்சயித்து அவனுக்குத் துணையாக இத் தேரை அனுப்பி யிருக்கின்றார்கள்; அவர்களுக்கென்னதைரியம்! அந்த இராமனை முதலில் நான் கொன்றுவிட்டுஅதன்மேல் அவர்களை ஹிம்சிக்கிறேன்" என்று பற்களைக் கடித்து, இராமருக்குமுன்னே தன் இரதத்தைச் செலுத்தும்படி சாரதிக்குக் கட்டளையிட்டான். அவன் அப்படியே செலுத்தினான். அப்போது இராமர் மாதலியை நோக்கி, "இராவணன் செய்பவைகளை யுணர்ந்து நான் செய்யப்புகும் காரியங்களுக்குத் தக்கபடி என் குறிப்பறிந்து நீ தேர்ச்சாரத்தியம் செய்யவேண்டும்; நீயாக அவசரப்பட்டு ஒன்றும் செய்துவிடாதே" என்று சொன்னார். அவன், அப்படியே சாரத்தியம் செய்வதாகக் கூறினான். அதற்குள் இராவணன் இராமருக் கெதிரில் வந்தான். அவ்விருவரும் யுத்தஞ் செய்யத் தொடங்கினார்கள். அப்போது மகோதரன் இராவணனை நோக்கி, "இலங்காதிபரே! நீர் போர் செய்யும்போது நான் சும்மா நின்றுகொண் டிருப்பது அழகல்ல; நானும் போர் செய்யுமாறு நீர் எனக்கு உத்தரவு கொடுத்தால் எதிரிகளை நாசப்படுத்தி விடுகின்றேன்" என்றான். அதற்கு இராவணன், "மகோதரா! நான் இந்த இராமனை ம்டித்து விடுகிறேன்; நீ சென்று இலக்குமணனோடு போர்செய்து அவனை என் பக்கம் வராமல் தடுத்துக்கொள்; அதுவே நீ எனக்கு வெற்றியைக் கொடுத்ததாகும்" என்றான். மகோதரன், 'அப்படியே அதனைச் செய்து முடிக்கின்றேன்' என்று சொல்லிவிட்டுத் தன் இரதத்தோடு இலக்குமணனிருக்கும் பக்கத்தை நோக்கிச் சென்றான். அப்போது இராமருடைய தேர் அவனுக் கெதிர்ப்பட்டது. அதைக்

கண்டவுடன் மகோதரன் தன் சாரதியை நோக்கி, "நீ நம்முடைய தேரை இராமனுடைய இரதத்தில் முட்டும்படி ஓட்டு" என்று சொன்னான். உடனே சாரதி அவனிடத்தில், "ஐயா! இன்று இராமருடைய உக்கிரத்தைப் பார்த்தால் பயங்கரமாயிருக்கின்றது; யார் அவருடன் எதிர்த்தாலும் மடிவார்கள்; நீர் வேறொரு பக்கம் நழுவிவிடுவதே நல்லதாகும்" என்றான். அதற்கு மகோதரன் அவனைக் கோபித்தான். சாரதி அவனுடைய கோபத்திற்குப் பயந்து அவனுத்தரவின்படியே இராமருக் கெதிரில் தேரைச் செலுத்தினான். மகோதரன் இராமரோடெதிர்த்தான். அவனுக்கும் இராமருக்கும் மும்முரமான யுத்தம் நடந்தது. அதில் சிறிது நேரத்திற்குள் மகோதரனுடனிருந்த நால்வகைப் படைகளும் இராமபாணத்தால் ஒழிந்து அவன் மாத்திரம் தனித்து நின்று இராமருடைய தேர்மீதும், சாரதியின் மேலும், அவரது தோளிலும் எண்ணிறந்த பாண வருஷங்களைச் சொரிந்து ஆர்ப்பரித்தான். இராமர் புன்சிரிப்புக் கொண்டு நிமிஷ நேரத்தில் தம்முடைய பாணங்களைச் செலுத்தி, அவனுடைய வில்லையும், கவசத்தையும் தொலைத்து, தோளையும் கழுத்தையும் அறுத்துத் தள்ளினார். மகோதரன் தொலைந்து போனான்.

அவனிறந்ததைக் கண்ட இராவணன் மனங்கொதித்து இராமரோ டெதிர்த்தான். அப்போது இராமர் அவன்மீது மனதிரங்கி, "இவனை முன்னே கொன்றுவிட லாகாது; இவனோடு வந்திருக்கும் சேனைகளை வதைத்து இவனைத் தனியனாகச் செய்துவிட்டால் இவன் மனந்தளர்ந்து நம்மைச் சரணமடைந்தாலும் அடைவான்; அவ்வாறு நற்புத்தி வந்து பணிவானானால் இவனைக் கொல்லாமல் விட்டுவிடலாம்; அதன்மேல் கொஞ்சக்காலமாவது இவன் பிழைத்திருப்பான்" என்று மனதில் தீர்மானித்துக்கொண்டு அதனை

வெளிக்குக் காட்டாமல் அவனோடுவந்த நால்வகைப் படைகளின் மீதும் அம்புகளை எய்தார். அப்போது இராவணனுக்குப் பல துர்நிமித்தங்கள் உண்டாயின. அவற்றைப் பார்த்தும் இராவணன் மனந்தளராமல், 'இந்த மனிதனால் என்னை வெல்லல் முடியுமோ' என்று அகங்காரங் கொண்டு சங்கத்தை வாயில்வைத்து ஊதினான். அப்போது பாஞ்சசன்யம் தானே வந்து இராமர் பக்கத்தில் நின்று அதற்கு எதிரொலியாக முழங்கிற்று. மாதலியும் இந்திரனுடைய சங்கத்தை யெடுத்து முழக்கினான். இராமரும், இராவணனும் விற்களை வளைத்திழுத்துவிட்டுக் குணத்தொனி பண்ணினார்கள். அதன்மேல் இராவணன், "இந்த அற்ப மனிதனோடு நான் வில்யுத்தம் செய்துகொண் டிருப்பது எனக்குக் கேவலமாகும்; ஆதலின், இவனைத் தேரோடு தூக்கிப் பூமியிலறைந்து கொல்லுகிறேன்" என்று ஆர்ப்பரித்தான். பின்னர் அவனுக்கு, "அப்படிக் கொன்று விட்டால் நம்முடைய வில் வல்லமை உலகத்தாருக்குத் தெரியாது; ஆதலால் சிறிது நேரம் வில்யுத்தஞ் செய்து விட்டு அதன் மேல் இவனைக் கொல்லலாம்" என்னும் எண்ண முண்டாயிற்று. அதனால் அவன் கொடிய அம்புகளை இராமர்மீது எய்தான். உடனே இராமர் தம்முடைய பாணங்களால் அவற்றை ஆகாயத்திலேயே துண்டித்து விட்டார். அதன்மேல் இலங்காதிபன், உலகம் நடுங்கத்தக்க பாணங்களை இராமர் மீது அடுக்கடுக்காகச் செலுத்திக்கொண்டே யிருந்தான். இராமர் அவற்றைக் கண்டித்துக் கொண்டே யிருந்தார். தன்னுடைய வலிய அம்புகளெல்லாம் நாசமாவதைக் கண்டு இராவணன் மிகுந்த கோபங்கொண்டு எழுத்தடிகளையும், தோமரங்களையும், கோடரிகளையும், தண்டாயுதங்களையும், இருப்புலக்கைகளையும், சக்கராயுதங்களையும், சூலங்களையும் மேலும் மேலும் அவர்மீது பிரயோகித்தான். இராமர் அவற்றையும்

பொடியாக்கி விட்டார். அதன்மேல் இராவணன் தன் தேருடன் அந்தரத்தில் போய் பாணவருஷங்களைப் பொழிந்தான்; அவற்றால் அநேகம் வானரர்கள் இறந்தார்கள். அப்போது இராமர் சினந்து தம்முடைய தேரையும் ஆகாயத்திற் செலுத்தும்படி மாதலிக்குக் கட்டளையிட்டார். அவன் அவ்வாறே செலுத்தினன். அதன்மேல் இராவணனுடைய தேரும், இராமருடைய தேரும் சப்த சமுத்திரங்களிலும், அண்டமுகட்டிலும் சென்று இடசாரி வலசாரியாகச் சுற்றி இலங்கைக்கு வந்து சேர்ந்தன. அப்போது இராவணன், இராமர்தேரிற் கட்டியிருந்த இடிக்கொடியை ஓர் அர்த்த சந்திர பாணத்தால் அறுத்துத்தள்ளி, குதிரைகளின் மேலும் அணியணியாகச் சரங்களையேவி, மாதலியின் மார்பில் பன்னிரண்டு அம்புகளை மாரிபோல் வாரி யிறைத்து இராமர் உருவந் தோன்றாதபடி அவர்மீதும் பல அம்புகளைச் செலுத்தி அவரை மறைத்துவிட்டான். அச்செய்கையைக் கண்டு தேவர்கள், 'இராகவர் தோற்று விடுவாரோ' என்று சந்தேகமுற்றார்கள். அங்ஙனம் இராமர் பாணங்களுக்குள் மறைந்தபடியால், இலக்குமணனும், வானரவீரர்களும் அவரைக் காணமுடியாமல் கலங்கினார்கள். அப்போது 'மாதலியின் மார்பில் தைக்கும்படி இராவணன் அம்பு செலுத்தியதற்கு இராமர் சினந்து நிமிஷநேரத்தில் அந்த இராக்ஷஸனுடைய அம்புகளையெல்லாம் அறுத்துத்தள்ளி அவன் தோள்களிலும் மார்பிலும் இரத்த பானம் பண்ணும்படி கூரிய அம்புகளை யேவி, அவன் தேரிற்கட்டியவீணைக்கொடியையும் ஒரு பாணத்தால் அறுத்துவிட்டார். அத்தருணத்தில் இராமருடைய தேரில் கொடி யில்லாதிருப்பதைக் கண்டு கருடன் அதன் சிகரத்தில் கொடியாக எழுந்தருளினன். அதன்மேல் இராவணன் சிவாஸ்திரத்தை இராமர் மீது பிரயோகித்தான். இராமர் சிவாஸ்திரத்தினலேயே

அதனை அடக்கி விட்டார். அதைக்கண்டு இராவணன் கண் சிவந்து சிறி உலகங்களை யெல்லாம் அழிக்கத்தக்க குரூரமாகிய பாணங்களை இராமர்மீது ஏவினன்; அவர், அக்கினியாஸ்திரத்தால் அவற்றை அறுத்துத் தள்ளிவிட்டார். அதன்மேலும் இராவணன் யமனைப் போன்ற நூறுகோடி அம்புகளை அவர்மீது பிரயோகித்தான்; இராமர் அர்த்த சந்திர பாணங்களால் அவற்றைப் பிளந்து தள்ளினர். பின்னர் தசக்கிரீவன், மயனால் தனக்குக் கொடுக்கப்பட்ட பாணத்தைத் தசரத குமாரர்மீது செலுத்தினன். அந்தப் பாணம், 'உலகத்தில் இனி மனிதப்பூண்டே இல்லாமற் செய்து விடுகிறேன்' என்று உக்கிரமாக வந்தது. இராமர் உடனேகந்தர்வாஸ்திரத்தினால் அதைத் துண்டுபடுத்தி விட்டார். அதன்மேல் இராவணன், அகஸ்தியரால் தனக்குக் கொடுக்கப்பட்ட கதாயுதத்தை யெடுத்து அவர்மீதெறிந்தான். இராமர் தாமரை மொட்டம்பைப் பிரயோகித்து அதனை நூறு துண்டுகளாகச் செய்துவிட்டார்; பின்னர் தசக்கிரீவன், 'இனி அற்ப ஆயுதங்களை ஏவுவதால் பயனில்லை' என்று மாயாஸ்திரத்தை யெடுத்துத் தொடுத்து விட்டான். அந்த அஸ்திரத்தின் மாயையால், முன் இறந்துபோன இந்திரஜித்து முதலிய இராக்ஷத வீரர்களெல்லாம் எழுந்து வந்து இராமலக்குமணர்களையும் வானரவீரர்களையும் பெயர் சொல்லிக் கூப்பிட்டு யுத்தத்திற் கழைப்பது போலவும், அநேகம் பூதகணங்களும் பேய்க் கூட்டங்களும் ஆகாயமெங்கும் நிறைந்து வீரகர்ஜ்ஜனை புரிவதுபோலவும், பயங்கரமான தோற்றங்களுண்டாயின. அந்தத் தோற்றங்களைக் கண்டவுடன் இராமர், மாதலியைப் பார்த்து, "இவை யெல்லாம் மாயா தோற்றங்களா? அல்லது இராக்ஷதர்கள், தாங்கள் பெற்ற வரங்களால் மீண்டும் உயிரைப் பெற்றெழுந்தார்களா?" என்று வினவினர். அவன், "சுவாமி! இராவணன்

மாயாஸ்திரத்தைப் பிரயோகித்திருக்கிறான்; அதனால் இந்தப் பொய்த் தோற்றங்களுண்டா யிருக்கின்றன; நீர் ஞானஸ்திரத்தைச் செலுத்தினால் இவையெல்லாம் ஒழிந்து போம்" என்று கூறினான். உடனே இராமர் அதனைப் பிரயோகித்து இராவணனுடைய மாயாஸ்திரத்தின் செய்கைகளை யெல்லாம் போக்கிவிட்டார். அதன்மேல் இலங்காதிபன் யாவரும் நடுங்கத்தக்க சூலாயுதத்தை ஏவினான். அது வடவாமுகாக்கினியைப்போல் அதிக வேகமாய் வந்தது. அதைக் கண்டு தேவர்கள் பயந்து இராமபிரானை நோக்கி, "சுவாமி! இந்தச்சூலம் எவர்க்கு மடங்காதது; உம்மால் தான் இதனை அடக்கமுடியும்; இதனை ஒழிக்கத்தக்க பிரயத்தனத்தைச் சீக்கிரம் நீர் செய்யும்" என்று பிரார்த்தித்தார்கள். இராமர் விரைந்து பிரசண்டமாருதம்போன்ற சில அம்புகளையும் தேவாஸ்திரங்களையும் அதன்மீது செலுத்தினார். அவற்றால் அதனைத் தடுத்தல் முடியவில்லை. அப்போது இராமர் அதனைத் தடுக்கும் உபாயம் அறியாதவர்போல் சும்மா நின்றார். அவர் நிலையைப் பார்த்துத் தேவர்களும், மானிடர்களும் நடுக்கமுற்றார்கள். அந்தச் சூலம் அவருடைய மார்பை ஊடுருவிச் செல்வதுபோல் அவர் சமீபத்தில் சென்றது; உடனே இராமர் கோபங்கொண்டு அதைப் பார்த்து உங்காரத்தொனியால் அதட்டினார். அந்தச் சப்தத்தின் அதிர்ச்சியால் அச்சூலமானது நொறுங்கித் தூளாகிவிட்டது. அதைக்கண்டு தேவர்கள் ஆனந்த ஆரவாரஞ் செய்து இராமர் மீது கற்பக மலர்களை வாரி யிறைத்தார்கள்.

அங்ஙனம் அச்சூலம் பொடியாய்ப்போகவே, இராவணன் பிரமையடைந்து, "இந்த இராமன்முன் நமமுடைய வரங்களும் ஆயுதங்களும் பயனற்றுப்போகின்றன; ஆதலால் விபீஷணன் சொன்னபடி இவன் எல்லாவற்றிற்கும்

முதற் காரண வஸ்துவாகவே யிருப்பான்" என்று நினைத்தான். அடுத்த நிமிஷத்தில் அவனுடைய ஊழ்வினையால் அவனுக்கு அந்த எண்ணம் மாறிவிட்டது. அதனால் அவன், "அந்த இராமன் யாராயிருந்தாலு மிருக்கட்டும். அவனை நான் வென்று கீர்த்தியடைவேன்; அப்படியே வெல்ல முடியாமல் இறந்தபோதிலும் இத்தகைய பெரியவனோடு எதிர்த்திறந்தால் மிகுந்த கீர்த்தி எனக்குண்டு" என்று தென்மேற்குத் திசைப்பாலனாகிய நிருதியினுடைய நாகக் கணையை இராமர்மேல் ஏவினான். அந்த அஸ்திரம் ஆதிசேடனும் அஞ்சும்படி ஆகாயமுழுவதும் வியாபித்த தேகத்தையுடைய பல பாம்புகளாய்க் கோடிபடங்களை விரித்து, எல்லா வாய்களிலும் சமுத்திரஜலம்போல் விஷமொழுக, தீப்பொறிகள் சிதற, உயர்ந்த மலைகளைக் கவ்விக்கொண்டு உக்கிரமாக வந்தது. உடனே இராமர் அதன் மேல் கருடாஸ்திரத்தைப் பிரயோகித்தார். அது, பல கருடன்களாகத் தோன்றிப் போய் அந்த நாகங்களையெல்லாம் விழுங்கி அந்த அஸ்திரத்தின் வல்லமையைக் குறைத்துவிட்டது. அதைக்கண்டு இராவணன் அக்கினிச் சுவாலைபோல் பெருமூச்சுவிட்டுக் கோபித்து இடிகளையொத்த அநேகம் பாணங்களை இராமர்மீது ஏவினான். இரகுகுலோத்தமர் எண்ணிறந்த பாணங்களைச் செலுத்தி அவற்றைக் கண்டித்து இராவணனுடைய மார்பிலும் வலிய பாணங்களை யேவினார். அவை அடிக்குதையும் தோற்றாதபடி அவன் நெஞ்சிற் பாய்ந்தன. அப்போது இராவணனுக்குப் புத்திமயங்கித் தனுர்வித்தையும் மந்திர வித்தையும் மறந்துபோகத் தலைப்பட்டன. இராமருக்குப் பராக்கிரமமும் வீரமும் அதிகரித்தன. அதன்மேல் இராகவர் அர்த்தசந்திர பாணத்தால் இராவணனுடைய பத்துத் தலைகளில்

ஒன்றை அறுத்துத் தள்ளினார். அந்தத் தலை நெருப்பைக் கக்கிக்கொண்டு போய்ச் சமுத்திரத்தில் வீழ்ந்தது. அதைக் கண்டு தேவர்களெல்லாம் களித்துக் கீழே யிறங்கி வந்து இராமரைத் துதித்துப் பாடினார்கள். அத்தருணத்தில் இராவணனுடைய அறுந்த தலைக்குப் பதிலாக வேறொரு தலை முளைத்து இராமரைப் பார்த்து அதட்டியது. அறுபட்டுக் கடலில் வீழ்ந்த தலையும் கர்ஜ்ஜித்தது. அப்போது இராவணன், "எங்கும் ஜெயமே பெற்றுவந்த நம்முடைய தலைகளில் ஒன்றை இந்த இராமன் அறுத்தானல்லவா" என்று மிகுந்த கோப வெறிகொண்டு இராகவருடைய தோள்களில் பதினான்கு அம்புகளை எய்தான். இராமர் அவற்றைத் தடுத்துவிட்டு அவனுடைய கைகளிலொன்றைப் பிறைக் கணையால் அறுத்தார். அக் கை யறுந்தவிடத்தில் மற்றொரு கை முளைத்தது. இராவணன் அறுந்த கையை மாதலியின் மேல் எறிந்தான். அந்தக்கை அவன் மார்பில் பட்டது. அதனால் அந்த மாதலி வாயால் இரத்தத்தைக் கக்கினான். அதைக் கண்ட இராவணன், 'இதுதான் இவனைக் கொல்ல நல்ல சமயம்' என்று தோமராயுதத்தைச் சுழற்றி அவன்மேலெறிந்தான். அதைக்கண்டு இராமர் பஞ்சமுகாஸ்திரத்தால் அத்தோமரத்தைப் பொடித்துவிட்டுச் சிறிதும் ஓய்வடையாமல் அபரிமிதமான பாணங்களை இலங்காதிபன்மேல் எய்துகொண்டே யிருந்தார். அவற்றால் இராவணனுடைய தலைகள் அறுந்து பற்பல விடங்களில் மலைகளைப்போல் வீழ்வனவும், மீண்டும் முளைப்பனவு மாயிருந்தன. அவ்வாறு முளைத்துக்கொண்டே யிருக்கும் தலைகளையுடைய இராவணன் அடங்காச் சினத்தனாகித் தன் இருபது கைகளாலும் வாள், வேல், உலக்கை, தண்டம், கோடரி முதலிய ஆயுதங்களை இராமர் மார்பில் வாரி யெறிந்துகொண்டே யிருந்தான். இராகவர், அவற்றையெல்லாம் தடுத்துக்கொண்டே "நாம்

அறுத்துத் தள்ளத்தள்ள இந்தக் கொடியனுடைய தலை களும் கைகளும் முளைத்துக்கொண்டே யிருக்கின்றனவே; இப்பேர்ப்பட்ட வரத்தையும் தேவர்கள் இவனுக்குக் கொடுத்ததால்தான் அவஸ்தைப் பட்டார்கள்; இனி இவனை எந்த உபாயத்தாற் கொல்லலாம்” என்று ஆலோசித்து மிகுந்த கோபங்கொண்டு அவனுடைய எல்லா அவயவங்களி லும் பாயும்படி அளவில்லாத பாணங்களை எய்து உடம் பெங்கும் மூடிவிட்டார். அந்த அம்புகள் தைத்து எல்லா அவயவங்களிலும் இரத்த மொழுகியபடியால் இராவணன் செயலற்று அறிவு கலங்கித் தேரில் தானே வீழ்ந்தான். அங்ஙனம் வீழ்ந்ததைப் பார்த்துத் தேவர்களெல்லோரும் ஆனந்தக் கூத்தாடினார்கள். அத்தருணத்தில் இராவண னுடைய சாரதி, “நம் தலைவன் மூர்ச்சித்துக் கிடக்கின்று னாதலால், இனி இங்கே இரதத்தை நிறுத்துவது தகுதி யல்ல” என்று தேரைத் திருப்பி நகரத்தின் பக்கம் நடத் திக்கொண்டுபோனான்; மற்ற இராக்ஷதர்களும் அத்தேரின் பின்னே சென்றனர்.

அப்போது மாதலி இராமரை நோக்கி, “சுவாமி! இத் துஷ்டன் மூர்ச்சை தெளிந்தால் பின்னர் இவனை ஒன்றுஞ் செய்யவியலாது; ஆதலால் நீர் இப்பொழுதே கொன்றுவிட வேண்டும்” என்றான். அதற்கு இராமர், “மாதலி! இவன் அறிவு மயங்கிக் கிடக்கின்றான்; இத்தருணத்தில் இவன் மீது அஸ்திரப் பிரயோகஞ் செய்தல் யுத்த தர்மமாகாது; இவனுடைய யுத்தமோ சீக்கிரத்தில் முடிவாகப் போகின் றது; இவன் எழுந்த பின்புதான் நாம் இவனோடு எதிர்க்க வேண்டும்; நீ யொன்றுக்கும் அஞ்சாதே” என்று கூறியருளி னார். அவருடைய உத்தம குணத்தைக்கண்டு தேவர்கள் அவருக்கு நமஸ்காரஞ் செய்தார்கள். அதன்மேல் இலங் காதிபன் மூர்ச்சை தெளிந்தெழுந்து தனக்கெதிரில் இராம

ரைக்காணுமல் மற்ற மூன்று பக்கங்களிலும் திரும்பிப்பார்த்தான். அவர் பின் பக்கத்திலே நின்ருர். அப்போது இராவணன் "நாம் மூர்ச்சை யடைந்த சமயத்தில் நம் சாரதி எதிரிக்குப் பயந்து தேரைத் திருப்பிக்கொண்டு வந்திருக்கின்ருன்" என்று அவன் செய்கையை யுணர்ந்து அவன்மீது மிகுந்தகோபங்கொண்டு அவனை நோக்கி, "அடா சாரதி! எதிரிகள் நம்மைப் பார்த்து நகைக்க, நீ தேரை இங்கே திருப்பிக்கொண்டு வந்து, எனக்கு மிக்க அவமானத்தை யுண்டாக்கி விட்டாயே; உன் உயிரை இப்பொழுதே நான் போக்கி விடுகின்றேன்" என்று அவனை வெட்டுவதற்கு வாளை உருவிக்கொண்டு ஓங்கினுன். அப்போது சாரதி அவனுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி, "இராக்ஷஸகுல சிரேஷ்டரே! நீர் மூர்ச்சித்திருந்தீர்; அப்போது உம்மை அவ்விடத்தைவிட்டு அப்புறப் படுத்தாவிட்டால் எதிரிகளால் உம்முடைய பிராணன் போய்விடுமென்று எனக்குத் தெரிந்தது; அதனுல் உம்முடைய உயிரைக் காப்பாற்றும் பொருட்டு நான் இரதத்தைத் திருப்பிக்கொண்டு வந்தேன்; அவ்வாறு உமக்கு நன்மை புரிந்த நிரபராதியாகிய என்னை நீர் கொல்லுதல் தர்மமாகாது" என்று அவனிடம் சொன்னுன். அதன்மேல் இராவணன் கோபந்தணிந்து அவனை நோக்கி, "சாரதி! நடந்தது போகட்டும்; நீ இப்போது விரைந்து இராமன்மேல் தேரைச் செலுத்து" என்ருன். அப்படியே அவன் இரதத்தை இராமருக்கெதிரில் கொண்டு வந்து நிறுத்தினுன். உடனே தசக்கிரீவன் இராமர்மீது யமனுக்குச் சமானமாகிய கோடானுகோடி அம்புகளை யேவி முன்னைக் காட்டிலும் மூன்று பங்கதிகமான யுத்தத்தைச் செய்தான். அப்போது இராமர், "இந்த இராவணன் கையில் வில்லிருக்கும் வரையில் யுத்தத்தை விட்டொழியான்; ஆதலின் நாம் இவனுடைய தனுசை யொழித்து

விடவேண்டும்" என்று நாராயணாஸ்திரத்தைப் பிரயோகித்து அவனுடைய வில்லை இரண்டு துண்டுகளாகச் செய்துவிட்டார். அவன் மற்றொரு வில்லை யெடுத்தான். அதையும் இராமர் ஒடித்துவிட்டார். இப்படியே அவன் மேலும் மேலும் விற்களை எடுக்க எடுக்க அவற்றை யெல்லாம் இராமர் ஒழித்துவிட்டார். அங்ஙனம் ஒழிந்த விற்கள் பதினோராயிரமாயின. அதன்மேல் இராவணன், "இனி வில்லெடுப்பதிற் பயனில்லை" என்று இருப்புலக்கை, தண்டு, வேல், ஈட்டி, தோமரம் முதலிய ஆயுதங்களை எடுத்தெடுத்து ஓயாமல் இராமருடைய மார்பில் தாக்கும்படி விட்டெறிந்து கொண்டே யிருந்தான். இராமர் அந்த ஆயுதங்களை யெல்லாம் அம்புகளால் அறுத்தறுத்துக் குவித்துவிட்டு, "நாம் இப்பொழுதெய்யும் பாணங்கள் இவனுயிரை வாங்கமாட்டா; அபரிமிதமான பாணங்கள் இவன் தேகத்தைத் துளைத்தும் இவனுடைய தைரியங் குறையவில்லை; ஆதலால், இனித்தாமதிக்காமல் தக்க ஆயுதத்தை இவன்மீது பிரயோகித்து இவனுயிரை வாங்கிவிடவேண்டும்" என்று, பூர்வத்தில் திரிபுரதகனஞ் செய்யும்படி சிருஷ்டிக்கப்பட்டதும், மராமரங்களைத் துளைத்ததும், வாலியின்மார்பை ஊடுருவிச்சென்றதுமாகிய பிரமாஸ்திரத்தை யெடுத்துக் கோதண்டத்தில் தொடுத்து இராவணனுடைய மார்புக்கு இலக்குப்பார்த்துப் பிரயோகித்துவிட்டார். அந்த அஸ்திரமானது அதிவேகத்தையும் தீக்ஷணியத்தையுங் கொண்டு, நான்கு முகங்களை யுடைத்தாகித் தன்னுடைய பிரகாசத்தால் உலகத்திலுள்ள அந்தகாரத்தை யெல்லாம்போக்கி, விஷ்ணு சக்கரத்தின் பூர்ணமிசத்தைப் பெற்று, சுவர்க்க மத்திய பாதாளங்களும், அஷ்டதிக்குகளும் நடுங்கச்சென்று, துஷ்டனாகிய இராவணனுடைய மார்பில் தைத்து, அவன்பெற்ற வரங்களை

யும், நீண்ட ஆயுளையும், பலத்தையும், கெடுத்து ஊடுருவி உயிரையும் போக்கிப் புறத்தேசென்று தேவர்களும், முனிவர்களும், வேதியர்களும் ஆசிர்வதித்துப் புஷ்பமாரி சொரியத் திருப்பாற்கடலில் மூழ்கிப் பரிசுத்தமடைந்து திரும்பி வந்து ஸ்ரீ இராகவருடைய அம்பறுத்தூணியில் சேர்ந்தது. அப்பொழுதே இராவணன் மேகம் முழங்குவது போல் இருபது தோள்களையும் கொட்டிப் பத்து வாய்களாலும் வீரகர்ஜ்ஜனைசெய்து இருபது கண்களிலும் புகையும் இரத்தமும் பெருகத் தானேறியிருந்த உயர்ந்த இரதத்திலிருந்து குப்புற்றுக் கீழே விழ்ந்தான். இராமர் மாதலியை நோக்கி, "அப்பா மாதலி! யுத்தம் முடிந்தது; இனி ஆகாயத்திற் செலுத்துகின்ற நம்முடைய இரதத்தைப் பூமியில் இறக்குவாயாக" என்று கட்டளையிட்டார். அவன் அவ்வாறே தேரைப் பூமிக்குக் கொண்டு வந்தான்.

அதன்மேல் ஸ்ரீ இராகவர், அத்தேரை விட்டிறங்கி, அதனைச் சுவர்க்கலோகத்திற்கு ஓட்டிக்கொண்டு போகும்படி மாதலிக்குக் கட்டளையிட்டு அவனைத் தேருடன் அனுப்பிவிட்டார். அப்பொழுது குதூகலத்துடன் அவரிடம் இலக்குமணன், விபீஷணன், சுக்கிரீவன், அனுமார், அங்கதன் முதலியவர்கள் வந்து சூழ்ந்தார்கள். உடனே இராமர் அவர்களை அழைத்துக்கொண்டு தேகம் மலைபோல் ஆகாயத்தை முட்ட வீழ்ந்து கிடந்த இராவணனிடம் போய், அவனை அவர்களுக்குக் காட்டி, "இவனைப் பார்த்தீர்களா ; இவன் தன்னுடைய பராக்கிரமத்தால் திரிலோகங்களையும் தனக்குள் அடக்கினவனானாலும் என்னுடைய பாணத்தால் இப்போ திறந்தான்; அப்படி யிறந்தாலும் இந்த ஜெயத்தைப்பற்றி எனக்கு மகிழ்ச்சி யுண்டாகவில்லை; ஏனென்றால், இவ்னுடைய முதுகில் அம்புகள்பட்ட வடுக்கள் காணப்படு

கின்றன; அதனால் இவன் முன்னே யாருக்கோ யுத்தத்தில் தோற்றோடி யிருக்கின்றானென்பது விளங்குகின்றது. மேலும் இவன், முன்னொரு காலத்தில் கார்த்தவீரியார்ச்சுனனால் கட்டப்பட்டா னென்பதையும், வாலியின்வாலில் கட்டி யிழுக்கப்பட்டானென்பதையும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன்; இவ்வாறு சிலருக்குத் தோற்ற இவனைக் கொன்றதால் எனக்கென்ன சிறப்புண்டு; வீணாக இவனைக் கொன்று நான் அபகீர்த்தியைத் தேடிக்கொண்டேன்" என்று வீரந்தோன்றும் மொழிகளைக் கூறினர். அவ்வார்த்தைகளைக்கேட்டு விபீஷணன் கண்ணீரொழுக எழுந்து நின்று இராமரை வணங்கி அவர் முகத்தை நோக்கி, "வீரசிகாமணியே! முந்தி இந்த இராவணனுக்குத் தேவர்களுடைய சாபம் ஏற்பட்டிருந்ததால் ஆயிரந் தோள்களையுடைய கார்த்தவீரியனும், மிக்க பலசாலியாகிய வாலியும் மிக அருமையாக இவனை வென்றார்கள். அச்சாபம் இல்லாவிடில் அவர்களாலும் மற்றெவர்களாலும் இவனை வெல்லுதல் அருமை. இவன் எப்பொழுதும் வீரனே; நீராகையினாலே இவனைக் கொன்றீர்; ஆதலின், இவனைக் கொன்றதால் உமக்கு மிக்க புகழே உண்டாகும். அதனால் இழிவுண்டாகுமென்று நீர் நினைப்பது தவறு; இவனுடைய முதுகில் தெரியும் வடுக்களும் வேறு காரணத்தால் உண்டானவை: முன்னொரு காலத்தில் இவன் எதிரிகளைத் தேடித் தன் தேரைச் செலுத்திக்கொண்டு உலகமுழுவதும் சுற்றித் தன்னோடு போர் செய்வாரின்மையால் முடிவில் திக்கஜங்களோடு போர் செய்து, அவை முட்டியதால் அவற்றின் தந்தங்கள் தன் மார்பில்பாய, அவற்றை அப்படியே திருகிமுறித்துத் தன் வெற்றிக் கறிகுறியாகவும் தனக்கு அலங்காரமாகவும் விளங்கும்படி அந்நெஞ்சிலேயே அழகாக அராவி வைத்துக் கொண்டான். பின்னொரு காலத்தில் யமனோடு போர் செய்

யும்போது அவனுடைய வஜ்ரபாணங்கள் பட்டதாலும், ஆஞ்சனேயர் இந்த யுத்தகளத்தில் இவனுடைய மார்பில் குத்தியதாலும் அந்தத் தந்தங்கள் முதுகுபரியந்தம் பாய்ந்து உதிர்ந்து விட்டன; அதனாலேயே முதுகில் இவ்வடுக்கள் காணப்படுகின்றன; இதனாலும் தோஷமில்லை" என்று சொன்னான். அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் இராமர், இராவணனுடைய வீரத்தன்மையில் நினைத்த சந்தேகத்தை யொழித்துக் களித்து, விபீஷணனை நோக்கி, "அப்பா! உன் தமையன் கொடியனாயிருந்தாலும் அவனுக்கு நீயே ஈமக்கடன் செய்தற்குரியவனாயிருத்தலின், நீ சென்று பிரேதபூஜை, உத்தரகிரியை முதலியவற்றைச் செய்துவரக் கடவாய்; மற்ற பந்து வர்க்கத்தாருக்கும் செய்ய வேண்டுவனவற்றைச் செய்" என்று சொன்னார். அவன் அவ்வாறே அக்கிரியைகளை நடத்துதற்கு இராவணன் இறந்துகிடந்த இடத்திற்குச் சென்றான். அத்தருணத்தில் இராவணன் இறந்த சந்தோஷத்தால், எல்லாவுலகங்களிலுமுள்ள சமஸ்த சாதுஜனங்களும், தேவர்களும் இராமரை ஸ்தோத்திரஞ் செய்து கொண்டு வந்து முறைப்படி அவரடியில் வணங்கினார்கள். இராமர் ஒரு பரிசுத்தமான விடத்தில் எழுந்தருளி அவர்களோடு வார்த்தையாடிக்கொண் டிருந்தார்.

இராமரிடம் விடைபெற்றுச் சென்ற விபீஷணன் இராவணனைக் கண்டான்; எப்படியிருந்தாலும் அவன் இரத்தக் கலப்புடையவனாதலின், 'தானாடாவிடினும் தன் சரீரம் ஆடும்' என்றபடி இராவணனுடைய மரணத்தைக்கண்டதும் அவனுடல் துடித்தது. ஆற்றவொண்ணாத் துயரம் அவனுக் குண்டாகிவிட்டது. உடனே அவன் தன்னை மறந்து இலங்காதிபன்மேல் திடீரென்று வீழ்ந்து, "அந்தோ! அண்ணா! மகா பராக்கிரமசாலியாகிய நீ சகல ஐசுவரியங்

களையும் இழந்து இப்படி மண்ணில் வீழ்ந்து மாண்டு கிடக்கின்றாயே; மகா பதிவிரதையாகிய சீதாபிராட்டியின்மீது நீ வைத்த கெட்ட சிந்தனையல்லவா உன்னை இப்படி யழித்துவிட்டது.

"உண்ணாதே யுயிருண்ணா தொருநஞ்சு சனகியெனும்
பெருநஞ் சுன்னைக்
கண்ணாலே நோக்கவே போக்கியதே யுயிர்நீயுங்
களப்பட் டாயே
எண்ணாதே னெண்ணியசொ லின்றினித்தா னெண்ணுதியோ
வெண்ணி லாற்றல்
அண்ணாவோ வண்ணாவோ வசுரர்கடம் பிரளயமே
யமரர் கூற்றே."

"போர்மகளைக் கலைமகளைப் புகழ்மகளைத் தழுவியகை
பொறாமை கூரச்
சீர்மகளைத் திருமகளைத் தேவர்க்குந் தெரிவரிய
தெய்வக் கற்பின்
பேர்மகளைத் தழுவுவான் உயிர்கொடுத்துப் பழிகொண்ட
பித்தா பின்னைப்
பார்மகளைத் தழுவினையே திசையானைப் பணையிறுத்த
பணைத்த மார்பால்."

உன்னுடைய துராசாரத்தால் நீ யிறந்ததுமல்லாமல் உன்னுடைய குலமுழுவதும் நாசமடைந்ததே; ஸ்ரீ இராகவருடைய பெருமையைக் கொஞ்சமும் உணராமல் நீ இவ்வாறு நாச மடைந்தாயே. உன்னை நான் எப்போது காண்பேன்" என்று பலவாறு புலம்பி யழுதான். அப்போது சாம்பவர் அவனுக்குத் தேறுதல் கூறிக் கொண்டிருந்தார்.

இங்கே இவர்கள் இப்படியிருக்க மண்டோதரிக்கு அவள் பர்த்தாவாகிய இராவணன் இறந்த செய்தியைத் தூதுவர் கூறினார்கள். அதைக் கேட்டவுடன் அவள்

இலக்ஷக்கணக்கான இராக்ஷத ஸ்திரீகள் கூந்தலை விரித்துப் போட்டுக் கோவென்று கதறிக்கொண்டு தன் பின்னேவர, மார்பிலடித்துக்கொண்டு விரைந்தோடிவந்து இராவணன்மேல் விழ்ந்து, "ஆ! என் பர்த்தாவே! சுவர்ண முடிகளணிந்த உமது தலைகள் புழுதியில் உருண்டு கிடக்கின்றனவே! உமக்குச் சமீபத்தில் அழிவில்லை யென்று நான் நினைத்திருந்தேனே; சீதையின் கற்பே உம்மை அழித்துவிட்டது. இதை நான் முந்தியே உணர்ந்திருந்தால் நீர் சீதையை விட்டுவிடும்படி செய்திருப்பேனே; இராமபிரானுடைய மகிமையை நீர் உணராமல் இவ்வாறு மடிந்து விட்டீரே; உமக்கு முன் நானே இறந்துவிட வேண்டுமென்று நினைத்திருந்தேனே; அந்த எண்ணம் எனக்குக் கைகூடாமற் போயிற்றே; இனி நான் உயிர் வைத்திருக்க மாட்டேன்; இதோ உம்முடன் வந்து விடுகின்றேன்" என்று புலம்பி, அவள் மகா பதிவிரதையாதலின், கணவனைத் தழுவியபடியே அப்பொழுதே சோர்ந்து உயிரை விட்டாள். அவளுடைய கற்பை நோக்கி, தேவஸ்திரீகளும், மானிடப் பெண்களும் அவளைப் பலவாறு கொண்டாடினார்கள்.

அதன்மேல் விபீஷணன் மிகுந்த துக்கத்துடனே இராவணனுக்கு வேதவிதிப்படி பிரேதச் சடங்குகளைச் செய்து, சந்தனக் கட்டைகளையும் அகிற்கட்டைகளையும் அடுக்கி, அவற்றின்மேல் இராவணன் தேகத்தை யேற்றி, ஈமக்கடன்களையும் செய்து முடித்து மண்டோதரியையும் இராவணனுடன் கட்டைகளின் மேலேற்றி நெருப்பிட்டுத் தகனஞ் செய்து கண்ணீர்விட் டழுதுகொண்டே அவர்களுக்கும், கும்பகர்ணன், இந்திரசித்து, கும்பன், நிகும்பன், முதலானவர்களுக்கும் நீர்க்கடன் முதலியவற்றைச் செய்துவிட்டுத் திரும்பிவந்து இராமருடைய சரணாரவிந்தங்களில் வீழ்ந்து

பணிந்தான். அவ்வாறு வணங்கிய விபீஷணனுக்கு இராமர் பல தேறுதலான வார்த்தைகளைக் கூறி அவனுடைய விசனத்தை மாற்றினார்.

சீதா பிராட்டியாரின் மீட்சி.

அதன்மேல் இராமர் இலக்குமணனை நோக்கி, "தம்பி! சுக்கிரீவன், அனுமான் முதலிவர்களோடு நீ இலங்காநகரத்திற்குச் சென்று விபீஷணனுக்கு முடிசூட்டி வரக்கடவாய்" என்று கட்டளையிட்டுத் தேவர்களையும் அதற்குதவியான காரியங்களைச் செய்யும்படி வேண்டினார். அப்படியே அதைச் செய்ய இலக்குமணன் விபீஷணனையும், மற்றவர்களையும் இலங்கைக்கு அழைத்துச் சென்றான். தேவர்களும், திக்குப் பாலர்களும் அதற்கு வேண்டிய கங்கை முதலிய தீர்த்தங்களையும், சுவர்ண கிரீடத்தையும், வஜ்ஜிரங்களிழைத்த சிம்மாதனத்தையும், மற்றும் வேண்டியவைகளையும் கொண்டுவந்தார்கள். பிரமன், மகுடாபிஷேக மண்டபமமைக்கும்படி தெய்வத்தச்சனாகிய விசுவ கர்மாவுக்குக் கட்டளை யிட்டான். அவன், மணிமயமாகிய மண்டபமொன்றமைத்தான். அதன்மேல் சமஸ்த தேவர்களும் விபீஷணனுக்கு மங்களாபிஷேகம் செய்து அவனை அழைத்து வந்து சிம்மாதனத்தில் வீற்றிருக்கச் செய்தார்கள். அப்போது இலக்குமணன் இராமரைத் தியானித்து மகுடத்தை யெடுத்து வேதமந்திரங்களைச் சொல்லி விபீஷணனுழ்வான் சிரசில் சூட்டினான். தேவர்களும் மற்றவர்களும் மகிழ்ந்து அவன்மீது புஷ்பங்களை வாரியிறைத்து அவனை ஆசீர்வதித்தார்கள். அதன்மேல் விபீஷணன், இலக்குமணனை நோக்கி, "இராமநுஜரே! நான் சென்று இராமபிரானை வணங்கிக்கொண்டு வருகின்றேன்; அதுவரை நீர் இங்குள்ளவர்களைக் காத்துக்

கொண்டிரும்" என்று அவனை அங்கே நிறுத்தி அவனிடம் விடை பெற்றுக்கொண்டு, சுக்கிரீவன், அங்கதன் முதலியவர்கள் சூழச் சென்று இராமருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கினன். இராமர் அவனை வாரியெடுத்து மார்போடணைத்துக்கொண்டு அவனுக்கு இராஜநீதிகளையெல்லாம் சொல்லி, 'நீ என்றும் சுகமாக வாழ்ந்திருக்கக் கடவாய்' என்று அவனை வாழ்த்திவிட்டு, உடனே ஆஞ்சனேயரை நோக்கி, "நீ சென்று இங்கு நடந்தவைகளையெல்லாம் ஜானகிக்குத் தெரிவி" என்று கட்டளையிட்டார். அப்பொழுதே ஆஞ்சனேயர் அசோகவனத்திற்குச் சென்று சீதையினெதிரில் நின்று ஸ்ரீ இராமருடைய சகஸ்நிர திருநாமங்களையும் பன்முறைபாடி ஆனந்தக் கூத்தாடிக்கொண்டு, இருகரங்களையும் உச்சிமேற்கூப்பி, "அன்னையாரே! உமக்கு மங்களமுண்டாகுக; அந்தப் பாபிஷ்டனுகிய இராவணன் குலத்தோடு மாண்டான்" என்று சொன்னுர். அதைக் கேட்டவுடன் ஜானகி தனக்கு அடக்கமுடியாத மகிழ்ச்சியுண்டானபடியால், இன்னதைத்தான் சொல்வதென்றுணராமல் சித்தப்பிரமை யடைந்தவள்போலிருந்தாள். அவளுடைய நிலைமையைப் பார்த்த ஆஞ்சனேயர், அவளை நோக்கி, "தாயே! நீர் சந்தோஷ மிகுதியால் பேசாமலிருக்கின்றீரா, அல்லது என்னுடைய வார்த்தை பொய்யென்று நினைத்துப் பேசாதிருக்கின்றீரா? ஒன்றுஞ் சொல்லாமலிருப்பதற்குக் காரணமென்ன?" என்று வினவினுர். அதற்குச் சீதை, "ஆஞ்சனேயா! உன் சொல்லிலும் நான் சந்தேகம் வைப்பேனே? முன்னே நீ வந்திருந்தபோது, 'உம்மை நானே இச்சிறையிலிருந்து நீக்குகிறேன்' என்று என்னிடம் சொல்லியபடி இப்போது வந்து எனக்குச் சந்தோஷ செய்தி தெரிவித்த உனக்கு நான் என்ன பிரதி யுபகாரம் செய்வதென்று யோசித்து யோசித்துப் பார்த்தேன்; எனக்

கொன்றும் விளங்கவில்லை; அதனாலும், அளவற்று என் மனத்திலெழுந்த சந்தோஷத்தினாலும் நான் இன்னதைத் தான் சொல்வதென்னும் உணர்ச்சியின்றிப் பேசாமலிருந்தேனையன்றி வேறொன்றும் கருதவில்லை; உனக்கு நான் செய்யவேண்டியது யாது? அதனை நீயே கூறக்கடவாய்" என்று சொன்னாள். உடனே அனுமார், 'இறைவியே! நான் உம்மை அன்னையாகக்கொள்ளும்படி நீர் திருவருள் புரிவது தான் நான் பெற்றுக்கொள்ளத் தக்கவரம்; அது தவிர, இங்குள்ள திரிசடையென்னும் என் தாய் தவிர, மற்ற இராக்ஷத ஸ்திரீகளெல்லாம் உமக்குத் துன்பஞ் செய்தவர்களானபடியால் அவர்களை யெல்லாம் ஒரே அறையால் நான் கொல்லும்படி எனக்கு உத்தரவளிக்கவேண்டும்; அதுவும் ஒரு வரந்தான்" என்றார். இதைக் கேட்டவுடன் அந்த இராக்ஷத ஸ்திரீகளெல்லாம், "தாயே! நீர்தாம் எங்களைக் காப்பாற்றவேண்டும்" என்று சீதையின் காலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள். பிராட்டியார் 'அஞ்சாதீர்கள்' என்று அவர்களுக்கு அபயங்கொடுத்து விட்டு அனுமாரை நோக்கி, "புத்திரா! இவர்கள் இராவணனுக்குப் பயந்து அவன் கட்டளைப்படி அக்கொடுங் காரியங்களைச் செய்தார்களே யன்றிச் சுயமாக ஒன்றும் செய்யவில்லை; ஆதலால் இவர்களை நீ கொல்லவேண்டாம்" என்று கூறினாள். அனுமார், 'தாயே! உமது கட்டளைப்படியே நான் இவர்களைக் கொலை செய்யாமல் விட்டுவிடுகிறேன்' என்று அங்கே நின்றுகொண்டிருந்தனர்.

இவர் செய்கை இப்படியிருக்க, ஸ்ரீ இராகவர், அனுமாரைச் சீதையிடம் அனுப்பியபின் விபீஷணனை நோக்கி "நீ சென்று ஜானகியைச் சகல வைபவங்களோடும் இங்கே அழைத்துக்கொண்டுவா" என்று கட்டளையிட்டார். அவன்

உடனே சீதையிடம் சென்று வணங்கி அக்கட்டளையைத் தெரிவித்தான். ஜானகி அதைக்கேட்டவுடன் அங்கம் பூரித்து விபீஷணனை நோக்கி, "இராக்ஷஸகுல தீரனே! எல்லோரும் என்னைப்பார்த்து என் கற்பைக் கொண்டாடும்படி நான் இப்போதிருக்கும் நிலைமையுடனே வருவதுதான் எனக்குப் பெருமை. அலங்காரஞ் செய்துகொண்டு வருவது பெருமை யாகாது" என்று கூறினாள். அதற்கு விபீஷணன், "தாயே! ஸ்ரீ இராகவரே தங்களை அலங்கரித்துக் கொண்டு வரும்படி கட்டளையிட்டிருக்கிறார்" என்று சொன்னான். அதன்மேல் சீதை அதற்குச் சம்மதித்தாள். அதையுணர்ந்த அங்குள்ள தேவர்கள் சீதைக்கு அலங்காரஞ் செய்யும்படி திலோத்தமை முதலிய தேவஸ்திரீகளுக்குக் கட்டளையிட்டனர். அவர்கள் வாசனைத் தைலம் முதலிய திருமஞ்சனத் திரவியங்களைச் சுமந்து கொண்டுவந்து சீதாபிராட்டிக்குத் தேய்த்து வாசனை நீர் பெய்து ஸ்நானஞ் செய்து வைத்துச் சடையாய்க் கிடந்த கூந்தலைச் சிக்குநீக்கி வாரி முடித்து, இடையில் பட்டுவஸ்திரத்தை உடுத்திக் கலவைச்சாந்தும் குங்குமச் சேறும் உடம்பிற் பூசிச் சகல ஆபரணங்களையும் பூட்டி அலங்காரஞ் செய்தார்கள். அதன்மேல் விபீஷணன் ஜானகியை விமானத்தின்மேல் எழுந்தருளச்செய்து, சகல தேவஸ்திரீகளும், முனிவர் பத்தினிகளும் அவளைத் துதித்துப் புடைசூழவும், அந்தப் பிராட்டியாரைக்கண்டு சேவிக்க நெருங்கிவரும் தேவர் முதலியவர்களை, தன்னுடைய ஏவலாளராகிய இராக்ஷதர்கள் பொற்பிரம்புகளை யேந்தி அதட்டிவிலக்கி முன்னே செல்லவும், அழைத்துக்கொண்டு இராமருக்குச் சமீபத்திற் போய்ச் சேர்ந்தான். அப்போது திரிபுவனங்களிலுமுள்ள உத்தமபுருஷர்களும், கற்புடைய மாதர்களும், ஸ்ரீ இராமரையும், ஜானகியையும் கண்டு சேவிக்கும் பொருட்டு அங்கே வந்து கூடிச் சீதைக்கு முன்னும் பின்

னும் நிறைந்தார்கள். அக்கூட்டத்தால் ஜானகியின் விமானம் செல்வதற்கு வழி யில்லாமற் போயிற்று; அதனால் விபீஷணன் அவர்களை விலக்கும்படி தன் சேவகருக்குக் கட்டளையிட்டான். அக்கட்டளைப்படி இராக்ஷத சேவகர்கள் அவர்களை அடித்து விலக்கினார்கள். அப்போது கடலிரைச்சல்போல் அக்கூட்டத்தில் பெருங்கோஷ்ட முண்டாயிற்று. இராமர் அதைக்கேட்டு 'எதனால் அந்தக்கோஷ்டமுண்டாகிறது?' என்று பக்கத்தில் நின்ற முனிவர்களிடம் கேட்டார். அவர்கள் அதன் காரணத்தைக் கூறினார்கள். அதற்குள் விபீஷணன் இராமருக்கெதிரில் வந்து அவரை வணங்கினான். அப்போது இராகவர் அவன், அக்கூட்டத்தாரைத் தன் சேவகர்களால் அடித்துத் துரத்துவித்ததற்காக அவன்மீது வெறுப்புற்றுக் கோபத்தோடு அவனைப் பார்த்து, "விபீஷணா! சாது ஜனங்களாகிய தேவர்களும் மற்றவர்களும், என்னைக் காணும் பொருட்டும் யுத்தகளத்தைக் காணும்பொருட்டும் இங்கே வந்து கூடியிருக்கின்றார்கள்; நீ அவர்களை உன் சேவகரால் ஏன் துரத்தும்படி செய்தாய்? உனக்கு யார் அந்த உத்தரவு கொடுத்தவர்?" என்று கூறினார். விபீஷணன், 'சுவாமிக்குக் கோபம் வரும்படி நாம் நடந்துகொண்டோமே' என்று துக்கமுற்றிருந்தான். அப்போது இலக்குமணனும், சீதை வருகிறாளென்ற செய்தியை உணர்ந்து அவளைக் காணும்பொருட்டு இராமரிடம் வந்து சேர்ந்தான்.

அப்போது ஜானகி இராமரிடம் நெருங்கிவந்து, அவருடைய திவ்விய மேனியைக் கண்களாரக்கண்டு இழந்த உயிரை மீண்டும் அடைந்தவள்போல் ஆனந்தங்கொண்டு விமானத்தைவிட்டு விரைந்திறங்கி அவருக்கு முன்னே சென்று அவருடையபாதங்களில் வீழ்ந்து வணங்கியெழுந்து நின்றாள். உடனே அவளுடைய சந்தோஷமுற்றும் ஒழிந்து

போகும்படி இராமபிரான், மனதில் ஒன்றை நினைத்துக் கொண்டு அவளைப்பார்த்துச் சீறி, "ஏ ஜனக குமாரத்தியே! நீ இதுவரை இராக்ஷதனுடைய நகரத்திலிருந்து மதுமாமி சங்களை உண்டு களித்துவந்தாய்; அதனால் உன் கற்பு அடியோடு தொலைந்துவிட்டது. கற்பிழந்தும் இன்னும் நீ உயிரைப் போக்கிக்கொள்ளாம லிருக்கின்றாய்; இவ்வாறு கற்பிழந்த நீ சிறிதும் நாணமின்றி எனக்கெதிரில் வந்தாயே; உன்னை நான் சேர்த்துக் கொள்வேனென்று நீ நினைத்தாயோ? உனக்காகத்தான் நான் இவ்வளவு காரியங்களையும் செய்து முடித்து உன்னைச் சிறை நீக்கினேனென்று எண்ணிக்கொண்டாயோ? அந்த நினைப்பை நீ விட்டுவிடு; நான் எனக்கு இராவணனால் நேர்ந்த அவமானத்தைப் போக்கிக் கொள்ளவும், சாதுக்களுடைய துன்பத்தை ஒழிக்கவும் இவற்றை யெல்லாம் செய்தேனேயன்றி உன்னை உத்தேசித்துச் செய்திலன். இப்போது நீ அலங்காரஞ் செய்து கொண்டு வந்திருக்கின்றாய்; சிறிதேனும் உனக்கு விசன மிருந்தால் நீ இவ்வாறு செய்வாயோ? உன்னிடத்தில் பதிவிரதைக்குரிய குணம் சிறிதேனுமில்லை; சூரியகுலத்திற் கிருந்த பெருமை உன்னால் ஒழிந்துவிட்டது; ஆதலால் நீ இங்கே நில்லாமல் இஷ்டமான இடத்திற்குச் செல்" என்று சொன்னார்.

இராமர் இந்த வார்த்தைகளைக் கூறவே, தேவர்களும், முனிவர்களும் மற்றைபரும் கதறி யழுதார்கள். இவ் வார்த்தைகள் சீதைக்குப் புண்ணிற் கோலிட்டதுபோ லிருந்த படியால், அவள் இரத்தக்கண்ணீர் விட்டழுதுகொண்டு பூமியைப்பார்த்த வண்ணமாகப் பெருமூச்சுவிட்டு இராமருடைய பாதத்தை நோக்கி, "சுவாமி! உமக்கு இவ்வித அபிப்பிராயமிருக்கும் பக்ஷத்தில், என்னை இங்கே அழைத்து வரும்படி விபீஷணனை என் என்னிடம் அனுப்பினீர்? அவர்

தமது கட்டளையை என்னிடம் கூறி என்னை அழைத்ததா லல்லவோ நான் இங்கு வந்தேன்; 'எப்பொழுது நாம் நாத ருடைய திருமுகத்தைப் பார்ப்போம்' என்று ஆவலுடன் ஓடிவந்த எனக்கு உம்முடைய வார்த்தைகள் விஷத்தைப் போல் வேதனை செய்கின்றனவே; உம்மை எப்படியேனும் பார்க்கலாமென்னும் உறுதியினாலன்றோ நான் படாத துன் பங்களையெல்லாம் அனுபவித்துக்கொண்டிருந்தும் உயிரைப் போக்கிக்கொள்ளாதிருந்தேன். அப்படியிருந்த என்னை நீர் சுகானுபவங்களை அனுபவித்துக்கொண் டிருந்தவளாகக்கருதி விட்டீரே; நான் அடைந்திருந்த துக்கமான நிலையை அனுமான் உமக்குக் கூற வில்லையோ? இனி நான் பல பேசு வதாற் பயனில்லை; உம்மால் வெறுக்கப்பட்ட நான் உமக் கெதிரிலேயே ஆவியைப் போக்கிக் கொள்ளுகின்றேன்" என்று இலக்குமணனை நோக்கி, "இராமாநுஜரே! நான் வீழ்ந்திறப்பதற்கு அக்கினியை மூட்டக் கடவீர்" என்று சொன்னாள். இலக்குமணன், சீதை அவ்வாறு கூறிய வார்த்தையைக் கேட்டவுடனே மனம்பதைத்து ஒன்றும் செய்யாமல் இராமரை நோக்கி வணங்கி நின்றான். இராமர், சீதை சொற்படியே தீயை மூட்டும்படி அவனுக்குக் கண் சாடை காட்டினார். அவன் கண்ணீர் விட்டழுதுகொண்டே சாஸ்திரவிதிப்படி நெருப்பை மூட்டினான். ஜானகி அக்கினி யைச் சுற்றி வந்தாள். அப்போது தேவர்களும், தேவஸ்திரீ களும், மற்றையர்களும், கண்ணீர் விட்டுக்கொண்டு, இரா மரை நோக்கி, 'இராகவரே! இது தக்கதன்று,' என்று சொல்லித் துக்கத்துடன் நின்றார்கள். அப்படி எல்லோரும் துக்கித்து அழுதுகொண் டிருக்கும்போதே நெருப்பை வலம்வந்த சீதாபிராட்டி, நெருப்பை நோக்கி, "அக்கினி பகவானே! நான் குற்ற முடையவளா யிருப்பேனானல்

என்னை நீ சுட்டெரித்து விடக்கடவாய்" என்று சொல்லி விட்டு இராமரை வணங்கி அந்நெருப்பிற் குதித்தாள். அப்படிப்பாய்ந்த மாத்திரத்தில் சீதையின் கற்பென்னும் அக்கினியானது தீக்கடவுளைச் சுட்டெரித்துவிட்டது. அவன் அந்த வெப்பத்தைச் சகிக்கமுடியாமல் துள்ளித் துடித்து ஜானகியைத் தன் கரங்களால் தாங்கிக் கொண்டுவந்து இராமருக்கெதிரில் நின்று "சுவாமி! உம்முடைய தேவியாரின் கற்புத்தீயானது என்னைத் தகித்துவிட்டதே; உமக்கு நான் என்ன அபராதஞ் செய்தேன்; ஏன் இவரை என் சுவாலையினிடத்தே பிரவேசிக்கச்செய்து இவ்வாறு என்னை நீர் சுட்டெரித்தீர்?" என்று முறையிட்டான். அப்போது இராமர் அக்கினியை நோக்கி, "நீ யார்? இந்த அக்கினியிலிருந்து தோன்றிவந்து என்னோடு பேசுகின்றாயே; நீ அக்கினி தேவனா? அப்படி அக்கினிதேவனா யிருந்தால் தீயொழுக்கமுள்ள இவளை, யார் சொல்லைக் கேட்டு எரிக்காமல் விட்டனை?" என்று கேட்டார். அதற்கு அக்கினிதேவன், "சுவாமி! நான் தீக்கடவுள் தான்; உம்முடைய தேவியாரின் கற்புத்தீயானது என்னைச் சுட்டெரித்து விட்டது; அதைச் சகிக்க முடியாமையால் நான் உம்மைச் சரணமடைந்தேன்; உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களுக்கும் சாக்ஷி பூதமாயிருப்பவன் நானே; உலகத்தார் என்னிடத்தில்தான் தங்கள் சந்தேகங்களை நிவிர்த்தித்துக் கொள்வார்கள்; ஆதலால், நீர் என் சொல்லை நம்பும்; பிராட்டியார் எவ்வித தோஷமும் இல்லாதவர்; இவர் சீறுவாரேயானால் சமஸ்தலோகங்களும் அழிந்துவிடும்" என்று சொல்லி ஜானகியை அவர் பக்கத்தில் விடுத்தான். அதன்மேல் இராமர் அக்கினி பகவானை நோக்கி, "தீக்கடவுளே! நீ இந்த ஜானகி தோஷமற்றவளென்று சொல்வதினாலே நான் இவளை ஏற்றுக் கொள்ளுகின்றேன்" என்று திருவாய் மலர்ந்தனினர். இவர்

இவ்வாறு சீதையை வெறுத்துப்பேசி அக்கினியிற் பிரவேசிக்கச் செய்தது அவளுடைய கற்பை அதன்மூலம் எல்லோருக்கும் விளக்கற்பொருட்டேயாம். அவர் அங்ஙனம் அவளை வெறுத்துப்பேச ஆரம்பிக்கும்போது மனத்திலொன்றைக் கருதினரென்று நாம் கூறியது இதுவேயாம்.

அப்போது சிவேந்திராதி தேவர்கள் அங்கே நின்ற பிரமதேவனைப் பார்த்து, "ஸ்ரீ இராகவர் தம்முடைய யதார்த்த நிலையை உணராதவர்போலக் காணப்படுகின்றார்; ஆதலின் நீர் அவருடைய உண்மைச் சொரூபத்தை எடுத்துச் சொல்லும்" என்று கூறினார்கள். பிரமதேவன் அப்படியே, இராமரே எல்லாவற்றிற்கும் மூலகாரண வஸ்துவென்பதையும், தருமத்தை நிலைநிறுத்துதற் பொருட்டு மனுஷியாவதார மெடுத்தா ரென்பதையும் எல்லோரும் கேட்கக்கூறி இராமரை நோக்கி, "சுவாமி! நீர் மகாவிஷ்ணுவே; ஜானகி பிராட்டியார் உம்முடைய திருமார்பில் எழுந்தருளிய இலக்குமியே; அவர்மீது நீர் தோஷங் கருத வேண்டாம்; சந்தோஷமாக அவரை ஏற்றுக்கொள்ளும்" என்று துதித்தான். அதன்மேல் சிவபெருமான் இராமரை நோக்கி, "ஸ்ரீ இராம நாதரே! நீரே ஆதிமூலப் பொருளென்பதை நீர் உணராதிருக்கின்றீர்; சகல அண்டங்களையும் பெற்ற தாயாகிய இலக்குமி தேவியே சீதாபிராட்டியார்; அவர் சிறிது காலம் இராக்ஷஸ சம்மாரத்தின் பொருட்டு உம்மைவிட்டு நீங்கியிருந்து இப்போது மீண்டும் உம்மிடம் வந்தடைந்தார்; அவரை நீர் ஏற்றருளும்" என்று சொல்லிவிட்டு, இராகவரைப் பிரிந்த துன்பத்தால் மரணமடைந்து விஷ்ணுவின் உலகத்தை யடைந்த தசரத சக்கரவர்த்தியினிடம் உடனே சென்று, "சக்கரவர்த்தியே! உம்முடைய புத்திரராகிய இராமர் இராக்ஷஸ ஸம்மாரம் செய்து

இலங்கையில் குதூகலத்தூட னிருக்கின்றார்; நீர் அவரிடம் சென்று பேசி அவரைப் பிரிந்த துன்பத்தை ஆற்றிக்கொள்ளும்" என்று சொன்னார். அப்பொழுதே தசரதர் புறப்பட்டு இராமருக் கெதிரில் வந்து நின்றார். இராமர் அவரைக் கண்டமாத்திரத்தில் அவருடைய பாதங்களில் வீழ்ந்து பணிந்தார். தசரதர் அவரை வாரி யெடுத்து மார்புறத் தழுவிக்கொண்டு, "அப்பா! இராமா! கைகேயியால் நான் உன்னை விட்டுப்பிரிந்து உயிர் நீத்தும் ஆறாத் துயரத்திலாழ்ந்திருந்தேன்; இப்போதுன்னைத் தழுவியதால் அத்துயரம் நீங்கப் பெற்றேன்; மேலும் உன்னை நான் பெற்றதனாலேயே தேவர்களெல்லாம் கொண்டாடத்தக்க மேலான பதவியையும் அடைந்தேன்" என்று பலவாறு கொண்டாடிவிட்டுச் சீதையின் பக்கத்தில் சென்றார். சீதை அவருடைய பாதத்தில் வீழ்ந்து பணிந்தாள். அவர் அவளை நோக்கி, "கற்பரசியே! இராமன் உன்னை அக்கினியிற் பிரவேசிக்கச் செய்தது கற்புயர்வை எல்லோருக்கும் விளக்கிக் காட்டற் பொருட்டேயாம்; நீயே மங்கையர்க் கரசியாகிய இலக்குமி" என்று கூறிப் புகழ்ந்து விட்டு, இலக்குமணனைக் கண்டு தழுவி, "அருமைப் புதல்வா! உன் தமையனுடன் நீ எப்பொழுதும் பிரியாதிருந்து அவனுக் குதவி புரிந்தனை; எவராலும் ஜெயிக்க முடியாத இந்திரஜித்துவைக் கொன்றாய்; உலகத்தில் தருமத்தை நிலை நிறுத்தினாய்; இத்தகைய உன்னைப் பிள்ளையாகப்பெற்ற எனக்கென்ன குறை?" என்று கொண்டாடி மீண்டும் இராமரிடம் வந்து, "இராமா! நீ என்னிடம் ஏதேனுமொருவரம் பெற்றுக்கொள்" என்று சொன்னார். இராமர், அவரைநோக்கி, "தந்தையே! நான் உம்மைவிட்டுப் பிரிந்து நீர் இறந்த செய்தியைக் கேள்விப்பட்டு ஆறாத் துயரத்திலாழ்ந்து, இனி விஷ்ணுலோகத்திற்குவந்து உம்மைக் கண்டுதான் அத்துயரத்தை ஆற்றிக்

கொள்ள வேண்டுமென்று நினைத்திருந்தேன்; அப்படி யிருந்த என்னிடம் நீரே வந்து இப்போதென் விசனத்தை மாற்றினீர்; இதைக்காட்டிலும் எனக்கு வேறேவரம் என்ன விருக்கின்றது?" என்றார். மனுஷியாவதாரத்திற் கேற்ப நடிக்கின்ற இராமருடைய வார்த்தையைத் தசரதர் கேட்டு அவரை மீண்டும் பார்த்து, "இராமா! உனக்கதுவே போது மென்றாலும் நான் சொன்னதற்காவது எதையேனும் நீ என் னிடம் கேட்கத்தான் வேண்டும்" என்றார். அதன்மேல் இரா மர், "தந்தையே! நீர் வெறுத்திருக்கின்ற கைகேயியும் பாத னும், எனக்குத் தாயுந் தம்பியுமாகும்படி நீர் வரந்தரவேண் டும்" என்றார். அதைக்கேட்டவுடன் அவருடைய பெருங் குணத்தைப்பற்றிச் சகல ஜீவர்களும் சந்தோஷித்து ஆர வாரஞ்செய்தார்கள். அப்போது தசாதர் இராமரை நோக்கி, "என் புதல்வா! பரதன் உனக்குத் தம்பியாகத் தக்க வரத்தை வேண்டுமானால் நான் தருகின்றேன்; கைகேயி மேலுள்ள வெறுப்பு மாத்திரம் எனக்கெப்பொழுதும் தீராது" என்றார். அதற்கு இராமர் "தந்தையே! கைகேயி என்னைக் காட்டிற்கனுப்பியதால் சாதுக்களுக்கு நன்மை யுண்டாயிற்று; அதனால் அவளை நான் தெய்வமாகவே கருதி யிருக்கின்றேன்; ஆதலால் நீர் அவள்மீதுள்ள வெறுப்பை விட்டுவிடவேண்டும்" என்றார். அதன்மேல் தசரதர் அவள் மீதிருந்த கோபம் மாறி, இராமர்கேட்ட இரண்டு வரங்களை யும் கொடுத்து அவரையும், இலக்குமணனையும், சீதையை யும் ஆசீர்வதித்து எல்லோரிடத்திலும் விடை பெற்றுக் கொண்டு விமானத்தின் மீதேறித் தம்பதவிக்குச் சென்ற னர். அதன்மேல் தேவர்களெல்லோரும் இராமரை நோக்கி, "ஸ்ரீ இராகவரே! எங்கள் துன்பத்தைப் போக்கிய நீர் எங்க ளிடத்தும் ஏதேனும் வரம்பெற்றுக் கொள்ளவேண்டும்" என்று சொன்னார்கள். இராமர், "யுத்தத்தில் மடிந்த வான

ரர்களெல்லாம் பிழைக்கவும் அவர்கள் வசிக்குமிடங்களிலெல்லாம் காய்கனி கிழங்கு தேன் நீர் முதலியவைகள் விருத்தியடையவும் நீங்கள் வரந்தரவேண்டும்" என்று தேவர்களிடம் கூறினர். அமரர்கள் அவ்வாறே அவ்வரத்தைக் கொடுத்தார்கள். அப்பொழுதே அனுமார் கொண்டுவந்த சஞ்சீவியால் பிழைத்தவர்கள் தவிர மற்ற வானரர்களெல்லாம் தங்கள் தேகத்தோடு உயிர் பெற்றெழுந்து வந்து இராமரை வணங்கினர்கள். பின்னர் முன்னே யுத்தகளத்தில் வந்து நாகபாசத்தை நீக்கிச் சென்ற கருடனும் வந்து இராமரிடம் வணங்கித் தன்னுடைய வரலாற்றையும் தனக்கும் இராமருக்கும் முன்னுள்ள சம்பந்தத்தையும் கூறிச் சென்றான்.

அதன்மேல் பிரமன் முதலிய தேவர்கள் இராமரை நோக்கி, "எம்பெருமானே! உமக்கு வனவாசத்திற் கேற்பட்ட பதினான்கு வருடங்களும் இன்றோடு பூர்த்தியாகின்றன; நீர் பரதனுக்குச் சொல்லி வந்தபடி இன்றைக்கே அயோத்திக்குச் செல்லாவிடில் அவன் அக்கினிப் பிரவேசமாய்விடுவான்; ஆதலால் நீர் அங்கே விரைந்துசெல்லவேண்டும்" என்று கூறிவிட்டு அவரிடம் விடைபெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் இருப்பிடம் போனார்கள். உடனே இராமர் விபீஷணனை நோக்கி, "இன்றே அயோத்திக்குப் போகத் தக்க வாகன மொன்றிருக்கின்றதோ?" என்று கேட்டார். விபீஷணன், "சுவாமி! குபேரனுக்குப் பிரமதேவரால் கொடுக்கப்பட்ட புஷ்பகவிமானமொன்று இங்கே இராவணனுக்குச் சொந்தமா யிருக்கின்றது; அதன்மீது வானரசேனைகள் முழுவதும் ஏறினும் ஒருபக்கத்தில் அடங்கிப்போம்; அது குறித்த விடத்திற்கு வெகு விரைவிற் போய்ச் சேரத் தக்கது" என்று கூறினன். "அப்படியானல் அதைக் கொண்டுவா" என்று விபீஷணனுக்கு இராமர் கட்டளையிட்

டார். அவ்வாறே விபீஷணன் அதனைக் கொண்டு வந்தான். இராமர் மகிழ்ந்து அதன் மீதேறினார். சீதை அதன்மேல் எழுந்தருளப் போனாள். அப்போது திரிசடை அவளை நோக்கி நமஸ்கரித்து, "அன்னையே! அடியாளும் தேவரீரோடு அயோத்திக்கு வருகிறேன்" என்று சொன்னாள். சீதை, "திரிசடையே! இலங்கையைச் சிறப்பிக்கத் தக்க பெண் நீ ஒருத்தியே; வேறொருவருமில்லை; ஆதலால், நீ இங்கேதானே இரு" என்று அவளுக்கு ஆக்ஞாபித்து விட்டு இராமர் பக்கத்தில் போய் அமர்ந்தாள். இலக்குமணனும் விமானத்தில் ஏறினான். அப்போது இராமர், விபீஷணனை நோக்கி, "தம்பி! நீ போய் இலங்காநகரத்தில் அரசு செய்துகொண்டு சுகமாக வாழ்ந்திரு" என்று சொல்லிவிட்டுச் சுக்கிரீவனைப் பார்த்து, "வானராதிபதியே! நீ உன் சேனைகளுடன் கிஷ்கிந்தைக்குச் சென்று செங்கோலோச்சி வாழக் கடவாய்" என்று கட்டளையிட்டு, அங்கதன், சாம்பவந்தர், அனுமார், பனசன், நீலன் முதலியவர்களை நோக்கி, "நீங்கள் சுக்கிரீவனுடன் சென்று அவனுக்குத் துணையாயிருங்கள்" என்று கூறினார். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே விபீஷணன் முதலிய எல்லோரும் மனந்திடுக்கிட்டுக் கண்ணீர் ஆறாய்ப்பெருக இராமருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி அவர் திருமுகத்தை நோக்கி, "எம்பெருமானே! தேவரீரோடு நாங்களும் வந்து தங்களுடைய பட்டாபிஷேக மகோற்சவத்தைக் கண்டுகளிக்கும்படியான வரத்தை எங்களுக்கு நீர் கொடுத்தருளவேண்டும்" என்று பிரார்த்தனை செய்தார்கள். அவர்கள் பிரிவாற்றாமையால் படுந்துன்பத்தைக் கண்ட இராமர் மனமிரங்கி அவர்களை நோக்கி, "அன்பர்களே! நீங்கள் துக்கப்பட வேண்டாம்; உங்களை அயோத்திக்கு அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்னும் எண்ணம் எனக்குண்டு; எனினும், உங்களு

டைய கருத்தை உணர்ந்து கொள்வதற்கே நான் இவ்வார்த்தைகளைக் கூறினேன்; நீங்கள் கவலையை ஒழித்து விமானத்தில் ஏறுவீர்களாக" என்று கட்டளையிட்டார். எல்லோரும் அக்கட்டளைப்படி விமானத்தில் ஏறினார்கள். வானர சேனைகளும் ஏறின. அதன்மேல், ஜானகி ஒரு பக்கத்திலும் இலக்குமணன் ஒரு பக்கத்திலு மிருக்க இராமர், நடுவில் அமர்ந்துகொண்டு சுக்கிரீவன் முதலிய வானரர்களை நோக்கி, 'நீங்களெல்லோரும் மனித வுருவங்கொண்டிருங்கள்' என்று கட்டளை யிட்டார். அவ்வாறே அவர்ளெல்லோரும் மானிட வுருவங் கொண்டிருந்தனர். உடனே இராமர், விமானம் புறப்படவேண்டுமென்று நினைத்தார். அவரெண்ணப்படியே அந்த விமானம் இலங்காபுரியை வலம்வந்து மேலெழுந்து ஆகாய மார்க்கத்தில் வடக்கு நோக்கி விரைந்து சென்றது.

அப்போது இராமர் அந்த விமானத்திலிருந்தபடியே ஜானகிக்கு, சேதுவைக்காட்டி அதன் மகத்துவத்தை விசேஷமாக எடுத்துக் கூறி, அதன்மேல் மைநாகபர்வதத்தையும், கந்தமாதனத்தையும், வருணன் தம்மைச் சரணமடைந்த விடத்தையும், பொதிகை மலையையும், திருமாலிருஞ்சோலையையும், சேஷகிரியையும் காட்டிக்கொண்டே சென்றார். அப்போது ஜானகி இராமரை நோக்கி, "சுவாமி! தேவரீர் அனுமானோடு சிநேகங்கொண்டது எவ்விடம்?" என்று கேட்டாள். அத்தருணத்தில் விமானம் கிஷ்கிந்தைக்குச் சமீபத்தில் சென்றது. இராமர் அதனைச் சீதைக்குக் காட்டி, "ஜானகி! இதுதான் அவ்விடம்; சுக்கிரீவன் அரசு செய்யுமிடமும் இதுவே" என்று கூறினார். அதைக் கேட்டதும் ஜானகி, இராமரிடத்தில், "சுவாமி! தேவரீர் மிகுந்த படைகளுடன் செல்லும்போது நான் மாத்திரம் பெண்கள் துணையின்றி வருவது பெருமையாகாது; ஆதலின் கிஷ்கிந்

தையிலிருந்து சிலபெண்களை வரவழைத்து என்னுடன் விமானத்தில் ஏற்றிக்கொள்ளவேண்டும்” என்று கூறினாள். அவர் விமானத்தை நிறுத்தி அப்படியே வானரப்பெண்களை வரவழைக்கும்படி சுக்கிரீவனுக்குக் கட்டளையிட்டார். சுக்கிரீவன் ஆஞ்சனேயரை நோக்கி, “நீர் சென்று நமது பெண்களை அலங்கரித்துக் கொள்ளச்செய்து இங்கே அழைத்து வாரும்” என்று சொன்னான். அவர் அவ்வாறே கிஷ்கிந்தைக்குச்சென்று அவர்களை அழைத்து வந்தார். அவர்கள் மங்கலப்பொருள்களுடன் வந்து விமானத்திலேறி ஸ்ரீ இராமரையும், சுக்கிரீவனையும், ஜானகியையும் வணங்கித் தாங்கள் கொண்டுவந்த அந்த மங்கலப் பொருள்களைச் சீதையின் பக்கத்தில் வைத்து உட்கார்ந்தார்கள். அவர்களும் மானிடஸ்திரீகளின் வடிவம் எடுத்துக் கொள்ளும்படி இராமர் அவர்களிடம் சொன்னார். அவ்வாறே அவர்களும் மானிடஸ்திரீகளைப்போல வடிவெடுத்தார்கள். அவர்களின் வடிவங்களைக் கண்டு சீதை மகிழ்ச்சியுற்றாள். பின்னர் விமானம் செல்லவேண்டுமென்று இராமர் சிந்திக்க அவ்வாறே அது அவ்விடத்தைவிட்டு விரைந்து சென்றது. அவ்வாறு செல்லும் போது இராமர் மேலும் சீதைக்கு, கோதாவரி நதி, தாம் சீதையை விட்டுப் பிரிந்தவிடம், தண்டகாரணியம், சித்திரகூடம் முதலிய விடங்களைக் காட்டிக்கொண்டே சென்றார். அதன்மேல் விமானம் பாரத்துவாசருடைய ஆச்சிரமத்திற்கு நேரே வந்தது. அதையும் இராமர் சீதைக்குக்காட்டினார். அப்போது பாரத்துவாசர், இராமர் வருவதையுணர்ந்து மிக்க ஆனந்தத்தோடு பல முனிவர்கள் புடைசூழ அவரை எதிர்கொண்டழைக்க வந்தார். அவர் வருகையையுணர்ந்த இராமர், விமானம் பூமியில் தாழும்படி நினைத்தார். அஃது அவ்வாறே இறங்கிற்று. உடனே இராமர் விமானத்தை விட்டிறங்கிப் பாரத்துவாசருடைய பாதங்களில் வீழ்ந்து நமஸ்

கரித்தார். அவர் இராமரை வாரியெடுத்துத் தழுவிக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். அதன்மேல், ஜானகி, இலக்குமணன், சுக்கிரீவன், விபீஷணன் முதலிய எல்லோரும் அம்முனிவருக்கு வணக்கஞ் செய்தார்கள். அவர் யாவருக்கும் ஆசிகூறினர்.

அதன்மேல் அம்முனிவர் ஸ்ரீ இராமரை ஆசிரமத்திற்குள் ஜானகியோடு அழைத்துச் சென்று அவருக்குச் செய்யத்தக்க மரியாதைகளையெல்லாம் செய்து, அவர் திருமுகத்தை நோக்கி, "ஐயனே! இராக்ஷதர்களையெல்லாம் நாசஞ்செய்து எங்களுடைய துன்பத்தைப் போக்கிய உம்முடைய பெருமையை நாங்கள் எவ்வாறு புகழ்வோம்! நீர் இன்றைக்கு எங்களுக்கு நல்விருந்தினராக இருந்து போக வேண்டும்; பரதன் உம்மைப் பிரிந்த நாள் முதல் நீர் எப்போது வருவீரோ என்ற தியானத்துடன் நந்திக்கிராமத்திலேயே சகலத்தையும் வெறுத்துத் தென்றிசையை நோக்கிய வண்ணமாக இருந்துகொண் டிருக்கின்றான்; நீர் விரைந்துசென்று அவனையும் பார்க்கவேண்டும்; உமக்கு வேண்டிய வரத்தையும் என்னிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்" என்று சொன்னார். அதைக்கேட்ட இராமர், "சுவாமி! என்னோடு வந்திருக்கும் வானரர்கள் செல்லுங் காடுகளிலெல்லாம் எந்தக்காலத்திலும், மழைக்காலத்தில் உண்டாவதுபோல் காய்கனி கிழங்குகளும், மதுவும், நீரும் நிறைந்திருக்கவும், அவர்கள் எப்போதும் சுக ஜீவிகளாய் வாழ்ந்திருக்கவும் வரந்தரவேண்டும்" என்றார். அந்த முனிவர் அப்படியே வரங்கொடுத்துவிட்டு இராமருக்கு விருந்து செய்யக்கருதி, ஆகவனீயம், தக்ஷிணாக்கினி, காருகபத்தியம் என்னும் முத்தீயால் அமைத்த யாகத்தில் வேதமந்திரங்களைச் சொல்லி அவிர்ப்பாகஞ் சொரிந்தார். உடனே தேவ

லோகத்திலுள்ள உயர்ந்த அனுபவப்பொருள்க ளெல்லாம் அங்கே வந்திறங்கி விட்டன. எல்லோரும் அம்முனிவர் வேண்டுகோளால் அந்த நகர் பொருள்களின் இன்பங்களை யெல்லாம் அனுபவித்து உணவுண்ண ஆரம்பித்தார்கள். அப்போது இராமர் பரதனுக்குத் தம் வருகையைத் தெரிவித்து விடவேண்டுமென்று கருதி, ஆஞ்சனேயரிடத்தில் தமது முத்திரை மோதிரத்தைக் கொடுத்து, "அனுமானே! இன்றைக்கே நான் அயோத்தி போய்ச் சேராததால் பரதன் தீமூட்டி அதில் விழ ஆரம்பித்திருப்பான்; ஆதலின் நீ விரைந்து சென்று, அவனிடம் நான் வருகிறேனென்பதைத் தெரிவித்து அதற்கறிகுறியாக இந்த மோதிரத்தையுங் கொடுத்து அவன் வளர்த்திருக்கும் நெருப்பையும் அவித்து விட்டுத் திரும்பி வரவேண்டும்" என்று சொன்னார். உடனே அனுமார் ஆகாய மார்க்கமாகப் பரதனிருக்குமிடத்தை நோக்கிச் சென்று கங்கைக் கரையில் குகன் எதிர்ப்பட அவனுக்கும் இராமர் வருகையைத் தெரிவித்து விட்டுக் கங்கையைக் கடந்து போனார்.

அவர் அவ்வாறு போய்க்கொண் டிருக்க, நந்திக்கிராமத்திலிருந்த பரதன், இராமர் திரும்பி வந்து விடுவதாகச் சொன்ன நாள் அன்றேயாதலின், அவர் அன்றைக்குத் தன்னிடம் வந்து சேராததால் மனங்கலங்கி, "அந்தோ! இராகவர் இன்றைக்கு வரவில்லையே; எனக்குப் பொய் கூறிவிட்டுப் போனாரோ? அல்லது அவர் போனவிடத்தில் ஏதேனும் சண்டை யேற்பட்டு வரத் தாமதமாய் விட்டதோ? அல்லது பரதனே இராஜ்ஜியத்தை ஆளட்டுமென்று அவர் தவத்தை விரும்பிக் காட்டில் தங்கி விட்டாரோ? அவருடைய எண்ணம் எப்படியிருந்தாலும் சரி; நான் ஆவியைப் போக்கிக் கொள்கின்றேன். என்னுடைய மரணத்தால் என்னைச் சார்ந்த குடும்பத்தாரெல்லோரும் இறந்தாலும் சரி; இனி

நான் அரை நிமிஷமேனும் உயிர் வைத்திருக்க மாட்டேன்; அவருக்கு முன்னே நான் கூறியபடி நெருப்பிடை வீழ்கின் றேன்" என்று சத்துருக்கனை வரவழைத்துத் தழுவிக் கொண்டு கண்ணீர்விட்டழுது அவனை நோக்கி, "தம்பி! நீ எனக்கொரு வரந்தரவேண்டும். இராகவர் சொல்லிப் போன தவணைப்படி இன்று வராததால் நான் அக்கினியில் வீழ்ந்திறக்கப் போகின்றேன்; நீ அயோத்தியிலுள்ளவர்கள் வருந்தாதபடி நம் அரசுரிமையைத் தாங்கிக் கொள்ள வேண்டும்; இதைத் தடுக்கக் கூடாது" என்று கூறினன். அதைக் கேட்டவுடன் சத்துருக்கன் விஷத்தையுண்டவன் போல் தலைசுழன்று இருசெவிகளையும் மூடிக்கொண்டு நிலத் தில் வீழ்ந்து புரண்டழுது அவனை நோக்கி, "அண்ணா! நீர் என்ன வார்த்தை கூறினீர்; இலக்குமணர் தமையனைப் பிரிய முடியாமல் அவருடன் காட்டிற்குச் செல்ல, நீர் இரா மர் வாராததற்கு இறக்க, நான்மாத்திரம் இராஜ்ஜியத்தைத் தாங்கி யிருக்கவா! உங்களில் சகோதர வாஞ்சையற்ற மகா பாவி நான் தானே!" என்று புலம்பினன். பரதன் அவனை வாரியெடுத்து மார்புறத்தழுவி ஆறாத்துயரத்துடன் அவன் முகத்தை நோக்கி, "தம்பி! உன் எண்ணம் அப்படியானல் நாம் இருவரு மிறப்போம்; அங்ஙனமிறந்தபின் நம் நாடு அரசனில்லாமல் தத்தளிக்கும். அதை யுணர்ந்தாவது இரா மர் வந்து அரசாட்சியைத் தாங்கிக் கொள்வார்; சீக்கிரம் நீ நெருப்பை மூட்டு" என்று சொன்னன். அப்போது இவர் களின் செய்கையைக் கௌசலை கேள்விப்பட்டு வயிற்றில் மோதியடித்து, அயோத்தியிலுள்ள ஸ்திரீகளெல்லாம் கத றிக்கொண்டு பின்னேவர ஓடிவந்து அந்தப்பிள்ளைகளுக்கும், நெருப்புக்கும் மத்தியில் நின்று பரதனை நோக்கி, "அப்பா பரதா! சக்கரவர்த்தியார் இறந்து இராமனும் காட்டிற்குப் போனதால் எல்லோரும் ஆறாத்துயரத்தி லாழ்ந்திருக்கும்

போது நீங்களும் இறந்தால் நாங்கள் எப்படி உயிர் வைத் திருப்போம்; நானும் சுமித்திரையும் உங்களுடன் இறப் போம்; இந்தக் கோசலநாடு முழுமையும் அக்கினியில் வீழும்; தருமமும் அழியும்; அந்த இராமன் இன்றைக்கு வாராவிட்டாலும் நாளைக்காவது வந்து விடுவான்; அவன் சொன்ன சொல் தவறமாட்டான்; அவன் நாளைக்கும் வாரா விட்டால் நாமெல்லோருமே மரண மடையலாம்; நீங்கள் இன்றைக்கு மாத்திரம் பொறுத்துக் கொள்ளுங்கள்" என்று கண்ணீர் விட்டழுதுகொண்டு சொன்னாள். அப்போது பரதன் கௌசலையை நோக்கி, "தாயே! நான் உம்முடைய சொல்லைத் தடுத்துவிட்டேனென்று நீர் என்மீது வருத்தப் படலாகாது; நான் செய்துகொண்ட வாக்குறுதியில் தவற மாட்டேன்; அங்ஙனம் தவறுவேனேயானால் சூரிய குலத் துக்கு இழிவுண்டாகும்; ஆதலால், நீர் எங்களைத் தடுக்க வேண்டாம்" என்று கூறி விட்டு அங்குக் கூடியிருந்தவர்க ளெல்லாம் அழுது புலம்ப அக்கினியில் வீழ்வதற்கு இராம ரைத் தியானித்துக்கொண்டு அதன் சமீபத்தில் போய் நின் றான். சத்துருக்கனும் அவனுக்குப் பின்னேபோய் நின்றான்.

அத்தருணத்தில் ஆகாயமார்க்கமாக வேகமாய்ச் சென்ற அனுமார் அங்குச் சேர்ந்து பரதனுடைய நிலைமை யைப் பார்த்து மனந்திடுக்கிட்டுத் திடீரென்று கீழே குதித்து, "இதோ இராமர் வந்தார்! வந்தார்!!" என்று சொல்லிக்கொண்டு பரதனுக்கு முன்னே எரிந்துகொண் டிருந்த நெருப்பை அவித்துவிட்டுப் பரதனுடைய பாதங் களில் வீழ்ந்து பணிந்து எழுந்து நின்று அவனை நோக்கி, "பரதரே! இராகவர் சொல்லிப்போன தவணை நாள் இன் னும் கழியவில்லை; இன்றிரவு போய் நாளைப்பொழுது விடி யும்வரை இருக்கின்றது. அதற்குள் அவர் உம்மிடம் வந்து

விடுவார்; இன்று பாரத்துவாசர், அவர் தம்மிடம் விருந்துண்ணுமாறு அவரை வேண்டிக் கொண்டபடியால் அவர் சிறிது நேரம் அவருடைய ஆச்சிரமத்தில் தாமதித்து விட்டார்; அதனால் ஒரு சமயம் நீர் அக்கினிப் பிரவேசம் செய்தாலும் செய்து விடுவீரென்று நினைத்து, தம்முடைய வருகையை உம்மிடம் தெரிவித்து வரும்படி என்னை அனுப்பினார்; அவருடைய அடையாளத்தையும் உமக்குக் காட்டும்படி என்னிடம் கொடுத்திருக்கின்றார்; இதோ அதைப்பாரும்" என்று இராமருடைய மோதிரத்தை அவனுக்குக் காட்டினார். அதைப் பார்த்த மாத்திரத்தில் பரதனும் மற்ற யாவரும் சந்தோஷ ஆரவாரஞ் செய்தனர். உடனே பரதன் அந்த மோதிரத்தை வாங்கி முகத்திற் சேர்த்துக்கொண்டு அங்கு நின்றவர்களோடு சேர்ந்து இராமருடைய கலியாண குணங்களைப் புகழ்ந்துபாடி ஆனந்தக் கூத்தாடி ஆஞ்சனேயரைப் பார்த்து, "நீர் பிரமசாரியாயிருப்பது வாஸ்தவமன்று; திரிமூர்த்திகளில் ஒருவராயிருப்பீரென்றே நான் நினைக்கின்றேன்; உண்மையாக நீர் இன்னாரென்பதை எங்களுக்குத் தெரிவிக்கவேண்டும்" என்றான். அனுமார் அவனுக்கும், மற்றையர்க்கும் தம்முடைய வரலாற்றைக்கூறி விசுவரூபங் கொண்டு இயற்கையான வடிவத்தைக்காட்டி நின்றார். அந்த உருவத்தைப் பார்த்தவுடன் அங்கு நின்றவர்களெல்லோரும் அஞ்சினார்கள். அப்போது பரதன், அந்த வடிவத்தைக் குறுகச்செய்ய வேண்டுமென்று அனுமாரிடம் வேண்டிக் கொண்டான். ஆஞ்சனேயர் அப்படியே குறுகி நின்றார்.

அதன்மேல் பரதன் உயர்ந்த ஆடையாபரணங்களையும் திரவியங்களையும் அனுமாருக்குப் பிரீதியுடன் கொடுத்துவிட்டுச் சத்துருக்கனை நோக்கி, "தம்பி! ஸ்ரீ இராகவரை எதிர் கொள்ளுதற்கு அயோத்தியிலுள்ளவர்கள் அலங்

காரத்துடன் புறப்படும்படியும், நகரத்தை அலங்கரிக்கும்படியும், நகரத்திலிருந்து பாரத்துவாசர் ஆசிரமம் வரைக்கும் முத்துப்பந்தர் போடும்படிக்கும் எங்கும்பறைசாற்றித் தெரிவிக்கும்படி வள்ளுவர்களுக்குக் கட்டளை யிடக்கடவாய்" என்று தெரிவித்தான். அவன் அவ்வாறே கட்டளையிட்டான். வள்ளுவர்களால் எங்கும் முரசறையப்பட்டது; நகரமாந்தர்களால் நகரமும் அலங்கரிக்கப்பட்டது; முத்துப்பந்தரும் போடப்பட்டது; அயோத்தியிலுள்ள நான்கு வருணத்தார்களும் களிப்புடன் அலங்கரித்துக் கொண்டு இராமரை எதிர்கொள்ளப் புறப்பட்டார்கள்; அறுபதினுயிரம் அக்குரோணி சேனைகளும் புறப்பட்டன; இராஜ குடும்பத்தார்களும், சேனுவீரர்களும், அவர்களுடைய பத்தினிமார்களும் பிரயாணமானுர்கள். அங்ஙனம் புறப்பட்ட எல்லோரும் நந்திக்கிராமம்வந்து கூடினுர்கள். அதன்மேல் பரதன், சத்துருக்கனும், மற்ற பந்து ஜனங்களும், முனி சிரேஷ்டர்களும், இரதகஜதுரக பதாதிகளும் புடைசூழ, இராகவருடைய திருப்பாதுகைகளை முடியில் தாங்கி, வெண்பட்டுக் குடை நிழற்றவும், இருபுறங்களிலும் சாமரை வீசவும், ஆஞ்சனேருடைய கையைப் பற்றிக்கொண்டு இராமரை எதிர்கொள்ளச் சென்ருன். கௌசலை, சுமித்திரை, கைகேயி ஆகிய மூவரும் இரத்தின தண்டிகைகளில் ஏறிக்கொண்டு அவனுடன் சென்ருர்கள். அப்போது சூரியாஸ்தமனமாயிற்று. மேற்கூறியபடி சென்ற பரதன் அந்த மாலைப் போதில் நடந்துகொண்டே அனுமாரிடத்தில், இராமர், இராவண சம்மாரம் நடத்திவந்த விவரங்களையெல்லாம் கூறும்படி வேண்டினுன். அவர், இராமர் அயோத்தியைவிட்டு நீங்கியது முதல் பாரத்து வாசருடைய ஆச்சிரமத்திற்குத் திரும்பி வந்தது வரை நடந்தவைகளை யெல்லாம் கூறிக் கொண்டே சென்ருர். பரதன், இராமர் அடைந்த வருத்

தங்களை யெல்லாம் கேட்டுக் கண்ணீர்விட்டழுதுகொண்டே நடந்து இரவையெல்லாம் கழித்து விடியுந் தருணத்தில் கங்கைக்கரை போய்ச்சேர்ந்தான். அப்போது சூரியன உதயமாயினான். அங்ஙனம் சூரியோதயமானவுடன் பரதன், காலைக் கடன்களை முடித்துக்கொண்டு இராமருடைய பாது கைக்கு அருச்சனை செய்து விட்டுச் சமீபத்தில் தோன்றிய பாரத்துவாசருடைய ஆச்சிரமத்தில் யாதொரு அரவமுமில் லாதிருந்ததால் ஆஞ்சனேயரை நோக்கி, "வானர சிரேஷ் டரே! இராமர் வானர சேனைகளுடன் பாரத்துவாசருடைய ஆச்சிரமத்தில் இருக்கின்றார் என்று நீர் சொன்னீரே; அப் படி யிருந்தால் அங்கே யாதொரு அரவமுமில்லாமலிருக் குமா? நீர் பொய்கூறி என்னை அழைத்து வந்திருக்கின்றீர்" என்று துக்கத்துடனும் கோபத்துடனும் சொன்னான். அதைக்கேட்டு அனுமார் பரதனை நோக்கி, "சக்கரவர்த்தி குமாரரே! நீர் என் சொல்லில் சந்தேகம் கொள்ளவேண் டாம்! தேவர்கள் கொடுத்த வரத்தால் பெருகிய மதுவை யும் கனிகளையும் வானரர்கள் உண்டதால் மயங்கி உறங்கு கின்றார்கள்; இன்னும் சிறிது நேரத்திற்குள் எல்லோரும் எழுந்திருப்பார்கள்; இராகவரும் அவர்களுடன், புஷ்பக விமானத்திலேறிப் புறப்படப் போகின்றார்; நாம் அவர்களைப் பார்க்கவே போகின்றோம்" என்று சமாதானஞ் சொல்லிக் கொண்டிருந்தார்.

இவர்கள் இங்கே இப்படியிருக்க, அனுமாரை இராமர் பரதனிடம் அனுப்பியபின் பாரத்துவாசருடைய ஆச்சிரமத் தில் என்ன நடந்ததெனில், இராமர் முன்னே சொல்லியபடி அனுமாரை அனுப்பிவிட்டுப் பாரத்துவாசரால் இடப் பட்ட விருந்துணவைத் தம்முடன் சேர்ந்தவர்களோடு கூடி உண்டு களித்திருந்தார். அப்போது அனுமாரால் இராமரு டைய வருகையைக் கேள்விப்பட்ட குகன் வேடுவச் சேனை

களுடன் புறப்பட்டு வந்து இராமருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினன். இராமர் அவனை வாரி யெடுத்துத் தழுவிக்கொண்டு, "அப்பா குகனே! நீயும் உன்னுடைய மனைவி மக்களும் சுற்றத்தார்களும் க்ஷேமமாயிருக்கின்றீர் களா?" என்று அன்புடன் வினவினர். அவன், "சுவாமி! உம்முடைய கிருபை யிருக்கும்போது எனக்கென்ன குறைவுவரும்; இலக்குமணரைப்போல நானும் உம்முடன் வந்து உமக்குத் தொண்டு செய்யாமற் போயின குறை தவிர எனக்கு வேறொரு குறையுமில்லை" என்று கூறித் துக் கித்தான். இராமர் அவனை நோக்கி, "தம்பி! பரதனிருந்த நிலையிலேயே நீயுமிருந்திருக்கின்றாய்; எனினும் பாதக மில்லை; துக்கம் நிவிர்த்தியாக வேண்டிய காலம் வந்துவிட் டது; இனி நீ கவலைப்பட வேண்டாம்; உட்காருவாயாக" என்று சொன்னர். அவன், இலக்குமணனையும், ஜானகியை யும் நமஸ்கரித்துவிட்டு உட்கார்ந்தான். அதன்மேல் இரா மர் தம் தோழர்களுக்குக் குகனுடைய வரலாற்றைக் கூறி னர். அதைக்கேட்டுச் சுக்கிரீவன் முதலியவர்கள் குகனோடு சிநேகமானர்கள். அப்போது சூரியன் அஸ்தமித்ததால் இராமர் மாலைக் கடன்களை முடித்துக்கொண்டு இரவானதும் சயனித்தார். மற்றவர்களும் சயனித்துக்கொண்டார்கள். இலக்குமணனும் குகனும் விடியும்வரை இராமருக்குக் காவ லாக நின்றார்கள். பின் சூரியோதயமாயிற்று. அங்ஙனம் இரவு நீங்கியதும் இராமர் எழுந்து மற்றவர்களுடன் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு பாரத்துவாசரிடம் விடை பெற்று விமானத்திலேறிப் புறப்பட்டார். விமானம் ஆகா யத்தில் செல்லவே இராமருக்கு அயோத்தி தெரிந்தது. இராமர் அதனைக் கண்டதும் தோழர்களுக்குக் காட்டினர். எல்லோரும் அந்த அயோத்தியைப் பார்த்து நமஸ்கரித்

தார்கள். அதன்மேல் அந்த விமானம் முன்னே கூறியபடி அனுமாரும் பரதனும் பேசிக்கொண்டிருந்த விடத்திற்குச் சென்றது. ஆஞ்சநேயர் அதைக்கண்டு பரதனை நோக்கி, "இராமபிரானும் மற்றவர்களும் விமானத்தில் இதோ வரு கின்றார்கள் பாரும்" என்று அவனுக்கதனைக் காட்டினார். அவன் அவ்விமானத்தைக்கண்டு பெருமகிழ்ச்சியடைந்தான். அங்கு நின்ற மற்றவர்களும் அதனைப் பார்த்துச் சந்தோ ஷித்து ஆரவாரம் செய்தார்கள். பின்னர் பரதன் அவ்விமா னத்தில் இருந்த இராமரைக் கண்டு தன்னை மறந்து காங் களைச் சிரசில் கூப்பிக்கொண்டு நின்றான். அப்போது அனு மார் மேலெழுந்து விமானத்திற் பாய்ந்து இராமருக்கெதி ரில் போய் நின்று வணங்கி, "சுவாமி! நான் அங்கே போகா விடில் பரதர் முதலிய எல்லோரும் மடிந்தே யிருப்பார்கள்; நான் அங்கே போய்ச் சேர்ந்தபோது பரதர் நெருப்பில்வீழ ஆயத்தமாய் நின்றார்; அவர் பின்னே மற்றவர்களும் இறக் கத்துணிந்து நின்றார்கள்; நான் போய் அவர்களுக்கு உம்மு டைய வரவைக்கூறி அவர்களுயிரைக் காப்பாற்றினேன்; இதோ பரதர் முதலிய எல்லோரும் சமீபத்தில் வந்திருக் கின்றார்கள்" என்று சொன்னார். அவற்றைக் கேட்டதும் இராமர், "எனக்குத் துன்பங்கள் ஒன்றின்பின் ஒன்றாக வந்துகொண்டே யிருக்கின்றன; மாருதி! நீ யில்லாவிடில் நான் அத்துன்பங்களை அனுபவித்தே தீரவேண்டும்; நான் செய்த தவப்பயனாலேயே நீ எனக்குக் கிடைத்தாய்" என்று சொன்னார்.

அவ்வாறு சொல்லிக்கொண் டிருக்கும்போதே பரதன் இளைத்த தேகத்துடன் இராமருடைய பாதுகைகளைச் சிரசில் தாங்கிக்கொண்டு விமானத்துக்கு நேரே வந்தான். அனுமார் 'இதோ பரதர் வந்துவிட்டார்' என்று இராமருக்கு அவனைக் காட்டினார். உடனே இராமர் விமானம் கீழே

யிறங்கவேண்டு மென்று நினைக்க, அஃது இறங்கிற்று. அவ்வி மானம் இறங்கிப் பூமியிற்சேர்ந்ததும், அயோத்தி நகரத்து ஜனங்களெல்லோரும் பரிமளப் பொடிகள், சந்தனம், முத்து, புஷ்பம், வாசனைத்தைலம் முதலியவற்றை இராமர்மீது வாரி யிறைத்தும், ஒருவர்மீதொருவர் இறைத்துக் கொண்டும் சந்தோஷ ஆரவாரம் செய்து நெருங்கி இராமரை வணங்கி னார்கள். கௌசலை, சுமித்திரை, கைகேயி, பரதன், சத்து ருக்கன், வசிஷ்டர் ஆகியவர்கள் விரைந்துவந்து விமானத்தில் ஏறினார்கள். ஸ்ரீ இராமலக்குமணர்கள் முதலில் வசிஷ்டரை வணங்கி, அதன்மேல் தாய்மாரை வணங்கினார்கள். அவர்கள் அவ்விருவருக்கும் ஆசி கூறி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார் கள். ஜானகியும் அவர்களுக்கு முறைப்படி நமஸ்காரஞ் செய் தாள். அவர்கள் அவளையும் வாழ்த்தினார்கள். பின்னர், பர தன் இராமருடைய திருப்பாதுகைகளை அவர் பாதத்தில் வைத்து வணங்கிக் கண்ணீரொழுக நின்றான். அப்போது இராமர், அவனுடைய நிலைமைக்கு மனங்கரைந்து அவ னுக்கு இன்னவிதமாகத்தான் ஆசி கூறுவதென்பதை யுண ராமல், கதறியழுது அவனைத் தழுவி அவனுடம்பெல்லாம் நனையும்படி கண்ணீர் விட்டார். அதன்மேல் இலக்குமணன் பரதனுடைய பாதங்களில் வீழ்ந்து பணிந்தான். பரதன் அவனைத் தழுவிக்கொண்டான். அதன்மேல் சத்துருக்கன் இராமரையும் இலக்குமணனையும் சேவித்துக் கொண்டான். அவர்கள் அவனை மார்புறத்தழுவிக் கொண்டார்கள். பின்னர் சத்துருக்கனும் பரதனும் ஜானகிக்கு நமஸ்காரம் புரிந்தார் கள். அவளும் அவர்களை ஆசீர்வதித்தாள். அதன்மேல் பரத னுக்கும் சத்துருக்கனுக்கும் இராமர், தம்முடைய தோழர் களாகிய சுக்கிரீவன் முதலியவர்களுடைய விருத்தாந்தங்க ளைக் கூறினார். அவர்களெல்லோரும் பரதனையும் சத்துருக் கனையும் வணங்கினார்கள். அவ்விருவரும் முறைப்படி அவர்க

ளெல்லோருக்கும் மரியாதை செய்தார்கள். பிறகு சுமந்திரனென்னும் மந்திரியும், மற்ற அமைச்சர்களும், சேனாதிபதிகளும், பந்துக்களும், இராஜகுமாரர்களும் இராமருக்கெதிரில் வந்து நின்று வணங்கினார்கள். அவர், அவர்களெல்லோருக்கும் கிரமப்படி முகமன் கூறி அவர்களுடைய க்ஷேமங்களை ஒவ்வொருவரிடத்தும் விசாரித்தார். இலக்குமணனும் அவர்களைக் கொண்டாடினான். அதன்மேல் விமானத்தில் ஏறிக்கொள்ளும்படி இராமர் எல்லோருக்கும் கட்டளையிட்டார். அவ்வாறே சகலரும் அதிலேறி இராமரைப் பணிந்து சந்தோஷ முழக்கம் செய்தார்கள். ஆகாயத்தில் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்ற தேவர்கள் இராமருக்குப் பல்லாண்டு கூறினார்கள். வேதியர்கள் வேதபாராயணம்செய்தார்கள். சகல வாத்தியங்களும் முழங்கின. அப்போது இராமர், 'விமானம் எழும்பிச்சென்று அயோத்தியிற் சேரவேண்டும்' என்று நினைத்தார். அவ்வாறே அத்தகைய ஆனந்த கோஷ்டங்களுடன், புஷ்பகவிமானம் அவ்விடத்திலிருந்து மேலெழும்பித் தேவர்கள் புஷ்பமாரிபொழிய அயோத்தியாபுரியைச் சேர்ந்தது.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம்.

அங்ஙனம் விமானம் அயோத்தியைச் சேர்ந்தபின் இராமர் எல்லோரோடும் விமானத்தை விட்டிறங்கி, அயோத்திக்குத் தென்மேற்குத் திசையிலுள்ள நந்திக் கிராமத்தையடைந்து, சடையைக் களைந்து க்ஷௌரம் செய்துகொண்டு தம்பிமாரோடு சரயுநதியில் மூழ்கி உபாசனா மூர்த்தியைத் துதித்துத் திருமண்காப்பிட்டு ஆடையாபரணங்களால் தம்மை அலங்கரித்துக்கொண்டு நான்கு வெள்ளைப் புரவிகள் பூட்டிய இரதத்தில் ஏறி மீண்டும் அயோத்திக்குச் சென்றார்.

அவ்வாறு செல்லும்போது இலக்குமணன் இராமருக்குப் பின் புறத்தில் நின்று வெண்கொற்றக் குடைபிடித்தான்; சத்துருக்கன் சாமரை வீசினன்; பரதன் தேர்ச்சாரத்தியஞ் செய்தான்; தேருக்கு இரண்டு பக்கங்களிலும் விபீஷணனும், சுக்கிரீவனும் யானைகளின்பேரி லேறிச் சென்றார்கள். அங்கதன் கொடிப்படையின் முன்னே போனன். ஆஞ்சனேயர் தேருக்குப் பின்சென்றார். அறுபத்தேழுகோடி யானைகளின் மேல் ஏறி வானரப்படை வீரர்கள் மானிட வுருக்கொண்டு சென்றனர். வானர ஸ்திரீகளெல்லோரும் தேவஸ்திரீகளைப் போல உருமாறி அலங்காரத்துடன் பெட்டை யானைகளிலும் பெண் குதிரைகளிலும் ஏறிச்சென்றார்கள். அவர்களுக்கு மத்தியில் ஜானகி விமானத்திலேறிச் சென்றாள். கௌசலை முதலியவர்கள் சிவிகைகளி லேறிச் சென்றார்கள். இவ்வாறு சென்ற இராமர் எல்லோரோடும் அயோத்தியை அடைந்து இரதத்தை விட்டிறங்கித் தாய்மார் மூவரையும் வசிஷ்டரையும் வணங்கி அரண்மனையிற் பிரவேசித்து, விபீஷணன், சுக்கிரீவன் முதலியவர்களுக்கு அரண்மனைச் சிறப்புக்களை யெல்லாம் காட்டும்படி பரதனுக்குக் கட்டளையிட்டார். பரதன் அப்படியே அவர்களுக்கு எல்லாவற்றையுங் காட்டினன். அவர்கள் அவற்றைக் கண்டு மகிழ்ந்தார்கள். பின்னர் எல்லோரும் ஓர் இரத்தின மண்டபத்தில் உட்கார்ந்தார்கள். அப்போது சுக்கிரீவன் பரதனைப்பார்த்து, "இராமர் இங்கு வந்ததும் பட்டத்தைத் தாங்கிக்கொள்ள வேண்டியது முக்கியமாயிருக்க இன்னும் அவருக்குப் பட்டாபிஷேகம் செய்ய நாள் குறிப்பிடாமலிருப்பதற்குக் காரணமென்ன?" என்று வினவினன். அதற்குப் பரதன், "சகல புண்ணிய தீர்த்தங்களும் இங்கே வந்து சேரவேண்டும்; அவை வந்த பின்புதான் மகுடாபிஷேக நாள் குறிப்பிட வேண்டும்; ஆதலின் அதற்கான முயற்சிகளை நீங்களே

செய்யுங்கள்" என்றான். உடனே சுக்கிரீவன், "நம்முடைய மாருதி யிருக்கும்போது அந்தத் தீர்த்தங்கள் இங்கே வந்து சேர்வதற்கு நாம் பிரயாசை யெடுத்துக்கொள்ள வேண்டியதில்லை" என்று ஆஞ்சனேயரை நோக்கினான். அப்பார்வை யான்து 'நீர் அவற்றைக் கொண்டுவருவீராக' என்று அவன் கூறுவதைக் காட்டிற்று. ஆஞ்சனேயர் அக்குறிப்பினால் தன்னையே அத்தீர்த்தங்களை அவன் கொண்டுவரச் சொல்கிறானென்பதை யுணர்ந்துகொண்டு அப்பொழுதே அவற்றைக் கொண்டுவரப் போயினார். அதன் மேல் பரதன், வசிஷ்டரையும், சுக்கிரனையும், பிரகஸ்பதியையும், கணிதசாஸ்திரிகளையும் அங்கே வரவழைத்து ஆசனங்களில் எழுந்தருளச் செய்து அவர்களை நோக்கி "நீங்கள் இராகவருக்கு முடி சூட்டும் நாளை ஆராய்ந்துரைக்க வேண்டும்" என்று சொன்னான். அவர்கள் ஆலோசித்து மறுதினமே அதற்குரியதென்று கூறி முகூர்த்த நேரத்தையும் நிச்சயித்தார்கள். உடனே பரதன், மகுடாபிஷேகத்திற்குரிய அத்தினத்தைச் சகலருக்கும் அறிவிக்கும்படி காரியக்காரர்களுக்குக் கட்டளையிட்டான். அவர்கள் எல்லா அரசர்களுக்கும், முனிவர்களுக்கும், மற்றையர்க்கும் இராமர் பட்டாபிஷேகமும் அதற்குரிய நாளும் குறித்த திருமுகங்களெழுதித் தூதுவர்களிடம் கொடுத்தனுப்பினார்கள். சகல தேசத்தரசர்களும் அவற்றால் அச்சுபச் செய்தியை யுணர்ந்து அதைக் கண்டு களிக்கும் பொருட்டு அயோத்தியில் வந்து நிறைந்து கொண்டிருந்தார்கள். அதன்மேல் வசிஷ்டரும், பரதன் முதலியவர்களும் இராமரிடம் சென்று, "சூரியகுலத் தோன்றலே! உமக்குத் திருமுடி சூட்ட நாளைக்கு முகூர்த்தம் குறிப்பிடப்பட் டிருக்கிறது; ஆதலின், அதற்கு முன்னாளாகிய இன்றைக்குச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்தற்கு நீர் எழுந்தருளவேண்டும்" என்று சொல்ல

அவர் அவ்வாறே சென்று அக்கிரியைகளை நிறைவேற்றினர்.

அதன்மேல் பிரமதேவர் அங்கே வந்து மகுடாபிஷேக மண்டபத்தைச் சிறப்புடன் அமைக்கும்படி மயனுக்குச் சொல்ல, அவன், அவ்வாறே அதனை அழகுடன் கட்டி முடித்தான். ஆஞ்சநேயரும், நான்கு திசைகளிலுமுள்ள சமுத்திர தீர்த்தங்களையும், புண்ணிய மிக்க சப்த நதிகளின் தீர்த்தங்களையும் கொண்டு வந்து சேர்த்தார். மறு நாள் அரசர்கள் பல யானைகளின்மேல் இரத்தினக் குடங்களில் சாயுநதி தீர்த்தத்தைக் கொண்டு வந்தார்கள். பளிங்குக் கற்களால் அமைந்த ஒரு சிங்கார மாளிகையில், மாணிக்கப் பலகை சேர்த்து வச்சிரக் கால்கள் அமைத்துப் பொன்னால் விளிம்பு செய்யப்பட்ட பீடத்தின்மேல் இராமபிரான் சீதாபிராட்டியாரோடு எழுந்தருளினர். சுமங்கல ஸ்திரீகள் மங்கள கீதங்கள் பாடவும், அந்தணர் வேதகோஷம் செய்யவும், பல வாத்தியங்கள் முழங்கவும், தேவர்கள் புஷ்பமாரி சொரியவும், வசிஷ்டர் முதலிய முனிவர்களும், பிராமணர்களும், நல்லொழுக்கமுள்ள இராஜ புருஷர்களும், மந்திரிகளும் முறையே தீர்த்தங்களை யெடுத்து இராமருக்கு அபிஷேகம் செய்தார்கள். பின்னர், சுக்கிரீவன், சாம்பவர், அனுமார், விபீஷணன், குகன் முதலியவர்கள் கிரமமாக அபிஷேகம் செய்தார்கள். அந்த அபிஷேகங்களை யெல்லாம் வசிஷ்டர் வைதிக மார்க்கத்தின்படி மந்திரங்களைச் சொல்லி நடத்திச் சுமந்திரனென்னும் முதல் மந்திரியைச் சமீபத்தில் வைத்துக்கொண்டு மற்ற சடங்குகளையும் சிறப்பாகச் செய்தனர். இவை யெல்லாம் நடந்தபின்பு, அனுமார் சிம்மாதனத்தைச் சுமக்கவும், அங்கதன் உடைவாளைப்பற்றி நிற்கவும், பரதன் வெண்கொற்றக் குடைபிடிக்கவும், இலக்குமணனும் சத்துருக்கனனும் இருபுறங்களினும் நின்று சாமரை

வீசவும், சீதாபிராட்டியார் பக்கத்தில் எழுந்தருளி யிருக்கவும், அசுரகுல குருவாகிய சுக்கிரனும், தேவகுல குருவாகிய பிரகஸ்பதியும், வசிஷ்டரும், மற்ற சோதிடரும் குறித்த நல்ல முகூர்த்தத்தில் இராமர் இரத்தினமயமான சிம்மாதனத்தில் எழுந்தருளி யிருக்க திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப முதலியாருடைய மரபினராகிய வேளாளர்கள் மாணிக்க கிரீடத்தை எடுத்துத் தர அதனை வசிஷ்டர் வாங்கி இராமபிரானுக்குச் சூட்டினார். சகல வாத்தியங்களும் முழங்கின; தேவர்களும் மண்ணுலக வாசிகளும் மலர்களைவாரி இராமர்மீது இறைத்தனர். பூமிதேவியும், இலக்குமியும், சரஸ்வதியும் மகிழ்ச்சியுற்றார்கள். வசிஷ்டர் முதலிய முனிவர்களும், பிராமணர்களும் இராமருக்குத் திருஷ்டி தோஷம் படாதிருக்கும் பொருட்டு மங்களாசாசனம் செய்து வேதங்கங்களாலும் வேதமொழிகளாலும் அவரைத் துதிசெய்தார்கள். சகல ஜனங்களும் இராமருக்கு மங்கள முண்டாகுக என்று சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். பின்னர், வசிஷ்ட முனிவர் வேத மந்திரங்களைச் சொல்ல ஸ்ரீ இராகவர் சாஸ்திர விதிப்படி தம்முடைய தம்பிமார்கள் மூவருக்கும் கிரீடங்களைத் தரித்து, இராஜகாரியங்களை நடத்தும் பொறுப்பைப் பரதனுக்களித்தார். இவ்வாறு மகுடாபிஷேகம் நிறைவேறின பிறகு இராமர் வித்வான்களுக்கும், வேதியர்க்கும், யாசகர்க்கும் நல்லுணவளித்தும், விருந்து செய்து வேண்டுவன நல்கியும் களித்திருந்தார்.

அப்படி யிருக்கும்போது ஸ்ரீ இராகவர் ஒருநாள் சகல சிறப்புக்களுடனும் கொலுக் கூடத்திற்குச் சென்று சிங்காசனத்தி லமர்ந்தார். அங்கே மந்திரிகளும், பெரியோர்களும் வந்து கூடினார்கள். அறுபத்தேழு கோடி வீரர்களோடு எழுபதுவெள்ளம் வானரசேனைகள் சூழ்ந்து

வரச் சுக்கிரீவனும், இராக்ஷஸகுல வீரரோடு விபீஷணனும், வேடுவச் சேனைகள்சூழக் குகனும்வந்து இராமருக்குத் தண்டம் ஸமர்ப்பித்து அவருக்கு முன்னே கைகளைக் கூப்பிக் கொண்டு நின்றார்கள். இராமர், அவர்கள் ஆசனங்களிலமரும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார். எல்லோரும் உட்கார்ந்தார்கள். மற்றவர்களும் ஆசனங்களில் அமர்ந்தார்கள். அப்போது இராமர், அங்கே வந்திருந்த வேதியர்களுக்கும், அரசர்களுக்கும் ஆடையாபரணங்களையும், நிதிகளையும், நிலங்களையும் கொடுத்து அவர்களைத் தங்கள் தங்கள் இருப்பிடங்கட்குச் செல்லுமாறு அனுப்பிவிட்டு, சம்பராசுரனை ஜெயித்த தசரதருக்கு இந்திரனால் கொடுக்கப்பட்டு அரண்மனையிலிருந்த கடகத்தையும், யானைகளையும், தேர்களையும், குதிரைகளையும், சுவர்ண வஸ்திரங்களையும் சுக்கிரீவனுக்குக் கொடுத்தும், தம்முடைய பாம்பரையிலிருந்த இட்சுவாகு சக்கரவர்த்திக்குப் பூர்வத்தில் பிரமதேவனால் கொடுக்கப்பட்டுத் தம் வழியில்வந்து ஆபரணச் சாலையிலிருந்த வாகுவலயத்தையும், விலையுயர்ந்த இரத்தின ஹாரத்தையும், பீதாம்பரத்தையும், குதிரைகளையும், யானைகளையும் அங்கதனுக்குக் கொடுத்தும், அவனை நோக்கி, "அப்பா! நீ எப்போதும் சுக்கிரீவனைவிட்டு நீங்காதிரு" என்றுசொல்லியும், அனுமாரை நோக்கி, "மாருதி! நீ செய்த சகாயத்திற்கு நான் என்ன கைம்மாறியற்றப் போகின்றேன்; ஆயினும் நான் அன்புடன் கொடுப்பதை நீ ஏற்றுக்கொள்" என்று தம்முடைய மார்பிலணிந்திருந்த வஜ்ஜிர ஹாரத்தையும், மெல்லிய பீதாம்பரத்தையும், யானை குதிரைகளையும் அவருக்குக் கொடுத்தும், ஜானகியும் ஏதாவது கொடுக்கவேண்டுமென்ற குறிப்பு விளங்கும்படி கடைக்கண்ணால் அவளைப் பார்த்தார். அக்குறிப்பையுணர்ந்த ஜானகி, வாணி தனக்குக் கொடுத்த முத்தாரத்தையெடுத்து அனுமாருக்குக்கொடுத்

தாள். அதன்மேல் இராமர், இந்திரன் தரித்துக்கொள் ளும் முத்தாரத்தையும், வேறு சில ஆபரணங்களையும், யானை குதிரைகளையும், பீதாம்பரத்தையும் சாம்பவருக்குக் கொடுத்து, அப்படியே மற்ற அறுபத்தேழுகோடி வானரப் படைத் தலைவர்களுக்கும், மற்ற வானரர்களுக்கும், வேண் டிய ஆடையாபரணங்களையும் மற்ற பொருள்களையும் நல்கி அதன்மேல் விபீஷணனைப் பலவாறு புகழ்ந்து அவனுக்கும், முன்னே தேவர்கள் தமக்கு ஸமர்ப்பித்த இரத்தின கடகத் தையும், மதயானைகளையும், குதிரைகளையும், இரதங்களையும், இரத்தினுபரணங்களையும், பொன்னுடைகளையும், சந்தனத் தையும் வழங்கி, குகனுக்கு யானை குதிரைகளையும் விலை யுயர்ந்த ஆடையாபரணங்களையுங்கொடுத்து, முடிவில் அனு மாரையும், அங்கதனையும், சாம்பவரையும், சுக்கிரீவனையும் நோக்கி, "உங்களுடைய பிரிவு எனக்கு வருத்தத்தைச் செய்கின்றது; எனினும் கிட்கிந்தை அரசானது நீங்களில் லாமல் நடைபெறுதாதலின் நீங்கள் அங்கே போகவேண் டியது அவசியமாகின்றது; ஆதலால் நீங்கள் போய் அர சாட்சியை அழகுபெற நடத்திக்கொண் டிருங்கள்; விரும் பிய போது வந்து என்னைப்பார்த்துக் கொள்ளலாம்" என்று உபசார வார்த்தைகள் கூறி, அப்படியே விபீஷணனிடத் தும் நன்மொழி நவின்று, குகனுக்கும் குதூகலமான வார்த்தைகூறி, எல்லோரும் அவரவருடைய இருப்பிடங் கட்குச் செல்லும்படி யாவருக்கும் கட்டளையிட்டருளினர்.

அவ்வாறு இராமர் விடை கொடுத்தவுடனே அவர்க ளெல்லோரும் சந்தோஷத்துடனே அங்குள்ள யாவரிடத் தும் வணங்கி விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டு ஒரே கூட்டமாய்ப் போனர்கள். கங்கைக்கரையை அடைந்த வுடன் குகன் மற்றவர்களிடம் விடைபெற்றுத் தன்னிருப்

பிடஞ் சேர்ந்தான். கிஷ்கிந்தையை அடைந்தவுடன் விபீஷணன், சுக்கிரீவன் முதலியவர்களை அங்கே நிறுத்திவிட்டு அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு இலங்காநகரம் போய்ச் சேர்ந்தான். இராமர் தம்பிமார்களுடனும், தாய்மார்களுடனும், பெரியோர்களுடனும், சகல தர்மங்களும் தழைத்தோங்க அயோத்தியில் அரசு செய்து கொண்டிருந்தார்.

உத்தரகாண்டம்.

இலங்கை நிருமாணம்.

ஸ்ரீ இராமர், மேற்கூறியபடி மகுடாபிஷேகம் பெற்று நீதியுடன் அரசுசெலுத்திவருங் காலத்தில் ஒருநாள் அவர் சகல சிறப்புக்களுடன் கொலுவீற்றிருக்கும்போது அகஸ்தியர், காசிபர், அத்திரி, பாரத்துவாசர், கௌதமர், சமதக்கினி முதலிய முனிவர்கள் இராமருடைய பட்டாபிஷேக திருக் கோலத்தைக் காணுதற்கு அங்கே வந்தார்கள். இராமர் அவர்களைக்கண்டு வணங்கி ஆசனங்களில் இருக்கச் செய்து "முனிவர்களே! உங்களுடைய யாகங்களும் பசுக்களும் க்ஷேமமாயிருக்கின்றனவா? தவங்கள் சரிவர நடந்து வருகின்றனவா?" என்று விசாரித்தார். அவர்கள், "எங்களுக்குத் துன்பஞ்செய்த இராவணன் முதலிய கொடியர்களைத் தொலைத்த நீரும் இளையபெருமாளும் இருக்கும் போது எங்களுக்குக் குறைவு முண்டாகுமோ?" என்றார்கள். அதன்மேல் இராமர் அம்முனிவர்களை நோக்கி, "தவசிரேஷ்டர்களே! அந்த இராவணாதியர்களுடைய உற்பத்தி விவரங்களை நீங்கள் கூறியருள வேண்டும்" என்று சொன்னார். அப்போது அகஸ்தியர் தவிர மற்ற முனிவர்கள், அந்தக் கும்ப

முனிவரைப் பார்த்து, "நீரே சகலமும் அறிந்தவர்; ஆதலின் இராகவர் கேட்டவைகளை நீர்தாம் கூறவேண்டும்" என்றார்கள். அவர் அதற்கிசைந்து இராமரை நோக்கி,

தசரதகுமாரரே! நான் அவர்களுடைய விருத்தாந்தத்தைக் கூறுகிறேன் கேளும்: பூர்வத்தில் பிரமதேவர் பதினான்கு உலகங்களையும் படைத்துச் சராசரப் பொருள்களையெல்லாம் உண்டாக்கி, எண்பத்து நான்கிலக்ஷம் யோனிபேதங்களுள்ள ஜீவர்களையும் ஜீவன்களையும் உற்பத்திசெய்து அவர்களுள்ளும் அவற்றுள்ளும் அறிவுடைய ஜீவர்களை நோக்கி, 'நீங்கள் உலகங்களைஇரக்ஷித்துக் கொள்வீராக' என்று சொன்னார். அதைக்கேட்டவுடன் ஜீவர்களில் பலர் 'நமக்கு உலகங்களை ஆளும் திறமேது? பிரமாவே பார்த்து யாரை நியமிக்கின்றாரோ அவரே ஆட்சிபுரியட்டும்' என்று பேசாமலிருந்தார்கள். சிலர், பிரமாவின் வாக்கியத்திற்குப் பிரதியுத்தரமாக 'யக்ஷயக்ஷ' என்று சொன்னார்கள்; சிலர், 'ரட்ச ரட்ச' என்றுசொன்னார்கள். அவ் வார்த்தைகளைக் கேட்டதும் பிரமா 'யக்ஷயக்ஷ' என்றவர்களை நோக்கி, 'நீங்கள் உங்கள் வாக்கியத்தை யனுசரித்து யக்ஷராகக் 'கடவீர்கள்' என்றும், 'ரட்ச ரட்ச' என்றவர்களை, நோக்கி 'நீங்கள் இராக்ஷஸராகக் கடவீர்கள்' என்றும், 'நீங்கள் உலகங்களில் வல்லமையான காரியங்களைச்செய்யக் கடவீர்கள்' என்றும் சொன்னார். அப்படியே அவர்கள் இரண்டு வகுப்பினரானார்கள். அந்த இரண்டு வகுப்புக்களில் இராக்ஷத வகுப்பிலே ஏதியென்றும், பிரகேதி என்றும் இரண்டு சகோதரர்கள் தோன்றினர்கள். அவர்களுள் பிரகேதி நற்குணமுடையவனாய்த் தவஞ் செய்யப் போயினன். ஏதி, தனக்குச் சமானமானவரெவருமில்லை யென்று அகங்காரங்கொண்டு மிக்க வலியுடையவனாய் உலகத்தை யாளக்கருதித் தனக்குப்

பொருத்தமான ஒருத்தியை மணஞ் செய்துகொள்ள விரும்பிப் பெண் விசாரித்து வரும்படி தூதர்களை நாலா திக்குகளிலும் அனுப்பினான். அவர்கள் ஆங்காங்கே சென்று விசாரித்து யமனுடைய தங்கை பயை யென்பவளே அவனுக்குத் தகுதியானவளென்றுணர்ந்து திரும்பிவந்து அவளைப் பற்றிய விஷயத்தை ஏதியிடம் தெரிவித்தார்கள். ஏதி யமனிடம் அப் பெண்ணைக் கேட்டு அவனுடைய சம்மதத்தின் பேரில் மணந்தான். அவள் வித்யுத்கேசன் என்பவனைப் பெற்றாள். அவன் பருவமடைந்து காந்தர்வஸ்திரீயாகிய சந்தியென்பவள் பெற்ற சாலகடங்கடை யென்பவளை விவாகஞ்செய்து கொண்டான். அவ்விருவரும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள். அக்காலத்தில் அந்தப்பெண் ஒருநாள் ஒரு சோலையிலே ஆண்குழந்தை யொன்றைப் பெற்று அவ்விடத்திலேயே போட்டுவிட்டு அதன்மீது அன்பில்லாமற் சென்ற புருஷனுடனே இன்பம் அனுபவிக்கக் கருதிப் போய் விட்டாள். அதன்மேல் அக்குழந்தை கிடந்தவிடத்தில் காற்றும் மழையும், இருளும் அதிகமாயின. அவற்றிற் கிடையில் அக் குழந்தை அழுது கொண்டு கிடந்தது. அப்போது இந்திரன் முதலிய தேவர்கள் அக் குழந்தையைக் கண்டிரங்கி, சிவபெருமானைத் தியானித்து, "எம்பெருமானே! நீரே இக் குழந்தையைக் காப்பாற்ற வேண்டும்" என்று துதித்தார்கள். சிவபெருமான் உமாதேவியோடு அவர்களுக்குக் காட்சி கொடுக்க அங்கே ரிஷபாரூடராய் வந்தார். அப்போது உமாதேவி அக்குழந்தையைப் பார்த்துவிட்டுப் பரிதபித்துச் சிவபெருமானை நோக்கி, "சுவாமி! இக் குழந்தையை நீரே இரக்ஷித் தருளவேண்டும்" என்று கூறினாள். சிவபெருமான் அப்படியே அந்தக் குழந்தையைக் கருணையோடு பார்த்து "உனக்கு நிறைந்த ஆயுளும், அழகும், வலிமையும், சுகேச னென்ற பெயரும் உண்டாகக் கடவன"

என்று அனுக்கிரகஞ் செய்தார். பார்வதியும், அந்தக் குழந்தையின் வமிசத்தி லுண்டாகும் எல்லாருக்கும் கருத்தரித்தவுடனே பிள்ளை பிறக்கவும், அப்படிப் பிறந்த பிள்ளைகளுக்கு அப்போது தாய்க்குள்ள பருவம் உண்டாகவும் அவனுக்கு வரங் கொடுத்தாள். அதன்மேல் சுகேசன் குமாரப்பருவமடைந்து செல்வமும் வெற்றியும் பொருந்தி ஒரு வளம் பொருந்திய நகரத்திலே குடியேறியிருந்தான். அவனுடைய மேன்மையை ஒரு கந்தருவன் கேள்விப்பட்டுத் தெய்வவதியென்னும் தன் புத்திரியை அவனுக்கு மணஞ்செய்து கொடுத்தான். அந்தத் தெய்வவதிக்கும் சுகேசனுக்கும் மாலியவான், சுமாலி, மாலி யென்னும் மூன்று புத்திரர்கள் பிறந்தார்கள்.

அம்மூவரும் எல்லோரும் நடுங்கும்படி பல பராக்கிரமமுடையவர்களாய் வளர்ந்து, மேருவுக்கு வடபாரிசத்தில் போய்ப் பெரிய வரங்களைப் பெறுதற்குப் பிரமனை நோக்கித் தவஞ் செய்தார்கள். பிரமன் அவர்களுக்கு முன்னே பிரசன்னமாகி அவர்களை நோக்கி 'உங்களுக்கு என்னவரம் வேண்டும்?' என்று கேட்டான். அவர்கள், "மூன்றுலகங்களிலும் எவராலும் எம்மைஜெயிக்கமுடியாத பலமும், ஆயுளும், ஆயுதங்களும் எங்களுக்கு நீர் கொடுத்தருளவேண்டும்" என்றார்கள். பிரமன் அவ்வாறே அவற்றை அவர்களுக்குக் கொடுத்துச் சென்றான். அதன்மேல் அந்த மாலியவான் முதலிய மூன்று பேர்களும் விருத்தியடைந்து தேவர்களையும், மற்றவர்களையும் வென்று சகலருக்கும் துன்பத்தைச் செய்து எங்கும் தங்கள் ஜெயக்கொடியை நாட்டி யிருந்தார்கள். அப்படியிருக்கும் போது அவர்கள் தேவதச்சனையழைத்து அவனிடம். தாங்களிருப்பதற்கு, எல்லாவற்றினும் மேலான ஒரு நகரத்தை உண்டாக்குவதற்குத் தக்கவிடத்தை ஆராய்ந்து தெரிவிக்கும்படி கூறினார்கள்.

அதற்கவன் அவர்களை நோக்கி, "அசுரேந்திரர்களே! முன்னொரு காலத்தில் ஆதிசேஷனும், வாயு பகவானும் தன் தன் பலத்தைப்பற்றி உயர்த்திக்கூறி வாதுசெய்து கொண்டார்கள். அப்போது சேஷன் வாயுவை நோக்கி, 'மேருவை நான் மூடிக்கொள்கிறேன்; நீ என்னைப் பெயர்த்துத் தள்ளு; அங்ஙனம் என்னைத் தள்ளிவிடுவாயானால் நீயே என்னிலும் பலத்திற் சிறந்தவனாவாய்; அஃதுன்னால் முடியாவிட்டால் நானே வலிமிக்கவனாவேன்; இவற்றைச் செய்து நாம் அவரவருடைய வன்மையை உணர்ந்து கொள்ளலாம்' என்றுசொன்னான். வாயு அத்தீர்மானத்திற் கிசைந்தான். உடனே சேஷன், தன்னுடைய படங்களாலும் உடலாலும் மேருவைச் சுற்றி மூடிக்கொண்டான். வாயு மோதி மோதி அவன் மேல் அடித்தான். சேஷன் சற்றும் அசையாமலிருந்தான். அதனால் வாயு தோல்வியடைந்து வெட்கப்பட்டு ஒருவருக்குந் தெரியாத ஓரிடத்தில் மறைந்திருந்தான். அங்ஙனம் வாயு வெளியிற் சஞ்சரிக்காமற்போகவே எல்லா உலகங்களிலும் உள்ள ஜீவாசிகளுக்கு மூச்சுவிட முடியாமல் உபத்திரவமுண்டாயிற்று. அதனால் தேவர்களும் முனிவர்களும் சேஷனிடம் சென்று அத்துன்பத்தை நீக்கும்படி முறையிட்டார்கள். அவன் வாயுவை வெளியேற்றி அதை நீக்குதற்கு ஓர் உபாயமாக அவர்களைப் பார்க்கிறவனைப்போல் ஒரு தலையைச் சற்றே தூக்கினான். அப்போது வாயுபகவான், நாம் ஜெயம் பெற இதுதான் தருணமென்று வெளியேறி வேகங்கொண்டு அவ்விடத்தில் மோதினான். அதனால் மேருவின் ஆயிரத்தெட்டுச் சிகரங்களில் மூன்று சிகரங்கள் பெயர்ந்து தென் சமுத்திரத்தில் வீழ்ந்தன. அவை வீழ்ந்த இடம் மிக விசாலமாயும் பொன் மயமாயு மிருக்கின்றது. அதுவே நீங்கள் நகரமுண்டாக்கி வசித்தற்குத் தக்கவிடம்", என்றுகூறினான். அவர்கள் மூவரும், "அஃதப்படிப்பட்டதானால் அவ்

விடத்திலேயே ஓர் அலங்காரமாகியநகரத்தை நீயே நிரு மிக்கக் கடவாய்" என்று விசுவகர்மாவுக்குக் கட்டளை யிட்டார்கள். அப்படியே விசுவகர்மா அங்கே சகல் அரண்களுடன் சுவர்க்கத்துக்கு நிகராகிய நகரமொன்றைச் சிருஷ்டித்து அதற்கு இலங்கையென்று பெயரிட்டான்.

அதன்மேல் அந்த மாலியவான் முதலிய மூவரும் நல்ல முகூர்த்தத்தில் அந்த இலங்காநகரத்தில் குடியேறி மூவுலகத்தாரும் வணங்க அரசு செய்துகொண் டிருந்தார்கள். அப்படி யிருக்குங்காலத்தில் தருமநதை யென்னும் கந்தருவஸ்திரீயின் புத்திரிகளாகிய மூவரில் மூத்தவளாகிய சுகந்தரி யென்பவளை மாலியவானும், அவளுக்கிளையவளாகிய கேதுமதியென்பவளைச் சுமாலியும், அவளுக்கிளையவளாகிய கன்னியை மாலியும் விவாகஞ்செய்து கொண்டார்கள். மாலியவானுக்குப் பிரகஸ்தன், வச்சிரமுஷ்டி, விருபாக்ஷன், துன்முகன், பாபசித்தன், நியாயகோபன், மத்தன், உன்மத்தன் என்னும் எட்டுப் பிள்ளைகள் பிறந்தார்கள். சுமாலிக்குக் கேகசி, கும்பிநசி என்னும் இரண்டு புத்திரிகள் பிறந்தார்கள். மாலிக்குக் குரூர யுத்தன், நீலன், நிலையன், சம்பாதி என்னும் நான்கு புத்திரர்கள் பிறந்தார்கள். இவர்கள் தவிர இன்னும் பிரமதேவன் கொடுத்த வரத்தினாலே மாலியவான் முதலிய மூவர்களுக்கும் இரதகஜதுரக பதாதிகளும், சகல ஆயுதங்களுமுண்டாயின. அப்படி அவர்கள் சந்ததிகளையும், படைகளையும் பெற்றுப் பலமுடையவர்களாகவே, அகங்கரித்து, உலகத்திலுள்ள சகல பிராணிகளையும் வதைத்துத் தேவர்களை ஹிம்சித்து, அமராவதிப் பட்டணத்தைக் கொள்ளைகொண்டு எங்கும் உபத்திரவத்தைச் செய்துகொண்டிருந்தார்கள். அதைச் சகிக்க முடியாமல் தேவர்களும், நாகரும், முனிவரும் சிவபெருமானிடம் முறையிட்டார்கள்.

அதற்கவர், "எனக்கு மிகுந்த பக்தனாகிய சுகேசன் வழியில் வந்த இராக்ஷதர்கள் கொடியவர்களானாலும் அவர்களை நான் அழிப்பது தகுதியாகாது; நீங்கள் மகாவிஷ்ணுவினிடம் சென்று உங்கள் குறையைச் சொன்னால் அவர் அதனை நீக்கி வைப்பார்" என்று கூறினார். உடனே அத்தேவர் முதலானவர்கள் திருப்பாற்கடலின் மத்தியிலே ஆலிலைமேல் சேஷசயனத்தில் யோக நித்திரைசெய்துகொண் டிருந்த விஷ்ணு மூர்த்தியிடம் சென்று தங்கள் துன்பத்தை நீக்கவேண்டுமென்று ஸ்தோத்திரம் செய்தார்கள். மகாவிஷ்ணு, "நான் அந்த இராக்ஷதர்களை நாசஞ்செய்து உங்கள் துன்பத்தைப் போக்குகிறேன்" என்று அவர்களுக்கு அபயங்கொடுக்க, அவர்கள் திரும்பித் தங்கள் தங்கள் இடங்களுக்குச் சென்றார்கள். அதன்மேல், அத்தேவர்கள் விஷ்ணுவினிடம் சென்றதையும், அவர் இராக்ஷதர்களை அழிப்பதாக அவர்களுக்கு வரங்கொடுத்ததையும் இராக்ஷத தூதர்கள் அறிந்து மாலியவான் முதலியவர்களுக்குத் தெரிவித்தார்கள். அவர்கள் மூவரும், 'இப்பொழுதே தேவர்களை ஒழித்துவிட வேண்டும்' என்று சீறியெழுந்து போர்க்கோலங் கொண்டு புத்திரர்களுடனும், மற்ற வீரர் படைகளுடனும், தேரேறிப் புறப்பட்டு அந்த அமரர்களுடன் அமர்தொடுப்பதற்குச் சுவர்க்கலோகம் போய்ச் சேர்ந்தார்கள்.

அவர்களைக் கண்டவுடன் தேவர்கள் நடுங்கி நாலாதிக்குகளிலும் ஓடித் தங்கள் ஆபத்தான நிலைமையைத் தெரிவிக்கும்படி ஒரு தேவதூதனை நாராயண மூர்த்தியிடம் அனுப்பினார்கள். அவன் சென்று விஷ்ணு மூர்த்தியிடம் மாலியவான் முதலியவர்களுடைய கொடுஞ் செய்கையைக் கூறினான். உடனே விஷ்ணுமூர்த்தி எழுந்து சங்கு, சக்கரம், தண்டம்,

கோதண்டம், கட்கம் ஆகிய பஞ்சாயுதங்களுடன் யுத்த கோலங்கொண்டு கருடன் மீதேறிப் புறப்பட்டு, மாலிய வான் முதலியவர்களுடன் யுத்தஞ்செய்வதற்கு அவர்களு டைய சேனையிற் புகுந்தார். அப்போது கருடன் பாய்ந்த வேகத்தினால் அவனுடைய இறகுகளின் காற்றிலடிபட்டு அநேகம் இராக்ஷதசேனைகள் மாண்டன. அதைக்கண்டு சுமாலி யென்பவன் தன்னுடைய படைகளுடன் நெருங்கி மகாவிஷ்ணுவினுடைய சரீர முழுமையும் மறையும்படி சரங் களைப் பொழிந்து அவருடன் உக்கிரமாக யுத்தம் பண்ணி னான். அப்போது விஷ்ணு அநேக பாணங்களால் சுமாலி எவிய பாணங்களைப் போக்கி மேலும் கொடிய அம்புகளைப் பிரயோகித்து இராக்ஷத சேனைகளை மடித்துச் சுமாலியி னுடைய சரீரத்தைச் சல்லடைக் கண்களாகத் துளைத்து அவனையும் மூர்ச்சிக்கும்படி செய்தார். அதன்மேல் அவன் தம்பியாகிய மாலியென்பவன் தன்னுடைய சேனைகளுடன் வந்து விஷ்ணுவினோ டெதிர்த்து யுத்தம் பண்ணினான். மகாவிஷ்ணு அஸ்திரப் பிரயோகஞ்செய்து அவனுடைய சேனைகளையும் சின்னபின்னப் படுத்திவிட்டார். அதன்மேல் அந்தமாலி மிகுந்த கோபங்கொண்டு ஒரு வஜ்ஜிரதண் டத்தை யெடுத்துக்கொண்டு பாய்ந்து மகாவிஷ்ணுவைத் தாங்கிக்கொண் டிருந்த கருடனுடைய இரத்தினகிரீடம் நகர்ந்து விழும்படி அத்தண்டத்தினாலே ஓங்கி அதன்மேல் அடித்தான். அந்த அடியினால் கருடன் சற்றே மயங்கிச் சோர்ந்தான். அதைக்கண்டு விஷ்ணு, அந்த மாலியின்மீது தம்முடைய சக்கரத்தைப் பிரயோகம் பண்ணினார். அந்தச் சக்கரம் விரைந்து சென்று அவனுடைய சிரசை யறுத்துத் தள்ளி அவனுடன் வந்த சேனைகளையும் நாசஞ் செய்துவிட் டது. அப்போது, மூத்தவனான மாலியவான், மாலியும், மற்ற சேனைகளும் இறந்து கிடப்பதையும், சுமாலி மூர்ச்சை

யடைந்து கிடப்பதையும் கண்டு, மகாவிஷ்ணுவினேடு எதிர்த்து நிற்கப் பயந்து தன் சேனைகளுடன் புறங்காட்டி ஓடினுன். அங்ஙனம் ஓடியும் மகாவிஷ்ணு 'இவனை உயிருடன் வைக்கக்கூடாது' என்று அவனைக் கொல்லுதற்கு உக்கிரமாகத் தொடர்ந்து போனுர். அத்தருணத்தில், முன்னே மூர்ச்சையாகிக் கிடந்த சுமாலி, தெளிந்து தன்னுடைய தம்பியும், இராக்ஷத சேனைகளும் மடிந்து கிடப்பதையும், தமையன் பயந்தோட அவனை விஷ்ணு துரத்திச் செல்வதையும் கண்டு ஆத்திரத்தோடு விரைந்துசென்று விஷ்ணுவுக்கெதிரில் நின்று, "யுத்தத்தில் இளைத்தோடுகிறவர்கள் மீது ஆயுதந்தொடுப்பது கூடாதென்று தரும சாஸ்திரங்கள் கூறுகின்றன; அப்படியிருந்தும் ஏதோ ஒரு காரணத்தால் யுத்தஞ்செய்யாமல் என்னைத் தேடிச்செல்கின்ற என் தமையனை நீ துரத்திக் கொல்லப் போகின்றுய்; உன்னுடைய வீரம் நன்றுயிருக்கின்றது; உனக்கு வன்மை யுண்டானுல் என்னேடு சண்டை செய்" என்று ஒரு வேலாயுதத்தை எடுத்து மகாவிஷ்ணுவினுடைய மார்புக்கு நேரே குறிவைத்தெறிந்தான். அந்த வேலானது விஷ்ணுவின் மார்பிற் பாய்ந்தது. உடனே விஷ்ணு அந்த வேலைத் தானே பிடுங்கிக்கொண்டு சுமாலியின் மார்பிலெறிந்தார். அந்த வேல் சுமாலியின் மார்பிற்பட்டு ஊடுருவி அநேகம் இராக்ஷதர்களையும் மடித்துச் சென்றது. சுமாலி அப்போதும் இளைக்காமல் முன்னே தனக்குப்பரமசிவன் கொடுத்த சூலத்தையெடுத்து விஷ்ணுவின்மேலெறிந்தான். அந்தச் சூலமானது விஷ்ணுவின் மார்பிலேபட்டு உள்ளே பாயமுடியாமல் பந்துபோலக் குதித்து கீழே வீழ்ந்துவிட்டது. அதைக்கண்டு சுமாலி, "நமக்கு அபஜெயமுண்டாகி வருவதால் இனி யுத்தஞ்செய்வதிற் பயனுண்டாகாது; நாம் இப்போது உயிர் தப்பியோடுவதே நல்லது; இச்சமயம் பிழைத்திருந்தால் பின்

ஞெரு காலத்தில் வலிமையை யுண்டாக்கிக்கொண்டு எதிரி களை வெல்லலாம்" என்று எஞ்சியிருந்த சேனைகளையும், தன் தமையன் மாலியவானையும் அழைத்துக்கொண் டோடி இலங்காபட்டணம் புகுந்து அங்குள்ள தன் சுற்றத்தார்களை யும் அழைத்துக்கொண்டு விரைந்துசென்று ஒருவருக்கும் தெரியாமல் இருள்சூழ்ந்திருக்கின்ற பாதாளலோகத்திற் போய் மறைந்தான்.

குபேரன் இலங்கையை ஆளுதல்.

அப்படி மாலியவானும், சுமாலியும் போய் மறைந்த பின்பு ஒரு காலத்தில் பிரமதேவர் புத்திராகிய புலஸ்தியர் மேருகிரியைச் சார்ந்த தபோவனத்திற் சென்று தபஞ் செய்துகொண் டிருந்தார். அப்போது தேவகன்னியர் களும், நாக கன்னியர்களும், முனிவர் கன்னியர்களும் அங்கே தினந்தோறும் வந்து கூடி விளையாடிச் செல்வது வழக்கமாயிருந்தது. அப்படி யிருக்கும்போது ஒருநாள் புலஸ்தியர் தவம்பண்ணிக்கொண் டிருக்குமிடத்திற்குச் சமீ பத்திலே அந்தப் பெண்கள் ஆடிப்பாடி விளையாடிக்கொண் டிருந்தார்கள். அவர்களின் விளையாட்டால் உண்டான தொனி அந்த முனிவரின் காதில் கேட்டது. அதனால் அவ ருடைய மனம் விகாரப்பட்டுத் தவத்திற் கிடையூ றுண் டாயிற்று. அவ்வாறாகவே அவர் மிகுந்த கோபங்கொண்டு அந்தக் கன்னியர்களை நோக்கி, "இனிமேல் நீங்கள் என் கண்ணெதிர்ப்படுவீர்களானால் உங்களுக்குப் பொல்லாத உற்பாதமான கருப்பமுண்டாகக் கடவது" என்று அவர் களுக்குச் சாபமிட்டார். அதைக்கேட்டு அந்தப் பெண்கள் நடுங்கியோடி அதுமுதல் அங்கே வாராமலிருந்து விட்டார் கள். அதன்மேல் ஒருநாள் திரணபிந்து முனிவருடைய புத்திரியாகிய குணவதி யென்னும் பெண் அந்தப் புலஸ்திய

ருடைய சாபத்தை யுணராமல் தன் தோழிகளுடன் அவரிருக்கும் வனத்திற்புகுந்து விளையாடி ஓரிடத்தில் அத் தோழிகளை விட்டுப் பிரிந்து தனிப்பட்டு அவர்களைக் கூவி யழைத்துக்கொண்டு போனாள். அப்போது புலஸ்தியர் வேதகானத்தால் கடவுளை ஸ்தோஸ்திரம் செய்துகொண் டிருந்தார். அந்தக்கானம் அப்பெண்ணின் காதிற்பட்டது. அதைக் கேட்டவுடனே அவள், "இஃதேதோ அருமையான புருஷரின் கானமாயிருக்கின்றது; இந்தக் கானம் செய்ப வரை நாம் காணவேண்டும்" என்று அந்தக் கானம் வந்த வழியே சென்று அவரைக் கண்டாள். அவ்வாறு பார்த்த மாத்திரத்தில் அம்முனிவரிட்ட சாபப்படியே அவளுக்குக் கருவுண்டாய் அதன் சின்னங்கள் தோன்றின; அவள் அதைக்கண்டு உடனே பயந்து திரணபிந்து முனிவரிடம் சென்று தனக்கு நேர்ந்ததைக் கூறினாள்; அவர் ஞான திருஷ்டியால் அது புலஸ்தியருடைய சாபத்தால் நேர்ந்த தென்பதை உணர்ந்து கொண்டு அவளுடன் புலஸ்திய ரிடம் சென்று அவள் மிக்க குணவதி யென்பதையும், அவ ளுக்குக் கருப்பமுண்டான காரணத்தையும் சொல்லி, 'இவளை நீரே மணஞ்செய்து கொள்ளவேண்டும்' என்று சொன்னார். புலஸ்தியர் அவ்வாறே அவளை மணம்புரிந்து கொண்டார்; குணவதி புலஸ்தியருடன் கூடி வாழ்ந்து வருங் காலத்தில், ஒருநாள் அவர் அவளை நோக்கி, "பெண்ணே! நீ முன்னே என்னுடைய சாபத்தை யுணராமல் நான் பாடிய கானத்தைக் கேட்டு என்னிடம் வந்ததால் உனக்குக் கெற்பமுண்டாயிற்று; அந்தச் சிசுவும் அப்போது என்னு டைய கானத்தைச் சிரவமென்னும் காதினாலே கேட்டபடி யால் விச்சிரவா என்னும் பெயருடைய ஒரு புத்திரனாகப் பிறக்கும்" என்று சொன்னார். அவரனுக்கிரகப்படியே அவள் கருப்ப வேதனையின்றி விச்சிரவாவென்பவனைப்

பெற்றாள். அந்த விச்சிரவா வென்பவன் வளர்ந்து புலஸ்தியால் வித்தியாரம்பம் உபநயனம் முதலிய கிரியைகளெல்லாம் செய்யப்பெற்று அவரனுக்கிரகத்தினாலேயே சகல வேத சாஸ்திரங்களும் ஓதி யுணர்ந்து தவத்திலும் சிறந்து விளங்கினான்.

அதன்மேல் அவனுடைய யோக்கியதைகளை யுணர்ந்த பாரத்துவாசர் தம்முடைய புத்திரியாகிய தேவகன்னி யென்பவளைப் புலஸ்தியருடைய அனுமதி பெற்றுச் சகல முனிவர்களுக்கும் முன்னிலையில் அந்த விச்சிரவாவுக்கு மணஞ்செய்து கொடுத்தார். அவருடன் தேவ கன்னி மகிழ்ச்சி யுற்றுக் கூடி வாழ்ந்துவருங் காலத்தில் தேவ கன்னியின் வயிற்றில் சுபமுகூர்த்தத்தில் ஒரு சற்புத்திரன் பிறந்தான். அப்போது தேவர்களெல்லாம் அங்கே வந்து அந்தப் புத்திரனைப் பெற்றதற்காக விச்சிரவாவைக் கொண்டாடி அப் புத்திரனுக்கு வைச்சிரவணன் என்று நாமஞ் சூட்டி அவனை ஆசிர்வதித்துச் சென்றார்கள். அதன் மேல் அப்புத்திரன் வளர்ந்து பதினாறு வயதுக்குள் சகல வேத சாஸ்திரங்களையும் ஓதி யுணர்ந்து தபோவனஞ் சென்று பிரமதேவரை நோக்கிக் கொடிய தவஞ்செய்து கொண்டிருந்தான். அப்போது ஒரு சமயத்தில் பிரமதேவர் அந்த வைச்சிரவணனிடத்தில் பிரசன்னமாகி, "உன் தவத்தை நான் மெச்சினேன்; நீ உனக்கு வேண்டிய வரத்தை என்னிடம் கேட்டுக்கொள்" என்றார். அதற்கவன், "சுவாமி! நான் திக்குப் பாலகர்களுள் ஒருவனா யிருக்க வேண்டும்; எடுக்க எடுக்கக் குறையாத நவநிதிக்குரியவனா யிருக்கவேண்டும்" என்று சொன்னான். பிரமதேவர் அப்படியே அவனுக்கு அவை யுண்டாகுமாறு வரங்கொடுத்து, மேலும் நினைத்த பொருள்களெல்லாம் அந்நிதிகளிலே பெருகும்படிக்கும் அனுக்கிரகஞ் செய்து, புஷ்பக விமானத்தை

யுங் கொடுத்துப் போயினுர். அதன்மேல் அவன் தன் தந்தையாகிய விச்சிரவாவிடம் சென்று வணங்கித் தான் பிரமதேவரிடம் வரம்பெற்ற விதத்தைக் கூறி மேலும் அவரை நோக்கி, "தந்தையே! நான் வாசஞ் செய்வதற்குத் தகுதியான ஓரிடத்தை நீர் எனக்குத் தெரிவிக்கவேண்டும்" என்ருன். அதற்கு விச்சிரவா, முன்னே இராக்ஷதர்கள் விட்டோடிய இலங்கையே தக்கதென்று கூறினுர். வைச்சிரவணன் தன்னுடைய வமிசத்தாருடனே இலங்கையில் குடியேறி அதனைப் புதுக்கிக் குபேரன் என்னும்பெயருடன் சகல சிறப்புக்களும் பெற்று வாழ்ந்து கொண்டிருந்தான்.

இராவணுதியர் உற்பவமும் அவர் இலங்கை புகுதலும்.

இவ்வாறு குபேரன் இலங்கையிலிருந்து அரசுபுரிந்து வருங் காலத்தில், முன்னே அவ்விலங்கையை விட்டுப் பாதாள லோகத்திற் போய் மறைந்திருந்த மாலியவானும் சுமாலியும், "நாம் எத்தனை காலம் வரைதான் இப்படி இருள் மிகுந்த விடத்திற்றங்கித் துன்பத்தை அனுபவித்துக்கொண்டிருப்போம்; சுகப்படுதற்கு ஏதேனுமொரு மார்க்கத்தைத் தேடவேண்டும்" என்று ஆலோசிக்கத் தொடங்கினுர்கள். அப்போது மாலியவான் சுமாலியை நோக்கி, "தம்பி! உன்னுடைய மூத்தபெண் கைகசி உத்தம லக்ஷணங்களையுடையவளாயிருக்கிருள்; அவளை ஒரு சிறந்த புருஷனுக்குக் கொடுத்துச் சந்ததியை விருத்திசெய்து கொண்டால் நாம் சிறப்படையலாம்" என்றுசொன்னுன். சுமாலி அதற்கிசைந்து கைகசியை அழைத்துக்கொண்டு பூலோகத்திற்கு வந்து ஒரு வனத்தில் சஞ்சரித்துக்கொண் டிருந்தான். அப்போது குபேரன் புஷ்பக விமானத்திலேறிக்கொண்டு சிவபெருமானைத் தரிசித்து வருவதற்கு அந்தச் சுமாலியிருக்கு மிடத்திற்கு நேரே சென்ருன். சுமாலி குபேரனைக் கண்டதும்

அவன், தன்னுடைய இலங்கையிலிருந்து சிறப்புடன் வாழ்கிறானென்பதை யுணர்ந்து அதன் பொருட்டுப் பொறாமை கொண்டு தன் குமாரத்தியை நோக்கி, 'மகளே! இந்தக் குபேரன் நம்முடைய இலங்கையிற் புகுந்து ஐசுவரியங்களை யெல்லாம் அனுபவித்துக்கொண் டிருக்கின்றான்; இவனைப் போக்கி இலங்கையை நாம் கைப்பற்ற முயற்சி செய்யவேண்டும்; இந்தக் குபேரனுடைய தந்தையாகிய விச்சிரவாவென்பவருடைய தபோமகிமையினாலேயே இவனுக்கிவ்வளவு சிறப்புண்டாயிருக்கின்றது; ஆதலின் நீ அந்த விச்சிரவாவிடம் சென்று அவரை வசப்படுத்தி அவருக்கு மனைவியாகிச் சந்ததிகளை விருத்தி செய்தால் அச்சந்ததிகளின் துணையைக்கொண்டு நாம் இந்தக் குபேரன் முதலியவர்களை வென்று சிறப்படையலாம்" என்று சொன்னான். அவள் அதற்கிசைந்து விச்சிரவாவிருக்கும் ஆச்சிரமத்திற் கருகிற் சென்று அவர் சந்தியாவந்தனம் செய்யுங்காலத்தில் இரதியைக் காட்டிலும் மிகுந்த அழகுடையவளாய்ப் புன்சிரிப்புடன் அவர் கண்ணுக்கெதிரில் உலாவினாள். அவளைக் கண்டவுடன் விச்சிரவா அவள்மீது காதல்கொண்டு அவள் முகத்தைப் பார்த்து, 'பெண்ணே! நீ யார்? இங்கே வந்த காரணமென்ன?' என்று வினவினார். கைகசி தன்னுடைய வரலாற்றை அவருக்குக் கூறி, "சுவாமி! என்னுடைய நோக்கம் தங்களுக்குத் தெரிந்தே யிருக்கும்" என்று சொன்னாள். விச்சிரவா அவள் சந்ததி விருத்தியைக் கருதி வந்திருக்கின்றாளென்பதைத் தெரிந்து கொண்டு, அவளை நோக்கி, "பெண்ணே! உன்னுடைய எண்ணத்தை நான் தெரிந்து கொண்டேன்; இந்த மாலைப்பொழுதில் நீ என்னோடு கலந்தால் உனக்குத் துஷ்டப்பிள்ளைகளே பிறப்பார்கள்" என்றார். அதற்குக் கைகசி, 'உமக்குப் பிறக்கும் பிள்ளைகள் உம்மைப்போலச் சிறப்புடையவர்களாக இருந்தாலல்லவோ

உமக்கு மேன்மை யுண்டாகும் ; துஷ்டப்பிள்ளைகள் உண்டானால் மேன்மையாகுமோ?' என்று கூறினாள். அப்போது விச்சிரவா, "துஷ்டப்பிள்ளைகள் பிறந்தாலும் அவர்களில் இளையவன் யோக்கியனாயிருப்பான்; அவனால் நமக்குச் சிறப்புண்டாகும்" என்று சொல்லி அப்பொழுதே அவளுடன் கூடினார். உடனே பத்துத்தலைகளும், இருபது கைகளுமுடையவனாய் இராவணன் அந்தக் கைகசியின் வயிற்றிற் பிறந்தான். அதன்மேல் இரண்டாம் முறையாக விச்சிரவாவும் கைகசியும் கலந்தார்கள்; அப்போது நீலகிரி போன்ற சரீரமும், நெருப்புச்சிகையும், வக்கிரதந்தங்களு முடையவனாய்க் கும்பகர்ணன் அவர்களுக்குப் புத்திரனாகப் பிறந்தான். அதன்மேல் அவ்விருவரும் செய்த கூட்டுறவால் விகாரசொருபமுடைய சூர்ப்பனகை பிறந்தாள். பின்னர் இரண்டாஞ்சாமத்தில் கைகசியும் விச்சிரவாவும் கூடினார்கள். அது நல்ல வேளையாதலின் அப்போது நற்குணமுடைய விபீஷணன் அவர்களுக்குச் சிறந்த புத்திரனாக அவதரித்தான். அதன்மேல் அந்தப் புத்திரர்கள் மூவரும் விருத்தியடைந்து தந்தையினிடத்திலேயே சகலவித்தைகளையுங் கற்று மிகுந்த பராக்கிரமசாலிகளாய் விளங்கினார்கள். அவர்களுள் முதலிருவரும் கொடியர்களாய் முனிவர்களுக்கும் மற்றவர்களுக்கும் துன்பத்தைச் செய்துகொண் டிருந்தார்கள். இளையவன் பிதாவுக்குப் பணிவிடை செய்துகொண்டு சகலரும் கொண்டாடத் தக்க யோக்கியனா யிருந்தான். சூர்ப்பனகையோ அடங்காத மோகவிகாரத்தையுடையவளாய் எதிர்ப்பட்ட முனிவர்களையும் மற்றவர்களையும் வலிதிற் பிடித்திழுத்துத் தழுவி அவர்களுடைய தவங்களைக் கெடுத்துக்கொண்டு திரிந்தாள்.

இவர்கள் இப்படி யிருக்கும்போது ஒரு சமயம் எல்லோரும் விச்சிரவாவின் ஆச்சிரமத்திற் கூடியிருந்தார்கள்.

அப்போது கைகசி, இராவணன் முதலியவர்களை நோக்கி, "பிள்ளைகளே! உங்கள் தாயாதியாகிய குபேரனே தன் தவமகிமையினால் உங்களுடைய பாட்டன்மாரின் இலங்கையைக் கைப்பற்றிக்கொண்டு சகல சிறப்புக்களுடன் வாழுகிறான்; நீங்களோ ஒரு சிறப்புமில்லாமல் வனத்தில் சஞ்சரிக்கின்றீர்கள்" என்று சொன்னாள். இதைக் கேட்டவுடனே அந்தப் பிள்ளைகள் மூவரும் தாயைநோக்கி, "அம்மா! நாங்களும் தவஞ்செய்து சிறப்படைந்து உன்னுடைய மனக்குறைகளைத் தீர்க்கின்றோம்" என்று சொல்லி அவளிடம் விடைபெற்றுக்கொண்டு போய்த் தபோவனஞ் சேர்ந்து தவஞ்செய்யத் தொடங்கினார்கள்; அவர்களில் கும்பகர்ணன் பஞ்சாக்கினி மத்தியிலிருந்தும், மழையிலும் பனியிலும் நனைந்தும், ஜலத்தில் மூழ்கியும் ஆகாரமும் நித்திரையுமின்றிப் பிரமதேவனை நோக்கிப் பதினாயிரம் வருஷங்கள் வரை தவஞ்செய்தான். விபீஷணன் ஊசியை நிறுத்தி அதன்மேல் ஒருகாற் பெருவிரலையூன்றி மற்றொருகாலை மூடக்கிக்கொண்டூண்றாந்து நின்றபடி கைகளை மேலே தூக்கிக் குவித்துக் கண்களிமையாமற் சூரியனைப் பார்த்தபடி ஐயாயிரம் வருஷங்களும், பின் மடித்த காலையூன்றி, ஊன்றியகாலை முடக்கி மேற்கூறிய செய்கைகளைச் செய்து ஐயாயிரம் வருஷங்களும் ஆகப்பதினாயிரம் வருஷங்கள் வரையிலும் நான் முகனை நோக்கித் தவஞ்செய்தான். மூத்தவனாகிய இராவணன் வேதவிதிப்படி யாகசாலை அமைத்து அதனடுவில் ஓமகுண்டம் ஏற்படுத்தி அதற்குள் சமித்துக்களை நிறைத்து அக்கினியை மூட்டி வளர்த்துப் பிரமனை நினைத்து மந்திரம் ஜெபித்து ஆயிரம் வருஷங்களுக்கொரு சிரசு விகிதம் ஒன்பதினாயிரம் வருஷங்களில் தன்னுடைய ஒன்பது சிரசுகளை அறுத்து அதில் ஆகுதியாகப் பெய்து பதினாயிரம் வருஷங்கள் சென்றபின் மிஞ்சி நின்ற ஒரு சிரசையும்

அறுத்து ஆகுதி கொடுக்கப் போனான். அத்தருணத்தில் பிரமதேவர் மனதிரங்கி அவன் முன் தோன்றி, "உனக்கென்ன வரம்வேண்டும்?" என்றார். அதற்குத் தசக்கிரீவன், மனிதர்களை யொருபொருட்டாக வெண்ணுமல் தள்ளிவிட்டு, "தேவர்களும் இராக்ஷதர்களும் என்னுடைய ஏவல்கேட்டு நடக்கும்படியான வல்லமையையும் மூன்றரைக்கோடி ஆயுளையும் நீர் எனக்குத் தரவேண்டும்" என்று கேட்டான். பிரமதேவர் அப்படியே அவனுக்கு அவை யுண்டாகவரங்கொடுத்தார். அப்போது விஷ்ணு ஒருவகைத் தந்திரத்தால் அவன் அவ்வாறு பெற்ற ஆயுளை அரைக்கோடியாக மாறும்படி செய்துவிட்டார். அதன்மேல் பிரமா, விபீஷணனிடம் பிரசன்னமாகி "உனக்கு வேண்டியது யாது?" என்று வினவ, அவன், "நான் பாபகிருத்தியங்களைச் செய்யாதிருக்கவும், தேவர்களாலும் ஜெயிக்கப்படாத வெற்றியைப் பெறவும் எனக்கு வரந்தரவேண்டும்" என்றான். நான்முகக் கடவுள் அவ்வாறே அவனுக்கும் அவ்வரத்தைக் கொடுத்து அவன் எப்பொழுதும் சிரஞ்சீவியா யிருக்கும்படிக்கும் அனுக்கிரகம் பண்ணிக் கும்பகர்ணனுக்கு வரங்கொடுக்கப் போனார். அப்போது தேவர்கள், 'கும்பகர்ணன் பிரமதேவரிடம் வரம் பெற்றால் நம்மை ஒழித்துவிடுவான்' என்று பயந்து பிரமதேவரை நோக்கி, "நீர் கும்பகர்ணனுக்கு வரங்கொடுத்தால் நாங்கள் ஒழிந்துபோவோம்" என்று வருந்தினார்கள். அதைக்கேட்டு நான்முகர், 'உங்களுக்குத் துன்பம் வாராத ஒருபாயத்தை நான் செய்கின்றேன்' என்று அத்தேவர்களுக்குச் சொல்லிவிட்டுச் சரஸ்வதியை நோக்கி, 'கும்பகர்ணன் வரங்கேட்கும்போது நீ அவனுடைய வாக்கிலிருந்து வார்த்தையைப் புரட்டி அவன் எண்ணத்திற்கு மாறுபாடுண்டாகும்படி செய்துவிடு' என்று கூறிப் பின்னர்க் கும்பகர்ணனிடம் சென்று, "நீ உனக்கு வேண்டிய வரத்

தைக் கேள், நாம் தருகிறோம்” என்றார். கும்பகர்ணன் தான் என்று மழியாதிருக்கும்படியான வரத்தைப்பெறக் கருதி, ‘எனக்கு நித்திய தத்துவம் தரவேண்டும்’ என்று சொல்லத் தொடங்கினன். அப்போது சரஸ்வதி தன் நாயகன் கூறியிருந்தபடியே கும்பகர்ணனுடைய நாவிலிருந்து அவன் கூறத் தொடங்கிய ‘நித்தியதத்துவம்’ என்ற வார்த்தையை, ‘நித்திராதத்துவம்’ என்று வெளிப்படும்படி புரட்டிவிட்டாள். அப்போது பிரமதேவர், ‘உன்னுடைய வார்த்தைப்படியே நீ சொன்ன காரியம் ஆகக்கடவது’என்று கும்பகர்ணனுக்கு வரங்கொடுத்துவிட்டுப் போய்விட்டார். அந்த மாறுபாடான வரத்தால் கும்பகர்ணனுக்கு அப்பொழுதே சோம்பலும் நித்திரையும் உண்டாய்விட்டன. அங்ஙனம் நித்திரை உண்டானதனுல், அவன், ‘இது தேவர்கள் செய்த வஞ்சனையாலுண்டானது’ என்று அதன் காரணத்தை ஒரு வகையாலுணர்ந்து விசனித்து இராவணனிடத்தும் விபீஷணனிடத்தும் தான் பெற்ற மாறுபாடான வரத்தின் விவரத்தைக்கூறி முகவாட்ட மடைந்தான். அவர்கள் அவனுக்குத் தேறுதல் கூறி அவனை அழைத்துக் கொண்டுபோய் முன்னே வசித்திருந்த வனத்தில் தங்கியிருந்தார்கள்.

அப்படி யிருக்கும்போது பாதாள லோகத்திலிருந்த மாலியவான், தன் தம்பி சுமாலியின் முயற்சியால் கைகசிக்கு இராவணன் முதலியவர்கள்பிறந்து வரம் பெற்றிருப்பதைத் தூதுவரால் உணர்ந்து மகிழ்ச்சி யடைந்து உடனே புறப்பட்டு வந்து அவர்களைக் கண்டு புகழ்ந்து அவர்களுடன் கூடி யிருந்தான். அப்போது சுமாலி இராவணனிடத்தில், “குபேரனுண்டுகொண் டிருக்கும் இலங்கை நம்முடையது; அதை நாம் கைப்பற்றிக்கொள்ள வேண்டும்” என்று சொன்னன். அதற்கு இராவணன், “குபேரனே எனக்குத்

தலைவனுயிருக்கின்றான்; ஆதலின் அவனிடமிருக்கும் அரசாட்சியை நாம் கைப்பற்ற நினைப்பது தர்மமாகாது" என்றான். அப்போது அவனுடைய மாமனாகிய பிரகஸ்தன் அவனை நோக்கி, "நீ நினைக்கிறபடி குபேரன் நினைத்தானா? உன்னுடைய பாட்டன்மாருடைய இலங்கையை அவன் கைப்பற்றியிருத்தல் நீதியாகுமா? எப்பொழுதும் பங்காளிகளில் ஒருவரையொருவர் கெடுக்கவே நினைப்பார்கள்; உங்கள் தாயாதிகளாகிய தேவர்கள் உங்கள் வர்க்கத்தாருக்கு இடைஞ்சல் செய்துவருவதை நீ பார்த்துக்கொண்டு தானேயிருக்கின்றாய்; ஆதலால் நீ தாயாதிகளை மீறவிடாதிருத்தலே நல்லதாகும்" என்று மித்திரபேதமான வார்த்தைகளைச் சொன்னான். அவற்றைக் கேட்டவுடனே இராவணனுக்குக் கெட்டவழியில் புத்தி திரும்பிவிட்டது. அதனால் அவன் பிரகஸ்தனை நோக்கி, "நீயே குபேரனிடம் தூதனாகச் சென்று, 'இலங்கையை விட்டுவிடுகின்றாயா அல்லது சண்டைக்கு வருகின்றாயா' என்று நான் கேட்டுவரச் சொன்னதாகக் கேட்டுவா" என்று சொன்னான். அவன் அப்பொழுதே குபேரனிடம் சென்று இராவணன் கூறியவற்றைச் சொன்னான். குபேரன் இராவணனுடன் சண்டை செய்வது தகுதியல்லவென்று நினைத்துப் பிரகஸ்தனிடம், "இலங்கையைத் தசமுகனுக்கே நான் விட்டுவிடுகிறேன்" என்று சொல்லி அவனை இராவணனிட மனுப்பிவிட்டுத் தன் பிதாவாகிய விச்சிரவாவிடம் சென்று இராவணன் தூதுவன் மூலம் தனக்குத் தெரிவித்த விஷயங்களையும், அதற்குத் தான் மறுமொழி கூறியதையும் சொன்னான். அவற்றைக் கேட்டு அவர், "அப்பா! நீ இலங்கையைத் தசக்கிரீவனுக்கு விட்டுவிட்டு இமயகிரிக்குப் போய்த் தவஞ்செய்; இன்னும் மேன்மையடைவாய்" என்று சொன்னார். குபேரன் அவர் சொற்படியே அங்குச் சென்று சிவபெருமானை நோக்கித்

தவஞ்செய்து அவர் கொடுத்த வரத்தால் அவருக்குத் தோழனாகி மந்தாகினி தீரத்தில் அளகை யென்னும் நகரத்தையுண்டாக்கி அதில் சிறப்புடன் வாழ்ந்து கொண்டிருந்தான். இராவணன் தன் பந்துக்களுடனே சென்று இலங்கா பட்டணத்திற் குடியேறி மகுடாபிஷேகம் செய்து கொண்டு அரசு புரிந்திருந்தான்.

இராவணன் முதலியோர் சந்ததிகளைப் பெறல்.

அப்படி இராவணன் அரசுபுரிந்து வருங்காலத்தில் வித்துச் சிங்கனென்பவன் சூர்ப்பனகியின் மேல் விருப்பங் கொண்டு, தன் எண்ணத்தை இராவணனிடம் தெரிவித்தான். இராவணன் அவன் விருப்பப்படியே அவளை அவனுக்கு விவாகஞ் செய்து கொடுத்து மகிழ்ந்தான். அதன் பின் ஒருநாள் அந்த இராவணன் வேட்டையாடும் பொருட்டு வனத்திற்குச் சென்றான். அப்போது மயன் தன் மகள் மண்டோதரியை எவரினும் மேம்பட்டவோர் புருஷனுக்கு மணஞ்செய்து கொடுக்கவேண்டுமென்று கருதி அவளையும் அழைத்துக்கொண்டு அவ்வனத்தின் வழியாக வந்தான். இராவணன் அவனைக்கண்டு, "நீங்கள் யாவர்?" என்று வினவினன். அப்போது மயன் இராவணனைப் பார்த்து, "இவன் சிறந்த புருஷனாக விளங்குகிறான்; இவன் குல முறையை விசாரித்துக்கொண்டு இவனுக்கே நம் புதல்வியைக் கொடுத்து விடலாம்" என்று தீர்மானித்து அவனிடத்தில், "ஐயா! நான் மயன்; தரிசனை யென்னும் பெண்ணைத் தேவர்கள் எனக்கு விவாகஞ்செய்து கொடுத்தார்கள்; ஐந்நூறு வருஷங்கள் சென்று எனக்கு மண்டோதரி யென்னும் ஒரு புத்திரியும், மாயன், துந்துபி என்ற இரண்டு புத்திரரும் பிறந்தார்கள்; என் புத்திரி குணத்திலும் அழகிலும் சிறந்தவள்; ஆதலின் அவளை நான் ஒரு சிறந்த புருஷ

னுக்கு மணஞ்செய்து கொடுக்க நாடியிருக்கின்றேன்; இப்போது உம்மைப் பார்த்தவுடன் உமக்கே அவளைக் கொடுக்கலாமென்ற எண்ணம் எனக்குண்டாயிருக்கிறது; ஆதலால் நீர் உம்முடைய குல முறையைச் சொல்லும்'' என்றான். அதற்கு இராவணன், தான் பிரமாவின் மரபில் உதித்தவனென்னும் விவரத்தைக் கூறினான். அதைக்கேட்டு மயன் மகிழ்ந்து அந்த வனத்தில்தானே தன் மகள் மண்டோதரியை அவனுக்கு மணஞ்செய்து கொடுத்துச் சீதன வரிசைகளையும், ஒரு சிறந்த வேலாயுதத்தையும் கொடுத்துவிட்டுப் போனான். அதன்மேல் இராவணன் மண்டோதரியுடன் இலங்கையிற் சேர்ந்து மகிழ்ந்திருந்தான். பின்னர் அவன், அசுரகுலத்திற் பிறந்த வயிரோசனன் மகளாகிய வச்சிரச்சுவாலை யென்பவளைக் கும்பகர்ணனுக்கும், கந்தருவகுலப் பெண்ணாகிய சரமை யென்பவளை விபீஷணனுக்கும் மணஞ்செய்து வைத்தான். இப்படி அவர்கள் மூவரும் மணஞ்செய்துகொண்டு மகிழ்ந்திருக்குங் காலத்தில் இராவணன் மேலும் தானியமாலி யென்னும் ஒரு பெண்ணை மணந்து கொண்டதோடு பல அபிமான தாரங்களையும் சேர்த்துக் கொண்டான். அவர்களுள் மண்டோதரி இந்திரஜித்து, அக்ஷயகுமாரன் என்பவர்களைப் பெற்றாள்; தானியமாலி அதிகாயனைப் பெற்றாள்; மேலும் இராவணனுக்கு அவனுடைய மனைவியரிடத்தில் தேவாந்தகன், நராந்தகன், திரிசிரா் என்னும் மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள். கும்பகர்ணனுக்கு கும்பன், நிகும்பன் என்னும் இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். விபீஷணனுக்குத் திரிசடை பிறந்தாள். இப்படி அவர்களுக்குச் சந்ததிகள் தோன்றியபின் அந்த இராவணன் முதலியவர்கள் முன்னிலும் மிக்க பலசாலிகளாய்த் தேவர்களையும் மானிடர்களையும் வருத்தி அதிகாரஞ் செய்துகொண் டிருந்தார்கள்.

இராவணன் திக்குவிஜயம்.

அப்படியிருக்குங் காலத்தில் இராவணன் புத்திரர்களாலும், பந்துக்களாலும், தான் பலங்கொண் டிருந்ததால் அகங்காரங்கொண்டு தேவர்கள் முதல் சகலரையும் அடக்கியாள நினைத்து ஒருநாள் சபாமண்டபத்தில் தன் புத்திரர்களும் மற்றவர்களும் சூழவிருந்து தன்னுடைய அபிப்பிராயத்தை அங்குக் கூடியிருந்தவர்களிடம் கூறினான். அதைக் கேட்டு இந்திரஜித்து, 'தேவர்களை ஜெயிப்பதற்கு நானொருவனிருக்கின்றேன்; அதைப்பற்றி நீர் கவலை கொள்ள வேண்டாம்' என்று வீரம் பேசினான். அப்போது கும்பகர்ணனுக்குத் தான் பெற்ற வரத்தின்படி நித்திரை வந்து விட்டதால் அவன் யுத்தத்தைப்பற்றி ஒன்றும் பேசுவதற்கு முடியாமல் இராவணனை நோக்கி, "அண்ணா! எனக் கேற்பட்ட விதியினால் நித்திரை வந்துவிட்டது; என்னாலிப்போதொன்றும் செய்யமுடியாது; எனக்கு நித்திரை செய்வதற்கு நீர் சுரங்கமொன்றமைத்துத் தரவேண்டும்; மற்ற காரியங்களைப் பின்னால் பார்த்துக்கொள்ளலாம்" என்றான். உடனே இராவணன் மயனை வரவழைத்து அவனைக்கொண்டு முக்காதவழி அகலமும், ஆறுகாதவழி நீளமும் உள்ளதாய்ச் சுரங்கமொன்றமைத்து, அதில் பொன்னாலும் இரத்தினங்களாலும் மாளிகை கட்டிப் படுக்கையறை யேற்படுத்தி அழகிய பஞ்சணையிட்டுப் பொன்விளக்கேற்றி, வாசனையோடு தென்றல் வீசத்தக்க சாளரங்களமைத்து, கும்பகர்ணன் தூங்கும்போது அவனுக்கு எதிரிகள் இடையூறு செய்யாதிருக்கும்படி கடின காவல்களையு மேற்படுத்தினான். கும்பகர்ணன் அந்தச் சுரங்கத்தைப் பார்த்து மகிழ்ந்தான். அதன்மேல் தசக்கிரீவன் அவனுக்கு உணவளிக்கும்படி பரிசாரகர்க்கு உத்தரவிட்டான். அக்கட்டளைப்படி மடையர்கள் அறுநூறு வண்டிகள் நிறைந்த சாதத்தைக் கொண்டுவந்து கும்பகர்ணனுக்கு

முன்னே கொட்டித் தாகசாந்திக்குப் பதினாயிரம் சாடிகள் நிறைந்த மதுவையும் வைத்தார்கள். கும்பகர்ணன் அவற்றை யெல்லாம் நொடிக்குள் உட்கொண்டு அச்சுரங்கத்தில் புகுந்து பஞ்சணையில் படுத்துறங்கினான். அவன் கண்ணில் உற்பத்தியாகும் பீளைகள் மலைபோற் குவிந்துகொண்டிருந்தன; வாயில்வடியும் உமிழ் நீர் அருவி போல் ஒழுகிக்கொண்டிருந்தது; அவனுடைய பெருஞ்சுவாசத்திலகப்பட்டு அநேகம் பிராணிகள் இறந்து கொண்டிருந்தன; அவன் நித்திரைக்கு ஏற்பட்டகாலம் முடிந்தபின் அத்தூக்கம் நீங்குவதா யிருந்ததேயன்றி; மத்தியில் எவ்வகைக் காரணத்தைக் கொண்டும் நீங்குவதாயில்லை. அவனுக்குக் காற்றுவேண்டிய போது இராக்ஷதர்கள் மலைகளைப் பிடுங்கி விசிறியாகக் கொண்டு விசிறிக்கொண் டிருந்தார்கள்.

இப்படிக் கும்பகர்ணன் நித்திரை செய்யும்போது இராவணன் மந்திரிகளை நோக்கி, "கும்பகர்ணன் நித்திரை செய்கின்றபடியால் இனி அவன் சண்டைக்குதவமாட்டான்; நாம் தாம் தேவர் முதலியவரோடு போருக்கெழவேண்டும்; அதற்கு நீங்கள் என்ன யோசனை சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டான். அவர்கள் 'உடனே நாம் போருக்கெழலாம்' என்றார்கள். பிரகஸ்தன் மாத்திரம் முன்னே போர் செய்யத் தூண்டினானெனினும் தான்முற்காலத்தில் தேவர்களால் அடைந்த அவஸ்தையை நினைத்து அப்போது பயந்து இராவணனிடத்தில், தானும் மாலியவான் முதலியவர்களும் முன்னே விஷ்ணுவினால் அடைந்த துன்பங்களைச் சொல்லி 'இப்போது நாம் தேவர்களுடன் யுத்தத்திற்கெழுந்தால் அந்த விஷ்ணுவே சண்டைக்கு வருவார்; அவரை ஜெயிக்க நம்மால் முடியாது; ஆதலின், நாம் 'யுத்த விஷயத்தை

யோசித்துத்தான் செய்யவேண்டும்' என்றான். இராவணன் அதைக்கேட்டு, "அந்தக்கிழவர்கள் விஷ்ணுவுக்குத் தோற்றுப் போனால் நானும் தோற்பேனா? என்னுடைய வரங்களும் பலங்களும் சாமானியமானவைகளா! என்னை எவர்களாலும் ஜெயித்தல் முடியாது; நான் தேவர்களை ஒடுக்கிவிடுவேன்; நீ பயப்படவேண்டாம்" என்று சொன்னான். அதன் மேல் பிரகஸ்தனும் யுத்தத்திற்குச் சம்மதித்தான்.

இராவணன் தேவர்களை ஜெயித்தல்.

உடனே இராவணன் முனிவர்களைப் பிடித்து வருத்தும்படி தன் சேனைகளுக்கு ஆக்ஞாபித்து விட்டுத் தான் புஷ்பக விமானத்திலேறித் தேவர்களை வருத்துதற்கு இந்திரஜித்து முதலியவர்களுடன் தேவலோகம் நோக்கிப் புறப்பட்டுப் போனான். இராக்ஷதர்கள் சென்று வனங்களிற் புகுந்து சில முனிவர்களை எடுத்து விழுங்கியும், சிலரை ஆயுதங்களாற் குத்திக் கொன்றும், சிலரைப் பூமியில் தேய்த்தும் பலவிதமாக அவர்களை ஹிம்சைப்படுத்தினார்கள். அப்போது உயிர் தப்பிய முனிவர்கள் அவர்களுக்குப் பயந்து பற்பலவிடங்களில் ஓடி ஒளித்தார்கள். தேவலோகம் சென்ற இராவணனோ, தேவர்களை ஆயுதங்களால் வெட்டியும், குத்தியும், கால்களால் நசுக்கியும் பலவாறு துன்பப்படுத்தினான். அத்துன்பத்தைச் சகிக்காமல் தேவர்களிற் பலர் இராவணனைப் பணிந்து சமாதானப் படுத்திக்கொண்டார்கள்; சிலர் அவனுக்குப் பயந்து ஓடி ஒளித்தார்கள். அப்போது பிரகஸ்தன், 'தேவர்களோ நமக்குப் பயந்து வருந்துகிறார்கள்; அவர்களை இனித் துன்புறுத்துவது தகுதியன்று' என்று இராவணனிடம் கூறினான். மகோதரனும் அவனை நோக்கி, "இலங்காதிபரே! பிரகஸ்தன் சொல்வது சரிதான்; இளைத்த தேவர்களோடு நாம் போர் புரிவதால் நமக்குச் சிறப்பில்லை; இனி

நமக்குச் சரியானவர்களோடு நாம் யுத்தம் புரியவேண்டும்; குபேரனோ சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்து அச்சிவனுக்குத் தோழனாய்க் கைலையங் கிரிச்சாரலில் மந்தாகினி தீரத்தில் அளகையென்னும் நகரத்தையுண்டாக்கிக் கொண்டு அதில் சிறப்புடன் வாழுகின்றான்; நாம் அவனிடம் போருக் கெழுவோம்; அவனுடைய நந்தவனமொன்று மகா சிறப்புடையதாயிருக்கின்றது; முதலில் நாம் அதை யழித்து விட்டால் அப்பால் அவன் யுத்தத்திற்கு வருவான்; அப்போது அவனையும் ஒரு கை பார்க்கலாம்" என்றான்.

இராவணன் குபேரனுடைய நந்தவனத்தை அழித்தல்.

இராவணன், மகோதரன் சொற்படியே புறப்பட்டுக் குபேரனுடைய நந்தவனத்திற்குச் சமீபத்தில் போயிறங்கிப் படைகளுடன் அதற்குள் புகுந்து அங்கிருந்த பாரிசாத விருக்ஷம், ஐந்தருக்கள், அழகிய செடி கொடிகள் முதலியவற்றையெல்லாம் பிடுங்கி யெறிந்து, மற்ற விருக்ஷங்களை யெல்லாம் எடுத்துக் குபேரன் பட்டணத் தெருக்களில் வீழும்படி எறிந்து, அந்த நந்தவனத்தைப் பாழாக்கிவிட்டு வெற்றிச் சங்கத்தை முழக்கி இலங்கை போய்ச் சேர்ந்தான். அதன்மேல் குபேரன், தன் நந்தவன மழிந்ததை யறிந்து, அதைத் தன் உயிரினுஞ் சிறந்ததாகக் கருதி யிருந்தானாதலின் அஃதழிந்ததற்கு மனம் வருந்தி, "ஐயோ! அந்தப் பாவி இராவணனுக்கு நாம் யாதொரு தீங்கும் செய்யாதிருக்க அவன் ஏன் இவ்வாறு நம்முடைய நந்தவனத்தை யழித்தான்; அவன் இலங்கையைக் கேட்ட போதும் தடையின்றி அதனை அவனுக்கு நாம் விட்டு விட்டோம்; இன்னும் அவனை நாம் தம்பியென்று நினைத்து அவனுக்கு இதத்தையே செய்து வந்திருக்கின்றோம்; நாம் அவனைச் சொந்தக்காரனாகப் பாவித்தாலும் அவன் நமக்குத் தீங்கே செய்து

வருகின்றான்; இனியும் நாம் சும்மா விருக்கலாகாது; நீதி யோடு நடக்கும்படி அவனுக்குப் புத்திகூறுவோம்; அதன் படி அவன் நடந்தால் பேசாதிருப்போம்; இல்லையெனில் யுத்தஞ்செய்து அவனை யொடுக்குவோம்" என்று சிந்தித்து ஒரு தூதுவனை யனழத்து, "நீ இராவணனிடம் சென்று, அவன் தேவர்களுக்கும் எனக்கும் இடைஞ்சல் செய்து வருவது தகாதென்றும், நீதி தவறி நடந்தால் அவனுக்குக் கெடுதி சம்பவிக்குமென்றும், அவனுக்கு நான் தமையனுத லின் உரிமை பாராட்டி இவற்றைக் கூறினேனென்றும் சொல்லிவா" என்று அவனிட மனுப்பினான். அவன் இலங் கைக்குப் போய்க்கொண் டிருந்தான்.

அப்போது குபேரனுடைய நந்தவனத்தை யழித்துச் சென்ற இராவணன் அகங்காரமும் சந்தோஷமுங் கொண்டு கொலுக்கூடத் தமர்ந்து தனக்கு யுத்தி சொன்ன மகோ தரனைக்கொண்டாடி மேலும் அவனைப் பார்த்து, "நாம் தேவர்களையும் குபேரனையும் ஒடுக்கிவிட்டோம்; இனி நமக்கு நிகர் எவருமில்லை. என் பாட்டன் மாலியவான் முதலியவர்களை விஷ்ணு வென்றதாக இவர்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள்; இந்தக் கிழவர்கள் வலிமை யற்றவர்க ளாதலின் அவனுக்குத் தோற்றார்கள்; அவன் நம்மெதிர் நிற்கமாட்டுவானோ?" என்று தற்பெருமை பேசினான். விஷ்ணுவென்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தினாலேயே மாலியவான் பழைய பயத்தால் திடுக்கிட்டு மயங்கி வீழ்ந் தான். இராவணன் 'இந்தக் கிழவனுடைய தைரியம் நன்று யிருக்கின்றது!' என்று சிரித்து அவனுடைய மயக்கத்தைத் தீர்த்தான். அதன்மேல் மாலியவானும் சுமாலியும் ஆதியில் தாங்கள் விஷ்ணுவால் அடைந்த துன்பத்தையும், அவரு டைய வல்லமையையும் இராவணனுக்கு விரிவாக எடுத்

துக்கூறி "அவருடைய பகையையும், தேவர்களுடைய விரோதத்தையும், குபேரனுடைய மனஸ்தாபத்தையும் தேடிக்கொள்ளுதல் தகுதியன்று" என்று புத்தி கூறினார்கள். இராவணன் சிரித்து அவர்களை இழிவாகப்பேசிவிட்டு மகோதரனையும் பிரகஸ்தனையும் நோக்கி, "இந்தக் கிழட்டுச் சவங்களின் வார்த்தை நமக்குத் தேவையில்லை; இனி, மேல் நடக்கவேண்டிய காரியங்களைப்பற்றி நீங்கள் யோசித்துச் சொல்லுங்கள்" என்று அவர்களைக் கொண்டாடினான். மாலியவானும் சுமாலியும் அவன் பேச்சுப் பிடிக்காதவர்களாய்க் கொலுக்கூடத்தை விட்டெழுந்து போய்விட்டார்கள். அத்தருணத்தில் மேற்கூறியபடி சென்ற குபேரனுடைய தூதன் இலங்கையிற்சேர்ந்து இராவணனிடத்தில், அவன் சொல்லியனுப்பியவற்றையெல்லாம் கூறினான். தசக்கிரீவன் அவற்றைக் கேட்டவுடனே கடுஞ்சினமடைந்து அத்தூதனை நோக்கி, "அந்தக் குபேரனா எனக்குப் புத்தி கூறி யனுப்புகிறவன்! அவன் அவற்றைச் சொன்னாலும் நீ என்னிடம் வந்து அஞ்சாமற் சொல்லலாமா?" என்று கிங்கரர்களிடம் அவனை ஒப்பித்துவிட்டு மகோதரன் முதலிய மந்திரிகளை நோக்கி, "நம்மிடம் அஞ்சாமற் பேசிய இத்தூதனை என்ன செய்யலாம்?" என்று கேட்டான். அவர்கள் "அவன் துர்புத்திக்கிசைந்தபடி 'இவனைக் கொன்று விடுவதே தக்கது' என்றார்கள். உடனே இராவணன் அத்தூதனை வெட்டி இராக்ஷத கிங்கரர்களுக்குத் தின்னக் கொடுத்துவிட்டான்.

அதன்மேல் இராவணன் மந்திரிகளை நோக்கி, "இனிக் குபேரனோடு போர்புரியப் போவதுதானே தக்கது!" என்று வினவினான். அதற்குப் பிரகஸ்தன், "குபேரன் குற்றமற்றவனாயும் பொறுமையுடையவனாயு மிருக்கின்றான்; அவன் விஷயத்தில் நீ நடந்துகொண்டது அக்கிரமம்; தருமந்தவறித்

தூதனையும் வெட்டி விட்டாய்; குபேரன் இனிச் சகித்திருக்க மாட்டான்; அவனோ வாத்திலும் பலத்திலும் சிறந்தவன்; ஆதலின் சற்று யோசித்துத்தான் அவனுடன் நாம் போருக்கெழவேண்டும்" என்று சொல்லிவிட்டுப் பேசாமலிருந்தான். மகோதரன் இராவணனை நோக்கி, "நீர்! வீரத்துடன்சென்று குபேரனையும் தேவர்கள் முதலிய மற்றவர்களையும் வென்று திக்குவிஜயம் செய்து எங்கும் ஜெயக்கொடியை நாட்டுவதே உமக்குச் சிறந்ததாகும்" என்று சொன்னான். அவன் சொற்படியே இராவணன் படைகளுடனே சென்று அளகா புரியை அடுத்து யுத்தத்திற்கு ஆயத்தமாய் நின்று ஆர்ப்பரித்தான். குபேரனைச் சார்ந்த சில தூதர்கள், இராவணனுடைய கொடுஞ் செயல்களையுணர்ந்து உடனே குபேரனிடம் சென்று "இராவணன் நம்முடைய தூதனை வெட்டி விட்டு யுத்தத்திற்கும் வந்திருக்கின்றான்" என்று தெரிவித்தார்கள். அவற்றைக்கேட்டதும் குபேரன், "அந்த இராவணன் நம் நந்தவனத்தை அழித்ததுமல்லாமல் தூதனையும் வெட்டிவிட்டு மேலும் நம்மோடு யுத்தஞ் செய்ய வந்திருக்கின்றான்; இனியும் நாம் அவனைச் சும்மா விடலாமோ?" என்று தன் மந்திரிகளிடம் கூறினான். அதைக்கேட்டு முதல்மந்திரியாகிய மணிமாலன், "நீர் முந்தியே அவனுடைய இஷ்டப்படி நடந்ததால் அவன் மீறிவிட்டான்; ஆதலின் இனி நாம் அவனை அடக்கி விடுதலே தகுதியான காரியம்" என்றான். குபேரன் யுத்தத்திற்குப் புறப்பட்டு இராவணனுக்குமுன்னே போய்ச்சேர்ந்தான். இருவரும் யுத்தஞ்செய்ய ஆரம்பித்தார்கள். இரண்டு பக்கத்துப் படைகளும் எதிர்த்தன. யுத்தம் மும்முரமாக நடந்தது: அதனால் இரண்டு பக்கத்திலும் அநேகம் படைகள் சேதமாயின; எங்கும் இரத்தவெள்ள மோடிற்று. ஆங்காங்கே பிணங்கள் குவிந்தன. இராவணனைச் சார்ந்த

மாரீசன் முதலியவர்கள் குபேரனுடைய மந்திரிகளை எதிர்த்து வருத்தினார்கள். அப்போது குபேரனுடைய முதல் மந்திரியாகிய மணிமாலன் இராக்ஷத மந்திரிகளின் மீது ஆயுதங்களைப் பிரயோகித்து அவர்களைச் சின்னபின்ன மாகச் செய்தான். அவர்கள் வீரத்துடன் எதிர்த்துச் சிறிது நேரத்தில் அந்த மணிமாலனை இளைக்கச் செய்து விட்டார்கள். அத்தருணத்தில் மாரீசன் முதலியவர்கள் மணிமால னுடைய சேனைகளைச் சிதைத்து விட்டார்கள். அதன்மேல் இராவணன் குபேரனுக்கு முன்னே சென்று வீர வார்த்தை களைப் பேசினான். குபேரனும் வீரமொழிகளைக் கூறி இரா வணன்மீது அஸ்திரங்களைப் பிரயோகித்தான். இராவணன் தன்னுடைய பாணங்களால் அவற்றைத்தடுத்து மேலும் பற்பல பாணங்களையேவிக் குபேரனுடைய தேரையும், சாரதியையும், வில்லையும் ஒழித்துவிட்டான். குபேரன் வேறொரு தேரிலேறி இராவணனுடைய சேனைகளையெல் லாம் நாசப்படுத்தினான். இராக்ஷத சேனைகள் பயந்தோடத் தலைப்பட்டன. அப்போது தசக்கிரீவன் தன்னுடைய சேனைகளுக்குத் தைரியங் கூறிவிட்டுக் குபேரனுடன் கதா யுத்தஞ் செய்யத் தொடங்கினான். குபேரனும் கதையைத் தாங்கி அவனோடெதிர்த்து அவனைத்தாக்கி அவன் மூர்ச்சை யடையுமாறு செய்தான். அங்ஙனம் மூர்ச்சித்த இராவணன் சிறிது நேரத்திற்குள் மூர்ச்சை தெளிந்தெழுந்து மிக்க வீரா வேசத்துடன் மலைகளையும் மரங்களையும் பிடுங்கி யெறிந்து குபேரனுடைய சேனைகளையும் பட்டணத்தையும் நாசமாக் கிப் பற்பல ஆயுதங்களால் அவனுடைய மந்திரிகளை மூர்ச்சை யாக்கிக் குபேரனையும் அடித்து அவன் தளர்ச்சி யடையச் செய்து அவனேறி வந்த புஷ்பகவிமானத்தைப் பறித்துக் கொண்டான். அதன்மேல் குபேரன் மனமிளைத்து இராவ ணனை நோக்கி, "அப்பா! இராவணா! அண்ணன் தம்பிகளாகிய

நமக்குள் சண்டை எதற்கு? வெற்றி உன்னுடையதாகவே யிருக்கட்டும்" என்று சொல்லிவிட்டு யுத்தஞ் செய்யாமலவ நழுவிப் போனான். அப்போதும் இராவணன் அவனை விடாமல் மறித்து, "நீ எனக்குத் தோற்றுவிட்டாயா இல்லையா?" என்று கேட்டான். குபேரன், 'இவனுடன் வம்பு எதற்காக?' என்று 'ஆம்; நான்தான் தோற்றேன்' என்றான். அதைக்கேட்டு இராவணன் சிரித்துத் தனக்கேற்பட்ட அகங்காரத்தால் சிவபெருமானையும் எதிர்க்கக்கருதிக் குபேரனை நோக்கி, "இனி நீ ஜாக்கிரதையா யிரு; இனி உனக்கு வரங்கொடுத்த சிவனையும் நான் ஒருகை பார்க்கிறேன்" என்று புஷ்பகவிமானத்தில் ஏறிக்கொண்டு தன் படைகளுடன் கைலை நோக்கிப் போயினான்.

இராவணன் நந்திதேவரிடம் சாபம் பெறல்.

அவ்வாறு செல்லும்போது அந்த இராவணனுடைய விமானம் கைலையைச் சமீபித்தவுடன் அதற்குமேற் செல்ல முடியாமல் நின்று விட்டது. அதைக்கண்டு தசக்கிரீவன், 'எவ்விடத்தும் தடையின்றிச் செல்லும் இந்த விமானம் இங்கே தடைப்பட்டு நிற்கவேண்டியதென்ன?' என்று யோசித்தான். அப்போதங்கே காவலிருந்த நந்திதேவர், இராவணனுடைய அகங்காரத்தைக் கண்டு சினந்து அவனுக்கு முன்னே போய், "அடா இராவணா! இது யாரிருக்குமிடமென்று நீ நினைத்தாய்; எப்பொருட்கு மிறைவராகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இவ்வெள்ளிமலையின் மேல் விமானத்தைச் செலுத்த நினைக்கின்றாயே; அஃது உன்னால் முடியுமா? உன்னுடைய திக்குவிஜயம் இங்கே செல்லாது; நீ அகங்காரத்தை விடுத்துச் சிவமூர்த்தியை வணங்கிக் கைலையைச் சுற்றிக்கொண்டு அப்பாற்போ". என்று சொன்னார். அதைக்கேட்டு இராவணன் கோபித்து, "நந்தீ! எனக்கு

விரோதியாகிய குபேரனுக்குச் சிவன் சிநேகிதனுதலால் அவனையும் எதிர்த்து ஒருகை பார்க்கலாமென்று நான் வந்தேன்; இந்தக் கைலைமேலிருக்கும் சிவனுகிய வெள்ளைக்குரங்கின் தன்மையென்ன எனக்குத் தெரியாதா? நீ பேசாமற்போ; எதிர்த்துப் பேசினுல் நான் உன் மண்டையையும் பிளந்து விடுவேன்" என்று இழிவாகப் பேசினுன். அவ் வார்த்தைகளைக் கேட்டதும் நந்தி தேவருக்கு மிகுந்த கோபம் வந்துவிட்டது; அதனுல் அவர் அவனை நோக்கி, "அடே மூடா! உனக்குக் கேடுகாலம் சமீபித்தபடியால் நீ சிவபெருமானையும் மதிக்காமல் பேசினுய்; அவரை நீ வெள்ளைக்குரங்கென்று சொன்னபடியால் பின்னெருகாலத்தில் பலநிறக்குரங்குகளாலேயே உன்னுடை குலத்தாருடனே நாசமடைவாய்" என்று சாபமிட்டனர்.

இராவணன் கைலையைப் பெயர்த்தல்.

அவ்வாறு நந்திதேவர் சாபங்கொடுத்ததும் இலங்காதிபன் அஞ்சாமல் கடுஞ்சினங்கொண்டு நந்திதேவரைப் பார்த்து, "உன்னுடைய சாபம் பலிக்குங்காலத்தில் நான் அதைப் பார்த்துக் கொள்ளுகிறேன்; இப்போது உன்னையும் அந்தச் சிவனையும் இலகுவில்விட்டு நான் போகமாட்டேன்; அந்தக் கைலையை அடியோடு பெயர்த்தெறிந்து என்னுடைய சாமர்த்தியத்தைக் காட்டுகிறேன் பார்" என்று விமானத்தைவிட்டுக் கீழேகுதித்து உதட்டைக் கடித்துக் கொண்டு தன்னுடைய இருபது தோள்களையும் கைலையின் அடிச்சந்திற் புகுத்திக் கைகளால் அதனைப் பெயர்த்து அசைத்தான். அப்பர்வதம் அசைந்த மாத்திரத்தில் அதிலிருந்த தேவர், சித்தர், வித்தியாதரர் முதலியவர்களெல்லாம் நடுங்கி அந்த ஆபத்தைத் தீர்க்கும்படி சிவபெருமானிடம் முறையிட்டார்கள். நந்திதேவர் அவனுக்கு

முந்தியே சாபங்கொடுத்து விட்டபடியால் அதற்குமேல் அவனை ஒன்றுஞ் செய்யமுடியாமல் சிந்தை கலங்கி நின்றார். இராவணனுடைய அகங்கரிப்பைக்கண்ட சிவபெருமான் அவனை அப்படியே அழுத்தி அவனுடைய அகங்காரத்தை அடக்கிவிடவேண்டுமென்று நினைத்துக்கொண்டு புன்சிரிப்புடன் பேசாமலிருந்தார். அப்போது மலை அசைந்ததற்குப் பார்வதி பயந்து சிவபெருமானை நோக்கி, "சுவாமி! இஃதென்ன கைலை அசைகின்றதே; நீர் பேசாமல் வேடிக்கை பார்த்துக்கொண் டிருக்கின்றீரே!" என்று அப்பயத்தால் அவரைக் கட்டிக் கொண்டாள். சிவபெருமான் உமாதேவியை நோக்கி, "பெண்ணே! நீ அஞ்ச வேண்டாம்; நம்முடைய பக்தனாகிய சுகேசன் வழியில் வந்த இராவணான் அகங்காரங் கொண்டு திக்குவிஜயஞ்செய்து நம்மிடத்திலும் தன் வல்லமையைக் காட்ட வேண்டுமென்று சொந்தம் பாராட்டிவந்து இந்த மலையைப் பெயர்த்து ஆட்டுகிறான்; இவன் நம்மை மனதிற்குள்ளேயே எப்பொழுதும் பூஜித்து வரும் அந்தரங்க பக்தன்; அந்தப் பக்தியினாலேயே கைலையும் இவனுக்குச் சிறிது அசைந்தது; இல்லாவிடில் இந்த மலையை அசைத்தல் இவனால் முடியுமோ? இவன் விஷ்ணுவின் இராமாவதாரத்தில் அழிந்துபோவான்; ஆதலால், இவனை நாம் நாசஞ் செய்தல்கூடாது; இவனுடைய அகங்காரத்தை வேண்டுமானால் கொஞ்சம் அடக்கலாம்" என்று சொல்லித் தம்முடைய ஒரு காற் பெருவிரலாலே கைலையைச் சற்றே அழுத்தினார். அவ்வாறு அழுத்திய மாத்திரத்தில் கைலை இராவணனை நசுக்கித் தன்னிலையில் நின்றது. இராவணன், கைலையின் அடிப்பாகத்திற்கும் பாதாளலோகத்திற்கு மிடையில் அகப்பட்டு முதுகெலும்புகள் ஒடிபட்டுப் பத்து வாய்களாலும் இரத்தங் கக்கிக்கொண்டு வலியொடுங்கிப் புலம்பித் தான் அகங்காரத்தாற் செய்த காரியத்தைப்

பற்றித் தன்னைத்தானே நிந்தித்து 'இனி யென்செய்வேன்' என்று வருந்தி விழித்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தான்.

அப்போது மாரீசன் முதலானவர்கள் அவனைக் கண்டு வருந்தி, அவன் முகத்தை நோக்கி, "நீ மகோதரன் பேச்சைக்கேட்டு இத்தகைய சங்கடங்களில் வந்து மாட்டிக் கொள்கிறாயே; இனி இவ்வாபத்தினின்றும் நீங்கவேண்டுமானால் சிவபெருமானைத் துதித்து அவருடைய கிருபையைப் பெற்றுக்கொள்; அவர் சாமவேதகானத்தில் விருப்பமுடையவர்; ஆதலின், அந்தச் சாமவேதகானத்தால் அவரைத் துதி செய்" என்று கூறினார்கள். அதன்மேல் இராவணன், "சங்கரா! சம்போ! மகாதேவா! கங்காதரா! அடியேன் அறியாமையாற் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும்" என்று சிவபெருமானைத் துதித்து அவ்வாறே அம்பிகையையும் ஸ்தோத்திரம் பண்ணிவிட்டு அதன்மேல் தன்னுடைய தலைகளில் ஒன்றை முறித்தெடுத்து வீணைக் குடமாக்கிக் கையிலொன்றை அறுத்தெடுத்துத்தண்டாக்கி, அதன் நரம்புகளையெடுத்துத் தந்தியாக்கி வீணையைச்செய்து கொண்டு அதனை மீட்டி ஆயிரம் வருஷங்கள் வரை அவஸ்தையுடன் சாமவேதகானஞ்செய்து சிவபெருமானைத் துதித்துப் பாடிக்கொண்டிருந்தான். அந்தக் கானத்தைக் கேட்டுச் சகல ஜீவராசிகளும் மனமுருகிப் போயின. அந்த ஆயிரம் வருஷங்களும் சென்றபின் சிவபெருமான் அந்தக் கானத்திற்கு மனமிரங்கி இராவணனுக்கு அனுக்கிரகஞ் செய்ய வேண்டுமென்று நினைத்தார். அப்போது பார்வதியும் அந்த இன்னிசையைக் கேட்டு மனமுருகிச் சிவபெருமானைநோக்கி, "சுவாமி! யாரோ ஒருவன் இனிமையான கானத்தால் நெடு நாளாக நம்மைத் துதித்துக்கொண்டிருக்கின்றான்; அவனுக்கு நீர் அருள்புரியாதிருப்பது தகுதியன்று" என்று

சொன்னாள். அதைக்கேட்டுப் பரமசிவன் "உமையே! முன்னே நீயும் நடுங்கும்படி கைலையைஅசைத்தவன் இவன் தான்; அப்போது நாம் காற் பெருவிரலால் இந்த மலையை அழுத்திய படியால் இவன் இதனடியில் நசுங்குண்டு வருந்தி இதைவிட்டு வெளியேறும் பொருட்டு நம்மை ஸ்தோத்திரம் செய்துகொண்டிருக்கிறான்; முந்தியே நாம் இவனுக்குக் கிருபை செய்திருப்போம்; எனினும் இவன், மேலும் நம்மிடம்வரங்களைப் பெற்றுக் கொண்டு சாதுக்களுக்குத் துன்பஞ் செய்வானேயென்று இதுவரை பேசாம லிருந்தோம்; இப்போது இவனுடைய அகங்கார மெல்லாம் ஒடுங்கியிருக்கும்; ஆதலின் நாம் இனிமேல் இவனிடம் சென்று கிருபை புரியலாம்" என்று உமாதேவியுடன் இடப வாகனத்தில் எழுந்தருளி அவனுக்கு முன்னே சென்றார். அவரைப் பார்த்தவுடனே தசக்கிரீவன் "பகவானே! என்னைப் பாதுகாத் தருளவேண்டும்" என்று கண்ணீரொழுகப் போற்றினான். அப்போது சிவபெருமான் அவனை மலையிடுக்கினின்றும் வெளியேற்றி அவன் முகத்தைப் பார்த்து, "தசமுகா! நீ வீறிட்டழுத முகத்தோடு நம்மை ஸ்தோத்திரஞ் செய்த படியால் அக்காரணத்தை விளக்கும் *இராவணன் என்னும் பெயர் உனக்குத் தக்கதாகும்; இன்றுமுதல் அப்பெயர் உனக்கு மிகுதியாக வழங்கக்கடவது; மேலும் நீ வேண்டிய வரத்தை நம்மிடம் பெற்றுக்கொள்" என்றார். இராவணன், "நம்மை இவர் மலை யிடுக்கில் நின்றும் வெளி யேற்றிவிட்டதே போதும்; நமக்கு வேறொரு வரமும் வேண்டியதில்லை" என்று நினைத்து, மேலே ஒரு வரத்தையும் கேட்காமல் வாயை மூடிக்கொண்டிருந்தான். சிவபெருமான் அவன் எண்ணத்தை யுணர்ந்து அவன்மீது இரக்கங்கொண்டு,

* இராவணம் - அழுகை; இராவணன்-அழுகை முகத்தோடு கூடியவன்.

அவனை நோக்கி, "இராவணா! நீ ஒன்றையும் கேட்காவிடினும் உன்னுடைய ஸ்தோத்திரத்துக்கு மகிழ்ந்த படியால் நாமே உனக்கு வரந்தருகின்றோம்; உனக்கு நான்முகன் கொடுத்த ஆயுளுக்குமேல் இன்னும் அவ்வளவு வயது கொடுத்தோம்" என்று சொல்லிப் பின்னரும் மதிப் பிரகாசம் என்னும் ஒரு வாளாயுதத்தையும் அவனுக்குக் கொடுத்து, "இதனை எவன் தூஷிக்கின்றானோ அவனை இது சம்மாரம் செய்துவிடும்" என்று திருவாய் மலர்ந்தருளினார். அப்போது இராவணன் தனக் கேற்பட்ட வருத்தத்தால் தாகவிடாய் கொண்டிருந்தானாதலின் அதைத்தணிக்கத் தக்கதை அவரிடம் கேட்க விரும்பி வாயால் கேட்க முடியாமல் தாகசாந்திக்கு ஏதாவதுவேண்டுமென்பதை அவருக்கு முன்னே கையை யேந்தி அதனால் குறிப்பிட்டான். சிவ பெருமான் அக்குறிப்பை யுணர்ந்து இரக்கத்துடன் அவனுடைய தாகத்தைத் தீர்க்கும்படி நந்தி தேவருக்குச் சாடை காட்டினார். நந்திதேவர் அமுதங் கொண்டுவந்து அவனுக்குக் கொடுக்கும்படி தேவர்களுக்குக் கட்டளையிட்டார். அவர்கள்உடனே அமுதகலசத்தைக் கொண்டு வந்து இராவணனுக்கு முன்னே வைத்தார்கள். அவன் அந்த அமுதத்தை யெல்லாம் பானம் பண்ணிக் களைப்பு நீங்கினான். சிவபெருமான், 'இனி நீ புஷ்பக விமானத்திலேறி இஷ்டமான விடத்திற்குச் செல்லலாம்' என்று அவனுக்கு அனுக்கிரகம் செய்து விட்டுச் சென்றார். அதன்மேல் இராவணன் கைலை யடியினின்றும் வெளிப்பட்டு முன்னிலும் அதிக பலங்கொண்டு "நான் சிவனுக் கபராதஞ் செய்தாலும் மேலும் அவரிடத்தில் உயர்ந்த வரம் பெற்றுக்கொண்டேன்; இனி எனக்கென்ன குறை?" என்று அகங்கரித்துப் பற்பல விடங்களுக்கும் சென்று திக்கு விஜயம் செய்து திக்கஜங்களுடனும் போராடி அவற்றின் தந்தங்களை மார்பில்

பாயவிட்டு ஒடித்து வைத்துக்கொண்டு பற்பல அரசர்களை ஜெயித்து அவர்களிடம் கப்பம் வாங்கிக்கொண்டு இமய மலையின் பக்கம் வந்தான்.

வேதவதியிடம் இராவணன் சாபம் பேறல்.

அவன் அவ்வாறு வரும்போது அங்கே ஒரு சோலையில் வேதவதி யென்னும் அழகிய கன்னிகை யொருத்தி விஷ்ணுவே தனக்கு நாயகராக வேண்டுமென்று விரும்பி, அவ்விருப்பத்தைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு அவரை நோக்கித் தவஞ்செய்துகொண் டிருந்தாள். இராவணன் அவளைப் பார்த்துக் காதல்கொண்டு 'எப்படியாவது இவளைக் கைப்பற்றவேண்டும்' என்று நினைத்துத் தனியாக அவளருகிற் சென்று, கண்மூடி நிஷ்டையி லிருந்த அவள் முகத்தைப் பார்த்து, "பெண்கள் நாயகமே! நீ யார்? மிக்க அழகுடைய நீ உடம்பை வாட்டித் தவஞ் செய்யுங் காரண மென்ன?" என்று உரத்த தொனியோடு கேட்டான். அவனுடைய பெருங் குரலைக் கேட்டவுடனே வேதவதி நிஷ்டைகலைந்து விழித்துப் பார்த்து அவனுடைய வடிவத்தைக் கண்டு சிறிது பயந்து உடனே தெளிந்து, "நாம் புருஷர்களின் உபத்திரவ மில்லாதிருக்கவேண்டி இந்த ஆரணியத்தில் வந்து தவஞ்செய்து கொண்டிருக்கின்றோம்; இங்கும் எவனோ இராக்ஷதன் வந்து விட்டான்; ஆயினும் நாம் இவனிடம் நம்முடைய வரலாற்றைக் கூறி இவனைத் தந்திரமாக வேறிடத்திற்கு அனுப்பி விடுவோம்" என்று நினைத்து அவனை நோக்கி, "இராக்ஷதனே! நானோ வீர குசத்துவ முனிவருடைய குமாரத்தி; என் பெயர் வேதவதி; என்னை மணம்புரிய விரும்பி அநேகம் தேவர்களும், அசுரர்களும், கந்தருவர்களும் என் தந்தையிடம் கேட்டார்கள்; நான் விஷ்ணுமூர்த்தியை மணம்புரிய இச்சைகொண்

டிருந்தபடியால் என் தந்தை எனது விருப்பத்திற்கு மாறாக என்னை அவர்களுக்குக் கொடுக்க இசைந்திலர். அதற்காக அவர்மீது மனஸ்தாபங்கொண்டு சம்புவென்னுமோர் அரக்கன் இரவில் வந்து அவரைக் கொலை செய்துவிட்டான்; அதன்மேல் நான் மனம் வருந்தி இங்கே வந்து, விஷ்ணுவே எனக்குப் புருஷராக வேண்டுமென்று அவரை நோக்கித் தவஞ்செய்துகொண் டிருக்கின்றேன்" என்று சொன்னாள். அவற்றைக்கேட்டதும் இராவணன் சிரித்து அவளிடத்தில் விஷ்ணுவை இழிவாகப் பேசித் தன்னுடைய பெருமைகளை விசேஷமாக எடுத்துக் கூறித் தன்னையே அவள் மணஞ் செய்துகொள்ளும்படி அவளை வேண்டினான். அம்மொழிகளைக்கேட்டு அந்த வேதவதி அவனைப்பார்த்துக்கோபித்து, "அடா துஷ்டா! நீயோ விஷ்ணுவினும் சிறந்தவனாவாய்? நீ கைலையைப் பெயர்க்கப்போய் அவஸ்தை யடைந்து வந்தது எனக்குத் தெரியும்; இங்கே நீ ஆபாசமான வார்த்தைகளைப் பேசாமல் அப்பாற் போய்விடு" என்று சொன்னாள். அவ்வார்த்தைகளைக் கேட்டு இராவணன் கடுஞ்சினமடைந்து அவளுடைய கூந்தலைபற்றி யிழுக்க முயன்றான். அவனுடைய எண்ணத்தை யுணர்ந்த வேதவதி, ஆதார மந்திரத்தை ஜெபித்து எதிரிலிருந்த தணலை நோக்கினாள். அது சுவாலைவிட்டு வளர்ந்தெரிந்தது. உடனே அவள் இராவணன் பற்ற நினைத்த கூந்தலை அறுத்து அதில் போட்டு விட்டு அவனை நோக்கி, "அடாபாவி! நீ என் தவத்திற் கிடையூறு செய்தபடியால் நான் அடுத்த ஜன்மத்தில் சீதையாகப் பிறந்து உன்னையும் உன் குலத்தையும் நாசமாக்குவேன்" என்று சொல்லிவிட்டுத் தானும் அந்நெருப்பில் வீழ்ந்திறந்தாள். இராமபிரானே! அவள்தான் இலக்குமியின் அம்சத்தோடு கலந்து, இக்காலத்தில் உம்முடைய திருத்தேவியாராகிய சீதாபிராட்டியாய் வந்து பிறந்தாள்.

இராவணன் மருத்துமகாராஜன் புரிந்த யாகத்திற்கு இடையூறு செய்தல்.

மேற்கூறியபடி வேதவதி சாபமிட்டதை இராவணன் ஏற்றுக்கொண்டு, அதற்காக விசனித்து, உடனே 'தலைவிதியால் வருவதுவந்தே தீரும்' என்று தெளிந்து தைரியங்கொண்டு அவ்விடத்தைவிட்டுப் படைகளுடன் விமானத்திலேறிப் புறப்பட்டுப் பற்பல மன்னர்களிடத்தும் சென்று பகுதி வாங்கிக்கொண்டு அனேகம் ஸ்திரீகளைச் சிறை யெடுத்துத் திரும்பி இமயகிரிச் சாரலுக்கு நேரே வந்தான். அங்கே ஒரு சோலையில் சங்கவர்த்தன ரென்பவரை ஆசானாக வைத்துக் கொண்டு, தேவர்கள், முனிவர்கள், காந்தருவர் முதலியவர்களெல்லாம் சூழ, உலகத்தை யெல்லாம் ஒருகுடையின் கீழ் ஆளத்தக்க குணம் பொருந்திய மருத்து மகாராஜன் யாகஞ்செய்துகொண் டிருந்தான். இராவணன் அவனைக் கண்டான். அங்ஙனம் பார்த்ததும் மிக்ககோபங்கொண்டு மாரீசன் முதலியவர்களை நோக்கி "இந்த அரசன் என்னைக் கண்டு எழுந்து பணியாமலும், எனக்குப் பகுதி செலுத்தாமலும் யாகஞ் செய்துகொண் டிருக்கின்றான்; ஆதலின் நாம் இவனை அடித்து நொறுக்கி இவனுடைய யாகத்தைச் சிதைக்காமற் போதல்கூடாது; இதற்கு நீங்கள் என்ன யோசனை சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டான். அதற்கு மாரீசன், "இவ்வாறு நாம் கண்டவர்களோடெல்லாம் எதிர்ப்பது சரியன்று: எல்லோரும் நமக்குக் கீழ்ப்பட்டவர்களாயிருக்கமாட்டார்கள்; சிலர் நம்மை அடக்கி விடுதலும் கூடும்; புற்றுக்களுக்குள் மறைந்திருக்கும்பாம்புகளைப் பிடிக்கச்செல்பவர் எந்தப் புற்றில் எந்தப்பாம்பிருக்குமோ என்று மிக்க ஜாக்கிரதையோடு அவற்றைக் கவனித்து அவற்றுள் பிடிக்கத்தக்கதைப் பிடித்தும், விடுக்கத்தக்கதை விடுத்தும் செல்வது போல

நாம் எதிரிகளின் பலாபலத்தை அறிந்து நெருங்கத்தக்கவரிடத்தில் நெருங்கவேண்டும், அகலத் தக்கவரிடத்தில் அகலவேண்டும்" என்று சொன்னான். இவற்றைக் கேட்டதும் இராவணன், 'உன் கருத் தென்ன?' என்று கேட்பதற் கறிகுறியாக மகோதன் முகத்தை நோக்கினான். அவன், 'நாம் செய்வது திக்குவிஜய மாதலால் எதிர்ப்பட்டவர்களை யெல்லாம் ஜெயிப்பதுதான் அதற்குத் தக்கதாகும்; மேலும் இந்த மருத்துமன்னன் இப்போது எவராலும் செய்யமுடியாத மகேஸ்வரயாகத்தைச் செய்கிறான்; ஆதலின், இவனை நாம் ஜெயிப்பதால் நமக்கு மிக்க கீர்த்தியுண்டாகும்" என்றான். இந்த வார்த்தைகள் இராவணனுக்கு உற்சாகத்தை உண்டாக்கியபடியால் அவன் உடனே விமானத்தை விட்டிறங்கி மருத்துவின் யாகசாலையைப் பார்த்துப் புஜங்களைத் தட்டி ஆர்ப்பரித்தான்; மற்ற இராக்ஷதர்களும் கர்ஜ்ஜித்தார்கள். அங்கிருந்தவர்களெல்லோரும் தசக்கிரீவனைக்கண்டு நடுங்கி, 'இதோ இராவணன் வந்துவிட்டான்; இனி நாம் பிழைப்பதரிது" என்று இந்திரனை நோக்கி, "இனிமேல் நாம் என்ன செய்யலாம்?" என்று வினவினார்கள். அவன் "நம்மில் ஒவ்வொருவரும் வெவ்வே றுருவங்கொண்டோடி ஒளிப்பது நலம்" என்று மயில்வடிவங்கொண் டோடி மறைந்தான்; அவன் சொற்படியே யமன் காகவடிவுகொண்டு பறந்து போனான்; வருணன் அன்ன வடி வெடுத் தோடினான்; குபேரன் ஓணன் வடிவெடுத் தோடினான்; மற்ற தேவர்களும், மனிதர்களும் அவ்வாறே வெவ்வே றுருவங்களைக் கொண்டோடி மறைந்தார்கள். முனிவர்களெல்லாம், 'இவனி இவன் சீக்கிரம் ஒழிந்து போவான்' என்று தசக்கிரீவனுக்குச் சாபங்கொடுத்துவிட்டு மறைந்தார்கள். இவ்வாறு எல்லோரும் மறைந்தோடவே மருத்துமன்னன் மூாத்

திரம் தனித்து நின்றான். இராவணன் வீராவேசத்துடனே அவனுக்கெதிரில் சென்று, "அடா மருத்தா! நானிருக்கும் போது நீ என்னை வணங்கி என் அனுமதியைப் பெற்றுக் கொள்ளாமல் இந்த யாகத்தைச்செய்யலாமா? நீ இப்போ தென்னுடன் போர்செய்ய வரவேண்டும், அல்லது எனக்குத் தோற்றதாகச் சொல்லவேண்டும்; இவ்விரண்டிலொன்றை நீ செய்யா விட்டால் நான் உன்னையும் உன்னுடைய யாகத்தையும் ஒழித்து விடுவேன்" என்று சொன்னான். இவ் வார்த்தைகளைக் கேட்டதும் மருத்துராஜன் கோதித்தெழுந்து அவனோடு போர்செய்யத் தொடங்கினான். அத் தருணத்தில் அவனுடைய ஆசானாகிய சங்கவர்த்தனர் அந்த மருத்துமன்னனைத் தடுத்து, "அரசனே! இவன் உனக்கு நிகரானவனல்லன்; எனினும் இப்போதிவனுடன் நீ போர்செய்தால் இந்த யாகத்திற் கிடையூறுண்டாகும்; ஆதலின், இவனிடத்தில் 'நான் உனக்குத் தோற்றேன்' என்று சொல்லிவிட்டால் இவன் மகிழ்ச்சி யடைந்து போய்விடுவான்; அதன்மேல் நாம் இந்த அருமையான யாகத்தை நிறைவேற்றி விடலாம்; நமக்குக் காரியமாக வேண்டியது தானே குறி" என்று அவனுக்குச் சொன்னார். அதன்மேல் மருத்துமன்னன் 'இது நல்ல உபாயந்தான்' என்று சந்தோஷித்து இராவணன் சமீபத்திற்சென்று அவன் முகத்தை நோக்கி, "இலங்காதிபரே! நான் உமக்கெதிரா வேனோ; நான் எப்போதும் உமக்குத் தோற்றவன்தான்" என்றான். இதைக்கேட்டு இராவணன் அளவில்லா மகிழ்ச்சி யடைந்து தன்படைகளுடன் போய் விட்டான்.

அதன்மேல் அவனுக்குப் பயந்தோடிய தேவர் முதலியவர்கள் அச்சம் நீங்கி யதார்த்த வடிவத்துடன் அங்கே வந்தார்கள். மருத்து மன்னன் அந்த யாகத்தை நிறை

வேற்றித் தேவர்களுக்கு அவிர்ப்பாகங் கொடுத்தான். அத் தருணத்தில் இந்திரன் மருத்துவை நோக்கி, "மன்னனே! நான் இராவணனுக்குப் பயந்து மயில்வடிவெடுத்ததனால் மயில்களுக்கு இனி என்னுடைய அடையாளமாகத்தோகையில் ஆயிரங் கண்களுண்டாகவும், என் வாகனமாகிய மேகத்தைக் கண்டவுடன் அந்த மயில்கள் தோகை விரித்தாடவும், நாகங்களினால் அவற்றிற்குத் துன்பமுண்டாகாதிருக்கவும் அனுக்கிரகஞ் செய்கிறேன்" என்று சொல்லி மயிலினங்கட்கு வரங் கொடுத்தான். யமன், "நான் காகவடிவமெடுத்த படியால் இனி உலகத்திலுள்ளவர்கள் பிதுர்த்திதிகளில் காகங்களுக்கு அன்னம்படைக்கவும், அதனால் அவர்களுடைய பிதுர்க்கள் நரகத்தழுந்தாதிருக்கவும், எக்காலத்திலும் அக்காகங்கள் நோயற்றுத் தீர்க்காயுளுடன் இருக்கவும் அருள் புரிகிறேன்" என்று சொல்லிக் காகங்களுக்கு வரங்கொடுத்தான். வருணன், "நான் அன்னவடிவமெடுத்ததால் இனி அன்னங்களெல்லாம், என்னைப்போல வெள்ளை வடிவமடையுந் தன்மையை அவற்றிற்குக் கொடுக்கிறேன்" என்று சொல்லி அன்னங்கட்கு வரங்கொடுத்தான். குபேரன், "நான் ஓந்திவடிவெடுத்ததால் இனி ஓந்திகளுக்கு என் நகரம்போல் பொன்வடிவமும், என் மாளிகைபோலப் பல வர்ணங்களும் உண்டாகுமாறு அருள் செய்கிறேன்" என்று சொல்லி அவற்றிற்கு வரங்கொடுத்தான். பின்னர் எல்லோரும் மருத்துராஜனை வாழ்த்தி விட்டுத் தங்கள் தங்கள் இருப்பிடங்கட்குப் போய்விட்டார்கள். மருத்துமன்னன் யாகம் முடிவு பெற்றதால் மகிழ்ச்சி யுற்றிருந்தான்.

அனரண்ய ராஜனுடன் இராவணன் யுத்தஞ் செய்தல்.

மேற்கூறியபடி சென்ற இராவணன், பின்னர் அக் காலத்தில் அயோத்தியில் அரசுசெய்துகொண் டிருந்த

அனரண்ய மகாராஜனிடம் சென்று, "நீ சுத்தவீரனு யிருந்தால் என்னுடன் யுத்தத்திற்குவா; அல்லது பகுதிகட்டி என்னை வணங்கிக்கொள்" என்று சொன்னான். இதைக் கேட்டவுடனே அவ்வரசன் கோபங்கொண்டு நால்வகைப் படைகளுடன் இராவணனை எதிர்த்தான். அவ்விருவருடைய படைகளும் போர்செய்தன. அப்போது இராக்ஷதப்படைகள் மிஞ்சி அவ்வரசனுடைய படைகளை மிகுதியும் சேதப்படுத்தி விட்டன. இராவணன் அளவிறந்த ஆயுதங்களை அம்மன்னன் மீது பிரயோகித்து அவனுடைய தேகத்தையெல்லாம் சல்லடைக் கண்களாகத் துளைத்துத் தேரையும் சாரதியையும் குதிரைகளையும் ஒழித்து விட்டான். அவ்வம்புகளால் தேகம் அவ்வாறு துளைக்கப்படவே அனரண்ய மகாராஜன் சோர்ந்து வீழ்ந்து இராவணனை நோக்கி, "அடா பாவி! நீ இப்போது யாதொரு பகையுமில்லாதிருந்த என்னை அகங்காரத்தால் வருத்தினாய்; பின்னே விஷ்ணுமூர்த்தி இராமராக என்மரபில்வந் தவதரிக்கப் போகிறார்; அவரால் நீ இறப்பாய்" என்று சாபங் கொடுத்துவிட்டு வீர சுவர்க்கத்தை யடைந்தான்.

நாரதர் மூட்டிவிட்டதால் இராவணன் யமனுடன் சண்டை செய்தல்.

அதன்மேல் இராவணன், 'இஃதென்ன நமக்கு மேலும் மேலும் சாபங்களே யுண்டாகின்றன' என்று வருந்தி 'இனி நாம் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டும்' என்று தன்னுடைய படைகளுடன் புறப்பட்டுப் போய்ச் செழித்த ஒரு காட்டில் தங்கியிருந்தான். அத்தருணத்தில் நாரதமுனிவர் அந்த இராவணனை மேலும் பல வம்புகளில் இழுத்துவிட்டு வேடிக்கை பார்க்கவேண்டுமென்று நினைத்து அவனிடம் வந்தார். இராவணன் அவரைக்கண்டு உபசரித்து

ஆசனத்திலமரச் செய்தான். அப்போது நாரதர் அவனை நோக்கி, "இராவணா! நீ யேன் இவ்விடத்தில் வந்திருக்கின்றாய்?" என்று வினவினர். அதற்கு அவன், "நான் திக்கு விஜயம் செய்து பலரையும் ஜெயித்து இலங்கைக்குப்போகும் பொருட்டு இங்கேவந்து தங்கி யிருக்கின்றேன்; இன்னும் என் கைக்குள் அகப்படாதவர்கள் எவரேனுமிருந்தால் நீர் சொல்லும்" என்றான். நாரதர், "இராவணா! நீ என்ன திக்கு விஜயம் செய்தாய்! யமனை ஜெயித்தாலன்றோ உன் திக்குவிஜயம் சிறப்புற்றதாகும்" என்றார். மகோதரனும், இராவணனை நோக்கி 'இதை நான் முந்தியே உம்மிடம் கூற மறந்துவிட்டேன்; நாரதர் சொல்லியபடியே யமனை வென்றால் உமக்கு அளவற்ற கீர்த்தி யுண்டாகும்' என்றான். இவர்கள் வார்த்தைகளைக் கேட்டதும் இராவணன் உற்சாகத்துடனே மறலியோடு யுத்தம் புரியப் புறப்பட்டான். அப்போது மாரீசன், 'அங்கே செல்வதால் தொந்தரவுண்டாகும்' என்று அவனைத் தடுத்தான். இராவணன் 'நீ பேசாமலிரு' என்று அவன் வாயை அடக்கிவிட்டுத் தன் படைகளுடன் விமானத்திலேறி யமபுரத்தை நோக்கிப் போயினன். அவன் செல்வதற்கு முந்தியே நாரதர் யமனிடம் சென்றார். அவன் அவரைக் கண்டு உபசரித்து வணங்கித் தீர்ப்பாசனத்திலிருக்கச் செய்து அவரை நோக்கி, "சுவாமி! நீர் இங்கெழுந்தருளிய காரணமியாது?" என்று வினவினன். அதற்கு நாரதர், "நான் பற்பல விடங்களிற் சஞ்சரித்து ஓரிடத்தில் இராவணனைக்கண்டு, ''அப்பா! நீயேனிங்கு வந்திருக்கின்றாய்?" என்று கேட்டேன். அவன், 'நான் திக்குவிஜயஞ் செய்து வந்திருக்கின்றேன். இப்போது யமனைக் கொல்லப்போகின்றேன்' என்றான். நான், 'அது கூடாது.' என்று அவனுக்கு எவ்வளவோ நீதிகளைக் கூறினேன். அவன் அவற்றைக் கேட்காமல் இப்போது உன்னுடன் சண்டையிடப் புறப்பட்டுவந்து

கொண்டிருக்கின்றான்; அவனை நீ இலகுவில் விடக்கூடாது; நன்றாக வாட்டி யனுப்பவேண்டும்" என்று சொல்லி அந்த யமனுக்கு இராவணன்மீது கோபமுண்டாகும்படி செய்து விட்டு அவனிடம் விடை பெற்றுக்கொண்டு போய்விட்டார். யமன், அவருடைய வார்த்தைகளால் இராவணன் மேற் சீற்றங்கொண்டு 'அந்த இராவணன் இங்கே வரட்டும்; அவனை நான் தொலைத்து விடுகின்றேன்' என்று அவன் வர வுக் கெதிர்பார்த்திருந்தான். அத்தருணத்தில் முன்னே சொல்லியபடி சென்ற இராவணன் யமபுரத்தை யணுகித் தான் சண்டைக்கு வந்திருப்பதை அந்த யமனிடம் தெரி விக்கும்படி தூதனை யனுப்பினான். அத்தூதன் யமனிடம் சென்று, "இலங்காதிபர் உம்முடன் சண்டை செய்ய வந் திருக்கின்றார்; உமக்கு வன்மை யிருந்தால் நீர் அவருடன் போர் செய்யும்; இல்லையெனில் அவருக்குப் பகுதி செலுத்தி அவரை வணங்கிக்கொள்ளும்" என்றான். அதைக்கேட்டு மறலி சினந்து தூதவனை நோக்கி, "அடே! அவன் இந்தச் சமாசாரங்களைச் சொன்னானென்று நீயும் அச்சமின்றி என் னிடம் வந்து சொன்னாய்; உன்னுடைய சிரசை இப் பொழுதே நான் துண்டு செய்துவிடுவேன்; எனினும் தர் மத்துக் கஞ்சி உன்னை விட்டேன்; நீ விரைந்து சென்று அந்த இராக்ஷதன், பயந்தோடாமல் சண்டைக்கு ஆயத்த மாயிருக்கும்படி நான் சொன்னதாக அவனுக்குச் சொல்" என்று கூறினான். அவன் சென்று இராவணனிடம் கூற்று வன் கூற்றுக்களைக் கூறினான். இராவணன் சண்டைக்கு ஆயத்தமாயிருந்தான்.

அப்போது யமன் சித்திரகுப்தனை நோக்கி, "அந்த இராவணன் வலியவந்து நம்மைச் சண்டைக் கிழுக்கின் றானே; அவனை நாம் என்ன செய்யலாம்" என்று வினவி னான். அதற்கவன், "நாம் அவனோடு போர்செய்து அவ

னுடைய அகங்காரத்தை அடக்குவதுதான் நல்லது" என்முன். உடனே நமன் தன் சேனைகளுடன் புறப்பட்டுக் கோட்டைவாயிலைக் கடந்து இராவணனுக் கெதிரில்போய் நின்று வீரகர்ஜ்ஜனை புரிந்தான். இராவணனும் கோபமுற்று அவனோடெதிர்த்தான். அவ்விருவருடைய படைகளும் நெருங்கி யுத்தம் புரிந்தன. அச்சண்டையால் இருவகைச் சேனைகளிலும் பற்பல சேதங்களுண்டாயின. எங்கும் பிணக் குவியல்களும் இரத்த வெள்ளமும் அதிகரித்தன. அத்தருணத்தில் யமதூதர்கள் மீறி இராக்ஷதர்களை அடித்து அவர்கட்கு ஹிம்சையைச் செய்தார்கள். அத்துன்பத்தால் இராக்ஷதப்படைகள் அதிகமாக ஒழிந்தன. ஒழிந்த சேனைகள் தவிர எஞ்சிநின்ற இராக்ஷதர்கள் அவர்களுக்குப் பயந்து இராவணனிடம் அடைக்கலம் புகுந்தார்கள். அப்போது இராவணன் "ஐயோ! நாம் வகை தெரியாமல் வந்து இச்சண்டையில் மாட்டிக்கொண்டோமே! இதுவரை நம்முடைய சேனைகளில் இருநூறு வெள்ளம் படைகள் மடிந்தனவே" என்று சற்றே மயங்கி நின்முன். அப்போது அந்த யமதூதர்கள் அவனுடனெதிர்த்து அநேகம் அஸ்திரங்களைப் பிரயோகித்து அவனுடைய தேர், கவசம் முதலியவற்றை நாசஞ்செய்து, தேகத்தையும் சல்லடைக் கண்களாகத் துளைத்துச் சேனைகளையும் சின்ன பின்னப் படுத்தினார்கள். அம்புகளால் தேகம் துளைக்கப்பட்டதனால் இராவணன் மூர்ச்சை யடைந்தான். மாரீசன் முதலியவர்கள் அம்மயக்கத்திற்குத் தக்க பரிகாரஞ்செய்து அதனை நீக்கினார்கள். இராவணன் மூர்ச்சை நீங்கித் தெளிந்தவுடன் முன்னிலும் கடுமையாக எதிரிகளுடன் எதிர்த்து அவர்கள் மீது அஸ்திரங்களைப் பிரயோகித்து அவர்களைச் சார்ந்த சேனைகளையெல்லாம் நாசப்படுத்தினான். அச்செய்கையைக் கண்டு யமனுடைய தூதர்களாகிய தூமகேது, சிங்கமுகன்,

ஆளிமுகன், கழுதைமுகன், கோரப்பல்லன், வக்கிரதந்தன் முதலியவர்கள் சினந்து இராவணனைத் தூஷித்துப் பேசி அவன்மீது எண்ணிறந்த ஆயுதங்களைப் பிரயோகித்து அவனுடைய தேர், வில் முதலியவற்றைப் போக்கித் தேகத்தைத் துளைத்து மார்பைப் பிளந்து அவன் முன்னிலும் அதிகமாக மயங்குமாறு செய்தார்கள். இராவணன் அம்மயக்கத்துடன் சிறிது நேரம் இருந்து பின்னர்த் தெளிந்து "யமதூதர்களே நம்மை இந்தப் பாடு படுத்துகின்றார்களே; இனி அந்த யமன் என்ன செய்வானோ தெரியவில்லை; நாம் இவர்களோடு போர்புரிந்து துன்பப்படுவதைக் காட்டினும் அந்த யமனுடன் எதிர்த்து மடிவது நல்லது" என்று வீராவேசங்கொண்டு யமதூதர்களை வாட்டி அவர்களை நோக்கி, "நீங்கள் எனக்கு நிகரானவர்களல்லர்; அந்த யமனைக் காட்டுங்கள்; அவன் எங்கே எங்கே?" என்று கூவினான். அந்தச் சப்தத்தைக் கேட்டு யமன் அடங்காக்கோபங்கொண்டு வந்து அவனோடெதிர்த்தான். இருவரும் பாணப் பிரயோகஞ் செய்தார்கள். அந்தப்பாணங்கள் தணலைப் போல் வெளிப்பட்டு உலகங்களையெல்லாம் தகிக்க ஆரம்பித்தன. அதனால் தேவர்கள் நடுங்கி வருந்தினார்கள். முனிவர்கள், 'இராவணன் கோதண்டபாணியால் சீக்கிரம் ஒழிந்துபோவான்' என்று சாபங் கூறிவிட்டு மலைகளிலும் குகைகளிலும் ஓடி மறைந்தார்கள். அப்போது இராவணன் பாசுபதாஸ்திரத்தை யெடுத்துக் கூற்றுவன் மேல் பிரயோகித்து விட்டான். அது மிக உக்கிரத்துடன் புறப்பட்டுப்போய் யமனுடைய மகுடத்தையும், வில்லையும், தண்டையும், பாசத்தையும் போக்கிக் கவசத்தை அறுத்து, எருமைக்கடாவையும் தரையில் வீழ்த்தி அவன்மீதும் பாய்ந்தது. அதனால் அவன் மூர்ச்சையாகி விட்டான். உடனே சித்திரகுப்தன் ஓடிவந்து அந்த யமனைத் தூக்கி அவனுக்குச்

சிரம பரிகாரஞ் செய்து அவனுடைய மயக்கத்தைப் போக்கினான். மறலி மூர்ச்சை தெளிந்தவுடன், "யாருக்கும் தோல்வியுறாத நாம் இந்த இராக்ஷதனால் மூர்ச்சை யடைந்ததென்ன அதிசயமா யிருக்கின்றது!" என்று வருந்தினான்.

அப்போது சித்திரகுப்தன் அவனை நோக்கி, "யமபுரத்தரசே! நீர் மூர்ச்சையானதற்கு வருத்தப்படலாகாது; எப்பேர்ப்பட்டவர்களுக்கும் இடையூறு நேர்வது இயற்கை; அதனால் இராவணன் உம்மை ஜெயித்துவிடமாட்டான்; ஆதலால் நீர் வீரத்துடன் அவனை வாட்டி அவனுடைய அகங்காரத்தை அடக்கிவிட வேண்டும்" என்று சொன்னான். அதைக்கேட்டதே மறலி கொதித்தெழுந்து இராவணன்மீது ஆயிரக்கணக்கான அஸ்திரங்களைப் பிரயோகித்தான். அவற்றால் தசக்கிரீவன் மரண மூர்ச்சை யடைந்து பின் தெளிந்து கோபத்துடன் கதாயுதத்தை யெடுத்துச் சுழற்றி, அதனால் யமனுடைய சாரதியையும், இரதத்தையும் போக்கி அவன் தலையிலும் மோதினான். யமன் அந்த அடிக்குச் சற்றே தளர்ந்து, தானும் இருப்புலக்கையை யெடுத்துத் தசக்கிரீவன் தலையில் மோதினான். அதனால் அவன் மரணமூர்ச்சை யடைந்தான். அப்போது கூற்றுவன், இராவணனைத் தன் பணியாளனாகிய பெருவயிற்றனுக் கிரையாகக்கொடுக்கக் கருதி, செங்கண்ணன் என்னும் தன் தூதுவனை நோக்கி, "அடே! நீ இந்த இராவணனாகிய பத்துத்தலைப் பூச்சியைத் தூக்கிக் கொண்டுபோய்ப் பெருவயிற்றனுக் கிரையாகக் கொடுத்து விடு" என்றான். அவன் சில கிங்கரர்களோடு இராவணனைத் தூக்கப்போனான். அவன் செய்கையைக் கண்டு இராவணனுடைய சேனைத் தலைவர்களாகிய வக்கிரதந்தன், கொள்ளிக்கண்ணன், ஆள் விழுங்கி முதலியவர்கள், அந்தச் செங்கண்ணனைப் பிடித்துத் தரையில் தேய்த்துக்

கொன்று விட்டார்கள். அதன்மேல் இராவணன் மூர்ச்சை தெளிந்து அங்கே நடந்ததை யுணர்ந்து மிகுந்த கோபத் துடன் ஆயிரந் தலைகளையும், இரண்டாயிரம் கைகளையு முடைய சில இராக்ஷதர்களை நோக்கி, "நீங்கள் அந்த யமனை எடுத்துத் தின்றுவிடுங்கள்" என்று சொல்லிவிட்டுக் கதாயுதத்தினால் யமதூதர்களையும், மந்திரி முதலியவர்களை யும் அடித்து நொறுக்கி மற்றவர்களையும் சிதைத்துக்கொன்று எங்கும் பிணக்காடாக்கி விட்டான். அச்செய்கைகளைக்கண்டு யமன் பிரமையடைந்து ஒரு நாழிகை வரையில் ஒன்றுந் தோன்றாமல் நின்றான். அப்படி நின்று பின்பு தெளிந்து பர்வதாஸ்திரத்தை இராவணன்மீது எவினான். அஃது எங் கும் பர்வதங்களைச் சொரிந்து இராவணனுடைய சேனைகளை நாசப்படுத்திற்று. தசக்கிரீவன் வஜ்ராயுதத்தை யேவி அம் மலைகளை நாசப்படுத்தி வாளையேந்தி யமனிடம் நெருங்கி னான். யமன் இரண்டு அர்த்தசந்திர பாணங்களால் அவ னுடைய வில்லை யொடித்து மேலும் அக்கினியாஸ்திரங்களை விடுத்து அவன் தேகத்தைத் துளைத்துவிட்டான். அதனா லுண்டான உபத்திரவத்தைச் சகிக்கமுடியாமல் இராவணன் சஞ்சலப்பட்டான். அப்போது மகோதரன், 'இச்சமயத் தில் நீர் மனந்தளரல் கூடாது' என்று அவனுக்குக் கோப மூட்டினான். அதனால் இராவணன் ஆத்திரங்கொண்டு சூலாயுதத்தைக் கூற்றுவன் மேல் எவினான். அஃது உக்கிரமாக யமனை நோக்கி வந்தது. அதைக்கண்டு யமன், "இனி நாம் செய்வது யாது? இந்தச் சூலம் நம்மைக் கொல்லாமல் விடாதே" என்று தத்தளித்தான். அப்போது அசரீரி, "நமனே! இது சிவன் சூலமாதலால் சிவனடியார் களையும், நிராயுத பாணிகளையும் ஒன்றும் செய்யாது; ஆத லால் நீ சிவபக்தன் வேடந்தரித்து உயிரைக் காப்பாற்றிக் கொள்" என்றுரைத்தது. அவ்வாறே கூற்றுவன் ஆயுதங்

களை யெறிந்துவிட்டு விபூதி உருத்திராக்க மணிந்து சிவனைத் துதித்துக்கொண்டு அச்சூலத்திற் கெதிரில் நின்றான். சூலம் அவனைக் கண்டதும், 'அந்தப் பாவி சிவபக்தன்மேல் நம்மை ஏவினனே' என்று இராவணனைத் தூஷித்து நமனை யொன் றும் செய்யாமற் போய்விட்டது. அதன்மேல் இராவணன் மகோதரனை நோக்கி, 'இனி நாம் என் செய்யலாம்?' என்று கேட்க அவன், "உங்களில் ஒருவரையொருவர் வெல்லல் முடியாது; ஆதலின் நீர் யமனுடன் சமாதானஞ் செய்து கொள்வது நல்லது" என்றான். மாரீசனும்,பிரகஸ்தனும் 'அவ் வாறே சமாதானஞ் செய்து கொண்டு ஊருக்குப்போவது நலம்' என்றார்கள். இவர்கள் அவ்வாறு சொல்லியும் இலங் காதிபன், 'எவ்வளவு கால மானாலும் கூற்றுவனை வெல்லா மல் நான் நகரத்தின் பக்கம் திரும்பமாட்டேன்' என்று வீரத்துடனே விருக்ஷங்களைப் பிடுங்கி அவற்றால் நமனையும் அவன் சேனைகளையும் சாடினன். அச்செய்கையைக் கண்ட யமன் ஆங்காரங்கொண்டு பாசக்கயிற்றை வீசி அதனால் இராக்ஷதர்களைப் பிடித்து அடித்துச் சின்னபின்னப் படுத் தான். அச்செய்கையால் அநேகம் இராக்ஷதர்கள் இறந்தார் கள்; பலர் மருண்டோடினார்கள்; பலர் இராவணனிடம், இனி 'நாங்கள்பிழைப்பதரிது' என்று கதறினார்கள். அப் போது இராக்காலம் வந்தது.

அங்ஙனம் இரவானதும் இராவணன், தன்னிடம் முறை யிட்டவர்களை நோக்கி, "நான் என்ன செய்வேன்? எப்படி யுத்தஞ் செய்தாலும் யமனைத் தோற்கும்படி செய்தல் என் னால் முடியவில்லை; ஆயினும் அவனை நான் விடமாட்டேன்; இப்போது இராக்காலம் வந்துவிட்டபடியால் நமக்கு ஜெய முண்டாகும்; இந்த இருளில் நான் அவனோடெதிர்த்து ஒரு கைபார்க்கிறேன்; நீங்கள் பயப்படாதீர்கள்" என்று சொல்லி விட்டு உருத்திர மூர்த்திபோலக் கோபங்கொண்டு ஆர்ப்

பரித்துத் தேரேறி வில்லை வளைத்துக் கோடிக்கணக்கான கொடிய பாணங்களை மேலும் மேலும் யமனுடைய படைக ளிற் செலுத்தினான்; அவற்றால் சண்டனுடைய நால்வகைப் படைகளும் மடிந்தன; எங்கும் பிணமலைகள் குவிந்தன; இரத்த ஆறுகள் பெருக்கெடுத் தோடின; நாய்களும் பேய் களும், பருந்துகளும், கழுகுகளும் பிரேதங்களின் மாமிசங் களை உண்டு இரத்தத்தைப் பருகிக் களித்தன. இராவணன் இவ்வாறு யமன் படைகளை அழித்ததுமன்றி ஒரு கதாயு தத்தை எடுத்துச்சுழற்றிக் கூற்றுவனுடைய மண்டையில் மோதினான். அவன் அந்த அடியினால் நெஞ்சங்கலங்கி, 'இனி இந்த இராவணனை எவ்வாறு ஜெயிக்கலாம்' என்று ஏக்க முற்று நின்றான். இதற்குமுன் ஏழு நாள்கள் அந்த யுத்தம் நடந்தும் அதில் இராவணனுக்கு ஜெயமுண்டாகாதிருந்து இப்போது இராக்காலமானதால் வெற்றியுண்டாகி, நமன் மேற்கூறியபடி இளைத்துப் போனான். அவ்வாறு இளைத்த கூற்றுவன், 'நாமும் இராக்ஷதனுக்குப் பின்னிடைய லாமோ!' என்று மீண்டும் தைரியமடைந்து, 'அவனை இதோ நான் ஒழித்து விடுகின்றேன்' என்று காலதண்டத்தை யெடுத்து இராவணன்மீது பிரயோகிக்க நினைத்தான். அக் குறிப்பை யுணர்ந்த பிரமர் 'நமன் காலதண்டத்தைப் பிர யோகிப்பானானால் அதனால் கெடுதி சம்பவிக்கும்; ஆதலால் இதைத்தடுத்துவிட வேண்டும்' என்று நினைத்து உடனே யமனுக்குமுன்னே வந்து நின்று, "தர்மராஜனே! இராவ ணன் உனக்கு நிகரானவனல்லன்; அவனுக்குச் சிவபெரு மானும் நானும் சில வரங்களைக் கொடுத்திருப்பதாலும், அவன்பின்னே விஷ்ணுவின் இராமாவதாரத்தால் மடியு வேண்டியவனா யிருப்பதனாலும். நீ இச்சமயத்தில் அவன் மேல் உன் தண்டத்தைப் பிரயோகித்து அவனைக் கொல்லா மல் விட்டுவிடவேண்டும்; அதனோடு இன்னொருகாரியமும் நீ

செய்தல் வேண்டும்; அதாவது நீ போரை விட்டாலும் அவன் சண்டையொழிந்து போகமாட்டானாதலால் அவனை இவ்விடத்தினின்று மகற்றுவதற்காக நீ அவனுக்குத் தோற்றதாகச் சொல்லவேண்டும்; துஷ்டர்களை அகற்றுவதற்குத் தந்திரமான வார்த்தைகளைச் சொல்வதால் உன்னைப்போன்ற வீரருக்கெப்போதும் குறைவு நேரமாட்டாது; உனக்குள்ள கௌரவம் உன்னை விட்டகலாது" என்று கூறினார். அதற்கு யமன், 'நீங்கள் துஷ்டர்களுக்கு வரத்தைக் கொடுத்துவிட்டு அதற்காக நான் தாழ்ந்துரைக்கும்படி செய்வது அழகாயிருக்கின்றது' என்றுமனவருத்தத்தோடு சம்மதித்துத் தன் கருத்தை விடுத்து இராவணனை நோக்கி, "உனக்கு என்னுடன் போர்செய்ய இன்னும் திறமிருக்கின்றதா?" என்றான். அப்போது, 'நான் பயப்படமாட்டேன் என்று சொல்' என்று பிரமா இராவணனுக்குச் சாடைகாட்டினார். அக்குறிப்பை யுணர்ந்த இராவணன், 'உன்னைப்போல் எத்தனை நமன்கள் வந்தாலும் நான் அவர்களோடு போர்செய்வதற் கிளைக்கமாட்டேன்; நீ எனக்குத் தோற்றதாகச் சொன்னால் மாத்திரந்தான் நான் உன்னை விடுவேன்'" என்றான். சித்திரகுப்தன் காலத்தை யனுசரித்து அப்படியே யமன் சொல்லிவிடும்படி அவனுக்குக் கூறினான். அதன்மேல் கூற்றுவன் அதற்கிசைந்து இராவணனிடத்தில், 'நான் உனக்குத் தோற்றேன்; ஆதலின் நாம் இருவரும் சமாதானம் செய்துகொள்ளலாம்" என்றான். இராவணன், "காலதண்டத்தால் நாம் ஒழிந்துபோகும் நிலைமையிலிருந்தோம்; நல்ல வேளையாய் நான்முகக்கடவுள் வந்து தந்திரஞ்செய்து நம்மைக் காப்பாற்றினார்" என்று மனதிற்குள் நினைத்திருந்தும் மேலுக்கு வீரத்தைக் கைவிடாதவனைப்போல் தோள்களைத் தட்டி ஆர்ப்பரித்து 'யமன் எனக்குத் தோற்றான்! தோற்றான்!!' என்று வெற்றிச் சங்கத்தை யெடுத்து

முழக்கி மடிந்தவர்கள் போக மற்றவர்களுடன் விமானத்தி லேறி அவ்விடத்தைவிட்டுத் தன் நகரத்தின்பக்கம் திரும்பிப் போயினன். பிரமாவும் தமதிருப்பிடஞ் சேர்ந்தார். யமனும் எஞ்சி யிருந்த சேனைகளுடன் யமபுரம் போய்ச் சேர்ந்தான்.

இராவணன் நாகராஜனோடு போர்செய்தல்.

இராவணன், அவ்வாறு யமனை ஜெயித்துவிட்டோ மென்ற செருக்குடன் புறப்பட்டுப் போகும்போது தன்னு டைய மந்திரிகளை நோக்கி, "இன்னும் நாம் எதிர்க்கத் தக்கவர்கள் யாரேனு மிருக்கின்றார்களா?" என்று கேட் டான். அதற்குப் பிரகஸ்தனும் மாரீசனும், "இனி எங்கும் சண்டைக்குப் போகாமல் இலங்கைக்குத் திரும்புவதே நல் லது" என்றார்கள். அப்போது மகோதரன் இராவணனை நோக்கி, "நீர் இவர்கள் பேச்சைக் கேட்கவேண்டாம்; நாக லோகத்திற்குச் சென்று சேடனை ஜெயித்தால் உமக்கு மிக்க கீர்த்தியுண்டாகும்" என்றான். அவன் சொற்படியே இலங் காதிபன் தன் படைகளுடன் நாகலோகம் சேர்ந்து தான் அங்கே யுத்தத்திற்குச் சென்றிருந்ததை 'அறிவிக்கும்படி ஆதிசேஷனிடம் ஒரு தூதனையனுப்பினன். அத் தூதன் சென்று அச்செய்தியைச் சேடனுக்குணர்த்தினன். அதைக் கேட்டதும் சேடன் கோபித்து அவனை நோக்கி, 'அப்படியே அந்த இராக்ஷதன் யுத்தத்திற்கு வரும்படி யான் சொன்ன தாக அவனிடம்சொல்' என்று சொல்லி அத்தூதனை அனுப்பி விட்டுத் தன்னுடைய நான்கு மந்திரிகளையும் பார்த்து, "வலியச் சண்டைக்கு வந்திருக்கும் இந்த இராவணனை நாம் என்னசெய்யலாம்?" என்று வினவினன். அவர்களுள் இரண் டாவது மந்திரியும் மூன்றாவது மந்திரியும் 'நாம் யோசித்துத் தான் அவனுடன் போர் செய்யப் போக வேண்டும்" என் றார்கள். முதல் மந்திரியும் நான்காவது மந்திரியும் "உடனே

நாம் போர்புரிந்து இராவணனை ஒடுக்குவதே தக்கது" என்றார்கள். அவர்கள் சொற்படியே ஆதிசேஷன் சகல நாகப் படைகளுடன் சென்று இராவணனோடெதிர்த்தான். அவனைக் கண்டதும் இராவணன் வில்லை வளைக்க ஆரம்பித்தான். அதற்குள் சேடன் ஆயிரம் படங்களையும் விரித்துச் சீறி இராவணனுடைய சேனைகளின் மீது விஷாக்கினியைக் கக்கினான். அதனால் இராவணனுடைய தேர்த்தட்டும் கொடிச் சீலைகளும் எரிந்து அநேகம் இராக்ஷதர்களும் மடிந்தார்கள். அச்செய்கைகளைக் கண்டு இராவணன் திடுக்கிட்டு வில்லை வளைத்து எண்ணிறந்த பாணங்களைத் தொடுத்து விடுத்து அவற்றால் நாகர்களிற் பலரை அதமாக்கிவிட்டான். மற்ற நாகர்கள் அநேகம் இராக்ஷதர்களைக் கடித்துக் கொன்றார்கள். மீதியாயிருந்த இராக்ஷதர்கள் நாகர்களுக்குப் பயந்து அவர்களுடைய விஷாக்கினியின் உபத்திரவஞ் சகிக்க முடியாமல் இராவணனிடம் வந்து கதறினார்கள். தசக்கிரீவன் அவர்களுக்குத் தைரியங்கூறிவிட்டு வாளாயுதத்தை யெடுத்துக்கொண்டு கீழேகுதித்து இரண்டுவாயுவாஸ்திரங்களையும் அக்கினியாஸ்திரங்களையும் எஞ்சியிருந்த நாகர்மீது பிரயோகித்தான். அவற்றாலும் அநேகம் நாகர்கள் இறந்து போனார்கள். அதன்மேல் வாசுகி, தட்சன், கார்க்கோடகன் முதலிய நாகர்கள் சினந்து வந்து இராக்ஷத சேனைக்குள்புகுந்து விஷாக்கினியைக் கக்கிப் பற்பல இராக்ஷதர்களை மடித்து, இராவணனுடையதேகத்திலும் விஷத்தைச் சொரிந்து இராவணனும் மூர்ச்சையடையச் செய்தார்கள். அங்ஙனம் மயங்கிய இராவணன் சிறிது நேரத்தில் மூர்ச்சை தெளிந்து சிவசூலத்தை யெடுத்து அவர்மீது விடுக்கப்போனான். அதைக்கண்டு அஷ்டமாநாகர்களும், மற்ற நாகர்களும் பயந்து ஆதிசேஷனிடத்தில் ஓடி, "இராவணன் சூலத்தை யேவப் போகின்றான்; அதற்குமுன் நிற்றல் எங்

களால் முடியாது" என்று சொல்லிவிட்டு ஓடிப்போனார்கள். சேடனுடைய மந்திரிகளும், அவனிடத்தில் "சிவசூலம் நம்மை நாசப்படுத்திவிடும்; ஆதலால் அவன் அதனை ஏவு முன்னரே நாம் அவனோடு சமாதானம் செய்துகொள்வது நல்லது" என்றார்கள். சேடன் அதற்கிசைந்து மாணிக்கங்களையும், மற்ற நிதிகளையும் திறைப்பொருள்களாக எடுத்துக்கொண்டுபோய் இராவணனுக்கு முன்னே வைத்து "இலங்காதிபரே! நான் உமக்குத் தோற்றேன்" என்று சொன்னான். அதைக்கேட்டு இராவணன் மகிழ்ச்சி யடைந்து அந் நிதிகளைப் பெற்றுக்கொண்டு தன் நகரத்தை நோக்கிப் புறப்பட்டான்.

இராவணன் நிவாதகவசரோடு சண்டை செய்தல்.

அப்படிப் புறப்பட்டுப் போகும்போது தசக்கிரீவன் மகோதரனை நோக்கி, "இனி என்ன செய்யலாம்?" என்றான். உடனே மகோதரன், "தேவலோகத்தில் நிவாதகவசர்கள் என்ற மூன்றுகோடி அசுரர்கள் இருக்கின்றார்கள்; அவர்களை வெல்லல் எவராலுமாகாது; நீர் அவர்களையும் வென்றால் தான் உம்முடைய திக்குவிஜயம் சிறப்படையும்" என்றான். அந்த வார்த்தைகளைக் கேட்டதும் இராவணன் அங்கே போர்க்கெழத் துணிந்தான். அதையுணர்ந்த பிரகஸ்தனும், மாரீசனும், "நீ யேன் இராவணனுக்கு வம்பிழுத்து விட்டு வேடிக்கை பார்க்கின்றாய்" என்று மகோதரனை நிந்தித்தார்கள். மகோதரன் அவர்களைச் சினந்து இராவணன் முகத்தைப் பார்த்தான். அப்பார்வையானது 'என்னை இவர்கள் இங்ஙனம் நிந்திப்பது உமக்குச் சம்மதிபாயிருக்கின்றதா?' என்று அவன், இராவணனைக் கேட்கும் குறிப்பை விளக்கிற்று. அதனால், இராவணன், அவன்மீது பக்ஷங்காட்டி "என்க்கிதம்புரியும் மகோதரனை நீங்கள் நிந்தித்தால் உங்களை

நான் தண்டிப்பேன்" என்று மாரீசனையும் பிரகஸ்தனையும் பயமுறுத்தினன். அவர்கள் அதற்குப் பயந்து பேசாம லிருந்துவிட்டார்கள். அதன்மேல் இராவணன் சகல பரிவா ரங்களோடும்புறப்பட்டுப்போய் நிவாதகவசர் பட்டணத்தை யடுத்து மகோதரன்சொற்படி, தான் போர்க்குச்சென்றிருந் ததை அவ்வசுரர்களுக்குத் தெரிவிக்கும்படி அக்கினிக்கண் ணன் என்பவனை அவர்களிடமனுப்பினன். அவன் அவ்வாறே சென்று நிவாதகவசர்களிடம் அந்த இராவணனுடைய செய்கையையும் விருத்தாந்தத்தையுங் கூறினன். அவற் றைக் கேட்டதும் அவர்கள் சினந்து, 'நாங்களும் அவனுடன் யுத்தஞ் செய்ய ஆயத்தமாயிருக்கின்றோம்; அவனுக்கு வல் லமை யுண்டானல் அவன் இங்கே வரலாம்' என்று அத் தூதுவனிடம் கூறினர்கள். அவன் திரும்பிவந்து அவர்கள் சொன்னதை இராவணனிடம் கூறினன். இராவணன் அதைக் கேட்டவுடன் அவர்கள் மிகுந்த வல்லமையுடைய வர்களாயிருப்பார்கள் என்ற ஓர் எண்ணம் அவனுக்குதித் தது. அதனல் அவன், 'அவர்களோடு நாம் போர்செய்யச் செல்லலாமா திரும்பிவிடலாமா' என்று யோசித்தான். அப் போது அவன் எண்ணத்தையுணர்ந்த மகோதரன் அவனுக் குத் தைரியமான வார்த்தைகளைக் கூறி ஊக்கத்தை உண் டாக்கினன். அதன்மேல் தசக்கிரீவன் தைரியங்கொண்டு போருக்கு ஆயத்தமாய்ச் சங்கத்தையெடுத்து முழக்கினன்; மற்ற இராக்ஷதர்களும் விற்களை வளைத்துக் குணத்தொனி செய்தார்கள். அந்த ஓசைகளைக் கேட்டதும் நிவாதகவசர் கள் கோபங் கொண்டு, முன்னேபோய் இராவணன் சேனை களோடு போர் செய்யும்படி தங்கள் சேனைகளை அனுப்பினர் கள். அப்படைகள் அவ்வாறே வந்து இராக்ஷத சேனைகளு டன் எதிர்த்தன. இரண்டு படைகளுள்ளும் மும்முரமான

சண்டை நடந்தது. அந்தப்போரில் இரண்டு பக்கத்திலும் அளவற்ற சேனைகள் மாண்டு எங்கும் இரத்த வெள்ளம் பெருகிற்று. இரண்டு சேனைகளிலும் எட்டிலொரு பாகமே மிஞ்சியிருந்தது. எஞ்சிய சேனைகளில் ஒவ்வொருவரும் தனித் தனி எதிர்த்து இளைத்து 'இனிப் போர் செய்தல் எங்களால் முடியாது' என்று தங்கள் தங்கள் தலைவர்களுக்குத் தெரிவிக்க நினைத்துத் திரும்பிப் போயினார்கள். அங்ஙனம் சென்ற அவர்களுள் இராக்ஷதர்கள் இராவணனிடத்தில், 'அந்த அசுரர்களோ டெதிர்த்தல் எங்களால் முடியாது' என்று சொன்னார்கள். இராவணன் அவர்களுக்குத் தைரிய வார்த்தைகள் கூறிக்கொண் டிருந்தான். அசுர சேனாவீரர்களும் நிவாதகவசர்க ளிடத்தில், "எங்களால அந்த இராக்ஷதர்களோடு போர் செய்தல் முடியாது" என்று கூறினார்கள். அதைக் கேட்டதும் அவர்களுடைய மந்திரிகள் கோபத்துடன் புறப்பட்டுவந்து ஆயுதங்களைப் பிரயோகித்து இராவணனுடைய சேனைகளை யெல்லாம் சின்னாபின்னப் படுத்தினார்கள். அவர்களின் செய்கையைக் கண்டு இருபது வெள்ளம் இராக்ஷதர்கள் அவர்களுடன் எதிர்த்து அவர்களுடைய ஆயுதங்களை யெல்லாம் நாசப் படுத்திவிட்டு அவர்களுள் அளவற்ற அசுரர்களைக் கொன்று குவித்து அந்த அசுரப் பிணங்களை யெல்லாம் வாரி நாலாதிக்குகளிலும் எறிந்தார்கள். அந்தப் பிரேதங்களில் பல தேவர்களுடைய கற்பகச் சோலையில் வீழ்ந்து நிறைந்தன.

அப்போது தேவர்களும், முனிவர்களும் சித்தர்வித்தியாதரர்களும் தேவேந்திரனிடத்திற்போய் "ஐயா! அமராதிபரே! இராவணன், நிவாதகவசரோடெதிர்த்து மிகுந்தசண்டையை உண்டாக்கியிருப்பதால் அந்தப் போரில் அவனைச் சார்ந்த இராக்ஷதர்கள் நிவாதகவசரைச் சார்ந்த அசுரர்களைக் கொன்று வாரி யெறிகின்றார்கள். இதையுணர்ந்தால் அந்த

நிவாதகவசர்கள் வந்து இராவணனோ டெதிர்ப்பார்கள்; அவர்கள் பொல்லாதவர்களாதலின், அவனைத் தொலைத்து நம் பக்கம் திரும்பினாலும் திரும்புவார்கள்; இந்த இராவணன் பல விதத்திலும் நமக்கு இடையூறுகளையே செய்து வருகின்றானே; நாம் இனி என்செய்யலாம்" என்று முறையிட்டார்கள். இந்திரன் அவர்களை நோக்கி, "அந்த இராவணன் பிரமா கொடுத்த வரத்தாலும், மகோதரனுடைய மித்திரபேத வார்த்தையாலும் அகங்காரங் கொண்டு துள்ளித் திரிகின்றான்; எனினும் சீக்கிரத்தில் விஷ்ணுமூர்த்தியால் ஒழிந்து போவான்; இந்தப் போரில் அவர்களில் ஒருவரையொருவர் வெல்லல் முடியாது; பிரமாவந்து அவர்களைச் சமாதானப் படுத்திவிடுவார்; ஆதலால் நமக்கொரு ஆபத்தும் வராது; நீங்கள் பயப்பட வேண்டாம்" என்று அவர்களுக்குத் தைரியங் கூறி அவர்களை அனுப்பிவிட்டான்.

இவர்கள் செய்தி யிப்படியிருக்க, முன்னுரைத்தபடி இராக்ஷதர்கள் அசுரர்களைக் கொன்று வாரி யெறிந்த பின்பு நிவாதகவசர்களுடைய மந்திரிகள் மீதியாயிருந்த சேனைகளுடன் வீராவேசங்கொண்டு இராக்ஷதர்களுட னெதிர்த்துப் போர் புரிந்தார்கள். அப்போது பிரகஸ்தன், விருபாக்ஷன், மாரீசன் முதலியவர்கள், "இதுவரை நிவாதகவர்களுடைய மந்திரிகள் போராடுகின்றார்களே யன்றி அவர்கள் வரவில்லை; ஆதலின், நாம் இந்த மந்திரிகளை வாட்டிவிட்டால் அதன்மேல் அவர்கள் வருவார்கள்" என்று அந்த மந்திரிகளுடன் மும்முரமாக எதிர்த்து ஆயுதங்களைப் பிரயோகித்தார்கள். அவர்கள் வீரத்தோடு அந்த ஆயுதங்களைக் கண்டித்து இராக்ஷத மந்திரிகளைத் தளரச் செய்து அவர்களுடைய சேனைகளையும் சின்னபின்னப் படுத்தினார்கள். அதைக்கண்ட இராவணன் தன் மந்திரிகளுக்குப் பற்பல ஆயுதங்களையும் சேமத் தேர்களையும் உதவியாகக் கொடுத்

தான். அவர்கள் அவற்றைப் பெற்றுக்கொண்டு அசுரமந்திரிகள் மீது அநேகம் கொடிய பாணங்களைப் பிரயோகித்தார்கள். அவர்களும் இராக்ஷத மந்திரிகளின் மேல் அளவற்ற விஷக்கணைகளை எவினார்கள். இரண்டு பக்கங்களிலுமுள்ள மற்ற வீரர்களும் அம்புகளைச் செலுத்தினார்கள்; இவ்வாறு சிறிது நேரம் அஸ்திர யுத்தம் நடந்தபின்பு இரு திறத்தாரும் கதாயுத்தஞ் செய்யத் தொடங்கினார்கள். அதில் இரண்டு பக்கங்களிலும் அதிக சேதங்களுண்டாயின. பின்னர் இருதிறத்தாரும் இருப்புலக்கைகளைக் கொண்டு ஒருவரையொருவர் மோதினார்கள். அந்தச் சண்டையிலும் இரண்டு பக்கத்திலும் அநேகர் சாய்ந்தனர். அத்தருணத்தில் இராவணன்வந்து ஆயிரக்கணக்கானபாணங்களைத்தொடுத்து அசுரமந்திரிகளுடைய தேர்களையொழித்து அவர்கள் மீதும் அம்புகளையேவி அவர்களுக்குக் கலக்கமுண்டாகச்செய்தான். அவர்கள் அங்ஙனம் கலங்கியும் உடனே தெளிந்து வேறு தேர்களிலேறிக் கோடிக்கணக்கான பாணங்களை இராவணன் மீது எவினார்கள். அவன் ஆத்திரங்கொண்டு எண்ணிலடங்காத அம்புகளை மேலும் அவர்கள் மீது எவினான். அப்போது அசுர மந்திரிகள் சில அம்புகளால் அவற்றைச் சிதைத்து விட்டுப் பின்னரும் பல அர்த்தசந்திர பாணங்களை எவி இராவணனுடைய வில்லையும் கவசத்தையும் போக்கித் தேகத்தையும் சல்லடைக் கண்களாகத் துளைத்தார்கள். அதனால் அவன் மூர்ச்சையாகித் தேரின் மீது சாய்ந்தான். அத்தருணத்தில் நிவாதகவசருடைய மந்திரிகள் அக்கினியாஸ்திரத்தையேவி அந்த இராவணனுடைய சேனையிற் பாதியை அழித்து விட்டார்கள்; மேற்கூறியபடி மயங்கிய தசக்கிரீவன் சிறிது நேரத்திற்குள் மூர்ச்சை தெளிந்து மகோதரனை அழைத்து அவனிடத்தில், "நம்முடைய சேனைகளில் முந்நூறு வெள்ளம் படைகள் அழிந்து போய் விட்டன; அசுரர்

கள் பலமுடையவர்களா யிருக்கின்றார்களே; இனி நாம் என்ன செய்யலாம்?" என்று வினவினான். அதற்கு மகோதரன் "நீர் இப்போது இளைத்தல் கூடாது; யுத்தத்தை நடத்தும்; விரைவில் உமக்கு ஜெயமுண்டாகும்" என்று சொன்னான். அதனால் இராவணன் மீண்டும் தைரியங் கொண்டு உக்கிரத்துடன் அசுரரோ டெதிர்த்து ஓர் இடியாஸ்திரத்தையும், அக்கினியாஸ்திரத்தையும், அநேகம் அர்த்த சந்திர பாணங்களையும் அவர்கள் மீது பிரயோகித்தான். அவைகள் வேகமாகச் சென்று நிவாத கவசரின் மந்திரிகளுடைய சேனைகளை நாசமாக்கி அவர்களின் மார்பிலும் பாய்ந்தன. அவற்றால் அவர்கள் மூர்ச்சை யடைந்தார்கள். அவர்களின் படைகளில் எஞ்சிநின்றவர்கள் ஓடிவிட்டார்கள்.

அதன்மேல் நிவாதகவசர்களுடைய மந்திரிகள் மூர்ச்சைதெளிந்து திரும்பிப்போய்த் தங்கள் தலைவர்களிடத்தில், "இனி இராக்ஷதர்களோடெதிர்த்தல் எங்களால் முடியாது" என்று கூறினார்கள். அதைக்கேட்டவுடன் மூன்று கோடி நிவாத கவசர்களும் சினந்து யுத்தகோலங் கொண்டு ஆயிரஞ் சிங்கங்கள் பூட்டிய வெண்கல இரதங்களிலேறி மந்திரிகளுடனும் எண்ணிறந்த படைகளுடனும் போர்ப் பறைகள் முழங்கப் புறப்பட்டு யுத்தகளம் போய்ச் சேர்ந்தார்கள். இராவணன் அவர்களைக் கண்டு மனங்கலங்கி மகோதரனை நோக்கி, "மந்திரி! நிவாதகவசர்களோ மிக்க பலசாலிகளா யிருக்கின்றார்கள். மேலும் அவர்களுடன் மிகுந்த படைகள் வருகின்றன; நம்முடைய சாமர்த்தியம் அவர்களிடம் செல்லாதுபோ லிருக்கின்றதே; இனி நாம் என்ன செய்யலாம்?" என்றான். அப்போது பிரகஸ்தன், மாரீசன் முதலியவர்கள் இராவணனிடத்தில், "நீ மகோதரன் பேச்சைக் கேட்டு வகை தெரியாமல் வந்து இந்தச்

சங்கடத்தில் மாட்டிக்கொண்டாய்" என்று சொல்லி மகோதரனையும் நிந்தித்தார்கள். உடனே மகோதரன் இராவணனை நோக்கி, "இலங்காதிபரே! இவர்களெல்லாம் உம்முடைய பலத்தை அறியாமல் பேசுகின்றார்கள்; இந்த நிவாதகவசர்கள் உமக்கு நிகராக மாட்டார்கள்; நீர் தைரியத்தை விடாமல் யுத்தஞ்செய்யும்; ஜெயமுண்டாகும்" என்று அவன் மனதைச் சரடு முறுக்குவதுபோல் முறுக்கி விட்டான். அதன்மேல் அவன் தைரியங் கொண்டு போய் நிவாதகவசர்களோ டெதிர்த்தான்.

அவர்களும் இராவணனும் அஸ்திரப் பிரயோகஞ் செய்ய ஆரம்பித்தார்கள். முதல் யுத்தத்திலேயே இராவணன் கொடிய பாணங்களால் அவர்களுடைய அஸ்திரங்களைப் போக்கிச் சேனைகளில் பெரும் பாகத்தைச் சின்னபின்னப்படுத்தி அவர்கள் தேகத்தையும் புண்படுத்தி விட்டான். அதனால் அவர்கள் ஆத்திரங்கொண்டு ஒரு அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகித்து இராவணனுடைய நூறு வெள்ளம் சேனைகளை நாசப்படுத்தி விட்டார்கள். அதைக் கண்டு தசக்கிரீவன் அநேகங் கோடி வருணாஸ்திரங்களையேவி அவர்கள் விடுத்த அக்கினியாஸ்திரத்தைக் கண்டித்து மேலும் அளவற்ற அர்த்தசந்திர பாணங்களைத் தொடுத்து அவர்களுடைய தேர்களையும், விற்களையும், கவசங்களையும் போக்கித் தேகங்களையும் சல்லடைக்கண்களாகத் துளைத்து விட்டான். அதனால் அவர்களெல்லோரும் மூர்ச்சையடைந்தார்கள். அத்தருணத்தில் இலங்காதிபன் அநேகம் கதாயுதங்களைச் சுழற்றியெறிந்து அவர்களுடைய சேனைகளை நாசப்படுத்தி, மேலும் நூறுகோடி அர்த்தசந்திர பாணங்களையேவி அவற்றால் அந்த மூன்றுகோடி அசுரர்களின் சிரங்களையும் அறுத்துத் தள்ளினான். அவர்கள் அறுபட்டசிரம் முளைக்கத்தக்க வரப்பிரசாதிக ளானபடியால் மீண்டும் அச்

சிரசுகள் முளைத்தன. அதன்மேல் அவர்கள் வீராவேசத்தோடு இராவணன் மீது வேலைப்பிரயோகித்தார்கள். இராவணனும் அதற்கெதிராக வேலாயுதத்தைச் செலுத்தினன். இரண்டு வேல்களும் மோதிக்கொண்டு அக்கினியைச் சொரிந்தன. பின்னர் இருதிறத்தாரும் சிறிது நேரம்வரை ஒருவர்மீ தொருவராகக் கொடிய அம்புகளை மாறிமாறிப் பிரயோகித்தார்கள். முடிவில் நிவாதகவசர்கள் பத்து அர்த்த சந்திர பாணங்களைப் பிரயோகித்து இராவணனுடைய பத்துத்தலைகளையும் அறுத்துத் தள்ளினார்கள். அதைக்கண்டு தேவர்கள் சந்தோஷித்தார்கள்; இராக்ஷதர்கள் கலங்கினார்கள்; அசுரர்கள் ஜெயங்கொண்டோமென் றார்ப்பரித்தார்கள். அப்போது இராவணன் பெற்றவரத்தால் அறுபட்ட அவனுடைய தலைகள் மீண்டும் முளைத்தன. அச்செய்கையைக் கண்டு நிவாதகவசர்கள் ஆச்சரியப்பட்டு, 'இது மாயையாயிருக்கு'மென்று மேலும் பன்முறை அச்சிரசுகளை அறுத்தார்கள். அவைகள் அறுக்க அறுக்க முளைத்துக்கொண்டேயிருந்தன. அதன்மேல் அவர்கள் இராவணனைப் பார்த்து 'இவன் அறுபட்ட தலை முளைக்கும்படி வரம்பெற்றிருக்கிறான் போலும்' என்று மனஞ்சலித்து நின்றார்கள். அப்போது இராவணன் இனி என்ன விளையுமோ வென்றஞ்சி அவ்வச்சக்குறிப்பு தன் முகத்தில் விளங்கும்படி மகோதரன் முகத்தை நோக்கினன். மகோதரன், அக்குறிப்பையுணர்ந்து முடிவான சமயத்தில் நீர் மன மிளைக்க வேண்டாம்; இனி 'வாளாயுதத்தைப் பிரயோகித்தால் உமக்கு ஜெயமுண்டாகும்' என்று அவனுக் குரைத்தான்.

அதைக்கேட்டவுடனே இராவணன், தைரியங்கொண்டு சிவபெருமானருளால் பெற்ற வாளாயுதத்தை எடுத்து அபிமந்திரித்து அந்த நிவாதகவசர்கள்மீது விடுத்தான். அந்த வாள் மகா உக்கிரத்துடன் புறப்பட்டு அந்த

மூன்றுகோடி நிவாதகவசர்களுடையை சிரங்களையும் அறுத்துத் தள்ளிவிட்டு ஆகாய கங்கையில் ஸ்நானஞ் செய்து இராவணனிடம் வந்து சேர்ந்தது. அப்பொழுதே அசுரர்களுக்கு அறுபட்ட சிரசுகள் மீண்டும் முளைத்துக் கொண்டன. அச்செய்கையைக்கண்ட மகோதரன் அவர்களை அதிசயத்துடன் பார்த்து 'இவர்கள் அறுபட்ட சிரம்முளைக்க வரம் பெற்றிருக்கின்றார்கள்; ஆதலின் இனி நீர் இவர்கள்மீது பிரமாஸ்திரத்தைப் பிரயோகித்து விடும்' என்று இராவணனுக்குச் சொன்னான். அவன் அவ்வாறே அதனை ஏவினான். அதைக்கண்டு நிவாதகவசர்களும் அதற்கெதிராகப் பிரமாஸ்திரத்தைப் பிரயோகித்தார்கள். அந்த இரண்டு அஸ்திரங்களும் இரண்டு வகைப் படைகளையும் நாசப்படுத்திக்கொண்டிருந்தன. அச்செய்கைகளால் எங்கும் பிணங்களே குவிந்துவிட்டன. அந்த அஸ்திரங்கள் சேனைகளை இவ்வாறு ஒழித்ததுமன்றி உலகங்களையும் தகிக்க ஆரம்பித்தன.

அப்போது பிரமதேவர், அவற்றின் விபரீதச் செயல்களை யுணர்ந்து "இந்த யுத்தம் விபரீதமாய் வந்துமுடிந்தது; இதை நிறுத்தாவிட்டால் உலகங்களுக்குக் கேடு சம்பவிக்கும்" என்று உடனே சென்று, இராவணாதி இராக்ஷதர்களையும் நிவாதகவசர்களையும் நோக்கி, "உங்களுடைய பிரமாஸ்திரங்களால் உலகங்களுக்குக் கேடு சம்பவிக்கும்போலிருக்கின்றது; இவ்வாறு இவற்றால் நீங்கள் உலகங்களைக்கெடுப்பது சரியல்ல ; நீங்கள் யுத்தத்தை நிறுத்துங்கள் ; சண்டை செய்தாலும் ஒருவரை யொருவர் வெல்லமாட்டீர்கள்" என்று சொன்னார். அதற்கு நிவாதகவசர்கள், "இராவணன் முதலில் தன் அஸ்திரத்தை வரவழைத்துக் கொண்டால் பின்னர் நாங்களும் எங்கள் அஸ்திரத்தை வரவழைத்துக் கொள்கிறோம்" என்று சொன்னார்கள். அதைக் கேட்டுப்

பிரமதேவர் இராவணனிடம் சென்று அவனை நோக்கி, "அப்பா! இந்த நிவாதகவசர்கள் உன்னால் அழியமாட்டார்கள்; துவாபர யுகத்தில் நரநாராயணர்களாகிய அருச்சுனனாலும் கிருஷ்ணனாலும் அழிவார்கள்; ஆதலால் நீ வீணே யுத்தஞ் செய்யாமல் உன் பிரமாஸ்திரத்தை வரவழைத்து யுத்தத்தை நிறுத்திக்கொள்" என்றார். அதற்கு இராவணன், "அவர்கள் வாக்கினால் எனக்குத் தோற்றதாகச் சொன்னால் மாத்திரம் நான் சண்டையை நிறுத்துவேன்" என்றான். பிரமதேவர் இதேது சங்கடமா யிருக்கிறதென்று நிவாதகவசர்களிடம் சென்று, "இராவணன், விஷ்ணுவின் இராமாவதார காலத்தில் ஒழிவானே யன்றி இப்போதுங்களால் ஒழிய மாட்டான்; ஆதலால் உலக நன்மையைக் கருதி நீங்கள் அவனுக்குத் தோற்றதாகச் சொல்லி விடுங்கள்; அதனால் உங்களுக்கொரு குறைவுமில்லை" என்று இதமான வார்த்தைகளைச் சொல்லி அவர்களைச் சரிப்படுத்தி இராவணன் சொன்னபடியே அவர்களை சொல்லச்செய்து இருகக்ஷியாரையும் சமாதானப்படுத்தினார். பின்னர் இருதிறத்தாரும் தங்கள் தங்கள் பிரமாஸ்திரங்களை வரவழைத்துக்கொண்டார்கள். அதன்மேல் இராவணன் சந்தோஷித்து நிவாதகவசருடைய மாயாவித்தைகளைத் தனக்குக் கற்றுக்கொடுக்கும்படி அவர்களிடம் கேட்டான். அவர்கள் அதற்குச் சம்மதித்து அவனைத் தங்களுடைய பட்டணத்திற்கு அழைத்துக் கொண்டுபோய் ஒரு வருஷம்வரை வைத்திருந்து அவனுக்கு விருந்துகள் செய்து தங்களுடைய தொண்ணூற்றொன்பது மாயா வித்தைகளையுங் கற்றுக்கொடுத்து மரியாதையுடன் அவனை அனுப்பினார்கள். இராவணன் அளவற்ற ஆனந்தத்துடன் புஷ்பக விமானத்திலேலேறித் தன் படைகளோடு அவ்விடத்தை விட்டுப்புறப்பட்டு இலங்கைநோக்கி வந்தான்.

காலகேயருடன் தசக்கிரீவன் போர் செய்தல்

அவ்வாறு வரும்போது அந்த இராவணன் மந்திரிகளை நோக்கி, "அமைச்சர்களே! இனி நாம் இலங்கைக்குச் செல்லலாமா, வேறிடஞ் செல்லலாமா" என்றான். அதற்கு மாரீசனும் பிரகஸ்தனும் 'இலங்கைக்குச் செல்வதுவே சரி' யென்று சொன்னார்கள். அப்போது இராவணன் குடிக்குச் சனியாய்த் தோன்றிய மகோதரன் அவனைநோக்கி, "ஐயா! இலங்காதிபரே! உம்முடைய தங்கைவாழும் பட்டணத்தில் அறுபதினாயிரம் காலகேயர்களிருக்கின்றார்கள்; அங்குப் போய் அவர்களை ஜெயித்து உமது தங்கை சூர்ப்பனகியையும் அவள் கணவன் வித்துச்சிங்கனையும் அழைத்துக் கொண்டு போனால் நமக்குக்கௌரவமாகும்" என்றுசொல்ல, இராவணன் 'அந்தப் பட்டணம் எங்கே யிருக்கின்றது?' என்று அந்த மகோதரனிடம் கேட்டான். அவன், "அஃது அமராவதிக் கருகிலிருக்கின்றது" என்று சொன்னான். அதன்மேல் இராவணன்; "அந்தக் காலகேயரை ஜெயித்தல் நம்மால் முடியுமோ?" என்றான். மகோதரன், "நாம் அவர்களை எளிதில் ஜெயித்து விடலாம்' என்றான். அதைக்கேட்டு மாரீசன் முதலியவர்கள், 'அங்கே நாம் செல்வது நல்லதன்று' என்றார்கள். அதற்கு இராவணன் 'நீங்கள் மகோதரன் பேச்சுக்குக் குறுக்கே பேசாதீர்கள் என்று உங்களுக்கு நான் எத்தனைமுறை சொன்னாலும், நீங்கள் பேசாதிருக்கிறீர்களில்லை; இனி ஏதாவது பேசினால் உங்களுக்குக் கெடுதிசம்பவிக்கும்' என்று அவர்களைச் சீறினான். அக்கோபத்திற்கஞ்சி அவர்கள் அதற்குமேல் ஒன்றும் பேசாதிருந்து விட்டார்கள். அதன்மேல் தசக்கிரீவன் மகோதரன் சொற்படி சகலபடைகளுடனும் சென்று காலகேயருடைய பட்டணத்துக் கருகிலிறங்கித் தன்னுடைய படையெடுப்பை

அவர்களுக்குத்தெரிவிக்கும்படி தன் தூதுவனாகிய தூமகேது வென்பவனை அவர்களிடம் அனுப்பினான். அவன் அவ்வாறே அவர்களிடம்சென்று இராவணனுடைய வீரப்பிரதாபச் செயல்களையும், அங்கே யுத்தத்திற்குப் போயிருந்ததையும் தெரிவித்தான். அவர்கள், அச்சமாசாரத்தை கேட்டுச் சினந்து, 'அப்பேர்ப்பட்டவனை அடக்க நாங்கள் ஆயத்தமா யிருக்கின்றோம்; அவன் யுத்த பூமிக்கு வரும்படி நீ அவனி டஞ்சொல்' என்று அத்தூதுவனிடம் கூறினார்கள். அவன் திரும்பி வந்து இராவணனிடம் அவர்கள் சொல்லியதைச் சொன்னான். அதைக்கேட்டதும் அந்த இராவணன் போர்க் கோலங்கொண்டு படைகளுடன் யுத்தகளம்போய்ச் சேர்ந் தான். அப்போது காலகேயர்கள் தங்கள் மந்திரிக ளிடத் தில், "அகங்காரத்தோடு போர்க்கு வந்திருக்கும் அந்த இரா வணன் விஷயத்தில் நாம் என்ன செய்யலாம்?" என்று கேட்டார்கள். அதற்கு அம்மந்திரிகள், "அந்த இராவணன், சிவபெருமானுடைய வரத்தினாலும் பிரமாவின் வரத்தினா லும் வல்லமை பெற்றுச் சகலரையும் அடக்கி வருகின்றா னென்று இங்குள்ள அவன் மைத்துனன் வித்துச்சிங்கன் சொல்ல அவனுடைய வீரத்தை நாங்கள் கேட்டிருக்கின் றோம்; அத்தகைய வலிமை பெற்ற றிருப்பதனாலேயே அவன் அகங்காரங் கொண்டு இங்கும் வந்திருக்கின்றான்; ஆயினும், அவனை நாம் இலகுவில் விடக்கூடாது; நன்றாக வாட்டி யனுப்பவேண்டும்" என்றார்கள். அவர்களுடைய அபிப்பிராயத்திற் கிணங்கி உடனே காலகேயர்கள் நால் வகைப் படைகளுடன் புறப்பட்டுப்போய் இராவணனுடன் எதிர்த்தார்கள். இரண்டு படைகளும் வீராவேசத்தோடு யுத்தம் புரிந்தன. அச்சண்டையில் இரண்டு பக்கத்திலும் அநேகம் இரதங்களும் குதிரைகளும் யானைகளும் அழிந்தன. எண்ணிறந்த வீரர்கள் ஒழிந்தார்கள். அதன்மேல் காலகேய

ருடைய மந்திரிகள் பற்பல அஸ்திரங்களைப் பிரயோகித்து இராக்ஷத சேனைகளை வாட்டினார்கள். பிரகஸ்தன் முதலிய வர்களும் காலகேயருடைய சேனைகளை நாசஞ் செய்தார்கள். மாரீசன், விருபாக்ஷன் முதலியவர்களும் கதாயுதங்களால் காலகேயருடைய மந்திரிகளை மோதியடித்தார்கள். அந்த அடியினால் அவர்கள் இளைத்தோடிக் காலகேயரிடம் அவர் களுடைய கொடுமையைக் கூறி வருந்தினார்கள். அதனால் அவர்கள் வேகங்கொண்டெழுந்து போய் இராவணனுக்கு முன்னே வில்வளைத்து நின்று அவனைப் பலவாறு நிந்தித்து வீரமொழிகளைக் கூறினார்கள். அப்போது இராவணன் எண் ணிறந்த பாணங்களைப் பிரயோகித்து அவர்களுடைய படை களையும், ஆயுதங்களையும், வாகனங்களையும் நாசப்படுத்தி அவர்களும் இளைக்குமாறு செய்துவிட்டான்.

அத்தருணத்தில் மகோதரன், மேலும் அவர்கள்மீது வாளாயுதத்தைப் பிரயோகிக்கும்படி இராவணனுக்குக் கண் சாடை காட்டினான். அவன் அவ்வாறே சிவனுடைய வாளைப் பிரயோகிக்க, அஃதவர்களுடைய சிரங்களை யறுத்துவிட் டது. அவர்களும் அறுந்தசிரம் முளைக்கத்தக்க வரப்பிரசாதி களானதால் அறுபட்ட அவர்களுடைய சிரங்களெல்லாம் உடனே முளைத்துக் கொண்டன. அதன்மேல் இராவணன், அச்சிரங்கள் முளைத்ததற்கு வியப்பும் சினமும் அடைந்து அவர்கள்மீது பிரமாஸ்திரத்தை விடுத்தான். அவர்களும் பிரமாஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்து அதனைத் தடுத்து விட்டு மேலும் அநேகம் அர்த்தசந்திர பாணங்களை யேவி இராவணனுடைய சிரங்களையறுத்தார்கள். அவைகளு மறு படியும் முளைத்துக்கொண்டன. அதன்மேல் அவர்கள் வேலாயுதத்தை அவன்மீது செலுத்தினார்கள். தசக்கிரீ வனும் சிவனருளால் பெற்ற வேலையெடுத்து அதனெதிரில் விடுத்தான். அந்த இரண்டுவேல்களும் மோதிக்கொண்டு

எங்கும் அக்கினிச் சுவாலைகளைச் சொரிந்தன. அவற்றால் சகல உலகங்களிலும் உபத்திரவமுண்டாயிற்று.

அந்த உபத்திரவத்தைச் சகிக்க முடியாமல் தேவர்கள் முதலிய சகலரும் சிவபெருமானிடம் போய்ச் சொல்லி முறையிட்டார்கள். அதற்கு அவர், "நாம் அந்த இராவணனுடைய தவத்திற்கிரங்கி அவனுக்குச் சில வரங்களைக் கொடுத்து விட்டோம்; அதனால் அவன் அகங்கரித்து இவ்வாறு உலகங்களுக்கெல்லாம் துன்பத்தைச் செய்கிறான்; எனினும், பின்னே தசரதகுமாரரால் ஒழிந்து போவான்; இப்போது நீங்கள் பிரமாவினிடம் சென்று உங்கள் குறையைச் சொல்லுங்கள்; அவர் உங்கள் துன்பமகல ஏதேனுமோருபாயஞ் செய்வார்" என்று கூறினார். அப்படியே அவர்கள் பிரமதேவரிடம் சென்று தங்களுக்கு நேர்ந்த துன்பத்தைச் சொல்லி முறையிட்டார்கள். அவர் அவர்களை நோக்கி, "நானும் அந்த இராவணனுக்கு வரங்கொடுத்திருக்கின்றபடியால் இப்போதவனை ஒன்றுஞ் செய்ய வியலாது; எனினும் அந்தக் காலகேயரையும் அவனையும் சமாதானப்படுத்தி யுத்தத்தை நிறுத்தி உங்கள் துன்பத்தை நீக்குகிறேன்; நீங்கள் அந்த இராவணனை ஒழிக்க வேண்டினால் அதனை, என் பிதாவாகிய விஷ்ணுமூர்த்தியிடம் சொல்லுங்கள்; அவர் உங்களிடம் அதற்குத் தக்க மார்க்கங்கூறுவார்" என்று சொன்னார். அப்படியே அவர்கள் விஷ்ணுமூர்த்தியினிடம் சென்று தங்கள் குறைகளைச் சொன்னார்கள். அதற்கவர், "இராவணனுக்கோ ஆயுளில் பாதி கழிந்து விட்டது; மீதியிருக்கும் பாதியும் சீக்கிரம் முடிந்துவிடும்; நாம் இராமாவதாரத்தில் அவனைச் சங்கரித்து விடுவோம்; அதுவரை நீங்கள் சற்று பொறுமையோடிருங்கள்" என்று சொன்னார். அவ்வார்த்தைகளைக் கேட்டுத் தேவர்களும், மற்றவர்களும் 'இப்போது அவசரத்

துக்கு எவராலும் உதவியேற்படுவதாயில்லை' என்று விஷ்ணுமூர்த்தியிடம் வணங்கி விடைபெற்றுக்கொண்டு தங்களிருப்பிடங்கட்குப் போய்விட்டார்கள். இவர்கள் செய்கை அங்ஙனமிருப்ப, யுத்தகளத்தில் நின்ற இராவணன், அதனைத் தூதுவரால் உணர்ந்து அத்தேவர்கள்மீது சினங்கொண்டு தலையசைத்து மகோதரனை நோக்கி, "தேவர்கள் சிவன் முதலியவர்களிடத்தில் முறையிட்டதில் அவர்களுக்கு அனுகூலமொன்றும் ஏற்படவில்லைபோ லிருக்கிறது; அதனால் தான் தேவலோகம் நிர்ச்சந்தடியா யிருக்கின்றது" என்று சொன்னான். அதற்கு மகோதரன், "உம்முடைய சங்கதியென்றால் யார்தான் பயப்படமாட்டார்கள்!" என்று அவனை உற்சாகப்படுத்தினான். அதனால் இராவணன் துள்ளியெழுந்து மேலும்மேலும் அளவற்ற ஆயுதங்களைப் பிரயோகித்து மீதியாயிருந்த எதிரிகளின் சேனைகளை வாட்டி அச்சேனைகளுடன் கலந்துவந்து யுத்தஞ்செய்த சூர்ப்பனகியின் புருஷனான வித்துச் சிங்கனையும் தாக்ஷணியமின்றிக் கொன்று வீரகர்ஜ்ஜனை புரிந்து நின்றான். அத்தருணத்தில் பிரமதேவர் வந்து இராவணனுக்கும் காலகேயருக்கும் சமாதான வார்த்தைகள் கூறி வெகு பிரயாசைப்பட்டு அச்சண்டையை நிறுத்தி அவர்களைச் சமாதானப் படுத்திக் காலகேயர்கள் இராவணனுக்குத் திறைசெலுத்தும்படி செய்தார். அதன்மேல் இராவணன் தன் படைகளுடன் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுச் சந்தோஷித்துச் சென்று ஆகாய கங்கையில் ஸ்நானஞ்செய்து பூஜைகளை முடித்துக் கொண்டு ஒரு குளிர்ந்த சோலையில் தங்கியிருந்தான்.

இராவணன் வருணன் பட்டணத்தில் பிரவேசித்து அப்சர ஸ்திரீகளை சிறை யெடுத்தல்.

அப்படி யிருக்கும்போது அவன் இலங்கைக்குச் செல்ல விரும்பி, அவ்விருப்பத்தை மந்திரிகளுக்குச் சொன்னான்.

அதைக்கேட்டு மாரீசனும், பிரகஸ்தனும் அவனை நோக்கி, "அப்பா இராவணா! இனி இலங்கைக்குச் செல்வதே நல்லது; நீயோ மகோதரன் பேச்சைக் கேட்டுச் செய்யத்தகாத காரியங்களையெல்லாம் செய்து வருகின்றாய்; உன் தங்கை சூர்ப்பனகியின் கணவனையும் கொன்று விட்டாயே; அவள் உன்னிடம் வந்து கதறுவாளே; நீ அவளுக்கென்ன சமாதானம் சொல்வாய்?" என்று சொன்னார்கள். அவர்களன்றி தூமகேது, விருபாக்ஷன், ஓமகோபன், அகம்பன், சுதக்கிணன், வஜ்ஜிரமுஷ்டி முதலியவர்களும் அச்செய்கையைப்பற்றி இராவணனை வெறுத்தும் மகோதரனை நிந்தித்தும் பேசினார்கள். இவர்களுடைய வார்த்தைகளெல்லாம் இராவணனுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவன், மகோதரன் தன் மனம்போற் பேசுவானென்று கருதி அக்குறிப்பு தன் முகத்தில் விளங்கும்படி அவன் முகத்தை நோக்கினான். மகோதரன் அக்குறிப்பை யுணர்ந்து மற்றவர்கள் பேசியதற்கு மனம்வருந்தி அம் மன வருத்தத்தோடு தசக்கிரீவனைப் பார்த்து, "நான் உமக்கு நன்மையே புரிந்து வருகின்றேன்; அப்படியிருந்தும் இவர்கள் என்னை நிந்திக்கின்றார்கள்; இனி நீர் என்னிடம் எதையும் கேட்கவேண்டாம்" என்று சொன்னான். அதற்கு இராவணன், 'அவர்கள் புத்தியில்லாமல் பிதற்றுகின்றார்கள்; நீ அதைப்பற்றி வருந்தாதே; நான் உன் யோசனைப்படியே எதையும் செய்வேன்' என்று அவனைச் சமாதானப்படுத்தி, "இனிமேல் என்ன செய்யலாம்?" என்று கேட்டான். அதற்கு மகோதரன், 'வருணனிடத்தில் அநேகங்கோடி அப்சர ஸ்திரீகளிருக்கின்றார்கள். நீ அந்த வருணனிருக்குமிடஞ்சென்று அவனை வாட்டி அவர்களைச் சிறை யெடுப்பாயானால் உனக்கு மிக்க மகிழ்ச்சியும் சிறப்புமுண்டாகும்' என்றான். அவன் சொற்படியே உடனே இராவணன் படைகளுடன் வருணலோகத்

திற்குச் சென்று சமுத்திர தீரத்தில் நின்று 'அடா வருணா! சண்டைக்கு வாவா' என்று கூவினான். அப்போது வருணன் தேவலோகம் போயிருந்தபடியால் அந்தக் கூவுதலைக் கேட்கவுமில்லை, அங்கே வரவுமில்லை. அப்படி அவன் வாராமலிருக்கவே அவன்மீது இராவணன் கோபித்து அக்கினியாஸ்திரத்தை யெடுத்துக் கடலில் செலுத்தினான். அந்த அஸ்திரத்தினின்றும் எண்ணிறந்த தணலாஸ்திரங்கள் தோன்றி உலகங்களை யெல்லாம் தகித்துச் சப்த சமுத்திரங்களையும் வறட்டிவிட்டன. அதைக்கண்டு வருணன் புத்திரர்களாகிய கோமுகன், புஷ்கரன் என்னு மிருவர்களும் போர்க்கோலங்கொண்டு இராவணனுக்கெதிராக வந்து வருணாஸ்திரத்தைவிடுத்து அவனுடைய அக்கினியாஸ்திரத்தின் வேகத்தைத் தணித்தார்கள். பின் இராவணனும் அவர்களும் எதிர்த்து நெடுநேரம்வரை அஸ்திரயுத்தம் புரிந்தார்கள். அந்த யுத்தத்தில் வருணன் குமாரர் இளைக்காதிருந்தபடியால் மகோதரன் அவர்கள்மீது சூலத்தைப் பிரயோகிக்கும்படி இராவணனுக்குச் சொன்னான். அவ்வாறே தசக்கிரீவன் சூலாயுதத்தைப் பிரயோகித்தான். அது உக்கிரமாகச் சென்றது. அதைக்கண்டு வருணகுமாரர்கள் அஞ்சினார்கள். அப்போது 'சிவத்தியானம் செய்தால் இஃது உங்களை ஒன்றும் செய்யாது' என்று அவர்களுக்கு அசரீரி கூறிற்று. அதைக்கேட்டு அவர்கள் அவ்வாறே சிவஸ்தோத்திரஞ் செய்து கொண்டிருந்தார்கள். அதனால் சூலமானது வந்து அவர்களைப் பார்த்துச் சிவனடியார்களென்று நினைத்து ஒன்றும் செய்யாமல் இராவணனிடம் திரும்பிவிட்டது; அதன்மேல் வருணன் தேவி, இராவணனோடு சமாதானஞ் செய்து கொள்ளும்படி தன் பிள்ளைகளுக்குக் கூறினாள். அவர்கள் அதற்கிசைந்தார்கள். அப்படி அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே மகோதரன் 'இங்குள்ள அப்சர ஸ்திரீகளை நீர்

சிறைப்படுத்தும்' என்று இராவணனிடம் சொன்னான். அச் சொற்படியே அவன் அங்கிருந்த நூறுகோடி அப்சர ஸ்திரீ களையும் சிறை பிடித்துத் தன் விமானத்திலேற்றிக்கொண்டு அவ்விடத்தினின்றும் புறப்பட்டு இலங்கை நோக்கிப் போயி னான்.

தசக்கிரீவன் தேவலோகத்துப் பெண்களைச் சிறை யெடுத்தல்.

அவ்வாறு இராவணன் திரும்பிப்போகும்போது மகோ தரனை நோக்கி, "இன்னும் இத்தகைய பெண்கள் எங்கேனு மிருக்கின்றார்களா?" என்று வினவினான். அப்போதுதெய்வ லோக ஸ்திரீகள் யமுனாநதியில் வந்து ஸ்நானஞ் செய்யுஞ் சமயமாயிருந்தது. அச்சந்தர்ப்பம் மகோதரனுக்குத் தெரி யும்; அதனால் அவன், "தெய்வலோகத்துப் பெண்கள் இவர்களைக் காட்டினும் அழகு வாய்ந்தவர்கள்; அவர்களெல் லோரும் ஸ்நானத்தின் பொருட்டு இப்போது யமுனாநதிக்கு வந்திருப்பார்கள்; அங்கே நீர் சென்றால் அவர்களையும் சுலப மாகக் கைப்பற்றிச் செல்லலாம்" என்றான். உடனே இராவ ணன் ஓரிடத்தில் அப்சர ஸ்திரீகளை இறக்கித் தன் படை களை அவர்களுக்குக் காவலாக ஏற்படுத்தி வைத்துவிட்டுப் புஷ்பகவிமானத்துடன் யமுனாநதி தீரத்துக்குச் சென்று தெய்வலோகத்து ஸ்திரீகளைக் கண்டு அவர்களிடம் தன் பிர தாபங்களைக் கூறிப் பரிகாச வார்த்தைகள் பேசினான். அவர்கள் அவனைக் கண்டதும் பூனையைக் கண்ட எலிகளைப் போல் நடுங்கிப் புகலிடமின்றிப் புலம்பினார்கள். அவ்வாறு புலம்பியும் அவன் மனதிரங்காமல் அவர்களைப்பலவாறு துன் பப்படுத்திப் பிடித்திழுத்து வருத்தினான். அதனால் அவர் களில் பலர் இறந்தனர். அவ்வாறு இறந்தவர்கள் போக எண்பதுகோடி ஸ்திரீகள் எஞ்சியிருந்தார்கள். பின்னர் இரா

வணன் அவர்களைச் சிறையாக்கி விமானத்திலேற்றிக் கொண்டு திரும்பி முன்னே அப்சர ஸ்திரீகளைவிட்ட இடத் திற்கு வந்து அவர்களையும் அதிலேற்றுவித்து மிக்க சந்தோ ஷத்துடன் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு இலங்கை நோக்கிப் போயினான்.

அதன்மேல் தேவர்களெல்லோரும், தங்கள் ஸ்திரீ களை இராவணன் சிறையெடுத்துப் போனதை யுணர்ந்து மனம் பதைத்து ஒன்றுஞ் செய்ய முடியாதவர்களாய் விஷ்ணுவினிடம் சென்று, "நாங்கள் எத்தனை நாளைக்குத் தான் இராவணன் செய்யும் துன்பங்களைச் சகித்துக்கொண் டிருப்போம்" என்று புலம்பினார்கள். அப்போது விஷ்ணு மூர்த்தி தேவர்களை நோக்கி, "நீங்கள் வருந்தவேண்டாம்; இராவணன் ஆயுள்நாட்களில் நாற்பது லட்சம் வருஷங்கள் கழிந்துவிட்டன; இனிச் சொற்ப நாட்களே யிருக்கின்றன; அவை முடிந்ததும் அவனும் முடிந்து போவான்; அவன் நாளடைவில் கெட்டுப் போவதற்கான விஷயங்கள் இப் பொழுது அவனுடன் கூடவே நடந்தேறி வருகின்றன; மகோதரனுக்கு இராவணன் ஆதியில் இழைத்த ஒரு தீங்கை அவன் மனதில் வைத்துக்கொண்டு அந்த இராவணனை அடுத் திருந்து வம்புகளில் இழுத்துவிட்டு அவனுக்குப் பல சாபங் களும் விரோதங்களும் ஏற்படும்படி செய்துகொண்டே வரு கின்றான்; அவனைக் கெடுப்பது மகோதரனுடைய முக்கிய வேலையாயிருக்கின்றது; அஃதன்றியும் அந்த இராவணன் சூர்ப்பனகியின் கணவனையும் கொன்று விட்டான். அதனால் இனி அவளும் உட்பகைகொண்டு அவன் குடியைக்கெடுக்கக் கங்கணங் கட்டிக்கொள்வாள்; இப்படிப் பலவகையிலும் அவனுக்குக் கேடுகள் சம்பவிக்கப் போகின்றன; ஆதலால் நீங்கள் அடிக்கடி வந்து என்னைத் தொந்தரவு செய்யாமல்

இன்னும் கொஞ்சகாலம் பொறுத்திருங்கள்" என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டார்.

இராவணன் யட்சகின்னர ஸ்திரீகளைச் சிறையெடுத்தல்.

முன்னுரைத்தபடி இலங்கைக்குத் திரும்பிவந்த இராவணன் நடுவழியில் மகோதரனை நோக்கி, "இன்னும் எங்கேயாவது நாம் சிறையெடுக்க வேண்டிய ஸ்திரீகளிருக்கின்றார்களா?" என்று கேட்டான். அப்போது தினந்தோறும் கின்னர ஸ்திரீகள் பகீரதி தீரத்தில் நீர் விளையாடவரும் வழக்கத்தைக்கொண்டிருந்தார்கள். அளகையில் அநேகம் யட்சகன்னியரிருந்தார்கள். இன்னும் பற்பல விடங்களில் பற்பல அழகிய கன்னியரிருந்தார்கள். இவர்களுடைய தன்மைகளெல்லாம் மகோதரனுக்குத் தெரியும். ஆதலால், இராவணன் அவ்வாறு கேட்டவுடன், அவன், "பகீரதி தீரத்தில் பத்து லட்சம் கின்னர ஸ்திரீகள் தினந்தோறும் நீர் விளையாட வருவார்கள்; அளகையில் எண்ணிறந்த யட்ச கன்னிகைக ளிருக்கின்றார்கள்" என்று அவனுக்குச் சொல்லி மேலும் பற்பலவகைக் கன்னிகைக ளிருக்கும் பற்பல விடங்களையும் தெரிவித்தான். உடனே இராவணன் அந்த இடங்களுக் கெல்லாஞ் சென்று ஆங்காங்குள்ள பெண்களை யெல்லாம் சிறைபிடித்துக் கொண்டு இலங்கைக்குத் திரும்பினன். அப்படித் திரும்பி வரும்போது அந்த ஸ்திரீகளெல்லோரும் இராவணனைப் பலவாறு தூஷித்து அவனுக்குச் சாபங் கொடுத்துக் கொண்டே போனார்கள். அப்போது இராவணன் அவற்றைக்கேட்டு மகோதரனை நோக்கி, "இவர்களிடும் சாபத்தைக் கேட்டுக் கொண்டிருத்தல் என்னல் முடியவில்லையே; இதற்கென்ன செய்யலாம்?" என்றான். அதற்கு மகோதரன், "இவர்கள் இப்படி யெல்லாம் உம்மைப் பேசினுல் நீர் இவர்களை விட்டு விடுவீரென்று

நினைத்து இவ்வாறு கதறிக்கொண்டு வருகின்றார்கள்; ஆதலால் நீர் இவர்களுடைய வார்த்தைகளைச் சிந்திக்கவேண்டாம்” என்று சொன்னான். பின்னர் இராவணன் அடங்கா மகிழ்ச்சியுடன் சகல மேளவாத்தியங்களும் முழங்க இலங்கை போய்ச் சேர்ந்தான்.

கணவனையிழந்த சூர்ப்பனகி இராவணனிடம் வந்து புலம்புதல்.

இராவணன் செய்கை அங்ஙன மிருப்ப முன்னே காலகேயர் யுத்தத்தில் அவ்விராவணனால் கொல்லப்பட்ட வித்துச் சிங்கனுடைய மரணத்தை, அவன் மனைவியாகிய சூர்ப்பனகி கேள்விப்பட்டு அப்போதே இரணகளத்திற்கு ஓடி இறந்து கிடந்த அவனைக் கண்டு தரையில் வீழ்ந்து இரண்டு மார்பிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு புலம்பி யழுது ஆறாத்துயாத்துடன் தன் பரிதாப நிலையைத் தெரிவித்தற்கு இராவணனிடம் ஓடி வந்தாள். அப்போது தான் இராவணன் மேற்கூறியபடி வெற்றியுடன் இலங்கை போய்ச் சேர்ந்தான். அவன் அவ்வாறு சேர்ந்திருந்தபோது முன்னுரைத்தபடி ஓடி வந்த சூர்ப்பனகி இராவணன் சபையில் போய் அடியற்ற மரம்போற் சாய்ந்து கதறி அவனை நோக்கி, “அந்தோ! அண்ணா! நீர் சிறிதும் தாக்ஷணியமின்றி என் கணவனையுங் கொன்று என்னை ஆதரவிலியாக்கிவிட்டீரே; உம்முடன் பிறந்த நான் இப்படி அமங்கலியா யிருப்பது தகுதி யாகுமோ? நீர் மாத்திரம் அளவிறந்த மாதர்களோடு கூடி வாழ்ந்துகொண்டு என்னைக் கைம்பெண்ணாக்கிக் கதற விட்டீரே; உமக்குத் தெய்வந் துணை புரியுமா?” என்று பலவாறு நிந்தித்துப் புலம்பினாள். அப்போது தசக்கிரீவன், “இஃதென்ன பேரிழவா யிருக்கின்றதே; நாம் மகோதரன் பேச்சைக்

கேட்டு அங்கே சண்டைக்குப் போனதால் இப்பழி நேர்ந்தது" என்று மனங் கலங்கி அத்துன்பக் குறிப்பு தன் முகத்தில் விளங்கும்படி மகோதரனை நோக்கினான். அவன் அக்குறிப்பை யுணர்ந்து கொண்டான். சூர்ப்பனகியின் விஷயத்தில் அவனுடைய மனதிற்குள் மகிழ்ச்சி யுண்டாயிற்று. எனினும் அவன் அதை வெளிக்குக் காட்டாமல் அதற்காகத் துக்கமுறுபவன் போல நடித்து இராவணனை நோக்கி, "ஐயா! சண்டையில் முன்பின் யோசித்துப் பாராமல் நீர் மைத்துனனையும் கொன்று விட்டீர்; கோபம் மிகுந்தால் யாருக்கும் கண் தெரியாது; இஃது அறியாமையால் நடந்த காரியமாயிருக்கின்றது; வித்துச் சிங்கனுக்கும் இத்தகைய மரணம் சம்பவிக்கும்படி விதி யேற்பட் டிருத்தல் கூடும். ஆயினும் உமது தங்கையின் நிலைமையைப் பார்க்கப் பரிதாபமா யிருக்கிறது; நீர் அவளுக்குத் தேறுதல் கூறித் துயரம் நீங்கத்தக்க மார்க்கத்தைச் செய்யும். தண்டகாரண்யத்தில் உம்முடைய தாயாதிகள் பதினாலாயிரம் பேர்களிருக்கின்றார்கள். அவர்களிடம் இவளை அனுப்பிவிட்டால் அவர்கள் இவளைப் பாதுகாத்துக் கொள்வார்கள்" என்று சொன்னான். இவ்வார்த்தைகள் அந்த இராவணனுக்கு மேல் நடக்க வேண்டிய கெடுதிகளுக்கு அஸ்திவாரமா யிருந்தன. தண்டகாரணியத்தில் இராவணனுடைய தாயாதிகளாகிய கரதூஷணாதியர் இருந்தார்கள். அவர்களிடம் சூர்ப்பனகியை அனுப்பிவிட்டால் அவள் எவருடனாவது வம்பிழுத்து அதன் மூலம் அவர்களையும், இராவணனையும் ஒழித்து விடுவாள் என்பது மகோதரன் தீர்மானம். அதனாலேயே மகோதரன் இத்தகைய வார்த்தைகளைக் கூறினான். இந்த வார்த்தைகளின் படியே இராவணன் சூர்ப்பனகிக்குத் தேறுதல்கூறி அவள் தண்டகாரண்யத்தில் மேற்கூறிய தன்னுடைய தாயாதிகளுடன் போயிருக்கும்படி அவளை அனுப்பினான். அவள்

இராவணன் தன் புருஷனைக் கொன்றதற்காக அவன்மீது உட்பகைகொண்டு, "எப்படியும் உன்குடியை நான் கெடுத்து விடுகிறேன்" என்று அவனை நோக்கி மனதிற்குள் வஞ்சினங் கூறிக்கொண்டு தண்டகாரண்யம் சேர்ந்து மேற்கூறிய கர தூஷணாதியர்களோடு கூடி இராவணனைக் கெடுக்கும் சமயத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இராவணன் மதுவென்பவனோடு சண்டைக்குப் போதல்.

அதன்மேல் இராவணன், திக்குவிஜயம் செய்துவந்ததில் ஏற்பட்ட ஜெயங்களை யெல்லாம் இலங்கையி லிருந்த தன் சுற்றத்தாருக்குச்சொல்லி மண்டோதரியுடன் மகிழ்ச்சி யுறறிருந்தான். அவன் திக்குவிஜயத்திற்குச் சென்றிருந்த போது இந்திரஜித்து தன் தந்தையினும் சிறந்த வல்லமைகளைப் பெறக்கருதி நிகும்பலைக்குப் போய்த் தங்கள் குல குருவாகிய சுக்கிராசாரியின் உதவிகொண்டு சிவபெருமானை நோக்கி அங்கிட்டோமம், கோமேதம், இராஜசூயம், அசமேதம், பவுண்டரிகம், வாசபேயம், பாசுபதம் என்னும் ஏழு யாகங்களைச்செய்து அவரிடம் வேண்டிய வரங்களைப்பெற்று மேலும் யாகத்தைச் செய்துகொண் டிருந்தான். அப்போது அவன் அவ்வாறு யாகஞ்செய்யப் போயிருந்ததையும், இராவணன் திக்குவிஜயத்திற்குப் போயிருந்ததையும், கும்பகர்ணன் நித்திரை செய்ததையும், மதுபுரத்திலிருந்த மது வென்னும் அசுரன் உணர்ந்து இலங்கைக்கு வந்து சமாலியின் புத்திரியும், இராவணனுக்குச் சிறிய தாயுமாகிய கும்பிநசி யென்பவளைச் சிறை யெடுத்துக் கொண்டுபோய் விட்டான். இலங்கையிலிருந்த விபீஷணன் முதலியவர்கள் அவனோடெதிர்த்து, அவளை மீட்கமுடியாமல் இராவணன் வந்தபின்பு அவனிடம் இச்செய்தியைத் தெரிவிக்கலாமென் றிருந்துவிட்டார்கள். அப்படி யிருக்கும்போதுதான் இரா

வணன் திக்குவிஜயஞ் செய்து முடித்து மேற்கூறியபடி இலங்கையில் சேர்ந்து சந்தோஷ முற்றிருந்தான். அப்படி யிருந்தவன் மறுதினம் சபைக்குவந்து இந்திரஜித்து அங்கே வாராததால் அங்குள்ளவர்களை நோக்கி,'மேககாதன் எங்கே?' என்று வினவினன். அவர்கள், "அவர் இலங்கையில் இல்லை, வேறெங்கேயோ சென்றிருக்கின்றார்" என்று சொன்னார் கள். அதன்மேல் இராவணன், தூதுவர்களிடத்தில் "இந்திர ஜித்து இருக்குமிடத்தைக் கண்டு வந்து என்னிடம் சொல் லுங்கள்" என்று கட்டளை யிட்டான். அவர்கள் பல விடங் களிலும் தேடி நிகும்பலைக்குப் போய் அவன் அங்கே யாகஞ் செய்து கொண்டிருந்ததை யுணர்ந்து திரும்பி வந்து இராவணனிடம் தெரிவித்தார்கள். அவன் அங்கே போய்த் தன் மகனைக் கண்டு "நீ ஏன் இந்த யாகங் களைச் செய்கின்றாய்?" என்று வினவினன். அப்போது சுக்கிரா சாரி இராவணனிடத்தில், "இலங்காதிபரே! உம்முடைய புத்திரன் பரமசிவனை நோக்கித் தவத்தையும் பல யாகங் களையும் செய்து அவரிடத்தில் அழிவில்லாத இரதத்தை யும், வில்லையும், கவசத்தையும், அக்ஷய தூணியையும், சிறந்த அஸ்திரங்களையும், மாயா வித்தைகளையும், மிக்க பலத்தையும் பெற்றுக்கொண்டான்" என்று சொன்னார். அதற்கு இராவணன் மகிழ்ந்து மேலும் இந்திரஜித்து யாகஞ் செய்வதைப் பார்த்து "என் மகன் எல்லா வரங்களையுந்தான் பெற்றுக் கொண்டானே; இன்னு மெதற்கு உடம்பிளைக்க யாகஞ் செய்யவேண்டும்" என்று அப்போது அவன் செய்து கொண்டிருந்த யாகத்தை நிறைவேற்றச் செய்து, சுக்கிராசாரியாரை, அவரிருப்பிடத்திற் கனுப்பிவிட்டு, இந் திரஜித்தை அழைத்துக்கொண்டு இலங்கை வந்து சேர்ந் தான்.

அப்படி வந்தவன் ஒருநாள் தான் கொண்டுவந்த

காந்தருவஸ்திரீகள் முதலியவர்களைக் கற்பழிக்க விரும்பி அவர்களைத் தன்னிடம் இழுத்துக்கொண்டு வரும்படி சில சேவகர்களுக்குச் சொன்னான் அவர்கள் அவ்வாறே அப் பெண்களை அவனிடம் கொண்டு போனார்கள். அவ்வாறு செல்லும்போது ஸ்திரீகள் வீதிவழியே கதறிக்கொண்டு சென்றார்கள். அப்போது விபீஷணன் அவர்களுடைய பரிதாப நிலைமையைக் கண்டதும் அதற்காக மனம் பதைத்து உடனே இராவணனிடம் சென்று, "அண்ணா! குலஸ்திரீகளை இவ்வாறு துன்பப்படுத்துவது தகாது; நீ திக்குவிஜயத்திற்குச் சென்றிருந்த காலத்தில் மதுவென்பவன் வந்து உன்னுடைய சிறிய தாயாகிய *கும்பிநசி யென்பவளைச் சிறையெடுத்துக் கொண்டு போயிருக்கின்றான்; அதைக் கவனிக்காமல் இந்தத் துஷ்ட காரியங்களைச் செய்துகொண்டிருக்கின்றாயே" என்று அவன் இல்லாதபோது நடந்த கும்பிநசியின் விஷயத்தைச் சொன்னான். அதைக் கேட்டவுடனே இராவணன் அந்த ஸ்திரீகளைத் துரத்திவிட்டு மதுவின்மேல் மிக்க கோபங்கொண்டு, மதுபுரம் சென்று "அந்த மதுவென்பவனை நான் இப்பொழுதே ஜெயித்து அவனுடைய ஸ்திரீகளையும் சிறை யெடுத்துக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லித் தன்னுடைய சேனைகளை முன்னே மதுவென்பவ னிருக்கு மிடத்திற்கனுப்பி, விபீஷணனை இலங்கைக்குக் காவல்வைத்துப் பின்னர் கும்பகர்ணன் இந்திரஜித்து முதலியவர்களையும், சுமாலி, மாலியவான் முதலியவர்களையும். தனக்குரிய நால்வகைப் படைகளையும் அழைத்துக்கொண்டு தானும் மதுபுரம் போய்ச் சேர்ந்தான்.

---

*கும்பிநசி, மதுவினால் சிறையெடுக்கப்பட்டாளெனினும் அப்போதவன்மீது விருப்பமுற்று அவனுக்கு மனைவியாகி யிருந்தாள்.

ஆதலின், அவன் அங்ஙனம் படைகளுடன் போயிருந்ததை அந்தக் கும்பிநசி யுணர்ந்து, மதுபுரத்தைவிட்டுப் புறப்பட்டுவந்து தன் தகப்பன்மார்களைக் கண்டு வணங்கி இராவணனை நோக்கி, "அப்பா! என்னை அந்த மதுவென்பவர் சிறை யெடுத்துக்கொண்டு வந்தது உனக்கிழிவே; எனினும் நான் அவர் வசப்பட்டு அவருக்கு மனைவியாய் விட்டேன்; இனிமேல் நீ அவரைக் கொன்றால் நான் அமங்கலியாய்ப் போவேன்; ஆதலால் எனக்கு நீ மங்கலியப்பிச்சை தரவேண்டும்" என்று கேட்டுக்கொண்டாள். இராவணன் அவளுடைய வார்த்தைக் கிணங்கி, அவளை நோக்கி, "அப்படியானால் நான் மதுவென்பவனைக் கொல்லாமல் விடுகின்றேன்; நான் தேவர்களுடன் சண்டைக்குப் போவதால் அவன் எனக்குச் சகாயமாய் வருமாறு அவனிடம் சொல்" என்று சொன்னான். கும்பிநசி அதற்கிசைந்து அப்போது மது தூங்கிக்கொண் டிருந்தபடியால் உடனே அவன் தூங்கிய விடத்திற்குப் போய் அவனிடம் நடந்ததைக் கூறி, இராவணனிடம் போகும்படி சொன்னாள். அவன் இராவணனிருக்கு மிடத்திற்கு வந்து அவனைத் தன் நகரத்திற் கழைத்துச்சென்று அவனுக்கு விருந்துகள் செய்தான்.

அரம்பையிடத்தும் நளகூபரனிடத்தும் இராவணன் சாபம் பெறல்.

மதுபுரத்தில் இராவணன் அவ்விருந்துண்டு களித்து ஒருநாள் தங்கி மறுநாள் கும்பகர்ணன், இந்திரஜித்து, மது முதலியவர்களுடன் புறப்பட்டு மீண்டும் தேவர்களை வருத்தக் கருதித் தேவலோகத்தை நாடிச் சென்று நடுவழியில் ஒரு குளிர்ந்த சோலையைக் கண்டு அதில் தங்கியிருந்தான். அவ்வாறு தங்கியிருக்கும்போது அவன் அந்தச் சோலையின் அலங்காரத்தைப் பார்க்க விரும்பித் தனியே சென்று

ஓரிடத்தில் உலாவிக்கொண்டிருந்தான். அப்போது அரம்பை அலங்கரித்துக்கொண்டு தனக்குரிய நாயகனாகிய நளகூபரனிடம் செல்வதற்கு அந்த வழியாக வந்தாள். இராவணன் அவளைக் கண்டு மோகங்கொண்டு, "பெண்ணே! நீ யார்? எங்கே செல்கின்றாய்?" என்று வினவினான். அவள் தன்னுடைய வரலாற்றையும், தான் தன் நாயகனிடம் செல்வதையும் கூறினாள். அவன் அவளைத் தழுவ நினைந்து பரிகாச வார்த்தைகள் கூறிக்கொண்டு அவளிடம் நெருங்கினான். அதைக்கண்டு அரம்பை நடுங்கி, அவனை நோக்கி, "ஐயா! என்னுடைய நாயகராகிய நளகூபரர் புலஸ்தியருடைய புத்திரருக்குப் பேரன்; அந்த முறையிற் பார்த்தால் நான் உமக்கு மருமகளாவேன்; ஆதலின் நீர் என்னைக்கெடுக்க நினைப்பது நீதியாகாது" என்று சொன்னாள். அவ்வாறுரைத்தும் இராவணன் நீதிமுறையை மனத்திற்கொள்ளாமல் 'வேசைகளுக்கும் முறையுண்டோ?' என்று அவளை வலிதிற் பிடித்திழுத்துக் கற்பழித்தான். அவள் மனம் பதைத்து இராவணனை நோக்கி, "நீ இனிப் பதிவிரதைகளைத் தீண்டினால் என் வயிறு பற்றியெரிவது போல எரிந்து போவாய்" என்று சாபமிட்டுவிட்டு நளகூபரனிடம் சென்று இராவணன் தன்னைத் துன்பப்படுத்தியதைக் கூறினாள். அவன், "இனி அந்தத் தசக்கிரீவன் பதிவிரதைகளைத் தொடுவானாகில் அவனுடைய பத்துத் தலைகளும் வெடித்துப்போகும்" என்று சாபமிட்டான்.

இந்திரன் இந்திரஜித்துவால் சிறைப்பட்டுப் பிரமனால் விடுதலை யடைதல்.

அதன்மேல் இராவணன் அவ்விடத்தை விட்டுத் தன் சேனைகளிருக்குமிடத்திற்குத் திரும்பிவந்து அன்றிரவு அங்கே தங்கியிருந்து மறுநாளுதயத்தில் அங்கிருந்து புறப்

பட்டுத் தான் முன்னே நினைத்தபடி தெய்வலோகம் போய்ச் சேர்ந்தான். இந்திரன் அவனுடைய செய்கையை யுணர்ந்து அதற்கஞ்சிச் சில தேவர்களுடன் விஷ்ணு மூர்த்தியிடம் சென்று "இராவணன் எங்களுடன் சண்டை தொடுக்க வந்திருக்கின்றான்; அவன் செய்யுந் துன்பம் எங்களால் சகிக்க முடியாது" என்று அவரிடம் கூறி வருந்தினான். அதற்கு அவர் "நாமே அந்த இராவணன் முதலியவர்களைச் சங்கரித்து உங்களை இரக்ஷிப்போம்; நீங்கள் பயப்படாமல் போயிருங்கள்" என்று கூறினார். அதைக்கேட்டு இந்திரன் சற்று தேறுதலுடன் திரும்பித் தெய்வலோகத்திற்கு வந்தான். அவன் வருவதற்குள் இராவணன் படைகள் தேவலோகமெங்கும் பரவி ஆரவாரித்தன; அப்போது அங்கிருந்த தேவர்கள் அப்படைகளுடன் எதிர்த்துப் போர் புரிந்தார்கள். அந்த யுத்தத்தில் அநேகம் இராக்ஷத சேனைகள் மடிந்தன; மேலும் தேவர்கள் இராக்ஷதர்களை நாசஞ் செய்துகொண் டிருந்தார்கள். அப்போது இராவணன், தேவர்களைச் சின்னபின்னப்படுத்தும்படி தன் பாட்டனாகிய சுமாலியை ஏவினான். சுமாலி, பானுகோபன் துன்முகன் முதலிய சேனாதிபதிகளோடு, பலவாறு சிதைந்து நின்ற சேனைகளையுங் கூட்டிக்கொண்டு போய்த் தேவர்களுடன் எதிர்த்து அநேகம் ஆயுதங்களைப் பிரயோகித்து அவர்களில் அநேகரை மடித்தான். தேவர்களும் பல இராக்ஷதர்களைக் கொன்றார்கள். அப்போது சாவித்திரனென்னும் தேவ சேனாதிபதி தண்டாயுதத்தால் மோதிச் சுமாலியைக் கொன்றான். அக்கொலையைக்கண்ட இராக்ஷதப் படைகள் பயந்தோடின. அப்போது மேகநாதன் அந்தச் சேனைகளைத் தடுத்துத் தன்னுடன் கூட்டிக்கொண்டு தேவசேனைகளுடன் எதிர்த்து வீரத்துடன் யுத்தம்புரிந்தான். அவனோடு இந்திரன் மகனாகிய சயந்தன் எதிர்த்தான். இருவர்க்கும்

மும்மரமான யுத்தம் நடந்தது. சிறிது நேரத்தில் மேகநாதன் சயந்தன் மூர்ச்சை யடையுமாறு செய்து விட்டான். அதன்மேல் சயந்தனுடைய பாட்டனாகிய புலோமனென்பவன் மேகநாதனுடன் எதிர்த்து யுத்தம் பண்ணிக்கொண்டிருந்தான். அப்போது பிரமதேவர் இந்திரனிடம் சென்று சயந்தன் மூர்ச்சையடைந்ததையும், புலோமன் மேகநாதனுடன் யுத்தம் புரிவதையும் கூறினான்.

இந்திரன் அவருடைய வார்த்தைகளைக் கேட்டவுடன், மேகநாதனுடைய செய்கைக்காகக் கோபங்கொண்டு சகல படைகளுடன் தேரேறி அவனை அடக்கும்பொருட்டு யுத்த களத்திற்கு வந்தான். அப்போது இராவணன் அவனைக் கண்டு அவனோடெதிர்க்கப்போனான். இந்திரஜித்து அச்செய்கையையுணர்ந்து இராவணனிடம் வந்து அவனை நோக்கி, "தந்தையே! இந்த அற்பனாகிய இந்திரனை ஜெயிக்க நீர் அவனிடம் போகவேண்டுமோ? நான் சென்று அவனை ஜெயித்து வருகின்றேன்" என்று சொல்லி அவனை நிறுத்தி விட்டு இந்திரனுடன் எதிர்த்து எண்ணிறந்த பாணங்களை அவன்மீது செலுத்திப் பயங்கரமான யுத்தம் புரிந்தான். அந்த யுத்தத்தில் தேவர்களுடைய நால்வகைப் படைகளிலும் அளவற்ற சேதங்களுண்டாயின. அப்படி இந்திரஜித்து தேவர்களைச் சின்னபின்னப் படுத்திக்கொண்டிருக்கும்போது, கும்பகர்ணன் யமனைப்போற் போர்க்களத்திற் புகுந்து தண்டாயுதத்தினால் மோதி அநேகம் தேவர் சேனைகளை யொழித்து விட்டான். அதைக்கண்டு உருத்திரர், வசுக்கள், அருக்கர், மருத்துவர் முதலிய பலவகைத் தேவர்களும் திரண்டு சதுரங்க சேனைகளுடன் வந்து, கும்பகர்ணனுடனெதிர்த்து அவன்மீதும், அவனைச் சார்ந்தவர் மீதும் எண்ணிறந்த ஆயுதங்களைச் செலுத்தி அவனுடைய தேகத்தைத் துளைத்து, அளவற்ற இராக்ஷத சேனைகளையும் சின்ன

பின்னப்படுத்தினார்கள். அப்போது இராவணன் அவர்களுடைய செய்கைகளைக் கண்டு உக்கிரகோபங்கொண்டு அங்கு வந்து அக்கினி மயமான பாணங்களை வில்லில் தொடுத்து விடுத்து, அவற்றால் தேவர் சேனைகளில் அநேகரைச் சங்காரம் பண்ணினான். இந்திரன் அதைக்கண்டு சினந்து அவ்விராவணனுடைய மார்பிலும் தலைகளிலும் நிறையும்படி அநேகம் அக்கினிச் சரங்களை யேவினான். இராவணன் இந்திரன்மீது பாணவருஷங்களைச் சொரிந்தான். அவ் விருவருடைய படைத் தலைவர்களும் ஒருவரோடொருவர் எதிர்த்து யுத்தம் பண்ணினார்கள். அந்தப்போரில் இராக்ஷத சேனைகள் மிகுதியும் மடிந்தன. அச்சேதத்தை இராவணன் கண்டு, பொறாமல் தேவர் சேனைக்கு நடுவில் தன் இரதத்தைச் செலுத்திக் கொண்டுபோய் அத்தேவர்களை ஆயுதங்களால் வாட்டினான். அப்பொழுது இந்திரன், அவன் செயலைப் பார்த்துச் சினந்து, 'இந்த இராவணனை இப்பொழுதே ஒழித்து விடுகின்றேன்' என்று தேவர்களிடம் சொன்னான். அவன் அவ்வாறு சொல்லி வாய்மூடுவதற்கு முந்தியே இராவணன் அவனுக்கெதிரில் வந்தான். அவனைக் கண்டவுடன் இந்திரன், பயந்து "அதிகப் படைகளைச் சேர்த்துக்கொண்டு வந்துதான் இவனுடன் யுத்தஞ்செய்ய வேண்டுமென்று மறைந்தோடினான். அங்ஙனம் அவன் ஓடியபின் இராவணன் நாலாதிக்குகளிலும் தன் தேரைச் செலுத்தி ஆயுதங்களை எவித் தேவர்களைக் கலக்கினான். அப்போது மேற்கூறியபடி மறைந்தோடிய இந்திரன் எண்ணிறந்த படைகளைச் சேர்த்துக்கொண்டு மீண்டும் வந்து இராவணனோ டெதிர்த்தான். அத்தருணம் அவனிடம் வீரக்குறி அதிகமாகத் தோன்றிற்று. இராக்ஷதர்கள் அதைப் பார்த்ததும், 'இன்றைக்கு இராவணன் இவ்விந்திரன் கையினின்றும் மீளுவதரிது' என்று கதறினார்கள்.

அத்தருணத்தில் இந்திரஜித்து, அத்தகைய இந்திரனைப் பார்த்துக் கோபங்கொண்டு வந்து ஆயுதங்களால் தன் தகப்பனைச் சுற்றிக்கொண்டிருந்த தேவர் சேனைகளைச் சிதைத்து, இந்திரனுடைய தேரைப் போக்கி, அவன்மீதும் எண்ணிறந்த பாணங்களைப் பிரயோகித்து அவன் நிலைகுலையும்படி செய்தான். அதன்மேல் இந்திரன் ஐராவதத்திலேறிக்கொண்டு உக்கிரமான கோபத்துடன் பற்பலகொடிய பாணங்களை வில்லில் தொடுத்து விடுத்து அவற்றால் இராக்ஷதசேனைகள் சிதற அவற்றை அடித்து இந்திரஜித்துவின் நெஞ்சந் திடுக்கிடும்படி செய்தான். அப்போது மேகநாதன், அவனுடைய வன்மையைக் கண்டு 'இனி இந்த இந்திரனை மாயையால் தான் வெல்லவேண்டும்,' என்று கருதி உலகமெங்கும் இருளும்படி ஒரு மாயையைச் செய்தான். அந்த மாயையால் தேவர்களெல்லோரும் மயங்கி மூர்ச்சையடைந்துவிட்டார்கள். இந்திரனும் சித்தப்பிரமை கொண்டவன்போல் மயங்கி நின்றான். அப்படி யாவரும் மயங்கிய சமயத்தில் மேகநாதன் யமனுடைய பாசத்தினாலே இந்திரனைக் கட்டிக் கொண்டுபோய் இராவணனுக்கு முன்னே நிறுத்தினான். அச்செய்கையைக் கண்ட தசக்கிரீவன் அளவற்ற மகிழ்ச்சி யடைந்து தன் மகனைக் கொண்டாடினான்.

அங்ஙனம் கொண்டாடிய அவன், அதன்மேல் தன் பரிவாரங்களுடனும், இந்திரனுடனும் அங்கிருந்து புறப்பட்டுப்போய் இலங்கையில் சேர்ந்து இந்திரனைச் சிறைக்கூடத்தி லடைத்துவிட்டு மகிழ்ச்சி யுற்றிருந்தான். அப்படி யிருக்குங் காலத்தில் தேவர்களெல்லோரும் பிரமதேவரிடம் சென்று இராவணன் இந்திரனைப் பிடித்துச் சிறைபடுத்தி வைத்திருந்ததைக் கூறி முறை யிட்டார்கள். அதைக்கேட்டுப் பிரமர் இந்திரனுடைய சிறையை நீக்க நினைத்து அந்தத் தேவர்களை அழைத்துக்கொண்டு இரா

வணிடம் சென்று, "இலங்காதிபனே! மூன்றுலங்களி லும் உனக்கிணையானவர்களில்லை; உன்மகன் மேகநாதனே இந்திரனையும் ஜெயித்துச் சிறைப்படுத்தினான்; அதனால் அவனுக்கு இன்று முதல் இந்திரஜித்தென்னும் பெயர் வழங்கக்கடவது; உன்னுடைய வல்லமைக் கஞ்சித் தேவர் கள் உன்னிடம் பணிவுடையவர்களாய் வந்திருக்கின்றார்கள்; அவர்கள் தங்கள் தலைவனாகிய இந்திரன் சிறைப்பட்டதால் வருந்துகின்றார்கள்; ஆதலின் நீ அவனைச் சிறை நீக்கி விட்டு விடு" என்று இதமான வார்த்தைகளைக் கூறினார். அதைக் கேட்ட இராவணன் பிரமாவை நோக்கி, "நான் இந்த உலக முள்ள வரையிலும் அழியாதிருக்கும்படி எனக்கு நீர் நித்தி யத்துவத்தைக் கொடுப்பீரானால் நான் இந்திரனைச் சிறை நீக்கி விடுகின்றேன்" என்று சொன்னான். அதற்குப் பிரமா, "ஈசுவரன் ஒருவருக்கு மாத்திரந்தான் நித்தியத்துவமுண்டு; அப்படி யிருக்க நீ ஆகாத காரியத்தைக் கேட்பது தகுதி யன்று" என்று கூறினார். அதைக்கேட்டதும் இந்திரஜித்து, "அப்படியானால் நான் இனிமேற் செய்யும் யாகத்தில் உண் டாகும் இரதத்தில் ஏறி யுத்தஞ் செய்தால் எனக்கெவராலும் மரணமுண்டாகா திருக்கும்படியான வரத்தையாவது நீர் கொடும்; நாங்கள் இந்திரனைச் சிறைநீக்கி விடுகின்றோம்" என்று பிரமாவிடம் சொன்னான். அவர் அப்படியே அவ் வரத்தைக் கொடுத்தார். உடனே இந்திரஜித்து தேவேந் திரனைச் சிறையினின்றும் விடுதலை செய்து பிரமாவினிடம் கொண்டுவந்து நிறுத்தினான். இந்திரன் வெட்கமும் துக்கமு முடையவனாய்த் தலைகுனிந்து நின்றான். அப்போது பிரம தேவர் அவனை நோக்கி "தேவராஜனே! முன்னர் உனக் கேற்பட்ட கௌதமர் சாபத்தால் இத்தகைய சிறைக் கூடவாசம் சித்தித்தது; இதற்காக நீ விசனப்படாதே" என்று சமாதானங் கூறி அவனை இராவணன் முதலியவர்க

ளிடத்தில் விடைபெற்றுக் கொள்ளச் செய்து தேவலோகத்திற் கனுப்பிவிட்டுத் தாமும் சத்தியலோகம் போய்ச் சேர்ந்தார்.

இராவணன் கார்த்த வீரியனால் கட்டுப்படல்.

அதன்மேல் இராவணன் அப்போது நிகழ்ந்தவற்றைக் குறித்து அளவற்ற ஆனந்தமடைந்து தனக்கெவரும் நிகரில்லையென்று அகங்காரத்துடன் அரசுசெய்து கொண்டிருந்தான். அப்படியிருக்குங் காலத்தில், அப்போது தனக்கு நிகரொருவருமில்லாத வீரனும், ஆயிரந் தோள்களையுடையவனுமிருந்த கார்த்த வீரியார்ச்சுனன் ஒருநாள் நால்வகைப் படைகளுடன் திக்குவிஜயம் செய்து சகலரையும் வென்று இராவணனுடன் யுத்தஞ்செய்வதற்கு இலங்கைக்குப் போனான். அப்போது இராவணன் தன்னுடைய போகஸ்திரீகளுடனும் ஜலக்கிரீடை செய்வதற்கு நருமதை நதிக்குச் சென்றிருந்தான். கார்த்தவீரியன் அங்கிருந்தவர்களிடம் "இராவணன் எங்கே!" என்று வினவினான். அவர்கள் அவன் நருமதைக்குச் சென்றிருந்ததைக் கார்த்தவீரியனுக்குக் கூறினார்கள். அவன் அந்த இராவணனைத் தேடிக்கொண்டு போய் விந்திய பர்வதத்தில் தங்கினான். அத்தருணத்தில் இராவணன் ஜலக்கிரீடை முடித்து விந்திய பர்வதத்திற் கருகிலுள்ள நருமதை நதிக்கரையில் இலிங்கம் வகுத்துச் சிவபூஜை செய்து கொண்டிருந்தான். அப்படியிருக்கும்போது, அவனிருந்த விடத்திற்கப்பால் நெடுந்தூரத்தில் கார்த்தவீரியனும் தன்னுடைய ஸ்திரீகளுடனும் நருமதை நதியிலிறங்கி ஜலக்கிரீடை செய்து விளையாடித் தன்னுடைய ஆயிரங்கைகளாலும் அந்நதியைக் குறுக்கே அடைத்துத் தண்ணீரைத் தேக்கினான். அந்தஜலம் தடைப்பட்டு மேலே பெருகிக் கரைபுரண்டு இராவணனால் வகுக்கப்பட்ட சிவலிங்கத்தைக் கரைத்தழித்துச் சென்றது. அதைக்

கண்டு இராவணன் கோபித்தெழுந்து அவ்வெள்ளம் புரண்டதன் காரணத்தைத் தெரிந்து வரும்படி கார்த்தவீரியன் ஜலக்கிரீடை செய்ததிசையில் தூதரையனுப்பினான். அவர்கள் சென்று கார்த்தவீரியனே அதற்குக் காரணமென்பதை அறிந்து வந்து தசக்கிரீவனுடம் தெரிவித்தார்கள். அதைக் கேட்டதும் அவன் கடுஞ்சினமடைந்து கார்த்தவீரியார்ச்சுனனோடு சண்டையிடக்கருதி அவனிருக்கு மிடத்திற்குச் சென்று அவனுடைய மந்திரிகளைக் கண்டு அவர்களிடத்தில் "நான் உங்கள் தலைவனோடு சண்டைபுரிய வந்திருக்கின்றேன்; நீங்கள் என் வரவை அவனுக்குச் சொல்லுங்கள்" என்று கூறினான். அதற்கவர்கள் "அவர் இப்போது ஜலக்கிரீடை செய்துகொண் டிருப்பதால் அவரிடம் நாங்கள் செல்லல் கூடாது; இக்கருணத்தில் நீ அவரை யுத்தத்திற்கழைப்பதும் தகுதியாகாது; நாளைக்குவந்தால் போர்புரியலாம்" என்றார்கள். அவர்கள் அங்ஙனம் சாந்த வார்த்தைகள் கூறியும் இராவணன் அவற்றைக்கேளாமல் மீறி அந்த மந்திரிகளைச் சண்டைக்கிழுத்தான். அவர்களும் சண்டை செய்யத் தொடங்கினார்கள். அப்போது இராவணனுடைய மந்திரிகள் அவர்களுடன் எதிர்த்தார்கள். இரண்டு பக்கத்துப் படைகளும் எதிர்த்துக்கொண்டன. இருவகை மந்திரிகளுக்குள்ளும் கொடியயுத்தம் நடந்தது. முதலில் இராவணன் சேனைகள் தளர்ச்சியுற்றன; பின்னர் மகோதரன், மாரீசன் முதலியவர்கள் முனைந்து கார்த்தவீரியனுடைய சேனைகளைத் தாக்கினார்கள். அவர்களால் அவைகள் சின்ன பின்னப்பட்டுச் சிதைந்து கார்த்தவீரியன் சமீபத்திற்போய் வீழ்ந்தன. அவற்றின் அலங்கோலத்தைக் கண்டு அவனுடைய ஸ்திரீகள் நடுங்கினார்கள். அவன் அங்ஙனம் பயந்த அவர்களுக்குத்தைரியங்கூறிவிட்டுக் கரையேறி அச்செய்கை

இராவணனால் நேர்ந்ததென்பதையுணர்ந்து கோபத்துடன் வந்து இராவணன் சேனைகளையெல்லாம் சிதறவடித்தான். அப்போது பிரகஸ்தன் அவனுடனெதிர்த்துப் பாணங்களை யேவி அவனுடைய சேனைகளில் அநேகம் மடியும்படி செய்தான். அதைக்கண்ட கார்த்தவீரியன் தன்னுடைய தண்டாயுதத்தால் பிரகஸ்தனை அடித்து வீழ்த்தி மேலும் இராவணனுடைய சேனைகளை மோதியடித்தான். அந்த அடியினால் தசக்கிரீவன் படைகளும், மகோதரன் முதலியவர்களும், பயந்தோடினார்கள். அப்போது இராவணன் கார்த்தவீரியனுடைய செய்கையைக் கண்டு கொதித்தெழுந்து தன்னுடைய படைகளைத் தடுத்து நிறுத்தித் தானுமொரு கதாயுதத்தை யெடுத்து அந்தக் கார்த்தவீரியன் மார்பில் பலமெல்லாங்கொண்டோங்கியடித்தான். அதற்குக் கார்த்தவீரியன் இளைக்காமல் புன்சிரிப்புடன் தன் கதையினால் ஓங்கி இராவணனை ஓடி யடித்தான். அந்த அடியினால் தசக்கிரீவன் தளர்ச்சியுற்று மயங்கி நின்றான். அப்போது கார்த்தவீரியன் அவனைப் பிடித்துத் தோளோடுதோள் இறுகக் கட்டி முன்னே நடத்திக்கொண்டு போனான். மகோதரன், மாரீசன் முதலியவர்கள் அவனைப் பின்தொடர்ந்து இராவணனை மீட்கும்பொருட்டு யுத்தஞ்செய்தார்கள். கார்த்தவீரியன் சில அஸ்திரங்களை விடுத்து அவர்களைச் சின்னாபின்னப் படுத்தித் துரத்திவிட்டு இராவணனைத் தன்னுடைய பட்டணத்துக்குக்கொண்டுபோய்ச் சிறைக்கூடத்திலடைத்துவிட்டான். மகோதரன் முதலியவர்கள் இலங்கைக்குச் சென்று விசனத்துடன் இராவணன் செய்தியை விபீஷணனிடம் கூறினார்கள். விபீஷணன் அவன் பொருட்டு மனம் வருந்திப் புலஸ்தியரிடம் சென்று எப்படியாவது இராவணனைச் சிறை நீக்கிவிடும்படி வேண்டினான். அவர் அதற்கிசைந்து கார்த்த வீரியனிடம் சென்று அவனுக்குச் சமாதான

வார்த்தைகள் கூறி இராவணனை அவனுடைய சிறையினின்றும் மீட்டு விட்டார். இராவணன் வெட்கமுந் துக்கமுமடைந்து இலங்கை போய்ச் சேர்ந்தான்.

இராவணன் வாலியின்வாலில் கட்டுப்படல்.

தசக்கிரீவன் இவ்வாறு கார்த்தவீரியனால் அவஸ்தையடைந்து சென்றும் இலங்கை போய்ச் சேர்ந்தபின் சில தினங்களில் அதனை மறந்துவிட்டான். பின்னும் அகங்காரங் கொண்டு வெளியேறிப் பற்பல விடங்கட்குஞ்சென்று பலருடனும் சண்டை விளைத்துக் கொண்டே திரிந்தான். அப்படித் திரியுங்காலத்தில் வாலியுடன் சண்டைபோடக் கருதிக் கிஷ்கிந்தைக்குச் சென்று அவனரண்மனைக்கு முன்னே நின்று, "வாலியே! சண்டைக்குவா" என்று கூவினான். அப்போது வாலி தென் சமுத்திரக்கரைக்குச் சிவபூஜை செய்யச் சென்றிருந்தான். ஆதலால் அவனுடைய மனையாள் தாரை வெளியில் வந்து இராவணனுடைய செய்கையை யுணர்ந்து அவனை நோக்கி, "என் நாயகருடனே சண்டை செய்தால் நீ மடிந்து போவாய்; அவரோ தெற்குச் சமுத்திரக் கரைக்குச் சிவபூஜை செய்யப் போயிருக்கின்றார்; அவர் திரும்பிவரும் சமயமாயிற்று; நீ விரைவில் இதைவிட்டுப் போய்விடு; உனக்கு விரைவில் சண்டை செய்ய இஷ்டமிருந்தால் அவர் சென்றிருக்குமிடத்திற்கு நீ போ" என்றாள். இராவணன் அவள் சொற்படியே அகங்கரித்து உடனே தன்படைகளுடன் வாலியிருக்குமிடத்திற்குப் போனான். அப்போது வாலி கண்களை மூடிக்கொண்டு சிவத்தியானத்தி லிருந்தான். அவனைப் பார்த்ததும் இராவணன், "ஆ! இது நல்ல சமையம்; இவன் கண்களை மூடிக்கொண்டிருப்பதால் நாம் சந்தடி செய்யாமல் சென்று இவனைப் பிடித்துக் கட்டிவிடலாம்" என்று பதுங்கிக்கொண்டே

அவனுக்குப் பின்னே போனான். வாலி அவன் வருவதை யுணர்ந்து கொண்டான். எனினும், 'இவன் கிட்டி வரட்டும்; இவனை நாம் நொறுக்கிவிட வேண்டும்' என்று ஒன்றும் அறியாதவனைப்போல் இருந்தான். பதுங்கிச் சென்ற இராவணன் வாலிக்குச் சமீபத்திற் சேர்ந்து ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து இருபது கைகளாலும் அவனைச் சேர்த்துப் பிடித்தான். வாலி உட்கார்ந்திருந்தபடியே புன்சிரிப்புடன் இராவணனை ஒரு கையால் ஒதுக்கிக் கக்கத்துள்ளே சேர்த்திடுக்கி ஒரே இறுக்காக இறுக்கி எலும்புகள் நொறுங்கும்படி நசுக்கித் தன் வாலின் நுனியிலே ஒரு மணிபோலக் கட்டித் தொங்கவிட்டுப் பதறாமல் சிவபூஜையை முடித்துக்கொண்டு, மேற்குக்கடல் தீரத்தில் சிவபூஜை செய்ய அங்கே செல்லக் கருதி மேலெழுந்து ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான்; அவன் பாய்ந்த வேகத்தால் இராவணனுடைய சேனைகளெல்லாம் சின்னபின்னப் பட்டுப் பறந்தோடின. இராவணனோ வாலியின் வாலில் தொங்கிக்கொண்டு படாதபாடுகளெல்லாம் பட்டுப் போனான். அதன்மேல் வாலி மேற்கிலிருந்து வடக்குக் கடலிற் பாய்ந்தும், வடக்கிலிருந்து கிழக்குக் கடலிற் பாய்ந்தும் ஆங்காங்கே சிவபூஜையை முடித்துக் கொண்டு திரும்பிக் கிஷ்கிந்தைக்கு வந்து சேர்ந்தான். வாலி, அவ்வாறு நான்கு திக்குகளிலும் தாவித் திரியும்போது அவன் வாலிற் கட்டப்பட்டிருந்த இராவணன் மலைகளிலும் மரங்களிலும் மோதுண்டு தேகமெல்லாம் இரத்தவெள்ளம் பெருகப் புண்ணாகிப் பட்ட பாட்டிற்கோர் அளவில்லை. அதனால் அவன் பிரக்ஞையற்று மயங்கிப் போனான். வாலி கிஷ்கிந்தையிற்சேர்ந்தவுடன் அவன்மனைவியான தாரை வாலிக்கு வேண்டிய உபசாரங்கள் செய்துவிட்டு அவன் வால்நுனியில் கட்டப்பட்டு மயங்கிக் கிடந்த இராவணனைப் பார்த்து, முன்னே வாலியுடன் சண்டைசெய்யக் கிஷ்கிந்தைக்கு வந்

தவனென்றுணர்ந்து, "இவன் யார்?" என்று வாலியைக் கேட்டாள். அதற்கு வாலி, "பெண்ணே! இது பத்துத் தலைப்பூச்சி; இன்றைக்கு நான் பூஜை பண்ணப்போன ஒரு தீவிலே இது அகப்பட்டது; இதை உனக்குக் காட்டும் பொருட்டு நான் இங்கே கொண்டு வந்தேன்" என்றான். அப்போது தாரை இராவணன்மீது இரக்கமுற்று அவனை நோக்கி, "இவன் உம்முடைய பலத்திற்கு இலக்ஷியமானவனல்லன். ஆதலால் நீர் இவனை அவிழ்த்துவிடும்" என்று வேண்டிக்கொண்டாள். வாலி அவள் சொற்படியே இராவணனை அவிழ்த்துவிட்டு அவனைப் பார்த்து, "நீ கட்டுப்பட்டுவிட்டதால் தோல்வியடைந்துவிட்டதாகக் கவலைப்படாதே; ஜெயமும் அபஜெயமும் ஒருவர் பங்கல்ல; ஒருசமயம் ஒருவனுக்குத் தோற்றவன் மற்றொரு சமயத்தில் அவனை வெல்வான்; ஆதலால் உனக்குச் சண்டைசெய்ய இஷ்டமிருந்தால் இப்போதென்னுடன் நீ யுத்தம் புரியலாம்" என்றான். அப்போது இராவணன் தைரியமின்றி "ஐயா! நீர் இந்த மட்டில் என்னை உயிருடன் விட்டுவிட்டால் அதுவே எனக்குப் போதும்; உம்முடன் யுத்தஞ் செய்யவேண்டுமென்று நினைக்கவும் எனக்குத் திறமையுண்டோ? நீர் என்னைச் சிநேகிதனாகக் கொள்ளவேண்டும்" என்று தாழ்மையாகக் கூறினான். அதைக்கேட்டு வாலி அவன் மீதிருந்த பகை நீங்கிச் சந்தோஷித்து அவனை ஒருமாதம் வரை தன் அரண்மனையில் வைத்திருந்து உபசரித்து அவனுக்கு விருந்துகள் செய்து அதன்மேல் அவனை நோக்கி, "அப்பா! நீ இன்று முதல் எனக்கு நண்பனாக விரு; இனி எதற்கு மஞ்சாதே" என்று இதமொழிகள் கூறியனுப்பினான். அவன் இலங்கை சேர்ந்திருந்தான். அதன்மேலும் அவன் தேவர்களை வருத்தி ஏவல்கொண்டபடியால் அவர்கள் விஷ்ணு மூர்த்தியாகிய உம்மிடம் முறையிட நீர் அத்தேவர்களையெல்லாம் வான்

ரர்களாக அவதரிக்கச்செய்து இந்த இராமாவதாரத்தை யெடுத்து அந்த வானரர்களைத் துணை சேர்த்துக்கொண்டு இப்போது இராவணுதி இராக்ஷதர்களையெல்லாம் ஒழித்துத் தருமத்தை நிலை நிறுத்தினீர்” என்று சொல்லி முடித்தார்.

ஆஞ்சனேயர் வரலாறு.

இவற்றை அகஸ்தியர் கூறியதன்மேல் இராமபிரான் அவரை நோக்கி, “முனி சிரேஷ்டரே! மகா பிரதாபசாலி யான அனுமானுடைய விருத்தாந்தத்தையும் நீர் கூறவேண்டும்” என்று கேட்டுக் கொண்டார். அவர் அவ்வாறே அனுமார் சரித்திரத்தைச் சொல்லத் தொடங்கி இராமரை நோக்கி,

“இராகவரே! முன்னொருகாலத்தில் அஞ்சனுதேவிக்கும் வாயுதேவருக்கும் ஒரு காரணத்தினுலே அனுமார் புத்திரராகப் பிறந்தார். அவர் பிறந்தவுடனே தமக்குப் பசி அதிகரித்ததால் மாதாவை நோக்கி, “தாயே! எனக்குப் பசி அதிகமாயிருக்கின்றது; நான் புசிக்கத் தக்கவை எவை?” என்று கேட்டார். அதற்கு அஞ்சனுதேவி, “குழந்தாய்! வனங்களிலும் சோலைகளிலும் இருக்கின்ற சிவந்த கனிகளே உன்பசியைத் தணிக்கக்கூடியவைகள்; நான் அந்தக் கனிகளைக் கொண்டுவருகிறேன்” என்று சொல்லி அவரைத் தானிருந்தவிடத்தில் வைத்துவிட்டுக் கனிகளைக் கொண்டு வரும் பொருட்டு வனத்திற்குச் சென்ருள். அவள் திரும்பி வருவதற்குள் அனுமாருக்குப் பசி மேலும் அதிகரித்தபடியால் அவர் மிக வருந்திக்கொண் டிருந்தார். அத்தருணத்தில் சூரியோதயமாயிற்று. சூரியன் உதயத்தில் சிவந்த நிறமாகத் தோற்றியபடியால், அனுமார் அந்தச் சூரியனைப் பார்த்து, “நம் தாய்கூறிய கனிவகைகளில் இதுவும் ஒன்றுதான்” என்று நினைத்து அந்தச் சூரியனைத் தின்னலா

மென்று அவன்மேற் பாய்ந்தார். அதைக்கண்டு தேவர்கள் அதிசயித்தார்கள். அப்போது வாயுபகவான் சூரியவெப்பம் தம் புத்திரனைச் சுடாமல் குளிர்ந்திருக்குமாறு செய்தார். சூரியனும் தன்மேற் பாய்ந்து கவ்விய அனுமாரைக் குழந்தை யென்று நினைத்துத் தகியாமல் மகிழ்ச்சியுற்றிருந்தான். அப்போது கிரகணகாலம் வந்தபடியால் இராகுவானவன் சூரியனைப் பற்றவந்தான். அங்ஙனம் வந்தவன் அனுமார் அவனைக் கவ்விக்கொண் டிருப்பதைப் பார்த்து 'நம்மிலும் பெரியவன் இவனைப் பற்றி யிருக்கிறான்; தேவர்கள் தாம் இவனுக்கு இவ்வேலையைக் கொடுத்திருப்பார்கள்' என்று அச்சத்தோடு இந்திரனிடம் சென்று, "சூரியனை விழுங்குவது என்னுடைய வேலையாயிருக்க, நீங்கள் மற்றொருவனுக்கு அப்பணியைக் கொடுத்திருக்கின்றீர்களே; எவனோ ஒருவன் வந்து சூரியனைப்பற்றி யிருக்கின்றானே; அவன் யார்?" என்று கேட்டான். தேவேந்திரன், "நாங்கள் யாருக்கும் அக்கட்டளையைப் பிறப்பிக்கவில்லை; அவன் யாரோ நடிக்கெதிரியாக வந்திருக்கின்றான்; அவனை இப்பொழுதே நான் விலக்கி விடுகிறேன்" என்று கோபத்துடன் ஐராவிதத்தின்மேலேறி இராகுவையும் அழைத்துக்கொண்டு போய்ச் சூரியனை யடுத்து நின்று, "நீ இந்தச் சூரியனை விழுங்கு" என்று இராகுவுக்குக் கட்டளை யிட்டான். இராகு சூரியனுக்குச் சமீபத்திற் சென்றான்; உடனே அனுமார் சூரியனை விட்டு இராகுவின்மேற்பாய்ந்தார். இராகு அவருக்குப் பயந்தோடி இந்திரனடியில் வீழ்ந்து புலம்பினான். அப்போது இந்திரன் அனுமார் செய்கைக்குச் சினந்து அவரை அடக்குதற்கு அவருக்கு முன்னே ஐராவதத்தைச் செலுத்திக் கொண்டு போனான். அங்ஙனம் சென்றதும் அனுமார் ஐராவதத்தின் நெற்றியிலிருந்த சிந்தூரப் பொட்டைப் பார்த்து, ஒரு சிவந்த கனியென்று நினைத்து அதன்மேல்

பாய்ந்தார். அதைக்கண்டு இந்திரன் வஜ்ராயுதத்தினாலே ஆஞ்சனேயரை அடித்தான். அவ்வடியினால் அனுமார் மூர்ச்சித்துக் கீழே வீழ்ந்தார்.

அதைக்கண்ட வாயுதேவர் ஓடிவந்து 'என் மகனை நீ இப்படி வீழ்த்தலாமோ?' என்று இந்திரனைக் கோபித்து 'நான் இதன் பொருட்டு உங்களையெல்லாம் அழிக்கிறேன் பார்' என்று கூறிவிட்டு எங்கும் காற்றே யில்லாமல் செய்து தம்முடைய புத்திரராகிய அனுமாரை விசனத்துடன் எடுத்துக்கொண்டு இமயகிரியிலுள்ளவோர் குகையிற் பிரவேசித்திருந்தார். அப்போது வாயுசஞ்சார மில்லாமற் போனபடியால் சகல ஜீவராசிகளும் துன்பத்தை யடைந்தன. தேவர்களும் முனிவர்களும் பிரமதேவரிடம் அத்துன்பத்தைச் சொல்லி முறையிட்டார்கள். உடனே நான்முகர் வாயுதேவரிடம் சென்று தேறுதலான வார்த்தைகளைக் கூறி மூர்ச்சித்துக் கிடந்த அனுமாரைத் தம்முடைய கரங்களால் தடவி மூர்ச்சை தெளிவித்தெழுப்பித் தேவர்களை நோக்கி, "நீங்கள் இந்த அனுமானுக்கு வரங்களைக் கொடுங்கள்" என்று சொன்னார். உடனே சூரியன் தன்னுடைய கிரணத்தில் நூற்றிலொரு பங்கு அனுமாருக்குண்டாகவும், சகல வித்தைகளையும் சுலபமாகக் கற்றுக்கொள்ளத் தக்க நுண்ணறிவுண்டாகவும் வரங்கொடுத்தான்; வருணன், தன்னுடைய பாசத்தால் அவருக்கு மரணமுண்டாகாதிருக்க வரமளித்தான். யமன் காலதண்டத்தால் சாவுண்டாகாதிருக்க அனுக்கிரகம் செய்தான்; குபேரன் தனது கதையால் அழிவுண்டாகாதிருக்க வரம் கொடுத்தான்; உருத்திரர் தம் சூலத்தால் கேடுறாதிருக்கக் கிருபை செய்தார். விசுவகர்மா சகல தேவர்களுடைய அஸ்திரங்களாலும் சாவுண்டாகாதிருக்க வரங்கொடுத்தான். பின்னர் பிரமா தம்முடைய பிரமாஸ்திரத்தினாலே அவருக்கு நாசமுறாதிருக்க வரங்

கொடுத்து விட்டு வாயுபகவானை நோக்கி, "இனி உமது புத்திரன் விஷ்ணுவின் இராமாவதார காலத்தில் அவருக்குத் துணையாயிருந்து இராவணன் முதலிய இராக்ஷதர்களை யொழித்து அவரனுக்கிரகத்தினாலே பரமபத மடைவான்" என்று சொன்னார். அதன் மேல் வாயு மகிழ்ந்து உலகங்களில் சஞ்சரித்துச் சகலருடைய துன்பங்களையும் போக்கினான். மற்ற தேவர்களெல்லாம் தங்கள் தங்கள் இருப்பிடஞ் சேர்ந்தார்கள்.

அதன்மேல் அனுமார் சகல தேவர்களிடத்தும் வரங்களைப் பெற்றுக்கொண்ட அகங்காரத்தினால் 'நமக்கு நிகரெவருமில்லை' என்று கருவங்கொண்டு எங்கும் சஞ்சரித்து முனிவர்களுடைய ஆச்சிரமங்களிற் புகுந்து ஓமத் திரவியங்களை எடுத்துண்டும், கமண்டலம் முதலியவற்றை யுருட்டியும் பாலிய சேஷ்டைகளைச் செய்துகொண்டு திரிந்தார். அதனால் முனிவர்கள் கோபங்கொண்டு, 'இவனுக்குத் தன்னுடைய பராக்கிரமம் தெரியாமற் போகக்கடவது' என்று அவருக்குச் சாபங் கொடுத்தார்கள். அதன்மேல் அவர் சாந்தத்தை யடைந்தவராய் முனிவர்களுக்கிதமாக நடந்து வந்தார்.

அப்படி யிருக்குங்காலத்தில் வாலியும் சுக்கிரீவனும் விரோதப்பட்டுச் சண்டைசெய்து, சுக்கிரீவன் வாலிக்குப் பயந்ததால் மதங்கமா முனிவரிடம் அடைக்கலம்புகுந்தான். அப்போது அனுமார் அந்தச் சுக்கிரீவனுடன் சிநேகங்கொண்டு மதங்க முனிவரைக் கண்டு வணங்கி அவரிடத்தில் சகல சாஸ்திரங்களையுங் கற்றுப் பின்னர் சூரியனிடம் சென்று, "எனக்கு அயிந்திரவியர்கரணம் போதிக்க வேண்டும்" என்று கேட்டார். அதற்குச் சூரியன், "ஒரு சுவாச காலத்துக்கு இருபத்தோராயிரத் தறுநூறு யோசனை தூரம் விரைந்து செல்லத்தக்க இரதத்திலேறி நான் உல

கத்தை ஓய்வில்லாமல சுற்றிக்கொண்டே யிருக்கிறேன்; இப்படி ஓரிடத்தில் நிலைகொள்ளாமல் சுற்றித் திரியும் என்னிடத்தில் நீ எப்படி வியாகரணம் கற்றுக் கொள்வாய்!” என்றான். அதற்கு அனுமார், “நானும் உம்முடன் கூடவே வந்து அதைக் கற்றுக்கொள்வேன்” என்றார். அதன்மேல் சூரியன் வியாகரணபாடஞ் சொல்ல இசைந்தான். ஆஞ்சனேயர் சூரியனுக்கெதிரில் நின்றபடி பறந்து சென்று கொண்டே ஆறு தினங்களில் அவனிடத்தில் அவ்வியாகரணத்தைக் கற்றுக்கொண்டார். அதன்மேல் ஸ்ரீ இராகவரே! உம்முடன் சேர்ந்து இராவண சம்மாரத்தை முடித்தார்” என்று கூறினர்.

ஜனகன் இராமரைப் பார்க்க வருதல்.

அனுமார் வரலாற்றைக்கேட்டு, இராமர் மகிழ்ச்சியுற்றிருந்தார். அப்படி யிருக்கும்போது ஒரு நாள் ஜனகமகாராஜன் இராமர் இராவண சம்மாரம் செய்து அயோத்திக்குத் திரும்பி வந்திருந்ததை யுணர்ந்து அவரையும் சீதாபிராட்டியாரையும் பார்க்க விரும்பிச் சகல பரிவாரங்களுடன், வேண்டிய நிதித்திரள்களையும், ஆடையாபரணங்களையும், வேறு அரிய பல வஸ்துக்களையும் எடுத்துக்கொண்டு அயோத்திக்கு வந்தான். அவன் வருகை யுணர்ந்து இராமர் அவனை எதிர்கொண்டழைத்து உபசரித்தார். ஜனகன் தான் கொண்டுவந்த வரிசைப்பொருள்களை இராமபிரானுக்கும் சீதாபிராட்டியாருக்கும் நல்கி, அவர்களுடைய க்ஷேமங்களை அவர்களிடம் விசாரித்து அங்கே விருந்துண்டு களித்திருந்தான். அப்படி யிருக்கும்போது மறுதினம் சகல மன்னர் மந்திரிகளும்புடைசூழ இராகவர் கொலுக்கூடத்தில் அமர்ந்தார். அப்போது ஜனகன், இராமர் அயோத்தியை விட்டு வனத்திற்குச் சென்றது முதல் திரும்பி வந்ததுவரை

நடந்த சரித்திரங்களை யெல்லாம் கூறும்படி இராமரிடம் கேட்டுக் கொண்டான். இராமர் அகஸ்தியரை நோக்கி, "முற்று முணர்ந்த நீரே அவ்விருத்தாந்தங்களை யெல்லாம் என் மாதுலர்க்குக் கூறவேண்டும்" என்று சொன்னார். அவர் ஜனகனுக்கு இராவணசம்மாரம் முதலிய எல்லா விவரங்களை யும் விளக்கமாகக் கூறினார். ஜனகன் அவற்றை யெல்லாம் கேட்டுத் தன் மகளும் மருமகனும் முதலில் அடைந்த துன் பங்களைப்பற்றிச் சிறிது வருந்திப் பின்னர் அவர்கள் மேன்மை யடைந்ததைப்பற்றி அளவில்லா மகிழ்ச்சி யுற்று அங்கே சில தினங்களிருந்து பின்னர் இராமரிடம் விடை பெற்றுக்கொண்டு மிதிலைக் கேகினான். அகஸ்தியர் முதலியமுனிவர்களும் இராமரிடம் விடை பெற்றுத் தங்கள் தங்கள் ஆச்சிரமங்களுக்குச் சென்றார்கள். அதன்மேல் இராகவர் ஜானகி தேவியாருடனும் தம்பிமார்களுடனும் சகலருங்கொண்டாடத் தருமஞ் செழித்தோங்க மனுநீதி தவறாமல் அயோத்தியில் அரசு செலுத்திக்கொண் டிருந்தார்.

புஷ்பகவிமானம் இராமரிடம் விடைபெற்றேகல்.

அப்படி யிருக்கும்போது ஒருநாள் இராமர் தம்பிமாரோடு திருவமுது செய்துகொண் டிருந்தார். அப்போது இலங்கையிலிருந்து இராமருடன்வந்த புஷ்பக விமான மானது குபேரனிடம் செல்லவேண்டிய காலம்வந்தபடியால் அசரீரியாக ஆகாயத்தில்வந்து இராமரை நோக்கி, "ஸ்ரீ இராகவரே! நான் இலங்கையிலிருந்து வந்த புஷ்பகம்; என்னை இராவணன் குபேரனிடமிருந்து கொண்டு வருங் காலத்தில் குபேரன் என்னிடத்தில், 'நீ இராவணனுடன் சென்று பலருடைய பகைகளைத் தேடிக்கொள்ளும்படி அவனைப் பற்பல இடங்கட்கும் விரைந்து கொண்டு சென்று அவனழிவதற் குதவியாயிருந்து அப்பாவி தொலைந்த பின்

என்னிடம் வந்துவிடு' என்று கட்டளை யிட்டார். அவர் கட்டளையை நான் நிறைவேற்றி விட்டேன்; இராவணனும் ஒழிந்தான்; ஆதலால், இனி நான் குபேரனிடம் செல்ல நீர் எனக்கனுமதி தரல் வேண்டும்" என்று கூறிற்று. அதைக்கேட்டவுடன் இராகவர் அதிசயித்து உடனே அந்தப் புஷ்பகவிமானத்திற்குப் பூஜைசெய்து, அதனிடம், 'நீ போகலாம்' என்று கட்டளை யிட்டார். அப்பொழுதே அவ்விமானம் அளகைக்குச் சென்று விட்டது.

பரதன் இராமரின் செங்கோற் சிறப்புரைத்தல்.

அவ்வாறுசென்ற விமானத்தின் தன்மையைப் பரதன் உணர்ந்து, ஆச்சரிய முற்றுப் பின்னர் இராமரை நோக்கி, "அண்ணா! உம்முடைய ஆளுகையில் அற்புதமான நீதிச் செயல்க ளெல்லாம் நடைபெற்று வருகின்றன; ஆயுதங் களால் ஜீவர்களுக்குக் கேடில்லை; யானைகளுக்கும் சிங்கங் களுக்கும் பகையில்லை; புலியும் பசுவும் நட்புடையனவா யிருக்கின்றன; நெருப்பினால் சாவாரில்லை; சிசுக்கள் மரண மில்லை; நோய் கொள்வாரில்லை; முதியவர்களுக்கும் சாவில்லை; கணவனை யிழக்கும் பெண்களில்லை; காற்று உடலுக்கின்ப மாக வீசிக்கொண் டிருக்கின்றது; பெண்களெல்லாம் ஆண் குழந்தைகளையே பெறுகின்றார்கள்; சகலரும் இராமரே அரசாள வேண்டுமென்று சிந்திக்கின்றார்கள்" என்று கூறி னான். இந்த மொழிகளைக் கேட்டு இராமர் சந்தோஷித்து முன்னிலும் அதிக காருண்யத்துடன் சகலரையும் ஆத ரித்து அரசுசெலுத்தி வந்தார். அப்படி யிருக்கும்போது இளவேனிற் பருவம் வந்தது.

இராமர் பிருந்தாவனம் செல்லுதல்.

அவ்வாறு பங்குனிப்பருவம் வந்தவுடனே இராமர் விநோதமாகச் சீதையுடன் பிருந்தாவனம் சேர்ந்து அங்

குள்ள சோலையின் விநோதங்களை யெல்லாம் ஜானகிக்குக் காட்டியும், மலர் கொய்தும், நீர் விளையாடியும், நடன மாதர்களின் ஆடல்கண்டும், பாடல்களைக் கேட்டும் சில தினங்கள் தங்கியிருந்தார்; அப்போது சீதாதேவி கருப்ப முற்றிருந்த படியாலும், கருப்பமுற்ற ஸ்திரீகளின் விருப் பத்தை நிறைவேற்றி வைப்பது புருஷர்களின் கடமையாத லாலும், அவளுக்கேற்படும் விருப்பத்தை அவர் நிறை வேற்றி வைக்கக் கருதி அந்த ஜானகியைநோக்கி, "காதலி! உனக்கு எதனிடத்து விருப்பமிருக்கின்றதோ அதை நீ என்னிடம் சொன்னால் நான் அவ்விருப்பத்தைப் பூர்த்தி செய்கின்றேன்" என்று சொன்னார். அதற்கு ஜானகி, "நாதா! உம்மை நாயகராக அடைந்த எனக்குக் கிடைக்காத தென்ன விருக்கின்றது; ஒன்றுமில்லை; எனினும் ஒரு சிறு விருப்ப மட்டும் இருக்கின்றது. நீர் கேட்டதற்காக நான் அதைக் கூறுகின்றேன்; அதாவது, நான் இன்னுமொரு முறை கங்கைக் கரையிலுள்ள வனத்திற்குச் சென்று முனிவர் ஆச்சிரமங்களி லிருந்து அவர்கட்குக் குற்றேவல்செய்ய வேண்டுமென்ற விருப்பம் எனக்கிருக்கின்றது" என் றுரைத்தாள். இராமர் "உன் விருப்பப்படியே நான் அதை நிறைவேற்றி வைக்கிறேன்" என்று சொன்னார். பின்னர் அவர்கள் அயோத்திக்கு வந்து சேர்ந்து ஆனந்த முற் றிருந்தனர்.

சீதை வனம்புகுதல்.

அப்படி யிருக்கும்போது சில தினங்கள் கழிந்த பிறகு ஒருநாளிரவு அயோத்தியிலிருந்த ஒரு வண்ணானுக்கும் அவன் மனைவிக்கும் சச்சரவுண்டாயிற்று. அந்தச் சண்டை யில் அவ்வண்ணான், வண்ணாத்தியை நோக்கி "இராக்ஷதன் சிறையெடுத்துக் கொண்டுபோய் வைத்திருந்த தன் மனைவி யைத் திரும்பவும் சேர்த்துக் கொண் டிருக்கும் இராமனைப்

போல் என்னை மானங்கெட்டவனென்று நீ நினைத்தாயோ!" என்று கோபித்துப் பேசினான். நகரசோதனைக்குப் போன இராமருடைய சேவகர்கள் அந்த வார்த்தையைக் கேட்டுக் கொண்டார்கள். தினந்தோறும் நடப்பவைகளை உண்மையாக இராமரிடம் கூறவேண்டியது அவர்களுடைய கடமையாதலின் அவர்கள் அதனையும் அவருக்குத் தெரிவித்தார்கள். இராமர் அதைக்கேட்டு 'நாம் எப்படியிருந்தாலும் நமக்கு உலக நிந்தை உண்டாகி விட்டதே' என்று மனக் கலக்கமுற்று அதனால் இரவெல்லாம் நித்திரையின்றி யிருந்து விடிந்ததும் எழுந்து நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு அதைப்பற்றி ஏதாவது யோசிக்க வேண்டுமென்று கொலுக்கூடத்தில் போய் அமர்ந்தார். அப்போது மன்னர் மந்திரிகளெல்லாம் அங்கு வந்து கூடினார்கள்; விஜய பத்திரன், தந்த வக்கிரன் முதலிய அகசியக் காரர்கள் வந்து வேடிக்கைகளைச் செய்துகொண் டிருந்தார்கள். அப்போது இராமர் முதல் நாளிரவு சேவகர் வார்த்தையைக் கேட்டுத் தம் மனத்திலுண்டான சந்தேகத்தால் அவர்களை நோக்கி, "நம் நகரத்திலும் நாட்டிலுமுள்ள ஜனங்கள் நம்மைப்பற்றி என்னபேசிக் கொள்கிறார்கள்?" என்று வினவினார். அதற்கு விஜயபத்திரன், "சுவாமி! உம்முடைய செய்கையைப்பற்றியும், இலக்குமணர் முதலியவர்களுடைய செய்கையைப் பற்றியும் சகலரும் புகழ்கின்றனர்; ஆனால் ஒரு குறைமாத்திரம் உம்மீது கூறுகின்றனர்; அதாவது, 'இராக்ஷதனிடம் ஒருவருஷம் வரையிலும் இருந்த சீதையை இராமர் மீண்டும் சேர்த்துக்கொண்டாரே' என்ற ஒரு நிந்தைமொழியைக் கூறுகின்றார்கள்" என்று சொன்னான். இராமர் முதல் நாளிரவு சேவகர்மூலம் கேட்டதும், விஜயபத்திரன் வார்த்தையும் ஒத்திருந்த படியால் தமக்கு நிச்சயமாக உலகாபவாத முண்டாயிருக்கிற தென்று தீர்

மானித்து, விசனித்துச் சபையிலிருந்தவர்களை நோக்கி, "இதைப்பற்றி நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்?" என்றார். அவர்கள், "சுவாமி! உலகத்தார் அப்படித்தான் பேசுகிறார்கள்; உட்காரியத்தை உணராமல் உலகம் வாய்க்குவந்ததைப் பேசுவது இயற்கைதானே" என்று சொன்னார்கள்.

அவர்கள் அவ்வாறு கூறியும் இராமர் விசனம் நீங்காமல் மிக வியாகூல மடைந்தவராய் "இதனை எவ்வாறு தீர்த்துக் கொள்ளலாம்" என்று சிந்தித்து அங்கிருந்த எல்லோரையும் அனுப்பிவிட்டுத் தம்பிமார்கள் மூவரையும் தனியே வைத்துக்கொண்டு அவர்களை நோக்கி, "தம்பிமார்களே! சீதையை நான் அழைத்து வந்ததைப் பற்றி நிந்தை உண்டாயிருப்பது உங்களுக்குத் தெரியும்; சீதையோ தோஷ மற்றவளென்பது எனக்கும், உங்களுக்கும், அறிவுள்ள மற்றையர்க்கும் தெரியும்; பாமர ஜனங்களுக்கு அது தெரியாது; ஒருவருடைய கஷ்ட நஷ்டங்களையும் உண்மையான இயற்கைகளையும் ஆராய்ந்துணராமல் மேற்போக்கான விஷயங்களை மாத்திரம் கவனித்து அவர் மீது குறை கூறுவதே உலகத்தாரின் இயற்கையா யிருக்கின்றது; அவசரப்பட்டு ஒருவரைத் தூற்றுவதில் உலகத்தார்க்கு மிகவிருப்ப முண்டாவது இயற்கை; உலகத்தார் தெரிந்து ஒன்றைச் சொன்னாலும் தெரியாமற் சொன்னாலும் அவர்களுடைய வார்த்தையே ஒருவர்க்கு இகழ்ச்சியும் புகழ்ச்சியுமாய் நிற்கின்றது; ஆதலின் உலகத்தார்க்கு நல்ல அபிப்பிராய முண்டாகும்படி நடந்துகொள்பவருக்கே புகழுண்டாகும்; அதற்காக நான் இப்பொழுது சீதையைக் காட்டிற் கனுப்பிவிடத் தீர்மானித் திருக்கின்றேன். இச் செய்கையை நிறைவேற்றினால் தான் உலகத்தார் என்னை நிந்திக்காமலிருப்பார்கள். இவ்விஷயம் எனக்கு ஆறுத்துயரத்தையே உண்டு பண்ணுகின்றது; உங்களுக்கும் இதனால்

அவ்வாறே துயரமுண்டாகும்; எனினும் நாம் என் செய்ய லாம்; உலகத்தை அனுசரித்து நடத்தல் வேண்டும்; சீதைக் குத் தலைவிதியும் இப்படி அமைந்திருக்கின்றது; நீங்கள் இதற்குத் தடை சொல்லாதீர்கள்" என்று சொல்லிவிட்டு இலக்குமணனை நோக்கி, "தம்பி! சீதை முனிவர் ஆச்சிரமத் தில் வாசஞ்செய்யத் தனக்கு விருப்பமா யிருக்கிறதென்று முன்னொருதினம் என்னிடம் தெரிவித்தாள்; நான் அப் படியே அதைச் செய்யலாமென்று அவளுக்குச் சொல்லி யிருக்கின்றேன்; ஆதலின் நான் அதன் பொருட்டுச் சீதையை வனத்திற்கு அழைத்துக்கொண்டு போகச் சொன்னதாக நீ அவளிடம் சொல்லி அவளை நாளைக்கே தேர் மேலேற்றிக் கொண்டுபோய்க் கங்கையைக் கடந்து வான் மீகர் ஆச்சிரமத் தருகில்விட்டு வந்துவிடு" என்றார்.

அதைக் கேட்டவுடன் இலக்குமணன் அதன் பொருட்டு மனம்பதறி ஆறாத்துயரங்கொண்டு திகைத்துச் சிறிது நேரம்வரை ஒன்றுந் தோன்றாமல் நின்று பின்னர் தமையனார் கட்டளையை மீறக் கூடாதென்று தன் மாளி கைக்கேகி 'அந்தோ! இவ்விரவு நீங்காதிருந்தால் நான் பழிக்காளாகாதிருப்பேனே!' என்று அன்றிரவெல்லாம் தூக்கமின்றி விம்மி யழுதுகொண்டிருந்து விடிந்தவுடன் சுமந்திரனிடம் சீதை மாளிகைக்கு முன் தேரைக் கொண்டு வரும்படி சொல்லிவிட்டுச் சீதாபிராட்டியின் திருமாளிகைக் குப் போய்த் துக்கத்தை வெளிக்குக் காட்டாமல் அடக்கிக் கொண்டு முகமலர்ச்சியோடு அவளைநோக்கி, "தாயே! தாங்கள் முனிவர் ஆச்சிரமத்தில் வசிக்க விரும்புவதாக அண்ணாவிடம் தெரிவித்தீர்களாம். தங்கள் விருப்பப்படி நான் தங்களைக் கங்கைக் கரையிலுள்ள முனிவர் ஆச்சிரமத் திற் கழைத்துக்கொண்டு போகும்படி அண்ணா எனக்குக் கட்டளை யிட்டிருக்கின்றார்; ஆதலின் தேவரீர் அங்குச்

செல்ல எழுந்தருள வேண்டும்" என்று சொன்னான். சீதை உண்மையை உணராதவளாய் மகிழ்ச்சியுற்றுத் தனக்கு வேண்டிய ஆடையாபரணங்கள் முதலிய பொருள்களை யெல்லா மெடுத்துக்கொண்டு புறப்பட்டாள். அதற்குள் சுமந்திரன் தேரைக் கொண்டுவந்து வாசலில் நிறுத்தினான். சீதையும் இலக்குமணனும் இரதத்திலேறிக் கங்கைக் கரையை நோக்கிப் போனார்கள். அவ்வாறு செல்லும் போது வழியில் சில அவசகுனங்கள் உண்டாயின. சீதை அவற்றைக் கண்டு அஞ்சி, இலக்குமணனிடம் கூறினாள். இலக்குமணன், 'உமக்கொரு குறைவும் வாராது; எல்லாம் நன்மையாகவே முடியும்' என்று அவளுக்குத் தேறுதல் சொல்லி அவளை அழைத்துக்கொண்டு போய் இரவு வந்த வுடன் அவளோடு கோமதியாற்றங்கரையி லிறங்கி, அவ் விரவை அங்கிருந்து கழித்து மறுநாளுதயத்தில் அவ் விடத்தைவிட்டுப் புறப்பட்டுக் கங்கைக் கரைசேர்ந்து ஜானகியை இரதத்தினின்று மிறக்கிவிட்டுச் சீதைபிரிவு குறித்துக் கோவென்று கதறி யழுதான். அப்போது ஜானகி அவனை நோக்கி, "மைத்துனரே! நீர் என் அழுகின்றீர்? 'தமையனாரைப் பிரிந்துவந்ததற்கு விசனப்படுகின்றீரோ? நாம் இரண்டு தினங்களில் திரும்பி விடுவோம்; நீர் துக்கப்படவேண்டாம்" என்றுஅவனுக்குச் சமாதானம் கூறினாள்.' அதன்மேல் இலக்குமணன் ஒன்றும் பேசாமல் சுமந்திரனைத் தேருடன் அங்கேயே நிறுத்திவிட்டுச் செம்படவர்களால் ஒரு படவு கொண்டுவரச்செய்து அதில் சீதையை ஏற்றித் தானும் ஏறிக்கொண்டு கங்கையைத் தாண்டி அக் கரையில் பிராட்டியாரை இறக்கிவிட்டுத் தான் அவருக்கெதிரில்போய் நின்று கண்ணீர் ஆறாய்ப்பெருக அழுதுகொண்டு இராமரின் உண்மையான கட்டளையைத் தெரிவித்தான்.

அந்த வார்த்தை செவியுட்புகுமுன்னரே சீதை "அந்தோ! காலமெல்லாம் எனக்கு இக்கதிதானே நோ வேண்டும்; இதற்கோ நான் பெண்ணாய்ப் பிறந்தேன்" என்று அடியற்ற மரம்போல் திடீரென்று பூமியில் வீழ்ந்து மூர்ச்சித்துச் சிறிதுநேரம் சென்று தெளிந்து கண்ணீரொழுகக் கதறி இலக்குமணனை நோக்கி,

"பண்பிறந்த சொல்மடவார் பழித்தென்னை நகைப்பர்களோ
எண்பிறந்த வன்னெஞ்ச னிராகவனென் றியம்புவரோ
மண்பிறந்த பின்பிறந்த மறிகடல்சூழ் வையகத்துப்
பெண்பிறந்தார் யான்பட்ட பெருந்துயர மியார்பட்டார்.

கனிமனத்துக் காகுத்தன் கடலுலகிற் பழிக்கஞ்சித்
தனியொருத்தி யான்கதறத் தனிக்காட்டில் விடுவித்தான்
பனியகற்று மாஇத்தன் பயந்தெடுத்துப் பழிப்பற்ற
மனுகுலத்திற் பிறந்தார்கட் கிவையோதான் மனுநெறியே.

கைகேசி மனந்திரியக் கற்பித்த கூனியைப்போல்
மையார்கண் மடவாரோ மைந்தரோ மண்ணுலகில்
ஐயோவென் காதலனை யாரோவிக் காரியத்தைச்
செய்வாயென் றிப்பொழுது சிந்தையுறக் கற்பித்தார்."

மைத்துனரே! பகவான் துக்கத்துக்கென்றே என்னைப் படைத்திருக்கின்றான்; முற்பிறப்பில் நான் என்னபாவஞ் செய்தேனோ! நான் தோஷமற்றவளென்று தெரிந்திருந்தும் நாதர் உலக நிந்தனைக்கஞ்சி என்னைப் பிரிக்கத் துணிவு கொண்டார்; அவர்மீது குற்றமில்லை; என் தலைவிதி இவ்வாறாகச் செய்தது; அந்தோ! நான் முந்தி அவரோடு கூடி வனத்தில் வாசஞ்செய்தேன்; அப்படி யிருக்கும்போதே எனக்காபத்து நேர்ந்தது; இப்பொழுதோ நான் தனித்திருக்கின்றேன்; எனக்கென்ன தீங்கு நேருமோ; எவர் துணைச்செய்வார்? நான் உயிரைப் போக்கிக் கொள்ளலாமென்றால் அது

சூரியகுலத்திற்கிழிவாகுமே; இனி எனக்கு என்ன சம்பவித்தாலும் சம்பவிக்கட்டும்; நீர் தமையனர் கட்டளைப்படியே திரும்பி நகர்க்குச்செல்லும்; என் நாயகரிடத்தில், என்னுடைய மனோபாவத்தை அவர் உணர்ந்திருந்தும் இவ்வாறு பழிக்கஞ்சி என்னை வனத்தில் விடுத்ததற்கு நான் வருந்துகிறேன் என்று சொல்லும்; நாயகன் சொற்படி நடத்தலே பதிவிரதைகட் கழகாதலின் நான் அவர் கட்டளைப்படி வனத்தில் இருக்க இசைந்தேனென்று சொல்லும்; என்மீது அவர் வைத்திருக்கும் அன்பை மறவாதிருக்கச் சொல்லும்; கருவுற்றிருக்கும் அடியாள் எவ்வாருயினும் அவர் மாத்திரம் மனுநீதி தவருமல் அரசு செலுத்துமாறு அவரிடம் சொல்லும்; என் மாமிமார்களுக்கு என் வந்தனத்தைக் கூறும்" என்று விம்மிவிம்மி யழுதுகொண்டே சொன்னுள்.

இவற்றையெல்லாம் கேட்ட இலக்குமணன் மனங் கரைந்து சீதையை வலம்வந்து பணிந்து நின்று "அம்மணி! நீர் கூறியவற்றை யெல்லாம் இராமபிரானிடம் நான் தவருது சொல்லுவேன்; பூர்வத்தில் சந்திரமதியும், தமயந்தியும் தலைவிதியால் நாயகனைப் பிரிந்திருந்து பின்னர்த் தெய்வகிருபையால் மேன்மை யடைந்தார்கள்; அவ்வாறே நீரும் உயர்வடைவீர்; உமக்கொரு குறைவும் வராது" என்று கூறி அவளிடம் விடை பெற்றுக்கொண்டு கண்ணீர் ததும்ப மீண்டும் படகேறிச் சீதையைத் திரும்பிப் பார்த்தவண்ணமாகவே கங்கையைத் தாண்டிச் சுமந்திரனிருக்குமிடம் போய்ச் சேர்ந்தான்.

சீதை வான்மீகராச்சிரமஞ் சேர்தல்.

ஜானகி, இலக்குமணன் செல்வதைப் பார்த்துக் கொண்டேயிருந்து அவன் தன் கண்களுக்கெட்டாமல் மறைந்தவுடன் துக்கக்கடலில் மூழ்கி,

" இலங்கையிலே நெடுங்கால மிருஞ்சிறையி லேயிருந்து
புலம்பியழு தியான்பட்ட புல்லனவும் போதாமல்
தலங்குலவப் பழிபூட்டித் தனிக்கானில் விடுவித்து
விலங்கரிய துயர்விளைத்த விதியேயோ விதியேயோ.

ஏதமுறு பழியூட்டி இப்பிறப்பி லெனை யொழிய
மாதரையென் மனத்தாலுந் தொடேனென்று வரந்தந்த
காதலனை மனங்கலக்கிக் காட்டிலெனை விடுவித்து
வேதனைநோய் செய்வித்த விதியேயோ விதியேயோ."

என்று பலவாறு புலம்பிக் கொண்டிருந்தாள். அங்கே திரிந்துகொண்டிருந்த முனிவர் புத்திரர்கள் சீதை அவ்வாறு புலம்பிக் கொண் டிருந்ததைக் கண்டு வான்மீகரிடம் சென்று தெரிவித்தார்கள். அவர் ஞானதிருஷ்டியால் சீதையின் வரலாறுகளை யெல்லாம் உணர்ந்து உடனே சீதையிடம் வந்து, "அம்மணி! உன்னுடைய விஷயங்களை நான் உணர்ந்தேன்; இந்நிகழ்ச்சி விதிப்படி நேர்ந்தது; இதற்காக நீ துயரப்படாதே; உன் மாமனுருக்கு நான் தோழன்; ஆதலின் நீ எனக்கு மருமகள்; இங்கே தவஞ்செய்யும் பெண்டிர் பலர் இருக்கின்றனர்; அவர்களுடன் நீ சேர்ந்து கவலையற்றுத் தவஞ்செய்துகொண் டிருக்கலாம்" என்று தேறுதலான வார்த்தைகள் கூறி அருக்கிய ஜலத்தை அவளுக்குக் கொடுத்து அவளை அழைத்துக் கொண்டுபோய்த் தம்முடைய ஆச்சிரமத்திற் கருகிலிருந்த தவப் பெண்களிடம் விடுத்து அவளுடைய வரலாற்றைக் கூறி, "இந்த ஜானகி ஒரு காரணத்தால் இங்கு வந்திருக்கின்றாள்; நீங்கள் இவளை ஆதரித்துக் கொள்ளுங்கள்" என்று கூறினார். அவர்கள் சீதையை மிகவும் உபசரித்துத் தங்களோடு சேர்த்துக் கொண்டார்கள். ஜானகி அங்கே யாதொரு விசாரமுமின்றி ஒரு மனதுடன் தவஞ்செய்து கொண்டிருந்தாள்.

சீதை செய்தி இங்ஙனமிருக்க, கங்கையைக் கடந்து

சென்ற இலக்குமணன் சுமந்திரனிடம் சேர்ந்து அப்போது சீதையின் விஷயமாக நடந்தவைகளைக் கூறி "இராகவருக்கு எப்பொழுதும் இத்தகைய விசன சம்பவங்களே நடந்து கொண்டிருக்கின்றன" என்று துயரப்பட்டான். இத்தகைய விஷயங்கள் நடைபெறுமென்பது முன்னமே ஒரு காரணத்தால் சுமந்திரனுக்குத் தெரியுமாதலால் அப்போது சுமந்திரன் இலக்குமணனுடைய துயரத்திற்கு மனங்கலங்காமல் அவனை நோக்கி, "ஐயா! இவற்றிற் கெல்லாம் காரணமிருக்கின்றது; இராமர் இப்போது சீதையை மாத்திரந்தான் விட்டுப் பிரிந்தாரென்று நீர் நினைக்கவேண்டாம்; இனி உம்மையும், பாதர் சத்துருக்கரையும் கூடப் பிரியப் போகின்றார்; இந்த இரகசியத்தை உமது பிதாவின் முன்னிலையில் முந்தி ஒரு முனிவர் கூறினார்; இதை நானும் அப்போது கேட்டுக் கொண்டிருந்தேன்; இதனை எவரிடத்தும் வெளிப்படுத்தல் கூடாதென்று தசரதர் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்; ஆதலின் இதனை நான் வெளிப்படுத்தல் கூடாது; நீர் இதைப்பற்றி விசனிக்க வேண்டியதில்லை" என்று சொன்னான். அதைக்கேட்டு இலக்குமணன் அவனை நோக்கி "அஃதென்ன! எனக்கும் நீர் மறைக்கக் கூடியதா? என்னிடத்தில் அதைச் சொல்லலாம்; நான் எவருக்கும் வெளிப்படுத்தாம லிருப்பேன்" என்று சொன்னான். அதன்மேல் சுமந்திரன், இலக்குமணனை நோக்கி, "அப்படியானால் உமக்கு மட்டும் நான் அதைச் சொல்லுகிறேன் கேளும்: முன்னொரு காலத்தில் துருவாசமுனிவர், வசிஷ்டருடைய ஆச்சிரமத்திற்கு வந்திருந்தார்; அப்போது அங்கே தசரதரும் குருதரிசனத்திற்குச் சென்றார்; நானும் அவருடன் போயிருந்தேன்; அங்ஙனம் நாங்கள் கூடியிருந்த தருணத்தில் தசரதர் துருவாசரிடத்தில், 'ச்வாமி! என்குலம் எதுவரை விருத்தியடையும்? இராமனுக்கு ஆயுள் எவ்வளவு? அவனு

டைய வாழ்க்கை எவ்வாறு நடைபெறும்?' என்று வினவி னார்; அதற்கவர், 'சக்கிரவர்த்தியே! பூர்வத்தில் தேவர்க்கும் அசுரர்க்கும் பெரும்போர் நடந்தபோது மகாவிஷ்ணு அசுர ரைத் துரத்த அவர்கள் ஓடிப் பிருகுமுனிவரின் ஆச்சிர மத்தில் அவர் பத்தினியிடம் அடைக்கலம் புகுந்தார்கள்; அவள் அவர்களை மறைத்து வைத்திருந்தாள்; அப்போது விஷ்ணு அவளிடம் சென்று அசுரரைக் காட்டும்படி பல வாறு கேட்டுக்கொண்டார். அவள் அதற்கிசைய வில்லை. அதனால் விஷ்ணு கோபங்கொண்டு அவளை வெட்டி அசுரர் களையும் வதைத்தார். அப்போது பிருகு முனிவர் விஷ்ணு வின் செய்கைக்காகக் கோபித்து அவரை நோக்கி, 'நீர் என் பத்தினியைக் கொன்று என்னைத் தனியனாக்கியபடியால் நீரும் மனுஷியாவதார மெடுக்கும்போது பத்தினியைப் பெரும்பாலும் பிரிந்திருக்கக் கடவீர்' என்று சாபமிட்டு விட்டுக் கோபந் தணிந்தவுடன் தாம் விஷ்ணுவுக்குச் சாபங் கொடுத்தது தகாதென்று அந்த விஷ்ணுவை நோக்கி, 'நான் கோபத்தால் உமக்குச் சாபங் கொடுத்துவிட்டேன்; இக் குற்றத்தை நீர் பொறுத்துக்கொள்ள வேண்டும்' என்று தாழ்ந்துரைத்தார். அதற்கு விஷ்ணு அவரிடத்தில் 'நீரிட்ட சாபத்தை நான் ஏற்றுக்கொள்ளவே வேண்டும்; இன்றேல் உம்முடைய பெருமை கெடும்' என்று அதனை ஏற்றுக்கொண் டார்; அந்த விஷ்ணுவே உம்முடைய புத்திரராகிய இராம ரானபடியால் அவர் பெரும்பாலும் மனைவியைப் பிரிந்திருப் பார்; தருமவானாய்ப் பல யாகங்கள்செய்து அரசு செலுத்து வார்; ஆனால் அவருக்கு இன்பமனுபவிக்குங் காலம் உலகில் கொஞ்சமா யிருக்கும்; ஜானகியிடம் இரண்டு பிள்ளைகள் உதிப்பார்கள்; அவர்கள் அயோத்தியில் பிறக்க மாட்டார் கள்; வனத்திற் பிறப்பார்கள்; அவர்கள் பட்டம் பெற்றுச் சந்ததி நீடித்திருக்கச் செய்வார்கள்; முடிவில் இராமர்

வைகுண்டம் சேர்வர்' என்று சொன்னார். அதனாலேயே இந்நிகழ்ச்சிக ளெல்லாம் உண்டாகின்றன; ஆதலின் நீர் இவற்றிற்காக விசனப்படல் கூடாது" என்று சொன்னான். அதன்மேல் இலக்குமணன் துக்கம் நீங்கித் தேரேறிச் சுமந்திரனோடு புறப்பட்டுச் சென்று இரவு வந்ததும் கேசினி நதிக்கரையில் தங்கி அவ்விரவைக் கழித்து விடிந்த பின் அங்கிருந்து புறப்பட்டு நடுப்பகலில் அயோத்தியை அடைந்து இராமரைக் கண்டு அவரிடம், சீதையை வனத்தில் விட்டு வந்ததையும், அவள் சொல்லிய வார்த்தைகளையும் கூறினான். அவற்றைக் கேட்டு இராமர் துக்கத்தால் மனங்கலங்கித் துயரமான வார்த்தைகளைக் கூறினார். இலக்குமணன், சுமந்திரன் கூறியதால் இராமரின் இரகசியத்தை உணர்ந்தவனாதலின் அவருடைய துக்க வார்த்தைகட்கு மனங்கலங்காமல் அவருக்குத் தேறுதலான வார்த்தைகளைக் கூறினான். அதன்மேல் இராமர் சிறிது துக்கந் தணிந்திருந்தார். சீதையின் பிரிவைப்பற்றி அரண்மனையிலுள்ள எல்லோரும், மற்ற விவேகிகளும் துயரமுற்றிருந்தார்கள்.

இராமர், இலக்குமணனுக்குச் சில நீதிகள் கூறத் தொடங்கிப் பார்க்கராஜன் கதை சொல்லல்.

அதன்மேல் இராமர் இராஜ காரியங்களைக் கவனிக்கத் தொடங்கி ஒருதினம் தனியிடத்திலிருந்து இலக்குமணனைச் சமீபத்திலழைத்து உட்காரவைத்துக்கொண்டு அவனுக்குச் சில இராஜ நீதிகளைக் கூறவிரும்பி அவனை நோக்கி, "தம்பி! நெடுநாளாக நாம் செங்கோல் முறையைக் கருதாதிருக்கின்றோம்; அரசனாயிருப்பவன் ஆட்சி முறையைக் கவனித்து நீதிமார்க்கத்தில் நடத்தல்வேண்டும்; தன்னிடம் வரும் வழக்குகளைக் கவனித்து நீதித்தீர்ப்புச் செய்யவேண்டும்; கோபத்தை நீக்கவேண்டும்; குரோதத்தை அகற்றவேண்

டும்; இந்நீதிகளைக் கைக்கொள்ளாத அரசனுக்குக் கேடு சம்பவிக்கும்; அங்ஙனம் நீதி தவறிக் கேடடைந்த அரசர்கள் பலருண்டு. அவர்களுள் சிலருடைய சரித்திரங்களைக் கூறுகிறேன் கேள்: பூர்வத்தில் பார்க்கன் என்னுமோர் அரசனிருந்தான்; அவன் மிக்க தானதருமங்களைச் செய்து வந்தான். அங்ஙனம் செய்துவரும்போது பற்பலகாலங்களில் சித்திக்கும் புண்ணியங்களெல்லாம் ஒரு நிமிஷத்தில் சித்திப்பதாகிய மகா புண்ணியகாலம் ஒரு சமயத்தில் வந்தது. அக்காலத்தில் அம்மன்னன் தானஞ்செய்தால் மிக்க புண்ணியஞ் சித்திக்குமென்றுணர்ந்து அனேகம் பசுக்களைப் பிராமணர்களுக்குத் தானம்பண்ணினான். அவ்வாறு செய்துகொண்டிருந்த அத்தருணத்தில் நெடுந்தூரத்திலிருந்து ஓர் ஏழைப்பிராமணன் அவனிடம் தானம் பெறவந்தான்; அம்மன்னன் அவனுக்குமொரு பசுவைத் தானங்கொடுத்தான்; அவ்வேதியன் அதைக்கொண்டுபோய்த் தன்னுடைய வீட்டிலே கட்டிவைத்தான். அந்தப்பசு ஒருநாள் பார்ப்பானுடைய கட்டினின்றும் விடுபட்டு அரசனுடைய பசுக்கூட்டத்தில் மீண்டும் வந்து சேர்ந்தது. அரசன் அதைத் தெரிந்துகொள்ளாமல் மற்றொரு சமயம் தானம் பண்ணும்போது அந்தப் பசுவையே வேறொரு வேதியனுக்குக் கொடுத்தான். அவன் அதைக்கொண்டுபோய்த் தன் வீட்டில் கட்டிவைத்தான். அப்படியிருக்கும்போது முன்னே அப்பசுவைத் தானம் பெற்ற வேதியன் அதனைத் தேடிச் சென்று பிந்தித் தானம் பெற்ற வேதியன் வீட்டில் அது நிற்றலைக்கண்டு அவனிடத்தில் 'இஃதென்னுடைய பசு' என்றான். அவன் 'என்னுடையது இது' என்றான். இருவருக்கும் அது விஷயமாக வழக்குண்டாயிற்று; அவர்கள் வழக்கைப் பார்க்கராஜனிடத்திலேயே தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று அவனுடைய அரண்மனைவாயிலில் போய்க்

காத்திருந்தார்கள். அப்படி அவர்கள் பலதினங்கள்வரை காத்திருந்தும் அவர்களுக்கு அவ்வரசனைக்காணல் முடியவில்லை. அப்படி யிருக்கும்போது ஒருநாள் அவர்கள் அம்மன்னனைக் கண்டு தங்கள் வழக்கை அவனிடம்கூறினார்கள். அப்போதும் அவ்வரசன் தன் செல்வப்பெருக்கின்மமதையால் அந்த ஏழைப் பிராமணர்களின் வழக்கை விசாரிக்கவில்லை. அதனால் அவ்விருவரும் மனம்வருந்திப் பின் ஒருநாள் அம்மன்னனைக் கண்டு 'நீ எங்கள் வழக்கைக் கவனியாதபடியால் ஓந்தி வடிவாகக் கடவாய்' என்று அவனுக்குச் சாபமிட்டார்கள். அதைக்கேட்டு அவ்வரசன் பயந்து, அப்பிராமணர்களிடத்தில், 'இஃதறியாமையால் நேர்ந்ததாகும்; ஆதலின் நீங்கள் என் குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும்' என்று வேண்டினான்; அப்போதவ்வேதியர்கள், "நீ ஓந்தி வடிவத்துடனேயே நெடுங்கால மிருந்து துவாபரயுகத்தில் மகா விஷ்ணுவின் அவதாரமாகும் கிருஷ்ணபகவானால் இச்சாபம் நீங்கப் பெறுவாய்" என்று அவனுக்குக் கூறி அந்தப்பசுவை வேறொரு பிராமணனுக்குக் கொடுத்துவிட்டுப் போனார்கள். அதன்மேல் அம்மன்னன் ஓந்தி வடிவாகி ஒரு பாழ்ங்கிணற்றில் தலைகீழாகத் தொங்கிக்கொண்டு கிடந்தான். இது நீதி விசாரணை செய்யாக் குறைவால் நேர்ந்தது.

இராமர், இலக்குமணனுக்குக் கூறிய வசிஷ்டர் கதை.

இது நிற்க முன்னொரு காலத்தில் நம் குலத்தில் உற்பவித்த நிமிச்சக்கரவர்த்தி ஒரு சமயம் சத்திரயாகஞ் செய்ய வேண்டி அத்திரி, பிருகு, ஆங்கிரசர், வசிஷ்டர் என்னும் நான்கு முனிவரிடத்தும் அதனை நிறைவேற்றி வைக்கும்படி கூறினான். அப்போது இந்திரன் ஒருயாகஞ் செய்யவேண்டி அதன்பொருட்டு வசிஷ்டரை அழைத்துவருவதற்கு அவரிடம் தேவதூதனை அனுப்பினான். அத்தூதன் வந்து வசிஷ்

டருக்கு இந்திரன் விருப்பத்தைத் தெரிவித்தான். அதனால் அவ்வசிஷ்டர், 'நான் தேவலோகஞ் சென்று இந்திரனுடைய யாகத்தை நிறைவேற்றித் திரும்பிவந்து இதனைச் செய்கின்றேன்' என்று அம்மன்னனிடம் கூறிவிட்டுப் பொன்னுலகத்திற்குப் போயினர். அதன்பொருட்டு நிமி அவர்மீது கோபங்கொண்டு, "இந்த வசிஷ்டனில்லாவிட்டால் என் யாகம் நிறைவேறாதோ" என்று கௌதமரை அழைத்து அவர் முன்னிலையில் அந்தச் சத்திரயாகத்தை நடப்பித்துக் கொண்டிருந்தான். அப்போது சுவர்க்கலோகஞ் சென்ற வசிஷ்டர் இந்திரனுடைய யாகத்தை நிறைவேற்றிவிட்டு, நிமி தம்மை அவமதித்ததை யுணர்ந்து அவன்மீது சினங்கொண்டு திரும்பி அவனுடைய யாகசாலைக்குவந்தார். அவர் அவ்வாறு வந்தசமயம் நிமி நித்திரை செய்துகொண்டிருந்தபடியால் அவரைக் காணுதல் நேராமற் போயிற்று. அதனால் வசிஷ்டர் மேலும் அதிகமாகக் கோபங்கொண்டு "நிமி முன்னே நம்மை மதியாமல் யாகஞ்செய்ததோடு இப்போதும் நம்மிடம் வராமல் அலக்ஷியம் செய்துகொண்டிருப்பதாலும், பிணம்போல் தூங்கிக் கிடப்பதாலும் அப்படியே மரணமடையக் கடவன்" என்று அவனுக்குச் சாபமிட்டார். நிமி அதனைக் கேள்விப்பட்டு, 'நான் வசிஷ்டர் வந்ததையுணராமல் நித்திரை செய்துகொண் டிருக்கும் போது அவர் என்மீது குற்றமேற்படுத்தி எனக்குச் சாபமிட்டபடியால் அச்சாபம் அவரையும் பற்றக்கடவது' என்று அவருக்குப் பிரதி சாபமிட்டான். அந்த நிமி தவத்திற் சிறந்தவனாதலின் அவனுடைய சாபத்தால் வசிஷ்டருக்கு நிச்சயமாக மரணம் சம்பவிக்கக் கூடியதாயிருந்தது. அது அம்முனிவருக்குத் தெரியும். அதனால் அவர் தமக்குச் சாவு வருமென்று பயந்து உடனே பிரமனிடம் சென்று தம் சாப வரலாற்றைக் கூறி 'நான் இந்தச் சாபத்தினாலே

யிறந்து ஜனன மரணங்களுக் கேதுவான யோனி பேதங்க ளிற் பிறவாமல் இந்தச் சாப நிவர்த்திக் கேதுவாக எனக்கு வேறொரு ஜனன முண்டாகும்படி நீர் அநுக்கிரகஞ் செய்ய வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். அதற்குப் பிரமா அவரை நோக்கி, 'முன்னொரு காலத்தில் சூரியன் ஊர்வசி யைக் கண்டு அவள்மீது மோகங்கொண்டு 'நீ என்னைச் சேர வேண்டும்' என்று கேட்டான். அதற்கவளிசைந்து, அப் பால் வருகிறேனென்று அவனிடம் சொல்லிப் போய் ஒரு புஷ்ப தடாகத்திலே ஜலக்கிரீடை செய்துகொண்டிருந் தாள். அப்போது வருணன் அவளைக்கண்டு விரும்பி 'நீ எனது விருப்பத்தைப் பூர்த்திசெய்யவேண்டும்' என்று அவளிடம் சொன்னான். அதற்கவள், 'நான் முன்னே சூரிய னுடைய சேர்க்கைக் கிசைந்திருப்பதால் உம்மைச் சேருதல் தகாது' என்று கூறினாள். அத்தருணத்தில் வருணனுக்கு விகாரத்தால் நாதம் வெளிப்பட்டது. அஃது அமரர்கள் வகுத்த ஒரு குடத்தில் அவ்வருணனால் சேர்க்கப்பட்டது; அதில் அகஸ்தியர் உற்பவித்தார். ஊர்வசி முன்னே வருணன் சேர்க்கைக் கிசையாதிருந்தும் பின்னர் அவளுக்கு அவ் வருணனிடத்திலும் மனதிற்குள் விருப்பமுண்டாயிற்று. அவ்விருப்பத்துடன் அவள் சூரியனிடம் சென்றாள். அவன், அவள் வருணனை விரும்பியிருக்கும் மனக்குறிப்பையுணர்ந்து, 'நீ வருணனிடமும் இச்சை வைத்துக்கொண்டு இங்கு வந்தபடியால் பூவுலகில் நரஜன்ம மெடுத்துப் புரூரவனுக்குப் பாரியாகியிருந்து நெடுங்காலஞ் சென்று தெய்வலோகத் திற்கு வரக்கடவாய்' என்று அவளைச் சபித்து வீரியத்தை விட்டான். அதனையும் தேவர்கள் மேற்கூறியபடி வருண நாத மிகுந்த கும்பத்தில் சேர்த்திருக்கின்றார்கள்; நீர் இந்தச் சரீரத்தைவிட்டு அந்தக் குடத்திலேயே பிரவேசித்துத் திவ்ய சரீரத்தை எடுத்துக் கொள்வீராக' என்றுசொன்னார்.

வசிஷ்டர் அப்படியே அதிற் புகுந்து வேறு சரீரமெடுத்துச் சாபவிமோசனஞ் செய்துகொண்டார்.

இராமர் இலக்குமணனுக்குக் கூறிய ஜனகன் உற்பத்தி.

அதன்மேல் வசிஷ்டர் சாபத்தால் நிமி மரணமடைந்து சூட்சும சரீரத்தைப் பொருந்தி அங்கேயே இருந்தான். அவனுடைய மந்திரி முதலானவர்கள், நிமியின் மரணம் வசிஷ்டர் சாபத்தால் நேர்ந்ததென் றுணர்ந்து அவ்வனுடைய சரீரத்தைத் தைலதோணியிலிட்டு வஸ்திராபரண கந்த புஷ்பாதிகளால் அலங்கரித்து வைத்துக்கொண்டு அவனுக்குப் பிரதி நிதிகளாயிருந்து கௌதமரைக்கொண்டே அவன் தொடங்கிய யாகத்தை ஐயாயிரம் வருஷங்கள்வரை செய்து முடித்தார்கள். அப்போது தேவர்கள் வந்து சூட்சும தேகத்துடனிருந்த நிமியை நோக்கி, 'உன் யாகத்தால் நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம்; நீ உனக்கு வேண்டியவரத்தை எங்களிடம் கேட்டுக்கொள்' என்று சொன்னார்கள். அதற்கு நிமி, 'உலகத்தில் எல்லாருடைய கண்களிலும் நான் நிமையாயிருந்து சகல அதிசயங்களையும் கண்டுகொண் டிருக்க எனக்கு நீங்கள் அனுக்கிரகம் பண்ண வேண்டும்' என்றான். தேவர்கள் அப்படியே அவனுக்கு வரங் கொடுத்துத் தெய்வலோகத்திற்குச் சென்றார்கள். அவன் அங்ஙனமே எல்லோருடைய கண்களிலும் நிமையாகுந் தன்மையை அடைந்தான். அதன்மேல் சகல முனிவர்களும் கூடி நிமியின் சரீரத்திலிருந்து ஒரு ஜன்மத்தை யுண்டாக்க நினைத்து அதனைத் தீக்கடைகோலினாலே கடைந்தார்கள். அதிலிருந்து ஜனகர் பிறந்தார். முனிவர்கள் அவரை இப்பூமண்டலத்திற்கு மன்னராகச் செய்து ஆசீர்வதித்துத் தங்கள் இருப்பிடங்கட்குச் சென்றார்கள். இந்தக் கதைகளால், கோபத்தாலுண்டாகும் கெடுதியும், தவத்தாலும் நீதியாலுமுண்டாகும் நன்மையும் உணரப்படும்.

இராமர் இலக்குமணனுக்குச் சோன்ன யதுவின் கதை.

இவை நிற்க, ஒருகாலத்தில் சந்திரகுலத்திலே தோன்றி நூறு அஸ்வமேத யாகங்களைச் செய்து கீர்த்தி பெற்ற நகுஷனுக்கு யயாதி புத்திரனாகப் பிறந்தான். அவன் சுக்கிரன் மகளாகிய தெய்வயானையை மணந்து, விடபன்மன் என்னும் அசுரராஜன் மகளும் தெய்வயானைக்கு விரோதியு மாகிய சன்மிஷ்டையை அத்தெய்வயானையின் சொற்படி அடிமைப் பெண்ணாகக் கொண் டிருந்தான். அவளுக்குப் போக சுகங்கொடுத்தல் கூடாதென்று, தெய்வயானை யயா திக்குக் கண்டிப்பாகக் கூறியிருந்தாள். அப்படி யிருக்கும் போது யயாதிக்கும் தெய்வயானைக்கும் யது முதலிய இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். இவர்களின்றி யயாதி, தெய்வயானை சொல்லை மீறிச் சன்மிஷ்டையை இரகசிய மாகக் கூடினான். அதனால் அவளுக்குப் பூரு முதலிய மூன்று புத்திரர்கள் பிறந்தார்கள். யயாதி சன்மிஷ்டையி னிடத்தில் இரகசியமாக அதிக விருப்பம் செலுத்தி வந் தான். அப்போது ஒருநாள் யதுவென்பவனும், பூருவும் தந்தையைக் காண அவனிடம் சென்றார்கள். அவன், தனக்கு விருப்பமுள்ள சன்மிஷ்டையின் பிள்ளையாகிய பூருவை அதிகமாகக் கொண்டாடினான். அதைக் கண்ட தெய்வயானையின் பிள்ளையாகியயது தகப்பன்மீது குரோத முற்று அவன் செய்கையைத் தன்தாயாகிய தெய்வயானை யிடம் சொன்னான். அவள் அதைக்கேட்டு யயாதி மேற் கோபங்கொண்டு உடனே தந்தையாகிய சுக்கிரனை அழைத்து அவனிடம் யயாதியின் அயோக்கியத்தைக் கூறி னாள். சுக்கிரன் அவன்மீது கடுஞ்சினமடைந்து அந்த யயா திக்கு மூப்புண்டாகும்படி சாபமிட்டான். அதனால் அவனுக் குடனே மூப்புவந்தது. அங்ஙனம்விருத்தாப்பியம் வரவே அவன் யதுவிடத்தில், 'நீ என்னுடைய மூப்பை வாங்கிக்

கொண்டு உன் இளமையை எனக்குக் கொடு; நான் கொஞ்சக்காலம் வரை இளமை யின்பமனுபவித்து விட்டு மீண்டும் உனக்கிளமையைக் கொடுத்து விடுகிறேன்' என்று கேட்டான். அதற்கவன், 'உனக்குரிமையான பூருவிடத்தில் இதைச் சொல்' என்றான். அதைக்கேட்டதும் அரசன் அவனைக் கோபித்து, 'உன் வமிசத்திற்கு இராஜ்ஜிய பாத்தியதை இல்லாமற் போகக் கடவது' என்றும், 'உன் வழியில் இராக்ஷதர்கள் பிறக்கக் கடவர்கள்' என்றும் அவனுக்குச் சாபங்கொடுத்து விட்டு அவனுடன் பிறந்த மற்றொருவ்னிடத்தில் தன் அபிப்பிராயத்தைச் சொன்னான். அவனும் அதற்கிசையவில்லை. அதனால் யயாதி அவன் கிராதனாகும்படி அவனைச்சபித்துப் பின்னர்ச் சன்மிஷ்டையின் புத்திரர்களில் இளையவர்கள் இருவரிடத்தும் தன் விருப்பத்தைச் சொன்னான். அவர்களும் அதனை மறுத்து விட்டார்கள். அதனால் அவன் அவர்களில் ஒருவன் மீன் விற்பவனாகவும், மற்றொருவன் கள் விற்பவனாகவும் அவர்களைச் சபித்து விட்டு முடிவில் பூருவிடம் தன் கருத்தைச் சொன்னான். அவன் அப்படியே தன் இளமையை அந்த யயாதிக்குக் கொடுத்தான். யயாதி அவ்விளமையைப் பெற்று நெடுநாள் வரை போகபாக்கியங்களை அனுபவித்துப் பின்னர் பூருவுக்கு இளமையும் பட்டாபிஷேகமும் கொடுத்துத் தவம்பண்ணி நற்கதியடைந்தான். இக்கதையால், குரோதங்கொண்ட யயாதிவுக்கு நேர்ந்ததுன்பத்தைத் தெரிந்து கொள்ளலாம்; ஆதலால் நாம் இந்நீதிகளை ஒருபோதும் மறத்தல்கூடாது" என்று சொன்னார்.

இல்வணசுரன் கொடுஞ்செயலை இராமர் உணர்தல்.

இராகவர் இவ்வாறு இலக்குமணனிடத்தில் நீதிகளை உரைத்துவிட்டு அதன்மேல் இராஜ காரியங்களை ஒழுங்கு

பெற நடத்திக்கொண்டிருந்தார். அப்படி யிருக்கும்போது யமுனாநதிக்கரையில் தவஞ்செய்து கொண்டிருந்த முனிவர்களை, மதுராநகரிலிருந்த இலவணாசுரன் என்னு மோராசுரன் ஹிம்சித்துக் கொண்டிருந்தான். அத்துன்பத்தைச் சகிக்கமுடியாமல் ஒருநாள் அம்முனிவர்கள் அதனைத் தெரிவித்தற்கு இராமரிடம் வந்தார்கள்; இராகவர், அவர்களைக் கண்டு எதிர்கொண்டழைத்து ஆசனங்களி லிருத்தி உபசரித்து, "சுவாமிகளே! நீங்கள் இங்கெழுந்தருளியதற்குக் காரணமியாது?" என்று வினவினர். அவர்கள் இராமரை நோக்கி, "காருண்யமூர்த்தி! கிருதயுகத்தில் மதுவென்னும் அவுணனொருவ னிருந்தான்; அவன் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான்; சிவபெருமான் அத்தவத்திற் கிரங்கி அவன்முன் தோன்றித் தம்முடைய சூலத்தினின்று மொரு சூலத்தை யுண்டாக்கி அவனுக்குக் கொடுத்து, 'இஃதுன் பகைவரைத் தப்பாது கொல்லும்; ஆனால் நீ இதனைத் தேவர்மீதும் அந்தணர்மீதும் விடுத்தால் பயன் படாது போவதுமன்றி உன்னைவிட்டு நீங்கியும் போய்விடும்' என்று கூறினர். அதைக் கேட்டு மது, அவரிடத்தில் 'சுவாமி! இந்த ஆயுதம் என் சந்ததியில் வருபவர்களிடத்திலெல்லாம் இருக்கும்படி நீர் அனுக்கிரகம் செய்யவேண்டும்' என்றான். அதற்கவர், 'அப்பா! இஃதப்படி யிருக்கத் தக்கதன்று; நீ கேட்டுக் கொண்டதற்காக இஃது உன்மகனிடத்தில் மாத்திரம் இருக்கும்படி நாம்அனுக்கிரகஞ் செய்கின்றோம்' என்று அவனிடம் கூறிச்சென்றார். அதன்மேல், மது யமுனா நதிக்கரையில் மதுராநகரத்தை அமைத்து அதில் வாசஞ் செய்து கொண்டிருந்தான். அப்படி யிருக்கும் போது அவனுக்குக் கும்பிநசி யென்னும் மனைவியினிடத்தில் இலவணன் என்னும் புத்திரன்பிறந்தான்; அவன் சாதுக்களுக்குத் துன்பஞ் செய்துகொண்டு வந்தான். மது

நல்லவனாகையால் தன்மகனுடைய அச்செய்கை தனக்குப் பிடிக்காமல் மன வருத்த முற்றுத் தன் சூலத்தை அவனிடம் கொடுத்து அதன் பிரபாவத்தையும் சொல்லி வருண லோகம் போய்ச் சேர்ந்தான். பின்னர் அந்த இலவணன் செருக்குற்று உலகத்தை யெல்லாம் வருத்தி வருவதோடு முனிவர்களாகிய எங்களுக்குமிகுந்த துன்பங்களைச் செய்து கொண்டு வருகின்றான்; அத்துன்பங்களை நீக்கும்படி நாங்கள் பல அரசர்களிடத்தும் சென்று முறையிட்டோம்; அவர்களால் அது முடியவில்லை; முடிவில் நாங்கள் அவற்றைத் தீர்த்துக்கொள்ள உம்மிடம் வந்தோம்; நீர் எப்படியும் எங்கள் துன்பங்களை ஒழித்தருளவேண்டும்" என்றுரைத்தார்கள்.

இவற்றை யெல்லாம் கேட்டதும் இராமர், "அந்த இலவணனை நான் ஒழித்து விடுகின்றேன்" என்று அம்முனிவர்களுக்கு அபயங்கொடுத்து விட்டு அருகிலிருந்த தம்பியரை நோக்கி, "இலவணனைச் சங்கரிக்கும் புண்ணிய கைங்கரியத்தை உங்களில் யாரேனும் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்றார். உடனே இலக்குமணன் 'நான் ஏற்றுக்கொள்கின்றேன்' என்றான். அதைக்கேட்டுப் பரதன், இராமரை நோக்கி, "அண்ணா! இலக்குமணன் உம்முடன் வனத்திற்கு வந்து பல யுத்தங்களைச் செய்து இளைத்திருக்கின்றான்; ஆதலின், நானே இதனை ஏற்றுக்கொள்கின்றேன்" என்றான். அவன் அவ்வார்த்தைகளைக் கூறி முடிக்குமுன் சத்துருக்கன் எழுந்து இராமரிடம், "சுவாமி! நீர் வனவாசம் சென்று திரும்பி வருமளவும் பரதர் நித்திரையின்றி நந்திக் கிராமத்திலிருந்து இளைத்துப்போயிருக்கின்றார்; ஆதலின் நானே இலவணனைச் சங்கரிக்கச் செல்கின்றேன்" என்றான்.

சத்துருக்கன் இலவணராஜ்ஜிய பட்டாபிஷேகம் பெறல்.

அதைக்கேட்டு இராமர், மற்றவர்களின் மனவெழுச்சியைத் தடுத்து விட்டுச் சத்துருக்கனை நோக்கி, "தம்பி! நீ கூறுவதே சரி; நீ சென்று அந்த இலவணனைச் சங்கரித்து அவனுடைய இராஜ்ஜியத்தையும் நீயே ஆளவேண்டும்; ஆதலால் உனக்கு நான் இங்கே அந்த இராஜ்ஜிய பட்டாபிஷேகத்தைச் செய்து விடுகின்றேன்" என்றார். அதற்குச் சத்துருக்கன், "மூத்தோரிருக்க இளையோனாகிய நான் மகுடாபிஷேகம் பெறுவது தகாதே" என்று இராமரிடம் விண்ணப்பஞ் செய்தான். இராமர், 'அதனால் பாதகமில்லை; மூத்தோர் கட்டளைப்படி நடத்தலே இளையோர்க்குக் கடனும்; ஆதலின் என் கட்டளையை நீ மறாதே' என்று அவனுக்குக் கூறி வசிஷ்டர் முதலியவர்களைக் கொண்டு இலவண இராஜ்ஜிய பட்டாபிஷேகம் செய்வித்தார். அதைக்கண்டு எல்லோரும் மகிழ்ந்தார்கள்.

சத்துருக்கன் வான்மீகரிடம் சேர்ந்து கல்மாஷபாதன் சரித்திரங் கேட்டல்.

அதன்மேல் இராமர் சத்துருக்கனை நோக்கி, "தம்பி! இலவணன் சிவன் சூலத்தைக் கையில் வைத்திருக்கும் போது நீ அவனை வெல்லல்முடியாது; அவன் மழைக்காலத்தில் உணவுக்காக வெளியேறிச் செல்வான்; அப்போது சூலத்தை மாளிகையில் வைத்துப்போவான்; அப்படி அவன் வெளியேறிப் போனபின் நீ சென்று அவன் திரும்பிவரும் வழியில் காத்திருந்தால் அவனைக்கொன்றுவிடலாம்; ஆதலால் மழைக்காலம் வந்து கங்கை பெருகுவதற்கு முன் சேனைகள் கங்கைக்கப்பால் போயிருக்கும்படி

அவற்றை அனுப்பிவிட்டு, மழைக்காலம் வந்தபின் நீ அங்கே செல்" என்று அந்த இலவணனைக் கொல்லத்தக்க உபாயங்களையெல்லாங் கூறி மதுகைடவரைக் கொல்லுதற்கு விஷ்ணு உண்டாக்கிய அம்பையும் அவனிடம் கொடுத்து 'நீ வெற்றிபெற்று வரக்கடவாய்' என்று அவனை வாழ்த்தினார். சத்துருக்கன் அவர் கட்டளைப்படியே நால்வகைப் படைகளும் கங்கையைத் தாண்டித் தக்கவிடத்திலிருக்கும்படி முன்னர் அவற்றை அனுப்பிவிட்டுத் தான் ஒருமாதம் அயோத்தியிலிருந்து வருஷாகாலம் கிட்டியவுடன், இராமர் முதலியவர்களிடத்தில் வணங்கி விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டு இரண்டு நாட்களில் வான்மீகருடைய ஆச்சிரமஞ் சேர்ந்து அவரால் உபசரிக்கப் பெற்றுக் களித்திருந்தான்.

அப்படி யிருக்கும்போது அவனுக்குப் பக்கத்தில் ஒரு யாகசாலை யிருந்தது. அவன் அதைக்கண்டு, 'இது யாருடையது?' என்று வான்மீகரிடம் வினவினன். அதற்கவர், "ஐயா! முற்காலத்தில் உமது வமிசத்திலிருந்த சுதாசனன் என்னு மரசனுக்கு வீரசஹன் என்றொரு குமாரனிருந்தான். அவன் ஒருநாள் வேட்டையாடும் பொருட்டு வனத்திற்குச் சென்றிருந்தான். அப்போது இரண்டு இராக்கதச் சிறுவர்கள் புலிவேடந்தாங்கி மிருகங்களைத் தின்றுகொண்டு திரிந்தார்கள். வீரசஹன் அந்த இரண்டு இராக்கதச் சிறுவர்களையும் கண்டு, அவர்களில் ஒருவனை அம்பினல் கொன்றான்; அதனல் மற்றொருவன் அவ்வரசன்மேல் பகைகொண்டு அவனை நோக்கி, "மன்னனே! நீ என் சகோதரனைக் கொன்ற பழிக்குப்பழி நான் எப்படியாவது உன்னிடம் செய்வேன்" என்று சொல்லிவிட்டு மறைந்து போயினன். அதன்மேல் அம்மன்னன் நகர்ஞ்சென்று மித்திரசஹன் என்னும் பெயர்

பெற்று வசிஷ்டரைக்கொண்டு அஸ்வமேதயாகஞ் செய்து முடித்தான். அந்த யாகத்தை முடித்துவிட்டு வசிஷ்டர் அங்கே தங்கியிருந்தார். அப்போது முன்னே கூறியபடி பகைகொண்டு சென்ற இராக்ஷத குமாரன் வசிஷ்டர் வெளியிற் சென்றிருந்த சமயம் பார்த்து அவருடைய வேடத்தையெடுத்துக்கொண்டு அம்மன்னனிடம் வந்து, 'எனக்குப் புலாலுணவு வேண்டும்' என்றான். அம்மன்னன் அவனை உண்மையான வசிஷ்டரென்றும், அவர் விருப்பத்தை அவசியம் நிறைவேற்ற வேண்டுமென்றும் கருதி அவ்வாறே உணவு சமைக்கும்படி கட்டளையிடுதற்குச் சுயம்பாகியை அழைக்க நினைத்தான். அவ்விராக்ஷத குமாரன் அக்குறிப்பை யுணர்ந்து, உடனே சமையற் காரனாகவும் வடிவெடுத்து அவ்வரசன் முன் நின்றான். அரசன் அவனிடத்தில் வசிஷ்டருக்கு மாமிச உணவு சமைக்கும்படி கட்டளையிட்டான். அந்த இராக்ஷதகுமாரன் அக்கட்டளைப்படி மாமிச உணவு சமைத்து வைத்துவிட்டு மறைந்துபோனான். பின்னர் வெளியிற் சென்றிருந்த யதார்த்தமான வசிஷ்டர் போஜனத்துக்கு வந்தார். அப்போது அரசனும், உணவு பரிமாறுவோனும் மாமிச உணவை அவருக்குப் பரிமாறினார்கள். அதைக்கண்டதும் வசிஷ்டர் அரசன், அக்கிரமமாகத் தமக்கு மாமிச ஆகாரம் படைத்தானென்று உண்மை உணராமல் அவன்மீது சினந்து அம்மன்னனை நோக்கி, "நீ எனக்கு அசுத்த ஆகாரமிட்டதால், இவ்வாகாரம் புசிப்பவனாகக் கடவாய்" என்று அவனுக்குச் சாபமிட்டார். மித்திரசஹன் தன்மீது குற்றமில்லாதிருக்க, வசிஷ்டர் தனக்குச் சாபமிட்டதால் தானும் அவருக்குச் சாபமிடக் கையில் ஜலத்தை யேந்தினான். அப்போது அவன் மனைவியாகிய மதயந்தி யென்பவள், "ஆசிரியருக்குச் சாபமிடல் தகுதியன்று" என்று அவனைத் தடுத்தனள். அதனால் அவ்வரசன்

அந்நீரைத்தன் பாதத்தில் பெய்தனன். அந்நீரால் அப்பாதம் வெம்பியது. அதுபற்றி அவனுக்குக் கல்மாஷபாதனென்று பெயருண்டாயிற்று. அதன்மேல் அம்மன்னன் அது தன்விரோதியாகிய இராக்கதனால் நேர்ந்த வஞ்சமென்றுணர்ந்து வசிஷ்டருக்கு அதனைத் தெரிவித்துத் தன் சாபத்தை நீக்குதற்கு அவரைப் பணிந்தனன். அவர் அம்மன்னன்மீ திரக்கமுற்று அவனை நோக்கி, "நான் சொல்லிய வார்த்தை தவறாது; ஆயினும் நான் உனக்கொரு வரந்தருகிறேன்; அதாவது இச்சாபத்தை நீ பன்னிரண்டு ஆண்டுகள் வரைஅனுபவித்துப் பின்னர் அரசாளக்கடவை; சாபந்தீர்ந்த பின்பு உனக்கு முன் அனுபவித்த துன்பம் நினைவுக்கு வாராதிருக்கும்" என்று கூறினார். அப்படியே பன்னிரண்டு வருடங்கள் சென்றபின் அப்பார்த்திபன் சாபம் நீங்கப்பெற்று அரசாண் டிருந்தனன். அவன் அஸ்வமேதயாகஞ்செய்த இடமிது" என்றுசொன்னார். இக்கதையைக் கேட்டுச் சத்துருக்கன் பெரியோர் மகிமையைச் சிந்தித்துக் கொண் டிருந்தான்.

சீதை குழந்தைகளைப் பெறுதல்.

அப்படி யிருக்கும்போது வான்மீகர் ஆச்சிரமத்தருகில் இருந்த சீதை அன்றிரவு இரண்டு குமாரரை யீன்றாள். அச்செய்தியைச் சில முனிவர் குமாரர்கள் அறிந்து வந்து வான்மீகருக்குச் சொன்னார்கள். அதைக் கேட்டவுடனே வான்மீகர் சீதையிடம் சென்று அவள் பெற்ற குழந்தைகளைப் பார்த்து, அவர்கள் இராமரைப்போலவே மிக்க அழகுடையவர்களா யிருக்கக் கண்டு மகிழ்ந்து, குசத்தினால் மூத்தவனுக்கும், இலவத்தினால் இளையவனுக்கும் காப்புச்செய்து அக்காரணத்தினால் மூத்தோனுக்குக் குசனென்றும் இளையோனுக்கு இலவன் என்றும் பெயரிட்டுத் திரும்பி

ஆச்சிரமத்திற்கு வந்து சீதைக்குக் குழந்தைகள் பிறந்த செய்தியைச் சத்துருக்கனிடம் தெரிவித்தார். அவன் அதைக்கேட்டதும், 'இந்தப் பிள்ளைகள் அயோத்தியிற் பிறந்தால் எவ்வளவு சிறப்பாயிருக்கும்' என்று கவலையடைந்து பின்னர் அவர்கள் பிறந்ததற்கு மகிழ்ந்து விடிந்த பின் வான்மீகரிடம் விடைபெற்று அங்கிருந்து படைகளுடன் புறப்பட்டு ஏழுதினங்கள் சென்று யமுனையைக் கடந்து மதுவனம்போய்ச் சேர்ந்து அங்குள்ள முனிவர்களைக் கண்டு வணங்கி அவர்களாற் சொல்லப்பட்ட சில கதைகளைக்கேட்டுக்கொண் டிருந்து, பின்னர் அவர்களுள் சியவன முனிவரை நோக்கி, 'சுவாமி! இலவணனுடைய வல்லமையை நீர் எனக்குக் கூறவேண்டும்' என்றான்.

இலவணன் வதை.

அதற்கம்முனிவர், "சத்துருக்கரே! முற்காலத்தில் உமது வமிசத்தில் உதித்த யுவனாசுவனுடைய குமாராகிய மாந்தாதாவென்பவர் மிக்க சிறப்புடையவரா யிருந்தார். அவர் இந்திரனரசாட்சியில் பாதியாள வேண்டுமென்று தவஞ்செய்து வந்தார். அவர்செய்கையைக் கண்டு இந்திரன் பொறாமைகொண்டு வஞ்சனையால் அவரை ஒழிக்க நினைத்து அவரிடம் வந்து, 'நரலோகத்திலேயே உம்முடைய வல்லமை செல்லாதிருக்க நீர் சுரலோகத்தில் அரசாள விரும்புகின்றது பரிகாசத்திற் கிடமாயிருக்கின்றதே' என்று சொன்னான். இந்த இலவணன் மாந்தாதாவைக் கொல்லத் தக்க வல்லமைசாலியா யிருந்தான்.. மாந்தாதா இவனுடைய வரலாறு தெரியாமலும் இவனுடன் எதிர்க்காமலு மிருந்தார். ஆதலால், மாந்தாதா அவனுடன் எதிர்க்குமாறு செய்தால் அவனால் அவர் அழிந்துபோவாரென்று இந்திரன் நினைத்து அச்சண்டையை மூட்டிவிடுதற்கு இவ்

வாறு சொன்னான். மேற்கூறியபடி இந்திரன் நயவஞ்சகமாகச் சொன்னதைக் கேட்டதும், மாந்தாதா, 'பூலோகத்தில் எங்கே என்னுடைய வல்லமை செல்லவில்லை?' என்று அவனைக் கேட்டார். அதற்கு இந்திரன், 'நீர், மதுவின் மைந்தன் இலவணனிடம் உம்முடைய வல்லமையைக் காட்டாதிருக்கின்றீர்; அவன் பலருக்கும் இடையூறு செய்துவருகின்றான்' என்றான். உடனே மாந்தாதா இலவணனிடம் சென்று அவனுடன் எதிர்த்து மடிந்தார்; இன்னும் அவனால் மடிந்த அரசர் எத்தனையோபேருண்டு; அவ்விடம் சிவசூலமிருப்பதால் எவராலும் அவனை வெல்வதரிது; ஆதலின், அவன் சூலமில்லாமல் ஆகாரத்திற்கு வெளியிற் சென்று திரும்பிவரும்போது நீர் அவனைக் கொல்லவேண்டும்'' என்று கூறினர். அப்படியே சத்துருக்கன், இலவணன் வெளியிற்சென்ற சமயம் பார்த்து அவன் திரும்பி வரும் வழியிற்போய் வில்லை வளைத்துக் கொண்டு நின்றான். சிறிது நேரத்திற்குப்பின் இலவணன் பல ஜீவஜந்துக்களைக் கொன்றெடுத்துக்கொண்டு திரும்பி வந்து நடுவழியில் நின்ற சத்துருக்கனைப் பார்த்து, "நீ யார்?" என்று கேட்டான். அவன், மதுவை நோக்கி, "அடா இராக்ஷதா! நான் இராமருடைய தம்பி; உன்னோடு போர்புரிய வந்திருக்கிறேன்" என்றான். அதைக்கேட்டதும் இலவணன் "என் குலத்தவனாகிய இராவணனைக் கொன்ற இராமனையும் அவன் இனத்தவர்களையும் நான் கொல்ல நினைத்திருந்தேன்; அதனால் நீ இப்போது யுத்தத்திற்கு வந்தது எனக்குச்சந்தோஷமே; இங்கே சற்று நில்; நான் மாளிகைக்குட்சென்று ஆயுதமெடுத்துக்கொண்டு வருகின்றேன்" என்றான். சத்துருக்கன், "உன்னை நான் விடமாட்டேன்; நீ நின்ற நிலையிலேயே போர்தொடுக்க வேண்டும்" என்றான். இலவணன் கடுஞ்சின மடைந்து ஒரு பெரிய மரத்தைப்

பிடுங்கிச் சத்துருக்கன் மார்பிலெறிந்தான். அவன் அதனைத் தன் அம்புகளால் அறுத்து, அது பல துண்டுகளாகுமாறு செய்தான். அதன்மேல் இலவணன் பலமலைகளைப் பெயர்த்தெறிந்தான். சத்ருக்கன் அவற்றையெல்லாம் பொடியாக்கிவிட்டு அவன்மீது மழை பொழிவதுபோல் பாணங்களைச் சொரிந்தான். அவன் அவற்றிற்கு வருந்தாமல் ஒரு பெரிய விருக்ஷத்தைப் பிடுங்கி அதனால் சத்துருக்கன் சென்னியிற்புடைத்தான். அந்த அடியினால் அவன் மூர்ச்சித்து வீழ்ந்தான். அங்ஙனம் வீழ்ந்தது கண்டு தேவர்களும் முனிவர்களும் அவன்பொருட்டிரங்கியழுது கதறினார்கள். இலவணன், சத்துருக்கன் இறந்தானென்று நினைத்துச் சந்தோஷத்துடன் அங்கிருந்தபடியே தான் கொண்டுவந்த பக்ஷிகளையும் மிருகங்களையும் தின்றுகொண் டிருந்தான். அச்சமயம் சூலத்தை எடுத்துக்கொண்டு வரவேண்டுமென்பதை அவன் நினைக்கவில்லை. அவன் அப்படி ஆகாரத்தை உண்டு கொண்டிருக்கும்போது சிறிது நேரத்துக்குள் சத்துருக்கன் மூர்ச்சை தெளிந்து கோபத்துடனே, தனக்கு இராமர் கொடுத்த விஷ்ணுவின் பாணத்தைக் கோதண்டத்திற்றொடுத்து இலவணன் மீது விடுத்தான். அது விரைந்துசென்று அவனுடைய மார்பைப் பிளந்து அவனைக் கொன்று திரும்பிவந்து சத்துருக்கனிடம் சேர்ந்தது. அவனிடமிருந்த சூலம் சிவனிடம் போய்ச் சேர்ந்தது. சத்துருக்கன் அவனைச் சங்கரித்ததுபற்றி மூவுலகத்தாரும் அந்தச் சத்துருக்கனைக் கொண்டாடினார்கள்.

அதன்மேல் சத்துருக்கன் தன்படைகளுடன் இலவணனுடைய பட்டணமாகிய மதுரையிற் பிரவேசித்துத் தன்னுடைய அரசாட்சியை ஸ்தாபித்துப் பன்னிரண்டு வருஷங்கள்வரை அரசாண்டிருந்து பின்னர் இராமரைப்

பார்க்க விரும்பி அங்கிருந்து புறப்பட்டு வான்மீகர் ஆச்சிரம மடைந்து அவரால் கொண்டாடப்பட்டு ஓரிரவு அங்கே தங்கி, குசலவர்கள் வான்மீகரிடம் கற்றுக்கொண்டபடி இராமாயணத்தைக் கீதத்துடன் பாடக்கேட்டு மகிழ்ந்து விடிந்தவுடன் வான்மீகரிடம் விடை பெற்றுக்கொண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு அயோத்தியை அடைந்து இராமரைக்கண்டு வணங்கி அவரிடத்தில், "சுவாமி! நான் இலவணனைக் கொன்று அவன் இராஜ்ஜியத்தைக் கைவசப் படுத்தி வந்தேன்; இனி உம்முடைய திருச்சமுகத்திலேயே இருக்க விரும்புகிறேன்" என்றான். அதற்கு இராமர், "தம்பி! என் பிரிவுக்காக நீ மனம் வருந்தாதே; வேண்டிய போது நீ இங்குவந்து என்னைப் பார்த்துக் கொள்ளலாம்; நீ மீண்டும் மதுரைக்குச்சென்று உன்னுடைய செங்கோலைச் செவ்வையாக நடத்திக்கொண்டிரு" என்று அவனுக்குத் தேறுதல் கூறி அவனை ஏழுநாள் வரை அங்கே வைத்திருந்து அதன்மேல் மதுரைக்கனுப்பிவிட்டார். சத்துருக்கன் அங்குச்சென்று தேவர்களின் வரத்தால் மதுரையைச் சீர்ப்படுத்திப் புதுப்பித்து அதில் அரசாண்டிருந்தான். அது முந்தி மதுவென்பவனால் ஆளப்பட்டிருந்ததாதலின் மதுரையென்னும் பெயர் பெற்றது. பின்னர் அது சூரசேன நகரத்துக்குத் தலைநகராய் யமுனாநதிக்கரைக் கணியாய் விளங்கிற்று.

சாம்புவன் வதை.

இவ்வாறு, இராமர் மதுரைக்குச் சத்துருக்கனை அனுப்பி விட்டு அரசாண்டுகொண்டிருக்கும்போது ஓரிடத்தில் வருணாச்சிரம தருமங்கெட்டதால், ஒருபிராமணச் சிறுவன் இறந்து போனான். அந்தப் பிள்ளையின் தந்தையாகிய பிராமணன் அங்ஙனம் வருணாச்சிரமந் தவறியது, இராம

ருடைய ஆட்சிமுறையின் குறையென்று தீர்மானித்துத் தன் பத்தினியோடு, இறந்துபோன அப்பிள்ளையைக் கொண்டுவந்து இராஜ சபையிற்போட்டுப் பலவாறு கதறிப் புலம்பி இராமரை நோக்கி, "இராகவரே! உம்முடைய அதர் மத்தினாலே என்னுடைய பிள்ளை இறந்து போய்விட்டான்; இவன் பொருட்டு நானும் என் பத்தினியும் உயிர்விடப் போகின்றோம்; எங்கள்மரணத்தால் நேரும் இந்தப் பிரம ஹத்தி தோஷத்தை நீரே ஏற்றுக் கொள்ளவேண்டும்" என்று சொன்னான். இந்த வார்த்தைகளைக் கேட்டதும் இரா மர் மனங்கலங்கி உடனே வசிஷ்டர், வாமதேவர், கௌதமர், நாரதர் முதலிய முனிவர்களை அழைத்து, அவர்களிடம் பிரா மணன் விஷயத்தைக்கூறி 'இஃதென்ன காரணத்தால் நேர்ந் தது?' என்று வினவினார். அதைக்கேட்டு நாரதர், "இராக வரே! ஓரிடத்தில் வருணாச்சிரம தர்மங்கெட்டு ஒரு சூத்திரன் கொடுந்தவம் புரிகின்றான்; அதனால் இப்பிள்ளை யிறந்தான். நீர் இதை விசாரித்து அச்சூத்திரனைக் கண்டு தண்டித்தால் இப்பிள்ளைபிழைப்பான்" என்றார். உடனே இராமர் அந்தப் பிராமணப் பிள்ளையைப் பாதுகாத்து வைக்கும்படி இலக்கு மணனுக்குச் சொல்லி விட்டுப் புஷ்பகவிமானத்தை அழைத்து அதிலேறிக்கொண்டு வெளியிற்போய் மேற்கு வடக்கு கிழக்குஆகிய மூன்று திசைகளிலும் உள்ளவர்களின் செய்கைகளைப் பார்த்து ஆங்காங்கே வருணாச்சிரம தர்மங் கள் கெடாதிருக்கக் கண்டு முடிவில் தென்றிசை நோக்கிப் போனார். அங்கே சைவல பர்வதத்திற்கு வட பாரிசத்தில் ஒரு மடுவின் நடுவிலே ஒருவன் தலைகீழாக நின்று தபசு பண்ணிக்கொண் டிருந்தான்; இராமர் அவனை நோக்கி, "நீ யார்? என் தவஞ்செய்கின்றாய்?" என்று கேட்டார். அவன், 'நான் சூத்திரன்; என் பெயர் சம்புவன்; நான் இத்தேகத் துடனே தெய்வத்தன்மை யடையத் தவஞ் செய்கின்

றேன்' என்ருன். உடனே இராமர் அவனை வாளால் வெட்டிச் சங்கரித்தார். அப்போது தேவர்கள் அச்செய்கையின் பொருட்டுச் சந்தோஷித்து இராமரிடம் வந்து, "உமக்கென்ன வரம்வேண்டும்?" என்று கேட்டார்கள். அதற்கவர் 'இறந்துகிடக்கும் பிராமணப் பிள்ளை பிழைக்க நீங்கள் வரந் தரவேண்டும்' என்ருர். அவர்கள் அவ்வாறே அவருக்கு வரங்கொடுத்தார்கள். அகஸ்தியர் பன்னிரண்டு வருடங்கள் ஜலசயனம் செய்து அத்தீக்ஷையை அன்றைக்கு முடிக்கத் தீர்மானித்திருந்தார். அவ்விஷயம் அத்தேவர்களுக்குத் தெரியும். ஆதலால் இராமருக்கு மேற்கூறியபடி வரங் கொடுத்த தேவர்கள், அதனை இராமரிடம்கூறி, 'அதன் பொருட்டு நாங்கள் இப்போது அவரிடம் செல்லுகின்ருேம்' என்று சொல்லி அகஸ்தியரிடம் போனார்கள். இராமரும் அவர்களுக்குப் பின்னே அகஸ்தியருடைய ஆச்சிரமத்திற்குப் போய் அவரைக்கண்டு வணங்கினர்.

அகஸ்தியர் இராமருக்குச் சுவேதன் கதை கூறி, அவனல் தாம் பெற்ற ஆபரணத்தை அளித்தல்.

அகஸ்தியர் ஆச்சிரமத்தில் சேர்ந்த தேவர்களை, அவர் கண்டு உபசரித் தனுப்பிவிட்டுப் பின்னர்த் தம்மைக்கண்டு வணங்கிய இராமரைக் கொண்டாடித் தாம் சுவேதனல் பெற்றுத் தம்மிடமிருந்த ஓர் ஆபரணத்தை அவருக்குக் கொடுத்தார். இராமர் அதனைப் பெற்றுக்கொண்டு 'இது வந்த வரலாறு யாது?' என்று அவரிடம் கேட்டார். அதற்கு அகஸ்தியர், "இராகவரே! நான் திரேதாயுகத்திலே நூறு யோசனை அகலமாய் ஒரு பிராணிகளுமில்லாத ஒரு வனத்திலே தவம்பண்ணப் போயிருந்தேன்; அதன் மத்தியில் ஒரு யோசனை விசாலமான ஒரு தடாகமும், அதன் பக்

கத்தில் ஒருவருமில்லாத ஓர் ஆச்சிரமமு மிருந்தன. நான் அந்த ஆச்சிரமத்தில் அன்றிரவு தங்கி மறுநாளுதயத்தில் அத்தடாகத்தைப் பார்த்தேன்; அதில் ஒரு சவம் கிடந்தது. அதை நான் பார்த்துக்கொண்டு நின்றேன்; அப்போது மேலுலகத்திலிருந்தொரு விமானம் அங்கே வந்தது. அதிலிருந்தொரு புருஷன் இறங்கி அந்தச் சவத்தைப் பிடுங்கித் தின்றான். நான் அவனை நோக்கி, 'நீயாவன்? இதனை என்ன காரணத்தால் தின்றனை?' என்று கேட்டேன்; அதற்கவன் என்னை உணர்ந்து கொண்டு 'நான் விதர்ப்ப தேசாதிபதியாகிய வசுதேவன் புத்திரன்; என் பெயர் சுவேதன்; நான் என்னுடைய இராஜ்ஜியத்தை என் தம்பியாகிய சுரதனுக்குக் கொடுத்துவிட்டு மூவாயிரம் வருடங்கள் இங்கே தவஞ் செய்து என் சரீரத்தை இத்தடாகத்தில் போட்டுவிட்டுப் பிரமலோக மடைந்தேன்; அங்கே பசிப்பிணி என்னை வருத்திற்று; அதனால் நான் வருந்தி 'எனக்கிப் பசிநோய் வரவேண்டிய காரணமென்ன?' என்று பிரமதேவரைக் கேட்டேன். அதற்கவர், 'நீ பூலோகத்தில் பிறர்க்கன்னங் கொடாமல் உன்னுடைய சரீரத்தையே போஷித்து வந்ததால் இத்துன்ப முண்டாயிற்று; இப்பசிக்கு உனது சரீரத்தையே நீ புசி; அஃதுனக்கமுதம் போன்றிருக்கும்; எப்போதுனக்கெதிரில் அகஸ்தியர் வருவாரோ அப்போது இத்தோஷம் நீங்கும்' என்று சொன்னார்; அதுமுதல் நான் இதனைப் புசித்துக்கொண்டு வருகின்றேன்; இப்பொழுதும்மைக் கண்டதால் என் பாவம் நீங்கிற்று; நீர் இந்த ஆபரணத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும்' என்று இதனை என்னிடம் கொடுத்தான். உடனே அச்சவம் காணாமற் போயிற்று. அவனும் பசி நீங்கிப் பிரமலோகம் அடைந்தான்" என்று கூறினார்.

தண்டகாரணிய வரலாறு.

அந்த வாலாற்றைக் கேட்டு இராமர் சந்தோஷித்து மேலும் அகஸ்தியரை நோக்கி, "சுவாமி! அந்தச் சுவேதன் தவஞ்செய்த விடம் யாதொருபிராணியு மில்லாமலிருந்த தற்குக் காரண மென்ன?' என்று கேட்டார். அதற்கவர், 'இராகவரே! கிருதயுகத்திலே பூமண்டல முழுவதிலும்அரசு செலுத்திக்கொண் டிருந்த மனுவென்பவர் தமது புத்திரரா கிய இட்சுவாகு மகாராஜருக்கு இராஜ்ஜிய பட்டாபிஷேகம் செய்து சுவர்க்கத்தையடைந்தார். பின்னர் இட்சுவாகு நூறு புத்திரரைப் பெற்ருர். அவர் திரிகால வர்த்தமானங் களையும் உணர்ந்தவ ராதலின் தாம் பெற்ற புத்திரர்களுள் கடைசிப்புத்திரன் பின்னுல் தண்டத்தை அடைவானென்று தெரிந்து அவனுக்குத் தண்டனென்னும் பெயரிட்டு விந்த கிரிக்கும் சைவலபர்வதத்திற்கும் நடுவிலுள்ள நூறு யோசனை விஸ்தீரணமான பூமியையும் கொடுத்தார். அவன் அங்கே மதுமந்தமென்ஞெரு நகரத்தை யுண்டாக்கிச் சுக் கிராசாரியாரைக் குருவாக வைத்துக்கொண்டு அரசாண் டிருந்தான். அப்படி யிருக்கும்போது அவன் ஒருநாள் சுக் கிராசாரியிடம் செல்லும்போது அவருடைய புத்திரி சரையென்பவளைக் கண்டு அவள்மீது மோகங்கொண்டு அவளிடம் தன் எண்ணத்தைத் தெரிவித்தான். அவள் அதற்கிசைந்திலள். அதன்மேல் அவன் அவளை வலிநிற் பிடித்திழுத்துக் கற்பழித்தான். அவள் அழுதுகொண்டே போய்த் தன் தந்தையிடம் அவன் செய்கையைத் தெரி வித்தாள். சுக்கிராச்சாரி அவன்மீது கோபங்கொண்டு, 'இந் தத் தண்டன் தன்னுடைய பட்டணத்துடனும், வம்சத் துடனும் எழு தினங்களில் தீப்பட்டு வெந்தொழிக' என்று அவனுச்குச் சாபமிட்டார். அதன்படியே அந்தப் பட்ட

ணம் அழிந்து அவ்வனமாயிற்று; அன்று முதல் அந்த வனத்திற்குத் தண்டகாரணியமென்று பெயருண்டாயிற்று; சுக்கிருடைய சாபத்தினாலேயே அதிலொன்றும் வசிப்பதில்லை" என்று சொன்னார். அதன்மேல் இராமர் அன்றிரவு அவ்விடத்தில் தங்கி மறுநாளுதயத்தில் அகஸ்தியரிடம் விடைபெற்றுக் கொண்டு அயோத்திக்குப்போய்த் தேவர்களுடைய வரத்தால் பிழைத்திருந்த பிராமணப்பிள்ளையையும் அவனுடைய தாய் தந்தையரையும் அவர்களுடைய இருப்பிடத்திற்கு அனுப்பிவிட்டு அரசுசெலுத்திக்கொண்டிருந்தார்.

அஸ்வமேதயாகத்தைப் பற்றி இலக்குமணன் இராமருக்கு விருத்திராசுரன் கதை யுரைத்தல்.

அப்படி யிருக்குங்காலத்தில் ஒருநாள் இராகவர், பரதனையும் இலக்குமணனையும் நோக்கி, "தம்பியரே! நாம் இவ்வளவு சிறப்புடையவர்களா யிருந்தும் யாதொரு யாகத்தையும் செய்யாமலிருக்கின்றோம்; ஆதலால் இராஜசூய யாகம் செய்ய வேண்டுமென்று நான் நினைக்கின்றேன்; அவ்விஷயத்தில் உங்களுடைய அபிப்பிராயமென்ன?" என்று வினவினார். அதற்குப் பரதன் "சுவாமி! இராஜசூய யாகத்தில் அநேகம் மன்னர்களுக்கு உபத்திரவ முண்டாகும்; கருணையே வடிவமான நீர் அவ்வாறு துன்பத்தைச் செய்தல் தகாது" என்றான். இராமர் 'அதுவும் வாஸ்தவந்தான்' என்றார். அப்போது இலக்குமணன் இராமரை நோக்கி, "சுவாமி! யாகங்களுக்குள்ளே அஸ்வமேதயாகம் சிறந்தது; முன்னொரு காலத்தில் விருத்திராசுரனென்னுமோர் அசுரன் மதுராபுரியில் இராஜ்ஜியம் நடத்திக்கொண்டிருந்து சிலகாலஞ் சென்றபின் தன் சிரேஷ்ட புத்திரனுக்கு

அரசியலைக் கொடுத்துக் கொடுமையான தவஞ்செய்து கொண்டிருந்தான். அவனுடைய செய்கையை இந்திரனறிந்து, 'இவன் செய்யும் தவத்தால் என்ன தீங்கு விளையுமோ' வென்றஞ்சி விஷ்ணுவினிடம் சென்று, 'விருத்திராசுரனைச் சங்கரிக்கவேண்டும்' என்று சொன்னான். அதற்கு விஷ்ணு, 'அவ்வசுரன் என்னிடத்தில் விசுவாசமுள்ளவன்; ஆதலால் அவனை நானே கொல்லல் கூடாது; ததீசியின் முதுகெலும்பை அவரிடம் வாங்கி வச்சிராயுதமாக்கிக் கொண்டு நீ அவனுடனெதிர்த்தால் நீயே அவனைக் கொன்று விடலாம்' என்று சொன்னார். அவ்வாறே அதனைச் செய்து இந்திரன் அவ்வசுரனைக் கொன்றான். அதனால் இந்திரனைப் பிரமஹத்திபற்றி வருத்தியது. தேவர்கள் அவன் வருத்தத்தை விஷ்ணுவினிடம் கூறினார்கள். அதற்கு அவர் 'அசுவமேதயாகம் செய்தால் அது தீரும்' என்றார். அப்படியே அமரர்கள் அந்த யாகத்தைச் செய்தார்கள். அதனால் இந்திரனுடைய பிரமஹத்திதோஷம் நீங்கிற்று; ஆதலால் அந்த அஸ்வமேதயாகத்தை நாம் செய்தால் மிக்க நன்மை யுண்டாகும்" என்றான்.

அஸ்வமேதத்தைப் பற்றி இராமர் கூறிய இளன் கதை.

இராமர் அதைக் கேட்டுத் தம்பியரை நோக்கி, "நானும் அஸ்வமேத யாகத்தால் நன்மையுண்டான சில கதைகளைக் கேட்டிருக்கின்றேன்; அவற்றுள் சிறந்த ஒன்றைச் சொல்லுகிறேன் நீங்கள் கேளுங்கள். பாகிலீகதேசாதிபதியாகிய கர்த்தமபிரஜாபதியின் புத்திரன் இளனென்பவன் முன் அரசு புரிந்துவந்த காலத்தில் ஒருநாள் வேட்டையாடக் காட்டிற்குப் போனான். அப்போது ஓரிடத்தில் சிவபெருமான் சகல பிராணிகளையும் ஸ்திரீகளாக்கிப்

பார்வதிக்கு ஞானோபதேசஞ்செய்து கொண்டிருந்தார். மேற் கூறியபடி வேட்டைக்குச் சென்ற இளன் அவ் விடத்தை யடைந்தான். அதனால் அவனும் அவனுடன் சென்றவர்க ளும் ஸ்திரீகளாயினார்கள். அங்ஙனமாகவே, பெண்வடிவம் பெற்ற இளன் அவ்வடிவத்தை நீக்கிவிடும்படி சிவபெருமானி டம் பிரார்த்தித்தான். அதற்குச் சிவபெருமான் 'அது மாற்ற முடியாதது; அது தவிர நீ மற்றெவ் வரத்தைக் கேட்பினும் நாம் அதை உனக்குத் தருவோம்' என்று அவனிடம் சொல்லி விட்டார். அதன்மேல் இளன் உமாதேவியிடம் தனக்குப் புருஷவடிவங்கொடுக்கும்படி பிரார்த்தித்தான். அதற்கு உமா தேவி, 'நான் உனக்குப் பாதிப் புருஷத்துவந் தருகிறேன்' என்றாள். இளன் 'அப்படியானால் நான் ஒரு மாதம் ஆணாகி யும் ஒருமாதம் பெண்ணாகியு மிருக்கும்படி நீ அனுக்கிரகிக்க வேண்டும்' என்றான். உமாதேவி அப்படியே அவனுக்கு வரங்கொடுத்து அவன் பெண்ணா யிருக்கும்போது முன் ஆணா யிருந்தது அவனுக்குத் தெரியாமலிருக்கவும், ஆணா யிருக்கும்போது பெண்ணா யிருந்தது தெரியாதிருக்கவும் அனுக்கிரகஞ் செய்தாள். அதன்மேல் அவன் பெண்ணுரு வத்துடன் இளையென்னும் பெயர் கொண்டு தன்னோடு ஸ்திரீகளானவர்களுடனே அவ் வனத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தான். அப்போது ஒரு மலைக்கடுத்த தடாக மத்தியில் புதன் தவஞ்செய்து கொண்டிருந்தான். அந்தப் புதன் இளனுடைய பெண் தோற்றமாகிய இளையைக் கண்டு அவள்மீது காதல்கொண்டு கரையேறி ஆவர்த்தனி யென்னும் மந்திரத்தினாலே அவளுடையசெயலை உணர்ந்து, அவளோடு இருந்த ஸ்திரீகள் கிம்புருடருடன் கலக்குமாறு செய்து, பின்பு இளையினிடத்தில், 'நான் சந்திரனுடைய புத் திரனாகிய புதன்; நீ என்னைக் கூடவேண்டும்' என்று வேண்டி னான். அவள் அவனோடு கலந்துறவானாள். அப்படி அவ்

விருவரும் கூடியிருக்குங் காலத்தில் ஒருமாதங்கழிந்த பின்பு ஒருநாள் சயனத்தில், படுத்திருந்து எழுந்திருக்கும்போது பார்வதி இளனுக்குக் கொடுத்த வரத்தின்படி ஒருமாதங் கழிந்துவிட்டபடியால் அவள் இளன் என்னும் புருஷ ரூபத்துடன் எழுந்தாள். அவ்வாறெழுந்த இளன் தன்னுடன் வந்தவர்களைப் பார்க்க விரும்பி, 'என்னுடன் வந்தவர்களெங்கே?' என்று புதனிடம் கேட்டான். அவர்கள் மீத்தியில் கல்மழை பெய்ததால் இறந்துபோனார்கள். அதனால் புதன், 'அவர்கள் கல்மழையால் இறந்தார்கள்' என்றான். அதைக்கேட்ட இளன், அவர்கள் பிரிவுக்கு வருந்தி 'அவர்களிறந்ததால் நானும் உயிர்வைத்திரேன்' என்று விசனப்பட்டான். அதற்குப் புதன், 'நீ இவ்விடத்தில் ஒரு வருஷமிருந்தால் நான் உன்னுடைய விசனத்தை நீக்குவேன்' என்று சொன்னான். இளன் அவ்வாறே ஸ்திரீயாகியும் புருஷனாகியும் மாறிமாறி அங்கே வசித்துக்கொண்டிருந்தான். அப்படி யிருக்கும்போது அவன் ஒன்பதாவது மாதம் கொண்ட பெண்வடிவத்தில் புரூரவாவைப் பெற்றுப் புதனிடம் கொடுத்தான். அதன்மேல் ஒருவருஷம் சென்று அவன் புருஷவடிவந் தாங்கி யிருக்கையில் புதனவன் சம்வர்த்தர், தூருவாசர் முதலிய முனிவர்களை அழைத்து அவர்களுக்கு இளனைக்காட்டி, அவனுடைய விருத்தாந்தத்தைக்கூறி 'இந்த இளனுக்கு நீங்கள் நன்மை செய்யவேண்டும்' என்று அவர்களிடம் சொன்னான். அத்தருணத்தில் கர்த்தமப் பிரஜாபதியும் தம் மகனாகிய அந்த இளனுக்கு நேர்ந்ததை யுணர்ந்து புலஸ்தியர் முதலியவர்களுடனே அங்கு வந்து சேர்ந்தார். அப்போது முனிவர்கள் இளனுடைய பெண் தன்மை நீங்குதற்குரிய உபாயத்தை ஆலோசித்து, அங்குள்ளவர்களிடத்தில் கர்த்தமப் பிரஜாபதியைக் காட்டி, 'இந்தக் கர்த்தமப் பிரஜாபதி அஸ்வமேத யாகஞ்

செய்தால் இளனுக்கு வரும் பெண் தன்மை தீரும்' என்றார்கள். அதற்குக் கர்த்தமர் சம்மதித்தார். பின்பு எல்லோரும் சேர்ந்து சிவபெருமானைக் கண்டு அவரிடத்தில் 'நாங்கள் அசுவமேதயாகத்தைச் செய்து முடிக்கிறோம்; இளனுடைய பெண் தன்மை யொழிய நீர் கிருபை செய்யவேண்டும்' என்று பிரார்த்தனை செய்தார்கள். அவர் அப்படியே அது தீர அவர்களுக்கு வரங்கொடுத்துப் போயினர். பின்னர் எல்லோரும் அசுவமேதயாகத்தைச் செய்து முடித்தார்கள். அதனால் இளன் புருஷத் தன்மையடைந்து பாகிலீகதேசத்தைவிட்டு மத்திமதேசத்திலேயுள்ள பிரதிஷ்டானமென்னும் நகரத்திலே போயிருந்தான். அவனுடைய முதற்பிள்ளையாகிய சசிபிந்து பாகிலீகதேசத்துக் கதிபதியானான். அந்த இளன் காலத்திற்குப் பின் அவனுடைய இளையபுத்திரனான புரூரவா மத்திம தேசாதிபதியாய் அந்தப் பிரதிஷ்டான நகரத்திலிருந்து அரசு புரிந்தான். ஆதலின், அசுவமேதயாகம் சிறந்தது தான்; அதனையே நாம் செய்யவேண்டும்" என்று சொன்னார்.

இராமர் அஸ்வமேதயாகஞ் செய்தல்.

அதன்மேல் இராகவர் வசிஷ்டர், வாமதேவர் முதலியவர்களை அழைத்து அவர்களிடத்தில், தாம் அஸ்வமேதயாகம் செய்ய விரும்பியதைப் பற்றிக் கூறினார். அவர்கள் அதன்பொருட்டு இராமரைக் கொண்டாடி அதைச்செய்ய இசைந்து அதற்குரிய நாளை ஆராய்ந்து அதற்கு ஏழாநாள் தகுதியாயிருந்தபடியால், அதனை அந்த யாகத்திற்குரியதென்று நிச்சயப் படுத்தினார்கள். பின்னர் இராமர் இலக்குமணனை நோக்கி, 'தம்பி! முரசறைவோர் அஸ்வமேதயாக நாளைச்சொல்லி எங்கும் பறையறையும்படி அவர்களுக்குக்

கட்டளையிடு; சத்துருக்கன், சுக்கிரீவன், விபீஷணன், மற்ற தேயத்தரசர்கள், முனிவர்கள், பிராமணர்கள் முதலிய எல்லோரும் இங்கே வருமாறுசெய்; கோமதி நதிக்கரையில் உள்ள நைமிசாரணியத்தில் யாகசாலை நிருமித்து, அங்கே அநேக ஆயிரக்கள அரிசியும், காய்கறி வகைகளும், கனி வகைகளும், நெய் முதலியவைகளும் யாகத்திற்குரிய மற்ற பொருள்களும் சேகரித்துவை; பரதன் ஆடையாபரணங்கள் முதலியவற்றைச் சேகரித்துச் சமையற்காரருடனும், அடிமையாட்களுடனும், தாய்மார்களுடனும், ஆடுவோர் பாடுவோர் முதலியவர்களுடனும், நகரமாந்தர்களுடனும் சீதைக்குப் பிரதியாய்ச் சுவர்ண சீதையைச் செய்தெடுத்துக் கொண்டு முந்தியே அங்குப் போயிருக்குமாறுசெய்; அவனே அங்கு வருவோர்க்கு இருப்பிடங்கள் அமைத்துப் போஜன சௌகரியங்களையும் ஏற்படுத்தும்படி அப் பரதனுக்குச் சொல்; சகலரும் நகரத்தை அலங்கரித்துச் சந்தோஷங் கொண்டாடும்படி செய்; இவற்றையெல்லாம் நீ நிறைவேற்றிவிட்டு உத்தம இலக்ஷணமுள்ள குதிரையை அலங்கரித்துப் பூப்பிரதக்ஷணம் செய்வித்து யாகசாலைக்குக் கொண்டுவந்து சேர்' என்று கட்டளையிட்டார். அக்கட்டளைப்படி இலக்குமணன் யாவற்றையும் நிறைவேற்றினன்; அலங்கரிப்போரால் அந்த நகரமெங்கும் தெய்வலோகம் போல் அலங்கரிக்கப்பட்டது; அயோத்தியி லுள்ளவர்கள் பலவித அலங்காரங்களைச் செய்துகொண்டு பற்பல விநோதங்களை விளைவித்து எங்கும் சந்தோஷங் கொண்டாடினார்கள். பரதன் சகல பரிவாரங்களுடனும் யாகசாலை போய்ச் சேர்ந்தனன். நகரமாந்தர்களும் அங்குப் போய்க் கூடினார்கள். சத்துருக்கனும் சகல படைகளுடன் வந்து சேர்ந்தான். விபீஷணன், சுக்கிரீவன் முதலிய பற்பல தேயமன்னர்களும், முனிவர்களும் வந்து கூடினார்கள்.

அதன்மேல் இராகவர் யாகம் ஆரம்பிக்கும் தினத்தில் நல்ல முகூர்த்தத்தில் கங்காஜலத்தில் ஸ்நானஞ்செய்து நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்து அலங்கரித்துக் கொண்டு தேரேறிப் புறப்பட்டுச் சகல தேவர்களும் மனிதர்களும் கொண்டாட, பல மங்கள வாத்தியங்கள் முழங்க யாகசாலை போய்ச்சேர்ந்து முனிவர்களை வணங்கி, அரசர்களுக்கு இனிய மொழிகூறி அக்கூட்டத்தினடுவில் அமர்ந்தார். இலக்குமணன் அஸ்வத்தைப் பூப்பிரதக்ஷணம் செய்து கொண்டு வந்து யாகசாலையிற் கட்டிவிட்டுச் சுக்கிரீவனையும் வானர வீரர்களையுந் துணையாகக்கொண்டு அங்கு வந்திருந்த அந்தணர் முதலிய சகல வருணத்தார்க்கும் அடிசில் முதலியன பரிமாறச் செய்து அவர்களை உபசரித்துக்கொண் டிருந்தான். இராமர் கட்டளையால் விபீஷணன் தன் துணைவராகிய பிசிதாகனரோடு அங்கு வந்த முனிவர்க்குப் பூசனைகள் இயற்றிக்கொண் டிருந்தான். இவ்வாறு ஒவ்வொருவரும் ஒவ்வொரு முக்கியமான காரியத்தையும் சிரத்தையாக நடத்திக்கொண்டிருந்ததால் சகலரும் இஷ்டமானவற்றையெல்லாம் குறைவின்றி அனுபவித்து மகிழ்ந்துகொண் டிருந்தார்கள். அதனால் முனிவர்களெல்லோரும் ‘எங்கும் இத்தகைய உபசாரம் சகலருக்கும் நடந்ததில்லை’ என்று இராமரைப் புகழ்ந்தார்கள். அதன்மேல் அஸ்வமேதயாக கிரியைகள் முனிவர்களால் தொடங்கப்பெற்று ஒவ்வொன்றாக முறையே சாஸ்திர விதிப்படி செய்யப்பட்டு வந்தன.

குசலவர்கள், வான்மீகரின் ஆக்ஞையால் இராமருடைய யாகசாலைக்குச் சென்று. இராமாயணம் பாடி அவரை மகிழ்வித்தல்.

அப்படி யாகம் நடந்துவரும்போது வனத்திலிருந்த வான்மீகர், இராமர் அச்வமேதயாகஞ் செய்வதையுணர்ந்து,

தம்மிடமிருந்த சீதையின் புத்திரராகிய குசலவர்களிடத்தில், "நீங்கள் இராமருடைய வேள்விச்சாலைக்குச் சென்று இராமாயணகானஞ் செய்யுங்கள்; அங்குள்ளவர்கள் உங்களை யாரென்று வினவினால் நீங்கள் அவர்களிடம், நாங்கள் வான்மீகருடைய சிஷ்யர்களென்று சொல்லுங்கள்" என்று கூறி அவர்களை இராமர் அசுவமேதயாகஞ் செய்தவிடத்திற் கனுப்பினார். அவர்கள் அப்படியே சென்று அந்த யாக சாலைக்கருகில் ஓரிடத்திலிருந்து காந்தருவரும் நாண இராமாயண கானம் பண்ணினார்கள். அதைக்கேட்டதும் அங்கிருந்தவர்கள் மகிழ்ந்து இராமரிடம் சென்று அப்பிள்ளைகளின் தன்மையைப்பற்றியும், அவர்கள் செய்த கானத்தின் இனிமையையும் சிலாகித்துச் சொன்னார்கள். இராமர் அவற்றைக் கேட்டதும் அவர்கள்மீது விருப்பங்கொண்டு அந்தக் குசலவர்களை அழைத்து அவர்கள் இராமாயணத்தைத் தம்மிடம் பாடுமாறுசெய்து பட்டாபிஷேகம் வரைகேட்டு அது தமது சரித்திரமாயிருப்பதுணர்ந்து அதன் பொருட்டு அதிசயித்து அவர்களை நோக்கி, "நீங்கள்யாவர்? இஃது எவரால் செய்யப்பட்டது?" என்று வினவினார். அதற்கவர்கள், "நாங்கள் வான்மீகருடைய மாணாக்கர்கள்; இச்சரித்திரம் வான்மீகராலேயே செய்யப்பட்டது; இருபத்து நாலாயிரம் சுலோகங்களையுடையது; நூறு உபாக்கியானங்களுள்ளது; ஐந்நூறு சருக்கங்களடங்கியது; ஆறு காண்டங்களும், அவற்றின் சுருக்கமும் பிறவரலாறுகளுமடங்கிய உத்தர காண்டமும் உள்ளது; கதாநாயகரின் ஆயுட்காலம் வரையுள்ள சரித்திரமுழுவதும் அடங்கியது" என்று சொன்னார்கள். இராமர் அவற்றைக்கேட்டு மகிழ்ந்து அவர்களுக்குப் பதினெண்கோடி செம்பொன் அளிக்கும்படி இலக்குமணனுக்குக் கட்டளையிட்டார். அதைக்கேட்டவுடன் குசலவர்கள் "காட்டில் சஞ்சரிக்கும் எங்களுக்குப் பொருள் தேவை

யில்லை" என்று மறுத்துவிட்டார்கள். அதன்மேல் இராகவர் தினந்தோறும் அவர்கள் அங்கேவந்து இராமாயண கானஞ்செய்யும்படி அவர்களிடம் சொன்னார். அவர்கள் அப்படியே வான்மீகரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு அங்கே இராமாயணகானம் செய்து வந்தார்கள்.

இராமர் குசலவரைத் தம் புத்திரரேன்றுணர்ந்து சீதையைத் தம்மிடம் அழைப்பித்தல்.

அப்படி அவர்கள் இராமாயணத்தைப் பாடிக்கொண்டு வரும்போதே சில காரணங்களைக் கொண்டு இராமர் அவர்களைத் தம்புத்திரரென்றுணர்ந்து கொண்டார். அங்ஙனம் உணர்ந்ததும் அவர், அவர்கள் தமக்குப் புத்திரரானதைப் பற்றிப் பெரிதும் மகிழ்ந்து அவர்களைத்தழுவி வான்மீகருடைய ஆச்சிரமத்திற் கனுப்பிவிட்டு, உடனே சீதையையழைத்து அவளுடைய கற்புக்குப் பங்கமில்லை யென்பதை மீண்டும் உலகத்தாரெல்லோருக்கும் அவள் தெரிவிக்குமாறு செய்யக்கருதிச் சில தூதுவர்களை அழைத்து அவர்களிடம், "நீங்கள் வான்மீகரிடம் சென்று சீதை பரிசுத்தமுடையவளாயிருந்தால் அவர் அவளை இங்கே அழைத்துவந்து சகலருக்கும் முன்னிலையில் அவள் தன் பரிசுத்தத் தன்மையை விளக்கிக் காட்டும்படி செய்யுமாறு நான் அவரை வேண்டுவதாகச் சொல்லுங்கள்" என்று கூறினார். அவர்கள் அவ்வாறே சென்று இராமர் கட்டளையை வான்மீகரிடம் தெரிவித்தார்கள். அவர் 'அவ்வாறே நாளைக் காலையில் நான் அக்காரியத்தைச் செய்கிறேன்' என்றார். தூதுவர்கள் திரும்பிவந்து இராமரிடம் வான்மீகர் சொன்னதை யுரைத்தார்கள். இராமர் அதைக்கேட்டு மகிழ்ந்து, "நாளைக் காலையில் சீதை இங்கேவந்து தன் பதிவிரதாதர்மத்தில் தோஷமில்லை யென்பதைச் சகலருக்கும் முன்னிலையில்

மெய்ப்பித்துக் காட்டுவாள்; உலகத்தவரெல்லோரும் அப்போது அதனை உணர்ந்து கொள்ளலாம்" என்று அங்கிருந்த அரசர் முதலிய எல்லோரிடத்தும் கூறினர். எல்லோரும் அதைக்கேட்டு, அவ்வதிசயத்தைக் காணுதற்கு மறுநாள் காலையில் அங்கே வந்து கூடினர்கள். அப்போது வான்மீகர் சீதையையும் குசலவர்களையும் அழைத்துவந்து இராமரைக் கண்டு ஆசீர்வதித்து அவரை நோக்கி அவருக்குச் சீதையைச் சுட்டிக்காட்டி, "இராகவரே! இந்தச் சீதை மகாபதிவிரதை; இந்தக் குமாரர்கள் உமக்குப் பிறந்தவர்களே ; இவள் கற்புடையவள் என்பதை ஸ்தாபிக்க இப்போது சித்தமாயிருக்கின்ருள்; நான் வருணதேவருடைய பத்தாங்குமாரன் ; பொய் சொல்லேன்; உலக அபவாதத்திற் கஞ்சிய நீர் எவ்விதமாகவேனும் இவளைப் பரீக்ஷித்து இவளுடைய பரிசுத்தத்தன்மையை உலகத்தார்க்குக் காட்டிக் கொள்ளும்" என்று சொன்னர். அவற்றைக் கேட்டதும் இராமர் அவரை வணங்கி, "சுவாமி! ஜானகியின் கற்பை ஸ்தாபிக்க உம்முடைய வார்த்தைகளே போதும்; வேறொரு சாக்ஷியும் வேண்டியதில்லை; அவள் முந்தித் தேவர்கள் முன்னிலையில் அக்கினியிற் புகுந்து வந்ததனலேயே அவளுடைய கற்பினிலையை நான் தெரிந்துகொண்டேன்; எனினும் உலக அபவாதத்திற்கஞ்சி மீண்டும் அவளை வனத்தில் விடுத்தேன்; இப்போது உம்முடைய வார்த்தையைக்கொண்டு உலகத்தார் ஜானகி தோஷ மற்றவளென்பதைத் தெரிந்து கொள்வார்கள்; ஆதலின் நான் ஜானகியையும் பிள்ளைகளையும் சேர்த்துக்கொள்கிறேன்" என்று அவரிடம் சொன்னர். இவற்றைக் கேட்டு அங்கு வந்திருந்த தேவர்களும், முனிவர்களும், மற்ற உலகத்தார்களும் சந்தோஷ மடைந்தார்கள்.

சீதை பூப்பிரவேசமாதல்.

அப்போது ஜானகியாயிருந்த இலக்குமிக்குப் பூலோகத்தில் தான் செய்யவேண்டிய வேலைகளெல்லாம் முடிந்துவிட்டபடியாலும், பரமபதத்திற் கெழுந்தருள வேண்டிய காலம் சமீபித்தபடியாலும், அவள் பூலோகத்தைவிட்டு மறையத்துணிந்துதன்மீது பிறர் சந்தேகங்கொண்டதற்குக் கோபித்து மறையத் துணிந்தவள் போல் நடித்துக் கண்ணீரொழுகிய முகத்தோடு சகலரையும் வணங்கித் தரையைப் பார்த்தவண்ணமாக "நான் ஸ்ரீ இராகவர்தவிர மற்றையரை ஸ்பரிசியாதவளென்பது உண்மையானால் என் தாயாகிய பூமிதேவி என்னைத் தன்வயிற்றில் அடக்கிக்கொள்வாளாக" என்று சொன்னாள். உடனே பூமி வெடிக்க அவ்வெடிப்பிலிருந்து ஒரு திவ்வியாசனமானது நாகலோகத்தாரால் தாங்கிக்கொண்டு வரப்பட்டது. அப்பொழுதே பூமாதேவி வந்து சீதையைத் தூக்கி அச்சிம்மாதனத்தில் வைத்து எடுத்துக்கொண்டு பூமிக்குள் போய் விட்டாள். அச்செய்கையைக்கண்டு தேவர்கள் பூமாரி சொரிந்தார்கள்; பூலோகத்தார் அதிசயித்துச் சீதையை வாழ்த்தினார்கள். இராகவரோ சீதை பிரிந்து விட்டாள் என்னும் வருத்தத்தால் மனங்கலங்கிப் பூமிதேவியை நோக்கி, "பிருதிவிதேவியே! நீ இப்போது என் காதலியை மறைத்து என்னைக் கவலைக்குள்ளாக்கினாய்; அவளை மீண்டும் என்னிடம் கொண்டுவந்துவிட்டுவிடு; அல்லது அவளிருக்குமிடத்தை எனக்குக் காட்டு; அல்லது என்னையாவது அவளிருக்கு மிடத்திற்குக் கொண்டுபோய்விடு; இன்றேல் நான் உன் வயிற்றைப் பிளந்து அவளைக் கொண்டுவருவேன்; அல்லது உன்னை எரித்து விடுகிறேன்" என்று கோபித்து நின்றார். அப்போது அவருடைய அந்நிலையைக் கண்டு பிரம

தேவர் அவரை நோக்கி, "ஆதிமூலப் பொருளே! நீர் உம்முடைய பூர்வீக நிலைமையை மறந்துவிட்டீர் போலும்; உம்மை இன்னும் மனிதராகவே நினைத்து அதற்குத் தக்க நாடக மாடுகின்றீரே; பூர்வத்தில் தேவர்களுக்குச் சொல்லி வந்ததை நினைத்துப் பாரும்; உம்முடைய வேலை முடிந்தது; நீர் பரமபதம்போக வேண்டிய காலம் சமீபித்து விட்டது; அதனால் உம்முடைய தேவியாரும் அங்கே உம்முடன் வந்து சேருதற்குப் போய்விட்டார்; இப்போது நாகலோகத்தில் எழுந்தருளி யிருக்கின்றார்; நீர் வைகுண்டம் சேர்ந்தவுடன் அவரும் அங்கே வந்து சேர்வார்; இராமாயணத்தை நீர் குசலவர்களிடம் கேட்டதனாலேயே உமக்கு எல்லா விஷயங்களும் விளங்கியிருக்கும்; இனி மீதியிருக்கும் உத்தர காண்டத்தையும் நீர் கேட்டால் உமக்கு இன்னும் மற்ற இரகசியங்களெல்லாம் வெளிப்படும்; நான் தேவர்களுடன் முந்தியே அவற்றைக் கேட்டிருக்கின்றேன்; நீர் கோபத்தை விட்டு எஞ்சி நிற்கும் சில காரியங்களையும் நிறைவேற்றிப் பரமபதத்திற்கு விரைந்து எழுந்தருள்வீராக" என்றுகூறி விட்டுத் தேவர்களுடன் தமதிருப்பிடஞ் சேர்ந்தார்.

இராமர் அஸ்வமேதயாகம் முடித்து அயோத்தி யடைதல்.

பிரமதேவர் கூறியவற்றைக் கேட்ட பின் இராமர் கோபந்தணிந்து மறுநாள் குசலவர்களிடம் இராமாயண உத்தரகாண்டத்தையும் கேட்டு மகிழ்ந்து அஸ்வமேத யாகத்தை நிறைவேற்றிச் சகலருக்கும் செய்யவேண்டிய வெகுமதிகளை யெல்லாம் செய்து எல்லோரையும் தங்கள் தங்கள் இருப்பிடங்கட் கனுப்பிவிட்டுக் குசலவர்களுடனும் தம்பியருடனும் மற்ற பரிஜனங்களுடனும் அயோத்தியிற் சேர்ந்து பொற் சீதையை வைத்துக் கொண்டே. மேலும் பற்பல யாகங்களை இயற்றி நீதியுடன்

அரசு செலுத்திக்கொண் டிருந்தார். அவர் செய்த புண்ணிய விசேஷங்களால் அவருடைய இராஜ்ஜியம் முன்னினும் அதிக செழிப்புற்றிருந்தது. அப்படி யிருந்தகாலத்தில் சில ஆண்டுகள் கழிந்தபின் கௌசலை, சுமித்திரை, கைகேயி ஆகிய மூவரும் இவ்வுலக வாழ்வைத் துறந்து சுவர்க்கமெய்தித் தசரதரோடு சேர்ந்து களிப்புற்றனர். இராமர் தம் தம்பியருடனே அந்தத் தாய்மார்களுக்குச் செய்யத் தக்க கிரியைகளை யெல்லாம் குறைவற நடத்தித் தான தருமங்களைச்செய்தார். அக்காலத்தில் பரதனுக்கு தக்ஷன், புஷ்கரன், என்ற பிள்ளைகளும், இலக்குமணனுக்கு அங்கதன், சந்திரகேது என்ற பிள்ளைகளும், சத்துருக்கனுக்கு சத்துருக்காதி, சுபாகு என்ற புத்திரர்களும் பிறந்திருந்தார்கள்.

இராமர் காந்தருவ இராஜ்ஜியத்தைப் பரதன் குமாரர்க்குப் பகிர்ந்தளித்தல்.

இராமர் மேற்கூறியபடி செங்கோல் செலுத்திக் கொண்டிருக்கும்போது, காந்தருவர்கள் கேகய மன்னனாகிய யுதாஜித்திற்குச் சொந்தமான சிந்து நதிக்கரையின் இருமருங்கிலுமுள்ள நாடுகளைத் தங்கள் வசஞ்செய்துகொண்டிருந்தார்கள். அதனால் அம்மன்னன், கந்தருவர்களைவென்று அந்நாடுகளை க்ஷத்திரிய இராஜ குடும்பத்தார்களுக்குக் கொடுக்க நினைத்து அதனை இராமராலேயே முடிப்பிக்க வேண்டுமென்று துணிந்து, அவ்வெண்ணத்தை இராமரிடம் தெரிவிக்குமாறு தன் புரோகிதரான கார்க்கிய முனிவரை அனுப்பினன். அவர் இராகவரிடம் வந்து அவ்விஷயத்தைத் தெரிவித்தனர். அதைக்கேட்டதும் இராமர் அம்முனிவரை நோக்கி, "சுவாமி! நான் பரதனையும் அவன் புத்திரர்களாகிய தக்ஷன், புஷ்கரன் ஆகியவர்களையும் படைகளுடன் காந்தருவரோடு யுத்தஞ்செய்ய அனுப்புகிறேன்;

நீங்கள் கேகய தேசாதிபரும் அவர்களுடன் துணைக்குச் செல்லும்படி செய்யுங்கள்; அவர்களெல்லோரும் போய்க் காந்தருவரோடு போர்செய்தால் அவர்கள் தோற்றுப் போவார்கள்; அதன்மேல் அந்நாடுகளைப் பரதன் தன்பிள்ளைகட்கே சொந்தமாக்கிவிடுவான்; இது நிச்சயமாக நடைபெறுமாதலால் நான் இப்பொழுதே தக்ஷனையும், புஷ்கரனையும் அந்நாடுகளுக் கதிபராக நியமித்து அவர்களுக்கு மகுடாபிஷேகம் செய்து விடுகிறேன்" என்று சொல்லி அப்பிள்ளைகளுக்குப் பட்டாபிஷேகம் செய்து அதன்மேல் அப்பிள்ளைகளும் பரதனும் அந்தமுனிவருடனே புறப்பட்டுப் போகும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார். அவ்வாறே அவர்கள் கார்க்கியரை அழைத்துக் கொண்டு பிரயாணமாகிப் பதினைந்து தினங்களில் கேகய தேசம் போய்ச் சேர்ந்தார்கள். அத்தேசாதிபதியாகிய யுதாஜித்து தன் மருமகனாகிய பரதனையும் மற்றவர்களையும் வரவேற்று உபசரித்தான். கார்க்கியர் இராமர் சொன்னதை அவனிடம் சொன்னார். அவன் அதைக் கேட்டு அதன்படி தானும் பரதனுக்குத் துணையாகச் செல்லுதற்கு ஆயத்தமானான். பின்னர் எல்லோரும் அங்கிருந்து புறப்பட்டுக் கந்தருவர்களிருக்குமிடஞ்சென்று அவர்களுடன் போர் தொடுத்தார்கள். அவர்களும் இவர்களுடன் எதிர்த்துக் கடுமையான யுத்தஞ்செய்தார்கள். அச்சண்டை ஏழுதினங்கள் வரை நடந்தது. அவ்வாறு நடந்தும் அதில் அவர்களுள் ஒருவர்க்கொருவர் இளைக்காமல் நின்றார்கள். முடிவில் பரதன், சம்வர்த்தமென்னும் காலாஸ்திரத்தைக் கந்தருவர்கள் மீது பிரயோகித்தான். அதனால் அவர்களனைவரும் கணப் பொழுதில் மாண்டார்கள். அதன்மேல் பரதன் கேகய தேசாதிபதியை அத்தேயத்திற் கனுப்பிவிட்டு, அக்கந்தருவர்வசப்பட்டிருந்த நாடுகளை இருபிரிவாக்கித் தக்ஷசிலை, புட்கலாவதி என்னும் இரண்டு நகரங்களை

யுண்டாக்கி, அந்நாடுகளில் ஒரு பிரிவுக்குத் தக்ஷசிலையையும் மற்றொரு பிரிவுக்குப் புட்கலாவதியையும் தலைநகரங்களாக்கி, தன் புத்திரனாகிய தக்ஷன் தக்ஷசிலையிலும், புஷ்கரன் புட்கலாவதியிலும் இருந்து அரசாளும்படி செய்து ஐந்து வருஷங்கள் வரை அவ்விடங்களில் இருந்தான். அப்பிள்ளைகள் திறமையாக அந்நாடுகளை ஆட்சி புரிந்தார்கள். அவர்கள் அங்ஙனம் செய்த ஆட்சித்திறங்கண்டு பரதன் மகிழ்ந்து பின்னர் இராமபிரானிடம் வந்து சேர்ந்து அங்கே நடந்தவைகளைக் கூறினான்.

இராமர் இலக்குமணன் பிள்ளைகளுக்கு அரசாட்சி கொடுத்தல்.

அவற்றைக் கேட்டு இராமர் ஆனந்தமடைந்தார். அப்போது இலக்குமணன் குமாரர்கள் யௌவனத்தை யடைந்திருந்தார்கள். அதனால் அவர்களுக்கும் இராமர் மகுடாபிஷேகம் செய்ய விரும்பி ஒரு சமயம் பக்கத்தில் நின்ற இலக்குமணனை, நோக்கி, "உன் மக்களிருவரும் குமாரப் பருவமடைந்து விட்டதால் அவர்களுக்கும் இராஜ்ஜிய பட்டாபிஷேகம் செய்ய வேண்டும்; ஆதலால் அவர்களுக்கு அரசாட்சியை ஸ்தாபிப்பதற்குத் தக்க தேசங்களை நீ ஆராய்ந்து சொல்" என்று கூறினார். அதைக் கேட்டவுடன் சமீபத்திலிருந்த பரதன் அவரை நோக்கி, "சுவாமி! சந்திரகாந்தமென்னும் தேசமொன்றிருக்கின்றது; அது மிக வளமுடையது. அதில் கொடுங்கோன் மன்னர் பலர் இருக்கின்றனர்; அவர்களை நாம் ஒழித்து அங்கே அப் பிள்ளைகளுக்கு இராஜ்ஜியம் ஏற்படுத்தலாம்" என்று சொன்னான். அவ்வார்த்தைகளைக்கேட்டவுடனே இராமர் இலக்குமணன் பிள்ளைகளாகிய அங்கதனுக்கும் சந்திரகேதுவுக்கும் அத்தேசத்தில் இராஜ்ஜியங்கள் நிலைப்பட்டனவென்றே உறுதிசெய்து மகுடஞ்சூட்

டிச் சகலபடைகளுடன் அங்கதனை அங்கே அழைத்துக் கொண்டுபோய் இராஜ்ஜியத்தை அவனுக்கு ஸ்தாபிக்கும்படி இலக்குமண னுக்குக் கட்டளை யிட்டார். இலக்குமணன் அவ் வாறே அங்கதனுடன் சென்று சந்திரகாந்த நாட்டின் ஒரு பாகத்திலுள்ள அரசர்களை ஜெயித்து காரகாபதி யென்னும் தேசத்தையும் அங்கதியா வென்னும் தலை நகரையும் உண் டாக்கி அதில் அங்கதனை அரசனுக்கி அங்கே சிலகாலமிருந்து திரும்பிவந்து இராமரிடம் தான் செய்தவற்றைக் கூறினன். அதன்மேல் இராமர் ஒருநாள் பரதனை நோக்கி, "நீ இலக்கு மணன் பிள்ளையாகிய சந்திரகேதுவை அழைத்துச் சென்று அவனுக்கும் சந்திரகாந்த நாட்டில் இராஜ்ஜியத்தை ஸ்தா பித்து வரக்கடவாய்" என்று கட்டளையிட்டார். அவன் அவ்வாறே சகல படைகளுடன் சந்திரகேதுவை அழைத் துச்சென்று அந்நாட்டின் மற்றொரு பகுதியிலுள்ள செங் கோன் மன்னரைப்போக்கி மல்லபூமி யென்னும் நாட்டை யும் சந்திரகாந்தை யென்னும் நகரத்தையும் உண்டாக்கி அதில் அந்தச் சந்திர கேதுவை அரசனுக்கி அவனுடன் ஓராண்டிருந்து மீண்டுவந்து இராமரிடம் தான் செய்த காரி யங்களைக் கூறினன். அதன்மேல் இராமர் மகிழ்ச்சியுடன் அரசு புரிந்துகொண்டிருந்தார்.

இராமர்பால் காலன் வந்து பிரமன் கருத்துரைத்தல்.

அப்படி இருக்கும்போது இராமர் வைகுண்டம் சேர வேண்டிய காலம் சமீபித்தபடியால் அதனை அவருக்கு ஞாபகப்படுத்தி வரும்படிக்கும், இலக்குமணன் அவரை விட்டுப் பிரிவதற்கான மார்க்கஞ்செய்து வரும்படிக்கும் பிரமதேவர், காலனை இராகவரிடம் அனுப்பினர். அங்ங னம் அவரால் அனுப்பப்பட்ட தென்றிசைக்கோன் ஒரு தவசிபோல் வடிவெடுத்து இராமருடைய அரண்மனைவாயி

வில் போய் நின்று ஒரு பொய்யான வார்த்தை கூறித் தான் இராமரைப்பார்க்க ஏதுவுண்டாக்கக்கருதி இலக்குமணனைக் கூப்பிட்டு அவனிடத்தில், "நான் அதிபலமுனிவரின் தூதன்; ஒரு பெரிய காரியத்தைப்பற்றிப் பேச இராமரிடம் வந்தேன்; ஆதலால் நீ என் வரவை அவரிடம் கூறு" என்று பொய்வார்த்தையைச் சொன்னான். இலக்குமணன் அதை மெய்யென்றெண்ணி அவன் வருகையை இராகவரிடம் தெரிவித்தான். அவர் காலனை உள்ளே அழைத்து முனிவர்தூதனென்றே நினைத்து உபசரித்து ஆசனத்தில் அமரச்செய்து; "சுவாமி! தாம் குறித்துவந்த காரியமெது?" என்று வினவினார். அதற்குக் காலன், "இராகவரே! நான் கூறும் விஷயங்களை நீர் மாத்திரமே கேட்கவேண்டும்; ஆதலால் நாம் பேசிக்கொண்டிருக்கும்போது இங்கே பிறர் வந்தாலும், அவற்றைக் கேட்டாலும் அவரை நீர் இவ்வுலகத்தை விட்டு நீக்கிவிடுவதாக ஒரு கட்டளை பிறப்பித்து இங்கே சரியானகாவல் ஏற்படுத்தவேண்டும்; அதன்பிறகு தான் நான் உம்மிடம் பேச ஆரம்பிப்பேன்" என்றான். உடனே இராமர் இலக்குமணனுக்கு அவ்விவரத்தைக்கூறி, அவனையே அக்காவலுக்கு நியமித்தார். அதன்மேல் முனிவேடந்தாங்கிய காலன் இராமரை நோக்கி, "சுவாமி! நான் காலதேவன்; பிரமதேவர் கட்டளையால் உமக்குச் சில விஷயங்களைக் கூறிப்போக இங்கு வந்தேன்; அவர், 'நான் பூர்வத்தில் இப்போது இராமராயிருக்கும் விஷ்ணுவினாலேயே படைக்கப்பட்டேன்; அவருடைய அனுக்கிரகத்தினாலேயே படைப்புத்தொழிலை நடத்திவருகின்றேன்; அவர் முன்னே மதுகைடவரை வதைத்து அவர்களுடைய எலும்புகளாலும் நிணங்களாலும் பூமியை மலைகள் நெருங்கியதாகவும், புற் பூண்டுகளுள்ளதாகவும் செய்தருளினார்; அதனாலேயே பூமிக்கு மேதினியென்று பெயருண்டாயிற்று; அவரா

லேயே எனக்குச் சகல சிறப்புக்களும் உண்டாயின; பின்னர்த் தேவர்களைப் பாதுகாத்தற்பொருட்டு அவர் அதிதியிடம் இந்திரனுக்குத் தம்பியாகிய உபேந்திரனு யவதரித்து அவர்களின் துன்பங்களைப் போக்கினார்; இப்போது இராவணாதியர்களைச் சங்கரிக்கும் பொருட்டு இவ்வவதாரம் எடுத்திருக்கின்றார்; அக்காரியமும் நிறைவேறிற்று; அவருடைய பூமிவாசத்திற் கென்று பூர்வத்தில் அவர் பதினோராயிரம் ஆண்டுகள் ஏற்படுத்தியிருந்தார்; அவை இப்போது கழிந்துவிட்டன; இனி அவர் பரமபதத்திற்கு எழுந்தருளவேண்டும்; அவருடைய வருகைக்காக அங்கே விண்ணவர்கள் காத்திருக்கின்றார்கள்; ஆதலின் இவற்றையெல்லாம் இராமரிடம் நீ தெரிவி' என்று என்னிடம் சொன்னார்; ஆதலின் நீர் அவர் விருப்பத்தை நிறைவேற்றவேண்டும்" என்று சொன்னான். இவற்றை யெல்லாம் கேட்டதும் இராமர் அவனை நோக்கி "தென்றிசைத் தலைவனே! நானும் என்னுடைய ஸ்தானத்தை யடையவேண்டு மென்று நினைத்து நீயும் இங்கே வருதல்கூடுமென்று எண்ணிக்கொண்டுதா னிருந்தேன்; அப்படியே நீயும் வந்துவிட்டாய்; இனி நான் விரைவில் என்பதத்தைச் சேர்வேன்" என்று சொன்னார். அப்போது இலக்குமணன் இராமரைவிட்டுப் பிரிதற்கேதுவை யுண்டாக்கற்பொருட்டுக் காலன், துருவாசர் அங்கே வரச் செய்தான்.

துருவாசர் இராமரிடம்வந்து இலக்குமணன் அவரைப் பிரிதற்கேதுவை உண்டாக்கல்.

மேற்கூறியபடி இராமரும் காலனும் சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போது துருவாசர் இராமரைக் காணவந்து அரண்மனை வாயிலில் நின்று, 'துரிதமா யென்னை இராமரிடம் நீ அழைத்துச்செல்லவேண்டும்' என்று இலக்குமண

னிடம் கூறினர். இலக்குமணன் அக்காரியத்தைச் செய்தால், இராமர் அவனுக்கிட்ட கட்டளைக்கு விரோதமாகுமாதலால், வேறுபாயத்தால் அதனைத் தடுத்துவிடக்கருதி அம்முனிவரை நோக்கி, 'சுவாமி! நீர் என்தமையனுரிடம் சென்று முடித்துக்கொள்ள விரும்பியிருப்பதை என்னிடம் கூறினல் நான் அதனை விரைவில் நிறைவேற்றுகிறேன்' என்றான். உடனே தூருவாசர் கோபித்து, "அது கூடாது; நீ இப்பொழுதே சென்று நான் வந்திருப்பதை இராமருக்குத் தெரிவிக்கவேண்டும்; அங்ஙனம் செய்யாவிடின் நான் இந்நகரத்தோடு நீயும் உன் சுற்றத்தாரும் சந்ததிகளும் அழியும்படி சபிப்பேன்" என்று அவனிடம் கூறினர். அதைக் கேட்டவுடன் இலக்குமணன், "இராகவரிடம் சென்றால் அவர்கட்டளையை மீறியதற்கு நமக்கு இவ்வுலகத்தைத் துறத்தல் சம்பவிக்கும்; போகாவிட்டால் முனிவருடைய சாபத்தால் எல்லோருக்கும் கேடுண்டாகும்; இவற்றுள் எதுசெய்யத் தக்கது" என்று சிறிது நேரம் ஆலோசித்து 'பலர்க்குக் கேடு விளைப்பதைக் காட்டினும் நாம் மாத்திரம் கேடடைவது நலம்' என்று துணிந்து இராமரிடம் சென்று தூருவாசர் வரவைக் கூறினன். அதைக்கேட்டதும் அவர், "நம்கட்டளைப்படி இலக்குமணன் தூருவாசர் வார்த்தையைத் தடுத்திருப்பான்; அதனல் அவர், கோபித்துச் சாபமிடுவதாகச் சொல்லியிருப்பார்; அதற்கஞ்சி, இவன், தான் கேடடைந்தாலும் பாதகமில்லையென்று நம் கட்டளையை மீறி இங்கே வந்திருக்கின்றன்; இனி நாம் என் செய்வது? இது விதிப்படி அமைந்திருக்கின்றது" என்று நினைத்துக்கொண்டு காலனை அனுப்பிவிட்டுத் தூருவாசரை எதிர்கொண்டழைத்து உபசரித்து, 'சுவாமி! உம்முடைய விருப்பமியாது?' என்று வினவினர். அவர், 'நான் ஆயிரம் வருஷங்கள்வரை தவஞ்செய்து முடித்

தேன்; அதனால் எனக்கிப்போது மிகுந்த பசியாயிருக்கின்றது; எனக்கு நீர் உணவளிக்கவேண்டும்' என்று கூறினார். இராகவர் அவ்வாறே அவருக்குத் திருப்தியாக ஆகாரமளித்தார். அவர் அதனை உண்டு பசிதணிந்து இராமருக்காசி கூறிச் சென்றார்.

இலக்குமணன் வைகுண்ட மடைதல்.

அதன்மேல் இராமர் காலதேவனுக்களித்த வாக்கின்படி இலக்குமணனைத் தம்மைவிட்டுப் பிரித்துவிட வேண்டிய விஷயத்தை நினைத்து மிகவுந்துக்கித்து ஒன்றுஞ் சொல்லமுடியாமல் தலைகுனிந்திருந்தார். அக்குறிப்பையுணர்ந்த இலக்குமணன் அவரை நோக்கி, "அண்ணா! என் விஷயத்தில் நீர் ஏன் கவலைப்படுகின்றீர்; இது காலகதியால் நேர்ந்தது; ஆதலின் நீர் அடியேனைத் துறந்து உம்முடைய பிரதிக்ஞையை நிறைவேற்றுவீராக" என்று கூறினான். உடனே இராமர் வசிஷ்டரையும் மந்திரிமார்களையும் அழைத்து அவர்களிடத்திலும், மற்ற நகரமாந்தர்களிடத்திலும் இலக்குமணன் விஷயத்தைக் கூறினார். அப்போது வசிஷ்டர் "இப்படி நேருமென்பதை முன்னமே நான் அறிவேன்; நீர் வருந்தாமல் பிரதிக்ஞையை நிறைவேற்றி விடும்" என்று இராமருக்குக் கூறினார். அதனால் இராமர் தெளிவுற்று இலக்குமணனை நோக்கி, "உன்னை நான் கைவிட்டேன்" என்றார். இலக்குமணன் கண்ணீரொழுகிய முகத்துடன் அரண்மனைக்குட் செல்லாமல் சரயுநதிக்கேகி ஸ்நானஞ் செய்து அங்கே பிராணாயாமத்தால் சுவாசத்தையடக்கி நின்றான். அப்போது சகல தேவர்களும் அங்கேவந்து அவன்மீது பூமழை சொரிந்தனர். அதன்மேல் இலக்குமணன் அத்தேகத்தை நீத்துப் பூர்வவடிவமாகிய சேஷரூபத்தை அடைந்தான். உடனே அவனை வைகுண்டத்திற்குக்

கொண்டு செல்ல அங்கே விமானம் வந்தது. அதில் அவன் எழுந்தருளி வைகுண்ட மடைந்தான்.

இராமரும் வைகுண்டம் சேரத் துணிதல்.

அப்போது இராமர், இலக்குமணன் பிரிந்ததற்கு மிக வருந்திப் புலம்பி உடனே மந்திரி முதலியவர்களிடத்தில், "இனி இலக்குமணனைப் பிரிந்திருத்தல் என்னால் இயலாது; ஆதலின் நான் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்து விட்டுத் தம்பிசென்ற நெறியே செல்கின்றேன்" என்றார். அதைக்கேட்டதும் பரதன் மனம் பதைத்து, அவரை நோக்கி "அண்ணா! அடியேன் உம்முடனேயே இருக்க வேண்டுகிறேன்; ஆதலால் நான் அரசாட்சியை ஏற்றுக் கொள்ள மாட்டேன்; தக்ஷண கோசலத்திற்குக் குசனையும், உத்தர கோசலத்திற்கு இலவனையும் நீர் அரசர்களாக்கி விடும்; சத்துருக்கனையும் வரவழைத்து உம்முடன்சேர்த்துக் கொள்ள வேண்டும்" என்று கூறினான். நகர மாந்தர்களும் இராமரைப்பிரிய முடியாமல் அவரிடம் வந்து, "நீர் எங்களைப் பிரிதல் கூடாது" என்று அவரடியில் கதறி வீழ்ந்தார்கள். அவர்களின் நிலைமையைக் கண்ட வசிஷ்டர் இராமரை நோக்கி, "நீர் இவர்களுடைய மன விருப்பத்தைப் பூர்த்திசெய்தலே தகுதியாகும்" என்றனர். அதைக்கேட்டு இராமர் தம் அடியில் வீழ்ந்து புலம்பிய மாந்தர்களையும் பரதனையும் நோக்கி, "உங்கள் விருப்பத்தை நான் நிறைவேற்றுகிறேன்" என்று வாக்களித்தார்.

குசலவர்க்கும் சத்துருக்கன் பிள்ளைகட்கும் மகுடாபிஷேகம் செய்தல்.

அதன்மேல் அங்ஙனம் கூறிய இராமர், குசலவர்க்கும், சத்துருக்கன் பிள்ளைகட்கும் மகுடாபிஷேகம் செய்தற்கான

ஏற்பாடுகளை நடத்தும்படி பரதனுக்குக் கட்டளையிட்டார். பரதன் அக் கட்டளைப்படி குசலவர்களைத் தக்ஷணகோசலத்திற்கும், உத்தரகோசலத்திற்கும் அரசராக்கி அவர்களுக்கு மகுடஞ்சூட்டி இராஜநீதிகளைப் போதித்துத் தக்ஷண கோசலத்தில் குசலவதி யென்றோர் நகரத்தை நிருமித்து அதில் குசனையும், உத்தரகோசலத்தில் சிரப்பதியென்னும் நகரத்தை யுண்டாக்கி அதில் இலவனையும் ஸ்தாபித்து விட்டு, அயோத்தியில் நடந்த செய்திகளை மதுரையிலிருந்த சத்துருக்கனுக்குத் தெரிவிக்கும்படி தூதரை யனுப்பினான். அத்தூதுவரால் சத்துருக்கன் எல்லாவற்றையும் கேள்விப்பட்டு மதுராபுரத்தில் சிராப்பளி என்னும் (வைதிசம் என்றும் சொல்லப்படும்) புது நகரத்தை நிருமித்துத் தன் புதல்வர்களாகிய சத்துருக்காதி, சுபாகு என்பவர்களை அதில் ஸ்தாபித்து மூத்தவன் அரசாளுமாறு செய்துவிட்டுத் தான் மாத்திரம் ஒற்றைத் தேருடன் புறப்பட்டு அயோத்தியை அடைந்து இராமரைக் கண்டு வணங்கி அவரிடத்தில், "சுவாமி! அடியேனும் தேவரீருடன் வரச் சித்தமா யிருக்கின்றேன்; என்னை நீர் தடை செய்தல் கூடாது" என்றான். அதன்மேல் இராகவர் பரமபதமடையக் கருதியிருப்பதை விபீஷணன், சுக்கிரீவன் முதலியவர்களும் கேள்விப்பட்டுத் தங்கள் பரிவாரங்களோடு புறப்பட்டுவந்து இராமரிடம், தங்களையும் அவர் செல்லுமிடத்திற்கு அழைத்துப் போகுமாறு விண்ணப்பஞ் செய்தார்கள். இராமர் அவர்களுடைய வார்த்தைகளை யெல்லாம் கேட்டு விபீஷணனை நோக்கி, "நீ இலங்கை இராஜ்ஜியத்தைச் சந்திராதித்தர் உள்ளவரை நடத்தி நம்குல தெய்வமாகிய நாராயணமூர்த்தியை ஆராதித்துக்கொண் டிருப்பாயாக" என்று கட்டளையிட்டார். அவன் அக்கட்டளையைச் சிரமேற்கொண்டான். அப்போது சுக்கிரீவன், தனக்கும் இராமர் அத்தகைய கட்டளையைச்

செய்து விடுவாரோ என்று அஞ்சி அவர் தன்னிடம் ஏதும் சொல்வதற்கு முந்தி அவர் திருமுகத்தைப் பார்த்து, "சுவாமி! நான் கிஷ்கிந்தைக்கு அங்கதனை அரசனுக்கி விட்டேன்; இனி நான் உம்முடன் வரவே ஆயத்தமாயிருக்கின்றேன்" என்ருன். அதன்மேல் ஸ்ரீ இராமர் அவன் விருப்பத்தை அங்கீகரித்து அனுமாரை நோக்கி, "நீ, நாம் முன்னே உனக்குரைத்திருக்கின்றபடி நம்முடைய கதை உலகத்திலிருக்குமளவும் இங்கே இருக்கவேண்டும்" என்று சொன்னுர். அவர் அதற்கிசைந்தார். பின்னர் இராமபிரான் மற்றவர்களெல்லோரும் தம்முடன் வரும்படி அவர்களுக்கனுக்கிரகஞ் செய்தார்.

ஸ்ரீ இராமர், சகோதரர் முதலியவர்களோடு சரயுகட்டஞ் சேர்ந்து ஜோதியிற் கலந்து வைகுண்ட மடைதல்.

மேற்கூறிய செய்கைகள் நடந்த அன்றிரவு போய் மறுநாள் விடிந்தவுடன் ஸ்ரீ இராமச்சந்திரமூர்த்தி, தாம் குறித்த காரியத்தை நிறைவேற்றத் தொடங்கிப் புரோகிதர்களால் மகா பிரஸ்தானத்துக்குரிய சடங்குகள் செய்யப்பெற்று மெல்லிய ஆடை தரித்து விரல்களில் தருப்பைப் பவுத்திரங்கள் அணிந்து பிரமமந்திரத்தை உச்சரித்துக் கொண்டு எவருடனும் பேசாமல் அரண்மனையை விட்டு வெளியேறிப் பாதரக்ஷையின்றிச் சரயுகட்டம் நோக்கி நடந்தார்; அப்போது அவருடைய வலப்பக்கத்தில் திருமகளும், இடப்பக்கத்தில் நிலமகளும் சென்ருர்கள்; அவருடைய படைகளும் புருஷரூபத்துடன் அவரைத் தொடர்ந்து சென்றன; வேதங்களும், காயத்திரி முதலிய மந்திரங்களும் மறையவர் வடிவுகொண்டு அவருடன் போயின; வேதியர்களும், மஹரிஷிகளும், வேந்தர் முதலியோரும் முகமலர்ந்து அவரோடு சென்றனர்; அந்தப்புர ஸ்திரீகளும், பாலர்களும், அடிமையாளரும், படைத்தலை

வரும், மந்திரிகளும், மற்ற பரிவார ஜனங்களும் அவர்கூடச் சென்றனர்; பரதசத்துருக்கர்களும் அவர்பின் போயினர்; அவரைப் பார்க்க வந்தவர்களும் அவருடன் சென்றனர்; இன்னும் ஆங்குள்ள மிருகங்களும், பறவைகளும், மற்ற ஜீவஜந்துக்களும் அவர்க்குப் பின்னே சென்றன.

இவ்வாறு சகலரும் பின் தொடர்ந்து செல்ல ஸ்ரீராமபிரான் நடந்துசென்று குடதிசை நோக்கிச் செல்லா நின்ற சரயுநதியின் கரையிற்போய் நின்றார். அப்போது நான்முகக் கடவுள், இராமர் பரமபதத்திற் கெழுந்தருளப் போகின்றாரென்பதை யுணர்ந்து மகிழ்ந்து சகல தேவர்களுடன் விமானத்திலேறி அங்கே வந்தனர். நறுமணத்தோடு இராகவர்மீது மந்தமாருதம் வீசிற்று; தேவதுந்துபி முதலிய பல வாத்தியங்கள் முழங்கின; தேவர்கள் இராமர் மீது கற்பகப்பூமாரி பெய்தார்கள். இத்தகைய சிறப்புக்களெல்லாம் நடைபெறும்போது ஸ்ரீ இராமமூர்த்தி சரயு நதியைத் திருவடியால் ஸ்பரிசித்தார். அப்போது பிரமா வானில் நின்றபடியே அவரை நோக்கி, "ஓ திருமாலே! உமக்குப் பல்லாண்டு! பல்லாண்டு!! நீர் பரமபதத்திற்கு எழுந்தருளுக" என்று ஸ்தோத்திரம் செய்தார். உடனே ஸ்ரீ இராமபிரான் தமது திருமேனியோடும், திருத்தம்பிமாரோடும் தம்முடைய சோதியிற் கலந்தருளினார். தேவர்களும் முனிவர்களும் அன்புடன் அவரை ஆராதித்தனர். அப்போது இராமபிரான் பிரமதேவரை நோக்கி, "என்னிடத்தில் அன்புடையவராய் என்னைப் பின்பற்றி வந்து இங்கே நிற்கும் சகலருக்கும் நீர் நற்பதவியளிப்பீராக" என்று கட்டளையிட்டார். அவர் அவ்வாறே அவர்களைப் பிரமலோகத்திற்கு மேற்பட்டதும், மீண்டும் பிறவியை அடையாததுமாகிய சாந்தனிகமென்னும் பதத்திற் சேர்த்தார். 'இன்னும் இராமபக்தியுடையவர்கள் எவராயினும் இப்பத

வியை அடைவர்' என்று கூறினார். அதன்மேல் சுக்கிரீவன் முதலிய வானரவீரர்களும் தங்கள் தங்கள் பூர்வீக தேவ ஸ்தானங்களை அடைந்தார்கள்.

இவ்வாறு எல்லோரும் நற்பதவி யடையுமாறு செய்த பின்பு ஸ்ரீ இராமச்சந்திர மூர்த்தி ஆதி நாராயணராகி, பரத சத்துருக்கர் சங்குசக்கரங்களாக அவற்றைத் தாங்கிப் பஞ்சாயுதந்தரித்து, இலக்குமி சமேதராய் வைகுண்டத்திற் கெழுந்தருளினார். பிரமா முதலிய தேவர்கள் அந்த ஸ்ரீ விஷ்ணு மூர்த்தியைத் துதித்தபடியே தங்கள் தங்கள் இருப்பிடங்கட்குச் சென்றார்கள். அதன்பின் அயோத்தி நெடுங்காலம் மன்னர் ஆளுகையின்றி யிருந்தது. பின்னர் விருஷபனென்னு மரசன் காலத்தில் மறுபடியும் இராஜ தானி நகரமாய் வளம்பெற்றது. இந்த ஸ்ரீ இராம சரித மாகிய இராமாயணம் மிக்க மகிமையுடையது. இதனை விரும்புவோர்க்குத் திருவருள் சித்திக்கும்.

வாழ்த்து.

" கலைமறை முனிவர் வாழ்க காரிகை யார்தங் கற்பு
நிலைபெறு மன்னர் செங்கோ னீணிலந் தன்னில் வாழ்க
அலைகட லிலங்கை மூதூ ரரக்கர்வே ரறுத்த வைவேற்
சிலைநெடு வில்லி காதைச் செந்தமிழ் வாழ்க வன்றே
இனையநற் காதை முற்று மெழுதினோர் வியந்தோர் கற்றோர்
அனையது தன்னைச் செல்வோர்க் கரும்பொருள் கொடுத்துக்
கனைகடற் புவியின்மீதே காவலர்க் கரசாய் வாழ்ந்து [கேட்போர்
வினையைவே ரறுத்துமேலாம் விண்ணவன் பதத்தைச் சேர்வார்."

சுபம்.

ஸ்ரீ கம்பர் இராமாயண-சங்கிரகம்
முற்றுப்பெற்றது.

Printed at the "Ananda Bodhini" Press, Madras.